வெளியீடு—8-9-1978] [Issued—8-9-1978

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1978 ஏப்ரல் 3—தொகுதி XVIII—எண் 1

Monday 3rd April 1978—Volume XVIII—No. 1–5
to 7th April

©
தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
1978

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort, St. George, Madras-600 009

விலை 1-50 காசுகள்] [Price 1–50 Paise

D,
V211,31 N78
N79-18;2

1|22|88

உள்ளடக்கம்

	பக்கங்கள்
தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.	i-iv
தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் முக்கிய அலுவலர்கள்	v
தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர் பட்டியல்	vi-xiv
1. வினாக்கள் - விடைகள்	1-41
2. அரசினர் தீர்மானம்	
விதி 41 (3)-ஐத் தளர்த்தல்	41-42
3. கவன ஈர்ப்பு	
(அ) காவேரிப்பாக்கம்—ராணிப்பேட்டை பகுதியில் மின்சார பாதிப்பு குறித்து	42-43
(ஆ) ஜவ்வாது மலைப் பகுதியில் வாழும் ஆதிவாசிகளுக்கு விளம்பரம் செய்தபடி பழச்செடி வழங்காதது குறித்து	43-46
(இ) தஞ்சாவூர் செயிண்ட் ஜோசப் அனாதைப் பள்ளியில் பகல் உணவில் விஷம் கலந்திருந்ததால் குழந்தைகள் பாதிப்பு குறித்து ..	46-49
4. அறிவிப்புக்கள்	
(அ) 1978-ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு	50
(ஆ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகர்புற நில (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு	95
5. அரசினர் சட்ட முன்வடிவுகள்	
(அ) 1978-ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு	50
(ஆ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/78)	50-77

பக்கங்கள்

(இ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்)திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16 78) 77-95

(ஈ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகர்புற நில (உச்சவரம்பு கட்டுதல் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு எண். 17/78) 96-144

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 144

உள்ளடக்கம்

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள். 147–169

2. ஒழுங்குப் பிரச்னைகள்—

(அ) இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீதான விவாதம் முதலில் மேலவையில் நடந்துள்ளது முறைதானா என்பது குறித்து. 169

(ஆ) மூளைக் காய்ச்சல் நோய் பற்றி உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்திருக்கும்போது அதற்கு அவையில் அமைச்சர் பதில் அளிக்குமுன் டாக்டர்கள் அந்நோய் குறித்த விளக்கங்களை பத்திரிகைகளுக்கு அளித்தது குறித்து. 177–179

3. தகவல் கோரல்—

உறுப்பினர் கொடுத்துள்ள ஒத்திவைப்பு, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பது குறித்து. 170

4. அறிவிப்புகள்—

(அ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு குறித்து. 170

(ஆ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப் படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/78). 180

(இ) பேரவை அலுவல் குறித்து. 233

5. அரசினர் தீர்மானம்—

விதி 41 (3) ஐத் தளர்த்தல். 171

6. கவன ஈர்ப்புகள்.—

(அ) திருநெல்வேலியில் மூளைக் காய்ச்சல் நோயினால் பல குழந்தைகள் மரணம் அடைந்தது குறித்து. 171–174

(ஆ) வானூர் தொகுதி, வீடுர் அணைக்கட்டின் மூலம் பாசனம் பெறுகின்ற கிராமங்களுக்கு தண்ணீர் திறந்து விடாமையினால் பயிர்கள் பாதிப்பும், விவசாயிகளின் நஷ்டமும் குறித்து. 174–175

(இ) உப்பிலியாபுரம், பீ. மேட்டூர் கிராமம் கொல்லிமலைக்கருகில் உள்ள 500 ஏக்கர்கள் புயல் வெள்ளத்தால் பாதிப்பும், அதைச் செப்பனிட தக்க நடவடிக்கை எடுக்காததும் குறித்து. 175–177

7. அறிக்கைகள் அளித்தல்—

(அ) மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். } 179–180
(ஆ) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். }

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/78). 180–212

(ஆ) 1978 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, (மேலவை சட்ட முன்வடிவு எண் 15/78). 213–232

(இ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு. 233–253

(ஈ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/78). 253–254

(உ) 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/78). 254–257

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 257–258

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்.—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. 259—293

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. 293—328

2. ஒழுங்குப் பிரச்சினைகள்—

(அ) அறிவிப்பு கொடுக்கப்பட்ட வினாக்கள் அவையில் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து .. 328—330

(ஆ) ஓர் விசாரணை குழுவின் முன்னுள்ள பிரச்சினை குறித்து, அவை முன் வைக்கப் பட்டுள்ள ஆய்வுரையில் கருத்து தெரி வித்திருப்பது குறித்து .. 340—344

3. உரிமைப் பிரச்சினைகள்—

(அ) 'மக்கள் குரல்' 'தென்னகம்' நாளேடுகள் சபை நடவடிக்கைகளை தவறாக வெளி யிட்டதாகக் கூறப்படுவது குறித்து .. 330—332

(ஆ) திராவிட முன்னேற்றக் கழக உறுப் பினர்களுடையகுற்றச்சாட்டுகளை மட்டும் 'முரசொலி' நாளேடு வெளியிட்டுவிட்டு அரசுத் தரப்பில் கூறப்பட்ட மறுப்பை வெளியிடாதது குறித்து .. 332—334

(இ) ஓர் உறுப்பினர் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் 'அண்ணா' நாளிதழில் செய்தி வெளியிட்டதாகக் கூறப்படுவது குறித்து .. 334—335

(ஈ) ஓர் உறுப்பினர் கூறாததை கூறியதாக 'மெயில்' நாளேடு செய்தி வெளியிட்ட தாக கூறப்படுவது குறித்து .. 335—336

(உ) ஓர் உறுப்பினர் மீது கூறப்பட்ட குற்றச் சாட்டை மட்டும் 'தினகரன்' நாளேட் டில் வெளியிட்டுவிட்டு, அதற்குஅளிக்கப் பட்ட மறுப்பை வெளியிடாதது குறித்து 336—337

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—

சென்னை, எண்ணூர் அனல் மின் நிலையத்தில் போதிய நிலக்கரி இருப்பு இல்லாததால், மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது குறித்து 337—340

5. அறிவிப்பு—

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகள் குறித்து .. 344

	பக்கங்கள்
6. அமைச்சரின் அறிக்கை—	
1. 8. 77 இல் இரு துணை வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளை திருத்தி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை ..	344
7. அரசினர் தீர்மானங்கள்—	
(அ) பேரவை விதி 41 (3)-ஐத் தளர்த்தல்..	345
(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக 300 கோடி ரூபாய் இருக்கலாம் என முடிவுசெய்யும் அரசின் செயற் குறிப்பு குறித்து ..	401
8. கவன ஈர்ப்புகள்—	
(அ) ஆலங்குளம் தமிழ்நாடு சிமெண்ட் ஆலையின் தூசி வீச்சால், பக்கத்திலுள்ள பயிர்கள் பாதிப்பு குறித்து ..	345—352
(ஆ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணை ஆயக்கட்டு தாரர்கள்மீது விதிக்கப்பட்ட அதிக வரியை வசூலிக்க எடுத்த நடவடிக்கைகளினால் விவசாயிகள் பாதிப்பு குறித்து ..	352—354
(இ) ஆம்பலூருக்கு அருகிலுள்ள பாலாற்றிலிருந்து தண்ணீர் வராமையினால் திருப்பத்தூர் டவுனில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து ..	354—355
(ஈ) சென்னையில் மத்திய சிறைச்சாலைக்கருகில் ஏற்பட்ட பஸ் விபத்து குறித்து ..	356—357
(உ) கோவை மாவட்டத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கைத்தறித் துணிகள் தேக்கமும், நெசவாளர்கள் பாதிப்பும் குறித்து ..	358—360
9. அரசினர் சட்ட முன்வடிவுகள்—	
1978—ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/78) தொடர்ச்சி ..	360—400
10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் ..	402—403

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1. வினாக்கள்-விடைகள்—	
(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	407—447
(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்	
2. நகவல் கோரல்—	
அறிவிக்கை கொடுத்திருந்த தீர்மானங்கள் குறித்து ..	448
3. உரிமைப் பிரச்னைகள்—	
(அ) 'அண்ணா', 'தினகரன்', 'மெயில்', 'முரசொலி' 'தென்னகம்', 'மக்கள் குரல்' ஆகிய நாளேடுகள்மீது எழுப்பப்பட்ட பிரச்னைகள்மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு ..	448—450
(ஆ) மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் மீது எழுப்பிய உரிமைப் பிரச்னைமீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு. ..	450—452
4. அறிவிப்பு—	
மேலவையில் நிறைவேற்றப் பெற்ற சட்டமுன் வடிவுகள் குறித்து. ..	452
5. அரசினர் தீர்மானங்கள் —	
(அ) பேரவை விதி 23-ஐத் தளர்த்தல். ..	453
(ஆ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல். ...	453
(இ) நீதிபதி இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கை மீதான விவாதம். ..	466—438
6. கவன ஈர்ப்பு—	
(அ) பட்டுக்கோட்டை தாலுகா கோபால சமுத்திரம் கிராமத்தில் ஏழை விவசாயிகளுடைய வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டது குறித்து. ..	454—458
(ஆ) குமரி மாவட்ட வேலையில்லா ஆசிரியர்கள் தங்களுக்கு வேலை கொடுக்க கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு உண்ணாநோன்பு இருப்பதும், அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும். ..	458—462

பக்கங்கள்

(இ) சென்னை மாநகராட்சியில் வீட்டு வரி பல மடங்கு உயர்த்தப்பட்டதால் ஏழை குடிசைப் பகுதி மற்றும் நடுத்தரமக்கள் பீதி அடைந்துள்ளது குறித்து. .. 462—644

(ஈ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில், எஸ். இராமச்சந்திராபுரத்தில் உள்ள இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் மூடப்பட்டுள்ளதும், தொழிலாளர் வேலை இல்லாது இருக்கும் நிலை குறித்தும். .. 464—466

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். .. 538

உள்ளடக்கம்.

பக்கங்கள்.

1. வினாக்கள்-விடைகள். 549—583

2. தகவல் கோரல்—

(அ) மாயவரம், கும்பகோணம், பாபநாசம், தஞ்சை தாலுக்காக்கள் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்படுவது குறித்து .. 583—584

(ஆ) காமராஜபுரம் பர்மா அகதிகளின் வீடுகள் நெடுஞ்சாலைத் துறையினரால் இடித்தது குறித்து .. .. 584—585

(இ) மயிலாப்பூர் கோயில் திருவிழாவின்போது அனுமதி பெறாமல் தெருக்களில் ரெக்கார்டு டான்ஸ் நடந்தது குறித்து .. 585—586

(ஈ) திருவிடைமருதூர், பந்திக் கிராமம் அரிசன் குடியிருப்புக்கு தீ வைத்தது குறித்து 586

(உ) தச்சூர் அரிசன காலனியில் மரங்கள் வெட்டுவது குறித்து 587

(ஊ) இரும்புக்கல் ஏற்றுமதியால், சென்னைத் துறைமுகம் அருகே தூசினால் மக்கள் உடல் நலன் பாதிப்பு குறித்து .. 587

(எ) புதுக்கோட்டை அருகே மாவட்ட மருத்துவமனையில் குளுகோசுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் ஏற்றியதால் தொழிலாளி மரணம் குறித்து 588

(ஏ) டி. வி. எஸ். நிறுவனத்தின் தொழிலாளர் உண்ணாவிரதம் குறித்து .. .. 588—589

(ஐ) வியாசர்பாடி, கக்கன்ஜி நகர், கருணாநிதி நகர் போன்ற பகுதிகளில் பலகுடிசைகள் அகற்றல் குறித்து 589

(ஒ) இராயபுரம் பகுதியில் இரும்புத்தூளை ஏற்றுமதி செய்யும்போது ஏற்படும் தொல்லை குறித்தும் முகவை மாவட்டத்தில் நூலக ஊழியர்களுக்கு வேலை உத்தரவாதம் குறித்தும் தொண்டி-காவல் நிலையத்தில் இரு பெண்கள் லாக்கப்பில் வைக்கப்பட்டிருப்பது குறித்தும் .. 589—590

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஓ) அவையில் எடுத்துக்கொள்ளப்படாத தீர்மானங்களுக்கான பதிலை உறுப்பினர்களுக்குக் கிடைக்கும்படி செய்வது குறித்து .. .. .. 590—592

3. உரிமைப் பிரச்னை—

பண்ருட்டி ஒன்றியத்தில் நடைபெற்ற வெள்ள நிவாரண வேலைகளைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் தவறான குற்றச் சாட்டுகளைச் சாட்டியது குறித்து .. 593—602

4. ஒழுங்குப் பிரச்னை—

விசாரணைக் கமிஷன் முன்னுள்ள பொருள் பற்றி முதல்வர் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து .. .. .. 603—605

5. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

(அ) சென்னை தியாகராய நகர் பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்தினால் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்து .. 605—607

(ஆ) திருப்பூரில் நடந்த கலவரத்தால் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து. 607—613

(இ) வட ஆற்காடு மாவட்டத்தில் சில விவசாயிகளை வரி கொடாப் போராட்டம் நடத்த தூண்டிவிடுவதும் கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சியில் வரி கொடா இயக்கம் நடத்தி வரும் விவசாயிகள் கைது செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்தும் .. .. .. 613—618

6. அமைச்சரின் அறிக்கை—

திராவிடர் வரலாறு, திராவிட மொழி பாதுகாப்பு ஆகியவற்றை ஆராய்ந்து வரும் திருவனந்தபுரத்திலுள்ள திராவிட மொழியியல் நிறுவனத்திற்கு மானியம் வழங்குவது குறித்து .. .. 618—620

7. அறிவிப்புகள்—

(அ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து 620

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) சட்டமன்ற நடவடிக்கை பற்றி புள்ளி விவரங்கள் குறித்து .. .. 706—707

அரசினர் தீர்மானங்கள்—

(அ) விதி 41 (3) ஐத் தளர்த்தல் 620—622

(ஆ) நீதிபதி இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி 632—705

(இ) பேரவை நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பெறுவது குறித்து .. 707

9. கவன ஈர்ப்புகள்—

(அ) புதுக்கோட்டை தெற்கு ராஜ வீதியில் உள்ள கடையில் ஏற்பட்ட வெடி விபத்தும் அதனால் ஏற்பட்ட பலர் உயிரிழப்பும் குறித்து .. .. 622—625

(ஆ) கோவை மாவட்டத்தில் தோன்றியுள்ள "புரோடேனியா" என்ற புழுக்களால் விவசாயம் பாதிப்பும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியமும் குறித்து 626—628

(இ) திருவையாறு தென்னை வளர்ச்சிக் கழகம் விவசாயிகளிடம் பணம் வசூல் செய்வதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து .. .. .. 628—629

(ஈ) கல்லக்குடி கிராமத்திற்கு குடிநீர் வழங்கல் குறித்து அப்பகுதி மக்கள் உண்ணாவிரதம் குறித்து .. .. 629—631

(உ) கதர்விற்பனை மையங்கள் மூடலும் அதனால் பணியாளர்கள் பாதிப்பும் குறித்து .. 631—632

11. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 708

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் *(முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப் பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மது விலக்கு, நல்வாழ்வு, மருந்துகள், அற நிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில், நிறுவனங்கள், பூமி தானம்- கிராமதானம் முன்னாள் இராணுவத்தினர்; சுரங்கம்-கனிவளம், ஊரகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.*

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் *(நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் துறை, வருவாய், சட்ட மன்றம்.*

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் *(பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப்பணி, சிறப்பு சிறு பாசனத் திட்ட வேலை உட்பட சிறு பாசனங்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.*

4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் *(சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல் சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.*

5. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் *(உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத் துறை சிங்கோனா உட்பட காடுகள், இளைஞர் அணி, விலைக்கட்டுப்பாடு.*

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் *(செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: செய்தி, விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.*

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் *(கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.*

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், சமுதாய வளர்ச்சி.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ் நாடு குடி நீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அரிசன நலம், பிற்பட்ட வகுப்பினர், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : போக்கு வரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

13 மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, பால், பால் வள நிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி-ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : இட வசதிக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, கூட்டமைப்பு உள்ளிட்ட வட்டார மாவட்ட தலைமை இடம் சார்ந்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்ப், நெசவு, நூல், கைத்தறி, கதர், கிராமத் தொழில்கள்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)— Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan and Gramdan, Ex-servicemen, Mines and Minerals and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)— Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Public Works*)— Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Iron and Steel Control and Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR (*Minister for Law*)— Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)— Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona, Youth Service Corps and Price Control.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Tourism*)— Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

9. THE HON. THIRU S. RAGHAVANANDHAM (*Minister for Labour*)—Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. THE HON. THIRU P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Minister in-charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. THE HON. THIRU C. PONNAIYAN (*Minister for Transport*)—Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. THE HON. SELVI P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Minister in-charge of Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indian Overseas and Refugees and Evacuees and Correctional Administration.

13. THE HON. THIRU P. KOLANDAIVELU (*Minister for Agriculture*)—Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. THE HON. THIRU K. RAJA MOHAMMED (*Minister for Handlooms and Textiles*)—Minister in-charge of Accommodation Control, Newsprint Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Textiles, Yarn, Handlooms and Khadi and Village Industries.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. முனு. ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கே. பண்ணை சேதுராம்
2. திரு. ஆர். முத்தையா
3. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா
4. திரு. கே. கே. முத்தையா

சட்ட மன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்

திரு. த. இராதாகிருஷ்ணன்

குழு அலுவலர்

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஹானர்ஸ்)

சார்புச் செயலாளர்கள்

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பி. எம். பத்மனுபன் நம்பியார், பி. ஏ.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி எல்.

விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்

தலைமை நிருபர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்

எஸ்டேட் அதிகாரி

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும் (1)		தொகுதியின் பெயர். (2)
1	அண்ணாமலை, திரு. எம். ..	ஹரூர் (செ.வ.).
2	அப்துல் ரஜாக், திரு. கே. எம்.	ஆலந்தூர்.
3	அப்துல் லத்தீப், திரு. கி. ..	கடலூர்.
4	அப்புனு கவுண்டர், திரு. கா. ..	பெண்ணாகரம்.
5	அமிர்த ராஜ், திரு. இரா. ..	திருச்செந்தூர்.
6	அம்பிகாபதி, திரு. மு.	மன்னார்குடி.
7	அய்யாசாமி, திரு. ரா. ..	தாராபுரம் (செ.வ.).
8	அரங்கசாமி, திரு. க.	குன்னூர் (செ.வ.).
9	அரங்கநாதன், திரு. அ. க. ..	வேலூர்.
10	அரங்கநாதன், திரு. மு. ..	திருவல்லிக்கேணி.
11	அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்) ..	கோயம்புத்தூர் (மேற்கு).
12	அருணாசலம் திரு. இரா. ..	நாமக்கல் (செ.வ.).
13	அர்சுனன், திரு. வீ.	ஆரணி.
14	அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி.
15	அன்பழகன் திரு. க.	புரசவாக்கம்.
16	அன்பழகன், திரு. தி.	நாட்ராம்பள்ளி.
17	ஆண்டி அம்பலம், திரு. மெ. ..	நத்தம்.
18	ஆதிசுவாமி, திரு. இரா. ..	ஞளச்சல்.
19	ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
20	ஆறுமுகம், திரு. எச். ஜி. ..	பர்கூர்.
21	ஆறுமுகம், திரு இல.	திருநாவலூர்.
22	ஆறுமுகம், திரு. எம்.	சேலம்-2.
23	ஆறுமுகம், திரு. த.	அரியலூர்.
24	இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25	இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
26	இராசரத்தினம், திரு. து. ..	பூந்தமல்லி.
27	இராதா, திரு. எஸ். ஆர். ..	கும்பகோணம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
28 இராமசாமி, திரு. கே.என்.கே.	கோபிச்செட்டிபாளையம்.
29 இராமசாமி, திரு. எஸ்.ஜே.	சோளிங்கர்.
30 இராமசாமி, திரு. எஸ். வி.	பெரம்பலூர் (செ.வ.).
31 இராமசாமி, திரு. டி.	இராமநாதபுரம்.
32 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.	சாத்தூர்.
33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்)	அருப்புக்கோட்டை.
34 இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.	செஞ்சி.
35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்)	பண்ருட்டி.
36 இராமச்சந்திர ரெட்டி, திரு. என்.	ஹோசூர்.
37 இராமலிங்கம், திரு. செ.	திருவிடைமருதூர்.
38 இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா.	தல்லி.
39 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்.
41 உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி (செ.வ.).
42 உச்சி, திரு. கே.	கூடலூர்.
43 உத்திராபதி, திரு. பொ.	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
44 உமாநாத், திரு. ரா.	நாகப்பட்டினம்.
45 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.	ஆற்காடு.
46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்)	திருநெல்வேலி.
47 எத்திராஜ், திரு. கி.	அச்சரப்பாக்கம் (செ.வ.).
48 ஏகாம்பர ரெட்டி, திரு.	பள்ளிப்பேட்.
49 ஐசரி வேலன், திரு.	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்.
50 கணேசன், திரு. இ.	எடப்பாடி.
51 கணேசன், திரு. எஸ்.	பூம்புகார்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
52 கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ.வ.)
53 கந்தசாமி, திரு. க.	ஆண்டிப்பட்டி.
54 கந்தசாமி, திரு. கா. வே.	கிணத்துக்கடவு.
55 கபாலி, திரு. டி. கே.	மயிலாப்பூர்.
56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை.
57 கருணகிரி முத்தையா, திரு. க.	மருங்காபுரி.
58 கருணாநிதி, திரு. மு.	அண்ணாநகர், சென்னை.
59 கருணாநிதி, திரு. தாழை. மு.	திருவாரூர் (செ.வ.).
60 கருணாமூர்த்தி, திரு. வெ.	ஜெயங்கொண்டான்.
61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ.	ஆலங்குளம்.
62 கலியமூர்த்தி, திரு. துரை	சிதம்பரம்.
63 காத்தமுத்து, திரு. கி. பெ.	தொட்டியம்.
64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்)	திருப்பரங்குன்றம்.
65 காளியப்பன், திரு. பொ.	காரைக்குடி.
66 காளியப்பன், திரு. இரா.	ஏற்காடு (ஆ. வா.)
67 கிட்டப்பா, திரு. என்.	மாயூரம்.
68 கிட்டு, திரு. ப. கோ.	பல்லடம்.
69 கிருஷ்ணன், திரு. பி. எம்.	பாலக்கோடு.
70 கிருஷ்ணன், திரு. செ.	கன்னியாகுமரி.
71 கிருஷ்ணன், திரு. நா.	ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.).
72 கிருஷ்ணன், திரு. பி.	விழுப்புரம்.
73 கிருஷ்ணன், திரு. ரா.	வாசுதேவநல்லூர் (செ.வ.)
74 குப்புசாமி, திரு. என்.	மொரப்பூர்.
75 குருசாமி, திரு. ப.	ஆண்டியூர் (செ. வ.).
76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்)	உடுமலைப்பேட்டை.
77 கோதண்டராமன், திரு. வி. கே.	குடியாத்தம்
78 கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன், திரு. பி.	முசிறி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
79	கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80	கோவிந்தராசன், திரு. சி. ..	நெல்லிக்குப்பம்.
81	கோவிந்தன், புலவர் கா. ..	செய்யாறு.
82	கோவேந்தன், திரு. மு. ரெ...	பேராவூரணி.
83	சங்கரய்யா, திரு. என்.	மதுரை கிழக்கு.
84	சண்முகம், திரு. கா. ந. ..	லால்குடி.
85	சண்முகம். திரு. ப.உ. ..	திருவண்ணாமலை
86	சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி.
87	சண்முகம், திரு. கூத்தகுடி, ச.	திருப்பத்தூர்
88	சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89	சந்திரசேகரன், திரு. ஆர். ..	கம்பம்.
90	சந்திரன், திரு. ப.	பேரணமல்லூர்.
91	சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. ..	தியாகராயநகர், சென்னை.
92	சமரசம், டாக்டர் கே. ..	காவேரிப்பட்டிணம்.
93	சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்) ..	திருமங்கலம்.
94	சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபநாசம்.
95	சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்விளக்கு, சென்னை.
96	சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97	சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.).
98	சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99	சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி.
100	சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101	சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம் (ஆ.வா.).
102	சின்னசாமி, திரு. வி. கொ. ..	பவானிசாகர்.
103	சின்னய்யா, திரு. வீ. ..	குளத்தூர் (செ.வ.).
104	சின்னராசு, திரு. க. இரா. ..	கிருஷ்ணகிரி.
105	சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106	சுந்தரம், திரு. ப.	திருப்பத்தூர்.
107	சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
108	சுந்தரராஜன், திரு. மு. ..	விருதுநகர்.
109	சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
110	சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111	சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு.	உத்திரமேரூர்.
112	சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113	சுப்பிரமணியம், திரு. ஆர். சி.	கடலாடி.
114	சுப்பிரமணியம், திரு. டி. ..	ஆண்டிமடம்.
115	சுப்பிரமணியன், திரு. ஒ. ..	சிவகங்கை.
116	சின்னசேலம் சுப்பிரமணியன், திரு. மா. ..	சின்னசேலம்.
117	சுப்பிரமணியன், திரு.வ.மு. ..	மானாமதுரை (செ. வ.).
118	சுப்பிரவேலு, திரு. கே. ..	சீர்காழி (செ.வ.).
119	சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120	சுப்புலட்சுமி, திருமதி. ..	மொடக்குறிச்சி.
121	சுப்பையா, திரு. ச. ..	சங்கரநயினார் கோவில் (செ. வ.).
122	சுவாமிதாஸ், திரு. அ. ..	பத்மநாபபுரம்.
123	செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
124	செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
125	செல்லப்பா, திரு. அ. ..	வலங்கைமான் (செ.வ.).
126	செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127	செல்வராஜ், திரு. சீனி. ..	சமயநல்லூர் (செ.வ.).
128	செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129	சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர் (செ.வ.).
130	சோமசுந்தரம், திரு. ஒ. ப. ..	பொள்ளாச்சி.
131	சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ. வ.).
132	சௌந்திரராசன், திரு. கே. ..	திருச்சிராப்பள்ளி-2.
133	சௌந்திரராஜன், திரு. மு.ரா.	பவானி
134	சௌந்திரராஜன், திருச்சி. திரு. ஆர்.	ஸ்ரீரங்கம்.
135	ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேலமலையனூர்.
137 தங்கவேலு, திரு. ர. ச. ..	வால்பாறை (செ. வ.).
138 தண்டபாணி, திரு. ரா. க. சு.	காங்கேயம்.
139 தமிழரசன், திரு. இ. ..	பேரணம்பட்டு (செ.வ.)
140 தனசேகரன், திரு. ந. ..	தூத்துக்குடி.
141 தனபால், திரு. ப.	சங்கரி (செ. வ.)
142 தனுஷ்கோடி, திரு. கோ. ..	ராஜபாளையம் (செ.வ.)
143 தாமரைக்கனி, திரு. இரா. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். .. (பேரவைத் துணைத் தலைவர்.)	அறந்தாங்கி.
145 திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்க தலைமைக் கொறடா)	திருவோணம்.
147 துரைசாமி, திரு. ப. ..	ராசிபுரம்.
148 துரை முத்துசாமி, திரு. ..	சங்கரபுரம்.
149 துரை முருகன், திரு. ..	இராணிப்பேட்டை.
150 துரைராஜ், திரு. சு. ம. ..	பொன்னேரி (செ.வ.)
151 துலுக்காணம், திரு. வ. ..	உளுந்தூர்பேட்டை (செ.வ.).
152 தைலப்பன், திரு. டி. எம். ..	ஒரத்தநாடு.
153 நடராசன், திரு. ஆ. ..	பேரூர்.
154 நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்.
155 நல்லதம்பி, திரு. தீ. சு. ..	பார்க்டவுன், சென்னை.
156 நாச்சிமுத்து, திரு. க. ..	பொங்கலூர்.
157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ.	மேட்டூர்.
158 நாராயணன், திரு. ரா. ..	தாரமங்கலம்.
159 பட்டாபிராமன், திரு. செ.	திருவள்ளூர்.
160 பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161 பரமசிவன், திரு. ஏ. எம். ..	மேலூர்.
162 பரமசிவம் திரு. மொ. ..	வானூர் (செ. வ.).

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
163 பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்
164 பழனிசாமி, திரு. சொ. ந. ..	அவினாசி (செ. வ.)
165 பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166 பழனியப்பன், திரு. அ. ப. ..	ஒட்டன்சத்திரம்.
167 பழனிவேல், திரு. என். ..	பழனி (செ. வ.).
168 பாண்டியன், திரு. பி.எச். ..	சேரன்மாதேவி.
169 பாலகிருஷ்ணன், திரு. சோ.	முதுகுளத்தூர்.
170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ.	சோழவந்தான்.
171 பாலன், திரு. சு.	பெரம்பூர் (செ. வ.).
172 பாலாஜி, திரு. க. ..	காஞ்சீபுரம்.
173 பாலுசாமி, திரு. அ. ..	நிலக்கோட்டை (செ. வ.).
174 புருஷோத்தமன், திரு. து. ..	சைதாப்பேட்டை, சென்னை.
175 புஸ்பராஜு, திரு. த. ..	ஆலங்குடி.
176 பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ. வ.).
177 பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
178 பெரியசாமி, திரு. டி. பி. எம்.	மதுரை மேற்கு.
179 பெருமாள், திரு. என். ..	வரகூர் (செ. வ.).
180 பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்.
181 பொன்னுசாமி, டாக்டர், ஏ.	பெருந்துறை.
182 பொன்னுரங்கம், திரு. ப. ..	இராயபுரம்.
183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்) ..	திருச்செங்கோடு.
184 மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.).
185 மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
186 மணிமுடி, திரு. எஸ். ..	எழும்பூர், சென்னை (செ.வ.).
187 மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188 மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்) ..	பாளையங்கோட்டை.
189 மாணிக்கம், திரு. சி. ..	திருச்சிராப்பள்ளி-1.
190 மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு.
191 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ்..	(நியமன உறுப்பினர்).

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
192 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். ..	பட்டுக்கோட்டை.
193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. ..	வேதாரண்யம்.
194 முத்துசாமி, திரு. பா. க. சி.	தர்மபுரி.
195 முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
196 முத்துசாமிகரையாளர், திரு. சு.	தென்காசி.
197 முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி.
198 முருகேசன், திரு. கூ. ச. ..	திருவரம்பூர்.
199 முனிசாமி, திரு. பொ. ..	வந்தவாசி, (செ.வ.).
200 முனிரத்தினம், திரு. எஸ். ..	கும்மிடிபூண்டி.
201 முனு ஆதி, மாண்புமிகு திரு... (பேரவைத் தலைவர்)	தாம்பரம், சென்னை.
202 மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
203 யூசப், திரு. யா. சை. மு. ..	ராதாபுரம்.
204 ரகுமான்கான், திரு. ஏ. ..	சேப்பாக்கம், சென்னை.
205 ரகுராமன், திரு. வி. ..	புவனகிரி.
206 ரகோத்துமன், திரு. கோ. ..	முகையூர்.
207 ரமணி, திரு. கு. ..	கோயம்புத்தூர் கிழக்கு.
208 ரசாக், திரு. எம். எம். ஏ.	கடையநல்லூர்.
209 ராமசாமி, திரு. கோ. ..	சிவகாசி.
210 ராமசாமி, திரு. து. ..	வெள்ளக்கோயில்.
211 ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212 ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213 ராமலிங்கம், திரு. ஏ. ..	காட்டுமன்னார்கோவில் (செ. வ.).
214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு.	புதுக்கோட்டை.
215 ராஜு, திரு. செ. மெ. ..	தலைவாசல் (செ. வ.).
216 ராஜு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ. வ.).
217 லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218 லத்தீப், திரு. எம். ஏ. ..	வாணியம்பாடி.
219 வடிவேலு, திரு. கே. ..	கரூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
220 வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்.
221 வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222 வாசன், திரு. சீ. மு. ..	வேடசந்தூர்.
223 வின்சென்ட், திரு. மி. ..	நாகர்கோவில்.
224 விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.
225 வேங்கா கவுண்டர், திரு. பி.	வீரபாண்டி.
226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. ..	ஆத்தூர்.
228 வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229 வேலுச்சாமி, திரு. ஒ. சோ.	ஓட்டபிடாரம் (செ. வ.)
230 ஜகதீசன், திரு. அனூர் ..	செங்கல்பட்டு
231 ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
232 ஜெபமணி, திரு. ர.	சாத்தான்குளம்.
233 ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234 ஜெயவேலு, திரு. எம்.ஏ. ..	காட்பாடி.
235 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டாறு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் — அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.

3 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.

4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.

5. திரு. வி.பி. இராமன்—தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1978 ஏப்ரல், 3 ஆம் தேதி.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

கருணை இல்லங்களுக்கு நிதி உதவி

* 526 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கருணை இல்லங்களுக்கு கோயில் நிதியிலிருந்து உதவி வழங்கப்பட்டு வந்தது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், அதற்குரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற அடைப்படையில், ஏழைக் குழந்தைகளுக்காக, இந்தக் கோவில் நிதியிலிருந்து இலவசமாக நிதி உதவி செய்து, அவர்கள் வாழ்வதற்கு ஏதேனும் திட்டங்களை இந்த அரசு மீண்டும் துவக்க இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது இடைக்காலத்தில் நிறுத்தப்பட்டதா என்பது கேள்வி. பொதுவாக மார்ச் மாதம் 76 ஆம் ஆண்டு கோவில் உபரி நிதியை மற்ற காரியங்களுக்காகப் பயன்படுத்துவது தடை விதிக்கப் பட்டது. ஆனால், இந்தக் கருணை இல்லங்களுக்கு கோவில் நிதி 75 சதவிகிதம் பங்கு நிதி வராத காரணத்தினால், கருணை இல்லங்கள் நடத்தப்படுவது தடைபடுத்தப்படும் என்று

1978 ஏப்ரல் 3]

அப்போதிருந்த அரசு தெரிவித்தது. அதையொட்டி கோவில் உபரி நிதியிலிருந்து கருணை இல்லங்களுக்கு மட்டும் நிதி வழங்கலாம் என்று மறுபடியும் அதே ஆண்டு, 76லேயே ஆணை பிறப்பிக்கப்பட்டது.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, இந்த கருணை இல்லங்கள் எப்போது துவங்கப்பட்டன ? எத்தனை இடங்களில் துவங்கப்பட்டன ? எப்படி நடந்து கொண்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தக் கருணை இல்லங்கள் 3—6—1975 அன்று முன்னாள் முதல் அமைச்சர் அவர்களுடைய பிறந்த நாள் விழாவின்போது துவங்கப்பட்டது. 52 இடங்களில் துவங்குவதற்குத் தீர்மானம் போட்டு, அப்படித் துவங்கப்பட்டன. இப்போது 36 இடங்களில் நடைபெறுகிறது. இதுதான் விவரம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கும் போது, டாக்டர் கலைஞர் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வரும் போது, ஆண்டாள் கோவிலில் ரோடில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த பிச்சைக்கார சிறுவர்களைச் சேர்த்து, கருணை இல்லம் ஆரம்பிக்கப் பட்டது. அப்படி அது மந்திரி அவர்களின் புரோகிராமிற்காக ஆரம்பிக்கப்பட்டு, 2, 3, வாரத்தில் அந்த கருணை இல்லம் குளோஸ் ஆகிவிட்டது. எனவே, மீண்டும் இந்த அரசு அங்கே கருணை இல்லம் ஆரம்பிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு மே மாதம், 9 ஆம் தேதி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 25—5—1975 அன்று இந்த இல்லங்கள் 52 இடங்களில் துவங்கப்பட வேண்டுமென்றும், இவைகள் 3—6—1975 அன்று முதல் அமைச்சர் அவர்களின் பிறந்த நாளன்று இயங்கப்பட வேண்டுமென்றும் தீவிரப்படுத்தப்பட்டதன் காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் குறைகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், போதுமான அனாதைச் சிறுவர்கள் இல்லை. ஆகவே 36 இடங்களில் இப்போது இது நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

[1978 ஏப்ரல் 3

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவில் நிதியிலிருந்து இப்படித் துவங்கப்படுவது அனாதைக் குழந்தைகளுக்கு பயன்படுகின்ற ஒரு நல்ல ஏற்பாடுதான். இப்போது கொடுக்கப்படுகின்ற தொகை மிகவும் குறைவாக இருக்கின்றது. அதிலும், குழந்தைகளுக்குப் போதுமானதாக இல்லை, பற்றாக்குறைவாக இருக்கிறது. எனவே, கொஞ்சம் ஆரோக்கியமாக இருப்பதற்கு உண்டான ஏற்பாடுகளை, நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் விகிதத்தில் ஒரு சிறுவனுக்கு ஆண்டு ஒன்றுக்கு 600 ரூபாய் வழங்கப்படுகின்றது. இதை அதிகப்படுத்துவதன் மூலம், கடவுள் பட்டினி கிடப்பார். எனவே, கோவிலின் நிதி தாங்குமா என்பதையும் பார்க்க வேண்டியிருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே. இந்த கோவில் உபரி நிதிகளை கோவில்களுக்கு அப்பாற்றப்பட்ட எந்தெந்தக் காரியங்களுக்காக செலவழிக்கப்படுகின்றது ? குறிப்பாக, வக்ஃப் போர்டுக்கு கோவில் நிதியிலிருந்து வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இது உண்மைதானா? அப்படியானால், எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது கருணை இல்லத்தைப் பற்றிய கேள்வி. வக்ஃப் போர்டு கருணை இல்லத்தின் கீழ் வரவில்லை.

டாக்டர் கே. சமரசம் : கருணை இல்லங்கள் 52 இடங்களில் ஏற்படுத்தப்பட்டதாகச் சொன்னார்கள். தர்மசிந்தனையுடனும் தயாள குணத்துடனும் ஏற்படுத்தப்பட்ட இந்த இல்லங்கள் எப்படிப்பட்ட முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ? மாவட்ட அளவிலா? மாநில அளவிலா? மக்கள் தொகை அடிப்படையிலா? அல்லது அனாதைக் குழந்தைகளின் எண்ணிக்கை அடிப்படையிலா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இத்தகைய இல்லங்கள் தர்மத்தின் அடிப்படையிலும் தயாள குணத்துடனும்தான் ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் 52 இல்லங்கள் துவக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்தது அன்றைய முதலமைச்சர் அவர்களின் 52-வது பிறந்த நாள் என்பதால் ஆகும்.

[1978 ஏப்ரல் 3

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 20 இடங்களில் இந்த இல்லங்களை மூடிவிட்டதாகச் சொன்னார்கள். அந்த அந்த, 20 இல்லங்களில் அனாதைக் குழந்தைகள் இல்லாத காரணத்தால் மூடிவிட்டார்களா? அந்த 20 இல்லங்களை மீண்டும் ஆரம்பிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒரு இல்லத்தை நடத்துவதற்கு சுமார் 50 குழந்தைகளாவது இருக்கவேண்டுமென்பது விதி. சில இடங்களில் அந்த அளவுக்குக் குழந்தைகள் இல்லாத காரணத்தால் இருக்கிற குழந்தைகளை அருகில் இருக்கும் கருணை இல்லங்களுக்கு அனுப்பி வைத்துவிட்டு அந்த இல்லங்கள் மூடப்பட்டன. அந்த வகையில்தான் செயல்படுகிறதே தவிர வேறல்ல.

திரு. பொ. விஜயராகவன்: போதுமான அனாதைக் குழந்தைகள் இல்லையென்று அமைச்சர் சொன்னார்கள். அனாதைக் குழந்தைகளைப் போதுமான அளவுக்கு அழைத்துக் கொண்டுவந்து கொடுத்தால் இந்த இல்லங்களை ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அழைத்து வந்தாலும் சரி, இழுத்து வந்தாலும் சரி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வந்து சேர்த்தால் நிச்சயமாக இந்த இல்லங்களை அதிகப்படுத்தலாம்.

திரு. கா. வே. கந்தசாமி: இந்தத் திட்டம் வருவதற்கு முன்னால் அனாதைச் சிறுவர்களுக்கென்று கோயில்களில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தனவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நிதி ஒதுக்கம் நடந்ததா என்பது தெரியவில்லை. கோயில்களில் 9 இடங்களில் ஏற்கனவே இதுபோன்ற இல்லங்கள் நடத்தி வந்தார்கள். 'ஆர்பனேஜஸ்'— அனாதைச் சிறுவர் விடுதி என்ற பெயரில் நடந்து வந்தன.

திரு. என். பழனிவேல்: டாக்டர் கலைஞரின் 52-வது ஆண்டு நிறைவு விழாவின்போது அந்தக் கருணை இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானத்தின் மூலம் கருணை இல்லம் நடத்தப்பட்டு வருகிறது.

1978 ஏப்ரல் 3]

அதிலே குழந்தைகளை அட்மிஷன் செய்யும்போது எந்த அடிப்படையில் எடுக்கிறார்கள்? தற்போது எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள்? அரசாங்கம் அந்த இல்லங்களுக்கு எவ்வளவு உதவி செய்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: குழந்தைகளைச் சேர்ப்பதற்கான விதிமுறைகள்—

(1) Orphans who have lost both their parents.

பெற்றோர்களை இழந்த குழந்தைகள்.

(2) The children who have lost their fathers only.

தகப்பனை இழந்துவிட்டு தாயார் சம்பாதிக்கக்கூடிய நிலை இல்லாமல் இருக்கக்கூடிய குழந்தைகள்.

(3) Only children of either sex in the age group of 5 to 10.

ஐந்து வயதிலிருந்து 10 வயதுக்கு உட்பட சிறுவர்கள் 18 வயது வரையில் வளர்க்கப்படுகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழனியிலுள்ள கருணை இல்லத்தைப் பற்றிய விவரங்களைக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரங்களைத் தர இயலும். இப்போது என்னிடம் மிகப் பெரிய பட்டியலாக இருந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றாகத் தேடி விவரம் தருவது கடினமாக இருக்கிறது.

திரு. எஸ். கணேசன்: டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவின்போது இந்தத் திட்டம் தொடக்கப்பட்டாலும் மனிதாபிமான அடிப்படையில் துவக்கப்பட்டது என்ற காரணமாக இந்த அரசு அதிலே குறை காணாது என்று கருதுகிறேன். செம்பனார் கோயிலில் இயங்கி வந்த கருணை இல்லம் மூடப்பட்டுவிட்டது. 50 அனாதைக் குழந்தைகளைச் சேர்த்துத் தரத் தயாராக இருக்கிறேன். இந்த அரசு கருணை கூர்ந்து மீண்டும் செம்பனார் கோயிலில் கருணை இல்லத்தைத் திறக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அனாதைச் சிறுவர்கள் பராமரிக்கப்பட வேண்டியவர்கள் என்பதில் எந்த அரசுக்கும் கருத்து வேற்றுமை இருக்க நியாயம் இல்லை. ஆகவே, அவர்களை வைத்து காப்பாற்ற வேண்டியது ஒரு சமதர்ம அரசின் தலையாய கடமை என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன். அந்த வகையிலே தான் இந்தத் திட்டங்கள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த அரசைப் பொறுத்தவரையில் அந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும்

[1978 ஏப்ரல் 3

(முற்பகல் 9-10)

வருகின்றன. ஆனால் இங்கே ஏற்பட்டிருக்கும் பிரச்னை, அனாதைச் சிறுவர்கள் எவ்வளவு பேர் என்று பார்த்து, அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதையும் பார்த்து, அவர்களுக்கு வசதியான இடங்களாக நாம் கண்டுபிடித்து, நல்ல கட்டிடங்களையும் அமைத்து அவர்களை வளர்க்கும் வாய்ப்பில்லாமல் திடீரென்று 52 இடங்களில் தொடங்கிவிட்டு, பிறகு ஆட்கள் வரவில்லை என்று பலயிடங்களில் மூடிவிட்டு, பிறகு 36 இடங்களில் நடத்துகிறோம் என்றால் திட்டம் போட்டது சரியில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கருணை இல்லத்தைத் தர்ம இல்லம் என்று மாற்ற முயற்சி நடைபெற்றதா? கருணை இல்லங்களில் வாழும் சிறுவர்கள் சிரித்து இன்புற்றிருக்கும் வகையில், அவர்களுக்கு ரேடியோ வசதிகளும், விளையாட்டு வசதிகளும் மாதத்திற்கு ஒருமுறை பொழுதுபோக்கிற்காகப் பக்கத்து சுற்றுலா இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல், திரைப்படங்களுக்கு அழைத்துச் செல்லுதல் ஆகியவற்றைச் செய்து கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எத்தகைய வசதிகள் இருக்கின்றன என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. எத்தகைய வசதிகளைச் செய்து தருவதற்கு நிதிவசதி இருக்கிறதோ அதைப்பொறுத்து அந்த வசதிகளைச் செய்து தர முடியும். பெயரை மாற்றுகின்ற உத்தேசம் தற்பொழுது இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கருணை இல்லங்களை நடத்துவது தேவஸ்தானங்களின் பொறுப்பாக இருக்கிறது. சில நேரங்களில் தேவஸ்தானங்களுக்கு வருமானம் இல்லாமல் இருக்கிறது. சில தேவஸ்தானங்களில் மோசடியும் நடந்து வருகின்றன. இதையொட்டி, இந்தக் கருணை இல்லங்களை நடத்த அரசாங்கம் மானியம் கொடுக்கத் தயாராக இருக்குமா? அதோடு, பெற்றோர்கள் இல்லாத குழந்தைகள், அல்லது தந்தை மட்டும் இல்லாத குழந்தைகள் என்று கூறப்படுகிறது, வருமானம், சொத்து வரையறையும் அதில் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1978 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இரண்டு பெற்றோர்களையும் இழந்து விட்டவர்களுக்குச் சொத்து விவரம் பற்றி ஒன்றுமில்லை.

Orphans who have lost both the parents with nobody else to support and take care of them.

வேறு யாரும் அவர்களுக்கு ஆதரவு இல்லை என்றால் ஏற்றுக் கொள்ளலாம்.

Children who have lost their fathers only but their mothers alive or in poverty-stricken circumstances with nobody else to support and take care of them.

யாருமே அவர்களை ஆதரிக்கக்கூடிய சூழ்நிலை இல்லை என்றால்தான் நாம் எடுத்துக்கொள்கிறோம். இது,

'கமர்ஷியல் டாக்சஸ் அண்ட் ரிலிஜியஸ் என்டோமெண்ட் டிபார்ட்மெண்ட்'

மூலம்தான் நடத்தப்படுகிறது. 75 பர்சென்ட் செலவை அந்தக் கோயில்களிலேயிருந்து எடுத்துக்கொண்டு, 25 பர்சென்ட் மீதிச் செலவை அரசாங்கம் போட்டுத்தான் இப்பொழுது நடத்தப்பட்டு வருகிறது.

தேரெழுந்தூர் அரசு மருத்துவ மனை.

* 527 வினா.—திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு முதல் அமைச்சர்—

கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், தேரெழுந்தூர் அரசு மருத்துவமனை கட்டடத்தை விஸ்தரிக்கவும், படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தேரெழுந்தூர் அரசினர் மருத்துவமனையில் 6 படுக்கைகள் கொண்ட வார்டு அமைப்பதற்காக மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநர் அவர்களால் 1974ஆம் ஆண்டு அனுமதி அளிக்கப்பட்

டிருக்கிறது. அதையொட்டி பொதுமக்கள் பங்குத் தொகையாக 10,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று கேட்டதும், வசூல் செய்வதற்காகக் குழு அமைக்கப்பட்டு கொஞ்சம் தொகையை வசூலித்து வைத்திருக்கிறார்கள். குத்தாலம் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து 4,000 ரூபாய் கொடுப்பது என்று தீர்மானம் நிறைவேற்றித் தயாராக வைத்திருக்கிறார்கள். ஆனால் 15-6-1976-ல் ஒரு புதிய எஸ்டிமேட்டைத் தயாரித்து 68,000 ரூபாய் ஆகும் என்றும், பொதுமக்கள் பங்குத் தொகையாக 34,000 ரூபாய் செலுத்த வேண்டுமென்றும் கேட்டதன்பேரில் அவ்வளவு பெரிய தொகையாகிய 34,000 ரூபாயைக் கட்ட முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

தேரெழுந்தூரைச் சேர்ந்த ஜனாப் எம். எம். அப்துல் வகாப் என்பவர் தன்னுடைய தாயாரின் பெயர் கட்டடத்திற்கு வைக்கப் படுமானால் இந்த 34,000 ரூபாயைத் தருவதாக 15-6-1976-இல எழுதியிருக்கிறார்கள். அதற்குப்பிறகு அரசிலேயிருந்து எந்த விதமான அனுமதியும் வழங்கப்படாமல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். எனக்கே நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்று விளங்கவில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : 34,000 ரூபாயை ஒருவரே தருவதாகச் சொல்வதால் தயவு செய்து அந்தப் பெயரை வைக்க அனுமதி கொடுத்து, மிகத் தேவையான, முக்கியமான, அதுவும் கம்பர் வாழ்ந்த அந்த இடத்தில் அந்தக் கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கம்பர் வாழ்ந்தார் என்பதற்காக ஆஸ்பத்திரி கட்டுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. நண்பர் தொகுதி என்ற காரணத்திற்காக வேண்டுமானால் அதைப் பார்க்கலாம். அங்கே இரண்டு படுக்கை கொண்ட ஒரு மருத்துவ மனை இருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கிற குறிப்புகளின்படி அங்கேயிருந்து 12 கிலோமீட்டரில் உள்ள மாயவரத்திலும் 55 கிலோ மீட்டரில் உள்ள நாகப்பட்டிணத்திலும் 5 கிலோ மீட்டரில் உள்ள குத்தாலத்திலும் மருத்துவ மனைகள் உள்ளன. ஆகவே, இந்த

மருத்துவ மனையை விரிவுபடுத்த தற்பொழுது நிதி ஆதாரம் இல்லை. ஆகையால், எடுத்துக்கொள்ள இயலாது என்பதுதான் தற்போதுள்ள நிலை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தைக் கொண்டு அதை எடுத்துக்கொள்ள இயலாது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது நீண்ட நாள் பிரச்னையாக இருப்பதோடு, பொதுமக்களிடத்திலே எப்படியும் கட்டடம் கட்டப்படும் என்ற உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. அங்கே பணம் கூட வசூல் செய்து கமிட்டியிலே வைத்திருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து மருத்துவ வார்டுகளைக் கொண்ட ஆஸ்பத்திரி கட்ட வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாக, அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சில தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். யாரோ, தனி நபர் ரூ. 34,000 தருவதாகவும், அதிலே கட்டிடம் கட்டினால், அவருடைய அன்னையார் பெயர் வைக்கவேண்டுமென்றும் தெரிவித்து இருக்கிறார்கள். அதோடு ஒரு கமிட்டியும் பணம் சேர்த்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கிறபொழுது அதை மீண்டும் பரிசீலனை செய்யலாமா என்ற பிரச்னை எழுகிறது. நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

பாரூர் ஏரி.

***766 வினா.—டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974-ம் வருடத்தில் கிருஷ்ணகிரி வட்டத்திலிருக்கும் பாரூர் ஏரியின் கரைகளை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, வறட்சி மாவட்டம், பின்தங்கிய மாவட்டம் என்று சொல்லக்கூடிய தர்மபுரி மாவட்டத்தில் சற்று வளம் இருக்கிறது என்று சொன்னால்,

[1978 ஏப்ரல் 3

கிருஷ்ணகிரி அணையும், பாரூர் ஏரியும்தான் முக்கிய காரணமாக இருக்கும். அங்கே, இந்த ஏரிகளின்கீழ் பாய்கிற நிலம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்த ஏரிகளின் கரையை மேலும் உயர்த்தி, அதனால் பாயும் நிலங்களைச் செழிப்பாக்குவதற்கான நிலையை அரசு எடுக்குமா? அதே நேரத்தில் கிருஷ்ணகிரி ஏரியின்கீழும், பாரூர் ஏரியின் கீழும் பாயக்கூடிய ஆயக்கட்டுதார்களின் நிலத்தின்படி அத்தனை பேருக்கும் தீர்வை வசூலிப்பது சரியாக இல்லையென்றும், பலரிடத்திலே வசூலிக்கப்படாமலிருப்பதையும் அரசு அறியுமா? அதைக் கவனித்து, சரியான முறையில் தீர்வை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் பாசன வசதி பெறும் ஒப்பிய நிலங்கள் 2,758 ஏக்கர்; ஒப்பா நிலங்கள் 842.57 ஏக்கர். இந்த ஏரியினை ஓர் அடி உயர்த்தி இந்தப் பகுதிக்குப் பாசனத்தைப் பலப்படுத்தலாமா என்று பார்த்தால் ஏரியை உயர்த்துகிறபொழுது, எதிர் வாயிலே உள்ள விலை உயர்ந்த நிலங்கள் மூழ்கிவிடும். அவைகளுக்கான விலையைக் கொடுப்பதனால் இந்தத் திட்டம் சிக்கனமற்ற திட்டமாகிவிடும். ஆகையாலே, கேலவரப்பள்ளியில் ஒரு நீர்த்தேக்கம் கட்டப்படுகிறது. இது செயல்பட்டால் இந்த ஒப்பா நிலங்கள் பயனடையும். எனவே, இந்த ஏரியின் நீர் மட்டத்தை உயர்த்த வேண்டிய அவசியமில்லை.

உறுப்பினரவர்கள் தண்ணீர் தீர்வை விதிப்பைப் பற்றிச் சொன்னார்கள். அரசு ஆராய்ந்து வருகிறது.

பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம்.

*767 வினா.—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் - ஆளியாறு நீர்ப்பாசனத் திட்டம், தாராபுரம், உடுமலை, பல்லடம், பொள்ளாச்சி ஆகிய வட்டங்களில் 1 லட்சம் 17 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

(இ) இதற்கு ஆய்விற்கு ஏற்பட்ட செலவு என்ன?

1978 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

(இ) இத்திட்ட ஆய்விற்காக ஆன செலவு ரூ. 5,46,150.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் எப்பொழுது அமுல் படுத்தப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, விரைவில்.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, இந்தத் திட்டம், கோவை ஜில்லாவில் இருக்கிற 3 தாலுக்காக்களுக்கு மட்டும் பயன்படுவதாக இருக்கிறது. ஆனால், இந்தத் திட்டத்தின்மூலமாக, அதை அண்டியிருக்கக்கூடிய திருச்சி ஜில்லா, கரூர் தாலுக்காவும் பயன்பட வழிவகை செய்யப்படுமா? இது முன்பே அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஜில்லாவினுடைய பாகுபாடு இல்லாமல், தயவு செய்து அமைச்சரவர்கள், இதிலே, 1 இலட்சத்து 17 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு விரிவுபடுத்தும்போது, திருச்சி ஜில்லாவிற்கும் பாசன வசதி செய்ய வழிவகை செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில், தாராபுரம், உடுமலை, பல்லடம், பொள்ளாச்சி ஆகிய பகுதிகளுக்காக இந்த விஸ்தரிப்புத் திட்டமிடப்பட்டிருக்கிறது. கரூரைப் பொறுத்தவரையில் இல்லை.

சிற்றாறு—பட்டணம்கால் திட்டத்தின்கீழ் துணைக் கால்வாய்கள்.

*768 வினா.—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில், சிற்றாறு-பட்டணங்கால் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ், துணைக் கால்வாய்கள் வெட்டித்தர வேண்டும் எனக்கோரி பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவைபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

திரு. த. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அரியலூர் கலைக் கல்லூரியில் கழக ஆட்சி காலத்தில் 6 லட்சம் ரூபாயில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு அந்தக் கட்டடம் கட்டப்படவில்லை. அந்தக் கட்டடம் இந்த ஆண்டாவது தொடங்கப்படுமா, எவ்வளவு ரூபாய் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அரியலூர் கலைக் கல்லூரிக்கு மாணவர் விடுதிக்காக நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு 6.3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதிப்பீடு செய்யப்பட்டது. இதிலே 2.5 லட்சம் மானியமாக வழங்க பல்கலைக் கழக மானியக் குழு 3—3—1978 அன்று கருத்து தெரிவித்துள்ளது. கல்லூரி முதல்வர் அதற்கான சான்றிதழை பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு அனுப்பி அதன்பேரில் கழகத்தின் மானியத் தொகையைப் பெறுவார். மொத்த மதிப்பீடு 6.3 லட்சத்தின் 2.5 லட்சம் பல்கலைக்கழக மானியம் போக, எஞ்சியிருக்கின்ற 3.8 லட்சம் ரூபாய், கல்லூரி முதல்வர், மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களிடம் இருந்து பரிந்துரைகள் பெற்று பரிசீலிக்கப்படும்.

உயர் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் உயர்நிலைப் பள்ளிகள் தேர்வு.

* 771 **வினு.—திரு. வீ. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1978-79 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு புதிதாக ஆரம்பிக்கப் படவிருக்கும் உயர் இடைநிலைக் கல்வியினை போதிக்கும் பொறுப்பை சரியான உயர்தரப் பாடசாலைகளுக்கு ஒப்படைக்காததைப் பற்றிய புகார்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் என்றுல், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(இ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ) & (இ) குடியாத்தம் நகரில் தனியார் நடத்தும் திருவள்ளுவர் உயர்நிலைப் பள்ளியைத் தேர்ந்தெடுத்ததை ஆட்சேபித்து மனுக்கள் அரசுக்கு வந்தன. அவைகள் பரிசீலித்தப்பின் முற்றுவிக்கப்பட்டன. குடியாத்தம் நகரில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலேயே திருவள்ளுவர் உயர்நிலைப்பள்ளி மிகப் பெரியதும், வசதி

படைத்ததும், தேவையான இடவசதியோடு பெருமளவில் உபகரணங்களைக் கொண்டதும், புறத்தேர்வில் அதிக சதவிகிதமும் ஆனதால் மாவட்டக் கல்வி ஆய்வாளரின் பரிந்துரைக்கேற்ப அப்பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, உயர் இடைநிலைக் கல்வியை எந்த அடிப்படையிலே ஆரம்பிக்கிறுர்கள்? நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க குத்தாலம் ஊராட்சி ஒன்றிய அரசினர் உயர்நிலைப்பள்ளியில் உயர் இடைநிலைக் கல்வி ஆரம்பிக்கத் தேர்ந்தெடுத்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, ஒரு மாதத்திற்கு முன்னுல் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து உயர் இடைநிலைக் கல்வி தொடங்குவதற்கு தொகை அனுமதிக்கலாமா என்று கேட்டிருந்தேன். கல்வி அமைச்சரவர்கள் ஊராட்சித்துறை அமைச்சரோடு கலந்து பேசி அதுபற்றி முடிவெடுக்க வேண்டும் என்று சொன்ஞர்கள். ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ஏதாவது தொகை அனுமதிக்கலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து பெறுவது என்பது தனி விஷயம். அதுபற்றி பரிசீலிக்கலாம். ஆனுல் 25,000 ரூபாய் தருவது என்பது அந்தப் பகுதிமக்கள் அந்த பள்ளியோடு ஒரு தொடர்பு கொண்டிருக்க வேண்டும்; அந்தப் பள்ளியிலே அக்கறை கொண்டிருக்க வேண்டும்; ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக செய்யப்பட்டிருக்கிற ஒரு ஏற்பாடு. பள்ளி நல்ல முறையில் நடைபெற பொதுமக்கள் தொடர்பு இன்றியமையாதது. ஆகவே, பொதுமக்களே தொகையை வசூலித்துத் தந்தால்தான் அந்த ஈடுபாடு ஏற்படும் என்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த உயர் இடைநிலைக் கல்வியைப் போதிக்க சுருக்கமான பாடசாலைகள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது கல்லூரியில் இருக்கிற முதல் ஆண்டும், அதேமாதிரி உயர்நிலைப்பள்ளியில் இருக்கிற ஒரு ஆண்டும் எடுக்கப்பட்டு, இந்த இடைநிலைக்கல்வி கற்பிக்கப்பட வேண்டியிருப்பதால், தேர்ந்தெடுத்திருக்கிற பள்ளிகள் போதவில்லை என்று சொல்லப்படுகிறது. அதனுல்

அதற்கு என்ன ஏற்பாடு, அதாவது படிக்க விரும்புகின்ற எல்லா மாணவர்களுக்கும் இடம் கிடைக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த புதிய உயர் இடைநிலைக் கல்விக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகள், போதுமான இடவசதி உள்ளவைகளாகத்தான் இருக்க வேண்டுமென்று சொல்லி, அந்தவகையிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு அரசு மானியங்களும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் பள்ளிகளுக்குத் தரப்படும்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உயர் செகண்டரி கல்விக்கு எத்தனைப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன? இட வசதி, மற்றுமுள்ள எல்லா வசதிகளும் உடைய பல முக்கியமான பள்ளிகள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. அவைகள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஏறத்தாழ 3000 பள்ளிகளில் 560 பள்ளிகள்தான் சேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால் முக்கியமான பள்ளிகள் விடுபட்டுவிட்டன என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்த 560 பள்ளிகளில் சிலர் வேண்டாம் என்று சொல்கிறார்கள், புதிதாக சிலர் வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு இறுதியில் எந்தெந்த பள்ளிகள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

கூறைநாடு உயர்நிலைப்பள்ளி.

* 772 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சியினால் நடத்தப்பெற்று வரும் கூறைநாடு உயர்நிலைப்பள்ளியில் தற்போது பயின்று வரும் மாணவர்கள், மாணவிகள் முறையே எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

மாணவர்கள் 1,432. மாணவிகள் 551.

திரு. எஸ். கணேசன்: தலைவரவர்களே, இந்தப் பள்ளியிலே புதிய கல்வித்திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றி தகவல் இல்லை.

திரு. எம். ஏ. ஜெயவேலு: தலைவரவர்களே, இந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர் மாணவியர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். ஆகையால் இதை இரண்டாகப் பிரித்து, ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு ஒன்றும் என்ற முறையில் ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மாயூரத்தில் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று இருக்கிறது. அங்கு 1,300 பேர் பயிலுகின்றார்கள். அதைப்போல அங்கே செயின்ட் பால்ஸ் உயர்நிலைப்பள்ளி ஒன்று இருக்கிறது. அதில் 1,050 பேர் கல்வி பயிலுகின்றார்கள். ஆகவே, மேற்கொண்டும் பெண்களுக்கு என்று தனியாக ஒரு பள்ளியை அமைக்கும் உத்தேசம் இல்லை.

காவேரிப்பாக்கம் உயர்நிலைப்பள்ளிக்கு விஞ்ஞானக் கூடக் கட்டடம்.

*773 வினா—**திரு. எஸ். ஜே. இராமசாமி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972—73 ஆம் ஆண்டில், வடாற்காடு மாவட்டம், காவேரிப்பாக்கம் உயர்நிலைப்பள்ளிக்கு விஞ்ஞானக் கூடத்திற்கு பணம் ஒதுக்கீடு செய்தும், அந்தக் கட்டடம் அரைகுறையாக கட்டப்பட்டு இன்னும் பூர்த்தியாகாமல் இருப்பதற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநகயகம்: (அ) மற்றும் (ஆ) காவேரிப்பாக்கம் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிக்கான அறிவியல் ஆய்வுக்கூடக் கட்டடத்தைக் கட்ட 1972–73-ல் முன்வந்த ஒப்பந்தக்காரர், கூரை மட்டம் வரைக் கட்டிவிட்டு அத்துடன் பின்வாங்கிவிட்டார். அவருடைய ஒப்பந்தம் 1974 டிசம்பரில் ரத்து செய்யப்பட்டது. அவர் செய்திருந்த கட்டட வேலையின் மதிப்பு ரூ. 15,280 ஆகும். 1976–77 ஆண்டுகளில் பாக்கி வேலையைச் செய்து முடிக்க

[1978 ஏப்ரல் 3

பலமுறை டெண்டர் கோரியும் ஒருவரும் வரவில்லை. கடைசியாக சில மாதங்களுக்கு முன் ஒருவர் முன்வந்து அவரிடம் வேலை ஒப்படைக்கப்பட்டது. இப்பொழுது மேற்கொண்டு ரூ. 7,000 செலவிட்டு அக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாக அறிக்கை வந்துள்ளது.

கழிவு நீரைப் பயன்படுத்தும் திட்டம்.

*774 வினா.—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எந்தெந்த நகராட்சிகளில் கழிவு நீரைப் பயன்படுத்தும் திட்டங்கள் உள்ளன?

(ஆ) அதை மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (ஆ) சென்னை, மதுரை, சிதம்பரம், வேலூர், திருப்பத்தூர், புதுக்கோட்டை, ஸ்ரீரங்கம், பரமக்குடி, தூத்துக்குடி, ஊட்டி, விழுப்புரம், விருதுநகர், கோயம்பத்தூர், மேட்டூர் நகரியம், தஞ்சாவூர், கரூர், சாத்தூர், திருவள்ளூர், திண்டுக்கல், திருமங்கலம், ஈரோடு மற்றும் மண்ணச்சநல்லூர் ஆகிய உள்ளாட்சி நிறுவனங்களில் கழிவு நீரைப் பயன்படுத்தும் திட்டங்கள் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளன. மேலும் 10 நகராட்சிகளில் சென்ற ஆண்டில் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-30)

திரு. எஸ். கணேசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கழிவு நீர் எந்த வகையிலே பயன்படுத்தப்பட்டு வருகிறது? இது வெற்றிகரமாக நடைபெறுகிறதா? இந்தக் கழிவு நீரை மாயூரம் நகராட்சிப் பகுதியிலும் பயன்படுத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, வடிகால் முறையை மாற்றுவதற்கு கட்டுமானம் செய்தல், சாக்கடை நீரைக் கழிவு நீர்ப் பண்ணையில் சேகரித்து வைத்து பாசனத்திற்கு பயன்படுத்துதல் ஆகியவை இந்தத் திட்டத்தின் முக்கியமான அம்சங்கள் ஆகும். இது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. மாயூரம் நகராட்சிக்கு இதை விரிவு படுத்துவதற்கான திட்டம் இப்போது இல்லை.

1978 ஏப்ரல் 3]

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் திருவண்ணாமலை நகராட்சியை எடுத்துக் கொள்கிற ஆலோசனை அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, ஏற்கனவே இந்தத் திட்டம் காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, கோயம்புத்தூர், திருவொற்றியூர், மன்னார்குடி, பெரிய குளம், சிதம்பரம் ஆகிய பகுதிகளுக்கு விரிவு படுத்தப்பட்டிருக்கின்றன. திருவண்ணாமலையில் இல்லை.

திரு. எம். ஆறுமுகம்: தலைவரவர்களே, மேலும் விரிவு படுத்தக்கூடிய இந்தத் திட்டத்தில் சேலம் ஏன் சேர்க்கப்படவில்லை என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் சேலத்தில் வீணாகின்ற இந்தக் கழிவு நீரை லாபகரமான முறையில் பயன்படுத்தலாம். நகராட்சிக்கும் இதனால் வருவாய் கிடைக்கும். ஆகவே இந்தத் திட்டத்தை சேலத்தில் செயல்படுத்துவதற்கு ஏதேனும் செயற்குறிப்புகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இப்போது இல்லை. இனிமேல்தான் யோசிக்கப்படும்.

திரு. அ. க. அரங்கநாதன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, வேலூர் நகராட்சியில் கழிவு நீரைப் பயன்படுத்துவதன் மூலமாக நகராட்சிக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை தெரிவிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, 1976-77-ல் வேலூர் நகராட்சிக்கு இதன் மூலம் வந்த வரவு ரூ. 1,23,664 ரூபாயாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் இரண்டு நகராட்சிகள் இருக்கின்றன. அந்த இரண்டு நகராட்சிகளாகிய தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு இடங்களிலும் இந்தக் கழிவு நீரைப் பயன்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 ஏப்ரல் 3

திரு. எஸ் கணேசன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் வேளாண்மை நிறைந்த பகுதியாக இருக்கின்றது. மேட்டூர் தண்ணீரை மட்டும் நம்பி அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் விவசாயம் செய்ய முடியவில்லை. எனவே இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற உள்ளாட்சிப் பகுதிகளிலும் இந்தக் கழிவு நீரைப் பயன்படுத்துவதற்கு அரசு ஏதாவது திட்டம் வகுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா காளிமுத்து: தலைவரவர்களே, இந்தத் திட்டம் தஞ்சாவூரிலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் தஞ்சை மாவட்டத்திலே தான் இருக்கிறது.

திரு. வா. மு. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, மதுரை மாநகராட்சியில் இந்தக் கழிவு நீர் எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, நான் ஏற்கனவே மொத்தமாகக் குறிப்பிட்டேன். இதில் சேகரிக்கப்படுகிற கழிவு நீர் பாசனத்திற்கு ஏற்றதாக பயன்படுத்தல், வடிகால் கட்டுமானம் செய்தல் ஆகிய அந்த வகைகளிலே மதுரை மாநகராட்சியிலே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஆ. வெள்ளைச் சாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தந்த பதிலில் கழிவு நீர் திட்டம் திண்டுக்கல்லில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். ஆனால் அங்கே சாலைகளில் எல்லாம் இந்தக் கழிவு நீர் ஓடிக்கொண்டிருக்கிறதே, அதை அரசு அறியுமா, அதற்காக ஒரு நல்ல ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அதற்குத் தனியாகத்தான் திட்டம் தயாரிக்கவேண்டும்.

கொடுங்கையூர் கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம்.

***775 வினா—திரு. தி. சு. நல்லதம்பி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடுங்கையூர் கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அந்தத் திட்டம் கால தாமதத்திற்கு காரணம் என்ன?

(இ) அந்தத் திட்டத்திற்கான டெண்டர் வரவழைக்கப்பட்டதா?

1978 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) திருவாளர்கள் ஹிந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டின் ரூ. 2,17,17,000-க்கான ஒப்பந்தப்புள்ளி அரசால் ஏற்கப்பட்டு மேற்படி கம்பெனியிடமிருந்து உடன்படிக்கையும் பெறப்பட்டாகிவிட்டது. விரைவில் வேலை தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) அவசியமற்ற தாமதம் ஏதும் இல்லை.

(இ) ஆம். மொத்தம் 5 நிறுவனங்களிடமிருந்து டெண்டர்கள் வரப்பெற்றன.

வடாற்காடு மாவட்டத்தில் சமுதாய கிணறுகள்.

***776 வினா—திரு. வீ. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வடாற்காடு மாவட்டத்தில் சமுதாய நல வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. மார்க்கபந்து: ஏதாவது முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டனவா? அப்படி இல்லை என்றால், ஏன் இல்லை என்ற முடிவிற்கு இந்த அரசு வந்தது? ஆய்வுக்கு எடுத்து முடிவு, இல்லை என்று தெரிவிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்போது எதுவும் அங்கு செயல்படவில்லையென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்ற விவரம்தான் இருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம்: ஒன்றியப் பொது நிதியிலிருந்து இது போன்ற கம்யூனிட்டி போர்வெல்ஸ் அமைக்கப்படுகின்றன. திருப்பனந்தாள் ஒன்றியத்தில் இரண்டு ஆண்டுகளாக அந்த கம்யூனிட்டி போர்வெல் அமைக்கப்பட்டும் அதற்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்து அதற்கு மின் இணைப்பு கொடுக்க ஆவன செய்யப்படுமா?

[1978 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : கொடுக்கப்படாததற்கான காரணத்தை அறிந்ததற்குப் பிறகு அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம்.

கிராம வீடு கட்டும் சங்கங்கள்

* 777 வினா.—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கிராம வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் எங்கெங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவைகளில் இந்த ஆண்டு எத்தனை வீடுகள் கட்ட கடன் சாங்ஷன் செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) : 1976–78 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 10 வட்ட, 50 கோட்ட அளவி லான கிராம வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்ட இடங்களின் பெயர்கள் இணைப்பில்* கொடுக்கப்பட்டுள்ளன. இச் சங்கங்கள் 15—2—1978 வரையில் 20,883 உறுப்பினர்களைச் சேர்த் துள்ளன. 2,112 விண்ணப்பங்களைப் பரிசீலித்து, 521 விண்ணப் பங்களை அனுமதி வழங்க பரிந்துரை செய்து தலைமைச் சங்கத் துக்கு அனுப்பியுள்ளது. இதுவரை ரூ. 12,00,000 கடன் உதவி யுடன் 252 வீடுகள் கட்டுவதற்குத் தலைமைச் சங்கம் அனுமதி அளித்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : இந்த கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு கோட்ட அளவில் ஒவ்வொன்று அமைக்கப் படுகிறது. அது ஏறக்குறைய மூன்று நான்கு தாலுக்காகளைக் கொண்ட விரிந்த ஒரு பகுதியாக அமைந்திருக்கிறது. ஆகவே மைய இடத்திற்கு வந்துபோக ஏழை மக்களுக்கு கஷ்டமாக யிருக்கிறது. ஏழை மக்கள்தான் ரூ. 5,000 வாங்கி இந்த வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள். ஆகவே, கூடுமான வரையில் ஒன்றிய அளவில் என்றிருந்தால்தான் அது அந்த மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடியதாக இருக்கும். ஆகவே, இப்போது கோட்ட அளவில் என்று விரிந்திருப்பதை மாற்றி ஒரு ஒன்றியத்திற்கு ஒரு சங்கம் என்று பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுப்பதோடு கூட, கடன் கேட்டு அதிகப்படியான மனுக்கள் வந்திருக்கின்றன என்பதால் துரிதமாக கடன் வழங்குவதற்கு அதிகப்படியான பணி யாளர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

* 145-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1978 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப் பினர் அவர்களது ஆலோசனை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

திரு. செ. சிவசாமி : வீடு கட்டும் சொஸைட்டி பரமக்குடியில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பக்கத்திலுள்ள இளயான் குடியில் 200-க்கு அதிகமான கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே அங்கு ஒரு புதிய வீடு கட்டும் கூட்டுறவு சொஸைட்டி ஆரம்பிக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வருவாய் கோட் டத்திற்கு ஒன்று என்ற அளவில் 50 கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை அநேக மாக எல்லாக் கிராமங்களினுடைய தேவைகளைப் பூர்த்தி செய் கிறது என்ற தகவல் தரப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் இதுபற்றி எழுதியனுப்பினால், என்னுடன் பேசினால் இதுபற்றி மீண்டும் பரிசீலனை செய்யலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங் களில் ஹரிஜனங்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது என நினைக்கிறேன். அந்தச் சலுகை, எல்லாச் சமுதாயத்தைச் சார்ந்த ஏழைகளுக்கும், வசதியற்றவர்களுக்கும் இந்த வட்டிச் சலுகை கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது ஒரு கொள்கைப் பிரச்னை. பிறகு இதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

அயனாபுரம் தொழிலாளர் நல காப்புறுதி மருத்துவமனை

* 778 வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை அயனாபுரத்தில் உள்ள இ. எஸ். ஐ. மருத்துவ மனையில் எக்ஸ்ரே இயந்திர சாதனம் இல்லாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1978 ஏப்ரல் 3

மீனவ வகுப்பினர்

*779 வினா—திரு. மெ. **ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மீனவர் சமுதாயத்தை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாத ஒரு வகுப்பை அப்பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றால், சட்டப்படி அதை மத்திய அரசுதான் செய்ய வேண்டும். ஆனால் அப்பட்டியலில் சேர்ப்பதற்கு தேவையான அடிப்படை காரணம், 'தீண்டாமை'. மீனவர் சமூகம் தீண்டாமை என்னும் கொடுமைக்கு உட்படுத்தப்படவில்லையாதலின் அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மீனவர் சமுதாயத்தை ஹரிஜனங்களின் பட்டியலில் இணைப்பதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மூலக்கேள்விக்கு உரிய பதிலைச் சொல்லியிருக்கிறேன்.

திரு யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது தீண்டாமைதான் இந்த தாழ்த்தப்பட்டோர் பட்டியலுக்கு அடிப்படை என்று சொன்னார்கள், வருவாய் அடிப்படையில் இந்த சமுதாயம் பிற்பட்ட சமுதாயமாகியிருப்பதால் இதை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முன் வருமா? அவர்கள் செய்கிற பணி ஆபத்தான பணி, அசிங்கமான பணி என்பதால் அந்தச் சமுதாயத்தை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது ஒன்றும் அசிங்கமான பணி அல்ல, ஆபத்தான பணி அது என்று சொல்லுங்கள்.

(முற்பகல் 9.40)

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, மீனவர் சமுதாயம் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதைப் பற்றி ஒன்று

1978 ஏப்ரல், 3]

சொன்னார்கள். தீண்டத்தகாதவர்கள் மட்டுமல்லாமல் வருமான அடிப்படையிலே அவர்கள் மிகவும் குறைவாக சம்பாதிக்கின்ற காரணததால், இப்படிப்பட்ட பிற்பட்ட சமுதாயத்தினரை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஒரு இனத்தை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றால், முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டியது அவர்கள் சமூகத்தில் தீண்டத்தகாதவர்களாக கருதப்பட வேண்டும். மீனவர் சமுதாயம் தீண்டத்தகாதவர்கள் நிலைமையில் இல்லையென்ற காரணத்தால், அது இதில் சேர்க்கப்படவில்லை. இருந்தாலும், 1950 ஆம் ஆண்டு நம் இந்திய அரசியல் சட்டம் இயற்றப்பட்டபோது, பரதன் என்கிற மீனவர் இனத்தை அப்போது தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டது. பிறகு 1956ம் ஆண்டு, இந்தப் பட்டியல் திருத்தப்பட்டபோது, பரதன், பரவன் என்ற இரண்டு மீனவர் இனம் இதிலே சேர்க்கப்பட்டது. மீண்டும் 1970 ஆம் ஆண்டு சில மீனவர் இனத்தைச் சேர்க்க வேண்டுமென்று பரிந்துரை செய்தபோது, மத்திய அரசு ஏற்றுக்கொள்ள முடியாது என்று அறிவித்துவிட்டது. ஆகவே, இந்த அரசு இந்த முயற்சியில் ஈடுபட விரும்பவில்லை.

திரு. ா. மார்க்கப்பந்து: தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திலே இந்தச் சமூகத்தவர் பின்தங்கியவர் பட்டியலிலே இருந்து, தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலே சேர்த்திருக்கிறார்கள். எனவே, இந்த முயற்சியில் இந்த அரசு ஈடுபடுமா? தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலே மீனவச் சமுதாயத்தினரைச் சேர்ப்பது போல், வன்னியகுல க்ஷத்திரியர்களையும் இந்த தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட இனத்தவர் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு இன்னென்ன முறையில் அவர்கள் பழக்க வழக்கங்கள், மற்றும் கல்வி, சமூக, பொருளாதார துறையிலே அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலைமையிலே இருக்க வேண்டுமென்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. இந்த நிலைமைகள் இருக்குமானால் அவைகளை ஆராய்ந்து, மாநில அரசு

அப்படிப்பட்டவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு இந்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யும். இதுவே, ஒரு குறிப்பிட்ட இனத்தவரை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில சேர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கபந்து அவர்கள் கர்நாடக மாநிலத்திலே இந்தச் சமுதாயத்தினரை சேர்த்திருப்பதாகச் சொல்கிறார். ஆனால், அவர்கள் இப்போது அதற்கான ஆதாரம் தரவில்லை. (குறுக்கீடு) பத்திரிகையிலே வந்ததாகச் சொல்கிறார். அந்த அரசிடமிருந்து உரிய ஆதாரம் கேட்டு, கொடுப்பார்களானால் இதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : *தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, பரதன் இனம் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். நமது மாநிலத்தைப் பொறுத்த மட்டில், பரதன், முக்கவர் ஆகிய இரண்டு இனங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு சமூகத்தவரும் ஒரே நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே, இந்த முக்கவர் சமுதாயத்தையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு மாநில அரசு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்?*

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள கூறிய இந்த மீனவர் இனத்தவர் கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்திலும் இருக்கிறார்கள். இந்த மாநில அரசு 1970 ஆம் ஆண்டிலேயே இந்த முயற்சியில் ஈடுபட்டு, மத்திய அரசைக் கேட்டபோது, மத்திய அரசு அனுமதிக்க மறுத்துவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: *பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் மத்திய அரசு, இந்தக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க மறுக்கிறது என்று குறிப்பிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு அவர்களுக்கு அரசியல் பாக்கியத்துவம் கொடுப்பதற்கு இடையூறாக அரசியல் சட்டம் குறுக்கிடுமானால் அந்த அரசியல் சட்டத்தை தூக்கி எறிந்துவிட்டு இந்த காரியத்தைச் செய்ய அரசு முன்வருமா? என்பதை அறிய விரும்புகிறேன்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அரசியல் சட்டத்தை தூக்கி எறிவது என்பது அரசியலில் சட்டத்தை அவமதிப்பதாகும். ஆக்வே ஒரு இனத்தவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றால், அதற்கு பரிந்துரை செய்கின்ற அதிகாரம்தான் நாம் பெற்றிருக்கிறோம். இதை திருத்துவதற்கு மத்திய அரசின் கையில்தான் அதிகாரம் இருக்கிறது.

THIRU N. SUNDARARAJ : Point of Order Sir. . . . .

MR. SPEAKER : Point of order relating to this question?

THIRU N. SUNDARARAJ : Yes. *தலைவர் அவர்களே, பாயின்ட் ஆர்டர் இதுதான். ஆறுமுகம் அவர்கள், அரசியல் சட்டத்தை தூக்கி எறிய வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் நாம் எல்லோரும் அரசியல் சட்டத்தின் மீதுதான் சத்திரப்பிரமாணம் எடுத்து இங்கே வந்திருக்கிறோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்கு விளக்கம், சொல்வதற்காக பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்திருக்க வேண்டாம். கேள்விகளை அமைச்சர் அவர்களிடம் கேட்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1970 ஆம் ஆண்டு மாநில அரசு மத்திய அரசை கேட்டது என்றும், அதற்கு மத்திய அரசு மறுத்து விட்டது என்றும் கூறினார்கள். 1970-ல் இருந்த மத்திய அரசு வேறு, மாநில அரசு வேறு. 1978-ல் அமர்ந்திருக்கின்ற மத்திய அரசோடு இப்போதுள்ள மாநில அரசுக்கு நெருங்கிய உறவு இருக்கின்ற காரணத்தால், இப்போது இந்த கோரிக்கையை கேட்டுக்கொண்டால் மத்திய அரசு ஒப்புக் கொள்ளும் என்று எண்ணுகின்றேன். ஆகவே இப்போது இந்தக் கோரிக்கை மத்திய அரசினிடத்தில் கேட்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இப்போது நல்லதொரு வாய்ப்பு இருக்கிறது. அவர்களே ஒரு மனு தயார் செய்து மத்திய அரசிடம் கொடுத்தால், அதன் மீது அறிக்கை கேட்டு மாநில அரசுக்கு அனுப்புவார்கள். அப்போது மாநில அரசு இதை பரிந்துரை செய்து அறிக்கை கொடுக்க தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்

[1978 ஏப்ரல் 3

திரு. ரா. அய்யாச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கிராம வீட்டுவசதித் திட்டத்தில் தாராபுரம் இப்போது இடம் பெற வில்லை. இனிமேலாவது இடம் பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கேள்வி மீனவரைப் பற்றியது, வீட்டுவசதி பற்றியது அல்ல.

திரு. எம். வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கரையாளர் குழு கொடுத்த அறிக்கையில், கடலோரப் பகுதியிலுள்ள மீனவர் சமுதாயத்தினரை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருப்பதாகவும், அதற்கான நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிகிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்து தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க இந்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம், ஒரு தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு என்னென்ன நடைமுறைகள் பின்பற்ற வேண்டுமோ அவைகளை எல்லாம் செய்திருக்கிறது என்பதை சொல்லிக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் அரசியல் சட்டத்தை தூக்கி எறிய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அப்படி சொல்வது தவறு. அது சரியல்ல. அரசியல் சட்டத்தில் சில பிரிவுகளை வேண்டுமென்றால் திருத்தவேண்டும் என்று சொல்லலாம்.

திரு. சி. ஆறுமுகம்: பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ பாயின்ட் ஆஃப் ஆர்டர், தயவு செய்து உட்காருங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அரசியல் சட்டத்தை தூக்கி எறிய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்; அது மிக தவறானது.

திரு. சி. ஆறுமுகம்: அப்படி சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய உரிமை, இதை திருத்தவேண்டும் என்று மாற்றுவது; அதற்காகத்தான் சொல்லியிருக்கிறேன்,

1978 ஏப்ரல் 3]

திரு. துரைமுருகன்: அரசியல் சட்டத்தை தூக்கி எறிய வேண்டும் என்று சொன்னதை தப்பு என்று சொல்லுகிறீர்கள், இதற்கு முன்பு சபையிலேயே திரு. ஆலடி அருணா அவர்கள் இப்படி சொல்லியிருக்கிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இப்போது கேள்வி அல்ல, திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, மீனவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு, இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்திய அரசிடம் கோரியுள்ளதா என்கின்ற விவரங்களை அறியலாமா?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 1970 ஆம் ஆண்டு இதுபோன்ற பரிந்துரையை மாநில அரசு செய்தது. அப்போது மத்திய அரசு இதை ஏற்பதற்கில்லை என்று பதில் அளித்து விட்டது.

திரு. ஓ. சுப்பிரமணியம்: மலைவாழ் மக்களைவிட மிகவும் மோசமான நிலைமையில் வாழும் காடுவாழ் செட்டிநாட்டு வலையர் வகுப்பினர் பின் தங்கிய பட்டியலில் சேர்த்துக் கொள்ளப் படுவாரா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஏற்கனவே நான் சொன்னது போல் ஒரு இனத்தவரை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் அல்லது பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்று சொன்னால் சில விதிமுறைகள் நடைமுறைகள் பின்பற்றப்பட்டாக வேண்டும். விதிமுறைக்கு உட்பட்டு வந்தால் அரசாங்கம் பரிசீலிக்கும்.

வருமான அடிப்படையில் சலுகைகள்.

*780 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) மன்னார்குடி பிராமணர்கள் சங்கத்தின் சார்பில் வருமான அடிப்படையில் சலுகைகள் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) வருமானத்தின் அடிப்படையில் சலுகைகள் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

[1978 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) மன்னார்குடி பிராமணர்கள் சங்கத்தின் சார்பில் வருமான அடிப்படையில் சலுகைகள் வழங்க வேண்டுமென கோரிக்கை அரசுக்கு வந்துள்ளது.

(ஆ) கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அதன்மேல் நடவடிக்கை எதும் தேவையில்லையென்று முடிவெடுக்கப்பட்டது.

திரு. எஸ். ஆர். இராதா: முன்னேறிய வகுப்பில் ஏழைகளாக இருந்தாலும் அவர்களுக்கு சில பாதுகாப்பு வசதிகள், வேலை கிடைப்பதற்கும் மற்ற வகைகளுக்கும் உண்டாகிவிடுகிறது. ஆனால் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட வகுப்பில் இருப்பவர்கள் ஏழைகளாக இருந்தால் அந்த வசதிகள், வாய்ப்புகளைப் பெற முடியவில்லை. ஆகவே, ஏழைகள், பின்தங்கிய வகுப்பினரில் யார் ஏழைகள், யார் பணக்காரர்கள் என்று பார்த்து ஏழைகளுக்கு வாய்ப்புத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஏழைகளுக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதமும், பின்தங்கிய மக்களுக்கு 31 சதவிகிதமும் வேலை வாய்ப்பு, கல்வி போன்ற நிறுவனங்களில் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று அரசு ஏற்கனவே முடிவு எடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது இந்தச் சலுகைகளை பிராமணர்களுக்கு அளிக்க வேண்டிய அவசியமில்லை என்று அரசு முடிவுக்கு வந்திருப்பதாகச் சொன்னார்கள். பிராமணர்கள் போன்றவர் முன்னேற்றமான சமுதாயமாக இருந்தாலும் மிகவும் கஷ்டப்பட்டு எந்த விதமான வருமானமும் இல்லாமல் இருக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள் பல ஏழைக் குழந்தைகள் படிக்க முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு கல்வி போன்ற வசதிகள், ஸ்காலர்ஷிப்—உதவித் தொகை கொடுக்கலாம். மாத வருமானம் 300 ரூபாய்க்குள்ளாக இருந்தால் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் கிராண்ட் கிடைக்கிறது. மாநில சர்க்கார் வருமானம் குறைந்த அந்த சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கல்வி கற்க உதவி அளிக்க முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் ஒரு கட்சியின் தலைவர். எவ்வளவு சுருக்கமாகக் கேட்க வேண்டுமோ அவ்வளவு சுருக்கமாகக் கேள்வி கேட்க வேண்டும்.

1978 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: எல்லாருக்கும் இதுபோன்ற வசதி அளிப்பது என்பது அரசாங்கத்தின் நிதிநிலை எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, தற்போது இருக்கிற நிதிநிலையை ஆராயும்போது பிராமண சமூகத்தாருக்கு இதுபோன்ற வசதிகளை நீட்டிக்க வழி இல்லை என்பது இந்தக் கேள்விக்கான பதிலில் இருக்கிற உள்நோக்கமாகும்.

திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: சட்டநாதன் குழுவினிடத்தில் பிராமணர்கள் தங்களையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று மனுக் கொடுத்துள்ளார்களா? அதன்மீது பரிந்துரை செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆர். சுப்பிரமணியம் என்ற பிராமணர் அரசாங்கத்துக்கு ஒரு மனு அனுப்பியிருந்தார். அது இக்குழுவின் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. பிராமணர்கள் பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் கல்வி மற்றும் இதர சலுகைகள் பிராமணக் குழந்தைகளுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. இதுபற்றி நாங்கள் எதுவும் சொல்வதற்கில்லை என்று சட்டநாதன் குழு பரிந்துரை செய்திருக்கிறது.

திரு. எம். ஆறுமுகம்: பிறப்பால் பிராமணர்களாக இருப்பவர்கள் இன்றைக்கு பொருளாதாரச் சூழ்நிலையில் நலிந்தும், மெலிந்தும் வறுமையால் வாடும் நிலைமையில் இருப்பதால் பொருளாதாரச் சூழ்நிலையை மனதில் கொண்டு அவர்களுக்குக் கல்விச் சலுகை அளிக்க அரசு முன்வருமா? அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவாவர்களே, மாநில அரசு ஒரு காலகட்டம் வரை, அதாவது உயர்நிலைப்பள்ளி, பி.யூ.சி. வரை தற்பொழுது எல்லா வகுப்பினருக்கும் இலவசக் கல்வி அளித்து வருகிறது. ஆகவே, பொருளாதார அடிப்படையில் தாழ்ந்திருந்தாலும், சமுதாய அடிப்படையில்தான் அரசியல்

சட்டத்தில் இடம் இருக்கின்ற காரணத்தினால், அரசியல் சட்டம் எந்த அளவிற்கு நமக்கு உறுதுணை புரிகிறதோ அந்த அளவிற்கு மாநில அரசாங்கம் முடிவெடுக்க முடியும்.

திரு. வி. கொ. சின்னசாமி: தலைவரவர்களே, தாழ்த்தப் பட்டவர்களுக்கு 18 சதவீதம் அரசாங்க அலுவலகங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் பின்தங்கியவர்கள், மிகவும் பின் தங்கியவர்கள் என்ற இரண்டு சமுதாயத்தினரில் மிகவும் பின்தங்கியவர்களுக்கு எந்தப் பட்டியலின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதமும், பின் தங்கியவர்களுக்கு 31 சதவீதமும் இப்பொழுது வேலைவாய்ப்பு, கல்வி போன்ற சலுகைகள் அளிக்கப்படுகின்றன. மிகவும் பின் தங்கியவர்களுக்கு எந்த அடிப்படை என்று கேட்டார்கள். அந்த 31 சதவீதத்தில்தான் அவர்களுக்குக் கிடைக்கின்ற அடிப்படையை இந்த அரசாங்கம் பின்பற்றுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்த அரசு ஏராளமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க இருப்பதாகவும், அதிலும் வட்டியில்லாமல் கடன் கொடுக்க இருப்பதாகவும் சொல்லிக்கொண்டு, சிலபேர் அதற்கான மனுக்களுக்கான பாரங்களையும் தயார் செய்து கையிலே வைத்துக்கொண்டு ஊர் ஊராகச் சென்று கையெழுத்து வாங்கி, இந்தச் சலுகைகளை நாங்கள் வாங்கித் தருகிறோம், எங்களுக்கு 5 ரூபாய், 10 ரூபாய் தாருங்கள் என்று சொல்லி பல பகுதிகளில் மக்களை ஏமாற்றி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா? அப்படி இந்த அரசு வட்டியில்லாமல் எவ்வளவு வீடுகளைக் கட்டிக்கொடுக்க இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மூலக்கேள்விக்குத் தொடர்புடையது இல்லை என்றாலும். என்ன விவரம் என்கிற புகாரை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெளிவாக எழுதித் தருவார்களேயானால் இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்கும்.

நல்லதங்காள் ஓடையின் குறுக்கே பாலம்

* 781 வினா—திரு. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தாராபுரம்—கரூர் நெடுஞ்சாலையின் குறுக்கே செல்லும் நல்லதங்காள் ஓடை என்ற சிற்றாற்றில் மழைக் காலங்களில் தண்ணீர் பெருக்கு எடுப்பதால் பல நாட்கள் போக்குவரத்து பாதிப்பைப் போக்க மேற்படி ரோடில் பாலம் கட்டும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது வேலை மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, இப்பொழுது பாப்போசல் இல்லாமல் இருந்தாலும்கூட, அந்தக் குறிப்பிட்ட இடமானது, தாராபுரம்—கரூர் நெடுஞ்சாலை மிக முக்கியமான சாலையாக இருப்பதன் காரணமாக, அதை மறுபரிசீலனை செய்து அதற்கு ஒரு பாலம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, சென்ற நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தால் இப்பகுதி மிகவும் பழுதடைந்து 23,500 ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டு வருகிறது. மேற்கொண்டு உயர் மட்ட பாலம் கட்ட 8.64 இலட்சம் ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டிருக்கிறது. நிதிநிலைக்கேற்ப பரிசீலனை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறும்பாளையம் அருகே மேம்பாலம்

* 782 வினா—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை—சத்தி செல்லும் நெடுஞ்சாலையில் 10-வது மைலில் குறும்பாளையத்திற்கு பக்கத்தில் மழை காலங்களில் போக்குவரத்து பாதிக்காமல் நடைபெற மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அவ்வேலை மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவரவர்களே,, இந்த குறும்பனை கிராமத்திற்கு அருகில் மழைக் காலத்திலே எந்த விதமான போக்குவரத்தும் நடைபெற முடியாத காரணத்தினால் அந்த இடத்தில் ஒரு பாலத்தைக் கட்டுவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல எந்த விதமான போக்குவரத்தும் அங்கு நடைபெற முடியாத நிலை இல்லை. ஆண்டு ஒன்றுக்கு ஓரிரு நாட்களில் 1 மீட்டர் அளவிற்கு மழைக் காலத்தில் தண்ணீர் செல்கிறது, 15 நாட்களுக்கு அரை மீட்டர் என்ற அளவிற்குத் தண்ணீர் செல்கிறது. இருந்தாலும் தரைப்பாலம் அமைக்க 40,000 ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நிதிநிலைக்கேற்ப அதை மேற்கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நீட்டிக்கிறேன்.

Bridge across Kodayarw.

* 783 Q.—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether there is any proposal to construct a bridge across the Kodayarw at Marapadi on the Kulaseharan-Arumanai road in Kanyakumari district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(முற்பகல் 10-00)

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கோதையாறானது குலசேகரம் டவுன் பஞ்சாயத்துக்கும் அருமனை டவுன் பஞ்சாயத்துக்கும் இடையே செல்கிறது. இந்த இரு பஞ்சாயத்துக்களிலும் ஏறத்தாழ 40,000 ஜனத்தொகை இருக்கிறது. ஆக, இதன்

முக்கியத்துவத்தை எண்ணி, இந்தத் தேவையை உணர்ந்து, அரசு இந்தப் பாலத்தைக் கட்டித் தர முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாலத்தின் தேவையை அரசு உணர்ந்துள்ளது. அப்பால வேலையை மேற்கொள்ள ரூ. 18 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதிநிலைக்கு ஏற்ப அது மேற்கொண்டு பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, எந்த பாலத்தைக் கேட்டாலும், நிதிநிலையைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். இந்த ஆறுகளின் இரண்டு பக்கங்களிலே பஸ்கள் வந்து, திரும்பச் செல்கின்றன. பாலம் அமைக்காததால், மக்கள் போக்குவரத்து கூட தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுது நிதிநிலை சரியில்லையென்று சொன்னாலும், அடுத்த ஆண்டாவது இதனைக் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசின் நிதிநிலை மத்திய அரசு தொகையினைக் கூட்டினால், அடுத்த ஆண்டு மிகும் என்று எண்ணப் படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தான் சார்ந்துள்ள இயக்கத்தின் மூலமாக மத்திய அரசை வேண்டி மாநில அரசுக்குச் சாலை பாலங்களை அமைக்க நிதிக்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முடமானவர்களுக்குத் தொழில் கடன்கள்

* 784 வினா—திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முடமானவர்கள் தங்களால் இயன்ற தொழிலைச் சொந்தமாகச் செய்வதற்கு அரசு கடனுதவி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1978 ஏப்ரல் 3

திருச்சி. திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு அளிப்பதற்கான மத்திய அரசின் விருது, எந்த நிறுவனத்திற்காவது, தமிழகத்தில் கிடைத்திருக்கிறதா? அப்படியானால் எந்த எந்த நிறுவனங்களுக்குக் கிடைத்திருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவரவர்களே மத்திய அரசு, இந்தியா முழுமையிலும் உள்ள அரசு, மற்றும் தனியார் நிறுவனங்களில் ஊனமுற்றோருக்கு, குறிப்பாக, கண் தெரியாதோர், காது கேளாதோர், கை கால் ஊனமுற்றோர் ஆகியோருக்கு அதிக அளவில் வேலை கொடுத்த தொழில் அதிபர்களை தேசிய விருதுகள் வழங்கிப் பாராட்டுகின்றது. ஆண்டுதோறும் இத்தகைய விருதுகள் 9 வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு வழங்கப்படும் ஒன்பது தேசீய விருதுகளில் தமிழகத்திற்கு மட்டும் நான்கு விருதுகள் கிடைத்துள்ளன வென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு தேசீய விருது பெற்ற அந்த நான்கு வேலையளிப்போரின் பெயர்களை வெளியிடுவது மிகப் பொருத்தமானதாயிருக்குமெனக் கருதுகிறேன். சென்னையில் உள்ள எழுது பொருள் அச்சுத்துறை இயக்ககம், ஊட்டியில் உள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் ஆகிய இரு நிறுவனங்களுக்கு, கண்பார்வையற்றோருக்கு அதிக அளவு வேலை அளித்தமைக்காகவும், திருச்சியில் உள்ள பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் நிறுவனத்திற்கு அதிக அளவில் காது கேளாதோருக்கு வேலை அளித்தமைக்காகவும், சென்னையில் உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் நகர்ப்புறப் பிரிவிற்கு அதிக அளவில் கை, கால் ஊனமுற்றோருக்கு வேலை அளித்தமைக்காகவும் குடியரசுத் தலைவரின் தேசீய விருதுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த முடம் ஆனவர்கள் குறிப்பாக, கண் தெரியாதவர்கள் போன்ற முடமானவர்களுக்கு இப்பொழுது அரசு மானியம் வழங்க வயது வரம்பு இருக்கிறது. குறிப்பாக, 40 வயதானவர்களுக்குத்தான் அரசு மானியம் கொடுப்பதற்கு முன் வருகிறது. அப்படி வயது வரம்பு

1978 ஏப்ரல் 3]

பார்க்காமல், 10 வயது, 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு உடனடியாக அரசு மானியம் வழங்கத் தயாராக இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இதுபற்றி அரசு ஆய்ந்து பரிசீலித்து முடிவெடுக்கும்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, அவர்களுக்கு சிறு தொழில், குடிசைத் தொழில், கைத்தறி போன்ற வகையில், தாங்களே செய்து கொள்வதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த உடல் ஊனத்திலேயே மிகப் பெரிய ஊனமானது கண் பார்வை இழந்திருப்பது. இன்றைக்குத் தொழில் பயிற்சி பெற்ற கண் பார்வை இழந்தவர்கள், பல்லாண்டுகள் வேலையில்லாமலிருக்கிறார்களே, அவர்களுக்கு வேலை வாய்ப்பு தேடிக் கொடுக்கிற முறையில் ஏதாவது ஏற்பாடு, அல்லது அரசே அத்தகைய ஊனமுற்றோர்களுக்குத் தனியாகத் தொழில் பயிற்சி கொடுக்க சரியான தொழிற் கூடங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்த அளவில் சென்னையிலும், மதுரையிலும் கோவையிலும் இப்பாதிப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு வாங்கித் தருவதற்குச் சிறப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையிலே வேளச்சேரியில் 40 கண் தெரியாத சகோதரிகளுக்காக ஒரு தொழிற் பயிற்சிக் கூடம் நிறுவப்பட இருக்கிறது. அதைப் போல், கோவையிலே கண் தெரியாத 100 பேர்களுக்கு வேலை கொடுக்கின்ற விதமாக ஒரு கூட்டுறவு நெசவாளர்கள் சங்கம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவரவர்களே, இந்த உடல் ஊனமுற்றோர் மாநில வாரியத்தினால் கடந்த ஓராண்டுக் காலத்தில் எத்தனை பேர் பயனடைந்திருக்கிறார்கள்?

[1978 ஏப்ரல் 3

ஒன்று. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பணிகள் எப்படி நடைபெற்றன என்பதைப் பற்றி அரசு ஏதாவது கணித்து வைத்திருக்கிறதா? அவையெல்லாம் செவ்வனே நடைபெற்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, ஊனமுற்றோர் மாநில வாரியத்தின் மூலமாகக் கடந்த ஓராண்டுக் காலத்தில் 418 பேர்கள் ஊதியம் தரும் பணிகளிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத அளவில் தமிழகத்தில் 139 உடல் ஊனமுற்றோரை அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்ப்பித்து அவர்களுக்குத் தொழிற் பயிற்சி அளித்து வருகின்றது. பயிற்சி முடிந்த பின்னர் அவர்களுக்கு வேலை வாய்ப்பு நிச்சயமாகப் பெருகும். புத்தகம் கட்டும் பயிற்சி நிலையம் ஒன்றினை ஊனமுற்றோருக்கான மாநில வாரியம் செம்மையாக நடத்தி வருகிறது. அந்த நிலையத்தில் புத்தகம் கட்டும் பணியில் கடந்த ஓராண்டுக் காலத்தில் 32 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சுமார் 113 பேர்கள் தொழில் பழகுவோர்களாகப் பல நிறுவனங்களிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு முன்னால் இரண்டு ஆண்டுக் காலத்தைப் பற்றிக் கேட்கிறார்கள். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து நகரங்களில் உள்ள உடல் ஊனமுற்றோர்களுக்குத் தான் அரசு ஏற்பாடுகளை செய்து வருகிறது. கிராமங்களில் படித்துப் பட்டம் பெற்ற எண்ணற்ற ஊனமுற்றவர்கள் நாதி இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க ஏற்பாடு செய்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, நான் சென்னை, மதுரை, கோவை என்று சொன்னதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவைகள் நகரங்களிலேதான் செயலாற்றுகிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தந்த மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்

1978 ஏப்ரல் 3]

பேற்றிருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு கிராமங்களில் இருக்கிற உடல் ஊனம் உற்றவர்களை இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு வருகிறது. அவர்கள் தொழில் துறையில் பயிற்சி பெறுகின்ற வகையில் அதைச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள கட்டபொம்மன் கார்ப்பரேஷனில் வேலை செய்து கொண்டிருந்த உடல் ஊனமுற்றவர்கள் பிரித்து விடப்பட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப் பிரித்து விடப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அரசு முன் வருமா என்பதை நான் கேட்டுக் கொள்வதோடு, கண் தெரியாத அப்துல் என்பவரைப் பற்றி நான் முதல் கூட்டத் தொடரில் பேசியபோது, அவரைப்பற்றி நான் பேசிய காரணத்தினாலே அவர் மீண்டும் வேலை கேட்டு அங்குள்ள எம். டி. இடம் சென்ற நேரத்தில் அதிகாரிகள். . .. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து சுருக்கமாகக் கேள்வி போடாவிட்டால் மீண்டும் அழைப்பதே அரிதாகிவிடலாம்.

திரு. எம். வின்சென்ட்: கண் தெரியாத அப்துல்லுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விவரம் எதுவும் எனக்கு இதுவரை தரப்படவில்லை. தகவல் தந்தால் நடவடிக்கை எடுக்கிறேன்.

விதவை மறுமணத் திட்டம்

*785 வினா—**திரு. நா. பழனிவேல்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விதவைத் திருமணத்திற்கு உதவித்தொகை வழங்குவதன் மூலம் இந்த அரசுக்கு 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு எவ்வளவு செலவாகியது?

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: 1976-77-ல் ரூ. 2.30 லட்சம். 1977-78-ல் ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[1978 ஏப்ரல் 3

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, விதவைத் திருமணத்திற்கென்று கடந்த 2 ஆண்டுகளில் எவ்வளவு தொகை செலவானது என்றும், ஒவ்வொரு விதவைக்கும் இந்த அரசு எவ்வளவு உதவிகள் என்னென்ன முறையிலே அளித்து வருகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, விதவைத் திருமணம் செய்து கொண்ட ஒவ்வொரு தம்பதிக்கும் 3—6—1975க்குப் பிறகு திருமணம் செய்து கொண்டவர்களுக்கு ரூபாய் ஐந்தாயிரத்துக்கு 7 வருட சேமிப்புப் பத்திரங்கள் தம்பதிகளுக்கு வழங்கப்படும். இந்தத் தொகைக்கு 10¼ சதவிகிதம் கூட்டு வட்டி கிடைக்கும். 7-வது வருட முடிவில் இந்தத் தொகை 9,900 ரூபாயாக அந்தத் தம்பதிகளுக்குக் கிடைக்கும்.

திரு. பொ. காளியப்பன்: தலைவர் அவர்களே, இப்போது விதவைகள் மறுமணம் செய்வதற்கு வயது வரம்பு ஏதேனும் அரசு நிச்சயித்திருக்கிறதா? இரண்டாவது, ஒருவர் ஒரு விதவையை இரண்டாவது திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்கு இந்த உதவித் தொகை கொடுக்கப்படுகிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே விதவை திருமணம் செய்து கொள்ள வயது வரம்பைப் பற்றிக் கேட்டார்கள். அந்தச் சகோதரிகள் 18 வயதிலிருந்து 30 வயது வரையில் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அடுத்த கேள்வி இரண்டாவது திருமணம் என்று குறிப்பிடுகிறார்களா, அல்லது மறுமணம் என்று குறிப்பிடுகிறார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. பொ. காளியப்பன்: ஒரு மனைவி இருக்க இரண்டாவது திருமணம் செய்து கொள்ள.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: நிச்சயமாக நடக்காது.

திரு. எம். ஆறுமுகம்: தலைவரவர்களே, விதவைகளை மணக்க முன்வரும் பட்டதாரி இளைஞர்களுக்கு இந்த ஊக்கத்தொகையோடு வேலைவாய்ப்பில் முன்னுரிமையும் அளிக்கப்படுமா?

1978 ஏப்ரல் 3]

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: அதுபற்றி செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. போ. கோபாலன்: தலைவரவர்களே, "கோரிக்கையற்றே கிடக்குதன்னே இங்கே வேரினிலே பழுத்த பலா" என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் சோகத்தோடு பாடினார்கள். அப்படிப்பட்ட பெண்களிலே பலருக்குக் கட்டாயமாகக் கூந்தல் அகற்றப்படும் நிலைமை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: அப்படிப்பட்ட தகவல் ஏதும் இல்லை.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, விதவைகள் மறுமணம் செய்துகொண்டு 7 ஆண்டு கழிந்த பின்னால்தான் அரசு கொடுக்கக் கூடிய பத்திரத்திற்கான தொகையை வட்டியோடு பெறும் வாய்ப்பு இருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அப்படி மறுமணம் செய்துகொண்டவர்கள் 7 ஆண்டுகாலம் பணம் கிடைக்காமல் வெறுமணமாக இருப்பது சரியா?

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, பணத்திற்காக திருமணம் செய்துவிட்டு, சென்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான் 7 ஆண்டு காலம் கழித்து பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41 (3)-ன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டுவரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்."

[1978 ஏப்ரல் 3

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

திரு. செ. இராமலிங்கம்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் ஒரு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் கிடையாது. நீங்கள் எதைப்பற்றிக் குறிப் பிடுகிறீர்கள் என்பதை நான் புரிந்துகொண்டேன். நேற்றைய தினமே அதுபற்றி தெரிவித்திருக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: நேற்று சபையே இல்லையே

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு முன் தினம்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, என்னுடைய தொகுதியில் அரிசன சேரி தீ வைத்து கொளுத்தப்பட்டிருக்கிறது. இரண்டு பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். அவைத் தலைவர் முடிவிற்குப் பின் அதுபற்றி விவாதிக்கவோ பேசவோ கூடாது. மாண்புமிகு உறுப்பினர்கள் விதிகளைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள்.

(3) கவன ஈர்ப்புகள்.

(அ) காவேரிபாக்கம்—ராணிப்பேட்டை பகுதியில் மின்சார பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற விதிகள் 41-ன் கீழ் திரு. கே. ஜே. உய்யக்கொண்டான் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அவையில் இல்லை எனினும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்குள்ள ஸ்டேட்மென்டைப் படிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 19-3-1978, 20-3-1978 ஆகிய இரு தினங்களிலும் காவேரிப்பாக்கம்-ராணிப்பேட்டை பகுதி 33 கே. வி. லைன் திடீரென்று பழுது அடைந்த காரணத்தினால் ஆற்காடு பகுதியில் 11 மணி நேரம்

1978 ஏப்ரல், 3] [திரு. ச. இராமச்சந்திரன்]

மின்விநியோகம் தடைப்பட்டது. பழுது அடைந்த சாதனங்களை மாற்றியமைத்து 22 ஆம் தேதி முதல் மின்விநியோகம் சீர் செய்யப்பட்டுவிட்டது.

(ஆ) ஜவ்வாது மலைப் பகுதியில் வாழும் ஆதிவாசிகளுக்கு விளம்பரம் செய்தபடி பழச்செடி வழங்காதது குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வனக்கோட்டத்தில் ஜவ்வாது மலைப் பகுதியில் வாழும் ஆதிவாசிகளுக்குப் பழம் தரும் செடியினை அரசு ஆணைப்படி இலவசமாக வழங்கப்படும் என பத்திரிகை களில் விளம்பரம் செய்தும், இன்றுவரை பழச் செடி வழங்கப் படாமல் காலம் கடத்திக்கொண்டும், ஆதிவாசித் தலைவர்களிடம் பழச்செடி வழங்கியதாக தவறாக கையொப்பம் சிலரிடம் பெறப் படுவது கண்டு ஆதிவாசிகள் ஏமாற்றம் அடைந்திருப்பது குறித்து மாண்புமிகு ஹரிசன நலத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே,

THIRU R. MARGABANDHU: Under rule 81, I would like to offer a personal explanation.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை முடித்த பிறகுதான் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அரசு ஆணை எண் 512, சமூக நலத்துறை, தேதி 1—7—1977-ன்படி பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விவசாய வளர்ச்சிக்கான திட்டங்களைச் (Agriculture Schemes) செயல்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு திட்டம், விவசாய முன்னேற்றத்திற்கான தானியங்கள், பழச் செடிகள், கன்றுகள், மற்றும் காய்கறிச் செடிகள், பூச்சி மருந்துகள், உரங்கள் ஆகியவை வழங்குவதாகும். தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் மட்டும் இத்திட்டம் பழங்குடியினருக்கு 100 விழுக்காடு மானியமாக (இலவசமாக) வழங்கவும், ஏனைய பழங்குடியினரின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் (ஜவ்வாது மலை உட்பட) 50 விழுக்காடு உதவித்தொகை வழங்கவும்

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1978 ஏப்ரல் 3

ஆணையிடப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் உள்ள 9 திட்டப் பகுதிகளில் இதற்காக மொத்த செலவாக ரூ. 3,12,500 விவசாயத் துறை இயக்குநருக்கு வழங்கப்பட்டது. இதில் ரூபாய் 10,000 ஜவ்வாது மலைப்பகுதிக்கு விவசாயத் துறையினரால் ஒதுக்கப்பட்டது. இதில் ரூ. 7,746 செலவில் மொத்தம் 2,959 பழச் செடிகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இதில் 50 விழுக்காடு உதவித் தொகையாகும், மேலும் விவசாயத் துறை இயக்குநர் கொய்யா, மா, சாத்துக்குடி, எலுமிச்சை, மாதுளை, தென்னை முதலிய பழச் செடிகள் மலைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்டு அது சரியானபடி அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளினால் கண்காணிக்கப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

பழச் செடியினை அரசு ஆணைப்படி இலவசமாக வழங்கப்படும் என பத்திரிக்கையில் விளம்பரம் எதுவும் செய்யப்படவில்லை எனவும் உதவித் தொகையில் செடிகள் வழங்காமல் எந்த பழங்குடித் தலைவரிடமிருந்தும் கையொப்பம் பெறவில்லை எனவும் வேளாண்மைத்துறை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அரசு ஆணை எண் 446 சமூக நலத்துறை, தேதி 30—5—77-ன்படி மேற்கூறிய பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் சில வன வளத் திட்டங்கள் (Forest Schemes) செயல்படுத்த ஆணையிடப்பட்டது. அவற்றின்கீழ் மாநில அளவில் ரூ. 1,00,000 ஒதுக்கீட்டில் பழங்குடியினருக்கு புளியங்கன்றுகள், மூங்கிற் செடிகள் மற்றும் கடுக்காய்ச் செடிகள் வழங்குவதற்கான திட்டம் ஏற்கப்பட்டு ஆணையிடப்பட்டது. மாவட்ட வன அலுவலர், வேலூர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (திட்டமும் வளர்ச்சியும்) ஆகியோரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி இத்திட்டத்தின் கீழ் ஜவ்வாது மலைப் பகுதிக்கு தலைமை வனப் பாதுகாப்பாளரால் ரூபாய் 15,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 13,460 செலவில் 60,000 புளியங் கன்றுகள் பழங்குடியினருக்கு வழங்கப்பட்டன. மீதமுள்ள தொகையும் 31-3-1978-க்குள் செலவிடப்படும் என்றும் தெரியவருகிறது. மேலும் இத்திட்டத்தின்கீழ் இந்த மலைப் பகுதியில் புளியங்கன்றுகள் மட்டுமே வழங்கப்பட்டன. அவர் மேலும் பழம் தரும் செடிகள் வழங்கும் திட்டம் எதுவும் அத்துறையில் இல்லை எனவும், ஆனால் மூங்கில், கடுக்காய், புளியன் போன்ற மலைவாழ் மக்களுக்கு உபயோகமான செடிகள் மட்டுமே வழங்கத் திட்டம் உள்ளது, எனவும் கூறியுள்ளார்.

1978 ஏப்ரல் 3] மாண்புமிகு திரு. பெ. சௌந்தர பாண்டியன்]

பழச் செடியினை அரசு ஆணைப்படி இலவசமாக வழங்கப்படும் என பத்திரிக்கையில் விளம்பரம் எதுவும் செய்யப்படவில்லை என்றும், ஆனால், தீவிர மரம் நடுவிழாவின்போது அவர் ஒரு பள்ளி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில், ஒரு இலட்சம் செடிகள் இலவசமாக பழங்குடி மக்களுக்கு வழங்கப்படும் எனக் கூறியதாகவும், இதனைச் சில பத்திரிக்கைகள் செய்தியாக வெளியிட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். இதற்காக ரூபாய் 13,460 மொத்தம் செலவழிக்கப்பட்டது எனவும், இதில் ரூபாய் 9,659-45 பை கன்றுகள் வைக்க, ஒரு இலட்சம் பாலித்தின் பைகள் வாங்கவும், மீதமுள்ள ரூபாய் 3,800-55 பை. இப்பைகளில் மண், உரம் முதலியவை நிரப்பவும், செடிகளுக்கு தண்ணீர் விடவும், செலவிடப்பட்டது எனவும் கூறியுள்ளார்.

பழங்குடியினர்மீது வன வளர்ச்சித் துறை நிர்பந்தம் எதுவும் செய்யவில்லை எனவும், செடிகள் வழங்கும்போது எந்தவித கையொப்பமிட்ட மனுவும் வாங்கவில்லை எனவும் பழச்செடிகள் இலவசமாக வழங்கப்படவில்லை என்ற கூற்று சரியில்லை எனவும், இதில் ஒழுங்கீனம் எதுவும் இல்லை எனவும் அரசு ஆணைப்படியே எல்லாம் நடந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, கலசப்பாக்கம் தொகுதியில் ஜவ்வாது மலையில் பல கிராமங்கள் அமைந்திருக்கின்றன அந்தப் பகுதியிலே இருக்கின்ற மலைவாழ் மக்கள் முன்னேற்றச் சங்கத்தில் இப்பேர்ப்பட்ட காரியங்கள் நடந்திருப்பதாக என்னிடத்தில் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அப்படி எதுவும் நடைபெறவில்லை என்று சொல்கிறார்கள். அதை அறிவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுக்கு ஒரு அறிக்கை அனுப்பி ஏதாவது ஒரு வருவாய்த் துறை அதிகாரியை வைத்து விசாரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இங்கே அளிக்கப்பட்ட அறிக்கையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்தும், வனத்துறையிடம் இருந்தும் பெற்று தரப்பட்ட அறிக்கைதான். ஆகவே, மேல் நடவடிக்கை எதுவும் தேவை இல்லை என்று நினைக்கிறேன்.

[1978 ஏப்ரல் 3

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, 81-வது விதியின் கீழ் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் காட்டிவிட்டுத் தான் பேசவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட என் அனுமதி பெற்றுத்தான் படித்தார்கள். எதைப்பற்றி நீங்கள் பேசப் போகிறீர்கள் என்பதுபற்றி அவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியாமல் எப்படி அனுமதிப்பது ?

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, 41-வது விதியின்கீழ் கொடுக்கப்பட்ட விஷயம்பற்றி, ஒரு பொது மீட்டிங் 13—7—77 ல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா ? தாங்கள் சொல்லி பயன் இல்லை. அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறார்களா ? இந்தப் பழக்கத்தைக் கொண்டுவந்தால் மற்ற உறுப்பினர்களும் எழுந்து 81, 81 என்று சொல்லி அவை நேரத்தை வீணாக்குவார்கள். ஆகவே, தயவுசெய்து தாங்கள் அமருங்கள்.

(இ) தஞ்சாவூர் செயின்ட் ஜோசப் அனாதைப்பள்ளி பகல் உணவில் விஷம் கலந்திருந்ததால் குழந்தைகள் பாதிப்பு குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் செயின்ட் ஜோஸப் பள்ளி அனாதை விடுதியிலுள்ள 146 குழந்தைகள் அருந்திய பகல் உணவில் விஷம் கலந்திருந்ததன் காரணமாக பாதிக்கப்பெற்று மருத்துவ மனையில் சேர்க்கப் பெற்றுள்ளது பற்றிய" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் உள்ள செயின்ட் ஜோசப் உயர்நிலைப்பள்ளியும் உடன் இணைந்த அனாதைக் குழந்தைகள் இல்லமும் தனியார் தொண்டு நிறுவனத்தினால் நடத்தப்படுவதாகும். அவ்வில்லத்திற்கு தமிழக அரசு, கல்வி இயக்குநர் மூலமாக உணவு மானியமாக குழந்தை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 14 வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

1978 ஏப்ரல், 3] [செல்வி பி. டி. சரஸ்வதி]

தஞ்சை மாவட்ட ஆட்சியரிடமிருந்து வந்துள்ள அறிக்கையின் படி 22-3-78 அன்று தஞ்சாவூர் ஆர். சி. நடுத்தரப்பள்ளியில் உள்ள செயின்ட் ஜோசப் அனாதை விடுதியில் தங்யிருக்கும் 5 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பச்சையரிசி தயிர் சாதமும் பச்சைப்பட்டாணி பொரியலும் மதிய உணவாக சாப்பிட்ட பின் வாந்தி, மயக்கம் ஏற்பட்டு தஞ்சை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். 23-3-78 நாள் வரை மொத்தம் 203 சிறுவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டனர். பல மருத்துவர்கள் இணைந்த குழுவினரால் சிகிச்சை தொடர்ந்து அளிக்கப்பட்டதில் 23-3-78 அன்று மாலை வரை 146 சிறுவர்கள் உடல் நலமடைந்து திரும்பினர். மற்றுமுள்ள 57 குழந்தைகளும் மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றனர். 30-3-78 காலை வந்துள்ள அறிக்கைபடி எல்லா சிறுவர் களும் குணமடைந்து மருத்துவமனையினின்று அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேலும் தஞ்சை நகராட்சி உணவு ஆய்வாளர் மேற்படி விடுதியை பார்வையிட்டு அவ்விடுதி துப்புரவாக வைக்கப் பட்டுள்ளது என்றும் சிறுவர்களுக்கு உணவு பரிமாறப்படும் எனமல் தட்டுகள் சிலவற்றில் எனாமல் உடைந்து உள்ளிருக்கும் உலோகப் பகுதி தெரிவதாகவும் அறிக்கை அளித்துள்ளார். உணவு விஷமடைந்ததற்கு காரணம் சாதத்தோடு கலக்கப்பட்ட தயிர் மிகவும் புளித்த நிலையில் இருந்ததால்தான் என்று யூகிக்கப் படுகிறது. மேற்படி விடுதியில் உபயோகப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு சென்னை கிங் நிலையத்திற்கு (King Institute) பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி குறித்து தஞ்சை மேற்கு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தில், 22-3-78-ல் தஞ்சை ஆர். சி. நடுத்தரப்பள்ளியின் பிள்ளைகள் செயின்ட் ஜார்ஜ் அனாதை விடுதியில் தங்கியிருந்ததில், அங்கே பச்சரிசி போடப்பட்டதாகவும், தயிர் சாதம் அளிக்கப்பட்டது என்றும் சொன்னார்கள். தயிர் மிகவும் புளிப்பாக இருந்தது என்றும் தட்டு மிக மோசமாக இருந்தது என்றும் குறிப்

பிட்டார்கள். அங்கே படிக்கின்ற சிறுவர்கள் எல்லாம் 5-லிருந்து 14 வயதிற்கு உட்பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் குழந்தைகள் எல்லாம் அனாதைக் குழந்தைகள் என்ற அளவில், அவலநிலையில் இவர்களை கவனிக்காமல் இருந்துவிடாமல் இந்த ஏழைக் குழந்தைகளை எதிர்காலத்திலாவது, இப்படிப்பட்ட அவலநிலை ஏற்படாமல் இவர்களுக்கு அளிக்கப்படும் உணவுகள் எல்லாம் நல்ல முறையில் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: இது முற்றிலும் எதிர்பாராதவிதமாக நடைபெற்ற நிகழ்ச்சி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சமூக நலத்துறையால் இந்தப் பள்ளி நடத்தப்படவில்லை என்றாலும், இப்படிப்பட்ட குழந்தைகளை கவனிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது என்ற எண்ணத்தில் இதைப்பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட தவறுகள் இனிமேல் வராதவாறு அரசு நிச்சயமாக கவனிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே. செயின்ட் ஜோசப் பள்ளி தஞ்சையில் இருப்பது மட்டுமல்ல, இதனுடைய நிர்வாகத்தின் கீழ் சென்னை போன்ற இடங்களிலும் பல பள்ளிகள் விடுதிகள் நடத்தப்படுகின்றன. நேற்று நான் தஞ்சைக்குப் போயிருந்தபோது விசாரித்தேன். இங்கு அமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி. அங்கு தயிரில் கலப்படம் ஏற்பட்டதால் தான் இது நடைபெற்றது என்றும், இதற்கு காரணமாக இருந்த தயிர் எங்கேயிருந்து தயாரிக்கின்றார்கள் என்று பார்த்ததில் அங்கு கொடுக்கப்படுகின்ற பால்பவுடரிலிருந்து தான் தயிர் எடுத்திருக்கிறார்கள் ஆக இந்த பால்பவுடரினால் தான் இந்த தகராறு வந்திருக்கிறது அதில் விஷமும் கலந்திருக்கிறது. சென்னையில் இருக்கின்ற இவர்களின் நிறுவனங்களுக்கும் இந்த பால்பவுடர் அனுப்பப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஆகவே, உடனே இங்கு அனுப்பப்பட்ட பால்பவுடரில் விஷம் ஏதாவது இருக்கிறதா என்பதை ஆராய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: அரசு நிச்சயமாக இதில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஓ. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில், தயிரில் அதிகமாக புளிப்பு இருந்ததால், அதில் விஷம் ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது சோதனைக் கூடத்தில் ஆராய்ச்சி செய்து பார்த்ததில் இப்படி தெளிவாகியிருக்கிறதா, தயிரின் மாதிரி எடுத்து சோதனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? 146 குழந்தைகள் என்பது சாதாரணமான விஷயம் அல்ல. இனிமேலாவது இப்படி நடைபெறாமல் இருப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கொடுத்த அறிக்கையில் அங்கு வழங்கப்பட்ட உணவுப்பொருளின் மாதிரி எடுத்து கிங் இன்ஸ்டிட்யூட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தனியார் நிறுவனங்களிலும் இப்படிப்பட்ட தவறுகள் இனிமேல் நடக்காதவாறு அரசாங்கம் பார்த்துக் கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில், சொல்லப்பட்டிருப்பது மட்டுமில்லாமல், உணவுப்பொருட்களைத் தவிர, ஒவ்வொரு விடுதியும் மிகவும் வசதிக் குறைவாக இருக்கிறது. ஆகவே இரண்டு நாளைக்கு ஒரு தடவை ஹெல்த் இன்ஸ்பெக்டர் அங்கு விஸிட் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த அரிய யோசனையை ஏற்றுக்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) அறிவிப்புகள்.

(அ) 1978-ம் ஆண்டு பேரறிஞர் அண்ணு தொழில் நுட்பப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணு தொழில் நுட்பப் பல்கலைக் கழக சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய, மேதகு ஆளுநர் அவர்கள் தனது இசைவினை தெரிவித்துள்ளார்கள் என்பதை பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(5) அரசினர் சட்டமுன்வடிவு

(அ) 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணு தொழில் நுட்பப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணு தொழில் நுட்பப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண் 14/78)—தொடர்ச்சி.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திற்கான நிலுவைகளை வசூலிப்பதற்கு ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் படி அதிகாரம் வேண்டும் என்று இந்த மசோதாவில் கேட்கப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய மின்சார இலாகாவில் இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டே நான்கு மாதங்களுக்கான தொகையை டெப்பாசிட்டாக பெற்றுக்கொள்கிறார்கள். அப்படி பெற்றுக்கொள்வது மட்டுமல்ல,

ஒவ்வொரு மாதமும் உள்ள பாக்கியை 22-ம் தேதி மாலை 4 மணிக்குள் கட்டவில்லை என்று சொன்னல் மின்சாரத்தை துண்டித்து விடுகிறார்கள்.

(முற்பகல் 10-30)

ஆகவே, இப்போது இந்த சட்டத்தின் அடிப்படையிலே அவர்கள் செலுத்தவேண்டிய மினிமம் சார்ஜ் ஒரு வருஷத்திற்கு இவ்வளவு செலுத்த வேண்டுமென்று ஆரம்ப காலத்திலேயே, மின் இணைப்பு கொடுக்கக்கூடிய நேரத்திலே விதிமுறைகள் இருக்கின்றன. ஆனல், பின்னலே இந்த விதிமுறைகளின்படி செலுத்தவில்லை என்று சொல்லி, 3, 4, வருஷங்களின் பாக்கியைச் சேர்த்து கட்டவேண்டுமென்று சொல்லி, இப்போது இராமநாதபுரம் ஜில்லாவிலே பல இடங்களிலே ஜப்தி நடவடிக்கைகள் எல்லாம் கோர்ட்டு மூலம் செய்யக்கூடிய ஒரு பெரிய அபாய நிலையெல்லாம் ஏற்பட்டு இருக்கின்றது. விவசாயிகளுக்கு இடைஞ்சல் பண்ணக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, விவசாயிகள், பம்பு செட்டுகள் கிணறுகளுக்கு பக்கத்தில் பம்பு செட்டு அறையிலே விளக்கு போடுவது வழக்கம். இரவு நேரங்களில் காவல் இருக்கும்போது, ஏதாவது விஷ ஜந்துகள் வந்தால், தெரிவதற்காக இவ்வாறு விளக்குகள் போடுவது வழக்கம். அதிலே குறிப்பாக இவ்வளவு வாட் பல்புகள்தான் போடவேண்டுமென்று விதியிருக்கிறது. 40 வாட்டுக்கு மேலே போடக்கூடாது, நீ அவ்வாறு போட்டாய் என்று கூறி, அத்தகைய ஒரு காரணத்தைக் காட்டி 3, 4 வருஷங்களுக்குப் பின்னலே அதற்கான சர்சார்ஜ் என்று கூறி 500 ரூபாய் அல்லது 600 ரூபாய் கட்ட வேண்டுமென்று கேட்டு நோட்டீஸ் வருகிறது. ஆக, இப்படி வரக்கூடிய நோட்டீசுக்குப் பின்னலே அவர்கள், போர்டுக்கு அப்பீல் மூலம் கேட்டு, தாங்கள் அத்தகைய பல்பு போடவில்லை என்று நிரூபித்து, பல இடங்களில் அத்தகைய கட்டணங்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, இத்தகைய அதிகாரத்தை மேலும் நாம் அவர்களுக்கு வழங்குவதன் மூலமாக, விவசாயிகள் இந்தமாதிரி அப்பீல்கூட கேட்க முடியாத தவறுகள் எல்லாம் ஏற்பட்டு, ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அவர்களுடைய வீடுகளிலே உள்ள பொருள்கள் எல்லாம் எடுக்கக்கூடிய ஒரு அபாயம்தான் இதனல் உருவாகும். அதனல் அவர்களிடையே ஒரு பெரிய கொந்தளிப்பும், ஒரு

அதிருப்தியும், பெரிய சங்கட உணர்வும்தான் ஏற்படும். ஆகவே, இப்போது இருக்கக்கூடிய, கட்டணங்களை வசூலிப்பதற்கு இருக்கக்கூடிய விதிகளைக் கொண்டே வசூல் செய்யலாமே தவிர, இதற்கு மேலும் புதிதாக விதி போட்டு, அதை நாம் போர்டுக்குத் தரவேண்டிய அவசியம் இல்லை. எனவே, இந்த மசோதா தேவையற்றது, மேலும் விவசாயிகளுக்கு அதிகமான தொந்தரவையும், சங்கடத்தையும் உண்டுபண்ணக்கூடியது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல பகுதிகளிலே இப்போது நமது மாநிலத்தில் 2, 3 வருஷங்களுக்கான பாக்கி கட்டவேண்டுமென்று சொல்லி, நோட்டீஸ் அனுப்பக்கூடிய நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல. அதிகமான வாட் பல்பை உபயோகப்படுத்தினாய் என்ற காரணத்தைக் காட்டி, அதற்காக அதிகத் தொகையைக் கட்டு என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நேரத்திலே மேலும் அவர்களுக்கு நாம் அதிகமான அதிகாரத்தைக் கொடுத்தால், நியாயத்தை எடுத்துச்சொல்ல அவர்களுக்கு வழியில்லை. அது மறுக்கப்பட்டு, மேலும் ஜப்தி நோட்டீஸ்தான் அனுப்பக்கூடிய நிலைமை ஏற்படும். அது மட்டுமல்ல, எதற்காக இப்போது இந்தச் சட்டம் வரவேண்டுமென்று தெரியவில்லை. ஏதோ ஒன்றிரண்டு நிறுவனங்கள் மால்கோ, தாரங்கதாரா போன்றவைகளிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்கள் வசூல் செய்ய முடியவில்லை, இதற்காக இந்த போர்டுக்கு இந்த அதிகாரம் என்று சொல்லக்கூடாது. இதனால், சாதாரண ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் கொடுக்கவில்லையென்றால், அவர்களுடைய மோட்டார். மற்றுமுள்ள சாமான்களையெல்லாம் ஜப்தி செய்கிறார்கள். அப்படி எத்தனை கேஸ்கள் பாக்கியாக நிலுவையில் வராமல் இருக்கின்றன ? அப்படி வராமல் இருப்பதற்கு காரணங்களாக வேண்டுமானால் ஒன்றிரண்டு இருக்கலாம். ஆனால், மொத்தமாக அவர்களிடம் 4 மாத டெபாசிட்டை வாங்கி விடுகிறார்கள். அப்படி வாங்கக்கூடிய டெபாசிட் தொகை இந்த போர்டிடத்திலே ஏற்கனவே இருக்கிறது. அப்படியிருந்தும், ஒரு மாதம் பில்லை அடுத்த மாதம் 22 ஆம் தேதிக்குள் கட்டவில்லை என்று சொன்னால், துண்டிக்கப்படுகின்ற அதிகாரம் இருக்கிற — [illegible]

அதிகாரத்தைக் கொடுத்து வருவாய்த் துறைக்கு உள்ளதைப் போல் மேலும் ஒரு நிலைமையை இந்த அதிகாரிகளுக்கு, இந்த இலாகாவிற்கு அரசாங்கம் அவசியம் கொடுக்கக்கூடாது.

ஆகவே, இந்த மசோதா தேவையற்ற ஒன்றாகும். விவசாயிகளுடைய உடைமைகளையும், ஏழை எளிய மக்களையும் இது மேலும் சங்கடத்திற்கு உள்ளாக்கும். ஆகவே, பழைய முறையில் வசூலிக்கின்ற அந்த அதிகாரமே போதுமானது, எனவே இது அவசியம் தேவையில்லை என்பதை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இந்த மசோதாவிற்கு ஆட்சேபணை தெரிவித்து, இதை அரசாங்கம் வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் சேர்ந்திருக்கின்ற உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக மிகவும் கடுமையாக, வன்மையாகக் கண்டிக்கின்றேன். காரணம், இந்தச் சட்டம் சாதாரண மக்களை நிச்சயம் பாதிக்கக்கூடியதாக அமைந்திருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும், ஸ்டேட்மெண்டு அப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்சிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே, எலக்ட்ரிசிடி போர்டு கான்ஸ்டிடியூட் செய்வதற்கு முன்னாலே, ரெவின்யூ ரெகவரி ஆக்ட்படி வசூலித்துக் கொண்டிருந்தோம். பின்னாலே, போர்டு கான்ஸ்டிடியூட் செய்தபின், அந்த நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு கோர்ட்டுக்குச் செல்வதால் காலம் நீடித்துக் கொண்டே செல்கின்றது என்று காரணத்தைத் தந்திருக்கிறார்கள்.

ஆனால் இப்போதும் அதே போர்டுதான் நடந்து கொண்டிருக்கிறது. என்ன நிலைமை வந்து விட்டது திரும்பவும் ரெவின்யூ ரெகவரி ஆக்டை கொண்டுவர : அந்த புரொவிஷன்களைக் கடைப்பிடிக்க, இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற பெரும் பெரும் செல்வந்தர்கள், தொழிற்சாலை வைத்திருப்பவர்கள், அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள், அரசாங்கத்தைத் தங்கள் நலனுக்காக கையகப்படுத்தும் அளவுக்கு சக்தி படைத்தவர்கள் இன்றைக்கு மின்சாரத் தொகையைக்

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 ஏப்ரல் 3

கட்டாமல் இருக்கிறார்கள். "மால்கோ" போன்றவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு வஜா செய்யக்கூட வகை செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக, 25,000 ரூபாய் அதற்கு மேல் கட்ட முடியவில்லை என்று சொன்னால் அரசாங்கத்தின் அனுமதி பெற்று 'ரைட் ஆப்' செய்யலாம் என்று சொல்லுகிறார்கள். இதனால் சக்தி படைத்தவர்கள், வலிவு உள்ளவர்கள், அரசாங்கத்தின் தயவைச் சுலபமாகப் பெறக்கூடியவர்கள் அரசாங்கத்தின் அனுமதி பெற்று ரைட் ஆப் பெற வாய்ப்பு இருக்கிறது. ஒரு முறை ரைட் ஆப் செய்துவிட்டால் மீண்டும் அவர்களுக்கு மின்சாரம் கொடுக்கக்கூடாது என்ற வகையில் இதிலே வழிவகை இருக்க வேண்டும். இல்லையென்றால் செல்வாக்கு படைத்தவர்கள் மீண்டும் மீண்டும் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி ரைட் ஆப் பெற்றுக் கொண்டே இருப்பார்கள். இதனால் மீண்டும் பணம் கட்டாத நிலைமைதான் ஏற்படும்.

There must be a ceiling for getting the permission from the Government, to write off the amount that is due to be paid to the Government.

என்ற முறையில் ப்ரொவிஷன் இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட கால வரையறைக்குள் மின்சாரக் கட்டணத்தைக் கட்டவில்லை என்று சொன்னால் சர்வீஸ் கனெக்ஷன் எடுத்து விடலாம் என்ற விதி இருக்கிறது. விவசாயிகள் சன் டெபாசிடர் வைக்க வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. விவசாயிகள் மின் கட்டணம் கட்டவில்லை என்றால் அவர்களுக்குக் கொஞ்சம் கால அவகாசம் தாருங்கள். ஒரு மாத காலத்திலோ, இரண்டு மாத காலத்திலோ அவர்கள் ரீ-கனெக்ஷன் பெற முடியாத அளவுக்கு இருப்பார்களானால், பழைய பாக்கியைச் செலுத்தும்போது ரீ-கனெக்ஷன் தாருங்கள்.

அதற்கு மாறாக ரெவின்யூ அதிகாரிகளுக்கு அறிவித்தால் அவர்கள் உடனே சென்று கட்ட முடியாத நிலையில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய வீடுகளில் நுழைந்து இருக்கிற தட்டுமுட்டுச் சாமான்களை ஜப்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது. கிராமத்தில் மணியக்காரர், கணக்குபிள்ளையைப் பார்த்து ஜப்தி நடவடிக்கை

1978 ஏப்ரல் 3] [திரு. ரா. மார்க்கபந்து]

எடுக்கவேண்டும்; அவர்களுக்கு வேண்டாதவர்கள் யாரும் இருப்பார்களானால் அவர்கள் வீட்டில் நுழைந்து அவர்களை மானபங்கம் செய்யும் அளவுக்கு ஆபத்து இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. இதனால் அந்தக் கிராம மணியக்காரர், கணக்குப்பிள்ளை முன்னால், அந்த மகாராஜாக்களுக்கு முன்னால் மண்டியிடும் நிலைமை கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு ஏற்படும். தயவு செய்து நீங்கள் அதைச் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே ஒரு லயபிலிடியை பிக்ஸ் செய்வது என்றால் மூன்று மாத காலத்திற்குள்ளாக அப்பீல் செய்யலாம் என்று இருக்கிறது. அப்பீல் செய்வதற்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைக் கட்டிவிட்டுத்தான் வித்தவுட் பிரிஜுடிஸ்—அப்பீல் செய்யவேண்டுமென்று இருக்கிறது. அதிலே ராங் கால்குலேஷன் கூட இருக்கலாம். சந்திரன் அவர்களுக்கு வந்திருக்கும் ஒரு பில்லில், 2 யூனிட்டுகள் செலவாகியிருப்பதற்கு ஏறக்குறைய 15, 20 யூனிட்டுகளுக்கான தொகை போடப்பட்டிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அந்தப் பணத்தைக் கட்டிவிட்டுத்தான் அப்பீல் செய்ய வேண்டுமென்ற நிலைமையை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்பீல் செய்ய வேண்டுமென்ற

(முற்பகல் 10-40)

நிலைமை இருக்கிறது. அந்த டிபார்ட்மென்டைச் சேர்ந்தவர்களிடத்திலேயே அப்பீல் செய்ய வேண்டுமென்ற நிலைமையிருந்தால்,

They can take the view in the departmental manner.

ஆகையால் இன்டிபென்டென்டாக செய்யக் கூடிய அளவில்,

"Independent Judicial authority must be there to decide".

ஆகையால் அந்தத் துறை சம்பந்தப்பட்டவர்கள் அப்பீல் அதிகாரிகளாக இருப்பார்களேயானால், தங்களுக்குக் கீழே வேலை செய்யும் அதிகாரிகள் போட்ட உத்தரவுதான் சரியானது என்ற முடிவிற்கு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தப் புரொவிஷன் ஆபத்தை உண்டாக்கும், விவசாயிகளைக் கையிலே அடக்கி வைத்துக் கொள்வதற்கான புரொவிஷனாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 ஏப்ரல் 3

இப்பொழுது மேல் மட்டக் குழு என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே பங்கு பெற்றிருக்கின்ற சிலர், குறிப்பாக வடார்க்காடு மாவட்டத்திலே உள்ள பெரும் பணக்காரர்கள், பெரும் நிலச்சுவான்தார்கள், தாங்கள் கட்ட வேண்டிய பாக்கிகளைக் கட்டாமல் இருப்பதற்காக, இந்தச் சிறு நில விவசாயிகளிடத்தில் சென்று, நீங்கள் அரசாங்கத்திலேயிருந்து பெற்றிருக்கின்ற கடன்களை வஜா செய்யும்படி செய்கிறோம், அதே நேரத்தில் 14 பைசாவாக இருந்ததை 16 பைசாவாகப் போட்டிருக்கிறார்கள், அதை நாங்கள் 12 பைசாவிற்குக் குறைப்பதற்கான வகை செய்கிறோம், ஆகவே, நீங்கள் வரி கட்டாதீர்கள் என்று சொல்லுகின்ற நிலைமை உண்டாகியிருக்கிறது.

இராணிப்பேட்டையில் பெரிய ஊர்வலத்தை நடத்தினார்கள், குடியாத்தத்திலும் பெரிய ஊர்வலத்தை நடத்தினார்கள், எலக்ட்ரிக் சப்ளை ஆபீசரை உள்ளே நுழைந்து வெளியே இழுத்து வந்திருக்கிறார்கள். அதனால் கைது செய்யப்பட்டவர்களை போலீஸ் நிலையத்தில் நுழைந்து வெளியே இழுத்து வந்திருக்கிறார்கள். இதனால் பதட்டமான நிலைமை அங்கே இருக்கிறது. அந்த மேல் மட்டக் குழு சம்பந்தப்பட்டவர்கள் இதிலே ஈடுபட்டிருப்பார்களேயானால், அவர்களை உடனடியாகக் கூட்டிவைத்து, விவசாயிகளின் சிறு சிறு பிரச்னைகளை—பெரிய பிரச்னைகளும் இருக்கின்றன, ஆனால் இப்பொழுது வைத்திருக்கின்ற, சிறு சிறு பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியும். ஆகவே, உடனடியாக மேல்மட்டக் குழுவைக் கூப்பிட்டு, அவர்கள் வைத்திருக்கின்ற டிமாண்டைப் பரிசீலித்து, தீர்க்கப்பட வேண்டிய டிமாண்டுகளைச் சீக்கிரமாகப் பரிசீலித்து இந்த அரசாங்கம் அறிக்கை தருவதன் மூலமாகச் சிறு விவசாயிகளின் மத்தியில் உள்ள கொந்தளிப்பு நீக்கப்படும்.

இப்பொழுது நம்மை விரும்பாத சக்திகளெல்லாம் கூடி மக்களைத் தூண்டிவிட்டு, இந்த அரசுக்கு எதிரான நிலையை உருவாக்க வேண்டுமென்று சொன்னால் இது அரசியல் பின்னணியில் நடைபெறுவதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த அரசுக்குக் களங்கம் வருவதற்கு முன்பு தீர்க்கப்படக்கூடிய அந்த விவசாயிகளின் சிறுசிறு பிரச்னைகளை நீங்கள் அலசி ஆராய்ந்து

1978 ஏப்ரல் 3] [திரு. ரா. மார்க்கபந்து]

அந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் முறையிலே அறிக்கை விடுவதன் மூலமாக விவசாய மக்களின் வெறுப்பை, எதிர்ப்பை அரசாங்கம் பெறுவதிலிருந்து தவிர்க்க முடியும், இந்த அரசாங்கத்திற்கு நல்ல பெயர் ஏற்படும் என்ற வகையிலே விவசாயிகளின் பிரச்னைகளை அணுக வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

திரு. துரைமுருகன் : Sir, on a point of clarification on the speech of Thiru R. Margabandu, இந்த அரசாங்கத்திற்குக் களங்கம் வராமல் அவர்கள் கேடயம்போல் இருந்து காப்பாற்றட்டும், அதில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு கிடையாது.

விவசாயப் பெருமக்களை அரசியல் பின்னணியில் தூண்டிவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். இது எவ்வளவு பெரிய கருத்து, இதை அவையிலே யார் இந்த பின்னணிக்காரர்கள் என்று எடுத்துச் சொன்னால் நாட்டிற்குத் தெரியுமல்லவா? ஆகவே, நாட்டிற்குச் சொல்ல வேண்டும். பொத்தாம் பொதுவில் அரசியல் பின்னணி என்று சொல்லாமல் தெளிவாகச் சொல்ல வேண்டும். பின்னணி பாடும் வேலை உங்களுக்கு எதற்கு? நீங்கள் முன்னணியில் இருந்து அதைச் சொல்லுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, நான் முன்னணியிலிருந்தே சொல்கிறேன். இதில் இருக்கின்ற பிரச்னை, நிலத்தை வைத்திருப்பவர்கள் அவர்கள் கட்ட வேண்டிய தொகைகளை, குறிப்பாக ஆற்காட்டிலே இருப்பவர்கள், ஆறு ஏழு பம்பு செட்டுகளுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் கட்டவில்லை. ஆனால் சிறு நில விவசாயிகளைத் தூண்டிவிட்டு, நீங்கள் இந்த மின்சாரக் கட்டணத்தைக் கட்ட வேண்டாம், வரி கட்ட வேண்டாம், கொடுக்க வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டாமென்று சொல்கிறார்கள். அப்பாவிகளாக இருக்கின்ற விவசாயிகள் என்ன நினைக்கிறார்கள் என்றால், நாம் வாங்கிய கடன்களை, இவர்கள் பின்னால் சென்றால் ரத்து செய்து விடுவார்கள் என்று எண்ணி, மின்சாரக் கட்டணத்தைக் கட்டக்கூடாத நிலைமை உண்டாகிவிடும் என்ற நப்பாசையின் காரணமாக விவசாயிகள் செல்லும் நிலைமை இருக்கிறது. இதுதான் யதார்த்த நிலைமை. வடார்க்காடு ஜில்லாவில் இந்த நிலைமை நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, தீர்க்கக்கூடிய பிரச்னைகளை இந்த அரசு கவனமாகப் பரிசீலித்து அதில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அவையில் விவாதித்துக் கொண்டிருக்கிற மசோதாவின்மீது சில கருத்துக்களைத் கூறுகின்றேன். மின்சார வாரியத்திற்கு வரவேண்டிய பாக்கித் தொகையை அதிதீவிரமாக காலதாமதமின்றி வசூல் செய்வதற்காக இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறி, இந்த மசோதாவை இங்கே வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே, மின்சார வாரியம் அமைப்பதற்கு முன்னதாக, அரசு இந்த இலாகாவை வைத்துக் கொண்டிருந்த வேளையில் அரசுக்கு இந்த இலாகா வழியாக வரவேண்டிய நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக ரெவினியூ ரெக்கவரி ஆக்டைப் பயன்படுத்திவந்தார்கள் என்பது மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மசோதாவுக்குக் காரண நோக்கம் கூறியிருக்கிற பாராவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்பொழுது கூட, இது ரெவினியூவாக இல்லை; நிலவரி போன்ற வருவாய் என்ற நிலையில்தான் ரெவினியூ ரெக்கவரி செக்ஷனைப் பயன்படுத்தி வசூலிக்கப்பட்டு வந்தது.

ஆனால், எப்பொழுது மின்வாரியம் அமைக்கப்பட்டதோ, எப்பொழுது அரசுத் துறையிலிருந்து இந்த இலாகாவைப் பிரித்து விட்டார்களோ, அப்பொழுதே உடனடியாக இந்தப் பொறுப்பையும் மின்சார வாரியத்திற்குக் கொடுக்காமல் அது ரத்து செய்யப்பட்டது என்ற விளக்கத்தினை இங்கே கூறியிருக்கிறார்கள். ஆகவே, அவ்வளவு கவனமாக அந்த அதிகாரத்தை ரத்து செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நிச்சயமாக மின்சார வாரியத்திற்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்தால், அது துஷ்பிரயோகமாக ஆகும். ஏழைகள் பாதிக்கப்படுவார்கள் என்ற எண்ணத்துடன் அன்றைதினம் 1864-லேயே, அல்லது மின்சார வாரியம் அமைத்த உடனே இந்த அதிகாரத்தை மின்சார வாரியத்திற்குக் கொடுக்கக் கூடாது என்று அன்றிருந்த அரசு முடிவு செய்தது என்று சொன்னால் இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கு இந்த அரசு நன்றாகச் சிந்தித்திருக்க வேண்டும். தேவையற்ற ஒரு மசோதா; அரசுக்கு நிச்சயமாக வருவாயைக் கொடுக்கின்ற மசோதா அல்ல. பாக்கித் தொகையை வசூல் செய்து எடுப்பதற்காக இந்த ஒரு ஆபத்தான மசோதாவை

நிறைவேற்றி எடுக்க வேண்டுமா என்பதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு ஓர்க்ஸ் மினிஸ்டர் அவர்கள் நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

இந்த அவையில் அனைத்து எதிர்க்கட்சிகளும் இதை எதிர்த்திருக்கிறார்கள். நானும் இது தேவையற்ற மசோதா என்று இங்கே கூறுகின்றேன். பாக்கியை வசூல் செய்ய வேறு பல மார்க்கங்கள் இருக்கின்றன. இது, ஏதோ பாக்கி வசூல் செய்யக் காலதாமதம் ஆகிறது, அதிகாரக் குறைவால், மின்சார வாரியத்திற்குப் போதுமான அதிகாரம் இல்லாத காரணத்தால் பாக்கியிருக்கிறது என்ற காரணத்தை இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன், இம்மாதிரி நீதித்துறையில், வழக்கு மன்றத்தில், அரசுத் தரப்பில் பதிவாகின்ற அல்லது அரசு கட்சியாக வருகின்ற வழக்குகளில் நீதி வழங்குவதற்குக் காலதாமதம் ஏற்பட நிச்சயமாக அரசுதான் பொறுப்பு என்பதை அண்மையில் நமது சென்னை உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கும்போது தலைமை நீதிபதி அவர்களும் இன்னும் ஒரு நீதிபதி திரு. இராமசாமி அவர்களும் இருந்த ஒரு டிவிஷன் பெஞ்சு ஜட்ஜ்மெண்டில் கூறியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு தலைவரவர்களுடைய அனுமதியோடு நான் படிக்கின்றேன். இது நாம் எல்லோரும் ஏற்றுக்கொண்ட "இந்து" பத்திரிகையில் வந்திருக்கிறது. அதை நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குக் கூறவிரும்புகிறேன்.

The Madras High Court to-day deprecated the delay on the part of the Tamil Nadu Government in filing writ appeals and observed that such practices would cause "unnecessary hardship and even agony to the opposite side, besides substantial injury".

Their Lordships the Chief Justice Mr. P. Govindan Nair and Mr. Justice V. Ramaswami, who constituted a Division Bench of the High Court and passed strictures on the Government for the delay, said the delays in filing the appeals by the Government, which was the "biggest litigant" in the State has become a source of trouble to others. Requests for excusing

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 ஏப்ரல் 3

the delays in filing and re-presenting the appeals after long periods should cease to exist, Their Lordships added.

அதோடு இன்னொன்றும் கூறியிருக்கிறார்கள்.

The civil miscellaneous petitions were filed to excuse the delay of 201 days for re-presenting the writ appeals in question. It was stated on behalf of the authorities that the delay was due to the fact that they were waiting for instructions from the Government regarding the delay relating to one writ appeal, etc. ....

[முற்பகல் 10.50]

நான் அதைக் கூறுவதற்குக் காரணம் என்ன? அரசாங்கம் இந்தக் காலதாமதம் ஏற்பட்டதற்குக் காரணம் இருக்கிறது என்று கூறுகிறதே ஒழிய, நிச்சயமாக அரசாங்கம் அக்கறையோடு காரியம் ஆற்றியிருந்தால் மின்சாரக் கட்டணத்தை தாமதம் இல்லாமல் வசூல் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காலதாமதத்திற்கு வேறு யாரும் காரணம் அல்ல, அரசுதான் காரணம்.

இந்த மசோதா தேவையற்றது என்பதைக் கூறுகிறபோது இன்னும் இந்த மாபெரும் அதிகாரத்தை மின்சார வாரியத்திற்குக் கொடுக்கின்றபோது, அங்கே செயல்படுகின்ற அதிகாரி யார், யார் வழியாக இந்த அதிகாரம் நிறைவேற்றப்படுகிறது என்பது தெரியாது. இருந்தாலுங்கூட, நிச்சயமாக ஏழை எளிய மக்கள், ஏழை விவசாயிகள் பாதிக்கத்தக்க வகையிலே இருக்கிறது. பணக்காரர்களிடம் செல்வதற்கு அதிகாரிகள் அஞ்சுகிறார்கள். இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஏழை எளிய மக்கள் ஒரு மாதம் மின்சாரக் கட்டணம் கட்டாவிட்டாலும் உடனடியாக பியூசை எடுத்து, மின்சாரத்தைத் துண்டித்து விடுகிறார்கள். வசதி படைத்தவர்களிடம் செல்வதற்கு அதிகாரிகள் தயங்குகிறார்கள். அதே நேரத்தில் ஏழை மக்களிடம் கடுமையாக நடவடிக்கை எடுக்கிறார்கள்.

அண்மையிலே நடைபெற்ற மின்சார வாரியத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின்போது போடப்பட்ட வழக்குகள், பல்வேறு வழக்குகள் இன்னும் நீதிமன்றங்களிலே இருந்து கொண்டிருக்

1978 ஏப்ரல் 3] [திரு. ஜே. ஜேம்ஸ்]

கின்றன. ஊழியர்கள் மிகவும் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த வழக்குகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாபஸ் வாங்கி நீதி வழங்க வேண்டும் என்பதைக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இங்கே பேசுகிறபோது திரும்பத் திரும்ப ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த மசோதா தேவைதானா? இது தேவையற்றது. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள், இது ஆபத்தானது என்று குறிப்பிட்டார்கள். ஆக நம்முடைய மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களும், அழகர்சாமி அவர்களுங்கூட இதேபோலக் குறிப்பிட்டு இப்போதும் ஒன்றும் காலதாமதம் ஆகிவிடவில்லை, எல்லாக் கட்சிகளும் எதிர்க்கின்ற காரணத்தினால் இந்த மசோதாவைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்கள். எனக்குக் கூட, இவ்வளவு பேர்கள் சொல்கிறார்களே, அதைக் கேட்காமல் போய் விடக்கூடாதே என்று உண்மையிலேயே சிந்தித்தேன்.

ஆனால் நிலைமை என்னவென்றால், அவர்களுக்குச் சில விவரங்களை எடுத்து முன்கூட்டியே தந்திருந்தால் அனைவரும் இந்த மசோதாவை நிச்சயமாக வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். அத்தகைய விவரங்களைத் தராதது என்னுடைய தவறு தான். அத்தகைய விவரங்களைத் தந்திருந்தால் நிச்சயமாக இந்த அவையிலே இருக்கிற அத்தனை கட்சிக்காரர்களும் இதை வரவேற்று ஏகமனதாக நிறைவேற்றித் தருவார்கள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கிருக்கிறது.

மின்சார வாரியத்தைப் பற்றி ஒன்றை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பொதுமக்கள் பணத்தில் நடைபெறுகின்ற ஒரு நிறுவனம். பொதுமக்கள் பணத்தில் நடைபெறுகிற நிறுவனம் மட்டுமல்ல, பொதுமக்களுக்குத் தொண்டு செய்யும் நிறுவனம் ஆகும். அது மட்டுமல்ல, பொதுமக்களுடைய பணத்திலே நடைபெறுகிற நிறுவனம், நஷ்டம் இல்லாமல்

நடைபெற வேண்டிய நிறுவனம், அதற்கு ஆண்டுக்கு 40 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் வருகிறது என்பது இந்த அவையிலே உள்ள அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

மின்சார வாரியத்தின் பயனைத் துய்க்கின்றவர்கள் மூலம் பாக்கி எவ்வளவு என்று நாம் பார்த்தால், இதுவரையில் 21½ கோடி ரூபாய் மின்சாரக் கட்டணம் பாக்கியாக இருக்கிறது. 21½ கோடி ரூபாய் பாக்கியாக இருக்கிறபோது, பொது மக்களுடைய பணத்தைக் கொண்டு நடைபெறுகிற வாரியமாக இருக்கிறபோது, அந்தப் பணத்தை வசூலிக்க வேண்டுமா அல்லது விட்டுவிடலாமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்துதான் இதை வசூல் செய்ய முடியுமா? வேறு வழி இல்லையா என்று கேட்டார்கள். ஏற்கெனவே சில வழிமுறைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட தேதியில் மின்சாரக் கட்டணம் கட்டத் தவறினால் மின்சாரத்தைத் துண்டிப்புச் செய்யலாம் என்ற நிலைமை இருக்கிறது. அந்தச் சட்டமும் பயன்படாமல் போன பிறகுதான், மின் துண்டிப்புச் செய்யலாம் என்ற அதிகாரம் இருந்த பிறகும் தான் இவ்வளவு நிலுவை ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. இந்த நிலுவையை வசூலிக்க வேண்டுமென்று நாங்கள் சிந்தித்தபோதுதான் இதற்கு ஏதாவது வழி தேட வேண்டுமென்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இன்னொன்றையும் இங்கே சொன்னார்கள். இது விவசாயிகளுக்கு பாதகம் அளிக்காதா என்று சொன்னார்கள். உண்மை என்ன வென்றால்—நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களுக்குக் கூடச் சொல்வேன். விவசாயிகளுக்கு ஏற்பட்ட அந்த மின்சார வரி பாக்கி கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய். அதை இப்போது வசூலிக்க வேண்டியதில்லை, ஒத்திவைக்கலாம் என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. இரண்டு கோடி ரூபாய் தான் விவசாயிகளிடம் இருந்து வரவேண்டிய பாக்கி. மீதம் எல்லாம் பெரிய பெரிய தொழில் அதிபர்கள் தரவேண்டிய பாக்கி. ஏன், அங்கே மின் துண்டிப்பு செய்யவில்லையா என்று கேட்டால் மின் துண்டிப்பு செய்ய முடியவில்லை. அங்கே மின் துண்டிப்பு

செய்தால் மில்கள் மூடப்பட்டுவிடும். மில்களை மூடிவிட்டால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள்; அவர்களுக்கு வேலை இழப்பு ஏற்படும். அப்போது இங்கே இருக்கிற எதிர்க்கட்சிக் காரர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க ஏற்பாடு செய்யச் சொல்வார்கள்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும். அதுமட்டுமல்ல, மின்சாரத்தைத் துண்டித்தாலும் அவர்கள் கவலைப்படப்போவதில்லை. ஆலையை இழுத்து மூடிவிட்டுப் போய் விடுகிறோம் என்று சொல்லும் நிலைமைதான் இருக்கிறது. ஆகையால் மின் துண்டிப்புச் செய்யவில்லை.

அதே நேரத்தில் அவர்கள் செலுத்த வேண்டிய கட்டணை வசூல் செய்ய என்ன நடவடிக்கை எடுப்பது? சிவில் கோர்ட்டுக்குப் போகலாம். மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்கள் நீதிமன்ற தீர்ப்பைப் படித்துக் காட்டினார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன். எவ்வளவு காலதாமதம் ஆகிறது என்பதை நீதிமன்றமே தாங்கிக் கொள்ளவில்லை; அரசாங்கமே வசூல் செய்ய வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகத்தான் இந்தச் சட்டம். சிவில் கோர்ட்டுக்குப் போனால் நிலைமை எப்படி இருக்கும் என்பது வழக்கறிஞர் மார்க்கபந்து அவர்களுக்குத் தெரியும். கோர்ட்டுக்குப் போக சாதாரணமாக மூன்று ஆண்டு ஆகிறது. அதற்குப் பின்னால் ஒன்று அல்லது இரண்டு ஆண்டு ஆகிறது. அதற்குப் பிறகு பார்ட்டியிடம் வசூல் செய்ய சொத்து இருக்கிறதா என்று பார்த்து, எக்சிகியூஷன் செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றால் குறைந்தது ஆறு ஆண்டுகள் ஆகிறது.

உதாரணத்திற்கு மால்கோ நிறுவனத்தை எடுத்துக் கொள்ளுங்கள். சிவில் கோர்ட்டுக்கு அல்லது மற்ற கோர்ட்டுக்குப் போனால் இவ்வளவு பணத்தையும் எவ்வளவு காலம் வைத்துக் கொள்வது, கோர்ட்டுக்குப் போய் தீர்ப்பு வந்தால் அவர்கள் கொடுக்கின்ற வட்டி எவ்வளவு என்பதையும் பார்க்க வேண்டும். கோர்ட்டுக் கணக்குப்படி 6 சதவிகிதம்தான் ஆண்டுக்கு வட்டி. ஆனால் மின்சார வாரியம் கடன் வாங்கும்போது என்ன விகிதத்தில் தரப்படுகிறது என்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே, மின்சார வாரியம் வசூல் செய்ய வேண்டிய பணத்திற்குக் காலதாமதம் ஏற்படுகிற காலத்திற்கு வட்டி விகிதமும் குறைகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 ஏப்ரல் 3

தொழில் துறையைப் பொறுத்தமட்டில் கிட்டத்தட்ட 12½ கோடி ரூபாய் வரவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது நேற்று ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு வழக்கறிஞர் இருக்கிறார் என்று மால்கோ நிறுவனத்திற்கு தெரியாது என்று நினைத்துக் கொண்டேன். அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். மால்கோ நிறுவனத்தார் இப்போது அதைத்தான் சொல்கிறார்கள். நாங்கள் எவ்வளவு பணம் கட்ட முடியுமோ அதைத்தான் கட்டுவோம் என்று சொல்கிறார்கள்; நண்பர் சாதிக் பாட்சா அவர்களும் அதைத்தான் சொன்னார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மால்கோ நிறுவனத்தைப் பற்றி நான் சொன்னதாகக் குறிப்பிடுகிறார்கள். மால்கோ மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதற்குப் பதிலாக இவ்வளவு நாட்களும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? நீங்கள் பிந்தி விட்டீர்கள். உங்களுக்கு முன்னால் அவர்கள் கோர்ட்டுக்குப் போய்விட்டார்கள். அட்மிட்டெட் அமவுண்டை டெபாசிட் செய்துவிட்டு கோர்ட்டுக்குப் போகலாம். கோர்ட்டிலே இண்டரிம் ஆர்டர் கொடுப்பார்கள். ஆனால் அவர்களுக்காக நாங்கள் பரிந்து பேசவில்லை. மால்கோ நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டர் இப்போது வெளியே இருக்கிறார். அவர்—வெங்கடசாமி நாயுடு மீண்டும் உள்ளே வர முயற்சி செய்துகொண்டிருக்கிறார். அவரை உள்ளே விடாமல் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அகிரிகேட் அமவுண்ட் வெர்சஸ் அட்மிட்டெட் அமவுண்ட் என்று சொன்னார்கள். அகிரிகேட் அமவுண்டுக்கு வழக்குப் போடக்கூடாது; அட்மிட்டெட் அமவுண்டுக்குப் போட வேண்டுமென்ற முறையிலே சொன்னார்கள். அதனால் தொழிலதிபர்களுக்குத்தான் இலாபம். நாம் போடுகின்ற பில்லில் தவறு இருந்தால் அப்பீல் செய்ய, அப்பலேட் அதாரிட்டிக்குச் செல்ல, வழக்குத் தொடர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. மார்க்கபந்து அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். சந்திரன் ஜெயபால் அவர்களுக்கு கரண்டு சார்ஜ் அதிகமாகப் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

1978 ஏப்ரல் 3] [திரு. ச. இராமச்சந்திரன்]

அதுபற்றி தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னார்கள். அவர் இந்த தாக்கல் செய்யவில்லை என்றாலும் வேறு தாக்கல் செய்திருக்கிறார்.

(முற்பகல் 11.00)

ஆகவே, தவறு இருக்குமேயானால் அதைத் திருத்துவதற்கு அப்பல்லேட் ப்ரோவிஷன்ஸ் இருக்கின்றது. ஆகவே, திருத்திக் கொள்ளலாம். திருத்துவதற்கும் சட்டத்திலே இடம் உண்டு. ஆனால் யார் அந்த டிஸ்கனெக்ஷன் வந்தபிறகும்கூட பணம் கட்டாமல் இருக்கிறார்களோ, அல்லது எந்த நிறுவனங்கள் டிஸ்கனெக்ஷன் வந்தபிறகும் தொடர்ந்து கோர்ட்டுக்குப் போகிறார்களோ அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதற்காகத்தான் இந்த ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் கொண்டு வருவதுபற்றி பரிசீலிக்கப்படுகிறதே தவிர வேறல்ல.

அதோடு மட்டுமில்லாமல் இப்போது சுமார் 39 இலட்சம் கன்ஸ்யூமர்கள் இருக்கிறார்கள். இதிலே வரி கட்டாமல் இருக்கக் கூடியவர்கள் மிகவும் குறைவாகத்தான் இருக்கிறார்கள். சாதாரணமாகக் கணக்குப் போட்டுப்பார்த்தால் ஒரு முப்பது ஆயிரம் பேர்தான் இப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இதன் மூலம் அதிகம் பேர்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விடப்போவதில்லை. ஒழுங்காக மின்சாரக் கட்டணத்தை செலுத்திக் கொண்டிருப்பவர்களுக்கு இந்தச் சட்டத்தினால் எந்தவிதமான ஆபத்தும் நிச்சயமாகக் கிடையாது. மேலும் பணத்தை நான்கு மாதங்களுக்கு வசூலிக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் சொன்னார்கள். அது நான்கு மாதங்களுக்கல்ல. மூன்று மாதங்களுக்குத்தான் வசூலிக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்களும் இந்த பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்திருக்கிறார்களே. ஆகவே எனக்கும் ஒரு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. ஒருவேளை அவர்கள் காலத்தில் நான்கு மாதங்கள் என்று ஏற்படுத்தப்பட்டு விட்டதோ என்று சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் அப்படி இல்லை, அது மூன்று மாதங்களுக்குத்தான். அவர்கள் பேசும்போது மீட்டர் ரீடிங் எடுப்பதற்கு முன்னாலேயே பணம் கட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். அந்த மூன்று மாதங்களுக்கு முன்னால் கட்டப்படுகிற பணம் அதற்காகத்தான் இருக்கிறது. ஆகவே

செக்யூரிட்டி டெப்பாசிட்டுக்கும் மின்சார பாக்கியை வசூல் செய்வதற்கும் சம்பந்தம் இல்லை. அது ஒரு ஆதாரத் தொகையாகத்தான் இருக்கின்றது. பில்லை சீக்கிரத்திலே அனுப்பி பணம் கட்டுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவோமேயானால் இரண்டு மாதங்களில் நடக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே செக்யூரிட்டி டெப்பாசிட் என்பது வேறு காரணத்திற்காகக் கொண்டுவரப் படுகிறதே தவிர இதற்காக அல்ல.

அது மட்டுமல்லாமல் கோர்ட்டுக்குப் போவதிலே சங்கடம் இருக்கிறது. பணத்தை வசூல் செய்வதற்குக் கோர்ட்டுக்குப் போக வேண்டிய சமயத்தில் ஸ்டாம்ப் செலவு மட்டும் ரூபாய் இரண்டு கோடி ஆகிறது. இரண்டரை கோடி ரூபாய் பணத்தை வசூல் செய்வதற்கு ஸ்டாம்ப் செலவு மட்டும் ரூ. இரண்டு கோடி ஆகிறது. அந்த அளவுக்கு ஸ்டாம்ப் ஒட்டினால்தான் கோர்ட்டுக்குப் போக முடியும். இப்படி பல கஷ்டங்கள் இருப்பதால்தான் இந்த ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் கொண்டுவரப்படுகிறது.

மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் அவர்கள் பேசுகிறபோது 'என்ன, வெள்ளைக்காரன் காலத்திலே உள்ளதை எல்லாம் இப்போது கொண்டு வருகிறார்களே, இது ரொம்ப பத்தாம்பசலித்தனமாக இருக்கின்றதே' என்றெல்லாம் சொன்னார்கள். அதிலே இருக்கின்ற நல்ல வழிமுறைகளைத்தான் கொண்டு வருகிறோம். பணத்தை வசூல் செய்வதற்காகவே அந்த வழிமுறைகளைக் கொண்டு வருகிறோம். வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த எல்லாச் சட்டங்களையுமே கொண்டு வந்து விடவில்லை. இந்திய அரசியல் சட்டத்திலே கூட 1935 ஆவது ஆண்டின் வெள்ளைக்காரன் காலச் சட்டத்தின் ஒரு பிரதிபலிப்பு இன்னும் இருந்து கொண்டிருக்கின்றது என்பதை மறந்துவிட முடியாது. வெள்ளைக்காரன் காலத்திலே இருந்தவற்றில் எவை எவை தேவை என்று பார்த்து அவைகளை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் ஏற்கனவே இருக்கின்ற நிலுவைத் தொகையினை வசூலிப்பதோடு மட்டுமல்லாமல் ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் வந்து விட்டது என்ற அச்சம் காரணமாக இதுவரையில் கட்டத் தவறியவர்கள் கூட கட்டுவதற்கு இது

ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை எல்லோரும் ஏகமனதோடு நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, 21½ கோடி ரூபாய் நிலுவை இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். விவசாயிகளிடத்திலிருந்து வரவேண்டிய நிலுவை இரண்டு கோடி ரூபாய் என்று சொன்னார்கள். எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. விவசாயிகளிடத்திலே இருந்து வரவேண்டிய பாக்கியை வசூலிப்பதற்கு இந்தச் சட்டம் உபயோகப்படாது என்கிற ஒரு எக்சம்ஷன் தருவதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எட்டு இலட்சம் விவசாயிகள் பயன் பெறுகிறார்கள். 12 ஆயிரம் பேர்தான் பணம் கட்டவில்லை. மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் இந்த எட்டு இலட்சம் பேர்களைத்தான் கவனிக்க வேண்டுமே தவிர 12 ஆயிரம் பேர்களைப்பற்றி கவலைப்படக்கூடாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இந்த சிவில் கோர்ட்டுக்குப் போகிற நிலைமை இருக்கின்றதே, அதை அறவே நீக்குகின்ற வகையில் இனிமேல் பாக்கியை வசூலிப்பதற்கு இந்த ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதற்குத்தான் இந்தச் சட்டம்.

MR. DEPUTY SPEAKER : The question is :

"That the Tamil Nadu Electricity Board (Recovery of Dues) Bill, 1978 (L.A. Bill No. 14 of 1978) be referred to a Select Committee."

திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 2, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

THIRU S. J. SADIQ PASHA :

Mr. Deputy Speaker, Sir,

"In sub-clause (4) of clause 2, after the word 'notification' add the words, 'not below the rank of a Superintending Engineer.".

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

திருத்தம், முறையே வழிமொழியப்பெற்றது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, 'ப்ரிஸ்க்ரைப்ட் அதாரிட்டி' என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் 'ப்ரிஸ்க்ரைப்ட் அதாரிட்டி' யார் என்று குறிப்பிடப்படவில்லை. அது ரூல்ஸ் மூலம் அறிவிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அப்படி அறிவிக்கும்போது சூப்பரின்டென்டிங் என்ஜினியர் தகுதிக்கு குறைந்தவராக அந்த 'ப்ரிஸ்க்ரைப்ட் அதாரிட்டி' இருக்கக் கூடாது என்றளவில் இந்தத் திருத்தத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ரெவன்யூ ரெக்கவரி ஆக்டைப் பொறுத்தவரையில் கலெக்டரி லிருந்து ரெவன்யூ இன்ஸ்பெக்டர் வரை 'ப்ரிஸ்க்ரைப்ட் அதாரிட்டி'

வருகிறது. அதேபோல், கூட்டுறவு நிறுவனங்களைப் பொறுத்த வரையில் கடன் பாக்கிகளை வசூல் செய்வதில் சீனியர் இன்ஸ்பெக்டரிலிருந்து கோவாப்பரேட்டிவ் சப்-ரெஜிஸ்ட்ரார்வரை ஆத்தரைசேஷன் தருகிறார்கள். ஆகவே, எந்த மட்டத்தில் எந்த அதிகாரத்தைத் தந்தால் எளிதில் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பிருக்கிறதோ அந்த மட்டத்தில் அரசு விதிகளை உருவாக்குகிறபோது அந்த 'ப்ரிஸ்க்ரைப்ட் அதாரிட்டி' யை நோட்டிபை செய்யும்.

திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 3, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்"

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I move—

"In clause 3,

(1) In sub-clause (1), *for* the words "by which such dues are to be paid", *substitute* the words "by which such dues are to be paid and shall be served in such manner as may be prescribed by rules."

(ii) *for* sub-clause (2), *substitute* the following sub-clauses namely :—

"(2) (*a*) If a debtor disputes his liability to pay the whole or part of the dues specified in the Bill referred to in sub-section (1), he may, within such time as may be prescribed, prefer an appeal to the appellate authority to be specified by the Board.

(*b*) The appellate authority shall, while deciding the appeal, follow such procedure as may be prescribed by rules.

(*c*) The dues as determined by the appellate authority in the case of an appeal under this sub-section, shall be paid by such date as may be specified by the appellate authority.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 ஏப்ரல் 3

(3) If the dues as mentioned in the bill under sub-section (1) are not paid by the date specified in the bill, and in the case of an appeal under sub-section (2), the dues as determined by the appellate authority are not paid by the date specified by such authority, the debtor shall be liable to pay, in addition thereto such penalty which may be specified by the Board, and such dues and penalty shall be recoverable along with the costs incurred in making such recovery, in the manner hereinafter laid down in this Act.".

The amendment was put and carried.

Clause 3, as amended, was put and carried.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 4, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்." —

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I move—

In Clause 4, *for* the expression " where the dues are not paid by a debtor by the date specified in the bill therefor ", *substitute* the following expression, namely :—

" If the dues as mentioned in the bill under sub-section (1) of section 3 are not paid by the date specified in the bill and in the case of an appeal under sub-section (2) of section 3, the dues as determined by the appellate authority are not paid by the date specified by such authority. "

The amendment was put and carried.

Clause 4, as amended, was put and carried.

(முற்பகல் 11-10)

பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 5, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

1978 ஏப்ரல் 3]

THIRU S. J. SADIQ PASHA : Sir, I move the following amendments :—

" For the words ' after depositing with the prescribed authority the aggregate amount ' substitute the words, ' after depositing such amount as admitted by the debtor to be payable '. "

" For the words ' specified in the notice of demand under protest in writing that he is not liable to pay the same ', *substitute* the following :—

' after the deposit of such admitted amount with the prescribed authority the debtor shall be bound by such interim orders of the Court as would satisfy the claim of the Board till the disposal of the suit '. "

என்னுடைய திருத்தம், நான் ஏற்கனவே சொன்னது போல், இதில் கோர்ட்டுக்குப் போக வழிவகுக்கப்பட்டிருக்கிறது. இதில் என்னுடைய திருத்தம் என்னவென்றால், 'டெட்டார்' குறிப்பிட்ட டிமான்ட் தொகையை டிப்பாசிட் செய்து விட்டு கோர்டுக்கு போக வேண்டும் என்றில்லாமல். கோர்டில் இன்டரிம் பெட்டிஷன் போட்டாலும் செக்யூரிட்டி கொடுக்க வேண்டுமா என்பதுதான்.

திரு. மு. அரங்கநாதன் : இதை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்தேன். பில்லில் கண்டுள்ளபடி அப்பலேட் கோர்ட்டுக்கு போகும்போது அந்தத் தொகையைக் கட்டிவிட்டு போவதுதான் முறை. கோர்ட்டுக்குப் போவதற்கும் இந்த முறைதான் இருந்து வருகிறது. பல வழக்குகளிலும் இந்த நடைமுறைதான் பின்பற்றப்பட்டு வருகிறது என்று கேள்விப்படுகிறேன். ஆகவே இந்தத் திருத்தம் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.

பிரிவு 5, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு—6.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 6, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

THIRU S. J. SADIQ PASHA : Sir, I move the following amendments :—

For the existing sub-clause (1) of clause 6, substitute the following :—

"If the amount admitted by the debtor is not deposited with the prescribed authority within 3 months of such service, or such extended period as the Chairman of the Board from time to time allow, the debtor shall be deemed to be in default and the same shall be recovered in accordance with the provisions of civil law".

After sub-clause (2), add the following as sub-clause (3) :—

"(3) The orders of the prescribed authority is subject to appeal to the Chief Engineer. Against the order of the Chief Engineer the debtor may appeal to the Chairman, Electricity Board. The appeal shall be preferred within 30 days of the order of the prescribed authority or the Chief Engineer as the case may be".

என்னுடைய திருத்தத்தைக் கொண்டு வந்தபிறகு, அரசாங்கம் இதைப்பற்றி ஆலோசித்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். இப்போது அரசாங்கம் அதேபோன்ற ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அப்பீல் ப்ரொவிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் காலம் நிர்ணயிக்கப்படவில்லை. நியாயமான ஒரு கால அளவு இதில் இருந்தாக வேண்டும். அதைச் செய்ய அரசாங்கம் முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தை நான் வற்புறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து,

Sir, I move the following amendment :—

"After sub-clause (2), add the following :—

'Provided the provisions of the Revenue Recovery Act shall not apply if the amount is Rs. 500 in the case of energy consumed by agricultural pumpsets and Rs. 2,000 in the case of small scale industries'."

இந்தத் திருத்தத்தைப்பற்றி மட்டும் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு 500 ரூபாய் வரை பாக்கியிருந்தாலும், சிறு தொழில் நடத்துகின்றவர்களுக்கு 2,000 ரூபாய் வரை பாக்கியிருந்தாலும் ரெவன்யூ ரிகவரி ஆக்ட் அப்ளை பண்ணக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. மூன்று மாதங்களுடைய பலனை எல்லோரும் எதிர்பார்க்க வேண்டியுள்ளது. மூன்று மாதம் கழித்துவிட்டால், இதன்பேரில் கட்டப்பட்டிருக்கும் டெப்பாசிட்டை குறைத்துவிடுவார்கள், பின்னால் 500 ரூபாய் பாக்கியிருக்கிறது என்றால், அது ஓரளவு இடையில் ஏற்படுகின்ற காலதாமதம், இது இலாகாவினுடைய காலதாமதத்தினாலும் ஏற்படுகிறது.

இதை விவசாயிகள் பொறுத்தவரையில் 500 ரூபாய் மின்சாரக் கட்டண பாக்கியிருந்தால் ரெவின்யூ ரிகவரி ஆக்ட் மூலம் நடவடிக்கை எடுக்கக் கூடாது. அதே சமயத்தில், ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ரீசுக்கு நாம் ஊக்கம் அளிக்க வேண்டுமென்று சொல்கின்ற நேரத்தில், அவர்கள் ஏதோ தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மின் கட்டணம் கட்ட வேண்டிய பாக்கி 2,000 ரூபாய்க்கு பாக்கியிருந்தால் இன்றைக்கு இருக்கின்ற இந்த ரெவின்யூ ரிகவரி ஆக்ட் மூலம் நடவடிக்கை எடுக்கக் கூடாது. இந்த நிலையிலே இதற்கு ஒரு திருத்தம் கொண்டு வருவோம் என்று சொன்னால், அதிகாரிகள் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும்போதும், மேலும் தவறுகள் ஏற்பட்டு விடும் என்கிற நிலையைத்தான் நான் குறிப்பிட்டேன். இப்போது கூட ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். இந்த இண்டியன் எலக்ட்ரிசிடி ஆக்ட், செக்ஷன் 24-லே,

'*Discontinuance of supply to consumer neglecting to pay charge.*—Where any person neglects to pay any charge for energy or any sum other than the charge for energy due from him to a licensee in respect of the supply of energy to him, the licensee may after giving not less than seven clear days' notice in writing to such person and without prejudice to his right to recover such charge or other sum by suit, cut off the supply and for that purpose cut or disconnect any electric supply-line. . . .'

என்று 24 ஆம் செக்ஷனிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே, 7 நாட்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1978 ஏப்ரல் 3

ஒரு உதாரணத்தை தெரிவிக்க விரும்புகிறேன். இந்த செக்ஷனை முறையாகப் பயன்படுத்தாமல், கன்னிவாடி, அரசங்கோட்டையில் சர்வீஸ் கனெக்ஷன் நெம்பர் 118 என்பதில் சின்னம்மாள் என்ற சிறிய விவசாயி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மூன்று ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார். இந்த சர்வீஸ் கனெக்ஷன் எண் 118-லே அங்கிருந்த மின்சார இலாகா அதிகாரி சென்று திடீரென்று போய் பார்வையிட்டு, 2—2—1978-லே அந்த கனெக்ஷனை டிஸ் கனெக்ட் செய்து விடுகிறார். அதற்குக் காரணங்கள் சொல்கிறார். டிஸ்-கனெக்ட் செய்ய வேண்டுமென்றால், இந்த செக்ஷனிலே சொல்லியிருப்பது, ஒரு வாரம் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று. அப்படி நோட்டீஸ் கொடுக்காமல், 2—2—1978 நாள் டிஸ்-கனெக்ட் செய்துவிட்டு, 6—2—1978-லே அதற்கு நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. அப்போது அங்கிருக்கக்கூடிய அசிஸ்டெண்ட் டிவிஷனல் என்ஜினியர், பண்டாரகுட்டி என்பவர் 10,120 ரூபாய் பாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கிறார். இதற்கு பின்னால், டிவிஷனல் என்ஜினியர் 4,409 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கிறார்கள்.

எனவே இந்தச் சின்னம்மாள் கோர்ட்டு நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்டு, நோட்டீஸ் கொடுக்கிறார்கள். எப்படிக் கொடுக்கிறார்கள்? 2 ஆம் தேதி டிஸ்-கனெக்ட் செய்துவிட்டு, 3 ஆம் தேதி நோட்டீஸ் அனுப்பப்பட்டு இருக்கிறது. இப்படி நடவடிக்கைகள் எல்லாம் நடைபெற்ற பிறகு, கடைசியாக 15—3—1978-லே, சூட், தாவா தாக்கல் செய்யப்படுகிறது. அந்த சூட் நோட்டீசும் 25—3—1978 அன்று விசாரணை செய்வதற்காக 21-3-1978 ஆம் தேதி அந்த எ.டி.இ.-க்கு மூன்றாவது டிபென்டெண்டுக்கு ஜாரி செய்யப்படுகிறது. அப்படி 21 ஆம் தேதி நோட்டீஸ் ஜாரியான பிறகு, 22 ஆம் தேதி இந்த அதிகாரி அந்த ஸ்பாட்டுக்குப் போகிறார். எற்கனவே இவ்வளவு விவகாரம் நடந்திருக்கிறது. வாய்தா கொடுக்கவில்லை. நோட்டீஸ் அனுப்ப வில்லை. அப்படி நோட்டீஸ் அனுப்பப்பட்ட பின்பு வழக்கு வருகின்றது. 21 ஆம் தேதி அப்படி நோட்டீசு ஜாரி செய்த பின்பு, அந்த அதிகாரி 22 ஆம் தேதி ஸ்பாட்டுக்குச் சென்று, அங்கே இருக்கின்ற அந்தச் சின்னம்மாளின் மகனோ அல்லது

1978 ஏப்ரல் 3] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மற்ற ஒருவரோ அவரிடம் தகராறு செய்தார் என்று கூறி, அவர் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இது நியாயந் தானா?

எனவே, இந்தப் புரொவிஷன் சரியானமுறையிலே நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள், இதை கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இதிலே உள்ள குறைபாட்டைத் தவிர்ப்பதற்காக, இதைத் தன்கருத்திலே கொண்டு, நான் கொடுத்திருக்கின்ற தீர்மானம், இதிலே ஒரு புரொவிஷனை இருக்கவேண்டும். ஐநூறு ரூபாய் வரை விவசாயி மின்சாரக் கட்டணம் பாக்கி என்று சொன்னாலும், அல்லது ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரியைப் பொறுத்தவரையில் 2,000 ரூபாய் வரை பாக்கி என்று சொன்னாலும், இந்த ரெவின்யூ ரிகவரி ஆக்ட்படி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்ற எனது மூன்றாவது தீர்மானத்தை வலியுறுத்தி, மற்ற இரண்டு தீர்மானங்களை அரசே எற்றுக்கொண்ட காரணத்தினால், என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் இரண்டு திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். ஒரு திருத்தம் பில்லில் இருக்கும் தொகை தவறாக இருக்குமானால் மேலதிகாரிக்கு முறையீடு செய்ய சட்டத் திருத்தத்தில் வழிசெய்ய வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில் ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள். அந்தத் திருத்தத்தை அவர்கள் எடுத்துச் சொன்னதற்காக அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பழைய அவையவர் என்ற அடிப்படையில், இருக்கிற நடைமுறை விளங்கி விடுமோ என்ற காரணத்தால் எடுத்துச் சொன்னார்கள். அரசாங்கம் அதை எற்றுக்கொண்டு அரசாங்கத்தின் திருத்தமாகக் கொண்டு வந்திருக்கிறது.

அடுத்த திருத்தம், 500 ரூபாய்க்குக் குறைவாக விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும், இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைவாக சிறு தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும் மின்சாரக்

கட்டண வசூலுக்காக ரெவின்யூ ரெகவரி சட்டத்திலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்குத் தெரியும்—சிறு துளி பெரு வெள்ளம் என்பது. மின்சார வாரியத்தைப் பொறுத்தவரை அதன் பணம் வசூலிக்கப்படுவது ஒருவர் இருவரிடத்தில் இருந்து அல்ல. முப்பத்தொன்று லட்சம் பேரிடமிருந்து வசூலிக்கப் படவேண்டும். இதற்கு விதிவிலக்கு அளித்தோமானால் இந்தச் சட்டத்தின் மூலம் என்ன எதிர் பார்க்கிறோமோ அந்தப் பலன் கிடைக்காது.

இந்தியன் எலக்ட்ரிசிடி ஆக்ட்படி டிஸ்கனெக்ஷன் புரவிஷன் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது—மின்சாரவாரியத்தைப் பொறுத்தவரை உடனே இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்பதல்ல நோக்கம். இந்தியன் எலக்ட்ரிசிடி ஆக்ட்படி நோட்டீஸ் கொடுத்து அதற்குள்ளே பில் தொகை கட்டாவிட்டால் டிஸ்கனெக்ட் செய்து அதன்மூலம் மின்சாரக் கட்டணத்தை வசூலிக்கும் அந்த நடைமுறை அப்படியே இருக்கும். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை ஸ்பெஷல் கேசில்—எங்கெங்கு டிஸ்கனெக்ட் செய்ய முடியுமோ அங்கெல்லாம் டிஸ்கனெக்ட் செய்த பிறகு, டிஸ்கனெக்ஷன் செய்தாலும் பரவாயில்லை என்று யார் பிடிவாதம் செய்கிறார்களோ அங்குதான் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படும்.

அவர்கள் பேசும்போது ஒரு கேசைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். முதலிலே பத்தாயிரம் ரூபாய்க்குப் போட்டார்கள், பிறகு நாலாயிரம் ரூபாயாகப் போட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது தெஃப்ட் ஆப் எனர்ஜி என்றும் அவர்களே சொன்னார்கள். அந்த வழக்குபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. அது எந்த நிலையில் இருக்கிறது என்று என்னால் எடுத்துச் சொல்ல முடியாவிட்டாலும் அதுபற்றிய விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் தருவார்கள் என்ற நம்பிக்கையில் அரசு அதுபற்றி ஆராயும். 500 ரூபாய். 2,000 ரூபாய் என்பதை சாதாரணத் தொகை என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. அதனால் பேரிழப்பு ஏற்படும்.

ரெவின்யூ ரெகவரி ஆக்ட்படி எந்தக் கட்டத்தில் டிமாண்ட் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் மின்சார வாரியத்திற்கு இருக்கிறது. உண்மையிலேயே,

அப்படிக் கட்ட முடியாத சூழ்நிலை இருக்குமானால் அதைப்பற்றி மின்சார வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கவும், பாதுகாப்பு அளிக்கவும் ஏற்கனவே வாய்ப்புகள் இருக்கின்றன. அவர்களுடைய ஒரு திருத்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளதால் மற்றொன்றை அவர்கள் வலியுறுத்தமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

திரு. சாதிக் பாட்சா அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றன.

பிரிவு 6 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 7 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே :

"தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு திருத்தியபடி (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/78) சட்டமாக நிறை வேற்றப் பெற வேண்டும்."

என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தியபடி சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(இ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/78).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

---

* 1978 மார்ச் 28-ந் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[1978 ஏப்ரல் 3

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் இந்த மசோதாவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதில், ஹைகோர்ட்டுத் தீர்ப்புக்கு மேலே சில சட்டச் சிக்கலை நிவர்த்தி செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட மசோதா இது. இந்த மசோதாவிலே சட்டம் அமலாக்கப்பட்ட தேதியிலேயிருந்து என்பதற்குப் பதிலாக 'நோட்டிஃபை' செய்த தேதியிலேயிருந்து அந்த நிலம் அவர்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்டதாகப் பொருள்படும் என்று தெரிகிறது. அப்படி எடுத்த பிறகும் அந்தச் சொத்தை அவர்கள் சில இடங்களில் அனுபவித்து வருகிறார்கள். சீலிங் ஆக்டிலே நாம் எடுத்த நிலத்தைப் பல இடங்களிலே கையகப்படுத்தி அசைன் செய்யாமல், நிலமற்றவர் களுக்குக் கொடுக்காமல் அந்த நிலச் சொந்தக்காரர்கள் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள்.

(திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா தலைமை)

அப்படி அனுபவித்துக் கொண்டு வரும்பொழுது அவர்கள் அப்படி அனுபவித்து வரும் காலத்திற்கு, அரசு சொத்தை எடுத்துக்கொண்டு விட்டோம் என்று அறிவித்த பிறகும், நிலத்தின் பொசிஷனை எடுத்து அசைன் செய்து இன்னொருவருக்கு விடும் காலம் வரையில் உள்ள அந்த இடைக்காலத்திற்கு அவர்கள் அனுபவித்ததற்காக ஒரு தொகையை வசூலிக்க வேண்டுமென்ற கருத்து இந்தப் பிரிவிலே இருக்கிறது. பயன்படுத்தியதற்காக, அனுபவத்திலே வைத்திருந்ததற்காக, அதிகாரியால் உரிய நோக்கில் நிர்ணயிக்கப்பட்ட தொகையை அரசுக்குச் செலுத்த வேண்டுமென்ற கருத்து இதிலே இருக்கிறது. நாம் நிலத்தை சீலிங் ஆக்டிலே எடுத்து காம்பன்சேஷன் கொடுக்கிறோம். அதை அசைன்மெண்ட் பண்ணுவதற்கு நிர்வாகத்திலே காலதாமதம் ஏற்பட்டால், அந்தக் காலதாமதத்திற்காக அவர்களிடத்திலே பணம் வசூலிப்பது சரியா ? அவர்கள் அந்த நிலத்தை விடவில்லை என்றால், விட மாட்டோம் என்றால் அவர்களிடத்திலேயிருந்து அந்தத் தொகையை வசூலிப்பது சரி. ஆனால், அவர்கள்

1978 ஏப்ரல் 3] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

தங்களிடத்திலே இருப்பதை ஒப்படைப்பதற்குத் தயாராக இருந்தும் நாம் எடுப்பதிலே காலதாமதம் ஏற்பட்டால் அதற்காக அவர்களிடத்திலேயிருந்து தொகையை வசூலிப்பது சரியா என்று சிந்திக்க வேண்டும். அப்படிச் சரி என்று நாம் எடுத்துக் கொண்டால், அவர்களுக்கு இந்தத் தேதியிலிருந்து காம்பன்சேஷன் கணக்கிட்டு இன்டரஸ்டை நாம் கொடுக்கிறோமா என்பதையும் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதோடு இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் இன்னும் சில கருத்துக்களைச் சொல்வதற்குத் தலைவரவர்கள் அனுமதிக்க வேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டம் என்பது பழைய சட்டத்தை, நாம் உபரி நிலத்தை எடுத்துக் கொடுப்பதற்குள்ள சட்ட சிரமங்களைப் போக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட மசோதா. மேலும் இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் என்பது பல்வேறு வகைகளிலேயும் வேகமாக அமலாக்கப்பட வேண்டிய ஒன்று. குத்தகைதாரர்கள் சட்டத்தை விரைவிலே கொண்டு வந்து அமலாக்க வேண்டும். வெகு நீண்ட காலமாக, குத்தகைதாரர்கள், நிலச் சொந்தக்காரர்கள் என்று இருப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று பலமுறை பேசியும், அரசு அதற்கான சட்டத்தைக் கொண்டு வரும் என்று அமைச்சரவர்கள் இங்கே கூறியும், இன்னும் அந்த மசோதா கொண்டுவரப்படவில்லை. ஆகவே, இந்த அரசு முயற்சியெடுத்து விரைவில் குத்தகைதாரர் நிலங்களைக் குத்தகைதாரர்களுக்கே சொந்தமாக்கும் சட்டத்தைக் கொண்டுவந்து அமலாக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இன்னமும் குத்தகைதாரர்கள் பலயிடங்களிலேயிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். கோவை மாவட்டத்தில் பலயிடங்களில் குத்தகைதாரர்கள் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது, குத்தகைதாரர் என்று பதிவேட்டில் பதிய வைக்கப்பட்டிருந்தும் பலபேர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் தகுந்த பாதுகாப்பு கொடுக்காததால் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இதனால் அவர்கள் மிகுந்த தொந்தரவிற்கு ஆளாகிறார்கள்.

இம்மாதிரி குத்தகைதாரர்கள் என்று பதிவு செய்யப்படாமல் இருப்பவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். ஆனால் குத்தகைதாரர் என்று பதிவு செய்தவர்களும் கூட வெளியேற்றப்படுகிறார்கள் என்றால் அது மிகவும் நியாயமற்ற முறை. சர்க்கார் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். குத்தகைதாரர்கள் என்று பதிவு செய்து கொண்டவர்கள்கூட வெளியேற்றப்படுகின்ற நேரத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை என்றால் வேறு யாருக்குப் பாதுகாப்பு அளிக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதையெல்லாம் கருத்திற்கொண்டு நிலச் சீர்திருத்தச் சட்டத்தையும், இதர சட்டங்களையும் விரைவுபடுத்தி நிறைவேற்ற முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

*** திரு. சி. கோவிந்தராசன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நில சீர்திருத்தச் சட்டம் 1961-லே இயற்றப்பட்ட அடிப்படை சட்டமாக இருந்தபோதிலும், 1972-லே வந்த சட்டத்தில் ஷெட்யூல் 3-லே இணைக்கப்பட்டு கொடுக்கப்பட்ட இழப்பீடு குறித்து ஒரு திருத்தம் வந்தபிறகு, 1974-லே நிறைவேற்றப்பட்ட சட்டத்தில், இந்த சட்டம் 1972-லிருந்தே அதாவது அந்த சட்ட ஆரம்பத்திலே இருந்து வரவேண்டும் என்றிருப்பதை பயன்படுத்திக் கொண்டு ஏற்கனவே 1972-லே நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் 72 டிசம்பர் மாதத்திலே இருந்ததுதான் இந்த (Lower rate of compensation) என்றிருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு பெரிய நிலச்சுவான்தார்கள் கோர்ட்டுக்குச் சென்று அவர்கள் இந்தக் குறைந்த நஷ்ட ஈட்டுத் தொகை கொடுப்பதற்கும், அந்த சட்டம் அமலுக்கு வந்த வருடத்திலே இருந்து கொடுப்பதற்கில்லை என்று நீதிமன்றத்திலே தீர்ப்பைப் பெற்றதன் அடிப்படையாக வைத்துத்தான். இப்போது இந்தத் திருத்தங்கள் வந்திருக்கின்றன, என்பதை நாம் நன்றாக அறிவோம். இங்கே அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக இப்போது செக்ஷன் 18 (3)-ம் அதற்குப் பிறகு புதியதொரு ஷரத்தைக் கொண்டு வந்து 18 (எப்) என்று சேர்த்து அதில் வந்திருக்கக்கூடிய பகுதியையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம்.

ஆனால் அதே சமயத்தில் இந்தத் திருத்த மசோதா நஷ்டஈடுத் தொகை சம்பந்தமாகத்தான். அதாவது கொடுக்கப்படக்கூடிய அரசாங்கத்தால் கொடுக்கப்படக்கூடிய நஷ்ட ஈட்டுத் தொகை. அது 1972-ம் வருடம் சட்டம் வந்ததிலிருந்து கொடுக்க வேண்டுமா அல்லது நோட்டிபிகேஷன் வந்த தேதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமா என்பதுதான். இந்த சிக்கலைத் தீர்ப்பதற்காகத்தான் இது வந்திருக்கிறது என்று முன்னமே கூறினேன். நில உச்சவரம்புக்கு ஏற்பாடு செய்து, அதற்குமேல் உபரியாக கிடைக்கக்கூடிய நிலங்களை எடுத்து, நிலமில்லாத விவசாயிகளுக்கு வழங்குவது என்ற முறையில், தமிழகம் சம்பந்தப்பட்ட வரையில் அடிப்படையான சட்டம் 1961-ல் அதாவது 16, 17 ஆண்டுகளுக்கு முன்னால் வந்த பிறகும் கூட, துரிதமான முன்னேற்றம் இல்லை என்பதை இந்த சமயத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஏன் என்று சொன்னால், 30 ஸ்டான்டர்டு ஏக்கர் என்றிருந்ததை 1972-லே 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைக்கப்பட்ட போதிலும், இருக்கக்கூடிய, பயன்படுத்தக்கூடிய நிலங்களில் ஏற்கனவே நில உரிமைக்குச் சொந்தக்காரர்கள் அவர்களுடைய அனுபோகத்திலேதான் அத்தனை நிலங்களும் இருக்கிறதே தவிர, ஏதோ ஒரு குறுகிய அளவுக்கான நிலம் எடுக்கப்பட்டதே தவிர, பினாமியாக ஏராளமாக லட்சக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருந்தும் கூட இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கான நடவடிக்கை எடுக்க இப்படிப்பட்ட ஒரு அடிப்படையான திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலச்சீர்திருத்தச் சட்டத்தினுடைய நோக்கமே அதுதான். அந்த நோக்கத்தை விட்டுவிட்டு, ஏதோ ஒரு இடத்தில் இருந்து கொண்டு அதையும் சீர்குலைக்க வேண்டுமென்று நிலச்சுவாந்தார்கள் செய்யும் முயற்சியை தடுப்பதற்கோ அல்லது மாற்றுவதற்கோ இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. அது வரவேற்கப் படக்கூடியது என்று கூறினேன். ஆனால் அடிப்படையிலே என்ன பிரச்சனை என்பதைப் பார்க்க வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமானால் அதிகாரிகளை மட்டும் நம்பிக்கொண்டு எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. 1961-லிருந்து அரசாங்கத்தின் கணக்குப்படி தமிழ்நாட்டில் சர்ப்பிளஸ் லான்ட்

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 ஏப்ரல் 3

என்று அறிவிக்கப்பட்டது 94,112 ஏக்கர் நிலம்தான். அதாவது ஒரு லட்சத்திற்கும் குறைவுதான். அதிலே அரசு எடுத்துக் கொண்டது 90,546 ஏக்கர். விநியோகம் செய்யப்பட்டது 85,938 ஏக்கர். அதனுல் பயன்பட்டோர் 50,567 பேர். எனவே, பினுமி முறையிலே ஏராளமான நிலங்களை இன்னும் வைத்திருக்கிருர்கள், அதை நாம் எடுக்க முடியாமல் இருக்கிரும். அதிகாரிகளை முழுமையாக நம்பிக்கொண்டிருப்பதுதான் அதற்குக் காரணம். ஆகவே, மக்கள் குழுவைப் போட்டு, இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டிய நடவடிக்கை என்னென்ன என்பதைக் கண்டறிந்து, பினுமி நிலங்களை எல்லாம் கைப்பற்றக்கூடிய ஒரு சட்டத்தை உடனடியாகக் கொண்டு வந்தால்தான் உண்மையான நிலச்சீர்திருத்தச் சட்டம் அல்லது நிலத்திற்கு உச்சவரம்பு கட்டும் நோக்கம் நிறைவேறும். ஏராளமாகக் கிடைக்கும் உபரி நிலங்களை எடுத்து விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும்.

இந்தச் சந்தர்ப்பத்திலே இரண்டொரு அரசாங்கங்கள் செய்திருக்கிற சீர்திருத்தங்களைப்பற்றி இங்கே நான் குறிப்பிடுகின்ற போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கம் நடக்கும் மாநிலங்களைத்தான் உதாரணம் காட்ட வேண்டுமா என்ற எண்ணம் இங்கே உள்ளவர்களுக்கு ஏற்படுவது சரியல்ல. நான் உதாரணமாகத்தான் சொல்கிறேன். 1967-லே மேற்கு வங்கத்திலே ஐக்கிய முன்னணி அரசு இருந்தபோது 6 லட்சம் ஏக்கர் அங்கு எடுக்கப்பட்டது. அது எப்படி எடுக்கப்பட்டது? சட்டத்தின் மூலமாக மட்டுமல்ல; மக்கள் ஒத்துழைப்பின் மூலமாகத்தான் எடுக்கப்பட்டு, வழங்கப்பட்டது. நிலத்தை எடுத்தது மட்டுமல்ல; அந்த நிலத்தை சாகுபடி செய்வதற்கு அரசாங்கத்தின் மூலமாக கடன் உதவியும் செய்யப்பட்டது. இப்போது இந்த ஆண்டு அவர்களுடைய பட்ஜெட்டில் கூட விவசாயிகளுக்கு வியாபார வங்கியிலிருந்து கடன் கொடுக்க ஏற்பாடு செய்து, கடனுக்கு வட்டி செலுத்த வேண்டியதற்கு அரசு பொறுப்பு எடுத்துக் கொண்டு அதற்காக 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன்னல் திரிபுராவில் ஒரு அரசு ஏற்பட்டது. அங்கு ஏற்கெனவே இருந்த நிலைமைகளை தீவிரமாக மாற்றியிருக்கிருர்கள். ஏற்கெனவே நிலத்தை பயிர் செய்து

1978 ஏப்ரல் 3] [திரு. சி. கோவிந்தராசன்]

கொண்டிருந்தவர்களுக்கு அந்த நிலத்தின்மீது உரிமை கிடையாது. அப்பேர்பட்ட 50,000 பேர்களுக்கு 1½ லட்சம் ஏக்கர் நிலம் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் அந்த மாநிலத்தில் 50,000 நிலம் இல்லாத விவசாயிகளுக்கு ஒரு குடும்பத்திற்கு 2 ஸ்டான்டர்டு ஏக்கர் என்ற முறையில் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வளவும் 2½ மாத காலத்திற்குள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் அங்கே இருக்கக் கூடிய நிலங்களை சர்வே செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இரண்டு ஸ்டான்டர்டு ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு அங்கு வரி இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு வரி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே வரி கொடுக்கப்பட்டிருந்தால் எதிர்காலத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு கொடுக்க வேண்டியதில்லை என்ற நிலைமை அந்த மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஆனுல் நம்முடைய மாநிலத்தை அதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 4½ கோடி ஜனத்தொகை உள்ள இந்த மாநிலத்தில் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஒருசில நிலச்சுவாந்தார்கள் கையில் வைத்துக் கொண்டு, ஹைகோர்ட்டுக்கும் சுப்ரீம் கோர்ட்டுக்கும் போகின்ற நிலைமை இருக்கிறது. உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டது ஒரு இலட்சம் ஏக்கருக்கும் குறைவு—94,000 ஏக்கர்தான். இந்த அளவுக்குத்தான் உபரி நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. இது சரியல்ல; இந்த நிலைமையை மாற்றியமைக்கத்தான் சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

[முற்பகல் 11.40]

அப்போதுதான் கிராமங்களில் இருக்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். இதைச் செய்யாமல் நகரத்தையும் கிராமத்தையும் இணைத்து, விவசாயக் கூலி ஒரு நாளைக்கு 37 பைசாதான் பெறுகிருன் 6 அணுத்தான் பெறுகிருன் என்றெல்லாம் கூறுவதும் நகரத்தில் இருக்கக்கூடிய மக்களுடைய வாழ்க்கை வசதி அதிகமாக இருக்கிறது என்று சொல்வதிலும் பயன் இல்லை. எனவேதான் இப்படிப்பட்ட நிலைமையை உருவாக்குவதற்கு உடனடியாக நிறைவேற்றுவதற்கு கிராமப்புறத்திலிருக்கின்ற மக்களுக்கு நல்ல வாழ்க்கையை உண்டு பண்ணுவதற்கு,

அவர்களுக்கு நல்ல வாங்கும் சக்தியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இப்பேர்ப்பட்ட திருத்தங்கள் கொண்டுவரப்பட்டாலும் உடனடியாக பினாமி நிலங்களை' எடுக்கக்கூடிய அளவுக்கு ஆங்காங்கே மக்கள் குழுவினைப் போட்டு ஆய்வு செய்து ஒரு காம்ப்ரஹென்சிவ் நிலச்சீர் திருத்தச் சட்டம் உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்தி இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, இந்த நிலச்சீர் திருத்தத்தின் மீது எங்களது உழைப்பாளர் கட்சியின் சார்பாக பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலச்சீர்திருத்த மசோதாவின் மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லும்போது இந்த டிரஸ்ட் சொத்துக்கள் என்று சொல்லப்படும் அந்தச் சொத்துக்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தச் சொத்துக்களை பரவலாகக் கணக்கு இல்லாமல் அனுபவித்து வருகிற நிலையினை நாம் பார்த்து வருகிறோம். அந்தச் சொத்துக்களை அரசுடைமையாக்குவதுதான் நல்லது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்குச் சொல்லப்படும் 15 ஸ்டான்டர்டு ஏக்கர் என்ற நிலையினை மாற்றி 7 ஸ்டான்டர்டு ஏக்கர் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிலச் சீர்திருத்த மசோதாவின் மீது பேசுகின்ற நேரத்தில் என்னுடைய தொகுதியிலே நடந்த ஒரு முக்கியமான சம்பவத்தையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக இந்த நேரத்தைப் பயன்படுத்துவதற்கு தலைவரவர்களிடம் நான் முதலிலே மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே நெடுங்குளம் என்ற ஒரு கிராமம் இருக்கின்றது. அந்த கிராமத்திலே எட்டு மாதங்களுக்கு முன்பாக இரண்டு பஞ்சலோகச் சிலைகள் கிடைத்திருக்கின்றன. அந்தக் கிராமத்திலே இருக்கின்ற சர்க்கரை உடையார் என்ற ஒருவர் மண்ணைத் தோண்டிக்கொண்டிருக்கிறபோது அவருக்கு இரண்டு சிலைகள் கிடைத்திருக்கின்றன. ஒவ்வொரு சிலையும்

கிட்டத்தட்ட பத்து கிலோ எடையுள்ளது என்றும் அந்தச் சிலைகள் பஞ்சலோகத்தால் ஆக்கப்பட்டவை என்றும் சொல்லப்படுகிறது. அந்தச் சிலைகளில் ஒன்றை எட்டு மாதங்களுக்கு முன்பாக ஜகன் முதலியார் என்பவர் மூலமாக மாதவ முதலியார், சர்க்கரை முதலியார், சர்க்கரை உடையார், ரெங்கநாத பிள்ளை என்கின்ற நான்கு பேர்களும் விற்று இருக்கிறார்கள். விற்று அதன் மூலமாக கிடைத்த பணத்தைக் கொண்டு அந்த கிராமத்தைச் சுற்றிலும் நிறைய சொத்துக்களை வாங்கியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல்' இந்த நான்கு பேரும் கூட்டாகச் சேர்ந்து ஒருவருக்கொருவர் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காக டேப் எடுத்திருக்கிறார்கள். அந்த டேப்பை பரிசீலித்துப் பார்த்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒன்றும் புரியவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த ஊரிலே இருக்கின்ற பொது மக்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகியோர் "அந்த டேப்பை நாங்கள் போட்டுப் பார்த்தபோது அதிலே அதிகமான அளவில் தங்கத்தை அவர்கள் விற்றதாகப் பேச்சுக்கள் வருகிறது" என்று கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா): தாங்கள் நில உச்ச வரம்புச் சட்டத்தைப் பற்றி பேசுங்கள். நீங்கள் இப்போது குறிப்பிடுவதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. ப. சந்திரன் : அந்த நிகழ்ச்சியைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுடைய பி. ஏ. அவர்கள் அங்கே விசாரணை செய்திருக்கிறார்கள். அவ்வாறு விசாரணை செய்கின்றபோது அது சரியான விசாரணை இல்லை என்று பொது மக்கள் கூறுகிறார்கள். அந்த டேப்பை அவர்கள் பறிமுதல் செய்திருக்கிறார்கள். அதோடு அவர்களிடமிருந்த அந்த ஒரு சிலையை மட்டும் தற்போது பறிமுதல் செய்திருக்கிறார்கள். அந்தப் பத்து கிலோ எடையுள்ள அந்தச் சிலையில் 2 கிலோவுக்கு மேலே தங்கம் இருப்பதாகத் தெரிகிறது. அதிலே அழகான கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. இது பற்றிய அறிக்கை புலனாய்வுத் துறைக்கு இன்னும் அனுப்பப்படவில்லை. இது குறித்த செய்தியை ஆர்கையாலாஜி டிப்பார்ட்மெண்ட்டுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

(மணியடிக்கப்பட்டது)

இது மிகவும் முக்கியமான விஷயமாகையால் இது குறித்து மேலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாதவ முதலியார் முன்பு மிசா சட்டத்தின்கீழ் 15 நாட்கள் சிறை சென்றிருக்கிறார். (மீண்டும் மணியடிக்கப்பட்டது) இந்த விவகாரத்தில் தலையிட்டு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நில உச்சவரம்பு கட்டுதலுக்கான திருத்த மசோதா குறித்து நான் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் திருத்தத்தில் நஷ்டயீடு கொடுப்பதாக உள்ளது. 1961-ல் கொண்டுவரப்பட்ட சட்டத்திற்குப் பிறகு 1976-ல் கொண்டு வரப்பட்ட சட்டத்திருத்தத்தையொட்டி இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நில உச்சவரம்புச் சட்டத்தில், இப்போதுள்ள சட்டத்தில் உள்ள ஷரத்துக்களை சீராக அமுலாக்க உரிய ஏற்பாடுகள் இல்லை. இன்று நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அதிகமாக உள்ள நிலத்தை எடுத்து நிலமில்லாதவர்களுக்கு அல்லது சாகுபடி செய்யும் வேறு ஒருவருக்கு கொடுக்க வேண்டும் என்று இருந்தாலும் பல நிலச்சுவாந்தார்கள் பலர் பெயர்களின் பினாமியாக போட்டு வைத்து மிச்சமுள்ள நிலத்தை அந்த நிலச்சுவாந்தார்களே அனுபவித்து வருகிறார்கள். உச்சவரம்புச் சட்டத்தில் உள்ள ஷரத்து என்னவென்றால், உச்சவரம்பிற்குமேல் மிச்சமுள்ள நிலத்தை யார் அதைச் சாகுபடி செய்துவருகிறார்களோ அவர்களுக்கு அந்த நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால் நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் சொந்தக்காரர்கள் அல்லது தங்கள் கீழ் வேலை பார்க்கிறவர்கள் இவர்கள் பெயரில் அவர்கள் குத்தகைக்கு உழுகிறார்கள் என்று சொல்லி அவர்களிடம் நிலத்தை விட்டுள்ளதாக சொல்லி, நஷ்டயீடு தருகிறார்கள் என்று சொல்லி, அவர்களே நிலத்தை, மிச்ச நிலத்தையும் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். எந்த நிலம் யார் யாருக்குச் சேர வேண்டும் என்ற நோக்கத்தோடு சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்

படவில்லை. அந்த நிலத்தை, மிச்ச நிலத்தை எடுத்து இன்னொரு கைக்கு கொடுக்கப்படாத நிலைதான் இருக்கிறது.

ஆகவே சரியான முறையில் உச்சவரம்பிற்கு அதிகமான நிலத்தை யாருக்கு கொடுக்க வேண்டுமோ அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றால் திரு. கோவிந்தராஜன் அவர்கள் சொன்னதுபோல், வேறு ஒரு ஏற்பாடு செய்து, மக்கள் குழு என்று ஒவ்வொரு ஊராட்சி மன்றத்தைப் பொறுத்தும் அங்குள்ள முக்கியமான ஆட்களை வைத்து, எல்லாக் கட்சியினரையும் கொண்ட மக்கள் குழு அமைத்தால் தான் மிச்ச நிலம் எவ்வளவு இருக்கிறது, அது யார் யாருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று சீராகக் கொடுக்க முடியும். அதல்லாமல் அதிகாரிகளை மட்டும் வைத்துக்கொண்டு இச்சட்டத்தை அமல்நடத்துவது என்றால் 1961-ல் போட்ட சட்டம் 16 ஆண்டுகளாகியும் பலயிடங்களில் மிச்ச நிலம் எடுக்கப்படாமல் இருக்கிறது. பல மாவட்டங்களிலும் இந்நிலை இருக்கிறது.

இன்று நூற்றுக்கணக்கான எக்கர் நிலங்களை பண்ணைகளாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்நிலங்களை, உச்சவரம்புக்கு அதிகப்படியாக உள்ள நிலங்களை பினாமியாக வேறு, வேறு பெயர்களில் வைத்துக் கொண்டு அவர்களே அனுபவித்து வருகிறார்கள். இந்நிலையை மாற்ற வேண்டும். எட்டயாபுரம் வட்டாரத்தில் ஜமீன்தாருக்கு சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுத்து பல ஆண்டுகளாகியும் கோர்ட் மூலம் நடவடிக்கை எடுத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பல விவசாயிகளுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் இரண்டு, மூன்று ஏக்கர்கள் என்று விவசாயிகளுக்கு, ஹரிஜனங்களுக்கு, நிலமில்லாதவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி பட்டா வழங்கப்பட்டும் அந்த நிலம் எங்கே இருக்கிறது, எப்படி சாகுபடி செய்வது என்று தெரியாமல் அந்த நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்படாமலிருக்கிறது.

[திரு. சோ. அழகர்சாமி] [1978 ஏப்ரல் 3

ஓரே சர்வே நம்பரில் 500, 1,000 ஏக்கர் என்றிருக்கிறது. ஜமீன்தார்கள் அதிகமாகவுள்ள நிலத்தை விட்டுவிட்டார்கள். அதிகாரிகளால் பிரித்துக் கொடுக்கப்பட்டு, பட்டா வழங்கப்பட்டாலும் நிலம் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. சர்வே செய்து இன்றுவரை கொடுக்கப்படவில்லை. யார் யாரோ எப்படி எப்படியோ அந்நிலங்களை அனுபவிக்கிறார்கள். சில தரிசாகக் கிடக்கின்றன. சர்க்காருக்கும் நஷ்டம். 18 (3)-ல், . . . "அதைத் தமது சுவாதீனத்தில் வைத்திருந்தால் அல்லது அந்தச் சொத்திலிருந்து பயனேதும் அடைந்து வந்தால், அத்தகைய ஒவ்வொருவரும் அவ்வாறு அச்சொத்தினைச் சுவாதீனத்தில் வைத்திருந்த அல்லது பயனை அனுபவித்து வந்த காலத்திற்கு அந்தச் சொத்தைப் பயன்படுத்தியதற்காக அனுபோகத்தில் வைத்திருந்ததற்காக அல்லது அனுபவித்ததற்காக அனுமதி பெற்ற அதிகாரி உரிய முறையில் நிர்ணயிக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகையை அரசுக்கு செலுத்த வேண்டும். அந்த அதிகாரி நிர்ணயிக்கப்படக்கூடிய அம்சங்களைக் கருதிப் பார்க்க வேண்டும் என்றிருக்கிறது."

[முற்பகல் 11.50]

ஆனால் இரண்டு மூன்று வருடங்களாக தரிசாக கிடக்கிறது. இதனால் நிலைமை என்னவென்றால் நாளைக்கு ஏராளமான தகராறுகள் வரும். பட்டாவில் சொல்லியிருக்கும் நிலம் எங்கு இருக்கிறது என்று தெரியாமல், நாளைக்கு நிலம் எங்கே என்று கேட்கவேண்டிய நிலைமை ஏற்படும். நாளைக்கு எப்படியும் அவர்கள் இதற்கு நஷ்ட ஈடு கொடுக்கப் போகிறார்கள். இப்போது ஒன்றுமே இல்லாமல் இருப்பது பெரிய சிக்கலை உண்டு பண்ணும் என்று நினைக்கிறேன். உச்சவரம்பு சட்டத்தில் கிடைத்த நிலங்களை எல்லாம் நிலமற்ற விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் நிலங்கள் எவையெல்லாம் என்று தெரியவில்லை. ஆகவே, இதையெல்லாம் ரீ-சர்வே நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, எட்டையபுரம் பகுதியில் 2,000 எக்கர் நிலம் 1,000 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலிருந்து அவர்கள் மகசூல் செய்வதற்கு தகுந்தபடி நிலத்தை நல்ல

1978 ஏப்ரல் 3] [திரு. சோ. அழகர்சாமி]

முறையில் பிரித்து கொடுக்க வேண்டும் என்றும், அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாகுபடியாளர்கள் பெரும்பாலானவர்கள் பதிவு செய்யப்படாமலேயே இருக்கின்றனர், ஒவ்வொரு தாலூகாவுக்கும் ஒரு தாசில்தார் என்று போட்டும்கூட சாகுபடியாளர்கள் சரியான விதத்தில் இன்னும் பதிவு செய்யப்படவில்லை. இதன் காரணமாக எவ்வளவோ தகராறுகள், கொலை வரைக்கும் போகிறது. ஆனால் உரிமையை கேட்கப் போகின்ற நேரத்தில், அதிகாரிகள் பதிவு செய்து கொள்ளாததின் காரணமாக பலவிதமான சிக்கல்கள் ஏற்பட காரணமாக இருக்கிறது.

நாளெல்லாம் மகசூல் செய்துவிட்டு அறுவடைக்கு போகும் போது, கோர்ட்டுக்குப் போய் இன்சங்ஷன் வாங்கிக் கொண்டு இன்னொருவர் வந்து அறுவடை செய்து போகின்ற நிலைமை ஏற்படுகிறது. அதுவும் உற்பத்தி செய்கின்றவர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருளை எடுத்துக் கொண்டு போக முடியாத அளவுக்கு நிலைமை இருந்து வருகிறது. இதையெல்லாம் தவிர்க்க சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இது மட்டுமல்ல, பதிவு செய்யப்பட்ட ஆட்களை கூட நிலத்திலிருந்து வெளியேற்றி விடுகிறார்கள். பதிவு செய்த ரிக்கார்டு, தாசில்தார் போன்ற அதிகாரிகள் கொடுத்த ரிக்கார்டு இருக்கிறது. நிலச்சுவான்தார்கள் கொடுத்த குத்தகை ரசீது இருக்கிறது. இவ்வளவு இருந்தும், விவசாயிகள் வெளியேற்றப்படுகிறார்கள். இதற்கு போலீஸ், ரெவன்யூ அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை கோவை, தர்மபுரி, புதுக்கோட்டை, தஞ்சை இப்படிப்பட்ட இடங்களிலிருந்து ஏராளமான புகார்கள் எங்களுக்கு வந்திருக்கின்றன. இவைகளின் நகல் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இதையும் கவனிக்க வேண்டும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1978 ஏப்ரல் 3

முக்கியமாக இந்தச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டும். முன்பு உச்சவரம்பு 15 ஏக்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது ஒரு குடும்பத்திற்கு என்று இருக்க வேண்டும். அப்படியில்லாமல் ஒரு குடும்பத்திலுள்ள அத்தனை பேர்களுடைய பெயர்களிலும், மைனர், மேஜர் என்றிருப்பவர்களுடைய பெயர்களில் எல்லாம் ஏராளமான நிலத்தை வைத்துக் கொண்டிருப்பதால், எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோமோ, அந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேற முடியாமல், எந்த மக்களுக்கு நிலங்களை வழங்க வேண்டும் என்று நினைத்தோமோ அப்படிப்பட்ட மக்களுக்கும் நிலங்கள் கிடைக்காமல் போகின்ற அளவில்தான் இப்போதுள்ள சட்டம் அமைந்திருக்கிறது. ஆகவே உச்சவரம்பு 15 ஏக்கர் என்றிருப்பது ஒரு குடும்பத்திற்கு என்று இருக்க வேண்டும், ஒரு தனி நபருக்கு என்று இருக்கக் கூடாது என்று திருத்தம் கொண்டு வரவேண்டும்.

இப்போது இருக்கின்ற சிக்கல்களை தீர்ப்பதற்கு ஆங்காங்கு இருக்கின்ற மக்கள் கமிட்டியின் மூலமாக அதிகாரிகளின் மேற்பார்வையின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நமது நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, வட்டாரத்தில், இந்த ஆண்டிலாவது தங்கள் நிலங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ளுகின்ற முறையில், ரீ-சர்வே செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த, நில உச்சவரம்பு முறைப்படுத்துதல் திருத்தச் சட்டத்தை நான் முன் மொழிந்ததை யொட்டி, பல உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்து இருக்கிறார்கள். தெரிவித்தவர்கள் அத்தனை பேரும், இந்தத் திருத்தச் சட்டத்தை வரவேற்றுப் பேசியமைக்காக ஆரம்பத்தில் எனது நன்றியை அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். எதற்காக இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது என்பதைப் பற்றிய விளக்கம் மசோதாவில் தரப்பட்டு இருப்பதை உறுப்பினர்கள் எல்லோரும் சுட்டிக்காட்டினார்கள்.

1978 ஏப்ரல் 3] [திரு. கி. மனோகரன்]

மூலச்சட்டம். சட்டம் 7/74-ன் கீழ் திருத்தப்பட்டதின் விளைவாக, உபரி நிலம் அந்தந்தச் சட்டங்களில் குறிப்பிட்ட தொடக்க தேதியிலிருந்தே அரசிடம் நிலை பெற்றிருக்கும் எனக் கருதப்பட்டது. இத்தொடக்க தேதிகள் 6—4—1960 முதல் 1—3—1972 வரையிலான பல்வேறு தேதிகளாகும். இவ்வாறு திருத்தக் காரணம், சட்டத்தில் குறிப்பிட்ட தொடக்க தேதியிலிருந்து 18 (1) பிரிவில் அறிக்கை வெளியிடப்படும் தேதி வரை சில சமயங்களில் பல ஆண்டு காலத்திற்கு உபரி நிலங்கள் சொந்தக்காரரிடமே இருக்க நேரிடுகிறது. இது நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணானதெனக் கருதப்பட்டது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

அதற்குள் நிகர ஆண்டு வருமானத்தின் ஒவ்வொரு 5,000 ரூபாய்க்கும் 12 மடங்கிலிருந்து 10 மடங்கு வரை படிப்படியாகவும், அதன்பின் மிகுதியுள்ள வருமானத்தின் 9 மடங்காகவும் கணக்கிடப்பட்டது. ஆகவே, திருத்தியமைக்கப்பட்ட முறையில் ஆண்டு நிகர வருமானம் அதிகரிக்க அதிகரிக்க, இழப்பீட்டுத் தொகை முன்பிருந்ததைவிடக் குறையும். ஆனால், திருத்தியமைக்கப்பட்ட கணக்கு முறை 21—12—1972 முதல் அமுலுக்கு வந்தாலும் உபரி நிலங்கள் அரசிடம் நிலை பெற்றதாகக் கருதப்படும் தேதிகள் எல்லாம் அதற்கு முந்திய தேதிகளாக இருந்தாலும், இத் தேதிகளுக்குச் சரியான பழைய கணக்கீட்டு முறையிலேயே இழப்பீட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி சில பேர் நீதிமன்றங்களுக்குச் சென்றார்கள். அவர்களை நான் யார் யார் என்று சொல்ல விரும்பவில்லை. முன்பு இருந்ததன்படி அரசு கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடு தொகை 30 இலட்சம் ரூபாய். இந்த நிலையிலே இப்போது நீதிமன்றத் தீர்ப்புச் சென்றவர்கள், ஆரம்பக் காலத்திலிருந்து இந்தத் தேதியைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, கிட்டத்தட்ட நீதி மன்றத்தின் மூலம் 2 கோடி ரூபாய் நஷ்ட ஈடு பெறக்கூடிய தீர்ப்பையெல்லாம் அவர்கள் பெற்று வந்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே உள்ளவர்கள் எல்லாம் அறிவார்கள் என்று நான் நம்புகிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1978 ஏப்ரல் 3

ஆகவே, இப்பொழுது செய்ய உத்தேசித்துள்ள முக்கிய திருத்தம், உபரி நிலங்கள் அவ்வாறு அறிக்கை வெளியிடப்படும் தேதியிலிருந்து அரசிடம் நிலைபெறும் என்பதாகும். இவ்வாறு செய்வதால், 21—12—1972-க்குப் பின் அறிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து திருத்தப்பட்ட கணக்கீட்டு முறையில் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும். அப்போது அதிகத் தொகை கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய எனது நண்பர் மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் பேசும்போது, அறிக்கை வெளியிட்டு, அரசு கையகப்படுத்தும்வரை நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தை அனுபவித்து பலன் பெறுகிறார்கள் என்பது. அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். நிலம் கையில் வைத்திருப்பவர்கள் அளிக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையைப் பற்றி பேசும் போது குறிப்பிட்டார். அவர்கள் அப்படி நிலத்தை அனுபவிக்கிற காரணத்தினாலே, ஒரு தொகையை இழப்பீட்டுத் தொகையாகக் கொடுப்பதிலே தவறில்லை. இத்தொகையை குத்தகைக்காரர்கள் நியாயமான அளவுக்கு, குத்தகை என்ற முறையில் ஒவ்வொரு ஆண்டும் கொடுப்பார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே அதற்குப் பிறகு பேசிய, நமது கோவிந்தராஜன் அவர்கள் இந்த மசோதாவை முற்றிலும் வரவேற்றுவிட்டு, இந்த மசோதா மட்டும் போதாது, இது அடிப்படை நிலச் சீர்திருத்தத்திற்கு வழிவகை செய்யாது, ஆகவே, ஒரு காம்பிரஹென்சிவ் பில்லைக் கொண்டு வரவேண்டுமென்று கூறி, சட்டத்தால் மட்டும் இதைச் சாதித்து விட முடியாது என்று சொல்லி, ஆயிரக் கணக்கான, இலட்சக்கணக்கான எக்கர் நிலங்களை கையடக்கம் செய்துகொண்டு, இன்னும் சில நிலத் திமிங்கலங்கள் இந்த நாட்டிலே நடைபோட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டி, அந்த நிலங்களைப் பெறுவதற்கு சட்டத்தின் மூலம் மட்டும் அல்லாமல், மக்கள் குழுவை அமைத்து அவர்களின் மூலமும் இதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, அதற்கு மேற்கு வங்காளத்தை மேற்கோளாகக் காட்டினார்கள். கோவிந்தராஜன் அவர்களின் உணர்வோடு ஒன்றிக் கொள்வதற்கு எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

1978 ஏப்ரல் 3] [திரு. கி. மனோகரன்]

பினாமி நிலங்களை வெளியே கொண்டு வருவது எப்படி என்பதைப்பற்றி தீவிரமாக ஆலோசித்து தீரவேண்டிய நிலை, இந்த நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது. இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை, சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் யார் யார் பேரிலோ எழுதி வைத்துவிட்டு, தனக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம்தான் இருக்கிறது என்று காட்டிக்கொண்டு, நடைபோட்டுக் கொண்டிருப்பதை நாம் பார்க்காமல் இல்லை. ஆகவே, அதையும் நண்பர் கோவிந்தராஜன் அவர்கள் சொன்ன இந்தக் கருத்தையும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல்தான் நண்பர் மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் பேசும்போது, இந்த மசோதாவை வரவேற்றுப் பேசிவிட்டு, உச்ச வரம்பு விதித்ததற்குப் பின்பு மிச்சம் இருக்கின்ற இந்த நிலங்கள் எத்தனை பேர்களுக்கு இதுவரை பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கிறது என்று ஒரு வினாவைத் தொடுத்து, அப்படி பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங்கள் மிகவும் குறைச்சல் என்றும் கூறினார்கள். ஆகவே, பினாமி நிலங்கள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன, அவைகளை எல்லாம் இன்னும் கையகப்படுத்த வேண்டும் என்பதை எடுத்துக் காட்டி, இந்த அரசு ஏற்கனவே சொன்னதைப்போல் மக்கள் குழு போன்ற ஒன்றை அமைத்து, அதன்மூலம் இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டுமென்று

[நண்பகல் 12.00]

எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்தோட்டத்தோடு நானும் ஒட்டிக் கொண்டிருக்கிறேன் என்பதை அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள்— சாகுபடி பதிவு சரியானபடி செய்யாததால் பெரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்றும் அதற்கு உடனடி பரிகாரம் காண்பதற்கு சர்க்கார் முயற்சிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். தீவிரமாக சர்க்கார் அதை ஆராயும்.

அதோடு இன்னொன்றும் சொன்னார்கள். பதிவு செய்யப்பட்டவர்களை வெளியேற்றுகிற கொடுமை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். சில இடங்களையும்

சுட்டிக்காட்டி, இந்த இடங்களில் எல்லாம் இந்தக் கொடுமைகள் நடைபெறுகின்றன என்பதையும் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நிச்சயமாக அரசு அதனையும் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியினை அழகர்சாமி அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொண்டு, இது நாம செய்யப் போகிற காம்ப்ரஹென்சிவ் லாண்ட் ரிபார்ம்ஸ் என்ற அந்தத் திருத்தத்திற்கு சிறு முன்னோடியாக, கோடிட்டுக் காட்டுகின்ற ஒன்றாக எடுத்துக்கொண்டு மேலும் மேலும் இந்த அரசு புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் ஒழுங்கான முறையில் நிலச் சீர்திருத்தத்தைச் செய்யும் என்ற உறுதியை இந்த அவைக்கு வழங்கி இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. இ. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1978) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்"
என முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. உச்ச வரம்புக்கு மேல் உள்ள மிச்ச நிலத்தை இரண்டாயிரம் ஏக்கர் வரை எட்டயாபுரம் வட்டாரத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் சர்வே செய்து அந்த நிலம் எங்கே இருக்கிறது என்று அடையாளம் காட்டாமல் இருக்கிறார்கள். இரண்டு ஆண்டுக் காலமாக அந்த நிலம் தரிசாக இருக்கிறது. யார் சாகுபடி செய்தார்கள் என்ற பிரச்சினை வரும். உடனடியாக யாருக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதற்கு அமைச்சரிடமிருந்து விளக்கத்தை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. இ. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கென்று லெட்டர் பேட் இருக்குமென்று கருதுகிறேன். அவர்கள் அதிலே தெளிவாக எழுதி எனக்கு அனுப்புவார்களானால் நான் அது குறித்துப் பரிசீலிக்க வசதியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1978) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 17/1978) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1978.)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

என்று கோருகிறேன்.

THIRU S. ALAGARSAMY : Mr. Speaker, Sir, I move that—

"The Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Bill, 1978 (L.A. Bill No. 17 of 1978) be referred to a Joint Select Committee".

The amendment was duly seconded.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, 'தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நகர்ப்புற நில . (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவின்மீது என்னுடைய சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலாவதாக இதில் சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்பாக, இந்த, 'தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் காரணம், இதில் பல்வேறு சட்டப் பிரச்னைகள் அடங்கியிருக்கின்றன. பல்வேறு சட்டப் பிரச்னைகள் அடங்கியிருக்கின்ற காரணத்தினாலே ஒவ்வொரு செக்ஷனை, ஒவ்வொரு கிளாஸாக மீண்டும் அவைகளைப் பரிசீலனை செய்து. மீண்டும் நடைமுறைச் சிரமங்களைக் கணக்கில் கொண்டு, மக்கள் நலனை மனத்தில் வைத்து அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

* 1978 மார்ச் 28-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு என்று சில நோக்கங்கள், சில காரணங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிக் காரணங்களைத் தெரிவிக்கின்ற பொழுது தெளிவாகவே இந்தச் சட்டத்தின் முற்பகுதியிலே சொல்லப்பட்டிருக்கிறது.

"A Bill to provide for the imposition of a ceiling on vacant land in urban agglomerations, for the acquisition of such land in excess of the ceiling limit, to regulate the construction of buildings on such land and for matters connected therewith, with a view to preventing the concentration of urban land in the hands of a few persons and speculation and profiteering therein and with a view to bringing about an equitable distribution of land in urban agglomerations to subserve the common good."

நகர்ப்புறத்தில் இருக்கும் கூட்டுப் பகுதியில் இருக்கும் நிலங்கள், வேகன்ட் லேண்ட்ஸ், குறிப்பிட்ட சில தனி நபர்கள் கையிலே குவிந்துவிடக் கூடாது என்பதாலும் அல்லது இந்த நிலங்களை அடிப்படையாக வைத்து, ஸ்பெகுலேஷன், ஊக வியாபாரம் நடத்தி விடக்கூடாது என்பதற்காகவும், அதை அடிப்படையாக வைத்துக் கொள்ளை இலாபம் அடிக்கக் கூடாது என்பதற்காகவும்,
"equitable distribution of land in urban agglomerations"
கொடுக்கப்பட வேண்டுமென்று அடிப்படையிலேதான், இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாக இந்தச் சட்டத்தின் நோக்கத்தில் தெளிவுபடுத்தப்படுகிறது.

நான் கேட்பது, இங்கே கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தின் மூலம், இந்தக் காரணங்கள், இந்த நோக்கங்கள் நிறைவேற்றப் படுகின்ற விதத்தில் இருக்கின்றனவா என்பதை நாம் பரிசீலித்துப் பார்க்க வேண்டும் என்பதாகும்.

நான் இன்னொரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இப்பொழுது இந்தியாவிலேயா கட்டும் அல்லது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலேயாகட்டும், எவ்வளவு தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன, அவைகளில் எவ்வளவு முதலீடு செய்யப்படுகிறது அல்லது எத்தனை ஏகபோகக் குடும்பங்களின் கையில் அந்தத் தொழில்கள் இருக்கின்றன என்பதைப்பற்றிய புள்ளி விவரம் அரசுக்கு உண்டு.

ஆனால் அதே நேரத்தில் இன்றைக்கு நாம் சொல்கிறோமே நகர்ப்புறச் சொத்துக்கள், அதாவது இந்த அர்பன் லேன்ட், அந்த அர்பன் லேன்ட் இன்றைக்கு நகர்ப்புறங்களில் எவ்வளவு பேர்களிடத்தில் இருக்கிறது, எவ்வளவு பேர்கள் வைத்திருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் நம்மிடத்தில் இருக்கிறதா என்றால் அப்படிப்பட்ட ஒரு புள்ளிவிவரம் நம்மிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட ஒரு புள்ளிவிவரம் இல்லாதபொழுது நமக்கு எந்த அளவிற்கு வாய்ப்பிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்கள் தொகை எவ்வளவு என்று கணக்கில்கொண்டு அதேபோல் அர்பன் லேன்ட் எவ்வளவு பேர்களிடத்தில் இருக்கிறது என்ற புள்விவரத்தையும் எடுக்கிற பொழுதுதான் இந்த "equitable distribution of land in urban agglomerations" என்ற அந்தக் கொள்கையை நாம் நிலைநாட்ட முடியும். ஆனால் இப்பொழுது அதற்கான வாய்ப்புகள் இல்லை. காரணம், அத்தகைய புள்ளிவிவரம் அரசிடத்தில் இல்லை.

ஒருவரிடம் 100 ஏக்கர் இருந்தால் 50 பேர்களுக்கு equal distribution செய்ய வேண்டுமானால் தலைக்கு இரண்டு ஏக்கரா கொடுக்கும் அடிப்படையில், அந்தக் கணக்கை அடிப்படையாக வைத்துச் செய்கிறோம் என்றால் எவ்வளவு பேர் என்ற கணக்கு இருக்கிறது, எவ்வளவு ஏக்கர்கள் என்ற கணக்கு இருக்கிறது, ஆகவே, equal distribution -ஐக் சரியாக நிறைவேற்ற முடியும். ஆனால் இந்தச் சட்டத்தின்கீழ் அப்படிப்பட்ட புள்ளிவிவரம் இல்லாத காரணத்தால் இதைச் சரியாக நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதே என்னுடைய கருத்து என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சட்டத்தின் அடிப்படையில் இன்னொரு கருத்தை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இன்றைக்குச் சென்னை நகரத்தில் பல்வேறு காலி நிலங்களில் ஏராளமான வீடுகளைக் கட்டிக்கொண்டு சில தனி நபர்கள் அதை வாடகைக்கு விட்டுக் கொள்ளை இலாபம் அடித்துக்

(பிற்பகல் 12-10)

கொண்டிருக்கிறார்கள். அதைத் தடை செய்வதற்கு, அந்தக் கொள்ளை லாபத்தைக் தடைப்படுத்துவதற்கு ஏதாவது சட்ட வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று கேட்டால், சட்ட வாய்ப்புகள்

இல்லாத ஒரு சூழ்நிலையிருக்கிறது. Right to property சொத்துக்குரிய உரிமை, இந்தியாவினுடைய அரசியல் சட்டத்தில், in the Constitution அடிப்படை உரிமையாக, fundamental right ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஆக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே இதுபோன்ற சட்டங்களை நிறைவேற்றத் தடையிருக்கலாம். ஆனால், இந்த அரசு சோஷலிசத்தை நன்கு செயல்படுத்துவதாகச் சொல்லப்படுகிற காரணத்தாலே அதுபற்றிய சிந்தனை வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அதே போல், இந்தச் சட்டத்தினுடைய 4-வது பிரிவு சீலிங்கைப் பற்றி குறிப்பிடுகிறது.

"4. *Persons not entitled to hold vacant land in excess of the ceiling limit*—Except as otherwise provided in this Act, on and from the commencement of this Act, no person shall be entitled to hold any vacant land in excess of the ceiling limit."

என்று சொல்லி, சீலிங் லிமிட் எவ்வளவு இருக்க வேண்டுமென்று கருத்து இங்கே தெளிவாக வரையறுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில், தனி நபரைப் பொறுத்தமட்டில் 500 ஸ்கோயர் மீட்டர், ஏறத்தாழ 2¼ கிரவுண்டு அனுமதிக்கப்படுகிறது. இது காட்டகரி 1, ஷெடியூல் 1-ல் 2¼ கிரவுண்டு அனுமதிக்கப்படுகிறது. அதே போல் காட்டகரி 2, ஷெடியூல் 1, 1,500 ஸ்கொயர் மீட்டர், அதாவது ஏறத்தாழ 6-3/4 கிரவுண்டு அனுமதிக்கப்படுகிறது. காட்டகரி 3, ஷெடியூல் 1, 2000 ஸ்கொயர் மீட்டர் ஏறத்தாழ 9 கிரவுன்ட் அனுமதிக்கப்படுகிறது. அதே போல், தனி நபர் 500 ஸ்கொயர் மீட்டர், அதாவது 2¼ கிரவுண்டு வைத்துக்கொள்ளலாம். கணவன்—மனைவி, அவர்களுக்குத் தலா 500 ஸ்கொயர் மீட்டர்; ஆக 2¼ கிரவுண்டு, 2-1/4 கிரவுண்டு இணைகிற பொழுது 4½ கிரவுண்டு கணவனும் மனைவியும் வைத்துக்கொள்கிற விதி இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மைனர் சில்ட்ரன். . . . .
(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் வேறு பேசுகிறார், அவர் விளக்கமாகப் பேசுவார். ஆகவே, சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: ஆகவே, குடும்பத்திற்கு வைத்திருக்கிற சீலிங் மிக அதிகமாக இருக்கிறது. அது குறைவாக வைக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். Objects -ல்சொல்லியிருக்கிறார்கள். " It is also proposed to liberalise the ceiling limit in the respect of family and industrial undertaking ". சீலிங் காரணமாக, அதிகமாக்காமல் இருக்க வேண்டுமேதவிர, சீலிங்கை அதிகப்படுத்திக்கொண்டு போவது சரியாக இருக்காது.

இன்டஸ்ட்ரீஸுக்கு சீலிங்கை லிபரலைஸ் செய்வதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில், இன்டஸ்ட்ரீஸுக்கு சீலிங் லிபரலைஸ் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு, தனிப்பட்ட முதலாளிகள் தங்களுடைய ஏகாதிபத்தியத்திற்கு, வெஸ்டட் இன்டரஸ்ட்ஸ்ஸுக்கு எடுத்துக் கொண்டு போய் விடக்கூடாது. ஏனென்றால், அந்த . ப்ரொவிஷனை மிஸ்யூஸ் பண்ணுகிற அபாயகரமான போக்கும் இருக்கிறது. எனவே, அரசு அவைகளை ஒழுங்குப்படுத்துகிற விதத்தில் சட்டவிதிகளை இயற்ற வேண்டும். (மணியடிக்கப்பெற்றது). இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில உச்சவரம்பு சட்ட மசோதாவை ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில் நான் இதில் உள்ள சில அம்சங்களை எடுத்துக் கூறலாம் என்று முற்படுகிறேன்.

இந்த நில உச்சவரம்புச் சட்ட மசோதாவை அரசு சரியான நேரத்தில் கொண்டு வந்திருக்கிறது. இங்கே 1976 ஆம் ஆண்டு நெருக்கடி காலத்தின்போது கொண்டுவரப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டத்தினால் நம்முடைய தமிழகத்தின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட கேடுகளையும் தீர்ப்பதற்கு இப்போது நம்முடைய அரசு கொண்டு வந்த இந்த மசோதாவை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன்.

இங்கே விவசாயத்திற்கு என்று சொல்லுகின்றபோது So long as it is used for agriculture, there should not be any ceiling என்ற கருத்தை நாம் மேற்கொள்ள

வேண்டும். விவசாயத்திற்கு எனக் கொண்டு வருகின்ற நேரத்தில் இங்கே விவசாயிகள், விவசாய நிலத்தை ஏற்கின்ற நேரத்தில் அவர்கள் அதிகாரிகளின் பிடிகளில் சிக்கிக் கொள்வார்கள். அங்கே . அலுவலகங்களில் அவர்கள் அல்லல் ஏற்படுவதாக இருக்கும். அதுபோன்ற சிக்கல்களை நம்முடைய சட்டத்தில் தவிர்த்தாக வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் இங்கே விவசாயிகள் தங்கள் நிலத்தை விற்பார்களானால் அந்தப் பிரிவை நாம் நீக்கினால் நலமாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால், இதற்கு முன்னால் இருந்த சட்டத்தில் மேஜரானாலும், ஜாயின்ட் பேமிலியிலிருந்து தனி நபராக ஆக்கிவிடுவார்கள். மைனர்களுக்கு அங்கே அவர்களுக்கு பாதுகாக்கின்ற கார்டியனோடு சேர்த்து அவர்களுக்கு என்று ஒரு ஷேரை ஒதுக்கியிருந்தார்கள். இந்த சட்ட மசோதாவில் மைனருக்குத் தனியான பொறுப்பும் மைனருக்கு உள்ள அந்த சட்டப் பாதுகாப்பைக் கொடுத்திருப்பது உண்மையிலே பாராட்டத்தக்கதாகும்.

இது தவிர, நாம் கருத்திக் கொள்ள வேண்டியது தமிழ்நாடு நில உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இங்கே நில உச்சவரம்பு உட்பட்ட நிலப்பிரபுக்களை வைத்துக் கொள்ளலாம் என்று நாம் கூறியிருக்கிறோம். ஆனால் வெளி மாநிலங்களில் இந்த நிலச் சொந்தகாரர்கள் எவ்வளவு நிலங்களை வைத்திருக்கிறார்கள் என்பதையும் வெளிமாநிலங்களில், மெட்ரோபாலிடன் சிட்டிகளில் அவர்கள் எவ்வளவு நிலத்தை வைத்திருக்கிறார்கள் என்பதையும் நாம் கண்காணிக்க வேண்டும். Central Ceiling Act இருந்த நேரத்தில் அவர்கள் எவ்வளவு நிலத்தை வைத்திருக்கிறார்கள் என்பதையும் நாம் கண்காணிக்க வேண்டும்.

அதிகப்படியாக இருக்கும் மாநிலங்களில் எந்த சூழ்நிலையில் அங்கே இருப்பவர்கள் அந்த உச்ச வரம்புச் சட்டத்திற்குள் வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் அனுசரித்து அதற்கேற்ப அங்கே அவர்களுக்கு விதிவிலக்கு அளித்தாலும், தடை விதித்தாலும் நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது தவிர, இதற்கு முன்னாலே நிலப்பரப்பின் மேல் அவர்கள் கட்டடம் கட்டியிருந்தாலும், உச்சவரம்புக்கு உட்படவேண்டுமா என்பதையும், பார்க்கவேண்டும். இப்போது இங்கே கொண்டு

வந்திருக்கிற மசோதாவை எல்லோரும் வரவேற்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். நிலப்பரப்பின் மேல் அங்கே இருக்கிற கட்டடமோ அல்லது ஏதாவது ஒரு கட்டடத்தை கட்டினால் அவர்கள் அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்த நிலப்பரப்பை குறைவாக வைத்துக் கொள்ளவேண்டிய நிலை இதற்கு முன்னாலே இருந்த சட்டத்தில் இருந்தது. அதை இப்போது நாம் நீக்கியிருக்கிறோம்.

இந்த மசோதாவை நாம் கொண்டுவந்து penal provisions வைத்திருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. எந்தக் குற்றத்தையும் cognizable offence ஆக்க இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். குற்றம் செய்வது கடுமையாக தண்டிக்கப்படவேண்டும். அது தவிர நாம் அவர்களுக்கு அப்பேற்பட்ட குற்றங்களை செய்கின்றவர்களுக்குக் கொடுக்கின்ற தண்டனை அதிகமாக இருந்தாலும் உண்மையிலே அது வரவேற்கக் கூடியது.

அது தவிர நாம் எந்தச் சூழ்நிலையிலே இந்த ரிப்போர்ட்டுகளை, காம்பிடன்ட் அத்தாரிடியிடம் கொடுக்கக்கூடிய நிலையில் அரசுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை, ரெட்டேப்பிசத்தைக் குறைத்து தடை செய்திருக்கிறார்கள். அது தவிர, இங்கே நாம் பல்வேறு அதிகாரங்களை பிரிவு 31-ன் கீழ் காம்பிடன்ட் அத்தாரிட்டிக்கு வழங்கி இருக்கிறோம். அந்த அதிகாரங்களை அவர்கள் பெற வேண்டிய நிலையில் அந்த தஸ்தாவேஜுகளையும், அபிடவிட்டுகளையும் அவர்கள் இன்னும் பெறக்கூடிய நிலையில் பெற்றுவிட்டு தீர்ப்பதற்கு இது உதவியாக இருக்கிறது. நாம் நீதிமன்றத்திற்குச் சென்று இதுபோன்ற வழக்குகளைத் தொடங்குவதற்குத் தடை விதித்திருக்கிறோம். அத்தகைய தடையை வைத்திருப்பது இந்தச் சட்டத்தின் ஒவ்வொரு விதியையும் தடுக்கவல்லது அல்லது நீக்கவல்லது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நில உச்சவரம்புச் சட்டம் இருந்த காலத்தில் சென்னையில் அவதிப்பட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு இதை வரவேற்கிறார்கள். இதற்கு முன்னாலே கட்டட வேலைகள் தடைப்பட்டிருந்தன. அதனால் பில்டிங் இன்டஸ்ட்ரிஸ்கள் பாதிக்கப்பட்டிருந்தன. இதற்கு முன்னாலே யாராக இருந்தாலும் ஒரு ரிஜிஸ்ட்ரேஷன்—ஒரு ப்ராப்பர்ட்டியை வாங்குவதற்கோ, விற்பதற்கோ—செய்ய வேண்டுமானால் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களுக்கு 5 அல்லது 6 மாதங்கள் அலைந்து ஆகவேண்டி இருந்தது. அதற்குப் பின்னாலும் ஒரு சிலர் தான் அதுவும் சில விதிவிலக்குகளுடன் உத்தரவுகளைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இப்போது யாராக இருந்தாலும் இந்த ரிஜிஸ்ட்ரேஷன் தடைப்படாமல் விற்கலாம், வாங்கலாம் என்ற அளவில் சென்னை நகரிலே இருப்பவர்கள் பலர் நன்மை அடைந்திருக்கிறார்கள். சென்னை நகரிலே வசிக்கின்ற அனைவருக்கும் இப்போது எந்த ப்ராப்பர்ட்டியையும் வாங்கவும் விற்கவும் மார்ட்கேஜ் செய்யவும் அவர்களுக்கு உதவியாக இருக்கிறது.

ஆனால் இப்போது விதிகளை எல்லாம் நாம் ஃப்ரேம் செய்யும்போது உண்மையிலேயே ஒன்றை மறந்து விட்டோம். ப்ராப்பர்ட்டிகளில் ஏதாவது ஒன்றை நாம் அடமானம் செய்திருப்போமேயானால் அதை மீண்டும் பெறுவதற்கு விதிகள் இல்லை. காரணம், யாரிடமாவது நில உச்சவரம்புக்கு அதிகமாக நிலம் இருந்தால் விதிகளைப் பயன்படுத்தி அரசே கைப்பற்றுகிறது. அரசுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. அந்த நிலத்தை வைத்திருப்பவர்கள் யாரிடமாவது ஒரு கடனை வாங்கி இருந்தால் ப்ராமிசரி நோட் எழுதிக்கொடுத்துக் கடன் வாங்கி இருந்தால் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படாமல் அரசுக்குத்தான் முதலிடம் அளிக்கப்பட்டது. அவர்கள் உண்மையிலே கடன் கொடுத்ததற்கான ஒரு கொல்லாட்டிரல் செக்யூரிட்டி பெறும் வகையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இது போன்ற சிக்கலை எல்லாம் தீர்ப்பதற்கு உடனே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 1976 ஆம் ஆண்டிலே ஒரு சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் என்னவென்று சொன்னால் நகரத்தில் இருக்கக்கூடிய காலி நிலங்களைக்

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 ஏப்ரல் 3

கையகப்படுத்தி பொது காரியங்களுக்குப் பயன்படுத்திக்கொள்வது என்பது தான் உண்மையான நோக்கமாகும். ஆனால் இப்போது கொண்டுவரப்படக்கூடிய இந்த மசோதா ஏற்கனவே இருக்கக் கூடிய சட்டத்தில் எது எது இருக்கின்றதோ அதை எல்லாம் கூடக் குறைத்து ஒரு சென்ட் நிலம் கூட அல்லது அதில் ஒரு ஸ்கொயர் மீட்டர் கூட வராத அளவுக்கு இந்தச் சட்டம் வழி செய்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து. ஏற்கனவே ஒரு சட்டம் இருக்கும்போது அதை நிறைவேற்றுமல் இதை ஏன் கொண்டுவருகிறுர்கள் என்றால் அதற்குக் காரணம் கூறப்படுகிறது. ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் என்ற தலைப்பில் சொல்லப்படுவது—

"Certain provisions of the Act tend to cause hardship to the public."

அது என்னவென்று விளக்கப்படவில்லை. பொது மக்களுக்குக் கஷ்டத்தைத் தரக்கூடிய சில ப்ரொவிஷன்ஸ் என்ன என்பது தெரியவில்லை. அது மட்டு மல்ல.

"This has given rise to much criticism both in the Press"

பத்திரிகைகளிலே இதைப்பற்றி விமரிசித்து எழுதப்படுவது ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. நேற்றையதினம் கூட தினமணி பத்திரிகையில் தலையங்கம் வந்தது. அப்படிப்பட்ட க்ரிட்டிசிஸம்தானு என்பதும் தெரிய வேண்டும்.

அது மட்டுமல்லாமல் டைரக்ட் ரெப்ரசென்டேஷன் கவர்ன் மென்ட்டுக்கு வந்திருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இந்தக் காரணங்களால்தான் இந்த மசோதா கொண்டுவர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

ஆனால் எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறேமோ அந்த நோக்கமே நிறைவேறுத அளவுக்கு இந்த மசோதாவினுடைய செக்ஷன் 5 இருக்கின்றது, செக்ஷன் 5-ல் இருக்கக்கூடிய உப பகுதிகளிலே எல்லாம் பார்த்தால் ஏற்கனவே 1976-ல் இருந்த சட்டத்திலே இருப்பது எல்லாம் மாற்றப்படுகிறது. ஒரு குடும்பம் என்று சொன்னுல் ஒரு தனி நபருக்கு 500 ஸ்கொயர் மீட்டர் என்று ஏற்கனவே இருந்தது.

1978 ஏப்ரல் 3] [திரு. சி. கோவிந்தராசன்]

இப்போது ஒரு குடும்பம் என்ருல் நான்கு பேர்கள் வரை இருக்கக்கூடிய குடும்பத்திற்கு 2,000 ஸ்கொயர் மீட்டர், அதாவது பத்து கிரவுண்ட்ஸ் வரை வைத்துக் கொள்ளலாம். இதைப்பற்றி அதிகமாக விளக்க எனக்கு நேரம் இல்லை. அடுத்தபடியாக, தொழில் நிறுவனங்கள் என்றிருக் கிறது. தொழில் நிறுவனங்கள் என்று சொல்லும்போது—நான் ஆரம்பத்தில் படிக்கும்போது நினைத்தேன், ஏதோ பெரிய தொழிற்சாலைகளாக இருக்கும் என்று.

ஷெட்யூல் 3-ஐ எடுத்துப் பார்த்தால் தொழில்கள் என்ருல் என்னென்ன என்று குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்த்தால். Manufacture of milk powder, ice cream powder, slaughter house, கசாப்புக் கடை, காப்பிக்கொட்டை வறுப்பது, அதை அரைப்பது இவை எல்லாம் தொழில் நிறுவனங்கள் என்று சொல்லப்பட்டு அந்தத் தொழில் நிறுவனங்களுக்கு அவர்கள் 2,000 ஸ்கொயர் மீட்டர் வரை (அந்த இடங்கள் அவற்றைக் கட்டுவதற்காக அல்ல, உறுப்பினர்கள் குழப்பிக் கொள்ளக் கூடாது, காலியிடத்தைப் பற்றிச் சொல்லப்படுகிறது) பத்து கிரவுண்ட்ஸ் வரை காலியிடம் இருந்தால் அதற்கு விதிவிலக்கு. செக்ஷன் 3 (ஓ) நகர்ப்புற விவசாய நிலம் பற்றிக் கூறுகிறது. விவசாயத்திற்கு நிலம் வைத்திருப்பதென்ருல் அதில் கை வைக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

விவசாய நிலம் என்ருல் இப்போது நகர அமைப்பிற்குள் இல்லை. விவசாய நிலம் என்பதற்கு ஒரு வியாக்கியானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அக்ரிகல்ச்சர் என்று சொன்னுல்

"Agriculture" includes horticulture, but does not include—(i) raising of grass, (ii) dairy farming, (iii) poultry farming.........

என்று சொல்லப்பட்டிருக்கிறது. செடி வகைகள் போட்டால் போதும். முக்கிய தானியங்களைப் பயிர் செய்யக்கூடிய நிலமாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

அதோடு கூட இப்போது எல்லையும் அதாவது விஸ்தீரணமும் குறைக்கப்பட்டிருக்கிறது. எப்படி குறைக்கப்பட்டிருக்கிறது என்ருல், 1,400 ஸ்கொயர் கிலோ மீட்டர் என்பதை 575 ஸ்கொயர்

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 ஏப்ரல் 3

கிலோ மீட்டர் என்று குறுக்கிட்டு, ஒரு குடும்பத்திற்கு பத்து கிரவுண்ட்ஸ் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டு, இன்டஸ்ட்ரியல் அண்டர்டேக்கிங்ஸ் என்று காப்பிக்கொட்டை வறுப்பது வரை வைத்து அதற்கும் பத்து கிரவுண்ட்ஸ் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டு, விவசாயம் என்ருல் செடி போட்டால் போதும்—ஹார்ட்டிகல்ச்சர் என்றிருந்தால் போதும்—என்று சொல்லி விட்டு அதற்கும் விதிவிலக்கு அளித்து விட்டு, எல்லேயையும் 575 என்று குறுக்கிவிட்டு மிச்ச காலி நிலம் என்ருல் நான் கேட்கிறேன் மிச்ச நிலம் எங்கிருந்து கிடைக்கும்? ஏற்கனவே உள்ள சட்டத்தை 'லிபரலேஸ்' செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

இந்த 'லிபரலேசேஷன்' யாருக்காகச் செய்யப்படுகிறது என்று தெரிய வேண்டும். நான் அதற்குள்ளே போகவில்லே. க்ரூப் ஹௌஸிங் என்று சொல்லி, ப்ளாட்டாக பிரித்து ஹௌஸிங்-காகக் கொடுக்கிருேம் என்று சொல்கிற நபர்கள் ஏராளமான காலியிடங்களே வைத்திருக்கிருர்கள். அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவா இந்த லிபரலேசேஷன்? இது ஏற்கனவே உள்ள சட்டத்திற்கான சட்டத்திருத்தம் அல்ல, புது மசோதா வாகும். காலி நிலம் ஒரு சென்ட் கூட, ஒரு ஸ்கொயர் மீட்டர் கூட கிடைக்காத அளவிற்கு, இந்த மசோதா வழி செய்கிறது. காலியிடங்களே எடுக்க வேண்டும், அவற்றை பொதுக் காரியங் களுக்கு பயன்படுத்த வேண்டும் என்ற கொள்கை இந்த மசோதாவால் நிறைவேருது என்பதால், நாங்கள் இதை ஆதரிக்க முடியவில்லே. இந்த மசோதாவை அவசியம் கொண்டு வந்துதாளுக வேண்டும் என்ருல், பத்திரிகைகளில் க்ரிட்டிசிசம் வருகிறது என்ருல், தூது கோஷ்டிகள் வந்து நிர்ப்பந்தம் கொடுக் கிருர்கள் என்ருல், சில ஷேத்துக்கள் பாதிக்கப்படுகின்றன என்ருல் இதை நல்லமுறையில் ஆராய்ந்து பார்க்க இதை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன், அதை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 ஏப்ரல் 3] [திரு. சி. கோவிந்தராசன்]

[பிற்பகல் 12.30]

அத்துடன் நகர்ப்புற காலி நில உச்சவரம்பு சட்டம் கொண்டு வந்து இருப்பதுபோல், நகர்ப்புற சொத்துக்களுக்கு உச்சவரம்புச் சட்டமும் கொண்டு வந்தால் நன்ருக இருக்கும். அப்போதுதான் எந்த நோக்கத்தோடு காலி நிலங்களுக்கு உச்சவரம்புச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று கருதுகிருேமோ அந்த நோக்கம் இந்தச் சட்டத்தின் மூலம் நிறைவேறும் என்று நினைக்கிறேன்.

நகரத்தில் 15 வீடுகள், 20 வீடுகள், அரண்மனே போல பல வீடுகளே வைத்திருக்கின்ருர்கள். இவைகளுக்கு எல்லாம் உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்தால் நன்ருக இருக்கும். அப்படிப் பட்ட ஒரு சட்டத்தை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இது தேவையில்லே. எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டம் இயற்றப் பட்டதோ அது இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் தவிடுபொடி யாகிறது.

1976-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்தை திருத்துகின்ற முறையில், இதைக் கொண்டு வந்திருப்பதில், லிபரலேஸேஷன் என்ற முறையில் பல விலக்குகள் கொடுக்கப்பட்டிருப்பதால், நிச்சயமாக ஒரு ஸ்கொயர் மீட்டர் கூட அரசாங்கத்திற்கு எடுக்க முடியாது என்று கூறி இதை நான் எதிர்க்கிறேன் என்பதை தெரி வித்துக் கொள்கிறேன். இதைப்பற்றி பரிசீலிக்கும்போது, பல் வேறு கருத்துக்கள் உருவாகிறது. அவற்றையெல்லாம் நாம் ஆர அமர இருந்து ஆலோசிக்க வேண்டும். நாளேய தினமே உடனடி யாக இதை நிறைவேற்ற வேண்டும் என்பதில்லே. இதை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விட்டு அங்கு நன்ருக ஆலோசித்து முடிவு எடுத்து இதைக் கொண்டு வருவது நல்லது என்று கருதுகிறேன். ஏற்கனவே, 76-ல் கொண்டு வரப்பட்ட சட்டத்தை அமல்படுத்து வதில் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி பார்க்காமல் புதிதாக இப்படி ஒரு சட்டத்தை கொண்டு வருவது சரியல்ல என்பதை தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலேவர் அவர்களே, நகர்ப்புற உச்ச வரம்பு சட்டத்தை முறைப்படுத்துவது சம்பந்தமான திருத்தச்

சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இதன் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டம் 1976 ஆம் ஆண்டு ஆளுநர் அவர்கள் ஆட்சி காலத்தில், அருமைத்தலைவி இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டது. அதற்கு இன்றைய தினம் திருத்தச்சட்டம் என்று ஒரு சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட திருத்தச் சட்டம் கொண்டு வருவதைவிட ஏற்கனவே இருந்த சட்டத்தை ரிப்பீல் செய்து விட்டு, வேறு ஏதாவது நோக்கம் இருக்குமானால், அதற்காக புதிதாக ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கலாம். எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டம் முன்னால் கொண்டு வரப்பட்டதோ, அந்த நோக்கத்தை, அந்தக் கருத்தை தூக்கி எறிந்துவிட்டு, அதை குப்பையில் போட்டு விட்டு, ஏதோ குறிப்பிட்ட சில காரணங்களுக்காக, இன்னும் சொல்லப்போனால் யாரோ ஒருசிலர் மனுக் கொடுத்தார்கள், ஏதோ பத்திரிகையில் விமர்சனம் செய்யப் பட்டிருந்தது என்பதற்காக இப்போது சட்டம் மாற்றப்பட்டிருக் கிறது என்று சொல்லுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், 1976-வது ஆண்டு போடப்பட்ட சட்டத்தில் அதை அமல் நடத்துவதில் பல்வேறு சிரமங்கள் இருக்கலாம். அதற்காக ஒட்டு மொத்தமாக அகற்றிவிட்டு, புதியதொரு சட்டத்தை, கொண்டு வந்திருக்கிறார்கள். புதியதொரு சமுதாயத்தை உருவாக்கு வதற்கும், ஒரு சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவதற்கும் ஜனநாயக சோஷலிஸ நாட்டை உருவாக்கவும், இப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு சோஷலிஸ நோக்கத்திற்குப் பதிலாக—இப்போது வேறொரு சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு முன்பு சொன்னார்கள், புரட்சிகரமான சட்டங்களை கொண்டு வருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இப்போது அதற்குப் பதிலாக கேப்பிட்டல் சொசைட்டியை நோக்கிச் செல்லக் கூடிய வகையில், பெரிய முதலாளிகளுக்கு ஆதரவாக, இச்சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் வன்மையாக கண்டிப்பதற்கு காரணம், 32 லட்சம் மக்கள் வாழக்கூடிய சென்னை நகரத்தில், இந்தச் சட்டத்தால் சுமார் 2,000,

3,000 பேர்கள் பாதிக்கப்படலாம், அதே நேரத்தில் பாதிக்கப் பட்டவர்கள் வழக்காடுமன்றத்தில் போய் இதை அமல் நடத்தாமல் இருப்பதற்கு வேண்டிய முறையில் இப்போது இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் போதுமான அளவு காம்பன்சேஷன் பெற்றுக்கொள்வதற்கும், இப்போது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒட்டு மொத்தமாக முன்னால் இருந்தச் சட்டத்தையே திருத்துகின்ற அளவில் கொண்டு வந்திருக்கின்ற இச்சட்டத்தினால் எந்தவித நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டம் தற்பொழுது, 42-வது அரசியல் சட்டத் திருத்தச் சட்டத்தின் மூலமாக வழக்காடு மன்றத்தில் 'ஸ்டே' வாங்கி வழக்காடு மன்றத்தின் மூலமாக அமல்நடத்தலாம் என்றிருந்தாலும் நிச்சயமாக இதன் நோக்கம் நிறைவேறப் போவதில்லை. அதோடு மட்டுமல்ல. இன்றையத்தினம் குறிப்பாக விவசாயத் துறைக்கு என்று நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நகர மெட்ரோபாலிடன் என்று சொல்லக்கூடிய இந்த அமைப்பிலே விவசாய நிலங்கள், பல்வேறு நிலங்கள் என்று பிரித்திருக்கிறார்கள். நிச்சயமாக நான் சொல்ல முடியும். பல்வேறு புதிய நபர்கள் நாங்கள் விவசாயத்திலே ஈடுபடப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டு, பெரிய, பெரிய இடங்களையெல்லாம் தங்களுக்கு அதற்காக வேண்டுமென்று சொல்லி, சுற்றி வளைத்துக் கொள்ளக் கூடிய அபாயகரமான நிலைமைகள் எல்லாம் ஏற்படப் போகின்றது.

சட்டத்திலேயே இப்படி ஒரு முடிவு வந்தபிறகு, வசதிபடைத்த பணக்காரர்கள் பல ஏக்கர் நிலங்களை இப்படி விற்பனை செய்து, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களை சம்பாதிப் பதற்குத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதன்மூலமாக நிலங்களை எடுத்துக்கொண்டு, ஏழை எளிய மக்களுக்கு வசதிகள் செய்யலாம் என்பதற்குப் பதில், எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ, அந்த நிலைமை இன்றையத் தினம் மீறப்பட்டிருக்கிறது. இதனால் பணக்காரர்களே அதிகமான வசதிகளைப் பெற முடியும்.

அதே நேரத்தில், அவர்கள் நிலத்தை ஏற்றுக்கொண்டு அவர் களுக்கு சரியான, நியாயமான ரீதியிலே அவர்களுக்கு காம்பன் சேஷன் கொடுக்கலாம் என்ற முறையில், அவர்களுக்கு அதிகத்

தொகை கொடுப்பதற்கான வழிவகைகள் தான் இந்தச் சட்டத்திலே செய்யப்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்றால், கடந்த காலத்தில் இந்த மூலச் சட்டத்தில் ஒரு நபருக்கு, குடும்பத்திற்கு 500 சதுர மீட்டர் என்று இருந்தது, இப்போது 2,000 சதுர மீட்டர் என்கின்ற நிலைமைக்கு வந்திருக்கிறது.

அது மட்டுமல்ல. எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ, அதற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இப்படி பல வசதிகள், சவுகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதால், ஏழைகளுக்கு நிச்சயமாக ஒன்றும் கிடைக்கப்போவதில்லை. ஆகவே, ஏழைகளின் மேம்பாட்டிற்காக இத்தகைய சட்டம் கொண்டுவரப்படுகின்றது என்பதற்குப் பதிலாக, இப்போது இந்தச் சட்டத்தை தூக்கி எறிந்து விடுங்கள். அல்லது சட்டத்தை திருத்துவதற்கு வேறு வகையிலே இதை ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விட்டு, பிறகு இந்தச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள். அவசரக் கோலத்திலே, அள்ளித் தெளித்தாற்போல், இப்படிச் செய்யப் படுமானால், இது எந்த நோக்கத்திற்காக கொண்டு வரப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றதோ, அது நிச்சயமாக நிறைவேறாது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, இன்றையத்தினம் பொது நிறுவனங்கள் என்று சொல்லிக்கொண்டு ஒருசில இடங்களில் அதிகமாக காலியாக உள்ள இடங்களை நிச்சயமாக அவர்கள் நல்லமுறையிலே பெறுவதற்கு, வசதி படைத்தவர்களுக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள், பெரிய, பெரிய தொழில் அதிபர்கள், அந்தக் காலி இடங்கள் எல்லாம் தங்களுக்கு வேண்டுமென்று சொல்லிக்கொண்டு மேலும் பெரிய பணக்காரர்களாவதற்கு இந்த சட்டத்திலே நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக, குரூப் அவுசிங் சிஸ்டம் என்று சொல்லிக் கொண்டு, இந்த குரூப் வீடுகள் என்று சொல்லக்கூடிய அளவிலே ஐந்து அல்லது பத்து அடுக்கு மாடி வீடுகள் கட்டுவதற்கு இந்தச் சட்டத்திலே வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக, பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாவதற்கு, வசதியாக, நியாயமான முறையில், மோசடி செய்கின்றார்கள் என்ற நிலைமைக்கு இல்லாமல், இப்படிப்பட்ட இடங்களை யெல்லாம் வாங்கிப் பயன்பெறுவதற்கு இதன்மூலம் வழி செய்யப் பட்டிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, பிளாட்டு போட்டு நிலத்தை விற்பனை செய்யப் போவதாகச் சிலர் சொல்கிறார்கள். அப்படி நிலத்தை பிளாட்டு போட்டு விற்றால், அதை நிச்சயமாகப் பணக்காரர்கள்தான் வாங்கப் போகிறார்கள். ஏழைகளால் அந்த நிலங்களை வாங்க முடியுமா? நிச்சயமாக சாதாரண மக்களால் அந்த நிலங்களை வாங்க முடியாது. ஆகவே, இதிலும் வசதிபடைத்தவர்கள், பணக் காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றது.

அதோடு, இத்தகைய காலி இடங்களைப் பொறுத்தமட்டில், அரசாங்கம் தனக்குத் தேவை என்று சொல்லி வாங்கிக் கொள்ளலாம். இதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி குறிப்பிட்ட சில இடங்களை பணக்காரர்கள் விற்கின்றபோது, அரசாங்க அதிகாரிகளின் மூலம் பல்வேறு வசதி படைத்தவர்கள் இந்த நிலங்களுக்கு பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை மார்க்கெட்டு ரேட்டிற்கும் அதிகமாகப் பெறுவதற்கான வாய்ப்பு இதிலே செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், இந்தச் சட்டத்தினால் நிச்சயமாக ஏழை எளிய மக்கள் பயன்பெறப் போவதில்லை. எனவே, அரசாங்கம் இதை ஒரு முற்போக்கான சட்டம் என்று சொல்லிக்கொண்டிருப்பது தவறான எண்ணமாகும்.

இப்படி ஒரு தவறான சட்டத்தை உருவாக்கியுள்ள காரணத்தால், சென்னை மாநகரம் மட்டுமல்ல. பல நகரங்களிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் இந்தச் சட்டத்தினால் சங்கடப் படப்போகிறார்கள். இந்திரா காந்தி அம்மையார் முன்னால் கொண்டுவந்த சட்டத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, இந்தப் புதிய சட்டத்தை வேறு நோக்கத்தோடு கொண்டுவந்து நிறைவேற்ற இருப்பது பாமர மக்களுக்கு நலம் கொடுக்கும் வாய்ப்பில்லை, பணக்காரர்களுக்குத் தான் இந்தச் சட்டம் வாய்ப்பாக இருக்கின்றது என்று கூறிக்கொண்டு, ஒன்று இதை மறுபரிசீலனை செய்யவேண்டும், இல்லை ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, அதிலே எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து பரிசீலனை செய்வது நல்லதாக இருக்கும். அந்த முறையிலே இந்த மசோதாவை நிறைவேற்றினால் நல்லதாக இருக்கும். ஏழை-எளிய மக்களுக்கு உதவ வேண்டுமென்ற ஒரு நோக்கத்தோடு இதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்

(பிற்பகல் 12-40)

திரு. கே. பண்ணை சேதுராம் : பாயின்ட் ஆப் ஆர்டர் இந்தச் சட்டத்தில் சந்து பொந்துகள் நிறைய இருக்கின்றன. அதனால், இந்தச் சட்டம் ஸ்தம்பித்து விடும் என்ற அர்த்தத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அவர் பேசும்போது எந்தெந்தக் கருத்துக்களை, பிரிவுகளை மாற்றவேண்டுமென்பதற்கான கருத்துக்களையோ, காரணங்களையோ சொல்லவில்லை. இந்திரா காந்தி கொண்டு வந்த சட்டத்தை மாற்றுகிறார்கள் என்று மறைமுகமாகச் சொல்வது எந்த வகையில் உகந்தது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று கேட்டிருக்கலாம். நேரம் இல்லாதபோது அந்த உறுப்பினர் மீண்டும் எழுந்து பேசுவதற்குத் தாண்டிவிடுகிறார்கள் என்று தெரிகிறது.

திரு. செ. சிவசாமி : எங்கள் கட்சித் தலைவர் அழகர்சாமி அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். பேச சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இருக்கையில் இல்லை.

*** திரு. க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம், உச்ச வரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல் ஆகிய நோக்கங்களோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவுக்கு முன்னால் ஏற்கனவே ஒரு சட்டம் தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பொது மக்களால் பெருமளவுக்கு எதிர்க்கப்பட்ட நிலைமை ஏற்பட்டதன் காரணமாக இந்தச் சட்டமுன்வடிவை விரிவாகப் பரிசீலித்து, தேவைப்படுமானால் கூட்டாய்வுக் குழுவுக்கு அனுப்பி இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக ஏற்கனவே பொது மக்களுக்கு ஏற்பட்ட இடையூறைக் களையவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

பொதுவாகவே, முற்போக்குச் சட்டம் என்று வாயால் சொல்லிவிட்டு அந்தச் சட்டம் எவ்வளவு சிக்கலுள்ள, பயன் இல்லாத சட்டமாக இருந்தாலும் கூட, அதிலே ஒரு முற்போக்குக் கொள்கை இருக்கிறது என்ற தவறான எண்ணத்தை மக்களிடத்தில் உண்டாக்க நம்மில் பல பேர் பல நேரங்களில் முயற்சிக்கிறோம்.

நில உச்ச வரம்பு என்பது—கிராமங்களிலே உள்ள விவசாய நிலத்திற்கு உச்ச வரம்பு, வேளாண்மை செய்யப்படும் நிலத்திற்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்று தொடங்கியபோது அதிலே ஒரு ஆழமான கருத்து, உழுகின்றவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் பிறந்த கருத்து, வெற்றி பெற வேண்டுமென்பதற்காக விவசாய நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுகிற கொள்கை பல்லாண்டு காலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அவ்வப்போது உரிய அளவுக்கு சீர்திருத்தம் செய்யப்பட்டு, செம்மைப் படுத்தப்பட்டு வருகிறது.

நகர்ப்புறத்தில் நில உச்சவரம்பு என்பது முதலில் தொடங்குகிற போது ஏராளமான நிலத்தைக் கைப்பற்றி மக்களுக்கு விநியோகிக்கலாம் என்ற எண்ணத்தில் துவங்கிய கொள்கை அல்ல, தொடங்குகிறபோது நகர்ப்புறத்தில் பலருக்கு சொத்து ஏராளமாக இருக்கிறது என்பதனால் கிராமப் புறத்தில் ஏராளமான நிலத்தைப் பெற்றிருந்தவர்கள், விவசாய நிலத்தைச் சொத்தாகப் பெற்றிருந்தவர்கள் இழந்துவிட்ட நிலையில், இழக்க நேரிட்ட நிலையில், நகர்ப்புறத்தில் ஏராளமான வீடுகளை, பல லட்சக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சொத்தாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்; அதற்கு எல்லைக்கோடே வருவதில்லை; எவ்வளவு வேண்டுமானாலும் வளரலாம், வளர வாய்ப்பு இருக்கிறது என்ற எண்ணத்தில் நகர்ப்புற சொத்து உச்ச வரம்பு கட்டப்பட வேண்டுமென்ற கருத்துப் பிறந்தது.

ஆனால், அதற்குச் சில இடையூறுகள் இருந்தன—அப்படி ஒரு சட்டம் நிறைவேறுவது கடினம். நிறைவேறினாலும் நிலைக்காது. என்றோ--இன்னும் சொல்லப்போனால் அப்படி வீடுகள் ஒருவருக்கு அதிகமாக சொந்தமாக இருக்கக்கூடாது, ஐந்து வீடுகளுக்கு மேல் இருக்கக்கூடாது, ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள வீடுகள் இருக்கக்கூடாது என்ற வரைமுறை வைத்து மிச்ச வீடுகளை எடுப்போமானால் அதை யாருக்கு ஒப்படைப்பது, என்ன விலையில் ஒப்படைப்பது, அந்தப் பெரிய பொறுப்பை அரசாங்கம் எப்படி நிறைவேற்ற முடியும் என்ற எண்ணமெல்லாம் ஏற்பட்டு அந்த எண்ண ஓட்டம் திரும்பி நகர்ப்புற நில உச்ச வரம்பாக உருவாக வேண்டுமென்ற கருத்து ஏற்பட்டு இந்தச் சட்டம் இன்றையதினம் வருகிற அளவுக்கு இடையில் சில சட்டங்களும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

[திரு. க. அன்பழகன்] [1978 ஏப்ரல் 3

இதிலே உண்மையான நோக்கம் எதுவாக இருக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன் என்றால்—மிகுந்த நிலம் எந்த இடத்தில் இருக்குமானாலும், ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் பரப்புள்ள நிலம் காலி நிலமாக எந்த இடத்தில் இருக்குமானாலும் அது யார் யாருக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, அதிலே யாருக்கேனும் தனிப்பட்ட அளவில் தனியாக நிலம் உரிமையாக்குவது அவசியமாக இருந்தால் அப்படிச் செய்து மிச்சமுள்ள நிலத்தை அந்த நிலையில் எடுத்துக்கொள்வது என்ற நோக்கந்தான் இருந்திருக்க முடியும். அதற்கேற்ப இச்சட்டம் வகுக்கப்பட்டிருக்குமானால் இதைவிடச் சிறப்பாக, பயனுடையதாக இருக்கும். டவுன் பிளானிங்—நகர் வரை படங்களைத் தீர்மானிக்கிற உரிமை அரசுக்கு இருக்கிறது. நகர அமைப்பை வரன்முறைப் படுத்துவதற்கு உரிமை இருக்கிறது.

ஒரு நகரத்திலே உள்ள நிலங்கள் யார் யாருக்குச் சொந்தம் என்ற விவரம் அரசாங்க இலாக்காவிலே, ரெவின்யூ இலாக்காவிலே இடம் பெற்றிருக்கிறது. எனவே, ஒரு இடத்திலே இரண்டு ஏக்கரா நிலம் காலியாக இருந்தால் அல்லது ஒரு ஏக்கரா நிலம் காலியாக இருந்தாலும், அது தனியாருக்குச் சொந்தமாக இருந்தாலும் அந்த நிலங்கள் இன்றுமுதல் அரசாங்கத்திற்குச் சொந்தமாகிறது, வேண்டுமானால் அவர்கள் சில வரன்முறைகளின்படி விண்ணப்பித்து, காரண காரியங்களைக் காட்டி உரிமை பெற்றுக் கொள்ளலாம், அந்த நிலத்தை அரசாங்கம் எடுக்கக்கூடாது என்பதற்கு காரணத்துடன் மறுப்பு எழுப்ப வேண்டுமென்ற முறையில் சட்டம் வந்திருந்தால் நகர்ப்புற நில உச்சவரம்பிற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேறுவது அப்பொழுது இன்னும் எளிதாக இருக்கும்.

ஆனால், இடையிலே வந்த குடியரசுத் தலைவர் ஆட்சியிலே இதற்கு முந்தைய சட்டம் பொதுமக்களுக்கு மிகப்பெரிய சிக்கலை, வேதனையை, தொல்லையை உண்டாக்கியது. இன்னும் சொல்லப் போனால், வீடு கட்டப்பட்டிருந்தாலும் அந்த வீட்டோடு சேர்த்து 500 ஸ்கொயர் மீட்டர்களுக்கு அதிகமான சுற்றளவு, பரப்பளவு நிலம் இருந்தால் அவர்களுக்கெல்லாம்கூட அந்த நில உச்சவரம்புச் சட்டத்தினால் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்க வேண்டிய வருந்தத்தக்க நிலைமை இருந்தது.

1978 ஏப்ரல் 3] [திரு. க. அன்பழகன்]

இன்னும் சொல்லப்போனால், ஒரு வீட்டு மனையை ஏற்கனவே வீட்டு வசதித் திட்டத்தினாலேயோ அல்லது வீட்டு வசதி வாரியத்தினாலேயோ அல்லது மாநகராட்சி மன்றத்தினாலேயோ அடிமனைக்கட்டுகள், 60 வீடுகள், 80 வீடுகள் என்று கட்டுவதற்கு என முறையாக மனைக்கட்டுகள் ஆக்கப்பட்டிருந்தாலும் அதிலே 15 சதுர அடி, 20 சதுர அடி என்று ஏற்கனவே வந்த உச்சவரம்பிற்கு அதிகமாக இருந்தால் அவர்களெல்லாம்கூட அந்தத் துறைக்குத் தெரிவித்து, அதற்குப்பிறகு அவர்களுடைய அனுமதியைப் பெற வேண்டிய அளவிற்கு உச்சவரம்பு கொண்டு வரப்பட்டது. அவைகளின் காரணமாகத்தான் மக்களினுடைய பெரிய எதிர்ப்பு அதற்கு ஏற்பட்டது. ஆனால் இன்றையதினம் அந்தச் சட்டத்தில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பெற்ற முறையில் இதில் மக்கள் விரும்பத் தக்க மாற்றங்கள், இன்னும் சொல்லப் போனால் ஏற்றுக்கொள்ளத்தக்க மாற்றங்கள் பல வந்திருக்கின்றன.

ஆனால் இங்கே பேசிய கோவிந்தராசன் அவர்கள் சொன்னதைப்போல, சில பிரச்னைகளிலே அடிப்படையிலேயே நமக்குச் சந்தேகம் வரும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது. தொழில் கூடங்களைச் சுற்றிக் காலி நிலங்கள் இருக்கலாம் என்று அனுமதிப்பதற்காக எத்தனை வகையான தொழில்களுக்கு அந்த வாய்ப்பு தரப்படுகிறது என்ற ஷெட்யூலின் பட்டியல் தரப்பட்டுள்ளது. இடிமயிர் தொழிற்சாலை, ஐஸ் ஃபேக்டரி தொழிற்சாலை போன்றவைகள் போன்றவை அந்தப் பட்டியலில் இடம் பெற்று இருப்பதைப் பார்க்கும்பொழுது, அப்படிப்பட்ட இடத்தில் எவ்வளவு காலிமனைகள் இருக்கலாம் என்ற கருத்து தோன்றுகின்றபொழுது ஒரு சிறு ஐயப்பாடு தோன்றுகிறது. யாரிடத்திலேனும் அதிகமான மனைக்கட்டுகள் இருந்தால், ஏதாவது ஒரு சிறு தொழில் அவர்களுக்கு இருந்தால் அதை வைத்துக்கொண்டு காலி இடத்தைத் தங்களுக்குச் சாதகமாக ஆக்கி வைத்துக்கொள்ள முடியும்; அப்படி வைத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு வாய்ப்பளிக்கக் கூடியதாக இவ்வளவு விரிவான அளவில் இந்தத் தொழில்களின் பட்டியல் இருக்கிறதோ என்ற சந்தேகம் வரத்தான் செய்கிறது.

இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், ஒரே தொழில் பட்டியல் இருந்தாலும்கூட, தொழிலுக்கு ஏற்ற அளவில், உதாரணமாக ஒரு மோட்டார் கம்பெனி நடைபெறுகிறது என்றால்

அதன் கேபிடல் எவ்வளவு, அந்த கேபிடலுக்கு ஏற்ப எவ்வளவு நிலம் இருக்கலாம் அல்லது தொழிற்சாலையின் கட்டடம் எவ்வளவு, அதற்கேற்ப எவ்வளவு நிலம் இருக்கலாம் என்று பார்க்க வேண்டும். தொழிற்சாலையின் கட்டடம் ஏறக்குறைய அரை கிரவுண்ட் அளவில், அதாவது 1,200 சதுர அடி அளவில் இருந்தால், இதைச் சுற்றி எவ்வளவு மனைக்கட்டு அல்லது எவ்வளவு பரப்பளவு காலி நிலம் இருக்கலாம் என்ற விகிதாச்சாரம் வைத்தால் தவிர, பொதுவாக எந்த நிலையில் இருந்தாலும் அதைச் சுற்றி எவ்வளவு காலி மனைகளும் இருக்கலாம் என்று மிகப்பெரிய அளவிற்கு உரிமை தரப்படுவதால், ஒருவேளை இந்தச் சட்டம் பயன்படாமல் போய்விடக்கூடிய அளவிற்குச் சிக்கல் ஏற்படக்கூடும்.

ஏற்கனவே அலுமினியம் தொழிற்சாலை, எவர்சில்வர் தொழிற்சாலை என்று பெயர் போட்டுக்கொண்டு, அப்படி ஒரு போர்டைப் போட்டுக் கொண்டு இருப்பவர்கள் இருக்கிறார்கள். எவர்சில்வர் தொழிற்சாலை என்று போர்டு போட்டுக்கொண்டு ஆனால் எவர் சில்வர் பாத்திரங்கள் தயாரிக்கப்படாமல் இருக்கின்ற இடங்களில், ஏற்கனவே தொழிற்சாலை நடைபெறுகிறது என்று சொல்லி, இப்பொழுது காலி நிலத்தைத் தங்கள் பெயரில் வைத்துக் கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டால் நமக்கு ஏமாற்றம் வரத்தான் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பெரிய நகரங்களிலேயெல்லாம்கூட என்னென்ன நிலைமைகள் அங்குள்ளன என்று பார்த்து அந்தந்த நிலைமைகளுக் கேற்ப, அந்தந்த சூழ்நிலைகளுக்கேற்ப, அங்கேயிருந்த நில உரிமை அமைப்பு முறைக்கேற்ப, நிலத்தை தனிப்பட்டவர்கள் தமது உடைமைகளாக ஆக்கி வைத்திருக்கின்ற நிலைமைகளுக்கேற்ப வகை ஒன்று, வகை இரண்டு, வகை மூன்று என்று பெரிய நகரங்களை வகைப்படுத்திவிட்டு நில உரிமை உச்சவரம்பு அளவை வேறு படுத்துகிறோம். எந்த அளவிற்கு என்றால், சென்னை நகரத்திலே 500 சதுர மீட்டர் என்று வருகின்ற அளவுக்கு கோவை நகரத்தில் அல்லது திருச்சி நகரத்தில் 1,500 சதுர மீட்டர் என்ற அளவும், திருநெல்வேலியில் 2,000 சதுர மீட்டர் என்ற அளவும் விகிதாச் சாரத்திலே வேறுபடும் அளவிற்கு ஒரு உரிமையை இந்தச் சட்டத்தின் மூலமாக நாம் ஏற்படுத்துகிறோம்.

[பிற்பகல் 12-50]

ஆனால் வரம்பு ஏற்படுத்துகிற நாம் சென்னை நகரத்திற் குள்ளேயே, சென்னை நகரத்தினுடைய மத்தியப் பகுதி, எப்படிப்பட்ட நெருக்கம் உடைய பகுதி என்பதைக் கவனிக்க வேண்டும். ஏற்கனவே சென்னை நகரத்தோடு இணைந்த புறநகர்ப் பகுதிகள் எப்படிப்பட்ட பகுதிகள்? இன்றைக்கு இந்த ஷெட்யூலில், சென்னை நகரத்தைச் சுற்றி இணைக்கப்படுகிற ஆலந்தூர், பல்லாவரம், இன்னும் சொல்லப்போனால் வண்டலூர் இன்னொரு பக்கம் திருவான்மியூருக்கு அப்பாலே இருக்கிற பகுதி, இன்னும் சொல்லப்போனால் ஆவடிக்கு அப்பாலே இருக்கிற பகுதிகள் எல்லாம் இணைக்கப்பட்டு, இந்த நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டத்திற்காகக் கட்டுப்படுகிறபொழுது, அதிலே ஒன்றுக் கொன்று உச்ச வரம்பு அளவில் வித்தியாசம் இருக்க வேண்டாமா என்பதை அமைச்சரவை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சென்னை நகரத்திலே ஜார்ஜ் டவுனிலே 10 கிரவுண்ட் வைத்து யாரும் வீடு கட்டவும் முடியாது, நிலமும் இருக்காது. அங்கு 1½ கிரவுண்டுக்குள்தான் கட்ட முடியும். வீடுகள் ஒன்றுக் கொன்று நெருக்கமாகக் கட்டப்பட்டுள்ள சூழ்நிலையிலே அங்கே 10 கிரவுண்டிலே கட்ட முடியாது. ஆனால், ஆலந்தூரிலே 5 கிரவுண்ட் சேர்ந்து ஒரு வீடு கட்டலாம், அல்லது 10 கிரவுண்ட் நிலத்தில் ஒரு வீடு கட்டலாம். அது அவ்வளவும் அக்ரிகல்ச்சுரல் லாண்டாக இருக்க முடியுமா என்றால், இருக்க முடியாது. அந்த நிலங்கள், விவசாயத்திற்குக் கொண்டுவரப் படாத நிலமாகவும், நீர் வளமற்றதாகவும் இருக்கக்கூடும். வேண்டுமென்றால், அவற்றை விவசாய நிலமாகச் செயல்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளலாம். போதுமான தண்ணீர் வசதி யில்லாமல், நிலம் விவசாய நிலமாவது கடினம்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், கோயம்புத்தூருக்கும் சென்னைக்கும், கோயம்புத்தூருக்கும் திருநெல்வேலிக்கும், அவரவர்கள் வைத்துக் கொள்ளக்கூடிய நில அளவில் வேற்றுமைகளை அனுமதிப்பது நியாயமாக இருக்கும்போது, சென்னைக்கும் ஆலந்தூருக்கும், சென்னைக்கும் அம்பத்தூருக்கும், சென்னை நகர மத்திய பகுதிக்கும், சென்னை நகரைத் தொடர்ந்து திருவான்மியூருக்கும் அப்பாலே இருக்கிற பகுதிக்கும் வேற்றுமை இருக்க வேண்டாமா என்பதை ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

மற்றொன்று நான் கூற விரும்புவது, இந்த நில உச்ச வரம்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது, ஒரு கொள்கையை நிலை நாட்டுவதாகக் காணப்பட்டாலும், ஒரு சமுதாய நலத்தை செயல்படுத்துவதாக இருந்தாலும், அதன் வரன்முறைகளை நடைமுறையிலே அமுல்படுத்தும்போது, சிக்கல்களை ஏற்படுத்துமோ என்றுதான் நான் ஐயுறுகிறேன். என்னுடைய ஐயம் தவறாக இருக்குமானால் மகிழ்ச்சி அடைவேன். இதை நடைமுறைப்படுத்தும்போது என்ன குறை ஏற்படும் என்று எண்ணிப் பார்க்கும்போது, நில உச்ச வரம்பு சட்டத்திலே மிச்சம் இருப்பதை அரசாங்கம் தனக்கு உரிமையானதாக அறிவித்து, அதற்குப் பிறகு தேவையான வகையிலே, மக்களுக்குப் பயன்படுத்துகிற வகையிலே, விலை ஏறாத வகையிலே, மக்களுக்கு அரசு தனது உரிமையாக்கிய நிலத்தை வழங்கும்போது, விலை ஏறும் நிலை ஏற்படாதா? என்பதைக் கவனிக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு வழங்குவதாக இருந்தாலும் சரி, நடுத்தர வீடுகள் கட்டுவோருக்கு வழங்குவதாக இருந்தாலும் சரி, மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே, விலை ஏறாமல் இருக்க ஒரு வாய்ப்பாக இருக்க வேண்டுமென்று அதற்காக அரசாங்கம் மிச்சமுள்ள நிலத்தைக் கையகப்படுத்துகிறது.

ஆனால் ஒரு உண்மையை நாம் எண்ணிப்பார்த்தால், அரசாங்கம் கையகப்படுத்துகின்ற இடங்களிலே நிலம் தானாகவே விலை ஏறுகிறது. இதை நான் சொல்வது, வீட்டு வசதி வாரியம் நிலத்தைக் கையகப்படுத்திய பின்னாலும், கையகப் படுத்தியதற்கான தொகை ஓரளவில் தீர்மானித்து வழங்கப் பட்டாலும் கூட, அதற்குப் பிறகும் கூட, வீட்டு வசதி வாரியம் தனது பொறுப்பிலே வைத்து, நிலத்தை வழங்கும்போது, 'ஓவர்ஹெட் சார்ஜஸ்' என்ற வகையில் ஆகிற செலவு அந்த மனைகளிலே விலையாக உயர்த்தப்பட்டுள்ளது. நிலம் வழங்கப் பட்ட ஐந்து, பத்து ஆண்டுகளுக்குப் பின்னாலே கூட, நிலத்தின் விலை உயர்த்தப்பட்டிருக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அந்த வகையிலே நிலத்தினுடைய விலையைக் கட்டுப்படுத்தி, ஏழை, எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, ஏறாத விலையில், நிலம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு முயற்சிகள் எடுத்தாலும், கையகப்படுத்தி ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, யாருக்காவது வழங்கும்போது, இரண்டு மடங்கு, மூன்று

மடங்கு விலை ஏறக்கூடிய நிலைமை ஏற்படும். அப்படி ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், கூடுமான வரையில் மிக எளிதான வரைமுறைகளைக் கையாள வேண்டும். உடனடியாகச் செயல் படுத்தும் சுருக்கமான முறையில் நிலத்தை வாங்குவது, விநியோகம் செய்வது என்ற முறைகள் இந்த நில உச்ச வரம்பு சட்டத்திலே கையாளப்பட வேண்டும். சட்டம் தெரிந்த நிபுணர்கள் வரையறுத்துக் காட்டி, அப்படி வரையறுத்துக் காட்டிய ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு குறிப்புகள், விளக்கங்கள் தந்தாலும் கூட, நிலத்தை எடுப்பது, விநியோகிப்பது இந்த இரண்டு முறைகள்— These two steps ஒரு அதிகாரி நிலத்தை எடுக்க உத்தரவு போட்டால், இன்னொரு அதிகாரி அல்லது அதே அதிகாரி விநியோகிக்க ஆறு மாதத்திலே, அல்லது ஓராண்டுக் காலத்திலே கேட்பவர்களுக்கு அல்லது யாருக்குத் தர வேண்டுமென்று அரசு விரும்புகிறதோ, அவர்களுக்கு ஆறு மாதத்தில் அல்லது ஓராண்டுக் காலத்திற்குள்ளாவது ஒரு நிலத்தை ஒப்படைக்கக்கூடிய நிலைமை இருந்தால் தவிர, நிலத்தை எடுப்பதற்கு ஆறு மாதம், அல்லது ஒரு வருடம், அல்லது ஒன்றரை வருடம், நிலத்தை எடுத்ததற்குப் பிறகு நில உடைமையாளர் அப்பீலுக்குப் போனால் மீண்டும் ஆறு மாத காலம், அதற்குப் பிறகு யாருக்குக் கொடுப்பது, எப்படி பங்கிடுவது என்று அதற்கு இரண்டு ஆண்டுக்காலம் என்று இப்படியே போகிற நிலை இருக்குமானால், 1978-லே தொடங்குகிற இந்த நல்ல நோக்கம் உள்ள காரியம், 1984-லே இந்த நிலம் வீடு கட்டிக்கொள்ள உயர்ந்த விலையில் கொடுக்கிற அளவுக்கு ஆகிவிடுமானால், சமுதாயத்திலே தானாக நடக்கிற விலை ஏறும் தவறான போக்கிற்கு மாறாக அரசாங்கம் தலையிட்டதன் காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்படுகிற நிலைமைக்கு ஆளாகும்.

இங்கே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர், இந்திரா காந்தியினுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், பொது உடைமை நோக்கத்தோடு இந்தச் சட்டத்தைத் தீவிரமாகக் கொண்டு வந்தார்கள் என்றார்கள். சொல்லப்படுவதுதான் பொது உடைமை நோக்கமே தவிர, அதிலே அப்படிப்பட்ட எந்த

நோக்கமும் இல்லை, இப்படிப்பட்ட சட்டத்திலே இந்த நோக்கத்தைச் செயலாக்க வழியுமில்லை. மிகப்பெரிய மாட மாளிகை போன்ற குவிந்துள்ள செல்வத்தைப் பங்கிடுவதுதான் பொது உடைமை நோக்கமாகும், என்று யாரும் புரிந்துகொள்ள முடியும். சாதாரண ஓட்டு வீட்டைப் பங்கிடுவதற்கு அல்லது 2¼ மனை அளவுள்ள நிலத்தைப் பிரித்துப் பங்கிடுவது என்ற கொள்கை அரசாங்கத்தினிடம் வருமானால் அதிலே பொது உடைமை நோக்கமும், ஈடேறாது, பயனும் இருக்காது. நிறைவேற்றுகிற முறையில் துப்பும் இல்லை, தெளிவும் இல்லை, என்றாகிவிடும்.

நான் அரசாங்கத்தின் சார்பாக எண்ணிப் பார்க்கும்போது பத்து மனைக்கட்டு அளவாவது ஓரிடத்தில் சேர்ந்தாற்போல் எடுத்தால்தான் அதைப் பயனுள்ள வகையில் பங்கிட முடியும். இந்த சட்டத்திலே சொல்லுகிறார்கள் இரண்டு மனைக்கட்டு அளவுக்கு அல்லது 50 சதுர மீட்டர் அனுமதிக்கப்படுகிறது. அதே நேரத்தில் ஒரு வீட்டோடு மனைக்கட்டு இருந்து அதற்குப் பக்கத்திலே இன்னும் 500 சதுர மீட்டர் நிலம் அதனோடு சேர்ந்து இருக்கலாம் என்று அனுமதிக்கப்படுகிறது. அதற்குமேல் பத்து சதுர மீட்டர் அளவு நிலம் வைத்துக் கொண்டாலும், அல்லது 50 சதுர மீட்டர் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், அப்படி இருப்பதை விதிவிலக்குத் தந்து திரும்பவும் அவர்களிடமே விட்டுவிடலாம் என்றும் விதி இருக்கிறது.

You can dispose as you like it. ஆனால் இந்த 50 சதுர மீட்டர் 100 சதுர மீட்டர் வேண்டும், எனக்கு திருப்பிக் கொடுங்கள் என்று நிலம் உடையவர்கள் விண்ணப்பம் போட்டு அதற்கு வரம்பு கட்டக்கூடாது என்றால் அதிகாரிகள் பரிசீலனை செய்ய வேண்டும். இல்லையானால் சட்டப்படி ஒத்து வராது. பரிசீலனை செய்து திரும்பக் கொடுக்கிற நிலைமை வருகிறபோது இந்த விதியின்படி விண்ணப்பிக்கும் 100 பேர்களில் 90 பேர்கள் இடத்திலிருந்து எடுக்கக்கூடிய நிலம் இருக்காது. சட்டத்தினுடைய இந்த வரம்போடு முட்டி மோதி அதற்குப் பின்னால் இருக்கிற அப்படிப்பட்ட எடுக்கத் தேவையில்லாத நிலத்தை வைத்துப் பார்த்தால் மிகப் பலர் இருப்பார்கள். 10 பேர்களிடம் வரும்போது, குறிப்பிட்டு எடுக்கக்கூடிய அளவு நிலம் 100 பேர்கள் உச்சவரம்பு

சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினுடைய இந்தத் துறைக்கு அதிகாரிகளுக்கு விண்ணப்பம் போட்டால் 10 அல்லது 20 பேர்களிடத்தில் தான் எடுக்கக்கூடிய நிலம் இருக்கும்; எடுக்கும் அளவில் உள்ள நிலம் இருக்கும்.

எனவே, நாம் இந்தச் சட்டத்தை சமூக நீதிக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்ற எண்ணத்திலே ஏற்றுக்கொண்டாலும் கூட, வழி முறையில், எந்த முறையிலே செய்வது நல்லது, எது சிறந்த முறை என்று எண்ண முடியவில்லை. மக்களுக்கு சமூக நீதியிலே நம்பிக்கை ஏற்படுத்தும் காரியம் என்ற அந்தப் பொது நோக்கத்திற்காக இதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

ஆனால் சிக்கல் எந்த அளவுக்கு இருக்கிறது என்றால், இதற்காக நியமிக்கப்படுகிற அதாரிட்டி அதிகாரமுள்ளவர்கள் தங்களுடைய டிஸ்கிரீஷனை, பகுத்தாய்வினைப் பயன்படுத்தி தங்களுக்கு தோன்றுகிற எணணத்தைப் பயன்படுத்தி, முடிவுகளை வழங்க அதிகமான வாய்ப்பிருக்கிறது. இந்த சட்டத்திலே அப்படிப்பட்ட வாய்ப்பு இருப்பது நல்லதல்ல என்பது என்னுடைய எண்ணம். அதிகாரத்தை வரையறுத்துப் பயன்படுத்தும் வழியை ஏற்படுத்த வேண்டும். அதிகாரிகள் விண்ணப்பத்தை பார்த்து, முடிந்தால் அந்த இடத்தைப் பார்த்து, சலுகை காட்டவோ, சலுகை என்பதே சலுகை அல்ல, நியாயமான உரிமை என்று காட்டவோ இங்கே வாய்ப்பிருக்கிறது. இந்த அதிகாரிகளுக்குத் தரப்பட்டிருக்கிற அதிகாரம் சற்று அதிகமாகவே இருக்கிறது. விவசாய நில உச்சவரம்பு சட்டத்தில் கூட அந்த அதிகாரிகளுக்கு தரப்பட்ட அதிகாரம் இந்த அளவுக்கு இல்லை. இது விலை ஏறி இறங்கக்கூடிய, 'பிளக்சுவேட்' ஆகக்கூடிய, மதிப்பு ஏறி இறங்கக் கூடிய தன்மையுடைய நிலம், மிச்ச நிலத்தின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டிய நோக்கம் நல்ல நோக்கமாக இருக்கலாம், என்றாலும் இந்த நிலம் அரசாங்கத்திற்குத் தேவையில்லை. அந்த நிலம் யாருக்கும் பயன்படாது என்று தீர்மானிக்கிற வாய்ப்பும், அதிகாரமும் இந்த அதிகாரிகளுக்கு இருக்கிற காரணத்தால், இரண்டொரு பிரச்சினையிலே அதையும் மீறி ரெவின்யூ போர்டுக்கு விண்ணப்பம் செய்து நியாயம் பெறலாம் என்று சொன்னாலும்கூட சாதாரணமான மக்களும் மிகப்பெரிய சட்டச் சிக்கலைச் சந்திக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தும் வாய்ப்பிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

[திரு. க. அன்பழகன்] [1978 ஏப்ரல் 3

இப்படித்தான் சட்டம் இருக்க முடியும் என்று சொன்னல் அதை நான் மறுப்பதற்கில்லை. வாய்ப்பிருக்குமானல், இப்படிப் பட்ட சட்டங்கள் இன்னும் எளிதாக்கப்பட வேண்டும். இன்னும் வரைமுறைப்படுத்தப்பட வேண்டும். எளிதாக செயல்படுத்தப் படுவதாக இருக்க வேண்டும். படிக்கும்போது அழகாகத்தான் இருக்கும். நடைமுறைப்படுத்தும்போது, இம்ப்ளிமென்ட் செய்யும் போது, பொதுமக்களுக்கு ஏற்படுகிற தொல்லைகள், சிக்கல்கள் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும்.

[பிற்பகல் 1-00]

இன்னென்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒருவருக்கு சொந்தமாக இருக்கும் நிலம் உச்சவரம்புக்கு ஆளாகும்போது அதற்கு உச்சவரம்பு கட்டும்போது நோக்கம் எதுவாக இருக்க வேண்டும் என்றல், மிச்சம் இருக்கிற எவ்வளவு நிலத்தை அரசாங்கம் கைப்பற்ற முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். பதினைந்து மனைக்கட்டு இருந்தால், பத்து மனைக்கட்டுக்கு அல்லது பதிமூன்று மனைக்கட்டுக்கு உச்சவரம்பு கட்டி, இரண்டு மனைக்கட்டு கிடைக்குமானல் அது அரசாங்கத்திற்கு லாபம் அல்ல. இரண்டு, இரண்டு மனைக்கட்டுகளாக ஆயிரம் இடத்தில் எடுத்து, எப்படி முறையாகப் பலருக்கு பங்கிட்டுக் கொடுக்க முடியும்? ஆகவே, ஒரு இடத்தில் குறைந்தது பத்து அல்லது பதினைந்து மனைக்கட்டுகள் இருக்க வேண்டும். ஒரு இடத்தில் குறைந்தது ஒரு ஏக்கர் நிலம் இருந்து, அதை எடுத்தால்தான் லாபகரமாக இருக்கும், பங்கிட்டுக் கொடுக்க வசதியாக இருக்கும்.

ஒருவருக்கு சொந்தமாக ஒரு வீடு இருக்கிறது என்றல் அந்த வீட்டைச் சுற்றி காலி மனை இருக்கும்; அது காலி மனை என்ற வரம்பில் வராது, சுற்று நிலம் என்று கூறப்படுகின்ற அளவுக்கு இருக்கின்ற நிலம்—ஒரு வீட்டைச் சுற்றி, வீடும் அந்த மனையும் சேர்ந்து 500 ஸ்கொயர் மீட்டர் அதாவது இரண்டு கிரவுண்ட் இருக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்தோடு நேரடித் தொடர்பாக இன்னும் இரண்டே-கால் கிரவுண்ட் இருந்தால் கூட அனுமதிக்கலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அந்தக் கணக்கின்படி 1,000 ஸ்கொயர் மீட்டர் வரை இருக்கலாம் என்று இருக்கிறது.

1978 ஏப்ரல் 3] [திரு. க. அன்பழகன்]

தினமணி பத்திரிகையில் ஒரு தலையங்கத்தில் எழுதி யுள்ளதைக் கவனிக்கும்போது 1,700 சதுர மீட்டர் ஒன்றாக இருந்தால், நிலச் சொந்தக்காரருக்கு பிள்ளைகள் இருந்தால், மேஜர் குழந்தையாக இருந்தால் அந்த மீதி நிலத்தில் அந்தக் குழந்தைக்கு உரிமை கிடையாது, மைனர் குழந்தையாக இருந்தால் சொந்தக்காரர் மொத்த நிலத்தையும் வைத்துக் கொள்ளலாம் என்று வருகிறது. வயது வந்த குழந்தையாக இருந்தால் திருமணம் செய்திருந்தால் கூட, வேறு நிலம் இல்லா விட்டால் கூட அந்தப் பிள்ளைக்கு அதில் உரிமை இல்லை. மைனர் குழந்தையாக இருந்தால் அந்த நிலத்தில் பங்கு கிடைக்கும். மைனர் குழந்தைக்கு இருக்கிற உரிமை, ஒரே குடும்பத்தில் இருக்கிற மேஜர் பிள்ளைக்கு இல்லை. வயது வந்த பிள்ளைக்கு வேறு இடத்தில் நிலமோ அல்லது வீடோ இருந்தால், இதில் பங்கு இல்லை என்று சொல்லி, அந்த உரிமை இல்லை என்று சொன்னல் நியாயம். வேறு இடத்திலும் இல்லாமல், இருக்கிறது இந்த ஒரு மனையைச் சுற்றிய நிலந்தான் என்றலும், வயது வந்த பிள்ளை திருமணம் ஆனவராக இருந்தாலும் அவருக்கு இல்லை என்று சொல்வதில் நியாயமில்லை; எனக்கும் பங்கு தரவேண்டு மென்று அவர் கேட்பது நியாயமான ஒன்று.

இன்னும் சொல்லப்போனல், உச்சவரம்பின் நோக்கம் என்ன? அளவுக்கு மேற்பட்ட நிலம் யாரிடம் இருந்தாலும் பயன்படக் கூடியதாக இருந்தால் எடுத்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் எத்தனை பேர் மைனர் குழந்தைகளாக இருந்தாலும் அவர்களை எல்லாம் அனுமதிக்கலாம் என்று சொல்லும்போது மேஜர் குழந்தையாக இருந்தாலும், ஒரே குடும்பத்தில் இருந்தால் அனுமதிக்கலாம். மேஜர், மைனர் இரண்டும் சேர்ந்து ஏழு, எட்டு குழந்தைகள் இருந்தாலும் இந்த அளவுக்கு மேற்படாத நிலத்துக்கு அனுமதி வழங்கலாம். குடும்ப நலத்திற்கான முறையிலே இரண்டு குழந்தைகளுக்கு மேல் போகக்கூடாது என்று நாம் குழந்தைகளுக்கு சீலிங் வைத்திருக்கிறேம். என்னுடைய கருத்து என்னவென்றல் குழந்தைகள் மேஜர், மைனர் என்று இல்லாமல் ஒரே குடும்பமாக இருக்கிறபோது இதே அளவில் உரிமை வழங்கலாம். பிரிவினையாகாத இந்துக் குடும்பச் சட்டப்படி ஒரே இந்துக் குடும்பமாக இருந்தால் அந்த

உரிமையை மறுக்க முடியாது. ஆகையால் இந்த சாதாரண அடிப்படை உரிமையை மறுக்க வேண்டியதில்லை. அப்போதும் 2,000 சதுர மீட்டர்தான் அவர்கட்கு உரிமையாகும். இந்த அடிப்படையிலே சென்னை, கோவை, நெல்லை போன்ற நகர்ப் புறங்களில் எங்கு நிலம் இருந்தாலும் அதைக் கணக்கில்கொண்டு உரிமை வழங்குவதில் சிக்கல் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்றும் சொல்ல விரும்புகிறேன். இதனைக் கூட்டு ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி ஒரு ஐந்து, ஆறு மாத காலம் ஆகாமல் ஓரிரு மாத காலத்திற்குள் இதிலே வருகிற பிரிவுகள், இதிலே தரப்பட்டிருக்கின்ற இணைப்புகள் எல்லாவற்றையும் ஆழமாகப் பரிசீலனை செய்தபின் இதனை நிறைவேற்றுவதற்கு முன்வந்தால் நான் அதை வரவேற்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன். ஆகவே, இதிலே உள்ள பிரிவுகள் அனைத்தையும் ஆழ்ந்து எண்ணிப் பார்த்தே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இந்தச் சட்டம் கொண்டு வரக்கூடிய காலத்திலே ஒரு சட்டம் எந்த அளவுக்கு ஜனங்களுக்கு நன்மை அளிக்கிறது என்ற அடிப்படையில் கொண்டு வர வேண்டும். இதைப் போல கடந்த காலத்தில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வரப்பட்டது. ஆனல் அந்த மொத்த நிலங்கள் என்று கொடுக்கப் படக்கூடிய காலத்திலே ஏதாவது மிச்ச நிலங்கள் இருந்தனவா என்றுல் இல்லாத நிலைமைதான் இருந்து வருகிறது. அன்றைக்கும் கூட மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் காலத்திலும் கூட மிச்ச நிலம் ஏதாவது இருந்து அது ஏழைகளுக்கு எடுத்துக் கொடுக் கப்படும் என்று எதிர்ப்பார்த்தோம். ஆனல் மிச்ச நிலங்கள் இல்லாத அளவிலேதான் ஒரு சட்டத்தை அவர்கள் கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்னல் வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டுவரப்பட்டது. அப்போதும் அதே கதைதான். மக்களுக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லாத நிலைமைதான் இருந்தது.

அதைப்போலத்தான் இன்றைக்கு நகர உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால் ஏதாவது மீதி நிலங்கள் சாதாரண மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டக்கூடிய அளவுக்கு கொடுக்க முடியுமா என்று பார்த்தால் இந்தச் சட்டத்தினல் ஏதாவது மிச்ச நிலம் இருப்ப தாகவே தெரியவில்லை. ஆனல் அதே நேரத்தில் ஏற்கனவே ஓரளவு நிலத்தை வைத்துப் பயன் அடைந்தவர்கள் இப்படி ஒரு சட்டம் வந்த உடனேயே என்ன செய்யலாம் என்று அவர்கள் யோசிக்கக்கூடிய நிலைமை இருந்தது. அப்போது மாற்றங்களைக் கொண்டுவரக் கூடிய அளவிலே கணவனுக்கு 500 சதுர மீட்டர், மனைவிக்கு 500 சதுர மீட்டர் என்று கொண்டு வந்தார்கள். கணவனுக்கு மட்டும் போதாதா? மனைவிக்கும் கொடுக்கப்பட வேண்டுமா? இன்றைக்கு கணவனுக்கு, மனைவிக்கு, குழந்தைக்கு என்று சட்டத்தை உருக்குலைக்க, ஒன்றும் இல்லாமல் ஆக்க, சோசலிசத்தை உருப்படாத முறையிலே ஆக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அதை எல்லாம் இந்தச் சட்டத்தின் மூலம் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது.

சட்டம் கொண்டு வந்ததன் மூலமாக நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறது. அரசாங்கம் கொண்டு வந்த நோக்கத்தோடு பார்த்தால் சென்னையிலோ இன்னும் மற்ற இடங்களிலோ ஒரு இடத்திலேயும் அரசாங்கத் திற்கு நிலம் கிடைத்ததா இல்லையா என்பது தெரியவில்லை. சோசலிசம் என்று சொல்லப்படுகிறது. அந்த சோசலிசம் சரியான முறையில் நிறைவேற்றப்படுவதில்லை. இந்தச் சட்டம் கொண்டு வந்ததின் விளைவாக மிச்ச நிலம் எதுவுமே கிடைக்காத நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் அது சாதாரண மக்களுக்கு நன்மை செய்யும் முறையிலே கொண்டு வந்தால்தான் சோசலிசத்தின் அடிப்படையிலே கொண்டு வருகிறோம் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ள நமக்கு ஒரு அந்தஸ்து இருக் கின்றது. ஆனல் ஒரு சட்டம் கொண்டு வரப்படக்கூடிய நிலைமையில் ஒன்றுமே நிலம் கிடைக்காத ஒரு நிலைமை இருக்குமே யானல், சோசலிசத்தை நாங்கள் கொண்டு வருகிறோம், சோசலி சத்திற்காகவே நாங்கள் இருக்கிறோம் என்று ஏற்கனவே சொன்ன

இரண்டு ஆட்சிக் காலத்திலும் நிலைமை எப்படி இருந்ததோ, அதுதான் இன்றைக்கும் இருக்கின்றது என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

ஆகவே, நகர்ப்புற உச்சவரம்புச் சட்டம் என்று கொண்டு வரும் போது, விவசாயத்திற்காக பத்து கிரவுண்ட்ஸ், விவசாயம் சம்பந்தப்பட்டவற்றிற்கு பத்து கிரவுண்ட்ஸ், காப்பிக்கொட்டை மெஷீன்ஸ் வைப்பதற்கு பத்து கிரவுண்ட்ஸ், மில்க் பவுடர் தயாரிக்க பத்து கிரவுண்ட்ஸ், என்று இப்படி என்னென்ன ஓட்டைகளையெல்லாம் இதில் நுழைக்க முடியுமோ அவ்வளவு ஓட்டைகளையும் நுழைத்து ஒன்றுமேயில்லாமல் உருக்குலைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே எங்கள் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சொல்லிக்கொள்கிறேன், ஏழை மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்றால், ஓரளவிற்கு நிலம் கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் இந்தச் சட்டமுன்வடிவை—அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிக்காமல்—செலக்ட் கமிட்டிக்கு விட்டு பிறகு ஒரு முடிவு காண வேண்டும் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இங்கு இந்த மசோதாவை பிரேரணை செய்திருக்கிறார்கள். ரொம்பக் கஷ்டப்பட்டு அதிகப்படியான பக்கங்களைப் புரட்டிப் புரட்டிப் படித்தேன் —நேற்று பூராவும் இதைப் படித்துள்ளேன். இதைப் படித்துப் பார்த்த பின் எனக்கு என்ன எண்ணம் ஏற்பட்டது என்றால் ஓரே ஒரு வரியில் நிறைவேற்ற வேண்டிய ஒரு சட்டத்தை இவ்வளவு அதிகப்படியான பக்கங்களைக் கொண்டதாகக் கொண்டு வந்து ஏன் நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. முதலிலே இருக்கிற சட்டத்தை 'ரிப்பீல்ட்' என்று போட்டிருந்தால் இதில் ஒன்றுமே வம்பு கிடையாது, இவ்வளவு நேரம் விவாதிக்க வேண்டிய அவசியமும் இருந்திருக்காது.

ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறபோது மக்களுக்கு இருக்கிற சிரமங்களை எப்படிப் போக்குவது என்று பார்க்க வேண்டுமே தவிர, இந்தச் சட்டத்தை பூராவும் அமலாக்குவதால்

எந்தப் பலனும் கிடையாது என்று சொல்லி ஒரு மசோதா கொண்டுவந்து பிரேரணை செய்ததுபற்றி ரொம்ப வருத்தப்படுகிறேன். ஒரு குடும்பம் என்றால் அதற்கு 500 சதுர மீட்டர் என்று முந்திய சட்டத்தில் இருக்கிறது. அதை அமலாக்கும் போது பல சங்கடங்கள் ஏற்பட்டது உண்மை. அந்தச் சங்கடங்களைப் போக்க இப்போது ஒரு குடும்பம் என்றால் 2,000 சதுர மீட்டர் வரை மாக்ஸிமம் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஒரு நபருக்கு 500 சதுர மீட்டர் என்ற அளவிற்கு எடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பம் என்றால், எந்தச் சட்டத்தை எடுத்துக் கொண்டாலும், நில உச்சவரம்புச் சட்டத்திலும் ஒரு குடும்பம் என்றால் கணவன், மனைவி, மைனர் குழந்தைகள் என்றிருக்கிறது. மேஜர் என்றால் தனி யூனிட்டாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு குடும்பம், கணவன், மனைவி, மைனர் குழந்தைகள் ஆக நான்கு பேர்கள் இருந்தால் 2,000 சதுர மீட்டர் என்றிருக்கிறது. குழந்தைகள் பின்னால் பெரியவர்களாகப் போனால் மனைக்கட்டு வேண்டுமென்றால் கொடுக்கிறீர்கள். ஏன் கணவனுக்கும் மனைவிக்கும் தனித் தனியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறேன். கணவன் மனைவி ஒரே யூனிட். கணவன், மனைவி, குழந்தைகள் என்று நான்கு பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு இரண்டாயிரம் சதுர மீட்டர் கொடுக்க வேண்டும் என்பது எந்த வகையில் நியாயம்? கணவன் மனைவியை ஏன் ஒரு யூனிட்டாக எடுத்துக் கொள்ளக்கூடாது? கணவனுக்கு 500 சதுர மீட்டர், மனைவிக்கு 500 சதுர மீட்டர் என்றிருப்பது சரியானதல்ல. இந்தத் திருத்தப்படி கொண்டு வந்திருக்கக் கூடாது என்ற முறையில் நான் இதை எதிர்க்கிறேன்.

21 (எ) (பி)-ல் காலி நிலம் வைத்திருப்பவர்களுக்கு இன்னும் சில சலுகைகளைக் கொடுக்கக்கூடிய அளவில் அதிகாரிகளுக்கு டிஸ்க்ரீஷனரி பவர்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவை சில பாதுகாப்பிற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னாலும் 21 (பி)-ல், 'உச்சவரம்பு வரையறைக்கு அதிகமாக ஒருவர் காலி நிலம் வைத்திருந்து, மாநில அரசு, தாமாகவோ அல்லது பிற வகையிலோ இந்த அத்தியாயத்தின் விதித்துறைகளை அந்நிலத்திற்குப் பொருந்தச் செய்வது, அவருக்கு மட்டுக்கு மீறிய இடர்ப்பாட்டை விளைவிக்கும் என்று மாநில அரசு தெரிந்து கொண்டால், மாநில அரசு ஆணை ஒன்றைப் பிறப்பிப்பதன் மூலம்

அந்த ஆணையில் குறிப்பிடக்கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அத்தகைய காலி நிலத்திற்கு இந்த அத்தியாயத்தின் விதித்துறைகளிலிருந்து விலக்களிக்கலாம்;" என்றிருக்கிறது.

இப்போது பேராசிரியர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். 500 சதுர மீட்டர் என்று சொல்லியிருக்கிறீர்கள், பத்து சதுர மீட்டர் அதிகமாக இருந்தால் என்ன செய்யப் போகிறீர்கள், இது மிகவும் சிக்கலாக இருக்கிறது, ஆகவே இவ்வளவு மீட்டர் இருக்கலாம் என்று சொல்வது நல்லது என்று குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட காரணங்களினால், 21-பி-யின் மூலமாக அதிகாரம் துஷ்பிரயோகம் செய்வதற்கு ஏதுவாகும் என்று கருதுகிறேன்.

அப்புறம், 22ல், "உபரியாகவுள்ள காலி நிலம் குறிப்பிட்ட சில சமயங்களில் உபரி நிலமாக கருதப்படக்கூடாது என்பது" என்றிருப்பதில் சொல்லப்பட்டிருப்பதை எடுத்துக் கொண்டால், இவ்வளவு நிலம் இருக்கிறது, அதில் வீடு கட்டப் போகிறேன் என்று சொன்னால், அதற்கு பெர்மிஷன் கொடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தால் அதற்கு விலக்கு கொடுக்கலாம் என்றிருக்கிறது. மேலும் பல்வேறு வகையில் காம்பென்சேஷன் கொடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தினால் மிச்ச நிலத்தை எடுத்து யாருக்கும் இடம் கொடுத்து விட முடியாது, இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்குப் பதிலாக முன்புள்ள சட்டத்தை அமல் செய்வதிலேயே என்னென்ன சிக்கல்கள் இருந்தன என்பதை பரிசீலித்திருக்கலாம். அவை எல்லாவற்றையும் இந்தச் சட்டத்தின் மூலமாக "வாட்டர் டவுன்" பண்ணியிருக்கிறார்கள், என்பதுதான் என்னுடைய கருத்து. இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையையும் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான சட்டப் பிரச்னையில் நம்முடைய ஜனதா கட்சியினுடைய கருத்து என்னவென்பது தெரிவிக்கப்படவில்லை. அதற்கு தாங்கள் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு முறைப் படுத்துதல் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக நான் இங்கு தாக்கல் செய்த திருத்த மசோதாவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அந்த விவாதத்தில் இறங்குவதற்கு முன்பு, முகவுரையாக சில கருத்துக்களை இந்த அவையில் வைக்க விரும்புகிறேன்.

ஆளுநர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டம் எந்த அளவுக்குச் சிக்கல் நிறைந்துள்ள சட்டமாகவும், எந்த அளவுக்கு முரண்பாடுகளைக் கொண்டு விளங்கிய சட்டமாகவும் அமைந்திருந்தது என்பதைப் பற்றியும் இந்த அவையில் பல பேர்கள் பேசியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, அந்தச் சட்டத்தைப்பற்றிக் கருத்து தெரிவித்த எனது அருமை எதிர்கட்சித் துணைத் தலைவர் அன்பழகன் அவர்களும், கருத்து தெரிவித்த அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் ப. உ. ச. அவர்களும் அதைப்போலவே கருத்துத் தெரிவித்த அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்களும் எந்த அளவுக்கு வேகத்தோடு இந்தச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்றும், இன்னும் சொல்லப் போனால் அவர்கள் பயன்படுத்திய வாசகங்களை எல்லாம் நினைவுக்கு கொண்டு வருவதானால்,—ப. உ. ச. அவர்கள் சொன்னார்கள், 'நான் கிழி, கிழி என்று கிழித்து எறிவேன்.' என்று சொன்னதையும், அவரும் மறந்திருக்கமாட்டார், நானும் மறந்துவிடவில்லை. நமது பேராசிரியர் அவர்கள் பேசும்போது, இலட்சக்கணக்கான மக்கள் வேலையின்றி தெருவோரத்திலே திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள், கட்டிட வேலைகள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன, அதையொட்டிய எத்தனையோ பணிகள் முடங்கப்பட்டிருக்கின்றன, இதற்கெல்லாம் காரணமாக இருக்கின்ற இந்தச் சட்டத்தை வங்கக் கடலில் தூக்கி வீசி எறிய வேண்டும் என்று—கடலில் வேண்டுமென்றால் வித்தியாசம் இருக்கலாம், அரபிக் கடலாக இருக்கலாம்—அப்படிப்பட்ட அந்த

உணர்வுகளைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அருமை நண்பர் சாதிக் பாட்சா அவர்களும் இதற்குப் பதிலாக புரட்சிகரமான மசோதாவைக் கொண்டு வாருங்கள் என்றார்கள், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களும், இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்பதில் உறுதியான ஒரே நிலையைக் கொண்டிருந்தார்கள் என்பதை இந்த அவை மறக்காது, மறுக்காது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 1.20)

நான் சென்ற முறை இங்கே பேசும்போது, சட்டசபை மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது, லெஜிஸ்லேச்சர், அதை ஒட்டித் தொடர்ந்து வந்த மானியங்களின்மீது பேசும்போது, இந்த அவையில், என்னைப் பார்த்துக் கேட்டதாக நினைவு. இந்த அர்பன் லேண்டு சீலிங் ஆக்ட் புதியதாகக் கொண்டுவரப் போவதாகச் சொன்னீர்களே, எப்போது கொண்டு வரப் போகிறீர்கள் என்று ப. உ. ச. கேட்டதாக நினைவு. நான் அதற்குப் பதில் சொன்னேன். கொண்டு வருவோம், அது மட்டுமல்ல, கொண்டு வந்து நிறைவேற்றுவோம் என்று சொன்னதாகவும் நினைவு. அவர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நான் என்ன சொன்னேனோ, அதை நிறைவேற்றி இருக்கிறேன். அதன்படி கொண்டு வந்திருக்கிறேன். கொண்டு வந்ததற்குப் பிறகு, அதிலே என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதற்குப் பதில் சொன்னார்கள். இதில் ஒரு சிக்கலும் இல்லை. சிக்கல் அவிழ்த்து விடப்பட்டிருக்கிறது என்று விளக்கம் சொன்னால், அதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டிய அவசியம் இல்லை என்பதிலே நமக்குள்ளே உடன்பாடு உண்டு என மனதார நம்புகிறேன்.

அவர்களை அடுத்துப் பேசியபோது, அருமை நண்பர் நமது சட்டமன்றத் திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். ஒரு பாமிலி என்று கணக்குப் போடும்போது, கணவன், மனைவி, இந்த இரண்டு தவிர மேஜர், மைனர்களுக்கு என்றிருக்கிறது. மேஜர்களுக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கின்றதா என்று கேட்டார்கள். நான் அவருக்கு பதிலை எடுத்துக் காட்டினேன். அதற்கு வழிவகை

செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் சுட்டிக்காட்டும் வகையில், இங்கே 5(7)-லே உள்ளதை நான் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த 5(7)-லே குறிப்பிடப்பட்டிருக்கிறது,

'In the case of a Hindu undivided family consisting of—

(i) a wife or husband;

(ii) (a) major sons, or

(b) unmarried minor children, or

(c) unmarried major daughters

of such wife or husband

and where in relation to any vacant land held by the wife or husband or both, as self acquired property, no division had taken place on or before the commencement of this Act, so much of the vacant land, as would have notionally fallen to the share of the wife, the husband, the major sons, unmarried major daughters or unmarried minor children in such family, had the entire vacant land, held by the wife or husband or both, been divided equally at the commencement of this Act, among the wife, husband, major sons, unmarried major daughters, or unmarried minor children aforesaid, shall also be taken into account in calculating the extent of vacant land held by each such person......'

இந்த விளக்கத்திற்குப் பிறகு, பேராசிரியர் அவர்கள் இதைச் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்ற கருத்தை கைவிட்டு விடுவார்கள் என்று நான் மனதார நம்புகிறேன்.

அதற்குப் பிறகு, இங்கே பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) சிவசாமி என்று கருதுகிறேன். அவர்கள் நல்ல திட்டங்களைக் கொண்டு வரும்போதெல்லாம், பாராட்டிப் பாராட்டிப் பழக்கப்பட்டவர்கள். ஆனால், இன்றைக்கு என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, ஒரு வேளை சிகப்புத் துண்டை அணிந்திருப்பதனாலோ என்னவோ தெரியவில்லை, இதை நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வது, இந்த ஒரு சட்டத்தை உருவாக்குவதற்காக, சட்ட வல்லுநர்கள் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்பட்டார்கள்,

அதிகாரிகள் எந்த அளவிற்குப் பயன்படுத்தப் பட்டார்கள், பொதுக் கருத்துக்கள் எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன, எத்தனை நாட்கள் நான் உட்கார்ந்து கொண்டு அவைகளைப் பற்றிச் சிந்தித்து இருப்பேன்.

நண்பர் அன்பழகன் அவர்கள்கூடச் சொன்னார்கள், எனக்கும் சட்டம் தெரியாது, உங்களுக்கும் சட்டம் தெரியாது, நாம் பொது மக்கள் எடுத்துக் கூறும் அபிப்பிராயங்களைத்தான் எடுத்துக் கூற முடியும் என்றார்கள். நானும், பேராசிரியர் அவர்களும் சட்டம் படித்தவர்கள் அல்ல. ஆனால், நாட்டு நடப்புகளை, நாட்டு மக்களின் நாடித் துடிப்புகளைத் தெரிந்தவர்கள். ஆனால், சட்ட விஷயம் தெரிந்த நமது சட்ட அமைச்சர் பக்கத்திலே இருக்கிறார், விவரம் புரிந்த அதிகாரிகள் பக்கத்திலே இருக்கிறார்கள், அவர்களையெல்லாம் வைத்துக்கொண்டுதான் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இங்கே கொண்டு வந்தோம்.

நான் மனம் திறந்து பேசுகிறேன். நீங்களும் மனதில் கை வைத்துப் பேசுங்கள். தனி மனிதனுக்கு வழங்கப்பட்ட ஸ்கொயர் மீட்டர்ஸ் 500. இது அதிகமென்று வாதாடுகிறார்களா? மொத்தத்தில் வைக்கப்பட்டிருக்கும் சீலிங் 2,000. ஏறத்தாழ எட்டு அல்லது எட்டரை கிரவுண்ட்தான் இருக்கும். கோவிந்தராஜன் அவர்கள் பேசும்போது திருப்பித் திருப்பி 10 கிரவுண்ட் என்றே சொல்லி வந்தார்கள். பொருள் தெரியவில்லை. ஒருவேளை கணக்குகள் தவறாகி இருக்கலாம், திசை மாற்றுவதற்காக இல்லையென்று மனதார நம்புகிறேன். தனி மனிதனுக்கு 2¼ கிரவுண்ட் இருப்பது எந்த வகையில் சோஷலிசத்திற்குப் புறம்பானது.

திரு. சி. கோவிந்தராசன்: தனி மனிதனுக்கு 2¼ கிரவுண்ட் இருப்பதற்கு ஆட்சேபனை இல்லை. பல்வேறு பகுதிகளைக் குறிப்பிட்டுப் பேசினேன். இண்டஸ்ட்ரியல் அண்டர்டேக்கிங்ஸ் என்று சொல்லி அதற்கு மாக்சிமம் இரண்டாயிரம் சதுர மீட்டர்ஸ். அது மாதிரி மீன்களை உலர வைக்கும் தொழிற்சாலை அல்லது காப்பிக் கொட்டை கடை என்று சொல்லி இண்டஸ்டிரியல் அண்டர் டேக்கிங் என்று சொல்லலாம். பேராசிரியர்கூட அதுபற்றிக் குறிப்பிட்டார்கள், அக்ரிகல்சர் என்று சொல்லும்போது செடி

வளர்க்கக்கூடிய ஹார்டிகல்சரும் விதிவிலக்குப் பெறுகிறது. இப்படி எல்லாம் சொல்லிவிட்ட பிறகு மிச்ச நிலம் கிடைக்காது என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: ஏற்கனவே இருந்த சட்டத்தில் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ் வரிசைப்படி போடப் பட்டவைகள்தான் இவை. இப்போது அவர்கள் குறிப்பாக எடுத்துச் சொல்லும்போது ஹார்டிகல்சர், மீன்கடை என்றெல்லாம் சொன்னார்கள். இறைச்சிக் கடை இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்சா என்று கேட்டார்கள். என்னோடு புரசைவாக்கம் மீன் கடைக்கு வருவார்களானால் எந்த அளவுக்கு ஆட்கள் கூடியிருக்கிறார்கள், எந்த அளவுக்கு இடம் தேவைப்படுகிறது என்பதை எல்லாம் அறிய முடியும்.

இரண்டு, மூன்றை மட்டும் வைத்து அவர்கள் பேசியிருக்கிறார்கள். பொதுவாக, பெரிய பெரிய இண்டஸ்ட்ரிஸ் பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மோட்டார் பார்ட்ஸ் செய்வது பற்றிய தொழில்கள் பற்றியெல்லாம் விளக்கமாகத் தரப் பட்டிருக்கிறது. வாய்க்குச் சுவையான இரண்டு மூன்று இடங்களைப் பற்றிக் கோவிந்தராஜன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன்—சிறு தொழிற்கூடங்களுக்குக் கிட்டத்தட்ட அரை ஏக்கர் என்ற அளவுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இது ஏற்கனவே மத்திய அரசு அனுமதித்த ஒன்று.

ஆனால் சட்டத்தை அமல் செய்கிற போது சில சிக்கல்கள் வரும், தாமதம் ஏற்படும் என்ற கருத்தைப் பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொன்னதாக நினைவு. நான் அவர்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்—அப்படிப்பட்ட ஒரு சிக்கல் வராமல் சட்டத்தைத் துரிதமாக அமல்படுத்த வழிவகைகள் காண்பதற்கு இந்த அரசு முயற்சி செய்யும் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லி எந்த நோக்கத்தோடு இது கொண்டு வரப்பட்டது என்பது பற்றி ஒருசில கருத்துக்களை விளக்க விரும்புகிறேன்.

கடந்த பத்தாண்டுகளில், அதற்கு மேலாகவும் நகர்ப்புற ஜனத்தொகை பலவித காரணங்களால் அதிகரித்திருக்கிறது. இதைச் சொல்லுகிறபோது பேராசிரியர் அன்பழகன் அவர்கள்

கிளப்பிய ஒரு பிரச்சினைக்குப் பதில் வரும். அதாவது சென்னைக்கு மட்டும் 2,000 என்கிறீர்களே, நபருக்கு 500 என்கிறீர்களே, ஆனால் இரண்டாவது என்று பிரித்திருப்பதில் கோவைக்கு 1,500 என்கிறீர்களே, அதைப் போல் திருநெல்வேலி போன்ற பகுதிகளுக்கு இரண்டாயிரம் என்கிறீர்களே, இந்த மாற்றத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்—ஆனால் அதே போல் சென்னையில் இருக்கிற ஒருவருக்கு 500. அதே மாதிரி அம்பத்தூர், திருவான்மியூர் போன்ற இடங்களில் இருப்பவர்களுக்கும் 500 என்ற அளவுக்கு நீங்கள் சில இடங்களில் மாற்றங்கள் கொண்டு வருவீர்களா என்று கேட்டதாக நினைவு. எனது பேச்சில் அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயமாக, உறுதியாக நாம் நினைவில் வைத்துக் கொள்வது நல்லது. இந்த அரசின் நல்லெண்ணத்தைத் தயவுசெய்து சந்தேகிக்காமல் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டம் உடனடியாக அமல் படுத்தப்பட்டால் தேங்கிக் கிடக்கிற வேலைகள் அத்தனையும் துரிதமாக வேலை செய்வதற்கு இது வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏன் அவர்களுக்கெல்லாம் அதிகமாக நிலங்களைக் கொடுத்தீர்கள் என்று கேட்டதற்கு நான் சொல்லுகிற பதில்—கிராமப்புற ஜனங்கள் தொழில் வளர்ச்சி காரணமாக கிராமங்களை விட்டு நகர்ப்புறங்களுக்கு அதிகமாக வேலைவாய்ப்பு காரணமாகவும், கிராமங்களில் இருக்கும் குறைந்த அளவு வேலை வாய்ப்பும் வேலை வாய்ப்பின்மையும் ஆகும்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் பேரவையின் நடவடிக்கைகளை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இந்த விஷயத்தில் சிறியதும் நடுத்தரமானதுமான நகரங்களைவிட, தலைநகரங்களும், பெரிய அளவு நகரங்களும், மிக அதிகமான ஈர்ப்பு சக்தி உடையனவாகும். இதன் காரணமாக சுகாதாரமற்ற வாழ்க்கை நிலைமையும், கட்டுப்படுத்த முடியாத குடிசை குடியிருப்புப் பகுதியின் வளர்ச்சியும், அதனால் பொருளாதார சுகாதார

பிரச்சினைகளும் எழுந்தன. ஆதலால், ஒரு சிலரிடம் நிலங்கள் குவிந்திருப்பதையும் ஊக வாணிகம் செய்தலைத் தடுக்கும் பொருட்டும், ஜனத்தொகையை செம்மையான வழிகளில் பகிர்ந்தளித்தல் பொருட்டும், குறைவாக உள்ள நகர்ப்புற நிலப் பரப்புகளின் சீரான மற்றும் முறையான வளர்ச்சியின் அத்தியாவசியம் ஏற்பட்டது.

நகர்ப்புற நிலப் பரப்புகளின் விலை மதிப்பு அதிகரித்துவிட்டதால் ஊக வாணிகமும், எளிதில் கிடைக்கப்பெறாத விலை மதிப்புள்ள நகர்ப்புற நிலத்தை பதுக்கலும் ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் எந்த ஒரு நபரும் நிலம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று நிர்ணயிப்பது பல வழிகளில் ஒன்றாகும். இதன் நோக்கம் நகர நிலமும், நகரமாகக்கூடிய நிலமும் சமூக நலத்திற்காக மாற்றுதலின் பொருட்டு, நில உடைமைகளின் அளவில் உச்சவரம்பும், வீடுகளின் அளவுக்கு ஒரு வரம்பு விதித்தலும் ஆகும்.

நகர்ப்புறச் சொத்தின்மீது சமூக நலக் கட்டுப்பாடு ஏற்படுத்துவதற்காக எதிர்காலத்தில் கட்டப்படும் கட்டடங்களுக்கு கட்டடத் தரைப் பரப்பின்மீது உச்சவரம்பு விதித்தல் மட்டுமல்லாமல், கட்டடத்துடன் கூடிய நகர்ப்புற நிலத்தின் மீது வரி விதித்தலும், நகர்ப்புற நில வரி, சொத்து வரி விதித்தலும் போன்றதுமான தொடர்பான வழிகள் இந்த மாநிலத்தில் ஏற்கனவே கையாளப்பட்டு வருகின்றன. நிலத்தின் உபயோகத்தின் மீதும் சமூகத்தின் பல்வித பிரிவுகளுக்கும் தனி நபருடைய பல்வித சமூக காரியங்களுக்காக நிலத்தைப் பகிர்ந்தளித்து லாபத்தை சமுதாயத்துடன் பகிர்ந்து அனுபவிக்கும் நோக்கத்துடன் நிலச் சொந்தக்காரர் நிலத்தை விற்பனை செய்தல் மீதும் கட்டுப்பாடுகள் உண்டாக்கும் நோக்கத்துடன் அரசு ஒரு முழுமையான கொள்கையை வழிவகுத்திருக்கிறது. இந்த நோக்கத்தை கருத்தில் கொண்டு நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டம் இயற்றப்பட்டது.

இச் சட்டத்தில் மூன்று முக்கியமான அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன. (i) ஒரு நபரிடம் (தனி நபர், ஒரு குடும்பம், ஒரு கூட்டு நிறுவனம், ஒரு கம்பெனி, தனி நபர்களடங்கிய கூட்டமைப்பு அல்லது குழு) உள்ள காலி நிலங்களுக்கு உச்சவரம்பு விதித்தல்;

[திரு. கி. மனோகரன்] [1978 ஏப்ரல் 3

இங்கே நான் சொல்ல விரும்புகிறேன், காலி நிலங்களுக்குத் தான் உச்சவரம்பே தவிர கட்டப்பட்ட கட்டிடங்களுக்குள்ளே உச்சவரம்பு இல்லை என்பதையும் முதலிலேயே விளக்க விரும்புகிறேன். தினமணி பத்திரிகை பற்றிச் சொன்னார்கள். நான்கூட அதைப் படித்துப் பார்த்தேன். எனக்குள்ள மேஜர் சன்ஸ், அவர்களுக்கு அந்த உரிமையில்லையா, திருமணம் ஆகாமல் மேஜராக இருக்கிறார்கள், என் வீட்டோடு வாழ்கிறார்கள், என் வீட்டு காம்பவுண்டிலே வீடு கட்ட வழியில்லையா என்று நல்ல விவரம் தெரிந்த சிவராமன் போன்றவர்கள் எப்படி எழுதினார்கள் என்று தெரியவில்லை. வீட்டைத் தொடவில்லை, காலி நிலத்திற்கு உச்சவரம்பே தவிர, காம்பவுண்டிற்கு அல்ல, காம்பவுண்டிற்குள்ளே வேண்டுமானால் கார்ப்பரேஷனுக்கு வேண்டுமானால் எழுதிக் கேட்டு செய்து கொள்ளலாம்.

(ii) எதிர்காலத்தில் குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு கட்டடத் தரைப் பரப்பளவுக்கு உச்சவரம்பு விதித்தல்;

(iii) நகர்ப்புறச் சொத்துக்களை உரிமை மாற்றம் செய்வதை முறைப்படுத்துதல்.

இச்சட்டம் நடைமுறையில் செயல்படுத்தும்போது கணக்கிலடங்காத சங்கடங்கள் பொதுமக்கட்கு ஏற்பட்டன. அவை அவர்கள் முறையீடுகள் வாயிலாகவும், பத்திரிகை வாயிலாகவும் வெளியிடப்பட்டன. உதாரணமாக இச்சட்டம் அமுல்படுத்தப் பட்டதனால், கட்டட வேலைகள் நின்று விட்டதாலும்—இதை உறுப்பினர்கள் அனைவரும் சொன்னார்கள்—அதன் காரணமாக ஆயிரக்கணக்கான கட்டடத் தொழிலாளர்கள் வேலையின்றி இருப்பதாகவும், கட்டட வரைவாளர்கள், கட்டட ஒப்பந்தக்காரர்கள், கொத்தர்கள், செங்கல் அறுப்பவர்கள், தச்சர்கள், மற்ற கட்டட வேலை சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள், மின்சார இணைப்பாளர்கள், குழாய் இணைப்பாளர்கள் ஆகியோர் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்று அரசுக்கு முறையீடுகளும், பத்திரிகைகளிலும் வந்துள்ளன. நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் அனுமதி வழங்குதலும், உள்ளாட்சிகளில் கட்டட வரைப்படங்களை ஒப்புதல் அளிப்பதையும் நிறுத்திவைத்தமையினால் கட்டடம் கட்டும் வேலைத் தொழிலாளர்கள் வேலையின்மையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

1978 ஏப்ரல் 3] [திரு. கி. மனோகரன்]

இச்சட்டத்தின்கீழ் விவசாய நோக்குடைய சுற்றுப்புற கிராமங்கள் அதிக அளவில் கொண்டு வரப்பட்டதால், பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் விவசாயம் அல்லாத பகுதியாக வரையறுக்கப்பட்ட விவசாய நிலங்கள் இச்சட்டத்தால் எடுத்துக் கொள்ளப்படும் என பீதியை உண்மையான விவசாயிகளிடையே உண்டாக்கியது. இது ஆயிரக்கணக்கான விவசாயிகளை பாழடிப்பதுடன், உணவு உற்பத்தியும் பாதிக்கும்.

இச்சட்டம் பெண்களின் சொத்து உரிமையை பறிப்பதோடு உரிய வயதடையாத சிறார்கள் சொத்து வைத்துக்கொள்ளவோ அல்லது வழிமுறை உரிமை பெறவோ இயலாத நிலையையும் உண்டாக்கியது. இது பெண்களுக்கு முதிய வயதிலும், சிறார்கள் உரிய வயது அடைந்த பின்பும் சொல்லொணாத் துயரத்தையும் விளைவிக்கும்.

இச்சட்டம், உச்ச வரம்பிற்குட்பட்ட காலிநிலங்களையும், கட்டடத்துடன் கூடிய நிலங்களையும், விவசாய நிலங்களையும், விற்பனை செய்யவோ, அடைமானம், தானம், குத்தகைக்கு விடல் போன்ற மாற்றுதல்களை எளிதில் செய்ய இயலாத நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. மேலும், அரசுக்குப் பத்திர விற்பனை மூலமும், பதிவுக் கட்டணம் மூலமும் வரவேண்டிய வருமானம் பாதிக்கப்பட்டதோடு அல்லாமல், வீடு, காலிமனை, விவசாய நிலங்கள் ஆகியவைகளை விற்றோ, அடைமானம் செய்தோ, திருமணம், மற்றும் இதர எதிர்பாராத செலவினங்களைச் சமாளிக்க வேண்டிய பொதுமக்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன், வருவாய்த் துறை அமைச்சர் என்ற முறையில் என்னிடம் வந்த விண்ணப்பங்கள் 100 அல்ல, ஆயிரக்கணக்கில். அவர்கள் கேட்டார்கள், எனக்கிருக்கிற கொஞ்சம் நிலத்தை விற்று எனது குழந்தைக்குத் திருமணம் செய்யவேண்டும், அதற்கு எக்ஸம்ஷன் கொடுத்துத் தீரவேண்டுமென்று கேட்டபொழுது, என்னைத் தடுத்து நிறுத்தியது இந்தச் சட்டம் என்பதை நான் மறுப்பதற்கில்லை. அந்தக் குடும்பம் எந்த அளவு கண்கலங்கி இருக்கும் என்பதையும் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

அதேபோல், படிப்பதற்காக, என்னுடைய குழந்தையைப் படிக்க வைக்கவேண்டும், அதற்காக என்னுடைய நிலத்தை விற்கப் போகிறேன், எக்ஸம்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்ட

பொழுது நான் மறுத்திருக்கிறேன், சட்டம் எனது கையைப் பிடித்து நிறுத்திற்று, செய்ய முடியாமல் போயிற்று. இவைகளை யெல்லாம் உடைத்துத் தூளாக்கிவிட்டு ஒரு புதிய வழியை உண்டாக்கவேண்டும் என்றுதான் இது கொண்டு வரப்பட்டிருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அச்சட்டம் பொதுமக்களுக்குப் பெரிதும் பாதிப்பு ஏற்படுத்தி யுள்ளது. நிலங்களை விற்கவோ, அடைமானம் செய்யவோ இயலாத தால் பல திருமணங்கள் தடைப்பட்டன. நடுத்தர மக்களும், ஏழைகளும், தமது சேமிப்பை நிலங்களில் முதலிட்ட ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களும், அந்த நிலங்களைப் பாதுகாப்பாகக் காட்டி கடன் எழுப்ப முடியாத நிலையில் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். முன்பணம் கொடுத்து ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் நிலத்தை வாங்கி வீடுகள் கட்ட முடியாமலும், முன்பணத்தை இழக்கும் நிலையையும் ஏற்படுத்தியது.

அது மட்டுமல்ல, ஏற்கனவே கட்டடங்கள் கட்டிக் கொண்டி ருந்தவர்கள் தங்கள் பணியைத் தொடர்வதைத் தடுக்க இது வழி வகை செய்கிறது. அந்தச் சட்டம் எந்த அளவு பாதித்தது என்று மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். பிற்காலத்தில் விரிவுபடுத்த நிலம் வைத்துள்ள சிறு தொழில் நிறுவனங்கள், நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் விதிவிலக்கு பெறும் வரை கட்டடங்கள் கட்ட இயலவில்லை. இது தொழில் வளர்ச்சியை பாதித்தது.

பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இச்சட்டத்தினால் ஏற்பட்ட துன்பங்களை நீக்க, நகர்ப்புற நிலங்களின் மீதான சமூக சீர்திருத்தத்தைக் கவனத்தில் கொண்டு, அரசு இந்தப் புதிய சட்ட முன்வடிவைக் கொண்டு வந்துள்ளது. அதன் காரணமாக, கீழ்க் குறிப்பிட்ட முக்கிய மாறுதல்கள் சட்ட முன்வடிவில் கொண்டு வரப்பட்டுள்ளன.

தற்போதுள்ள சட்டம் நீக்கப்படுகிறது என்பதை நான் ஆரம்பத்திலும் சொன்னேன், இப்பொழுதும் தெரிவிக்க விரும்பு கிறேன்.

சென்னை நகர்ப்புறக் கூட்டுப் பகுதி 1,400 சதுர கிலோ மீட்டரிலிருந்து 575 சதுர கிலோ மீட்டருக்கும், மற்ற பகுதிகள் தற்போதுள்ளதில் மூன்றில் ஒன்றாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

இதன் நோக்கம் கிராமப் பகுதிகளை நீக்கி, நகர்ப்புற வளர்ச்சிப் பகுதிகளை மட்டும் சட்ட அமுலிலுள்ள பகுதியாக்குதலாகும்.

விவசாய நிலங்களை நீக்குதல் விவசாய நிலங்கள் முழுமையாக இச்சட்டத்தின் பிடியிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் (Master Plan) கீழ் விவசாய மல்லாத பகுதியாகக் காண்பிக்கப்பட்டாலும் விவசாய காரியத் துக்காக உபயோகப்படுத்தப்படும் நிலங்கள் இச்சட்ட விதிகட்கு உட்படாது. உணவு உற்பத்தி எவ்விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்பது இந்த அரசின் ஆசை. ஆனால் விவசாய நிலங்கள், மற்ற உபயோகங்களுக்குப் பயன்படுத்தப்படுமானால், இந்த விதிகள் அவைகளுக்கும் பொருந்தும்.

உச்ச வரம்பு காலி நிலங்களுக்குப் பொருந்தும் பகுதிகளைச் சொன்னேன். கூட்டுப் பகுதிகள்—சென்னைக்கு தற்போதுள்ள உச்சவரம்பு 500 சதுர மீட்டர். சட்ட முன்வடிவுப்படி உச்ச வரம்பு, தனி நபருக்கு 500 சதுர மீட்டர், குடும்பத்துக்கு 2,000 சதுர மீட்டர், தொழில் நிறுவனங்களுக்கு 2,000 சதுர மீட்டர் கொடுக்கப்படுகிறது. சேலம், கோவை, மதுரை, திருச்சிராப் பள்ளிக்கு, 1,500 சதுர மீட்டர் தனி நபருக்கு. அதற்குப் பிறகு குடும்பத்துக்கு 3,000 சதுர மீட்டர்; தொழில் நிறுவனத்துக்கு 3,000 சதுரமீட்டர். திருநெல்வேலியில் தனி நபருக்கு 2,000 சதுர மீட்டர், குடும்பத்துக்கு 4,000 சதுர மீட்டர், தொழில் நிறுவனத்துக்கு 4,000 சதுர மீட்டர்.

தமிழ்நாட்டின் 400-க்கு மேற்பட்ட நகர்ப்புற பகுதிகட்கு ஒரே மாதிரியான வழிமுறைகள் இப்பொழுது ஏற்படுத்த முடியாது. உச்சவரம்பு, அப்பகுதி முன்பே வளர்ந்துள்ள நிலையையும் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய வளர்ச்சியையும் கொண்டு ஏற்படுத்தப் பட வேண்டும். எனவே, இச்சட்டம் தமிழ்நாட்டில் 6 நகர்ப்புற பகுதிகளில் மட்டும் மூன்றுவிதமான உச்சவரம்புகளுடன் முதலில் அமுல்படுத்தப்படுகின்றது.

முன்பே நன்கு வளர்ந்துள்ள சென்னை நகர்ப்புற கூட்டுப் பகுதியில் ஒரு நபருக்கு உச்சவரம்பு 500 சதுர மீட்டர் முதல் வகையாகவும், சென்னையைப் போல வளர்ச்சியடையாததும் மேலும் வளரக் கூடியதுமான மதுரை, திருச்சி, கோயம்புத்தூர்,

மற்றும் சேலம் நகரப் பகுதிகள் 1,500 சதுர மீட்டர் உச்ச வரம்புடன் இரண்டாம் வகையாகவும், இவைகளைவிட வளர்ச்சிக் குறைவான திருநெல்வேலி நகர்ப்பகுதி 2,000 சதுர மீட்டர் உச்சவரம்புடன் மூன்றும் வகையாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு நகர்ப்புறங்களுக்கும் அங்குள்ள காலி நிலம், ஜன நெருக்கம், இவைகளைப் பொறுத்தும், பிற்கால முழு வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், முன்பே ஜன நெருக்கமுள்ள நகரங்களில் மேலும் மேலும் குடியேற்றத்தைக் குறைக்கவும், ஜனநெருக்கம் குறைந்த இடங்களில் தொழில்களை நிறுவ ஊக்குதலைக் கருத்தில் கொண்டும் பலதரப்பட்ட உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளது.

(பிற்பகல் 1-40)

குடும்பத்திற்கு, நான் விளக்கத்தை ஏற்கனவே சொல்லி விட்டேன். அதற்குப் பிறகு உச்சவரம்புக்கு மேல் சிறிதளவு அதிகமாக உள்ள நிலங்கள், உபரி நிலங்களாக கருதப்படாமை. உச்சவரம்பிற்கு மிகையாக உள்ள காலி நிலம், கட்டடங்கள் அல்லது வேறு அமைப்பு முதலியவை பற்றிய விதிமுறைகள் செயலில் உள்ள பகுதிகளில் அவ்வித முறைக்கிணங்க கட்டடங்கள் கட்டுவதற்கும் அல்லது வேறு அமைப்பை நிறுவு வதற்கும் பொருத்தமற்றது அல்லது பயன்படுத்த முடியாதது என்று தகுதி வாய்ந்த அதிகாரி மன நிறைவுற்றால், அல்லது கட்டடங்கள் பற்றிய அத்தகைய விதிமுறைகள் செயலில் இல்லாத பகுதிகளில், வரையறுக்கப்பட்ட முறையிலான விசாரணையின் மூலம் உச்சவரம்புக்கு மிகையாக உள்ள நிலம் கட்டடங்கள் கட்டு வதற்கும் ஏனைய அமைப்புகளை நிறுவுவதற்கும் பொருத்தமற்றது அல்லது உபயோகமற்றது என்று தகுதி வாய்ந்த அதிகாரி மன நிறைவுற்றால், வருவாய் வாரியத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும். வருவாய் வாரியம், தான் தகுதி என்று கருதுகிற விசாரணைக்குப் பிறகு அத்தகைய காலி நிலம் உச்சவரம்புக்கு மிகையான நிலம் இல்லை என அறிவிக்கலாம்.

ஆனால் அதற்குப் பிறகு கொடுக்கப்படுகிற தொகை தற்போதுள்ள சட்டப்படி கொடுக்கப்படும் தொகை ஒரு சதுர மீட்டருக்கு 10 ரூபாய், சட்ட முன்வடிவின்படி கொடுக்கப்படும் தொகை ஒரு சதுர மீட்டருக்கு 50 ரூபாய்க்கு மேற்படாமல். இரண்டாவது, ஒரு சதுர மீட்டருக்கு 5 ரூபாய், தற்போது கொடுக்கப்படுவது. சட்ட முன்வடிவின்படி ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய் மேற்படமால். மூன்றாவது, ஒரு சதுர மீட்டருக்கு 5 ரூபாய். இப்போது. சட்ட முன்வடிவின்படி ஒரு சதுர மீட்டருக்கு 15 ரூபாய்க்கு மேற்படாமல். அதனை அதிகப்படுத்தியமைக்கான காரணங்களைக் குறித்து வைத்திருக்கிறேன்.

இச்சட்டமானது சமூக சீர்திருத்த மற்றும் சீரமைப்புச் சட்டமானபடியால், நில ஆர்ஜித சட்டப்படி எடுக்கும் நிலங்களுக்குக் கொடுக்கப்படும் ஈட்டுத் தொகையைப் போன்று கொடுக்க இயலாது. அதே நேரத்தில் சென்னை மவுன்ட்ரோட்டில் உபரி நிலம் எடுக்கப்படுமானால் ஒரு லட்சம் மதிப்புள்ள 1 மனைக்கு பழைய சட்டத்தின் கீழ் ரூ. 2,230 மட்டுமே வழங்கப்படும். இந்தத் தொகை மிக மிகக் குறைவாக உள்ளதால் இச்சட்டத்தின் முன் வடிவில் ஒரு மனைக்கு அதிகபட்சமாக ரூபாய் 11,500 வழங்கலாம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது, சமன் செய்து பார்க்கும்போது குறைவாகத் தோன்றினாலும் மத்திய சட்டம் அமுலில் உள்ள பம்பாய் மலபார் குன்றிலும், டெல்லி கன்னட் பிரிவிலும், மற்றும் கல்கத்தா சௌரங்கியிலும் கொடுக்கப்படும் தொகை மனை ஒன்றுக்கு ரூபாய் 2,230 என்பதை நான் நினைவு கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். 3—8—1976-க்கு முன் அனுமதிக்கப்பட்ட நில வரைப்பட நிலங்கள்பற்றி, இந்த லே அவுட் ஏற்பளிக்கப்பட்டிருந்தால் அத்தகைய காலி நிலங்கள் உச்ச வரம்புக்கு மிகுதியான நிலம் எனக் கருதப்படமாட்டாது. ஆனால் இந்த மனைகளை வாங்குபவர்கள் இதை வாங்கிய பின்பும் நில உச்ச வரம்புக்கு உட்பட்டவர்களாக இருந்தால் மட்டுமே அவர்களுக்கும் மனைகளை விற்பனை செய்யலாம்.

பழைய சட்டத்தில் பிரிவு 4 (8); பிரிவு 25, பிரிவு 26, பிரிவு 27 அறவே நீக்கப்பட்டுள்ளன. இந்த இடர்ப்பாடான விதிமுறைகளுக்குப் பதிலாக நிலத்தை மாற்றுபவர்கள் பத்திரப் பதிவு அதிகாரி முன் உறுதிமொழி தாக்கல் செய்வதற்கு மட்டும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின் 14, 15, 20, (3), 27 மற்றும் 48 விதிகள் நீங்கலாக மற்ற சட்ட முன்வடிவில் உள்ள விதிகள் 3-8-1976 முதல் செயலுக்கு வந்ததாகக் கருதப்படும். பழைய சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் புதிய சட்ட முன்வடிவில் உள்ள

[திரு. கி. மனோகரன்] [1978 ஏப்ரல் 3

விதிமுறைகளுக்கு முரண்படாத வகையில் புதிய சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகக் கருதப்படும். மற்றவைகள் நடைமுறையில் இல்லாதவைகளாகக் கருதப்படும். இந்தக் கருத்தைத் தருவது, இந்த அவசர அவசியமான இந்தத் திருத்தத்தை நிறைவேற்றி, ஏற்கனவே மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கிற தொல்லைகளிலே இருந்து அவர்களை மீட்பதற்கு இந்த அவை உதவும் என்ற நம்பிக்கையோடு, இங்கே செலக்ட் கமிட்டிக்கு இதை அனுப்பவேண்டும் என்று கேட்டுக் கொண்டதை வாபஸ் வாங்கி, உடனடியாகச் செயல்படுத்தவேண்டிய திட்டம் என்ற காரணத்தாலே, மக்கள் நலம் ஒன்றே நமது குறிக்கோள் என்ற அடிப்படையில் இதை அணுகவேண்டும் என்பதற்காகவும், தேங்கி இருக்கிற பொருளாதார வேலைகள் துரிதமடைவதற்காக நீங்கள் உறுதுணையாக அமையவேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டு, இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது விவாதம் முடிவுற்றது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அரசு எடுத்துக் கொள்ள எந்தவிதமான மிச்ச நிலமும் இந்தச் சட்டத்தினால் கிடைக்காது என்று தெரிய வருவதால், நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

1978 ஏப்ரல் 3]

பிரிவு 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 10 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்"

THE HON. THIRU K. MANOHARAN: Sir, I move:—

(1) In Clause 10, in sub-clause (2) for the words "Board of Revenue" wherever they occur, substitute the words "State Government".

The amendment, was put and carried.

பிரிவு 10, திருத்தியபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 11 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 12.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 12 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

THE HON. THIRU K. MANOHARAN: Sir, I move:— In Clause 12, in sub-clause (1), in item (*b*)—

(*a*) in sub-item (i), omit the words "not less than ten rupees but";

(*b*) in sub-item (ii), omit the words "not less than five rupees but";

(*c*) in sub-item (iii), omit the words "not less than five rupees but".

The amendment was put and carried.

பிரிவு 12, திருத்தியபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 13 முதல் 20 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 21.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 21-வது பிரிவுக்குத் திருத்தம் கொடுத்திருந்த மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் இருக்கையில் இல்லை; திருத்தம் முன்மொழியப்படவும் இல்லை.

பிரிவு 21 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 22 முதல் 51 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

அட்டவணை 1, 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு திருத்தியபடி (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/78) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தியபடி, சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.50 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(6) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*206. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தை கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/78).

* 31—3—1978 ஆம் தேதியன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

இணைப்பு I

(22-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 777க்கான விடையைக் காண்க.)

தமிழ்நாட்டில் கிராம வீட்டுவசதிக் கூட்டுறவு சங்கங்களின் விவரம்.

வரிசை எண்.	மாவட்டத்தின் பெயர்.	வருவாய்க்கோட்ட அதிகாரியின் பிரிவு.	மையத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)
1.	சென்னை	இல்லை	இல்லை
2.	செங்கல்பட்டு	1. செங்கல்பட்டு	மதுராந்தகம்
		2. சைதாப்பேட்டை	சைதாப்பேட்டை
		3. திருவள்ளூர்	திருவள்ளூர்
		4. காஞ்சிபுரம்	ஸ்ரீபெரும்புதூர்
3.	வடாற்காடு	5. இராணிப்பேட்டை	வாலாஜா
		6. இராணிப்பேட்டை	வேலூர்
		7. திருப்பத்தூர்	வாணியம்பாடி
		8. திருவண்ணாமலை	செங்கம்
		9. செய்யார்	வந்தவாசி
4.	தர்மபுரி	10. தர்மபுரி	தர்மபுரி
		11. கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி
5.	தென் ஆற்காடு	12. சிதம்பரம்	கடலூர்
		13. திண்டிவனம்	திண்டிவனம்
		14. திருக்கோயிலூர்	விழுப்புரம்
		15. விருத்தாச்சலம்	விருத்தாச்சலம்
		16. விருத்தாச்சலம்	கள்ளக்குறிச்சி
6.	தஞ்சாவூர்	17. தஞ்சாவூர்	தஞ்சாவூர்
		18. கும்பகோணம்	பாபநாசம்
		19. மாயூரம்	சீர்காழி
		20. நாகப்பட்டினம்	திருவாரூர்
		21. மன்னார்குடி	மன்னார்குடி
		22. பட்டுக்கோட்டை	பட்டுக்கோட்டை
7.	திருச்சிராப்பள்ளி	23. திருச்சிராப்பள்ளி	மணப்பாறை
		24. முசிறி	முசிறி
		25. அரியலூர்	அரியலூர்
		26. கரூர்	கரூர்
8.	புதுக்கோட்டை	27. புதுக்கோட்டை	புதுக்கோட்டை
		28. அறந்தாங்கி	அறந்தாங்கி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1978 ஏப்ரல் 4

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Cauvery Water Dispute.

*Q. 786—THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have received any communication from East Thanjavur District Development Council recommending convening of a meeting of all parties to consider the question of a permanent solution to Cauvery water dispute; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) சர்வகட்சிக் கூட்டம் விரைவில் கூட்டப்படும்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, காவிரி நீர் பிரச்சினை சம்பந்தமாக அனைத்துக் கட்சிகளின் சார்பாக உச்ச நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடரப் பட்டது. அந்த வழக்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அது திரும்பப் பெறப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அது என்ன காரணத்திற்காகத் திரும்பப் பெறப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1971 ஆம் ஆண்டு உச்ச நீதி மன்றத்தில் தமிழகத்தின் சார்பில் ஒரு வழக்கு போடப்பட்டது. 1971 அக்டோபரில் கர்நாடகம் புதிய அணைகள் கட்டுவதை நிறுத்தச் சொல்லி ஒரு வழக்கு போடப்பட்டது. அதற்கு பிறகு அந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டு விட்டன. அன்றையதினம் இருந்த மத்திய அரசு நமது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதால் அந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டதாக நான் அறிகிறேன்.

[1978 ஏப்ரல் 4

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காவிரி நீர்ப் பிரச்சினை என்பது தஞ்சை மாவட்டத்துடைய தலை எழுத்தை மட்டுமல்லாது தமிழகத்தின் தலை எழுத்தையே நிர்ணயிக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே விரைவில் சர்வ கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டு கர்நாடக அரசோடு சுமுகமான முறையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நம்முடைய அரசு முன்வருமா என்பதை மிகவும் ஆவலோடு விரும்பிக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அதே உணர்வுதான் இந்த அரசாங்கத்தின் உணர்வாகவும் இருக்கின்றது. அதிலே விரைவில் தீர்வு காண வேண்டும் என்பதே நமது அரசாங்கத்தின் நோக்கம். ஆனால் அதற்காக சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டிவிட்டால் மட்டும் ஒரு தீர்வு ஏற்பட்டுவிடும் என்று நான் கருதவில்லை. இருப்பினும் சர்வகட்சிக் கூட்டம் விரைவில் கூட்டப்படும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, கேரளத்தில் இருந்து வருகின்ற பெரியாற்றுத் தண்ணீரை தமிழகத்திற்குக் கொண்டுவர நூறாண்டுகள் ஒப்பந்தம் போட்டிருப்பது போல் மைசூரிலுள்ள காவிரித் தண்ணீரையும் கொண்டுவருவதற்கான ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டால் மிக நன்றாக இருக்கும். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மைசூர் மாநில முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ் அவர்களுடன் பேசி மேலும் ஒரு நீண்ட காலத் திட்டம் போடுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உடனடித் தேவையைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநில முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் சென்ற ஆண்டு கர்நாடக முதலமைச்சரோடு பேசி தஞ்சை மாவட்டத்துக்கு வேண்டிய தண்ணீரைப் பெற்றுத் தந்தார்கள். நீண்ட கால ஒப்பந்தம் பேச்சுவார்த்தையில் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோது எத்தனை ஆண்டுகள் என்ற பிரச்சினை எழவில்லை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைவில் கூட்டப்படும் என்று சொன்னார்கள். எப்போது என்று அறிவிக்கப்படுமா ? அதுமட்டுமல்லாமல் சர்வ கட்சி சார்பில் கூட்டப்படும் என்றார்கள். ஆனால் விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு அமைப்புக்கள் இருக்கின்றன. அந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் அழைக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1978 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சர்வ கட்சிக் கூட்டம் கூட்ட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அது ஏற்கனவே நடந்ததைப் போல் இருந்துவிடக் கூடாது என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சென்ற 19—2—1975-இல் சர்வ கட்சிக் குழுக் கூட்டத்தில் காவிரிப் பிரச்சினை பற்றி விவாதிக்கப்பட்டது. 29—5—1975-இல் இந்தக் கூட்டத்தின் முடிவிற்குப் பிறகு, அரசாங்கத்தின் சார்பிலே கடிதம் எழுதப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று சர்வ கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்துவிட்டார்கள். அது மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்கு வந்த பிறகு சர்வ கட்சிக் குழுவோடு கலந்து பேசி காரியங்கள் ஆற்றுகிறபோது ஒவ்வொரு கூட்டத்திலேயும் சர்வ கட்சிக் குழு கலந்துதான் முடிவு எடுக்க வேண்டும் என்று கருதப்பட்டது.

இந்த ஆட்சி இப்போதுதான் வந்திருக்கின்றது. இந்தப் பிரச்சினை குறித்து நம்முடைய மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடத்திலே வற்புறுத்திச் சொன்ன பிறகு சர்வ கட்சிக் குழுவைக் கூட்டினால் அது குறித்து சர்வ கட்சிக் கூட்டத்திலே விவாதிப்பதற்கு நன்றாக இருக்கும். ஆகவே முதலிலே இது சம்பந்தமாக கர்நாடக அரசுடனும், மத்திய அரசுடனும் பேசிய பிறகு அதற்குப் பிறகு நாம் பேசி முடிவெடுக்கலாம் என்று முதலமைச்சரவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

டாக்டர் கே. சமரசம் : காவிரி நீர் பிரச்னைமீது உச்ச நீதிமன்றத்தில் அரசு முறையிட்டு 1971-ல் அதை திரும்பப் பெற்றதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது எதன் அடிப்படையில் திரும்பப் பெறப்பட்டது ? இந்திய ஒருமைப்பாட்டின் அடிப்படையிலா அல்லது மாநில சுயாட்சி தேவை என்ற அடிப்படையிலா அல்லது தனி நாடு, தனிக் கொடியுடன் தமிழ்நாட்டின் பிரதமராக, ஷேக் முஜிபிர் ரகுமான் இருக்க வேண்டும் என்பதற்கு முன் உதாரணமாக அது திரும்பப்பெறப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

திரு. ஜே. ஜேம்ஸ் : கர்நாடக மாநிலம் ஹேமாவதி, கபினி ஆகிய நதிகளின் குறுக்கே அணைகள் கட்டிக்கொண்டிருந்தது மத்திய அரசின் விருப்பத்திற்கு எதிராக. ஆகவே, பேச்சு வார்த்தை என்ற முறையில் போய்க்கொண்டிருந்தால், கருநாடக மாநிலம் அந்த அணைகளைக் கட்டி பூர்த்தி செய்து விட்டால் நிச்சயமாக தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய தண்ணீர் வராமல் தடைபடும், அதனால் தமிழ்நாடு பாதிக்கும். ஆகவே, இந்த முயற்சிகளில் துரித நடவடிக்கை எடுக்க அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> அணைகளைப் பொறுத்தவரையில் 50, 60 வருடத்திலிருந்து கட்டத் தொடங்கி விட்டார்கள். 50ஸ் அன்ட் 60ஸ். ஒப்புதல் பெறாமலேயே, 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கிறபோதே அந்த அணைகளைக் கட்டத் துவங்கிவிட்டார்கள். மாநில அரசு எடுத்துச் சொல்லியும்கூட அதை ஒன்றும் நாம் தடுத்து நிறுத்த முடியவில்லை. இன்னும் சொல்லப்போனால் அதனால் தான் இந்தப் பிரச்சினைகளே எழுந்திருக்கின்றன. தண்ணீரைத் தேக்கி வைக்க வாய்ப்புகள் கர்நாடக அரசுக்கு இந்த அணைகளைக் கட்டிவிட்டதால் ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு இறுதியான தீர்வு காணவேண்டும் என்பதால் நமது முதலமைச்சர் அவர்கள் நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் திருவனந்தபுரம் வந்திருந்தபோது எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய பாரதப் பிரதமர் அவர்களும் நவம்பர் மாதம் மூன்று மாநிலங்களின் முதல் அமைச்சர்களின் கூட்டத்தைக் கூட்டலாம் என்று தெரிவித்திருந்தார்கள். அதற்குள் அரசியல் நிலைமைகள் மாறியதன் காரணமாக, அண்டை மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெற்றதன் காரணமாக அந்தக் கூட்டம் கூட்டப்படவில்லை. இப்போது அந்தக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று பாரதப் பிரதமரை இந்த அரசு கேட்டுக் கொள்ளும்.

<u>திரு. எஸ், ஆர். இராதா :</u> இப்பிரச்னை நீண்ட நாட்களாகத் தீராததன் விளைவாகத் தஞ்சை மாவட்டத்தில் விவசாயமும், மேட்டூரில் மின்சாரமும் பாதிக்கப்படுகிறது. இப்பிரச்னையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அந்த நடவடிக்கைகளில் ஒன்றாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடத்துவதற்காகத் தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து இலட்சக்கணக்கான ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. காவிரி நீர்ப் பிரச்னை தீர்க்கமுடியாத நிலையிலிருந்தாலும் வசூலிக்கப் பட்ட பணத்தை மீண்டும் அந்த விவசாயிகளிடம் திருப்பிக் கொடுக்க....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கேள்வியைக் கேளுங்கள்.

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> அப் பிரச்னையைத் தீர்க்க அரசு முன்வருமா ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> நன்கொடை கொடுத்தவர்களுக்கு யார் வசூலித்தார்கள் என்று தெரியாமல் கொடுத்திருக்க மாட்டார்கள். ஆகவே, கொடுத்தவர்கள் வசூலித்தவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

<u>திரு. ப. உ. சண்முகம் :</u> காவிரிப் பிரச்னை சிக்கலான பிரச்னை என்பதை நான் அறிவேன். அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்த நான் விரும்பவில்லை. இருந்தாலுங்கூட, வழக்கு தொடரப்பட்டு, அன்றிருந்த மத்திய அரசின் பிரதமர் அவர்கள்

நாங்கள் இதை சமரசம் செய்து வைக்கிறோம், வழக்கைத் திரும்பப்பெறுங்கள் என்று சொல்லி, வழக்கு திரும்பப் பெறப் பட்டது. பிறகு சர்வகட்சிக் கூட்டத்தில் இதை ஒரு மத்தியக் குழுவிற்கு, ட்ரிப்யூனலுக்கு விடவேண்டும் என்று முடிவு எடுக்கப் பட்டதும் உண்மை. அதற்குப் பிறகு பாபு ஜெகஜீவன் ராம் அவர்கள் நான் சமரசம் செய்து வைக்கிறேன் என்று சொல்லி அவர்கள் சமரச முயற்சியில் ஈடுபட்டு, அதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்று சொன்னார்கள். எனவே மத்திய அரசு இதில் ஈடுபட்டிருக்கிறது என்ற காரணத்தால் இந்த அரசும் அதை வலியுறுத்தி சமரசம் செய்து வைப்பதற்கு, இரண்டு அரசுகளுக்கும் இடையே சுமுகமான அளவிற்குப் பேச்சுவார்த்தைகள் நடத்தி வைக்க இந்த அரசு மீண்டும் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> நிச்சயமாக சமரச மான முறையில் தீர்வு காண இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும். நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் ப. உ. ச. அவர்கள் தெளிவாக விளக்கினார்கள். அவர்கள் சொன்னது, மத்திய அமைச்சர் திரு. ஜெகஜீவன் ராம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு ட்ரிப்யூனலுக்குப் போக வேண்டிய தில்லை என்று தீர்மானித்ததையும்—சர்வ கட்சிக் கூட்டத்தைக் கலந்து தீர்மானித்திருக்க வேண்டும் என்பதுதான் நமது முதல் அமைச்சர் அவர்களின் கருத்தாகும். அவர்கள் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னவுடனே சரி என்று அரசு முடிவு எடுத்தது சரியானதல்ல. சர்வ கட்சிக் குழுவினர் ட்ரிப்யூனலுக்குப் போகவேண்டுமென்று சொல்லிவிட்டு அதை ஏற்றுக்கொண்டு அதற்குப் பிறகு அவர்கள் சொன்னார்கள், ஏற்றுக்கொண்டோம் என்றால் சர்வகட்சிக் குழுவின் கதி என்னவாகும் ? சர்வ கட்சிக் குழுவைக் கலந்துகொண்டு ஒரு முடிவுக்கு வந்திருந்தால் ஒரு ஸ்திரமான நிலை வந்திருக்கலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

நதிகளை தேசிய மயமாக்கல்.

*வினா 787—

<u>திரு. என். கிட்டப்பா :</u> மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நதிகளை தேசிய மயமாக்கக் கோரி கோவை விவசாயிகள் சங்கம் மாநில அரசுக்கு ஏதேனும் வேண்டுகோள் விடுத்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், மாநில அரசின் கருத்து யாது ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

[1978 ஏப்ரல் 4

[முற்பகல் 9—10]

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, நதிகள் பற்றிய பல்வேறு பிரச்சினைகள் இன்றையதினம் உருவாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தால், மத்திய அரசை வற்புறுத்தி, நதிகளை எல்லாம் தேசியமயமாக்குவதற்கு மாநில அரசு வலியுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த அரசைப் பொறுத்த அளவில் இதை ஒரு பொதுக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. தேர்தல் அறிக்கையிலும் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது. ஆனால் இங்குள்ள கேள்வி, கோவை விவசாயிகள் மாநில அரசுக்கு இதற்காக மனு ஏதேனும் தந்துள்ளார்களா என்பது பற்றி. கோவைக்கு பிரதம அமைச்சர் அவர்கள் வந்த நேரத்தில் அங்குள்ள விவசாயிகள் மனுக் கொடுத்துள்ளார்கள். அந்த மனுவைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கம் தான் எதுவும் செய்யவேண்டும்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ விஷயங்களைப் பொதுப்பிரச்சினையாக மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளும்போது, நதிகளை மட்டும் ஏன் பொதுப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளக் கூடாது? எங்கெங்கு தட்டுப்பாடு வருகிறதோ அங்கெல்லாம் ரேஷன் கொண்டு வருகிறார்கள், பவர் ரேஷன், ஃபுட் ரேஷன் இவையெல்லாம் கொண்டுவரும்போது, நதிநீரையும் பங்கீட்டு முறையில் வினியோகிப்பதற்கு, உணவுப் பங்கீட்டு முறையைப்போல் கொண்டு வருவதற்கு மத்திய அரசைக் கட்டாயப்படுத்த மாநில அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நம்மைப் பொறுத்தவரையில், தெளிவான நிலைமையில் இருக்கிறோம். ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தியாகின்ற நதி, அந்தந்த நாட்டின் இயற்கைச் செல்வங்கள், அவைகளிலுள்ள தண்ணீரைப் பயன்படுத்தி—அதாவது குறைந்த அளவுத் தண்ணீரைப் பயன்படுத்தி, அதிக அளவு மின்சாரத்தையும், பாசனத்தையும் பெற வேண்டும் என்று முயற்சி செய்ய வேண்டும். அந்தவிதமான வாய்ப்புகள் மூலம் ஒரு நாட்டுக்கு நன்மை செய்யவேண்டும் என்பது நம்முடைய திட்டவட்டமான கொள்கை. ஆனால் நதிகளுக்கு இடையில் மாநில எல்லைகள்—குறுக்கே வந்து சேருவதால் தான் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்து சேருகின்றன. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் கூட நதிநீர்ப் பங்கீட்டில் விசேஷ அக்கறை செலுத்தி வருகிறார்கள். இன்றைக்கு பிரதமராக இருக்கின்ற மொரார்ஜி தேசாய் அவர்கள் நதிநீர்ப் பங்கீட்டு முறையில் பிரச்சினைகளில் சீக்கிரமாக ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

978 ஏப்ரல் 4]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மண்டலங்கள் எல்லாம் சேர்ந்து ஒரே மண்டலமாக இயங்குவதற்கு வழி செய்திருப்பது போல், நதிகள் பிரச்சினையையும் ஒன்றாக இணைப்பதற்காக தேசியமயமாக்குவதில் மத்திய அரசு தாமதம் காட்டுகிறதே, மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்தி எடுத்துக் கூறுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இதைப்பற்றி மத்திய அரசிடமும், பிரதமரிடமும் நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். பிரதமரைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளுகின்ற வகையில் நதிநீர்ப் பங்கீடு அமைய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். திடீரென்று நதிகளை எல்லாம் மத்திய அரசு எடுத்துக்கொள்கிறது என்று சொல்லி, மாநிலங்களை வற்புறுத்தக்கூடாது என்பதில் திடமாக இருக்கிறார்கள். அதே நேரத்தில் மற்ற மாநில பிரச்சினையானாலும், ஒரு மாநிலத்தில் இருக்கின்ற ஆறுகளிலுள்ள தண்ணீர் உபரியாகக் கடலில் கலக்கின்ற பிரச்சினையாக இருந்தாலும், அதை உபயோகப்படுத்துவதிலும், தேசியக் கண்ணோட்டத்தோடு நாட்டின் நலனில் அக்கறை கொண்டு, உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசாங்கம் அக்கறையோடு இருக்கிறது. ஆகவே இதில் தீர்வு ஏற்படாமல் போகுமானால் வேண்டுமானால் இதை நாம் வற்புறுத்தலாம்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, நதிகளைத் தேசியமயமாக்க வேண்டும் என்ற அடிப்படையில், கங்கையையும், காவேரியையும் இணைப்பதற்காகப் பெரியதொரு திட்டம் போடப்பட்டதே, அந்தத் திட்டம் இப்போது எந்த நிலைமையில் இருக்கிறது? இதற்கு எவ்வளவு செலவாகும், எந்த ஆண்டு முடிவு அடையும் என்பதைப் பொதுப்பணி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திட்டம், கங்கையிலிருந்து காவேரி வரை இணைக்கவேண்டும் என்பது. தமிழக சட்ட மன்றத்தின் எல்லைக்குள் இருப்பது காவேரி வரைக்கும் தான். இந்தத் திட்டத்தினுடைய மற்ற விவரங்களைப்பற்றியெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், பாராளுமன்றத்தில் கேள்விகளைப் போட்டால் தெரிந்துகொள்ளலாம்.

திரு. கே. பண்ணை சேதுராம்: இந்தியாவில், மாநில சுயாட்சி பற்றி பேசப்பட்டு வருகிறது. மாநில சுயாட்சி என்று வரும்போது, ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கின்ற தண்ணீர் அந்தந்த மாநிலத்திற்கு வேண்டும் என்று கேட்பார்கள். அந்த நிலையில் காவிரி உற்பத்தியாகும் மைசூரில், அவர்கள் காவிரி தங்களுக்குத் தான் சொந்தம் என்று சொல்லக்கூடும். ஆகவே தேசிய

மயமாக்குவது என்ற அடிப்படையில் எல்லா நதிகளையும் தேசிய மயமாக்கி விட்டால் இந்தப் பிரச்சினைகளை மாற்றி தீர்த்து வைக்க முடியும்: ஆகவே இந்த அரசு அதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து சரியானதல்ல. சுதந்திரம் பெற்ற நாடுகளிலே கூட நதிப் பங்கீட்டில் உடன்பாட்டிற்கு வருகின்றன. வங்க தேசமும், இந்தியாவும் உடன்பாட்டிற்கு வந்திருக்கின்றன, அதேபோல் பாகிஸ்தானும், இந்தியாவும் உடன்பாட்டிற்கு வந்திருக்கின்றன. ஆகவே, மாநில சுயாட்சிக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ஆனால், சுதந்திரம் பெற்றிருக்கிற நாடுகள் ஒன்றாக வருகிறபோது, ஒரே நாட்டிலே இருக்கின்ற மாநிலங்கள் வரவில்லையே என்பதுதான் அவர்கள் குறை.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், இந்த நதிநீர் பங்கீட்டு விஷயத்திலே அடிக்கடி தகராறுகள் ஏற்படுகின்றன. அதனாலே. விவசாயிகளுக்கு பெரும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்த நதிநீரை தேசியமயமாக்கினால் ஒழிய, வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த அரசு கட்டாயமாக, எல்லா நதி நீர்களையும் தேசியமயமாக்க வேண்டுமென்று சென்ட்ரல் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எப்போதுமே இல்லாதவர்கள் இருக்கின்றவர்களைப் பார்த்துக் கேட்பதுதான் தேசியமயமென்பது. நதி நீரைப் பொறுத்த வரையில் நம் மாநிலத்திலேயே பற்றாக்குறை. ஆனால், மற்ற மாநிலங்களில் அதிகமான அளவிலே நீர் இருக்கின்றது, தேசியமயமென்று வருகின்றபோது, அவர்கள் நம்முடைய நீர்வளம் மற்ற மாநிலங்களுக்குப் போய்விடுகிறதே என்று கருதுகிறார்கள். அதனால்தான், மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் மாநிலங்களுக்கிடையே ஒரு சமாதான உடன்பாட்டிற்கு வருகின்றபோது, அந்த வகையில் அக்ரிமெண்ட் பேசிஸ் ஏற்படுவதற்கான முயற்சி செய்து வருகின்றது. ஆகவே, நாம் மத்திய சர்க்காரை வற்புறுத்துவதில் ஒன்றும் பலன் இருக்காது.

வடக்குக் கோடை மேலழகியன் கால்வாய்.

*788 வினா— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள வடக்கு கோடை மேலழகியன் கால்வாயில் லைனிங் திட்டம் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ): அந்தக் கால்வாயில் மைல் 2-0-330-லிருந்து 2-3-330-வரை லைனிங் செய்வதற்காக ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

சுற்றுலா மையங்களுக்கு விமானப் போக்குவரத்து.

*789 வினா— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுற்றுலா ஸ்தலங்களுக்கு விமான சர்வீஸ் நடத்தும் திட்டத்தை அரசு பரிசீலித்ததா?

(ஆ) ஆமெனில், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ): தமிழகத்தில் உள்ள முக்கிய சுற்றுலா மையங்களுக்கு விமான போக்குவரத்தைத் அமைத்திடும் வகையில் இத்திட்டத்தை செயலாக்கிட இயலுமா என்பதையும் அதன் தொழில் நுட்பத்தையும் தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆய்வு செய்திட அரசு அனுமதித்துள்ளது. இதன் தொடர்பாக தனியார் நிறுவனமாகிய திருவாளர்கள் ''ஏவியேஷன் லாஸ் கன்ட்ரோல் லிமிடெட்'' (AVIATION LOSS CONTROL LTD) அளித்துள்ள அறிக்கையை சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலித்து வருகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக்கான விமான சர்வீஸ் விடுகின்றபோது, சுற்றுலா வளர்ச்சியில் இன்றையதினம் சிறந்து விளங்குகின்ற பூம்புகார் நகரத்திற்கு விமான சர்வீஸ் நடத்துகின்ற அளவிற்கான திட்டத்தை இந்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1975ஆம் ஆண்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்போது ஒரு நிறுவனத்திடம் கொடுத்து பரிசீலனை செய்ததில், 17 மார்க்கங்கள் பற்றி அவர்கள் பரிசீலித்து, 7 மார்க்கங்களுக்கு இயலும் என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அதிலே சென்னை, பாண்டிச்சேரி, தஞ்சை, மதுரை, சேலம், இராமேஸ்வரம், தூத்துக்குடி ஆகிய இடங்களை அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனாலும், இவைகள் மீண்டும் பரிசீலனைக்கு அரசு எடுத்துக்கொண்டு முடிவை மேற்கொள்ளும்போது, வழியிலே இருக்கின்ற சிதம்பரத்தையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுற்றுலா வளர்ச்சிக்கு மையமாக இருக்கின்ற இடங்களுக்கு விமான சர்வீஸ் விடுவது என்ற அடிப்படையில் என்னுடைய தொகுதியாகிய பழனி தொகுதி இன்றையதினம் ஒரு பெரிய யாத்திரிக ஸ்தலமாகவும், இதையொட்டி இருக்கின்ற கொடைக்கானல் உலகத்திலேயே சிறந்த ஒரு சுற்றுலா மையமாகவும் இருந்து கொண்டிருப்பதாலே, இந்த இரண்டும் மிகவும் நெருக்கமாக இருக்கக்கூடிய ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால், இந்த விமான சர்வீஸ் மையத்தை பழனியிலோ அல்லது கொடைக் கானலிலோ ஏற்படுத்துவதற்கான முயற்சியை இந்த அரசு, மத்திய அரசுக்கு சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, விமான சர்வீஸ் என்பது பேருந்துகளை நாம் நினைத்த இடங்களில் விடுவதுபோல் விடமுடியாத ஒரு பிரயாணத் திட்டமாகும். ஏற்கனவே, கொடைக்கானல் முன்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கேயிருக்கின்ற சில சங்கடங்களையும், சிக்கல்களையும் மனதில்கொண்டு, அது இயலாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் இது பரிசீலனைக்கு வருகின்ற போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே அந்நிய நாட்டவாகளால் பலயிடங்களில் போர்க்கால விமான தளங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், கயத்தாறு பகுதியில் கட்டப்பட்டிருக் கிறது. இதுபோன்ற பகுதிகளில் இருக்கின்ற விமான தளங்களை மறுபடியும் படிப்படியாகச் செயல்படுத்துவதற்கு முயற்சி செய்யப் படுமா? அத்துடன் எங்கெல்லாம் விமான சர்வீஸ் இலாபகரமாகச் செயல்படவில்லையோ அத்தகைய இடங்களில் ''காப்டர் சர்வீஸ்'' மூலம் ஹெலிகாப்டர் விமான போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த விமானப் பயணத் திட்டமே இதுபோல ஏழு பேர். எட்டு பேர் செல்கின்ற விமானங்களைப் பற்றிய திட்டம்தான். அதைப்போலவே ஏற்கனவே இருக்கின்ற விமான தளங்களை எப்படிப் பயன் படுத்துவது அல்லது ஒரு சாதாரண, குறைந்த செலவிலே விமான தளங்களை அமைத்து அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதை யொட்டித்தான் இந்த திட்டமே பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தெற்கில் குறிப்பாக மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல் மிகச் சிறந்த இடம் என்று எல்லோராலும் பாராட்டப்படும் நேரத்தில் அது பற்றி விமானப் போக்குவரத்துக்கு ஆராய்ச்சி செய்யப்பட்டு

கைவிடப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதை மறு பரிசீலனை செய்து வெளிநாட்டவர்கள் அங்கு வருகின்ற சாத்தியக் கூறுகளைப் பரிசீலித்து அங்கு விமானப் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்தால் நம்முடைய நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணி மூலம் வருமானம் அதிகமாகக் கிடைக்கும் என்பதை ஆராய்ந்தறிந்து மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை மறுபரிசீலனை செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கைவிடப்பட்டது என்று கூறவில்லை. அறிக்கை தந்த அவர்கள் இயலாது என்று கூறியிருக்கிறார்கள். அதை மீண்டும் அரசு பரி சீலிக்கும் என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த விமான சர்வீஸ்கள் விடுகின்ற நேரத்தில், ஏலகிரி மலை இப்போது கோடை வாசஸ்தலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. வேலூருக்கு விமானப் போக்குவரத்து சர்வீஸ் நடத்த வேண்டு மென்று நகர்மன்றத்தில் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். எனவே, இதில் வேலூரைச் சேர்த்துக்கொள்ள அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, வேலூரைப்பற்றி முன்பே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வேலூர் சென்னையிலிருந்து ஒரு நல்ல அருமையான பாதை ரோடு வசதியுள்ள நகரமாக இருக்கின்ற காரணத்தினாலே அங்கே தேவை இல்லை, அது இலாபகரமாக இருக்காது என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இந்த அரசு சுற்றுலாத் துறையில் அதிகக் கவனம் செலுத்திக்கொண்டு, ஏலகிரி, ஏற்காடு போன்ற பகுதிகளை மிகச்சிறந்த சுற்றுலா ஸ்தலமாக ஆக்க வேண்டுமென்ற முயற்சியின் அடிப்படையில் மறுபரிசீலனை செய்யப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி இந்தியாவின் தென்கோடியில் இருக்கிறது. ''லேண்ட்ஸ் என்ட் ஆப் இந்தியா'' என்றும் அதை அழைக்கிறார்கள். அது முக்கிய டூரிஸ்ட் சென்டராக டெவலப் செய்யப்பட்டு வருகிறது. இப்பொழுதெல் லாம் மத்திய அமைச்சர்கள், குறிப்பாக பிரதமர்கூட வருவதற்கு அங்கு ஒரு ஹெலிகாப்டர் கிரவுண்டை அமைத்து அந்த வழியாகத் தான் அவர்கள் வருகிறார்கள். ஆகையினால், இந்த முக்கியத்துவத் தை உணர்ந்து கன்னியாகுமரியில் ஒரு சரியான விமான தளத்தை அமைத்து, விமானப் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே. கடந்த பரிசீலனையிலே கன்னியாகுமரியும் பரிசீலிக்கப்பட்டு, நாற்பதாவது மைலில் திருவனந்தபுரத்திலே மிகப்பெரிய விமான

தளம் இருப்பதாலும், திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரிக்கு மிகச்சிறந்த பாதை வசதி இருக்கின்ற காரணத்தினாலேயும், இன்னும் புதிதாக இரயில் தொடர்புகள் ஏற்படுத்தப்பட இருக்கின்ற காரணத்தினாலேயும் அங்கே தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், இந்த அரசு கன்னியாகுமரியை மிகப்பெரிய, 'நேஷனல் இம்பார்ட்டன்ஸ்'—தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்று கருதுகின்ற காரணத்தினாலே இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு முனைகின்ற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அரிய யோசனையும் கவனத்திலே எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையில் சுற்றுலாக் கண்காட்சி

* 790 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையில் நடைபெறும் பொங்கல் சுற்றுலா கண்காட்சியில் அரங்கு அமைப்புகளில் பங்கு கொண்ட தனியார் துறைகள் நிறுவனங்கள் ஆகியவைகளிடமிருந்து வாடகையாக வசூலிக்கப்பட்ட மொத்த தொகை எவ்வளவு?

(ஆ) நுழைவு கட்டணமாக வந்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) சுற்றுலா கண்காட்சியில் அரங்கு அமைப்புகளில் பங்கு கொண்ட தனியார் துறைகள் நிறுவனங்களிடமிருந்து வாடகையாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ.2,80,870.00.

(ஆ) நுழைவுக்கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ.8,06,542·00

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, தனியாருக்கு கொடுத்த வாடகை அரங்கைப்பற்றிய கணக்கை அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அரசாங்கமும் பல அரங்குகளை அமைத்திருக்கிறது. பஸ் ரூட்டிலே டாக்சேஷன் வசூலிக்கிறோம். அதைப்போல இந்த சுற்றுலாத் துறையில் அரசாங்க அரங்குகளுக்கு ஏன் வசூலிக்கவில்லை? அதற்கான காரணம் என்ன? இப்படி இந்த அரங்கைச் சென்னையிலே மட்டும் வைத்துக்கொண்டிருப்பதைவிட, மாவட்டத் தலைநகரங்களிலேயும் ஒவ்வொரு வருஷத்திற்கு ஒரு தலைநகரம் என்று மாற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி தனியார் துறைகள் நிறுவனங்களிடமிருந்து வாடகையாக வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று கேட்டுவிட்டு அதற்கு அளிக்கப்பட்ட பதிலைத் தொடர்ந்து விவரமே தரப்படாத ஒரு விஷயத்தைப் பற்றி. ஏன் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து, அரசு துறையிடமிருந்து வசூலிக்கப்படவில்லையென்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அரசு நிறுவனங்களிடமிருந்து, அரசு துறையிடமிருந்து அதற்கான உரிய வாடகைகள் வசூலிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசுத் துறை, பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து ரூ. 3,14,000-மும், தனியார் துறையிலேயிருந்து ரூ. 2,80,000-மும், தனி உரிமங்கள் ஏலம் விடப்பட்ட வகையிலே ரூ.3,17,000-மும் வருமானம் வந்திருக்கிறது.

புனித சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி, மன்னார்குடி

* 791 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மன்னார்குடி புனித சூசையப்பர் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகளிடம் அதன் நிர்வாகம் அதிகமாக கட்டணம் வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இது குறித்து புகார்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

அன்னூரில் உயர் இடைநிலைக் கல்வி

* 792 வினா—திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வரும் கல்வியாண்டிலிருந்து, அவினாசி தாலூக்கா, அன்னூரில் ஹையர் செகண்டரி பள்ளி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு உயர்நிலைப் பள்ளி, அன்னூர், கோவை மாவட்டம், இரண்டாவது பட்டியலில் ஹையர் செகண்டரி பள்ளியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

<u>திரு. சொ. ந. பழனிசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது ஹையர் செகண்டரி பள்ளியாக ஆரம்பிக்கப் படும் என்று சொல்கிறார்கள். ஆனால், அதில் பிரைவேட்டாக ரூ. 25,000 கலெக்ஷன் பண்ணவேண்டுமென்று சொல்கிறார்கள். அது அரசினுடைய துறையிலே செய்யப்படுமா என்று கேட்கிறேன்?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்</u>; தலைவரவர்களே, செய்யப்படாது.

<u>திரு. பெ. சு. திருவேங்கடம்</u>: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஹையர் செகண்டரி பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு ஒன்றியப் பொது நிதியிலிருந்து நிதியை எடுக்க அனுமதிக்கப்படுமா என்று நேற்று கேட்கப்பட்டது. அதற்கு அமைச்சரவர்கள் பொது மக்களிடமிருந்து வசூலித்துத்தான் கட்டப்பட வேண்டுமென்று சொன்னார்கள். ஒன்றியப் பொது நிதிக்குக்கூட பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுத்தான் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வட ஆற்காடு மாவட்டத்திலே கடந்த 4 ஆண்டுகளாக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளமையால் ஒன்றியப் பொது நிதியிலிருந்து எடுத்துக் கட்ட இந்த அரசாங்கம் அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்</u>: தலைவரவர்களே, பொதுமக்களிடமிருந்து வசூலிக்க வேண்டுமென்று அரசு விரும்புவதற்குக் காரணம், பொதுமக்களோடு நெருங்கிய தொடர்பு அந்தப் பள்ளிக்கு வேண்டுமென்றுதான். மாண்புமிகு உறுப்பினரவர்கள் முயற்சித்தால் ஆகாதது ஒன்றுமில்லை.

<u>பனையூர் கிராமத்தில் உள்ள ஏரி.</u>

* 793 வினா—<u>திரு. த. வேணுகோபால்</u>: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை வட்டம், பனையூர் கிராமத்தின் ஏரியின் கரை சமீபத்தில் உடைபட்டு பழுது பார்க்கப்பட்டுள்ளதா?

(ஆ) உடைப்புக்கான காரணம் யாது?

(இ) சம்பந்தப்பட்டவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் என்ன?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u>:—

(அ) ஆம்.

(ஆ) 17-11-77 ஆம் தேதி இரவு, பெருமணம் காலனியைச் சேர்ந்தவர்கள் கரையை வெட்டி திறந்துவிட்டதாக புகார் செய்யப்பட்டது.

(இ) உடனடியாக கரை உடைப்பு சரி செய்யப்பட்டது. பின்னர் காவல் துறையினருக்கும் ஊராட்சி ஒன்றிய ஆணையர் புகார் செய்துள்ளார்.

<u>திரு. த. வேணுகோபால்</u>; பேரவைத் தலைவரவர்களே, பனையூர் ஏரி நிரம்பும் காலத்திலே பெருமணம் கிராம காலனிவாசிகள் ஒவ்வொரு ஆண்டும் இம்மாதிரி செய்கிறார்கள். ஏரி உடைப்பது, பல நஷ்டத்திற்கு உள்ளாக்குவது போன்ற காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். அவர்களைத் தடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u>: தலைவரவர்களே, இவ்வாறு செய்வது தவறு என்ற காரணத்தாலேதான் காவல் துறையிலே புகார் செய்யப்பட்டிருக்கிறது.

<u>ஒன்றிய ஆரம்பப் பள்ளி, சுவாமிமலை.</u>

* 794 வினா—<u>திரு. ரெ. வீ. சவுந்தரராஜன்</u>: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், சுவாமிமலை பேரூராட்சியில் நடைபெற்று வரும் கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளிக் கட்டடம் மிகவும் பழுதடைந்து கீழே விழக் கூடிய ஆபத்தான நிலையில் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு அதுகுறித்து நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u>:—

(அ) இப் பள்ளியின் ஒரு பகுதி சுவர் பழுதடைந்துள்ளது.

(ஆ) இன்னும் ஒரு மாத காலத்திற்குள் இது சீர் செய்யப்பட்டு விடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>திரு. செ. இராமலிங்கம்</u>: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பள்ளி தற்பொழுது சாமிமலை தேவஸ்தான கட்டிடத்திலே இயங்குவது அரசுக்குத் தெரியுமா? அதை சீர் செய்ய அறநிலையத் துறையினர் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u>: அது தெரியும். ரூ. 3,000-க்கான தொழில் நுட்ப நிர்வாக மதிப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. 1-3-1978-லே டெண்டர் வரவழைக்கப்பட்டு, ஒரு மாத காலத்திலே கட்டப்பட வேண்டுமென்று காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சாவூரிலுள்ள இந்தப் பள்ளியின் வேறு சில பகுதிகளும் பாழடைந்து ஆபத்தான நிலையிலிருக்கின்றன. அது அரசுக்குத் தெரியுமா? அது இடிந்து விழுவதற்கு முன்னாலே அரசே இடிக்க முன்வருமா? இடித்து, வேறு கட்டிடம் கட்டித் தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இடிப்பதாக உத்தேசம் இல்லை. சீர்படுத்தி கட்டிக் கொடுப்பதாகத் தான் உத்தேசம் இருக்கிறது. வேலை சீக்கிரம் நடைபெறும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, இது போன்று தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் பெரும்பாலும் கூரைக் கட்டிடங்களிலே தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளெல்லாம் மழைக்காலங்களிலே ஒழுகி, பாக்கி காலங்களிலே இடிந்து தலையிலே விழக்கூடிய நிலை இருக்கிறது. அவைகளை மாற்றி நல்ல கட்டிடங்களாகக் கட்டிக் கொடுக்கவும் அதுபோல், தஞ்சை மாவட்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற பாலர் பள்ளிகள் பெரும்பாலும் மரத்தடியிலே தான் நடந்து கொண்டிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் நிரந்தரமாகக் கட்டிடம் கட்டித் தரவும் அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : எல்லா பள்ளிகளும் சரியாக இல்லையென்கிற புகார் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இது போன்று பாழடைந்த கட்டிடங்களிலே நடைபெறுகின்ற பள்ளிகளைச் சீர்படுத்தும் முறையிலேதான் அரசு திட்டமிட்டிருக்கிறது. ஒன்றியத்தினுடைய நிதிநிலையினையொட்டி இது போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மணிமுத்தாறு நகரியக் குழு.

* 795 வினா — திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணிமுத்தாறு டவுன்ஷிப் கமிட்டி ரூபாய் ஐந்து லட்சம் புயல், வெள்ள நிவாரண நிதியாக அரசுக்கு வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், டவுன்ஷிப் கமிட்டியின் நிதிநிலை இதற்கு ஏதுவாக உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:—

(அ) ஆம்.

(ஆ) நன்கொடை வழங்குவதற்கு முன்பு நகரியத்தின் நிதி நிலைமை ரூ. 14,73,204 ஆக இருந்தது. பிறகு 15-3-78-ன் நிலவரத்தின்படி நிதி நிலைமை ரூ. 10,74,609.59 ஆக இருந்தது. இத்தகைய நன்கொடையினால் நகரியத்தின் அலுவல்கள் பாதிக்கப்படவில்லை, நிதி நிலைமை நல்ல நிலையில் இருக்கிறது.

செட்டிபாளையத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

* 796 வினா—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம், செட்டிப்பாளையம் கிராமத்தில் அரிசன மக்களுக்கு வீடுகள் கட்ட உத்தரவிடப்பட்டது ரத்து செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் கட்ட உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) கோவை மாவட்டம், செட்டிபாளையம் கிராமத்தில் அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டுவது குறித்து 1974–75-ல் ஆய்வு செய்யப்பட்டு தண்ணீர் பற்றாக்குறையால் கைவிடப்பட்டது.

(ஆ) மீண்டும் இது குறித்து அடுத்து வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, இந்த அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை ரத்து செய்து விட்டதாகச் சொன்னார்கள். அது தி.மு.க. ஆட்சியிலே ரத்து செய்யப்பட்டதா அல்லது இந்த ஆட்சியிலே ரத்து செய்யப்பட்டதா என அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே. எந்த ஆண்டு என்பதைத் தெளிவாக சொல்லியிருக்கிறேன். 1974-75 ஆண்டு என்று சொல்லியிருக்கிறேன். அப்போது ஆண்டவர்கள் தி.மு.க. ஆட்சிதான்.

பகுதிநேரப் படிப்பில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு உதவித் தொகை.

* 797 வினா—திரு. ஒ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பகுதிநேரப் படிப்பில் ஈடுபட்டுள்ள அரிசன மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட உதவித் தொகை தற்காலிகமாக சென்ற ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அந்த உதவித்தொகையைக் கொடுக்க இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) பகுதி நேரப்படிப்பில் ஈடுபட்டுள்ள அரிசன மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த மைய அரசின் உதவித்தொகையை 1974-75ஆம் ஆண்டிலிருந்து கொடுத்தல் கூடாது என்று விதிமுறைகளில் மைய அரசு மாற்றம் செய்துள்ளதால் மேற்படி மாணவர்களுக்கு உதவித்தொகை கொடுப்பது நிறுத்தப்பட்டது;

(ஆ) பகுதிநேரப்படிப்பில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டதும் பின்னர் அது நிறுத்தப்பட்டதும் மைய அரசின் படிப்புதவித்தொகை விதிகளின்கீழே செய்யப்பட்டதாகும். வேலையில்லாமல் இருந்து கொண்டே பகுதி நேரப் படிப்பிலோ, முழுநேரப்படிப்பிலோ ஈடுபட்டுள்ள மாலைக்கல்லூரிகளில் படிக்கும் இத்தகைய மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையை மீண்டும் வழங்க ஆணை பிறப்பிக்குமாறு இந்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேரப் படிப்புக்குத் தரப்பட்ட உதவித் தொகை நிறுத்தப்பட்டதாகக் கூறினார்கள். அப்படி நிறுத்தப்பட்டதை மீண்டும் தருவதற்கு மத்திய அரசிடம் கேட்டிருப்பதாகவும் சொன்னார்கள். இதற்கு மத்திய அரசிடம் இருந்து பதில் வந்ததா அல்லது மீண்டும் மத்திய அரசை கேட்கும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு இதுபற்றி எழுதப்பட்ட நேரத்தில் மத்திய அரசாங்கம் சில விவரங்களைக் கேட்டிருக்கிறது. அதிலே ஒன்று பகுதி நேரக் கல்லூரிப் படிப்பும் கால அளவும் முறையான பகல் நேரக் கல்லூரிப் படிப்பின் கால அளவும் ஒன்றுதானா, அடுத்து அந்தப் பகுதி நேர வகுப்புகள் நடக்கின்ற நாட்கள் எத்தனை, பகல்

நேர வகுப்புகள் நடக்கின்ற நாட்கள் எத்தனை என்ற விவரங்களை கேட்டிருக்கிறார்கள். அது பற்றி மாநில அரசு கல்லூரிக் கல்வி இயக்குநரையும், தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநரையும் அவர்களுடைய கருத்தினைக் கேட்டிருக்கிறது. அவர்கள் கருத்து வந்த பிறகு மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்படும்.

திரு. எம். பழனிவேல்: தலைவர் அவர்களே, பாதி நேரக் கல்வி படிக்கின்ற மாணவர்கள், அவர்களுக்கு முழு நேரக் கல்வி பயிலக்கூடிய வசதி இல்லாததாலும், பல நெருக்கடியான காரணத்தாலும் பாதி நேரக் கல்வியைக் கற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி இருக்கும்போது, கொடுக்கப்பட்ட உதவித் தொகையை நிறுத்துவதற்கு மத்திய அரசுதான் காரணம் என்றால், நமது மாநில அரசாவது ஓரளவுக்கு நிதி உதவி செய்ய உடனடியாக காலதாமதம் இல்லாமல் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த உதவித் தொகையை வழங்குவதற்கு மத்திய அரசின் விதிமுறை இடம் தந்தது, மாநில அரசின் விதி முறை இடம் தரவில்லை. இனிமேல் அவர்கள் தலைவிதிதான் நிர்ணயிக்க வேண்டும்.

திரு எஸ். ஆர். இராதா ; பகுதி நேரப் படிப்பில் ஈடுபட்டிருக்கும் அரிசன மாணவர்களுக்கு மத்திய அரசு தந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதனால் அந்த மாணவர்கள் மிகவும் அல்லலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கல்வி பெற டியூஷன் ஃபீஸ் ஆகவாவது கொடுக்க அரசு பரிசீலனை செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாலை நேரக் கல்லூரியில் படிக்கின்றவர்கள் வேலையில் இருப்பவர்கள் இருக்கிறார்கள். சில பேர் வேலை இல்லாதவர்கள் இருக்கிறார்கள். ஆகவேதான் உபகாரச் சம்பளம் வழங்குவதற்கென்று மத்திய அரசு சில விதிமுறைகளை வகுத்திருக்கிறது. மாநில அரசு சில விதிமுறைகளை வகுத்திருக்கிறது. அந்த விதி முறைகளுக்கு உட்பட்டுத்தான் உபகாரச் சம்பளமும் படிப்புக் கட்டணமும் வழங்கப்படுகிறது, வேறு விதிமுறைகளைப் பின்பற்ற வழியில்லை. அப்படி இருக்குமானால் எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் கூறும்போது மத்திய அரசின் விதிமுறைகள் இருக்கின்றன, மாநில அரசில் அதற்கான விதிமுறைகள் அமைக்க முடியவில்லை என்று சொன்னார்கள். பகுதி நேர வகுப்பில் படிக்கின்ற மாணவர்களுக்கு உதவி செய்ய, உபகாரச் சம்பளம் கொடுக்க மாநில அரசு தயக்கம் காட்டுவது ஏன்? விதிகளை ஏன் மாற்றியமைக்கக் கூடாது?

[1978 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 'ஏன் தயக்கம்?' என்று கேட்டார்கள். இதுவரை தயங்கிக் கொண்டிருந்தார்கள்; இனிமேல்தான் ஏன் என்ற வினவுக்கு விடை காணவேண்டும். அதை அரசாங்கம் பரிசிலனை செய்யும்.

கருமேனி ஆற்றின் குறுக்கே பாலம்.

* 798 வின — திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) மணிநகர், படுக்கப்பத்து ஆகிய ஊர்களை இணைக்கும் சாலையின் குறுக்கே ஓடும் கருமேனி ஆற்றின் குறுக்கே பெரிய பாலம் கட்டும் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. இரா. அமிர்தராஜ் : மழைக்காலத்தில் கருமேனி ஆற்றில் மூன்று மாதம் வரை வெள்ளம் செல்லுகிற காரணத்தால் அந்தப் பகுதி பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. குறிப்பிட்ட இடங்களுக்கு செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. இப்போது இல்லையென்றாலும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருக்கும் காரணத்தால் பொது மக்கள் நன்மையைக் கருதி அந்தப் பாலத்தைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அந்த இடத்தில் பாலம் அமைப்பதன் தேவையை ஆய்ந்து நிதி நிலைக்கேற்ப வரும் திட்ட ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

வெட்டாறு, வெண்ணாறுகளின் குறுக்கே பாலங்கள்

* 799 வின — திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

அம்மாப்பேட்டை ஒன்றியத்தில், மாரியம்மன் கோவிலுக்கும், அய்யம்பேட்டைக்கும் இடையில் ஓடும் வெட்டாறு வெண்ணாற்றில் குறுக்கே பாலங்கள் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா!

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

1978 ஏப்ரல் 4]

திரு. அ. செல்லப்பா : அப்பகுதியில் சுமார் 10,000 பேர் வசிக்கிறார்கள். பெரும்பாலும் விவசாயத் தொழிலாளர்கள். ஆகவே, அப்பகுதியிலுள்ள விவசாயப் பொருள்களை நகரங்களுக்கு எடுத்துச் செல்ல மிகவும் வசதியற்று இருக்கும் காரணத்தால் அரசு மறு பரிசீலனை செய்து வெட்டாறு, வெண்ணாறு ஆகிய இரு ஆறுகளிலும் பாலம் கட்டித் தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அப்பகுதியில் வெட்டாறு 300 அடி நீர் வழியுடனும், வெண்ணாறு 400 அடி நீர் வழியுடனும் குறுக்கே போகிற காரணத்தால் மிகப் பெரிய பாலமாக ஏறத்தாழ 32 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட வேண்டும். இந்த ஆண்டு கட்டப்படுகிற ஐந்து பாலங்களுக்கு மொத்த நிதி 11 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலை காரணமாக அதனை மேற்கொள்ள தற்போது வாய்ப்பு இல்லை. வரும் திட்ட ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

திரு. துரை கோவிந்தராசன் : தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் மிகச் சிறப்பாக நடைபெறுகிற மாரியம்மன் திருவிழா பகுதியை உள்ளடக்கியது அது. மக்கள் அய்யம்பேட்டையிலிருந்து 25, 30 மைல் சுற்றி வர வேண்டியிருக்கிறது. ராஜராஜ சோழன் காலத்திலிருந்து நடைபெற்று வருகிற அந்த விழா இன்றும் சிறப்பாக நடைபெறுகிறது. ஆகவே, வருகிற ஆண்டிலாவது அதற்காக—நிதியை ஒதுக்கி ஒவ்வொரு பாலமாகவாவது கட்டித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆண்டுக்கு ஒரு முறை நடக்கிற மாரியம்மன் திருவிழாவுக்காக 32 லட்சம் ரூபாயை உடனடியாகச் செலவிடுவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. வரும் திட்ட ஆண்டுகளில் படிப்படியாக நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : மாரியம்மன் என்றவுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது ஏதோ ஒரு கோயில் என்று நினைத்திருக்கிறார்கள். அது ஒரு மோஸ்ட் இம்பார்டன்ட் ப்ளேஸ். நான் கடவுள் இல்லையென்று சொல்பவன்தான், ஆனால் அங்கு ஜனங்கள் வர மிகவும் இன்கன்வீனியன்டாக இருக்கிறது. அய்யம்பேட்டையிலிருந்து வர சிரமமாக இருக்கிறது. அது சிறப்பு வாய்ந்த, புராதனமான ஸ்தலம் என்பதால் அமைச்சர் அவர்கள் பார்ட் 2 ஸ்கீமிலாவது சேர்த்து அதனைக் கட்டிக் கொடுக்க முன் வருவார்களா என்று மனமுவந்து கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, பார்ட்-2 ஸ்கீமில் எடுத்துக்கொள்வது என்றாலும், ரூ.32 லட்சம் செலவாகும் என்பதால், அது எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறது. நிதிநிலைக்கு ஏற்ப வரும் திட்ட ஆண்டில். அது பற்றி பரிசீலிக்கப்படும்.

[1978 ஏப்ரல் 4

ராஜசிங்கமங்கலம்—வண்டல் சாலை

* 800 வினா— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முகவை மாவட்டம், R.S. மங்கலம் ஊரையும், வண்டல் கிராமத்தையும் மேலும் 4 கி. மீ. ரோடு போட்டு இணைக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இந்த ஆண்டு வேலை எடுத்துக்கொள்ளப்படுமா ?

(ஈ) செங்குடி-ஆனந்தூரை இணைக்கும் சாலை வேலை சீக்கிரம் பூர்த்தி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) மதிப்பீடு ரூ. 6.35 லட்சமாகும்.

(இ) இச்சாலை விரைவில் மேம்பாடு செய்யப்படும்.

(ஈ) செங்குடி—ஆனந்துரை இணைக்கும் சாலை வேலையை நிதி நெருக்கடியின் காரணமாக உடனடியாக மேற்கொள்ளவில்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, முகவை மாவட்டம் மங்களம் ஊரையும் வண்டல் கிராமத்தையும் இணைக்கும் 4 கிலோ மீட்டர் ரோடு போடாததன் காரணமாக, கிட்டதட்ட 15 லட்சம் ரூபாய் செலவில் அங்கே போடப்பட்டுள்ள ரோடு இந்த இணைப்புச் சாலை ரோடு பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதால் உபயோகிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, அந்த ரோடு போட்டும் பயன் இல்லாமல் இருப்பதால், அதில் உடனடியாக கவனம் செலுத்தி பூர்த்தி செய்ய அரசு முன் வருமா ? செங்குடி-ஆனந்தூர் ரோடும் முழுவதும் போடப்பட்டு விட்டது. ஆனால் இன்னும் இரண்டு பர்லாங்கு தூரம் அந்த சாலை வேலை பூர்த்தியாகாமல் இருக்கிறது. ரூ 20,000 அந்த ரோடு போடுவதற்காக செலவிடப்பட்டுவிட்ட பிறகு, இந்த இரண்டு பர்லாங்கு ரோடு போடாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? அவற்றை துரிதப்படுத்தி, உடனடியாக எடுத்துக்கொள்ள அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட சாலையின் முதற் பகுதி ரூ. 6.3 லட்சம் செலவில் உடனடியாக மேற்கொள்ளப்படும். 2 பர்லாங்கு ரோடு வேலையும் மேற்கொண்டு முடித்துத் தரப்படும்?

1978 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒழுங்குப் பிரச்சினைகள்

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீதான விவாதம் முதலில் மேலவையில் நடந்துள்ளது முறைதானா என்பது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்றம் மிகவும் முக்கியமானது. அதில் சந்தேகம் யாருக்கும் இருக்காது. இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட் முதலில் இங்கே விவாதித்து இருந்தால் நலமாக இருக்கும். இங்கே முதலில் விவாதிக்காமல், மேலவையில் சென்ற மாதம் 31-ம் தேதி விவாதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த மன்றத்தின் கருத்தை அறிந்து கொள்ளாமல், மேலவையில் விவாதிக்கலாமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே அலுவல் ஆய்வுக் குழுவில் இந்த மன்றத்தில் ஏப்ரல் 5-ம் தேதி அந்தக் குழுவின் அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. அந்த முடிவு எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து எடுத்த முடிவாகும்.

திரு. மு. அம்பிகாபதி: நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில் அதுபற்றி. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலவை அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுப்படி அங்கே விவாதித்து இருக்கிறார்கள். நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில்—உங்கள் கட்சித் தலைவரும் சேர்ந்து தான்—அந்தக் குழுவின் அறிக்கையை ஏப்ரல் 5-ம் தேதி எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே, இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : 31-ம் தேதி அங்கே விவாதிக்கப்படும் என்று நம்முடைய அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதா ? இங்கே விவாதத்திற்கு அதை எடுத்துக் கொள்ளாமல், மேலவையில் விவாதிக்கஎடுத்துக் கொள்ளலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம் அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி தான் நாம் இங்கே எடுத்துக் கொள்ள முடியும்.

(3) தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள ஒத்திவைப்பு, கவன ஈர்ப்பு தீர்மானங்கள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பது குறித்து

திரு. ஏ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே, நீங்கள் வேறொரு நிகழ்ச்சிக்குப் போக இருக்கிறீர்கள். அதற்கு முன்னே நான் ஒரு தகவல் அறிந்துகொள்ள விரும்புகிறேன். சட்டமன்றக் கூட்டத்தொடர் விரைவில் முடிய இருக்கிறது. நான் ஏறத்தாழ 3-4 ஒத்திவைப்புத் தீர்மானமும் கவன ஈர்ப்புத் தீர்மானமும் கொடுத்து இருக்கிறேன். இதுவரையில் அவைகள் இந்த அவையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. தங்கள் அறையில் வந்து அது எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிந்துகொள்ள வாய்ப்புகள் இல்லை. ஆகவே, அவைகள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய சட்டமன்ற அலுவல் எப்போது, என்றைக்கு முடிவடைய வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டியது அலுவல் ஆய்வுக் குழு. பேரவையில் 41, 42-வது விதிகளின் கீழ் கொண்டுவரப்பட்ட பிரச்னைகள் அனுமதிக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்பதை நான் பரிசீலித்து அனுமதிக்கப்பட வேண்டும் என்ற நிலை இருந்தால், அதற்கான பதிலை பெறுவதற்காக துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கும். பதில் வந்த பின் அவைகள் எடுத்துக்கொள்ளப்படும். ஆகவே சட்டமன்றக் கூட்டம் முடிவதற்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே, எவை அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தவை என்று நான் முடிவு எடுக்கிறேனோ அவை சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு அனுப்பப்பட்டு இருக்கும். பதில் வந்தவுடன் இங்கே வைக்கப்படும். அது பற்றி விவரங்களை இங்கே கேட்டால் மொத்தத்தில் என்னால் பதில் சொல்ல முடியாது.

(4) அறிவிப்புகள்

(அ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 1-4-78-ம் தேதியன்று 1978-ம் ஆண்டு சென்னை புறநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றுதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/78) திருத்தங்கள் ஏதும் இன்றி ஏற்பளிப்பு பெற்றுள்ளதாக மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத்தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(5) அரசினர் தீர்மானம்

விதி 41 (3)ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, 'பேரவையின் 41 (3)வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(6) கவன ஈர்ப்புகள்.

(அ) திருநெல்வேலியில் மூளைக்காய்ச்சல் நோயினால் பல குழந்தைகள் மரணம் அடைந்தது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து திருவாளர்கள் நா. சுந்தரராஜ், ஆர். ஜெபமணி, சின்னசேலம் மா. சுப்பிரமணியம், ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், சோ. அழகர்சாமி, செ. சிவசாமி, ஜே. ஜேம்ஸ் எம். ஏ. லத்தீப், ஏ.ஆர். மாரிமுத்து ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். திரு. நா. சுந்தரராஜ்.

* திரு. நா. சுந்தரராஜ்: பேரவைத் தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் "மூளைக் காய்ச்சல்" என்ற நோய் பரவி, அதன் காரணமாக பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; சுமார் 25 குழந்தைகள் மரணம் அடைந்திருக்கிறார்கள், அதனால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதி குறித்து விவாதிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்கள், 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 6-3-78 வரை "வைரல் என்சிபலிடிஸ்" என்னும் மூளைக்காய்ச்சல் நோய் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 98 கிராமங்களிலும் 8 நகர்ப்புறங்களிலும் ஏற்பட்டது. 1977, நவம்பர் மாதம் முதல் 18-3-78 தேதி வரை 190 நபர்கள் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தூத்துக்குடி பொதுமருத்துவமனை, கோவில்பட்டி மருத்துவமனை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டனர். இதில் ஆண்கள் 123 பேர், பெண்கள் 67 பேர். இவர்களில் 3 பேர் மட்டும்தான் பெரியவர்கள். மீதம் இருக்கும் 187 பேரும்

குழந்தைகளும், 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களும் ஆவர். இதுவரை 45 பேர் இறந்து விட்டனர். 39 நோயாளிகள் முழுவதுமாக குணமடைந்து விட்டனர். மீண்டும் நோய் தாக்காமல் இருக்க தக்க மருத்துவ அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நோயால் பாதிக்கப்பட்டோர் அனைவரும் மூன்றிலிருந்து நான்கு நாட்களுக்கு கடும்காய்ச்சல் கண்டு மயக்கம், நினைவிழத்தல் வலிப்பு போன்றவை தொடர அவதிப்படுகின்றனர். அறிகுறிகள் தென்பட்டு மூன்று நாட்களுக்குள் மருத்துவ மனைக்கு கொண்டுவரப் பட்டோர் சிகிச்சையில் குணமடைந்தனர். ஒரு வாரத்திற்குப்பின் மருத்துவ மனைக்கு வந்தோரில் பெரும்பான்மையோர் இறந்திருக்கின்றனர்.

கொசுக்களால் இவ்வியாதி பரப்பப்படுவதாக சந்தேகிக்கப் படுகிறது. திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேட்டுப்பாளையம் போன்ற நகராட்சி எல்லைகளில் கொசு மருந்தடிப்பு வேலைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. 13-3-78 முதல் பாதிக்கப்பட்ட மற்ற இடங்களிலும் மருந்தடிப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மதுரை மருத்துவக் கல்லூரி டாக்டர் திரு. ராமஜெயம், பூச்சி இயல் வல்லுநர் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு குழு சென்று இந்த வியாதியின் காரணங்களை ஆராய்ந்து இது க்யூலெக்ஸ் என்னும் கொசுக்களால் பரவுவதாக சந்தேகப்படுகிறார்கள். மேலும் பூனேவைச் சேர்ந்த ஒரு குழுவினர் பிற விஷயங்களைப் பற்றி 13.3.78லிருந்து ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

உதவி இயக்குநர் (கொள்ளை நோய்), திருநெல்வேலிக்கு விரைந்து சென்று முழுமையாக ஆராய்ந்து தகுந்த தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்துள்ளார். மருத்துவக் கல்லூரி இயக்குநர் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் சுமார் 50 சதவிகிதத்தினர் முழுவதுமாக குணமடைந்து விட்டனர் என்று தெரிவித்து இருக்கிறார். மீதம் சிகிச்சையில் உள்ளவர்கள் சிக்கிரம் குணமடைந்து விடுவார்கள் என மேலும் கூறியுள்ளார்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, இந்த நோய் திருநெல்வேலி மாவட்டத்தை மட்டுமல்ல; வேறு சிலபகுதிகளையும் தாக்கியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதை ஒரு முக்கியப் பிரச்சினையாகக் கருதி, இன்டன்சிவ் கேர் தீவிரக் கவனம் செலுத்தி, எல்லாப் பகுதிகளிலும் இந்த நோய்க்குக் காரணமான கொசுவை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மற்ற மாவட்டங்களில் இத்தகைய நோய் பரவியிருக்கிறதா என்ற தகவல் இல்லை. ஆனால் திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த நோய் பரவி இருக்கிறது. அரசாங்கம் அதைத் தடுப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

திரு. அ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலும் இந்த நோய் பரவி இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அது குறித்து நானும் திரு. விஜயராகவன் அவர்களும் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த நோயால் 15 பேர் இறந்து விட்டார்கள் என்று செய்தி கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலும் இதுபோன்ற மூளைக் காய்ச்சல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களிடம் அதுகுறித்த தகவல் இருக்குமானால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே அவர்கள் வேறு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் அவையில் வரும்போது அதற்கான பதில் அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.50)

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது 45 பேர்கள் இறந்துவிட்டிருக்கிறார்கள். இன்னும் பலர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே இன்றைக்கு இதனால் திருநெல்வேலி மாவட்டத்தில் பெரிய பீதியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இங்கே இருந்து அங்கு செல்கிறவர்கள் கூட அங்கே விஷக்காற்று பரவி இருக்கின்றது. ஆகவே நாங்கள் போக மாட்டோம் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட காய்ச்சலுக்குண்டான அறிகுறி எங்காவது ஏற்பட்டால் உடனே அவர்கள் இந்தந்த இடத்திற்குச் சென்று இன்னின்ன சிகிச்சைகளை முதலில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அங்கே உள்ள பொது மக்களுக்கும், இது குறித்து உடனடியாக காரியங்களைக் கவனிப்பதற்காக மருத்துவ அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்படுமா? ஆகவே இது குறித்து விளம்பரங்கள் கொடுத்து நீங்கள் இந்த அறிகுறி வந்தால் உடனே இந்த இடத்திற்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

174. திருநெல்வேலியில் மூளைக் காய்ச்சல் நோயினால் பல குழந்தைகள் மரணம் அடைந்தது குறித்து

[1978 ஏப்ரல் 4

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கப்பட்டு எந்தெந்த முறையிலே மக்களுக்கு என்னென்ன வகையிலே இந்தக் காய்ச்சல் வந்தால் சிகிச்சை பெற்றுக்கொள்ளக் கூடிய விவரங்களைத் தருவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மூளைக்காய்ச்சல் நோய் உங்கள் பகுதியிலேயும் பரவி இருக்கின்றது......

<u>திரு. ஜே. ஜேம்ஸ் .</u> தலைவரவர்களே, இந்த மூளைக்காய்ச்சலுக்குக் காரணம் ஒருவிதமான கொசுத் தொல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தக் கொசுவினை ஒழிப்பதற்காக முன்பு நேஷனல் மலேரியா ஏராடிக்கேஷன் ப்ரோக்ராம் என்று செயல்பட்டு வந்தது. இது இப்போது செயல்படவில்லை. ஆகவே இப்போது ஏற்பட்டிருக்கக் கூடிய இந்த காய்ச்சல் குறித்து அந்தத் திட்டத்தை மீண்டும் அமல் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, அது நேஷனல் மலேரியா ஏராடிகேஷன் ப்ரோக்ராமே ஒழிய அது நேஷனல் மஸ்கிட்டோ ஏராடிகேஷன் ப்ரோக்ராம் அல்ல. இருந்தாலும் அரசு இதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. அது மட்டுமல்லாமல் பொது மக்களுக்கும் பத்திரிகை வாயிலாக வேண்டுகோள் விடப்பட்டிருக்கின்றது. தண்ணீரை நன்றாகக் காய்ச்சிய பின்புதான் குடிக்க வேண்டும் என்றும் ஆடு மாடுகளைத் தொடுவதையும் பன்றி முதலியவற்றைத் தொடுவதையும் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் சுற்றுச் சார்புகளை சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் தடுப்பு நடவடிக்கைகளாக ஏற்கெனவே பத்திரிகைகளிலே மருத்துவத் துறையின் மூலம் விளம்பரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

(ஆ) வானூர் தொகுதி வீடூர் அணைக்கட்டின் மூலம் பாசனம் பெறுகின்ற கிராமங்களுக்கு தண்ணீர் திறந்து விடாதமையினால் பயிர்கள் பாதிப்பும் விவசாயிகள் நஷ்டமும் குறித்து.

<u>திரு. மொ. பரமசிவம் :</u> தலைவரவர்களே, வானூர் தொகுதியிலுள்ள வீடூர் அணைக்கட்டின் மூலம் பாசனம் பெறுகின்ற கிராமங்களுக்குச் சரியான காலங்களில் தண்ணீர் திறந்துவிடாத காரணத்தால் அங்குள்ள பயிர்கள் சருகாகி விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்குள்ளாகியிருப்பது குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

978 ஏப்ரல் 4]

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, வீடூர் திட்டத்தின் பாசன நிலங்கள் எந்த வருடத்தில் பாதிக்கப்பட்டன என்று கேள்வியில் குறிப்பிடப்படவில்லை.

வீடூர் நீர்த்தேக்கத்தில் வடகிழக்கு பருவமழையினால் தண்ணீர் வருகிறது. இத்திட்டத்தின் பாசன நிலங்களுக்கு வழக்கமான அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதல் ஜனவரி மாதம் 31-ம் தேதி முடிய தண்ணீர் விடப்படுகிறது. இத்தேக்கம் முதல் முறையாக 1959-60ஆம் ஆண்டு பாசனத்துக்குத் திறந்து விடப்பட்டது. 1961-62ஆம் ஆண்டு முதல் பாசன நிலங்கள் முழுவதும் பயனடைகின்றன. அநேகமாக எல்லா வருடங்களிலும் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்துக்குப் போதிய அளவு தண்ணீர் விடப்பட்டுள்ளது. மொத்தம் 19 ஆண்டுக்காலத்தில், நீர் வரத்துக் குறைவால் இரு வருடங்களிலும் (1968-69) (1974-75) அணை உடைந்த காரணத்தால் ஒரு வருடத்திலும் (1966-67) பாசனத்துக்குத் தண்ணீர் விடப்படவில்லை. மேலும் இரு வருடங்களில் ஒரு பகுதிக்கு மட்டும் பாசன வசதி அளிக்கப்பட்டது. (1959-60) (1975-76),

எனவே, நீர்த்தேக்கத்திலிருந்து வரும் நீரின் அளவைக் கருத்தில் கொண்டு பாசன நிலங்களுக்குப் போதிய அளவு தண்ணீர் விடப்படுகிறது. மேலும் இதுவரை விவசாயிகளிடமிருந்து நீர்ப்பற்றாக்குறை பற்றி புகார் ஏதும் இல்லை.

<u>திரு. மொ. பரமசிவம் :</u> தலைவரவர்களே, வீடூர் அணை திறக்கப்பட்டு பாண்டி மாநிலம் பாசனம் பெறும் சுத்திகேணி, ஊஸ்ட் ஏரி, ஆகியவை நிரம்பி தண்ணீர் வீணாகக் கடலிலே கலக்கிறது. சிறுவை, பொம்பு, வீடூர், ஹைவேலி, பொன்னம்பூண்டி, கோரக்கேணி, இறையூர், நிமிலி, தொல்லமூர், கடகம்பட்டு, செங்கமேடு, கொடையாங்குப்பம் ஆகிய ஊர்கள் பாசனம் பெறாமல் வாடுவது அறிந்து அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> அரசு இது பற்றி பரிசீலிக்கும்.

(இ) உப்பிலியாபுரம், பீ. மேட்டூர் கிராமம் கொல்லிமலைக் கருகிலுள்ள 500 ஏக்கர்கள் புயல் வெள்ளத்தால் பாதிப்பும் அதைச் செப்பனிடத் தக்க நடவடிக்கை எடுக்காததும் குறித்து.

<u>திரு. ரா. பெரியசாமி :</u> தலைவர் அவர்களே, உப்பிலியாபுரம் தொகுதியிலுள்ள பீ. மேட்டூர் கிராமத்தில் கொல்லிமலை அருகில் நஞ்சை புஞ்சை நிலங்கள் சுமார் 500 ஏக்கர்கள் புயல் மற்றும் வெள்ளத்தால் மண்ணினாலும் கற்களாலும் மூடப்பெற்று

சேதமடைந்துள்ளதை செப்பனிட அரசு இன்றுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளாத காரணத்தால் சுமார் 200 விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பெற்றிருப்பது குறித்து உள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> தலைவரவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர் ஏற்கெனவே பரிந்துரை செய்துள்ள கிராமங்களில் அவர் குறிப்பிட்ட வரிசைக்கிரமமாக வெள்ள நிவாரணப் பணிகள் திருச்சியில் உள்ள வேளாண்மைத் துறை செயற் பொறியாளரால் மேற்கொள்ளப்பட்டு, வேலைகள் நடந்து வருகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வெள்ள நிவாரணப்பணிகள் 40 கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு இது வரை 2071 ஏக்கர்களில் ரூ. 18.45 லட்சம் செலவில் பணி முடிவடைந்துள்ளது. மேலும் வெள்ள நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைப்பெற்று வருகின்றன.

2. துறையூர் தாலூக்காவில் உள்ள பீ. மேட்டூர் என்கிற கிராமம் ஏற்கெனவே மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ள கிராமப் பட்டியலில் இடம் பெறவில்லை.

துறையூர் மற்றும் மூசிரி தாலூக்காவைச் சேர்ந்த விவசாயிகள் கொடுத்த மனுக்களின் மீது திருச்சியில் உள்ள வேளாண்மைத் துறை செயற் பொறியாளர் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர் அவர்களுடன் கலந்து உரையாடியுள்ளார். அதன் பிறகு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் 23-3-1978 துறையூர் மற்றும் முசிரி தாலூக்காக்களில் சில கிராமங்களில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஆணை பிறப்பித்துள்ளார். 23-3-1978-ல் மாவட்ட ஆட்சியாளர் அனுப்பிய கிராமப் பட்டியலில் பீ. மேட்டூர் கிராமம் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே திருச்சியில் உள்ள வேளாண்மைத் துறை செயற் பொறியாளருக்கு பீ. மேட்டூர் கிராமத்தில் வெள்ளத்தால் சேதமடைந்த நிலங்களை பார்வையிட்டு ஒரு வார காலத்தில் வேலையைத் தொடங்குமாறு வேளாண்மை இயக்குநரின் அலுவலகம் ஆணை பிறப்பித்துள்ளது.

<u>திரு. ரா.. பெரியசாமி:</u> திருச்சி மாவட்டத்திலேயே பீ.மேட்டூர் தான் வெள்ளத்தாலும் புயலாலும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு ஏராளமான வீடுகளும் குடிசைகளும் சுமார் ஆயிரம் வீடுகள் வரை சேதமடைந்துள்ளன. அரசாங்கம் அங்குள்ள மக்களுக்கு வீடுகட்டிக் கொள்ள கடன் உதவி ரூ. .200, 500 பேர்களுக்குத் தந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் விவசாய நிலம்

சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருக்கும். இப்போது 500 ஏக்கர் வரைதான் சீர்செய்யப்பட்டுள்ளது. மீதி 500 ஏக்கர் இன்னும் சீர்செய்யப்படாமல் இருக்கிறது. நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இதைப்பற்றிச் சொன்னேன். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமும் நான் இதைப்பற்றி . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நீங்கள் செய்திருக்கிற சாதனைகளைப் பற்றிச் சொல்ல வேண்டாம். மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி அரசிடம் கேளுங்கள்.

<u>திரு. ரா. பெரியசாமி:</u> மாவட்ட வளர்ச்சி மன்றக்கூட்டத்தில் சொன்னேன். இது வரையில் அதற்காக ஒன்றும் செய்யப்படவில்லை. வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதியில் ரோடுகள் சரிவர செப்பனிடப்படவில்லை என்பதைக் குறித்து போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> உட்காருங்கள்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:</u> 23-3-78-லே அந்த வேலைகளைத் தொடங்குமாறும், ஒரு வாரத்திற்குள் வேலை தொடங்குவதற்குண்டான பணிகளை எடுக்குமாறும் வேளாண்மைத் துறை செயற்பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். வேலை துவங்கி நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்.

[பிற்பகல் 10.00]

(2) ஒழுங்கு பிரச்சனைகள்-தொடர்ச்சி

<u>(ஆ) மூளைக் காய்ச்சல் நோய் பற்றி உறுப்பினர் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்திருக்கும் போது அதற்கு அவையில் அமைச்சர் பதில் அளிக்கும் முன் டாக்டர்கள் அந் நோய் குறித்து விளக்கங்களை பத்திரிக்கைகளுக்கு அளித்தது குறித்து.</u>

<u>திரு.எம்.ஏ.லத்தீப்:</u> பாயின்ட் ஆஃப் ஆர்டர், இந்த மூளைக் காய்ச்சலைப் பற்றி ஒரு மாதத்திற்கு முந்தி, பல உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதற்கான பதில் அறிக்கை இந்த அவையில் வைக்கப்படுவதற்கு முன்னாலேயே, இதைப்பற்றி விரிவான பதிலை எல்லாம் டாக்டர்கள் சொல்லியிருப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. இதைக்

கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று கேட்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் 15 நாட்களுக்கு முன்பே கொடுக்கப்பட்டிருந்தும், அவையில் இதற்கான பதிலை வைப்பதற்கு முன்னாலேயே வெளியில் பத்திரிக்கைகளில் டாக்டர்கள் இதற்கான பதிலை அளிக்கிறார்கள். அந்த விவரங்களை ஏன் இந்த அவைக்கு முதலாவதாக தந்திருக்க கூடாது? கவன ஈர்ப்புத்தீர்மானங்களுக்கு இந்த அவையில் பதில் சொல்லாமல் இருக்கும்போது, டாக்டர்கள் இந்தத் தகவல்களை எப்படி பத்திரிகைகளுக்கு சொல்லலாம் என்பதை கேட்கிறேன். ஆகவே தலைவர் அவர்களே, இது அவை உறுப்பினர்களின் உரிமையை பாதிக்கின்ற பிரச்சினையாக இருக்கின்றது. ஆகவே, இதற்கு தகுந்த உரிய அறிவுரைகளையும் உரிய பரிந்துரைகளையும் அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்வது என்னுடைய கடமை என்பதை தெரிவித்துகொள்கிறேன்.

மாண்புமிகு திரு.ச.இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பத்திரிகைகளுக்கு இதுபற்றி அதிகாரிகளால் விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்தார்கள். அந்தப் பத்திரிகைக் குறிப்புகள் பற்றிய தகவல் என்னிடத்தில் இப்போது இல்லை. பத்திரிகைகளுக்கு அதிகாரிகளால் செய்தி தரப்பட்டிருக்கிறது. இந்த நோய் பரவுகின்ற இடங்களில் எப்படியெல்லாம் தடைசெய்யலாம், என்னென்ன மருத்துவ முறைகளை கையாளலாம் என்பதைப்பற்றியும் டாக்டர்கள் குழுவாக கூட்டி சில செய்திகளை வெளியிட்டிருக்கிறார்கள். அது பத்திரிகையில் வந்திருக்கிறது. ஏன் உடனடியாக இந்த மன்றத்தில் இதை அறிக்கையாக வைக்கவில்லை என்று கேட்டார்கள். அறிக்கையாக தருவதற்கு விவரங்கள் சேகரிக்க வேண்டியிருந்ததாலும், அவைக்கு தரப்படுகின்ற விவரங்கள் சரியாக இருக்கவேண்டும் என்பதற்காக அவைகளை ஆராய்ந்து இந்த அவைக்கு அளிக்கவேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதாலும் அதிகாரிகளால் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தது வேண்டும் என்றே செய்தது அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.எம்.ஏ.லத்தீப்: அப்படி தகவல் கொடுப்பதாக இருந்தால், சபைக்குத்தான் முதலாவது கொடுத்திருக்க வேண்டும். சபைக்கு முதலில் கொடுக்காமல் பத்திரிகைகளுக்கு இந்த விவரங்களை கொடுப்பது என்பது, இந்த அவையின் உறுப்பினர்களுடைய உரிமையை பாதிப்பது ஆகும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுடைய கடமை என்ற அளவில்தான் டாக்டர்கள் பத்திரிகைகளுக்குச் செய்தியை கொடுத்திருக்கலாம். இங்கு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருப்பது அவர்களுக்கு தெரியாமல்கூட இருக்கலாம்

திரு.எம்.ஏ.லத்தீப்: அப்படிச் சொல்வதாக இருந்தால்.. It is a serious matter.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிகாரிகள் பத்திரிகைகளுக்கு கொடுத்
அறிக்கை தருவது சகஜம். அந்த அடிப்படையில்தான்
திருப்பார்கள், ஆகவே இதில் ஒழுங்குப் பிரச்னை ஒன்றுமில்லை.

திரு.எம்.ஏ.லத்தீப்: இதை ஏன் சொன்னேன் என்றால் இனி
அரசுக்கு நீங்கள் அறிவுரை
மேல் இவ்வாறு நடைபெறாதவாறு,
கூற வேண்டும். அதற்குதான் இதைக் கூறினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குத் தெரிந்ததைத்தான் நான் சொன்னேன், நான் அரசாங்கத்திற்கு அறிவுரை ஒன்றும் சொல்ல முடியாது. தயவு செய்து இத்துடன் இதை விட்டு விடுங்கள்.

திரு.எம்.ஏ.லத்தீப்; அப்படி சொல்வது முறையல்ல....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; முறையில்லையென்றால் நீங்கள் தான் இந்த இடத்தில் வந்து அமர வேண்டும்.

திரு. க. அன்பழகன்; தலைவர் அவர்களே, யாரை வேண்டு
மானாலும் தாங்கள் தங்களுடைய இந்த மேலான இடத்திற்கு
வந்து அமருமாறு அழைக்க முடியாது, அதற்கு உங்களுக்கு
உரிமை கிடையாது. உங்களை நாங்கள் தேர்ந்தெடுத்து ந்த
இடத்தில் அமர்த்தியிருக்கிறோம். அப்படியிருக்கும் போது யார்,
வேண்டுமென்றாலும் வந்து உட்காருங்கள் என்று சாதாரண
அரசியல் மேடைகளில் சொல்வது போல் இந்த அவையிலும்
தாங்கள் சொல்வது பொருத்தமாக இராது என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அப்படி நான் சொல்வது
தேர்ந்தெடுக்கப்பெற்று வந்து அமருங்கள் என்று தான் பொருள்.

(7) அறிக்கை அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

திரு.கா.செங்கோடன்; பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்
பீட்டுக் குழு பரிசீலனை செய்த கீழ்க்கண்ட நான்கு அறிக்
கைகளையும் பேரவைக்கு அளிக்கிறேன்.

1.குடிமைப் பொருள் வழங்கு துறை (முதற்பகுதி) பற்றி
மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மே
கொண்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை.

[திரு. கா, செங்கோடன்] [1978, செபடம்பர்

2. சின்கோனுத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை.

3. பொது சுகாதாரம், பொது சுகாதாரப் பொறியியல் நகரமைப்புத் துறைகள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை.

4. உணவு உற்பத்தித் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை.

ஆக இந்த நான்கு அறிக்கைகளையும் அவை முன்னுல் வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அளித்தல்

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிரிப்புத்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை பற்றிய, பொது நிறுவனங்களின் குழுவின் அறிக்கையை இந்த் அவையில் முதன்முதலாக தமிழில் வைக்கிறேன்.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(அ) (1) தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு, அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப் படுத்துதல் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/78).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு, அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கைய கப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவையின் சட்ட முன்வடிவு எண் 18/78) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள் வதற்கு ஆளுநர் அவர்கள்தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு, அரிசன நலத் திட்டங் களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/78).

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, அரிசன நலத்திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப் படுத்துதல் சட்ட முன் வடிவு*

* 1978 மார்ச் 29-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1978 ஏப்ரல் 4] [திரு. பெ. சௌந்திரபாண்டியன]

(சட்டமன்றப் பேரவை சட்டமுன் முடிவு எண் 18/78). சட்டப்பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏதாவது 'விளக்கம் தருவ தாக இருந்தால் கொடுக்கலாம்.

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பகுதியான அரிசனமக்கள் வெகு நாட்களாக சுகாதார வசதிகள் ஏதுமற்ற ஊர்களுக்கு ஒதுக்குபுறமான பகுதிகளில் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களுள், சொந்த வீட்டுமனை உடையவர்கள் மிகச்-சிலராக இருக்கின்றனர். தீண்டாமை என்னும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட இம்மக்கள் தங்களது முக்கிய தேவைகளில் ஒன்றுக வீட்டுமனை, சுகாதார வசதியுள்ள குடியிருப்புகள் ஆகியவை பற்றி எண்ணிப்பார்க்க கூட இயலாத சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது குடும்பங்கள் பெருகிக் கொண்டே போனுலும்கூட, அவர்களுக்குத் தேவையான வீட்டுமனை இல் லாமல் ஒரு குடும்பம் வாழும் நிலத்தில் பல குடும்பங்கள் நெரிசலில் வாழ்ந்து கொண்டு சுகாதார சீர்கேட்டை அதிகப் படுத்தி வரும் அவல நிலை இருந்து வருகிறது.

1919 ஆம் ஆண்டிலேயே, அப்போது இருந்த மாநிலஅரசு, அரிசன மக்களின் சமூக பொருளாதார நிலைகளில் முன்னேற்றம் காணுவதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங் கியது. முதல் கட்டமாக முடிந்த அளவு அரசுக்குச் சொந்தமான காலி நிலங்களை கிராம நத்தமாக மாறுதல் செய்து இலவசமாக வீட்டுமனைகள் அரிசன மக்களுக்கு வழங்கப்பட்டன. அரசுக்குச் சொந்தமான காலி நிலங்கள் தேவையான அளவு இல்லாததால், நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ் தனியார் நிலங்களை கையகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்வாறு கையகப்படுத்துவதற்கு ஆகும் செலவினை அரிசன மக்களுக்கு கடனாக வழங்கியது. 1936 37—ஆம் ஆண்டு முதல் கையகப் படுத்த ஆகும் செலவில் பாதியை அரசு ஏற்றும், மீதியைக் கடனாக வழங்கியும் வந்தது. இந்த முயற்சிகளால் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதில் கணிசமான முன்னேற்றம் அடையவில்லை.

நாடு சுதந்தரமடைந்த் பிறகு, அரிசன மக்களின் முன்னேற்றத் திற்கான பல்வேறு திட்டங்களை தனி கவனத்துடன் நிறை வேற்ற 1949—ஆம் ஆண்டில் அரிசன நலத்துறை என்ற தனித் துறையை ஏற்படுத்தி அதற்கு ஒரு தனி இயக்குநரையும் அரசு நியமித்தது.

அதே ஆண்டில் சொந்தமாக வீட்டுமனை இல்லாது வீட்டு மனையின் விலையினை செலுத்த இயலாத அரிசனங்கள் அனைவருக்கும் இலவசமாக வீட்டுமனைகள் வழங்கவும், அதற்குத் தேவையான தனியார் நிலங்களை கையகப்படுத்துவதற்கு ஆகும் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்வது என்றும் முடிவு செய்து அரசு ஆணை பிறப்பித்தது. இதன்படி ஒவ்வொரு அரிசன குடும்பத்திற்கும் மூன்று முதல் ஐந்து செண்டுகள் வரை பரப்புள்ள வீட்டுமனை வழங்கப்படும். இச்சலுகை கிறிஸ்துவ மதத்திற்கு மாறிவிட்ட அரிசனங்களுக்கும் உண்டு. மேலும், இதற்கான விதிகளில் தெருக்கள், சமுதாயத்திற்கு பொதுவான இடங்கள் முதலியவற்றுக்கு தேவைப்படும் நிலங்களை கையகப் படுத்துவதற்கும் அதற்காக ஆகும் செலவு முழுவதையும் அரசே ஏற்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளன.

கையகப்படுத்துவதற்கான நிலங்களைத் தேர்ந்தெடுப்பதில் நிலத்தின் மலிவான விலை, சுற்றுப்புற சுகாதாரம், அரிசன மக்களின் விருப்பம் ஆகியவைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. தீண்டாமையை ஒழிக்கும் ஒரு நடவடிக்கையாக இத் திட்டத்தின் கீழ் நிலங்களை கையகப்படுத்தும் போது கூடிய வரை சாதி இந்துக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகிலேயே நிலத்தை தேர்ந்தெடுத்து, அதில் இலவசமாக அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்க வேண்டுமென்று 1968-ஆம் ஆண்டு சம்பந்தப் பட்ட அலுவலர்களுக்கு அரசு ஆணை பிறப்பித்தது.

1949-ஆம் ஆண்டிலிருந்து 28-2-1978 முடிய 2,74,399 வீட்டுமனைகளுக்காக 17,525.02 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. இதற்கான செலவு ரூ.550.47 இலட்சம் ஆகும்.

அரசு நிலங்களை அளிப்பதன் மூலமும். குடியிருப்பு சட்டத்தின் கீழ் நிலத்தை அளப்பதன் மூலமும் மேலும் தனியார் நிலங்களை கையகப்படுத்துவதன் மூலமும் 1-3-78 வரை சுமார் 5 இலட்சம் அரிசனங்கள், மற்றும் பழங்குடியினர் குடும்பங் களுக்கு வீட்டுமனை அளிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10.10)

இந்த மாநிலத்தில் வீட்டுமனையற்ற குடும்பங்கள் எத்தனை உள்ளன என்பதைப் பற்றி சரியான கணக்கெடுப்பு எதுவும் நடத்தப்படவில்லை. ஆனாலும் தோராயமான ஒரு கணக்கெடுப்பின் படி இப்படிப்பட்ட குடும்பங்கள் இன்னும் 3 இலட்சத்திற்குக் குறையாமல் 5 இலட்சம் வரையும் இருக்கலாம் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இப்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி நிலத்தைக் கையகப்படுத்த நீண்ட நாட்கள் ஆவதோடு அன்றி நட்ட ஈட்டுத் தொகை கொடுப்பதற்கு உடனடியாக அதிக நிதியும்

தேவைப்படுகிறது. இப்போது நடைமுறையிலுள்ள சட்டத்தின் படி தனியார் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான முன் மொழிவுகள், அறிவிப்புகள் முதலியன அரசு மட்டத்தில் உத்தரவு பெற்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிட வேண்டியிருக்கிறது.
இச் சிரமங்களையும், காலதாமதங்களையும் போக்கும் நோக்கத்துடன் அதிகாரங்களை மாவட்ட ஆட்சியாளருக்கு அளிக்கவும், நட்டத் ஈட்டுத் தொகையை தற்போதுள்ளதுபோல ஒரே தடவையில் மொத்தமாகத் தராமல் தவணைகளில் கொடுக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவரின் சீரிய தலைமையில் இயங்கும் இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இம்முடிவுகளின்படி இந்த வரைவு மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த மசோதாவின் பேரில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துகளை, ஆலோசனைகளை எடுத்து வைப்பார்களானால் இறுதியாக இந்த அரசின் சார்பில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்கிறேன். இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*திரு. பெ. சு. திருவேங்கடம் பேரவைத் தலைவர் அவர்களே நம்முடைய அரசு, தமிழ்நாட்டில் அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தை கையகப்படுத்துவதற்காக இந்தச் சட்டம் நல்ல நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிலே சில கருத்துக்களை எங்கள் கட்சியின் சார்பாக சொல்ல விரும்புகிறேன்.

சுதந்திரம் பெற்ற பிறகு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் அரிசன மக்கள் முன்னேற்றமடைய வேண்டுமென்று பல திட்டங்களை இயற்றினார்கள். அதற்குப் பிறகு முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு வேகமாகப் பல்வேறு நல்ல திட்டங்களை அரிசன சமுதாய மக்கள் வளர்ச்சி அடைய வேண்டுமென்று நிறைவேற்றினார்கள். அதிலே வீட்டுமனைப்பட்டா வழங்குவதும், நல்ல காற்றோட்டமான வீடுகளைக் கட்டித்தருவது, தெருக்களுக்கு மின்விளக்குகள் அமைப்பது இப்படிப்பட்ட காரியங்களுக்கெல்லாம் முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் குறிப்பாக எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதிலே கூட சில குறைபாடுகள் இருக்கின்றன என்று நம்முடைய ஆளும் கட்சி நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

எந்தத் திட்டமும் ஒரு பெரிய அரசின் மூலம் செயல்படுத்துகிறபோது சிற்சில இடங்களில் அப்படிப்பட்ட நிலைமை இருந்தாலும் அவருடைய நல்ல நோக்கத்தை யாரும் சந்தேகிக்க இயலாது. அதையே பின்பற்றி இந்த அரசும் வேகமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிற இந்த நேரத்தில் நான் சிலவற்றை நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றையதினம் நான் முதலில் கூறியதுபோல் 1947-ல் இருந்து 1978 வரை பல்வேறு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு மேலும் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லாம் சொல்லுகின்ற இடங்களில்–பல கிராமங்களில் அரிசன மக்கள் இன்னும் வீட்டுமனைப் பட்டாக்கள் கேட்கிறார்கள். பல்வேறு கிராமங்களில் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், இந்தச் சட்டத்தில் இருக்கும் பல சிக்கல்கள், அதே நேரத்தில் இந்தத் துறையில் இருக்கும் பல்வேறு அதிகாரிகளால் இந்த நிலத்தை கையகப்படுத்துவதற்கு முடியாத நிலைமைகளை ஏற்படுத்தி விடுகிறார்கள் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமங்களில் வீட்டுமனை வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் அல்லது நேரடியாக விண்ணப்பத்தை அனுப்புகிறார்கள். அந்தத் துறையில் இருக்கும் அதிகாரிகள் அல்லது அந்த வட்டாரத்தில் இருக்கும் தாசில்தார் அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அளவுக்குச் செல்லுகிறது. அவர்கள் கிராமங்களுக்குச் சென்று அரிசனமக்கள் எந்த இடத்தை விரும்புகிறார்கள் என்று பார்க்க அவர்களே வருகிறார்கள். வசதி படைத்தவர்களாக இருந்தால் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த நிலத்தை எடுக்க முடியாத ஒரு சூழ்நிலையை உண்டாக்கி விடுகிறார்கள். அல்லது வேறொரு இடத்திற்கு அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக அந்த அதிகாரி செல்லுகிறார். இப்படி மாறி மாறிச் சென்ற பிறகு அங்குள்ள அரிசன மக்களை இரு கூறாகப் பிரித்து ஒரு பகுதியினர் இந்த நிலம் வேண்டுமென்று சொல்வது, இன்னொரு பகுதியினர் வேறொரு நிலம் வேண்டுமென்று சொல்வது என்ற இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உண்டாக்கி அந்தத் திட்டத்தைக் காலதாமதம் ஆக்குகின்ற முறை இன்றையதினம் இருந்து வருகிறது. முதலிலேயே அந்த அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் செய்யாமல் விரைவாக அந்தக் காரியத்தைச் செயல்படுத்துகின்ற முறையை நம்முடைய அமைச்சரவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் அப்படிப்பட்ட அரிசனக் காலனிகள் இருக்கும் இடங்களில், கிராம நத்தங்கள் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்தக் கிராம நத்தங்கள் இருக்கின்ற நிலையில், சில நேரங்களில் அந்த மக்கள் அங்கு குடியிருக்க விரும்பவில்லை என்று சொல்லி வேறு இடம் கேட்கிறார்கள். ஆனால் அரசாங்கம் என்ன சொல்கிறது என்றால், அந்த மக்கள் வாழும் இடத்தில் கிராம நத்தம் இருக்கிறது, அந்த இடமே போதும் என்று சொல்லிஅவர்கள் சொல்வதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் பலயிடங்களில் விட்டுவிடுகிறார்கள். இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், அந்தக் கிராம நத்தம் இருந்தாலும், அந்த மக்கள் என்ன காரணத்தினாலேயோ அதை

விரும்பவில்லை என்றால் அவர்கள் விரும்புகின்ற வேறொரு இடத்தில் வீட்டுமனைகள் வழங்கிவிட்டு, அந்த இடங்களை அரசாங்க காரியத்திற்கோ அல்லது வேறு காரியங்களுக்கோ பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, ஏராளமான இடங்களைக் கையகப்படுத்துகின்ற திட்டத்தை அதிகாரிகள் அனுப்பினாலும், அரசாங்கத்திற்கு வந்து ஆண்டுக்கணக்கில், பல மாதக்கணக்கில், நிதிபற்றாக்குறை என்பதால் சில நேரங்களில் தங்கி விடுகிறது. சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியதாகத் தெரிவித்தார்கள். அதைக்கேட்டு நான்கூட மெத்த மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் அதில் இருபத்தைந்து இலட்சம் ரூபாய் தான் செலவிடப்பட்ட தொகை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இருபத்தைந்து இலட்சம் ரூபாய் தான் செலழிக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். பணத்தை ஒதுக்குவதோடு மட்டுமல்லாமல், அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணம் அந்தத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்படுகிறதா என்பதையும் அமைச்சரவர்கள் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த நிலத்தை எடுத்துக் கொள்ளும் நேரத்தில், பல்வேறு பெரிய தனவந்தர்கள் அல்லது பெரிய நிலச்சுவான்தார்கள் இதிலே பாதிக்கப்படமாட்டார்கள். ஆனால் சிறு விவசாயிகள், நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய நிலம் தேவையென்றால்கூட அதை எடுத்துக் கொள்ளலாம், அதை தவறு என்று நான் கூறவில்லை. ஆனால் அந்த நிலத்தைப்பற்றிக் கவனமாகப் பரிசீலிக்கவேண்டும். அவர்களுக்கு எதாவது சொத்து உள்ளதா அல்லது அந்த நிலத்தை எடுப்பதால் அந்தக் குடும்பம் பாதிக்கப்பட்டு விடுமா என்ற இம்மாதிரி வகையான காரணங்களையும் நாம் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, அதிகாரங்களெல்லாம் ஒரு உயர் அதிகாரிக்கு வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர் எப்படிப்பட்ட அந்தஸ்து உடைய அதிகாரி என்று குறிப்பிடப்படவில்லை.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நான் குறிப்பிட்டதைச் சரியாகக் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். என்னுடைய உரையிலேயே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

<u>திரு. பெ. சு. திருவேங்கடம்:</u> நன்றி. நான்கூட அதைத்தான் சொல்லவேண்டுமென்று நினைத்திருந்தேன். அதைப்போல மாவட்ட ஆட்சித் தலைவர் அதை எடுத்துக்கொள்ளும்பொழுது இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். கையகப்படுத்துகின்ற அந்த நிலத்தின் மதிப்பு குறைவாக இருக்கிறது என்று அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் கருதுவார்களேயானால் அவர்கள் கோர்ட்டிற்குச் செல்லலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய பணிவான வேண்டுகோள் என்னவென்றால், வசதி படைத்தவர்கள் கோர்ட்டுக்குச் சென்று பல்லாண்டுக்காலம் வழக்காடலாம், வழக்காடி நிலத்திற்குரிய மதிப்பைப் பெற்றுக்கொள்ளலாம். அவர்களுக்கு அந்த வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் சிறிய விவசாயிகள், நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் நிலத்தை கையகப்படுத்தும்பொழுது மிக ஜாக்கிரதையாக, நியாய முறையில் சமுதாயத்தில் அதற்கு என்ன மதிப்பு இருக்கிறதோ அந்தத் தொகையைக் கொடுப்பதற்கு அரசு மிகக் கவனம் செலுத்த வேண்டும். காரணம் என்னவென்றால், அவர்களெல்லாம் வழக்கு மன்றத்திற்குச் சென்று, அதற்காக வக்கில் வைத்து வழக்காடுதல் போன்ற காரியங்களுக்குப் பணம் செலவழித்து நியாயமான மதிப்பைப் பெறுவது என்பது மிகச் சிரமமாக இருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படாதவண்ணம் அரசாங்கம் பார்த்துக்கொள்ள அதிகாரிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலத்திற்கு நஷ்டயீடு தரப்படும்பொழுது இரண்டாயிரம் ரூபாயைத் தவணையில் தரப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு மெத்தப் பணிவன்போடு ஒரு வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தயவு செய்து அந்த ஷரத்தை இதிலே சேர்க்கக் கூடாது. கிராமத்திலே உள்ள நிலைமைகளைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். கிராமத்தில் உள்ள ஒரு சிறு விவசாயிடமிருந்து அல்லது நடுத்தர விவசாயிடமிருந்து இந்த நல்ல காரியத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டாலும்கூட அதற்கான நஷ்டயீட்டுத் தொகையைத் தவணை முறையிலே தந்தால் அதை வாங்குகின்ற விவசாயி வேறு வகையிலே அந்தப் பணத்தைச் செலவழித்துவிடலாம்.

[முற்பகல் 10.20.]

பிறகு அவருடைய குடும்பங்கள் கஷ்டப்பட வேண்டிய பரிதாபமான சூழ்நிலை இந்தத் தவணை முறையிலே கொடுக்கிற காரணத்தாலே ஏற்பட்டு விடும் என்பதை நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், நாம் மொத்தமாகத் தருவோமானால் வேறு நிலம் வாங்குவது அல்லது விவசாயத்திற்காகப் பயன்படுத்துவது, அல்லது வேறு சொத்துக்களை வாங்குவதற்கு அவர்களுக்கு ஏதுவாக இருக்கும். நாம்

தவணை முறையிலே தந்தோமானால் சிறிது, சிறிதாக வாங்கி அவர்கள் செலவழித்துவிடுவார்கள். பிறகு அந்தக் குடும்பம் அல்லல்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று இன்னொரு விதி இருப்பதாக நான் அறிகிறேன். கிராமத்திலே புறம்போக்கு நிலம் இருக்குமானால், அந்தக் கிராமத்திலே இருக்கிற அரிசனங்கள் வேறு நிலம் கேட்கும்போது, கிராமத்திலே புறம்போக்கு நிலம் இருக்கிறது, அங்கே வீடு கட்டலாம் என்று சொல்கிறார்கள். புறம்போக்கு நிலம் இருந்தும்கூட மக்கள் விரும்பவில்லையென்றால், அவர்கள் விரும்புகின்ற நிலத்தை வழங்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று நான் தெரிவித்து, இதிலே நான் சொன்ன சிலபல கருத்துக்களையும் சேர்த்து இந்தச் சட்டத்தை இந்த அரசு கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே மெத்தப் பணிவன்பாகத் தெரிவித்து நான் முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

<u>திரு. இ. தமிழரசன்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சரவர்கள் வைத்திருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை நான் மிகவும் பெருமனதுடன் பாராட்டிப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரிசன நலத்துறை ஒரு நாட்டின் முக்கியமான துறை. ஏனென்றால், சமுதாயத்திலே மிகவும் பாதிக்கப்பட்டுள்ள, சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டுள்ள, மற்ற இனத்தவர்களால் தீண்டத்தகாதவர்கள் என்று அழைக்கப்பட்டுள்ள இந்த ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவே இந்த அரசு அரிசன நலத் துறை என்ற துறையை உருவாக்கி அந்தத் துறையின் மூலம் இந்த அரிசன மக்களுக்குப் பல்வேறு சலுகைகளையும் பல்வேறு உரிமைகளையும் பல்வேறு திட்டங்களையும் அமைத்து அவர்கள் வாழ்க்கை முன்னேற வேண்டிய அமைப்புகளைச் செய்துகொண்டு வருகிறது. இருந்தாலும், இந்த அமைச்சரவர்கள் தன்னுடைய உரையிலே கூறியதுபோல் ஒவ்வொரு அரிசன் வீட்டிலே 4, 5 குடும்பங்கள் வாழ்கின்ற பரிதாபமான சூழ்நிலை, கதவில்லாத வீடுகளில் வாழ்கிற சூழ்நிலை கிராமங்களில் இருந்து கொண்டு வருகிறது என்பதைப் பார்க்கும்போது உண்மையிலே வேதனை தரத்தக்க சூழ்நிலை நமக்கெல்லாம் இருந்து கொண்டிருக்கிறது.

கடந்த காலத்திலே வீட்டுமனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டன என்று அறிவித்தார்களே தவிர, உண்மையாகவே அவர்களுக்கு வழங்கப்படவில்லையென்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, என்னுடைய பேரணாம்பட்டு

தொகுதியிலே, அதிலும் குறிப்பாக, நான் பிறந்த மண்ணிலே, ஊதியந்திரம் கிராமத்திலே வீட்டு மனைக்காக மனுக்கள் போட்டு, பல்லாயிரக்கணக்கான நிலங்களை வாங்கப் பணச் செலவு செய்து, அந்த வீட்டு மனைப் பட்டாக்களுக்காக அவர்கள் அலைந்து திரிந்து கொண்டிருந்த நேரத்தில், இந்த வீட்டுமனைக்குரிய அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் அந்த இடத்தை அரிசனங்களுக்காகவென ஒதுக்கியிருந்த நேரத்தில், அந்த இடத்தை ஒரு சினிமா தியேட்டர் சட்ட ஒரு பெரிய தனவான், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், அன்றைய முதலமைச்சரைச் சந்தித்து, அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் வீட்டுமனைப் பட்டா கொடுக்க அளித்த வீட்டு மனையை கான்சல் செய்து, அந்த சினிமா தியேட்டர் (மணியடிக்கப்பட்டது).... தயவு செய்து துணைத் தலைவரவர்கள் மன்னிக்க வேண்டும். நானிருக்கிற ஊரிலே நடந்ததைக் கூற விரும்புகிறேன். இதைத் தயவு செய்து......

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> ஏற்கனவே பல தடவை சொல்லியாகிவிட்டது, ஏதாவது தனிப்பட்ட குற்றச் சாட்டு சொல்லும்போது ஆதாரம் இருந்தால் காட்டிவிட்டு, அதைக் கொடுத்துவிட்டுத்தான் பேச வேண்டுமென்று பல தடவை சொல்லியாகிவிட்டது.

<u>திரு. இ. தமிழரசன்:</u> இந்த அறிக்கைகள் வெல்ஃபேர் அலுவலகத்தில் இருக்கின்றன என்பதை மட்டும் கூறிக்கொண்டு, இந்தமாதிரி சூழ்நிலைகள் மீண்டும் தலைதூக்காவண்ணம் இந்த அரிசனங்களுக்கு வீட்டுமனை கொடுக்கும் பட்சத்தில், கட்டாயமாக நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கைகளை இந்த நேரத்தில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் அரிசன மக்கள் வீட்டு மனைக்காக கோரும்போது, அடி மட்டத்தில் இருக்கும் அதிகாரிகள், கிராம மணியம், கர்ணம், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், தாசில்தார் போன்றவர்கள் சரியான அறிக்கைகளை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பாத ஒரே காரணத்தினால், 30 வருடம், 40 வருடம் காலங்களாக வீட்டு மனைப்பட்டா வேண்டும் என்று மனுப் போட்டாலும், வீட்டுமனைப்பட்டா கிடைக்கா சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் அரிசனங்களுக்குச் சாதகமாக மனுக்களைப் போடச்சொல்லி, அவர்களைத் தூண்டிவிட்டு. அவர்கள் எந்த பட்டா நிலத்தை வாங்கவேண்டும் என்று மனுப்போட்டிருக்கிறார்களோ அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களை அணுகி, ஐயா, உங்களுடைய நிலம் பறிபோகக்கூடிய நிலை இருக்கிறது, உரிய நடவடிக்கை எடுத்தாகவேண்டும் என்று அவர்களுக்கும் யோசனை சொல்லிக் கொடுத்துவிட்டு, அவர்களிடத்திலும் பணத்தைப் பெற்றுக்கொண்டு, இங்கே அரிசனங்களிடத்திலும் பணத்தைப் பெற்றுக்கொண்டு அறிக்கை அனுப்பும்போது அரிசனங்களுக்கு அந்த நிலம் கிடைக்காத அளவுக்கு அறிக்கையிலே ஒரு புள்ளியை

வைத்து அனுப்புகிறார்கள். ஏதாவது ஒரு காரணத்தைக் குறிப்பிட்டு மேலிடத்திலிருந்து அந்த அறிக்கை திரும்பவும் கீழே அனுப்பப்பட்டு மறுபடியும் திருப்பி அனுப்பப்பட்டு அவர்களுக்கு மனை கிடைக்க வழியில்லாமல் இருக்கிறது.

நான் குழந்தையாக இருந்தபோது மனுவைப் போட்டவர்கள் இன்று திருமணம் ஆகி தனிக் குடித்தனம் நடத்துகிறபோது, அப்போது 10 பேர்கள் மனுப்போட்டது போக இப்போது இன்றைக்கு 100 பேர்களுக்கு மேல் வீட்டுமனை கேட்கின்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே பல்வேறு இடங்களில், பலருடைய தலையீட்டின் காரணமாகவும், அரசியல் செல்வாக்கின் காரணமாகவும் 30 வருடம், 40 வருடம் காலமாக வீட்டுமனை கேட்டவர்களுக்குக் கிடைக்காத காரணத்தினால் என்னிடத்திலே சண்டை போடுகிறார்கள். அப்படிப்பட்ட பரிதாபகரமான நிலைமை இன்றைய தினம் இருந்துகொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதி அரிசன தொகுதியாக இருந்தாலும் இந்த வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே கனம் அமைச்சர் அவர்கள் இந்த நிலைமையை பரிசீலனை செய்து இவைகளை சரிசெய்து வீட்டு மனைகளை என்னுடைய தொகுதியில் வழங்கவேண்டும் என்ற தாழ்மையான வேண்டுகோளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், மேலிடத்தில் இருக்கிற அதிகாரிகள் யாராக இருந்தாலும் சரி, கீழ் மட்டத்தில் இருக்கிறவர்கள் யாராக இருந்தாலும் சரி, அரிசன நல அதிகாரிகள் மட்டும் அரிசன இனத்தைச் சேர்ந்தவராக இருந்தால், நிச்சயமாக தம்முடைய இனத்திற்கு வீட்டுமனைப் பட்டாக்களைக் கொடுக்க வேண்டும் என்று விரும்புவார். அந்த அரிசனங்கள் அனுப்புகின்ற கோரிக்கைகளின்பேரில் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள், அப்படி எடுத்து அரிசனங்கள் வாழ வழிவகைகளை செய்வார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தத் துறையில் இருக்கும் மேலதிகாரிகள் அரிசனங்களுக்கு வீட்டுமனை கொடுப்பதில் தலையிடாவண்ணம், கீழ்மட்டத்தில் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்களை இந்த வீட்டுமனைப் பட்டா கொடுக்கும் திட்டத்திற்காக தனியாக அமர்த்தி அதை ஒரு தனி டிப்பார்ட்மென்டாக உருவாக்கி அது செயல்பட்டால் நிச்சயமாக அரிசனங்களுக்கு வீட்டு மனை கிடைக்கும். இந்த ஏற்பாட்டினை செய்தால் கூடியவரையில் வீட்டு மனைப்பட்டாக்கள் கிடைப்பது சுமுகமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, மீண்டும் இந்த அரிசனங்களுக்கு

[திரு. இ. தமிழரசன்] [1978 ஏப்ரல் 4

வீட்டுமனை கொடுக்கும் விதத்தில், தனியார் நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது கோர்ட்டுக்குப் போகமுடியாத அளவுக்கு சட்டத்தைத் திருத்தவேண்டும். அப்படி நில ஆர்ஜிதம் செய்கின்ற நேரத்தில் சுமுகமாக இருக்கத்தக்க வகையில் ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்றும், அடிமட்டத்தில் இருக்கிற, கீழ் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் அரிசனங்களாக இருந்தால் நிச்சயமாக நம்முடைய திட்டங்கள் முழுமையாக அரிசனங்களுக்கு பயன் பெறுவதற்கு வாய்ப்பிருக்கும் என்று கூறிக்கொண்டு, இவைகளை என்னுடைய வேண்டுகோளாக இந்த அரசு ஏற்றுக்கொண்டு பரிசீலனை செய்யும் என்ற நம்பிக்கையோடு, நன்றி கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

(முற்பகல் 10-30)

* திரு. ஓ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் மசோதாவில் காங்கிரஸ் கட்சியின் சாரபில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன் என்று சொல்கிறபோது அரிசன மக்களுக்காக அவர்களுடைய நலனுக்காக இயற்றப்படுகிற சட்டங்கள் அல்லது அவர்களுக்காக நிறைவேற்றப்படக்கூடிய கொள்கைகள் எல்லாம் பொதுவாக அரசியல் நோக்கு இல்லாமல் ஒரு, missionary and humanitarian spirit என்ற முறையிலே ஒரு மனிதாபிமான அடிப்படையில் செயல்படவேண்டும். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் மனிதாபிமான அடிப்படையில்தான் கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்று நான் நம்புகிறேன். அந்த அடிப்படையிலேயே இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

இப்போதுள்ள கால கட்டத்தில், அதுவும் 20 அம்சத் திட்டத்தின்கீழ் அரிசனங்களுக்காகக் கொடுக்கப்பட்ட நிலங்களை மற்ற மாநிலங்களில், அதிலும் குறிப்பாக வடக்கே உள்ள மாநிலங்களில் திரும்பப் பெறுகின்றனர். மத்திய அரசும் அதைத் திரும்பப் பெறுவது சரிதான் என்று அரிசன மக்களுக்கு விரோதமாகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கும் சூழ்நிலையில் இத்தகைய நல்ல மசோதாவைக் கொண்டு வந்துள்ள தமிழக அரசை நான் பாராட்டுகிறேன்.

அதே நேரத்திலே மத்திய அரசின் சார்பிலே இருக்கும் Land Aquisition Act என்று சொல்லக்கூடிய மத்திய நில ஆர்ஜித சட்டத்தின் அடிப்படையிலே நில ஆர்ஜிதங்கள் செய்யப்படுகிறபோது, 5–6 ஆண்டுகள் காலதாமதம் ஆகிக் கொண்டு இருக்கின்றன. ஆகவே, அந்தக் காலதாமதத்திற்கு

1978 ஏப்ரல் 4] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

முக்கிய காரணங்கள் நீதி மன்றம், அதிகாரிகளின் சிவப்பு நாடா முறையாகும். அந்த இரண்டு முறைகளையும் தவிர்ப்பதற்கு, காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு. ஒரு புரட்சிகரமான செயல்முறையை இந்த மசோதா கொண்டு வரும் என்பதிலே நான் நம்பிக்கை உள்ளவனாக இருக்கிறேன்.

அதே நேரத்தில் செயல்முறையில் சில குறைபாடுகள் இருப்பதை நான் உணர்கிறேன். பிரிவு 4 (1), பிரிவு 5 ஆகிய இந்த இரண்டு பிரிவுகளும் காலதாமதத்தைத் தடுப்பதற்காக இருக்கின்றன. 4 வது பிரிவு உட்பிரிவு 1—மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை கொடுக்கிறார்கள், நோட்டீஸ் கொடுக்கிறார்கள். அதற்கு முன்பாக 4-வது பிரிவு 2, 3-ன்படி ஒரு விசாரணை செய்கிறார்கள்.

Why the particular land should not be taken or acquired?

என்ற முறையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முழுக்க முழுக்க டிஸ்கிரிஷன் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஒரு நிலத்தை எடுப்பது அல்லது எடுக்காமல் விடுவது மாவட்ட ஆட்சித் தலைவரின் டிஸ்கிரிஷனைப் பொறுத்து இருக்கிறது.

இந்த நிலைமையிலே இந்தச் சட்டத்திலேயே சிறிய சிறிய விவசாயிகளாக இருந்தால், மானாவாரி நிலம், புஞ்சை நிலம் 10 ஏக்கர் வைத்து இருப்பார்களானால், இறைவை பாசனம், நஞ்சை நிலம் 2 ஏக்கர் வைத்து இருப்பார்களானால், அவர்களைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தக்கூடாது என்ற விதியை இதிலே சேர்த்து இருந்தால் அது மிகவும் நலமாக இருந்து இருக்கும் என்று எண்ணுகிறேன். அப ஏரள விற்கு அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதாக இருக்கும். ஏனெனில் சிறிய விவசாயிகளின் நிலத்தை எடுக்கிறபோது அவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அந்த வகையில் முழுக்க முழுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்யும் வகையில் டிஸ்கிரிஷன் கொடுத்து இருப்பதை தவிர்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதற்கு அடுத்ததாக,

Payment of the amount of compensation

பொறுத்தவரையில், 15% இனும் தொகையாக மார்க்கெட் வேல்யூ-ல் கொடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்திலே 2,000 ரூபாய்க்கு மேற்பட்டால், அந்தத் தொகையை தவணை முறையில் கொடுப்பதாக இருக்கிறது. அது நல்ல ஷரத்தாக நான் சொல்ல முடியாது. ஏனெனில் நிலத்தை இழக்கும் ஒரு சிறு விவசாயி அல்லது நிலத்தின் சொந்தக்காரர், அந்த நிலத்திற்குப் பதிலாக

வேறு ஒரு நிலத்தை வாங்கி, தன்னுடைய விவசாயத் தொழிலை செய்யவேண்டுமானால், தவணை முறையில் கொடுத்தால் வேறு நிலத்தை வாங்க முடியாது. ஆகவே, அந்த ஷரத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு, ''பிரஸ்கிரைப்டு அதாரிட்டி'' என்று இருக்கிறது; அவர்கள் ''நியமிக்கப்பட்ட அதிகாரிகள்'' என்று கருதுகிறேன்; அவர்கள் விசாரணை செய்கிறார்கள். அவர்களுக்கு நீதிமன்றத்தின் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிவில் பிரொசிஜர் கோடு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த விசாரணையை நியாயமாக, நேர்மையாக, பாரபட்சம் இல்லாத முறையில் செய்ய வேண்டுமென்றுதான் இந்த பிரஸ்கிரைப்டு அதாரிட்டி என்ற அதிகாரிக்கு அதிகாரங்கள் எல்லாம், நீதி மன்றத்தின் அதிகாரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலைமையிலே 3-வது பிரிவு, (i)

''Prescribed authority means any authority or officer authorised by the Government in this regard, by notification'' என்று இருக்கிறது. ஆதரைஸ்டு ஆபீசர் என்பது

''Any authority or Officer not below the rank of a Revenue Divisional Officer'' என்று இருந்தால் நல்லது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நிலத்தை கையகப்படுத்தும் அதிகாரம் இருக்கிறது. விசாரணையைப் பொறுத்தமட்டில் பிரஸ்கிரைப்டு அதாரிட்டியை அரசாங்கம் நியமிக்கிறது; அவர்கள்தான் விசாரணை நடத்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அத்தகைய அதிகாரிகள் ஆர். டி. ஓ. அல்லது அதற்கு மேலான ஒரு அதிகாரியாகத்தான் இருக்க வேண்டுமே தவிர அதற்குக் குறைவான தரத்தில் இருக்கக்கூடாது என்பது எங்களுடைய கட்சியின் கருத்து. ஆகவே,

''Any authority or Officer not below the rank of a Revenue Divisional Officer'' என்று இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நல்ல சிறப்புகளையுடைய இந்த மசோதாவைப் பொறுத்தமட்டில் ஒரு முக்கியமான விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். இங்கே சில தினங்களுக்கு முன்பு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 44-வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தை ராட்டிபிகேஷனுக்குக் கொண்டு வந்தார்கள். அப்போது 42-வது திருத்தச் சட்டத்தின் பெரும் பகுதி விடப்பட்டிருந்தது என்றாலும்கூட இங்கே பேசிய அத்தனைபேரும், எங்கள் கட்சியைத் தவிர, 42-வது திருத்தச் சட்டம் முழுமையாக நீக்கப்

படுவதற்கான சட்டம் வேண்டும் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் துரதிர்ஷ்டவசமாக அரசாங்கத்தின் சார்பிலே, இன்று தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய முக்கியமான சட்ட வல்லுனர்களில் ஒருவரான நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கூட 42-வது திருத்தச் சட்டத்தை கடுமையாகத் தாக்கிப் பேசினார்கள். எங்களுடைய வாதம் எல்லாம் இந்த 42-வது திருத்தச் சட்டம் இல்லை என்றால் நிலத்தை கையகப்படுத்தும் இந்த சட்டத்தை உயர் நீதி மன்றத்திலே தூக்கி எறிந்து விடுவார்கள் என்பதுதான். இப்படிப்பட்ட நல்ல சட்டங்கள் வரும்போது, ஏழை எளிய மக்கள், விவசாயிகள், அரிசனங்கள், சமுதாயத்தின் அடித் தளத்திலே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் பயன்படுவதற்கு 42-வது திருத்தச் சட்டம் மிக மிகப் பயன்படுகிறது என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே, இனிமேலாவது தமிழக அரசு இதேமாதிரியான மசோதாவைக் கொண்டுவரும்போது, அதைப் பற்றி சிந்திக்க வேண்டும். தமிழக அரசு சார்பிலே சொல்லப்பட்ட கருத்துக்கள் 42-வது திருத்தச் சட்டத்தை ஒரு பக்கம் தாக்கிப் பேசிவிட்டு, மறுபக்கம் 42-வது திருத்தச் சட்டத்தின் பாதுகாப்பை தேடுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, இது முன்னுக்குப் பின் முரண்பாடாக இருக்கிறது. ஆங்கிலத்தில் blowing hot and cold என்று சொல்வார்கள். இத்தகைய முரண்பாடு அரசாங்கத்தின் சார்பில் இருப்பது நல்லதல்ல என்பதை இந்த மசோதாவின்மீது எங்கள் கட்சியில் கருத்தாகச் சொல்லி, இந்த மசோதாவை மீண்டும் வரவேற்கிறேன் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தை கையகப்படுத்துவதற்கான 1978 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவின்பேரில் என்னுடைய கருத்துக்களைக் கூற முன்வருகிறேன்.

அரிசனங்களுக்கு வீட்டுமனை, சுடுகாடு, இடுகாடு, இவைகளுக்குச் செல்ல பாதை வசதி செய்து கொடுப்பதற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்வதிலேயுள்ள இடையூறுகளைத் தவிர்க்கும் பொருட்டு, குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த அதிகாரங்களை வழங்குவதற்கு இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனதார வரவேற்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் 1949 ஆம் ஆண்டு முதல் 29 ஆண்டு கால அளவில் அரிசனங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டு மனைகள் 2.68 லட்சம் என்றும், அதற்காக எடுக்கப்பட்ட நிலம் 17,124 ஏக்கர்; வழங்கப்பட்டதொகை 5.31 கோடி ரூபாய் என்ற அளவில், 29 ஆண்டு

காலம் அளவைப் பார்க்கும் நிலையில் இன்றைய தமிழக அரசு இந்த ஓராண்டுக்கு நிதி 100 லட்சம் என்று ஒதுக்கியதோடு தன்னுடைய லட்சியமாக அரிசனங்களுக்கு வீட்டுமனை, சுடுகாடு, இடுகாடு போன்றவைகளுக்கு பாதை வசதி போன்றவற்றைப் பெற்றுத் தருவது என்பது ஒரு சமூகப் பொருளாதாரத் திட்டம் என்ற ஒரு லட்சியத்தை கோடிட்டு காட்டியுள்ளது பாராட்டுக்குரியது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40.)

அதே நேரத்தில் பாராட்டுதலுக்குரிய இந்த சிறப்பான அம்சங்களை எண்ணும்போது இதைச் செயல்படுத்தக்கூடிய நிர்வாக இயந்திரமான நமது அதிகாரிகளுடைய நடவடிக்கைகளை காணும்போது கவலைக்குரியதாக உள்ளது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். நான் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. ஒரு சீரிய நோக்கத்தினை நிறைவேற்றுகையில் நமது அதிகாரிகள், எல்லோரையும் நான் சொல்லவில்லை, ஒரு சிலரே என்றாலும் விளைவுகள் பெரிய அளவில் தீங்கினை ஏற்படுத்தி விடுகிறது என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

குறிப்பாக நில ஆர்ஜிதத்தை செய்யக்கூடிய அதிகாரிகள் நிலச்சுவான்தார்களுடைய கருவியாகவே மாறிவிடுகிறார்கள். மேலும் ஹரிஜனங்களுக்கிடையே இருக்கின்ற பலவீனமான தன்மையைப் பயன்படுத்திகொண்டும் அந்த நிலச்சுவான்தார்களால் உருவாக்கும் சிதைவு வேலைகளுக்கு வழி வகுத்துக் கொடுக்கும் அதிகாரிகளாக இருக்கிறார்கள். இதனால் ஹரிஜனங்கள் அவர்களுக்கு என்று சுடுகாடோ அல்லது வீட்டு மனையோ அல்லது இன்னும் பிற வசதிகளையோ கேட்கும் பொருட்டு அவர்கள் அமைச்சரவர்களையோ அல்லது அதிகாரிகளையோ தொடர்பு கொள்ளக்கூடிய நிலைமை வருகிறது என்று தெரிந்தவுடன் அங்கே இருக்கின்ற நிலச்சுவான்தார்கள் ஹரிஜனங்களிடையே உள்ள ஒரு பகுதியைப் பிரித்து அவர்களுடையே பலவீனமான பல நிலைமைகளைப் பயன்படுத்தி இந்தக் கொள்கைக்ளுக்கெதிராக அவர்களைத் திருப்பி விட்டு, மாற்று ஸ்டேட்மென்ட் செய்வதும் ஆகிய காரியங்களில் ஈடுபடுகிறார்கள். மேலும் சுடுகாடு, நடைபாதை போன்றவற்றைக் கேட்டு விட்டார்கள் என்ற காரணத்திற்காக ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்களுக்கு வேலை எதுவும் கொடுக்காமல் அவர்களை அலைக்கழித்து விடுவதோடு, அவர்கள்மீது பொய் வழக்கு போடுகிறார்கள், அவர்களை ஊர் கட்டுப்பாட்டிலும் வைக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது.

குறிப்பாக, இன்றைக்கு கொண்டுவரப்பட்டு இருப்பது உயர்ந்த லட்சியமாக இருக்கின்றதென்றாலும் லட்சியம் நிறைவேறாத வகையில் அங்கே நிலச்சுவான்தார்கள் மனை வேண்டும் பாதை வேண்டும் என்று, கோரிய முன்னணி ஊழியர்மேல் உயிர் கொல்லி காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஏழை எளியர்கள் மீது பொய்யான வழக்கு களைப் போட்டு அவர்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். இத்தகைய நிலையால் அவர்கள் வேறு வேலை செய்வதற்கும் வகையற்ற நிலையில் இன்று தள்ளப்பட்டுள்ளார்கள். மாநிலத்தில் எந்தப்பகுதியில் பார்த்தாலும் இத்தகைய கொடுமையைத்தான் நாம் அறிகிறோம்.

உதாரணமாக ஊத்தங்கரையில் கேத்துநாயக்கன்பட்டி என்ற கிராமம் தனியார் நிலத்தில் 50 ஹரிஜன குடும்பங்கள் உள்ளார்கள். இவர்கள் வீட்டு மனை வேண்டும் என்றோ அல்லது குடிநீர் வேண்டுமென்றோ கேட்டாலே போதும், அந்த நிலச்சுவான்தார் தொல்லை கொடுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். காரணம் அந்த ஹரிஜனங்களுக்கு வேறு நிலம் கிடைத்துவிட்டால் அவர்களை தன் விருப்பம்போல அடிமைகள் போன்று வேலை வாங்கவும் குறைந்த கூலியில் வேலை வாங்கும் நிலைமை போய்விடுமே என்று எண்ணுகிறார்கள். ஆகவேதான் தன் நிலத்தில் உள்ள பம்பு செட்டில் இருந்தே தண்ணீர் எடுக்கும் நிலையே இருந்தால் ஒடுக்க உதவியாக இருக்கும் என்ற நோக்கத்தோடு ஒடுக்கப்பட்டு வருவதால் வீட்டு மனைக்கோ அல்லது குடிநீருக்கோ அங்குள்ள மக்கள் மனுச் செய்வதற்கே அஞ்சினார்கள். இப்போதுதான் அவர்கள் மனு செய்திருந்தார்கள். சுதந்திரம் பெற்று 31 ஆண்டுகள் கழிந்த பின்பு கேத்து நாயக்கன்பட்டி ஹரிஜனங்கள் வீட்டு மனைக்கென்று மனுச் செய்திருக்கிறார்கள்.

இந்த ஆண்டு மனுப் போட்டதன் விளைவு என்னவென்றால், அந்த மக்கள் அந்தப் பகுதியில் வேலை செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கிராமக் கட்டுப்பாடு செய்வதோடு மட்டுமல்லாமல், அவர்கள் கோரிய நிலங்களில் தென்னைகள் வைத்து, மாஞ்செடிகள் வைத்து, கிணறுகள்கூட தோண்டுவதாக செய்திகள் வந்துள்ளன. இத்தகைய நிலையால் ஏன் நிலம் கேட்டோம் என்ற நிலையில் அந்த மக்கள் இருக்கிறார்கள். இதற்கு உதவியாக போலீஸ் இருக்கிறது. பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற நிலைமைதான் இருக்கிறது. நிலம் கோரி மனு போட்ட மக்களையும் முன்னணி ஊழியரையும் பழிதீர்க்க நிலச்சுவான்தார்கள் பொய்யான முறையில் கொடுக்கக் கூடிய வழக்குகளை வைத்துக் கொண்டு, கோரிக்கை வைத்தவர்களை, அநத ஏழை மக்களை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் குத்து குத்து என்று குத்தி வைத்து வெத்துப் பேப்பரில்

[திரு. எம். அண்ணாமலை] [1978 ஏப்ரல் 4

கையெழுத்து வாங்கி நிலச்சுவான்தார்களின் விருப்பத்திற்கேற்ப இந்த நிலம் எனக்கு வேண்டாம் என்று எழுதி தாங்களே கொடுத்த ன்றையில் ரிக்கார்டு தயாரிக்கும் கருவியாக போலீஸ் நிர்வாகம் இருக்கிறது என்பதை வேதனையோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது மட்டுமல்ல, வேப்பம்பட்டி என்ற கிராமத்தில், ஹரிஜனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட நிலத்திலேயே பக்கத்து நிலச்சுவான்தார், தன் நிலத்திற்கு பாதை போட மறுத்த ஒரே காரணத்திற்காக அந்த ஏழை ஹரிஜனங்கள் 24 பேர்கள் மீது கிருஷ்ணகிரி முதல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் பொய் வ்ழக்கு போடப்பட்டு அந்த ஏழைகள் கோர்ட்டுக்குச் சென்றுவர பணம் இல்லாமல் வேலை செய்ய வைத்திருக்கக்கூடிய கோடாலிகள், மண்வெட்டிகள், வீட்டில் உள்ள தட்டுமுட்டு சாமான்கள் இவற்றை விற்று வழக்காட வேண்டிய அவலநிலை. ஆகவே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால் கோரும் நிலம் சரியானதா—தேவைதானா என்பதை ஆய்ந்தபின் இதற்கு எதிராக யார் இருந்தாலும் இந் நிலங்களை பெற்றுத் தருவது அதிகாரிகளின், அரசின், நிர்வாகத்தின் பொறுப்பாகயிருக்க வேண்டும், என்ற முறையில் இப்பிரச்னையை பார்க்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஹரிஜன ஏழை மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்கின்றவர்கள் ஹரிஜன் ஆனாலும் சரி, பிற ஜனங்களாக ஆனாலும் சரி முன்னணியில் நிற்கக் கூடியவர்களை பழிதீர்க்க முயற்சிக்கிறார்கள். இதனால் நான் சொல்ல விரும்புவது, நோக்கத்திற்கு மாறாக யார் கருத்து உள்ளபோதிலும் சம்பந்தப்பட்ட நிர்வாகம் முழுப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு அந்த ஏழை மக்களுக்காக வேண்டியதைச் செய்து கொடுக்க வேண்டும். அந்த முறையில் பிரச்னையை அணுக வேண்டும்.

அடுத்தபடியாக. குடியிருப்புச் சட்டத்தின்கீழ், சமீபத்தில் தஞ்சை மாவட்டத்தில், திருத்துறைப்பூண்டி தாலூகாவில் ஜாம்பவான் ஓடை, துரைக்காடு, வீரன்வயல், வடக்காடு, கீழ்க்காடு, தம்பிக்கொட்டை கீழ்க்காடு போன்ற கிராமங்களில் அங்குள்ள ஹரிஜனங்களுக்கு குடியிருப்புக்கள் தேவை இல்லை என்று சோடி வாங்கப்பட்டது. அங்குள்ள நிலச்சுவான்தார்கள் அந்த ஹரிஜன மக்களிடம் கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள். சொல்லப்போனால் அந்தக் கிராமங்களிலுள்ள ஹரிஜன மக்கள் கொத்தடிமைகள் போல் இருக்கிறார்கள்.

ஆகவே நான் கேட்டுக்கொள்வது, ஹரிஜனங்கள்மீது வழக்குகள் போடும்போதும், மலைவாசி மக்கள்மீது வழக்குகள் போடும்போதும், குறைந்தபட்சம் ரெவின்யூ அதிகாரிகள் மட்டத்தில் பரிசீலனை செய்துவிட்டுத்தான் வழக்குகள் கோர்ட்டுக்குச் செல்லவேண்டும் என்ற ஒரு விதி ஏற்படுத்தினால்தான்

1978 ஏப்ரல் 4] [திரு. எம். அண்ணாமலை]

இந்த மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்பதோடு இது போன்ற காரியத்தில் சர்வ கட்சி மக்கள் குழு மூலமாகவும் ஆய்வு செய்வது நல்லது என்று கூறிக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

(முற்பகல் 10-50)

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரிச்ன நல திட்டங்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கான மசோதாமீது எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மசோதா மிகவும் தேவை என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. காரணம், கடந்த கால அனுபவங்களைப் பார்க்கிறபோது, அரிசனங்களுக்காக எந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னாலும், அதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்ற சூழ்நிலை வரும்போதெல்லாம் இப்போதுள்ள விதி முறைகள் இடம் கொடுக்காத காரணத்தாலும், இதன்காரணமாக காலதாமதம் ஏற்படுவதையும் பார்க்கின்றபோது, நாம் விரும்புகின்ற எதிர்பார்க்கின்ற நோக்கம் நிறைவேறாமல் போகின்ற சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட காலதாமதத்தை அகற்றி உடனடியாக நிலத்தை ஆர்ஜிதம் செய்து நாம் நினைக்கின்ற காரியங்களைச் செய்ய வேண்டும். அதற்காக சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று அரசு முடிவு செய்து இந்த மசோதாவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். உண்மையில் இது வரவேற்க வேண்டிய மசோதாவாக இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த காலங்களில் பார்க்கின்றபொழுது, அரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்கின்றபோதெல்லாம், உயர்நீதிமன்றங்கள் வரையிலும் வழக்குகள் சென்று அதனால் ஏராளமான காலதாமதம் ஏற்படுவதையும் நாம் பார்க்கின்றோம்.

அது மட்டுமல்ல. குறைந்தது வழிப்பாதைக்கு நிலம் எடுக்க வேண்டும் என்று சொன்னாலும், சம்பந்தப்பட்டவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போவதும், இதன் காரணமாக பல அரிசன கிராமங்களிலும் வழிப்பாதை இல்லாமல் இருப்பதையும் நாம் அறிவோம். அதேபோல்தான், சுடுகாடு இல்லாமல் பல அரிஜன கிராமங்கள் இன்னும் இருக்கின்றன. அரிஜனங்கள் வாழுகின்ற இடங்கள் மட்டுமல்ல, மற்ற சமூகத்தினரைச் சேர்ந்தவர்கள் இருக்கின்ற, ஏழை எளிய மக்கள் இருக்கின்ற இடங்களிலும் இது வரை சுடுகாடு இல்லாத பரிதாபகரமான நிலைமைகளை நாம் உணருகின்றோம். ஆகவே இப்படிப்பட்ட தேவைகளை எல்லாம்

நிறைவேற்றுவதற்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்கின்றபோது, சட்டம் குறுக்கே நிற்கின்ற காரணத்தால், நிச்சயமாக இதை மாற்றி அமைக்க வேண்டும் என்பதை நாம் எல்லோரும் ஒப்புக் கொள்வோம்.

எங்கள் மாவட்டத்தில் தச்சூர் என்ற அரிஜன கிராமம். அங்கு வழிப்பாதை கிடையாது, இதற்காக நடவடிக்கை எடுக்கப் பட்டபோது, வழக்கு உயர்நீதி மன்றம் வரைக்கும் வந்தது. பின்னால் ஓரளவு இப்போது வழிப்பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நிலத்தின் சொந்தக்காரர்களின் இடையூறு காரணமாக அந்த ரோட்டை மெயின்டனன்ஸ் செய்யவோ தார் போடவோ செய்யாமல் இருந்து வருகின்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ரோடு போட்டாகி விட்டது. அப்படி போட்டாலும் அருகிலுள்ள மரங்களை மாற்றினால் ஒழிய அந்த ரோடு வழியாக வாகனங்கள் செல்ல முடியாது. அந்த அளவுக்கு வசதியில்லாமல் கஷ்டமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, அரிஜனங்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்காக பல ஆண்டுகளாக பல திட்டங்களை அமல் நடத்திக் கொண்டிருக்கிறோம். இருந்தும் எதிர்பார்த்த அளவுக்கு போதிய நன்மைகள் அவர்களுக்கு வந்து சேரவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். காங்கிரஸ் ஆட்சி காலத்தில்தான் அரிஜனங்கள் என்ற ஒரு வகுப்பினர், அவர்கள் சமூகத்தில் இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்து அவர்களுக்கு பல திட்டங்களைக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் 1947-ம் ஆண்டுக்கு பின்புதான் அப்போதுள்ள அரசுக்கு ஏற்பட்டது. அதன் அடிப்படையில் பல திட்டங்களை நிறைவேற்ற ஆரம்பித்ததை ஒயாவரும் த்துக்கொண்டுதான் ஆக வேண்டும்.

குறிப்பாக, மாமேதை ராஜாஜி காலத்தில் அரிஜனங்கள் கோயில்களுக்குள் செல்ல வேண்டும், அரிஜனங்களை பள்ளிகளில் அனுமதிக்க வேண்டும், அவர்கள் தெருக்களில் செல்லுவதற்கு எந்த விதமான தடையும் இருக்கக் கூடாது என்ற உயர்ந்த நோக்கங்களோடு கோவில்களில் செல்வதற்கும், பள்ளிக்கூடங்களில் அனுமதிப்பதற்கும், தெருக்களில் தடையின்றி செல்வதற்கும் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பள்ளிக்கூடங்களில் அரிஜன மாணவர்களை அனுமதிப்பதற்கு தடையாக பள்ளிக்கூடம் இருக்குமானால், அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு கிராண்ட் கொடுக்க முடியாது என்ற சட்டம்கூட ராஜாஜி காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து

பெருந்தலைவர் காமராஜ் காலத்திலும் அரிஜனங்களுக்கு வீட்டு மனை கொடுத்தல், வீடுகள் கட்டிக் கொடுத்தல், இன்னும் விவசாயம் செய்ய விரும்புகின்றவர்களுக்கு நிலம் அளிக்கின்ற திட்டம் முதலியவற்றையெல்லாம் மேற்கொண்டதோடு, கல்லூரிகளில் இலவசமாகப் படிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது அவர்களுடைய காலத்தில்தான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த காலத்தில் ராஜாஜி, காமராஜ் போன்ற பெருந்தலைவர்கள் அரிஜன மக்கள்மீது பெரும் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை வகுத்து வந்தார்கள். இருந்தாலும் இன்னும் சமூகத்தில் பிற சமூகத்தினர்கள் இருக்கும் நிலைக்கு அவர்கள் வந்து அடையவில்லை என்பதை எண்ணுகின்றபொழுது, அவர்கள் மீது இன்னும் அரசு அக்கறை செலுத்த கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே நான் இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தில், அற்புதமணி என்ற பெண்மணி, அரிசன அம்மையார். அவர்கள் ஒரு கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள். ஏதோ சில காரணங்கள் காரணமாக, அங்கே இப்போது அந்த அம்மையார், கணவனை இழந்தவர் கடந்த 3 மாத காலமாக கிராமத்திற்குள்ளே செல்லக்கூடாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவில் இன்றைக்கும் சமுதாயத்தில் இன்னும் நிலைமை இருக்கிறது என்று சொன்னால், இதற்காக நாம் எல்லாம் வேதனைப்பட்டாக வேண்டும். ஆக, இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றுவதற்காக அரசு முன்வரவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தது, இந்த மசோதாவில் மார்க்கெட் வேல்யூ கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மார்க்கெட் வால்யூ என்று கூறுகிறபோது, இப்போதெல்லாம் அரசு நிலத்தைக் கையகம் செய்கின்றபோது, அதிகாரிகள் எந்த அளவிற்கு விலையைக் குறைத்துவிட முடியுமோ, அந்த அளவிற்கு குறைத்து விலையைப் போடுகின்றார்கள். இது உண்மையிலே, ஒருவேளை வசதியாக இருக்கின்றவர்களுக்கு விலை சற்று குறைவாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனால், சில சமயங்களில் இம்மாதிரி செய்யும்போது, ஏழைகளின் நிலமும் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றது. அப்பேர்ப்பட்ட சூழ்நிலைகளில் நியாயமான மார்க்கெட் வேல்யூ அத்தகையோருக்கு கொடுப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் காரணம் என்னவென்றால்

மேலதிகாரிகளை திருப்தி செய்வதற்காக கீழே இருக்கின்ற அதிகாரிகள் குறைவான மதிப்பீட்டில் நிலத்திற்கு விலையை நிர்ணயம் செய்கிறார்கள்.

அதோடு, இந்த மார்க்கெட் வேல்யூவை ஒரே தடவையாகக் கொடுப்பதற்குப் பதிலாக, இப்போது இன்ஸ்டால்மென்டிலே கொடுக்க வேண்டுமென்று வழிவகை செய்திருக்கிறார்கள். சில சமயங்களிலே நான் ஏற்கெனவே கூறியதுபோல், பல ஏழைகள் இந்த ஒரு நிலத்தைத் தவிர வேறு நிலம் இல்லாதவர்கள், இந்த நிலத்திற்காகக் கொடுக்கப்படும் பணத்தைக் கொண்டு அவர்கள் வேறு நிலம் வாங்கக்கூடும். எனவே இப்படி பல இன்ஸ்டால்மெண்டுகளாகக் கொடுப்பதற்கு அவர்களுக்கு ஒரே தவணையாகக் கொடுத்தால் அவர்கள் வேறு இடத்தில் நிலம் வாங்கிக் கொள்ள வசதியாக இருக்கும் என்பதை நான் இங்கே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலிலே சொன்னார்கள். இந்தச் சட்டத்தின்படி நிலம், வீடுகள் எல்லாம் அரிசனங்கள் என்று கூறுகின்றபோது இந்துக்கள் மட்டுமல்லாமல் மதம் மாறிய கிறித்துவர்களுக்கும் இந்தச் சலுகைகள் வழங்கப்படும் என்று கூறினார்கள். அதற்கான என்னுடைய மகிழ்ச்சியையும், அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் தெரிவித்துக் கொண்டு, நான் இந்த மசோதாவை வரவேற்பதுடன், இது தேவையான ஒரு மசோதா என்பதைக் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள இந்த மசோதாவை நான் முழுமனதோடு வரவேற்று, ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

நான் இந்தச் சட்டசபையில் கடந்த 10 வருஷங்களாக தொடர்ந்து இதைப்பற்றி வற்புறுத்தி வந்திருக்கிறேன். காரணம், பல இடங்களிலே நாம் பார்க்கின்றோம், இந்த அரிசன குடும்பங்கள், தங்களுக்கென ஒரு குடியிருப்பு இல்லாமல், மிகவும் இட நெருக்கடியான இடத்தில், காலைக்கூட நீட்ட முடியாமல் கஷ்டப் பட்டுக்கொண்டு வாழ்ந்து வருவதைப் பார்க்கின்றோம். அத்தகைய அரிசன மக்களுக்கு, தங்களுக்கென்று 5 செண்ட் நிலத்தைச் சொந்தமாகப் பெறமுடியும் என்று அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். இதுவரைக்கும் 5 லட்சம் அரிசன குடும்பங்களுக்கு 1947 ஆம் ஆண்டு முதல், ஏறக்குறைய 30 ஆண்டுகளில் வழங்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லப்

பட்டது. இந்தச் சுதந்திரம் வந்து 30 ஆண்டுகளில், மகாத்மா காந்தி அவர்கள் இந்தச் சாதாரண மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள் என்று சொன்ன அந்தக் காலத்திலிருந்து, அவர்களும் கிட்டத்தட்ட 10, 20 ஆண்டுகள் இருந்தார்கள்.

அதற்குப் பிறகு எத்தனையோ ஆட்சிகள் மாறி மாறி வந்தாலும், இதுவரைக்கும் அரிசனங்கள் தங்களுக்கென்று சொந்தமாக ஒரு இடம் உண்டு என்று சொல்லமுடியாத ஒரு நிலைமை இருந்தது. அதற்கான காரணங்கள் என்னென்ன என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சட்டம், மசோதா கொண்டு வந்திருப்பதன் நோக்கமும்—அதிலே பல பேர்கள் கோர்ட்டுகளுக்குப் போய் இந்த இடத்தைத் தர விருப்பமில்லை என்று சொல்லி, பலவிதமான தடங்கல்கள் காரணமாக இடத்தைப் பெற்றுத் தர முடியவில்லை. அதோடு, இன்றைக்கு பல ஊர்களிலே இப்போதுகூட மனைகளைத் தேர்ந்தெடுப்பதிலே, ஒரு குடியிருப்பதற்கு வசதியான அல்லது அந்த மனை ஊருக்குப் பக்கத்திலேயே இருக்கும்.

(முற்பகல் 11-00)

ஒரு வசதி படைத்த, நல்ல அரசியல் செல்வாக்குள்ள பெரிய மனிதருக்குச் சொந்தமாக இருக்கும் இடத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் அதிகாரியே தேர்ந்தெடுக்க மாட்டார். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் மேலே வந்து அதை மாற்றி எங்கோ ஒதுக்குப்புறத்தில் குடியிருக்க லாயக்கற்ற பள்ளமான இடங்களைத் தேர்ந்தெடுப்பார்கள். அந்தமாதிரி இடங்களை அரசாங்கம் ஆர்ஜிதம் செய்திருந்தாலும் குடியிருக்க முடியாத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். அரிசனங்களுக்கான குடியிருப்பு மனைகளுக்கான இடங்களைத் தேர்ந்தெடுக்க அந்தந்த கிராமப் பகுதிகளில் ஒன்றிய அளவில் அரிசன நலனில் அக்கறையுள்ளவர்களைக் கொண்ட குழு ஒன்று அமைத்து அந்தக் குழு இடத்தைப் பார்வையிட்டு இன்ன இடத்தைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்லுவதன் மேல் நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் வசதி படைத்தவர்களை உதாசீனப்படுத்திவிட்டு அந்த இடத்தைத் தேர்ந்தெடுக்க முடியாது.

என்னுடைய பகுதிலேயே சொல்ல முடியும். ஒரு கிராமத்திற்குப் பக்கத்தில் குடியிருக்க ஒரு இடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த இடத்தை அதிகாரியும் பார்க்கப் போய் வந்து சரி என்று சொல்லிவிட்டார். அதற்குப் பிறகு எப்படியோ அது மாறி இதிலிருந்து 100 கஜம், 200 கஜம் தூரமான பள்ளமான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரிசனங்களிடம் அந்த இடம்தான் வேண்டுமென்று நீங்கள் ஏன் வற்புறுத்தக்கூடாது என்று கேட்டால், அவர்கள் சொல்லுகிறார்

கள்—அப்படிச் சொன்னால் நாங்கள் இந்த ஊரிலேயே குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்று: அந்த இடம் வேண்டாம் என்று சொல்லச் சொல்லி எங்களை அடித்து கையெழுத்து வாங்கி விட்டார்கள் என்று சொன்னார்கள். கொடுத்த பள்ளமான இடத்தை மேடாக்க வேண்டுமென்றால் எக்கச்சக்கமாக காசு ஆகும். ஆகவே இதற்கான இடத்தைத் தேர்ந்தெடுக்க அதிகாரிகளுக்குப் பதிலாக அரிசன நலக் குழு என்ற பெயரில் ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு மனை இல்லாத அரிசனங்கள் ஐந்து லட்சம் பேர் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நாட்டில் பிறந்து சுதந்திரமாக, சுயேச்சையாக அபிப்பிராயத்தைச் சொல்ல உரிமை இல்லையென்றாலும் குடியிருக்க இடமாவது அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். ஆகவே, அந்தமாதிரி ஐந்து சென்ட் இடத்தை கட்டாயமாக ஒதுக்கக்கூடிய முறையில் இரண்டாண்டுக் காலத்திற்குள் ஐந்து லட்சம் பேருக்கும் வீட்டுமனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விதி 11 (1)ன்படி நஷ்ட ஈடு கொடுப்பது இரண்டாயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் இருந்தால் ஒரே தவணையிலும் அதற்கு மேல் இருந்தால் ஐந்து தவணைகளிலும் கொடுக்கப்படும் என்று இருக்கிறது. அதை, ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் ஒரே தவணையில் கொடுக்கலாம் என்று மாற்றவேண்டும். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலத்தைக் கொடுக்கும்போது மொத்தமாகப் பணத்தைக் கொடுத்தால் அவர் அதைக் கொண்டு வேறு தொழில் செய்யவோ, வேறு நிலம் வாங்கவோ வசதியாக இருக்கும். இந்தக் காரியங்களைத் துரிதமாகச் செய்வதற்கு அதிகமான அதிகாரிகளைப் போடவேண்டும். ஒரு டிவிஷனுக்கு ஒரு அரிசன் வெல்பேர் தாசில்தார்—ஐந்து தாலுகாக்களுக்குச் சேர்த்து இருக்கிறார். பல இடங்களிலிருந்தும் வீட்டு மனை வேண்டுமென்று விண்ணப்பங்கள் வருமானால் அந்தக் கிராமங்களில் போய் நேரடியாகப் பார்க்கவேண்டும் ஒரே ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர், ஒரே ஒரு தாசில்தார் ஐந்து தாலுகாக்களுக்கு போக முடியவில்லை. அந்த இடங்களுக்குப் போவதற்கான ஜீப் வசதி இல்லை. அரிஜன் வெல்ஃபேர் தாசில்தாருக்கு ஜீப் வசதி இல்லை. வரி வசூல் செய்யும் தாசில்தாருக்கு ஜீப் இருக்கிறது, பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசருக்கு ஜீப் இருக்கிறது, ஆனால் அரிஜன் வெல்பேர் தாசில்தாருக்கு ஜீப் வசதி இல்லை. அவர் அந்த டிவிஷன் பூராவும் சுற்றவேண்டும். அரிசனங்கள்தானே, மனுக்கள் கொடுத்தால்கூட வரவில்லை என்று சொல்லி, விடலாம் அதைப்பற்றிக் கவலையில்லை என்ற நிலைமைகளில் உதாசீனமாக இருக்கக்கூடாது. வீடு கட்டிக் கொடுப்பதற்கான பல திட்டங்கள் இருக்கின்றன, அதெல்லாம் வரட்டும். நான் தொடர்ந்து 10 வருடங்களாகச் சட்டசபையிலே சொல்லிக்

கொண்டிருக்கிறேன், என்னுடைய தொகுதியிலுள்ள அரிசன மக்களுக்கு பலயிடங்களிலே வாங்கித் தர முடியாத நிலை இருக்கிறது, கோர்ட்டிற்குப் போய்த் திரும்ப வருகிறது, கோர்ட்டுக்குப் போய் திரும்ப வருகிறது.

ஆகவே, குறிப்பிட்டு இரண்டு ஆண்டுகளுக்குள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்த இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அரிசன நலக் குழு என்று ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அமைக்க வேண்டும், அரிஜன் வெல்ஃபேர் தாசில்தாருக்கு ஜீப் வசதி கொடுக்கவேண்டும், ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு அரிஜன் வெல்ஃபேர் தாசில்தார் ஏற்படுத்த வேண்டும், அதற்கு வேண்டிய ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், மற்றும் வேறு பணியாளர்களை நியமித்துத் துரிதமாக வீட்டு மனைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை நான் சார்ந்திருக்கின்ற உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி முழு மனதோடு வரவேற்கிறது. இப்படி வரவேற்கின்ற அதே நேரத்தில் சில கருத்துக்களையும் சொல்ல விழைகிறோம். இந்தச் சட்டத்தை இப்படியே அமல்படுத்தும் பொழுது, 'Tamil Nadu Acquisition of the lands for the Harijan Welfare Schemes' என்று சட்டத்தைப் போடுகின்றபொழுது, அதோடு கூட மாநில அரசாங்கத்திற்கு அதை நிறைவேற்ற வேண்டிய 'rule making power' என்பதற்காக ரூல்களை ஃப்ரேம் செய்ய வேண்டும். அதை வைத்துக்கொண்டுதான் இந்தச் சட்டத்திலேயிருக்கின்ற பிரிவுகளை அமல்படுத்துவதற்கான வாய்ப்பிருக்கும். நான் இப்பொழுது குறிப்பிட்டுக் காட்டுகின்ற சில கருத்துக்களை இந்தச் சட்டத்தில் உடனடியாகத் திருத்தமாகக் கொண்டுவர முடியவில்லை என்றாலும்கூட அந்த ரூல்ஸ் மூலம் சில கருத்துக்களை, நினைக்கக்கூடிய கருத்துக்களை இந்த அரசாங்கம் 'rules making provisions' என்ற முறையிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

குறிப்பாக இந்தச் சட்டத்திலே, This Government can make necessary provisions and it can remove certain difficulties while acquiring properties என்று, மலை ஜாதி பழங்குடி மக்களையும், பழங்குடி மக்களையும், மலை ஜாதி மக்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் சேர்த்து இந்தச் சட்டம் பயன்படும் என்று சொல்லும்

1978 ஏப்ரல் 4] [திரு. ரா. மார்க்கபந்து]

முறையானது வரவேற்கத் தகுந்தது. இந்தச் சட்டத்திலே Old Acquisition Act—க்கே ஏற்கனவே போடப்பட்டிருக்கின்ற இந்தப் புதிய சட்டத்திலே பல மாறுதல்களை காண்கிறேன். இந்த மாறுதல் பழைய சட்டத்திலே வேண்டத்தகாத, விரும்பத் தகாத, சில Unnecessary delayed provisions அந்தப் பழைய சட்டத்திலே இருந்தது. அந்தச் சட்டங்களையெல்லாம் மாற்றி உடனடியாக அந்த மக்களுக்குத், தேவைப்படுகின்ற மக்களுக்குத் தேவையான நிவாரணத்தை அளிக்கும் வகையிலே இந்தப் புதிய சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஒரு நிலத்தை, இந்த நிலம் வேண்டுமென்று விரும்புகிறபொழுது அந்த ஜில்லா கலெக்டர் அவர்கள் செக்ஷன் 4(2)-ன் கீழாக அந்த மக்களிடத்திலிருந்து நிலத்தைக் கையகப்படுத்துகின்றபொழுது நிலச் சொந்தக்காரர்களுக்கு ஷோ காஸ் நோட்டீஸ் கொடுத்து அந்த நிலத்தை எடுத்துக் கொள்கிறோம் என்று முடிவு செய்கிறபொழுது, செக்ஷன் 4 (1)-ன் கீழாக டிஸ்டிரிக்ட் கலெக்டர் டிஸ்டிரிக்ட் கெஜட்டிலே வெளியிடலாம் என்று குறிப்பு தந்திருக்கிறார்கள். அதிலே நான் கூற விழைவது என்னவென்று சொன்னால், இப்படி இது சீக்கிரமாக முடிவதற்கு வழிவகையாகும். அந்த வழிமுறைகளைப் பின்பற்றும்பொழுது இங்கேயிருக்கின்ற அருமை நண்பர், சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுச்சாமி அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்களைக் கருத்திலே கொள்ளவேண்டும்.

குறிப்பாக, 'ஸ்மால் ஃபார்மர்ஸ்' என்று சொல்லப்படுபவர்கள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலங்களை வைத்திருப்பார்கள். அந்த நிலத்தையே நம்பியிருக்கும் குடும்பம், அந்தக் குடும்பத்திற்கு உண்டான சொத்து இல்லை என்றால் அந்தக் குடும்பம் வாழ முடியாமல் ஏற்படுகின்ற நிலைகளில் இந்த ரூல்ஸ் என்று சொன்னேனே அதன் மூலமாக அந்த இடங்களுக்கு, It must be taken into consideration. அதில் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று இருக்கவேண்டும். அப்படிக் கட்டாயமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டால் இந்தச் சட்டத்தில் மற்றொரு விதியை மாற்ற வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். அதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். அதே நேரத்தில் எடுக்கின்ற இடத்திற்கு ஓரிடத்தில் நன்றாகக் கிணறு வெட்டி, பம்பு செட்டு வைத்து விளையும் நஞ்சை நிலம் இருக்கிறது, அதற்குப் பக்கத்திலே ஹவுஸ் ஸைட்டுக்காக எடுக்கப்படும் நிலத்திற்குச் சொந்தக்காரராக இருப்பவருக்குப் புஞ்சை நிலம் இருக்கிறது.

(முற்பகல் 11.10)

not irrigated by any irrigation sources என்று ஒரு இடத்தை அவர்கள் தருவதற்கு மறுப்புத் தெரிவித்தால் அதற்கு alternative suggestions even at the time of enquiry, even at the time of issuing Show Cause Notice under Section 4(2) அதனாலே,

1978 ஏப்ரல் 4] [திரு. ரா. மார்க்கபந்து]

ரெப்ரசன்டேஷன்ஸ் வருகின்றபொழுது, அவைகளை ஆராய்ந்து அதற்கு வேண்டிய 'ஆல்டர்னேடிவ்' முறைகளைச் செய்து தருவதற்கு இந்த அரசாங்கம் வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும், இதிலே சில நிலவரங்களை இங்கே சொல்கிறார்கள். இந்த செக்ஷன் 7 (2)-லே சொல்லும்போது 15 per cent of the solatium over the market value என்று சொல்கிறார்கள், இப்படிச் சொல்கிறபொழுது market value-க்கு அதிகமாக 15 per cent solatium தரவேண்டுமென்று சொல்லும்போது Land Acquisition Act பிரகாரம் if it is referred to the Court அங்கே வந்து சுற்றுப்புற சூழ்நிலைகள், அங்கேயிருக்கிற இடத்தினுடைய மதிப்பு, சுற்றுப்புறத்திலே value or the importance of the place where it situate and the necessary factors அவைகளையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு இப்பொழுது இருக்கிற Land Acquisition Tribunalலே அதிகமாக காம்பன்சேஷன் ஏற்றிக்கொடுக்க வழியிருக்கிறது. ஆனால், இந்த 7 (2)-லே பார்க்கும்போது 'fifteen per centum on such market value as solatium' என்று ஒரேயடியாக ஃபிக்ஸ் செய்திருக்கிற காரணத்தாலே, வேறு எதற்கும் வழியில்லாத நிலைமையிருக்கிறது. ஆகையினாலே, 4(2) enquiry போடும்போதோ, அல்லது 7(2)-ன் கீழோ, தொகை எவ்வளவு என்று நிர்ணயிக்க வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் இந்த 11 (i), (ii) அந்த புரவிஷனிலே, இங்கே கூட அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள், ரூ. 5, 6 ஏற்றிக் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். நான் என்ன சொல்கிறேனென்றால், ஏற்கனவே ஓரிடத்தை நாம் எடுக்கிறோம். மற்றதை நாம் பெற்றாகவேண்டும். அரசாங்கம் கையகப்படுத்தும்போது இந்த ரூ. 2,000 தருவோம், இல்லையென்றால், 5 இன்ஸ்டால்மென்ட்களாக தருவோம் என்ற முறையானது, அந்த இடத்தை இழந்துவிட்டவனுக்கு மாற்று வழி தர வாய்ப்பில்லாமல் இருக்கும். ஆகவே, எடுக்கின்ற இடத்துக்கான இழப்புத்தொகையை ஒரே தவணையிலே கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும், Under Section 17 of the Act அதிலே சொல்லியிருப்பது, கோர்ட்டிலே தடை உத்தரவுகள் வழங்கக்கூடாது என்று சொல்கிறார்கள். அது எந்த அடிப்படையிலே தரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறதென்றால், காலத்தை நீட்டித்துக் கொண்டு செல்வார்களே; ஆகையினாலே, நினைத்த காரியத்தை சாதிக்க முடியாது என்ற நிலையிலே இந்த செக்ஷன் போடப்பட்டிருக்கிறது.

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 ஏப்ரல் 4

அதிலே இன்னொரு செக்ஷன் 19 (2)-லே சொல்கிருர்கள். அந்த அதிகாரியானவர் 'If he takes action, it must be treated as good faith........' வேறு ஏதோ சொல்கிருர்கள். இப்படி ஒரு நல்லெண்ணத்தோடு இங்கே எடுக்கின்றவர்கள் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று சொல்கிருர்கள். இப்படி தடை உத்தரவு கொடுக்கக்கூடாது என்று சொல்லும்போது It can be decided in a summary manner which need not be just like original suit but it can be tried as a summary trial just like OPs. என்ற முறையிலே அந்த நிலத்தை இழந்தவருக்குத் தன்னுடைய கருத்துக்களைச் சொல்கிற வாய்ப்பாக ஒரு வாய்ப்பை அதிலே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த முறைகளை அனுசரிக்கவேண்டாம். கட்டாயமாக. கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சீலிங் வைத்திருக்கிருேம். உண்மையான கிரிவன்ஸஸ் இருக்கிறவர்கள் அதை எடுத்துச் சொல்ல வாய்ப் பிருக்காது என்ற எண்ணத்தை நாம் ஏற்படுத்தி விடக்கூடாது, மக்கள் மத்தியிலே என்று சொல்கிறேன்.

இங்கே, குறிப்பாக, சேத்துப்பட்டு பஞ்சாயத்து யூனியனிலே ஓரிடம், பட்டியாவரம் என்கின்ற இடத்திலே 1976-வது ஆண்டிலே, இடங்களைத் தந்திருக்கிருர்கள் அரிசன மக்களுக்கு. அங்கே குடியில்லாதவர்கள் ஏறக்குறைய 10 பேர்களுக்கு அந்தப் பகுதியிலேயிருக்கிற ஒரு பாதிரியார், இன்னும் ஒருவரும் சேர்ந்து அந்த இடத்திலே, அந்த ஊரிலே குடியில்லாதவர்களுக்கு அந்த இடத்தைத் தந்திருக்கிருர்கள்.

நான்கூட குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ரூரல் அவுசிங் ஸ்கீம் என்று எடுத்துக்கொண்டு அதை நீங்கள் விசாரித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சேத்துப்பட்டு பி.டி.ஓ. ஆபீஸ் ஏ1/10178/76 என்கின்ற ஒரு குறிப்பை வரவழைத்துப் பார்த்தால் அதிலே நடந்திருக்கிற ஊழல் உங்களுக்குத் தெரியும். அதை நிவர்த்திப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் சார்பில் நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிற இந்த சட்டத்தை வரவேற்று, ஆதரித்து எல்லாக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே பல நல்ல கருத்துக்களை எடுத்து வைத்தமைக்காக இந்த அரசாங்கத்தின் சார்பில் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மசோதா ஏன் கொண்டு வரப்பட்டது, எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்கிற நல்ல நோக்கத்தை என்னுடைய முன்னுரையிலேயே விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

1978 ஏப்ரல் 4] (திரு. பெ. சௌந்தரபாண்டியன்)

இங்கே பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த சட்டத்தைப் பற்றி தங்களுடைய கருத்தினை எடுத்து வைக்கிற நேரத்தில் என்னென்ன சொன்னார்கள் என்பதை நான் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன்.

இந்த விவாதத்தை துவக்கி வைத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் நிலத்தைக் கையகப் படுத்துகிற அதிகாரம் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற வினவையும் இங்கே எழுப்பினர். அதற்கு நான் விளக்கத்தையும் அளித்தேன். இதிலிருந்து என்ன புரிகிறது என்ருல், மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் கோபப்படமாட்டார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் சட்டத்தையும் படிக்கவில்லை, நான் முன்னுரையிலே ஆற்றிய கருத்தையும் கேட்கவில்லை என்றுதான் கருதுகிறேன், இந்த சட்டம் கொண்டு வந்ததன் நோக்கமே ஏற்படுகிற காலதாமதத்தை குறைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மலைஜாதி மக்களுக்கு, வீட்டுமனைகளை விரைவில் கொடுக்க வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடுதான். இப்போது நடைமுறையில் இருக்கின்ற, பின்பற்றப்படுகின்ற நிலைமை, பல நிலைமைகளில் காலதாமதம் ஏற்பட்டு ஒரு சில இடங்களிலே கையகப்படுத்த 7, 8 ஆண்டும் அல்லது 10 ஆண்டும் 15 ஆண்டுகளும் ஆவதை நாம் பார்க்கிருேம். ஆகவே காலதாமதத்தை தவிர்க்க வேண்டும், உடனடியாக நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் இந்த ான் 10 கொண்டு வரப்படுகிறது என்பதை இங்கே நான் ; பலன் விரும்புகிறேன்.

ண்டு வந்து
ந்தார்கள்.
வேண்டும்

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் பலதர இன்றி கருத்துக்களை இங்கே எடுத்துச்சொன்னார்கள். குறிப்பாக அருத்தப் எடுத்துச் சொன்னக் கருத்துக்களில் கொடுக்கப்படுகிற ம்தான் தவணை முறையில் தரப்படுகிறது. ஒரே தவணையில் கொடுதையும் ஏழை விவசாயிகள், சிறு விவசாயிகள் வேறு நிலங்களை வ தங்களுடைய குடும்பத்தை வாழ்விக்க முடியும். இல்லை என்று குடும்பம் சிரமப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் இங்கே பேசினார்கள். நான் கடந்த 6, 7 மாத கால அனுபவத்தை வைத்து இதை நான் சொல்கிறேன். நிலத்தைக் கையகப்படுத்த வருகிற கோப்புகளில் பெரும்பாலானவை நிலச்சுவான்தார்கள் ஆட்சேபனை எழுப்புகிருர்கள். பெரும்பாலானவை சிறு விவசாயிகள் நிலம்தான் என்பதை அங்கேயும் பார்த்தேன். இங்கேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் மூலமாகவும் கேள்விப் படுகிறேன். சிறு விவசாயிகளாக இருக்கிற காரணத்தினால் அந்த நிலத்தின் விலைமதிப்பு 2, 00 ரூபாய் வரும் என்று நாம் நம்பலாம். நம்முடைய நாட்டில் குடும்பச் சூழ்நிலை. நாம் வைத்திருக்கும்

சொத்தின் நிலைமையும், ஆங்கிலத்திலே ர்பமூபசூகள் sub-division and fragmentation என்ற நிலைமைதான் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

(முற்பகல் 11.20)

ஆகவே, இப்படி பார்க்கிற நேரத்தில் 100-க்கு 5 சதவிகித விவசாயிகள்தான் இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு ஆளாக்கப் படுகிறார்கள். பெரும்பாலோருக்கு உடனடியாக இந்த குறியீடு அளவிற்கு தொகை கிடைக்கும் என்ற நிலைமையை நான் கடந்த கால அனுபவத்தை வைத்துக்கொண்டு தெளிவாக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். இந்த நிலையிலும் ஏதாவது சிரமம் இருக்குமானால், அதாவது சிறு விவசாயிகள் பாதகம் அடையக் கூடிய சூழ்நிலை இருக்குமானால், இந்த அரசாங்கம் எதிர்காலத்தில் பரிசீலனை செய்யும் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்களில் மாண்புமிகு உறுப்பினர் தமிழரசு, ஏதோ உதயபுரம் என்ற ஊரில் 10 ஆண்டு காலமாக நிலம் கையகப்படுத்தமுடியாத சூழ்நிலை இருப்பதாகச் சொன்னார்கள். இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுமானால், முதலில் அதை உதயபுரம் ஊரில் தொடங்க இந்த அரசாங்கம் தயாராக பகூஇருக்கிறது என்பதை ந ன் சொல்ல விரும்புகிறேன்.

அந்த ஊண்பமிகு உறுப்பினர் வேலுச்சாமி போன்றவர்கள் பல இடத்தைதூளை இங்கே எடுத்து வைத்து முன்பு இருந்த அரசியல் ர பிரிவை திருத்தியதற்கும், இங்கே கொண்டு வந்து நான்கூட சட்டத்திற்கும் என்ன பொருத்தம் என்று சொல்லி அவுசிங் ஸ்கீம் எழுப்பி, என்ன இருந்தாலும் இது தாழ்த்தப்பட்ட பார்க்கவேன் நன்மைக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது, ஆகவே, பி.டி.ஓ. சட்டத்தை வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன் என்று வரவழைத்ச் சொன்னார்கள். அவரும் தவணை முறையில் பணம் உங்களுக்(து வரவேற்கத்தக்கது அல்ல. ஒரே தவணையில் கொடுக்க அரசாங்டியது வரவேற்கத்தக்கது என்று சொன்னார், அதை நான் கொண்டுக்கொண்டு இருந்தேன்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும், மக்களுக்கு தூ இதனால் தீமை ஏற்படுமானால் அல்லது பயன் கிடைக்காது கால தாமதமாகுமானால் அல்லது குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படும் நிலைமை இருக்குமானால், மறுபரிசீலனை செய்வதற்கு இப்போது புரட்சித்தலைவர் தலைமையில் இருக்கும் அரசாங்கம் என்றைக்கும் தயங்காது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

மற்றும், மாண்புமிகு உறுப்பினர் அண்ணாமலை போன்றவர்கள் இந்தச் சட்டத்தை இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்கிறேன் என்று மகிழ்ச்சியோடு சொல்லி

விட்டு, நடந்த பல சம்பவங்களையும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கும் இதுபோன்ற சம்பவங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலை வருகிற நேரத்தில் நிச்சயமாக ஆராய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிடும்போது, காங்கிரஸ் இயக்கம் தொடங்கிய பிறகும், ஆட்சிக்கு வந்த பிறகும்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இதுபோன்ற வீட்டு மனை வழங்கவும், வீடு கட்டித் தரவும், சுடுகாட்டுப் பாதை அமைக்கவும் போன்ற பல நலல காரியங்கள் நிறைவேற்றிட திட்டம் தீட்டப்பட்டது என்று சொன்னார்கள். அவர்கள் பெருமைப்பட்டுக்கொள்வதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால் உண்மை நிலைமை என்ன வென்றால், 1949 அல்ல, 1919 லேயே ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியில் இருந்த நேரத்திலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இது போன்ற பணிகளை ஆற்றிடவேண்டும், செய்து தரப்படவேண்டும் என்கிற நிலைமை எடுக்கப்பட்டு, முன்மாதிரியாக திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அவர்கள் தொடங்குகிற அந்த நல்ல காரியம்தான் இன்று வரை தொடர்ந்து செய்யப்பட்டு, வரப்பெற்று இருக்கிறது என்பதையும் இங்கே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சோ. அழகர்சாமி அவர்கள் நான் 10 ஆண்டுகாலமாக இந்த சட்டமன்றத்தில் வாதாடினேன், பலன் இல்லை. இப்போதாவது இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறீர்களே என்று வரவேற்று மனமகிழ்ச்சி அடைந்தார்கள். நீங்கள் எல்லாம் வரவேற்று, மகிழ்ச்சி அடையவேண்டும் என்பதற்காகவும், தாழ்த்தப்பட்ட மக்கள் வீட்டு மனை இன்றி சிரமப்படுகிறோமே என்று அவர்கள் பல ஆண்டுகாலமாக வருத்தப் பட்டு கொண்டு இருக்கிற நிலைமையை மாற்றுவதற்காகவும்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்பதையும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். இதற்கு ஒரு கால வரையறை வைக்க வேண்டும். 2 ஆண்டு காலத்திற்குள் நிலம் எடுத்துத் தந்தாகவேண்டும். எல்லா தாழ்த்தப்பட்ட மக்களும் வீட்டு மனை பெற்றாகவேண்டும் என்று சொன்னார்கள். வளர்ந்து வரும் சமுதாயத்தில் காலவரையரை நிர்ணயிப்பது சாத்தியக் கூறுதானா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இன்று இருக்கும் மக்கள் தொகை என்ன, அடுத்த ஆண்டு வருகிற மக்கள் தொகை என்ன. அதற்கு அடுத்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு வரும் மக்கள் தொகை என்ன என்று இப்படியெல்லாம் கணக்குப்

போடுகிற நேரத்தில். நாம் வளர்ந்து வரும் சமுதாயத்தில் கால வரையறை நிர்ணயிப்பது சிரமம் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னும் இங்கே பேசுகின்ற நேரத்தில் இந்தப் பணியை ஆற்றுவதற்கு தேவையான அதிகாரிகள் இல்லை; ஜீப் வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அரிசன நல தாசில்தாருக்கு இருக்கிற சிரமங்களை இங்கே குறிப்பிட்டார்கள். தாலுக்காவுக்கு ஒரு தாசில்தார் போட வேண்டுமென்ற நல்ல கருத்தை தெளியிட்டார்கள். அவர்கள் சொன்ன அந்த நல்ல கருத்துக்களை இந்த அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்து, உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கபந்து அவர்கள் இந்தச் சட்டத்தை வரவேற்று, பல நல்ல கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் இந்தப் பணிக்காக ஏற்படுத்தப்பட்டிருப்பது போதாது; அந்த எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய இந்த நல்ல எண்ணத்தை உள்ளபடியே வரவேற்று பாராட்டு கிறேன். நிலத்தை கையகப்படுத்த இப்போதுள்ள அதிகாரிகள் போதுமா என்றால் போதாதுதான். இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளும் என்பதை, இதை உயர்த்துவதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளும் என்பதை, இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் கீழ் மட்டத்தில் பணியாற்றுகின்ற நிலத்தை கையகப்படுத்தும் பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகள் சூழ்நிலை காரணமாக பல தவறுகளைச் செய்கிறார்கள்; நிலச்சுவான்தார்களுக்கு சாதகமாக இருக்கிறார்கள் அல்லது வசதி படைத்தவர்களுக்கு ஆதரவு தருகிறார்கள்; ஆகவே தான் நிலத்தை கையகப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று பலர் சுட்டிக்காட்டினார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்கும் வந்திருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொண்டு ஆக வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக்கூடாது என்பது தான் இந்த அரசாங்கத்தின் நோக்கமும் கொள்கையுமாகும். ஆகவே, இதைப் போக்குவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அந்தந்த நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுப்பதற்கு உறுதியாக இருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று ஒரு விதியை வைத்திருக்கிறீர்கள்; அதனால் நிலச்சுவாந்தார்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். நான்

அவர்கள் சொன்னதை எண்ணிப்பார்த்தேன். அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞர். நிலச்சுவாந்தார்களைவிட வழக்கறிஞர்களுக்குத்தான் கோர்ட்டுக்குச் செல்வதில், தடை வாங்குவதில் சிரமம் இருக்கிறது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். சட்டம் கொண்டு வருவதன் நோக்கமே, கோர்ட்டுக்குப் போனால் நீதி மன்றத்தில் அல்லது உயர்நீதிமன்றத்தில் தடை வாங்கப்பட்டு, அங்கே தேக்கம் ஏற்படுகிறது; ஆகவேதான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது; அதைப் போக்க வேண்டும் என்பது தான். இந்தக் குறையைப் போக்குவதற்காகத்தான், கோர்ட்டுக்குப் போய் தடை வாங்கக் கூடாது அல்லது தடை வாங்க அதிகாரம் இல்லை என்ற ஒரு பிரிவை இந்தச் சட்டத்தில் போட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் இதுதான் முடிந்த முடிவா அல்லது இறுதியான சட்டமா என்று நீங்கள் கேட்கலாம். சட்டம் என்பது சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அல்லது மக்களின் தன்மையும் நிலைமையும் அதிலே சில பல நேரங்களில் மாறுதல் வரத்தான் செய்யும். அப்படிப்பட்ட நேரத்தில் திருத்தங்கள் வந்தால், அது பொருத்தமாக இருந்தால் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்வதுதான் நியாயமாக இருக்கும். ஆகவே, நீங்கள் சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகள், தேவைகள் காலப்போக்கில் அல்லது அனுபவ ரீதியில் நியாயமாக இருக்கும் என்று சொல்லி, பரிசீலனைக்கு வருமானால் இந்த அரசாங்கம் அதை பரிசீலனை செய்து, திருத்தம் செய்வதற்கும் முயற்சி எடுத்துக்கொள்ளும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த மசோதாவை கொண்டுவந்திருக்கிற நல்ல நோக்கத்தை, நல்ல எண்ணத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாத் தரப்பிலும் வரவேற்று ஆதரித்து இருக்கிறார்கள், ஆகவே, இதை நிறைவேற்றுவதற்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் இந்த தவணை முறையை கொஞ்சம் உயர்த்த வேண்டும் அல்லது ஒரே தவணையில் தரவேண்டுமென்று மீண்டும் வலியுறுத்த விரும்புகிறார்கள். நான் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறேன். இதில் சிரமம் இருக்குமானால் எதிர்காலத்தில் அதுபற்றி பரிசீலனை செய்யலாம். தேவைப்படுமானால் நல்ல திருத்தம் கொண்டுவரவும் தயாராக இருக்கிறோம் என்று எடுத்துச் சொல்லி, நல்ல நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்ட இந்த சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்கள் அனைவரையும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(முற்பகல் 11-30)

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த விதிகளை எல்லாம் எதிர்க்கட்சியின் ஆதரவோடு நிறைவேற்றி இருக்கிறார்கள். ஆனால் நடுத்தர மக்கள் ஏழை எளிய விவசாயிகள் நிலத்தை எடுத்துக்கொள்கின்றபோது பணத்தை மொத்தமாக தரவேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது என்ற வகையில் ஒரு சட்டம் இயற்ற வேண்டும் என்று எல்லோரும் ஏகோபித்து வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சரவர்கள் இதற்குப் பிறகு பார்க்கலாம் என்று சொல்கிறார்கள். இதனை எல்லோரும் ஏகோபித்த வகையில் வரவேற்கிற நேரத்தில் அதையும் ஒரு சட்டமாகச் செய்து இந்த மாமன்றத்திலே நிறைவேற்றினால் அது ஏழை எளிய விவசாயிகளுக்கு பேருதவியாக இருக்கும் என்று அவர்களின் சார்பாக நான் மாண்புமிகு தலைவரவர்கள் மூலமாக அமைச்சரவர்களை வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, முதலில் சட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று மெத்த பணிவோடு கேட்கிறேன். பிறகு நாம் இதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

''தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 24 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே,

''தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/78) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்''

என முன்மொழிகிறேன். தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடபெற்று, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) 1978-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு (பேரவை சட்டமுன்வடிவு எண் 15/78) .. ..

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே,

''தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 15/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

என்று முன்மொழிகிறேன்.

மாநில அரசின் வருவாயை பெருக்கும் நோக்கத்துடன் ஊர்திகள் உட்பட ஒப்பந்தப் பேருந்துகள், விரைவுப் பேருந்துகள் பணி நீங்கலாக நகரப் பேருந்து பணியாகவும் கிராமப்புற பேருந்து பயணியாகவும், நடத்தப்பறம் பயணிப் பேருந்துகள் ஆகியவற்றின் மீது தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) கீழ் இருக்கை ஒன்றுக்கு விதிக்கப்பட்டுவரும் காலாண்டு வரியை 1-4-1978-லிருந்து தொடங்கும் கால்ாண்டிலிருந்து உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகின்றது. எனவே, இம்மாமன்றம் இந்தத் தீர்மானத்தை ஏற்றுகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. துரை கலியமூர்த்தி: பேரவை துணைத் தலைவரவர்களே, இன்று இந்த சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். அதை கடுமையாக எதிர்த்து ஒரு சிலக் கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

இன்று தமிழகத்திலே நடைபெறுகின்ற அரசு பேருந்துகளிலே ஏறத்தாழ 4,988 அரசுப் பேருந்துகள் ஓடுவதாகச் சொல்கிறார்கள். அதிலே ஏறக்குறைய 2,898 பஸ்கள் நஷ்டத்திலே ஓடுகிறது என்று அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் இந்தத் தொழிலாளர்கள் பஸ் போக்குவரத்திலே பங்கு பெறுகிறார்கள் என்ற நிலையை ஏற்படுத்துகின்ற வகையில் தொழிலாளர்களுக்கும் பங்கு என்று சொல்கிறார்கள். இருந்தாலும் இந்த நிலையிலே அரசு சார்பிலே ஓடும் பஸ்களில் நஷ்டம் வருகிறது என்ற நிலையிலே வரியை உயர்த்தி இருக்கிறார்கள்.

அப்படி வரியை உயர்த்துவதன் காரணமாக அது அந்தத் தொழிலாளர்களுக்கு பெரிய ஏமாற்றத்தைத் தருவதாக இருக்கிறது. இன்று பெரியார் போக்குவரத்துக் கழகத்தை எடுத்துக்

* 27-3-1978 ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

கொண்டால் 1976-77ல் ரூ.48,56,000 நஷ்டம் வந்திருப்பதாக கணக்குச் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் அவர்களுக்கு குறைந்த பட்ச போனஸாக 8.33 சதவிகிதம் கொடுத்திருக்கிறார்கள். அதை அதிகப்படியாகக் கொடுக்கவேண்டுமென்றால் இந்த வரியைக் குறைக்க வேண்டும். அதேபோல் தனியார் துறையில் இருப்பவர்கள் இதனால் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை யும் நாம் உணரவேண்டும். இந்த அரசு எவ்வளவோ கடன் உதவி கொடுத்தும், அரசு உதவி கொடுத்தும் அரசுத் துறை பஸ் போக்குவரத்துக் கழகம் நஷ்டத்தில் ஓடுகிறது என்று சொன்னால் தனியார் துறையில் பஸ் நடத்துபவர்கள் எந்தளவிற்கு பாதிக் கப்பட்டிருப்பார்கள் என்று உணரவேண்டும். தனியார் துறையினர் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த வரி உயர்வின் காரணமாக இப்போதே65.35 சதவிகிதம் நஷ்டம் வருகிறது என்றால் எவ்வளவு தூரம் போக்குவரத்துத் துறை பாதிக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த வரி உயர்விலிருந்து, இந்த வரியிலிருந்து முதல் அமைச்சர் அவர்கள் நிதிக்கு ரூ.50 லட்சம் ஒதுக்கப்படுவதை நான் கடுமையாக எதிர்க்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் நிதி என்பது அது தனிப்பட்ட முறையில் இருக்கவேண்டும். வரிகளைப் போட்டு அதிலிருந்து முதல் அமைச்சர் அவர்கள் நிதிக்குச் சேர்த்துக்கொள்வது என்பதை நான் எதிர்க்கிறேன். கிராம மக்களின் வசதிக்காக ஓட்டப்படுகிற அரசுப் பேருந்துகள் அதிக அளவிற்கு இன்று ஓடாமல் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் கேட்டால் அந்த வழித்தடத்தில் போதிய வசூல் இல்லை என்பதால் சரியானமுறையில் ஓட்டமுடியவில்லை என்ற காரணத்திற்காக நிறுத்தப்பட்டதாகச் சொல்கிறார்கள். இந்த வரி உயர்வின் மூலம் அது மேலும் பாதிக்கப்படும் என்று சொல் லாமல் இருக்க முடியாது.

1967க்கு முன்னால் ரூ.35 ப்ளஸ் சர்சார்ஜ் என்றிருந்தது ரூ.180 என்றாகி, ஆளுநர் ஆட்சிக் காலத்தில் ரூ.215 ஆக உயர்த் தப்பட்டது. இப்போது மேலும் ரூ.15 உயர்த்தப்பட்டு ரூ.230 என்ற அளவில் நிற்கிறது. ஆகவே இந்த வரி உயர்வு இந்த பஸ் தொழிலையே நசுக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. பஸ் என்பது நாட்டுக்கு மிக அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. அதை நல்லமுறையில் அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அரசு கடன் உதவி செய்கிறது. அப்படி அரசு உதவி இருந்தும்கூட அரசு சார்பில் நடத்தப்படுகிற பேருந்துகள் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன என்றால் தனியார் துறையில் பஸ் ஓட்டுபவர்கள் எந்தளவிற்கு கஷ்டப்படு வார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்று சொன்னாலுங்கூட, ரென்யூவலுக்குப் போகும்போது பெர்மிட்கள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. திருவிழாக் காலங்களில், வடலூர் திருவிழாவில் கடைசியில் தனியார் துறை பேருந்துகள் தான் விடவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த திருவிழாவின்போது கடைசி நேரத்தில் பெர்மிட் இல்லாமல், அனுமதியில்லாமல் தனியார் துறை பஸ்கள்தான் பயணிகளை ஏற்றிச்சென்று நிவர்த்தி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டது. ஆகவே ஏன் அவர்களுக்கு சட்டப்படி அனுமதி கொடுக்கக்கூடாது? அதே போல் வரி விதிப்பில் ஒரு கடுமையான பகுதி இருக்கிறது. மனிதாபிமானத் தோடு இல்லாமல் வரி கட்டும்போது ஒரு நாள் தவறிவிட்டால் 25% வரி உயர்வு கட்டவேண்டும் என்று இருக்கிறது. ஒரு மாதம் தவறிவிட்டால் 50% அதிகப்படியாகக் கட்டவேண்டும் என்றிருக் கிறது. மேலும் ஒரு மாதமானால் 100% உயர்வு என்று இப்படி 200% வரை போய் இருக்கிறது. ஏற்கெனவே பஸ் முதலாளி களாக இருந்து பஸ்களை ஓட்டிக்கொண்டிருந்தவர்கள் இன்று ஓட்டாண்டிகளாக ஆகியிருக்கிறார்கள். கணக்கெடுத்துப்பார்த்தால் அது நன்கு தெரியும்.

அரசுத் துறையிலிருந்து ஒரு கணக்கு எடுத்துப் பார்த்தால் எவ்வளவு பேர்கள் இந்த பஸ் நடத்தும் தொழிலில் ஈடுபட்டிருந் தார்கள், இப்போது எவ்வளவு பேர்கள் அத்தொழிலில் ஈடுபட் டிருக்கிறார்கள் என்று பார்த்தால் கணிசமான அளவிற்கு அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவரும். ஆகவே, வரி கட்டணத்தைக் குறைக்க வேண்டும். அப்படிக் குறைத் தால்தான் பஸ்தொழில் செய்பவர்களுக்கு அனுகூலமாயிருக்கும். அதேபோல் இந்த வரியை மாதாமாதம் கட்டவேண்டும் என்று செய்தால் அவர்களுக்கு வசதியாகயிருக்கும். இதையும் அரசு நல்லமுறையில் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மு. பகல் 11-40]

அதே போல், மினி பஸ்களை தனியார் நடத்த முடியாது. இப்போதுகூட அரசாங்கத்தின் மினி பஸ்கள் எல்லாம் நஷ்டத் தில்தான் ஓடுகின்றன என்று அமைச்சர் அவர்களே சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே, வரியை குறைத்து பல சலுகைகளும் கொடுத்து, தனியார்களும் இந்த மினி பஸ்களை விடுவதற்கு அனுமதித்தால் கிராம மக்கள் மிகவும் பயனடைவார்கள். கிராம மக்களுக்கு நல்ல முறையில் இந்தத் திட்டம் பயன்படவேண்டு மானால் மேலும் கூடுதலான மினி பஸ்களை விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் கிராமத்து மாணவர்களுக்கும் சென்னையில் இருப்பது போலவே, இலவச பாஸ் அனுமதிக்கவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக பெர்மிட்டை புதுப்பித்து கொடுக்கவேண்டும். காலதாமதம் இல்லாமல் திருவிழா போன்ற காலங்களில் டெம்ரறி பெர்மிட் கொடுப்பதற்கும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பஸ் தொழில் என்பது முக்கியமான தொழில். இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை நசுக்கிவிடாமல், பார்த்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அதே நேரத்தில் இதிலுள்ள தொழிலாளர்களும் பாதித்துவிடாமல் அவர்களையும் ஊக்குவிக்கின்ற முறையில், சலுகைகளை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த வரி உயர்வை நான் எதிர்க்க கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் போடப்பட்டிருக்கின்ற வரியை குறைப்பதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் தொழிலாளர்களுக்கு போதுமான வசதியும், போனஸ் போன்றவைகளும் பஸ் முதலாளிகளால் கொடுக்க முடியும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன், அந்த வகையில் எல்லாவிதமான சலுகைகளையும் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமருகின்றேன். வணக்கம்.

<u>திரு. நா. சுந்தரராஜ்:</u> தலைவரவர்களே, 1978-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதில் போடப்பட்டிருக்கின்ற வரியானது மக்கள் மீது சுமத்தப்படும் என்று பல்வேறு நேரங்களிலும் சொல்லப்பட்ட போது, இது மக்கள் மீது சுமத்தப்பட மாட்டாது என்று அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். ஆனால் கடந்த காலத்தில் இது போன்ற உத்தரவாதங்கள் சட்டமன்றத்தில் கொடுக்கப்பட்டிருந்தாலும், சட்டமன்றம் முடிந்த பின்னால் அந்த உத்தரவாதங்கள் எல்லாம் காற்றில் பறக்கவிடப்பட்டிருக்கின்றன. பஸ்முதலாளிகள் பஸ் டிக்கெட்டை ஏற்றி மக்கள் மீது ஏற்றிக்கொண்டார்களே தவிர, தாங்கள் இந்த உயர்வை ஏற்றுக் கொண்டதாக இல்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் உறுதியாக இருந்து மக்கள் மீது இந்த சுமையை திணிக்காமல் இருக்கும்படியான அளவில் கண்ணும் கருத்துமாக இருந்து பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக இப்போது சாதாரணமான பஸ்-க்கு 215-லிருந்து 230 ஆக வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இது சாதாரணமாக இருந்தாலும் கூட. இதனால் சாதாரண ஏழை எளிய மக்கள் பாதிக்கப் படுவார்கள். அதோடு பஸ் முதலாளி பாதிக்கப்படுவார்கள் என்ற நிலை ஏற்பட்டாலும் அதனால் தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள். இப்போது 230 என்று

வரி உயர்த்தப்பட்டிருப்பதன் காரணமாக எங்காவது ஒரு பஸ்-க்கு பிரேக் டவுன் ஏற்பட்டாலும் கூட, அதற்கு வேறு பஸ் விட மாட்டார்கள், காரணம் ஸ்பேர் வண்டிகள் வைத்துக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை. வேறு வண்டிகள் வைத்துக் கொண்டால் வரி அதிகமாக கொடுக்கவேண்டியிருக்கும். அதோடு தொழிலாளர்களுக்கும் தரவேண்டிய சலுகைகளை சரிவர தர மாட்டார்கள். ஆகவே இந்த வரி உயர்வு முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் சரியாக இருக்காது என்பது என்னுடைய கருத்து.

அதோடு மட்டுமல்ல, ஒவ்வொரு பேருந்துக்கும் போடப்படுகின்ற வரி 18-ம் தேதி கட்ட வேண்டும். சாதாரணமாக 12 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டும் என்று இருந்தால், ஒரு நாள் தவறிவிட்டாலும், கூடுதலாக அபராதமாக 3,000 ரூபாய் கொடுக்க வேண்டும். மேலும் 10 நாட்கள் வரி கட்டுவது தள்ளி விட்டால், கிட்டதட்ட அபராதமாக 100 சதவிகித அளவுக்கு அபராதத் தொகை வளர்ந்து கொண்டே போகிறது. அதோடு முறையாக பணம் செலுத்தப்படவில்லையென்றால் ஆர்.டி.ஓ. பஸ் ரூட்டை சஸ்பெண்ட்டும் செய்கிறார். அதே நேரத்தில் 1,000 ரூபாய் 2,000 ரூபாய் 3,000 ரூபாய் அபராத தொகை வசூலிப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில் குற்றம் செய்துவிட்டால், அதற்கு இரண்டு பேர் அபராதம் விதிக்கக்கூடிய நிலைமை இருக்க வேண்டுமா என்பது தான். பஸ் முதலாளி வரியைக் கட்டுவதற்கு தவறிவிட்டால், அதற்காக இரண்டு பேர் அபராதம் விதிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை மாற்றியாக வேண்டும்; ஆர்.டி.ஓ.க்கு இந்த அதிகாரம் தேவையில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆம்னி பஸ்ஸைப் பொறுத்தவரையில், 200 லிருந்து 280 ஆக அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிலிலிருந்து அவர்களை அப்புறப்படுத்தவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கலாம். அதற்கு வரிவிதிப்பை அதிகப்படுத்துவதால், அவர்கள் தொழிலைவிட்டு போய்விடப்போவதில்லை. இப்போது 80 ரூபாய் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்றால், அவர்கள் இப்போது புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு 18 ரூபாய் வரி வாங்குகிறார்கள் என்றால் இனிமேல் இரண்டு ரூபாய் அதிகப்படுத்தி 20 ரூபாயாக மாறும் மாதம் ஒன்றுக்கு கூடுதலாக அவர்கள் 4,000 ரூபாய் வரி செலுத்தவேண்டியிருந்தாலும் அவர்களுக்கு வருகின்ற 9,000 ரூபாயிலிருந்து 4,000 ரூபாய் வரியாக செலுத்தினாலும், அவர்களுக்கு 5,000 ரூபாய் லாபகரமாக இருக்கும். மேலும், அந்த முதலாளிகள் அந்தத் தொழிலிலே லாபம் அடைந்து வரத்தான் செய்கிறார்கள். இந்த ஆமின் பஸ்களை நடத்தக் கூடியவர்கள் அநியாயமாகவும். அக்கிரமாகவும் இன்றையதினம் இந்த அரசாங்கம் 50 சீட்டுகள் என்று வழங்கியிருந்தால்,

அவர்கள் 70 பேர்களை ஏற்றுகிறார்கள், புதுக்கோட்டை—சென்னை வருகின்ற பஸ் நேரடியாக புதுக்கோட்டை—சென்னை வராது: வருவதில்லை விழுப்புரம் வரை டிக்கெட் கொடுக்கிறார்கள்; இல்லாவிட்டால் செங்கற்பட்டு வரை டிக்கெட் கொடுக்கிறார்கள். பின்பு அங்கிருந்து அவர்கள் ரூட் பஸ்போல் தான் ஏராளமான பேர்களை ஏற்றிக் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் இந்த நிலைமையிலே நாம் வரி விதிப்பதன் மூலம் அவர்கள் யாரையும் அப்புறப்படுத்தி விட முடியாது. கூடுமானவரை, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இந்த நிலைமைகளை சீர்படுத்தி, இந்த ஆமினி பஸ்களின் நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல இன்றைய தினம் ஆர். டி. ஓ. வாக இருக்கின்றவர்கள் வரிவசூல் முறையைச் சரியாகச் செய்வதில்லை; முறையாகச் செய்வதில்லை. குறிப்பாகச் சொன்னால், ஒவ்வொரு பேருந்துகளிலும் அதிகபட்சமாக 60 பேர்கள் ஏற்றிச் செல்வதற்குப் பதிலாக 80, 100 பேர்களை ஏற்றிச் செல்கிறார்கள். இவர்கள் டவுனுக்கு வெளியிலே இந்த பஸ்களை மறித்து, வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு, பஸ்களை போக அனுமதிக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் தன்னுடைய வருவாயை இழக்கிறது. காரணம், அரசாங்கம் தன்னுடைய வருமானத்தை இழப்பதோடு மட்டுமல்லாமல், இப்படி ஒவராக டிக்கெட் கொடுப்பதால், அதன் மூலம் சீட்டுக்கு வரக்கூடிய அந்தப் பணத்தையும் அரசாங்கம் இழக்க நேரிடுகிறது, ஆகவே, அரசாங்கம் இந்த ஆர். டி. ஓ. க்களை கண்டித்து, கண்காணித்து, அதற்குத் திறமையானவர்களை நியமித்து, அதன் மூலம் நுங்களுடைய, அரசாங்கத்தினுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

அதோடு மட்டுமல்லாமல், போக்குவரத்துக் கழகங்களிலே விடப்படுகின்ற பஸ்களின் டைமிங் சரியா இல்லை. தனியார்களுக்கு அந்த டைமிங்கைக் கொடுத்து விட்டு, போக்குவரத்துக் கழக பஸ்கள் எந்தவிதமான வசதியற்ற மக்கள் வராத காலங்களிலே பஸ்கள் காலியாக விடப்படுகின்றன. ஆகவே, இந்த நிலைமையை மாற்றி, ஆர். டி. ஓ. க்களிடம் சொல்லி நல்ல டைமிங்காக பார்த்து, அந்த நேரங்களிலே அரசு போக்குவரத்துக் கழக பஸ்கள் விடுவதற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். புதிய வரிகள் விதிப்பதன் மூலம் மட்டும் நாம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியாது. காரணம் மக்கள் பிரயாணம் செய்தால் தான், அவர்களுக்கு திருப்தியான வகையில் இந்த பிரயாண

ஏற்பாடுகளைச் செய்தால்தான் அரசாங்கத்திற்கு அதன் மூலம் வருமானம் கிடைக்கும். ஆனால், இப்போது பஸ்கள் காலியாகவே போக்குவரத்துக் கழகங்களால் விடப்படுகின்ற நிலைமை இருக்கிறது.

குறிப்பாக சொல்ல வேண்டுமானால், புதுக்கோட்டை—சென்னை, பொன்னமராவதி—சென்னை செல்லக்கூடிய இரண்டு ஆமினிபஸ்கள் எப்போதும் புல்லாகப் போகின்றன. எனவே, அது போன்ற வழித்தடங்களையெல்லாம் இந்த அரசு ஏற்று, அங்கே இந்தப் பேருந்துகளை விடவேண்டும். குறிப்பாக, திருப்பத்தூர் வழியாக ஒரு பேருந்தை விட்டால், இந்த இரண்டு ரூட்டுகளிலும் உள்ள சாதாரண மக்கள் இதிலே செல்வதற்கு வசதியாக இருக்கும். அதே நேரத்திலே வருமானமும் வரும்; மக்களும் வசதியாக பிரயாணம் செய்வார்கள். இன்னும், இது போல் பல இடங்கள் இருக்கின்றன. அந்த இடங்களில் எல்லாம் அரசாங்கம் பஸ்கள் விடுவதற்கு முன் வர வேண்டும். ஆகவே, வெறும் வரி விதிப்பினால் மட்டும் எவ்விதப் பிரயோஜனமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மோட்டார் வாகன வரியின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் ஒரு சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்போது இந்த அரசு இந்த சீட்டுகள் மீது விதித்திருக்கின்ற இந்த வரியைப் பொருத்த அளவிலே நான் ஆதரிக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆனால், அதே சமயத்தில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எக்காரணத்தைக் கொண்டும், கட்டணத்தை உயர்த்த அனுமதிக்க மாட்டோம் என்று கூறினார்கள். நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த நிலையில் இந்த அரசு உறுதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இன்றையத் தினம் பெட்ரோல், டீசல் ஆகியவைகளின் விலை சிறிது உயர்ந்திருக்கின்ற அந்தக் காரணத்தைக் காட்டி, குறிப்பாக தனியார் பஸ் முதலாளிகள் அவர்களுடைய கட்டணத்தை உயர்த்துவதற்கான வகையிலே எல்லா முயற்சிகளையும் செய்வார்கள். எனவே, இந்த பிரச்சினையில் அரசு உறுதியான நிலையை எடுப்பதோடு, இந்த அவையிலே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான உத்திரவாதத்தைக் கொடுப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதேபோல், இன்றையத் தினம் இந்த பஸ்கள் கிராமங்களுக்கு மிகவும் அதிகமாகத் தேவைப் படுகின்றது.

[திரு.என்.பழனிவேல்] [1978 ஏப்ரல் 4

வரியை அதிகமாக உயர்த்தி, வருவாயைப் பெருக்குகின்றபோது, அரசு கிராமங்களுக்கு மினி பஸ்கள் எங்கெங்கு தேவையோ, அங்கே யெல்லாம் விடுவதற்கு உடனடியாக ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்திலே 7 கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. ஆனால், இன்றைய தினம் அந்த கார்ப்பரேஷன்களிலே உள்ள தொழிலாளர்கள் போராட்டத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-50]

இந்த அரசு மனிதாபிமான அடிப்படையில் அவர்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளைச் செய்வதற்கு அவர்கள் போராட்டக் களத்தில் இறங்காமல் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி போராட்டத்தைத் தவிர்க்க உள்ள பூர்வமாக நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

கிராமங்களிலும், சிறு சிறு நகரங்களிலும் பஸ்களில் மூட்டைகளை அடுக்குவது மாதிரி ஜனங்களை அடுக்கிக் கொண்டு போகிறார்கள். அதையெல்லாம் ஓரளவு கட்டுப்படுத்த வேண்டும். பிரயாணிகள் ஓரளவு பணம் கொடுத்து செல்லுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. ஆகவே, கறாராக ஓவர்லோடைத் தடுத்து தேவையான அளவு பஸ்களை விடுவதன் மூலம் வசதிகளைச் செய்து கொடுத்தால் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவு போக்க முடியும்.

தனியார் பஸ் முதலாளிகளோடு இன்று இருக்கும் அதிகாரிகள் மிக நெருக்கமான தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் கண்காணிக்க வேண்டும். கார்ப்பரேஷன் பஸ்களுக்கும், தனியார் பஸ்களுக்கும் நேரத்தை ஒதுக்கும்போது தனியார் பஸ்களுக்கு முன்னுரிமை கொடுத்து கார்ப்பரேஷன் பஸ்களுக்குப் பின்னுரிமை கொடுக்கிறார்கள். இதனால் அரசு பஸ்களுக்கு வருமானம் குறைகிறது. இதை கண்காணித்து நேரத்தை அட்ஜஸ்ட் செய்து அரசு பஸ்களுக்கு முன்னுரிமை கொடுத்து நேரத்தை நிர்ணயிப்பதன் மூலம் படிப்படியாக தனி உடைமை பஸ்களை ஒழித்துக் கட்டும் நடவடிக்கையாக அமையும் என்று கூறி, இந்த வரி விதிப்பை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

<u>திரு. எம். ஏ. லத்திப் :</u> தலைவர் அவர்களே, இது சிறிய திருத்த மசோதா. இந்த மசோதாவின் வாயிலாக சில வரி விதிப்புகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இது அரசாங்கத்தின்

1978 ஏப்ரல் 4] [திரு. எம்.ஏ.லத்திப்]

வருமானத்திற்காக உயர்த்தப்படுகிறது என்று சொன்னாலும், அது தேவை என்று சொன்னாலும் வரவேற்கக் கூடியதுதான். ஆனால் இதனுடைய விளைவுகள் யார்மீது பாதகமாக இருக்குமென்று பார்த்தால் சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு இது வரும் என்று சொன்னால் அதை அரசு செய்ய வேண்டுமா என்று மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரணமாக, அரசு பஸ்களுக்கும் தனியார் பஸ்களுக்கும் இன்றைக்கு அணுகு முறையில் பாகுபாடு காட்டப்பட்டு வருகிறது என்ற குறை இருந்து வருகிறது. அரசு பஸ் நிறுவனங்கள்தான் இன்றைக்குப் பஸ் துறையைப் பொறுத்த வரை பெருத்த முதலாளி என்ற அளவுக்கு இருக்கிறார்கள். தனியாரைப் பொறுத்தவரை தொழிலாளர்கள், இரண்டு மூன்று பஸ்களை வைத்துக் கொண்டு நடத்துகிறவர்கள் தான் இருக்கிறார்களே தவிர வேறல்ல. அரசு நிறுவனங்கள் தான் பெரு முதலாளிகள் என்ற அளவுக்கு வருகிறார்கள். பெரு முதலாளிகளைக் கண்காணிக்க வேண்டுமென்று சொன்னால் அவர்களுடைய எதேச்சதிகாரமான போக்குகளை எல்லாம் கட்டுக்கோப்புக்குள் வைக்கவேண்டுமென்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னால் அது அரசு நிறுவனங்களாக இருக்கும் நிலையில் அவைகளை கண்காணிப்பில் வைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சாதாரணமாக தனியார் பஸ்களை நடத்துகிறார்கள். அதற்கு எவ்வளவு பஸ்களை வைத்துக் கொள்ள வேண்டுமென்று உச்சவரம்பாவது கொண்டு வரவேண்டும். அவர்களுக்கு பஸ் நடத்த உரிமை கொடுப்பதாக இருந்தால் லாபகரமாக அந்தத் தொழிலில் ஈடுபட்டு நடத்துவதோடு மட்டுமல்லாமல் அதன் வாயிலாக பொதுமக்களுக்குச் சவுகரியங்களை அவர்கள் செய்யும் அளவுக்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டுமே தவிர அதிகமான வரியைப் போட்டுவிட்டு, பிறகு சார்ஜையும் ஏற்றக் கூடாது என்பதை அரசாங்கம் கண்காணிக்கும் என்று சொல்லுவது எந்த தர்மத்தில், நியாயத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்பதைச் சிந்திக்கவேண்டும். வரிகள் உயர்த்தப்படுகின்றன, வரி உயர்வின் காரணமாக சார்ஜை உயர்த்தக் கூடாது என்று சொல்லி அவர்கள் குரல் வளையைப் பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுவது நல்ல முறையாக இருக்காது.

அது நாட்டிற்கு நன்மை செய்யாது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

[1978 ஏப்ரல் 4

[திரு. எம். ஏ. லத்தீப்]

சார்ஜை உயர்த்தக் கூடாது என்றால் அவர்கள் என்ன செய்
வார்கள்? ஓவர்லோட் செய்வார்கள். இன்னறக்கே ஓவர்
லோடின் காரணமாகப் பஸ்ஸிலே உட்கார முடியாமல் மூச்சுத்
திணறுகிறது. இங்கே கூட, அரசாங்க பஸ்களுக்கும். தனியார்
பஸ்களுக்கும் உள்ள அணுகு முறைகள் வெவ்வேறாக
இருக்கிறது.

ஓவர்லோட் ஏற்றக்கூடாது என்ற நிலை இருக்கிறது. சிட்டிங் பாசஞ்சர்,
எவ்வளவு, ஸ்டான்டிங் பாசஞ்சர் எவ்வளவு என்ற நியதி இருக்கிறது.
ஆனால் சிட்டியிலே ஓடும் பல்லவன் பஸ்களிலே ஏறிவிட்டால்
மீண்டும் இறங்க வேண்டுமென்றால் ஆண்டவன் நினைத்தால்
தான் இறங்க முடியும் என்ற அளவிற்கு அவ்வளவு கூட்டம்
இருக்கிறது. ஆனால் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்
கப்படுகிறது; பல்லவன் மீது அல்லது அரசாங்க நிறுவனங்கள்
எதன் மீதும் எந்த நடவடிக்கையையும் அந்த டிராஃபிக்
சூப்பிரண்டெண்டெண்டோ அல்லது அதற்கு யார் அதிகாரிகளோ
அவர்கள் பார்த்தும் பார்க்காமல் இருந்து விடுகிறார்கள்.
ஆனால் தனியார் யாராவது இரண்டு பேர்கள் வெளியே நின்று
கொண்டிருக்கிறார்கள் என்று கிராமப் புறங்களிலே அவர்களை
ஏற்றிக்கொண்டு போனால் அவர்கள் மீது உடனடியாக நடவடிக்
கை எடுப்பார்கள். அவர்களுக்கு ஃபைன் போடுவார்கள்;
பெனால்டி போடுவார்கள்; பெனால்டியைக் கட்ட வேண்டும்.
ஏன் இந்த நிலைமை? எல்லா பஸ்களையுமே நீங்கள் தேசிய
மயமாக்கிவிடுங்களேன். தனியாருக்கு என்று வைத்து ஏன்
கொல்லாமல் கொன்று கொண்டு இருக்க வேண்டும்? அதிக
மான பஸ்களை நாம் வைத்துக் கொண்டு; சிறிய அளவில்
ஒன்றிரண்டு பஸ்களைத் தனியார் வைத்துக் கொண்டிருக்க
வேண்டிய அவசியமில்லை.

ஆகவே, தேவையிருந்தால் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்.
அவர்களை இந்தக் கதிக்கு ஆளாக்காதீர்கள். தேசியமயமாக்கும்,
பொழுது பெரிய கம்பெனிகளை, டி. வி. எஸ்., மகாலிங்கம்,
இராமன் அன்ட் இராமன் என்று இப்படியுள்ளவற்றைத் தேசிய
மயமாக்கினீர்கள். தேசிய மயமென்று என்ன செய்திருக்கிறீர்கள்
என்றால், சுளையை அவர்களுக்குக் கொடுத்து விட்டுத் தோலை
எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். பஸ்களை தேசிய மயமாக்கி
விட்டு; ஒர்க்ஷாப் அவர்களிடத்திலே இருக்கிறது. (குறுக்கீடு)
யார் செய்ததாக இருந்தாலும் சரி; தமிழக அரசைக் கேட்கி
றேன். தமிழக அரசிலே ஆட்கள் வரலாம், போகலாம்.

I am addressing the Government of Tamil Nadu which is at present constituted, I am requesting the Hon. Minister for Transport who is here.

ஆகையால் அந்த வகையிலே நான் சொல்கிறேன்.

1978 ஏப்ரல் 4]

THE HON. THIRU S. RAMACHANDRAN: I would request the hon. Member Thiru Latheef to resume his seat. Mr. Latheef, is not only a member of this House but he was a member of the previous House also. If I remember correct, as far as the nationlisation Bill (of bus transport) was concerned, there was a specific provision to nationalise the workshop only if it was exclusively used for repairs and not otherwise. Otherwise if it had been used for lorries or for other purposes, we were not empowered to pass such a legislation and the whole Act could have been void. The hon. Member has already given his considered views when that Bill was brought by me before this House previously, in the previous Assembly. At that time he did not oppose the Bill. I do not know how he has changed his views now.

THIRU M. A. LATHEEF: The records are there which will clarify the position. So far as my observations are concerned, it would never change. So far as the basic attitude taken by me is concerned, it will never change. Whatever views I expressed previously, I am voicing the same views, repeating the same views now. So far as basic policies are concerned, my views never change. I had not changed my ideas. When one is having workshop, which is connected or incidental to the plying of buses, you should have nationalised that also while nationalising the bus transport.

அதுதான் என்னுடைய கேள்வியே தவிர, அப்படிச் செய்ய வில்லை என்பதுதான் என் குற்றச்சாட்டு. அவர்களையெல்லாம் வாழ வைத்தீர்கள், பெரும் பணக்காரர்களை வாழ வைத்தீர்கள், ஆனால் எங்களைப் போன்ற சாதாரணமாக எண்பது, தொண்ணூறு வருஷங்களாக நடத்திக் கொண்டிருப்பவர்கள் ஓரிரண்டு பஸ்களை வைத்திருந்தால், அப்படி இருக்கின்ற பஸ்களை நடத்த விடாமல் வரிக்கு மேல் வரி, பெனால்டி போடுகிறீர்கள். ஏன் இந்த கதிக்கு வைத்திருக்கிறீர்கள்? எல்லாவற்றையுமே நேஷனலைஸ் செய்து விடுங்களேன்.

(குறுக்கீடு)

நான் எம். எல். ஏ. வாக ஆகி ஏதாவது பஸ் வாங்கியிருக்கிறேனா என்பது ரெக்கார்டிலே இருக்கிறது. நாங்கள் பஸ் கேட்டால் எங்களுக்குக் கொடுப்பதில்லை; ஆனால் புது ஆட்களுக்கு; பஸ் துறையிலே இல்லாதவர்களுக்குக் கொடுக்கிறார்கள். 80 வருஷங்களாக அனுபவம் உள்ள நாங்கள் கேட்டால் கொடுப்பதில்லை. கேட்டால், 'மோனாபலி' கூடாது என்று சொல்வார்கள். என்ன மோனாபலி, இரண்டு மூன்று பஸ்களைத் தொழிலாளர்களை வைத்து நடத்துகிறோம் என்றால் என்ன நிலைமை? வரியை ஏற்றுகிறீர்கள் என்றால், அப்படி வரியை ஏற்றும்

பொழுது டிக்கெட் சார்ஜை ஏற்றக்கூடாது என்பதை எந்த நியதியின் அடிப்படையில் சொல்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

(நண்பகல் 12–00)

எங்களுக்கு ஒன்று, அதாவது, தனியார்களுக்கு ஒன்று, சர்க்காருக்கு ஒன்று என்று இரண்டு, பாகுபாடான டிஸ்கிரிமினேஷன் வைத்துக்கொண்டு நடப்பதைவிட எல்லோருக்கும் ஒரு சட்டம் தான்; சர்க்கார் துறையிலே செய்தாலும் தனியார் துறையிலே செய்தாலும் எல்லோருக்கும் ஒரு சட்டம் தான் என்ற முறையிலே நீங்கள் நடைமுறைப் படுத்தவேண்டும். நிச்சயமாக இது பொதுமக்களைப் பாதிக்கும்.

இரண்டாவது. அவர்கள் சார்ஜ் ஏற்றமாட்டார்கள் என்று சொன்னார்கள். நிச்சயமாக, நெரிசல் இருந்து கொண்டுதானிருக்கும். நீங்கள் பல்லவனிலே நெரிசலை வைத்துக் கொண்டிருந்தால், நாங்களும் வைத்துக் கொண்டுதானிருப்போம். நீங்கள் அதை சார்ஜ் பண்ணமல், எங்களை சார்ஜ் பண்ணினீர்களானல் நாங்கள் அஜிடேட் பண்ணுவோம், கோர்ட்டிலே இல்லாமல், மக்களிடத்திலே சொல்லி அஜிடேட் பண்ணுவோம். ஆகவே, உங்களுக்கு ஒரு பாகுபாடு, எங்களுக்கு ஒரு பாகுபாடு தேவையா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இன்னென்று, இந்தச் சட்டத்திலே, "for every person other than driver" என்று சொல்கிறார்கள். Conductor இல்லை for Tourist Vehicle. "For every person other than driver" அங்கேயும் Conductor இல்லை. For contract carriage. இங்கேயும் conductor இல்லை." For every person other than driver and Conductor" ஏன் முதல் பஸ்ஸிலே கண்டக்டர் கூடாதா? இல்லை, Contract Carriage-லே Conductor கூடாதா, இருக்க முடியாதா? ஏன் முதல் பஸ்ஸிலே கண்டக்டர் கூடாதா? இல்லை, கான்ட்ராக்ட் காரேஜிலே, கண்டக்டர் கூடாதா? இது ஏன் என்ற கிளாரிஃபிகேஷன் அமைச்சரவர்கள் தர வேண்டுமென்று கேட்டு, அதை அரசு செய்ய வேண்டுமா என்று தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டு, இது உருப்படியான முறையிலே செயல்படும் என்று அமைச்சரவர்கள் சொல்வார்களானல் அதைப்பற்றி எந்தவித தகராறும் இல்லையென்றல், நானும் வரவேற்கத் தயாராக இருக்கிறேன்.

There should be no discrimination between the Private Sector and the Public Sector. They should be treated equally என்ற முறையிலே, All your policies should be so made as to give maximum benefit to the passengers என்ற முறையிலே நீங்கள் நடைமுறைப்படுத்துவதாக நீங்கள் பிராமிஸ் செய்தால், I will welcome this bill.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த மசோதா கொண்டு வந்தாலும் கோர்ட்டுக்குப் போவேன், கோர்ட்டுக்குப் போவேன் என்று சொல்கிறார்களே, ஒருவேளை தன்னுடைய தொழிலுக்கு இந்தச் சபையின் மூலமாக கான்வாஸ் செய்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் இன்றைக்கு கோர்ட்டுக்குப் போவேன் என்று சொல்ல வில்லை. மக்கள் சக்தியைத் திரட்டிச் சந்திப்பேன் என்று சொன்னேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இங்கே கொண்டு வந்துள்ள மசோதா மீது எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சாதாரணமாக, இந்த மசோதா அரசு, வருவாயைக் கூட்டுவதற்காக இங்கே கொண்டு வந்திருக்கிறது என்று இங்கே கூறியிருக்கிறார்கள். இருந்தாலும் சாதாரணமாக இம்மாதிரி மசோதாக்கள் வரும் போதெல்லாம் அண்டை மாநிலங்களிலே இருக்கிற நிலைமைகள் என்ன என்று தெரிவிப்பது அமைச்சர்களின் வழக்கம். ஆக, கேரளம், கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் இந்த மோட்டார் வண்டிகள் மீது சுமத்தப்பட்டிருக்கிற வரி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை ஒருவேளை, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறுகின்ற பொழுது கூற இருக்கின்றார் என்று எண்ணுகிறேன். நான் தெரிந்த மட்டில், தமிழ்நாட்டில்தான் அண்டை மாநில்ங்களை விட ஏற்கெனவே வரி அதிகமாக சுமத்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது கூட்டியிருக்கிற வரியானது இன்னும் அதிக அளவுக்குத்தான் வந்திருக்கிறது என்பதுதான் நான் அறிந்துள்ள நிலைமை என்று எண்ணுகிறேன். ஒருவேளை, அனைத்துப் பேருந்துகளையும் நாட்டுடைமை ஆக்க வேண்டுமா, வேண்டாமா என்ற கொள்கை இதுவரையிலும் அரசு வகுத்துக் கொள்ள வில்லையென்று எண்ணுகிறேன். அதை இங்கே அறிவிக்கவும் இல்லை. தனியார் பேருந்துகளும் இருக்கவேண்டுமென்று சொன்னல், அதை எந்த அளவுக்குச் செயலாற்ற முடியுமோ அந்த அளவுக்குத்தான் வரி விதித்தால், அவை இருக்க முடியும் என்பதை அரசு நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஆக, அளவுக்கு மீறி வரிகளைச் சுமத்தினல் ஏதோ அவர்கள் நம்பியிருக்கிற இந்தத் தொழிலைச் செய்ய மாட்டார்கள், அங்கேயே இருக்கிற ஓட்டை, உடைசல்களைப் பார்த்து இந்த நஷ்டத்தை ஈடுசெய்யக் கூடிய வழிகளை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இன்றைக்கு இந்தத் தொழிலை நடத்துபவர்கள் சாமர்த்தியமானவர்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம்.

ஒருவேளை, அரசுத் தரப்பிலேயிருந்து டிக்கட்டை உயர்த்தக் கூடாது, பஸ் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று ஆணை பிறப்பித்தாலும், வேறு வழியில் நஷ்டம் வராத முறையில் காரியங்களைச் செய்வார்கள் என்பதை நான் கூற விரும்புகிறேன். சாதாரணமாக, இப்பொழுதெல்லாம், அரசுப் பேருந்துகள் ஓடுகின்ற வழித்தடங்களில் தனியார் பேருந்துகள் ஓடுகின்ற சில பகுதிகளில், அந்த டைமிங்கைப் பார்த்தால், அரசுப் பேருந்துகளுக்கு முன்னதாகத் தனியார் பேருந்துகள் போகின்றன. ஆக தனியார் பேருந்துகள் ஒழுங்காக நல்ல இலாப முறையில் செயல்படுகிற சூழ்நிலையிருக்கிறது.

அதற்கு மாறாக அரசுப் பேருந்துகள் பல்வேறு கழகங்களில் ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகள் நஷ்டத்தில் ஓடுகின்றது என்பதனை அமைச்சர் அறிக்கையில் நாம் பார்க்கிறோம். ஆகவே எந்த அளவுக்கு வரிகளை அதிகப்படுத்தினாலும்கூட அவைகள் பொது மக்களிடத்தில்— சுமத்தப்படுகிறது என்பதனை நாம் நன்றாக அறிவோம் ஆக இம்மாதிரி ஒரு அளவும் இல்லாமல் கூட்டிக் கொண்டே போனால் அது நியாயமா என்பதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து அரசு தரப்பில் மாநிலத்திலே எந்தெந்த இடங்களில் பேருந்துகளை விட வாய்ப்பும் வசதியும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே தனியார் பேருந்துகள் ஒரு காலகட்டம் வரையிலும் இருந்துதான் தீரவேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே, அவர்களுக்கும், அதாவது தனியார் பேருந்துகளை நடத்துகிறவர்கள், அந்த தொழிலை நடத்துகிறவர்களுக்கும் அரசு ஓரளவு ஆதரவு கொடுத்து இந்த துறையை நன்கு செயல்படுத்தி வைக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மினி பஸ் சர்வீஸ் அரசு ஆரம்பிக்க இருக்கிறது. இதிலே ஸ்தல ஸ்தாபன, நகராட்சிகள், பஞ்சாயத்து யூனியன்கள் சார்பாக இதனை செயல் படுத்தினால் உண்மையிலே நன்றாக இருக்கும். இதனை நேரடியாக உள்ளாட்சித் துறையின் சார்பாக நகராட்சிகள் நடத்தும் என்று சொன்னால் அந்த பஸ்களில் ஏற்படுகின்ற நஷ்டம் ஏற்படாது என்பது என்னுடைய கருத்து. ஆக, நகரசபைகளின் வருவாய் அதிகரித்து வருவதற்கான வாய்ப்பிருக்கும். ஆகவே இந்த பேருந்துகள் எல்லாம் சிறப்பாக மக்களுக்குப் பணியாற்றும் சூழ்நிலை உருவாகும். ஆகவே மினி பஸ்களை நகராட்சிக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுக்க வேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறி அமர்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசால் கொண்டு வரப்பட்ட இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரி விதிப்பைப் பொறுத்த மட்டில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன் என்பதை துவக்கத்திலேயே தெரிவித்து விடுகிறேன். இந்த வரி விதிப்பை ஆதரிக்கிற இந்த நேரத்தில், ஒரு சின்னக் கருத்தை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதி, தெரிவிக்கிறேன். போடப்பட்டிருக்கிற வரியிலே உதாரணத்திற்கு 300 மைல்கள் ஓடுகிற பேருந்துகளுக்கும், 30 மைல்கள் ஓடுகிற பேருந்துகளுக்கும் வித்தியாசமே இல்லாமல் ஒரே அளவுக்கு போடப்பட்டிருக்கிறது. 300 மைல்கள் ஓடுகிற பேருந்துகளுக்குக் கிடைக்கிற வருமானம் 30 மைல்கள் ஓடுகிற பேருந்துகளுக்கு கிடைக்கிற வருமானம் இவைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நிறைய வேற்றுமை இருக்கிறது என்பது நியாயம் மட்டுமல்ல, உண்மையும் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கம் வரி விதிக்கும்போது அதை கருத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படி பஸ்களை தேசியமயம் ஆக்க வேண்டும் என்ற கொள்கையை அரசு தரப்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தரப்பிலும் ஏற்றுக் கொண்டிருந்தாலும்கூட, இந்தக் கொள்கை விரைவிலே திருத்தப்பட்ட எல்லா பேருந்துகளையும் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வலியுறுத்திக் கூறி, அப்படிப் போடப்பட்டிருக்கிற இந்த மசோதாவை கழகத்தின் சார்பிலே ஆதரித்து, சிறு பஸ் முதலாளிகளுக்கு நான் சொன்ன யோசனையை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

(பிற்பகல் 12.10)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த மோட்டார் வாகன வரி உயர்வு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று என்று மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கூறியதற்காக நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். வரவேற்கிறேன். தவிர்க்க முடியாத சூழலில் மாநில அரசின் வருவாய்களை மிகைப்படுத்துவதற்காக ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் என்று சொல்லப்படுகிற பொது விற்பனை வரியின் மூலமாகவும், மோட்டார் வாகன வரி மூலமாகவும்தான் மாநில வருவாயை அவ்வப்போது மிகைப்படுத்தக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்-

தமிழக அரசைப் பொறுத்த வரையில், மது விலக்கை நடைமுறைப்படுத்தும் சூழ்நிலையில் ஆக்கப்பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பொருளாதார சிக்கல் ஏற்படுகிறபோது, பல்வேறு கோணங்களில் பொதுமக்களைப் பாதிக்காத வகையில் வரி உயர்த்துவது இன்றியமையாதது என்ற நிலை இருக்கிற காரணத்தால், குறைந்த பட்சமாக இந்த வரி உயர்வை தமிழக அரசு மேற்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது, இந்த வரி உயர்வினால் பேருந்து கட்டண உயர்வினை அரசு அனுமதித்து விடக்கூடாது என்று கூறினார்கள். தமிழக அரசைப் பொறுத்த வரைக்கும், இந்த வரி உயர்வின் காரணமாக இப்போது அல்ல, இன்னும் பிறகு கூட கண்டிப்பாக பேருந்து கட்டண உயர்வுக்கு அரசு இணங்காது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைகலியமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது, அரசுப் பேருந்துகள் நட்ட நிலையில் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அதிகப்படியான பேருந்துகள் இருக்கும் சூழலில் இந்த வரி உயர்வினால் அரசுப் பேருந்துகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய பலன்கள் கிடைக்காமல் போகும் என்று சொன்னார்கள். இந்த வரி உயர்வினால் தொழிலாளர்கள் நலனுக்கு குறைவு இருக்காது. தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், இந்தியக் கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, தனி அடானமஸ் பாடிகளாக இயங்கிக் கொண்டு இருக்கின்றன. தமிழக அரசு எந்தச் சூழலில் அந்தப் போக்குவரத்து வாரியத்திற்கு நிதி தருகிறது என்றால், போக்குவரத்து வாரியங்கள் நட்ட நிலையில் நடைமுறைக் காரியங்களுக்கு நிதிநிலைமை இல்லாது இருக்குமானால்—வேஸ் அண்டு மீன்ஸ் பார் பங்ஷனிங்—ஈடு கொடுத்து வருகிறது.

ஆனால், இப்படி போடப்படுகின்ற வரி, மோட்டார் வாகன வரி பல்வேறு தமிழக அரசின் ஆக்கப் பணிகள் மேற்கொள்ளப் படுவதற்கும், பயன்படுகிறது என்று சொல்கிறபோது, சாலைகள், பாலங்கள் அமைப்பதற்கும், இருக்கின்ற சாலைகள், பாலங்கள் சீரமைப்பதற்கும் இந்த வரியில் குறிப்பிட்ட சதவிகிதம் செலவு செய்யப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையிலும், அங்கேயுள்ள குறைபாடுகளைக் களைந்து, அந்தக் கழகங்கள் நன்னிலையில் செயல்பட வேண்டும் என்ற முகத்தான் ஏற்கெனவே பல திட்டங்கள் போக்குவரத்துக் கழகங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்று சொல்லிக்கொள்கிறேன். அத்தகைய நல்ல நடைமுறைகளை மேற்கொண்டு வருகிற காரணத்தால் போக்குவரத்துக் கழகங்கள், பல்லவன் போக்குவரத்துக் கழகம் தவிர **எல்லாப்** போக்குவரத்துக் கழகங்களும் **நட்ட நிலையில் இருந்து**

மாறி லாபநிலைக்கு நடப்பாண்டில் வந்து இருக்கின்றன என்பதை நான் ஏற்கெனவே இங்கே தெரிவித்து இருக்கிறேன். மேலும் பல சிக்கன முறைகளை மேற்கொள்வதன் மூலம் வருகின்ற ஆண்டுகளில் நாட்டுடமையாக்கப்பட்ட பேருந்துக் கழகங்கள் நல்ல வருவாய் நிலைக்கு, லாப நிலைக்கு வரும் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை கலியமூர்த்தி பேசும்போது, மோட்டார் வாகன வரியில் இருந்து ஒரு சத விகிதம் முதலமைச்சர் நிதிக்கு சேர்த்து, பேருந்து விபத்துகளில் உயிர் இழந்தவர்களுக்கு அந்தத் தொகை அளிக்கப்படும் என்பதை ஆட்சேபித்துக் கூறினார்கள். முதலமைச்சர் நிதி என்பது தமிழ்நாடு சீப் மினிஸ்டர்ஸ் பண்டில் சேர்க்கப்படுகிறது. இன்று முதலமைச்சராக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர்கள் வருவார்கள், போவார்கள். ஆனால் இந்த முதலமைச்சர் நிதி நிரந்தரமாக இருக்கும். தமிழ்நாடு சீப் மினிஸ்டர்ஸ் ரிலிப் பண்டு என்கிற கணக்கின் தலைப்பிலே அந்த நிதி நிரந்தரமாக இருக்கும். அரசாங்கத்தின் பொறுப்பிலே தான் அது இருக்கும். அந்த விபத்துக்களில் சிக்குண்டு மாண்டவர்களின் குடும்பத்தினருக்கு அரசேதான் அந்தத் தொகையைத் தரும். தனிப்பட்டமுறையில் யாரும் அந்தத் தொகையை எடுத்துத்தர மாட்டார்கள். நிர்வகிக்க மாட்டார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆர். டி. ஓ. அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு அதிகத் தொல்லைகள் அளிக்கின்றனர், அதனால் அவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர் என்று மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களும், துரை கலியமூர்த்தி அவர்களும் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். ஆர். டி. ஓ. அலுவலகத்தைப் பொறுத்தவரையில், நாட்டுடமையாக்கப்பட்ட பேருந்துகளையும், தனியார் பேருந்துகளையும் ஒரே கண்ணோட்டத்தில் தான் பார்க்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு போட்டு இருக்கிறது. ஆனால் இதே நேரத்தில் ஆர். டி. ஓ. அலுவலகங்களில் முறைகேடுகளுக்குள்ளாகி செயல்பட்ட அதிகாரிகளைக் கண்டிக்கும் முகத்தான், இதுகாறும் கடந்த 9 மாதங்களில் 44 அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, பலர் தாற்காலிக வேலை நீக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் கூறும் போது கிராமப் புறங்களுக்கு மினி பஸ்களை விடவேண்டுமென்று சொன்னார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில் கிராம மக்கள் முன்னேற்றம் குறித்து சாலைகள் அகலமாக இல்லாத பகுதி

களில் இருக்கிற சாலைகளை குறைந்த பொருளாதார நிலையில், செப்பனிட்டு சீர்படுத்த முடியாத நிலையில் அந்த சாலைகளில் மினி பஸ்களைவிட அரசு ஒரு நடைமுறையைச் செயல் படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கலியமூர்த்தி அவர்கள் கூறும்போது அரசே மினி பஸ்களை விட வேண்டுமென்று சொன்னார்கள். மினி பேருந்துகளை அரசே விடுவது என்பது இயலாத காரியம். அதனால் அரசு அந்த முடிவை எடுக்கவில்லை. மதுரை மாவட்டத்தில் நல்ல லாபத்தில் ஓடுகின்ற பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அந்த மாவட்டத்தில் கிராமப் புறங்களில் மினி பேருந்துகளை விட ஏற்பாடு செய்திருக்கிறது. வடஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் ஓடுகின்ற தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் மினி பஸ்களை விடுவது லாபகரமாக இருக்காது, நஷ்டம் ஏற்படும் நிலை வரும் என்பதால் அரசுத் துறையைச் சேர்ந்த போக்குவரத்துக் கழகத்தினால் மினி பஸ்களை விட இயலாது என்பதால் அந்த இரண்டு மாவட்டங்களிலும் தனியார்களுக்கு மினி பஸ்களை விட சொல்ல அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் அவர்கள் கூறும்போது பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் போராட்டம் வர இருப்பதை தவிர்க்க பேச்சு வார்த்தைகள் நடத்த வேணடுமென்று சொன்னார்கள். இந்த சட்டத் திருத்தத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் இதை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நலனில் அதிக அக்கறை எடுத்து வரும் அரசு இது என்பதால் கண்டிப்பாக எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் பேச்சு வார்த்தை நடத்தி, சுமூகமாக முடிவுகளை மேற்கொள்வதில் பெருத்த நம்பிக்கை வைத்திருக்கிறது. தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிற போராட்டத்திற்கு அரசு பொறுப்பாளியாக இருக்கக்கூடாது என்ற எண்ணத்தில் விரைவாக சுமூகமான முடிவு காண முயற்சிகளை எடுத்து வருகின்றோம். ஏற்கெனவே இந்த அவையில் இது பற்றி எழுப்பப்பட்டு, செப்டம்பர் 3-ந் தேதி மேற்கொள்ளப் பட்ட பேச்சு வார்த்தை முடிவு பெறாத நிலையில் கால தாமதம் ஏற்பட்டுவிட்டது. அதற்குக் காரணம் அந்தப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட பல சங்கங்கள் கோரிக்கைகளை அன்று தராமல் இருந்ததுதான். அந்த கோரிக்கைகளை எல்லாம் அரசிடத்தில் தருவதாக கூறிச் சென்றவர்கள் டிசம்பர் மாதத்தில் தான் தந்தார்கள் என்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இறுதியாக ஐக்கிய முன்னணி சங்கத்தினர் ஜனவரி மாதத்தில்தான் அவர்களது கோரிக்கைகளை தந்தார்கள். இப்படிப்பட்ட நேர்வுகளில் அரசு விரும்பாமலே 5 மாத காலம் தாமதம் ஏற்பட்டு விட்டது. மார்ச் 31-ந் தேதிக்குள் அவர்களுடைய கோரிக்கைகளை

எல்லாம் அரசு பரிசீலனை செய்து, முடிவெடுப்பதாக இருந்தும், நான் குறிப்பிட்ட பல்வேறு காரணங்களால் கோரிக்கைகள் வருவதற்கே காலதாமதம் ஏற்பட்டதால், பல்வேறு கோரிக்கைகளைப் பல்வேறு கோணங்களில் அணுக வேண்டியிருப்பதால் மார்ச் 31-ந் தேதிக்குள் முடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இருந்த போதிலும் அரசு தற்போது அந்தக் கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்து, இருதரப்பு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண முடிவு செய்திருக்கிறது. ஐக்கிய சங்கம், சி. ஐ. டி. யு. சங்கம், ஐ. என். டி. யு. சி. சங்கம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்களுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறது அரசு. இந்த பேச்சு வார்த்தைகளை நடத்தி, சுமூகமாக நல்லதொரு முடிவினைக்காண மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் ப. உ. ச. அவர்கள் கூறும்போது 300 மைல் ஓடுவதற்கும் 30 மைல் ஓடுவதற்கும் வித்தியாசம் இல்லாமல் வரி உயர்வு என்று கூறினார்கள். தற்போதுள்ள வரி உயர்வு 300 மைல் ஓடுகிற பேருந்துகளுக்கு இருக்கிறது. அரசு பேருந்துகளுக்கு இந்த வரி உயர்வு இல்லை. சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் சிட்டி பேருந்துகளுக்கு வரி உயர்வு இல்லை. மொஃபசல் பஸ்களுக்கு இந்த வரி உயர்வு உண்டு. இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக் கொண்டு, தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. சி. ஆறுமுகம்:</u> தலைவரவர்களே, 300 மைல் என்பதை ஒரு நாளைக்கு எவ்வளவு மைல் ஓடுகிறது என்று பார்த்து, ஸ்லாப் சிஸ்டம் வைத்து, இரண்டு கட்டமாக டாக்ஸ் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா? இப்போது ஒரே கட்டமாகக் கட்டும் ஏற்பாடுதான் இருக்கிறது.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> ஒரு நாளைக்கு ஒருபஸ் எத்தனை மைல் ஓடுகிறது என்று கணக்கு உண்டு. சில பஸ்கள் 500 மைல் ஓடும்; சில பஸ்கள் 300 மைல் ஓடும்; சில பஸ்கள் 150 மைல் ஓடும். அந்த மைலேஜை அடிப்படையாக வைத்து ஸ்லாப் சிஸ்டம் வைத்து, வரி வசூலிக்கப்படுமா என்று கேட்கிறார்கள். இது கொள்கைப் பிரச்சனை சம்பந்தப்பட்டது. ஆகவே இந்தச் சட்டத்தில் எழாது.

<u>திரு. சி. ஆறுமுகம்:</u> கொள்கையைத்தான் சட்டமாகக் கொண்டு வருகிறார்கள். அப்படி இருக்கும்போது கொள்கைக்கும் சட்டத்தில்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> விளக்கம் கேட்டீர்கள், பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள்.

(பிற்பகல் 12.20.)

திரு. துரை கலியமூர்த்தி: தலைவரவர்களே, காலாண்டு வரியைப்பிரித்துக் கொடுப்பது பற்றியும், டெம்பரரி பெர்மிட் கொடுப்பது பற்றியும் அரசின் கொள்கையை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: தலைவரவர்களே, காலாண்டு வரியைப் பிரித்துக் கொடுப்பது பற்றிய திட்டம் எதுவும் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை. டெம்பரரி பெர்மிட் கொடுப்பது பற்றி பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. பொ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, எல்லாப் பேருந்துகளுக்கும் ஒரே மாதிரியாக வரியை விதித்திருக்கிறார்கள். கிராமங்களிலே இருக்கும் பேருந்துகள் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. நல்ல மார்க்கங்களில் ஏராளமான லாபத்தைச் சம்பாதிக்கிறார்கள். ஆகவே இந்த வருவாயை அடிப்படையாகக் கொண்டு எ. பி. என்ற வகையிலே பிரித்து இப்படிக் கிராமங்களிலே செல்லும் பேருந்துகளுக்கு ஏதாவது சலுகை கொடுக்க அரசு வழிவகை காணுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அத்தகைய எண்ணம் எதுவும் இப்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—"தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது. பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 15/78) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(4) அறிவிப்புகள் தொடர்ச்சி

(இ) பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில், பேரவையின் நடப்புக் கூட்டத்தொடரின் இதர நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

5-4-1978 (புதன்)	—(1) அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வும் நிறைவேற்றலும்.
	2 நேரம் இருப்பின் மாண்புமிகு நீதிபதி திரு. இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம்.
6-4-1978 (வியாழன்) 7-4-1978 (வெள்ளி)	மாண்புமிகு நீதிபதி திரு. இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம்.

6-4-78 வியாழக்கிழமை அன்று தனி உறுப்பினர் அலுவல்களுக்குப் பதிலாக இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம்.

பேரவை, வழக்கம்போல், காலை 9 மணி முதல் கூடும்.

(8) அரசினர் சட்டமுன் வடிவுகள்—(தொடர்ச்சி)

தமிழ்நாடு 1978-ம் ஆண்டு கடன் நிவாரண சட்டங்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு

(பிற்பகல் 12-20)

THE HON. THIRU K. NARAYANASAMY MUDALIAR: Mr. Speaker Sir, I beg to move—

"That the Tamil Nadu Debt Relief Laws (Second Amendment) Bill, * 1978 (Legislative Assembly Bill No. 22 of 1978) be taken into consideration."

In moving this Bill, I wish to say under the Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Act, 1976 (President's Act 15 of 1976), the Tamil Nadu Indebted Persons (Temporary Relief), Act, 1976 (President's Act 16 of 1976) and the Tamil Nadu Debt Relief Act, 1976 (President's Act 31 of 1976), only certain categories of debts and liabilities of the persons eligible for relief under the aforesaid Acts have been exempted. Nidhis and Mutual Benefit Societies are run on th basis of mutuality of interest among members, on the

* Published in the *Tamil Nadu Government Gazette*, dated 1978, March 31.

[Thiru K. Narayanaswamy Mudaliyar] [1978 ஏப்ரல் 4

same principles of co-operative societies. It has been represented that if the provisions of the above mentioned Acts are strictly enforced, it will result in these institutions incurring heavy losses, as they will not be in a position to repay to the members the deposits already made by them, and also no fresh deposits will be received, thus crippling their business and possibly leading to their ultimate extinction. It is, therefore, proposed to exempt any liability in respect of any sum due to any company, which is declared to be a Nidhi or Mutual Benefit Society under sub-section (1) of section 620-A of the Companies Act, 1956 (Central Act 1 of 1956) from the provisions of the Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Act, 1976 (President's Act 15 of 1976), the Tamil Nadu Indebted Persons (Temporary Relief) Act, 1976 (President's Act 16 of 1976) and the Tamil Nadu Debt Relief Act, 1976 (President's Act 31 of 1976). The Bill seeks to achieve the above object.

Sir, I request the House to accept the Motion.

*திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் தமிழ்நாடு 1978-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு மீது எனது கருத்துக்களையும் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு நிலைகளில் நாம் கடன் நிவாரணச் சட்டங்களை இந்த அவையில் தமிழக அரசு சார்பில் நிறைவேற்றியுள்ளோம். அந்தச் சட்டங்கள் எல்லாம் சரியான முறையில் செயல்பட்டு வருகின்றனவா என்பதை நாம் இந்த நேரத்தில் எண்ணிப் பார்த்திட வேண்டும். ஏழைகள் வாங்கிய கடன்களை தள்ளுபடி செய்ய சில விதிமுறைகளை வகுத்து அந்த விதிமுறைகள்படி ஏழைகள் என்றால் இவ்வளவு வருமானம் இருக்க வேண்டும், இந்த அளவு வருமானத்திற்கு குறைவாக உள்ளவர்கள் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்யவேண்டும் என்று, சட்டமியற்றி தாலுகா அலுவலகங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிற தாசில்தார்களுக்கு அந்த வருமானத்தை நிர்ணயிக்கக் கூடிய பொறுப்பை அறிவித்திருக்கிறோம். அந்தஅடிப்படையில் பல லட்சக் கணக்கான ஏழைகள் தாலுகா அலுவலகங்களில் தங்களுடைய வருமானத்தை நிர்ணயம் செய்து கடன்களை தள்ளுபடி செய்து அடகு வைத்திருப்பவற்றை மீட்டுத் தரவேண்டுமென்று மனுக்கள் அளித்திருக்கிறார்கள். ஆனால் சான்று அளிக்கக் கூடிய தாலுகா அலுவலகத்தில் பணியாற்றுகிற தாசில்தார் கணக்கெடுக்கிறபோது ஒரு நாளைக்கு அவருக்கு சம்பளமாக ரூ. 6 வருமானம் வருகிறது என்று கணக்கெடுக்கிறார்கள். அவர்கள் குடியிருக்கிற வீடுகளில் கொல்லைப்புறத்தில் இரண்டு தென்னைகள் இருந்தாலும் அல்லது இரண்டு வாழை மரங்கள் இருந்தாலும்கூட அவிலிருந்து இவ்வளவு வருமானம் வரும்

1978 ஏப்ரல் 4] (திரு. இரெ. இராசமாணிக்கம்)

என்று கணக்குப் போட்டு அவற்றையெல்லாம் இந்த வருமானத்தோடு கூட்டி இவருக்கு இவ்வளவு வருமானம் வருகிறது, அதிகமாக வருமானம் வருகிறது, ஆகவே, இந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய இவர் அருகதையற்றவர் என்று சான்று வழங்கிவிடுகிறார்கள். ஆகவே ஏழைகளாக இருக்கக்கூடியவர்கள் அந்த நல்ல பலன்களை அடைய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னைப் பொறுத்தவரையில் ஏழைகள் வாங்கியிருக்கிற கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். சட்டங்களை நாம் நிறைவேற்றி வைப்பதால் மட்டும் போதாது. வருமான வரம்பை நிர்ணயித்து இவ்வளவு வருமானத்திற்கு மேல் அதிகமாக உள்ளவர்களுக்கு அவர்கள் கடன்காரர்களுக்கு செலுத்த வேண்டியத் தொகையை அவர்கள் கடனை இவ்வளவு ஆண்டுகளுக்குள் செலுத்த வேண்டும் என்றும் இவ்வளவு வருமானத்திற்குக் கீழே உள்ளவர்கள், ஏழைகளாக உள்ளவர்கள் வாங்கிய கடனை அரசு பொறுப்பேற்றுக்கொண்டு அதை தள்ளுபடி செய்துவிட வேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் வட்டிக் கடைக்காரர்களும் பாதிக்கப்படாமல் இருக்க ஒரு உத்திரவாதத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏழைகள் வாங்கிய கடன்களை, அவர்கள் செலுத்த வேண்டிய தொகை அனைத்திற்கும் இந்த அரசு ஏதாவது நஷ்டயீடுத் தொகை கொடுத்து அவர்களையும் வாழ வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் கடன் நிவாரணச் சட்டத்தில் சில விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொடுக்கப்பட்ட கடன்கள், வங்கிகள் மூலம் கொடுக்கப்பட்ட கடன்கள் இவைகளுக்கு எல்லாம் விலக்களித்திருக்கிறார்கள். அந்தக் கடன்களை கண்டிப்பாகச் செலுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இங்கு வந்திருக்கிற புதிதாக கொண்டு வந்திருக்கிற திருத்தத்தில் நிதி அல்லது பரஸ்பர சகாய சங்கம் என்று கம்பெனிச் சட்டத்தின் மூலமாக சிட்பண்ட்ஸ் என்று பதிவு செய்திருக்கிற சங்கங்கள் இருக்கிறதே அவைகளுக்கும் விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள் அவர்கள் கொடுத்திருக்கிற கடன்களையும் கண்டிப்பாக கொடுத்துவிடவேண்டும் அவற்றை வசூல் செய்ய அவர்களுக்கு உரிமை அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்தச் சட்ட முன் வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏழைகளாக இருக்கக் கூடியவர்கள் கிராமப்புறங்களில் விவசாயிகளாக இருக்கக்கூடிய மக்கள், வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை தயவு செய்து இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. இரெ இராசமாணிக்கம்) [1978 ஏப்ரல் 4

கூடுமானவரையில் கூட்டுறவுச் சங்கக் கடன்கள், அரசாங்கக் கடன்கள், குத்தகை பாக்கிக்காகச் செலுத்தவேண்டிய கடன்கள் ஆகிய எல்லாக் கடன்களையும் அரசு, ஏழை மக்களுக்கு மறு வாழ்வளிக்கக்கூடியவகையில், தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். எவ்வளவு சட்டங்கள் இயற்றினாலும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள பல வழிமுறைகளை வசதிப் படைத்தவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள். குத்தகை பாக்கி வசூல் செய்யக்கூடாது என்று ஒரு சட்டம் இயற்றியிருக்கிறோம். ஆனால் மிராசுதாரர்கள் குறுக்கு வழியில் சென்று குத்தகை பாக்கிக்காக ரெவின்யூ கோர்ட்டில் வழக்கு தொடரக் கூடாது என்று இருந்தாலும் வாடகை பர்க்கி வரவேண்டும் என்று

(பிற்பகல் 12-30)

சொல்லி அந்த வாடகை பாக்கிக்காக கோர்ட்டில் தாவா செய்கிறேன் என்று சொல்லி முனிசீப் கோர்ட் மூலமாக வாடகை பாக்கி என்று சொல்லி வசூல் செய்திருக்கிறார்கள். அந்த நிலைமையை தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்த அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாயவரம் பகுதியில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கிறது. முனிசீப் கோர்ட்டு மூலமாக வாடகை பாக்கி என்ற அளவில் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொரு கொடுமை என்னவென்றால், நான் சிறைச் சாலையில் இருந்த நேரத்தில் ஒருவர் சிறைச்சாலைக்கு வந்தார். எதற்காக சிறைக்கு வந்தீர்கள் என்று கேட்டபோது. தன்னுடைய மனைவிக்கு ஜீவனாம்சம் கொடுக்கமுடியவில்லை. ஜீவனாம்சம் கொடுக்க வழியில்லை. யாரிடத்திலாவது யாசகம் வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன், இந்த நிலையில் என் மனைவிக்கு நான் எங்கிருந்து ஜீவனாம்சம் கொடுக்க முடியும்? என்று கோயம் புத்தூர் பகுதியைச் சேர்ந்த ஒருவர், சிறை தண்டனை பெற்றிருந்தவர் கூறினார். இப்படி அவருடைய சோகக் கதையைச் சொன்னார். இப்படிப்பட்ட நிலைமையிலுள்ளவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று கரூர் பகுதியிலிருந்து வங்கியிலிருந்து வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தவில்லை என்ற காரணத்திற்காக இரண்டு விவசாயிகளுக்கு சிறைதண்டனை கொடுக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு முன்பு திருச்சிய மத்திய சிறைச் சாலைக்கு வந்தார்கள். வங்கியில் கடன் வர்ங்கியிருந்தாலும் திருப்பிக் கட்டுவதற்கு வசதியில்லை, தன் கையில் ஒன்றுமே இல்லை என்று சொல்லுகிறபோது, அப்ப்டிப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற முறையில், சட்ட விதிகளில் ஏதாவது திருத்தம் செய்து வழிவகை செய்து கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1978 ஏப்ரல் 4] [திரு. இரா. ராசமாணிக்கம்]

குத்தகைப் பாக்கியைப் பொறுத்தவரையில், பாக்கியை தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் ஒரு பசலியை கட்டிவிடுவார்களேயானால் முன்னால் உள்ள பாக்கிகளை எல்லாம் தள்ளுபடி செய்து விடுவது என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன் காரணமாக பல்வேறு வகையான வசதியை ஏழை எளிய மக்கள் பெற்றார்கள். அந்த முறையில் இந்த அரசும், புரட்சித் தலைவருடைய இந்த நல்ல அரசு, ஏழை மக்களுடைய கஷ்டங்களை தீர்க்கின்ற வகையில் கூட்டுறவு சங்கக் கடன், நிலவரி, இன்னும் வங்கிகளிலிருந்து வாங்கியிருக்கும் கடன் குத்தகை பாக்கி இவைகளுக்கு எல்லாம் நிவாரணம் கொடுக்கின்ற அள்வில் அரசாங்கமே உத்திரவாதம் கொடுத்து கடனை எல்லாம் அரசு எடுத்துக் கொண்டு நீண்டகால தவணையில் இதைத் திருப்பிக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு தந்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம் அண்ணாமலை: தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரண மசோதாவின் பேரில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

கடன் நிவாரணம் என்பது, ஏன், யாருக்காக என்ற ஒரு கேள்வி எழுப்பிக்கொண்டு பார்க்க வேண்டும். கடன் நிவாரணம் என்பது பல்வேறு சிறு தொழில்களிலும், ஈடுபட்டு பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் நிவாரணம். குறிப்பாக விவசாயத்தை நம்பி வாழ்கின்ற விவசாயிகள், இவர்கள் எதிர்பாராத விதமாக இயற்கையினுடைய பாதகமான நிலைமைகளாலும், வறட்சி ஏதாவது ஏற்பட்டும் உற்பத்தி செய்த தானியங்களுக்கு மார்க்கட்டிலுள்ள ஏற்றத்தாழ்வான நிலைகளின் காரணமாகவும், விவசாயத்தில் ஏற்படுகின்ற மின்சார கோளாறுகளின் காரணமாகவும், மற்றும் தனியாரிடத்தில் பெற்ற கடனால், ஒன்றுக்கு நான்கு என்ற முறையில் எழுதி வாங்கி விட்டு, அதன் காரணமாகவும் பல்வேறு அடிமை வேலைகளுக்கு உட்பட்டு, தான் உற்பத்தி செய்த பொருட்களை எல்லாவற்றையும் லேவாதேவிகாரர்களே எடுத்துக்கொண்டு போவதும், விவசாயத்தின் மூலமாக சிறிய பலனைக்கூட அடைய முடியாமல், உற்பத்தி பலன் முழுவதுமாக எடுக்கப்பட்டு இன்று நிரபராதிகளாக நின்றுக் கொண்டிருக்கின்ற இந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடியதாகத்தான் இப்படிப்பட்ட நிவாரணச் சட்டம் இருக்கும் என்று நாட்டுமக்கள் முழுமையாக எதிர்பார்த்தார்கள்.

ஆனால் இன்றைக்கு சீட்டுக் கம்பெனிகளுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. சீட்டு கம்பெனிகளில், ஒரு சிலர் நாணயமாக உத்திரவாதமாக நடைபெற்றிருந்தாலும், பல சீட்டுக் கம்பெனிகள், இன்றைக்கு மக்களை தொழில் ஆர்வம் கொண்டு நம்பிக்கையோடு போய் சேருகின்றவர்களை மோசடி செய்கின்ற முறையில், சீட்டுக்கம்பெனிகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றை உஷார் தன்மையோடு பார்க்க வேண்டும் என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு, இன்றைக்கு நிவாரணம் அளிக்கும்போது மக்கள் கடனிலிருந்து முழுமையாக நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற முறையில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அரசுக்கு சில ஆலோசனைகளை முன் வைக்க விரும்புகிறேன். இன்றைய சட்டத்திலும் கூட்டுறவு கடன், அரசுக் கடன் என்பதில் எல்லாம் இன்றைக்கு எந்தவிதமான விதி விலக்கும் இல்லை.

இந்தத் தனியார் கடன்களுக்கு மட்டும்தான் பொருந்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தனியார் கடன் என்ற முறையிலே கூட, மொத்த வருமானம் மாதம் ஒன்றுக்கு 240 ரூபாய் என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது. இந்த 240 ரூபாய் என்றிருப்பதை வைத்துக்கொண்டு கிராம அதிகாரிகள், இன்றைக்கு கூலி நிர்ணயச் சட்டப்படி 5 ரூபாய் என்றிருக்கிறது. ஆகவே, ஒரு குடும்பத்திலே 3 பேர்கள் இருந்தால் ஆளுக்கு 5 ரூபாய் வீதம், தினமும் 15 ரூபாய் வருமானம் வருகிறது என்று சொல்லி, ஆகவே மாத வருமானம் இந்தச் சட்டத்தின் வரம்பிற்கு அப்பால் வருகின்றது என்று கணக்கிட்டுச் சொல்வதால் இன்றைக்கு அப்படி போடப்பட்ட ஆயிரக்கணக்கான மனுக்கள் தாலூகா அலுவலகங்களிலே கட்டி வைக்கப்பட்ட நிலைமையிலேயே இருக்கின்றது.

இப்போது கடன் நிவாரணம் என்று கூறுகிற காரணத்தால் வேறு எந்த வகையிலே கடனையும் பெற முடியாத சூழ்நிலைமையில் அரசு நிறுவனமாக இருக்கக்கூடிய அந்த அமைப்புகள் எந்தவிதமான கடனையும் அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கமுடியாத நிலைமை இருக்கின்ற காரணத்தால் ஏழை நடுத்தர விவசாயிகள் உள்பட இன்றைக்கு அந்த பகுதியிலே உள்ள மக்கள் செய்யும் சிறு தொழில் மற்றவைகள் எல்லாம் முடக்கப்பட்டு பாதிப்புக்குள்ளான அந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றமாகவே உள்ளது என்பதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த மசோதாவில் இடம் தரவில்லை என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் தனியார் கடனுக்காக கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கு அடியாட்களை வைத்துக்கொண்டு ஆங்காங்கே கிராமங்களிலே இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளை கசக்கிப் பிழிகிறார்கள். ரௌடித்தனத்தை வைத்துக்கொண்டு சந்தர்ப்பவாதிகள் இன்றைக்கு வட்டிக்காக என்று சொல்லி நிலங்களையெல்லாம் பறிக்கப்படும் நிலைதான் உள்ளது. குறிப்பாக மலைவாழ் மக்களுடைய நிலங்கள் பெருமளவில் லேவாதேவிக்காரர்கள் கைக்கு மாறி வரும் நிலைமை மட்டுமல்லாமல் அவர்கள் வைத்திருக்கக்கூடிய பலா, புளியமரங்களை ஒரு வெத்துக் காகிதத்திலே கையெழுத்து வாங்கிக்கொண்டு 10, 12 ஆண்டுகளுக்கு அவைகளிலே தங்களுக்கு உரிமை இருக்கின்றது என்று சொல்லி இன்றைக்கு அவர்கள் அந்த மரங்களைக் காவல் காக்கக்கூடியவர்களாக இருக்கக்கூடிய அவல நிலைக்கு ஆளாக்கப்

பட்டிருக்கிறார்கள். எனவே இதுபோன்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் இந்த மசோதா இடம் பெறவில்லை. அரசு இவைகளையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் சிறு லேவாதேவிக்காரர்கள், குறிப்பாக ஒரு அரசு அலுவலகத்தில் அல்லது பல்வேறு நிறுவனங்களிலே இருந்து ஓய்வு பெற்ற ஊழியர்கள்கூட அவர்களால் கொடுக்கப்பட்ட பணங்களுக்கு எல்லாம்கூட தடை போடப்பட்டிருப்பதால் அவர்களும் ஒருபுறம் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் சில யோசனைகளை முன்வைத்து வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே இப்போது மாத வருமான வரம்பு ரூ. 240 என்றிருப்பதை உயர்த்தி ரூ. 500 என்று செய்யவேண்டும். விவசாயிகளை பொறுத்த மட்டில் விவசாயிகளுக்கு நிவாரணம் செய்யக்கூடிய முறையில் 3 ஏக்கர் நிலம் வைத்திருக்கின்றவர்கள் என்று ஒரு வரையறை வைத்து அவர்கள் கடன் முழுவதையும் அரசுக் கடன், தனியார் கடன் கூட்டுறவு கடன் ஆகிய அனைத்துக் கடன்களையும் ரத்து செய்யவேண்டும். அதே போல் 5 ஏக்கர் என்று ஒரு வரையறைவைத்து இந்த 5 ஏக்கர் விவசாயிகள் செலுத்தியுள்ள வட்டியைக் கணக்கிட்டு, அதை அசல் தொகையோடு கணக்கிட்டு, அந்தக் கடனையும் ரத்து செய்ய வேண்டும்.

அதேபோல். 10 ஏக்கர் என்று ஒரு வரையறை வைத்து, இந்த 10 ஏக்கர் வைத்துள்ள விவசாயிகள் கொடுக்க கூடிய வட்டியை நீக்கிவிட்டு, இருக்கக்கூடிய அசலை நீண்டகால தவணையில் அதாவது 10, 15, ஆண்டுகளில் வசூலிக்கப் படவேண்டும் என்பதோடு, இயற்கையின் பாதகமான சூழ்நிலையில் அல்லது வறட்சி, புயல் அல்லது கிணறுகள் வெட்டுவதிலே தண்ணீர் வராமலும் கடின பாறையாகவும் சதுப்புத் தண்ணீர் போன்று ஏற்படக் கூடிய இந்த வகைகளுக்கு எல்லாம் கடன்கள் முழுமையாக ரத்து செய்வதோடு, இந்தப் பகுதி மக்களுக்கு கொடுக்கப்பட்ட தனியார் கடன்களைப் பொறுத்த மட்டில், வருமான வரிக்கு கீழே உள்ளவர்களால் கொடுக்கப்பட்ட தனியார் கடன்களை பரிசீலித்து உண்மை கடன்கள் முழுமையையும் அரசே கொடுத்துவிட வேண்டும். அப்படி கொடுக்கக்கூடிய இந்த பணத்தை, இன்றைக்கு மத்திய அரசு பெரும் தொழில் நிறுவனங்களுக்கு இன்றைக்கு அதில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டால், எப்படி கடன் நிவாரணம் கொடுக்கப்படுகிறதோ, அந்த முறையில் இந்த சிறு விவசாயிகளால் இழக்கக்கூடிய இந்த தொகையை மத்திய அரசிடம் இருந்து மானியமாகப்பெற இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இழப்பு தொகையை பெற்றிடவும் இந்த விவசாயிகளுக்கு துரித நிவாரணம் அளிக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். அண்ணாமலை] [1978 ஏப்ரல் 4

குறிப்பாக, தொழில் முறை நிறுவனமானாலும் சரி, அல்லது விவசாயத் துறையானாலும் சரி, ஒருவனது ஜீவாதாரத்திற்கான நிலமோ தொழிலோ பாதிக்கக்கூடிய எந்தக் கடனையும் ரத்து செய்ய வேண்டும். பாதிக்கக்கூடாது என்ற கண்ணோட்டத்தோடு தேவையின் அடிப்படையில் ஒருங்ிணைந்து கடனுக்கு வாய்ப்பளித்து இந்த மாநில அரசு இந்தக் கடன்களை எல்லாம் ரத்து செய்தும் சிறு தொழிலுக்கு உத்தரவாதம் ஜீவாதாரத்தை பாதுகாக்கக்கூடிய நிலையில் கடன் நிவாரணம் அளித்து ஏழை, மத்திய தர விவசாயிகளையும் சாமான்யமான மக்களையும் காக்க இந்த அரசு உதவ முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

[பிற்பகல் 12-40]

<u>திரு. செ. சிவசாமி:</u> மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்ட மசோதாவின் மீது திருத்தத்தின் அடிப்படையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

கடன் நிவாரணச் சட்டம் வாயிலாக் கடன்கள் தொடர்ச்சியாக கடந்த நான்கு ஆண்டுகளாக ஆறு மாதம் தள்ளப்பட்டுக் கொண்டே வந்தது. கடந்த காலத்தில் நாங்கள் பல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறோம். இன்றும் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தொடர்ச்சியாக தமிழ்நாடு கடந்த நான்கு ஆண்டு காலமாக பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு புயலால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்ற வாசகம் அடிக்கடி நம் சபையில் வந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு கடன்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் நேரத்தில் ஏழைகளின் மனோபாவம் எப்படி இருக்கிறது, கடன் பட்டவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்துப் பார்த்தால் மிகவும் பின்தங்கிய நிலையில் சன்னஞ்சன்னமாக கீழே வந்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய தர விவசாயி சாதாரண விவசாயியாகவும், சாதாரண விவசாயி ஏழை விவசாயியாகவும், ஏழை விவசாயி கூலி விவசாயியாகவும் தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக மாறிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் துல்லியமாக இருக்கவேண்டும். விவசாயிகளுடைய நிலையை மேம்படுத்த, ஏழைகளுடைய நிலையை மேம்படுத்த, கடன் பட்டவர்களை மேம்படுத்த தொடர்ச்சியாக எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்னென்ன? அவர்கள் பட்ட கடன்களை எல்லாம் நிச்சயமாக ரத்து செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

1978 ஏப்ரல் 4] [திரு. செ. சிவசாமி]

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த அளவில் கூட்டுறவுக் கடன்கள் அத்தனையையும் ஒன்று சேர்த்து கூட்டுறவுச் சங்கக் கடன்களுக்கான வட்டி அத்தனையையும் தள்ளிவிட்டு இருக்கக்கூடிய முதலை எல்லாம் ஒன்று சேர்த்து நீண்டகாலக் கடனாக மாற்றி அந்த அடிப்படையில் நிவாரணத்தைக் கொடுக்காமல் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகளாக இருக்கட்டும், இதர கடன்பட்டவர்களாக இருக்கட்டும், எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவர்களை கைதூக்கி விட முடியாத நிலைமை தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறது. புள்ளி விவரத்தோடு பார்த்தால் ஆண்டுக்காண்டு அவர்கள் கீழே போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பது நிதர்சனமாகத் தெரிந்த உண்மையாகும்.

கடந்த காலந்தில் மாத வருமானம் 200 ரூபாய் இருப்பவர்களுக்கு கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்தை அங்கிருக்கக்கூடிய தாசில்தார்கள் நல்லபடியாக அமல் நடத்தாததன் காரணமாக ஆபீசில் பார்த்தால் ஆயிரக்கணக்கான மனுக்கள் பைசல் செய்யப்படாத நிலைமையில் இருந்து கொண்டிக்கின்றன. இப்படி ஏழை மக்கள், சாதாரண மக்கள் அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டு ஆட்டி வைக்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களுக்கு கொடுத்த ஒரு சில நிவாரணத்தைக் கூட பிடுங்கக்கூடிய நிலையில் திருத்தங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது இது சாதாரண விவசாயிகளுக்கு கடன் நிவாரணச் சட்டமா அல்லது கடன்படும் சட்டமா என்று சிந்திக்கக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. சீட்டுக் கம்பெனிக்கு விதிவிலக்குக் கொடுக்கும் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டு மேம்பாட்டுக்காக, விவசாயிகளுடைய மேம்பாட்டுக்காக இந்தக் கடன்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டு, தனிப்பட்ட விவசாயிகள் வாங்கியிருக்கக்கூடிய கடன்கள் ரத்து செய்யப்பட்டு சொசைடிகள் மூலம் கொடுத்த கடன்களை ஒன்று சேர்த்து வட்டியை நீக்கி, முதலை நீண்ட காலக் கடனாக மாற்றக் கூடிய திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு, தொடர்ச்சியாக இருந்து வரக்கூடிய இந்த நிலைமையை மாற்றக் கூடிய முறையில் புதிய கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து; பேரவைத் தலைவரவர்களே, எனக்கு இந்தச் சட்டத்திலே பேசுகின்ற பொழுது பெருத்த வருத்தம். காரணம், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரின் ஆரம்பத்திலேயே கூட Hon. Law Minister has assured tc th's House that he would bring a comprehensive legislation in respect of the debt laws என்று தெரிவித்துள்ளதை நாங்களெல்லாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அப்படியொரு காம்ப்ரஹென்சிவ்

[திரு. ரா, மார்க்கபந்து] [1978 ஏப்ரல் 4

லெஜிஸ்லேஷன் கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்த நேரத்தில், நிவாரணம் அளிப்பதற்குப் பதிலாக இவர்களுக்கெல்லாம் விதிவிலக்கு அளிக்கும் வகையிலே Debt Relief Act. என்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையினாலே, There is a great fallacy even in the introduction of the Bill itself என்று சொல்லிக் கொள்கிறேன். இதை, It is only postponing the evil. You are not curing the evil என்ற முறையிலே எத்தனை அண்டுக் காலத்திற்கு வரைமுறையில்லாமல் நீங்கள் நீடித்துக்கொண்டு செல்வீர்கள்? இப்படி நீடிப்பதனாலே எவ்விதத்திலே யாருக்குப் பலன்? இப்படி கடன்களை வாங்கியவர்களுக்கு மேலும் மேலும் சுமைகள் ஏறிக்கொண்டேயிருக்கிறதே தவிர நிவாரணமாகக் கருத முடியாது. We must come to an end at one point of time. If not, it will be a burden on those who borrowed the amount and those who lent the amount also. We must put an end to this. இப்பொழுது விவசாயிகளுக்குப் பாதுகாப்பு தருகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இந்தச் சட்டத்தில் ஒரு சிக்கல் இருக்கிறது. சமீபத்தில், 1975-ஆம் ஆண்டிலே, His Lordship C. J. R. Paul has rendered a judgment in the High Court 72-வது ஆண்டிலே கொண்டு வந்த Act VIII of 1972 சட்டத்தின் மூலமாக மேமாதம் 1975ஆம் ஆண்டு வரைக்கும் எழுதிக் கொடுத்த பாண்டுகள், கடனுக்காக எழுதிக் கொடுத்த ரிக்கார்டுகள் மீது கோர்ட்டுக்குச் செல்ல முடியாத நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் 1975-ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு எந்தவொரு புரோநோட் கொடுத்திருந்தாலும், பணம் வாங்கியிருந்தாலும் அதை வசூலித்துக் கொள்வதிலே சட்டம் தடுக்கவில்லை. ஆகவே, கோர்ட்டுகளில் நிறைய புரோநோட்டுகள் வாங்கியது சம்பந்தமான வழக்குகள் தொடரப்பட்டு, டிகிரியும் ஆகிறது. அதை நாம் தடுக்காமல், அதற்கான வழிவகைகளைச் செய்யாமல், வெறுமனே நீடித்துக்கொண்டு செல்வதால் பயன் இல்லை என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

சென்றமுறைகூடச் சொன்னார்கள். இப்படி விதவைகள் கொடுத்திருந்த பணமாக இருந்தாலும் அவர்கள், அதேநேரத்திலே A lady has been deserted by her husband and she got maintenance அந்த ஜீவனாம்சத்திற்காகப் பெறுகின்ற தொகையிலிருந்து சில தொகைகளைக் கடனாகக் கொடுத்திருந்தால், பென்ஷனாக வாங்கு

1978 ஏப்ரல் 4] [திரு. ரா. மார்க்கபந்து]

கின்ற தொகைகளை தங்கள் பாதுகாப்பிற்காக கொடுத்திருந்தால் அதை வசூலிப்பதற்கு இந்தச் சட்டங்கள் தடையாக இருப்பதால் அந்தச் சட்டத்திலேயிருந்து, Widows, pensioners, handicapped and those who are dependants என்று சொல்லப்படுபவர்கள் கடன் கொடுத்திருந்தாலும் வசூலிக்க சட்டத்திலே இடமிருக்க வேண்டும். Exemption provisions must be made சென்ற தடவையும் இதையே வலியுறுத்திச் சொன்னோம். ஆனால் அதற்கான புரொவிஷன் ஒன்றும் தேடவில்லை. ஆனால் சிட்ஃபண்ட் போன்றவைகளுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள் என்றால் இவர்களைப்பற்றிச் சிந்திக்கவில்லையா? இவர்களுக்குப் பலன் அளிக்கின்ற முறையிலே கொண்டு வர வேண்டுமென்று இந்த அரசு விரும்பவில்லையா? இப்படி எத்தனை நாட்களுக்கு நீடித்துக் கொண்டு செல்வது? ஒரு முடிவிற்கு கட்டாயமாக வர வேண்டும்.

அதற்காக என்னுடைய சிறிய ஆலோசனை என்னவென்றால் நீங்கள் காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வருவதாகச் சொல்லி இருக்கிறீர்கள். அப்படிச் சொல்லி ஒரு தரப்பிலேயிருந்து மட்டும் ஒரு முடிவை எடுத்து விடாதீர்கள் தயவு செய்து. அதற்காக கன்ஸல்டேட்டிவ் கமிட்டி போடுங்கள், அந்த கன்சல்டேட்டிவ் கமிட்டியிலே குறிப்பாக வழக்கறிஞர்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள், கள், கடன் வாங்கியவர்கள் ஒருசிலரையும் சேர்த்துக்கொள்ளுங்கள், கடன் கொடுக்கின்ற ஒரு சிலரையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்து அவர்களுடைய அபிப்பிராயங்களையும் கேட்டு ஒரு முடிவான முடிவிற்கு, Let it not give room for any criticism என்ற முறையிலே சிறந்த முடிவிற்கு வாருங்கள் என்று கேட்டுக்

[பிற்பகல் 12-50]

கொள்கிறேன். அப்படிச் சொல்கின்ற பொழுது அவர்களுக்கும் விதிவிலக்கு அளிக்கலாம். இன்கம் டாக்ஸ் பேயர்ஸ் இருக்கிறார்கள். அதே நேரத்தில், கடன் கொடுக்க அரசாங்கத்திலே லைசன்ஸ் பெற்று கடன் தருகிறார்கள். அப்படி லைசன்ஸ் பெற்றவர்களிடம் வாங்கிய கடன் என்று சொன்னால் வட்டியையெல்லாம் தள்ள ஒரு சட்டத்தைக் கொண்டு வாருங்கள். அதேபோல், கொடுத்திருக்கிற அசலிலே பாதியைத் தள்ளுவோம் என்று கொண்டு வாருங்கள். 10 எக்கருக்கு மேலாக நிலம் வைத்திருக்கிறவர்கள் கடன் கொடுத்தால் அதிகமாக அந்த வருமானத்தைக் கொண்டுதான் கடன் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கொடுத்த கடனுக்கும் அந்த முறையை அனுசரியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, வசூலிப்பதிலே கூட நான் சென்ற முறை சொன்னேன். ஏற்கனவே, Act I of 1955 சட்டம்

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 ஏப்ரல் 4

இருக்கிறது. இது போன்ற, கடன் நிவாரணச் சட்டம் வருகிற பொழுது, கோர்ட்டுகளிலே வழக்குகளைத் தொடரலாம். இப்படி தொடரும் பொழுது The amount can be recovered in four annual instalments என்ற சட்டம் இருக்கிறது. It has not been repealed even till this date. By invoking the provisions of that Act, the amount can be recovered in four annual instalments என்கிற முறைகளை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது இல்லாதபடிக்கு நீங்கள் நீட்டித்துக் கொண்டிருக்க வேண்டாமென்ற கருத்தை நான் தெளிவாகச் சொல்கிறேன். அதே நேரத்தில், இன்னொரு அபாயகரமான நிலைமையிருக்கிறது. breach of trust or any amount which involves the nature of contract என்கின்ற முறையிலே வசூலித்துக் கொள்ளலாம் என்கின்ற சட்டம் இருக்கிற காரணத்தாலே, குறிப்பாக, வெல்ல உற்பத்தி செய்கிறவர்கள் அந்த மண்டியிலே அந்த வெல்லத்தைப் போடுகிறார்கள், ' முன் பணமாகப் பணத்தை வாங்குகிறார்கள் வாங்குகின்ற பொழுது புரோ நோட் எழுதி வாங்குகிறார்களா என்றால் இல்லை. அதே நேரத்திலே, அக்ரிமென்ட் என்ற பெயரிலே, புரோநோட் ஃபார்மை வைத்துக் கொண்டு, நீங்கள் அறுவடை செய்யும்போது வெல்லத்தைத் தரவேண்டும். அப்படி வெல்லத்தைத் தரவில்லையென்றால் பொதி-பொதி என்று எழுதி வைத்துக் கொள்கிறார்கள். ஒட்டு மொத்தமாக, பொதி ஒன்றுக்கு ரூ. 10/- நீங்கள் செலுத்த வேண்டுமென்று அக்கிரிமெண்ட் எழுதி வைக்கிறார்கள். இப்படி புரோநோட் வைத்து கோர்ட்டிலே போடும்போது, Because it amounts to a contract and he has agreed to pay damages என்கின்ற முறையிலே அதை வழக்குமன்றத்திலே போட்டு, பொதிகளை வாங்குகிறார்கள். ஏற்கனவே, Section 64 and 65 of the Contract Act ன் கீழே If it is in the nature of penalty. அதை வசூலிப்பதிலே அரசாங்கத்திற்கும் நீதிபதிகளுக்கும் டிஸ்கிரெஷனரி பவர் இருக்கிறது. இதைப் பயன்படுத்தி சில நீதிபதிகள் போட்டிருக்கிற ரூ. 10/-க்கு, நஷ்ட ஈடாக ரூ. 1/-, ரூ. 2/- தர வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால், சில நீதிபதிகள் Because you have agreed and you have executed an agreement to repay so much amount. you have to pay. என்கின்ற வகையிலே நீதிபதிகளுக்கு நீதிபதிகளாக மாற்றப்பட்டு அந்த அக்கிரிமெண்டில் இருக்கிறதைக் கொடுக்கவேண்டுமென்றுகூறப்படுகிற நிலைமையும் இருக்கிறது. ஆகையினாலே புரோ நோட்டைப் போட்டாலாவது சட்டப்படி 6 சதவிகிதம் வட்டியை

1978 ஏப்ரல் 4] [திரு. செ. சிவசாமி]

யாவது குறைக்கமுடியும். அது இல்லாததன்காரணமாக அதிகமான பாதகங்களுக்கு ஆளாக்கப்படுவார்கள். இதனால் விவசாயப் பெரு மக்கள் பாதிக்கப்படும் நிலையிருக்கிறது. ஆகவே தயவுசெய்து நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இப்படி முன்னே சொன்ன முறைகளைச் சிறு விவசாயிகளுக்குக் கடைபிடியுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இதிலே, மிகவும் விரோதமான ஷரத்து என்னவென்றால், Act 31 of 1976 இந்த விதியை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்கள்.

Act 31 of 1976-ல் village artisan-சிறுகை வினைஞர்கள் ரூ. 200-க்குக் கீழாக வாங்கியிருக்கக் கூடிய கடன்கள் complete ஆக wipe out செய்யவும் புரோவிஷன்ஸ் இருக்கின்றன. இதையெல்லாம் எதற்கு கொண்டு வந்தார்கள் என்றால்

The intention of the Legislation was to see that these people should not be affected and that they should not be harassed in the Court of Law.

ஆனால், அதிலே கூட, இந்தப் புரவிஷனை நீங்கள் இன்ட்ரடியூஸ் செய்து, Act 31 of 1976 - லே கூட திருத்தம் கொண்டு வருகிறீர் கள் என்று சொன்னால் ஏற்கனவே கொண்டு வந்த சட்டத்திற்கு மாறாக, எந்த உணர்வோடு அந்தச் சட்டம் போடப்பட்டதோ, அந்த உணர்வு இந்தச் சட்டத்தின் மூலம் தூக்கி எறியப்படுகிற நிலைமையிருக்கிறது, ஆகவே,

We must come to an end at one point of time. Let us not postpone the evil. We must put an end to the evil என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து. மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கடன் ஒத்திவைப்பு சட்டம் ஒன்றை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். (அமென்ட்மென்டு). இதிலே சீட்டுக் கம்பனிகளுக்கு விலக்கு அளிப்பது இந்த மசோதாவின் நோக்கம். சீட்டுக் கம்பனிகளுக்கு இதுவரையிலும் விலக்கு அளிக்காது இருந்தபோது (குறுக்கீடு) ஐ அன்டர்ஸ்டான்ட், விலக்கு அளிப்பதற்காக இது கொண்டு வரப்படுகிறது. இதுவரையிலும் இதனால் ஏற்பட்ட சிரமங்கள் என்ன, விதிவிலக்கு அளிக்காதபோது அவர்களுக்கு என்ன சிரமங்கள் ஏற்பட்டன என்பது நமக்குத் தெரியாது. அவர்களுக் குள்ள சிரமங்களைப் பற்றி அரசுத் துறையில் விளக்கம் அளிக்க வேண்டும். கடன் நிவாரண சட்டம் என்று மூன்று சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு ஒரு சட்டம், பான் புரோக்கர்ஸ் அமென்ட்மன்ட் மூலம் ஒரு சட்டம் இது ஒரு சட்டம், இந்த சட்டங்களினாலே இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டி ருக்கிற நிலைமையை அரசு உன்னிப்பாக கவனிக்கவேண்டும். கடனை ஒத்தி வைத்துக் கொண்டு போகிறோமே தவிர, அந்தக்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 ஏப்ரல் 4

கடனைக் குறைப்பதற்கான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கடனை ஒத்திவைத்துக் கொண்டே போனால் என்ன நிலைமை உருவாகும்? வட்டி அதிகரித்து அதிகரித்து 15%க்குக் குறையாமல் இருக்கும். இப்போது சட்டப்படி 12% இருப்பதாக நான் அறிகிறேன். பணம் கொடுத்தவர்கள் யாரும் கொடுத்த தொகைக்கு எழுதி வாங்குவது கிடையாது, 2 மடங்கு, 3 மடங்கு, 4 மடங்கு அதிகமாக எழுதி வாங்குகிறார்கள். 500 ரூபாய் கடன் வாங்கினால் ஆயிரம் ரூபாய் அல்லது 2,000 ரூபாய்க்கு எழுதி வாங்குகிறார்கள். அவர்களுடைய முதலுக்கு எந்தவிதமான சங்கடமும் கிடையாது. ஆகவே எழுதி வைத்துக் கொண்டு வட்டி 26%, 36%, 48% வரையில் வட்டியிருக்கிறது. இந்த 36%, 48% என்று சொன்னால் எவ்வளவு வட்டியாகும் என்பதைப் பார்க்க வேண்டும். 3 வருடத்தில் முதலுக்குச் சமமாக வட்டி வருகிறது. 500 ரூபாய் வட்டிக்குக் கொடுத்தால் 3 வருடத்தில் 1,000 ரூபாயாக ஆகிறது. அதற்குப் பிறகும் பெருகிக் கொண்டே போனால் கடன் சுமை அதிகமாகிறது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடன் வாங்காத மனிதனே கிடையாது. எல்லோரும் கடன் வாங்குகிறார்கள். கடன் வாங்கியதற்குப் பின்னால் அவனுடைய வாழ்க்கை நிலை என்ன ஆகும் என்பதைச் சிந்திக்க வேண்டும். சாதாரணக் குடிமகன், விவசாயிகள் கடன் வாங்கி கடன் சுமை அதிகரித்ததன் மூலம் தங்களுடைய சொத்தையே இழந்து விடக் கூடிய நிலைமை இருந்தது. அதே நிலைதான் இன்றைக்கும் இருக்கிறது. ஒவ்வொருவரும் வருகின்ற வருவாயிலே பெரும் பகுதியை வட்டிக்குக் கொடுக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே வட்டியை ஒத்திவைத்துக் கொண்டே போவது சாதாரண குடிமகனுக்கோ அல்லது விவசாயிக்கோ வழிவகை செய்வதாக இல்லை. அவர்களுக்கும் நன்மை பயப்பதாகவும் இல்லை. ஆகவேதான் இதை எல்லாம் கவனத்திலே எடுத்துக் கொண்டு, இந்தக் கடன் சுமையை எப்படிக் குறைக்கலாம் என்பதைப் பற்றி அரசு ஆலோசிக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் நான் கேட்டுக் கொள்வேன், அந்தக் கடனை எல்லாம் ஒருமித்து ரத்து செய்துவிட வேண்டும். அவர்கள் வேண்டுமானால் புதிதாகக் கடன் வாங்கிக் கொள்ளட்டும். அவர்கள் முதலைவிட அதிகமாக வட்டி கொடுத்து விடுகிறார்கள். அதை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு அத்தனை கடன் சுமைகளையும் ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலே கொடுக்கப்பட்ட கடனைக்கூட ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. அது சாத்தியமா? சாத்தியமில்லையா என்று பரிசீலிக்க வேண்டும். இதற்கு ஏதாவது ஒரு முடிவு கட்டியாக வேண்டும்.

1978 ஏப்ரல் 4] திரு. ஏ. ஆர். மாரிமுத்து.

அவர்களுக்கு ரீபேயிங் கெப்பாசிடி இல்லாத காரணத்தினால் அவர்கள் தள்ளுபடி செய்யச் சொல்லுகிறார்கள். அவர்களுக்குத் திருப்பிக் கட்ட முடியாத சூழ்நிலை சமயத்திலே ஏற்படுகிறது இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். முடிவு கட்டாமல போனால் அது பெருகிக் கொண்டே போகும்.

வட்டிக்குக் கொடுக்கின்ற பணம் எப்படி அவர்களுக்குப் பெருகுகிறது என்று பார்த்தேன். ஆயிரம் ரூபாய் வைத்திருந்தால், 5 ஆண்டுகளுக்குப் பிறகு பல லட்சம் சேர்ந்து விடும். 20 ஆண்டுகளிலே 5 லட்சமாக ஆயிரம் ரூபாய் போகிறது. நான் கணக்குப் போட்டுப் பார்த்தேன். ஆகையினாலே இவன் அழிந்து கொண்டே போகிறான். வட்டிக்குக் கொடுத்தவன் பெரிய பணக்காரனாக ஆகிறான் ஆகையினாலே இதை ஒரு கட்டத்திலே முடிக்க வேண்டும் என்ற முறையிலே அரசு கடன் நிவாரணச் சட்டங்களைப் பரிசீலனை செய்ய வேண்டும். அதைச்செய்யவில்லை என்றால், சாதாரண மக்களுக்கு விமோசனம் கிடையாது.

(பிற்பகல் 1.00.)

ஒருவர் ஆயிரம் ரூபாய் வைத்து இருந்தால் 5 ஆண்டு காலத்திற்குள் லட்சக் கணக்கில் பணம் சேருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் கொடுத்த பணத்திற்கு வட்டி வாங்கி, அந்த வட்டியை வட்டிக்கு விட்டு, இப்படி ஒரு ஆயிரம் ரூபாய் 20 ஆண்டு காலத்தில் 5 லட்சமாக உயர்கிற அளவிற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதற்கான கணக்கை நான் ஒரு நேரம் போட்டுப் பார்த்ததில் அறியலானேன்.

வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள் பெரிய பணக்காரர்கள் ஆகி விடவும், கடன் பெற்றவர்கள் மேலும் கடன்காரர்கள் ஆகி கஷ்டப்படும் நிலையும் ஏற்படுகிறது. ஆகவே, இந்த அரசு கடன் நிவாரணச் சட்டங்கள் கொண்டு வருகிறபோது, இவற்றையும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி பரிசீலனை செய்யவில்லை என்றால், சாதாரண மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள்.

பீகாரில் கூட்டுறவுக் கடன்கள் மீதுள்ள வட்டியைக்கூட ரத்து செய்து விட்டார்கள். பத்திரிக்கையில் வந்த செய்தியை வைத்துச் சொல்கிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கொடுத்திருந்த கடன்களின் பேரில் உள்ள வட்டியை ரத்து செய்து இருக்கிறார்கள். அங்கே மட்டும் ரிசர்வ் பாங்க் எப்படி இதற்கு ஒப்புதல் அளித்தது? ஒரு வேளை மாநில அரசாங்கமே அதற்குத் தங்களுடைய நிதியில் இருந்து அளித்து விட்டார்களா என்பது தெரியவில்லை. பீகார் அரசாங்கம் எப்படி இந்த நிலையை எடுக்க முடிந்தது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆகவே, நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புவது, இந்தக் கடன்கள் ஓரளவிற்கு ரத்து செய்யப்பட்டு, பொதுமக்கள் நல்ல நிவாரணம் அடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இப்போது பான்புரோக்கர் இடம் இருக்கிற கடன்களை ஒத்தி வைத்து இருக்கிறோம். ரூ. 200 வரையுள்ள கடன்களை ஒத்தி வைத்து இருக்கிறோம். ஆனால், பல இடங்களில் அது தாலுக்கா அலுவலகத்தில் பரிசிலனையில் இருக்கின்றனவே தவிர மக்கள் நிவாரணம் பெறும் அளவிற்கு இல்லை. இப்படிக் காலதாமதம் ஆகிற காரணத்தால், அவர்கள் தனித்தனியே சென்று அந்தக் கடன்களை வசூலித்து விடுகிற நிலைமை இருக்கிறது. அந்தச் சட்டத்தால் சாதாரண மக்களுக்குப் பலன் கிடைக்குமா என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த பான்புரோக்கர் கடன்கள் ரத்து செய்யப்படும் என்கிற சட்டத்தை அமல்படுத்துவதில் என்ன சிரமம் இருக்கிறது என்பதையும் உடனடியாக இந்த அரசு கவனித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து வேண்டியதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, சுருக்கமாக இரண்டு மூன்று விஷயங்களை இந்தத் திருத்தச் சட்டத்தின்மீது தெரிவிக்க விரும்புகிறேன்.

தொடர்ந்து ஒரு நாட்டிலே இருக்கும் மக்கள் கடன் பளுவில் இருக்கிறார்கள், கடன்காரர்களாக இருக்கிறார்கள் என்று நாட்டிற்கு அறிவிக்கும் வகையில் அடிக்கடி இந்த அவையிலே நாம் சட்டங்களை நிறைவேற்றக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலைமை இருந்து வருவது நாட்டிற்கு எவ்வளவு தூரம் நல்லது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தக் கடன் பளுவை, நாம் தள்ளிப் போட்டுக்கொண்டு போவதால் அதிகமாக்கிக் கொண்டு இருக்கிறோமே தவிர, நாம் யாருக்கு எந்தச் சலுகை அளிக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அவர்களுக்கு அந்தக் கடன் சுமையில் இருந்து நிரந்தரமாக விடுதலை அளிக்க என்ன வழி என்பதை சிந்தித்துப் பார்ப்பதுதான் நல்ல முறை என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு போட்டிருக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் கடந்த காலத்தில் அரசு தள்ளி வைத்த கடன்களுக்கு வட்டி முழுமையாக இல்லை என்று அறிவிக்க வேண்டும். இப்படி வட்டி தள்ளப்படும் சூழ்நிலையில், முதல் மட்டும் ஒரு குறிப்பிட்ட இன்ஸ்டால்மென்டில் வசூலிக்கப்பட்டுவிட வேண்டும். இப்படி முழுமையாக வட்டியில்லாமல் அந்தக் கடன் தொகை வசூலிக்கப்பட்டு விட்டால், அவர்களுக்குக் கடன் சுமை இல்லாமல் இருக்கும்.

ஆகவே, அது போன்றதொரு சட்டத்தைக் கொண்டு வருவது நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தக் கடன்களை மேலும் மேலும் தள்ளிப் போட்டுக் கொண்டு போவதன் மூலம், கடன் தொகையும் அதிகமாகிறது, வட்டியும் கூடுகிறது, நாம் கொடுக்க நினைத்த நிவாரணத்தைக் கொடுக்க இயலவில்லை. ஆகவே, இப்படித் தள்ளிப் போடும் காலத்திற்கு வட்டி கணக்கிடக் கூடாது என்று சொல்ல வேண்டும். எவ்வளவு காலத்திற்கு நிவாரணம் அளித்து இருக்கிறோமோ அந்த நிவாரண காலத்திற்கு வட்டி கணக்கிடக் கூடாது. பிரின்சிபல் அமௌண்ட் சுலபமான தவணையில் வசூல் செய்யப்பட வேண்டும். இந்த அடிப்படையில் ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டு வருவீர்களானால் அது பயன் உள்ளதாக இருக்கும், இல்லாவிட்டால் அது பிரயோசனம் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

There is discrimination in the present Bill. An individual who is a money lender has no relief under the law, but a collective body, which is for all practical purposes is a money lender is given relief. Because it happens to be a collective body, it was given. It carries on the banking activities and banking functions. The same facility is not available to the poor individual. The Hon. Minister for Law knows all the subtitles, legalities, constitutionalities, niceties and technicalities involved in the matter. So far as I am concerned, there seems to be a patent discrimination between a group of body and an individual; a collective body and an individual. Why should there be such a discrimination between a professional money lender and a person who is incidentally made a money lender? There is a basic difference in the Government's approach.

Therefore, I submit that there is a need for a comprehensive legislation. A comprehensive Bill is called for and this piece-meal legislation is not going to help the poor people. Unless the Government comes forward with a comprehensive law—a new legislation—this piece of legislation is not going to solve the problem. By extending this Bill every now and then, we are exhibiting the sad state of affairs of the rural indebtedness in spite of our various social and welfare measures. Even after 30 years of independence, in spite of all economic progresses, we are going to place on record that a major section of our society is involved in indebtedness. That is the only implication arising out of this legislation. We are declaring to the very world that society is there in perpetual indebtedness. By way of reducing their indebtedness, we are just trying to declare the perpetual indebtedness of our rural people. I am sure that the Hon. Minister for Law, at one stroke, will bring forward a comprehensive legislation to solve all the burdens, social burden, financial burden or any kind of burden that has been perpetuated upon the

[Thiru M. A. Latheef] [1978 ஏப்ரல் 4

Society. I submit with all sense of humility that our Hon. Minister for Law will come forward with a comprehensive legislation to eradicate the unhappy state of affairs of anti-social elements, under whose clutches the poor people are suffering. Now the society is suffering to a great extend under the clutches of money lenders. May I therefore submit that a comprehensive legislation is called for. I am sure the suggestions that have been made on the floor of the House will be considered by the Hon. Minister for Law and the Government which is now composed of enlightened persons like our Finance Minister and others.

With these words, I conclude.

திரு. சீ. மு. வாசன்: தலைவரவர்களே, இந்தக் கடன் நிவாரண திருத்தச் சட்டத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்பும்போது சில திருத்தங்களையும் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆளாக வேண்டியவனாக இருக்கிறேன்.

நாம் பான் ப்ரோக்கர்களுக்கு தொழில் நடத்த 100 ரூபாய் வாங்கி விட்டு ரசீது கொடுக்கிறோம். தொழில் நடத்த லைசென்ஸ் கொடுக்கிறோம். இப்போது அவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை இருக்கிறது. வாங்கிய கடனை வசூல் செய்யக் கூடாது என்று தள்ளி வைத்துக்கொண்டே போகிறோம். இப்படித்தள்ளி வைத்துக் கொண்டே போவதால் அவர்கள் போட்ட பணத்திற்கு வட்டியும் இல்லாமல், தொழிலும் நடக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 2, 3 ஆண்டுகளாக இதே நிலைதான் இருக்கிறது. ஆனால், வருஷா வருஷம் அவர்களுடைய தொழிலுக்குள்ள 'பீஸை' ஒழுங்காக வாங்கிக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது, இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்தால், அவர்களுடைய பணத்தைக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். தொழில் நடத்த முடியாமல் அவர்கள் கையைக் கட்டிப் போடுகிறோம்; தொழிலை முடக்கிப் போடுகிறோம். தொழில் நடத்த பீஸ் மட்டும் ஏன் வாங்க வேண்டும்? இப்படியே போனால் அவர்கள் போட்ட பணம் கிடைக்குமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. அதைவிட அரசாங்கமே அவர்களுக்கு ஏதாவது பாண்டோ பத்திரமோ எழுதிக் கொடுத்துவிட்டு, அரசாங்கமே அந்தத் தொழிலை எடுத்துக் கொள்ளலாம். அதற்குப் பின்னால் கடன் வாங்கியவர்களிடமிருந்து வசூல் செய்வதும் செய்யாததும் அரசாங்கத்தின் விருப்பம்.

மேலும் சர்க்கார் கொடுத்த கடனை எத்தனை ஆண்டுக்கு வேண்டுமானாலும் தள்ளிப் போடலாம்; யாரும் கவலைப்பட மாட்டார்கள். ஆனால், பிரைவேட் பார்ட்டியின் பணத்தை இன்னொரு பிரைவேட் பார்ட்டிக்குக்கடனாகக் கொடுக்கும்போது, கொடுத்த பணத்தை வாங்கக் கூடாது. அதற்கு வட்டி வாங்கக் கூடாது என்று சர்க்கார் சொல்வது பொருத்தமுடையதாக இல்லை எனக்குத் தான் சொல்லத் தோன்றுகிறது.

1978 ஏப்ரல் 4] [திரு. சீ. மு. வாசன்]

[பிற்பகல் 1.10]

ஒரு சில கிராமங்களிலே பலர் தாங்கள் சிறுகச் சிறுகச் சேமித்து வைக்கும் பணத்தைப் பல பெரிய மனிதர்களிடம் கொடுத்து வைப்பது வழக்கம். ஏனென்றால் அங்கெல்லாம் பணத்தைப் போடுவதற்கு போஸ்ட் ஆபீசோ அல்லது வங்கிகளோ இல்லாமல் இருக்கலாம். அப்படிப்பட்ட இடங்களில் இப்படித்தான் கொடுத்து வைப்பதுண்டு. இப்போது இருக்கும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு அந்தப் பெரிய மனிதர்கள்கூட அந்தப்பாமர மக்களை ஏமாற்றும் நிலை ஏற்படுகின்றது. ஆகவே, இதனை விசாரித்து இந்தப் பணம் கொடுத்தவர்களுக்குத் திரும்பக் கிடைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Sir, I am really grateful to the hon. Members, particularly Thiruvalargal Annamalai, Sivasamy, Margabandu, Marimuthu, Latheef and Vasan.

The general criticism has been in respect of want or absence of a comprehensive legislation on this Debt Relief. It is true that the scope of the present Bill is rather very narrow. It is only a minor Amendment that has been sought to be placed before this House for consideration and for being passed in due course. But most of the hon. Members have made complaints about Tahsildars who have plenty of applications to dispose of, particularly on merits in respect of the debtors whether they are really entitled to exemption or not. If the hon. Members have got any specific complaints, certainly the Government would be very anxious to look into it and give the necessary relief to the debtors who are not able to get relief by presenting their petitions. In fact, two or three hon. Members have made complaints about the lethargy on the part of Tahsildars in disposing of the ever-increasing petitions. Certainly, necessary instructions would be issued by the Government for the expeditious disposal of the pending applications before various Tahsildars.

Some of my hon. Friends have pleaded for the total liquidation of the debts upto a certain limit and the graduated payment of debts of over a certain amount although they have not specifically suggested any specific sums for the purpose of liquidation or any arrangement for, what I call, easy repayment of loans in a number of instalments. I presume that these detailed suggestions from the hon. Members may be forthcoming when the comprehensive legislation on Debt Relief is going to be placed before this House for consideration in due course of time.

[Thiru. K. Narayanaswamy Mudaliar] [1978 ஏப்ரல் 4

The hon. Member was pleased to ask, what is the exact scope of Nidhis and Mutual Benefit Societies. I cannot do better than quote from the recommendations of the Companies Act Amendment Committee and Section 620-A of the Companies Act relates to Nidhis and Benefit Societies. Now I will read only the relevant portion. It is stated—

'We have now to advert to a class of companies which are *sui juris* and which present peculiar features. There are a large number of concerns in South India variously styled as Nidhis, Mutual Benefit Societies, Permanent Funds, etc. They are companies incorporated and registered under the Act of 1913 or the earlier Companies Acts. Their objects *inter alia* are to enable the members to save money, to invest their savings, and to secure loans at favourable rates of interest. They inculcate the idea of thrift and compulsory saving in the minds of the poor and middle class people. These companies have a fixed capital consisting of shares of one rupee each. The shares are not offered to the public for subscription but allotted to those who desire to take advantage of the benefit offered for depositing or borrowing money. These companies have transactions only with the members and not with the public. They help the members to save money by receiving from them recurring deposits of small sums every month and repaying 'the accumulated sum at the end of 4, 5, 6 or 7 years, as the case may be, with interest calculated on the amount standing to the credit of the depositor each month. Loans are granted to members on the security of their recurring deposits or of jewels or house property repayable with a moderate rate of interest during a period of 4 to 7 years in monthly instalments. . . . .'

These are the essential features of Nidhis and Mutual Benefits Societies. The Amendment that is placed for the consideration of the House, is only to achieve the object, namely, payment to these Nidhis and Mutual Benefit Societies.

Hon. Members have made other suggestions which will be duly considered by the Government while framing the comprehensive legislation on this general subject of Debt Relief.

Thank you, Sir.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

1978 ஏப்ரல் 4]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

The Hon. Thiru. K. Narayanaswamy Mudaliar: Sir, I have —

'That the Tamil Nadu Debt Relief Laws (Second Amendment) Bill 1978 (L.A. Bill No. 22 of 1978) be passed.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(ஈ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/78.)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த), சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.23/78) இப்பேரவையின் கீழ்க்கண்ட 18 உறுப்பினர்களைக் கொண்ட பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப் படவேண்டுமென்று முன்மொழிகிறேன்:—

1. மாண்புமிகு நிதி அமைச்சர்.
2. திரு. துரை கோவிந்தராசன்.
3. திரு. கே. பண்ணை சேதுராம்.
4. திரு. என். குப்புசாமி.
5. திரு. பாக்கூர் சுப்பிரமணியம்.
6. திரு. கே.என்.கே. இராமசாமி.
7. திரு. என். சுப்பராயன்.
8. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
9. திரு. கே. உச்சி.
10. திரு. இரெ. இராசமாணிக்கம்.
11. திரு.ஏ. ஆர். மாரிமுத்து.
12. திரு. எஸ். சதாசிவம்.
13. திரு. சோ. அழகர்சாமி.
14. திரு. என். வரதராசன்.
15. திரு. கே. கந்தசாமி.
16. திரு. ஜே. ஜேம்ஸ்.
17. திரு. ரா. மார்க்கபந்து
18. திரு. எம். ஏ லத்தீப்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

---

*....ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பொறுக்குக் குழுவில் உள்ளவர்கள் இதில் பேசவேண்டியதில்லை, மற்ற உறுப்பினர்கள் இதில் என்ன கருத்து சொல்கிறார்கள் என்று கேட்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் அறிக்கை மறுபடியும் விவாதத்திற்கு வரப்போகிறது. யார் யார் என்னென்ன சொல்ல விரும்புகிறார்களோ அவற்றைக் குழுவில் சொல்ல வாய்ப்புண்டு. ஆகவே இங்கே தேவையில்லை.

சட்டப் பேரவை விதி 99 (1)-ன்படி இக்குழுவிற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைத் தலைவராக நியமிக்கிறேன்.

[பிற்பகல் 1.20]

(உ) 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/78)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

"1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 24/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப மசோதாவின் மீது நடைபெறவிருக்கின்ற விவாதத்தில் நான் கலந்து கொண்டு நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு எடுத்து வைக்க விரும்புகிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின் போது, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால், இந்தத் தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் மத்திய சர்க்கார் இதற்கான அதிகாரத்தை துவக்க காலத்தில் வழங்காத காரணத்தால், அந்த தூய்மையான, உயர்ந்த லட்சியமான இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கின்ற பணி தடைப்பட்டு விட்டது என்றாலும்

* 1978 ஏப்ரல் 3-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

கூட, திராவிட முன்னேற்றக் கழக அரசின் இடைவிடாத முயற்சியின் காரணமாக—அன்றைக்குக் காயாக இருந்தது, இன்றைக்குக் கனியாகக் கிடைத்திருக்கிறது. மொத்தத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இதை நாங்கள் வரவேற்கிறோம். வரவேற்கின்ற அதே நேரத்தில், இந்த மசோதாவில் இருக்கக்கூடிய சில குறைபாடுகளை எதிர்க்கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்

அந்த அடிப்படையில் இதே மாமன்றத்தில் எங்களுடைய கட்சியின் சார்பாகப் பேசுகின்றபோது கல்வி மான்யத்தில் பேசுகின்றபொழுது, சில கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறோம். பல்கலைக்கழகம் என்று வரும்போது, அதில் சிண்டிகேட், அக்கடமிக் கௌன்சில், போர்டு ஆஃப் ஸ்டடீஸ் என்றெல்லாம் குழுக்கள் இருக்கின்றன. அவைகளில் எல்லாம் மாணவர்களின் பிரதிநிதிகள் இருக்கிறார்களா என்று கேட்டால் மாணவர்களின் பிரதிநிதிகள் இல்லை. மாணவர்களின் பிரதிநிதிகளும் அதில் இருந்தால் மாணவர்களின் பல்வேறு பிரச்னைகளைத் தீர்க்க முடியும். காரணம் பல்கலைக் கழகம் என்று சொல்வது, வெறும் ஆசிரியர்களை மட்டும் கொண்டது அல்ல. ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் இப்படி முக்கோணம், என்ற அடிப்படையில் பல்கலைக் கழகப் பிரச்னைகள் அமைந்திருக்கின்றன. ஆகவே மாணவர்களின் பிரதிநிதிகள், சிண்டிகேட்டில் இடம் பெற வேண்டும், அக்கடமிக் கௌன்ஸிலில் இடம் பெற வேண்டும், போர்டு ஆப் ஸ்டடீஸ்-ஸில் இடம் பெறவேண்டும். இவ்விதம் இக் குழுக்களில் இடம் பெற்றால் அவர்களுடைய பிரச்னைகளை எடுத்துச்சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். கேரளாவில் கூடப் பல்கலைக்கழகக் குழுக்களில் மாணவர்களின் பிரதிநிதிகள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கின்ற இந்த நேரத்தில், கல்வி அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு இந்தப் பிரச்னையை கொண்டு வருகிறேன். இது கட்சி அரசியல் அல்ல. மாணவர்களுக்கும் அரசுக்கும் நல்லது என்ற முறையில் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், அமைச்சர் அவர்களும் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

இன்னொரு கருத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தினுடைய நிர்வாகம் சம்பந்தமாக அரசாங்கத்திற்குச் சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப்படி அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்ற நிலையில், தொழில் நுட்பப் பல்கலைக் கழக நிர்வாகத்தில் ஏதாவது தவறுகள் ஏற்படுமானால், ஒழுங்கீனங்கள் ஏற்படுமானால், அப்போது அரசு நடவடிக்கை எடுக்கலாம் என்றிருக்கிறது. இதற்கென்று இருக்கின்ற பிரிவை மொத்தத்தில் நான் ஆதரிக்கிறேன், அதே நேரத்தில் ஏதாவது ஒழுங்கீனங்கள், குறைபாடுகள், தவறான

போக்குகள் பல்கலைக் கழக நிர்வாகத்தில் ஏற்படுமானால் அரசாங்கம் ஒரு அதிகாரியை அனுப்பி, அவர் இந்தத் தவறுகளைப்பற்றி விசாரித்து அரசாங்கத்திற்கு ஒரு ரிப்போர்ட் சப்மிட் செய்ய வேண்டும். அந்த ரிப்போர்ட்டின் அடிப்படையில் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தின்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கிறது இது நல்ல கொள்கைதான் என்றாலும் கூட, கொள்கை ரீதியாகப் பல்கலைக் கழகம் முரண்படுமானால் அரசியல் எண்ணத்தோடு, அரசியல் உள்நோக்கத்தோடு செயல்பட்டால் அப்படிச் செயல்படும்போது நிர்வாகத்தினரை வேண்டுமென்றே திட்டமிட்டு பழிவாங்குகின்ற நிலைமையும் ஏற்படும்.

எனவே, இந்தப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்திலே சீர்கேடுகள் இருக்குமானால் அல்லது ஊழல்கள், ஒழுங்கீனங்கள் இருக்குமானால், அப்படி இருக்கிறதா என்பதை அரசாங்கத்தினுடைய ரெப்ரசென்டேடிவ் பிரதிநிதியாக இருக்கக்கூடிய ஒரு அதிகாரி விசாரிக்கக்கூடாது. ஒரு நீதிபதியைப் போட்டு அப்படி நடந்திருக்கிறதா என்பதைத் தெரிந்து அதன்மீதுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும். காரணம் அரசாங்கத்தின் அதிகாரி அரசாங்கத்தின் கொள்கைகளைப் பிரதிபலிப்பவராக இருப்பார். அதனால் அரசியல் கண்ணோட்டத்தோடு அதில் இருக்கக்கூடும் அந்தத் தவறுகளைப் போக்க வேண்டும், நீக்கவேண்டுமென்று சொன்னால் சுதந்திரமான ஒரு நீதிபதியைப் போட்டு, அப்படி அந்தப் பல்கலைக்கழகத்திலே ஒழுங்கீனம் நடைபெற்றிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அமைக்கவேண்டும். அதுதான் சரியாக இருக்க முடியும். அதைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இப்போது சிண்டிகேட் இருப்பதுபோல், இன்னும் பல்வேறு அமைப்புகள் அதிலே இருக்கின்றன. இந்த அமைப்புகளிலே எல்லாம் பெற்றோர்கள்கூட இன்னும் இடம் பெறவில்லை. அப்படிப் பெற்றோர்கள் இதிலே இடம் பெற்றால், அவர்களின் சார்பாகப் பல்வேறு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முடியும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், சில பிரச்னைகளைப் பற்றி எங்கள் கட்சியின் சார்பாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்கலைக்கழகத்திலே மாணவர்களை அட்மிஷன் செய்வது, சேர்ப்பதுபற்றிக் கூட இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஒழுங்கீனமான மாணவர்கள், மாணவர்கள் ஆசிரியர்களுக்கு விரோதமாகக் கல்லூரிக்கு விரோதமாக நடந்துகொண்டார்கள், அவர்கள் நடத்தை சரியில்லை, எனவே இந்த மாணவர்களைப் பல்கலைக் கழகத்திலே சேர்த்துக்கொள்ள முடியாது, அவர்களுக்கு அட்மிஷன் கொடுக்கக்கூடாது என்ற ஒரு விதிகூட இதிலே இருக்கிறது. இந்த விதியானது பொதுவாக வரவேற்கத்தக்கதுதான். ஒழுங்கீனமான அல்லது நடத்தை சரியில்லாத மாணவர்கள் பல்கலைக்கழத்திலே அனுமதிக்கப்படக்கூடாதுதான். அந்தக் கருத்திலே யாருக்கும்

முரண்பாடு இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இதிலே நிச்சயமாக இருக்க முடியாது. ஆனால் அரசியல் உள்நோக்கத்தோடு யாரேனும் இதைப் பயன்படுத்தக்கூடாது. காரணம், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் வீட்டுப் பிள்ளை அல்லது எதிர்க் கட்சிக்காரர் ஒரு மாணவனை அழைத்துக்கொண்டு போய் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து, அந்தப் பல்கலைக்கழகத்திலே அட்மிஷன் வாங்குகிறபோது இல்லை, இல்லை, நீ ஒழுங்கீனமானவன், நடத்தை சரியில்லாதவன் என்று ஒரு காரணத்தைச் சொல்லி மறுத்துவிடக் கூடாது. அப்படி ஒரு பிரிவு இதிலே இருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன் என்று சொல்லி இந்த அளவில் இந்த மசோதாவை நான் வரவேற்று, அதே நேரத்தில் மாணவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்த சிண்டிகேட்டிலும், அகாடமிக் கவுன்சிலிலும் இடம் பெற வேண்டும் என்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

333. 28-9-1977 ஆம் தேதியிடப்பெற்ற பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு-M) அரசாணை எண். 1193-ல் வெளியான, 1974-75 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் ஆண்டறிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (2) விதியின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

***334.** 31-12-1976 ஆம் தேதியோடு முடிவடைகிற ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலைக்கழகத்தின் 8-வது ஆண்டு அறிக்கையும் அதன்மீதான தமிழ்நாடு அரசின் ஆய்வுரையும் 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

† 207. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவிற்கான (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/78) இணைப்பு.

** 208. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/78)

[1978 ஏப்ரல் 4

209. குடிமைப்பொருள் வழங்குதுறை (முதற்பகுதி) பற்றி மதிப்பீட்டுக்குழு அளித்த பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் முதல் அறிக்கை (ஆறுவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).

210. சின்கோனாத்துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக்குழுவின் இரண்டாவது அறிக்கை (ஆறுவது சட்ட மன்றப் பேரவை) (தமிழ்).

211. பொதுச் சுகாதாரம், பொதுச் சுகாதாரப் பொறியியல், நகரமைப்புத் துறைகள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாவது அறிக்கை (ஆறுவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).

212. உணவு உற்பத்தித்துறை பற்றி மதிப்பீட்டுக்குழு அளித்த பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது அறிக்கை (ஆறுவது சட்ட மன்றப் பேரவை) (தமிழ்)

213. 1971-72 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முதல் அறிக்கை (ஆறுவது சட்ட மன்றப் பேரவை) (தமிழ்).

---

* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21 (5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

† 30-3-1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

** 1-4-1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1978 ஏப்ரல் 5

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

வினாக்கள்-விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மின்சாரக் கட்டண நிலுவை.

* 801 வினா திரு. வீ. கே. கோதண்டராமன் :

திரு. மு. அம்பிகாபதி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரிலுள்ள ஒரு அலுமினியம் தொழிற்சாலையில் மின்சாரக் கட்டணம் 10 கோடி வரையில் நிலுவையில் உள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதை வசூலிக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்., நிலுவை சுமார் ரூ. 9.02 கோடியாகும்.

(ஆ) மின் கட்டண நிலுவைகளை செலுத்தாவிட்டால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் என மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி எச்சரிக்கப்பட்டது. ஆனால் மின் வாரியம் மின் இணைப்பை துண்டிக்க முடியாதபடி உயர்நீதி மன்றத்தின் மூலம் கம்பெனி தடை உத்தரவு வாங்கியுள்ளது. வழக்கு நீதி மன்றத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : சிறிய விவசாயிகள் அல்லது சாதாரண வீடுகளிலே குடியிருக்கிறவர்கள் 25 ரூபாய், 30 ரூபாய் கட்டவில்லை என்றால் ஃப்யூஸ் எடுக்கப்படுகிறது. மூன்று மாதப் பணத்தை

1978 ஏப்ரல் 5]

முன்பணமாகக் கட்டுகிறார்கள். இப்படி சாதாரண மக்கள் அவதிக்குள்ளாகும் நிலை இருக்கும்போது 9 கோடி ரூபாய் பாக்கியை — இப்போது ரெவின்யூ ரெகவரி சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம் — அந்தச் சட்டத்தின்படி பாக்கிக்காக ஜப்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த நிலுவைத் தொகையைப் பொறுத்தவரை 1973-74 ல் 7,00,000 ரூபாய் 1974-75ல் 7,21,64,003 ரூபாய், 1975-76 ல் 39,33,000 ரூபாய், 1976-77ல்1,34,53,000ரூபாய். ஆகவே,1974-75ல்தான் ஏழுகோடி ரூபாய்க்கு மேல் இந்த நிலுவை இருக்கிறது. இந்த நிலுவையைப் பொறுத்தவரை அவர்கள் கட்டவில்லை. இந்த நிறுவனம் மேற்கொண்டு அபராதத் தீர்வையையும் மற்றும் சர்சார்ஜ் முதலியவற்றையும் விதிக்கக்கூடாது என்று அடிக்கடி அரசிடம் மனு செய்து கொண்டு வந்தது. ஆகஸ்டு 1977-ல் அந்த நிறுவனத்தின் அனைத்துக் கோரிக்கைகளையும் நிராகரித்து நிலுவைகளை உடனே கட்டும்படி அரசு உத்தரவிட்டது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஆகஸ்டு 1977-ல் அவர்களுடைய மனுவை நிராகரித்து உத்தரவு போட்டுவிட்டு அதற்குப் பிறகு மின் துண்டிப்புக்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற உத்தரவு போட்டபோது அவர்கள் கோர்ட்டில் ஸ்டே வாங்கினார்கள். ரெவின்யூ ரெகவரி ஆக்ட் இன்னும் சட்டமாக்கப்படவில்லை. இப்போதுதான் நிறைவேற்றியிருக்கிறோம். அது இதுபோன்ற எல்லாவற்றுக்கும் பொருந்தும்.

டாக்டர் கே. சமரசம்: இந்த அலுமினியத் தொழிற்சாலைக்கு என்ன கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்பட்டது? இந்தத் தொழிற்சாலை தேசிய மயமாக்கப்பட்டது பற்றி ஒரு கருத்து சொல்லப்பட்டது. தனிப்பட்ட சில காரணங்களுக்காக என்று சொல்கிறார்களே, விவரம் தருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தேசியமயமாக்கியதற்கு என்ன காரணம் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் இதிலே எக்ஸ்ட்ராக்ஷன் பிளான்ட் என்ற ஒன்று இருக்கிறது; ஸ்மல்டர் பிளான்ட் என்ற ஒன்று இருக்கிறது. எக்ஸ்ட்ராக்ஷன் பிளான்டுக்கு 16-1-70ல் அதனுடைய ரேட் முடிந்தது. 15-4-76 வரை அந்த ரேட்டை மாற்றியமைக்க வேண்டுமென்ற உத்தரவு போடாமலே இருந்து விட்டது. அதற்குள்ளே ஒரு ஆட்சியே வந்து போய்விட்டது. 1970-ல் காண்டிராக்ட் ஒப்பந்தம் முடிந்தவுடனே ரேட்டை மாற்றியிருக்கவேண்டும். 15-4-76ல் ஆளுநர் ஆட்சிக் காலத்தில் உத்தரவிடப்பட்டிருக்கிறது, 26-2-75ல் ஒரு யூனிட்டுக்கு ஒரு பைசா; ஒரு கே. வி. ஏ.க்கு 15 ரூபாய் என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 23-8-75ல் ஒரு யூனிட்டுக்கு 3½ பைசா என்றும் ஒரு கே. வி. ஏ. க்கு 15 ரூபாய் என்றும் உத்திரவிடப்பட்டுள்ளது.

1978 ஏப்ரல் 5]

திரு. மு. செல்வராஜ்: நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஏறத்தாழ 9.32 கோடி ரூபாய் அளவுக்குப் பாக்கியிருப்பதாகச் சொன்னார்கள். உயர்நீதி மன்றத்தில் ஸ்டே வாங்கியிருப்பதாகச் சொன்னார்கள். உயர்நீதி மன்றத்தில் அப்சல்யூட் ஸ்டே வாங்கும்போது அட்வகேட்-ஜெனரல் இருந்தும் அதை ஆட்சேபிக்கவில்லை என்ற கருத்து சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அல்லது அரசாங்கத் தரப்பில் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தக் கருத்து ஏற்கனவே இந்த மன்றத்தில் எழுப்பப்பட்டு மாண்புமிகு முதல்வரவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள்.

திரு. கா. வே. கந்தசாமி: மாமன்ற தலைவரவர்களே, இந்த அலுமினியத் தொழிற்சாலையில் என்ன கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எல்லாவிதத்திலும் சேர்த்து இப்பொழுது எஃபெக்டிவ் ரேட் என்ற அடிப்படையில் எக்ஸ்ட்ராக்ஷன் ப்ளாண்ட்'க்கு 10.75 காசு, 'ஸ்மெல்டர் பிளாண்ட்'க்கு 10.39 காசு. இதன் மூலம் மின் வாரியத்திற்கு ஏற்படுகின்ற இழப்பு இரண்டரைக் கோடி ரூபாய்.

திரு. ஒ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, அமைச்சவரவர்கள் பதில் சொல்லும்பொழுது சென்ற 1977 ஆகஸ்ட், செப்டம்பரிலேதான் மின் துண்டிப்புக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சில ரூபாய்களுக்கும், பைசாக்களுக்கும் உடனடியாகத் துண்டிப்பு செய்கிற மின்சார வாரியம் பல கோடி ரூபாய் பாக்கியிருந்தும் இத்தனை வருஷங்களாகத் துண்டிக்காமல் இருந்ததற்கு காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, என்ன காரணம் என்று நான் சொல்லுவதைவிட மாண்புமிகு உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்கள் உதவி செய்யலாம்.

"The rate for Extraction Plant originally fixed for a period of 5 years expired on 16-1-70. The question of fixing the rates for the periods subsequent to 16-1-70 was taken up with the Government and in the meantime the bills were prepared provisionally. The Government in G. O., dated 15-4-71 ultimately revised the rate for supply of Extraction Plant retrospectively from 17-1-70 and consequentially a sum of Rs. 44 lakhs was claimed from the Company.

16-1-70-இல் அவர்களுக்கு ஏற்கனவே கொடுத்த அந்த ரேட் முடிந்தது. ஆகவே, அடுத்த ரேட் 16-1-70-க்குள்ளாகவே, அப்பொழுதே ஃபிக்ஸ் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால்

[1978 ஏப்ரல் 5

15.4.76,இல் தான்உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.அதனால் 16.1.70 இலிருந்து அவர்கள் அந்த ரிவைஸ்ட் ரேட்டைக் கட்ட வேண்டுமென்பதிலே நிலுவைத் தொகை ஏற்பட்டிருக்கிறது.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, இந்த மேட்டூர் அலுமினியக் கம்பெனியிலிருந்து மின்சாரத்தை அரசுக்குத் தெரியாமல் மறைமுகமாகப் பல பகுதிகளுக்கு இணைப்பு கொடுத்து வருவதாகப் பொது மக்களிடத்திலிருந்து புகார் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, இந்த நிலையத்திலிருந்து அலுமினியக் கட்டிகளையும் இரவு நேரங்களில் லாரிகளில் ஏற்றிச் செல்கிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பொது மக்களிடமிருந்து புகார் வந்ததோ இல்லையோ, உறுப்பினரிடத்திலேயிருந்து புகார் வந்திருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது அதற்கு விதிக்கப்படும் கட்டணம் ஒரு யூனிட்டுக்கு மூன்றரை பைசா என்று அமைச்சரவர்கள் (குறுக்கீடு) 'ஆல் டோடல்', என்று அமைச்சவரவர்கள் தெரித்தார்கள். ஏற்கனவே இருந்தது ஒரு பைசாதான், அப்படி ஒரு பைசா என்ற அடிப்படையிலேயே இவ்வளவு சேர்ந்திருக்கிறது. சர்சார்ஜ் எல்லாம் சேர்த்துதான் 9-02 கோடி ரூபாய் வந்திருக்கிறது. அதை வசூல் செய்ய முயற்சிக்கும்பொழுது அவர்கள் ஹைகோர்ட்டிற்குச் சென்று ஸ்டே வாங்கியிருக்கிறார்கள்.

அண்மையிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்ற இந்த மசோதா சட்டமாக உத்தரவு வந்தபோதிலும்கூட அதன் மூலமாகவாவது அவர்களிடத்தில் இருக்கும் பாக்கியை வசூல் செய்ய வழிவகை உண்டா? அல்லது அதன்மூலமாகவும் முடியாமல் இருக்கும் சூழ்நிலைகள் இருக்குமா என்பதுதான் சந்தேகத்திற்கு இடமான ஒரு சூழ்நிலையாக இருக்கிறது. அதற்கு என்ன வழிவகைகள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. இந்த நிறுவனத்திற்கு இரண்டு வகையில் கட்டணம் வரும். ஒன்று, கே. வி. ஏ. கணக்கு, இன்னொன்று யூனிட் விதத்திலே. ஆகவே, மொத்தமாகக் கணக்குப் பார்க்கும்பொழுது 'எஃபெக்டிவ் ரேட்' என்று பார்க்கும்பொழுது இப்பொழுது எக்ஸ்ட்ராக்ஷன் பிளாண்ட்டு'க்கு 10.75 பைசா, ஸ்மெல்டர் பிளான்ட்'க்கு 10.39 பைசா. பேரவைத் தலைவரவர்களே, இரண்டரை கோடி ரூபாய் என்று சொன்னேன்- இன்னும் அதிகமாக 5 கோடி 6 கோடி ரூபாய் என்ற அளவிற்கு வரும். ஆகவே, அந்தப் புள்ளிவிவரத்தை இப்பொழுது ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த நிலுவைத் தொகையை இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையில் நாம்

1978 ஏப்ரல் 5]

எப்படியும் வசூலிக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு முதலமைச்சரவர்களின் மிகத் தெளிவான கருத்து. இன்னும் கூட, அக்கம்பெனி நிர்வாகத்தினர் முதலமைச்சரைச் சந்திக்க முயற்சித்தனர். நிலுவையில் பாதியாவது கட்டிய பிறகே அனுமதி அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு விட்டது. மின் வாரியம் அரசு உத்தரவின்பேரில் இக் கம்பெனிக்கு மின் துண்டிப்பு செய்ய ஆகஸ்ட் 1977-ல் நோட்டீஸ் அனுப்பியது. அதற்குப்பிறகு இந்தக் கம்பெனி ஹைகோர்ட்டுக்குப் போனது.

(முற்பகல் 9-10)

(திரு. மு. அம்பிகாபதி, திரு. செ. சிவசாமி, திரு. எஸ். ஆர். இராதா ஆகியோர் எழுந்து நின்றனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஒரு கேள்விக்கே 10 நிமிடம் ஆகியிருக்கிறது. எழுந்திருக்காதீர்கள், உட்காருங்கள். தயவுசெய்து துணைக் கேள்விகள் சுருக்கமாக இருக்கவேண்டும். திரு. கோவிந்தராசன் அவர்கள் தனது கேள்விக்காக, 2 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார்கள், நான் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். அதேபோல், அமைச்சர் பதிலும் சுருக்கமாக இருக்கட்டும்.

திரு. மு. அம்பிகாபதி : ரூ. 9 கோடி சம்பந்தப்பட்டது, கேள்வி சுருக்கமாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குக் கேள்வி நேரத்தில் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் வேறு விதியைக் கொண்டு வந்து, ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்து அவை அனுமதித்தாலோ, வேறு விதியின்கீழ் அவை அனுமதித்தாலோ, 1 மணி நேரம் பேசுங்கள். எனக்கிருக்கிற நிலைமையெல்லாம், ஒரு மணி நேரத்திற்குள்ளாக எல்லா கேள்விகளையும் முடிக்கவேண்டும்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கம்பெனியின் மின்சாரக் கட்டணத்திற்குண்டான கட்டண நிர்ணயத்தைச் செய்ய மத்திய சர்க்கார் அதற்கு உதவி செய்ததா? மத்திய சர்க்கார் ஆலோசனை வழங்கப்பட்டதா? அல்லது மாநில் சர்க்கார் அந்தக் கட்டணத்தை நிர்ணயித்துள்ளதா? அப்படிப்பட்ட தாக்கீதுகள் மத்திய சர்க்காரிடமிருந்து சென்ற காலகட்டத்தில் வந்திருப்பதாக அரசுக்கு ஏதாவது தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஸ்மெல்டர் பிளான்டைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்காருடைய 'கைட்லைன்ஸ்', வழிகாட்டுதல் கொள்கை உள்ளது. கட்டணத்தை அதிகமாக விதிக்கக்கூடாது என்றும் அதற்காக 'பல்க் ரேட்' போடவேண்டுமென்றும் மத்திய சர்க்காரிலே உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் எடுத்து கவனத்திலே வைத்த பிறகுதான் அந்தக் கட்டணம் விதிக்கப்பட்டது.

[1978 எப்ரல் 5

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, 1972-ல் 2 பைசா உயர்த்தியதை எதிர்த்ததற்காக, 17 பேர்களை விவசாயிகளைச் சுட்டுக்கொன்றது அன்றைய அரசு. அதே அரசு, இந்நிறுவனத்திடமிருந்து ரூ. 10 கோடியை வசூல் செய்யாததன் இரகசியம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதிலே ஒன்றும் இரகசியம் இல்லை, இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். மின்சாரம் பொதுவாக அலுமினியத் தொழிற்சாலையிலே மிக அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆகையினாலே எந்த அளவு அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் கணக்கிலே வைத்துத்தான் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. மின்சாரக் கட்டணத்தைக் கூட்டினால் தொழிற்சாலைக்கேகூட ஆபத்தாக இருந்துவிடலாம். அந்த வகையிலேதான் பிரச்னை இருக்கிறதே தவிர, அதற்கும் விவசாயிகள் இறந்ததற்கும் எந்தவித சம்பந்தமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, இந்த நிறுவனம் ரூ. 9/- கோடி பாக்கியென்றும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ரூ. 7கோடி பாக்கி என்றும் ஆளுநர் ஆட்சிக்காலத்தில் ரூ. 1½ கோடிக்கு மேல் பாக்கி என்றும் அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 1970-லிருந்து, 1976-ம் ஆண்டு வரையிலும் கட்டணத்தில் எந்தவிதமான மாற்றமும் செய்யாமல் அவர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி, எந்தக் கட்டணமும் மாற்றம் செய்யாததற்கு அடிப்படை காரணங்கள் என்ன? அந்த நேரங்களில் பல்வேறு நிலையில் மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஏன் அந்த நிறுவனத்திற்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தாமல் ஒரே நிலையில் கட்டணம் வைக்கப்பட்டதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1970-லிருந்து 1976 வரை உயர்த்தாமலிருந்தது, எக்ஸ்டிராக்ஷன் பிளாண்ட்டினுடைய மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில். ஆனால், 1975-ல் 1 பைசா என்றும் ரூ. 15 என்றும் both for extraction and smelter plants போடப்பட்டது. அதற்குப் பிறகு, 6 மாதம் கழித்து அதையே 3½ பைசா ஒரு யூனிட்டுக்கும் ரூ. 15 ஒரு கே. வி. ஏ. வுக்கும் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி சம்பந்தப்பட்டது வழக்குமன்றத்திலே இருக்கிறது. அதிகம் கேட்டு தெரிந்துகொள்வதை விட, சுருக்கமாக ஓரிருவர் கேட்டால் போதும். (திரு. மு. அம்பிகாபதி எழுந்திருந்தார்). நீங்கள் அமர்ந்தால்தான் உங்களை அழைப்பேன்.

1978 ஏப்ரல் 5]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சரவர்களுடைய அறிக்கையைப் பார்த்தவுடன் வயிற்றெரிச்சலாக இருக்கிறது. அமைச்சர் பண்ணியது வயிற்றெரிச்சல் என்று நான் சொல்லவில்லை. 1971-லிருந்த 1976 வரை ஒரு பைசா மின் கட்டணத்திற்கு அவர்களுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டும் ரூ. 7 கோடி பாக்கியிருந்தது என்று சொன்னால், எந்தக் காரணத்திற்காக வசூலிக்காமல் விடப்பட்டது. ஏழை விவசாயிகள் ரூ. 10 கட்டவில்லையென்றால், ஃபியூசைப் பிடுங்கக்கூடிய நிலை இருக்கும்போது ரூ. 7 கோடி விட்டு வைத்ததன் காரணம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன். இந்த அறிக்கையைப் பார்க்கும்போது ரொம்பவும் வயிற்றெரிச்சலாக இருக்கிறது. எனவே, அமைச்சரவர்கள் அந்த பாக்கியை வசூலிக்கத் துரிதமாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த வயிற்றெரிச்சல் காரணமாகத்தான் துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேண்டுமானால் ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்து திரு. அம்பிகாபதி அவர்கள் இந்த நேரத்தில் அதைத் தணித்துக் கொள்ளலாம்.

ஆனால் இந்தக் கட்டணத்திலே நாம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். ஸ்மெல்டர் பிளான்ட் என்று இருக்கிறது. எக்ஸ்டிராக்ஷன் பிளான்ட் என்று இருக்கிறது. எக்ஸ்டிராக்ஷன் பிளான்ட் கட்டணவிகிதத்தை மாற்றவில்லை. ஸ்மெல்டர் பிளான்டைப் பொறுத்தவரையில் 75-லே ஒரு பைசாவும், அதற்கு 6 மாதம் கழித்து 3½ பைசாவும் கூட்டியிருக்கிறார்கள். மேக்சிமம் டிமாண்டுக்குத் தனியாக ரேட் இருக்கிறது. அதனால்தான் சொன்னேன், எபக்டிவ் ரேட் என்று பார்க்கிறபோது, இப்போது 10 பைசா, 10½ பைசா கட்டணம் இருக்கிறது.

திரு. எம். வின்சென்ட் : தலைவர் அவர்களே, 73, 74, 75, 76-ஆம் ஆண்டுகளில் இந்த நிலுவையை வசூலிக்க அரசு எடுத்துக் கொண்ட முயற்சி என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். அவர்கள் இந்தக் கட்டணம் விதிக்கக்கூடாது என்பதற்கு மனு செய்திருந்தார்கள். நம்முடைய அரசாங்கம் ஆகஸ்ட் மாதத்தில் அந்த மனுவை நிராகரித்து விட்டது. உடனடியாக நிலுவையைக் கட்டவேண்டும் இல்லை என்றால் மின் துண்டிப்பு செய்யப்படும் என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அந்த நோட்டீஸ் கொடுத்தவுடன் அவர்கள் முதலமைச்சரைப் பார்க்க வந்தார்கள். பாதி பணத்தையாவது கட்டினால்தான் பார்ப்பேன் என்று முதலமைச்சர் சொல்லி விட்டார். அங்கே பார்க்க முடியாது என்று நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறார்கள்.

[1978 ஏப்ரல் 5

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின்போது அந்த அலுமினியம் தொழிற் சாலைக்கு 7 கோடி ரூபாய்க்கு அபராதம் வழங்கியதாகவும், அதைக் கட்ட மறுத்ததால்தான் தேசியமயம் ஆக்கப்பட்டது. அப்போது அதிலே பாகம் வகித்த இத்தாலி நாட்டு நிறுவனம் ஒத்துக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். இப்போது அந்த இத்தாலி நிறுவனம் ஒத்துக் கொண்டார்கள் என்று சொல்லு கிறார்கள். இப்போது நம்முடைய அரசுக்கும் மத்திய அரசுக்கும் சுமுகமான உறவு இருப்பதைப் பயன்படுத்தி அந்த அலுமினிய தொழிற்சாலையை தேசியமயமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக தகவல் தற்போது இல்லை.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, இப்போதே அதிக நேரம் ஆகிவிட்டது, என்றாலும் 9½ கோடி ரூபாயை சாப்பிட்டு விட்ட முதலாளி, ஹைகோர்ட்டிலே சட்டத்தைப் பாதுகாப்பாக வைத்து, அவர்களுக்கு உயர்நீதி மன்றத்தின் மூலமாக பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமை இன்று அந்தச் சட்டத்தில் இருக்குமானால் அந்த சட்டத்தை மக்களுக்கு உகந்த முறையில் மக்களுக்காக இயங்குகின்ற சர்க்கார், மக்களுக்கு உதவுகிற வகையில் அந்த சட்டத்தை மாற்றி அமைப்பதற்கு, நமக்கு விதிமுறைகள் இருக்கிறபோது ஏன் அதைப் பயன்படுத்தக் கூடாது என்று அறிய விரும்பு கிறேன். அது ஒரு புறம் இருக்க, 16-1-70 லிருந்து 74 வரையில் 40 லட்சம் ரூபாய் கட்டவேண்டும் என்று நியதி இருக்கிறது குறைந்த பட்ச கட்டணம்.

அந்த 40 லட்சம் ரூபாயை வசூலிப்பதற்கு அரசு தரப்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லைபோல் காணப்படு கிறது. அப்படியானால் அரசு தரப்பில் என்ன செய்தார்கள் ? அப்படி வசூலிக்காமல் இருந்தவர்கள் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா மற்ற வர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும் வகையில், துரிதமாக நட வடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நீதி மன்றத்திற்கு இருக்கும் அதிகாரத்தில் நிர்வாகம் தலையிட முடியாது. இந்த ரூ. 44 லட்சத்தை வசூல் பண்ணுவதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று கேட்டார்கள். அது எல்லாம் இந்தப் பட்டியலிலே வந்திருக்கிறது. நாம் இவ்வளவு பாக்கி என்று சொல்லுகிறோம். ஆனால் அவர்களைப் பொறுத்த வரையில் அவ்வளவு கட்டவேண்டியதில்லை என்று கம்பெனியில் வற்புறுத்துகிறார்கள்.

1978 ஏப்ரல் 5]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ; தலைவர் அவர்களே, அந்த மின்சாரக் கட்டணத்தை தி. மு. க. அரசு உயர்த்தியிருக்கிறது. ஆனால் நேற்று பத்திரிகையில் நான் வெங்கடசாமி நாயுடுவை ஆதரித்தேன் என்று வந்திருக்கிறது. நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வெங்கடசாமி நாயுடுவை திட்டவட்டமாக மீண்டும் எந்த ரூபத்திலேயும் நிர்வாகத்தில் கொண்டு வர மாட்டோம் என்ற உறுதியை அமைச்சர் தருவாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வெங்கடசாமி நாயுடு மீது மாண்புமிகு சாதிக்பாட்சா அவர் களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது. அவரை நிர்வாக இயக்குநர் பொறுப்பிலே இருந்து மாற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அர சாங்கத்தோடு சேர்ந்து அவர்களும் ஷேர் போட்டிருக்கிற காரணத்தாலே நாமும் சேர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டி யிருக்கிறது. அவர்களுக்கு என்ன அச்சம் என்றால் மீண்டும் எப்படியாவது அவர் வந்துவிடுவாரோ என்று. தனிப்பட்டவர் களுடைய பிரச்சினை பற்றி நான் ஒன்றும் பதில் சொல்வதற் கில்லை.

சேர்வலாறு திட்டம்

* 802 வினா. திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள சேர்வலாறு திட்ட வேலையில் தேக்கம் ஏற்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9.20)

திரு. ரா. கிருஷ்ணன் ; தலைவரவர்களே, இந்த சேர்வலாறு திட்டம் ஏற்கனவே பாபநாசம்—சேர்வலாறு இணைக்கும் திட்ட மாகச் செயல்பட்டு வருகிறது. ஏற்கனவே நிதி ஒதுக்கம் இல்லாமல் இருப்பதால் அங்கே வேலை முடக்கப்பட்டு, பணி செய்யும் ஊழியர்கள் பல்வேறு இடங்களுக்கு மாற்றப்படும்

சூழ்நிலை இருக்கிறது. ஏற்கனவே இந்தக் கேள்வியை இங்கே எழுப்பியபோது அதிக நிதி ஒதுக்குவதாகவும் இங்கே பேசப் பட்டு இருப்பதாக எனக்கு ஞாபகம். ஆகவே, அத்திட்டத்தை விரைவு படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த ஆண்டு அதற்காக நிதி ஒதுக்கம் அதிகம் செய்யப்பட்டு இருக்கிறது. ரூ. 220 லட்சம் 1978-79-ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கம் செய்து இருக்கிறோம். ஆகவே, வேலைகள் விரைவில் நடைபெறும் என்று நினைக்கிறேன்.

கோமுகி அணை வாய்க்கால்கள்

* 803 வினா திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோமுகி அணையின் கால்வாய்கள் பெருமழையினால் சீரழிந்து உள்ளதை உடனே செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கோமுகி அணையின் கால்வாய்களில் கடந்த பெரு மழையினால் ஏற்பட்ட உடைப்புகள் யாவும் பொதுப் பணித்துறையினரால் சீர் செய்யப்பட்டு, கால்வாய்கள் திருத்தியமைக்கப்படுகின்றன.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவரவர்களே, சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக அந்தக் கால்வாயில் பெரும்சேதம் ஏற்பட்டுள்ளது. அந்தக் கால்வாய் இன்னும் சில இடங்களில் சீரமைக்கப்படாமல் இருக்கிறது. மேலும், ஒவ்வொரு ஊருக்கும் உள்ள ஏரிகளுக்கு இதனால் தண்ணீர் செல்வதால், அந்த ஏரிகளுக்கு கண்மாய்கள், ஷட்டர்கள் அமைக்க அரசு முன் வருமா? உளுந்தூர்பேட்டை வரை கட்டுவதற்கு திட்டமிடப் பட்டு தான் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. ஆகவே, உளுந்தூர்பேட்டை வரை அந்த கால்வாய் கட்டித் தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நீண்ட பெரிய கேள்வி இது. அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றங்கள்

* 752 வினா.— திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) எல்லா இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதி மன்றங்களையும் முதல் வகுப்பு குற்றவியல் நீதி மன்றங்களாக உயர்த்துவது குறித்த செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

THE HON. THIRU. K NARAYANASWAMY MUDALIAR

(a) No.

(b) Does not arise.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஜுடிஷியல் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் என்பவர்களும் பி. எல். பட்டம் பெற்றவர்கள்தான். பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்டிரேட்டுகளும் பி. எல். பட்டம் பெற்றவர்கள் தான். பஸ்ட் கிளாஸ் மாஜிஸ் டிரேட்டுகளாக வரவேண்டும் என்றால் 3 ஆண்டுகாலம் வழக்கறிஞராகப் பணி புரிந்து இருக்கவேண்டும். செகன்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகளாக வரவேண்டுமானால் 2 ஆண்டு காலம் வழிக்கறிஞராகப் பணி புரிந்து இருந்தால் போதும், என்ற நிலைமை இருக்கிறதே ஒழிய வேறு எந்த விதமான வேறு பாடும் கிடையாது. இப்போது எனக்கு ஒரு தகவல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து சொல்லிக் கொள்கிறேன், இனிமேல் சுருக்கமாகக் கேள்வி கேட்டால் தான் நான் மறுபடியும் அழைக்க முடியும். விவாதம் போன்று நிமிடக் கணக்கில் கேள்வி கேட்டால் எப்படி?

திரு. ரா. கிருஷ்ணன் : ஒரு வரியில் முடித்து விடுகிறேன். ஆந்திர மாநிலத்தில் செகன்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் பதவி அபாலிஷ் செய்யப்பட்டு, எல்லோருமே பர்ஸ் கிளாஸ் மாஜிஸ்ட் டிரேட் என்று ஆக்கியிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இங்கேயும் பரிசீலனை செய்து, எல்லோரும் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் என்று ஆக்க அரசு முன் வருமா? 20 ஆண்டு காலம் பணியாற்றியும் பிரமோஷன் இல்லாமல் இன்னும் செகன்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாகவே பலர் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இதைக் கருத்தில் கொண்டாவது அரசு அதைப் பரிசீலிக்குமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR ; The Government will consider the suggestion.

திரு. கா. அப்புனு கவுண்டர்; பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி இருந்தபோது கடைசியாகப் போட்ட உத்தரவு இரண்டாவது நிலை மாஜிஸ்டிரேட்டுகளை அபாலிஷ் செய்து, எல்லோரும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் என்று உத்தரவு போட்டது. அதை இந்த அரசு அமுல் படுத்த முன் வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : The entire matter has been under correspondence with the High court. The High Court has sent up some proposals. They are under consideration of the Government.

திரு. ஆ, வெள்ளைச்சாமி ; பேரவைத் தலைவரவர்களே, இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்ற நீதிபதிகளும் பி. எல். படித்தவர்கள்தான். உயர்நீதிமன்ற நீதிபதிகளும் பி. எல் படித்தவர்கள்தான். ஆகவே, இரண்டாம் வகுப்பு நீதிபதிகளை உயர்நீதமன்ற நீதிபதிகளாக உயர்த்தும் ஆலோசனை அரசுக்கு உண்டா?

THE HON. THIRU K.NARAYANASWAMY MUDALIAR I I may tell you that the supreme court judges are B. Ls. The high court judges are B. Ls. some of them are only first class magistrates. Some of them are second class magistrates. some of them are High Court Judges and some of them are Chief Justices.

திரு. எம். ஏ. ஜெயவேலு: தலைவரவர்களே, இந்த பஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகளுக்கும் உரிமை இயல்-சிவில் பவர்ஸ் கொடுத்து அவர்களை ஜுடிசியில் பஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்-கம்-முன்சிப் என்று வைக்க அரசு முன் வருமா?

THE HON. THIRU K. NARAYANSWAMY MUDALIAR: At present the scale of pay of the District Munsifs, the Judicial First Class Magistrates is 575-25-600-40-1000.The constitution of such a cadre is under consideration of the Government.

THIRU J. JAMES: The Hon. Minister for Law replied that there are certain proposals sent by the High Court, which are under consideration of this Government. May I know from the Hon. Minister what are the suggestions sent from the High Court and what are the proposals that are under the consideration of the Government.

THE HON.THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The proposal is essentially one of integrating Second Class Magistrates, First Class Magistrates and District Munsifs into one cadre. Such a proposal actually need the amendment of the Criminal Procedure Code because the Criminal Procedure Code contemplates the retention of the Second Class Magistrates and such an amendment has got to be undertaken before the proposal is implemented. The entire matter is under the consideration of the Government. Also the proposal sent by the High Court in respect of the amendment to the Criminal Procedure Code in the light of the existence of the Office of the Second Class Magistrates under the Criminal Procedure Code. is under consideration of this Government.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இப்போது சப்-மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப்படுகின்றவர்கள் டைரக்ட் ரெக்ரூட்மென்ட் இல்லாமல் டிப்பார்ட்மென்டிலே இருந்து தகுதி பெற்றவர்களை நியமிக்கிறார்கள். அப்படி நியமிக்கப் படும் சிலருடைய சர்வீஸ் ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறது. இன்னும் 36 பேர்களுடைய சர்வீஸ் ரெகுலரைஸ் செய்யப் படாமல் அவர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். விரைவிலே அவர்களுடைய சர்வீஸ் ரெகுலரைஸ் செய்யப்படுமா?

THE HON.THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The Sub-Magistrates whose services have not yet been regularised will get plenty of opportunities to offer themselves as candidates for selection to other posts.

உட்கோட்ட நீதித்துறை நடுவர் மன்றங்கள்

* 753 வினா—திரு. சின்னசேலம் மா. சுபபிரமணியம் : மாண்புமிகு சட்டதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள உட்கோட்ட நீதித்துறை நடுவர் மன்றங்களை (S.D.J.M) நீக்குவது சம்பந்தமாக அரசிடம் ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIR :

(a) No.

(b) Does not arise.

[1978 ஏப்ரல் 5

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் ; தலைவரவர்களே, 31-1-1976-லிருந்து இரண்டாம்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளை முதல் வகுப்புமாஜிஸ்ட்ரேட்டுகளாக அப்கிரேடு செய்ததாகவோ அல்லது அதற்கான செயற்குறிப்பு இருந்ததாகவோ அறிகிறேன். ஆகவே இதுவரையில் இல்லை என்றால் இனிமேலாவது இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளை அப்கிரேடு செய்து, அவரவர்களுடைய அனுபவம், தகுதி, திறமைகளுக்கு ஏற்ப அதிகாரங்களை வழங்கி, எந்தெந்த அதிகாரங்கள் யார் யாருக்கு என்று வரையறை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

The Hon. Thiru K. NARAYANSWAMY MUDALIAR : This Government wants to assure that even if the proposal of integration is given effect to the court of SDM will not be abolished but will be converted into first class magistrates trying first class cases.

கல்லூரிகளில் தமிழ் பயிற்றுனர்கள்

* 804 வினா திரு. என். கிட்டப்பா; மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974-ம் ஆண்டு, தமிழக அரசு தேர்வாணைக் குழுவினால் கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்றுநர் பணிக்குத்தேர்ந்தெடுக்கப்பட்ட 120 நபர்களும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்களா?

(ஆ) இல்லையெனில் அதற்குரிய காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை. இதுவரை 109 பேர்கள் தான் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

(ஆ) இன்னும் 10 பேர்கள் பணியில் அமர்த்தப்பட வேண்டும். இவர்கள் பணியிடங்கள் காலியானபின் அமர்த்தப்படுவர். ஒருவருக்குத் தேர்வு ஆணைக்குழுவில் இருந்து மேல் விவரம் கிடைத்த பின்புதான் நியமன ஆணை வழங்கப்பட வேண்டும்.

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, இங்கே 10 பேர்கள் இன்னும் அத்தகைய பணியில் அமர்த்தப்படவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அண்மையிலே கூட 10 பிளஸ் 2 பிளஸ் 3 எகின்ற திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட இருக்கிறது. அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டால்

1978 ஏப்ரல் 5]

பணியில் அமர்த்தப்படவேண்டிய அவர்கள் பாதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புவதோடு அவர்களை பணியில் அமர்த்த விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவரவர்களே, விரைவில் அந்த விவரங்கள் கிடைத்தவுடன் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்படும்போது தற்போது பணியில் இருப்பவர்கள் கூட பாதிக்கப்படுவார்கள் என்று சொல்லப்படுகிறது. அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படாது என்ற வாக்குறுதியை இந்த அரசு அவர்களுக்கு தந்திருக்கிறது; பலதடவை இந்த மன்றத்திலும் வாக்குறுதி தரப்பட்டிருக்கிறது.

Part-time B.E. Degree Courses

*805. Q.— Thiru R.E. CHANDRAN JEYAPAL: Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal to raise the present strength of candidates in each Engineering branch from 30 candidates to 60 candidates from working class Engineering Diploma holders for part-time bachelor of Engineering Course in Tamil Nadu Engineering Colleges?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை;

(முற்பகல் 9.30)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பொறியியல் கல்லூரிகளிலே பகுதி நேர படிப்பிற்குச் சேருவதற்காக மாணவர்களுக்கு என்று இடம் ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்படுகின்ற நேரத்தில் சென்னைக் கல்லூரியிலே இடம் இல்லாமலும், மற்ற வெளி இடங்களிலே இட வசதி காலியாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறதே. ஆகையால் சென்னையில் அதிகமான அளவுக்கு இடவசதியை இந்த பகுதிநேர படிப்பிற்காக ஒதுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒதுக்கப்பட்ட இடங்கள் எல்லாம் பூர்த்தியாகி இப்போது மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். வெளியூரிலும்,

[1978 ஏப்ரல் 5

சென்னையிலும் உள்ள கல்லூரிகளில் இப்படி ஒதுக்கப்பட்ட இடங்கள் பூர்த்தியாகி மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது கோவை பி.எஸ்.ஜி கல்லூரியிலும் பகுதிநேர படிப்பு ஆரம்பிக்கின்ற யோசனை அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

ஆதம்பாக்கம் பகுதியிலுள்ள சாலைகள்

806. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்த ஆதம்பாக்கம் பகுதியில் சாலைகள் மிகவும் மோசமான நிலையிலிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

(ஆ) வேளச்சேரி பஞ்சாயத்து யூனியன் இதுபற்றி எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆதம்பாக்கம் கிராமம் ஆலந்தூர் நகராட்சியின் பகுதி, அந்நகராட்சி சாலைகளுக்கு தார்தளம் அமைக்கும் வேலையை ஐந்தாண்டு திட்டப் பணியின் கீழ் மேற்கொண்டுள்ளது.

(ஆ) வேளச்சேரி நகரத்தில் பழுதடைந்துள்ள பஞ்சாயத்து சாலைகளைச் செப்பனிட மாவட்ட ஆட்சியர் அரசு வருவாய்த் துறையிடம் தொடர்பு கொண்டுள்ளார். அவசர நடவடிக்கையாக வேளச்சேரி நகர்ப் பஞ்சாயத்து மண் வேலை மற்றும் சிறு பள்ளங்களை நிரப்புதல் போன்ற வேலைகளைச் செய்து வருகிறது.

உதகை ஊராட்சி ஒன்றியம்

* 807. வினா—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை ஊராட்சி ஒன்றியத்தை, குந்தா ஒன்றியம், உதகை ஒன்றியம் எனப் பிரிக்கின்ற உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1978 ஏப்ரல் 5]

திரு. க. அரங்கசாமி : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் ஒரு மலைப் பகுதியாக இருப்பதால் அதற்கு முன்னுரிமை கொடுத்து, வேண்டிய காரியங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் உதகை ஒன்றியம் சுமார் 20 மைல் சுற்றளவு கொண்டதாக இருப்பதாலும் அந்தச் சிறு சிறு கிராமங்கள் முன்னேற்றம் அடையக்கூடிய வகையில் அதற்கு முன்னுரிமை தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, உதகை ஊராட்சி ஒன்றியத்தை குந்தா ஒன்றியம் என்றும் உதகை ஒன்றியம் என்றும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற குறிப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பி இருக்கிறார். அது அரசுக்கு வந்ததற்குப் பிறகு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் கணவன் மனைவியர்

* 808 வினா—திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் கணவன் மனைவிகளை வெவ்வேறு பள்ளிகளில் நியமித்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்நிலையை மாற்ற அரசின் திட்டம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; (அ) இத்தகைய தகவல்கள் அவ்வப்போது மாவட்ட ஆட்சியாளர், ஊரக வளர்ச்சி இயக்குநர், மற்றும் அரசின் கவனத்திற்கு வருகின்றன.

(ஆ) இத்தகைய நிலைமைகளை முற்றிலும் தவிர்ப்பது சில சமயங்களில் சாத்தியமாயில்லை. ஆயினும் சீக்கிரத்தில் கணவன் மனைவிகளை ஒரே பள்ளிக்கு அல்லது அருகில் உள்ள வேறு பள்ளிக்கு மாற்றல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

[1978 ஏப்ரல் 5

திரு. துரை கோவிந்தராசன்: தலைவரவர்களே, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் அமைப்புக்களை பிரிப்பது சம்பந்தமாக அசோக் மேத்தாவிடமிருந்து ஏதாவது ஆலோசனை இந்த அரசுக்கு வந்திருக்கிறதா? அது பற்றி அரசு அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; தலைவரவர்களே, இந்தக் கேள்வி ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் கணவன் மனைவிகளைப் பற்றியது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, அசோக் மேத்தா அவர்கள் கணவன் மனைவியைப் பிரிப்பது பற்றி எதுவும் சொன்னதாகத் தெரியவில்லை. ஆனால் கணவன் மனைவிகளை வேண்டுமென்றே சில அதிகாரிகள் பிரிக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதகமான செயல்களிலே ஈடுபடுகிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கணவன் மனைவியைப் பிரித்து வைக்கவேண்டும் என்று திட்டமிட்டு யாரும் காரியம் செய்வதில்லை. அவர்கள் பணியாற்றுகின்ற பள்ளிகளிலேயே இடம் இருந்தால் அவர்களை மாற்றி அமர்த்துவதற்கு ஆவன செய்யப்படுகிறது. ஆனால் சில நேரங்களில் ஒரு கணவன் மனைவியைச் சேர்த்து வைக்க வேண்டிய நேரத்தில் இன்னொரு கணவன் மனைவியைப் பிரித்து வைக்க வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, இவை எல்லாவற்றையும் பரிசீலனை செய்த பிறகுதான் காரியங்கள் ஆற்றப்படுகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் ; தலைவரவர்களே, இந்தத் துறையைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தில் இரண்டு விதமான ஜி. ஓ.க்கள் இருக்கின்றன. கணவன் மனைவி இருவரும் வேலை செய்வதாக இருந்தால் அவர்களைப் பிரிக்கக்கூடாது என்பது. இன்னொன்று அவர்கள் அப்படிப் பணியாற்றுவது, நேட்டிவ் டிஸ்ட்ரிக்டாக இருக்கக்கூடாது என்பது. ஆக இந்த இரண்டு விதிகள் இருக்கின்றன......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து சுருக்கமாகத் துணைக் கேள்வி கேளுங்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கணவன் மனைவியை கூடுமானவரையில் ஒரே இடத்தில்தான் வைக்க வேண்டும் என்று விதி இருக்கின்றது.

1978 ஏப்ரல் 5]

திரு. என். பழனிவேல் ; கணவன் மனைவியை ஒரேயிடத்தில் தான் வைக்கவேண்டுமென்று விதிகள் இருந்தபோதிலும் அங்கிருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் வேண்டுமென்றே பழிவாங்கும் முறையில் பத்து மைல்கள், பதினைந்து மைல்களுக்கு அப்பால் உள்ள இடங்களில், டவுன் பஸ் கூட போகாத ஊர்களுக்கு, குறிப்பாக பெண்களை மாற்றிவிடுகிறார்கள். ஆகவே அவர்கள் அங்குள்ள பிரமுகர்கள், எம். எல். ஏ. இவர்கள் வீடுகளுக்கு நடையாய் நடந்து மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, இந்த அரசு எக்காரணத்தைக்கொண்டும் கணவன் மனைவிகளை வெவ்வேறு இடங்களுக்கு மாற்றக்கூடாது என்று உறுதியாக ஒன்றிய ஆணையாளர்களுக்கோ அல்லது மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கோ உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: எங்கே அவர்கள் இவ்வாறு பழிவாங்கப்படுகிறார்கள், எங்கே இவ்வாறு நடையாய் நடக்கிறார்கள் என்ற விவரங்களைச் சொன்னால் அதுகுறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : கணவன் மனைவியை பிரித்து வைக்கக்கூடாத நிலையில், கணவன் மனைவி இருவரும் ஒரேயிடத்தில் பணியாற்றக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்ற ஜி. ஓ. எப்போது பிறப்பிக்கப்பட்டது? அதை அமல் நடத்துவதில் சில சிக்கல்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? குறைந்தது, ஒரேயிடத்தில் பணியாற்றக்கூடிய வாய்ப்பை அளிக்கமுடியாவிட்டாலும் நாலைந்து மைல் தூரத்திற்கு இடையிலாவது அவர்கள் பணியாற்றக் கூடிய வாய்ப்பை உருவாக்கித் தர இனியாவது முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அந்த ஆணை 26-7-77-ல் பிறப்பிக்கப்பட்டது. கூடுமான வரையில் அவர்கள் பக்கத்தில் பணி புரியக்கூடிய அளவிற்கு அரசு ஏற்பாடு செய்து வருகிறது,

நாகர்கோயில் குடிநீர் வழங்கு திட்டம்

*வினா 809—திரு. எம். வின்சென்ட்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாகர்கோயில் நகருக்கு போதிய அளவு குடிதண்ணீர் கொடுக்க முக்கூடல் திட்டம் துரிதப்படுத்தப்படுமா?

(ஆ) அத்திட்டம் எப்போது முடிவடையும்?

[1978 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம்:

(அ) நாகர்கோயில் நகருக்குப் போதிய அளவு குடிநீர் அளிக்க ரூ. 87.81 இலட்சம் திருத்திய மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாடு திட்டம் செயல்படுத்தப்பட்டு விரைவாக நடைபெற்று வருகின்றது.

(ஆ) 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் இம்மேம்பாடு திட்டம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். வின்சென்ட்: நாகர்கோவில் நகரத்திற்கு தினசரி குடிநீர் தேவை எவ்வளவு? ரூ. 87.81 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படயிருக்கிற குடிநீர் மேம்பாடு திட்டம் எப்போது முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நாகர்கோவில் நகரின் தினசரி குடிநீர் தேவை நான்கு மில்லியன் காலனுகும். இதில் 1.50 மில்லியன் காலன் தற்சமயம் வழங்கப்படுகிறது. ஆகவே, இன்னும் தேவையுள்ள 2.50 மில்லியன் காலன் இந்தத் திட்டம் முடிவுற்றபின் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் இந்த ஆண்டு 1978 டிசம்பர் திங்களுக்குள் முடிக்க வரையறுக்கப்பட்டுள்ளது.

நாகர்கோயிலில் பாதாளச்சாக்கடை அமைப்புத் திட்டம்.

*810 வினு—திரு.எம். வின்சென்ட்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் நாகர்கோயில் நகரில் (Drainage) பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அத்திட்டம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் இன்னும் இரண்டு மாதங்களில் முடிவுறும். பின்னர் மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அதற்கு அரசின் ஒப்புதல் பெற்று திட்டவேலைகள் துவங்கப்படும்.

திரு. எம். வின்சென்ட்: நாகர்கோவில் நகர பாதாளச் சாக்கடை வடிகால் திட்ட ஆய்வுப்பணியின் மதிப்பு எவ்வளவு? ஆய்வுப்பணி முடிந்து இத்திட்டம் நிறைவேற மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள ரூ, 12,300 ஆகும். ஆய்வுப்பணிகள் இன்னும் இரண்டு மாதங்களில் முடிவடையும். தமிழ்நாடு குடிநீர் வடிகால்

1978 ஏப்ரல் 5]

வாரியம் திட்டத்திற்கு வேண்டிய உத்தேச மதிப்பீட்டைத் தயாரித்து அரசு ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கும். அரசு ஒப்புதலுக்குப்பின் திட்டப் பணிகள் துவங்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: நாகர்கோவில் பாதாளச் சாக்கடைத் திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாகர்கோவிலில் அமைக்கப்படயிருக்கிற பாதாளச்சாக்கடைத் திட்டத்தைப் போலவே தமிழ் நாட்டில் எங்கெங்கு இந்த அரசு பாதாளச் சாக்கடைத் திட்டங்களை அமைக்க இருக்கிறது? இதேபோல் மாயூரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கவேண்டுமென்று கேட்டபோது கேள்வித்தாளில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது, நாகர்கோவிலின் பாதாளச் சாக்கடை அமைப்புத் திட்டம் பற்றிய கேள்வி. நீங்கள் மாயூரம் பற்றிக் கேட்கிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. என். கிட்டப்பா: அப்போது, நான் எப்படிக் கேட்பது.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக்குழுவில் இது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கேள்விகளைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட தொகுதியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு மட்டுமே துணைக்கேள்விகளை கேட்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் தான் உங்களை அனுமதிக்கவில்லை.

திரு. என். கிட்டப்பா: என் கேள்வி அனுமதிக்கப்படவில்லையே, நான் எப்படி கேள்விகளை கேட்பது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை என்னுடைய அறையில் வந்து கேளுங்கள், அதற்கெல்லாம் இப்போது அனுமதிக்க முடியாது. மூலக்கேள்விக்கு சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு மட்டும் தான் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

* * * *

திரு. துரை முருகன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் என்னுடைய அறையில் வந்து கேளுங்கள்.

* * * *

திரு. துரை முருகன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். திரு. துரைமுருகன் அவர்கள் பேசியதையெல்லாம் சபைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று உத்தரவிடுகின்றேன்:

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அவை பெற்றது.

[1978 ஏப்ரல் 5

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர் ஒதுக்கீடு

*811 வினு— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை தந்து ''ஸ்கூட்டர்'' வழங்கும் முறை தற்போது அமுலில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர் வழங்கும் முறை, 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து இரண்டு காலாண்டுகள் அமுலில் இருந்தது. மைய அரசு 1960 ஆம் ஆண்டு ஸ்கூட்டர்கள் விநியோகம் மற்றும் விற்பனைக் கட்டுப்பாடு ஆணையை 1.1.78-லிருந்து ரத்து செய்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, ஸ்கூட்டர் வழங்குவதில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த முறை இப்போது ரத்து செய்யப்பட்டு விட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினர்கள். இவ்வாறு ரத்து செய்யப்படுவதற்கு முன்பு எத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர்கள் வழங்கப் ...ருக்கின்றன. அவ்வாறு ஸ்கூட்டர்கள் பெற்றவர்கள் யார், ய... ...பதை அறிவிக்க இயலுமா?

மாண்ப... ...ர. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே,
30-9-19... அவ... ...ன் முடிவடைநத காலாண்டில் பின்வரும்
3 சட்டமன்... ஸ்கூ... ...ர்கள், ஒரு பத்திரிகை நிருபர், இரண்டு
அரசுப் பண... தி... ...ர்களுக்கு ஸ்கூட்டர்கள் ஒதுக்கப்பட்டன.
சங்ககிரி ... ...னர் திரு. தனபால், வால்பாறை
திரு. தங்க... வழங்... கொடு... ...ட்டை திரு. பாலுசாமி, அரசு அலு
வலர் திரு. ... என்ப... ...ன், திரு. வாசுதேவன், பத்திரிகை
நிருபர் திரு. ... ...சன், இவர்களுக்கு வழங்கப்பட்டிருக்
கிறது. 31-1... ...ளுடன் முடிவடையும் காலாண்டில்
சட்டமன்ற உறு... திரு. ஐசரிவேலன், அவர்களுக்கும்,
கொக்கிரகுளம் ... ...ஈன் அவர்களுக்கும், வந்தவாசி திரு.
அர- ...முனுசாமி அவ... பாபநாசம் திரு. ஆர். வி. சௌந்தர
...ராஜன் அவர்க... பகோணம் திரு. எஸ். ஆர். இராதா
திரு. ...ர்களுக்கும், ...ம திரு. துரைசாமி அவர்களுக்கும்
கடை ...ட்டர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.
வுப்பணி

நடவடிக்...ரு. பொ. முனுசாமி: தலைவர் அவர்களே, இந்த ஸ்கூட்டர்
மாண்பு... ...கப்பட்டால், இதற்குரிய பணத்தை லோன் முறையில்
மேற்கொ... ...க்க வேண்டுமா, மாதந்தோறும் எப்படி கோடுக்கவேண்டும்
இரண்டு ம... ...தை அறியவிரும்புகிறேன்.

(விடை இல்லை)

1978 ஏப்ரல் 5]

திரு. துரை முருகன்: சட்டமன்ற உறுப்பினர்கள் யார் யாருக்கு கொடுத்தார்கள் என்பதற்கான பெயர்களை அமைச்சர் அவர்கள் படித்தார்கள். நான் அமைச்சர் அவர்களிடம் தெரிந்து கொள்ள விரும்புவது, ஸ்கூட்டர் வேண்டுமென்று கேட்டுக் கொண்ட அங்கத்தினர்கள் யார் யார், எதன் அடிப்படையில் இதற்கான அனுமதி வழங்கப்படுகிறது? என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஸ்கூட்டர் வேண்டும் என்று கேட்டுக்கொண்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் யார், யார் என்கின்ற விவரம் இப்போது என்னிடம் இல்லை. மொத்தமுள்ள 25 ஸ்கூட்டர்களில் 6 ஸ்கூட்டர்கள் அமைச்சருடைய டிஸ்க்ரீஷனில் கொடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. 30-9-1977 முடிய உள்ள காலாண்டுக்கு கொடுக்கப்பட்ட ஸ்கூட்டர்களில், அரிசன சட்டமன்ற உறுப்பினர்கள் யார், யார் என்பதை பார்த்து அதன் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டது.

திரு. வ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற கிராமப் பகுதியிலிருந்து வந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர் அளிப்பதை விட மோட்டார் பைக் தான் வசதியாக இருக்கும். எங்கள் பகுதிகளில் மோட்டார் கார்கள் போவதற்கு வசதியில்லாமல் புல்லட் மோட்டார் பைக் இருந்தால் அதில் அவசர காலத்தில் மூன்று நான்கு பேர்களை ஏற்றிக் கொண்டு செல்ல முடியும். ஆகவே என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டரை விட மோட்டார் பைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்கூட்டர் வழங்கும் உரிமையை மத்திய அரசு ரத்து செய்துவிட்ட காரணத்தால், தமிழக அரசு இப்போது ஸ்கூட்டர் வழங்குவதில்லை. மோட்டார் சைக்கிள் கொடுப்பதுபற்றி தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே, இந்த அரசு எந்த அடிப்படையில், எந்த காரணத்திற்காக ஸ்கூட்டர் வழங்கப்பட்டது என்பது ஒன்று. இரண்டாவது, இப்போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஸ்கூட்டர் வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, ராதா அவர்களுக்கும் இந்த ஸ்கூட்டர் வழங்கப்பட்டிருக்கிறது. அவருடைய தொகுதி கும்பகோணம். அவர்கள் கோஷன் பிளாக்கிலே வீடு வாங்கியிருக்கிறார். அதிலே தங்கிக் கொண்டிருக்கிறார். அவர் இந்த ஸ்கூட்டரை உபயோகப்படுத்துகின்றாரா? அல்லது வேறு யாராவது அதைப் பயன்படுத்துகின்றார்களா? அப்படி வேறு யாராவது பயன்படுத்தினல், அது ஒழுங்கீனம் இல்லையா?

[1978 ஏப்ரல் 5

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதாக உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கூறுவது, நான் சொன்னதை அவர்கள் சரியாக கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சி என்று கருதுகிறேன், உறுப்பினர் சௌந்திரராஜன் அவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ராதா அவர்களுக்கு வழங்கப்பட்ட அந்த ஸ்கூட்டர் தவறாகப் பயன்படுத்துகிறார் என்பதற்கு ஆதாரம் இருந்தால், அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், அதைப்பற்றி கவனிக்கப்படும்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ எட்மண்ட்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடாது என்று விதிமுறை இருக்கிறது. (குறுக்கீடு) Is it not an insinuations I am not able to understand the hon. Member.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நான் இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடாது என்று சொல்லலாம் என்று இருந்தேன். இருந்தாலும் தெரிந்துதான் விட்டேன். இப்படி ஒரு கேள்வி கேட்கும் உறுப்பினர் இந்த அவையிலே இருக்கிறார் என்பது தெரியட்டும்.

<u>திரு. என். கிட்டப்பா:</u> தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறும்போது ஆளும் கட்சிக்கு மட்டுமில்லாமல், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் தரப்பட்டதாக விவரம் அறிவித்தார்கள். இந்த மன்றத்தில் பிரதான எதிர்க் கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் யாருக்குமே அளிக்கப்படவில்லை. அவர்கள் யாருமே அப்படி மனு செய்யவில்லையா ? அப்படி செய்திருந்தால், நிராகரிக்கப்பட்டதா? அப்படி நிராகரிக்கப்பட்டிருந்தால அதற்கான காரணங்கள் யாவை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, 9 ஆண்டுகள் இத்தகைய சலுகைகளைப் பெற்றுவந்த பிரதான எதிர்க் கட்சிக்கு வரும் மாதங்களில் அளிக்கலாம் என்று உத்தேசித்திருந்தோம். ஆனால், அதற்குள் மத்திய அரசு இந்தக் கட்டுப்பாட்டை தளர்த்திவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஆர். இராதா:</u> பேரவைத் தலைவர் அவர்களே ஸ்கூட்டர் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான உத்திரவு வந்திருக்கிறது. ஆனால், அந்த ஸ்கூட்டர் இன்னும் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. இந்த ஸ்கூட்டர் வழங்கும் முறையை

1978 ஏப்ரல் 5]

மத்திய அரசு நிறுத்தியிருக்கிறது. இன்றைக்கு கிவ்ராஜ் மோட்டார்ஸ் இந்த ஸ்கூட்டர்களைத் தருகிறார்கள். என்ன காரணத்தினாலோ மத்திய அரசு நிறுத்திவிட்டார்கள். எனவே இந்த பஜாஜ் கம்பெனியோடு, தமிழக அரசு நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழக அரசிற்கு ஒரு குறிப்பிட்ட அளவு கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு கேட்க முன்வரவேண்டும். அப்படிக் கேட்கத் தயாரா என்று அறிய விரும்புகிறேன் ?

* * * *

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பின்னாலே உள்ள கேள்வியை நான் அனுமதிக்கவில்லை. முதலிலே போட்ட கேள்விக்கு மட்டும், பதில் அளித்தால் போதும்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, பஜாஜ் ஸ்கூட்டர் தாராளமாக மார்க்கெட்டில் கிடைக்கும் என்று மத்திய அரசுக்கு தெரிவித்த காரணத்தாலே, அது தளர்த்தப்பட்டிருக்கிறது. அந்தக் கம்பெனியோடு இந்த அரசு தனியாக உடன்பாடுகொள்ள நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> கேள்வி எண். 812 திரு. எஸ். ஜே. இராமசாமி.

(திரு. மு. அம்பிகாபதி. மற்றும் இரு உறுப்பினர்கள் எழுந்திருந்தனர்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். நான் கேள்வி கேட்கலாம் என்று அனுமதித்த பிறகுதான், எழுந்து நின்று கேள்வியைப் போடவேண்டும். ஒவ்வொருவரும் இப்படி துணைக் கேள்வி போட்டுக் கொண்டிருந்தால், எல்லாக் கேள்விகளையும் அனுமதிக்க முடியுமா ? அதற்காக, துணைக் கேள்விகள் கேட்க மறுக்கப்படுகின்றது என்று ஒழுங்குப் பிரச்சினை கிளப்பினால் எப்படி? அப்படி கிளப்பினால், அந்த உறுப்பினர்களைக் கூப்பிடாமல் இருப்பதுதான் நலம், நான் கூப்பிடாமல் இருக்கும்போது எழுந்து நிற்கக் கூடாது. எனவே எல்லோரும் அமருங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாநிலங்களுக்கிடையே லாரி போக்குவரத்து உரிமங்கள்

*812 வினா— திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாட்டிற்கும் ஆந்திரப் பிரதேசத்திற்குமிடையிலான லாரி பர்மிட்டுகள் 1975-ம் ஆண்டிலிருந்து எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டன?

(ஆ) அதேபோல் ஆந்திரப்பிரதேச அரசால் தமிழ்நாட்டுக்கு எத்தனை வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது?

(இ) இந்த பர்மிட்டுக்கு நம்மாநிலத்தில் காலாண்டுக்கான கட்டணம் எவ்வளவு?

(ஈ) அதேபோல் ஆந்திரப் பிரதேசம், கேரளம், கர்னாடகம் மாநிலங்களில் முறையே எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) 1460

(ஆ) 1500

(இ) மற்றும் (ஈ)

சரக்கு வண்டிகளுக்கு, நம்மாநிலத்திலும், ஆந்திரபிரதேசம், கேரளம், கர்னாடகம், ஆகிய மாநிலங்களிலும், அனுமதிக்கப்பட்ட மொத்த எடையை அடிப்படையாகக் கொண்டு, காலாண்டு வரி வசூலிக்கப்படுகிறது. நம் மாநிலத்தில் மேலொப்பம் (Counter Signature) பெற்ற வண்டிகளுக்கும் ஆந்திர பிரதேசத்தில் மேலொப்பம் பெற்ற வண்டிகளுக்கும் தனியாக வேறு கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.

(முற்பகல் 9-50)

திரு. எஸ். ஜே. இராமசாமி: இன்றைக்கு நாம் காலாண்டுக்கு எவ்வளவு வசூலிக்கிறோம்? அதுபோல் கேரளத்தில் எவ்வளவு வசூலிக்கப்படுகிறது? கர்னாடகத்தில் எவ்வளவு வசூலிக்கப்படுகிறது? இந்த மூன்று மாநிலங்களுக்குள் வித்தியாசம் இருக்கிறதா? என்ன வித்தியாசம்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நான் ஏற்கனவே கூறினேன் எடைகளின் அடிப்படையில் இந்த காலாண்டு வரி வசூலிக்கப்படுகிறது என்று. மொத்தச் சுமை ஏற்றும் வண்டிகளுக்கு 3,000 கிலோ மொத்த எடைக்கு அதிகமாகாத வண்டிகளுக்கு 270 ரூபாய் தமிழகத்தில் விதிக்கப்படுகிறது. ஆந்திர பிரதேச மாநிலத்தில் 300 கிலோ மொத்த

எடைக்கு அதிகமாகாத வண்டிகளுக்கு 170 ரூபாய் என்ற அடிப்படையிலும். கர்னாடகத்தில் 300 கிலோ எடைக்கு அதிகமாகாத வண்டிகளுக்கு 70 ரூபாய் என்ற அடிப்படையிலும், கேரளத்தில் 300 கிலோ மொத்த எடைக்கு அதிகமாகாத வண்டிகளுக்கு 60 ரூபாய் என்ற அடிப்படையிலும் விதிக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: தமிழ்நாட்டிலிருந்து கேளரம், கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களுக்குச் செல்லும் வகையில் லாரி பர்மிட்டுகள் வழங்குவதில் இருந்த கட்டுப்பாடுகள் நெருக்கடி நிலை நேரத்தில் அகற்றப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. தற்போது எப்படி இருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கவுண்டர் சிக்னேச்சர் பெறக்கூடிய ஒருமுனை வரி செலுத்தும் வண்டிகளுக்கு இன்னும் அந்த வரிமுறை இருந்து வருகிறது. இரு முனை வரி செலுத்தும் வண்டிகளுக்கு இல்லை.

திரு. க. மருதாசலம்: 1975 ஆம் ஆண்டுக்குப் பிறகு, 1976 1977, 1978-ம் ஆண்டுகளில் எவ்வளவு பேர் பர்மிட் கேட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் எவ்வளவு பேருக்கு தர இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அதுபற்றிய தகவல் இல்லை. தனிக்கேள்வி போடுவார்களானால் தகவல் தர முடியும்,

திரு. கு. வடிவேல்: லாரி வைத்திருக்கக்கூடிய லாரி சொந்தக்காரர்கள் பர்மிட் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். நம்முடைய அரசு அதிகமான பேர்களுக்கு லாரி பர்மிட் வழங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தேவைகளின் அடிப்படையில் அண்டை மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய இந்த கவண்டர் சிக்னேச்சர் மேலொப்பம் பெற்றுச் செல்லக்கூடிய வண்டிகளுக்கு உரிமை வழங்குவது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: லாரி பர்மிட் வைத்திருக்கும் ஓனர்கள் பஸ் காரர்கள் மாதிரி அல்ல. அவர்கள் குறைந்த வசதி படைத்தவர்கள்தான். ஆகவே, பர்மிட் முறையை எளிதாககும முறையில் மூன்று மாநிலங்களையும் ஒருங்கிணைக்கும முறையில பர்மிட் வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அப்படி எளிதான வழியில் மூன்று மாநிலங்களையும் சேர்த்து ஒருமுனை வரி வசூலிக்கும் முறை அமுலில் இருக்கிறது.

திரு. யா. சை. மு. யூசுப்: இதுபோன்று மாநிலங்களை ஒன்றாக இணைந்த லாரி பர்மிட் தரும் நேரத்தில் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கடத்தும் வாய்ப்பு இருக்கும் காரணத்தால் அரிசித் தடையை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அதுபற்றித் தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: லாரிகள் இரவு முழுவதும் ஓடுவதால் பல விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன, இரவு 12 மணிக்கு மேல் லாரிகள் ஓடக்கூடாது என்று சட்டம் கொண்டு வரப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நெடுந்தூரம் செல்லுகிற சரக்கு வண்டிகளுக்கு விபத்துக்களைத் தவிர்க்கும் முகத்தான் இரண்டு ஓட்டுநர்களை அமைக்கும் முறை அமல்படுத்தப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

Bridge across Paruthi Vaikal.

*813. Q. Thiru J. JAMES: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether there is any proposal to broaden the bridge across the Paruthi Vaikal on the Swamiarmadam-Mecode road in Kanyakumari district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(a) இல்லை.

(b) கேள்வி எழவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, முறையாக இது மூன்றுவது பாலம் சம்பந்தமான கேள்வி. மூன்று பாலத்திற்கும் நிதிநிலை சரியாக இல்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்தப் பாலம் அமைந்திருக்கின்ற ரோடு 90 டிகிரி பெண்ட் ஆன இடத்திலே உள்ளது, இரு பக்கமும் 50 அடிக்கு மேல் ஆழம் இருக்கிறது. இங்கே பஸ் சர்வீசும் இருக்கிறது, அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தப் பாலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதை விஸ்தரிப்பதற்குப் பெரிய அளவு பணச் செலவுகூட இல்லை, ஆகவே மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்
கள், இத்திட்டம் கைவிடப்பட்டது என்று நான் கூறவில்லை.
இந்தப் பாலம் 10 அடி அகலமே கொண்ட குறுகலான பாலம்.
இந்தப் பாலத்தை அகலப்படுத்துமாறு கன்னியாகுமரி மாவட்ட
வளர்ச்சி மன்றம்கூட அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. 1.20
இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. வரும்
ஆண்டுகளில் இதை விரைந்து எடுக்க பரிசீலித்து நடவடிக்கை
எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்தப் பாலத்தை விரிவுபடுத்துவதற்கான எஸ்டிமேட் 1968 ஆம் ஆண்டே எடுக்கப்பட்டது, செலவுகூட 1.20 இலட்சம் ரூபாய்தான் ஆகிறது. எனவே, வரும் ஆண்டுகளில் என்பதற்குப் பதிலாக அடுத்த ஆண்டிலேயே இந்தத் திட்டத்தைச் செய்ய அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களினுடைய கோரிக்கைப்படி வரும் ஆண்டில் இதை எடுத்துக்கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

வேடப்பட்டியில் கால்நடை மருத்துவ மனை.

*814 வினா— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பேரூர் ஒன்றியம், வேடப்பட்டி பேரூராட்சியில் இயங்கி வந்த கால்நடை மருத்துவ மனை மாற்றப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(இ) மீண்டும் அங்கு செயல்படுத்த வேண்டுமென பொது மக்கள் விண்ணப்பித்துள்ளனரா?

(ஈ) அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் பேரூர் ஒன்றியத்தில் வேடப்பட்டியில் கால்நடை மருந்தகம் அல்லது மருத்துவமனை ஏதும் இதுவரை இயங்கவில்லை. அவ்விடத்தில் இயங்கி வந்த கிளை நிலையம் 7-2-1970—ல் கிளை நிலையங்கள் மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ் மூடப்பட்டது.

(இ) மேற்குறித்த கிளை நிலையம் செயல்பட வேண்டுமெனும் கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை.

(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. அ. நடராசன்:</u> பேரவைத் தலைவரவர்களே, இங்கே 1970 ஆம் ஆண்டு இந்தக் கால்நடை மருந்தகத்தின் கிளை மாற்றப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் மிகவும் தொல்லைப்படுகிறார்கள். ஆகவே, மீண்டும் அங்கே கிளை மருந்தகத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:</u> பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு, கால்நடை மருந்தகம், ஒன்றும் கிளை நிலையங்கள் மூன்றும் செயல்பட்டு வருகின்றன. கால்நடை மருந்தகம், வேடப்பட்டியிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. கிளை நிலையம் தெலுங்குப் பாளையம், வேடப்பட்டியிலிருந்து 7 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. கிளை நிலையம், சுந்தராபுரம், வேடப்பட்டியிலிருந்து 9 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. கிளை நிலையம், கணபதி, வேடப்பட்டியிலிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது ஆகவே, கிளை நிலையத்தை இப்பொழுது அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திருச்சி சௌந்திரராஜன் அவர்கள் வேடப்பட்டி பேரூராட்சியைப் பற்றிக் கேள்வி போட வேண்டும்.

<u>திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:</u> பேரவைத் தலைவரவர்களே, 7-2-70 ஆம் தேதியில் அரசு ஒரு ஆணை பிறப்பித்ததாக அமைச்சரவர்கள் கூறினார்கள். என்ன காரணத்தினால் அப்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது? ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருந்தகம் திறக்கப்பட வேண்டுமென்றால் என்னென்ன நிபந்தனைகள் இருக்க வேண்டுமென்று அரசு வரையறுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:</u> பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் தீவிர கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 18-2-64 ஆம் நாளிட்ட உணவு மற்றும் வேளாண்மை துறையின் அரசு ஆணை (நிலை) எண் 3502-ன் படி ஒரு கிளை நிலையம் (சப்-சென்டர்) வேடப்பட்டியில் 1-6-65 முதல் செயல்படத் தொடங்கியது. 24-12-69 ஆம் நாளிட்ட வேளாண்மைத் துறை அரசு ஆணை (நிலை) எண் 3727-ல் கால்நடை பராமரிப்புத் துறை, பகுதிவாரியாக மாற்றியமைக்கப்பட ஆணையிடப்பட்டது. அம்மாற்றத்தின் அமைப்பின்படி, கிராமங்களில் கால்நடை பராமரிப்புத் துறையின் வேலைகளும், ஊராட்சி ஒன்றியம் மூலம் நடைபெறும் கால்நடை பராமரிப்பு வேலைகளும், விரிவாக்க அலுவலர் (கால்நடை பராமரிப்பு) களால் கவனிக்கப்படவேண்டும். மேற்படி மாற்றியமைக்கும் திட்டத்தின் விளைவாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கீழ் குறிப்பிட்டுள்ள அம்

சங்களை கருத்திற்கொண்டு கிளை நிலையங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று 7-2-70 ஆம் நாளிட்ட அரசு (வேளாண்மைத் துறை) ஆணையில் (எண். 289) ஆணையிடப்பட்டது:—

(1) ஒரு கிளை நிலையத்தின் பொறுப்பில் ஒருங்கிணைந்த பல கிராமங்கள் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு கிளை நிலையத்தின் பொறுப்பில் எவ்வளவு கிராமங்கள் இருக்க வேண்டும் என்பதனை அப்பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை முன்னரே செயற்படுத்தப்பட்ட சிறப்பு வேலைகள் முதலியவற்றைக் கருத்திற்கொண்டு 6 அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களை ஒரு கிளை நிலையத்துடன் இணைக்க வேண்டும்.

(2) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள எல்லாக் கிராமங்களும், பேரூராட்சிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வேண்டும்.

(3) கால்நடை மருந்தகம் அல்லது மருத்துவ மனை உள்ள இடங்களில் கிளை நிலையம் அமைத்தல் கூடாது.

மேற்கூறிய 7.2-70-ஆம் நாளிட்ட அரசு ஆணைகளுக்கிணங்க பேரூர் ஊராட்சி ஒன்றியத்தில், 3 கிளை நிலையங்கள் மட்டுமே செயற்படுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, வேடப்பட்டியில் இயங்கி வந்த கிளை நிலையம் மூடப்பட்டது.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பரப்பிலும் கால்நடை மருந்தகம் திறக்கப்பட வேண்டுமானால் நிபந்தனைகள் என்ன என்று கேட்டார்கள். ஓர் ஊராட்சி ஒன்றியப் பரப்பில், கால்நடை மருந்தகம் திறக்கப்பட வேண்டுமானால் கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்:—

(1) கால்நடை நிலையங்கள், கால்நடை எண்ணிக்கையைக் கருதியும், ஏற்கனவே உள்ள கால்நடை நிலையத்தின் அருகாமையைக் கருதியும் எவ்விடத்தில் மிக அவசியமாகத் தேவைப் படுகின்றனவோ அங்கே அமைக்கப் படுகின்றன.

(2) ஊராட்சி ஒன்றியங்கள், எவ்விடத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டு தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியாக வேண்டும்.

(3) நிரந்தரக் கட்டடம் கட்டும் வரையில் கால்நடை மருந்தகம் உடனே செயல்படுவதற்கு வாடகை இல்லாமல் கட்டடம், ஊராட்சி ஒன்றியம் ஏற்பாடு செய்தாக வேண்டும்.

(4) ஊராட்சி ஒன்றியம் கட்டடம் கட்டுவதற்காக ஓர் ஏக்கர் நிலத்திற்குக் குறைவில்லாமல் தரவேண்டும்.

(5) கட்டடம் கட்டுவதற்காகும் செலவில் கீழ்க்கண்டவாறு பங்கினை ஊராட்சி ஒன்றியமும் அரசும் ஏற்க வேண்டும்.

முதல் கால்நடை மருந்தகத்திற்கு ஊராட்சி ஒன்றியம் 25%, அரசு 75%; இரண்டாவது மருந்தகத்திற்கு ஊராட்சி ஒன்றியம் 50%, அரசு 50%; மூன்றாவது மருந்தகத்திற்கு ஊராட்சி ஒன்றியம் 75%, அரசு 25%; நான்காவது மருந்தகத்திற்கு முழுக்க முழுக்க ஒன்றியமே செலவினை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கிளை கால்நடை மருத்துவ மனைகளில் அங்கு ஊசி போட வரும் பசுக்களுக்கு ரூ. 2 கட்டணம் வசூல் செய்கிறார்கள். இதை அரசு வசூல் பண்ணச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறதா? அல்லது அதிகாரிகள் தங்கள் இஷ்டத்திற்கு வசூல் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, அரசின் உத்தரவுப்படிதான் அவர்கள் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதனைக் குறைக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது.

செட்டிநாடு கால்நடைப் பண்ணை.

*815 வினா—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:—

(அ) முகவை மாவட்டம், செட்டிநாடு கால்நடைப் பண்ணையில் பிறருக்கு உதவும் வகையில் இன உற்பத்தி செய்யப் படாமல் முடக்கி வைக்கப்பட்டதன் காரணம் என்ன?

(ஆ) பிறருக்கு உபயோகப்படும் முறையில் மேற்படி பண்ணை அபிவிருத்தி செய்யப்படுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:

(அ) செட்டிநாடு கால்நடைப் பண்ணை பிறருக்கு உதவும் வகையில் இன உற்பத்தி செய்யப் படாமல் முடக்கி வைக்கப் படவில்லை.

(ஆ) பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பண்ணை அபிவிருத்தி செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, முகவை மாவட்டத்தில் செட்டிநாடு கால்நடைப் பண்ணையும், சாத்தூரில் கால்நடைப் பண்ணையும் ஆக இரண்டு கால்நடைப் பண்ணைகள் அங்கிருக்கின்றன. அந்தப் பண்ணைகளிலே தரமான ஆடுகள் உற்பத்தி செய்யவோ, கிடாக்கள் உற்பத்தி செய்யவோ அல்லது குட்டிகள் உற்பத்தி செய்யவோ விரும்புவோருக்கு உதவும் முறையிலே அங்கு ஏற்பாடு செய்யப்படவில்லை. ஆகையினாலே தேவையான அளவுக்கு ஜில்லா முழுவதும் அந்தக் கிடாக்கள், ஆடுகள், குட்டிகள் கொண்டு வந்து, உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட செட்டி நாடு பண்ணையில் ஆட்டுப் பிரிவில் கீழக்கரிசல் ஆடுகள் இன விருத்தி செய்யப்பட்டு பொலி கிடாக்கள், புருவைகள் பஞ்சாயத்து யூனியன் திட்டங்களுக்கும் மற்றும் ஆடு அபிவிருத்தி திட்டங்களுக்கும் வழங்கப்படுகின்றன. இப்பண்ணையில் 1-4-1977 முதல் 28-2-1978 வரை 53 செம்மறி ஆடுகள் விநியோகிக்கப் பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செட்டி நாடு பண்ணைக்குக் கொடுக்கப்பட்டிருந்த இடம் முத்தையா செட்டியார் அவர்களால் கொடுக்கப்பட்டதாகவும் அதிலே 20 ஏக்கரைப் போல், ஆளுநர் ஆட்சியிலோ அதற்கு முந்தியோ திருப்பிக் கொடுக்கப் பட்டதாகவும் சொல்கிறார்கள். ஆனால், தற்பொழுது அந்தப் பண்ணையின் விஸ்தீரணம் என்ன? அந்தப் பண்ணையிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை எவ்வளவு? அந்தப் பண்ணையிலிருந்து கால்நடைகள் விநியோகிக்கப் படுகின்றனவா? அவ்வாறு விநியோகிக்கப் பட்டால், அந்தக் கால்நடைகளின் எண்ணிக்கை என்ன என்பதை அமைச்சரவர்கள் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, செட்டிநாடு கால்நடைப் பண்ணையின் மொத்த விஸ்தீரணம் 1907.32 ஏக்கராகும். இதில் தீவனங்கள் பயிரிட 460 ஏக்கரும், கட்டடங்கள், சாலைகள், குளங்கள் ஆகியவை 122.32 ஏக்கரும், அமைந்துள்ளது. மிகுதியான 1325 ஏக்கர் நிலம், காடுகளாக உள்ளது. இந்தப் பண்ணையிலிருக்கிற கால்நடைகள்; தற்பொழுது, 947 மாடுகளும், 1174 ஆடுகளும், 154 யார்க்ஷயர் பன்றிகளும் உள்ளன.

இதுவரைக்கும் எவ்வளவு விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டார்கள். அந்தப் பண்ணையிலேயிருந்து, 1-4—1977 முதல் 28-2-1978 வரை 16 பொலி காளைகளும், 53 செம்மறி ஆடுகளும் 123 பெரிய வெள்ளை யார்க்ஷயர் பன்றிகளும் பொது மக்களுக்கு விநியோகிக்கப் பட்டிருக்கின்றன.

[1978 ஏப்ரல் 5

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், இந்தப் பண்ணையிலே கறுவை ஆடுகள் தான் வைத்திருக்கிறார்கள். இப்போது எங்கு பார்த்தாலும், பட்டணம் கிடா என்ற வெள்ளை ரகமாக உள்ளவைகள் அதிகமாக வாங்கி எல்லோரும் வளர்ப்ப தற்குப் பிரியப்படுகிறார்கள். கறுவை ஆடுகள் ரொம்ப காலத் திற்கு முன் உள்ள ரகம். எனவே இந்தப் பட்டணம் கிடாவைப் போன்ற ஆடுகளை வளர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி : இராமநாதபுரம் மாவட்டத்தின் தட்ப வெப்ப நிலைமைக்கேற்ப, அங்கே கீழ் கரிசல் ஆடுகளை மட்டும்தான் வளர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவர் அவர்களே, இந்த லைவ்ஸ்டாக் அசிஸ்டெண்டு என்ற ஊழியர்கள் ஏதாவது குறை வாக உள்ளார்களா, அல்லது அப்படிப்பட்ட பயிற்சி பெற யாரும் முன் வரவில்லை என்ற எண்ணம் உள்ளது. அப்படிப் பட்ட நபர்கள் யாராவது அரசுக்குத் தேவைப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அப்படிப்பட்ட தேவை எதுவும் அரசுக்கு இல்லை. இருந்தால் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. ஒ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, செட்டி நாடு பண்ணையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்ரக காளை இனங்கள் இருந்தும் கூட, ஏதோ அரசு உத்தர வின் காரணமாக பொது மக்களுக்கு அதை உபயோகப் படுத்து கிற வகையில் தடை இருப்பதாக சொல்லப்படுகிறது. அந்த விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் அரசிற்கு வரவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கால் நடைப் பண்ணையில் இனவிருத்திக்கு உண்டான வகையில் வெளி யூரில் இருந்து விந்து வருகின்றது. அது பவர் குறைவாக இருக் கிறது, எனவே இனவிருத்திக்கு அந்தப் பகுதி கால்நடை மருத்துவ மனையிலே இருந்து தயாரிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

1978 ஏப்ரல் 5]

திரு. பொ. காளியப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 1,300 ஏக்கர் நிலத்தில் காடு வளர்ப்பதாக சொல்லுகிறார்கள். அந்த 1300 ஏக்கர் நிலங்களும் மீண்டும் செட்டிநாட்டு அரசரிடமே கொடுத்து விட்ட தாக மக்கள் சொல்லுகிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

திரு. கே. வடிவேலு : தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவ நிலையத்தில் இன்றைய தினம் இனவிருத்தி செய்யக் கூடிய விந்தை சரிவர பாதுகாக்கப் படாமல், அந்த கால்நடை களுக்குப் போடப்படுகின்ற ஊசிகளும் சரிவர பலன் அளிப்ப தில்லை. இது போன்று பல கால்நடை மருத்துவ மனைகளிலே குறை இருக்கிறது. அது அரசுக்குத் தெரியுமா, அப்படி அரசுக்குத் தெரிந்தால் அந்த விந்துவை சரிவரப் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செய்திகள் எதுவும் இந்த அரசுக்கு இதுவரை வரவில்லை.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, இந்த லைவ் ஸ்டாக் அசிஸ்டென்டு என்பவர்கள் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால் 3, 4 வெட்டினரி மருந்தகங்களுக்கு ஒரே ஒரு லைவ் ஸ்டாக் அசிஸ்டன்டு போடுகிறார்கள். அவர் ஒருவரே அத்தனை ஆஸ்பத்திரிகளுக்கும் சென்று சரிவர வேலை செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அதனால் கிராமங்களில் கால் நடைகளை வைத்திருக்கிறவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்த லைவ் ஸ்டாக் அசிஸ்டன்ட் பயிற்சி கொடுக்க..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து திரு. மார்க்க பந்து, மூலக்கேள்வியை ஒட்டி கேள்வி கேட்கவேண்டும் இந்தக் கேள்விக்கு அமைச்சரிடம் பதில் இருக்குமா?

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

வையம்பட்டியிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள்.

336 வினா—திரு. கே. கே. முத்தையா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி ஆண்கள் பள்ளியாகவும், சர்வோதய ஆசிரமம் நடத்திவரும் கலைமகள் உயர்நிலைப்பள்ளி பெண்கள் பள்ளியாகவும் மாற்ற உத்திரவுகள் போடப்பட்டதா?

(ஆ) ஆமெனில் அரசு உயர்நிலைப்பள்ளி ஆண்கள் பள்ளியாக மாற்றப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(ஈ) மேற்படி கலைமகள் உயர்நிலைப்பள்ளி பெண்கள் பள்ளியாக மாற்றப்பட்டதால் வேலையிழந்த ஆசிரியர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(உ) ஆமெனில் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஊ) மேற்படி பள்ளிக்கு 1975-ம் ஆண்டிலிருந்து 1977-ம் ஆண்டு வரை இரண்டாண்டுகளுக்கு இன்னும் கொடுக்கப்படாமலிருக்கும் மாதாந்திர நிலுவை சம்பள மானியத்தைக் கொடுப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தெரியும்.

(இ) வையம்பட்டியிலுள்ள கலைமகள் உயர்நிலைப்பள்ளியை பெண்கள் உயர்நிலைப்பள்ளியாகவும், அவ்வூரிலுள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளியை ஆண்கள் பள்ளியாகவும் மாற்றி அரசு வெளியிட்ட ஆணை, அரசு பள்ளியில் அமுலாக்கப்படுவதை ஆட்சேபித்து முறையீடுகள் பல பெறப்பட்டன. அரசினர் உயர்நிலைப்பள்ளியை முன்பு இருந்தது போலவே கலப்பு பள்ளியாக (Mixed School) இயங்க ஆணை வெளியிடுமாறும் இம்முறையீடுகளில் கோரப்பட்டிருந்தது. இம்முறையீடுகளை மிக கவனமாக பரிசீலித்த அரசு மேற்படி ஆணையை ரத்து செய்து கலைமகள் (மகளிர்) உயர்நிலைப்பள்ளியும், அரசினர் (ஆண்கள்) உயர்நிலைப் பள்ளியும் முன்போலவே இருபாலரும் பயிலும் (Mixed School) பள்ளியாக இயங்க அண்மையில் (29—12—1977-ல்) ஆணை வெளியிட்டுள்ளது. இவ்வாணையை எதிர்த்து கலைமகள் உயர் நிலைப் பள்ளியின் தாளாளர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கொன்றை தொடுத்து, மேற்படி ஆணை செயல்படுவதற்கு உயர்நீதி மன்றத்தின் தடை உத்திரவையும் பெற்றுள்ளார்.

(ஈ) & (உ) கலைமகள் உயர்நிலைப்பள்ளி நிர்வாகி தமது பள்ளியில் ஏற்கெனவே பணியாற்றிய பத்து ஆசிரியர்களை பணிநீக்கம் செய்தார். பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் முறையீடுகளின் பேரில், மீண்டும் அவர்களை பணியில் சேர்த்துக்கொள்ள பள்ளிக் கல்வி இயக்குநரால் உத்தரவிடப்பட்டது. ஆனால், நிர்வாகி இவ்வாசிரியர்களுக்கு வேலை அளிக்காமல், அவர்களுக்கு பதிலாக வேறு ஆசிரியர்களை கல்வித்துறையின் ஒப்புதலின்றி

நியமனம் செய்துள்ளார். பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை
நிர்வாகி, மேற்படி பள்ளி பெண்கள் பள்ளியாக மாற்ற உத்திரவு
அளிக்கப்பட்ட தேதி வரை வேலையில் சேர்த்துக் கொள்ளாத
தாலும், இப்பள்ளி பெண்கள் பள்ளியாக மாற்றப்பட்டதாலும்
மேற்படி பத்து ஆசிரியர்களுக்கும் மாற்றுப் பணி பள்ளிக் கல்வி
இயக்குநரால் அளிக்கப்பட்டு அவர்கள் பல பள்ளிகளில் பணி
யாற்றி வருகின்றனர்.

பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுடைய பணியிடங்களில்
பதிலியாக கல்வித் துறையின் ஒப்புதலின்றி நியமனம் செய்யப்பட்
டுள்ளவர்கள் மாற்றுப்பணிபெற அருகதையற்றவர்களாவார்கள்.

(ஊ) மேற்படி பள்ளியில் கல்வித் துறையின் ஒப்புதலுடன்
பணிபுரிந்துவரும் ஆசிரியர்கள், அனைவருக்கும் 1977 மே திங்கள்
வரை பணியாளர் மான்யம் வழங்கப்பட்டுவிட்டது. கல்வித்
துறையின் ஒப்புதலின்றி பள்ளி நிர்வாகியால் பணியில் அமர்த்தப்
பட்ட ஆசிரியர்கள் அரசு நிதியிலிருந்து ஊதியம் பெற தகுதி
யில்லை. எனவே, அவர்களுக்கு ஊதியம் வழங்கும் பொறுப்பு
மேற்படி பள்ளி நிருவாகத்தையேச் சாரும்.

பொதுப் பணித்துறையில் பணியாற்றும் தினக் கூலிகள்.

337 வினா—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித்துறையில் N. M. R. கூலிகள் எவ்வளவு பேர் பணியாற்றுகிறார்கள்?

(ஆ) அவர்களுக்கு எவ்வளவு கூலி தரப்படுகிறது?

(இ) நிரந்தரம் செய்ய திட்டம் ஏதேனும் உள்ளதா?

விடை—

(அ) பொதுப்பணித்துறையில் பல்வேறு திட்டங்களிலும் 2,331 தினக்கூலிகள் பணியாற்றுகிறார்கள்.

(ஆ) வேலையின் தரமும், தன்மையும் இடத்துக்கு இடம் மாறுபடுகின்ற காரணத்தினால். ஒரே விதமான கூலி விகிதம் மாநிலம் முழுவதும் பின்பற்றுவது சாத்தியமில்லை. ஆகவே, ஆண்டுக்கு ஒரு முறை மாவட்ட வாரியாக நிர்ணயிக்கப்படுகின்ற கூலி விகிதப்படி தினக்கூலியாட்கள் வேலைக்கு அமர்த்தப் படுகிறார்கள். உதாரணமாக சென்னையை பொறுத்த மட்டில் கீழ்க்கண்ட முறைப்படி தினக்கூலிகள் அமர்த்தப்பட்டுள்ளார்கள்:—

				ரூபாய்.
1.	தொழில்நுட்ப உதவியாளர்	..	தரம்—1	14.00
2.	தொழில்நுட்ப உதவியாளர்	..	தரம்—2	10.00
3.	பிளம்பர் —	..	தரம்—1	9.00

			ரூபாய்.
4.	பிளம்பர்	தரம்—2	8.00
5.	தச்சர்	தரம்—1	10.50
6.	தச்சர்	தரம்—2	9.35
7.	பொருத்துபவர்	தரம்—1	9.00
8.	பொருத்துபவர்	தரம்—2	8.00
9.	கொத்துவேலை செய்பவர் ..	தரம்—1	11.00
10.	கொத்துவேலை செய்பவர் ..	தரம்—2	10.00
11.	தினக்கூலி		6.60
12.	தலைமைக்கூலி		7.70
13.	பளு தூக்கும் கூலி		7.00
14.	பெண் கூலிகள்		6.60
15.	வர்ணம் பூசுபவர்		9.00

(இ) தினக்கூலிகளாக 10 ஆண்டுகள் தொடர்ந்து பணி புரிந்தவர்களை வேலை நிதி ஊழியர்களாக நியமிக்கத்தக்க முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசு ஆணை 1035, பொதுப்பணித்துறை, நாள் 14—7—1976-ன் படி 1—4—1975-ல் 10 ஆண்டுகள் பணியாற்றிய 303 தினக் கூலிகள் ஏற்கெனவே மாநில சேவையாக்கப்பட்ட வேலை நிதி ஊழியர்களாக நிரந்தரம் செய்யப்பட்டு, மற்றைய மாநில சேவை யாக்கப்பட்ட ஊழியர்கள் பெற்றுவருகின்ற சலுகைகள் அனைத்தும் அவர்களும் பெறத்தக்க முறையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசஞ்சேரி ஏரிக்கு நீர்வரத்து.

338 வினா—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் வட்டம், திருமானூர் வட்டாரத்திலுள்ள அரசஞ்சேரி ஏரிக்கு கொள்ளிடம் ஆற்றிலிருந்து பெரியமறை என்னும் கிராமத்திற்கு அருகில் இடதுகரையின் மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டதா?

(ஆ) ஆமெனில், தற்போது தண்ணீர் வரத்து விடாமலி ருப்பதன் காரணமென்ன?

விடை

(அ) அரியலூர் வட்டம், திருமானூர் வட்டாரத்திலுள்ள அரசஞ்சேரிக்கு பெரியமறை என்னும் கிராமத்திற்கு அருகில், கொள்ளிடம் இடது கரையிலிருந்து வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டு வரப்பட்டு 1960-ம் ஆண்டிற்கு முன்புவரை பாசனம் செய்யப்பட்டு வந்தது.

(ஆ) 1960–ம் ஆண்டிற்குப் பின்னர் கொள்ளிடம் ஆற்றிலி ருந்து அரசஞ்சேரிக்கு தண்ணீர் கொண்டுவரப்படவில்லை. ஏனெனில் இந்த ஏரியின் நிலங்கள் யாவும் புள்ளம்பாடி கால்வாய்த் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு, புள்ளம்பாடி கால்வாய் மூலம் பாசன வசதி கொடுக்கப்பட்டு வருகிறது. சென்ற வருடத் தொடக்கத்தில் மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாமையால் குறிப்பிட்ட தேதியில் (1—8—1977) புள்ளம் பாடி கால்வாயில் தண்ணீர்விட இயலவில்லை. எனினும் பிற் பகுதியில் போதுமான தண்ணீர் மேட்டூர் நீர்த் தேக்கத்தில் வந்த வுடன், புள்ளம்பாடி கால்வாயில் தண்ணீர் விடப்பட்டது.

மாம்பாக்கம்-காயார் சாலை:

339 வினா—திரு. ஜி. சொக்கலிங்கம்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியில் அடங்கிய மாம்பாக்கம்-காயார் சாலையைப் புதுப்பிக்கும் உத்தேசம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அந்த வேலை துவங்கப்படும்?

விடை

(அ) ஆம்.

(ஆ) இப்பணிக்கு அரசு ஆணை எண். 1950, பொதுப் பணித்துறை, நாள் 29—12—1977-ல் அரசு ஒப்புதல் அளித் துள்ளது. இவ்வேலையை உடனடியாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு மானியம்.

340 வினா—திரு துரை கலியமூர்த்தி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு 1976-77-ஆம் வருடத்தில் அரசு கொடுத்த மானியம் எவ்வளவு?

(ஆ) 1976–77ஆம் வருடக் கணக்கு தணிக்கை செய்யப்பட்டதா?

விடை—

(அ) 1976-77ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்ட மானியத்தின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

	ரூ.
1. மாநில அரசின் தொடர் மானியம் ..	23,59,000
2. மொழியியல், கடல் உயிரியல், ஆய்வு மையங்கள் மற்றும் நான்காவது ஐந்தாண்டு திட்ட ஆசிரியர்களுக்கான மானியங்கள் (Centres of Advanced Studies in Linguistics and Marine Biology and IV Plan Staff).	4,80,000
3. வேளாண்மைத் துறைத் தொடர் மானியம்	1,83,000
4. மக்கள் தொகைக் கல்வி மையம் .. .. (Centre for population studies)	54,420

(ஆ) (ஆம்).

சிறு துறைமுக வளர்ச்சிக்கு மத்திய உதவி.

341 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு துறைமுக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் எந்தெந்த துறைமுகங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது?

விடை—

சிறு துறைமுக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்களுக்கென மத்திய அரசினால் தனி நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் ரூ. 92,815 இலட்சமும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 89 இலட்சமும் சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கென, மத்திய அரசிடமிருந்து கடனுதவியாகப் பெறப்பட்டது.

பாண்டியாறு-புன்னம்-புழா திட்டம்.

342 வினா—திரு. கு. ரமணி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் பாண்டியார்-புன்னம்புழா நீர் மின் திட்டப்பணி ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், 1977–78ஆம் வருடத்துக்கு அதற்காக செலவிட உள்ள தொகை எவ்வளவு?

விடை—

(அ) திட்டத்தின் ஆரம்ப வேலைகள் தொடங்கப் பெற்று தற்போது நிறுத்தப்பட்டுள்ளன.

(ஆ) 1977-78ஆம் வருட வரவு-செலவு திட்டத்தில் இத் திட்டத்திற்கென ரூபாய் 5 கோடி மின் வாரியத்தால் ஒதுக்கப்பட்டது.

முழுக்கோடு, சிதறால், கிராமங்களுக்கு பாசன வசதி.

343 வினா—திரு. டி. ஞானசிகாமணி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தாலுக்கா திறப்பரப்பு இடதுகரை கால்வாயிலிருந்து முழுக்கோடு, சிதறால் கிளைக் கால்வாய் வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

விளவங்கோடு தாலுக்காவிலுள்ள முழுக்கோடு, சிதறால் ஆகிய கிராமங்கள், திறப்பரப்பு வலதுகரை கால்வாயின்கீழ் வருகின்றது. திறப்பரப்பு வலதுகரை கால்வாயை நீட்டி முழுக்கோடு, சிதறால் ஆகிய கிராமங்களுக்கு பாசன வசதியளிப்பதற்காக, இடப்பட்ட திட்டம், சிக்கனமற்ற திட்டமாக கருதி கைவிடப்பட்டது.

மடிச்சல் கிளைக் கால்வாய்.

344 வினா—திரு. டி. ஞானசிகாமணி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தாலுக்காவில் நெய்யாறு இடது கரை கால்வாயிலிருந்து வெட்டப்பட்டிருக்கும் மடிச்சல் கிளை கால்வாய் வேலை எப்போது முடியும்?

விடை—

மடிச்சல் கிளை கால்வாயின் ஒரு பகுதி வேலை சீரணிப் படையினரால் செய்யப்பட்டது. ஏற்கெனவே செய்தது போக, மீதியுள்ள வேலைகளுக்கான ரூ. 6.55 இலட்சத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. அரசு ஆணை அளித்து வேலை துவங்கிய பின்தான் வேலை எப்பொழுது முடிவுறும் என்ற விபரம் சொல்ல இயலும்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம்.

345 வினா—திரு. கரியமாணிக்கம் அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியன் ரோடுவேஸ் கார்ப்பரேஷனில் 1976-77-ல் எவ்வளவு வருமானம் வந்தது?

(ஆ) செலவு போக இலாபம் எவ்வளவு?

விடை—

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் 1976-77ஆம் ஆண்டு வந்த மொத்த வருமானம் ரூ. 1,393 இலட்சம்.

(ஆ) இக்கழகம் 31-3-1976 வரை அடைந்த மொத்த வருவாய் இழப்பு ரூ. 65.84 இலட்சம். 1976-77-ல் செலவு போக நிகர லாபம் (வருமான வரி நீங்கலாக) ரூ. 70.33 இலட்சம்.

நாய்க்கடி சிகிச்சை.

346 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்ற ஆண்டில் தமிழகத்திலுள்ள மருத்துவ மனைகளில், நாய்க்கடிச் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டு, பின்பு இறந்தோர் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு?

விடை—

1976ஆம் ஆண்டில், தமிழகத்திலுள்ள மருத்துவ மனைகளில், நாய்க்கடிச் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டோர், இறந்தோர் எண்ணிக்கை மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

மாவட்டம்.	1-1-1976 முதல் 31-12-1976 வரை.	
	சிகிச்சைக்கென அனுமதிக்கப் பட்டவர் எண்ணிக்கை.	அனுமதிக்கப் பட்டு இறந்தவர் எண்ணிக்கை.
1. தென் ஆற்காடு ..	465	3
2. நீலகிரி	..	..
3. புதுக்கோட்டை ..	397	7
4. கோயம்புத்தூர் ..	1,943	8
5. செங்கற்பட்டு	12	3
6. திருச்சிராப்பள்ளி ..	31	7
7. திருநெல்வேலி ..	86	10
8. வட ஆற்காடு ..	585	3
9. சேலம்	28	5
10. மதுரை	2,482	21
11. தருமபுரி	181	1
12. கன்னியாகுமரி ..	28	2
13. தஞ்சாவூர்	393	2
14. இராமநாதபுரம் ..	86	..
15. சென்னை	92	73
மொத்தம் ..	6,809	145

சத்தியவாணன் வாய்க்கால்.

347 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் வட்டத்தில் ஓடும் சத்தியவாணன் 'ஏ' பிரிவு வாய்க்கால் மராமத்து செய்யப்பட்டது எப்போது?

விடை—

மாயூரம் வட்டத்தில் ஓடும் சத்தியவாணன் 'ஏ' பிரிவு வாய்க்கால் மராமத்து வேலைகள் கால்வாய்களை நவீனப் படுத்தும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் முழுவதுமாக 1972-ல் முடிக்கப்பெற்றன.

[1978 ஏப்ரல் 5

தலைமை செயலகப் பிரிவில் பெறப்பட்ட மனுக்கள்.

348. வினு—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரசு தலைமைச் செயலகத்தில் புகார் பிரிவில்(Complaints Cell) 1977ஆம் ஆண்டில் இதுவரையில் வந்துள்ள புகார்கள் எத்தனை?

விடை—

1977ஆம் ஆண்டில் சனவரி 1 முதல் நவம்பர் 30 வரையில் வந்துள்ள புகார்களின் எண்ணிக்கை 23,985. அவைகள் அந்தந்த துறைகளுக்குத் தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. நடவடிக்கை ஆங்காங்கே எடுக்கப்படுகின்றன.

காவல் கைதிகள் இறப்பு.

349. வினு—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1975, 1976ஆம் ஆண்டுகளில் சிறைச் சாலைகளில் காவலில் இருக்கும்போது இறந்த கைதிகள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) காவல் நிலையங்களில் காவலில் இருக்கும்போது இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

(இ) அதன் காரணம் என்ன?

விடை—

(அ)	1975..	..	33
	1976..	..	20
(ஆ)	1975..	..	61
	1976..	..	27

(இ) மரணங்கள் இயற்கையான காரணங்களினுலும், தூக்குப் போட்டுக் கொண்டதாலும், போலீஸ் காவலிலிருந்து தப்பிக்க முயன்றபோதும், நச்சுப் பொருளை உண்டதாலும் போலீஸ் சித்திரவதையாலும், கள்ளச் சாராயம் அருந்தியதாலும் ஏற்பட்டன.

(a)	1975..	..	33
	1976..	..	20
(b)	1975..	..	61
	1976..	..	27

(c) Deaths were due to natural causes, hanging, trying to escape from Police custody, consuming poison, Police torture and consuming illicit liquor.

1978 ஏப்ரல் 5]

சிதம்பரம் நகரில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி.

350. வினு—திரு துரை கலியமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சிதம்பரம் நகரத்தில் மேலும் குடிதண்ணீர்மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் வேலை எப்போது தொடங்கும்?

விடை—

(அ) அரசு நிலையில் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது.

(ஆ) திட்டத்திற்காகும் செலவை ஏற்கும் வகையில் சிதம்பரம் நகராட்சியின் நிதிநிலைமை உள்ளதா என்பதுபற்றி நகராட்சிகளின் ஆய்வாளரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(a) No scheme is under consideration of the Government. A scheme has been prepared by the TWAD Board.

(b) A report from the Inspector of Municipalities regarding the financial capacity of the Municipality to bear the cost of the scheme is awaited.

வெர்மிகுலைட் படிவங்கள்.

351. வினு—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுக்களுச்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் வெர்மிகுலைட் என்ற படிவங்கள் எந்தெந்த இடங்களிலே கிடைக்கின்றன ?

(ஆ) இதன் உபயோகம் என்ன ?

விடை—

(அ) வெர்மிகுலைட் என்ற படிவங்கள் வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் தாக்லுகா, செவத்தூருக்கருகிலும்; திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டாரத்திலுள்ள நெட்டூரிலும் கிடைக்கின்றன.

(ஆ) வெர்மிகுலைட் படிவம் குறைந்த ஆனல் கூடுதலான அழுத்தம் மற்றும் விரிவாக்கம் தன்மை கொண்ட பொருட்கள் உடையதாக இருப்பதால் காப்புக் கருவியாகப் பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்படுகிறது. குறுக்குச் சுவர் எழுப்புவதற்கும் பிளாக்குகளின் மேற்பாகம் தயாரிக்கவும் மேல் அடைப்புகள் செய்வதற்கும் வெர்மிகுலைட் பயன்படுகிறது. செதிள் நீக்கிய பின்பு வெர்மிகுலைட் தங்கநிறமுடையதாக இருப்பதால், இது அழகுமிகு சுவர் தாள்களாகவும் சுவர் அடுக்குகளை தயாரிக்கவும்,

[1978 ஏப்ரல் 5

இது பயன்படுகிறது, வெர்மிகுலேட் ஒலி கடத்தாத தன்மை உடையதாய் இருப்பதால், ஒலி கடத்தாத தடுப்புகள் செய்ய பயன்படுகிறது. இது மண்வளப்படுத்தவும் பயன்படுகிறது.

(a) Verimiculite is found near Sevathur, Thirupathur taluk, North Arcot district and also near Nettur, Alangulam Block in Tirunelveli district.

(b) Vermiculite finds chief application as an insulating material considering its low bulk density and exfoliated properties. It is used as light weight aggregate for making false ceiling, light roofing, partition walls, etc. In view of the golden colour gained by the mineral after exfoliation, vermiculite is used as a decorative wall, paper and in the manufacture of wall laminates. Vermiculate has acoustic properties and as such it is used for making acoustic blocks for sound insulation. It is also used as a soil reconditioner.

சிதம்பரம் வட்டத்தில் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைகள்.

352. வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் குடியிருப்புமனை கேட்டு இதுவரை எத்தனை மனுக்கள் வந்துள்ளன?

(ஆ) 1—7—77 முதல் இன்றுவரை கொடுக்கப்பட்டது எத்தனை?

விடை—

(அ) 15—1—77 முதல் 10—12—77 வரை 236 மனுக்கள் வந்துள்ளன.

(ஆ) 1—7—77 முதல் 10—12—77 வரை 10 மனைப்பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

காஞ்சீபுரம் ஏகாம்பர ஈஸ்வரர் தேவஸ்தானம்.

353. வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரம் ஏகாம்பர ஈஸ்வரர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலப்பரப்பு முறையே எவ்வளவு?

1978 ஏப்ரல் 5]

(ஆ) 1971, ஏப்ரல் மாதம் முதல் 1977 மார்ச் வரை இவைகளிலிருந்து வந்த வருமானம் எவ்வளவு, வருட வாரியாக?

விடை—

			ஏக்கர்.	செண்ட்.
(அ) நஞ்சை	..	..	1,970	42
புஞ்சை	..	..	37	90
மொத்தம்		..	2,008	32

(ஆ) 1971 ஏப்ரல் முதல் 1977 மார்ச் வரை இவைகளிலிருந்து வந்த வருமானம் பின்வருமாறு :—

வருடம்.	நெல் மரக்கால்.	ரொக்கம். ரூ. பை.
1971 ஏப்ரல் முதல் ஜூன் முடிய	2,643	668.99
1971 ஜூலை முதல் 1972 ,, முடிய	4,827	5,349.12
1972 ஜூலை முதல் 1973 ,, முடிய	2,481	9,008.92
1973 ஜூலை முதல் 1974 ,, முடிய	$2,479\frac{1}{2}$	7,322.47
1974 ஜூலை முதல் 1975 ,, முடிய	2,982	8,295.48
1975 ஜூலை முதல் 1976 ,, முடிய	6,160	5,976.64
1976 ஜூலை முதல் 1977 ,, முடிய	2,249	3,978.32

கொட்டாரக்குப்பம்—நெய்வேலி இணைப்புச்சாலை.

354. வினா—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொட்டாரக்குப்பம்—நெய்வேலி நகர இணைப்புச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

கொட்டாரக் குப்பம்—நெய்வேலியை இணைக்க 18 கி.மீ. தூரத்திற்கு ஏற்கனவே ஒரு மண்சாலை இருக்கிறது. வேறு திட்டம் ஏதும் இல்லை.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

355. வினா—திரு. பாக்கூர் சுப்பிரமணியம் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை அரவையை அபிவிருத்தி செய்ய செலவிடப்பட்ட மொத்த தொகை எவ்வளவு?

(ஆ) அதனால் நாள் ஒன்றுக்கு எத்தனை டன் கூடுதலாக அரவை செய்யும்?

(இ) விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டு வந்த கரும்பு போனஸ் தொகையை நடப்பாண்டில் நிறுத்தியதன் மூலம் ஆலை வளர்ச்சிக்கு எவ்வளவு தொகை கிடைத்தது?

(ஈ) ஆலையிலும் அலுவலகத்திலும் பணிபுரியும் அலுவலர் தொழிலாளர் எத்தனை பேர்?

விடை— (அ) ரூ. 250 இலட்சம்.

(ஆ) 750 டன்கள் (கரும்பை கூடுதலாக அரவை செய்யலாம்).

(இ) விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கரும்பு போனஸ் (கூடுதல் விலை) நிறுத்தப்படவில்லை.

1975-76 மற்றும் 1976-77 கரும்பு பருவங்களில் குறைந்த பட்ச கரும்பின் விலை டன் ஒன்றுக்கு முறையே ரூ. 99, ரூ. 100 ஆக இருந்தது. மேற்கூறிய இரு பருவங்களிலும் அரசு உத்தரவின் பேரில் டன் ஒன்றிற்கு ரூ. 15 அதிகமாக விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டது.

(ஈ) ஆலையின் கரும்பு பிழியும் திறன் விரிவுப்படுத்துவதற்கு முன்னர் பணியாற்றியவர்களின் எண்ணிக்கை—

1. மேற்பார்வை அலுவலர் (Supervisor)	..	70
2. இதர தொழிலாளர்கள் (Others)	..	824
மொத்தம்	..	894

ஆலையின் கரும்பு பிழியும் திறன் விரிவுபடுத்தப்பட்ட பின்னர் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை—

1. மேற்பார்வை அலுவலர் (Supervisor)	..	73
2. இதர தொழிலாளர்கள் (Others)	..	878
மொத்தம்	..	951

அரிசன மாணவர் இல்லம், மன்னார்குடி.

356. வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி பாக்குப்பேட்டைத் தெருவில் உள்ள மாணவர் விடுதிக்காகப் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை.—

மன்னார்குடியில் 90 தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக ரூ. 3,91,500 செலவில் புதிய விடுதிக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் பாக்குப் பேட்டைத் தெருவில் கட்டப்படவில்லை. பழைய தஞ்சாவூர் சாலை பாலகிருஷ்ண நகரில் கட்டப்பட்டு வருகிறது. தற்பொழுது இக்கட்டிடம் அடிமட்டம் வரையில் உயர்ந்துள்ளது.

நாகை தொகுதியிலுள்ள ஏரிகள்.

357 வினா—திரு. ஆர். உமாநாத்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை தொகுதியில் பிரதாபராமபுரம், பலத்தடி, திருப்பூண்டி, காமேசுவரம், வேட்டைக்காரனிருப்பு, காரப்பிடாகை, சிந்தாமணி, சோழவித்தயாபுரம் ஆகிய மாணவாரி கிராமங்களில் இரண்டாண்டுகளுக்கு தண்ணீர் சேமிக்கக்கூடிய ஏரிகள் சீரழிந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) வினாவில் குறிப்பிட்டுள்ள ஏரிகளுள் பொதுப்பணித் துறையின் பராமரிப்பிலுள்ள காமேசுவரம் கிராமத்தில் உள்ள சீரன் ஏரியும் சிந்தாமணி கிராமத்தில் உள்ள திடல் ஏரியும் மட்டுமே பாசன ஏரிகள். 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ஆம் தேதியன்று தஞ்சை மாவட்டத்தில் வீசிய புயலாலும், வெள்ளத்தாலும், இவ்விரு ஏரிகளும் சேதமடைந்து, உடைப்புகளும் ஏற்பட்டன. மற்ற ஏரிகள் புயலால் சேதமடையவில்லை.

(ஆ) உடைப்புகள் தற்காலிகமாக அடைக்கப்பட்டு உள்ளன. ஏரிகள் முன்னிருந்த நிலைக்குச் செப்பனிடுவதற்கான வேலைகள் வரும் அடைப்புக் காலத்தில் மேற்கொள்ளப்படும்.

மதுவிலக்கினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள்.

358 வினா— திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மதுவிலக்கு செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை என்ன?

விடை—

தமிழ்நாட்டில் மதுவிலக்கு செய்யப்பட்டதால் சுமார் 51,000 மரமேறும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

[1978 ஏப்ரல் 5

துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிரிழந்தவர் குடும்பங்களுக்கு உதவி.

359. வினு—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை அளிப்பாரா—

சென்னையில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் வருகையை ஒட்டி காட்டப்படவிருந்த கருப்புக்கொடி நிகழ்ச்சியின் போது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தபோது இறந்தவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டதா ?

விடை—

திரு. தீனன், திரு. பாபு, மற்றும் அடையாளம் தெரியாத, பின்னர் திரு. சுப்பிரமணியம் என்று தெரிய வந்த மூவர் குடும்பங்களுக்கும் தலா 5,000 ரூபாய் வீதம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்க ஆணையிடப்பட்டது. திரு. தீனன், திரு. பாபு, அவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. ஆனல் திரு. சுப்பிரமணியம் என்பவருடைய உறவினர்கள் யாரும் முன்வரவில்லையாதலால் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவரது குடும்பத்துக்கென வழங்கப்பட்ட காசோலையை திரும்ப அனுப்பிவிட்டார்.

பூண்டி புஷ்பம் கல்லூரி.

360. வினு—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் பூண்டி புஷ்பம் கல்லூரி மாணவர்கள் 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டனரா ?

(ஆ) ஆமெனில், அதற்கான காரணங்கள் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் அன்று காலை புஷ்பம் கல்லூரி மாணவர்கள் தாங்கள் பிரயாணம் செய்து கொண்டிருந்த இரயில் வண்டியின் அபாய சங்கிலியை இழுத்துப் பல இடங்களில் நிறுத்தி ஊறுவிளைவித்தனர். அமைதி காக்க தலையிட்ட காவலரை கற்களால் தாக்கினர். கல்வீச்சில், மூன்று காவலர்கள் காயம் அடைந்தனர். இரயில்வே சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்தனர், அன்றைய தினமே குடிகாடு இரயில்வே நிலயத்தில் மாணவர்கள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டு ரூ. 3,000 மதிப்புள்ள இரயில்வே சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தனர். இந்நிகழ்ச்சிகள் சம்பந்தமாக 20 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

1978 ஏப்ரல் 5]

பெண்கள் உயர்நிலைப்பள்ளி, காவேரிப்பட்டினம்.

361—Dr. K. SAMARASAM—Will the Hon. the Minister for Education be pleased to state :

Whether there is any proposal with the Government to start a separate High School for girls at Kaveripattinam in Dharmapuri district ?

விடை—

இல்லை. ஆனல் 1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 5 ஆம் நாளன்று காவேரிப்பட்டிணம் அரிமா சங்கத் தலைவரிடமிருந்து காவேரிப்பட்டிணத்தில் 1978-79 ஆம் ஆண்டில் ஒரு அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி துவங்க வேண்டி பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்ட, ஓர் விண்ணப்பத்தைப் பரிசீலித்து தக்க குறிப்புரைகளுடன் மீண்டும் அனுப்பும்படி பள்ளிக் கல்வி இயக்குநர், சேலம் முதன்மைக் கல்வி அலுவலரையும் மகளிர் பள்ளி ஆய்வாளரையும் கேட்டுக் கொண்டுள்ளார். அச் செயற் குறிப்புரை தக்க வடிவத்தில் உரிய காலத்தில் பெறப்பட்டதும் அரசு அதனை பரிசீலித்து தக்க முடிவெடுக்கும்.

பாட நூல் நிறுவன வெளியீடுகள்.

362. வினு—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் அயல் நாட்டு ஆங்கிலப் புத்தகங்களைத் தமிழாக்கம் செய்து வெளியிட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இதுவரை வெளியிட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் மைய அரசின் வட்டார மொழிகளின் வளர்ச்சிக்காகத் தயாரித்துள்ள ஒரு கோடி ரூபாய்த் திட்டத்தின் கீழ் 71 நூல்களையும் இத்திட்டத்திற்கு முன்பு 97 நூல்களையும் (தமிழ் வெளியீட்டுக் கழகம் மூலமாக) ஆக மொத்தம் 168 நூல்களை வெளியிட்டுள்ளது.

[1978 ஏப்ரல் 5

363 வினு—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் 1977 ஆகஸ்டு முடிய கல்லூரிக்கான பாட நூல்கள் எத்தனை வெளியிட்டுள்ளது ?

விடை—

மைய அரசின் ஒரு கோடி ரூபாய்த் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் 1977 ஆகஸ்டு முடிய 609 கல்லூரிப் பாட நூல்களும், இத்திட்டத்திற்கு முன்பு 185 நூல்களும் ஆக மொத்தம் 794 நூல்களை வெளியிட்டுள்ளது. இதில் 626 மூல நூலும் 168 பிறமொழி தமிழாக்க நூலும் ஆகும்.

வீட்டு அடமானக் கடன் சங்கம்.

364 வினு—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு அடமானக் கடன் சங்கம் எல்.ஐ.சி யிடம் இருந்து,இதுவரை பெற்றுள்ள கடன் எவ்வளவு ?

(ஆ) அதன் வட்டி விகிதம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): விரைப்பட்டியல் * பேரவையில் வைக்கப் பட்டிருக்கிறது.

அலுமினியம் ப்ளோரைட் தொழிற்சாலை.

365 வினு—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) அலுமினியம் ப்ளோரைட் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் கூட்டுத்துறை யில் ரூ. 350 இலட்சம் முதலீட்டில், வருடம் ஒன்றுக்கு 6,000 டன்கள் அலுமினியம் ப்ளோரைடு உற்பத்தி செய்வதற்காக தமிழ்நாடு ப்ளோரைடு அண்டு அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தை நிறுவியுள்ளது. இத்தொழிற்சாலையை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமாகிய இராமநாத புரம் மாவட்டத்தைச் சேர்ந்த மணலூர் கிராமத்தில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

* 404-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றது.

1978 ஏப்ரல் 5]

பொருட்காட்சிகளுக்கான செலவு.

366 வினு—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவசர காலச் சட்டம் அமுலில் இருந்த காலத்தில் தமிழக அரசின் சார்பில் நடத்தப்பட்ட பல்வேறு பொருட் காட்சிகளின் லாப நஷ்ட கணக்குகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

விடை.—

பொது (செய்தி, மக்கள் தொடர்பு)த் துறையின் பொருட் காட்சிப் பிரிவு மாநில அளவிலும் இதர மாநிலங்களில் நடைபெறும் பொருட்காட்சிகளில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்கிறது. அப்படி நடைபெறும் பொருட்காட்சிகள் லாப நோக்கோடு நடத்தப் படுவன அல்ல. மக்களுக்கு அரசின் நடவடிக்கைகளை விளக்கு வதுடன் பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலா பயணிகளை கவரும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறது. எனவே, இப்பொருட்காட்சி கள் லாப நஷ்ட பரிசீலனைக்கு உட்படுபவை அல்ல.

சிதம்பரம் வட்டத்தில் பயிர்களுக்குச் சேதம்.

367. வினு—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள் ளப்பெருக்கினுல் எவ்வளவு நிலங்களில் மகசூல் பாதிக்கப்பட்டது?

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகை கொடுக் கப்பட்டதா?

விடை —

(அ) சிதம்பரம் வட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் மூழ்கிய 47,500 ஏக்கர் நெல் பரப்பில் 21,000 ஏக்கர் நெல் பயிர் அழிந்தது. மூழ்கிய மற்ற நிலங்களில் மகசூல் 10 சதவிகிதம் பாதிக்கப்பட்டுள்ளது, ஏக்கருக்கு 150 கிலோ மகசூல் குறைவாகக் கிடைத்துள்ளது. மேலும் 80.73 ஏக்கர் நிலப்பரப்பில் வாழையும், 300 தென்னை மரங்களும் முழுவதும் பாதிக்கப்பட்டன.

(ஆ) (1) வெள்ளத்தால் நெல் பயிர் முழுவதும் பாதிக்கப் பட்ட சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைக்காரர்களுக்கு மறு படியும் நாற்றுவிட ஏக்கருக்கு 20 கிலோ வீதம் விதைநெல் இலவசமாக வழங்கப்பட்டது.

(2) வாழை முழுவதும் அழிந்துவிட்ட சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைக்காரர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 100 வீதம் மான்யத் தொகை வழங்கப்பட்டது.

(3) தென்னே மரங்களை இழந்த சிறு விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

(4) இவை தவிர பாதிக்கப்பட்ட சம்பா நெல் பயிர்களுக்கு மேலுரம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளைப் பொறுத்தவரை 25 சதவீத மான்யவிலேயில் உரங்கள் வழங்கப்பட்டன.

(5) எல்லா விவசாயிகளுக்கும் 25 சதவிகித மானிய விலேயில் பூச்சி பூசாண மருந்துகள் 31-3-1978 வரை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(6) வெள்ளத்தால் அழிந்த நிலங்களில் மீண்டும் தாளடி பயிரிட 15 கூட்டுறவு சங்கங்களின் மூலமாக 228 விவசாயிகளுக்கு ரூ. 1,66,000 கடனுக வழங்கப்பட்டுள்ளது.

கீழ்ப்பட்டாம்பாக்கம் கிராமத்தில் எடுக்கப்பட்ட நிலங்கள்.

683 வினு—திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு நிதிஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ணுருட்டி வட்டம் நெல்லிக்குப்பத்தைச் சேர்ந்த கீழ்ப்பட்டாம்பாக்கம் கிராமத்தில் நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு?

(ஆ) அவைகளில் நிலமில்லா விவசாயிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலம் எவ்வளவு?

விடை—

(அ) 80.60 ஏக்கர்கள்,

(ஆ) 52.01 ஏக்கர் நிலங்கள் 29 நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கின்றன. மீதியுள்ள 28.59 ஏக்கர்கள் சம்பந்தமாக உபரி நிலங்களை ஏற்கனவே வாங்கியவர்களால் உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால், நிலங்கள் ஒப்படை செய்வது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தூர விரைவு வண்டிகளின் கால அட்டவணை.

369 வினு—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு போக்கு ரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீக்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஓடும் நெடுந்தூர விரைவு வண்டிகளில் இந்தெந்த நேரத்தில் இந்த இடத்தில் சாப்பாடு சிற்றுண்டிகளுக்கு இவ்வளவு நேரம் என்று குறிப்பிட்ட அட்டவணைகள் வைக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம். என்றல் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ் நாட்டில் ஓடும் நெடுந்தூர வண்டிகளில் அந்த தடத்திற்கான கால அட்டவணைகள் பொருத்தப்பட்டுள்ளன. கால அட்டவணைகளில் சிற்றுண்டி என உடுக்குறியிட்டு காட்டப்பட்டுள்ளது. இது தவிர கால அட்டவணைகளில் சிற்றுண்டிக்காக நிற்கும் இடங்களில் வந்து சேரும் நேரம், புறப்படும் நேரம் காட்டப்பட்டுளளது.

கோவையில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள்.

370 வினு—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரம் கிழக்குத் தொகுதி வி. கே. கிருஷ்ண மேனன் ரோட்டில் உள்ள வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளில் மின் விளக்குகள் இல்லாமலும், நல்ல குடி தண்ணீர் இல்லாமலும் மக்கள் துன்பப்படுவது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த வசதிகளை செய்து கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ): கோவை நகரம், கிழக்குத் தொகுதி வி. கே. கிருஷ்ணமேனன் ரோட்டில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் சில அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கான மதிப்பீடுகள் வீட்டு வசதி வாரியத்தின் ஆய்வில் உள்ளன.

(a) & (b); Estimates for the provision of certain amenities to the tenements at V. K. Krishna Menon Street, East Coimbatore, are under serutiny in the Tamil Nadu Housing Board.

நாகர்கோயில்-களியக்காவிளை சாலை.

371 வினா—திரு. போ. விஜயராகவன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலை 47-ல் நாகர்கோவிலிலிருந்து களியக்காவிளை வரையிலான சாலைக்கு ஆஸ்பால்ட் காங்கிரீட் போட திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

களியக்காவிளையிலிருந்து நாகர்கோவில் வரையுள்ள சாலை உள்ளடங்கிய கிலோ மீட்டர் 599-லிருந்து 631 மற்றும் கிலோ மீட்டர் 640.42 தேசிய நெடுஞ்சாலை 47-ல் 63 மில்லி மீட்டர் கனம் நிலக்கில் மெக்காடம் போடுவதற்கும் அதன் மேல் 20 மில்லி மீட்டர் கனமுள்ள முள் காந்த நிலக்கில் விரிப்பும், போடுவதற்கான பணிகள் வெள்ள நிவாரண நிரந்தர நிலைக்கு கொண்டு வரும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள இருக்கிறது. இதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர், இப் பணிகள் நிறைவேற்றப்படும். ஆனால் மத்திய அரசின் ஒப்புதல் எப்போது கிடைக்குமென்று. சொல்வதற்கு இல்லை,

கஞ்சா பயிரிடல்.

372 வினா—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த மலைப் பகுதியில் எத்தனை ஏக்கர் கஞ்சா பயிரிடப்படுகிறது?

(ஆ) தென்னாற்காடு மாவட்டம் கல்வராயன் மலைப் பகுதியில் (Ganja Plantations) பயிரிடும் செயற்குறிப்பு ஏதும் உண்டா?

விடை—

(அ) தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் கஞ்சா பயிரிடப்படுவதாகத் தகவல் இல்லை.

(ஆ) அத்தகைய செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

கீழ்பவானி பாசனத் திட்டம்.

373 வினா—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், கீழ்பவானி பாசனத் திட்டம் புன்செய் திட்டமா? நன்செய் திட்டமா?

விடை—

கீழ்பவானி திட்டத்தின்கீழ், முதலில் திட்டமிட்டபடி, 1,97,000 ஏக்கரில் பாசனம் பெறும் புன்செய் பயிர்களும், நீர் கசிகின்ற நிலங்களான 10,000 ஏக்கரில் நன்செய் பயிரும் பயிரிட வகை செய்யப்பட்டது.

1959-1960 முதல், ஆயக்கட்டின் ஒரு பாதிக்கு I-வது முறைப்பாசன காலத்தில் அதாவது ஆண்டுதோறும் ஆகஸ்டு 15 முதல் டிசம்பர் 15 வரை நன்செய் பயிர் புன்செய் பயிர் என்ற பாகுபாடு இல்லாமல், நீர்ப்பாசனம் அளிக்கப்பட்டு வந்துள்ளது. ஆயக்கட்டின் மறுபாதிக்கு II-வது முறைப் பாசன காலத்தில் அதாவது ஒரு ஆண்டில் டிசம்பர் 16-ம் நாள் தொடங்கி மறு ஆண்டில் மார்ச் 15-ம் நாள் வரையிலும் நீர்ப்பாசனம் புன்செய் பயிர்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது.

பழனி அரசு மருத்துவமனை.

374 வினா—திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

மதுரை மாவட்டம் பழனி அரசு மருத்துவ மனையில் உள் நோயாளிகளின் வருகை தினமும் அதிகரித்து வருவதால் ஏற்படும் இட நெருக்கடியைத் தவிர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

பழனி மருத்துவமனையில் உள் நோயாளிகளின் எண்ணிக்கையோ அல்லது புற நோயாளிகளின் எண்ணிக்கையோ அதிகரிக்கவில்லை. ஆகையினால் இந்த மருத்துவமனையில் இட நெருக்கடி ஏதுமில்லை.

புதிய உயர்நிலைப் பள்ளிகள்.

375 வினா—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் கல்வி ஆண்டில் புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த மாவட்டத்தில் எத்தனை பள்ளிகள் ?

விடை—

(அ) உண்டு.

(ஆ) இன்னும் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் வராத நிலையில், எந்தெந்த மாவட்டத்தில் எத்தனை பள்ளிகள் திறக்கப்படும் என்பதைச் சொல்ல இயலாது.

நீலகிரி மாவட்டத்தில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள்.

376 வினா—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் 1976 ஆம் ஆண்டு வீட்டுமனைப் பட்டாக்கள் எவ்வளவு வழங்கப்பட்டுள்ளன ?

விடை—

நீலகிரி மாவட்டத்தில் 1976 ஆம் காலண்டர் ஆண்டில் 4,739 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

தர்மபுரி மாவட்ட நூலகக் கட்டடம்

377 வினா—திரு. கா. அப்பனு கவுண்டர் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் மாவட்ட நூலகக் கட்டிடம் கட்ட அரசு ஏதேனும் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முடியும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): தர்மபுரியில் தற்போது மாவட்ட மைய நூலகம். அம்மாவட்ட வளர்ச்சிக் கழகத்துக்கு சொந்தமான "அண்ணா—காந்தி மணி மண்டபம்" என்ற கட்டிடத்தில் மாதம் ரூ. 300 வாடகையில் இயங்கி வருகிறது. அக்கட்டிடத்தை மாவட்ட வளர்ச்சிக் கழகம் ரூ. 3,97,500 செலவில் நூலக ஆணைக்குழுவுக்கு விலைக்கு விற்றுவிட முன்வந்துள்ளது. அக்கட்டிடத்தை வாங்கிட அவ்வாணைக் குழுவுக்கு நிதி வசதி இல்லாததால் அரசிடம் மானிய உதவி கோரப்பட்டு அக்கோரிக்கைகள் அரசின் ஆய்வில் உள்ளது.

திருவல்லிக்கேணி தொகுதியில் குடிசைப்பகுதி மாற்று வாரியப் பணிகள்.

378 வினா—திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவல்லிக்கேணி தொகுதி லாயிட்ஸ் சாலை பப்பு மஸ்தான் தர்கா என்ற பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட குடியிருப்புகள் எத்தனை ?

(ஆ) இந்தக் குடியிருப்பு எந்த ஆண்டு துவக்கப்பட்டது? எந்த ஆண்டு முடிவுற்றது?

(இ) அந்தப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட குடிசைவாசிகள் கட்டப்பட்ட குடியிருப்பில் குடியமர்த்தப்பட்டார்களா ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) பப்பு மஸ்தான் தர்கா பகுதியில் குடிசைப்பகுதி மாற்றுப்பணி பல கட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக 96 குடியிருப்புகள் கட்டப்பட்டன. இந்த 96 குடியிருப்புகளில் மாவட்டங்களில் (Transit Camps) குடியமர்த்தப்பட்ட 92 குடும்பங்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. (பிப்ரவரி திங்கள் 1978) இரண்டாவது கட்டத்தில் 72 குடியிருப்புகள் கட்டப்பட்டு. அவை குடிபுகும் நிலையில் உள்ளன. கெனல் பாங்க் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள 72 குடும்பங்களுக்கு, பப்பு மஸ்தான் தர்கா பகுதியில் குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்யும் பணி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் முடிவு செய்யப்பட்டு வருகிறது.

(a), (b) & (c): The Clearance of Pappu Masthan Durga area is being taken up in stages. In the first stage 96 tenements were constructed. In these tenements, 92 families found residing in the transit camp at the time of allotment (February, 1978) were provided with tenements. In the second stage, 72 tenements have been constructed and are ready for occupation. Allotting those tenements to 72 families shifted from the Canal Bank area to Pappu Masthan Durga is being finalised by the Tamil Nadu Slum Clearance Board.

தருமபுரி மாவட்டத்தில் நியாய விலை கடைகள்.

379 வினா—டாக்டர் கே. சமரசம் ; மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தருமபுரி மாவட்டத்தில் கிராமப் பகுதிகளில் நியாய விலைக்கடைகள் திறக்க அரசு ஏதேனும் செயல் திட்டம் வைத்துள்ளதா ?

(ஆ) எப்போது அமுலாக்கப்படும் ?

விடை —

(அ) மற்றும் (ஆ) நியாயவிலைக் கடைகளைத் திறக்கும் திட்டத்தை முதற் கட்டமாக நெல்லை, மதுரை, முகவை, குமரி மாவட்டங்களில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களுக்குப் படிப்படியாக விரிவாக்கப்படும்.

அரூர் வட்டத்தில் வாய்க்கால் மராமத்து.

380 வினா—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரூர் வட்டம் கணக்கன் அணை, லிங்காபுரம் ஏரி வாய்க்கால் உடைபட்டு பழுது பார்க்காமல் உள்ளதா ?

விடை—

அரூர் வட்டம், லிங்காபுரம் ஏரி வாய்க்கால் 1977-ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்தது. இதனை சீரமைக்கும் பணி 2/78-ல் ரூ 10 500. மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வேலை 3 78-ல் முடிவடையும்.

அரசுப் பண்ணைகளில் விவசாயக் கூலி.

381 வினா—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசு சார்பில் நடைபெறும் பண்ணைகளில் விவசாய தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி விகிதம் என்ன ?

விடை — வேளாண்மைத் துறையால் நடத்தப்படும் அரசு விதைப் பண்ணைகளில் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்கு 2—3—1976 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசு ஆணை (பலவகை) எண். 164-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலி வழங்கப்படுகிறது. பல்வேறு விவசாயப் பணிகளுக்கு வழங்கப்படும் கூலி விவரங்கள் வருமாறு :—

பணியாளர் வகை.	ஒரு நாளைக்கு குறைந்த பட்சக் கூலி.	
	வயது வந்தவர்.	வயது வராதவர் (சிறியவர்).
(1)	(2)	(3)
	ரூ.	ரூ.
1 சொந்த உழவுமாடு மற்றும் உழவு கலப்பையோடு உழுபவர்கள்.	9 00	..
2 சொந்த உழவுமாடு மற்றும் உழவு கலப்பையின்றி உழுபவர்கள்.	5 00	..

பணியாளர் வகை.	ஒரு நாளைக்குக் குறைந்த பட்சக் கூலி.	
	வயது வந்தவர்.	வயது வராதவர் (சிறியவர்)
(1)	(2)	(3)
	ரூ.	ரூ.
3 விதைக்க, நாற்று பிடுங்க..	5 00	3 00
4 நாற்று நட, களையெடுக்க..	3 50	2 10
5 அறுவடை செய்யவும் கட்டு அடிக்கவும்	5 00	3 00
6 மற்ற விவசாய வேலைகள் (வயல் வரப்புகளை சீரமைத்தல், தென்னை, பாக்கு போன்ற உயர்ந்த மரத்தில் காய் பறித்தல், உரங்களைச் சுமந்து செல்லுதல் போன்றவை).	5 00	3 00

1975-ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட சம ஊதிய சட்டத்தின் படி பெண் தொழிலாளர்களுக்கும் ஆண் தொழிலாளர்களைப் போல சம ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை பொருட்காட்சியில் விவசாயப் பிரிவு.

382 வினா திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நடைபெற்றுவரும் அகில இந்திய சுற்றுலா, பொருட்காட்சியில் விவசாயப் பிரிவில் பச்சைப் பயறுக்கு சொல்லில் பெயர் எழுதி வைத்துள்ளது அரசிற்கு தெரிய

(ஆ) ஆம் எனில், அதில் மாற்றம் செய்ய எடுத் வடிக்கை என்ன ?

விடை—

(அ & ஆ) அகில இந்திய சுற்றுலா பொருட்காட்சியில் விவசாய அரங்கில் புதுடில்லி பூசா ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்ட பயறுவகையான "பூசா மூங்" விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன் பெயர் அப்படியே தமிழில் எழுதி வைக்கப்பட்டிருந்தது. பிறகு இப்பெயரை "பைசாகி பயறு" என்று மாற்றி எழுதி வைக்கப்பட்டது.

[1978 ஏப்ரல் 5

ஐம்ஞு மருதூரில் மருத்துவமனை.

383 வினு திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்ட ஐவ்வாது மலையில் உள்ள ஐம்ஞு மருதூரில் அரசினர் மருத்துவமனை (Gove nment Hospital) ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

(இ) இதற்காக அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) வடஆற்காடு மாவட்டம், ஐவ்வாது மலையில் உள்ள ஐம்ஞு மருதூரில் அரசினர் மருத்துவமனை (Government Hospital) ஆரம்பிக்கும் திட்டம் எதுவும் இப்போது இல்லை. எனினும் அங்கு ஒரு அரசினர் மருந்தகம் (Government Dispensary) பிப்ரவரி 1977-ல் ஆரம்பிக்கப்பட்டு செயலாற்றி வருகிறது.

(ஆ) & (இ) —இவ்வினுக்களுக்கு இடமில்லை.

கீரமங்கலத்தில் பெண்கள் உயர் நிலைப்பள்ளி

384 வினு—திரு. டி. புஷ்பராஜு: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் டவுன் பஞ்சாயத்தில் பெண்கள் உயர் நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) தற்போது இல்லை. இது பற்றிய கருத்து பள்ளிக் கல்வி இயக்குநர் மூலமாக பெறப்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1978 ஏப்ரல் 5]

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள செவிடர், குருடர் பள்ளிகள்.

385 வினு—திரு. டி. புஷ்பராஜு: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் எத்தனை செவிடர், குருடர் பள்ளிகள் இருக்கின்றன?

(ஆ) அதனை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா

விடை—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் காது கேளாதோர்க்கு ஒரு பள்ளியும் (22 மாணவர்கள், 2 ஆசிரியர்கள்). பார்வை யிழந்தோர்க்கு ஒரு பள்ளியும் (12 மாணவர்கள் 2 ஆசிரியர்கள்) உள்ளன.

(ஆ) தற்போது இல்லை.

புதுக்கோட்டை மா[illegible] அரிசனங்களுக்கு வீடுகள்.

386 வினு— திரு. [illegible] ஜு: மாண்புமிகு அரிசன நல துறை அமைச்சர் [illegible]ய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கே[illegible]ாவட்டத்தில் உள்ள ஏழை அரிசனங்கட்கு வீடு [illegible]காடுக்க உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என[illegible]தன் விபரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கொரும்பாலூர், இடையாத்தூர், அம்மஞ்சி, ஒக்கூர், பச்சிக்கோட்டை, ஆகிய 5 கிராமங்களில் அரிசனங்கட்கு 185 வீடுகள் கட்டுவதற்கு அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் தக்காவிக் கடன் நிலுவைகள்.

387 வினு—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், கோவில்பட்டி, விளாத்திக் குளம், ஒட்டப்பிடாரம், சங்கரன்கோவில் ஆகிய நான்கு தாலுகாக்களில் அரசுக்கு வர வேண்டிய தக்காவிக் கடன் நிலுவைகள் எவ்வளவு?

[1978 ஏப்ரல் 5

விடை—

நெல்லை மாவட்டம், கோவில்பட்டி, விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம், சங்கரன்கோவில் ஆகிய நான்கு வட்டங்களில் 1978ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31ஆம் நாள் அன்று உள்ளவாறு, அரசுக்கு வரவேண்டிய தக்காவிக் கடன் நிலுவை பின்வருமாறு :—

(1) கோவில்பட்டி வட்டம்	..	ரூ. 14,14,783
(2) விளாத்திகுளம் வட்டம்	..	ரூ. 9,42,834.
(3) ஒட்டப்பிடாரம் வட்டம்	..	ரூ. 7,72,751.
(4) சங்கரன்கோவில் வட்டம்	..	ரூ. 32,66,861.

சங்கரன்கோவில் வட்டத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

388 வினு திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விணுவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தாலூகா, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் 1972-ஆம் ஆண்டு முதல் இன்று வரை எத்தனை கிராமங்களில் எத்தனை அரிசனங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன ?

விடை—

வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கிராமத்தின் பெயர்.			அளித்த பட்டாக்களின் எண்ணிக்கை.
1. அய்யனேரி	..	..	19
2. சங்குப்பட்டி	..	..	17
3. அரியநாயகிபுரம்	..	..	15
4. மகாதேவர் பட்டி [கலிங்கப்பட்டி]	..	..	12
5. கள்ளிகுளம் (சேவல்குளம்)	..		11
மொத்தம்			74

1978 ஏப்ரல் 5]

விவசாயத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைகள்.

389 விணு—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு நிதி அமைச்சர்தயவு செய்து கீழ்க்கண்ட விணுக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சொந்த வீட்டுமனை இல்லாத விவசாயத் தொழிலாளர்கள் எத்தனை பேர், மாவட்ட வாரியாக ?

(ஆ) இவர்களுக்கு ஐந்தாண்டுக்குள் வீட்டு மனைகள் கொடுக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

(அ) விவரங்கள் இல்லை.

(ஆ) இல்லை.

திருச்சிராப்பள்ளியில் வீட்டுமனைகள்

390 விணு—திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விணுவுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் அடிக்கடி வெள்ளத்தால் பாதிக்கப்படும் நடுத்தர, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மேட்டுப்பகுதியான இடங்களில் வீட்டு மனை வழங்க செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நடைபெறும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டத்தினுல், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அடிக்கடி வெள்ளத்தால் பாதிக்கப்படும் நடுத்தர, தாழ்த்தப்பட்ட 2,127 நபர்கள் பயனடைந்துள்ளனர். இது குறித்து திருச்சிராப்பள்ளி கூடுதல் ஆட்சியாளர், மேல் நடவடிக்கை எடுத்து வருகிருர்.

செஞ்சி வட்டத்தில் வழங்கப்பட்ட நிலப்பட்டாக்கள்.

391 விணு—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விணுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னுர்க்காடு மாவட்டம், செஞ்சி வட்டத்தில் 1976-77, 1977-78 ஆண்டுகளில் நிலப்பட்டா கோரி மனு மனு செய்துள்ளவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்கள் எத்தனை பேருக்கு நிலப்பட்டா தரப்பட்டது?

[1978 ஏப்ரல் 5

விடை—

(அ) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி வட்டத்தில் 1976-77 ஆண்டு 343 பேர்களும், 1977–78 ஆம் ஆண்டு 359 பேர்களும் நிலப்பட்டா கோரி மனு செய்துள்ளனர்.

(ஆ) அவர்களில் 1976–77 ஆம் ஆண்டில் 113 பேர்களுக்கு 75–14 ஏக்கரும், 1977-78 ஆம் ஆண்டில் 273 பேர்களுக்கு 187-55 ஏக்கரும் நில அடமானம் செய்யப்பட்டது.

செஞ்சி வட்டத்தில் வழங்கப்பட்ட மனைப்பட்டாக்கள்.

392 வினா திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி வட்டத்தில் 1971-72, 1972-73, 1973-74, 1975-76 ஆம் ஆண்டுகளில் எத்தனை பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா தரப்பட்டது ?

(ஆ) இன்னும் எத்தனை பேர்களுக்கு வீட்டுமனை பட்டா தரப்படாமல் இருக்கிறது ?

விடை—

(அ) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி வட்டத்தில் 1971-72, 1972-73, 1973-74, 1975-76-ஆம் ஆண்டுகளில் வீட்டு மனைப் பட்டாக்கள் தரப்பட்ட நபர்களின் எண்ணிக்கை விபரம் வருமாறு :—

1971-72	..	..	..	190
1972-73	..	..	..	102
1973-74	..	..	..	420
1975-76	..	..	..	260

(ஆ) இன்னும் வீட்டு மனைப் பட்டாக்கள் தரப்படாத நபர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு :—

1971-72	..	..	..	10
1972-73	..	..	..	தரப்படாத நபர் எவரும் இல்லை.
1973-74	..	..	..	81
1975-76	..	..	..	205

1978 ஏப்ரல் 5]

மின் திட்டங்களில் செப்புக் கம்பிகள் திருடு.

393 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 முதல் 1977 மார்ச் முடிய செங்கல்பட்டு, வேலூர், சென்னை ஆகிய மின்விசை லைனில் உள்ள செப்புக் கம்பி வெட்டி, திருட்டுப் போனதன் அளவும் மதிப்பும் எவ்வளவு வருடவாரியாக ?

(ஆ) அதில் எவ்வளவு கண்டு பிடிக்கப்பட்டது ? எவ்வளவு கண்டு பிடிக்காமல் விடப்பட்டது ?

(இ) இது சம்பந்தமாய் மின் துறையிலேயே யாரேனும் வேலை நீக்கம் செய்யப்பட்டார்களா ?

(ஈ) எதிர் காலத்தில் இவைகளை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) 1972 முதல் 1977 மார்ச் வரை திருட்டுப் போன செப்புக் கம்பிகளின் விவரம் கீழ் வருமாறு :—

வருடம்			சென்னை மின் திட்டம்	
			திருடப்பட்ட செப்புக் கம்பியின் நீளம்.	மதிப்பு.
			கி.மீ.	ரூபாய்.
1972-73	....	....	52.704	72,530
1973-74	....	....	59.660	92,596
1974-75	....	....	66·240	123,441
1975-76	....	....	38.070	71,100
1976-77	....	....	54.845	111,710
மொத்தம்	..		271,519	471,377

செங்கற்பட்டு மின் திட்டம்.

வருடம்.			திருடப்பட்ட செப்புக் கம்பியின் நீளம்.	மதிப்பு.
			கி.மீ.	ரூபாய்
1972-73	....	....	6.540	20,257
1973-74	....	....	27.72	92,4 4
1974-75	.....	....	109.67	3,65.560
1975-76	....	....	84.43	2,84,784
1976-77	....	....	45.44	1,52,160
மொத்தம்	..	.	273.800	215,165

வேலூர் மின் திட்டம்.

வருடம்.			திருடப்பட்ட செப்புக் கம்பியின் நீளம்.	மதிப்பு.
			கி.மீ.	ரூபாய்.
1972-73	....	....	8.855	8,555
1973-74	..	....	2.016	1,590
1974-75	....	....	1.395	1,550
1975 76	....	....	3.040	6,375
1976-77	....	....	3.141	10,665
மொத்தம்		..	18,447	28,735

(ஆ)—

			கண்டு பிடிக்கப்பட்ட திருட்டுகள்.	கண்டுபிடிக்காமல் விடப்பட்டவை.
சென்னை	..	..	14	2
வேலூர்	..	..	1	30
செங்கல்பட்டு		..	43	..

(இ) இது சம்பந்தமாக சென்னையில் ஆறு நபர்களும், செங்கற்பட்டில் இரண்டு நபர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர்.

(ஈ) மின்விசை லைன்கள் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. மின்வாரிய அதிகாரிகளும், காவல் துறை உயர்மட்ட அதிகாரிகளும் ஒவ்வொரு மாதமும் கலந்து ஆலோசனை செய்து தேவையான இடங்களில் தீவிர கண்காணிப்புகளை வலியுறுத்துவதோடு இத்திருட்டுகளை குறைப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

நரியாப்பட்டு கிராமத்திலுள்ள பாட்டை புறம்போக்கு நில ஒப்படை.

394 வினா—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை வட்டம், நரியாப்பட்டு மதுரா, கோவு கிராமத்தில் வசிக்கும் கிறிஸ்தவர்கள் மயானத்திற்கு பயன்படுத்தி வரும் இடத்தை ஒப்படை செய்யக்கோரி 9-11-1976ல் வட்ட ஆட்சியாளர் அவர்களின் அறிவுரைப்படியும், ஊராட்சி மனறத்தின் ஒப்புதல் பெற்றும் அனுப்பிய மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை—

வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், நரியாப்பட்டு கிராமம், சர்வே எண் 87-இல் '' பாட்டை புறம்போக்கு '' என்று கிராமக் கணக்கில் பாகுபடுத்தப்பட்டுள்ள 1 ஏக்கர் 9 சென்ட் நிலத்தில், ஒரு பகுதியை இடுகாடாக ஒதுக்கித் தரும்படி கிறிஸ்தவர்கள் கோரியிருந்தனர். ஆனால் இந்நிலத்திற்கு அருகில் சர்வே எண் 88—ல் குடிநீருக்காகப் பயன்படுத்தப்படும் குளம் இருப்பதாலும், சர்வே எண். 87 நிலம் இடுகாடாக உபயோகப்படுத்தினால். குளத்திலுள்ள குடிநீர் இடுகாடு வழி கசிந்து வந்து, மக்கள் நலம் பாதிக்கப்படும் என்று கிராமத்தில் எதிர்ப்பு இருப்பதாலும், சர்வே எண் 87 இல் உள்ள நிலம் ஒப்படை செய்ய சாத்தியமில்லை என்று கருதப்பட்டது. எனினும் நரியாப்பட்டு கிராமத்தில் சர்வே எண் 28-1 இல் கிறிஸ்தவர்களுக்கு இடுகாடாக உபயோகிக்கத் தகுந்த இடம் ஒதுக்கித் தரலாம் என்று கருதி அது குறித்து வட ஆற்காடு மாவட்ட வருவாய் அலுவலர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

[1978 ஏப்ரல் 5

குடியாத்தம் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம்.

395 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் ; மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடியாத்தம் டவுன் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து எத்தனை வருடங்கள் ஆகின்றன ?

(ஆ) ஆரம்பத்திலிருந்து இதுவரை எத்தனை வீடு கட்டி உள்ளார்கள் ?

விடை—

(அ) குடியாத்தம் டவுன் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் யாதொரு சங்கமும் இல்லை. கனம் உறுப்பினர் அவர்கள் குடியாத்தம் கூட்டுறவு வீடு வசதிச் சங்கம் என்ற பெயரில் உள்ள சங்கத்தைப் பற்றித்தான் வினு எழுப்பி உள்ளார் என எண்ணுகிறேன். குடியாத்தம் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் 20—4—1961ல் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 17 ஆண்டுகள் ஆகின்றன.

(ஆ) சங்கம் ஆரம்பித்த நாளிலிருந்து இதுவரை 255 வீடுகள் கட்டியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:- வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்:

(2) ஒழுங்குப்பிரச்சினைகள்

(அ) அறிவிப்பு கொடுக்கப்பட்ட விஞக்கள் அவையில் விடையளிக்க எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து.

(முற்பகல் 10-10)

திரு. இரெ. இராசமாணிக்கம்: பாயிண்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவரவர்களே, 1-8-77 முதல் இந்த சபையில் பல கேள்விகள் எழுதிக் கொடுத்து இருக்கின்றன. மாதங்கள் 8 ஆகிவிட்டன. கேள்விகள் அனுமதிக்கப்பட்டு இருக்கின்றன என்றும் எனக்குத் தகவல் வந்து இருக்கிறது. 1,400-ம், அதன் தொடர்பான கேள்விகளுக்கு இன்னும் பதில் அளிக்கப்படவில்லை, அதற்குப் பின்னுலே கொடுக்கப்பட்ட கேள்விகள், அதாவது இப்போது 6000-எண் கேள்விகள் கூட இங்கே விடையளிக்க வந்துள்ளன, நீங்களே சொல்லியிருக்கிறீர்கள், 42 நாளைக்குள்......

1978 எப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராசமாணிக்கம் உட்காருங்கள். இங்கேநான்அந்தத்தகவலைவிவரமாகஎப்படி சொல்ல முடியும்? ஒழுங்குப் பிரச்னை கிளப்பினீர்கள். இங்கே நான் அதற்குப் பதில் சொல்ல முடியாது. அறையில் வந்து கேளுங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு தலைவரவர்களே, 'மக்கள் குரல்' பத்திரிகை, மீதும் 'தென்னகம்' பத்திரிகை மீதும் நான் உரிமை பிரச்சினை கிளப்பி இருக்கிறேன். அதற்கு தாங்கள் இன்று அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் என்னை வந்து கேட்டார், நான்ஒப்புக்கொண்டேன். இங்கேவந்துஎதற்காக மறுபடியும் எழுப்புகிறீர்கள்?

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த புதிய அமைச்சரவை ஆரம்பிக்கப்பட்ட பின்னுலே நான் 2,600 கேள்விகள் எழுதிக்கொடுத்து இருக்கிறேன். கடைசியாக, இந்த ஆண்டு ஜனவரி 28-ம் தேதி முதல் பிப்பரவரி 20-ம் தேதி வரையிலும் 715 கேள்விகள் மட்டும் எழுதி இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ராசமாணிக்கத்திற்கு கேள்விகள் எடுத்துக்கொண்டோம், எடுத்துக்கொள்ளவில்லை என்ருவது தகவல் வந்து இருக்கிறது. எனக்கு அது கூட வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு.கிட்டப்பா அவர்கள் கேள்வி எழுதிக்கொடுத்தேன் தகவல் வரவில்லை என்று சொன்னுர்கள் திரு. ராசமாணிக்கம் அவர்களுக்கு தகவல் வந்து இருக்கிறது. தங்களுக்கு வரவில்லை என்ருல் விசாரித்துச் சொல்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: என்னுடையது கொளுத்தப்பட்டு விட்டதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு கிட்டப்பா, நீங்கள் நீண்ட காலம் அனுபவம் பெற்ற உறுப்பினர் கொளுத்தப் பட்டு விட்டதா என்று எந்த நோக்கத்தில் கேட்கிறீர்கள் என்று தெரியவில்லை. பொறுப்புள்ள உறுப்பினர் அப்படி பேசகூடாது. வேண்டுமாஞல் எழுதிக் கொடுங்கள், நான் பதில் சொல்கிறேன், இப்படிப்பட்ட கேள்விகள் நான் அனுமதிக்க முடியாது, உட்காருங்கள்.

திரு. என். கிட்டப்பா: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், பொறுப்புள்ள உறுப்பினர் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

திரு. என். கிட்டப்பா: ஒன்றே ஒன்று சொல்லி விடுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நோ. உட்காருங்கள். கொளுத் தப்பட்டு விட்டதா என்று கேட்கும் அளவிற்குக் கேட்ட பிறகு மேற் கொண்டு உறுப்பினர் கேள்வி கேட்க நான் அனுமதிக்க விரும்ப வில்லை.

(3) உரிமைப் பிரச்சினைகள்

(அ) 'மக்கள் குரல்' 'தென்னகம்' நாளேடுகள் சபை நடவடிக் கைகளை தவறாக வெளியிட்டதாக கூறப்படுவது குறித்து;

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேரவையின் 184-விதியின் கீழ் ''தென்னகம்'' மற்றும் ''மக்கள் குரல்'' பத்திரிகைகளின் மீது அவை உரிமை மீறல் குறித்த அறிக்கைகளைக் கொடுத்துள்ளார். அவற்றை இப்பேரவையில் கொண்டு வர என் அனுமதியை அளிக்கிறேன். திரு. ரகுமான்கான், சுருக்கமாக பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்; மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை விதி 184-ன் கீழ், 'மக்கள்குரல்' 'தென்னகம்' ஆகிய பத்திரிகைகளுக்கு எதிராக இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

31-3-1978 அன்று சட்டப்பேரவையில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு, எஸ். ஆர். இராதா அவர்கள் பேசும்போது மேலவை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவருக்கு அரசினர் தோட்டத்தில் அரசால் ஒதுக்கப்பட்ட வீட்டில் சட்டமன்ற உறுப் பினர் ரகுமான்கான் இரண்டு ஆண்டுகளாக குடியிருக்கிறார். இதனை பகிரங்க ஊழல், வாடகை மோசடி, கொள்ளை அடிக்கிறார்கள் என்று பேசநான் விரும்பவில்லை. வேறு ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் அவர் இருப்பதைப் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. இதே தவறை ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் செய்திருந் தால் மிகப் பெரியதாக்கி, படம் எடுத்து பூதாகாரமாக்கி இருப் பார்கள். ஆளும் கட்சி உறுப்பினர் ஊழல் என்று பிரசாரம் செய்து இருப்பார்கள், என்றும் சொன்னார். அதற்கு நான் சட்டப்பேரவை விதி 81-ன் கீழ் அன்றே தன்னிலை விளக்கம் கொடுத்து இருக் கிறேன். அரசினர் தோட்டத்திலுள்ள 7—ம் எண் வீடு மேலவை உறுப்பினர் திரு. திராவிடமணிக்காக சட்டபூர்வமாக ஒதுக்கப் பட்டது. அந்த வீட்டிற்கான வாடகையையும் மின்சாரக்கட்டணத் தையும் திரு. திராவிட மணி தான் செலுத்துகிறார். அவருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் எனக்கு உள்வாடகைக்கு அவர் விட்டு இருந்தால் அது சட்டவிரோதம். திரு. திராவிடமணி எங்கள் கட்சியை சேர்ந்தவர். என்னுடைய குடும்ப நண்பர் அவரோடு தற்காலிகமாக அவருக்கு ஒதுக்கப்பட்டு இருக்கும் வீட்டில் நான்

வசித்து வருகிறேன், இது சட்டவிதிகளுக்குப் புறம்பானது அல்ல: சாதாரண நடைமுறையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கும் சட்டமன்ற விடுதி அறைகளில், ஆளும் கட்சியை சேர்ந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் அறைகளில், சட்டமன்றஉறுப்பினர்களைத் தவிர வெளியார்களும் தங்கி இருப்பது நடைமுறையாக இருக்கிறது. அதேபோல் நம்முடைய இன்றைய அமைச்சர் ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, கோஷன் பிளாக்கில் அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த 5 ம் எண் இல்லத்தில் ......

திரு. எஸ். ஆர். இராதா; பாயிண்ட் ஆப் ஆர்டர், சார்.

திரு. ஏ. ரகுமான்கான்; நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை; நடைமுறையைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பத்திரிக்கையில் வராதவை களுக்கு விளக்கம் தரவேண்டுமே தவிர, சம்பந்தப்படாத நிகழ்ச்சி களை இங்கே பேசிக்கொண்டு இருக்க கூடாது. நான் அவைகளை நீக்க வேண்டி வரும். தயவுசெய்து தாங்கள் கொண்டு வந்துள்ள உரிமைப்பிரச்னை மீது மட்டும் பேசுங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை. தன்னிலை விளக்கம் தான் கொடுத்துக்கொண்டு போகிறேன். இப்படியெல்லாம் நடைமுறையில் இருந்து இருக்கின்றன ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. ரகுமான்கான், பத்திரிக் கையில் தாங்கள் பேசியது வரவில்லை என்று காரணம் காட்டி பேசுங்கள், அதை விட்டு, வேறு என்னவோ சொல்கிறீர்கள். சீக்கிரம் முடித்து விடுங்கள். நீங்கள் பிரச்னையின் உள்ளே போய்க்கொண்டு இருக்கிறீர்கள். முடித்துவிடுங்கள், இல்லையென்றால் நீக்க வேண்டி வரும்.

திரு. ஏ. ரகுமான்கான்; Much obliged S r, நண்பர் எஸ் ஆர். இராதா அவர்கள்வேறுஒருவருக்கு ஒதுக்கிய வீட்டில் ரகுமான் கான் குடியிருப்பது ஊழல் என்று குறிப்பிட்டுத் தெளிவாகக் சொல்லவில்லை. அப்படியிருக்கும்போது, ''மக்கள்குரல்'' பத்தி ரிகை 30-3-1978 தேதிய ''மக்கள் குரல்'' பத்திரிகை, ''சட்ட சபையில் தி.மு.க, எம்.எல்.ஏ. மீது புகார், வேறு ஒருவருக்கு ஒதுக்கிய வீட்டில் ரகுமான்கான் குடியிருப்பது ஊழல் இல்லையா?'' என்று தலைப்பிட்டும் அப்படி உறுப்பினர் எஸ். ஆர், இராதா பேசியதாகவும் செய்தி வெளியிட்டு இருக்கிறது. உறுப்பினர் எஸ், ஆர். இராதா வேறு ஒருவருக்கு ஒதுக்கிய வீட்டில் குடியிருப்பது ஊழல் என்று குறிப்பிட்டுப் பேசவே இல்லை, தெளிவாக இப்படிப் பட்ட குற்றச்சாட்டு சொல்லவே இல்லை, ஆனால் 'மக்கள் குரல்' பத்திரிக்கையில் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு மக்கள்

[திரு. ஏ. ரகுமான்கான்] [1978 ஏப்ரல் 5

மத்தியில் ஒரு ஊழல் பேர்வழி என்ற எண்ணம் என்மீது ஏற்பட வேண்டுமென்ற முறையில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. இது உரிமை மீறிய செயல்.

அதைப்போல 30-3-1978 'தென்னகம்' பத்திரிகையில் 'எஸ். ஆர். இராதா குற்றச்சாட்டு, சட்டசபையில் பரபரப்பு' என்று வெளியிடப்பட்டிருக்கிறது. மக்கள் மத்தியில் தவருன எண்ணம் ஏற்படும் வகையில் உள்நோக்கத்தோடு இம்மாதிரி வெளியிடப் பட்டிருக்கிறது. இதுவும் உரிமை மீறிய செயல். ஆகையால் இதை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றிய என்னுடைய தீர்ப்பை பின்னல் அறிவிக்கிறேன்.

(3) உரிமைப்பிரச்னைகள்—தொடர்ச்சி

* (ஆ) திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களுடைய குற்றச் சாட்டுக்களை மட்டும் முரசொலி நாளேடு வெளியிட்டுவிட்டு அரசு தரப்பில் கூறப்பட்ட மறுப்பை வெளியிடாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் 'முரசொலி, நாளேட்டின் மீது ஒரு அவை யுரிமை மீறல் பிரச்னையை கொடுத்திருக்கிருர்கள், அதை அவை யில் எழுப்ப அனுமதி அளிக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 184-ன்கீழ் அவை உரிமை மீறல் குறித்த கீழ்க்கண்ட பிரச்னையை அவையில் எழுப்ப தங்கள் அனுமதியை வேண்டுகிறேன்.

தற்போது நடைபெற்று வரும் பேரவைக் கூட்டத்தொடரில் பிரதான எதிர்கட்சியான திராவிட முன்னேற்றக் கழக உறுப் பினர்கள் சிலர் தமிழக அரசின் மீதும் மாண்புமிகு அமைச்சர் கள் மீதும் சில குற்றச்சாட்டுகளை பேரவை விவாதத்தின்போது எழுப்பினர்கள். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு மாண்புமிகு அமைச் சர்கள் தகுந்த ஆதாரத்துடன் மறுப்புகளை பேரவையில் கொடுத் துள்ளார்கள். ஆனல் முரசொலி நாளேட்டில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறிய குற்றச்சாட்டுக்கள் மட்டுமே வெளியிடப் பட்டுள்ளன; அவற்றுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் அளித்த ஆதாரத்துடன் கூடிய மறுப்புகள் வெளியிடப்படவில்லை. உதாரணத்திற்கு கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளைப் பற்றி அவையிலே குறிப்பிட விரும்புகிறேன்.

1978 ஏப்ரல் 5] [திரு. எஸ். ஆர் இராதா]

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வயது உச்சவரம்பு நிர்ணயிக்க இடப்பட்ட அரசு ஆணை குறித்து மாண்புமிகு உறுப்பினர் ப.உ. சண்முகம் அவர்கள் குடியரசுத் தலைவர் ஆட்சியில் இந்த ஆணைஇடப்பட்டது என்றும் இந்த அரசு அதை அப்படியே பின் பற்றுகிறது என்றும் குற்றஞ் சாட்டினர்.

இது முரசொலி நாளேட்டிலே பெரிய எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டது. ஆனல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசு ஆணை அதை ஒட்டிய கோப்புகள் ஆகியவற்றை பேரவையிலே படித்துக்காட்டி, இந்த உத்தரவு மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத திலேதான் அரிசன மக்களுடைய வயதை நிர்ணயிக்கின்ற இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது என்று ஆதாரத்தோடு எடுத்துக் காட்டி ஞர்கள். இந்த மறுப்பு இன்றைய நாள் வரையில் முரசொலி ஏட்டில் எந்தப் பகுதியிலும் வெளியிடப்படவில்லை.

அதைப்போல பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ள நிவாராணப்பணி குறித்து மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பணி நான்காகப் பிரிக்கப்பட்டு, ஒருவருக்கே அளிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு போக்கு. வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மீது எழுப்பினர்கள். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தக்க ஆதாரத்துடன் கோப்புகளைக் கொண்டுவந்து இங்கே படித்துக் காட்டி, அதை மறுத்தார். இந்த மறுப்பினுடைய எந்தப் பகுதியும் முரசொலி நாள் ஏட்டில் வெளியிடப்படவில்லை என்பது மட்டுமல்ல; "பண்ருட்டியிலே ஊழல், ஆளும் கட்சியினருக்கு சலுகைகள்" என்று தலைப்பிட்டு, மிகப்பெரிய அளவு ஊழல் நடந்ததாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இந்த இரண்டு உதாரணங்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் படிப்பதை சீக்கிர மாகப் படியுங்கள். மெள்ள படித்தால் நேரம் வீணுகும்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, நீங்கள் இன்றைக்கு கோபமாக இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே கோபதாபம் ஒன்று மில்லை. நீங்கள் படிக்கத்தான் செய்கிறீர்கள். படிப்பதை வேக மாகப் படிக்கலாமே, இப்படி மெள்ள, மெள்ள படித்தால் அவையின் நேரம் வீணுகும். அதனுல்தான் வேகமாக படியுங்கள் என்கிறேன். இங்கே கோபதாபம் என்று ஒன்றும் சொல்ல வேண்டாம். (திரு வாளர்கள் ஏ. ரகுமான்கான், துரைகலியமூர்த்தி, கோ. இளங்கோவன் ஆகியோர் எழுந்தார்கள்.) தயவுசெய்து எல்லோரும் உட்காருங் கள். முதலில் திரு. இராதா அவருடைய பிரச்சனையை முடிக்கட்டும்.

(முற்பகல் 10–20)

திரு. எஸ்.ஆர்.இராதா: தலைவரவர்களே, இந்த இரண்டு உதாரணங்கள் போதும் என்று நான் கருதுகிறேன். எங்கள் கட்சி உறுப்பினரின் பேச்சு வெளியிடாமல் எதிர்க்கட்சி உறுப்பினரின் பேச்சு மட்டுமே முரசொலி நாளேட்டில் வெயிடப்பட்டிருக்கின்றது. அவர்கள் எல்லாப்பேச்சுகளையும் வெளியிட இடம் இல்லை என்று காரணம் சொல்லலாம். ஆனால் பேரவையின் நடவடிக்கைகளை வெளியிடும் போது குற்றச்சாட்டுக்கள் பற்றி வெளியிடப்படுகிறது. அப்போது அவற்றுக்கான மறுப்புக்களையும் வெளியிட வேண்டும் என்பதுதான் மரபு. இந்த மரபு முரசொலி நாளேட்டில் மீறப்படுகிறது. இதனால் மக்களுக்கு ஒருதலைப்பட்சமாக தகவல்கள் தரப்படுகின்றன. அந்தப் பத்திரிகைகளைப் படிக்கின்றவர்கள் குற்றச்சாட்டுகளை நம்புகின்ற அளவுக்கு நிலைமை உண்டாக்கப்படுகிறது. எனவே இது இந்த ஆட்சியின் மீது வேண்டுமென்றேகளங்கம்கற்பிப்பதற்குஏதுவாக இருக்கின்றது. அவையின் நடவடிக்கைகளைக் கூட்டவோ குறைக்கவோ அல்லது அவற்றில் சிலவற்றை விட்டு விடவோ செய்வது அவையின் உரிமையை மீறிய செயலாகும். எனவே இதனை அவை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்த என்னுடைய தீர்ப்பை பின்னர் அறிவிக்கிறேன்.

(இ) ஓர் உறுப்பினர் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் 'அண்ணா' நாளிதழில், செய்தி வெளியிட்டதாக கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.துரைமுருகன், திரு.தி.சு.நல்லதம்பி ஆகியோர் 'அண்ணா' நாளேட்டின் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை ஒன்றை எழுப்ப அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது இரண்டும் ஒரே பிரச்சினை குறித்து இருப்பதால், திரு. துரைமுருகன் மட்டும் இப்பிரச்சினையை எழுப்புவார்,

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, 30-3-1978-ஆம்நாளிட்ட 'அண்ணா' நாளிதழில் கீழ்க்காணும் தலைப்பில் ஒரு செய்தி வெளியாகி உள்ளது.

''சட்ட மன்றப் பேரவை தி.மு.க. காட்டிய திருட்டுப் பொருள். மாணவர்களுக்கு வழங்கிய தட்டு எம்.எல்'ஏ. கைக்கு வந்தது எப்படி?

இந்த தலைப்பின் கீழ் செய்தி வெளியாகியிருக்கிறது. பத்திரிகை சுவரொட்டிகளிலும், பெரிய எழுத்துக்களில் வெளியிடப்பட்டிருக்கிறது இவற்றைமேலோட்டமாகப்பார்க்கிறயாருக்கும் என் மீதுதவறான எண்ணம்தான் ஏற்படும். மேலும் மாண்புமிகுகல்வியமைச்சர் திரு.அரங்கநாயகம் பேசும் போது ''இந்த இரண்டு தட்டுக்களும் இப்போது அந்தப் பள்ளியில் இல்லை. தட்டுகள் திருடப்பட்டிக்கின்றன'' என்று கூறியதும் வெளியாகியிருக்கிறது. மாண்புமிகு அவை முன்னவரும் அந்தப் பொருட்பட கூறியதாக செய்தி வெளிவந்திருக்கிறது. இவை அனைத்தும் எனக்குக் களங்கம் கற்பிக்கும் உள்நோக்கத்தோடும், திட்டமிட்டும் வேண்டுமென்றே கூறப்பட்டு வெளியிடப்பட்டவையாகும்.

ஓர் ஆதாரத்தை அவையில் காட்டும்போது அது 'எப்படி வந்தது என்று யாரும் வற்புறுத்த முடியாது. சட்டப்படி அதற்கு வழியில்லை. அதேபோன்று''தட்டுகள் திருடப்பட்டன; ஆனால் துரைமுருகன் திருடினார் என்று கூறவில்லை' என்றுகூறுவதும் மறைமுகமாக என்னைக் குற்றம் சாட்டுவதாக அமையும். இவையெல்லாம் மாண்புமிகு அமைச்சர்களுக்கும் 'அண்ணா' நாளிதழுக்கும் மிக நன்றாகத் தெரியும். இருந்தும்என்மீது இத்தகைய களங்கத்தை திட்டமிட்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது சட்டமன்றப் பேரவை உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய கடமையைச் செய்ய விடாமல் தடுக்கக்கூடியதாகவும், அவை உரிமையை மீறியதாகவும், அமைந்திருக்கிறது. எனவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சினை குறித்தும் என் தீர்ப்பு பின்னர் வழங்கப்படும்.

(ஈ) ஓர் உறுப்பினர் கூறாததைக் கூறியதாக மெயில் நாளேடு செய்தி வெளியிட்டதாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு.கே. பண்ணை சேதுராம் அவர்கள் 'மெயில் நாளேட்டின் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவருக்கு என் அனுமதி அளிக்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 184–ன் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்ப அனுமதி கோருகிறேன். 1-4-1978-ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் இந்த நகராட்சிகள் திருத்த மசோதா மீது விவாதம் நடைபெற்றது. அப்போது விவாதத்தில் கலந்து கொண்டு நானும் எனது

கருத்துக்களைப் பேசி இருக்கிறேன். அப்போது பணக்காரர்கள் மட்டும்தான் நகராட்சித் தலைவர்களாக வர முடியும், ஏழைகளாக இருந்தால் வரமுடியாது, காரணம் நகராட்சிகளின் உறுப்பினர்கள் ஊர் கடத்தப்பட்டு வெள்ளைத்தாளில் கையெழுத்து வாங்கி ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுதிக் கொடுத்ததைப் படியுங்கள் அப்படியே.

திரு. கே. பண்ணை சேதுராம்: டிஸ்ட்ரிக்ட் முனிசிப்பாலிட்டீஸ் ஆக்டில், நேரடியாக தலைவர்களைத்தேர்ந்தெடுக்கிற முறையை ஆதரித்துப் பேசினேன். ஆனால் மெயில் பத்திரிகையில் நான் பேசிய பேச்சைப் போடுவதற்குப் பதிலாக நான் இங்கே பஞ்சாயத்து 'தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிற முறைப்பற்றி பேசியதாக போடப்பட்டிருக்கிறது. மெயில் பத்திரிகை ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. படித்தவர்கள் மத்தியில் அந்தப் பத்திரிகை ஒரு நல்ல இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆகவே படித்தவர்கள் நான் பேசாத கருத்துக்களைப் பேசியதாக படித்து என் மீது தவறுதலான ஒரு அபிப்பிராயத்தை உண்டுபண்ணுகிற அளவில் இருக்கிற காரணத்தால் இது அவை உரிமை மீறல் செயலாகும். எனவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்க தீர்ப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இது குறித்தும் என் தீர்ப்பை பின்னர் வழங்குகிறேன்.

(உ) ஓர் உறுப்பினர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டை மட்டும் 'தினகரன்' நாளேட்டில் வெளியிட்டு விட்டு அதற்கு அளிக்கப்பட்ட மறுப்பை வெளியிடாதது குறித்து.

திரு. வி. கொ. சின்னசாமி: தலைவர் அவர்களே, 31-3-78ம் தேதி அன்று வெளியிடப்பட்ட தினகரன் பத்திரிகை என்மீது களங்கம் ஏற்படும் வகையிலும், பொதுமக்கள் மத்தியில் கெட்ட பெயர் உண்டாக்கும் நோக்கத்துடன் வேண்டுமென்றே உண்மைக்கு புறம்பான செய்தியை வெளியிட்டுள்ளது. திரு. ஜேம்ஸ் அவாகள் 30–3–78 அன்று பேரவையில் பேசும்போது என்னைப்பற்றிக் கூறிய குற்றச்சாட்டுக்கு நான் மறுத்துக்கூறிய தன்னிலை விளக்கத்தையோ அல்லது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் நிதி அமைச்சர் அவர்களும் குறுக்கிட்டுச் சொன்ன பதிலையோ பிரசுரிக்காது என்மீது சொன்ன குற்றச்சாட்டை மட்டும் வெளியிட்டது தவறாகும். என்மீது களங்கம் சுமத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும். திரு. ஜேம்ஸ் அவர்கள் குற்றம்சாட்டினார், எம். எல். ஏ. அதை மறுக்காது தூங்கிக்கொண்டிருந்தார்கள் என்று அந்தப் பகுதி மக்கள் நினைக்கிற ஒரு நிலைமை வந்துவிடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உரிமை மீறல் பற்றிய பிரச்னை. நீங்கள் கொடுத்துள்ளதுபற்றிச் சொல்லுங்கள்.

திரு. வி. கொ. சின்னசாமி; இது இந்த அவையின் உரிமையையும் என்னுடைய உரிமையையும் பாதிக்கக்கூடிய உரிமை மீறலாகும். எனவே, இதை உரிமை குழுவிற்கு தலைவர் அவர்கள் அனுப்ப வேண்டுமேன்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உரிமை மீறல் பற்றிய பிரச்னை. இன்னொன்றும் கேட்க விரும்புகிறேன் என்றால் எப்படி? உட்காருங்கள், இதற்கும் தீர்ப்பு பின்னால் அறிவிக்கிறேன்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்

சென்னை எண்ணூர் அனல் மின் நிலையத்தில் போதிய நிலக்கரி இருப்பு இல்லாததால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை எண்ணூர் அனல் மின் நிலையத்தில் தேவையான நிலக்கரி இருப்பு வைக்கப்பட இயலாத காரணத்தால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு தமிழகமே இருளால் மூழ்கி அபாயமான சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதைப்பற்றி விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள், இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, சென்னை எண்ணூர் அனல் மின் நிலையத்தில் தேவையான நிலக்கரி இருப்பு வைக்கப்பட இயலாத காரணத்தால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு தமிழகமே இருளால் மூழ்கி அபாயமான சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதைப் பற்றி விவாதிக்க பேரவையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எண்ணூர் அனல் மின் நிலையம் என்பது நம் மாநிலத்திலே மின்சாரத்தைப் பொறுத்த வரையில் முக்கியமான பங்கினை வகித்து வருகிறது. சென்னை நகர மக்களின் மின்சார தேவைகளை குறிப்பாக தொழிற்சாலைகளின் மின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பீக் லோட் ப்ராப்ளம்ஸ் ஏற்படுகிறபோது சமாளிக்கவும் எண்ணூர் மின் நிலையம் உதவியாக இருக்கிறது. பல கோடி ரூபாய் செலவில் இந்த மின் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்புகூட 'ஆப்பரேஷன் எண்ணூர்' என்ற திட்டத்தின் அடிப்படையில் பி. எச். இ. எல். ஒத்துழைப்புடன்

அங்கு ஏற்பட்ட பல்வேறு பிரச்னைகளை, 'டீத்திங் ட்ரபிள்ஸ்-ஸை', நாம் சமாளித்திருக்கிறோம். அங்கு பணியாற்றக்கூடிய தொழிலாளர்களும் பொறியாளர்களும் மிக சிரமமான சூழ்நிலையிலும் 'டிபிகல்ட் வொர்க்கிங் கண்டிஷன்ஸ்' இருந்தும் திறமையாக செயல்படுகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அனல் மின் நிலையத்திற்கு முக்கியமாக தேவையானது நிலக்கரி. கடந்த காலத்தில் நிலக்கரி கிடைப்பதில் ஏற்பட்ட பிரச்னைகளை சமாளிப்பதற்கு திட்டங்கள் வகுத்து செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்று நிலக்சுரிக் கிடைப்பதில் நெருக்கடி நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். மார்ச் 26-ஆம்தேதி எக்கனமிக் டைம்ஸ்-ல் பம்பாய், கல்கத்தா, டெல்லி-ல் இருந்து வரக்கூடிய பத்திரிகை

'Crisis in power stations
coal stock levels low'.

New Delhi March 25; A crisis has developed in thermal power generation plants as a result of critically low inventories Although the railways are believed to be keeping close watch on stock levels to contain the situation, any disruption in supplies may have serious repercussions.

(முற்பகல் 10-30)

என்று மார்ச் 25-ஆம் தேதி வந்திருக்கிறது. இது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. 31 மார்ச் 78-ஆம் தேதி 'எக்னமிக் டைம்ஸ்' பத்திரிகையில் வெளிவந்திருப்பதில் தமிழ்நாட்டைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது:

'Thermal Units face coal crisis,

'According to the latest official assessment, thermal plants in Gujarat have an average of about six days, coal stocks, in Delhi, there are about seven days stocks and in Tamil Nadu the average hovers at about eight days. In the northern region as a whole the average inventory position is about 11 days, while in Maharashtra the average is 15 days These figures remain far below the normal build up of inventories to the tune of 40 days during the peak onsumption period from January to March.

சாதாரணமாக 40 நாட்களுக்கு நிலக்கரியை வைத்துக் கொள்வது என்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. நிலக்கரி இல்லாவிட்டால், மிகுந்த கஷ்டங்கள் ஏற்படும். மத்திய அரசாங்கத்தில் இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், ரயில்கள் அதிகமாக இல்லை என்பதும்,

'STEEL COAL AUTHORITY OF INDIA'

என்பதாலும் இந்தக் லிருந்து அதிகமாக நிலக்கரி வரவில்லை என்பதாலும் இந்தக்
லிருந்து அதிகமாக நிலக்கரி சொல்லப்படுகிறது. இதற்கு நாம் எஸ். ஓ.
கஷ்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு நாம் எஸ். ஓ.
எஸ். என்ற முறையில் அபாயக் குரல் எழுப்பக்கூடிய நிலை இப்போது
எற்பட்டிருக்கிறது. இங்கு குறிப்பிட்ட ஐந்து நாட்களுக்குத்தான்
இப்போது நிலக்கரி இருப்பதாக சொல்லப்படுகிறது. இவ்வளவு
கூட இருக்கிறதா என்பதும் தெரியவில்லை. ஆகவே, இந்த நிலை
மையில் இதுபற்றி விரிவாக விவாதிப்பதற்காக இந்த அவையின்
நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
எண்ணூர் அனல் மின் திட்டம்மிகவும் முக்கியமான திட்டமாகும்.
எ ண்ணூர் னல் மின்திட்டத்திற்கு தேவையானது' அடிப்படை
யில் நாள் ஒன்றுக்கு 4,500 டன் நிலக்கரி, அதாவது மாதம்
ஒன்றுக்கு ஒன்றரை லட்சம் டன்னுவது கிடைக்க வேண்டும்.
ஆனால் இந்த நிலக்கரி வழங்குகின்ற துறை நமக்கு மாதம்
ஒன்றுக்கு ஒருலட்சத்து12 ஆயிரம்டன்என்று தருகிறோம் சொன்னார்
கள். ஜனவரி மாதத்தில் 49,478 டன்னும், பிப்ரவரி மாதத்தில்
65,252 டன்னும், மார்ச் மாதத்தில் 81,664 டன்னும் வந்தது.
இதனுடைய விளைவாக கையில் இருந்த ஸ்டாக் எல்லாம் தீர்ந்து
விட்டது. இன்றைக்கு இருக்கின்ற இருப்பு இரண்டு நாட்
களுக்கு வரும் என்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து
உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக
மத்திய சர்க்காரோடு தொடர்பு கொண்டிருக்கிறோம், மின்சார
வாரியம் தொடர்பு கொண்டிருக்கிறது, அரசுத் துறை செயலாளர்
அவர்கள் மூலமாகவும், கடிதங்கள், தந்திகள், அனுப்பப்பட்டிருக்
கின்றன. தொலைபேசியிலும் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். நானும்
மத்திய சக்தி எரிபொருள் துறை அமைச்சர்
திரு. பா. ராமச்சந்திரன் அவர்களோடு, நேரில் பேசினேன்.
இருக்கின்ற நிலைமையையும் எடுத்துச் சொல்லி, நிலைமை மோசமாக
இருக்கிறது. ஆகவே உடனடியாக நிலக்கரி தட்டுபாடு நிலைமையை
உணர்ந்து உடனடியாக தரப்பட வேண்டும் என்று தெரிவித்திருக்
கிறேன். அவர்களும் நிலைமையை தெரிவித்தார்கள். சிங்கரேணி
யிலிருந்து நிலக்கரி வரவேண்டியிருக்கிறது; ரயில் மூலமாகத்தான்
வரவேண்டும். அவர்கள என்னிடம் தெரிவித்தது, போதுமான
அளவுக்கு நிலக்கரி சிங்கரேணியில்தான் இருக்கிறது. வருவதற்கு
வாகன்கள் தட்டுப்பாடு இருக்கிறது. எப்படியும் உடனடி
யாக தீர்த்து வைக்கிறோம் என்று கூறினார்கள்.

ஆகவே, ரயில்வே துறை இந்த நெருக்கடி நிலையை உணர்ந்து
அவர்களும் தீவிரமாக நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்று
கருதுகிறேன். ஏனென்றால் 850 வாகன்கள் சிங்கரேணியிலிருந்து
பல்வேறு இடங்களுக்கும் நிலக்கரியை எடுத்துச்செல்வதற்காக

வரவேண்டிய இடத்தில் 725 வாகன்கள்தான் வருகின்றன. நமக்கு 180 வாகன்களில் வரவேண்டியதற்கு பதிலாக, 100, 120 வாகன்கள்தான் வருகின்றன, கடந்த இரண்டு நாட்களாக வாகன்கள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், மத்திய மின்சார அமைச்சர் அவர்கள் ஒரு கப்பலோடு நிலக்கரி தருவதற்கும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். கப்பல் மூலமாக வருவதின் மூலமாக வேண்டும் என்கின்ற அளவுக்கு ஒரு லோடை கொண்டு வருவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து கொண்டு வருகிறது. இந்த பிரச்னை மத்திய சர்க்காரில் வற்புத்தப்பட்டு, மத்திய சர்க்கார் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்த பிரச்னை அவசரமானதும், பொது முக்கியத்துவமானதாகவும் இருந்தாலும், நடவடிக்கை எடுப்பதினால், அது மட்டுமல்ல, நடவடிக்கையின் பலனை தேவையான அளவு இரண்டு தினங்களாக வருவதினாலும், அது மட்டுமல்ல, இந்த பிரச்னை இங்கு எழுப்பட்டுள்ளதினாலும், நிச்சயமாக இதற்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதால், இதை விவாதிப்பதற்காக அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் என்று கருதுகிறேன்.

திரு. எஸ். ஜே, சாதிக் பாட்சா : நம்முடைய மின்சார......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே ஒரு முறையைக் கையாண்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்தப் பொருளைப்பற்றி விவாதிக்க தேவையில்லை, எனவே, அனுமதி மறுக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையை இங்கே எழுப்ப அனுமதி கேட்டிருக்கிறார். அனுமதி கொடுக்கப்படுகிறது. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா

(2) ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி

(ஆ) ஓர் விசாரணைக் குழுவின் முன்னுள்ள பிரச்னை குறித்து, அவைமுன் வைக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் கருத்து தெரிவித்திருப்பது குறித்து

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையை நான் எழுப்புகிறேன்,

சென்னை அண்ணாசாலை ஹால்டா சந்திப்புக்கு அருகிலும், சைதாப்பேட்டையிலும் கூடியிருந்த பொதுமக்கள் மீது காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு முறையானதுதானா

என்பதை ஆராய்ந்து அறிவிக்குமாறு வணக்கத்துக்குரிய நடுவர் சோமசுந்தரம் அவர்களைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை இந்த அரசு நியமித்துள்ளது. அந்த விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில், 14-3-78 அன்று நடைபெற்ற காவல் துறை மானியக் கோரிக்கையை ஒட்டி, மாண்புமிகு முதல் அமைச்சர் தம்முடைய ஆய்வுரையில் "30-10-77 அன்று கட்டுக்கடங்காத ஆர்ப்பாட்டக்காரர்கள் அடங்கிய கும்பலொன்று தடை உத்தரவுகளை மீறி கிண்டி அண்ணாசாலையில் ஹால்டா சந்திப்பு அருகில் கூடியது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பேசப்பட்டது. அவ்வாறு கூடியிருப்பது சட்ட விரோதமானது என்று அறிவிக்கப்பட்டு கலைந்து போகுமாறு எச்சரிக்கப்பட்டது. அக்கும்பல் கலைந்து போவதற்கு பதிலாக கற்கள், சோடா புட்டிகள், கொடிக் கம்புகள், தடிகள் ஆகியவற்றைக் கொண்டு காவல் படையினரைத் தாக்கியது. விசாரணைக் கமிஷன் ஒன்றை அரசு நியமித்துள்ளது; அதன் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

அன்று ஆத்திரமும், கோபாவேசமும் கொண்ட கும்பலொன்று சைதாப்பேட்டை சாலை இருப்புப்பாதை கடவுக்கருகில் இரயில்களுக்கும், இரயில் சாதனங்களுக்கும் தீ வைத்தது; சைதாப்பேட்டை கடை வீதிக்கருகில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வண்டிகள் பலவற்றுக்கும் தீ வைத்தது; இரயில் கேட்டுக்கு சேதம் விளைவித்தது. நிலைமையை கட்டுப்படுத்த அங்கு விரைந்த காவல் படையினரையும் அக்கும்பல் கற்களாலும், சோடா புட்டிகளாலும் தாக்கியது. கும்பலைக் கலைக்க கண்ணீர்ப்புகை பிரயோகிக்கப்பட்டது. இது எதிர்பார்த்த பயனை அளிக்காததாலும், காவல் படையினரை நோக்கி கும்பல் தீயநோக்குடன் முன்னேறியதாலும், உரிய எச்சரிக்கை விடுத்த பின் காவல் படையினர் ஒருமுறை துப்பாக்கியால் சுட நேர்ந்தது. ஒருவர் இறந்தார், எவரும் காயமடையவில்லை. காவல் படையினரைச் சேர்ந்த 18 பேர் காயமுற்றனர். விசாரணைக் கமிஷன் ஒன்றை அரசு நியமித்துள்ளது. அதன் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகின்றது" என்று கூறியுள்ளார்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் இவ்வுரை நடைபெறும் விசாரணையை எந்த அளவு பாதிக்கும், விசாரணையின் முடிவை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தும் என்பதைப் பற்றி நான் ஏதும் கூற விரும்பவில்லை.

இந்திய அரசியல் சட்டம் 194, சட்டப் பேரவையில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமையைப்பற்றியும், அவர் உரை பற்றி, வெளியே யாரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது என அளிக்கப்படும் பாதுகாப்புப் பற்றியும்

கூறுகிறது. இந்த ஆர்டிகிள் 194-ஐ நான் இங்கே படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தகைய உரிமையும், பாதுகாப்பும் வழங்கப்பட்டிருப்பதால் இப்பேரவைக்கு வெளியே இருப்பவர்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் இப்பேரவையில் ஆற்றும் உரையால் பாதிக்கப்பட்டும், அதற்கு எவ்வித பரிகாரமும் தேடிக் கொள்ள முடியாத நிலை உருவாகக் கூடாது என்பதற்காகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இப்பேரவையில் எப்படி உரையாற்ற வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என நமக்குள்ளாகவே சில கட்டுப்பாடுகளை நமக்கு நாமே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகள் மூலம் வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

அத்தகைய கட்டுப்பாட்டுக்குள் ஒன்றாக, ஒரு வழக்கு, ஒரு நடுவர் மன்றத்தில் விசாரணையில் இருக்கும்போது, அதுபற்றி உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு ஒரு இடத்தில் அல்ல, பல இடங்களில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது.

அதிலும், விதி 31 (9) அசெம்பிளி ரூல்சிலே சொல்லப்பட்டிருக்கிறது. It must not relate to any matter which is under adjudication by any court of law. அதேபோல் விதி 59 (6) லேயும் It shall not relate to any matter which is under adjudication by a court of law having jurisdiction in any part of India என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவைகளைப்போல். இன்னும் ரூல் 67 (1), 68 (3) (8), ரூல் 143 (இ), ரூல் 156 (5) (8) ஆகியவைகளை எல்லாம் நான் இங்கே படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்; இவைகளிலே எல்லாம் 'கேள்வி வடிவிலோ' குறுகிய கால விவாதம் என்ற முறையிலோ, விவாதத்தில் கலந்துகொண்டு ஆற்றும் உரை என்ற வடிவிலோ, வெட்டு தீர்மானம் என்ற வடிவிலோ, தனி நபர் தீர்மானம் என்ற வடிவிலோ, எந்த உருவிலும் அத்தகைய உரை இடம் பெற்று விடக்கூடாது என்பதில் நம் விதிகள் விழிப்பாக இருக்கின்றன.

இது வழக்குகளுக்குத்தான் பொருந்தும். இத்தகைய விசாரணைகளுக்குப் பொருந்தாது என வாதிக்கக்கூடும் என்பதால், இவ்விதிகள் இத்தகைய விசாரணைக்கும் பொருந்தும் எனத் தெளிவாகக் கூறத் தவறவில்லை.

ரூல் 68 (5)-ஐப் படித்ததாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அதேபோல் ரூல் 156 (5) (12)-ஐயும் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவைகளிலே, இவ்வாறு விசாரணைக் குழுவின் ஆய்வில் இருக்கும் ஒரு பொருள் பற்றி இம்மன்றத்தில் எடுத்துக்கூறக் கூடாது என விதிமுறைகள் தெளிவாக இருக்கும்போது, அந்த விசாரணைக்கு வழிசெய்த மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களே

காவல் துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு முறையானது என தீர்ப்பு அளிக்கும் வகையில் பேசியிருப்பது முறைதானா என்று ஒழுங்குப் பிரச்னையை நான் கிளப்பி இருக்கிறேன்.

(முற்பகல் 10-40)

விசாரணையில் இருக்கும் பொருள் குறித்து நான் எதுவும் கூற வில்லை. என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை அவ்விசாரணைக் குழு மேற்கொண்டிருக்கும் பொருள் பற்றியது அன்று. அங்கே விசாரணை யில் இருக்கும் பொருள்பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையில் கருத்துத் தெரிவிக்கலாமா என்பது பற்றி தான். ஆகவே, என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை நம்முடைய சட்டமன்ற விதிகளை ஒட்டியதே ஆகும்.

உரிமை மீறல் பற்றிய பிரச்சனை எழும்போது, அது அண்மையில் நடைபெற்றதாக இருக்கவேண்டும் என விதி 187/1 'The alleged breach of privilege must refer to a matter of recent occurrence,.' எனத் தெளிவாகக் கூறுவதுபோல், ஒழுங்குப் பிரச்சினை பற்றிய பொருள் அண்மைக்கால நிகழ்ச்சியாக இருக்கவேண்டும் எனத்தெளிவாகக் கூறவில்லை.

ஒழுங்குப் பிரச்சினை பற்றி நம் விதிகள் கூறுவதெல்லாம், அது நம் சட்டமன்ற விதிமுறைகளையும், சட்டமன்ற நடைமுறை பற்றிய இந்திய அரசியல் சட்டங்களையும் நடைமுறைப்படுத்து வதில் ஏற்படும்முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக மட்டுமே ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்படுதல் வேண்டும் என்று கூறுகிறது..

கடந்த ஆண்டுகளுக்கான அரசு கொள்கை அறிவிப்பு அறிக்கைகளிலும், விசாரணைக் குழுவின் ஆய்வில் இருக்கும் வழக்குகள் குறிப்பிடப்பட்டன என்று கூறுவது போதிய சமாதானம் ஆகாது. ஒரு தவறு பிறிதொரு தவறுக்கு ஆதாரமாகாது.

நடுவர் மன்றங்களில் இருக்கும் வழக்கு பற்றித்தான் அவையில் கூறக்கூடாது. இதுபோலும் விசாரணைக் குழுவின் முன் இருக்கும் பொருளுக்கு அத்தடை கூடாது என வாதிடக்கூடும் என்பதை அறிந்தே, இதுபோலும் விசாரணைக் குழுவின் ஆய்வில் இருக்கும் பொருள்பற்றியும், பேரவையில் விவாதம் எழக்கூடாது எனத் தெளிவாக ஒருமுறைக்கு இரு முறை விதி: 68/5, விதி 156/8/12 என்ற இவ்விதிகள் வற்புறுத்தியுள்ளன.

முதலமைச்சர் கூறியது வெறும் அறிக்கை அன்று. அரசின் கொள்கை விளக்கம். அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அவையில் படிக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவைக் குறிப்பில் இடம்பெற்ற ஒரு முக்கிய ஆவணமாகும். அந்த

அறிக்கை இறுதியில் ''விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது; அதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது'' என முடித்தாலும் அந்த அளவோடு நில்லாமல் அதற்கு முந்தைய பகுதிகளில், விசாரணைக் குழு மேற்கொண்டிருக்கும் பொருள் பற்றிய அரசின் கருத்தை விரிவாகவும், விளக்கமாகவும் கூறியுள்ளது. ஆகவே, என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை முழுக்க முழுக்க நம் விதிகளுக்கு உட்பட்டது. முறையானது என்பதைத் தெரிவித்து தங்கள் தீர்ப்பை வழங்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுகுறித்து எனது தீர்ப்பைப் பின்னர் அறிவிக்கிறேன்.

(5) அறிவிப்பு

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன் வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற மேலவையில் 3-4-1978 ஆம் தேதியன்று, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/78) திருத்தங்கள் ஏதுமின்றி ஒப்புதல் அளிக்கப் பெற்றுள்ளதாகவும் மற்றும் தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/78) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, பொது விற்பனைவரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/78) ஆகியவைகள் 3–4–1978 ஆம் நாளன்று பரிந்துரை ஏதுமின்று ஏற்பளிக்கபெற்றுள்ளநாகவும் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்திகள் வரப்பெற்றுள்ளன.

(6) அமைச்சரின் அறிக்கை

1-8-77-ல் இரு துணை வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளை திருத்தி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டுள்ள அறிககையை *நான் படித்ததாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*405-406-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

(7) அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதி 41 (3) ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ' பேரவையின் 41(3)வது விதியின்கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்''.

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

(8) கவன ஈர்ப்புகள்

(அ) ஆலங்குளம் தமிழ்நாடு சிமெண்ட் ஆலையின் தூசி வீச்சால் பக்கத்திலுள்ள பயிர்கள் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எம். அண்ணாமலை, இரா. தாமரைக்கனி, இரா, அமிர்தராஜ், ஓ. சுப்பிரமணியன் சோ. அழகர்சாமி ஆகியோர் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து உள்ளார்கள்.

திரு. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் தாலூகா தமிழ்நாடு சிமெண்ட் ஆலை தூசியின் வீச்சால் அதைச் சுற்றி 10 மைல் அளவுக்குப் பயிர் பச்சைகளுக்குச் சேதமேற்பட்டுவருவது பற்றி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பொதுத் துறையில் ரூ. 7.48 கோடி முதலீட்டில் இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் ஒரு சிமிண்டு ஆலையை நிறுவியுள்ளது. இந்த சிமிண்டு ஆலையில் ஈரத்தயாரிப்பு முறையில் சிமிண்டு உற்பத்தி செய்யும் இரண்டு சூளைகள் உள்ளன. ஒவ்வொரு சூளையும் நாளொன்றுக்கு 600 டன் சிமிண்டு உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. முதல் சூளை 1970-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலும், இரண்டாவது சூளை 1971-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலும், உற்பத்தியை துவங்கியது.

இது போன்று ஈரத் தயாரிப்பு முறை சிமிண்டு ஆலைகளில் 5 முதல் 10 சதவிகிதம் சுண்ணாம்பு தூசி, புகை போக்கியின் வழியாக சூளைகளிலிருந்து வரும் வாயுவுடன் சேர்ந்து வெளியேறுகிறது. சுற்றுப்புறச் சூழ் நிலைபாதிப்பை குறைக்கும் வண்ணம்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 ஏப்ரல் 5

புகை போக்கி போதிய அளவு உயரமான வடிவமைப்புக் கொண்டதாக இருந்தாலும் அதிலிருந்து வெளி வரும் தூசி வழக்கமாக 6 முதல் 8 கிலோ மீட்டர் தூரம் வரையிலுள்ள சுற்றுப்புறத்தை பாதிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. சிமிண்டு ஆலையிலிருந்து தூசி வெளிப்படும் மற்றொரு பகுதி, சிமிண்டு மில்லும் மற்றும் உற்பத்தியான சிமிண்டு நிரப்பும் இடமாகும். இதிலிருந்து வெளியேறும் சிமிண்டு தூசி பெரும் பாலும் தொழிற்சாலைப் பகுதிக்குள்ளேயே தங்கி .விடுவதால் இது சுற்றுப்புறச் சூழ்நிலையை மிகவும் மோசமாகப் பாதிக்கக் கூடிய ஒரு பிரச்சனையாக இல்லை.

சிமிண்டு ஆலையிலிருந்து வெளிப்படும் தூசியை கட்டுப்படுத்த ஒரே வழி சிமிண்டு ஆலையில் உள்ள சிமிண்டு மில் மற்றும் சூளை களுக்கும் சேர்த்து தூசி படிவுத் தடுப்பு மின் இயந்திரம் (Electrostatic precipitators) நிறுவுவது தான். உண்மையாகச் சொன்னால் கடந்த ஆறு அல்லது ஏழு ஆண்டுகளில் நாட்டில் உள்ள ஈரமுறைத் தயாரிப்பு சிமிண்டு ஆலைகளில் ஐந்து போன்று தூசிபடிவு தடுப்பு மின்இயந்திரத்தை நிறுவுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இருப்பினும் அவைகளுடைய செயல் முறைகள் ஒரே மாதிரியாக திருப்திகரமாக இல்லை.

ஆலங்குளம் சிமிண்டு ஆலையில் தூசி படிவு தடுப்பு மின் இயந்திரம் நிறுவுவதற்கு ஒரு கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஆலையில் உள்ள ஈரத்தயாரிப்பு முறையை உலர்ந்த தயாரிப்பு முறையாக மாற்றுவது குறித்த திட்டத்தை பரிசீலனை செய்த போது தூசிப் படிவு தடுப்பு மின் இயந்திரம் நிறுவுவது குறித்துப் பரிசீலிக்கப்பட்டது. இருப்பினும் அதிக அளவிலான செலவு காரணமாக அத்திட்டம் கைவிடப்பட்டது. இது போன்ற திட்டங்கள் சிமிண்டு தொழில் முழுவதற்குமே பொதுவாகப் பொருந்தக் கூடியவையாக இருப்பதால் அது குறித்து அனைத்துலக கூட்டமைப்புகளில் அவ்வப்போது விவாதிக்கப்பட்டுள்ளது. இத் திட்டங்களுக்குத் தேவையான தொகையை நிதி நிறுவனங்கள் தருவதற்கு ஒரு சாலச் சிறந்த நிதி வாயிலைத் தோற்றுவிப்பது குறித்த கருத்து ஒன்றும் மேற்கண்ட விவாதங்களின் போது உருவாகியது.

சிமிண்டு தூசியைக்கட்டுப்படுத்தக் கூடிய பிரச்சனை எல்லா சிமிண்டு தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும் என்றாலும், பொதுத் துறையில் அரசு நிறுவியுள்ள ஆலங்குளம் சிமிண்டு ஆலை மற்ற ஆலைகளுக்கு முன் மாதிரியாகத் திகழும் வகையில் தமிழ் நாடு சிமிண்டு நிறுவனம் ஆலங்குளம் சிமிண்டு ஆலையில், தூசிதடுப்புமின் இயந்திரத்தை நிறுவுவது குறித்து பரிசீலனை செய்து வருகிறது. இருப்பினும் இந்த இயந்திரத்தின் இயக்கத்திறன் தெளிவாக எடுத்

1978 ஏப்ரல் 5] [திரு. ச. இராமசந்திரன்]

பின்னரும், இதை நிறுவுவதற்கு தேவையான
துக்காட்டப்பட்ட பின்னரும், இதை நிறுவுவதற்கு தேவையான
நிதிபோதிய அளவிலும் சலுகை விகிதத்திலும் கிடைக்கும் என்று
தெரிந்து பின்னரும் இத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்று
டிட்கோ நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்: மேலும் இது
போன்ற இயந்திரத்தை நிறுவுவதென்று முடிவு எடுத்த பின்,
இந்த தூசி படிவு தடுப்பு மின் இயந்திரத்தை நிறுவுவதற்கு 18
மாத காலம் ஆகும் என்றும் நிர்வாக இயக்குநர் தெரிவித்
துள்ளார். இது குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய்த்
தடுப்பு மருத்துவத்துறை தமிழ் நாட்டில் உள்ள எல்லா
சிமெண்டு உற்பத்தியாளர்களுக்கும் தூசி படிவு தடுப்பு மின்
இயந்திரத்தை நிறுவ வேண்டுமென்றும் தவறினால் தண்டனை
நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

*திரு. எம். அண்ணாமலை ; தலைவரவர்களே, இந்த சிமெண்ட்
ஆலையினுடைய தூசித் தடுப்பு கருவியைப் பொருத்துவது, அந்தச்
செலவினங்களைப் பொறுத்துத்தான் இன்றுவரையில் தடைப்
பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அதற்காக
ஆகும் செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.
மேலும் செலவு எவ்வளவு ஆகும் என்று பார்ப்பதைவிட அந்தத்
தூசியினால் பாதிக்கப்படக்கூடிய பெருமளவு விவசாயிகள்
இருக்கிறார்கள், அவர்கள் பாடுபட்ட அந்த நிலங்களிலுள்ள
பயிர் பச்சையெல்லாம் பாதிக்கப்படுகின்றது. விளைநிலங்களெல்
லாம் இன்றைக்கு சிமிண்ட் தரையாக ஆகிக்கொண்டு வருகிறது.
மேலும் அந்தப் பகுதிமக்கள் இந்தச் சிமெண்ட் தூசிக் காற்றைச்
சுவாசிப்பதால் பல்வேறு நோய்களுக்குப் பலியாகியும் உடலா
ரோக்கியமே பாதிக்கப்பட்டுமிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்
பட்ட இழப்புகளை நாம் பார்க்கும்பொழுது பணம் செலவாகிறது
என்பது பெரிய காரியமல்ல. எனவே, இந்தத் திட்டத்தை
வெகுவிரைவில் எடுத்துச் செய்ய வேண்டும். செலவு செய்கின்ற
முதலீட்டைவிட அழிவு அதிகம் என்ற அளவில் பார்த்து இனி
மேலாவது விரைவில் செய்வதற்கு அரசு முன்வருமா, என்பதை
அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.50)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே,
இந்த எலெக்டிரோஸ்டாட்டிக் ப்ரெசிபிடேட்டர்ஸ் என்கிற
இந்த அமைப்பைப் பொருத்துவதென்றால் ரூபாய்ஒரு கோடியாகும்ர்
இது நம்முடைய ஆலைகளுக்கு மட்டுமல்ல, மற்ற ஆலைகளுக்கும்று
சேர்ந்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதுரடி.
இது சம்பந்தமாக, மத்திய சர்க்காரிலேயே பரிசீலனை செய்ாம்
வருவதாக நான் அறிகிறேன். நம்முடைய அரசு நடத்துகிெ
ஆலையைப் பொறுத்தவரையில் அதற்கென ஒரு அமைப்

விரைவில் தயாரித்து பொருத்துவது என்று நாம் தீர்மானித்திருக்கிறோம். ஆனால், ஏற்கனவே சில சிமெண்ட் ஆலைகளில் இந்த எலெக்ட்ரோஸ்டாட்டிக் ப்ரெசிபிடேட்டர்ஸ் பொருத்தியிருக்கிறார்கள். அவைகள், சாதாரணமாக 95% அந்தத் தூசியைத் தடுத்து நிறுத்தியிருக்கவேண்டும். ஆனால் பல ஆலைகளுடைய அனுபவம் 50% கூட தூசியை அவைத் தடுத்து நிறுத்தவில்லையென்பதுதான். ஆகையினாலே, அது எந்த அளவுக்குப் பயன் உள்ளது என்பதையும் பார்க்கவேண்டியிருக்கிறது. எனினும் இது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, தமிழ்நாடு சிமெண்ட் ஆலை தூசியின் வீச்சால் விவசாயம் பாதிக்கிறது; அது மட்டுமல்லாது, அப்பகுதி மக்களுக்கும் சுகாதாரக் கேடும் ஏற்படுகிறது. சிமெண்டும் வேஸ்ட்டாகிறது. ஆகவே, இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில், உடனடியாக நிவாரணமாக தூசியை வெளியேற்ற பில்டர் அமைக்கவேண்டும். பின்னால் தனியார் சிமெண்ட் பாக்டரியில், துலுக்கப்பட்டியில் உள்ளதுபோல் டிரைபிராசஸ் அமைக்க துரிதப்படுவத்துவதோடு, அப்பகுதி மக்களுக்கே இத்தொழில் வாய்ப்பு கொடுக்க அரசு ஆவனசெய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன காரணங்களாலேதான் அரசு இந்த எலெக்ட்ரோஸ்டாட்டிக் ப்ரெசிபிடேட்டர்ஸ்ஸைப் பற்றி ஆராய்ந்து வருகிறது. அதை இப்பொழுது ஈர முறையிலே தயாரித்திருக்கிறார்கள். அதை உலர்ந்த முறையிலே தயாரிக்க மாற்ற முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டார்கள். உலர்ந்த முறையிலே தயாரிப்பதற்கும் பிரெசிபிடேட்டர்ஸ் எல்லாம் போடுவதற்கும் கிட்டத்தட்ட ரூ. 13 கோடி அளவிலே செலவு செய்யவேண்டியிருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, இந்த ஆலை, அண்மையிலேதான் நிறுவப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த இயந்திரங்களை முழு அளவுக்குப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. ஆகையினாலே, அவற்றையெல்லாம், டிரை பிராசஸ் உலர்ந்த முறைக்கு மாற்றுகின்ற உத்தேசம் தற்பொழுது இல்லை. ஆனால், அதே நேரத்தில் தூசியைத் தடுப்பதற்கான முயற்சிகள் நிச்சயம் மேற்கொள்ளப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந்தத் தூசித் தடுப்பு ப்ரெசிபிடேட்டர்ஸ் அமைப்பதற்கு 18 மாத காலமாகும் என்று சொல்கிறார்கள். முடிவெடுத்த பின் அமைப்பதற்கு 18 மாத காலமாகும் என்றால், நீங்கள் முடிவெடுக்க எவ்வளவு தாமதமாகும்? அந்தப் பகுதி விவசாய மக்களிடத்திலே, மிகுந்த இடமான, கொந்தளிப்பான நிலைமையிருக்கிறது, நிலமெல்லாம்

பாதிக்கப்படுகிறது என்று. அண்மையில் மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர் ஜெயலட்சுமி தலைமையிலே அப்பகுதி விவசாயிகள் ஊர்வலமாகச் சென்றபொழுது. அந்த நிர்வாகத்தினர் அவர்களை மதிக்காமல், அவர்களுக்குக் கௌரவம் அளிக்காமல், அவர்கள் சொன்ன கோரிக்கைகளைக் கேட்காமல், திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறியவிரும்புகிறேன். விரைவிலே, அந்தத் தூசித் தடுப்பு இயந்திரங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவர்களை குறைகளைத் தெரிவிக்கச் சென்ற நேரத்திலே, நிர்வாகத்தினர் சந்திக்கவில்லையென்று நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. அப்படித்தவறியிருப்பார்களானால், அதுபற்றி அரசு நிச்சயமாகக் கவனிக்கும். ஆனால் 18 மாதமாகும் என்பது உண்மை. அதே நேரத்தில், அதைப் பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லையே என்கிறார்கள். தேவைப்படுகிற நிதியை எப்படிப் பெறுவது என்பதிலேதான் சங்கடம். இந்தப் பிரச்னை இந்தியா முழுவதும் இருக்கிற காரணத்தால், அதற்கென்று நிதி ஏற்பாடு செய்து. அதிலே குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கவேண்டுமென்ற கோரிக்கை மத்திய அரசாங்கத்திடத்திலேயிருக்கிறது. மத்திய அரசு வெகுவிரைவிலே முடிவெடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி முடிவெடுத்தால் குறைந்த வட்டியிலே நாம் பணம் பெற வாய்ப்பிருக்கிறது. அப்படி முடிவெடுக்கிற வரை நாம் ஒன்றும் செய்வதற்கில்லையே தவிர, நிச்சயமாக அரசு இதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, ஆலங்குளம் சிமெண்ட் ஆலையிலேயிருந்து தயாராகும் தூசியால் விவசாயிகள் பாதகம் அடைகிறார்கள் என்ற கேள்விப்பற்றி அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, அந்த ஆலையைச் சுற்றிய சிறு பகுதிகளில்தான் தூசி படிகிறது என்று சொன்னார்கள். ஆனால் அங்கு மிகப் பெரிய அளவிலே விவசாயம் பாதிக்கிறது. சமீபத்திலே, இராஜபாளையத்திலே வேளாண்மைக் கருத்தரங்கு நடந்தபொழுது, அங்கிருந்த உயர் அதிகாரிகளிடம் மக்கள் குறை சொல்லியபொழுது பல, தனியார்களிடம் இந்த பில்டர் முறையிருக்கிறது, விரைவிலே முயற்சி செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது ரூபாய் ஒரு கோடி செலவாகும் என்ற காரணத்தினால் சற்றுத் தாமதமாகலாம் என்று சொன்னார்கள் ..

[1978 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்; தயவு செய்து என்ன
வேண்டுமோ கேளுங்கள். அமைச்சர் சொன்னதையே,
சொன்னார்கள், சொன்னார்கள் என்று சொல்லி, அதற்கு 5 நிமிடம்
எடுத்துக் கொண்டீர்கள். என்ன வேண்டுமோ அதை நேராகவே
கேளுங்கள்.

திரு. ஒ சுப்பிரமணியன் : பல கோடி மூலதனம் போடும்
போது, பொதுமக்கள் நன்மையைக் கருதி செய்ய வேண்டிய
காரியம் என்பதால், மூலதனச் செலவாகக் கருதி செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்யாவிட்டால்
மக்களுக்கு பொது நிறுவனத் துறைகளில் நம்பிக்கை குறையும்
என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா என்று கேட்க
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; நம்பிக்கை
குறையாத வகையில் அரசு பார்த்துக்கொள்ளும்.

திரு. சோ. அழகர்சாமி ; தலைவர் அவர்களே, முதலாவ
தாக இன்றைக்கு நம்முடைய தலைவர் கொஞ்சம் சூடாக இருக்
கிறார்கள். சூட்டைத் தணித்துக் கொண்டால்தான் எங்களுக்கும்
நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் கனிவாகச் சொல்லு
கிறேன். அமைச்சர் சொன்னதையே திருப்பிச் சொல்லி
அமைச்சர் சொன்னார், அமைச்சர் சொன்னார் என்று சொன்னால்
எப்படி. மேற்கொண்டு ஏதாவது தகவல் வேண்டும் என்றால்
அதைக் கேளுங்கள்,

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் சொல்லும்
போது தூசி தடுப்பு மின் இயந்திரம் வைக்கவேண்டும் என்றால்
ஒரு கோடி ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள். ஆனால்
ஒவ்வொரு வருடமும் அந்த ஆலை இருக்கக்கூடிய வட்டாரத்திலே
இருக்கின்ற விவசாயிகள் பல கோடி ரூபாய்களை இழக்கிறார்கள்
ஒரு கிராமத்திலே 2000, 3000 ஏக்கருக்கு மேல் கெடுகிறது.
தாழையூத்து, சங்ககிரி போன்ற பகுதிகளில் பல கோடி
ரூபாய்கள் இழக்கிறார்கள். ஆகவே ஒரு கோடி ரூபாய் பெரிதல்ல.
பல கோடி ரூபாய் நஷ்டம் விவசாயிகளுக்கு ஏற்படுவதைத்
தடுக்க, உடனடியாக இதைச் செய்யவேண்டும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக இது சம்பந்தமாக அந்த அதிகாரியைப்
காண்பதற்காக ஆயிரக்கணக்கானவர்கள், ஒரு பாராளுமன்ற
உறுப்பினர் தலைமையில், சிவகாசி பாராளுமன்ற உறுப்
பினர் ஜெயலட்சுமி அவர்கள் தலைமையில் சென்றபோது
முதலில் அவர்கள் தடுக்கப்பட்டார்கள். பிறகு 15 பேர்கள் மட்டும்

1978 ஏப்ரல் 5] [திரு. சோ. அழகர்சாமி]

வாருங்கள் பார்க்கிறேன் என்று சொன்னார்கள். அப்படிப் போன
அந்தப் 15 பேர்களுக்கும் உட்காருவதற்கு சீட்டுக்கூட கொடுக்க
வில்லை. பொதுமக்களுடைய பிரதிநிதியாக போன யாருக்கும்
சீட்டுகூட கொடுக்கவில்லை. அப்படி அந்த அதிகாரி அலட்சியமாக
நடந்து கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட அதிகாரி அந்தப்
பதவிக்கு லாயக்கில்லாதவர் என்று சொல்லக்கூடிய முறையிலே
நடந்து கொண்டிருக்கிறார். அந்த வட்டாரத்து மக்கள் மிகவும்
கொதிப்படைந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, வருகிற 14 ஆம்
தேதி ஒரு பேரணியை நடத்த திட்டம் இட்டிருக்கிறார்கள். அந்த
அதிகாரியினுடைய அலட்சியம், அவர் நடந்து கொண்ட போக்கு
மக்கள் பிரதிநிதிகளை அலட்சியம் செய்கின்ற முறையிலே
நடந்திருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் இதில் உடனடி
யாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, ஒரு கோடி
ரூபாய் பெரிதல்ல, உடனடியாக இந்த தூசி தடுக்கும் மின்
இயந்திரத்தைப் பொருத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
தூசி தடுக்கும் இயந்திரத்தைப் பொருத்தக் கூடாது என்பதல்ல
அரசின் நோக்கம். பொருத்த வேண்டுமென்பதுதான். அதற்
கான நிதி ஆதாரங்களை பெறுவதிலேதான் காலதாமதம். இங்கே
இருக்கிற பொதுத்துறை நடத்துகின்ற அதிகாரி அலட்சியமாக
இருந்தார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்.
அதிகாரிகள் அலட்சியமாக இருக்கலாம். ஆனால் அரசாங்கம்
அலட்சியமாக இருக்க முடியாது. அரசைப் பொறுத்த வரை
யிலே அப்படி அலட்சியமாக இல்லை. அப்படி அலட்சியமாக
அதிகாரி இருந்தார் என்றால் நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை
எடுக்கும்.

ஏதோ பேரணி நடத்த இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.
மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்கட்சித் தலைவர்கள், இந்த
விளக்கத்தைக் கேட்ட பிறகு, நிச்சயமாக இப்போது பேரணிக்கு
அவசியம் இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏன்
என்றால் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இதிலே அக்கரை
எடுத்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : அந்த அதிகாரிமேல் நடவடிக்கை
எடுப்பதாக இருந்தால், நிறுத்தி விடுவார்கள்.

திரு. தி. சு. நல்லதம்பி : தலைவர் அவர்களே, சிமெண்ட்
ஆலையிலே பரவுகின்ற தூசியைத் தடுப்பதற்கு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள், முயற்சி எடுத்துக் கொண்டதுபோல,
இன்றைய தினம்....

(மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசின் பிரிட்ஜ் என்று சொன்னார்)

நான் சொல்வதற்கு முன்னாலே அவரே சொல்லி விட்டார். ஏனென்றால் அமைச்சர் அவர்கள் அங்கே ஏற்கனவே இருந்தவர்கள். அந்தப் பகுதி மக்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் தெரியும் என்று சொல்லி விட்டார். அவர் விரும்பினால் பதில் சொல்லலாம்.

திரு. தி. சு. நல்லதம்பி : நான் சொல்லிவிடுகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் தயாராக இல்லை. அவரிடம் விளக்கம் இல்லையாம்.

(ஆ) தருமபுரி மாவட்டம்—கிருஷ்ணகிரி அணை, ஆயக் கூட்டு தாரர்கள் மீது விதிக்கப்பட்ட அதிக வரியை வசூலிக்க எடுத்த நடவடிக்கைகளினால் விவசாயிகள் பாதிப்பு குறித்து.

(முற்பகல் 11-00)

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, ''தருமபுரி மாவட்டம்—கிருஷ்ணகிரி அணை ஆயக்கட்டுதாரர்கள் மீது நடைமுறை ஆண்டுக்கு ஏக்கருக்கு ரூ. 120 வரி விதித்து வசூலிக்க விவசாயிகளை கட்டாயப்படுத்துவதால் அவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து'' மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மேற்கண்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளத் தொகை பாசன நீட்சி மேல்வரி (Irrigation Extension Surcharge) எனத் தெரிகிறது. ஓர் ஆண்டில் ஆகஸ்டு மாதம் முதல் தேதியிலிருந்து டிசம்பர் மாதம் 31—ஆம் தேதி முடிய ஆக ஐந்து மாதங்களுக்கு பாசன வசதி அனுமதித்து ஒரு போக பயிர் விளைவிக்கும் நோக்குடன் கிருஷ்ணகிரி அணை கட்டப்பட்டது. விவசாயிகள் குறுகிய காலப் பயிரைத் தவிர நீண்ட காலப் பயிரை விளைவிக்கும் வழக்கத்தை தடுக்கும் பொருட்டு, டிசம்பர் மாதம் 31 ஆம் தேதிக்கு மேல் பாசன வசதி நீடிக்கப்பட்டால் அத்தகைய நீடிப்பிற்கு இயல்பான தண்ணீர் மேல் வரியை விட இரண்டு முதல் 30 மடங்கு வரி பாசன நீட்சி மேல் வரியாக ஒவ்வொரு ஆண்டிலும், வசூலிக்க விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட விதிகளின் கீழ் 1377 பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 30, 1378 பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 60, 1379 பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 120, 1380 பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 240, 1381 பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300, 1382 பசலி முதல் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 450, என்று

பாசன நீட்சி மேல் வரி விதிக்கப்பட வேண்டும். ஆனால், 1377 முதல் 1381 பசலி வரை மேற்படி பாசன நீட்சி மேல் வரி விதிப்பை அரசு தள்ளிக் கொடுத்தது. மேலும் 1382, 1383, 1384 பசலிகளுக்குக் கீழ்க்கண்டவாறு விதிக்கவும் ஆணையிடப் பட்டது :

பசலி ஆண்டு (1)	வரி வீதம் (2)
1382	ஒரு ஏக்கருக்கு ரூபாய் 15.00
1383	ஒரு ஏக்கருக்கு ரூபாய் 30.00
1384	ஒரு ஏக்கருக்கு ரூபாய் 60.00

இதன்படி, பாசன நீட்சி மேல்வரி பாக்கியோடு நிலவரி, உள்ளூர் மேல் வரி, தண்ணீர் மேல் வரி மேம்பாட்டு வரி ஆகியவற்றின் பாக்கித் தொகையையும் வசூலிக்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார். 1385—ஆம் பசலி ஆண்டிற்கான பாசன நீட்சி மேல்வரி பாக்கியை வசூலிக்க அரசு உத்திரவு பிறப்பிக்காததால் அதனை வசூலிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 1386-ஆம் பசலி ஆண்டில் இரண்டாம் போகப் பயிருக்கு கிருஷ்ணகிரி அணையில் பாசனத்திற்கு போதுமான தண்ணீர் இல்லாததால் பாசன நீட்சி மேல் வரியை வசூலிக்கவில்லை. 1387 ஆம் பசலி ஆண்டில் அணையில் 16-2-78 முதல் பாசன நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த பசலி ஆண்டிற்கான வரியை வசூலிக்க பிரேரணை இன்னமும் அரசுக்கு வரவில்லை, எனவே தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல நடைமுறை ஆண்டிற்கு ஏக்கருக்கு ரூபாய் 120 வரி விதிக்கப் படவில்லை. வரி பாக்கியை வசூலிப்பதால் விவசாயிகளிடையே எவ்வித பதட்ட நிலையும் இல்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், பாசனக் கட்டண விகிதங்களைச் சீரமைக்க உணவு உற்பத்தி ஆணையர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது, பாசனத் திட்டங்களைப் பராமரிக்கவும், விரிவாக்கவும் தேவையான நிதி பெற வழிவகை செய்வதுட்பட, கட்டண விகிதங்களைச் சீரமைப்பது பற்றிய எல்லா பொருள்களையும் கருத்தில் கொண்டு பரிந்துரை அளிக்க இக்குழு கோரப்பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த வரி விதிப்பு எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது என்ற விளக்கத்தை அமைச்சர் சொன்னதற்கு நன்றி. இந்த நடைமுறை ஆண்டு என்பது கடந்த ஆண்டு என்று இருந்து இருக்க வேண்டும். கொடுத்தது தவறு, திருத்திக் கொள்கிறேன். இந்த ஆண்டிலே விதிக்கப்பட்ட ரூ. 120 இப்போது வசூலிக்கிறார்கள். அதற்காக

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணை ஆயக்கட்டுதாரர்கள் மீது விதிக்கப்பட்ட அதிக வரியை வசூலிக்க எடுத்த நடவடிக்கைகளினால் விவசாயிகள் பாதிப்பு குறித்து

[திரு. டாக்டர் கே. சமரசம்] [1978 ஏப்ரல் 5

பல வகைகளில் ஜப்தி போன்ற நடவடிக்கைகள் கூட எடுக்கப்படுகின்றன. ஆகவே அந்த வரியைப் பலர் கட்டாமல் இருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் கண்டன ஊர்வலம் போன்றவற்றை நடத்துவதற்கான வழிகளில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இது பொதுவாகவே நித்திய கண்டம் பூர்ணாயுசு என்று ஒவ்வொரு ஆண்டும் சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந் தலைவர்கள், விவசாயத் தலைவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்து, அவ்வப்போது அந்த வரி நீக்கப்படுகிறது. ஆகவே, இந்த நிலையை மாற்ற' வரி சீரமைப்புச் செய்ய முயற்சி எடுத்துள்ள அரசு, புதிய வரிவிதிப்புக் கொள்கையை விரைவில் அறிவிக்க முன் வருமா?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, இதிலே எழுந்த பிரச்னையே 6 ஆண்டு காலத்திற்கு வரிவிதிப்பு தள்ளி வைத்ததால்தான். அதற்குப் பிறகு, வரி விதிக்கப்படுகிறது என்று சொல்கிறபோது அதைத் தள்ளிக் கொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அது குறித்து என்ன வரி விதிக்கலாம் என்று-ஆராய குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை விரைவில் பெறுவதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

(இ) அம்பலூருக்கு அருகில் உள்ள பாலாற்றிலிருந்து தண்ணீர் வராமையினால், திருப்பத்தூர் டவுனில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

<u>திரு. ப. சுந்தரம் :</u> தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் டவுனுக்கு அம்பலூர் அருகில் உள்ள பாலாற்றில் இருந்து குடிநீர் வாரியத்தின் மூலம் வரும் குடிதண்ணீர் சுமார் 15 தினங்களாக வராததால் திருப்பத்தூர் டவுனில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவரவர்களே, திருப்பத்தூர் நகரத்திற்கு முன்னோடி குடிநீர் விநியோகம் 35 குதிரைத் திறன் உள்ள நீரேற்றியினால் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு 20 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றியும் மாற்று ஏற்பாடாக உள்ளது. திருப்பத்தூர் நகரின் குறைந்த அளவு நீர்த் தேவை வழங்குவதற்கும் (3.0 லட்சம் காலன்கள்) கேதண்டப்பட்டியிலுள்ள திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் (0.4 லட்சம் காலன்கள்) தேவைக்கும் மேற்படி நீரேற்றி 24 மணி நேரமும் வேலை செய்ய வேண்டும்.

1978 ஏப்ரல் 5] [திரு. எஸ். இராகவானந்தம்]

1-3-78-லிருந்து மின்சார விநியோகத்தில் மின் அழுத்தக் குறைவின் காரணமாக நாளொன்றுக்கு 4 மணியிலிருந்து 7 மணி வரை நீரேற்று எந்திரம் வேலை செய்ய இயலவில்லை. 6-3—78 முதல் மின் அழுத்தக் குறைவு தற்காலிகமாக நிறை செய்யப்பட்டு பின் 22-3-78 அன்று ஷண்ட் கெபாசிடர் ஒன்று நிறுவப்பட்டதன் மூலம் மின் அழுத்தக் குறைவு நிறை செய்யப்பட்டு விட்டது. இருப்பினும் திருப்பத்தூர் நகருக்கு குடிநீர் விநியோகம் குறிப்பிட்ட கால அளவில் விநியோகிக்கப்பட்டு வந்ததே தவிர, எந்த ஒரு நாளும் நிறுத்தப்படவில்லை.

<u>திரு. ப. சுந்தரம் :</u> தலைவரவர்களே, இந்த குடிநீர்த் திட்டம் 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் முதல் பட்ஜெட்டில் திருப்பத்தூருக்கு இந்த குடிநீர்த் திட்டத்தைத் தந்தார்கள். அதற்குப் பின்னாலே நமது கலைஞர் அவர்கள் அதை திறந்து வைத்தார்கள். பின்னால் அத்திட்டம் சீரோடும் சிறப்போடும் செயல்பட்டு, ஆசிரியர் நகர், இரயில்வே காலனி, சர்க்கரை மில்லுக்கும் தண்ணீர் தந்தது. சுமார் 15 நாட்களுக்கு முன்பாக திருப்பத்தூர் நகருக்குத் தண்ணீர் வரவில்லை, என்பதை நான் அங்கே போயிருந்தபோது சொன்னார்கள். அதைப் போன்று அரசாங்க மருத்துவ மனைக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை என்றும் நோயாளிகள் அதனால் பெரும் கஷ்டப்படுகிறார்கள் என்றும் வேதனையோடு தெரிவித்தார்கள்.

அது அல்லாமல் ஏறத்தாழ 50 லட்சம் ரூபாயில் இத்திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். 135 ஹார்ஸ் பவ்வர் உள்ள மோட்டார்கள் இரண்டு இருக்கின்றன. அதற்கு மின்சார சப்ளை செய்து அந்த மோட்டார்களை விரைவிலே ஓட்ட ஏற்பாடு செய்தால் சர்க்கரை மில்லுக்கு ஏற்பட்டிருக்கிற தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க முடியும். சர்க்கரை மில்லுக்கு 4 லட்சம் காலன் தண்ணீர் கொடுப்பதாகச் சொன்னார்கள். இப்போது 1000 லிட்டர் தண்ணீர்தான் கொடுக்கப்படுகிறது. இந்தக் குறைகளைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவரவர்களே, 15 நாட்களாக தண்ணீர் கிடைக்காதது பற்றியது இந்த 'கால் அட்டன்ஷன் மோஷன்' 15 தினங்களாக தண்ணீர் கிடைத்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் சில மணி நேரம் அதாவது 4 மணியிலிருந்து 7 மணி வரையில் வேலை செய்யாமல் இருந்திருக்கிறது. இப்போது எல்லாம் சீர்படுத்தப்பட்டு, தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) சென்னையில், மத்திய சிறைச்சாலைக்கருகில் ஏற்பட்ட பஸ் விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திருவாளர்கள் மு. அம்பிகாபதி, எம். ஆறுமுகம், ஏ. ஆர். மாரிமுத்து, ஓ. சுப்பிரமணியம் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக கூறும்படி திரு. மு. அம்பிகாபதி அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, சென்னையில் 29-3-1978-ம் தேதியன்று மத்திய சிறைச்சாலைக்கருகில் ஏற்பட்ட பஸ் விபத்தின் காரணமாக 9 பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பெற்றும், மற்றும் பலர் காயமடைந்துள்ளதுமான அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, 29–3–78 அன்று காலை சுமார் 8 மணி அளவில் வடபழனியில் இருந்து புறப்பட்ட தடம் எண் 17 விரைவுப் பேருந்து சென்னை "Stanley v aduct" அருகே (மத்திய சிறைச்சாலை எதிரில்) பாலத்தின் வளைவில் செல்லும்போது கவிழ்ந்து விட்டது. ஓட்டுநர், நடத்துநர் உட்பட 20 பேர் காயமுற்றார்கள். காயமுற்ற பயணிகளில் 16 பேர் ஆண்கள், மற்றவர் பெண்கள். இந்த 20 நபர்களில் 13 பேர் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்றனர். ஏனையோர் சிகிச்சை பெற்று திரும்பினர். 31-3-78 அன்று நான்கு பேர் மட்டுமே மருத்துவ மனையில் தங்கி இருந்தார்கள். அவர்களில் மூவர் அரசு பொது மருத்துவ மனையிலும், ஒருவர் பெரம்பூர் இரயில்வே மருத்துவ மனையிலும், இருந்தனர். ஓட்டுநரின் வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. விபத்துக்குள்ளானோர் யாரும் கவலைக்கிடமான நிலையில் இல்லை.

விபத்தின் காரணம் பற்றி காவல் துறையினரும், பல்லவன் போக்குவரத்துக் கழக அதிகாரிகளும் விசாரணை செய்து வருகின்றனர். விபத்துக்குள்ளான பேருந்து போக்குவரத்துக் காவல் துறை அலுவலகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது,

பொறியியல் நிபுணர்கள் கருத்துப்படி இந்த விபத்துக்கான காரணங்கள் :—

(1) சாலை மிக வளைவாகவும், அருகருகே மாற்று வளைவாகவும் இருப்பது.

(2) வளைவான பகுதியில், சாலையின் மட்டச்சரிவு (Super elevation) இல்லாமை,

(3) வளைவில் பாதுகாப்பாக செல்லக்கூடிய வேகத்தை மிஞ்சி பேருந்தை ஓட்டிச் சென்றது.

(4) திடீரென்று வண்டியின் தடையை உபயோகித்தது.

இம்மாதிரி விபத்துக்கள் மீண்டும் ஏற்படாதிருக்க சாலையில் போதிய மட்டச் சரிவு (Super elevation) கொடுப்பது பற்றியும் வளைவில் சாலையின் மத்தியில் பிரிவுத் தடுப்புகள் அமைப்பது பற்றியும்,(Constiucting Medians along the Centre of the road) "வேகக் கட்டுப்பாடு", "முந்தக்கூடாது" போன்ற அறிவிப்புப் பலகைகள் பொருத்துவது பற்றியும் பரிசீலிக்க போக்குவரத்து காவல் துறையினரையும், சென்னை மாநகராட்சியையும் கேட்டுக் கொள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகம் உத்தேசித்துள்ளது.

[முற்பகல் 11-10]

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலை ஏற்றுக்கொள்கிறேன்.

சாலையிலே அரசு முறைப்படுத்த வேண்டிய சிலவற்றைப் பற்றிபரிசீலிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அது வரவேற்கப்பட வேண்டிய அம்சம். இப்படிச் சில இடங்களிலே விபத்துக்கள் ஏற்படுவதால் பொதுத்துறையான பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மீது வேறுவிதமான அபிப்ராயங்கள் ஏற்பட்டுவிடாத அளவுக்கு அரசு தக்க முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். வளைவு இருந்ததன் காரணமாகத்தான் விபத்து ஏற்பட்டது, ஓட்டுநரின் தவறு இல்லை என்று கூறினார்கள். அரசு இதைப் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரின் விருப்பப்படி தான் நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ, சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இப்போது பல இடங்களிலும் பஸ்கள் நிறைய இருக்கின்றன. ஆனால் சென்னையில் தான் அதிகமான அளவில் இந்த மாதிரி சேதங்கள் ஏற்படுகின்றன. அதற்கு ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணமா அல்லது வண்டிகள் பழுதான நிலையில் இருப்பது காரணமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பொதுவாகச் சென்னையில் பேருந்துகள் அதிகம். எனவே விபத்துக்களும் சற்று அதிகமாகவே இருக்கின்றன.

[திரு. கே. இராஜமுகமது] [1978 ஏப்ரல் 5

கோவை மாவட்டத்திலுள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் கோவை மாவட்டத்திலும் சென்னையிலும் தங்கள் கடைகளை வைத்து இப்போது விற்பனை செய்துவருகிறார்கள். ஆகவே இந்தத் துணி தேக்கம் நிச்சயமாக நீங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி நெவாளர்களின் பிரச்னைகளைத் தீர்க்கிற வகையில் தமிழகம் தழுவிய வகையில் முற்போக்கான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அதன் பலனை கோவை மாவட்ட நெசவாளர்களும் பெறுவார்கள்.

அரசினர் சட்ட முன்வடிவுகள்—1978-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 24/78)—தொடர்ச்சி.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது என்றாலும் அதில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே, இந்தப் பல்கலைக் கழகம் உருவாவது பொறுத்த வரையில், பெயர் மாற்றமும், நிர்வாகப் பொறுப்பில் சில மாற்றங்களுமே தவிர வேறு எந்தவிதமான விசேஷ மாற்றமும் இதில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று உதாரணத்திற்காகச் சொல்லவேண்டுமென்றால், புது மொந்தையில் பழைய கள் என்ற அடிப்படையில் இருக்கிறதே தவிர சிறப்பான, புரட்சிகரமான மாற்றம் எதுவும் இருக்கிறதா என்றால் இல்லை என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நூற்றுக்கணக்கான பொறியியல் பட்டதாரிகள் வேலையின்றி இருக்கிற சூழ்நிலையில் அதற்கு உத்ரவாதம் அளிக்கிற வகையில் ஒரு கல்விமுறை இங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாகக் கிடையாது.

[முற்பகல் 11-20]

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் திரு. எஸ் ஜே. சாதிக்பாட்சா தலைமை)

அதோடு டிப்ளமோ படிக்கக்கூடிய பாலிடெக்னிக், சென்ட்ரல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி என்று பக்கத்தில் இருக்கிறது. அதையும் இணைக்க தயாராக இல்லை. அதோடு பக்கத்திலுள்ள அழகப்பாச் செட்டியார் காலேஜ், அதாவது எ.ஸி. காலேஜ் ஆஃப் டெக்னாலஜி என்பதிலிருந்து நான்கு பிரிவுகளை மட்டும் இந்த பல்கலைக் கழகத்தில் சேர்த்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரியிலுள்ள பல்வேறு பிரிவுகள் இணைக்கப்படவில்லை.

1978 ஏப்ரல் 5] [திரு. ரா. கிருஷ்ணன்]

இதற்கு காரணம் என்னவென்றால், சென்னை பல்கலைக் கழகத்திற்கும் உருவாகின்ற பல்கலைக் கழகத்திற்கும், பல்வேறு வகைகளில் நிர்வாகத்தினருக்குள் பல்வேறு போட்டி பனப்பான்மை இருப்பதாக இந்த மசோதாவின் மூலமாகத் தெரிகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனக்கு கிடைத்த தகவலின்படி சென்னை பல்கலைக் கழகத்தில் இருந்த லாபரட்டரியை—சோதனைச் சாலைகளை எ. சி. காலேஜ் பகுதிகளில் போட்டு, கட்டடத்தை காத்துக்கொள்வதற்கும், கட்டடத்தை பிடிப்பதற்கும் போட்டி மனப்பான்மைதான் இருக்கிறதே தவிர, சிறப்பான இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் எந்தவிதமான ஆர்வமும் இல்லாமல் கட்டடங்களை பிடிப்பதற்கும், காம்பன்சேஷன்— நஷ்டஈடு வாங்குவதிலும் போட்டி மனப்பான்மையும் தான் இருக்கிறது என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் 35-வது செக்ஷனில் சொல்லப்பட்டிருப்பதைப் பொறுத்தவரையில் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், உருவாக இருக்கின்ற பல்கலைக் கழகத்திற்கும் நஷ்ட ஈடு கொடுப்பது சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்தலாம் என்றும், இந்த பேச்சு வார்த்தை மூன்று ஆண்டுகளுக்குள் முடியாவிட்டால், மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அடிப்படையில்....

Provided that where no such agreement is reached within the period of three years from the appointed day, the Government may after giving an opportunity to the University.........

இப்படி இருக்கிறது. ஆகவே, இந்த மனப்பான்மை எதற்காக இருக்கவேண்டும்? சென்னை பல்கலை கழகத்திற்கும், உருவாக இருக்கின்ற பல்கலைக் கழகத்திற்கும் இப்படிப்பட்ட நஷ்டஈடு சம்பந்தமான பேச்சுவார்த்தை, மூன்று ஆண்டுகள் ஏன் நடைபெற வேண்டும், மூன்று ஆண்டுகளாக பேசியும் உடன்பாடு வர முடியாத அளவுக்கு என்ன இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதோடு பக்கத்தில் இருக்கக்கூடிய பாலிடெக்னிக், ஸி.பி.டி. இதையும் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்து இருக்கலாம்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், Schedule II, Section 30(1), Clause 7, Sub-clause (iii) அதில் என்ன போட்டிருக்கிறது என்றால், ஆசிரியர்கள் தற்காலிகமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கல்லூரிகளில் மூன்று ஆண்டுகள் பணியாற்றியிருந்தால் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று உறுதி கொடுத்திருக்கிறோம். அப்படியிருந்தால், 391-வது பக்கத்தில் கிளாஸ் 3-ல்......

No teacher appointed temporarily shall, if he is not recommended by a regular selection committee for appointment under these statutes, be continued in service on such temporary employment, unless he is subsequently selected by a local selection committee........

ஆக இங்கு பணியாற்றுகின்ற ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், எத்தனை ஆண்டுகளாகப் பணியாற்றியிருந்தாலும், லோக்கல் செலக்ஷன் கமிட்டி தேர்ந்தெடுத்தால்தான் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று இருக்கக்கூடிய நிலைமை இருப்பதைப் பார்க்கின்ற பொழுது ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படக்கூடிய நிலைமை இல்லாமல் போய்விடுவதோடு, அவர்களை டிஸ்மிஸ் அல்லது வெளியேற்றக்கூடிய படுபயங்கரமான நிலைமை ஏற்படுமோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அதற்கான விடையை எதிர்பார்க்கிறேன்.

அதோடு பக்கத்தில், செக்ஷன் 16-ல் Appointment of First University Staff என்று இருக்கக்கூடிய அந்தப் பிரிவில் துணைவேந்தருக்கு விசேஷ பவர் வழங்கப்பட்டிருக்கிறது.

........the first Vice-Chancellor shall have power to appoint such officers, teachers and other persons as [may be necessary என்று கூறப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே அங்கு பணியாற்றிக்கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் தற்காலிகமாக இருக்கிறார்கள். அதற்கு மேல், லோக்கல் செலக்ஷன் கமிட்டி என்று கூறப்பட்டிருக்கிறது, இன்னொரு பக்கத்தில் பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, இது எதற்காக? ரெஸிடியரி பவர் என்று ஒட்டுமொத்தமாக விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டுவிட்டால், விருப்பு வெறுப்புகள் அதிகமாக ஏற்படுகின்ற நிலைமை ஏற்படும் என்று நம்புகிறேன்.

அதோடு மட்டுமில்லாமல், ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற உறுதி அளிக்க முன்வரவேண்டும் என்று கட்டுக்கொள்கிறேன். உருவாக இருக்கின்ற பல்கலைக் கழகத்தில் சில ஆசிரியர்கள் பணியாற்ற விரும்புகின்றார்கள், சிலர் விரும்பவில்லை, அவ்வாறு இப்போது (பொறியியல்) கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், உருவாக இருக்கின்ற பல்கலைக் கழகத்தில் பணியாற்ற விருப்பம் தெரிவிக்காமல் இருந்து, அதே இடத்தில் பிற கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்கள் இந்தப் பல்கலைக் கழகத்தில் பணியாற்ற விருப்பம் தெரிவித்தால், இந்தப் பல்கலைக் கழகத்தில் பணியாற்ற வாய்ப்பு கொடுக்க முடியுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். அதோடு, இதிலே துணைவேந்தருக்கு ஒரு மிக விசேஷமான, தேவையற்ற

முறையில் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, செக்ஷன் 6 கிளாஸ் 2 (சி) என்ன கூறுகிறது என்றால், ஒரு மாணவரை எப்போதும் வெளியேற்றலாம் என்று அந்த அளவிற்கு இதிலே அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த செக்ஷன் 6, கிளாஸ் 2 (சி)-யிலே,

to admit any person or retain any student whose conduct is prejudicial to the interests of the University or the rights and privileges of other students and teachers.

இப்படிப் பொதுவாக, மொட்டையாக இருக்கிறதே ஒழிய, தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. 'இன் தி இன்டரஸ்ட் ஆப் தி' என்பது என்ன? அவர் நினைத்தால் ஒருவரை வெளியே அனுப்பிவிடலாம். மேல் வகுப்பிற்கு அனுப்பாமல் இருக்கலாம். துணைவேந்தர் நினைத்தால் சேர்க்கலாம், சேர்க்காமலும் இருக்கலாம் என்று இப்படிப்பட்ட அதிகாரங்களை வழங்கினால், நாளைக்கு இவைகள் எத்தனை சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதை நான் ' இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதோடு இந்த மாணவர்களைச் சேர்ப்பதைப் பொறுத்த மட்டிலும்கூட, இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் ஆகியோர்களுக்கு ரிசர்வேஷன் வழங்கப் பட்டிருக்கிறது. அதற்கு ஒரு உச்ச வரையறை இருக்கிறது. ஆனால், இங்கே கூறுவது என்னவென்றால்,

the Government may by order direct that the University shall reserve such percentage of seats thereon

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கக்கூடிய இந்த பர்சன்டேஜ்படி ஒதுக்கப்படுவதற்கு உத்திரவாதம் செய்யப் பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்கும் போது, இங்கே கொடுக்கப் பட்டுள்ள பிரிவால் அபாயம் ஏற்படக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. எனவே, அதற்கும் இந்த அரசு ஒரு உத்திர வாதத்தை இங்கே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதோடு, இந்த அகாடமிக் கவுன்சில் என்பது பல்கலைக் கழகத்திலே இன்ன இன்ன பாடத்திட்டங்களை வைக்க வேண்டும் என்பதற்கான முடிவுகளை எடுத்து, அதை செயல்படுத்தக் கூடிய ஒன்று. இப்படிப்பட்ட முக்கியமான ஒரு அகாடமிக் கவுன்சிலிலே யார் யார் நியமிக்கப்படுவார்கள், இந்த அகாடமிக் கவுன்சில் எப்படி உருவாக்கப்படும் என்பதைப் பற்றிய ஒரு

விளக்கம்கூட இந்த மசோதாவில் இல்லை. ஆக, இந்த பல்கலைக்
கழக மசோதா இதைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டு, இந்த
அகாடமிக் கவுன்சில் அதற்கான வாய்ப்பும், வசதிகளும் உடை
யதாக அறிவிக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

அதோடு, மாணவர்களுக்கு எந்தவிதமான ஒரு அங்கீ
காரமும் இல்லாத, அவர்கள் அதிலே பிரதிநிதித்துவம் அல்லது
நியமனம் பெற முடியாத அளவிற்குத்தான் இது இருக்
கிறது என்பதைக் கூற விரும்புகிறேன். அதோடு, இங்கே
கூறியுள்ள விளக்கத்திலே, இந்த ஸ்டேட்மெண்டு ஆப்
ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்சிலே, மாணவர்களுக்காகத்தான்
இந்தப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது என்று
கூறியிருக்கிறார்கள். அப்படிக் கூறும்போது,

and promote the spirit of entrepreneurship and professional
dedication among the students

மாணவர்களுடைய பிரச்னை. மாணவர்களை எப்படிப் உருவாக்கு
வது என்பதற்காக இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்
பட்டிருக்கிறது என்றெல்லாம் கூறுகின்றபோது, அந்த நிர்வாகம்
எப்படி எப்படியெல்லாம் இயங்க வேண்டுமென்று யோசனைகள்
சொல்வதற்காக, அகாடமிக் கவுன்சிலிலேகூட எந்தவிதமான
அங்கீகாரமும் மாணவர்களுக்கு இல்லை, எந்தவிதமான நிய
மனமும் அவர்களுக்கு இல்லை என்று சொன்னால், அது எந்த
விதத்திலே பொருத்தமாக இருக்கிறது? ஆகவே, நிச்சயமாக
சிண்டிகேட்டிலும், அகாடமிக் கவுன்சிலிலேயும் மாணவர்களுக்குத்
தேர்தல் முறையிலாவது அவர்கள் உறுப்பினர்களாக ஆவதற்கு
வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் வற்புறுத்திக்
கூற விரும்புகிறேன்.

அதோடு, இன்றைக்கு என்ஜினியரிங் காலேஜ்களிலே பொது
வாக இன்டர்வியூ நடக்கிறது. கோயம்புத்தூர் கல்லூரியாக
இருந்தாலும், கிண்டி கல்லூரியாக இருந்தாலும், அங்கே
யெல்லாம் பொறுக்கு முறையிலே தேர்வு நடக்கிறது, அரசாங்
கத்தின் சார்பாக. ஆனால், இந்தப் பல்கலைக் கழகத்திலே
மாணவர்கள் எந்த அடிப்படையில் சேர்க்கப் போகிறார்கள்
என்பதைப் பற்றித் தெளிவாக இல்லை.

அதோடு, செமிஸ்டர் சிஸ்டம் இருக்கிறது; அதிலே இன்
டர்னல் அசெஸ்மென்ட் இருக்கிறது. இந்த செமிஸ்டர் சிஸ்
டமும் இன்டர்னல் அசெஸ்மெண்டும் வரவேற்கக்கூடியதாக
இருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்
கனவே கூறியிருக்கிறார்கள். இதிலே நல்ல கல்வி முறை அமைந்
திருக்கின்றது என்று இங்கே அவர்கள் ஒருநாள் சுட்டிக்காட்டி
னார்கள்.

ஆனால். நான் ஒன்றை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு
வர விரும்புகிறேன். இன்றைக்கு காலேஜுகளில், எல்லாக்
கல்வி ஸ்தாபனங்களிலும்கூட ஒரு விருப்பு வெறுப்பு ஜாதியின்
காரணமாகத் தலைதூக்கி இருக்கிறது என்பதை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

இன்றைக்கு மருத்துவக் கல்லூரியில்கூட அந்த அடிப்படை
யில் இருக்கிறது. ஆக, இன்டர்னல் அசெஸ்மென்ட் என்ற
இந்த முறையில் அதிகமான அளவு மதிப்பெண்கள் கொடுக்கும்
போது இந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடிய
அளவுக்கு வருமோ என்று சந்தேகப்படுகிறேன்.

போலீஸ் டிப்பார்ட்மென்டில்கூட ஜாதிய வெறுப்பு விருப்பு
கள் பயங்கரமாக இருக்கின்றன. போலீஸ் அதிகாரிகளே அந்த
மாதிரி நடந்து கொள்கிறார்கள். குறிப்பாக கல்வி ஸ்தாபனங்
களில் மருத்துவக் கல்லூரி போன்ற நிர்வாகங்களில் அப்படிப்
பட்ட விருப்பு வெறுப்புகள் இருக்கின்றன. அதைக் களையக்
கூடிய அளவுக்கு இன்டர்னல் அசெஸ்மெண்டுக்கு மார்க்குகளைக்
குறைவாகக் கொடுங்கள்.

பாலிடெக்னிக்கில் படிக்கின்ற டிப்ளோமா ஹோல்டர்ஸ்
மேல் பட்டப் படிப்பு கிடைக்க எந்த வாய்ப்பும் கிடையாது.
அவர்கள் மேல் படிப்பு படிக்கக்கூடாது என்று கோவை போன்ற
இடங்களில் இருக்கக்கூடிய பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள்
என்று கேள்விப்படுகிறேன். மூன்று ஆண்டுகள் அவர்கள் படித்து
முடித்துவிட்ட பிறகு அவர்கள் எஞ்சினியரிங் கல்லூரியில்
சேர்ந்து பி.இ.பட்டம் பெற்றுவிட்டால் அதிகமான சம்பளம்
கொடுக்கவேண்டும், அதன் காரணமாக சீப் லேபர் கிடைக்காது
என்ற காரணத்தால், சீப் லேபர் கிடைக்க வேண்டுமென்பதற்
காக இப்படிப்பட்ட ரெகமன்டேஷனைச் செய்திருப்பதாக
அறிகிறேன். டிப்ளோமா படித்தவர்கள் எஞ்சினியரிங் பட்டம்
பெற வாய்ப்பு ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு
இப்படிப்பட்ட குறைபாடுகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக்
கொண்டு வந்து இதை ஆதரித்து அமருகிறேன்.

திரு. சி. பழனிமுத்து: தலைவர் அவர்களே, 1978ஆம் ஆண்டு
பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச்
சட்டமுன்வடிவை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்
புகிறேன்.

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்
அமைக்கப்படும்போது அதிலே மாநில ஆட்சி மன்றக்குழு,
சிண்டிகேட், போர்டு ஆப் ஸ்டடிஸ் போன்ற பலவிதமான

அமைப்புகள் இருப்பினும் மாநில சட்டமன்றத்திற்கு என்று அந்தக் குழுவில் ஓர் அங்கத்தினரை மட்டும் உறுப்பினராக ஆட்சிக் குழுவுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது. அந்தப் பல்கலைக் கழகக் குழுவில் மூன்று சட்டமன்ற உறுப்பினர்களை நியமிக்கவேண்டுமென்றும், தொழில் நுட்பக் கல்வி சார்ந்த அதிகாரிகளை அமைப்பதில் தகுதி, திறமை மற்றவற்றைக் கொண்டு அமைக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகம், மதுரைப்பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்றவைகளில் செனட், சிண்டிகேட் போன்றவைகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிப்பது போல் இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திலும் வழி செய்தால் மாணவர்கள் பிரச்சினை பற்றி, அதிகமான மாணவர்கள் பயிலச் செய்வது பற்றியெல்லாம் கருத்துக்களை உறுப்பினர்கள் எடுத்துக் கூற வாய்ப்பாக இருக்கும். கிராமப்புறத்தில் இருக்கும் மக்கள், ரூரல் ஏரியாக்களில் வாழ்கின்ற மக்கள் தங்களுடைய திறமையைப் பயன்படுத்திக் கொள்ளும் முறையில் வாய்ப்பு, வசதிகள் இல்லையென்றாலும் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் பயில அதிகச் சலுகைகளும் வாய்ப்புகளும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்பகுதியில் வசிக்கிற மாணவர்களுக்கு அதிக வாய்ப்புகளும், வசதிகளும் இருக்கின்றன. கிராமப் பகுதி மாணவர்கள் மலைவாழ் மக்கள், பின்தங்கிய மக்கள், வசதி இல்லாத ஏழை எளியவர்களுக்கு தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் சேர தனிச் சலுகை அளித்தால்தான் அவர்கள் சேர இயலும். இப்போது குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 2,11,00,000 செலவுத் தொகையில் மேலும் 30 லட்சம் ரூபாய் அதிகமாகும் என்று கூறியுள்ளார்கள். இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் தோல், நெசவு, கட்டடக்கலை, நகர அமைப்பு ஆகியவற்றை எல்லாம் சேர்த்து தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். தமிழகம் பூராவும் உள்ள பாலிடெக்னிக், எஞ்சினியரிங் கல்லூரிகள் இந்த அமைப்பில் சேருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

ஆகவே, இந்த அமைப்புகள் சேர்ந்திருந்தால் நல்ல சூழ்நிலையிலே அந்தப் பல்கலைக்கழகம் அமைவதற்கும், அந்தப் பல்கலைக் கழகத்திலே படிக்கின்ற மாணவர்கள் தொழில் நுட்பத் தொடர்புள்ள வாய்ப்புகளைப் பெறுவதற்கும் உதவியாக இருக்கும். பல்கலைக் கழகத்திலே மாணவர்களைச் சேர்ப்பதிலே வரையறுக்கப்பட்ட கல்வித் தரம் பெற்றிராத மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பல்கலைக் கழகத்திலே மாணவர்களுக்கு என்று

ஸ்காலர்ஷிப்பை அதிகப்படுத்தி, எல்லா மாணவர்களுக்கும் கொடுத்து, அந்தப் பல்கலைக் கழகத்தை 'ரெசிடென்ஷியல் யூனிவர்சிட்டி'யாக ஆக்கினால் மாணவர்கள் நல்லமுறையில் கல்வி பயின்று, நல்ல படிப்பும், மேற்பட்டப் படிப்பும் பெறுவதற்கு உறுதுணையாக இருக்கும், இந்த முறையிலே அந்தப் பல்கலைக்கழகம் அமைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வைஸ்—சான்சலர், சான்சலர் ஆகியவர்களுக்கு மற்றப் பல்கலைக் கழகத்திலே இருப்பதைப்போலவே இதிலேயும் வரைமுறைகள் இருக்கின்றன. ஏதாவது ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்றால் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு நிறைவேற்ற வேண்டுமென்று கூறுகிறார்கள். அதைப்போன்றே, இந்தப் பல்கலைக் கழகம் அமைவதற்கு வேறு சில பொறுப்புகளும் பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டுத் தனியிடம் பெறும். ஆகவே, பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் என்று இந்தப் பல்கலைக் கழகத்தை அமைப்பது குறித்து நானும் வரவேற்கிறேன். இந்தப் பல்கலைக் கழகம் நல்லமுறையில் செயல்படுவதற்குக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கும் சிண்டிகேட் அல்லது ஆட்சிமன்றக் குழுவிலே இடம் கொடுத்து ஒரு மாணவரையாவது அங்கு நியமிப்பது சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், அந்த மாணவர்கள் தங்களுக்கு வேண்டிய படிப்பையும், தொழில் நுட்ப அபிவிருத்தியை அறியவும் அவர்களுக்கென்று ஒரு முறையை வரையறுத்துத் தேர்வில் வெற்றிபெறும் மாணவரை அந்தக் குழுவிலே சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் சேர்த்துக் கொண்டால் அவரும் ஆலோசனைகளைக் கூறி இந்தப் பல்கலைக் கழகத்தின் மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருப்பார்கள். ஆகவே, மாணவர்களையும் இந்தக் குழுவிலே சேர்த்து அங்கம் வகிக்க இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்காக நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: தலைவரவர்களே, தன்னுடைய வாழ்நாளெல்லாம், தமிழுக்காகவும், தமிழ்நாட்டினுடைய பொருளாதாரம், தொழில் வளம் பெருக வேண்டுமென்பதற்காகவும் பாடுபட்ட பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரிலே இந்தப் பல்கலைக் கழகம் துவக்கப்படுகிறது. ஆனால் இதிலேயும் சில அரசியல்வாதிகள் பேரறிஞர் அண்ணாவின் பெயரை வைக்கக் கூடாது என்று சிலரைத் தூண்டிவிட்டு அந்தப் பெயர் கூடாது என்று சொல்வதாக நான் பத்திரிகையிலே கண்டேன், எந்தத் தன்மானமுள்ள தமிழனும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைப்பதை எதிர்க்க மாட்டான் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைக்கக்கூடாது என்று யாரோ அரசியல்வாதிகள் சொன்னதாகவும் பத்திரிகையில் வந்திருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். யார் அந்த அரசியல்வாதி, அவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்களா? அவர்களுடைய பெயர் என்ன என்ற விவரங்களைச் சொல்ல வேண்டும்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: இளைஞர் மன்றம் என்கின்ற பெயரால் அந்தச் செய்தி வந்திருக்கிறது. எப்படியும் அப்படிப்பட்ட இளைஞர் பின்னணியில் பெரிய அரசியல்வாதிகள் இருப்பார்கள் எனபதைப் பல சம்பவங்களில் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆகையினால் அத்தகைய தீய சக்திகளுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவது தமிழ்நாட்டிலே பல தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். தற்பொழுதிருக்கின்ற நிலைமையில் சில சர்க்கரை ஆலைகளிலே ஏதாகிலும் எஞ்சின்களோ அல்லது அங்கிருக்கின்ற இயந்திரங்களோ சிறிய கோளாறு அடைந்தால் அதற்காக வட நாட்டிலிருந்து பொறியியல் வல்லுநர்கள் வந்து அதைச் சீர் செய்யும் நிலைமை தற்பொழுது இருக்கிறது.

(முற்பகல் 11·40)

இந்தப் பல்கலைக் கழகம் ஏற்பட்டவுடனே நிச்சயமாக அத்தகைய இடர்ப்பாடெல்லாம் தவிர்க்கப்பட்டு, தமிழகத்திலேயே, எத்தகைய தொழிற்சாலைகளையும், அதிலே ஏற்படுகின்ற குறைபாடுகளையும் சீர்திருத்தம் செய்கின்ற வகையிலே நமக்கு நிறைய ஆட்கள் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்து, தமிழகத்திலே தற்பொழுது பெண்களுக்கென தனியாக பொறியியல் கல்லூரி இல்லை. இப்பொழுது பொறியியல் கல்லூரியிலே பெண்களை அனுமதித்தாலும், மருத்துவக் கல்லூரிகளைப் போன்று அங்கே அதிகமாகச் சேர்வதில்லை. ஆகவே, தனியாகப் பொறியியல் பல்கலைக் கழகத்தைத் துவக்குவதன் காரணமாக. மாணவிகளை—பெண்களைச் சேர்ப்பதற்கு அது ஊக்குவிக்கும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக் கழகத்திலே மாணவர்கள் சேர்க்கப்படும்பொழுது ஓரளவு விகிதாசாரங்கள்தான் அங்கே குறிப்பிட்ட வகுப்பினருக்கு இருக்கவேண்டுமே தவிர, அதிகமான விகிதாசாரம் சேர்ப்பித்தால் தகுதி குறைந்துவிடுமோ என்ற அச்சம்

இருக்கிறது. ஆகையினாலே கூடுமான வரையிலே தகுதி அடிப்படையிலேதான் அங்கே மாணவர்களைச் சேர்ப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரில் எல்லாக் கல்லூரிகளும் இருக்கின்றன. ஆனால் பொறியியல் கல்லூரி இல்லை. ஆகவே, வட ஆற்காடு மாவட்டத்திற்கென வேலூரிலோ, அல்லது காட்பாடி தொகுதியிலோ ஒரு பொறியியல் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காட்பாடி தொகுதியிலே 700 ஏக்கர் நிலம் தரிசாக இருக்கிறது. அநேகமாக, பல கல்லூரிகளை ஏற்படுத்த இந்தப் பல்கலைக் கழகம் முயற்சிக்கும். அந்த நேரத்திலே, காட்பாடியிலே 700 ஏக்கர் நிலத்தைப் பயன்படுத்தி அங்கே ஒரு பொறியியல் கல்லூரியை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துணைவேந்தர் நியமிப்பதிலே எந்தவிதமான அரசியலும் இருக்கக்கூடாது. ஏனென்றால், தொழில் துறை சம்பந்தப்பட்ட விவகாரம். அரசியல் தலையிட்டால் தகுதி குறையும். ஆகவே, அரசியல் தலையீடில்லாமலே, துணைவேந்தரை நியமிக்கவேண்டும்; அவரும் அரசியல் இல்லாமலே நிர்வகிக்கவேண்டும். எந்த நன்றியுள்ள தமிழனும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை வைப்பதற்கு எதிர்க்கக்கூடாது என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பொறியியல், தொழில் நுட்பயியல் தொடர்புள்ள அறிவியல் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக தனியாகப் பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதை எங்களுடைய கட்சியின் சார்பிலே முதலிலே நான் வரவேற்கிறேன்.

ஆனால், அதே நேரத்தில் இந்தப் பல்கலைக் கழகத்திலே விவகார எல்லை, கிண்டியைச் சுற்றியுள்ள பொறியியல் கல்லூரிகளை மட்டும் விவகார எல்லைக்குள், அதிகார வரம்பிற்குள் வைத்துள்ள பல்கலைக் கழகமாக இருக்கிறது. தமிழகத்திலே உள்ள ஏனைய பல பொறியியல் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள், அரசாங்கக் கல்லூரிகள் அத்தனையையும் அதனுடைய எல்லைக்குள் கொண்டு வரக்கூடிய பல்கலைக் கழகமாக இருந்தால், அதுதான் பிரயோஜனமாக இருக்கும், பயனுள்ளதாக இருக்கும்.

வேளாண்மைப் பல்கலைக் கழகம் தனியாக இருக்கிறது. வேளாண்மைக் கல்லூரி, அதையொட்டியுள்ள அதன் முன்னேற்றம் சம்பந்தமான கல்வி சம்பந்தப்பட்ட, ஆராய்ச்சி நிலையங்களையும் அந்தப் பல்கலைக் கழகம் தன்னகத்தே கொண்டிருக்கிறது. அதே மாதிரி, இந்தத் தொழில் நுட்பப் பொறியியல் பல்கலைக் கழகம்

என்று சொல்லக்கூடிய பல்கலைக் கழகத்தின் அதிகாரமும், எல்லைகளும் தமிழகம் பூராவும் இருக்கக்கூடிய கல்லூரிகளைச் சேர்க்கக் கூடிய நிலைமையில் இருக்க வேண்டுமே தவிர, இப்பொழுதிருக்கிற கிண்டியிலுள்ள. அதைச் சுற்றியுள்ள கல்லூரிகளை மட்டும் எல்லையாக வைத்து. அதற்கு மட்டும் என்று வைத்திருப்பது, சிறிய, குறுகிய எல்லையாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு மத்திய அரசோ, வேறு யாராவதோ தடங்கலாக இருந்தாலும், அதை நீக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்பொழுதுதான் அது சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள், மற்ற மேல்படிப்புக்கு வேண்டிய காரியங்கள் சுயேச்சையாக நடைபெற அந்த அதிகாரங்களோடு இந்தப் பல்கலைக் கழகம் தனது காரியங்களை ஆற்ற முடியும்.

அதே நேரத்தில் இருக்கின்ற அமைப்பு முறைகளிலே அதனுடைய அதிகார குழுக்களிலே, ஆட்சி குழுவிலே பலவிதமான பிரதிநிதித்வம் எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய முறையில் எப்படி எப்படி பிரதிநிதிகள் வரவேண்டும். யார் யார் ஆட்சிக் குழுவில் வரவேண்டும் என்று பழைய விதிகள் அவைகள் அப்படியே போடப்பட்டிருக்கின்றன என்று எண்ணுகிறேன். இப்போது பொதுவாக அங்குள்ள மாணவர்களுக்கும் போதிக்கின்ற ஆசிரியர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் கருத்துப் பரிமாற்றம் இருக்கவேண்டும் என்று சொன்னாலும்கூட சிக்கல் இல்லாமல் இருக்கவேண்டும் என்று செய்யவும், அவர்களுடைய பிரதிநிதி ஒருவர் அவர்களுக்கு என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன அங்கு என்னென்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காக மாணவர்களுக்கு அந்த ஆட்சிக்குழுவில், செனட்டிலோ, சின்டிகேட்டிலோ இடம் கொடுக்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். வேறு இடங்களிலே இருக்கிறதா என்ருல் பல இடங்களில் பல மாநிலங்களிலே யுனிவர்சிடிகளிலே இருக்கின்றன. ஆகவே அந்த விதத்தில மாணவர் பிரதிநிதிகளைக் கட்டாயமாக சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று இதிலே இல்லை. அதை நாம் ஏற்படுத்தவேண்டும்.

இன்று ஐ.டி.ஐ. மாணவர்களுடைய நிலைமை எப்படி என்பதெல்லாம் கொடுக்கப்படவில்லை. இன்ஜினிரிங் கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்ற மாணவர்கள் இப்போது 5,000 பேர்களுக்கு மேல் வேலையில்லாமல் இருக்கிருர்கள். இந்தப் பழைய படிப்பு அப்படியே இல்லாமல் அல்லது வேறு மாதிரி மாற்றங்கள் கொண்டு வந்து, படித்த உடனேயே, சுயமாகப் பணியாற்றக்கூடிய புதுப்புது ஆராய்ச்சிகள் எல்லாம் செய்யப்படும் என்று நினைக்கிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படவேண்டும்.

அதோடு கூட இந்த ஆட்சிக்குழுவைப் பொறுத்தமட்டில், சட்ட மன்றத்தில் இருக்கக்கூடிய பிரதிநிதிகள், அவர்களாக நியமிக்கப் படக்கூடியவர்கள். அங்கே உள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் உள்ளவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பொது மக்களுடைய பிரதிநிதிகள், சாதாரண விவசாயிகள், கிராமப் பிரதிநிதிகள் ஒன்றிரண்டு பேர்கள் இவர்கள் எல்லாம் அதிலே இருக்கிற ஏற்பாடு இருக்கிறதா என்ருல், அதில் இல்லை. ஆகவே பிரதிநிதிக் குழுவில் மாணவர்களுக்கு இடமளிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும்.

அதோடு இந்தப் பொறியியல் பல்கலைக்கழகத்தில் தமிழகம் பூராவிலும் உள்ள தனியார் கல்லூரிகளை இணைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதிலே தடங்கல் வரும் என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் இந்த முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட வேண்டும். அப்போதுதான் பலன் அளிக்கும். இந்தப் பல்கலைக் கழகத்தின் உள்ளே எப்படிக் கொண்டு வருவது என்பதைப் பற்றி எல்லாம் தயக்கம் காட்டவேண்டியதில்லை. தயக்கம் காட்டாமல் இந்த முயற்சியை தீவிரமாகச் செய்யவேண்டும்.

மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த உரிமைகளைப் பெறுவதற்கு பல்கலைக் கழகத்தின் எல்லையைத் தமிழகம் பூராவும் கொண்டு வருகின்ற முயற்சியை எடுத்துக் கொண்டு, இப்போது இல்லை என்ருலும் எதிர்காலத்திலே இதற்காக ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Mr. Chairman, with a great sense of exhilaration and satisfaction I rise to support the Bilt that has been introduced for the consideration of this Hcuse by the Hon. Minister for Education. I do hereby extend my heart-felt thanks to the Hon. Minister for Education for having broug htfortht his Bill which would fulfil a long-felt need of having a separate University for the prosecution of higher studies in the Engineering, Technical and Technological fields.

I am also thankful to the Hon. Minister for having named this University after one of the greatest champions of democracy and the greatest champion of higher education and the greatest champion of the down-trodden people viz. "Perarignar Anna".

Now going to the Bill and taking the Bill for its clause by clause consideration, I am having only a limited observation to make. With regard to the commerce and business technologi

this University is going to confine, as seen in the provisions incorporated in the Bill, to specialise only to the Engineering and Technological fields.

(முற்பகல் 11-50)

But at the same time it is stated that the object is to further the entrepreneurial ability among the students along with training in the engineering and technological fields. If you want to enhance the entrepreneurial ability, then, you must have not only the training in the engineering and technological fields, but also in the field of business management to enhance the ability in commerce and business. In some countries we know that technology includes not only engineering and other technological subjects, but also commerce and business administration. Therefore, if you want to have a proper development of the entrepreneurial ability to meet the growing needs of commerce and business in this country, then, you must have a combination of both the engineering technological abilities as well as abilities in the field of management, commerce and business.

In some countries, particularly I know an institution, the Asian Institute of Technology in Bangkok; they do give practical training to the students in engineering technology. Along with engineering and technological training, they give training in actual business and business management and allied subjects. Therefore, I would like the Hon. Minister to consider seriously whether it is possible to include such curricula also, so that along with the development of the engineering and technological ability, you have a complete system of entrepreneurship. Otherwise, you may not have the proper personnel to meet the growing requirements of the industry and commerce. So, that is one suggestion that I would like to make.

Then, another one I am making is this. In Clause 6 (2) (c) it has been stated that persons whose conduct is prejudicial to the interests ot the University or the rights and privileges of other students and teachers should not be admitted. This is a very welcome and praiseworthy clause that the Hon. Ministe

has incorporated in the Bill. Persons whose conduct may be prejudicial to the institution should not be enrolled either as members of the staff or as students. It is a very welcome suggestion made by the Hon. Minister.

Because in most of these institutions we do find that the purpose of the education is not fully met because of the undesirable elements getting admitted into the institutions. Such persons are found not only among the students, but also among the members of the staff. The very purpose for which the educational institutions, particularly the higher educational institutions are brought in to existence is not fulfilled because of the undesirable activities of the students and the teaching community. Particularly in institutions where you have a system of education like the training in technology and engineering, the students require utmost concentration. Even if a simple trouble will erupt, then there will be a lot of disorder because you are having in the laboratories costly apparatus and such other things in such specialised institutions. In such institutions students should have the entire devotion attributed and confind only to education and not to any extra-curricular activities which is not their concern.

In this connection, I would say, and I am sorry to differ from the views expressed by my hon. collegues, the other Members, that there should be proper representation or some representation to the students in the academic bodies. I strongly oppose this idea because students are there only to get themselves educated. It is not their lookout to bear the onerous responsibility of administering the affairs of the University. It is not their responsibility at all. A patient comes to the doctor to cure himself. It is not for the patient to prescribe the medicine for himself and it is for the doctor to prescribe the medicine.

In the same way, there are two distinct sections in the educational institutions. One is the teaching community and the other is the taught. What is to be done by the student community is to be done by them. The methods and syllabus ought to be devised by the teachers. The academic policies

should be devised only by the teachers. It is only for that purpose they are teachers. Students are not teachers. Why people want students "representatives in the academic bodies, I do not understand. There should be complete discipline. For what purpose the students' representatives should be in the academic bodies, I do not understand. If you are ready to give me some clarification, I am ready to accept the same.

But I do not find any valid reason to take the student representatives in the responsible bodies like the Syndicate and the Academic Council and all that. There, the questions relating to the students which should not be disclosed before hand to the student community are being discussed. It is only in the Syndicate that questions relating to examinations and what should be the rules and regulations with regard to the conduct and character of the students and such allied matters are discussed. They should be kept secret, unless and until they are disclosed to the student community. Why should there be students' representatives in such bodies? It may create chaos. That is my submission.

Students must give more importance only to academic accomplishments. Whether an institution is functioning properly or not, or whether the expectations of the community are being fulfilled by that particular institution or not, is not only judged by the academic barometer, but by character-building and by imbibing a sense of responsibility among the students. Then only you can deliver the goods to the nation which requires so much today.

Otherwise, just by going on increasing plethora of educational institutions with this name or with that name or for this purpose or for that purpose, you are not going to do any good to the nation. That you must bear in mind. Unless you have a perfect sense of responsibility and conduct and character, all your achievements by means of technological education or engineering education or technical education, this matrix of civilisation will be shattered to the ground, and all your accomplishments and achievements and the so-called industrial and technological development will be undermined.

The very foundation, the very basis of society will be undermined. You must have a responsible society to extricate the downtrodden and the poorest sections of our society from the clutches of this chil penury and utter poverty. That should be the primary and prompt concern of any responsible Government and not giving representation to students in the academic bodies, as if you are going to cultivate a democratic system only in the educational institutions and not in the society.

The educational institutions are not the grounds for your political adventurism. Do not have your political advanturism in the educational institutions. Politicians should get out from the educational institutions. The teaching community and the student community should be completely free from political influence, so that they can freely and with a sense of great responibility prosecute their education and come out with flying colours to serve the nation, to serve the poorest of the community, the people who really need their services.

We want good engineers, responsible engineers. We want good technicians, responsible technicians who can work and deliver goods to the society. Unless and untill you have a perfect system of discipline in the educational institutions, how do you expect responsible people to come up from such educational institutions. I do not understand the reason why the hon. Members plead for students, 'representatives in the Syndicate and academic bodies'. Perhaps, it may be for political purposes. I do abhor such requests. Of course, with a great sense of reluctance, I do differ from the opinion expressed by my Hon. Friends here.

(நண்பகல் 12.00)

I do not know what is the opinion of the Hon. Minister for Education, because he is helping and guiding the destinies of our Educational Institutions. Therefore, he is a man of sobriety, he is a man of great calculations and he is a man of great responsibilities. I know, therefore, that he would not yield to the request of my Hon. colleagues. I have no doubt about it.

After that, one more point.

1978 மார்ச் 5]

*திரு. சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, யுனிவர்சிட்டி செனட்டில் மாணவர்களுடைய பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று லத்தீப் அவர்கள் குறிப்பிடுகிறார்களா? அப்படி பிரதிநிதித்துவம் இருப்பதனால்தான் மாணவர்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வழி இருக்கும். ஆனால் அவர்களுடைய விருப்பம் எல்லாம் அங்கு நடைபெறும் அத்தனையையும் மாணவர்கள் அப்படியே பழைய குருகுலம் போல் கேட்டுக்கொண்டு இருக்க வேண்டும் என்பதுதானா? இப்போது சமுதாயம் விஞ்ஞான ரீதியில் வளர்ந்து வரக்கூடிய சூழ்நிலையில் அவர்கள் சொல்வதை அப்படியே கேட்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றதா? இருக்க முடியுமா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா): சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள். நீங்கள் விவரமாகக் கேள்வி கேட்டால் அவர்களும் விளக்கமாகப் பதில் கூற ஆரம்பித்து விடுவார்கள்,

திரு. சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, மாணவர்களுடைய கஷ்டங்களை எல்லாம் சொல்லி அதற்கு ஒரு தீர்வு காண்பதற்கு இது ஏதுவாக இருக்கும். டிசிப்ளின் என்று குறிப்பிட்டார்கள், அவர்கள் ஹைஸ்கூல் மாணவர்கள் அல்ல. அவர்கள் பொறுப்புள்ள மாணவர்கள். அவர்கள் கிராஜுவேட் பட்டம் முடித்து விட்டு போஸ்ட் கிரேஜுவேட் கோர்சிலும் படிக்கின்றவர்களாகவும் இருப்பவர்கள். ஆகவே அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் இருந்தால் தான் அவர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைச் சொல்லி, கல்லூரியிலே டிசிப்ளின் ஒழுங்காக பராமரிக்கப்படவும், தகராறுகள் இல்லாத நிலை இருக்கவும் முடியும். வளர்ந்து இருக்கக்கூடிய படித்த சிட்டிசன் ஷிப் நிலைமையை உணர்ந்திருக்கக்கூடிய மாணவர்கள் அங்கு பிரதிநிதித்துவம் பெற்று பிரதிநிதியாக வரவேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேறு மாநிலங்களிலே இப்படிப்பட்ட பிரதிநிதித்துவம் கொடுக்கப்படக்கூடிய நிலை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Sir, I do not want to indulge in a great debate as far as this point is concerned. The Hon. Member, Thiru Govindarajan is a Communist Member. He is putting forth his opinion because he is a Communist Member. I am a Muslim League Member. Therefore, opinion differs. Every member has a right to differ from the other. I do not want too to this controversial issue. My only submission is this the Academic Councils are responsible bodies. They are responsible and held responsible for any omission and

1978 ஏப்ரல் 5] [Thiru. M. A. Latheef]

comm ssion either by the Government or by the society. If anything goes wrong in the system of education, then the University and the Tribunals or Forums of the University are held responsible. Those who const tute those bodies are held responsible. They alone are held responsible. Why should we involve students in that responsibility and held them responsible for any such lapses?

The students are the beneficiaries. They are not benefactors. In the Educational system, the students are beneficiaries. They are not benefactors. The benefactor is held responsible to benefit the beneficiaries. If the students become a part of the Academic Council or the benefactor where is the question of questioning the benefactors. The benefactor has to be questioned by the society. Therefore, there are differences in the way of approaches.

So far as I am concerned, I feel with a great sense of responsibility and with love, the teaching community and the students should not have any place to go and sit in the body which decides and control the educational policy. This is my humble submission. Otherwise, it will bring so many complications. Opinions always differ. I am thankful to the hon. Member for his opinion. To differ is the essence of democracy. I do admit.

Then I come to Chapter III-Clause 9-Sub-clause (3) It has been stated there that "No honorary degree or other distinction shall be conferred by the University upon any person without the approval of the Chancellor" Here the Hon. Minister should think whether this clause should remain there in the Bill. Otherwise, supposing the Syndicate passes a unanimous resolution to confer a honorary Degree upon a dignitary, say a Legal Luminary or a great technician or whoever he may be for this reason or that reason, the Chancellor who happens to be the Governor, disapproves, what will be the position? Then what will happen to the decision taken by the Syndicate or Academic Council, the policy making body of the University.

[Thiru. M. A. Latheef] [1978 ஏப்ரல் 5

Therefore, I submit the ultimate power is vested in the Chancellor to disapprove or approve the decision taken by the Syndicate. I think this provision will create problems in the future. May I therefore, suggest that the Hon. Minister may ponder over this question whether it should remain in the same form? Alternatively, the Government may have a proviso. In the proviso, it may say that if the Syndicate approves or passes a resolution unanimously, then it will be approved by the Chancellor or some such arrangement can be made.

In Chapter IV under Clause 17 (g) (h), provisions have been made for giving representation to the Members of the Legislative Assembly and Legislative Council. In the Clause, you say for the Assembly, there will be one representative and for the Council there will be one representative. The Assembly Consists of 234 elected Members.

You are giving one representative. In the Legislative Council there are only 63 Members. You are giving one representative for abody consisting of 63Members. I do plead on behalf of the Legislative Council, a representative should be there for the Council Members. But there should be two or three representatives from the Assembly, which is a elected body. According to the numerical strength of the bodies, if it is one for sixty-three, then there should be three members from the Assembly. Natural justice requires that there should be proportionate representation to the Assembly.

Therefore, there must be provision at least for 3 members from the Assembly; who are the people's direct representatives: One representatine from the Assembly, looks something disproportionate to its strength I am not able to digest it. therefore a sort of injustice looms large in my mind. I do not know whether the Hon. Minister will bring forth an amendment now itself because the Hon. Minister can bring forward an amendment and say instead of one there will be two or three.

There is another provision made in the proviso. It says "the member shall cease to be a member of the Syndicate from the date on which he ceases to be a member of the Legislative Assembly of the State or of the Legislative Council of the State...." As soon as he ceases to be a member of the Assembly or Council as the case may be he ceases to be a member of the University also. This is not fair. Instead of that, you can say that till a member is elected, he can continue to be a member of the Syndicate. Last time what had happened? During emergency, when the Assembly was dissolved, we were also sent out. Whether we are in the Assembly or not, we need not be sent out of the Syndicates. We were available. The services of such members could be utilised till another member is elected from his place. In that intermediary period, he should be allowed to continue as Member of the Syndicate. The present provision in the Bill is not proper. The Member should be there even if the Assembly is not there. Now the Speaker continues as a Titular Head or Constitutional Head even when the House is dissolved. theSpeaker continues to be the speaker. The provision is there only to maintain the continuity of the House from one session to the other. Therefore, I request the Hon. Minister to see whether such an amendment could be brought or such an arrangement could be made in the case of members also.

1978 ஏப்ரல் 5] [Thiru M.A. Latheef]

This is a welcome measure. I welcome this Bill and congratulate the Hon. Minister for Education on his abilities and on his bringing forward this Bill which would meet the requirements, long felt requirements of the people.

Lastly a suggestion was made by my hon. friend. I do not want to go into the details, If the merit and discipline was given importance, then a majority of the people will be at the beck and call of the society.

[பிற்பகல்-12-10]

What I would say is that for a technological institution, mere writing examinations and getting more marks is not a proper assessment. The students must have physical capacity; commonsense, physical build-up; resourcefulness; dynamism; and decision-making power. All these things must be taken into consideration. Then the lowest person from the lowest rung of the society will be the most competent person to be a student of a technological institution (Mr. Chairman sounded the gong).

Therefore, please do not prescribe 60 marks or 65 marks or 75 marks. All these things will not do here. Those who are weaklings will not do. Those who have got physical strength and those who can work with the machine must be there. So the Government should not go on the basis of marks but on the real capacity of the students. Then only they can just meet the aspirations of the backward sections, downtrodden sections, the oppressed and the suppressed sections and then only they can meet the end of social justice. To that end this Bill is to be welcomed.

Thank you, Sir.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது அரசியல் வாதிகள் கல்வித்துறையில் தலையிடக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதுக்கல்லூரியின் நிர்வாகத்தில் அங்கம் வகிப்பதாக அறிகிறேன். அதுபற்றி அவர்களுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா): புதுக் கல்லூரியில் அவர்கள் இல்லை.. அடுத்து திரு. எஸ். ஜே. ராமசாமி....

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, இன்றைக்கு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் தொழில் நுட்பக் கல்லூரி ஆரம்பித்திருப்பதை மிகுந்த மகிழ்ச்சியோடும், நல்லதொரு எழுச்சியோடும் வரவேற்கிறேன். இதனுடைய தலைமையிடம் சென்னையிலேயே இருக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து ஆகும். இப்போது பல்கலைக் கழகம் இருக்கக்கூடிய இடத்திலேயே இதற்கான தலைமையிடமும் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை போன்ற இடத்தில் தலைமையிடம் இருப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதை கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், இதற்கு துணை வேந்தர் நியமிக்கப்படவேண்டும். அதிலும் நல்ல துணைவேந்தராகப் பார்த்து இதில் நியமிக்க வேண்டும். நல்ல டெக்னிக்கல் படிப்பு தெரிந்தவராக இருக்க வேண்டும். நல்ல அனுபவம் உள்ளவர்களைப் பார்த்து நியமிக்க வேண்டும். தொழில் நுட்பப் படிப்பில் நல்ல அனுபவம் உடையவர்களாகப் பார்த்து, தொழில்நுட்பக் கல்வியில் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாகப் பார்த்து, கொஞ்சம் வயதாக இருந்தாலும்

பரவாயில்லை. நல்ல அனுபவசாலிகளாகப் பார்த்து, துணை வேந்தராக போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, அண்டை மாநிலங்களில் இருக்கக்கூடிய தொழில் நுட்பக் கல்லூரிகளில் இருக்கக்கூடிய நல்ல அம்சங்களை எல்லாம் எடுத்து நாமும் கையாள வேண்டும். அவர்கள் என்னென்ன புதிய புதிய விஞ்ஞானக் கருத்துக்களை எல்லாம், அவைகள் அண்டை மாநிலங்களில் எப்படியிருக்கிறது என்பதையெல்லாம் பார்த்து, அதை நம்முடைய கருத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, நம்முடைய மாநிலத்திற்கேற்ப, நம்முடைய தொழில் நுட்ப பல்கலைக் கழகத்கில் ஏற்படுத்தவேண்டும், புதிய புதிய உத்திகளை எப்படியெல்லாம் கையாள்வது என்பதைப் பார்த்து, புதிதாக ஏற்படுத்தப்பட இருக்கின்ற பேரஞர் அண்ணா அவர்களின் பெயரிலுள்ள பல்கலைக் கழகத்தில் அவற்றையெல்லாம் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக செனட்டுக்கு யாரையெல்லாம் உறுப்பினர்களாக போடலாம் என்பதில், சட்டமன்ற உறுப்பினர்களையும் செனட்டில் போடுவதால் எந்தவிதமான தவறும் இல்லை. அது மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களை செனட்டில் சேர்த்துக் கொள்வதோடு, தொழில்களை நடத்தி அனுபவமுள்ள நல்ல தொழில் அதிபர்களையும், தொழில் வல்லுநர்களையும் இந்த செனட்டில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

அந்த மாணவர்களைச் சேர்ப்பதிலும், நாம் மிகுந்த கவனத்தோடு அடித்தட்டிலே இருக்கக்கூடிய, பின்தங்கிய, மாணவர்களையெல்லாம் அதிலே சேர்த்து, அவர்களுக்குரிய விகிதாசாரத்தை கொடுக்கின்ற வகையிலே நாம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

ஆனால், நான் இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாணவர்கள் பல நேரங்களில் பலவிதமான வன்முறைகளிலே ஈடுபட்டு, ஸ்டிரைக்குகளில் ஈடுபட்டு வருகின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட மாணவர்களைக் கண்டிப்பாக நீக்கி விட வேண்டும். அதற்கு ஒரு விதி சேர்த்தாலும்கூட நல்லது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், ஒருசிலரால் கல்லூரியே மூடக்கூடிய நிலைமைகளை நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். கோயம்புத்தூரிலே இருக்கக்கூடிய ஒரு அரசினர் தொழிற் நுட்பக் கல்லூரியில் அதிகமான அளவுக்கு ஸ்டிரைக் நடந்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே, அப்பேர்ப்பட்ட கல்லூரியிலே இப்படி ஸ்டிரைக்கிலே ஈடுபடக்கூடிய மாணவர்களைக் கட்டாயம் நீக்கிவிட வேண்டும். காரணம், பெற்றோர்கள் அவர்களுக்குப் பணம் அனுப்புகிறார்கள். அவர்கள் அதை செலவுசெய்துகொண்டு, இப்படித்

தேவையற்ற காரியங்களில் ஈடுபடும்போது, பெற்றோர்கள் ஆசை என்ன ஆவது? எனவே, இப்படிப்பட்டவர்களை எவ்வித தயவு தாட்சண்யம் இல்லாமல் நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், பெண்களைச் சேர்ப்பதற்கு, எந்தெந்தத் தொழிற் கல்லூரிகளிலே, எந்தெந்த டெக்னிகல் சப்ஜெக்டுகளிலே அவர்களைச் சேர்க்க வேண்டுமென்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும். எல்லா டெனிகல் சப்ஜெக்டுகளிலும் அவர்களை நாம் சேர்க்க முடியாது. எனவே, ஒரு குறிப்பிட்ட டெக்னிகல் சப்ஜெக்டுகளிலே மட்டும்தான் நாம் அவர்களைச் சேர்க்கவேண்டும். அதிலும், இந்த நிர்வாகத்தின்கீழ் பாலிடெக்னிக்குகளும், ஐ.டி.ஐ. களும் வருகின்றன. அவர்களை இதிலே சேர்ப்பதற்கு, புதிய புதிய உத்திகளைக் கையாண்டு, அதன்படி அவர்களுக்கு அந்த ஆர்டர்களை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நல்ல உத்திகளையெல்லாம் கையாண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயராலே ஏற்படுத்தப்படுகின்ற இந்த பல்கலைக்கழகத்திற்கு பெயரையும், புகழையும், ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்து, நல்ல நல்ல புதிய உத்திகளை யெல்லாம் கையாண்டு, இதை வளர்கக வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதைக் கொண்டுவந்த அமைச்சர் அவர்களைப் பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து:</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யுனிவர்சிடி பில்லானது இங்கே இன்டர்டியூஸ் செய்யப்பட்டு, இங்கே நாம் பேசிக் கொண்டிருக்கும்போது, இந்த பில்லிலே கண்டிருக்கிற சிறப்பான அம்சங்களை நான் வரவேற்கிறேன்.

குறிப்பாக, இதிலே கிளாஸ் 6-லே, 'அட்மிஷன்' டு தி யுனிவர்சிடி' என்ற அந்தப் பிரிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும், குறிப்பாக இந்த கிளாஸ் 6(2) லே யார் யார் சேர்க்கப்பட மாட்டார்கள் என்றும் அதிலே சொல்லியிருக்கிறார்கள்.

'Nothing contained in sub-section (1) shall require the University—

(a) to admit to any course of study anperson who does not possess the prescribed academic qualification ostandard;

(b) to retain on the rolls of the University any student whose academic record is below the minimum s andard required for the award of a degree, diploma or other academic distinction; or

(c) to admit any person or retain any student whose conduct is prejudicial to the interests of the University or the rights and privileges of other students and teachers.'

இதிலே இந்த 2 (ஏ) (பி) ஆகியவைகளைப் பொறுத்த மட்டிலும் நான் கருத்து ஒற்றுமை இல்லாமல் இருக்கிறேன். காரணம், இந்த அடிப்படையிலேதான் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்றும்,

That is left to the discretion of the admission authorities.

என்கிற முறையிலும்,

It will lead to bureaucratic attitude.

என்பதால் நான் அதை மறுக்கக்கூடிய நிலையிலே இருக்கிறேன்.

That goes contrary to clause 6 (3).

6(3)லே, 'Reservation for students belonging to Backward Classes, Scheduled Castes and Scheduled Tribes'

என்று வைத்திருக்கிறார்கள். அதிலும், இந்த 2 (ஏ) (பி) என்பதிலே இருக்கின்ற, இந்த 'ரிக்வையர்ட்' குவாலிபிகேஷன் இருந்தால்தான், அதை அவர்கள் 'சாடிஸ்பை' செய்தால்தான் சேர்க்கப்பட முடியும் என்ற ஒரு கண்டிஷன் வைத்திருப்பது சரியில்லை என்று நான் கருதுகிறேன். காரணம், இந்த மூன்று தரப்பு மக்களுக்கும் இப்படி ஒரு கண்டிஷன் போட்டால், ரெப்ரசென்டேஷன் கொடுக்கவேண்டும் என்பதற்குப் பதில், அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட ரிசர்வேஷன் கொடுக்க வேண்டுமென்பதற்குப் பதில், அப்படித் தருவதற்கு இதிலே வழி வகை இல்லை.

(பிற்பகல் 12-20)

ஆகையால் நான் சொல்லுவது என்னவென்றால் ஒரு ரிசர்வேஷன்—Irrespective of qualification prescribed under Rule 6 (2) (a) and (b) என்று இருக்கவேண்டும். 'ரிசர்வேஷனுக்குத் தகுந்தாற்போல் அதிகமான மார்க்குகளைப் பெற்றிருக்கும் மாணவர்கள் இருப்பார்களானால் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற ப்ரொவிஷன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

பிரிவு 6 (2) (சி) என்பதில் நான் எஸ். ஜே. ராமசாமி அவர்கள் சொன்ன கருத்தோடு உடன்பட்டவனாக இருக்கிறேன். இப்போதெல்லாம் எந்த ஒரு காரணத்திற்காகவாவது ஸ்டிரைக்கை மேற்கொள்வது என்பது சர்வசாதாரணமாக இருக்கிறது. எந்த ஒரு மாணவனும் ஸ்ட்ரைக் போன்ற நடவடிக்கைகளிலே, படிப்பு முறைகளிலே இருந்து மாறுபட்டிருக்கும் காரணத்திற்காக ஸ்டிரைக்கில் ஈடுபடுவார்களானால் அந்த மாணவர்களை உடனடியாக வெளியேற்ற வாய்ப்பளிக்கவேண்டும். 100 மாணவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் அதிலே இரண்டு, மூன்று மாணவர்கள் 100 பேரையும்

கெடுத்துவிடும் அளவுக்கு ஈடுபடுகிறார்கள். அப்படிப்பட்ட மாணவர்களை வெளியே அனுப்ப வழிவகை செய்தால்தான் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் மெயின்டைன் பண்ண முடியும்.

படித்தவர்களுக்குத்தான் வாய்ப்புகள் என்று சொல்லும் போது நான் சொல்லுவது சிறிது வேடிக்கையாக இருக்கலாம்; விரும்பத்தகாததாக இருக்கலாம். கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் மூன்றாம் வகுப்பில் தேறிய மாணவர்களுக்கு எங்கும் இடம் இல்லை. வேலை வாய்ப்பு இல்லை என்ற நிலைமை இருக்கும் போது தேர்டு கிளாஸ் டிகிரிகளை கன்பர் செய்யாதீர்கள். இப்படி பிலோ ஆவரேஜ் ஸ்டுடன்ட்சுக்கு வேலை வாய்ப்பும் கிடையாது, மேல் கல்வி படிக்கவும் இடம் கிடையாது, அப்படிப்பட்டவர்கள் சமுதாயத்திற்குப் பாரமாக அமைந்து விடுகிறார்கள். அவர்களுக்கு டிகிரி கொடுத்துவிட்டு அவர்களை உதவாக்கரையாக ஆக்கி விடும் தன்மை வேண்டாம். அவர்கள் எந்த முறையில் பயன்படுத்த வேண்டுமோ அந்த வகையில் தனியாக ட்ரெய்னிங் கொடுத்து அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் முறையில் அவர்களுக்கு என்று தனி யூனிவர்சிடியையே அமைக்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

யூனிவர்சிடியில் அங்கம் வகிப்பவர்கள் யார் என்று சொல்லும் போது a big controversy has been raised by my friend Mr. Latheef அதிலே மாணவர்கள் அங்கம் பெறக்கூடாது என்று சொல்லுகிறார்கள். நான் மாணவர்கள் அங்கம் பெறுவது சரியான கருத்து என்று சொல்லுகிறேன். பல்வேறு பிரச்சினைகளை அணுகுகிறபோது it shuold not be one-sided; it must take multi-sided views of a particular aspect என்ற முறையில் மாணவர்களுடைய பிரச்சினையை அணுகுகிறபோது மாணவர்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வகையில் மாணவர்கள் பிரதிநிதி சின்டிகேட்டில் இடம் பெறுவது சாலச் சிறந்ததாக இருக்குமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, டெக்னாலஜி யூனிவர்சிடி அமைப்பது சம்பந்தமாக பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை கூறினார்கள். இதனை அமைக்கவேண்டியது அவசியந்தான் என்ற வகையிலே எல்லோரும் ஆதரித்திருக்கிறார்கள். நானும் இதை ஆதரிக்கிறேன்.

இது சம்பந்தமாக அரசுக்குச் சொல்ல வேண்டிய கருத்து—இது யூனிடரி யூனிவர்சிடியாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் காரணத்தால் சென்னை நகரில் கிண்டி எஞ்சினியரிங் காலேஜில் ஆரம்பிக்கப்படுகிற காரணத்தால் அந்த காலேஜ் அமைப்பைப் பொறுத்த வரை தனி யூனிவர்சிடியாக அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, தமிழ்நாட்டின் வேறு பகுதிகளில் இருக்கிற எஞ்சினியரிங்

காலேஜ்களை இதிலே அஃபிளியேட் பண்ண முடியாது. இது அஃபிளியேட்டிங் யூனிவர்சிடியாக ஆரம்பிக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக இது இன்னும் பயனுள்ளதாக இருக்குமென்பதில் சந்தேகம் இருக்க முடியாது. அரசு ஏன் அம்மாதிரி ஒரு யூனிவர்சிட்டியை ஆரம்பித்திருக்கக்கூடாது? ஏன் யூனிடரி யூனிவர்சிட்டியாக ஆரம்பித்தார்கள் என்று எனக்குத் தெரியாது. அரசுதான் அதற்கு விளக்கம் சொல்ல வேண்டும். வருங்காலத்திலேயாவது இதை 'அஃப்பிலியேட்டட்' யூனிவர்சிட்டியாக மாற்றக்கூடிய அளவில் இதர கல்லூரிகளையும் இதோடு சேர்த்து தனியாக டெக்னிகல் எஜுகேஷன் நல்லமுறையிலே நடப்பதற்கும், விரிவடைவதற்கும் ஏதுவாக இம்மாதிரி அமைப்பை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

டெக்னிகல் எஜுகேஷன் என்ற முறையிலே மேல் நிலைப் படிப்பிற்காக இந்த யூனிவர்சிட்டி ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் டெக்னிகல் எஜுகேஷன் சம்பந்தப்பட்டது அனைத்தும் ஒரே யூனிவர்சிட்டியின் பராமரிப்பில் இருக்க வேண்டும். மெட்ராஸ் யூனிவர்சிட்டியோடு பாக்கி கல்லூரிகள் இணைக்கப்பட்டிருக்கிறது. இங்கே தனி யூனிவர்சிட்டியாக அமைத்துவிட்டு, பாக்கி கல்லூரிகளை வேறு யூனிவர்சிட்டியோடு இணைத்திருந்தால் எப்படி வளர்ச்சியடையும், எப்படி நல்லமுறையில் வளர்க்க முடியும் என்பதைத் தயவுசெய்து யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கிண்டி இன்ஜினியரிங் கல்லூரி ஸ்டுடன்ட்ஸைப் பொறுத்த வரையில் ஒரு கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் அமைச்சரைப்பார்த்தார்களா இல்லையா என்று எனக்குத் தெரியாது. பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது. அவர்களுடைய கவனத்திற்குப் போகவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். கிண்டி எஞ்சினியரிங் கல்லூரியில் படித்தவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு தற்சமயம் இருப்பதாகவும், இதை யூனிவர்சிட்டியாகப் பெயரை மாற்றுவதால் அவர்களுக்கு இந்த வாய்ப்பு பாதிக்கப்படுமா என்ற கருத்தை, அச்சத்தை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அச்சம் சரியானதுதானா என்பது எனக்குத் தெரியாது என்றாலும், அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்ற காரணத்திற்காகச் சொல்கிறேன். அவர்களுக்குள்ள அச்சம் போக வேண்டுமென்பதற்காகவும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகவும் தான் நான் இதைச் சொல்கிறேன்.

எப்படி இஞ்சினியரிங் கல்லூரியை யூனிவர்சிட்டி என்று ஆரம்பித்திருக்கிறீர்களோ அதைப்போல மெடிகல் காலேஜ் சம்பந்தப்பட்ட வரையிலும் இப்படியொரு யூனிவர்சிட்டியை ஆரம்பிக்க வேண்டிய முயற்சியை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

[1978 ஏப்ரல் 5

*திரு. க. அன்பழகன்: சட்டப் பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, இந்த சட்டப் பேரவையில் கடந்த ஐந்தாறு ஆண்டுக்காலமாக தமிழக அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனுக, மத்திய அரசினுடைய ஒப்புதலோடு பேரறிஞர் அண்ணு அவர்கள் பெயரால் உருவாகிற தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்ட சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனுடைய நோக்கத்தையும், இதைக்கொண்டுவருவதன் உடனடித் தேவையையும் கருதி, நான் உண்மையாகவே வரவேற்கிறேன். பேரறிஞர் அண்ணு அவர்களுடைய பெயராலே இந்தத் தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் உருவாவது என்பது, இந்தச் சட்டமன்றத்திலே உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மட்டுமன்றி, தமிழ்நாட்டு மக்களுக்கும்கூட பெருமளவு மனநிறைவு அளிப்பதாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இந்தத் தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம், தொழில் நுட்பத் துறையிலே தமிழ்நாடு மேலும் முன்னேறுவதற்காகவும் கல்வித்துறையிலேயே இந்தத் துறையிலே ஒரு தனிக் கவனம், சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காகவும், இந்தத் துறையிலே நிகழ வேண்டிய பல்வேறு வகையான ஆராய்ச்சிகளுக்கு ஊக்கம் ஏற்படுத்துவதற்காகவும், இன்னும் சொல்லப்போனுல் தாங்களே பொறுப்பேற்றுக்கொண்டு அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள், அந்தத் துறையை வளர்க்க எல்லாக் கடமைகளையும் செய்ய இந்தப் பல்கலைக் கழகம் உறுதுணையாக அமையும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

இந்தத் தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் உருவாகத் தேவையான அளவிற்கு அடிப்படையான சூழ்நிலைகள் தமிழ்நாட்டிலே பதினைந்து இருபதாண்டு காலமாக உருவாகி வந்திருக்கின்றது. கடந்த ஏழெட்டு ஆண்டுக்காலமாக, இந்தப் பல்கலைக் கழகம் உருவாகுமேயானுல் இந்தத் துறை இன்னும் சிறப்பான வகையிலே தனித்தன்மையோடு வளர முடியும் என்று கருதப்பட்டது. இருந்தாலும் மத்திய அரசிடத்திலிருந்தோ அல்லது பல்கலைக் கழகம் சம்பந்தமான அனுமதியை வழங்குகின்றவர்களிடத்திலேயிருந்தோ இந்தப் பல்கலைக் கழகம் உருவாவதற்கு விரைவான அனுமதி வழங்கப்படாததன் காரணமாக இது தாமதப்பட்டிருக்கிறது. இன்னும்கூட, இந்தக் சட்டமுன்வடிவு நிறைவேறிய பின்னர் மறுபடியும் மத்திய அரசினிடத்தில் முழு ஒப்புதல் பெற, உதவித் தொகை பெற முயற்சிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அந்த வகையிலே தமிழக அரசு இந்த முயற்சியில் மேலும் ஈடுபட்டு வெற்றிபெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

1978 ஏப்ரல் 5] [திரு. க. அன்பழகன்]

இது தோன்றுகின்றபொழுது ஒருமை வகை, அதாவது யூனிட்டரி யூனிவர்ஸிட்டி என்ற முறையிலே தோன்றினுலும், இதன் நோக்கம் நிறைவேற வெண்டுமென்றுல் அது யூனிட்டரி யூனிவர்சிட்டியாக இருந்தால் போதாது என்று கருதுகிறேன்.

[பிற்பகல் 12-30]

காரணம், பொதுவாகவே பல்கலைக் கழகம் என்பது பல்வேறு துறைகளைச் சேர்ந்த கல்விக்கும் சேர்த்து அமைக்கப்படுகிற பொதுவான அமைப்பாக உருவாக வேண்டுமென்ற கருத்தில் தமிழகத்தில் பெரிய பல்கலைக் கழகங்களாக, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் ஆகியவை உருவாகியுள்ளன. அப்படிப்பட்ட பல்கலைக் கழகங்களிலே பொறியியல் கல்லூரிகளுடைய பணிகளும் அல்லது பொறியியல் கல்வி சார்ந்த பணிகளும் நிறைவேற்றப்பட வேண்டிய கடமை, சென்னைப் பல்கலைக் கழகத்திலேயும், மதுரைப் பல்கலைக் கழகத்திலே இணைந்துள்ளது.

அதுபோல் மருத்துவக் கல்வி, மருத்துவக் கல்விபற்றிய ஆராய்ச்சி ஆகியவற்றிற்கான பணிகளையும் இணையாகச் செய்ய வேண்டிய கடமைக்குச் சென்னை, மதுரை பல்கலைக் கழகங்கள் ஆளாகியிருக்கின்றன.

வேளாண்மையைப் பொறுத்தவரையில், அதற்கான பணிகளை, அந்தக் கடமைகளை நிறைவேற்ற தனியாக ஒரு பல்கலைக் கழகம், தமிழகம் முழுவதற்கும் கூட பொறுப்பேற்றுக் கொள்ளத்தக்க நிலைமையிலிருக்கிறது. அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் எந்த அளவு பயன் தரத்தக்கதாக நம்மாலே எதிர்பார்க்கப்படுகிறதோ அதைவிட விரிவான பலனை எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விஞ்ஞான வளர்ச்சியை ஒட்டி, தேவைப்படுகிற சமூகநலனை உருவாக்குகிற பொறுப்பு இந்தப் பொறியியல் பல்கலைக் கழகத்திற்கு ஏற்படும் என்ற காரணத்தால் வெளி உலகத்தோடு தமிழகத்தை இணைக்கிற மிகப்பெரிய ஆற்றல் மிக்க சக்தியாக உருவாக இருக்கிறது என்ற காரணத்தால், மற்ற பல்கலைக் கழகங்கள் அறிவு வளர்சிக்குப் பயன்பட்டால் கூட, சமுதாயத்துத் தேவைகளை நிறைவு செய்கிற ஆற்றலை அளிக்கின்ற வகையில், பொறியியல் பல்கலைக் கழகம் அமையவேண்டிய காரணத்தால், தமிழ்நாட்டிலேயிருக்கிற எல்லா பொறியியல் கல்லூரிகளும் இணைக்கப்படுகிற காலம் எதிர்காலத்திலே விரைந்து வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதன் காரணமாக, பொறியியல் கல்லூரிகளும், சார்புடைய தொழில் கல்லூரிகளும்—பாலிடெக்னிக் கல்வி அல்ல; அது தொழிற் பயிற்சி என்ற அளவோடு நின்றுவிடுகிற ஒன்று—அது தொடர்பாக உள்ள மேல்நிலைக் கல்விகள் அனைத்தும்,

[திரு. க. அன்பழகன்] [1978 ஏப்ரல் 5

இன்னும் சொல்லப்போனால், விஞ்ஞான அடிப்படையிலே வளர்கின்ற நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துகிற எல்லா ஆற்றல்களை, எல்லா துறையிலும் பயன்படுத்துகிற அப்படிப்பட்ட ஒரு அறிவு விஞ்ஞான அடிப்படை அறிவு இந்தப் பல்கலைக் கழகத்தினாலே நிறைவு செய்யப்பட வேண்டுமென்ற காரணத்தால் எல்லாப் பொறியியற் கல்லூரிகளும் கூட இதிலே இணைக்கப்படுகிற காலம் விரைந்து வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அடுத்து, இந்தப் பல்கலைக் கழகம் இன்றைக்கு உருவாகிற பொழுது, அது மெட்ராஸ் மெட்ரோபாலிட்டன் ஏரியா—சென்னைப் பெருநகர் பகுதியில் இயங்குகிற அமைப்பாக இருக்கும் எனக் கூறப்பட்டிருக்கிறது. நிலப்பரப்பு அதற்குட்பட்டாலும் கூட, ஆராய்ச்சி கேந்திரம் அமைக்க வேண்டுமானால், வெளியிலும் அமைக்க உரிமையிருக்கிறது. ஆனாலும், மெட்ராஸ் மெட்ரோபாலிட்டன் என்ற சொற்றொடர் ஒரு சட்டத்திலே இடம் பெறும்போது, அது சட்டப்படி அமைய வேண்டிய சொற்றொடர் தானா, சென்னை மாவட்டமும், செங்கற்பட்டு மாவட்டமும் சேர்ந்த—ரெவினியூ டிஸ்டிரிக்ட்ஸ் என்று குறிப்பிட வேண்டாமா என்று அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது ஒருமைப் பல்கலைக் கழகம் என்ற காரணத்தாலே, 'சிண்டிகேட்'—ஆட்சிமன்றம் அமைக்கப்பட்டு, 'செனட்' என்ற மன்றம் அமைக்கப்படவில்லை. ஒருவேளை, துவக்க காலத்திலே அவ்வளவு விரிவான குழு தேவையில்லையென்ற எண்ணத்தாலே, 'செனட் குழு' இப்பொழுது தேவையில்லையென்று விட்டுவிட்டார்களென்று கருதுகிறேன். ஆனால், 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் பொறுத்து, இது விரிவாக்கப்படுகிறபொழுது, பரவலாக அதையொட்டி, பல்வேறு கல்வி நிலையங்களிலேயிருக்கிற பல்வேறு பிரச்னைகளை விவாதிக்க அப்பொழுது நிச்சயம் செனட் தேவைப்படும். இன்னும் சொல்லப் போனால், உண்மையான ஆட்சிக் குழு செனட் என்றும் நிர்வாகக் குழுதான் சிண்டிகேட் என்றும்தான் நான் கருதுகிறேன். பல்கலைக் கழக நிர்வாகக்குழுதான் சிண்டிகேட்—ஆட்சிமன்றம், செனட் என்றும் கருதப்படுகிற நிலையிலே எதிர்காலத்திலே 'செனட்' தேவைப்படுமானால், அமைக்கப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்; ஆனால், இந்தச் சட்டத்திலே அது இடம் பெறவில்லை.

அதே போல், அக்கடமிக் கவுன்சில் அமைக்கப்படுகிறது. அது இல்லாமல், ஒரு பல்கலைக் கழகம் நடைபெற முடியாது. ஆனால், அதன் பிரதிநிதிகளாக யார், யாரை எடுக்கவேண்டுமென்று அதிலே ஏதோ ஒரு வகையிலே ஆசிரியர்களாக இருப்பவர்கள் மட்டும் 5 பேர்கள் நாமினேஷன் முறையில், சான்சலர்

1978 ஏப்ரல் 5] [திரு. க. அன்பழகன்]

மூலமாக—தேர்வு மூலமாக அல்ல— இடம் பெறுவார்கள் என்று இச்சட்ட விதியில் கூறப்பட்டுள்ளது. ஆசிரியர் பிரதிநிதிகள் அதிகமாக இருக்க வேண்டுமென்பது மட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். ஆனால், சிண்டிகேட்டில் ஆசிரியர் பிரதிநிதிகள் சொல்லும்போது, 'டீன்' அல்ல, 'புரஃபசர்' அல்ல, துறைத் தலைவர் அல்ல, முதல்வர் அல்ல, ஆசிரியர் பிரதிநிதிகள் இரண்டுபேர் என்றாலும் கூட அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதாக இருக்கின்றது.

ஆட்சிக் குழுவின் ஆசிரியர்களின் உரிமையை நிலைநாட்டுவதற்கு தேர்தல் அனுமதிக்கப் பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால், இந்த அகடெமிக் குழு என்று வழங்கப்படுகிறது, கல்வி அவையில் இந்த அவையிலே ஆசிரியர்கள் அதாவது இயக்குநர்களாக இல்லாதவர்கள், நெறியாளராக இல்லாதவர்கள் என்னும் வகையில், 4 பேர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்ற கருத்தை மாற்றி, குறைந்தது 10 பேர்களாவது வெவ்வேறு அமைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வழி செய்ய வேண்டும் என்று, நான் விரும்புகிறேன்.

இதிலே ஒவ்வொரு பொறியியல் கல்வித் துறையுடன் அது சார்பான துறைகளும் இடம் பெற்றிருக்கிறது. வேதியல் தொழில் நுட்பவியல் துறை, தோல் தொழில் நுட்பவியல் துறை, நெசவுத் தொழில் நுட்பவியல் துறை, கட்டடக்கலை மற்றும் நகர் அமைப்புப் பள்ளி, ஆகியவற்றுடன் பொறியியல் துறையில் எலெக்டிரானிக்ஸ் என்றும், மெக்கானிக்ஸ் என்றும், ஹைடிராலிக்ஸ் என்றும் இருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட பல துறைகள் இருக்கிற காரணத்தால் இந்த அகடமிக் கவுன்சிலிலே ஒவ்வொரு துறையும் சேர்ந்த—அந்தந்த துறைத் தலைவர் இடம் பெற வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்பவில்லை. அந்தத் துறைத் தலைவர்கள் சிண்டிகேட்டிலே இடம் பெற வேண்டும் என்பது எனது விருப்பம். ஆகவே, இந்தத் துறையிலே உள்ள பிற ஆசிரியர்களின் பிரதிநிதி அந்த அகடமிக் கவுன்சிலிலே இடம் பெறத்தக்க வகையில்—செனட் இல்லாத காரணத்தால்—இதை விரிவுபடுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்தக் கல்வி அவை என்பது, அக்கடமிக் கவுன்சில் என்ற அந்தப் பெயருக்கு ஓசைக்கு ஏற்ப அமையவில்லை என்று தோன்றுகிறது. அந்த அவையைப் பற்றி ஏற்படுத்த வேண்டிய எண்ணத்தை ஏற்படுத்துவதாக இல்லை. எனவே, அதனுடைய பெயர் கல்வி முறை ஆய்வுக் குழு என்று இருக்குமானால் நலமாக இருக்கும். அந்த அக்கடமிக் கவுன்சில் என்பது கல்வி முறைகளைப் பற்றி பரிசீலனை செய்து சில பஸ் முதலியவைகளை ஆராயும் அளவுக்கு. போர்டு ஆப் ஸ்டடீஸ்க்கு அடுத்த தகுதியும் பெற்

றிருக்கிற காரணத்தால் கல்வி முறை ஆய்வுக் குழு அல்லது கல்வி முறைக் குழு என்று தமிழிலே பெயர் அமையலாம் என்று கருதுகிறேன்.

பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் ஏற்படும் குறைகளை, நடைமுறைச் சிக்கல்கள் வருமானால், அப்படி வருகிறபோது அந்தப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவித்து, அரசாங்கத்தாலே நியமிக்கப்படுகிற அதிகாரிகள் அதைக் குறித்து விசாரணை நடத்துவார்கள் என்ற கருத்து இதனுடைய விதிமுறைகளிலே இடம் பெற்றிருக்கிறது. பல்கலைக் கழகத்தினைக் குறித்து அதிகாரிகள் விசாரணை செய்வது அவ்வளவு சிறப்பாகத் தெரியவில்லை. பல்கலைக் கழகம் என்பது தன்னாட்சி உரிமை பெற்ற ஒரு அமைப்பாக ஏற்றுக் கொள்கிறோம். அடானமஸ் பாடி என்று ஏற்றுக் கொள்கிறோம்.

அப்படி இருக்கும் போது அரசாங்கத்தின் சார்பு எண்ணங்கள் உடைய அதிகாரிகள் பல்கலைக் கழக குறைகளைப் பற்றி விசாரணை செய்யும்போது வேறு உள் நோக்கம் வந்து விடுமானால், எந்த நோக்கத்திற்காக அவர்கள் போடப்பட்டார்களோ அந்த நோக்கத்திற்கு குறை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எவ்வளவுதான் சிறந்த ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் இருந்தாலும்கூட அவர்களுக்கும் சார்பு எண்ணங்கள்—அரசாங்கத்திலே இருக்கிற காரணத்தினாலே—ஏற்பட்டு விடக்கூடும். ஆனால் தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படவில்லை. பல்கலைக் கழகங்களும் விசாரணைக்கு உள்ளானதில்லை. அப்படி விசாரணை வைக்க வேண்டிய நிலை வந்தாலும் அசராங்கம் தப்பித்துக் கொள்ளுகிற வகையில் சில நேரத்தில் விசாரணையை நடத்தாமல் விட்டுவிடுவார்கள்.

எனவே அப்படி ஒரு நிலைமை இருந்தாலுங்கூட, நான் விரும்புவது, ஒரு பல்கலைக் கழகத்துக்கான சிறப்பு எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையிலே விசாரணை நடத்த வேண்டுமானால் ஜுடிசியல் அலுவலர்களைக் கொண்டு, நீதிபதிகளைக் கொண்டு— உயர்நீதிமன்றத்திலே நீதிபதியாக இருந்த ஒருவர், அல்லது இருக்கின்ற ஒருவர், விசாரணை நடத்தி முடிவு தெரிவிக்க வேண்டும் என்ற முறையிலே ஏற்பாடு செய்வது சிறந்தது.

நடை முறையிலே பைனான்சியல் புரொவிஷன், விதிகளின்படி வாங்கியதிலே, நிதி செலவிட்டதிலே, ரொட்டீன் அட்மினிஸ்டிரேஷன் பிரச்சினையாக இருந்தால் கல்வித் துறை செயலாளரே கூட விசாரணை நடத்தி அரசாங்கத்திற்குக் கருத்து தெரிவிக்கலாம். ஆனால், ரொட்டீன் மேட்டராக இல்லாமல் அதற்கு மேற்பட்ட பிரச்சினைகள், அங்கே பேராசிரியர்களை தேர்ந்தெடுத்தது பற்றியோ ஆசிரியர்களைப் பொறுக்கி எடுப்பது பற்றியோ, தேர்தல் நடைபெற்றது பற்றியோ, மாணவர்கள் பிரச்சினைகளோ

வருமானாலும், அந்தப் பிரச்சினைகளை ஒரு நீதிபதி மூலமாக விசாரிக்க வேண்டும் என்கின்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-40.)

மாணவர்கள் பிரதிநிதி இடம் பெற வேண்டும் என்பது இன்றைய தினம் உள்ள பொதுவான கருத்து. திரு. லத்தீப் அவர்கள் அப்படி ஒரு வாதம் எழுவதையே விரும்பவில்லை. அவருக்கு வயதாகி விட்ட காரணத்தால் அவர் மாணவர் பக்கம் சேர விரும்பாமல் இருக்கிறார் என்று கருதுகிறேன். மாணவர்கள் எந்தக் குழுவில், எந்த அமைப்பில் இடம் பெற வேண்டும் என்பதில் வேண்டுமானால் வேற்றுமை இருக்கலாம். சிண்டிகேட் என்ற குழுவில் இருப்பதைவிட அவர்களுக்கு செனட்டில் பிரதிநிதித்துவம் இருப்பது நல்லது என்பது என்னுடைய எண்ணம்.

ஆனால், எதிர்பாராத வகையில் இந்தப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில்—வேளாண்மைப்பல்கலைக் கழகத்தில் இருப்பது போல்—சிண்டிகேட் மட்டுமே அமைந்துள்ளது. அதனால் மாணவர்கள் பிரதிநிதி இடம் பெறுவது நல்லது அல்ல என்று சொல்வது சரியல்ல. மாணவர்கள் பிரதிநிதி இருந்தால் அவர்களுக்கு ஒரு அநீதி இழைக்கப்படுகிறபோது அந்த இடத்தில் நீதியைப் பெற முடியும். அந்த அளவிற்கு அவர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அந்த நம்பிக்கையை அவர்கள் எப்படிப் பெறுவார்கள். அல்லது எந்த அளவிற்கு மாணவர்கள் பிரதிநிதி அந்தப் பிரச்னைகளில் தலையிடுவது, நியாயப்படுத்துவது என்பதை முறைப்படுத்திக் கொள்வது நியாயமாகும். ஆகவே, இடம் பெறக் கூடாது என்ற எண்ணம் சரியானது அல்ல என்று கருதுகிறேன்.

அப்படி அவர்கள் இடம் பெறுவதன் காரணமாக பல்கலைக் கழகத்தில் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் தவறான போராட்டத்தில் செல்லாமல் இருப்பார்கள். மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு அவர்கள் நடக்காமல் இருப்பார்கள். மாணவர்கள் பிரதிநிதியாக இருப்பவர்கள், தலைவராக இருப்பவர்கள் மாணவர்களை தவறான வழிக்கு அழைக்க மாட்டார்கள். இன்னும் சொல்லப் போனால், பல்கலைக் கழகத்தில், கல்லூரியில் மாணவர்களுக்குத் தெரியக் கூடாத ரகசியம் இருப்பதற்கு இடமே இல்லை. ஓபன் சீக்ரட், ஓப்பன் புக் என்பது போல், மாணவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் எதையும் அவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

There is nothing, that is confidential, that is not permissible for a student to understand.

[திரு. க. அன்பழகன்] [1978 ஏப்ரல் 5

எந்த ஒரு மாணவனும் தெரிந்து கொள்ள முடியாத வகையில் மறைத்து வைக்க வேண்டிய செய்தி பல்கலைக் கழகத்திலோ, ஒரு கல்லூரியிலோ இருக்க முடியாது. வேண்டுமானுல், அந்த மாணவர்களையே எந்த விஷயம் ரகசியமாக இருக்க வேண்டும் என்று பல்கலைக் கழகம் விரும்புகிறதோ அதை ரகசியமாக வைத்துக் கொள்ள இசைய வைக்கலாம். விஷயங்களை அவர்களுக்கு தெரிவிக்காமலிருக்க அவர்களிடமே ஒப்புதல் பெற்றுக் கொள்ளலாம்.

பல்கலைக் கழகத்தில் மாணவர்களின் தொடர்பான பிரச்னைகள், காரியங்கள் முடிவுக்கு வருகிறபோது மாணவர்களின் இசைவைப் பெறுவதற்கு இது உதவும். இன்னும் சொல்லப் போனுல், மாணவர்கள் பிரதிநிதிகளிடத்தில் பிரச்சினைகளை விளக்கிச் சொல்லி, அவர்களின் கருத்தை ஆராய்ந்து முடிவு எடுக்கலாம். ஆகவே, மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறேன். ஆனுல், உடனடியாக இப்போது அந்த வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. இந்தப் பல்கலைக் கழகம் ஓரளவிற்கு உருவான பிறகு அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்குவதற்கேற்ப மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், மாணவர்களைப் பொறுக்கி எடுப்பதில், தொழில் பட்டப் படிப்பிற்கு தெரிந்தெடுப்பதில், மிக முக்கியமான ஒரு கருத்தைப் பல்கலைக் கழகங்கள் மேற்கொண்டாக வேண்டும். அதிலும் குறிப்பாக இந்த வகை பல்கலைக் கழகத்தை உருவாக்குகிற போது அந்தப் பல்கலைக் கழகத்திற்கு சில கொள்கைகள், நடைமுறைகள் வகுத்துக் கொடுக்கப்பட வேண்டும். நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். டெக்னலாஜிகல் ஸ்டடீஸ்—பொறியியல் பட்டப்படிப்புக்கு எந்த அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ருல், அவர்கள் அதற்கான தேர்வில் வாங்கும் தகுதி எண்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்களுடைய அறிவு ஆற்றல் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அவர்களுடைய தகுதி, திறமை, ஆற்றல் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

இன்னும் சொல்லப்போனுல், 100—க்கு 99 எண்களோ, 100—க்கு 100, 100-க்கு 105 என்று கணக்கில் எண்கள் எடுத்து இருக்கும் மாணவன் சிறந்த பொறியியல் மாணவனுக வளர்ந்து இருக்கிருனு என்ருல் இல்லை. ஆனுல், 100-க்கு 70 எண்கள் வாங்கிய மாணவன் கூடச் சிறந்த முறையில் பொறியியல் படிப்பில் முன்னேறி இருக்கிருன். ஆகவே, அவன் தேர்வில் எடுக்கும் எண்களின் அடிப்படையில் மட்டும் செலக்ஷன் செய்யாமல், அவன் அறிவு ஆற்றல், அவன் அதை எப்படி உடனடி-

1978 ஏப்ரல் 5] [திரு. க. அன்பழகன்]

யாகப் பயன்படுத்துகிருன் என்பதைக் கருத்தில் கொண்டு தேர்வு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் தன் அறிவைப் பயன்படுத்தும் ஆற்றல் உள்ள மாணவன் தேர்ந்தெடுக்கப்படுவான் என்ற நம்பிக்கை வரும். குறைவான எண்கள் பெற்ற மாணவன் கூட நுண்ணறிவு கொண்டவர்களாக இருப்பதை நாம் பார்க்கிருேம், அதற்காக எண்களே அதிகம் பெருத மாணவனையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. வெறும் தேர்வு எண் தகுதியையே கருதாமல், மற்ற வகையில் ஆய்ந்து பார்த்து திறமை உள்ளவர்களுக்கு வாய்ப்புத் தர முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பிற்பட்ட வட்டாரத்தில் இருந்து வரும் மாணவனுக்கும் வாய்ப்பு அளிக்கும் முறையில் அந்தப் பல்கலைக் கழக மாணவர் தேர்வு முறை கைக்கொள்ளப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக நான் சொல்ல விரும்புவது, பொதுவாக இதனை நான் வரவேற்கிறேன். ஆங்கிலத்திலே தரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன் வடிவு தமிழிலும் தரப்பட்டிருக்கிறது. என்ருலும் தமிழ் மொழி பெயர்ப்பிலே ஒரு பிரிவு ''பவர்ஸ் அண்டு ஃபங்ஷன்ஸ்'' என்ற பகுதியில் 'கே' பிரிவு விடுபட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. இந்த பட்டியலின் கடைசி எண்ணைக் குறிப்பிடுகிற அந்த அடையாள எண் 'எஎ' என்ற அளவில் முடிந்திருக்கிறது. ஆனுல், ஆங்கிலத்தில் உள்ள சட்ட முன்வடிவில் 'ஏபி' வரை வருகிறது. ஆக ஒரு எண்ணில் குறிப்பிடப்பட்ட பகுதி, மொழி பெயர்ப்பில் கவனிக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது. எதிர் காலத்தில் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டுவரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மொழி பெயர்ப்பில் இத்தகைய கவனக் குறைவு ஏற்படுவது சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்டி, பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைய தினம் இந்த மாமன்றத்திலே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற ''பேரறிஞர் அண்ணு தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக 1978 ஆம் ஆண்டு மசோதாவை'' சட்டமாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்ற இந்த நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய சில கருத்துக்களுக்கு நான் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 ஏப்ரல் 5

பொதுவாக ஒரு மனதான ஆதரவை இங்கே பேசிய அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இந்த சட்ட முன்வடிவில் தந்திருப்பது ஒரு பெருமை தரக்கூடிய செய்தியாகும். தமிழ் நாட்டு தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகமாக இன்றைக்கு வரவிருக்கிற பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் தமிழ் நாட்டிலிருக்கிற அறிவியல் வளர்ச்சியையும் ஆராய்ச்சியையும் பேணி வளர்க்கவும், அதை முன்னேற்றவும் தொழில் நுட்பவியலில் ஒரு நல்ல உறுதியினை ஏற்படுத்தவும் தலைமை தாங்கிடவும் ஒரு சிறந்த அமைப்பாக, ஆராய்ச்சி நிறுவனமாக இதை ஏற்படுத்துகின்ற எண்ணத்தில் இன்றையதினம் உருவாக இருக்கிற இந்த பல்கலைக்கழகம் தன்னுடைய ஆளுகைக்கு கீழ் இன்றையதினம் கிண்டியில் இருக்கிற பொறியியல் கல்லூரியானது பல்கலைக்கழகத்தின் முக்கிய இருக்கையாக மாற இருக்கிறது என்பதையும் அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக்கல்லூரியின் வேதியல் தொழில் நுட்பத் துறையும், தோல் தொழில் நுட்பத் துறையும் நெசவு தொழில் நுட்பத் துறையும், கட்டிடங்கள்—நகரமைப்பு தொழில் நுட்பத் துறையும் அதோடு இணைக்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு குரோம்பேட்டையில் இருக்கிற சென்னை தொழில் நுட்ப நிறுவனமும் (எம்.ஐ.டி.) இதனுடைய ஆளுகையின் கீழ் வருகிறது. இந்த அடிப்படையில் விரைவிலே தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் உருவாகும் இந்த நேரத்தில் இது ஒருமைப் பல்கலைக் கழகமாக அல்லாமல் ஒரு இணைப்புப் பல்கலைக் கழகமாக மாற வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது ஒருமைப் பல்கலைக் கழகமாக இருந்தாலும் எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ளும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அமைய இருக்கின்ற இந்தப் பல்கலைக் கழகத்திற்கு மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை சூட்டுவதில் எல்லா தரப்பினரும் தங்களுடைய ஆதரவையும் மகிழ்ச்சியையும் தெரிவித்திருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், வெளியே இதற்கு எதிர்ப்பு என்ற வகையிலே இல்லாவிட்டாலும் மாறுபாடான ஒரு கருத்தை மாணவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நானும் அதை பத்திரிகையில் பார்த்தேன். அவர்களுக்கு இருக்கிற குறைபாடு எல்லாம் கிண்டி பொறியியல் கல்லூரி என்பது நூற்றாண்டுக்கு மேற்பட்ட நிறுவனமாக இருந்துவருகிற பாரம்பரியம் உள்ள ஒரு கல்லூரியாக இருக்கிறது. அதைத் தெரிந்தவர்கள் இந்தியாவில் மட்டுமல்ல; உலகத்தின் மற்ற பகுதிகளிலும் இருக்கிறார்கள்.

1978 ஏப்ரல் 5] [திரு. செ. அரங்கநாயகம்]

(பிற்பகல் 12–50)

ஆனால் இன்றைக்கு அந்தக் கல்லூரி பல்கலைக் கழகமாக மாறுகின்ற நேரத்தில் கிண்டிப் பொறியியல் கல்லூரியிலே படித்து வெளியேறுகின்ற மாணவர்களுக்கு இதற்கு முன்னாலே இருந்த வரவேற்பு இருக்காது என்ற அடிப்படையிலே அவர்கள் குறைபாட்டைச் சொல்கிறார்கள், ஆனால் பல்கலைக் கழகமாக மாற்றுவது என்கிற முடிவை எடுத்ததிற்குப் பின்னால் நிச்சயமாக நாம் அந்தக் குறைபாடு ஏற்படாத வகையில் இந்தப் பல்கலைக் கழகத்தை வளர்க்கவும் அதனை மேம்படுத்தவும் அதன் பெயரையும் செல்வாக்கையும் உலகம் முழுவதும் பரப்புகின்ற வகையில் அதனை நல்ல முறையில் நடத்துவதற்கான முயற்சிகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை வைக்கின்ற நேரத்தில் சாதாரணமாக ஆளும் கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் தங்களுக்கு விருப்பம் இருக்கின்ற தலைவரின் பெயரை வைக்கின்ற நிலை என்று இல்லாமல், பேரறிஞர் அண்ணா அவர்களின பெயரை வைக்கின்ற நேரத்தில் அதற்கு ஒரு மிக முக்கியமான அடிப்படையினை நான் இங்கே சொல்லியாக வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் தலைவர் மட்டுமல்லாமல் தமிழ்ச் சமுதாயத்தினுடைய அத்தனைப்பேரும் தங்களுடைய தலைவராகக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அமெரிக்காவுக்குச் சென்று வந்தார்கள். ஜப்பானுக்குச் சென்று வந்தார்கள். அதற்குப் பிறகு வானொலியிலே பேசுகின்ற நேரத்தில் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள், 'அமெரிக்காவினுடைய முன்னேற்றம் என்னுடைய மனதை அவ்வாறாகக் கவரவில்லை, ஆனால் ஜப்பான் என்னுடைய மனதைக் கவர்ந்தது'' என்று சொன்னார்கள். அதற்கு அவர்கள் காட்டிய காரணம் அமெரிக்காவிலே குடியிருப்பவர்கள் பெரிய பரப்பிலே குடியிருக்கிறார்கள். அங்கே பெரிய பூபாகம் இருக்கிறது. மற்ற மற்ற வளங்கள் எல்லாம் இருக்கின்றன. கனிவளங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன, ஆகவே, அங்கே குடியிருப்பவர்கள் அதற்கேற்றாற்போல் தங்களது முயற்சியைப் பயன்படுத்தி முன்னேறி இருக்கிறார்கள், இயற்கையும் அவர்களுக்கு அங்கே சாதகமாக இருந்து இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலையினை அண்ணா அவர்கள் அமெரிக்காவிலே கண்டார்கள்.

ஆனால் ஜப்பான் அப்படி அல்ல. அங்கே எரிமலைகள் அதிகம். பூகம்பங்கள் உண்டு. எந்தவிதமான கனிவளங்களும் கிடையாது. இயற்கை வளங்கள் அவ்வளவாக இல்லை. இருந்தபோதிலும் அவர்கள் தங்களுடைய மனித ஆற்றலை மட்டுமே பயன்படுத்தி

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 ஏப்ரல் 5

இன்றைக்கு அமெரிக்காவுக்கு இணையாக பொருளாதாரத் துறையில் முன்னேறி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு, நிலை தமிழ்நாட்டுக்கு வரவேண்டும். தமிழ்நாடு ஒரு ஜெர்மனியாக ஒரு ஜப்பானாக சிறந்து விளங்க வேண்டும் தமிழ்நாட்டிலே உருவாக்கப்படுகின்ற பொருட்கள் எல்லாம் பம்பாயிலே, டெல்லியிலே விற்பனை ஆகக்கூடிய அளவுக்கு நிலை வர வேண்டும் என்று சொன்னார்கள்.

ஆகவே, அவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற கனிவளம், காட்டுவளம், ஆற்று வளம் எல்லாவற்றையும் விட தமிழகத்தில் இருக்கின்ற தமிழனுடைய அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதன் மூலமே நாம் தமிழகத்தை முன்னேற்ற முடியும் என்று அவர்கள் விரும்பினார்கள். ஆகவே அவர்கள் தமிழ்நாடு, ஜப்பானைப்போல் இந்தியாவிலேயே சிறந்தமாநிலமாக விளங்கவேண்டும் என்று கனவு கண்டார்கள். அவர்களுடைய கனவை நனவாக்குகின்ற செயலில் எங்களது தலைவர் புரட்சித்தலைவர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட இந்த நேரத்தில் பல்கலைக் கழகங்கள் தொழில் துறையிலும் தலைமை தாங்கக்கூடிய பல்கலைக் கழகமாக, தமிழகத்தையும் மேற்கு ஜெர்மனியைப் போல், ஜப்பானைப் போல் சிறந்த தொழில் வளம் மிக்க நல்லதொரு மாநிலமாக ஆக்கவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட அவர்களது முயற்சிக்கு இந்தப் பல்கலைக் கழகம் ஒரு குறிப்பிடத்தக்க உதாரணமாகும். ஆகவே, இந்தப் பல்கலைக் கழகத்திற்கும் அண்ணா அவர்களின் பெயரை வைப்பதில் நாம் பெருமை அடைகிறோம். ஒரு சிறந்த காரியத்தை செய்துவிட்ட மன நிறைவினை அடைகிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் படிக்கிறார்கள். பட்டம் பெறுகிறார்கள் அதற்குப் பிறகு அவர்கள் வேலைக்குப் போகவேண்டும் என்று விரும்புகிறார்கள். அதிலே நமக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் பல்கலைக் கழகத்திலே படிக்கின்ற மாணவர்கள் ஆனாலும், மாணவர்களைப் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களானாலும் அந்த எண்ணத்துடன் நின்றுவிடக்கூடாது என்று கருதுகிறோம். எங்களுக்கு மெத்த அக்கறை இருக்கின்றது. பல்கலைக் கழகத்திலே படிக்கின்ற மாணவர்கள், தங்களுக்குக் கிடைத்திருக்கின்ற வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு முழு வளர்ச்சியையும் பெற்று தங்கள் அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக்கொண்டு, வளர்த்துக்கொண்ட அந்த அறிவையும், ஆற்றலையும் முழுமையாக இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பொது சேவைக்காகவே ஆக்கவேண்டும் என்ற ஒரு நல்ல லட்சியத்தை அவர்கள் பெற வேண்டும் என்ற

1978 ஏப்ரல் 5] [திரு. செ. அரங்கநாயகம்]

ஆசையை, எண்ணத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்தார்கள். அவர்கள் கொண்டிருந்த அந்த ஆசையை அந்த எண்ணத்தை, அந்த லட்சியத்தை அங்கே படிக்கின்ற மாணவர்களும். ஆசிரியப் பெருமக்களும் நிறைவேற்றுவார்கள் என்று எண்ணியே அண்ணா அவர்களின் பெயரை வைத்தோம். அப்படி வைத்ததால் நாம் அனைவரும் மிக்க மகிழ்ச்சியினை அடைவோம் என்பதில் நிச்சயமாக ஐயமில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தப் பல்கலைக் கழகம் வர இருக்கிற நேரத்தில் பல்வேறு யோசனைகளை எடுத்துச் சொன்ன மாமன்ற உறுப்பினர்களுக்கு என் நன்றியறிதலைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு கருத்தை பரவலாக வெளியிட்டிருக்கிறார்கள். மாணவர்கள் பிரதிநிதி இதன் நிர்வாகக் குழுக்களில் இடம் பெற வேண்டும் என்று பரவலாகப் பேசப்பட்டது. அது இருக்கக் கூடாது என்று முஸ்லிம் லீக் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஒரு உதாரணத்தையும் சொன்னார்கள். டாக்டர்களிடம் செல்கிற நோயாளி டாக்டர் சொல்கிற மருந்தைச் சாப்பிட வேண்டுமே தவிர யோசனை சொல்லக்கூடிய அளவிற்கு உயர்ந்துவிடக்கூடாது. என்று சொன்னார்கள். ஒருவேளை பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களது கவனத்திற்கு வந்திருக்கும். பல்வேறு கிராமங்களில் நான் கூட பார்த்திருக்கிறேன். வருகிற நோயாளிகள் தன் நோயைச் சொல்வதோடு நின்றுவிடாமல், உடனே ஊசிபோடுங்கள் என்று டாக்டரை வற்புறுத்துவதும், அதுதான் சிறந்த மருத்துவம் என்று நினைத்துக் கொண்டிருக்கிற நிலை இருப்பதால் அவர்கள் அச்சப்பட்டுக் கொண்டு அந்தக் கருத்தை வெளியிட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

அப்படி, டாக்டர் நோயாளி என்ற நிலையில் மாணவர்களுக்கு நிர்வாக குழுக்களில் இடம் தரவேண்டும் என்ற நிலையும், இடம் தர வேண்டாம் என்ற நிலையும் சொல்லப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அவர்கள், அவர்களுக்குத் தகுந்த ஒரு குழுவிலாவது பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்ற ஒரு கருத்தை அவர்கள் இரண்டுக்கும் பொதுவாகத் தந்திருக்கிறார். அரசாங்கத்தை பொறுத்தமட்டில் கொடுக்கக்கூடாது என்றமுடிவை எடுக்கவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் மாணவர்கள் நோயாளிகளைப் போலிருந்தாலும் நோயாளி டாக்டரிடத்தில் போய்நின்று கொண்டு எனக்கு இந்த இடத்தில் வலிக்கிறது, என் உடலில் இன்னின்ன குறைபாடுகள் இருக்கின்றன, என்னால் இதை சாப்பிட முடியவில்லை, என்னால் உறங்க முடியவில்லை என்று சொல்கிற அளவிற்காவது நோயாளிக்கு

உரிமையை நாம் தரவேண்டும் என்பதில் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கருத்துமாறுபாடு கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன்;

இன்னொன்றையும் கருத வேண்டியதாக இருக்கிறது. பல்கலைக் கழகம் என்பது பட்டதாரிகளை உருவாக்குகிற இடமாக மட்டும் இல்லாமல் மாணவர்களுக்கு என்னென்ன தேர்வுகள் வைப்பது, யாரிடத்தில் கேள்வித்தாள்களை உருவாக்கச் சொல்வது, அந்தக் கேள்வித்தாள்களை எங்கே அச்சிடுவது, எப்படி பரிட்சைகள் நடத்துவது, எப்படி திருத்துவது, யாரைக் கொண்டு திருத்துவது, எந்த மார்க்கை வைத்துக் கொண்டு தேர்வுகளை எப்படி, வெளியிடுவது போன்ற பிரச்னைகளில், அவை சம்பந்தப்பட்டிருக்கிற அந்த நிலையில் அதில் நிச்சயமாக இத்தகைய பொறுப்புகளில் நாம் மாணவர்களைச் சம்பந்தப்படுத்துவது என்பது பல்கலைக்கழகங்களை ஒரு கேலிக்குரிய அமைப்பாக ஆக்கிவிடும் என்ற ஆபத்து இருக்கிறது என்ற நிலையில் இவை எல்லாம் பரிசீலிக்கப்பட்டு, மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்று முடிவு எடுக்கப்படுமேயானால் இந்த அடிப்படைகளை, இந்த யோசனைகளை எல்லாம் நாங்கள் நிச்சயமாகப் பரிசீலிப்போம் என்று கூறிக் கொள்வதோடு ஒரு பல்கலைக்கழகத்திற்கு வருகிற நியதி நிச்சயமாக மற்றப் பல்கலைக் கழகங்களுக்கும் வரும் என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கூறுகிறபோது பிஸினஸ் மானேஜ்மென்ட், நிர்வாகக் கல்வி தரவேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். நான் மாமன்ற உறுப்பினர்களுக்கு தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து குறிப்பாக பல்வேறு இடங்களில் பேசுகிற நேரங்களில் பொறியியல் கல்லூரிகளில் படிக்கிற மாணவர்கள் வேலை தேடுபவர்களாக மட்டும் இருக்கக்கூடாது, வேலை தருபவர்களாகவும் இருக்கவேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்திக் கூறி வருகிறேன். 'ஜாப் ஸீக்கேர்ஸாக' இருக்கக்கூடாது 'ஜாப் க்ரியேட்டர்ஸ்'-ஆகவும் இருக்கவேண்டும் என்ற கருத்தை நான் பல்வேறு இடங்களில் கூறி அவை பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன.

ஆனால் அப்படிச் சொல்வதால் இப்போது நாம் நிர்வாகத் துறை பயிற்சி தரவில்லை என்பதல்ல. க்ரோம்பேட்டிலுள்ள எம். ஐ. டி. யில் அப்பயிற்சியைத் தருகிறோம். மற்ற கல்லூரிகளில் குறைந்த அளவிற்கு இப்போது தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நிச்சயமாக அதை அதிக அளவு, ஒரு என்ஜினியரிங் பட்ட

தாரிக்கு வேலை கிடைக்கவில்லையென்றால் எங்கெங்கு நிதிவசதி கிடைக்கிறது, அந்தத் தொழிலை எப்படி நடத்துவது, உற்பத்தியாகும் பொருள்களை எப்படி விற்பது என்றளவிற்கு போதுமான அறிவைத் தருவதன் மூலம் தானே தொழிலை ஆரம்பிக்கக்கூடிய அளவிற்கு அவர்களைத் தயார் செய்கிற அளவிற்கு இந்த நிர்வாகத் துறை பயிற்சி தர வழிவகை செய்யப்படும். இப்போதுள்ள அளவை விட கொஞ்சம் அதிகமாகத் தரப்படும் என்றாலும் அந்தக் கருத்து அகில இந்திய அடிப்படையில் இந்தக் கல்வி சம்பந்தமான குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்வதோடு நிச்சயமாக அந்தக் குறைபாடு போக்கப்படும், அது நிறைவு செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பல்வேறு நல்ல கருத்துக்களைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

திரு. எ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, மாணவர்களின் பிரதிநிதிகளை பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட், செனட் போன்றவைகளில் சேர்ப்பதுபற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கையில், இதிலுள்ள சிக்கல்களை அரசு ஆராயும் என்று சொன்னார்கள். அதே நேரத்தில், இன்றைக்கு கேரளாவில் அங்கு இருக்கக்கூடிய செனட், சிண்டிகேட் போன்ற அமைப்புகளில், மாணவர்களுடைய பிரதிநிதிகளுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதை அந்த அரசு பின்பற்றும் போது, அதையே நாமும் பின்பற்றுவதில் என்ன தவறு இருக்கிறது? அதில் என்ன சிக்கல் இருக்கின்றது?

மாணவர்கள், பெற்றோர்கள், நிர்வாகம் இந்த மூன்று பிரிவினரும் இருந்தால் தான், பல்கலைக்கழகத்தில் பல்வேறு பிரச்னைகள் வரும்போது, அதாவது ஆஸ்டல்கள் போன்றவைகள் இருக்கின்றன, மற்றும் பலவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன, அதோடு நிர்வாகத்தில் ஏதாவது கோளாறுகள், தவறுகள் ஏற்பட்டால் அவற்றை மக்கள் மத்தியில் கொண்டுவந்து அம்பலப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும். அரசும் நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். மாணவர்களின் பிரதிநிதிகளை சேர்ப்பதால் தங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்ற உள்நோக்கத்தோடு தான் மாணவர்களின் பிரதிநிதிகளை சேர்ப்பதற்கு அரசுக்கு விருப்பம் இல்லையா? அல்லது அரசுக்கு இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதில் என்ன சிக்கல் இருக்கின்றது என்பதை சொன்னால் நன்றாக இருக்கும்,

[1978 ஏப்ரல் 5

(10) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

335. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு வெட்டுமரம் அனுப்புகை விதிகளின் 3ஆவது விதியில் திருத்தமொன்று செய்வது குறித்து வன-மீனளத்துறையின் 17—1—1977 ஆம் தேதியிடப்பெற்ற 42 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு காடுகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-A பிரிவின் கீழ்% பேரவை முன் வைக்கப்பெற்றது.)

336. கதர் கிராமத்தொழில் ஆணைக்குழு அல்லது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சென்னையிலுள்ள 'கிராமோதய பவன்' ஆகிய இவைகளால் சான்றளிக்கப்பெற்ற நிறுவனங்கள், அதன் பண்டகசாலைகள் அல்லது நபர்களால்பட்டு, பருத்தி வாங்கு வதன் மீது தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்%செலுத்தத்தக்க வரியினைப் பொறுத்தவரையில் விலக்களிப்பது குறித்து, வணிகவரிகள், சமய அறக்கட்டளைகள் துறையின் 25—2—1978 ஆம் தேதியிடப்பெற்ற 228 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது).

337. கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்துகிற 1949 ஆம் ஆண்டு வங்கி ஒழுங்கு முறைச் சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் தொடக்கக் கூட்டுறவு வங்கியாகச்செயல்படுகிற, சென்னையிலுள்ள ஆயுள் ஈட்டுறுதிக் கழகப் பணியாளர் கூட்டுறவு வங்கி (வரையறுக் கப்பெற்றது) சென்னையில் சீட்டு நிதித்தொழில் நடத்துவதற்கு தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தில் அதன் 3 வது பிரிவு நீங்கலான ஏனைய விதித்துறைகள் அனைத்திலிருந்தும் விலக்களித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 15—2—1978 ஆம் தேதியிடப்பெற்ற 182 ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1961) 63(4) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது.

338. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (வரை யறுக்கப்பெற்றது) 1974—75 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஆய்வுரையும் ஐந்தாவது ஆண்டு அறிக்கையும் கணக்கு களின் விவர அறிக்கையும் (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்(மத்தியச் சட்டம் 1/1956/619-A பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

% தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21(5) விதி யில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

1978 ஏப்ரல் 5]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள். ஏனைய தாள்கள்.

*214. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவிற்கான(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/78) இணைப்பு.

**215. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/78)

**216. 1978 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 24/78)

217. உடுக்குறியிடாத வினா விடை பட்டியல் (336 முதல் 395 வரை).

* 31—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

** 4—4—1978 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றது.

இணைப்பு I

(310-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 364-க்கான விடையைக் காண்க)

தமிழ்நாடு வீட்டு அடமான சங்கம் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து பெற்ற கடனும் அதற்கான வட்டி விகிதங்களும் அடங்கிய விபரப் பட்டியல்.

வருடம்.	பெற்றுக்கொண்ட கடன் தொகை.	வட்டி விகிதம்
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1961-62 ..	20	5 சத விகிதம்.
1962-63 ..	40	6 ,,
1963-64 ..	60	$6\frac{1}{3}$,,
1965-66 ..	180	$6\frac{1}{2}$,,
1966-67 ..	75	$6\frac{1}{2}$,,
1967-68 ..	45	$6\frac{3}{4}$,,
1968-69 ..	80	$6\frac{3}{4}$,,
1969-70 ..	42	$6\frac{3}{4}$,,
1970-71 ..	125	$6\frac{3}{4}$,,
1971-72 ..	175	7 ,,
1972-73 ..	150	7 ,,
1973-74 ..	400	8 ,,
1974-75 ..	600	$7\frac{3}{4}$,,
1975-76 ..	600	$7\frac{3}{4}$,,
1976-77 ..	600	$8\frac{1}{2}$,,
1977-78 ..	700	$8\frac{1}{2}$,,
	3,892	

இணைப்பு II

[344-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பினைக் காண்க.]

அவையின் முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கை

பேரவைத் தலைவர் அவர்களே,

வினா எண் 6 பேரவையில் 1—8—77-ல் விடையளிக்கப்பட்டபோது திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் எழுப்பிய துணை வினா ஒன்றுக்கான விடையையும், திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்களது துணை வினா ஒன்றுக்கான விடையையும் திருத்திக் கொள்ளும் வகையிலான விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்படுகிறது.

விவர அறிக்கை.

திரு. சி. கோவிந்தராஜன்: நான் கேட்ட கேள்வியை ஒட்டி அந்த வரியை வசூலிப்பது அந்தப் பாலத்தைக் கட்டிய காண்டிராக்டரா அல்லது அரசே நேரடியாக வசூலிக்கிறதா ? காண்டிராக்டர் வசூலித்தால் அந்தக் கணக்குகள் எல்லாம் ஒழுங்கான முறையில் கொடுக்கிறாரா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அவைத் தலைவர் அவர்களே, மேற்கூறிய வினாவிற்கு 1-8-77 அன்று விடையளிக்கையில் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு வரை நெடுஞ்சாலைத் துறை சுங்க வரி வசூலிப்பதாகக் கூறினேன். அதற்குப் பதிலாக அம்மாதிரி சுங்கம் வசூலிக்கும் உரிமை கண்ட மங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கே 1971 ஆம் ஆண்டு முதல் விடப்பட்டது என்று கூறிக்கொள்கிறேன். 1971 ஆம் ஆண்டு முதல் வசூலிக்கப்பட்ட சுங்கத் தொகையினை விளக்கும் பட்டியல் ஒன்றையும் கீழே தந்துள்ளேன்.

வருடம்.	ஏலத்தொகை.	ஊராட்சி ஒன்றியம் வசூலித்த தொகை.	அரசுக்கு ஊராட்சி ஒன்றியம் செலுத்திய தொகை.
(1)	(2)	(3)	(4)
1971-72	1,04,734	1,14,600	1,04,734
1972-73	1,04,734	1,80,500	1,04,734
1973-74	1,04,734	2,10,100	1,04,734
1974-75	1,68,400	2,29,000	1,68,400
1975-76	1,68,400	2,51,200	1,68,400
1976-77	1,68,400	2,63,000	1,68,400
மொத்தம்	8,19,402	12,48,400	8,19,402

[1978 ஏப்ரல் 5

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இது போன்ற சுங்க வரி வசூலிக்கும் போது கட்டை வண்டிகள், மாட்டு வண்டிகளுக்கு வரி விதிவிலக்கு இருக்கிறது. லாரிகள், டிரக்குகளுக்கு மட்டுந்தான் இந்த வரி வசூலிக்கப்படுகிறது. வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த நிதியைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இது போன்ற வரிகளைத் தொடர்ந்து வசூல் செய்ய அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவைத் தலைவர் அவர்களே, மேற்கூறிய கேள்விக்கு விடையளிக்கையில் கட்டை வண்டிகளுக்கு சுங்க வரி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது என கூறினேன். அம்மாதிரியான சுங்க வரி விதிவிலக்கு கட்டை வண்டிகளுக்கு எப்பொழுதுமே அளிக்கப்பட்டதில்லை என்று திருத்திய பதிலினைக் கூறிக்கொள்கிறேன்.

தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1978 ஏப்ரல் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

சைதாப்பேட்டை 'கால்ப்' விளையாடும் இடம்

*18. குறுகிய கால வினா— திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி அருகேயுள்ள Golf ground 77 ஏக்கர் எத்தனை வருடத்துக்கு Lease விடப்பட்டுள்ளது?

(ஆ) அந்த இடத்தில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் உண்டா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?"

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ, ஆ மற்றும் இ):

9·3·78 அன்று சட்ட மன்றப் பேரவையில் விவாதிக்கப்பட்ட வீட்டு வசதிக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளபடி நகரத்தில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமாக உள்ளதும் மற்றும் அதனால் நிருவகிக்கப் படுவதுமான பொது மக்களுக்கான வாடகை வீடுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான திட்டங்களை அரசு பரிசீலனை செய்து வருகிறது. காஸ்மாபாலிட்டன் (Cosmopolitan club) சங்கத்திற்கு Golf மைதானமாக வைத்துக்கொள்ள குத்தகையாக கொடுக்கப்பட்டுள்ள அரசுக்குச் சொந்தமான 77·70 ஏக்கர் நிலம் இத்திட்டத்திற்குத் தகுதியானதாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. காஸ்மாபாலிட்டன் (Cosmopolitan club) சங்கம் இந்நிலத்தை 30 ஆண்டுகால குத்தகையில் வைத்திருக்கிறது. இந்தக் குத்தகை 1996-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் தேதி முடிவடையும். எழுத்து மூலம் ஒரு மாத கால அறிவிப்புக் கொடுத்து இந்நிலத்தை திரும்ப எடுத்துக் கொள்வதற்கு இந்த குத்தகை சாசனம் வகை செய்கிறது. மேலே குறிப்பிட்டவாறு இந்நிலத்தை அரசு திருப்பி எடுத்துக் கொள்ளும் போது, அதை பொது மக்களுக்கான வீடுகள் கட்டும் திட்டத்திற்கு உபயோகப்படுத்த முடியும்.

———, ...ான முறையிலே ——— முடியாத நிலை இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கால்ப் கிரவுண்டிற்கான நிலம் 30 ஆண்டு லீசில் கொடுக்கப் பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உடனடியாக அந்த லீசை ரத்து செய்து விட்டு, சொந்த வீடு இல்லாமல் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு அல்லது வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டுவதற்கான திட்டத்தைப் பற்றி இந்த அரசு அமுல்படுத்த முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 77·70 ஏக்கர் நிலத்தை அரசு எடுத்துக் கொண்டு, அதில் வீடுகள் கட்டுவதாக இருந்தால் சுமார் 7,000 வீடுகள் கட்டலாம். இந்த யோசனை அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்குச் சொந்தமான 77 ஏக்கர் நிலத்தை அந்த கால்ப் கிளப்பிற்கு குத்தகை விட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த குத்தகைத் தொகை வருடத்திற்கு எவ்வளவு? இப்போது அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, உடனடியாக அந்தக் குத்தகையை ரத்து செய்து விட்டு, ஏழை எளிய மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குப் பயன் படுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் சொல்லியிருப்பதுபோல், கேட்காமலேயே கொடுக்கக் கூடியது இந்தப் புரட்சித் தலைவர் அரசு. இந்த அரசு அந்த நிலத்தை எடுத்து வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய திட்டம் பரிசீலனையில் உள்ளது. எவ்வளவு வாடகை வருடத்திற்கு கொடுக்கின்றார்கள் என்ற தகவல் இங்கே இல்லை. இந்தக் கேள்வியும் அதைப் பொறுத்தது அல்ல.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இந்த 77 ஏக்கர் நிலத்திற்கும் இன்றைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை இந்த அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், அதற்குத் தகுந்த விடை தருகிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிலே வீடுகள் ஒதுக்கித்தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைக்கான நிதி ஒதுக்கீடு.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் இதைப்பற்றி கோரிக்கை தருவார்களானால், அதுவும் தீவிர பரிசீலனை செய்யப் படும்.

*19. குறுகிய கால வினா—திரு. இரா. தாமரைக்கனி மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 30-7-77 முதல் 31-3-78 முடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கும், பாதை வசதி செய்வதற்கும் அரசு எவ்வளவு ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது?

(ஆ) எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது, மாவட்ட வாரியாக?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) மற்றும் (ஆ) அவையின் முன்பு ஓர் அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் ஏற்கனவே மேஜையின்மீது அவைகளையெல்லாம் வைத்திருக்கிறீர்கள். அது எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், திருச்சி மாவட்டத்தில் ரூ. 12 லட்சம் செலவழிக்கப்படுவதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள், ஆனால், செலவழிப்பது ரூ. 4.36 லட்சம்தான். அது போலவே இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 4 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள், ஆனால், செலவழிப்பது ரூ. 3.28 லட்சம்தான். இவைகளுக்காக ஒதுக்கிய முழுத் தொகையும் செலவழிக்கப்படவில்லை. இது அதிகாரிகளுடைய பொறுப்பில்லாத நடவடிக்கையின் காரணமாகத்தான் ஏற்படுகிறது என்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, நிலத்தை கையகப் படுத்துவதற்கு ஏற்கனவே சட்டத்திலே பல சிக்கல்கள் இருந்தன. சில பல ஊர்களில் ஏற்படுத்திய கால தாமதம் காரணத்தால் முழுத் தொகையும் செலவழிக்கப்படவில்லை. அதற்காக அரசு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. சம்பந்தப் பட்டவர்கள் மீது விளக்கம் கேட்பதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது.

(* 539ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது)

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே விவசாயத் தொழிலாளர்கள் எந்த எந்த இடங்களிலே குடியிருந்து வந்தார்களோ—அந்த நிலங்கள் யாருடைய நிலமாக இருந்தாலும்—அந்த இடங்களை அவர்களுக்கே உரிமம் ஆக்கித் தந்தது. அதைப் போலவே இந்த அரசும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அவர்களுக்கு சொந்தத்திலே வீட்டுமனைகள் இல்லாதிருந்தால், அவர்கள் தற்போது குடியிருக்கும் இடங்களையே அவர்களுக்குச் சொந்தமாக்கிடத்தக்க வகையில் உரிமம் ஆக்கித் தருவதற்கு அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, வீட்டு மனைகள் இல்லாமல் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீட்டு மனைகள் கையகப்படுத்தி அவர்களுக்கு வழங்குவதற்கு இந்த அரசு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

திரு. க. மருதாசலம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பட்டியலில் மாவட்ட வாரியாக தகவல்களைச் சொன்னார்கள். கோவை மாவட்டத்திற்கு 10.40 இலட்சம் ஒதுக்கியதாகவும், அதிலே 68 லட்சம்தான் செலவழிக்கப் படுவதாகவும் மீதம் 4 லட்சத்து 40 ஆயிரம் திரும்ப வருவதாகவும் சொன்னார்கள். என்ன காரணத்தால் அந்த 4 லட்சத்தை திருப்பியனுப்பியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? அந்தத் தொகையையும் சேர்த்து ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, என்ன காரணம் என்று கேட்டார்கள். அந்தக் காரணத்தையெல்லாம் விளக்கினால் நேரம் போதாது. இந்த ஆண்டும் அரசாங்கம் 100 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. கோவை மாவட்டத்திற்கு உரிய பங்கு கிடைக்கும். அதையும் அங்கே இருக்கிற அதிகாரிகள் செலவழித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கெல்லாம் நன்மை கிடைக்கச் செய்வதற்காக உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆணை பிறப்பிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, தாழ்த்தப் பட்ட மக்களுக்கு வீட்டுமனைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணமோ மிகக் குறைச்சல். அப்படி ஒதுக்கப்பட்ட பணத்தைக் கூட செலவழிக்கவில்லை. அப்படிச் செலவழிக்க முடியாமல் இருக்கிறது. அதற்கு உண்மையான காரணம், அதிலே பல சிக்கல்கள் இருந்தாலும் கூட, அதிகாரிகள் பற்றாக்குறை என்பதை அரசு ஒப்புக் கொள்கிறதா? ஒரு டிவிஷனுக்கு ஒரு தாசில்தாரையும், அதற்குக் கீழ் பணியாளர்களும் அதிகமாக இல்லாததால் நிறைய வீட்டு

மனைகள் கொடுக்கின்ற நிலைமை இல்லாமல் இருக்கிறது. ஆகவே தனியாக தாலுகாவிற்கு ஒரு தாசில்தார் என்ற முறையிலே நியமித்து துரிதமாக வீட்டு மனைகளைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அந்த நிலங்களை கையகப்படுத்துவதற்கு பணியாற்றுகிற அதிகாரிகளின் எண்ணிக்கை போதாது என்பதை நான் உணர்கிறேன். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு துரிதமாக நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் கூடுதலாக அதிகாரிகளை நியமிப்பதற்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9.10)

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, ஒதுக்கிய ஒரு கோடி ரூபாயில் ஏறக்குறைய 66 இலட்சம் ரூபாய் அளவில்தான் செலவழிக்கப்படுமெனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்த ஆண்டிலாவது இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட ஒரு கோடியில் பாக்கியுள்ள ரூபாயையும் சேர்த்துச் செலவழிப்பதற்கு அமைச்சரவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, வருகிற நடப்பாண்டிற்கும் 100 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இந்த 100 இலட்சம் ரூபாயைச் செலவழிப்பதற்குத்தான் விதிமுறைகளில் வழியிருக்கும். திரும்ப அரசுக்குத்தான் அது சேரும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கிய தொகை 16 இலட்சம் ரூபாய் என்றும், செலவழிக்கப்படும் என்று கருதப்படும் தொகை 19.57 இலட்சம் ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கான காரணம் என்ன? அதைப்போன்றே, நிலங்களைக் கையகப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் நான் கேட்பதெல்லாம், சிறு தொழில் நடத்துவதற்காகக் கடன் வழங்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட அந்தத் தொகைகூட முழுமையாகச் செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது, அதற்கான காரணம் என்ன என்று விசாரித்தபொழுது, வெல்ஃபேர் ஆபீசர்களாக, ரிடையராகும் ஸ்டேஜில் இருப்பவர்களைத்தான் நியமனம் செய்வதால் இப்படிப்பட்ட நிலையில், சீரான முறையிலே பணியைச் செய்ய முடியாத நிலை இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒதுக்கிய தொகைக்கு மேல் கூடுதலாகச் செலவழித்திருக்கிறார்கள். அதற்குரிய காரணம் என்ன என்று கேட்டார்கள். ஒரு காரணம், அங்கே பணியாற்றுகின்ற அதிகாரிகள் சுறுசுறுப்புடனும், உண்மை உணர்வுடனும் பணியாற்றுவதால் இருக்கலாம். இன்னும், அந்த மாவட்டத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை அதிகம் இருப்பதால் அதிகமாகத் தேவைப்படுகிறது என்று இன்னொரு காரணத்தையும் அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். இந்த வட்டியில்லாத கடன்கள் அதிகமாகத் திரும்ப வருவதாகவும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது உண்மையாக இருக்குமேயானால் உரிய காரணத்தைக் கேட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் தாழ்த்தப்பட்ட மக்கள் இடுகாட்டுக்குச் செல்லும் பாதையும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர்களே, இப்பொழுது தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் புதிதாக வீட்டுமனைகள் வழங்குவதற்கான திட்டத்தை இங்கே அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்தில், பல கிராமங்களில் இலட்சக்கணக்கான மனைகள் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அந்த இடங்களுக்கு ரோடுகள் போடப்பட்டு, அதை ஒதுக்கி கற்களும் போடப்பட்டிருக்கிறது. ஆனால், சம்பந்தப்பட்டவர்களுக்கு இன்னும் பட்டா கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த இலட்சக்கணக்கான மனைகளை என்ன செய்யப் போகிறார்கள்? அவர்களுக்குப் பட்டா கொடுக்கப் போகிறார்களா? அல்லது வேறு இடத்தில் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப் போகிறார்களா என்பதை தயவுசெய்து தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, ஒவ்வொரு அரசும் ஆண்ட காலத்திலும் அவர்கள் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறார்கள். நிலம் ஒதுக்கியிருப்பார்களேயானால் பட்டாவும் கொடுக்கப்பட்டிருக்கும். கொடுக்கப்படாததற்கு என்ன காரணம் என்று விசாரித்தறிந்து இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

1978 ஏப்ரல் 6]

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒதுக்கிய தொகைக்கு மேலாகச் செலவழிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களில் ஒதுக்கிய தொகை ஒழுங்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பாக்கியுள்ள 11 மாவட்டங்களில் ஒதுக்கப்பட்ட தொகை உருப்படியாகச் செலவழிக்கப்படவில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அப்படிப்பட்டவர்கள்மீது நடவடிக்கையெடுக்க அரசு முயற்சியெடுக்குமா? அதுமட்டுமல்லாமல், இயற்கையாகவே, இப்படி ஒதுக்கக்கூடிய தொகை செலவழிக்கப்படாமல் இருந்தால், இது பட்ஜெட் அட்ஜஸ்ட்மெண்டிற்காகத்தான் என்பது போன்ற சந்தேகங்கள் நாட்டு மக்களிடத்தில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் ஏதாவது இருப்பதாகச் சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட மாவட்டங்களிலுள்ள அலுவலர்களை ஏன் செலவழிக்கவில்லை என்று விளக்கம் கேட்பதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. இது இன்று மட்டும் ஏற்பட்ட ஒரு நிலைமை அல்ல. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலும், இப்படி ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்படுகின்ற தொகை முழுமையாகச் செலவழிக்கப்படவில்லை என்பதுதான் குறிப்பிடவேயிருப்பது.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்றைக்கு ஒதுக்கிய தொகை போதாது என்றும், வீட்டுமனைகள் கொடுப்பது போதாது என்றும் ஒரு பக்கத்தில் சொல்லிக்கொண்டிருக்கும் அதேநேரத்தில், அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுத்து மூன்றரை ஆண்டுகளுக்குள்ளாக அந்த இடத்தை விட்டு வெளியேறுங்கள் என்று அரசு நோட்டீஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அது தடுத்து நிறுத்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அவர்களை வெளியேற்ற அரசாங்கம் இதுவரை எந்த நோட்டீசும் கொடுத்ததாக என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படிக் குறிப்பிட்டு ஏதாவது சம்பவம் இருக்குமேயானால் என்னுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்களேயானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, ஒதுக்கப்பட்ட ரூ. 100 இலட்சத்தில், ரூ. 66 இலட்சம் மட்டும் செலவு செய்யப்பட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த ரூ. 66 இலட்சத்தில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன, எந்தெந்த மாவட்டங்களில் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கேள்வி வீட்டு மனையைக் கையகப்படுத்துவது பற்றி; வீடு கட்டுவது அல்ல.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு குடியிருப்பு மனை வழங்கும்போது ஜாதி இந்துக்கள் என்று வழங்கப்படுகிற வகுப்பார் மத்தியில் தாழ்த்தப்பட்டவர்களைக் குடியேற்ற அரசு செயல்முறை ஏதேனும் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே 1968-ல், வீட்டு மனைகளைக் கையகப்படுத்துகிற நேரத்தில் ஜாதி இந்துக்கள் குடியிருக்கிற பகுதிக்கு அருகிலேதான் கையகப்படுத்தவேண்டுமென்ற ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணை தொடர்ந்து பின்பற்றப்படுகிறது.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, அவர்களுக்கு வீட்டு மனை வழங்குவது எவ்வளவு முக்கியமோ அதைவிட மிக முக்கியம் அவர்கள் இருக்கிற பல்வேறு இடங்களில் மிராசுதார்கள், மிகப் பெரிய பணக்காரர்கள் காலி செய்ய முயற்சி செய்கிறார்கள். அதைத் தடுக்க அரசு சட்டபூர்வமாக வழிவகை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, நம்முடைய விதிமுறைகளிலேயே ஒருவருக்கு வீட்டுமனை அரசாங்கம் வழங்குமேயானால், அவர்களைக் காலி செய்ய வைக்க வழியில்லை. அப்படிப்பட்ட நிலைமை எங்கேயாவது இருக்குமானால் அதுபற்றி அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது ஊரைக் குறிப்பிட்டுச் சொல்வார்களானால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் எடக்குடி, கோட்டூர், அறையாபுரம் என்று 3 ஊர்களை மட்டும் இப்பொழுது சொல்லியிருக்கிறேன். இன்னும் பல நூற்றுக்கணக்கான ஊர்களில் இதுபோல் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, பட்டா கொடுக்கப்படாமலிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, பின்னாலே எழுதி அனுப்புகிறேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஊர்களைக் குறித்து வைத்திருக்கிறேன், நிச்சயமாக நடவடிக்கை எடுத்து பட்டா வழங்க ஏற்பாடு செய்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, ரூ. 100 இலட்சம் ஒதுக்கியதில், ரூ. 66 இலட்சம் செலவு செய்து, ரூ. 34 இலட்சத்தைத் திருப்பியனுப்பியிருக்கிறார்கள். சட்டசபையில் நிறைவேற்றப்படுவதும் அந்தப் பணம் திருப்பி அனுப்பப்படுவதும் சட்டசபையை ஒழுங்காக மதிக்கும் முறையாகுமா? அதுமட்டுமல்ல. குமரி மாவட்டத்தில் ரூ. 1,30,000 ஒதுக்கி, அந்த ரூ. 1,30,000-மும் ஒழுங்காக செலவழித்திருக்கிறார்கள். மிகவும் குறைந்த அளவு ஒதுக்கியதை மாற்றி, அதிக அளவு குமரி மாவட்டத்திற்கு ஒதுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, குமரி மாவட்டத்திற்கு வருகிற ஆண்டில் இன்னும் அதிகமாக ஒதுக்கப்படும்.

மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர்கள்

* 816 வினா— திரு. ஈஸ்வரமூர்த்தி பி. என்கிற சொரணம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர்களுக்கு கடந்த 15 வருடங்களாக ஊதிய உயர்வு மற்றும் அரசு ஊழியர்களுக்குள்ள எந்தவித சலுகையும் கொடுக்கப்படவில்லையெனவும், அரசு ஊழியர்கள் போல் சம்பளமும் இதர சலுகைகளும் தங்களுக்கும் தருமாறு அரசிடம் கோரியுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) மணிமுத்தாறு அணை பராமரிப்புக்காக 64 வெவ்வேறு தற்காலிக பதவிகளை ஏற்படுத்தி அரசு ஒப்பளிப்பு வழங்கியது. பின்னர் அந்தப் பதவிகள் நிரந்தரமாக்கப்பட்டன. இந்தப் பதவிகளுக்கு தற்காலிகமாக இருந்த நாள் வரை. அட்ஹாக் விதிகளும் அவை நிரந்தரம் செய்யப்பட்ட நாளிலிருந்து சட்ட விதிகளும் தொகுக்கப்படவேண்டும். இது அரசின்

பரிசீலனையில் இருந்து வருகிறது. அட்ஹாக் விதிகள் தொகுத்தல் நிலுவையிலிருக்கையில், மூன்று ஆண்டு ஊதிய உயர்வுகள் மணிமுத்தாறு பராமரிப்பு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த மணிமுத்தாறு அணைத் திட்டத்தில் பணியாற்றுகிற அந்த ஊழியர்கள் குடியிருக்கும் வீடுகள் கூட இப்பொழுது சேதம் அடைந்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. தொடர்ச்சியாக பணியிலிருக்கிற காரணத்தால் சர்வீஸ் கண்டிஷன்ஸ் தொடர்ச்சியாக இருக்குமா? அப்படிப்பட்ட ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே 1962-ல் தற்காலிக இடங்கள் 54 உருவாக்கப்பட்டன. அவைகள் 1971-ல் நிரந்தர இடங்களாக ஒதுக்கப்பட்டன. ஆனால் இன்று வரையில் அந்த இடங்களுக்கான விதிமுறைகள் வகுக்கப்படாதது உண்மையிலேயே சரியானது அல்ல. அந்தக் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு அரசு நிச்சயமாக ஏற்பாடு செய்யும். வீடுகளைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். அதிலே என்ன பராமரிப்பு செய்ய வேண்டுமோ அதைப்பற்றி ஏற்கனவே இந்த மன்றத்தில் பதில் அளித்திருக்கிறேன்.

சாத்தனூர் அணைப் பணியாளர்கள்

*817 வினா—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணைப்பகுதியில் தொடர்ந்து சுமார் பத்து ஆண்டு காலமாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணிமுறைகளை நிரந்தரப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: என். எம். ஆர். பணியாட்களின் பணியினை மாநில சேவையாக்குவது பற்றிய குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9.20)

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் பகுதியில் தினக் கூலிகளாக வேலை செய்யும் ஆட்கள் கிட்டத்தட்ட 10, 12 ஆண்டுகளாக தினக்கூலிகளாக பணிபுரிகிறார்கள். அவர்களை நிரந்தரம் ஆக்க அரசிடம் ஏதாவது கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கிறதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சாத்தனூர் அணைக்கட்டு பகுதியில் 85 என். எம். ஆர். கள் பணிபுரிகிறார்கள். 10 ஆண்டுகளுக்கு மேல் ஆனவர்களை நிரந்தரம் ஆக்க வேண்டும் என்ற அரசாணையின்படி 12 பேர்கள் நிரந்தரம் ஆக்கப்பட்டார்கள். மீதி உள்ள 73 பேர்களில் 1-4-1977 முடிய 10 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் யார் என்ற பட்டியல் கேட்கப்பட்டிருக்கிறது. அது கிடைத்த உடன் அதையும் அரசு ஏற்றுக்கொள்ளும்.

சின்கோனா தொழிலாளர்களுக்கு கூட்டுறவு பண்டகசாலை

*818 வினா திரு. கு. ரமணி: மாண்புமிகு உணவு - கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் அரசு சின்கோனா துறை தொழிலாளர்களுக்கு கூட்டுறவு பண்டகசாலை ஏற்படுத்திக் கொடுக்க கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கூட்டுறவு பண்டகசாலை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது?

(இ) உணவுப்பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பண்டங்களை அவர்களுக்கு விநியோகிக்க தற்போது என்ன ஏற்பாடு உள்ளது?

மாண்புமிகு திரு. க. உ. ரொ. எட்மண்ட்:-(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) நீலகிரி கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி, மற்றும் உதகமண்டலம் கூட்டுறவுப் பண்டகசாலையினரால் நீலகிரி மாவட்டத்தில் நடத்தப்படும் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. நடுவட்டத்திலும், ஏனைய கிராமங்களிலும் இப்பண்டகசாலைகளின் கிளைகள் இருக்கின்றன. சின்கோனாத் துறையின் அலுவலர்களும், தொழிலாளர்களும் இவ்விரு பண்டகசாலைகளின் கிளைகளிலிருந்து தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்கின்றனர்.

மதுக்கரை கூட்டுறவு பண்டகசாலை

*819 வினா திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், மதுக்கரை கூட்டுறவு பண்டகசாலை கலைக்கப்பட காரணம் என்ன?

[1978 ஏப்ரல் 6

(ஆ) ஏராளமான தொகை ஊழல் செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(இ) உறுப்பினர் பங்குத் தொகையினை திருப்பித்தர அரசு உத்திரவு போட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. உ.ரொ. எட்மண்ட்

(அ) பண்டகசாலை கலைக்கப்பட காரணங்கள் கீழ்வருமாறு:

(1) சங்கம் 5 ஆண்டுகளுக்கு மேலாக சரியான முறையில் செயல்படவில்லை.

(2) 30-6-1973 தேதி அன்று நட்டத்தில் இயங்கி வந்தது.

(3) 1973-74, 1974-75 ஆண்டுகளில் பண்டகசாலையின் நிர்வாகக் குழு கூடி நடவடிக்கைகள் ஏதும் எடுக்கவில்லை.

(4) சங்கத்தின் நிதிநிலை திருப்திகரமாக இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இல்லை.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கூட்டுறவுப் பண்டகசாலையில் ஏராளமான தவறுகள் நடைபெற்றதாக மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை உறுப்பினர்களுடைய பங்கீட்டுத் தொகை திரும்பக் கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அதைத் திருப்பிக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட புகார்கள் இன்னும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வரவில்லை. பங்கீட்டுத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கான யோசனை இப்போது நிதிநிலையைப் பொருத்தமட்டில் இல்லை.

விவசாயக் கடன்களுக்கான வட்டி விகிதம்

*820 வினா திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) விவசாயக் காரியங்களுக்கு கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கும் கடனுக்கு ரிசர்வ் வங்கி விதிக்கும் வட்டி விகிதம் என்ன?

(ஆ) விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளுக்கு குறுகிய காலக் கடனுக்கும் மத்தியகாலக் கடனுக்கும் செலுத்தும் வட்டி விகிதம் என்ன?

1978 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) 6 சதவீதம் குறுகிய காலக் கடனுக்கும், 6.50 சதவீதம் மத்திய காலக் கடனுக்கும் விதிக்கிறார்கள்.

(ஆ) உணவுப்பயிர் சாகுபடி செய்யும் சிறு விவசாயிகளுக்கு மட்டும் 10·5 சதவீதமும், அதே பயிரை சாகுபடி செய்யும் இதர விவசாயிகட்கும், இதரப் பயிர்கள் சாகுபடி செய்யும் எல்லா விவசாயிகளுக்கும் 12 சதவீதமும் குறுகியகாலக் கடனுக்கு வட்டி வசூலிக்கப்படுகிறது. மத்திய காலக் கடனுக்கு 12·5 சதவீதம் வட்டி வசூலிக்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இப்போது ரிசர்வ் வங்கி வட்டி வீதம் 6.5 சதவீதம். ஆனால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுவது 12·6 சதவீதம் ஆகவே, இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் 6·1 ஆகிறது. தற்போது 3 அடுக்கு முறையில் கூட்டுறவு அமைப்புகள் இருப்பதால் தான் இந்தமாதிரியான அதிக அளவிற்கு வித்தியாசம் வருகிறது என்ற கருத்து தொடர்ந்து சொல்லப்படுகிறது. ஆகவே, இதை இரண்டு அடுக்காக மாற்றி, ரிசர்வ் வங்கி வட்டிக்கும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் கூட்டுறவுக் கடன் வட்டிக்கும் உள்ள வித்தியாசம் 3 சதவீதம் ஆக இருக்கும் வகையில் மாற்றிச் செய்ய அரசு முன்வருமா? இப்போதே குறைக்க நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். அதை விட அதிகமாகக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடக்கும் நேரத்தில் 12·6 சதவீதம் என்று இருந்த வட்டியை உணவு உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகளுக்கு 10 சதவீதம் என்று குறைத்து அரசு ஆணையிட்டு இருக்கிறது. அதற்கும் கீழே குறைப்பதற்கு, 3 டயர் சிஸ்டத்தை 2 டயர் சிஸ்டமாக மாற்றினால் முடியுமா என்று கேட்கிறார்கள். 3 டயர் சிஸ்டத்தை 2 டயர் சிஸ்டமாக மாற்றி அமைப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் வழங்கப்பட்ட கடன் வசூல், 3 ஆண்டு காலமாக ஏற்பட்டு இருந்த கடும் வறட்சி காரணமாக தள்ளிவைக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட கடன்களுக்கு வட்டிகளை ரத்து செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, தள்ளிவைக்கப்பட்ட கடன்களுக்கு வட்டியை ரத்து செய்வதற்கு எந்த விதமான யோசனையும் அரசுக்கு இல்லை என்று பலமுறை இந்த மன்றத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது.

[1978 ஏப்ரல் 6

நாகர்கோயில் தொகுதியில் மீனவர் குடியிருப்பு

*821 வினா— திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோயில் தொகுதியில் உள்ள மணக்குடி, பள்ளம், புத்தன்துறை, கேசவன்புத்தன்துறை, பெரியக்காடு ஆகிய மீனவர் பகுதிகளில் உள்ள குடியிருப்புக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க இந்த அரசு முயற்சி எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:— (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமாரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு கிராமங்களில்தான் மீனவர்களுக்கு வீடுகள் கட்டப் பட்டுள்ளன.—

(1) கேசவன்புத்தன்துறை .. 50 வீடுகள்.

(2) புத்தன்துறை .. 50 வீடுகள்.

இந்த வீடுகள் தமிழ்நாடு ஹரிஜன வீட்டு வசதிக் கழகம் மூலமாக கட்டப்பட்டு மீனவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மணக்குடி, பள்ளம், மற்றும் பெரியக்காடு ஆகிய கிராமங்களில் தகுதியான வீட்டு மனைகள் மற்றும் பாதை வசதிகள் முதலியன இருப்பின் அடுத்த ஆண்டில் இங்கு வீடு கட்டுதல் குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, கேசவன் புத்தன்துறை, புத்தன்துறை ஆகிய இடங்களில் வீடு கட்டியிருப்பதற்கு நன்றி. மற்றும், மணக்குடி, பள்ளம், பெரியக்காடு ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பு அற்று இருக்கிற காரணத்தால், அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக நிதி ஒதுக்கீட்டை அரசு ஏற்கனவே செய்து இருக்கிறது. அந்தக் கிராமங்களில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு, நான் மூலக்கேள்விக்கு பதில் சொல்லும்போது குறிப்பிட்டதுபோல், அந்த இடங்களில் தகுதியான வீட்டுமனைகள் மற்றும் பாதை வசதிகள் செய்து தர கிராம மக்கள் ஒத்துழைப்புத் தருவார்களானால் கூடிய விரைவில் அங்கே வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 ஏப்ரல் 6]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இப்போது கடலோரப் பகுதியில் இருக்கும் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. அதேபோல், உள்பகுதியில் இருக்கும் மீனவர்களும் வீடு இல்லாத நிலையில் இருக்கிற காரணத்தால், அவர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு திட்டம் தீட்டியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, முந்தைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் பூம்புகார், வாணகிரி போன்ற இடங்களில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப் பட்டது. இன்னும் சொல்லப்போனால் உள்நாட்டில் இருக்கும் மீனவர்களுக்கும் வீடுகள் கட்டித் தருவதற்கு திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தில் இருக்கும் மீனவர்கள் பகுதி எவை எவை, அதைத் தொடர்ந்து இந்த புதிய அரசும் மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை இந்த ஆட்சி காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு சீருடை

*822 வினா— திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை. ஆனால் செகண்டரி பள்ளிகளில் பணிபுரியும் சாதாரண ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் சீருடை வழங்கவும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு சீருடைப்படி அளிக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1978 ஏப்ரல் 6

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, தற்பொழுது போலீஸ்காரர்களுக்கு வழங்குவது போல், ஆசிரியர்களே சீருடை வாங்கிக் கொள்வதற்கோ அல்லது அரசாங்கமே அவர்களுக்கு வழங்குவதற்கோ, அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, எல்லா ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. ரா. க. சு. தண்டபாணி; பேரவைத் தலைவரவர்களே, காவலர்களுக்கு அளிப்பதைப்போலவே ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கலாம் என்பது என்னுடைய கருத்து. அதேபோல், காவல் துறையில் குறிப்பாக மலைப் பகுதியில் பணிபுரிகிறவர்களுக்கு கம்பளி ஆடைகளைத் தருவது போல், மலைப் பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் கம்பளி ஆடைகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மலைப் பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கோ அல்லது கீழே பணிபுரியும் ஆசிரியர்களுக்கோ சீருடை அல்லது வேறு ஆடைகள் தரும் ஆலோசனை இந்த அரசிடம் இல்லை.

(முற்பகல் 9.30)

திரு. கோ. இளங்கோவன்: ஆசிரியர்கள் சீருடை அணிய வேண்டுமென்று வற்புறுத்தாவிட்டாலும் கூட அனைத்து மாணவர்களும் சீருடையிலேதான் வரவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்களும் மாணவர்களும் சீருடை அணிந்து வரவேண்டுமென்பது அரசின் விருப்பம்.

திரு. இரா. தாமரைக்கனி: எல்லா ஆசிரியர்களுக்கும் அரசு சீருடை வழங்காவிட்டாலும் வருஷத்திற்கு 100 ரூபாய் பெறுமான கைத்தறித் துணிகளைக் கொடுத்தால் தேங்கிக் கிடக்கிற கைத்தறித் துணிகள் விற்பனை ஆகி அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுத்த மாதிரி இருக்கும். அதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுவும் இலவச சீருடை தருவது போன்றதுதான். அரசிடம் அத்தகைய திட்டம் இல்லை.

1978 ஏப்ரல் 6]

மலையாள பாடப் புத்தகங்கள்

*823 வினா— திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொழி மைனாரிட்டி மாணவர்களான மலையாள அரிசன மாணவர்களுக்கு மலையாள பாடப்புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்ததுண்டா?

(ஆ) அரிசன மலையாள மாணவர்களுக்கு மலையாள பாடப் புத்தகம் வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) கேரள அரசினரால் வெளியிடப்பட்ட மலையாள மொழிப் புத்தகங்கள் தமிழ் நாட்டிலுள்ள மலையாள மொழியினைப் பயிற்றுவிக்கும் பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 1977-78 இல் மலையாள மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் அரிசன மாணவர்களுக்கு புத்தகங்கள் குறித்த காலத்தில் வழங்க இயலவில்லை. எனினும் தேவைப் பட்டியலின் அடிப்படையில் மாணவர்களுக்குப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டு விட்டன.

திரு. திருச்சி ஆர் சௌந்திரராஜன்: இன்றையதினம் கல்வி கற்கும் மாணவர்களில் பல பேர் திராவிட மொழிகளைத் கற்றுக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். அப்படிக் கற்றுக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு எல்லா மொழிகளையும் கற்றுக் கொடுக்கும் வகையில் எல்லா மொழிகளிலும் புத்தகங்களை அச்சடித்துக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; மூலக் கேள்வி மலையாள மொழியில் பாடங்களைப் பயிலுகிற அரிசன மாணவர்களைப் பற்றியது.

விளவங்கோடு வட்டத்தில் மலையாள மொழி ஆசிரியர்கள்

824 வினா—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில், விளவங்கோடு தாலுகாவிலுள்ள பாடசாலைகளில் பலவற்றில் மலையாள ஆசிரியர்கள் அமர்த்தப் படாமல் தமிழ் ஆசிரியர்களே மலையாள மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கின்றனர் என்பது அரசின் கவனத்திற்கு வந்ததுண்டா?

(ஆ) மலையாள ஆசிரியர்களை நியமிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) தற்போது விளவங்கோடு வட்டத்தில் உள்ள எல்லா அரசு துவக்க, நடுநிலை, மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலும் மலையாள ஆசிரியர்களே மலையாளப் பிரிவுகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருச்சி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்.

*825 வினா— திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; திருச்சிராப்பள்ளி வடிகால் திட்டத்தின் பல்வேறு பிரிவுகளிலும், பெரும்பான்மையான பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகளும் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத் திட்டம் 1980-ம் ஆண்டு மார்ச்சு திங்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. சி. மாணிக்கம் ; தமிழ் நாட்டில் பெரிய நகரங்களாக இருக்கும் நகரங்களில் ஒன்றாக இருக்கும் திருச்சி நகரில் செயல்பட்டு வரும் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக மத்திய அரசு மாநில அரசுக்கு ஏதேனும் மானியம் கொடுத்துள்ளதா ? எவ்வளவு தொகை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கேள்வி திருச்சி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் எந்நிலையிலுள்ளது என்பது. எந்நிலையிலுள்ளது என்பதை விளக்கிவிட்டேன்.

திரு. கூ. சு. முருகேசன் ; இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது? இந்தத் திட்டத்தினால் திருச்சியிலுள்ள குழாய்கள் எல்லாம் பறிக்கப்பட்டு தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் சீக்கிரம் முடிக்க முடியுமா ? பொன்மலை நகராட்சிக்கும், ஸ்ரீரங்கம் நகராட்சிக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : திருச்சி வடிகால் திட்டத்திற்கு அரசு 1970 ஆம் ஆண்டு ஒப்புதல் அளித்தது. அப்போது திட்டத்தின் மதிப்பீடு 285·06 லட்சம் ரூபாய். அனுமதிக்கப்பட்ட தொகை 396·35 லட்சம் ரூபாயாக உயர்ந்தப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் பெரும்பான்மையான பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. இறுதியாக எல்லா வேலைகளும் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிந்துவிடும்

தொழிற்சாலைகளில் காண்டிராக்ட் முறை சட்டத்தினை அமுல் நடத்தல்

*826 வினா— திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர்நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காண்டிராக்ட் முறையை கட்டுப்படுத்தி ஒழிக்கும் சட்டத்தை தொழிற்சாலைகளில் அமுல் நடத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் யானவ ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல், நீகுதல்) சட்டத்தின்கீழ் பதிவுச் சான்று, உரிமம் வழங்க ஆய்வு செய்ய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அடிக்கடி ஆய்வுகள் செய்யப்படுகின்றன. சில தொழில்களில் ஒப்பந்தத் தொழில் முறையை நீக்குதல் சம்பந்தமாக மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவும் பரிசீலனை செய்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த காண்ட்ராக்ட் முறையில் அமர்த்தப்படுகின்ற தொழிலாளர்களுக்கு, மற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகள் எதுவும் கிடைப்பதில்லை. ஒரே தொழிற்சாலையில் வேலை செய்கின்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் உட்பட— ஒரேமாதிரியான சலுகைகளும் உரிமைகளும் வழங்கப்படுமா ? அதோடு சப் கான்ட்ராக்ட் முறையில் பல்வேறு தொழிலாளர்கள் இருக்கிறார்கள் ; அதை ரத்து செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, கான்ட்ராக்ட் முறையை ஒழுங்குபடுத்தி அமுல்படுத்த அரசு முன் வருமா என்ற முறையில் கேட்கிறார்கள். Contract Labour (Regulation and Abolition) Act, 1970 கான்ட்ராக்ட் முறையை ஒழுங்குபடுத்தி, இறுதியில் ஒழித்து விடுவது என்பது இந்தச் சட்டத்தின் நோக்கம். நீங்கள் கேள்வியை அந்தமுறையில் கேட்கவில்லை.

திரு. சோ. அழகர்சாமி ; தலைவரவர்களே, இப்போது பல தொழிற்சாலைகளில் பல வேலைகளைச் செய்ய தனித்தனி கான்ட்ராக்ட்விடுகிறார்கள். அந்தக் கான்ட்ராக்டின்படி வேலை செய்கின்ற நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு சரியாகச்சம்பளம் கிடைப்பதில்லை. தொழில்துறைச் சட்டத்தின்கீழும் இவர்கள் வருவதில்லை. ஆனால் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் செய்கின்ற வேலைகளைத்

தான் இவர்கள் செய்கிறார்கள். அப்படியிருந்தும் அந்தத் தொழிலாளர்களுக்குள்ள சலுகைகள், உரிமைகள் எதுவும் கான்ட்ராக்ட் தொழிலாளர்களுக்குக் கிடையாது. ஆகவே, இந்த கான்ட்ராக்ட் முறையை ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 'கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் அண்டு அபாலிஷன் ஆக்ட் 1970' அதில் இருக்கிற விதிமுறைகளைக்கொண்டு இந்த அரசு எந்த அளவுக்கு முறையாகச் செயல்படுத்த முடியும் என்பதைக் கண்டறிய எஞ்சினீயரிங், காகிதம் மற்றும் சிமின்ட் தொழிற்சாலைகளில் நிலைமைகளைக் கண்டறிய இரண்டு துணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன: எஞ்சினீயரிங் தொழில்கள் துணைக்குழு சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், காகிதம் மற்றும் சிமிண்ட் தொழில்கள் துணைக்குழு சேலம், கோவை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வெலி மாவட்டங்களிலும் நேரில் கண்டறியும் பணியை மேற்கொண்டுள்ளன. இதோடு 20 தொழிலாளர்களுக்கு மேற்பட்ட என்று இருப்பதை 10 பேர்களுக்கு குறைப்பதற்கும் இந்த அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. பாக்டரி ஆக்ட் (2) இல் workers means a person employed directly or through any agency whether for wages or not under any manufacturing process or in cleaning any part of the machinery or prem ses used for manufacturing process or in any other kind of work incidental to or connected with manufacturing process or subject of the manufacturing process என்று இருக்கிற காரணத்தால் அந்த வகையில் வரக்கூடிய தொழிலாளர்களை கான்ட்ராக்ட் தொழிலாளர்களாக வைத்திருந்தால் அப்படி வைத்திருக்கக் கூடாது. பெர்மனன்ட் ஒர்க்கர்ஸ்-நிலைத் தொழிலாளர்களாக வைக்க வேண்டுமென்றும் சட்டம் இயற்ற இந்த அரசு தீவிர பரிசீலனை செய்து வருகிறது.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, கான்ட்ராக்ட் முறையைக் கட்டுப்படுத்தி, ஒழிக்க இந்தச் சட்டத்தை அரசு கொண்டுவந்திருப்பதற்கு நன்றி. அதேநேரத்தில் அந்தத் தொழிலை தொழிலாளர்களே கூட்டுறவு முறையில் ஏற்று நடத்த விரும்பினால் அதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா? அமைச்சரவர்கள் அறிவித்ததைத் தவிர வேறு எந்தெந்தத் தொழில்களில் கான்ட்ராக்ட் முறையை ஒழிக்க அரசு திட்டமிட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இந்தச் சட்டத்தினுடைய நோக்கமே கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் முறையை முதலில் சீர்படுத்தி, பின் அந்த முறையை இல்லாமல் செய்துவிடுவது. அந்த வகையில் இப்போது எஞ்சினீயரிங், சிமின்ட் மற்றும் காகிதம்— இந்தத் தொழில்களில் எப்படி கான்ட்ராக்ட் முறை நடக்கிறது என்பதை பார்த்து அதைச் சீர்படுத்த அல்லது ஒழிப்பதற்கு உரிய ஆலோசனைகளை வழங்க குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது கட்டத்தில் சேலம் மாவட்டத்தில் இரசாயனத் தொழிற்சாலைகளில் ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிப்பதைத் தடை செய்யவும். தமிழ்நாடு முழுவதும் அம்மாதிரியான இரசாயனத் தொழிற்சாலைகளில் இந்த முறையை ஒழிக்க மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் அரிய ஆலோசனைகள் தேவைப்படுகின்றன. ஆக, படிப்படியாக கான்ட்ராக்ட் முறையை ஒழுங்குபடுத்தி, அதை ஒழிக்கும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும், சட்டத்தில் கூறியிருப்பதற்கு ஏற்ப.

(முற்பகல் 9.40)

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகின்றபொழுது குழு அமைப்பதாகக் கூறினார்கள். அந்தக் குழுவில் யார் அங்கத்தினர்களாக இருப்பார்கள்? அதில் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பார்களா? அடுத்து இந்த கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் அன்ட் அபாலிஷன் சட்டத்தின் அடிப்படையில், பிரின்ஸ்பல் எம்ப்ளாயர் தனது தொழிலாளர்களுக்குக் கொடுப்பது போன்ற ஊதியம் கான்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழு அவசர காலத்தில் நியமிக்கப்பட்டது. அதில் நான்கு தொழிற்சங்கங்கள் இடம் பெற்றிருக்கின்றன. கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் செக்ஷன் 2 (2) (சி) என்பதில் கான்ட்ராக்டர் என்ற டெஃபனிஷனை மாற்றியமைத்தால்தான் மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னதற்கிணங்க மாற்றியமைக்க இயலும். இது குறித்து மத்திய அரசுக்கு எழுதி ஆவன செய்வதற்கு இந்த அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து ஏற்ற நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. ஆ. நடராசன் : தலைவரவர்களே, இந்த கான்ட்ராக்ட் முறையை ஒழுங்கு படுத்துவதற்கு சட்டத்தின் மூலம் இப்போது எத்தனை ஆலைகள் தடைப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போலவே எந்தெந்த ஆலைகளில் இதனை அமல்படுத்துவதற்கான விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட்டால் புள்ளிவிவரங்கள் சேகரித்துத் தருகிறேன்.

[1978 ஏப்ரல் 6

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவரவர்களே, இந்தச் சட்டத்திற்கு பெயரை கான்ட்ராக்ட் ரெகுலேஷன் அன்ட் அபாலிஷன் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். முதலில் ரெகுலேட் பண்ணிய பிறகு அபாலிஷன் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால் அந்தச் சட்டம் வந்த பிறகு பல தொழிற்சாலைகளில் குறிப்பாக உற்பத்தித் துறையில் மேனுபேக்சரிங் ப்ராசஸ் பிரிவிலும் அறிமுகப்படுத்தி இருக்கிறார்களே அது அரசுக்குத் தெரியுமா? குறிப்பாக நெல்லிக்குப்பம் தொழிற்சாலையில் மேனுபாக்சரிங் ப்ராசஸிலும் கான்ட்ராக்ட் முறை இருக்கின்றது. அதனை மாற்றுவதற்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரிகள் ஆங்காங்கே சென்று பரிசோதனை செய்து ஆவன செய்கிறார்கள். நெல்லிக்குப்பம் தொழிற்சாலையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் தகவல் சொல்லவில்லை. அவர் அதுபற்றி புகார் சொல்லவில்லை. மாறாக உறுப்பினர் ரமணி அவர்கள் சங்கரி சிமெண்ட் ஆலையில் இப்படி நடைபெற்று வருவது பற்றிச் சொன்னார்கள். அதற்காக டெபுடி சீஃப் ஃபேக்டரி இன்ஸ்பெக்டர் என்ற அதிகாரியை அங்கு அனுப்பி அவர் அடிக்கடி சர்ப்ரைஸ் செக் செய்து இதுபற்றிய தகவல்களைச் சேகரித்து அதன்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களும் அறிவார்கள், மாண்புமிகு கோவிந்தராசன் அவர்களும் அறிவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேந்தங்குடி பேருந்து விபத்தில் இறந்தவர் குடும்பங்களுக்கு உதவித் தொகை.

*[827 வினா— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 9-7-1977ஆம் நாள் மாயூரம் சேந்தங்குடியில் நடைபெற்ற பேருந்து விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு அரசு ஏதேனும் உதவித்தொகை வழங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை குடும்பங்களுக்கு?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ) 9-7-1977 அன்று சேந்தங்குடியில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் இறந்தவர்கள் நான்கு பேர். அவர்களது குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 1,000/, உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது.

1978 ஏப்ரல் 6]

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த விபத்தினால் இறந்தவர்கள் நான்கு பேர்கள் என்றும் அவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனாலும் அந்த விபத்தில் காயம் அடைந்து கைகளையும், கால்களையும் இழந்த பலபேர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; அந்த வண்டியை ஓட்டிச் சென்ற ஓட்டுநர் இன்னும் மருத்துவ மனையில் இருந்து சிகிச்சை முடிவு பெறாமல் வீட்டுக்கு வர முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை போலவே சீர்காழியைச் சேர்ந்த ஒரு மூதாட்டியாருக்கு தலையிலே இந்த விபத்து காரணமாக அடிப்பட்டதால் மூளைக் கோளாறு ஏற்படக்கூடிய அளவிற்கு இன்று அவருடைய குடும்பத்தையே கவனிக்க முடியாத நிலைமைக்கு ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கும் அரசு உதவித்தொகை ஏதேனும் அளிப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அந்த விபத்திலே பாதிக்கப்பட்ட அத்தனை பேர்களுக்கும் சோழன் போக்குவரத்துக் கழகம் இழப்பீட்டுத் தொகை அளித்திருக்கிறது. காயமடைந்தோருக்கும் உதவித்தொகை அளித்திருக்கிறது. சீர்காழியைச் சேர்ந்த திருமதி காளியம்மாள் என்பவருக்கு ரூபாய் 500-ம், திருமதி தேவகி என்பவருக்கு ரூபாய் 300-ம் திரு கலியமூர்த்தி என்பவருக்கும் ரூ. 300-ம், திரு. கிருஷ்ண நாடார் என்பவருக்கு ரூ. 700-ம், திரு. கே. ஆறுமுகம் என்பவருக்கு ரூ. 700-ம், திரு. மருதநாயகம் என்பவருக்கு ரூ. 2,000-ம், திரு. மாரிமுத்து என்பவருக்கு ரூ. 1,250-ம், திருமதி பட்டு ஆச்சி என்பவருக்கு ரூ. 1000,ம் இப்படி காயம் அடைந்த அனைவருக்கும் இழப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: இந்த பேருந்து விபத்தில் இறந்தவர்களுக்கு ஆயிரம் ரூபாய் முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அளிப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது, அறிவிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் இறந்தவர்களுக்கு என்று மட்டும் கொடுக்கப்படுமா? அல்லது முன்னால் நடந்து வழக்குமன்றத்தில் வழக்கு நடந்து நஷ்டயீடு கிடைக்காமல் போயிருக்கிறதே, அப்படிப்பட்டவர்களுக்கும் இந்த உதவி கிடைக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய இழப்பீடு நீதிமன்றத்தின் மூலம் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதற்கு முன்னர், அதற்கும் இதற்கும் தொடர்பில்லாத வகையில் முதல் அமைச்சர் அவர்கள் நிதியலிருந்து தனியாக ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: குறிப்பாக இந்த விபத்து நடைப்பெற்றதற்குக் காரணம், சீர்காழி-மாயூரம் வருகிற நம்பர் 2, டவுன் பஸ் விபத்துக்கு உள்ளாகக் காரணம் அந்தப் பேருந்துக்குப் போடப்

பட்டுருந்த முன்பக்க இரண்டு சக்கரங்களுக்கும் ரீட்ரெட் செய்யப்பட்ட டயர்கள் பொருத்தப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே அத்தகைய முறையை மாற்றி ரீட்ரெட் செய்யப்பட்ட டயர்களை இனிமேல் அத்தகைய பேருந்துகளுக்குப் பொருத்தாமல் இருக்க, இத்தகைய விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு, அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ரீட்ரெட் செய்யப்பட்ட டயர்கள் முன் சக்கரத்தில் முதன்முறையாக முன்பக்கத்தில் போடுவது வழக்கமாக இருந்துவருகிறது. ஆனால் இந்த விபத்துக்குப் பிறகு அதுபற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

அண்ணாசாலை தபால் நிலையம் எதிரில் உள்ள சுரங்கப்பாதை

*828 வினா-திரு. எஸ்.ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணாசாலையில் தபால் நிலையத்திற்கு எதிரில் போடப்பட்ட சுரங்கப்பாதை வேலைக்கு போடப்பட்ட மதிப்பீடு: செய்யப்பட்ட செலவு முறையே எவ்வளவு?

(ஆ) இப்பாதை திறப்பு விழாப்பணி யார் தலைமையில் செய்யப்பட்டது?

(இ) இதில் அறிவிக்கப்பட்டவாறு செய்யப்படவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மேற்படி வேலையின் மதிப்பீட்டுத்தொகை ரூ. 12.60 இலட்சம். இவ்வேலைக்கு 31-1-78 வரை ரூ. 12.27 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேற்படி பணிக்கான திறப்பு விழா ஏதும் நடைபெறவில்லை.

(இ) விழா ஏதும் நடைபெறாததால் இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: இந்தச் சுரங்கப்பாதை திறப்பு விழாவை செய்ய மாண்புமிகு அமைச்சர் திரு. பா. ராமச்சந்திரன் அவர்களை அழைத்திருந்தார்கள். அது விடுபட்டுப் போய்விட்டதா? அப்படியானால் என்ன காரணத்தால் அது விடுபட்டது? அவர்கள் சம்மதிக்கவில்லையா? இல்லாவிட்டால் அப்போதுள்ளவர்கள் அவர்களை அனுப்ப சம்மதிக்கவில்லையா? அதைப்பற்றிச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்தச் சுரங்கப் பாதையைத் திறக்க மத்திய அமைச்சரை அழைத்தது பற்றிய குறிப்பு எதுவும் இப்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா: இத்தகைய சுரங்கப்பாதைகள் சென்னை நகரில் தற்போது எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன? இனிமேல் எந்தெந்த இடங்களில் அமைப்பதற்கான ஆய்வை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சென்னை நகரில் பதினோரு இடங்களில் சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1. கிண்டி அருகிலுள்ள ரயில்வே மேம்பால மேம்பாட்டு வேலைகள். 2. திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் உள்ள பாலத்தை புதுப்பித்தல். 3. அண்ணா சாலையில் ஆயிரம் விளக்குப் பகுதியில் ஒரு பாதசாரி சுரங்கப்பாதை அமைத்தல். 4. பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கு அருகே ஒரு பாதசாரி சுரங்கப்பாதை அமைத்தல். 5 ஜி. என். டி. சாலையில் இரயில்வே அலுவலகம் அருகே ஒரு பாதசாரி சுரங்கப்பாதை அமைத்தல். 6. பூந்தமல்லி நெடுஞ்சாலையில் தாஸப்பிரகாஷ் அருகே பாதசாரிகளுக்கான ஒரு சுரங்கப்பாதை அமைத்தல், 7. ஜி. என். டி. சாலையில், வால்டாக்ஸ் திரையரங்கருகே ஒரு பாதசாரி களுக்கான சுரங்கப்பாதை அமைத்தல் 8. சாந்தி திரையரங் கருகில் ஒரு பாதசாரிகளுக்கான சுரங்கப் பாதை அமைத்தல் 9. அண்ணா சாலையில் எல். ஐ. சி. நிறுவனத்திற்கருகே ஒரு பாதசாரி களுக்கான சுரங்கப் பாதை அமைத்தல் 10. ஜி. என். டி. சாலையையும் திருவொற்றியூர்—பொன்னேரி-பஞ்செட்டி சாலையையும் இணைக்க இருக்கும் இணைப்பு சாலைக்காக நிலம் கையகப்படுத்துதல். 11. ஜி. எஸ். டி. சாலையையும், வேளச்சேரி சாலையையும் தேசிய நெடுஞ்சாலையுடன் கிழக்கில் இணைக்கும் ஒரு தனிப்பாதை அமைக்க நிலம் கையகப்படுத்துதல்.

கோமுகி ஆற்றின் குறுக்கே பாலம்.

[*829 வினா— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள கண்டாச்சிமங்கலம், வரஞ்சரம் சாலையை இணைக்கும் வகையில் கோமுகி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

[1978 ஏப்ரல் 6

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : கண்டாச்சிமங்கலம்—வரஞ்சரம்சாலையை இணைக்கும் வகையில் கோமுகி ஆற்றின் குறுக்கேபாலம்ஒன்று கட்டவேண்டும் என்று நீண்டநாட்களாக ஒரு கோரிக்கையை எழுப்பிக்கொண்டிருக்கிறோம். அது பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்பட்டது. சட்டசபையில் இது பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தபோது ரூ. 5 லட்சத்துக்கு மதிப்பீடு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்சமயம் இல்லை என்று இப்போது கூறுகிறார்கள். வரஞ்சரம் கிராமத்தில் அறுபது ஆண்டுகளுக்கு முன்பே ஒரு காவல் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அது மழைக்காலத்தில் தொடர்பற்றுப் போவதால் இந்தப் பாலத்தைக் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு பாலம் அமைக்கின்ற திட்டத்தை கைவிட்டுவிட்டதாக சொல்லவில்லை. ஒரு தாம்போகி ஒன்று ஐந்து லட்சம் ரூபாய் செலவில் கட்டவேண்டும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆனால் நிதிநிலை சரியாக இல்லாததால் இந்த ஆண்டு இந்த வேலை மேற்கொள்ளப்படவில்லை. வரும் ஆண்டில் இதை மேற்கொள்வதற்கு ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தையும் தஞ்சை மாவட்டத்தையும் இணைக்கும் வகையில் மணல்மேட்டிற்கும், முட்டம் கிராமத்திற்கும் இடையில் கொள்ளிடத்தில் ஒரு தரைப்பாலம் அமைக்கும் திட்டம் இந்த அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு தனிக் கேள்வி போடவும்.

திரு. வ. துலுக்காணம்: தலைவர் அவர்களே, கண்டச்சிமங்கலத்திலிருந்து வரஞ்சரம் சாலையில், பெருமைதரக்கூடிய விதத்தில், சத்தியவாணிமுத்து அவர்கள் ஆலயப்பிரவேசம் செய்த கோயில் இருக்கிறது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பே அமைக்கப்பட்ட போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. இந்த போலீஸ் ஸ்டேஷனிலிருந்து மறுபக்கம் போகவேண்டுமென்றால், ஆற்றைக்கடந்துதான் போக வேண்டியிருக்கிறது, ஆகவே இங்கே ஒரு பாலம் மிக அவசியமாக இருக்கிறது. மழை காலங்களில் இந்தப் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் ஆகவே இந்த அவசியங்களை எல்லாம் பார்த்து அரசு அவசரமாக இங்கே ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

1978 ஏப்ரல் 6]

வந்தவாசி வட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்

[830 *வினா— திரு. ப. சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கி இருக்கும் வந்தவாசி வட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் அமுல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை.

திரு. ப. சந்திரன் : இந்த சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டத்தில் என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதை கேட்டுக்கொள்வதோடு, அந்த விவசாயிகளுக்கு சிறு விவசாயிகள் என்று ஒரு அடையாளக் கார்டு கொடுத்து, இவர்களுக்கு எல்லாம் இருக்கின்ற விவசாயக் கடன்களை எல்லாம் ரத்து செய்யவேண்டும் என்பதோடு, மேலும் கடன்கள் வழங்குவதற்கு சர்டிபிகேட் முதலானவை கேட்கப்படாமல் இவர்கள் அடையாளக் கார்டு காட்டினாலோ அதன் மீது கடன்களை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சிறு விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் என்பது மத்திய அரசாங்கத்தின் திட்டம். இந்த திட்டத்தின் கீழ் 12 மாவட்டங்களில் தமிழ்நாடு முழுவதிற்குள்ள சிறு விவசாயிகளுக்கு சலுகைகள் என்ற முறையில், அவர்களுக்கு 25 விழுக்காடு மான்யமாகவும், விவசாயத் தொழிலாளர்கள், மற்றும், உழவர்களுக்கு 33 1/3% மான்யத்தில் விவசாயிகளுக்கு வேறு ஏதாவது உபதொழில்கள் செய்வதற்கும் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு அடையாள கார்டு கொடுக்கப்படுவதில்லை. ஆங்காங்கு இருக்கின்ற கிராம அதிகாரிகள் மூலமாகவும், சிறு விவசாயிகள் என்று தெரிந்தால் அவர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்கள் என்று தெரிந்தால் அவர்களுக்கும், இந்தத் திட்டத்தின் மூலம் அரசு கடன் போன்ற சலுகைகளைக் கொடுத்து, எல்லோருக்கும் இந்த உதவிகளை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் இந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது? இந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஆதி திராவிட மக்கள் மேம்பாடு அடைகின்ற வழியில் பால்பண்ணை போன்றவைகள் அமைக்க கறவை மாடுகள் வாங்க என்ன ஆயத்தம் செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 ஏப்ரல் 6

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 13 இடங்களில் சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டத்தின் மூலம் சிறு விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் கடன் வழங்குகின்ற திட்டங்களை வைத்திருக்கிறார்கள். அந்த 13 இடங்கள்.. செங்கம், புதுப்பாளையம், தண்டராம்பட்டு, போளூர், கலசப்பாக்கம், சேத்துப்பட்டு, திருவண்ணாமலை, துரிஞ்சாபுரம், கண்ணமங்கலம், திருப்பத்தூர், கந்திலி, நாட்ராம்பள்ளி, ஆலங்காயம். இந்த 13 இடங்களிலும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக அரிஜன வேளாண்மைத் தொழிலாளர்களாக இருந்தால் அவர்கள் 33–1/3% என்ற மான்ய அடிப்படையில் விவசாய உப தொழில் ஏற்படுத்துகின்ற வகையில், கறவை மாடுகள் வாங்கி பால் பண்ணைகள் அமைத்துக்கொள்ள கடன் வழங்கவும், இந்த அமைப்பு ஏற்பாடு செய்வதற்கு வழிவகை செய்து, விவசாயிகளிடையே அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு மலர்ச்சி ஏற்படவும், ஒரு புரட்சி ஏற்படவும் ஏற்பாடுகள் செய்து அமல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. பொ. காளியப்பன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமான ராமநாதபுரம் மாவட்டத்தில் அமலில் உள்ளதா? இல்லையென்றால் இதற்கு மாற்றுத்திட்டம் உள்ளதா ?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டம் தமிழகத்தில் இரண்டு மாவட்டங்களைத் தவிர—அதாவது தர்மபுரி, ராமநாதபுரம் இந்த இரண்டு மாவட்டங்களிலும், டி-பி-ஏ-பி என்ற வகையில் அதாவது 'ட்ரவுட் ப்ரௌன்ட் ஏரியா ப்ரோகிராம்' என்பதன் அடிப்படையில் ஒவ்வொரு பகுதிக்கும் ஆறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ராமநாதபுரம் மாவட்டத்திற்கு 6 கோடி ரூபாய் திட்டத்தின் மூலமாக, ஏழை விவசாயிகளுக்கு, குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு பல உதவிகளை செய்து வருகின்றது என்பதை தெரித்துக்கொள்கிறேன்.

<u>திரு. மா. மணிமாறன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் எங்கள் பகுதியிலே விஸ்தரிக்கப்படாத காரணத்தால், அமைச்சர் அவர்கள் இதனை ஆலோசித்து, எங்கள் பகுதிக்கும் இத்திட்டத்தை விஸ்தரிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன் ?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்வைவேலு</u> : பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கவனத்திலே இருக்கிறது.

1978 ஏப்ரல் 6]

<u>திரு. தி. அன்பழகன்</u> : தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் அலுவலகம் திருப்பத்தூரிலே அமுல்படுத்துவதுபற்றி பரிசீலனையில் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் 13 இடங்களைப் பற்றிச் சொல்லிவிட்டேன். அதிலே திருப்பத்தூரும் ஒன்று.

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுந் திட்டம் எந்த அடிப்படையில் அமுலாக்கப்படுகின்றது ? தஞ்சை மாவட்டத்தில் இதை அமுலாக்குவதற்கு இந்த அரசு எந்த அளவிற்கு செலவழித்திருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்னதவேலு</u> : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் இந்திய அரசால் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்ட முகவர் அமைப்புகளை தேசீயக் கொள்கையாகக் கொண்டு, அந்த அரசாங்கம் அமுல்படுத்தி வருகின்றது. தஞ்சை மாவட்டத்திலும் இந்தத் திட்டம் அமுலில் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் இத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு, அதன் மூலம் சிறு விவசாயிகளுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u> : தலைவர் அவர்களே, இந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் வட ஆற்காடு மாவட்டத்திலே 13 இடங்களில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது? இந்தத் திட்டத்தை மாவட்டம் பூராவிலும் அமுலாக்குவதற்கு என்ன தடங்கல் இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்? அதே நேரத்தில், இந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திலே சம்பந்தப்பட்டவர்கள், ரெகுலர் புரோசிஜர் ஒன்றுமில்லாமல் கார்டுகள் அதாவது அடையாளச் சீட்டுகள் மூலம் அவர்களுக்குக் கிடைப்பதற்கான வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக இந்திய அரசின் ஆணைப்படி ஐந்தாவது திட்ட முடிவிற்குள் அதாவது 1978-79 ஆண்டு திட்டக்கால இறுதிக்குள் ஒவ்வொரு மாவட்டத்திலும் 30,000 சிறு விவசாயிகள் பயன்பெற வேண்டுமென்ற அடிப்படையில்தான், இந்தத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே ஏற்கனவே செயற்படுத்தப்படும் பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் உள்ளதால், இந்த மாவட்டத்திலே மீண்டும் அதிகமான இடங்களுக்கு விஸ்தரிக்கின்ற நோக்கம் இந்த அரசுக்கு தற்போது இல்லை.

திரு. சி. ராமநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் இரண்டு மாவட்டங்களைத் தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் இந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் இருப்பதாகக் கூறினார்கள். ஆனால், இருக்கும் மாவட்டங்களிலேயும் ஒன்றியங்கள் விடப்பட்டு, ஆங்காங்கே சிறு விவசாயிகளுக்கு வாய்ப்பில்லாமல் இருக்கின்றது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட ஒன்றியங்களிலும் இந்த அரசு சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒன்றியங்கள் விடப்பட்டதாக இந்த அரசுக்குத் தகவல் இல்லை. மேலும் குறிப்பாக, ராமநாதன் அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். தென் ஆற்காடு மாவட்டத்திலே, இந்தத் திட்டத்தின் மூலமாக சிறு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி செய்து, பயனடைந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம்: சபாநாயகர் அவர்களே, இந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையிலே, திருச்சி ஜில்லாவிலே, மிகவும் வறண்ட பகுதியாக இருக்கக் கூடிய அறவக்குறிச்சி, பரமஹத்தி போன்ற பகுதிகள் சேர்க்கப் படவில்லை. அதற்குப் பதில், வளம் நிறைந்த நஞ்சைப் பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதை மனதிலே கொண்டு, வருகின்ற ஆண்டிலே, இந்த அறவக்குறிச்சி, பரமஹத்தி போன்ற பகுதிகளையும் சேர்ப்பதற்கு முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசிடம் இந்தக் குறிப்பு இல்லை. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே இது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்.

பேருந்து வழித்தடங்கள்.

396 வினா— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டிற்குப் பிறகு புதிதாக எத்தனை வழித்தடங்களில் பேருந்துகள் விடப்பட்டன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—விவர அறிக்கை* ஒன்று அவை முன் வைக்கப்படுகிறது.

540—ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்து.

ஆசிரியர்களது வீட்டு வாடகைப்படி.

397 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி அளிக்கப்படுகின்றதா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

விடை— (அ) & (ஆ) ஒரு விவர அறிக்கை** பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அரிசன வீட்டு வசதித் திட்டம்.

*398 வினா— திரு. ரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரிசனங்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இந்த ஆண்டு அமுல்படுத்தப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டப்பட உள்ளன?

(இ) தஞ்சை மாவட்டத்திற்கு எத்தனை வீடுகள் ஒதுக்க பட்டுள்ளன?

விடை— (அ) தமிழ்நாட்டில் அரிசனங்களுக்கு இலவசமாக வீடு கட்டும் திட்டம் இந்த ஆண்டு அமுல்படுத்தப்படுகிறது.

(ஆ) 5,000 வீடுகள் கட்டப்படும்.

(இ) தஞ்சை மாவட்டத்திற்கு 500 வீடுகள் ஒதுக்கப் பட்டுள்ளன.

மேலமாத்தூர்—கீழமாத்தூர் இணைப்புப் பாலம்.

399 வினா— திரு. கே. சுப்பிரவேலு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சீர்காழி தொகுதியில் மேலமாத்தூர், கீழமாத்தூர் என்ற ஊருக்கு இடையில் ஓடும் வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—ஆம்.

** 138-ம் பக்கத்தில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

தாய், சேய் நல நிலையங்கள்.

400 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் மாவட்டவாரியாக எத்தனை தாய், சேய் நல நிலையங்களும், மகப்பேறு இல்லங்களும் உள்ளன?

(ஆ) இவைகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்கம் உண்டா?

விடை— (அ) & (ஆ) ; இதுபற்றிய விவர அறிக்கை* ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

பட்டினப்பாக்கம் குடியிருப்பு.

401 வினு—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கீழ் உள்ள பட்டினப்பாக்கம் குடியிருப்பில் ஒவ்வொரு வீட்டுக்கும் என்ன மாதவாடகை வசூலிக்கப்படுகிறது?

(ஆ) குடியிருப்பில் இருப்பவர்களிடம் பலவிதமாக வேறுபட்ட முறையில் வாடகை வசூலிக்கப்படுகிறதா அல்லது சம்பள அடிப்படையில் வசூலிக்கப்படுகிறதா?

விடை — (அ) & (ஆ) விவர அறிக்கை** ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

கோரையாற்றின் கரையோரச்சாலை.

402 வினு — திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தாலுக்காவை சேர்ந்த ஆதிச்சபுரம் ஆர்ச்சிலிருந்து தெற்கே செல்லும் கோரையாற்றுக் கரைச்சாலையை விரிவாக்கும் திட்டம் உள்ளதா ?

விடை — இல்லை.

---

* 544-ம் பக்கத்தில் இணைப்பு IV-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[545ம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மாவட்ட நீதிபதிகள்

403வினு— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

மாவட்ட நீதிபதிகளாக எத்தனை தாழ்த்தப்பட்டவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் ?

விடை— தற்பொழுது பணிபுரியும் மாவட்ட நீதிபதிகளுள் திரு. ஜி. மஹேஸ்வரன் அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராவர்.

விவசாயக் கடன் நிலுவை.

404 வினு— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில், விவசாயிகளுக்கு டிராக்டர், பம்புசெட், ஆயில் இன்ஜின், தென்னை வளர்ப்பு, வாழை முதலிய இனங்களின் கீழ் கொடுக்கப்பட்ட கடன்களில் 30-6-1977-ல் முடிந்த பசலி வரை வசூலாகாமல் இருக்கும் தொகை எவ்வளவு, மாவட்ட வாரியாக?

(ஆ) இவைகளை வஜா செய்யவோ அல்லது குறைக்கவோ அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

விடை— (அ) & (ஆ) பேரவைமுன் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

405*வினு —திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கொடைக்கானல் மலைப்பகுதியிலும், பெரிய குளத்திற்கு சமீபத்திலுள்ள 'அடுக்கம்' என்ற கிராமத்திற்கும் சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்புகள் ஏதேனும் உள்ளனவா?

விடை — இல்லை.

---

*[546ம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1978 ஏப்ரல் 6

தென் ஆற்காடு மாவட்டத்தில் அரிசனங்களுக்கு கறவை மாடுகள்.

406 வினா—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தில், 1-7-77 முதல் இன்று வரை அரிசனங்களுக்கு கறவை மாடு, மான்யத்துடன் கொடுக்கப் பட்டது எத்தனை?

(ஆ) சிதம்பரம் வட்டத்தில் எத்தனை?

விடை—(அ) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வங்கிகளின் உதவியுடன் கறவை மாடுகள் வாங்க அரிசனங் களுக்கு மானியம் அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 17. அரிசன நலத்துறை அளிக்கும் மானியத் திட்டம் தற்போது திருத்தம் பெற்றுள்ளது. அதன்கீழ் வங்கிகளின் உதவியுடன் அரசு மானிய உதவி பெறுவதற்கு தென்னாற்காடு மாவட்டத்தில் 300 விண்ணப்பங்கள் வரப்பெற்று கடலூர் துணைப் பதிவாளர் (பால்பதம்) அவர்களின் ஆய்விலுள்ளது. விரைவில் மானிய உதவி அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) சிதம்பரம் வட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படாத காரணத்தால் அத்திட்டத்தின் கீழ் வங்கி களின் உதவியுடன் கறவை மாடு வாங்க மானியம் அளிக்கப்பட வில்லை. அரிசன நலத்துறையால் வங்கிகளின் உதவியுடன் மானிய உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் உதவிபெற 225 விண்ணப்பங்கள் சிதம்பரம் வட்டத்திலிருந்து பெறப்பட்டு அவைகளின் மீது அரிசனங்களுக்கு மானிய உதவி தருவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திருமேனி ஏரிக்கரைகள்.

407 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தாலூக்கா, திருமேனி ஏரியின் கரைகளை உயர்த்திக் கட்டி திருமக்கோட்டை, மகராஜ புரம், பாளையங்கோட்டை பகுதிகளுக்கு பாசன வசதி செய்து தர அரசு திட்டமிட்டுள்ளதா?

விடை—இல்லை.

1978 ஏப்ரல் 6]

மன்னார்குடி கலைக் கல்லூரி.

408 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:—

(அ) மன்னார்குடி ஸ்ரீ இராசகோபாலசாமி கலைக்கல்லூரியை விஸ்தரிக்கவும் மாணவர் விடுதி கட்டவும் அரசிடம் திட்டம் இருக்கின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—(அ) இல்லை. (ஆ) எழவில்லை.

வடவாறு விரிவாக்கக் கால்வாய்.

409 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வடவாறு விரிவாக்கக் கால்வாய் மூலம் பாசனம் பெறும் நிலத்தின் பரப்பளவு எத்தனை ஏக்கர்?

(ஆ) வடவாறு விரிவாக்கக் கால்வாயை நவீனமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—(அ) 28,127 ஏக்கர்

(ஆ) இந்தக் கால்வாயை நவீனமாக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

முனஞ்சிப்பட்டி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி.

410 வினா—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி வட்டம், முனஞ்சிப் பட்டியிலுள்ள அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி இடமாற்றம் குறித்து அரசு பரிசீலனையில் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

விடை—இல்லை.

கொசுத் தடுப்புத் திட்டம்.

411 வினா— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொசுக்கள் பெருகுவதை தடுக்க பெண் கொசுக்களை மலடுகளாக்கும் திட்டம் உருவாகி இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—(அ) இல்லை. (ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

ஒகேனக்கல் வன விலங்கு சரணாலயம்.

412 வினா— திரு. கா. அப்புனு கவுண்டர் : மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒகேனக்கல்லில் வன விலங்கு சரணாலயம் ஒன்று அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை— ஆம். ஒகேனக்கல்லில் வன விலங்கு சரணாலயம் அமைப்பதென கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டு விளக்கமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனைக்கு அனுப்பும்படி வனத் துறைத் தலைவர் கோரப்பட்டுள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில் பேருந்து விபத்து.

413. வினா— திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறைஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 28-11-77 அன்று நடந்த விபத்தில் சோழன் போக்குவரத்துத்துக் கழக பேருந்துகள் மோதிக் கொண்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்த விபத்தில் மரணமடைந்தோர் எத்தனை பேர்?

(இ) நிவாரணம் அளிக்கப்பட்டது எவ்வளவு?

விடை— (அ) ஆம்.

(ஆ) விபத்து நடந்த தினத்தில் 4 பேர் மரணமடைந்தனர் 5வது நபர் 21-12-77 அன்று இறந்தார்.

(இ) விபத்தில் உடனே மரணமடைந்த 4 பேர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1,000 வீதம் அளிக்கப்பட்டது. ஈட்டுத் தொகையாக ரூ. 5,000 மரணமடைந்த ஐவரின் குடும்பத்தினருக்கு அவர்கள் நீதிமன்றத்தில் நஷ்டஈடு கோருவதற்கு பாதகமன்னியில் சோழன் போக்குவரத்துக் கழகத்தரால் கொடுக்கப்பட்டுள்ளது.

விதவைகள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் உதவி கோரியவர்கள்.

414. வினா— திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சமூக நலத்துறைஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதவைகள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் உதவி கோரி பழனி தாலூகாவிலிருந்து ஏதேனும் விண்ணப்பங்கள் வந்ததா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை— (அ) ஆம். (ஆ) விபரங்கள் அடங்கிய இணைப்பு வைக்கப்பட்டுள்ளது.

வட்டங்கள் அமைப்பு.

415. வினா— திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், தற்போதுள்ள குன்னூர் வட்டத்தை கோத்தகிரி வட்டம், குன்னூர் வட்டம் என்று இரு வருவாய் வட்டங்களாக அமைக்க உத்தேசம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறை படுத்தப்படும்?

விடை—(அ) ஆம்.

(ஆ) 1978—1979 ம் வருடத் துவக்கத்தில்.

416. வினா— திரு. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்துகீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி சப்தாலூகாவை தனி தாலூகாவாக அமைக்கும், செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—இல்லை

---

* 547-ம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சடிக்கப் பெற்றுள்ளது.

417 வினா திரு. கா. அப்புனு கவுண்டர்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பார—

தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம் சப்தாலூகாவை தனித் தாலூகாவாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—இல்லை.

தும்மலஅல்லி அணை:

வினா 418 திரு. பி. எம். கிருஷ்ணன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் தும்மல அல்லி அணைகட்ட சர்வே முதலிய எல்லா வேலைகளும் முடிந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட உள்ளதா?

விடை—(அ) ஆம்,

(ஆ) இத் திட்டத்தை நடப்பாண்டில் எடுத்துக்கொள்வது பற்றி அரசு பரிசீலனையில் உள்ளது.

மதுரை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு உழவு மாடுகள் வழங்கல்

419 வினா—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டத்தில் உழவுமாடுகள் வாங்குவதற்காக ஏழை அரிசனங்களுக்கு 1977-78 ஆம் ஆண்டுகளில் மானியமாகப் பணம் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மதுரை மாவட்டத்தில் உழவு மாடுகள் வாங்குவதற்காக ஏழை அரிசனங்களுக்கு 1977-78 ஆம் ஆண்டுகளில் மானியமாக ரூ. 7,800 வழங்கப்பட்டது.

(ஆ) இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொருவருக்கும் ரூ. 600 மானியமாக அளிக்கப்படுகிறது, உழவு மாடுகளுக்கென ரூ. 525-ம் உழவுக்கருவிகள், விதைகள் வாங்குவதற்கு ரூ. 75-ம் இதிலடங்கும். ஒவ்வொரு ஆண்டும் மூன்று வட்டங்களில் மட்டுமே இம்மானியம்

வழங்கப்படுகிறது. 1977-78 ல் திண்டுக்கல், வேடசந்தூர் மற்றும் கொடைக்கானல் வட்டங்களில் வசிக்கும் 13 அரிசனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 13 இணை உழவுமாடுகள் 31-3-78-க்கு முன் வழங்கப்படும்.

பழனியிலுள்ள அனாதை இல்லம்

420 வினா— திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தண்டாயுதபாணி தேவஸ்தான நிர்வாகத்தில் இயங்கிவரும் அனாதை இல்லத்திற்கு அரசு உதவி உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை— (அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலய நிர்வாகத்தில் இயங்கிவரும் அனாதை இல்லத்திற்கு அரசு உதவி ஏதும் அளிக்கப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

பம்புசெட்டுகளுக்கான மின் கட்டணம்

421 வினா திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்சார இலாகா மூலம் பம்புசெட்டுக்கு ஒரு குதிரை சக்திக்கு மாதம் ரூ. 1.25 வீதம் விதிக்கப்பட்ட கட்டணத்தின் மூலம் ஒரு வருடத்தில் கிடைக்கும் தொகை எவ்வளவு?

விடை—ருபாய் 4 கோடி.

விக்கிரமசிங்கபுரம் மருத்துவ மனை

422 வினா திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொர்ணம்: மாண்புமிகு தொழிலாளா நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள விக்கிரமசிங்கபுரம் ஆஸ்பத்திரிக்கு படுக்கையுடன் கூடிய கட்டடம் கட்டுவதென்ற அரசின் திட்டம் செயல்படுத்தப்படவில்லை யென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

விடை—(அ) & (ஆ) : விக்கிரமசிங்கபுரத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுவது உட்பட மூன்று திட்டங்களுக்கு 1963 ஆம் ஆண்டு டில்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் ஒப்புதல் அளித்தது. இதற்கான திட்ட மதிப்பீடுகளை இந்த அரசு தயாரித்தது. ஆனால் 1969 ஆம் ஆண்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்திற்கு ஏற்பட்ட நிதி நெருக்கடியினால் இதைப்போன்ற கட்டடம் கட்டும் திட்டங்கள் கைவிடப்பட்டன, விக்கிரமசிங்கபுரத்தில் தற்போது ஒரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் நல்ல முறையில் செயற்பட்டு வருகிறது.

ஆலங்குடியில் அரிசன மாணவர் விடுதி

423 வினா—திரு. த. புஸ்பராஜு: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா-

ஆலங்குடியில் அரிசன மாணவர்களுக்கு விடுதி கட்டுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணம் யாது?

விடை—அரிசன பின்தங்கிய மாணவர்களுக்கு 150 விடுதிகள் கட்டும்திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் அரிசன மாணவர் விடுதி கட்டும் பணி தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தால் எற்கனவே துவக்கப்பட்டு ஜூலை 75-ல் அஸ்திவார மட்டத்தில் முடிக்கப்பெற்றது. நிதிநிலையை முன்னிட்டு இவ்விடுதி கட்டும் பணி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மேற்கொண்டு கட்டட வேலையைத் தொடர நவம்பர் 1977-ல் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. கட்டட வேலை 15-2-78-ல் திரும்பவும் ஆரம்பிக்கப்பெற்று தொடர்ந்து நடந்து வருகிறது.

தென் ஆற்காடு மாவட்டத்தில் ஹையர் செகண்டரி வகுப்புகள்

424 வினா-திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் புதிய கல்வித் திட்டத்தின் படி வருகிற கல்வியாண்டில் எத்தனை இடங்களில் இடைநிலைக் கல்வி (Higher Secondary Education) தொடங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது)

(ஆ) அவைகள் கல்லூரிக் கட்டடங்களில் நடத்தப்படுமா?

விடை—(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் வருகிற கல்வியாண்டில் 35 பள்ளிகளில் ஹையர் செகண்டரி வகுப்புகள் தொடங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது,

(ஆ) ஏற்கனவே இயங்கிவரும் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில், ஹையர் செகண்டரி வகுப்புகளை நடத்த இருப்பதால், கல்லூரிக் கட்டடங்களில் நடத்தப்படுமா என்ற கேள்விக்கு இடமில்லை.

பொன்னேரி நீர்ப்பாசனம்

425 வினா திரு, செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், பொன்னேரி ஏரியை விஸ்தரித்து, நீர்ப்பாசனம் செய்ய தற்போழுது திட்டம் உண்டா?

விடை—இல்லை

திருக்காட்டுப்பள்ளி ஒன்றியத் தொடக்கப் பள்ளி

426 வினா— திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர்வட்டம் திருக்காட்டுப் பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பயில்கின்ற மாணவர்கள் எத்தனை பேர்?

(ஆ) பணியாற்றுகின்ற ஆசிரிய ஆசிரியைகள் எத்தனை பேர்?

விடை—(அ) மாணவர்கள் - 1690

(ஆ) ஆசிரிய ஆசிரியைகள் – 43 பேர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(திரு மு. அம்பிகாபதி எழுந்திருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறைய வேலை இருக்கிறது. இன்னும் இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது எல்லாம் பேச வேண்டியிருக்கிறது. எனவே தயவுசெய்து உட்காருங்கள்.

(முற்பகல் 10.00)

2. தகவல் கோரல்

அறிவிக்கை கொடுத்திருந்த தீர்மானங்கள் குறித்து

திரு. மு. அம்பிகாபதி: திருப்பூரில் ஏற்பட்ட அமைதியற்ற நிலைமை பற்றி சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குத் தெரியும். திரு. அம்பிகாபதியிடம் தெரிவித்திருக்கிறேன். முக்கியத்துவம்வாய்ந்தது என்று நான் அதுபற்றி எடுத்த நடவடிக்கைகள் அவருக்குத் தெரியும். அவர்களே பக்கத்தில் இருந்தார்கள். தெரிந்தும் இப்படிக் கேட்கலாமா?

திரு. சொ. ந. பழனிச்சாமி: நான் 41-வது விதியின்கீழ் 1ஆம் தேதியன்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அது என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுதான் பாயின்ட் ஆப் ஆர்டரா? என் அறைக்கு வாருங்கள் விவரம் சொல்லுகிறேன்.

3. உரிமைப் பிரச்சனைகள்

(அ) 'அண்ணா', 'தினகரன்', 'மெயில்', 'முரசொலி', 'தென்னகம்', 'மக்கள் குரல்' ஆகிய நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட பிரச்சனைகள் மீது பேரவைத்தலைவரின் தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரை முருகன் மற்றும் திரு. தி. சு. நல்லதம்பி ஆகியோர் 'அண்ணா' நாளேட்டின் மீதும், திரு. வி. கே. சின்னசாமி அவர்கள் 'தினகரன்' நாளேட்டின் மீதும், திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் 'மெயில்' நாளேட்டின் மீதும், திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் ''முரசொலி'' நாளேட்டின் மீதும், திரு. ரகுமான்கான் ''தென்னகம்'' மற்றும் ''மக்கள் குரல்'' நாளேடுகள் மீதும், அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனைகளை எழுப்பி உள்ளனர்.

இவற்றில் திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் ''மெயில்' நாளேட்டின்மீது எழுப்பி உள்ளது அவர் 'முனிசிபாலிடித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும்' சட்டமுன்வடிவை ஆதரித்துப் பேசியதாகவும், ஆனால் அப் பத்திரிகை 'பஞ்சாயத்துத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும்' சட்டமுன்வடிவை

அவர் ஆதரித்துப் பேசியதாகப் போட்டிருக்கிறது என்றும் எனவே இது அவை உரிமை மீறியதாகும் என்றும் குறிப்பிட்டார். இது வேண்டுமென்று செய்யப்பட்ட தவறு அல்ல. தவறைத் திருத்தி அப்பத்திரிகை அறிக்கை வெளியிட்டுள்ளதால் இப்பிரச்சனையை இத்துடன் விட்டுவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற பிரச்சனைகளில் ஒரு அடிப்படைக் கருத்து இருக்கிறது. பத்திரிக்கைகளில் அரசியல் கட்சிகளை ஆதரித்து அக்கட்சிகளின் கொள்கைகளை விளக்குவதற்கென்றே வெளியிடப்படும் பத்திரிகைகள் இருக்கின்றன. இவை தாம் ஆதரிக்கும் கட்சியின் கொள்கைகளையும் அது சம்பந்தப்பட்ட கருத்துக்களையும் மட்டுமே வெளியிடுகின்றன. செய்திகளுக்குத் தலைப்புக் கொடுக்கும் போதும் தாம் ஆதரிக்கும் கொள்கைளுக்கேற்ப கொடுக்கின்றன. இதனால் பல முறை இந்த அவையில் தங்கள் பேச்சு வெளியிடப்படவில்லை என்றும், தங்கள் பேச்சுக்குத் தலைப்பு கொடுக்கப்பட்டது தவறாக உள்ளது என்றும் உரிமை மீறல் பிரச்சனைகள் பல மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வந்துள்ளன. பத்திரிகைகளிடம் விளக்கம் கேட்கும்போது ''அவையை அவமதிக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்றும், இடம் இன்மை காரணமாக முழுப்பேச்சுகளும் போடப்படுவதில்லை என்றும், தம் கண்ணோட்டத்திற்கேற்பத் தலைப்புகள் தரப்படுவதாகவும்'' விளக்கங்கள் தரப்படுகின்றன.

கட்சிப் பத்திரிகைகளுக்கு ஒரு விதமாகவும் மற்றப் பத்திரிகைகளுக்கு வேறொரு விதமாகவும் உரிமைகள் இல்லை. எல்லாப்பத்திரிகைகளுக்கும் ஒரே விதமான உரிமை தான் உள்ளது. அவை நடவடிக்கைக் குறிப்புகளை வெளியிடுவதில் கூட்டியோ, குறைத்தோ, அல்லது சிதைத்தோ வெளியிடுவது அவை உரிமை மீறிய செயல் என்பது தான் மரபு. இதன்படிப் பார்த்தால் கட்சித் சார்புடைய பத்திரிகைகள் எல்லாம் நடவடிக்கைக்கு உட்படுகின்றன.

எனவே திட்டவட்டமாக இது குறித்து ஒரு முடிவு எடுத்துக் கொள்ள வேண்டும். அதுவரை பத்திரிகைகள் மீது இங்கு கொண்டு வரப்பட்ட உரிமை மீறல் குறித்து பிரச்சனைகள் எல்லாவற்றையும் மேல் நடவடிக்கைகள் ஏதும் தேவை இல்லை என்று தெரிவித்து அனுமதி மறுக்கப் படுகின்றன.

இப்பிரச்சனை குறித்து தெளிவான ஒரு வழிவகை செய்ய கீழ்க்கண்ட பிரச்சனையை அவை உரிமைக் குழு பரிசீலிக்க வேண்டும் என்பதற்காக அக் குழுவிற்கு நானே அனுப்புகிறேன்.

''பத்திரிகைகளில் பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகள் எவ்விதம் வெளியிடப்படவேண்டும்? இவற்றில் கட்சிப் பத்திரிகைகளுக்கு விதி விலக்கு அளிக்கப்பட வேண்டுமா? பத்திரிகைகளில் அவை நடவடிக்கை குறிப்புகள் சரியானபடி வெளியிடப்படவில்லையானால், எந்தவித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்''

[பேரவைத் தலைவர்] [1978 ஏப்ரல் 6

இந்தப் பிரச்சனையை அவை உரிமைக் குழு ஆய்ந்து அடுத்த கூட்டத் தொடருக்குள் ஒரு அறிக்கை அளிக்க வேண்டும் என்று தெரிவித்து, அக் குழுவிற்கு இப்பிரச்சனையைஅனுப்பி வைக்கிறேன்.

ஆ) மாண்புமிகு சமுகநலத்துறை அமைச்சர்மீது எழுப்பிய உரிமைபிரச்னை மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 29-3-1978 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் மீது, ஒரு அமைச்சர் அவைக்கு அரசுத் துறை அலுவலர் ஒருவரால் கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றினை படித்ததின் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியுள்ளார். இது வேண்டுமென்றே, தான் எழுப்பிய குற்றச்சாட்டிற்கு தனக்கு மாசு கற்பிக்கும் வகையிலும், தான் பேரவை உறுப்பினராக இயங்க இயலாத வகையிலும் இவ்வாறு செய்யப்பெற்றது என்று கூறியுள்ளார். இதன் மீது உறுப்பினரது, மற்றும் அரசினது கருத்தைக் கேட்டு பேரவைத் தலைவர் தமது தீர்ப்பை பின்னர் அறிவிப்பார் என்றும் துணைத் தலைவர் அவர்கள் அன்று அவையில் அறிவித்துள்ளார்கள்.

இருதரப்பிலும் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்களையும்' அமைச்சர் அவர்கள் 81—வது விதியின் கீழ் அவைக்கு அளித்த அறிக்கையையும், உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையையும் கூர்ந்து ஆராய்ந்தேன்.

உறுப்பினர் திரு. ரகுமான்கான் முதல் நாள் சுற்றறிக்கையை படித்துக் காட்டியபோது அது துறையில் செய்யப்பட்ட தவறு என்று கூறுது, அது சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்திற்கு உட்பட்டுத் தான் இவ்வாறான தவறு நடத்திருக்கிறது என்பதையும் திட்டவட்டமாகக் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், உரிமைப் பிரச்சினை அறிவிப்பிலும் அமைச்சருக்கு இதுபற்றி, personal know-ledge' உள்ளது போலத்தான் எழுதியும் கொடுத்துள்ளார். மேலும் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் தெரிவித்தக் கருத்தையும் கூட ஏற்காது அமைச்சர் பொறுப்பில் அத்துறை இருப்பதினால் அமைச்சர் அதை விசாரிக்க வேண்டுமென்று கூறுது அமைச்சர் மீது தான் அவர் குற்றம் சாட்டுவதாகவும் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். ஆனால், அமைச்சருடைய கவனத்தின்கீழ் தான் இவ்வாறாக சுற்றறிக்கை அனுப்பப்பட்டு துறையில் தவறு நடந்திருக்கிறது என்பதற்கு ஆதாரமில்லை.

[பேரவைத் தலைவர்] [1978 ஏப்ரல் 6

உறுப்பினர் தனிப்பட்ட முறையில் அமைச்சர் மீது குற்றம் சாட்டியதை அமைச்சர் நல்லெண்ணத்தோடு உடனடியாக சம்பந்தப்பட்ட அலுவலரும் சென்னைக்கு பயிற்சிக்காக வந்திருப்பதால் அந்த அலுவலரிடம் இருந்து துறையின் மூலமாக அவருடைய விளக்கத்தைப் பெற்று அவைக்கும் அதை வாசித்துள்ளார். அமைச்சர் அவர்கள் தன்னுடைய அனுமதியின்பேரில் தான் அந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டது என்ற கூற்றினையும் மறுத்துள்ளார்.

ஆனால் அந்த அதிகாரி கொடுத்துள்ள விளக்கத்தில் உறுப்பினரது பெயரும் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. அதைத் தவிர்த்துக் கூட அமைச்சர் அந்த கடிதத்தை வாசித்திருக்கலாம். ஆனால் தனக்குக் கிடைத்த முழுத் தகவலையும் அவையின் முன் வைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு இது வாசிக்கப்பட்டதால் இதில் உறுப்பினர் மீது வேண்டுமென்றே களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற முறையில் வாசிக்கப்பட்டது என்று கருதுவதற்கு இடமில்லை.

மேலும் இம்மாதிரி உறுப்பினர் ஒருவரை சம்பந்தப்படுத்தி ஒரு அதிகாரி இவ்வாறு தனது விளக்கத்தை கொடுத்திருப்பது எனக்குத் தெரிந்த வரையில் இது தான் முதல் முறையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இது குறித்து அரசு மேற்கொண்டு புலன் ஆய்வு செய்து முழு விசாரணை செய்யும் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறியுள்ளபடியால். அவ்வாறு விசாரணை நடத்தி அதனுடைய முடிவை இந்த அவைக்கு அரசு தெரிவிக்கலாம்.

மேலும் நான் எற்கனவே ஒரு தீர்ப்பில் கூறியுள்ளவாறு உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்கள் மீதோ அல்லது அமைச்சர்கள் மீதோ அவர்களின் அலுவல் சம்பந்தப்படாது தனிப்பட்ட முறையில் அவர்கள் குற்றச்சாட்டுகளைக் கூறும்போது அவற்றிற்கு முழு ஆதாரங்களையும் வைத்து இருக்கவேண்டுமென்றும், சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கோ அல்லது அமைச்சருக்கோ முன்னறிவிப்பு கொடுக்கவேண்டுமென்றும் கூறியுள்ளேன், அவ்வாறு நடைபெறுததன் விளைவு தான், அவை இந்தப் பிரச்சினையில் தனது கருத்தை மீண்டும் ஒரு முறை கவனத்தைச் செலுத்தவேண்டியுள்ளது.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள். உறுப்பினர்களது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது போலவே அமைச்சர்களின் மீதும் வேண்டுமென்றே தவறான குற்றச்சாட்டுக்கள் வராதவாறு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

எனவே இனிமேல் உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகளைக் கூறும் போது, அவைகள் அமைச்சர்களது அலுவல் பற்றியதாக இருந்தால் கூறுவதில் தவறில்லை. ஆனால் அவ்வாறான குற்றச்சாட்டுகள் அல்லது தவறுகள் அமைச்சர்களுக்குத் தெரிந்துதான் செய்யப் பட்டது என்று ஆதாரம் இன்றி கூறுவது சரியாகாது. அம் மாதிரியே அமைச்சர்களும் ஏதேனும் ஒரு விசாரணையின் விளைவாக அதில் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அதைத் தீர விசாரிக்காது அவைக்குக் கொடுப்பதும் சரியாகாது.

இப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் உறுப்பினர் எழுப்பி யுள்ளது போன்று எந்தவிதத்திலும் மேலெழுந்தவாரியாகக் கூட உரிமை மீறல் இல்லை என்று எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

அரசு விசாரணைக்குப் பின் அவைக்கு அதன் முடிவுகளையும் அறிவிக்க வேண்டும்.

4. அறிவிப்பு.

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 4—4—1978-ஆம் நாளன்று கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி ஒப்புதல் அளித் துள்ளதாக மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களிட மிருந்து செய்திகள் வரப்பெற்றுள்ளன:

1. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவை களை வசூலித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/78)

2. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/78).

3. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/78).

5. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதி 23ஐ தளர்த்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 23-ஐ தளர்த்தி இப் பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) விதி 41 (3) ஐ தளர்த்தல்.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 41 (3)இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை கவனஈர்ப்புக்குக் கொண்டு வரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

திரு. துரைமுருகன்: சார், திருப்பூர் நிகழ்ச்சிப்பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் நாங்கள் ஏற்கனவே கொடுத்திருந்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வருவதற்கு முன்பே அதுபற்றி திரு. அம்பிகாபதி பிரச்சினையை எழுப்பி பதில் சொல்லி விட்டேன். அரசினர் தரப்பிலிருந்து பதில் வருமானால் அது எடுத்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-10)

திரு க. சுப்பு: தலைவரவர்களே, பர்மா தமிழர்கள் சம்பந்தப் பட்ட ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையும் விசாரித்தேன். முழுத் தகவல்கள் வர வேண்டுமென்று அமைச்சர் சொன்னதால் நாளைக்கு எடுத்துக்கொள்வதாகவோ அல்லது தகவல்கள் வந்த வுடன் எடுத்துக்கொள்வதாகவோ சொல்லியிருக்கிறார்கள்.

திரு ஏ. மார்க்கபந்து: தலைவரவர்களே, அதைப் போல நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேட்டதற்குச் சொல்லி விட்டேன். எல்லாம் அங்கேதான், இங்கே கிடையாது.

6. கவன ஈர்ப்பு

(அ) பட்டுக்கோட்டை தாலுகா கோபாலசமுத்திரம் கிராமத்தில் ஏழை விவசாயிகளுடைய வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 49-வது விதியின்கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது குறித்து திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, மு. அம்பிகாபதி ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். ஏ. ஆர். மாரிமுதது அவர்கள்.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, 41—வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"பட்டுக்கோட்டை தாலுக்கா, கோபாலசமுத்திரம் கிராமத்தில் பல தலைமுறையாக வசிக்கும் ஏழை நிலமில்லாத விவசாயிகளை நில உரிமையாளராகிய சாமிநாத நாயகர் போலீஸ் உதவியுடன் 45 வீடுகளை இடித்து தள்ளிவிட்டது குறித்து."

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : பேரவைத் தலைவரவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுகாவில் இனும் எஸ்டேட்டாக இருந்த கோபாலசமுத்திரம் கிராமத்தை 7–3–57-ல் அரசு எடுத்துக் கொண்டு, ரயத்துவாரி செட்டில்மெண்ட் செய்த பொழுது சர்வே எண் 26/7, 54, 56/1, 57, 60/2 ஆகிய நிலங்களை தீர்வையிட்ட வறண்ட நிலமாக (Assessed Dry waste) பாகுபாடு செய்யப்பட்டது. இந்த நிலங்களின் முன்னாள் நில உடைமையாளர்களிடமிருந்து குடிக்காணி உரிமை பெற்றதாக திரு. சுவாமிநாத நாயக்கரும் மற்றும் மூன்று பேர்களும் மேற்படி நிலத்துக்கு பாத்தியதை கொண்டாடுகிறார்கள்.

திரு. வேலாயுதம் அம்பலமும், அவரைச் சார்ந்த மற்றவர்களும் இந்த நிலங்களில் 41 குடிசைகள் கட்டி வசித்து வந்தனர். மன்னார்குடி டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டின் 25–6–54-ஆம் தேதிய டிகிரியின்படி திரு. சுவாமிநாத நாயக்கருக்கும் மற்றும் மூன்று பேர்களுக்கும் இந்த நிலங்களுக்கான உரிமை வழங்கப்பட்டது. மேற்கூறப்பட்ட டிகிரியை அமுல்படுத்த வேண்டியும், நிலங்களை தம் வசப்படுத்திக் கொள்ளும் பொருட்டும் திரு. சுவாமிநாத நாயக்கரும் அவரைச் சார்ந்தவர்களும் பட்டுக்கோட்டை டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் மனுச்செய்த பொழுது திரு. வேலாயுதம் அம்பலமும் அவரைச் சார்ந்தவர்களும் அனுபவ பாத்தியதை கொண்டாடி தடுத்தனர்.

[திரு. ச. இராமச்சந்திரன்]

இதனால் இருசாராருக்கும் இடையே சிவில் வழக்குகள் இருந்தன. மன்னார்குடி டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டின் தீர்ப்பு திரு. வேலாயுதம் அம்பலத்தைச் சார்ந்தவர்களுக்கு எதிராக இருந்தது. தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் மேல்முறையீட்டின் பேரில் அளித்த தீர்ப்பு திரு. வேலாயுதம் அம்பலத்தைச் சார்ந்தவர்களுக்கு சாதகமாய் இருந்தது. இதனை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ததில், திரு. வேலாயுதம் அம்பலத்தைச் சார்ந்தவர்களுக்கு எதிராகவும், திரு. சுவாமிநாத நாயக்கரைச் சார்ந்தவர்களுக்கு சாதகமாகவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இந்த நிலங்கள் சம்பந்தமாக சிவில் கோர்ட்டில் வழக்கு இருந்தால் இவைகளின் மீது ரயத்வாரி பட்டா வழங்கப்படவில்லை. உயர் நீதிமன்ற தீர்ப்பு தங்களுக்கு எதிராக இருந்தும், திரு. வேலாயுதம் அம்பலமும் அவரைச் சார்ந்தவர்களும் மேற்கொண்டு பயனுடைய நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. அவர்களுக்குள்ளாகவே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முயன்றதாகத் தெரிகின்றது. ஆனால் அந்த முயற்சி பலன் தரவில்லை.

உயர்நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் திரு. சுவாமிநாத நாயக்கரும் அவரைச் சேர்ந்தவர்களும் புதுக்கோட்டை டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் நிலுவையில் இருந்த வழக்கை வலியுறுத்தி, கோர்ட்டாரின் உத்தரவுப்படி அந்த நிலங்களின் பாத்தியதையை சட்டபூர்வமாக எடுத்துக் கொள்ள தீர்ப்பு அளிக்கப்பட்டது.

27-1-78 அன்று பட்டுக்கோட்டை டிஸ்டிரிக்ட் முன்சீப், கோர்ட் உத்தரவை அமுல்படுத்த அமீனாவுக்கு பாதுகாப்பு அளிக்கும்படி போலீசுக்கு உத்தரவிட்டார். 30-1-78 அன்று அமீனாவால் நில உடைமை வழங்கப்பட்டது. அதற்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது.

குடிசைகளிலிருந்த சாமான்கள் குடிசைக்கு வெளியே அப்புறப் படுத்தப்பட்டு குடிசைகள் பூட்டப்பட்டிருந்ததால் நில உடமை வழங்கியது. ஒரு சம்பிரதாய நிகழ்ச்சியாகவே (Symbolic) நடந்தது. இருப்பினும் அங்கு குடியிருந்தவர்கள், குடிசைகளுக்கு வெளியே தொடர்ந்து வசித்து வருகின்றார்கள்.

பிறகு திரு. வேலாயுதம் அம்பலத்தைச் சேர்ந்தவர்களால் திரு. சுவாமிநாத நாயக்கரைச் சேர்ந்தவர்களுக்கு தொடர்ந்து தொந்தரவுகள் ஏற்படுவதாகவும் அமைதிக்கு பங்கம் நேரும் என்ற நிலை இருப்பதாகவும் போலீசுக்கு புகார்கள் வந்தன. இரு தரப்பினரையும் போலீஸ் இன்ஸ்பெக்டர் 28-2-78 அன்று. அமைதிக்கு பங்கம் விளைவிக்காமல் இருக்குமாறு எச்சரிக்கை செய்தார்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 ஏப்ரல் 6

1-3-78 அன்று சுவாமிநாத நாயக்கரைச் சேர்ந்தவர்கள் அவர்களது ஆட்களை வைத்துக் கொண்டு குடிசைகளை அப்புறப்படுத்தும் போது வேலாயுதம் அம்பலத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கு தடை செய்தனர். நிலைமை அமைதியற்றிருந்ததால் பெருங்கலவரத்தை தடுக்க மதுக்கூர் சப்-இன்ஸ்பெக்டர் ஸ்தலத்திற்குச் சென்று வேலாயுதம் அம்பலத்தைச் சேர்ந்தவர்களை, குடிசைகளை அப்புறப்படுத்துவதை தடுக்காமல் இருக்குமாறு எச்சரிக்கை செய்தார்.

இதனை அவர்கள் கேட்காததனாலும் அமைதிக்கு பங்கம் ஏற்படும் சூழ்நிலை உருவானதாலும் 28 பேர்கள் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். 2-3-78 அன்றும் தொடர்ந்து குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்டன.

30-1-1978 அன்று நில உடைமை அமீனாவால் செய்யப்பட்டுச் சென்ற பிறகு, குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்ட நாள்வரை வேலாயுதம் அம்பலத்தைச் சார்ந்தவர்களால், நிலத்தை மீண்டும் பெறுவதற்கு தகுந்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. 1-3-1978 அன்று குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்ட பொழுது 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். கோர்ட் உத்தரவின்படி சுவாமிநாத நாயக்கரைச் சார்ந்தவர்கள் நடந்து கொண்டதால், வருவாய் துறை அதிகாரிகளோ போலீசாரோ 144 தடையுத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க இயலவில்லை. 1978 மார்ச் முதல் வாரத்தில் அடிஷனல் கலெக்டரும், எஸ். பி. யும் அங்கு சென்ற போது நிலைமை அமைதியாக இருந்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நிலங்கள் தீர்வையிட்ட வறண்ட நிலங்களாக பாகுபாடு செய்யப்பட்டதை எடுத்துக்கூறி வேலாயுதம் அம்பலமும் அவரைச் சார்ந்தவர்களும் அந்நிலங்களை மீட்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. ஆகவே அவர்களது எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்தன.

அந்த நிலங்கள் தீர்வையிட்ட வறண்ட நிலங்கள் என்ற காரணத்தால் தீர்வையிட்ட வறண்ட நிலங்கள் மீதான அரசு உரிமையை வலியுறுத்தி, சுவாமிநாத நாயக்கரிடமும் அவரைச் சார்ந்தவர்களிடமும் உள்ள அந்த நிலங்களுக்கான உடைமையை அரசு திரும்ப பெற, பட்டுக்கோட்டை டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் நான்கு விண்ணப்பங்கள் 10-3-78 அன்று அரசு சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து வேலாயுதம் அம்பலத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் 16.3.73 அன்று பட்டுக்கோட்டை டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அரசையும், சுவாமிநாத நாயக்கர் மற்றும் மூன்று பேர்களையும் பிரதிவாதிகளாக்கி வழக்குத் தொடுத்துள்ளனர்.

1978 ஏப்ரல் 6] [திரு. ச. இராமச்சந்திரன்]

இந்த வழக்கு 24-4-78 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட இருப்பதாகத் தெரிகின்றது. குடிசைகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு குடியிருப்பு வழங்க மாற்று நிலங்கள் அந்த கிராமத்தில் இல்லை. இருப்பினும் பக்கத்துக் கிராமங்களில் அவர்களுக்கு குடியிருப்பு நிலங்கள் ஒதுக்க முடியுமா என்பதுபற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : துணைத் தலைவரவர்களே, வெளியேற்றப்பட்டவர்கள் அத்தனைபேரும் தெருவிலே குழந்தைகளோடு, குடும்பத்தோடு இருப்பிடமின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இனிமேல் பார்த்து எப்பொழுது கொடுப்பது? உடனடியாக அவர்களுக்கு குடியிருப்பு கொடுக்க, செட்டில்மென்ட் பண்ண ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அறிக்கையில் இருக்கிற விஷயங்களைப் பார்க்கின்ற பொழுது மிகவும் வருத்தமாக இருக்கிறது. காரணம் என்னவென்றால், அந்தக் குறிப்பிட்ட பட்டுக்கோட்டை தாலுக்கா பெரிய கோட்டை பஞ்சாயத்தைச் சேர்ந்த கோபால சமுத்திரம் கிராமத்தில் பரம்பரையாக, ஏழை அம்பலக்காரர்கள், அரிசனங்கள் அதிலே குடியிருந்து கொண்டு வருகிறார்கள். புறம்போக்கா என்பது இருக்கட்டும். குடியுரிமை பட்டா வழங்குகிற நிலைமையில், அவர்கள் 50 வருஷம், 100 வருஷமாகக் குடியிருந்து வருகிறார்கள் என்றால் அது யார் நிலமாக இருந்தாலும் குடியிருப்பவனுக்குப் பட்டா கொடுத்திருந்தால், போலீஸ் எப்படிப் போக முடியும்? அதிலே வேடிக்கை என்னவென்றால், நில உடைமையாளருக்கு ஆதரவாக போலீஸ் சென்று குடியிருப்பவர்களைக் கைது செய்து, அவர்களது வீடுகள் இடிக்கப்பட்டு, இந்த ஆட்சியிலும் அவ்வாறு நடைபெற அதிகாரிகள் உடந்தையாக இருந்து..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதி/41-லே கேள்விகள் கேட்கலாம், விளக்கமாகப் பேசக் கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : இந்த ஆட்சிக்கே களங்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் தீவிரமாகக் கவனித்து பட்டா கொடுக்கத்தான் அமைச்சரைக் கேட்கிறோம். ஆகவே, உடனடியாக கொடுக்க வேண்டும், அந்த இடத்திலேயே பட்டா அளிக்க வேண்டும். அங்கேயே பட்டா அளிக்க அமைச்சரவர்கள் சகலவிதமான அதிகாரங்களையும் உபயோகிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நாயக்கருக்குப் பட்டா கிடைத்தது. நீதிமன்ற தீர்ப்பின் மூலமும் இன்றைக்கிருக்கிற சட்டத்தின் துணைக்கொண்டும் மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கே நீண்ட நாளாக அனுபவித்து வருகின்ற அவர்களை தெருவிலே விடலாமா என்று கேட்கின்றார்கள். நிச்சயமாக அத்தகையவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதற்காகத் தான் வேறு பல நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. ஆனால் உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்தபிறகும் கூட அவர்கள் பேசாமல் இருந்துவிட்டார்கள். இந்த ஆட்சி ஏதோ அகற்றுகிறது என்று நாயக்கருக்கு போலீசை துணையாக அரசு வைத்திருக்கிறது என்று சொன்னார்கள். நீதிமன்றத் தீர்ப்பை அரசு நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. நீதிமன்ற தீர்ப்பு நிலச்சுவாந்தாருக்கு ஆதரவாக வந்துவிட்டது. ஆகவே அமுல் படுத்தச் சொல்லிக் கோர்ட் உத்தரவு வந்த பிறகு அரசாங்கம் நீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்ற வேண்டும் கட்டாயத்திற்கு ஆளாகிறது. ஆகவே, அது முழுவதும் சட்டப் பிரச்சினையாகவும் சிவில் கோர்ட் பிரச்சினையாகவும் இருந்து வருகிற காரணமாகத்தான் இந்தச் சிக்கல் இருக்கிறதே தவிர வேறு அல்ல.

(முற்பகல் 10–20)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, அம்பிகாபதி அவர்கள் கேட்டது, கோர்ட்டு எப்படித் தீர்ப்பு பண்ணியிருந்தாலும், யாருக்கு அந்த நிலத்தை உரிமை என்று தெரிவித்திருந்தாலும், நிலமற்ற ஒரு விவசாயி அந்த நிலத்திலே குடியிருக்கிறபோது, அந்த குடியிருப்பு மனையில் சட்டப்படி அவர்களுக்கு உரிமை இருக்கிறதா இல்லையா, அந்தபடி நடவடிக்கை எடுக்க முடியுமா இல்லையா என்றுதான் கேட்டார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே. எப்படியும் அந்த இடத்தை கையகப்படுத்த வேண்டும் என்று தான் அரசு கோர்ட்டுச்குச் சென்றிருக்கிறது.

(ஆ) குமரிமாவட்ட வேலையில்லா ஆசிரியர்கள் தங்களுக்கு வேலை கொடுக்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு உண்ணுநோன்பு இருப்பதும் அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து குமரி மாவட்ட வேலையில்லா ஆசிரியர்கள், தங்களுக்கு வேலை கொடுக்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக முன்பாக 27-3-78 முதல் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாலும், அவர்களுக்கு ஆதரவாக பல்வேறு பொது ஸ்தாபனங்கள் ஆர்ப்பாட்டம் செய்வதாலும், பொது மக்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து, மாண்புமிகு கல்வி

அமைச்சர் அவர்கள் கவனத்திற்குத் திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், டி. ஞானசிகாமணி, ஆர். கிருஷ்ணன் அவர்கள் கொண்டு வருவார்கள். இவர்களில் யாரேனும் ஒருவர் அமைச்சர்கள் கவனத்திற்குக் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ராதாகிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதி 41-ன் கீழ், குமரி மாவட்ட வேலையில்லா ஆசிரியர்கள், தங்களுக்கு வேலை கொடுக்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக 27—3—78 முதல் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாலும், அவர்களுக்கு ஆதரவாக பல் வேறு பொது ஸ்தாபனங்கள் ஆர்ப்பாட்டம் செய்வதாலும். பொது மக்கள் மத்தியிலே எழுந்துள்ள பதட்டநிலை குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத்தலைவர் அவர்களே, இம்மாநிலமனைத்திலுமுள்ள வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து செல்லுப்படி பதிவேட்டில் (லைவ் ரிஜிஸ்டரில்) காத்திருக்கும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 30—9—77 அன்றைய நிலவரப்படி: பட்டதாரி பி. டி./பி. எட்; 8,880; செகண்டரி கிரேட் 24,348; தமிழ் ஆசிரியர்களுள் பயிற்சி பெற்றவர்கள் 2,198; தமிழாசிரியர்களுள் பயிற்சி பெறாதவர்கள் 1,127; உடற்பயிற்சி ஆசிரியர் 2955; ஹையர் கிரேடு 776; கைத்தொழில் ஆசிரியர் 3,865; ஆகமொத்தம் 44,149 ஆக இருந்தது.

சுமார் 1970-ம் ஆண்டிலிருந்தே வேலை வாய்ப்பற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் எண்ணிக்கை அனைத்து ஆண்டுகளிலும் சராசரியாக 20,000 மட்டத்திலேயே இருந்து வந்துள்ளது. பி. எட். ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலும்கூட வேலை வாய்ப்பின்றி இருந்த ஆசிரியர் எண்ணிக்கை—

1970-71 இறுதியில் 1,500; 1971-72 இறுதியில் 1,800;

1972-73 இறுதியில் 1,900; 1973-74 இறுதியில் 2,500;

1974-75 இறுதியில் 4,500; 1975-76 இறுதியில் 6,000;

1976-77 இறுதியில் 8,000 என்றவாறு வளர்ந்து வந்துள்ளது. ஆக கடந்த பல ஆண்டுகளாகவே பெருமளவில் இருந்துவரும் ஆசிரியர் வேலை வாய்ப்பின்மையைப் படிப்படியாகத்தான் தீர்க்க இயலும்.

பயந்துக்கொண்டு இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த அரசை நாங்கள் நம்பிக்கொண்டு இருக்கிறோம். அந்த நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையில் அரசாங்கம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஏதேனும் ஒரு திட்டத்தை அறிவித்தால் நன்மையாக இருக்கும். அப்படிப்பட்ட திட்டத்தை அறிவித்தால் நாங்களும் அவர்களுக்கு ஆலோசனை வழங்கி உண்ணாவிரதத்தைக்கைவிட முயற்சி செய்வோம். ஆகவே, அரசு ஏதேனும் ஒரு திட்டத்தை அறிவிக்க முன் வருமா?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> தலைவரவர்களே, பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் நிலை குறித்து அனுதாபத்தோடு இந்த அரசு பரிசீலனை செய்யும் என்ற நிலைமையை ஆசிரிய பெருமக்களுக்கே தெரியும். ஆகவே, ஒத்துழைப்புத் தரவேண்டிய நேரங்களில் போராட்டம் நடத்துவது என்பது அரசாங்கத்தின் நிலைமையை சிரமங்களுக்கு உள்ளாக்கும் என்று அறிவுரை கூறி, போராட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொள்வது மாண்புமிகு உறுப்பினர்களின் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>(இ) சென்னை மாநகராட்சியில் வீட்டுவரி பலமடங்கு உயர்த்தப்பட்டதால் ஏழை குடிசைப்பகுதி மற்றும் நடுத்தர மக்கள் பீதி அடைந்துள்ளது குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> சென்னை மாநகராட்சியில் வீட்டு வரியை இதுவரை இருந்து வந்ததைவிட பல மடங்கு உயர்த்திய காரணத்தால் ஏழை குடிசைப்பகுதி மற்றும் நடுத்தர மக்கள் ஆகியோர் பெரும் பீதி அடைந்துள்ள நிலை குறித்து, திரு. மு. அரங்கநாதன் அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> துணைத் தலைவரவர்களே, விதி 41-ன்கீழ், சென்னை மாநகராட்சியில் வீட்டு வரியை இதுவரை இருந்து வந்ததை விட பல மடங்கு உயர்த்திய காரணத்தால் ஏழை குடிசைப் பகுதி மற்றும் நடுத்தர மக்கள் ஆகியோர் பெரும் பீதி அடைந்துள்ள நிலை குறித்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> துணைத் தலைவர் அவர்களே, போடப்படுகிற இவ்வரி, நிலங்கள், கட்டடங்கள் மற்றும் இவற்றைச் சார்ந்துள்ள பிறபகுதிகளின் வருடாந்திர மதிப்பின் அடிப்படையில் (on the basis of annual value) விதிக்கப்படுகின்றன. இச்சொத்துக்களின் வருட மதிப்பீடு (Annual value) அச்சொத்துக்களின் மூலம் நியாயமாகப் பெறக்கூடிய (Reasonable

letting value) வருட வாடகையைக் கணக்கிட்டு, அதிலிருந்து அச்சொத்துக்களுக்கு அளிக்கப்படும் 10% தேய்மான மதிப்பைக் கழித்துவரும் மதிப்பாகும். இச்சொத்துக்களின் வருட வருமானத்தில் விதிக்கப்படும் சொத்து வரி குறைந்த பட்சம் 15½%ம் அதிகபட்சம் 2'5% இருக்கும். தனது சொத்தின்மீது போடப்பட்ட வரியின் அளவு அதிகம் என்றும் கருதும் எந்தவொரு நபரும் அதனை எதிர்த்து முறையே மாநகராட்சி ஆணையருக்கோ, மாநகராட்சி வரிவிதிப்பு முறையீட்டுக் குழுவுக்கோ, நீதி மன்றத்திலோ முறையிட்டு பரிகாரம் தேட மாநகராட்சிச் சட்டம் வழி செய்கிறது. ஆயினும் மாநகராட்சியின் வரி உயர்வு குறித்து அதிருப்தி தெரிவித்து பெறப்பட்ட முறையீடுகளின் பேரிலும் சென்னை மாநகராட்சியின் வரி உயர்வு குறித்து திரு. தளவாய் அவர்கள் தொடுத்த வழக்கில் சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பினை ஒட்டியும் எந்த அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளால் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என்பது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது. அதுபற்றி அரசு முடிவு எடுக்க இருக்கிறது.

(முற்பகல் 10-30)

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அளித்த பதில் மாநகராட்சியிலே போடுகின்ற வரிக்கு அப்பீல் செய்கின்ற முறையும். அதற்குப் பின்னல் கமிட்டிக்கு அப்பீல் செய்கின்ற முறையும், அதிலும் திருப்தி அளிக்காவிட்டால் கோர்ட்டுக்குப் போகின்ற உரிமையும் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த முறைகள் எல்லாம் எனக்குத் தெரியும். ஆனல் முன்பு இருந்ததை விட இப்போது பன்மடங்கு வீடுகளுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்கு குறிப்பாக இரண்டை மட்டும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஒரே வீதியில் 4 வீடுகள் இருக்கின்றன. முன்னல் அந்த நான்கு வீடுகளுக்கும் இருந்த வரி ரூ. 22.10 காசு. ஆனல் இப்போது 22 ரூபாய் 10 காசு வரி இருந்த ஒரு வீட்டுக்கு 108 ரூபாய் 72 காசு வரி. அதே 22 ரூபாய் 10 காசு வரி இருந்த அடுத்த வீட்டுக்கு 32 ரூபாய் 26 காசு. அதே 22 ரூபாய் 10 காசு வரி இருந்த இன்னொரு வீட்டுக்கு 27 ரூபாய் 68 காசு. அதே 22 ரூபாய் 10 காசு வரி இருந்த இன்னொரு வீட்டுக்கு 49 ரூபாய் 76 காசு. இப்படி ஒரே தெருவில் இருந்த 4 வீடுகளுக்கு நான்கு விதமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான குறிப்புகள் அனைத்தையும் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். அதற்கான காரணங்களை அமைச்சரவர்கள் கவனத்திற்குத் தனியாகத் தெரிவிக்கிறேன். எப்படி இந்த மாதிரி வரி விதிப்பு முறையை அசெஸ் செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. நானும் 15 ஆண்டுகளாக மாநகராட்சியில் இருந்திருக்கிறேன். ஒரே தெருவிலிருக்கும் ஒரே மாதிரியான 4 வீடுகளுக்கு 4 மாதிரியான வரிவிதிப்பு முறை இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால் மாநகராட்சியின்

சென்னை மாநகராட்சியில் வீட்டுவரி பல மடங்கு உயர்த்தப் பட்டதால் ஏழை குடிசைப் பகுதி மற்றும் நடுத்தர மக்கள் பீதி அடைந்துள்ளது குறித்து

[திரு. மு. அரங்கநாதன்] [1978 ஏப்ரல் 6

வரி விதிப்பு விதி 100-ன்கீழ் ஒழுங்கான முறையில் 1973 ஆம் ஆண்டுவரை வரி வசூல் செய்யப்பட்டது; அந்த விதி 100 இப போது கடைபிடிக்கப்படவில்லை. அதனால் பல்வேறு கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு வரி விதிக்கின்ற அசெஸர் பல் வேறு காரணங்களால் குழப்பத்திற்கு ஆளாகியிருக்கிறார். எந்த அடிப்படையில் நாங்கள் வரி விதிப்பது என்று எங்களையே கேட்கிறார்கள். ஆகவே, அந்த விதி 100 சரியாகக் கடைப்பிடிக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற பல புகார்கள் அரசுக்கு வந்திருக்கிறன. இந்த புகார் களின் அடிப்படையிலேதான் இதுபற்றி எந்தவிதமான முடிவை எடுப்பது: எந்த அடிப்படையிலே வரி விதிப்பு இருக்க வேண்டும்; எந்த வகையிலே நிர்ணயம் செய்தால் குழப்பம் இல்லாமல் இருக்கும் என்பதை அரசு ஆராய்ந்து வருகிறது. வெகுவிரைவில் அதுபற்றிய குறிப்புகள் வெளிவரும். அதுவரை இப்படிச் சொல் லப்படும் புகார்களுக்கு நிச்சயமாக உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: அதுவரை இப்போது உயர்த்தப் பட்டிருக்கிற வரியை நிறுத்தி வைத்து, முன்னால் இருந்த வரியை வசூல் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதுபற்றி தெளிவான முடிவு எடுக்கும் வரையில் புகார்களைக் குறிப்பிட்டு கொடுத்தால் அதன்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் எஸ். இராமச்சந்திரா புரத்தில் உள்ள இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவு உற் பத்திமற்றும் விற்பனைசங்கம் மூடப்பட்டுள்ளதும் தொழிலாளர்கள் வேலையில்லாது இருக்கும் நிலைகுறித்தும்

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, திருவில்லிபுத்தூர் தொகுதியில் எஸ். இராமசந்திராபுரத்தில் உள்ள க்யூ. 104 இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச்சங்கம் மூடப்பட்டுள்ளதால் அங்கு வேலை செய்யும் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கும் நிலைகுறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் அமைச்சரவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

திருவில்லிபுத்தூர் தொகுதியில், எஸ். இராமச்சந்திராபுரத்தில் உள்ள இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் மூடப் பட்டுள்ளதும், தொழிலாளர்கள் வேலை இல்லாது இருக்கும் நிலை குறித்தும்

1978 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே திருவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள க்யூ. 104, இராமச்சந் திராபுரம் கூட்டுறவு நெசவாளர் உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் 407 அங்கத்தினர்களைக் கொண்டு துவக்கப்பட்டு தற்போது அது 158 தறிகளுடன் இயங்கி வருகிறது. இச்சங்கம் இயங்காமல் மூடிக் கிடக்கிறது என்பது உண்மையல்ல. 1976-77-ம் ஆண்டின் இச்சங்கம் ரூ.7.84 இலட்சம் மதிப்புள்ள கைத்தறி துணிகளை உற் பத்தி செய்து ரூ 8.27 இலட்சம் மதிப்புள்ள கைத்தறிதுணிகளை விற்பனை செய்துள்ளது. இச்சங்கத்திற்கு இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு வங்கி ரூ.3.27 இலட்சம் அளவுக்கு 1977-78-ம் ஆண்டுக்கு காசுக்கடன் வசதி அளித்துள்ளது. 2/40 மற்றும் 26ம் நெம்பர் ஜனதா ரக வேஷ்டிகள் ஏற்றுமதி ரக சர்ட்டிங் போன்ற துணி களை இச்சங்கம் உற்பத்தி செய்து வருகிறது. 31-3-78-ல் இச்சங் கத்தில் ரூ.1.33 இலட்சம் மதிப்புள்ள துணிகள் சரக்கு இருப்பாக உள்ளது. தற்பொழுது நடைபெற்று வரும் 24-வது அகில இந்திய கைத்தறி இருவார விழாவினையொட்டி நடத்தப்பெறும் கைத்தறி கண்காட்சிகளினால் இச்சங்கத்தின் சரக்குகள் கணிசமான அள வுக்கு விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே திருவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள எஸ். இராமச்சந்திராபுரத்தில் உள்ள க்யூ 104, இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தை நம்பி 100 குடும்பங்கள் பிழைக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களை துவக்கும் போது பல்வேறு உதவிகளை அரசு செய்கிறது. உதவி செய்வது மட்டும் போதாது. தொடர்ந்து பராமரிப்பும் செய்யவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் வியாபாரம் நெருக்கடி எற்படுவதால் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கமுடியாமல் கூட்டுறவு சங்கத்தைப் பாதிக்கிற நிலைமை ஏற்படுகிறது. எனவே அந்த நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்காக மத்திய கூட்டுறவு வங்கி, இதற்காக ஒரு நிதி ஒதுக்கிட அரசு அனுமதிக்க வேண்டும்,

மாவட்ட மத்திய வங்கியில் இருந்து கூட்டுறவு வங்கிக்கு கடன் வழங்கும்போது அதிக வட்டி வசூல் செய்கின்றனர். ஆதலால் மாநில வங்கியில் இருந்து, நேரிடையாக ரூபாய் வழங்க வேண்டும்,

இந்தக் கூட்டுறவுச் சங்கம் 4 வருடம் சிறப்பாக நடந்தால் இந்த நட்டத்தை ஈடு கொடுக்க முடியும்.

ஆதலால், அரசு எந்த நிதியிலாவது 1லட்சம் கடன் கொடுத்து நூற்றுக்கணக்கான குடும்பத்துக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். வரவு செலவு நடக்கவில்லை ஆதலால் தெரியப்படுத்தி....

[1978 ஏப்ரல் 6

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இராமச்சந்திராபுரம் கூட்டுறவு நெசவாளர் சங்கத்தில் ஒரு இலட்ச ரூபாய் மதிப்புள்ள துணிகள்தான் இப்போது கையிருப்பிலே இருக்கின்றன. இது அவர்களுடைய உற்பத்தியிலேயே கணிசமான அளவுக்குக் குறைந்த அளவுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல் மத்திய வங்கியின் மூலமாகவும் இப்போது நாம் பல்வேறு வகையிலே உதவி செய்து வருகிறோம். புதிதாக தமிழக அரசு மத்திய வங்கியின் மூலம் சான்றிதழ் கடன் ஒன்றை வழங்கலாம் என்று இப்பொழுது ஆங்காங்கே உள்ள மத்திய வங்கிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இவர்களிடம் தேங்கி இருக்கின்ற துணிகள் மீதும் அல்லது கோ-ஆப்-டெக்ஸ்-க்கு வழங்கி இருப்பார்களேயானால் அங்கேயிருந்து வரவேண்டிய நிலுவைத்தொகையின் மீதும் சான்றிதழ் கடன் பெற்று மேலும் இவர்கள் தங்களுடைய தொழிலை நடத்தலாம் என்று இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. எனவே, சங்கங்கள் தொடர்ந்து நடைபெறுவதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் குறிப்பிடப்பட்ட இந்தச் சங்கம் மூடப்படவில்லை என்பதை அறிக்கையிலேயே தெரிவித்திருக்கிறேன். ஆகவே தொடர்ந்து அது மூடப்பட்டிருக்கிறது என்ற தகவலை இங்கே தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி)

(இ) நீதிபதி இஸ்மாயில் விசாரணைக்கமிஷன் அறிக்கை மீதான விவாதம்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, "பேரவையின் 1-3-1978 ஆம் தேதியன்று வைக்கப்பெற்ற சென்னை மத்திய சிறைச்சாலையில் 1976 பிப்ரவரி முதல் 1977 பிப்ரவரி வரையிலான கால அளவில் அரசியல் கைதிகளைக் கொடுமைப் படுத்தியதாகவும், அடித்ததாகவும் கூறப்பெறும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பெற்ற விசாரணைக் கமிஷனின் அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

என்று வேண்டுகிறேன்.

1978 ஏப்ரல் 6]

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீதிபதி இஸ்மாயில் அவர்கள் அளித்திருக்கக்கூடிய அந்த அறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு வாய்பளித்தமைக்காக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன் 1976 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி திராவிட முன்னேற்றக்கழக அரசு கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் கைதிகளாகச் சிறைப்பிடிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன் தான். அது மாத்திரமல்ல. 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி இரண்டாம் தேதி சிறைச்சாலையிலே நடத்தப்பட்ட கொடுமைக்கு உட்பட்டவர்களில் நானும் ஒருவன். நான் மாத்திரமல்ல. ஆளும் தரப்பிலே இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர்களும் அவ்வாறு கைது செய்யப்பட்டு கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களும் என்னோடு சேர்த்து சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் பெயர் முருகுமணி. இன்னொருவர் பெயர் மறந்து விட்டேன். அந்த இரண்டுபேரும் என்னோடு கைது செய்யப்பட்டார்கள்.

(முற்பகல் 10-40)

ஏன் கைது செய்யப்பட்டார்கள்? ஏன் கைது செய்தார்கள் யாரும் கேட்க முடியாது. எதற்காக அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் அதுவும் பேச முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலை எமர்ஜென்ஸி காலத்தில் நாட்டில் இருந்து கொண்டிருந்தது. திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கவிழ்த்துவிட்டு அரசியல் பாகுபாடற்றமுறையில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

அப்படி அடைக்கப்பட்டது மாத்திரமல்ல. பல்வேறு சித்தரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள், அப்படி உட்படுத்தபட்டவர்கள் ஒரு ஆண்டு சிறையில் இருந்து வெளியே வந்தபோது, சிலர் சிட்டிபாபு போன்றவர்கள் மேல் உலகத்திற்கு போய் விட்டார்கள். சிட்டிபாபு போன்றவர்கள் இறந்திருக்கிறார்கள். சிட்டிபாபு போன்றவர்கள் தமிழ்நாட்டில் எப்படி அரசியலில் பணியாற்றினார்கள் என்பதை இஸ்மாயில் கமிஷன் குறிப்பிட்டு அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். பெரிய எழுத்தாளர் அவர் என்று கூட நிலைநாட்டியிருக்கிறார்கள். சிட்டிபாபு அவர்கள் சென்னை மாநகராட்சியின் தலைவராக இருந்திருக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் சிறையில் இருந்தபோது சிறையில் இருக்கக்கூடிய வார்டனின் தடிக்கு இரையாக்கப்பட்டிருக்கிறார். இந்த வரலாற்று உண்மையை நாம் இன்றைய தினம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நீதிபதி இஸ்மாயில் அவர்கள் இந்த அறிக்கையைக் கொடுக்காமல் இருந்திருப்பார்களேயானால் ஒருவேளை நாங்கள் எல்லாம் சொன்னது உண்மை கூட இல்லை என்ற நிலை இங்கே உருவாக்கப்பட்டிருக்கும். சிலர் முயன்றார்கள். நீங்கள் எல்லாம் இதை இதை எடுத்துச் சொல்லி எங்களுக்கு சிறையில் அடி இல்லை, அடிக்கப்படவில்லை, சாப்பாடு கொடுக்கப்பட்டது என்று சொல்லச் சொன்னார்கள். அப்படிக்கூட சில சூழ்நிலைகளை உருவாக்கிவிட்டார்கள். இப்படியெல்லாம் நீங்கள் சொல்லுங்கள் என்று சொல்லச் சொன்னார்கள். ஒவ்வொரு நாளும் என்ன என்ன சாப்பிட்டோம் என்று சொல்லச் சொன்னார்கள். இதையெல்லாம் மறந்துவிட்டு அரசியல்வாதிகள் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசியலில் இப்படிப்பட்ட கறுப்பு அத்தியாயங்கள் நிலைநாட்டப்படுவது அவசியமா? எந்த அரசாங்கமாக இருந்தாலும், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அரசியல்வாதிகள் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இப்படி பழி வாங்கக்கூடிய அளவிற்கு நிர்வாக இயந்திரத்தில் நிர்வாக அமைப்பில் .அதற்கு அனுமதி அளிப்பது சரியா என்று கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் இம்மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாத்திரமல்ல. இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறது. பழைய காங்கிரஸ் கட்சி இருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. இன்னும் பல்வேறு கட்சிகள் இருக்கின்றன. கட்சி சார்பற்ற வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். ஆனந்த மார்க்கிஸ் இருக்கறார்கள், ஆர். எஸ். எஸ், காரர்கள் இருக்கிறார்கள் சர்வோதயவாதிகள் கூட இதில் விட்டு வைக்கப்படவில்லை. எல்லோரும் இருந்திருக்கிறார்கள். இன்றையதினம் ஆளும் கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் கூட இருந்திருக்கிறார்கள். அவர்கள் அங்கு செல்லக் காரணமே இதுதான். அந்த அளவிற்கு பதம் பார்க்கப்பட்டிருக்கிறார்கள் அரசியல்வாதிகள்.

இந்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கை விவாதத்திற்கு வரக் காரணமே இந்த அரசு நடவடிக்கைகளைக் எடுக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விவாதம் இன்று வருகிறது. அரசாங்கம் நினைத்தவுடன், அமைச்சர்கள் நினைத்தவுடன் நடவடிக்கைகள் எடுத்துவிடமுடியுமா என்று கேட்டால் நிச்சயமாக முடியாது. அதைத்தான் சொன்னேன். அமைச்சர்கள் நினைத்தாலும் நடவடிக்கை எடுக்க முடியாது, அவற்றையெல்லாம் வெளியே வரமுடியாத அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க முடியாத அளவிற்கு நிர்வாக இயந்திரம் உதவியாக இருக்கிறது.

ஆகவே, ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்று ஆளுநர் அவர்களைக் கேட்டபோது, அப்பொழுது ஆளுநர் ஆட்சியில் கேட்டப்பொழுது, அவர்களால் அவ்விதம் அமைப்பதாக முதலில் அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவித்து திரு. சதாசிவம் அவர்களது

பெயரை அறிவித்தார்கள். பிறகு மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்களைப் போன்றவர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இந்தக் கமிஷனை மாற்றி அரசாங்கத்திற்கு எதிராக பல தீர்ப்புகளை வழங்கி இருப்பவர் எங்கே என்று தேடிப்பார்த்து— திரு. சதாசிவம் அவர்கள் ஒரு நல்ல நீதிபதிதான், எல்லாம்சரியாக இருந்தாலும்—எங்களுக்கு அவர்கள் நீதி வழங்குவது போல் தோன்ற வேண்டும், ஆகவே திரு. சதாசிவம் அவர்களை விட்டுவிட்டு வேறு ஒருவரைப் போட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தோம். அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு திரு. இஸ்மாயில் அவர்களைப் போட்டு அவர்களால் இன்று ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தில் இருக்கிற அமைச்சர்கள் மாறியிருக்கிறார்கள். அதிகாரிகள் அப்படியே இருக்கிறார்கள். எந்த அதிகாரிகளின் அத்துமீறல்பற்றி விவாதிக்கிறோமோ யார் யார் மீது நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று நினைக்கிறோமோ அவர்கள் அதேநிலையில் அதிகாரிகளாக இருக்கிறார்கள். டி.ஐ.ஜி. (ஸி.ஐ டி.) ஆக இருந்தவர் இன்று அடிஷனல் ஐ.ஜி. ஆக இருக்கிறார், கிருஷ்ணசாமி. நாராயணசாமி என்பவர் சூப்பரெண்டாக இருந்தவர் மத்திய அரசாங்கத்தில் ஸி.ஐ.பி.டி.ஐ.ஜி ஆக இருக்கிறார் அவர்களுக்கு ப்ரமோஷன்ஸ் கொடுகப்படுகிறது, அது தடுக்கப்படவில்லை. செங்குன்றம் துப்பாக்கிச் சூடுக்குக் காரணமாக இருந்தவருக்கு இன்று ஐ.பி.எஸ் தரப்பட்டிருக்கிறது. அதைத் தடுக்கவில்லை. இப்படிப்பட்ட நிர்வாகத்தை வைத்துக்கொண்டிருப்பதால் இந்த கமிஷன் அமைப்பதில் கூட காலதாமம் ஏற்பட்டிருக்கிறது. அன்று அட்வைஸராக இருந்த திரு. கார்த்திகேயன் இன்றும் இருக்கிறார். அட்வைஸராக அவர் இருந்தபோது. ஐ.ஜி.க்கு தாக்கீது அனுப்பி சிறையில் நடந்த கொடுமைகள்பற்றி விசாரித்து வாருங்கள், சிறையில் நடத்த சம்பவங்கள் பற்றி விசாரியுங்கள் என்று சொன்னார்கள். ஐ.ஜி(பிரிசன்ஸ்) ஒரு அறிக்கை கொடுக்கிறார். அதை அவர்கள் ஏற்று கொண்டு அதை மத்திய அரசுக்கு அனுப்புகிறார், அது மத்திய அரசுக்கு போகிறது. அதிகாரிகளின் அறிக்கையை அவர்கள் அப்படியே ஏற்றுக்கொள்வது என்பது நியாயமா?

இப்போது இஸ்மாயில் கமிஷன் அறிக்கை வந்திருக்கிறது. டேவிட் என்று ஒரு வழக்கறிஞர். அவர் சிறையில் இருக்கிறார். அவர் குடும்பம் வெளியே இருக்கிறது. அவர்கள் குடும்ப அலவன்ஸ் வேண்டுமென்று கேட்கிறார்கள். ரூ50, ரூ100 கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அது செக்யூரிட்டி ப்ரிசினர்ஸ் ரூல்ஸில் இருக்கிறது. அதைக் கேட்கிறார், அது மறுக்கப்படுகிறது. காரணம் என்ன? அவர் தகப்பனார் ஐ. டேவிட், இருக்கிறார், அவர் சம்பாதிக்கிறார், அந்த சம்பாத்தியத்தைக் கொண்டு அந்தக் குடும்பத்தை நடத்தலாம் என்று சொல்லி அந்த குடும்ப அலவன்ஸ் மறுக்கப்படுகிறது. தகப்பனார் ஐ. டேவிட், 1940லே இறந்துபோனார். அலவன்ஸ் கேட்கும்போது, டேவிட், ஸன் ஆப் லேட் ஐ. டேவிட் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கூட அதிகாரிகளுக்குப் புரிய

வில்லை. கீழே இருந்து போகிறது. அது சீப் செகரட்டரி வரை போகிறது. அவர்கள் கையெழுத்து இட்டு அனுப்புகிறார்கள். கடைசியில் சப் இன்ஸ்பெக்டர் அறிக்கையில் என்ன எழுதி வைக்கிறாரோ அதுதான் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அப்போது குடும்ப அலவன்ஸ் கேட்டோம். 'நான் தொழிற் சங்க வாதி என்பது உண்மைதானா என்பதைத் தெரிந்து கொண்டார்கள். தொழிற்சங்க பொறுப்புகளை எல்லாம் பறிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். அது நடக்கவில்லை, அலவன்ஸ் கொடுப்பதற்கும் தடை செய்ய முயற்சித்தார்கள். அதெல்லாம் என்னுடைய சொந்தப் பிரச்னை. அதை நான் பேச முன் வரவில்லை.

தோழர் அரிபட், அவர் திருமணம் ஆவதற்கு முன்பு சிறையில் இருந்த போது குடும்ப அலவன்ஸ் கிடைத்தது. கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் திருமணம் ஆகி குழந்தைகள் பெற்ற பிறகு அலவன்ஸ் கேட்கும் போது கொடுக்கப்படவில்லை. ஆகவே, இதற்கு ஒரு வரம்புமுறை இல்லாமல் அதிகாரிகள் தடையாக இருந்தார்கள். அவர் தனக்கு குடும்ப அலவன்ஸ் வேண்டும் என்று கேட்டு பல முறை எழுதினார், வழக்கறிஞர் மூலமாகவும் கொடுக்கப்பட்டது. ஆனால் அப்போது இருந்த நிர்வாக அமைப்பு, இதைப்பற்றி ஆராய்ந்த போது விருப்பு வெறுப்புகளோடு பிரச்னைகளை ஆராய்ந்தார்கள். அப்போதிருந்த அதிகாரிகளுக்கும் அவசர நிலை இருந்தது. அவர்களுக்கு சுயேச்சையாக செயல்பட முடிந்ததா என்றால், அதிகாரிகளுக்கும் அந்த நிலை இருந்தது. இது எல்லா அதிகாரிகளிக்குமா என்றால் அப்படியில்லை. சில அதிகாரிகள் வேறுவிதத்தில் நடந்து கொண்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது, சில பொறுப்புகளில் இருந்த டி. ஐ. ஜி. ஸி. ஐ. டி. துரை இப்படிப்பட்டவர்கள் மீது குற்றம் சுமத்த வேண்டும் என்று கதிரேசன் என்பவர் மூலம் வாக்குமூலம் வாங்க முயற்சித்தார் கிருஷ்ணசாமி என்பவர். இப்போது அவர் தான் அடிஷனல் ஐ.ஜி.யாக இருக்கிறார். என்ன செய்வது? இவர் தான் அன்றைக்கு கதிரேசனை அழைத்து கட்டாயப்படுத்தி போலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஸ்டேட்மென்ட் வாங்கினார்.

அப்படியானால் என்ன நிலைமை, அச்சமற்ற ஒரு சூழ்நிலையில் யாரும் இயங்க முடியவில்லை. அப்போது யார் அச்சமில்லாமல் இயங்க முடிந்தது? ஐ.ஜி.ஆஃப் பிரிஸன்ஸ் ஜெயிலுக்கு வந்தாலும் அவரோடும் ஸி.ஐ.டி.க்கள் வந்து கொண்டிருந்தார்கள். ஐஜி.க்கு ஏதாவது கண்ட்ரோல் இருந்ததா என்றால் நிச்சயமாக இல்லை. அப்படியிருந்தால் வித்தியாசாகர் செயல்பட்டது எந்த நிலையில் இருந்திருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஐ.ஜிக்கு ஓவர் ஆல்-கண்ட்ரோல் இருந்தும், பிரச்னை யாரிடத்தில் வருகிறது என்றால், கடைசியில் பக்தவத்சலம் அவர்களிடம் வந்துவிட்டது. பக்தவச்சலம் யார்: பெரிய மனிதர்,

அவராக இருந்தாலும் சரி, அழகேசனாக இருந்தாலும் சரி, அன்றைக்கு அரசியல் சூழ்நிலையில் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது என்பதையும், அதற்குத் தகுந்தாற் போல் காரியங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. இதில் சூப்பிரண்டாக இருந்தவர் வித்தியாசாகர், அவர் தான் இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் என்று இஸ்மாயில் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். வேறு யாரும் காரணமல்ல என்றும் சொல்லப்பட்டிருக்கிறது: அந்த அளவுக்கு நிலைமை இருந்திருக்கிறது. இதில் ஐ.ஜி. என்ன செய்ய முடியும்? பரம குரு என்ன செய்ய முடியும்? இப்படிப்பட்ட அதிகாரிகளை எல்லாம் தூக்கி எறிய வேண்டும் என்பதற்காக நாங்கள் இதைப் பயன்படுத்தவில்லை.

அன்றைக்கு அத்துமீறி நடத்த அதிகாரிகள் இன்றைக்கு அடிஷனல் ஐ.ஜி.யாக நியமிக்கப்பட்டிருக்கிறார்: தன் இலாகாவிலுள்ள அதிகாரிகள் மீதே ஏதாவது வழக்குகளைப் போட முடியுமா என்பதற்காக இவர்கள் எல்லாம் இந்தந்த போலீஸ் அதிகாரிகள் ஒரு இடத்தில் தவறாக நடந்து கொண்டார்கள், தன்னுடைய விருந்தினர் மாளிகையில் வந்து இருந்தார்கள் என்று கதிரேசனிடத்தில் வாக்குமூலம் வாங்கினார். அந்த அளவுக்கு கதிரேசனைப் பயன்படுத்தினார்கள். அவர்களுடைய நிலைமை என்ன?

இன்றைக்கு கயிலை மன்னனுடைய நிலைமை என்ன? இவர்களுடைய வாழ்க்கை என்ன ஆவது? இவர்கள் மட்டுமல்ல, நமது நெல்லை ஜெபமணி அவர்கள், உடலில் எந்தவிதமான தெம்பும் இல்லாதவர், நீண்டநாள் காங்கிரஸ் தொண்டர், வயதான தியாகி இவர் என்று சொன்னால், இன்னும் கொஞ்சம் தியாகம் செய் என்று சொல்லி அவரை விடவில்லை. அவரது உடலை கம்பு தீண்டவில்லையா? அப்படிப்பட்ட தியாகிகளுக்கும் அங்கேகொடுமை நடந்தது. அங்கே சூப்பிரண்டண்ட் ஆஃப் ஜெயில் என்றிருந்தவர் 'கிங் ஆஃப் கிங்ஸ்' என்ற முறையில் தான் நடந்த கொண்டிருந்தார். எங்களிடம் நேரிடையாக சொன்னார் 'I am the k ng of kings' என்று சொல்லி, அரசியல் வாதிகளை கேவலமாக நடத்தினார். இப்படிப்பட்ட நிலைமை இருக்க வேண்டுமா என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட அதிகாரிகள் இன்னும் இருக்கின்ற நிலைமையில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றால் நாம் எதற்காக இருக்கிறோம் என்றே புரியவில்லை. இப்படி நடந்த கொடுமைகள் எல்லாம் உண்மை தான் என்ற அளவில் இஸ்மாயில் அவர்கள் எழுதியிருக்கிறார். சூப்பிரண்டை கட்டுப்படுத்துவதற்கு டி.ஐ.ஜி.க்கு கூட அதிகாரம் இல்லாத நிலை இருந்திருக்கிறது. டி.ஐ.ஜி. நினைத்தால் சிறைச்சாலைக்குப் போய் பார்க்க முடியாது. ஐ.ஜி. சொன்னால் தான் போய்ப் பார்க்கலாம் என்கின்ற நிலை இருந்தது. காரணம், சிறைச்சாலை சூப்பிரண்டாக இருந்தவர் நேரடியாக மேலிடத்தில் தொடர்பு வைத்திருந்தார். பொது

வாக அதிகாரிகள் எல்லாம் அச்சமான சூழ்நிலையில் பணியாற்றி வந்திருக்கிறார்கள். வேண்டாதவர்களை எல்லாம் பழிவாங்கு கின்ற நிலைமையும் இருந்து வந்தது. இதில் மட்டுமல்ல, எல்லாத துறைகளிலும், கல்வித் துறையில் இயக்குநராக இருந்த பெருமாள் பழிவாங்கப்பட்டார். இருக்கின்ற அதிகாரிகளில் தங்களுக்கு இருக்கின்ற பிடியை வைத்துக் கொண்டு மற்றவர்களை பழி வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் அதிகாரிகள் அச்சமான சூழ்நிலையில் பணியாற் றிக்கொண்டிருந்தார்கள். சிறைத் துறையைப் பொறுத்த அளவில் ஆக்டீவ்வாக தான் யாரையும் விரும்பவும் இல்லை, வெறுக் கவும் இல்லை ஆனால் அதிகாரிகள் அத்துமீறி நடந்து கொண்டதை நாம் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியாது. இந்த சிறை சூப்பிரண்டன்டெண்டை எடுத்துக் கொண்டால், யாரையும் அவர் மதிக்காத முறையில் இன்னும் சொல்லப் போனால் ஜூனியர் களை உட்கார வைத்துக்கொண்டு மற்றவர்களை நிற்கச்சொல்லி பேசுகின்ற முறையில் கேவலமாக நடத்துவார்கள்.

இந்த நிலைமையில் தான் ஹோம் செகரட்டரியாக இருந்தவர் சுப்பிரமணியம் அவர்கள்—உண்மையில் இன்றைக்கு ஓரளவு மூச்சு வாங்க முடிகிறது என்று சொன்னால் அதற்கு காரணம் மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள் தான் சிறையில் வந்து கேட்டார்கள். அவர்கள் எழுதியதெல்லாம் இன்றைக்கு காற்றோடு கலந்திருக்குமானால் இன்றைக்கு நாங்கள் சொல்வதை யாரும் நம்பியிருக்க மாட்டார்கள்.

[முற்பகல் 10.50]

அந்த சுப்பிரமணியம் என்ன அரசியல் வாதியா? இல்லை. அவர் அவ்வாறு கொடுக்கப்பட்ட புகாரின்மீது நடவடிக்கை எடுத்து செயல்பட்ட காரணத்தினால் தான், நாம் இந்த அளவுக்காவது பேசிக் கொண்டிருக்கிறோம். அதைக்கூட சில பெரிய மனிதர் கள், அந்த சுப்பிரமணியத்திற்கும் மாறனுக்கும் தொடர்பு இருக் கிறது, இந்த அதிகாரிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற் கும் தொடர்பு இருக்கிறது என்று சொன்னார்கள். அவ்வாறு சொல்வது சரியல்ல. அதிகாரி என்ற முறையில் கொடுக்கப் பட்ட புகாரை விசாரிக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

அரசியல்வாதியின் தலையீடு இருக்கின்ற சூழ்நிலையில், எந்த அதிகாரியும் அச்சமின்றி செயல்பட முடியாது. இந்த சிறை அதிகாரி வித்யாசாகர் அதற்கு முன்பு நல்லவராக இருந்தார் என்று சொல்கிறார்கள். இப்போது கூட நல்லவராக இருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அன்றையத் தினம் அரசாங் கத்தின் தலையீடு காரணமாக, அப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கிறார்.

இதிலே நாங்கள் எல்லாம் சம்பந்தப்பட்டிருக்கிறோம். நாங்கள் எல்லாம் மோசமாக அந்த அளவுக்கு தாக்கப்பட்டோம். வேறு யாருக்கும் அவ்வாறு நடந்திருக்க முடியாது. வேறு யாருக்கும் அந்த மாதிரியான நிலைமை வரக்கூடாது என்று எண்ணுகிறேன்.

அமரர் சிட்டிபாபு அவர்களுடைய டைரி ஒரு இலக்கியமாக மாறிவிட்டது. அதைப் படித்துப் பார்க்க வேண்டும். அது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் சொந்தமானதாகக் கருத வேண்டியதில்லை. தூக்கு மேடை சென்ற ஜூலியஸ் கருத் துக்களைப் படித்திருக்கிறேன். அப்போது கூட என் உள்ளம் உருகவில்லை. சிட்டிபாபுவின் டைரியைப் படித்தபோது, அவரு க்கு ஏற்பட்ட சம்பவங்களையும், கொடுமைகளையும் படிக்கும் போது நான் உள்ளம் உருகிவிட்டேன். அவ்வளவு கொடுமைகள் நடந்திருக்கிறது. அடே சிட்டி, அடே விராசாமி என்றுதான் கூப்பிடுவார்கள். நாம் வேண்டுமானால், ஆற்காடு வீராசாமி என்று கூப்பிடலாம்.

அதேபோல், அன்றைய தினம் முதல் அமைச்சராக இருந்த, 31ஆம் தேதி வரை முதலமைச்சராக இருந்தவருடைய மகன் ஸ்டாலினை அடித்து, ஒடுக்கி, நொறுக்கி இருக்கிறார்கள், காரணம் என்ன வேண்டுமானாலும் சொல்லியிருக்கலாம்; அதற்குள்ளே நான் வரவில்லை.

அதேபோல், அன்றையத்தினம் அண்ணா திராவிட முன்னேற் றக் கழகத்திலே இருந்த முருகமணிக்கும் வந்தது. நண்பர் மனோகரன் அவர்கள் பாராளுமன்றத்திலே இருந்து, செல்வாக்கு பெற்று இருந்த காரணத்தால், அவரை விரைவிலே வெளியே கொண்டுவர வாய்ப்பு ஏற்பட்டது. எங்களால் அப்படி முடிய வில்லை, காரணம் செல்வாக்கு இல்லை. அதற்குள்ளேயும் செல்ல விரும்பவில்லை.

ஆனால், இதிலே எல்லோரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். எங்கும் காணாத அளவுக்குக் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கிறார் கள். கல்கத்தா பிளாக்-ஹோல் டிராஜடியை விட இது மிகவும் மோசமாகி விட்டது. வேறு எந்த சிறைகளிலும் இந்த மாதிரியான கொடுமைகள் நடைபெறவில்லை. சென்னைச் சிறை யிலே மட்டும்தான் இம்மாதிரி அரசியல் கைதிகள் நடத்தப்பட் டார்கள்.

இந்த வித்யாசாகர் இப்படி அடித்து நொறுக்குவதற்குப் பயன் படுத்தப்பட்டிருக்கிறார், அதிகாரி சொன்னால், கேட்க வேண்டு மென்ற நிலைமையிலே தான் கீழே உள்ள அதிகாரிகள் அடித்து, நொறுக்கி இருக்கிறார்கள். சிறைச்சாலை அதிகாரியாகவுள்ள வித்யா சாகருக்கு அத்தனை அதிகாரமிருக்கிறது. முதல் அமைச்சர் சிறைச் சாலைக்கு சென்று பார்வையிட்டு விட்டு வந்தார். அதைப்போல்,

இஸ்மாயில் அவர்களும் சிறைச்சாலைக்குப் போய் பார்த்துவிட்டு வந்தார். ஆனால் என்ன நடந்தது? முதல் அமைச்சர் அவர்களிடத்திலும், இஸ்மாயில் அவர்களிடத்திலும் அவர்கள் வந்த போது, அங்கு என்ன நடந்ததோ அதைச் சொன்னார்கள் என்ற காரணத்திற்காக, அந்த 50 கைதிகளை, அவர்களது கை கால்களை எல்லாம் கட்டி, ஒரு தனிச் சிறையிலே அடைத்துக் கொடுமைப் படுத்தினார்கள். அவர்கள் பின்னர் வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்களிடமும், இஸ்மாயில் அவர்களிடமும் அங்கே நடந்ததைச் சொன்னதற்காக, இந்த 50 கைதிகள் தனித்தனியாக கை, கால்கள் கட்டப்பட்டு, அவர்கள் கை, கால்களையெல்லாம் ஒடித்து, மண்டையை நொறுக்கி, தனிச் சிறையிலே அடைக்கப்பட்டதோடு அல்லாமல். பின்னாலே வேறு சிறைகளுக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டவர்கள், திரும்பவும் மாற்றப்படாமல் இருக்கிறார்கள்.

இந்த அவையில் இதையெல்லாம் சாதிக் பாட்சா அவர்கள், அங்கே நடந்த கொடுமைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்ன போது, முதல் அமைச்சர் அவர்களை ஒரு ஓய்வுபெற்ற நீதிபதியைக் கொண்டு விசாரிக்க வேண்டும் என்று சொன்ன போது முதல் அமைச்சர் அவர்களும் மனம் உருகி அவ்வாறு நிச்சயம் விசாரிக்க வேண்டும், அப்படி ஓய்வுபெற்ற நீதிபதியைக் கொண்டு விசாரிக்கிறேன் என்று ஒரு உறுதிமொழியை, அஷ்யூரன்சைக் கொடுத்தார்கள். முதல் அமைச்சர் அவர்களின் அந்த உறுதிமொழி என்ன ஆயிற்று?

ஓய்வு பெற்ற நீதிபதியைப் போட்டிருக்கிறார்கள், எதற்கு? 82 வயதான ஒரு ஓய்வு பெற்ற நாயக்கர் நீதிபதியை போட்டு 72லே இருந்து என்னென்ன நடந்திருக்கிறது என்பதற்குப் போட்டிருக்கிறார்கள். என்ன காரணம்? முதல் அமைச்சர் அவர்கள் போட வேண்டுமென்று அப்படிச் சொன்னாலும், இந்த சட்ட மன்றத்திலே அப்படி ஒரு உறுதிமொழி கொடுத்தாலும், இந்த சமாசாரத்திற்கு அப்படி ஒரு ஓய்வுபெற்ற நீதிபதியைப் போட வேண்டிய அவசியமில்லை என்று சொல்கிறார்கள்.

நாம் என்ன சொன்னாலும் அதிகாரிகள் அவ்வாறு செய்ய மாட்டார்கள். நாம் நினைக்கின்ற படி காரியங்கள் நடக்காது. அதனால்தான், நான் இந்த சட்டமன்றத்திலே பகிரங்கமாகவே இதைப்பற்றிச் சொல்லி, உங்கள் கரங்களை வலுப்படுத்த இருக்கிறேன்: உறுதிமொழி கொடுக்கப்பட்டால், அதை அதிகாரிகள் நிறைவேற்றி ஆகவேண்டும். ஆனால், ஹோம் செகரட்டரி என்ன கருத்து சொல்கிறார்? இப்படி ஒவ்வொரு சம்பவங்களுக்கும்.

இந்தமாதிரி ஓய்வுபெற்ற நீதிபதி விசாரணைத் தேவையில்லை என்று சொல்கிறார். அமைச்சர் சொல்வதை அதிகாரி கேட்கவில்லை என்று சொன்னால், அதற்கு அமைச்சர்கள் எதற்காக இருக்கிறார்கள். நாம்தான் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் கூற்று நடைமுறைப் படுத்தவில்லை.

நீதிபதி இஸ்மாயில் அவர்கள் ஒரு உயர்ந்த இலக்கியத்தைப் படைத்திருக்கிறார்கள். இதைவிடச் சிறந்த இலக்கியம் பார்க்க முடியாது. அவ்வளவு சிரத்தையோடு, டிவோஷனோடு அவர்கள் இந்த இலக்கியத்தைப் படைத்திருக்கிறார்கள். வரலாற்றிலே ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

அமைச்சர்கள் படித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னால் மறுபடியும் அது, அந்த அதிகாரியின் கைக்குத்தான் போகிறது. எந்த அதிகாரி குற்றம் செய்த அதிகாரிக்கே அது போகிறது. என்ன நீதிபதி, என்ன அட்மினிஸ்ட்ரேஷன், என்ன நிர்வாகம்? இந்த நிர்வாக இயந்திரத்தை வைத்துக் கொண்டு எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்?

ஓய்வுபெற்ற நீதிபதி அறிக்கை கொடுத்திருக்கிறார். சட்டமன்றத்திலே சொல்லுகிறோம். முதலமைச்சர் பார்த்து நடவடிக்கை எடுக்க முடியுமா? மறுபடியும் அந்த அதிகாரிகளுக்குத்தான் அனுப்புகிறோம் என்றால் என்ன அர்த்தம்? அன்று இதிலே செகரடரிதான், இதே சீஃப் செகரடரிதான் இதிலே சம்பந்தப்பட்டிருந்தார்கள். * * *

இஸ்மாயில் கடவுள் மாதிரி வந்தார்; எங்களுக்குக் கடவுள் மேல் நம்பிக்கையில்லை என்றாலும் இஸ்மாயில் மேல் நம்பிக்கை வந்து விட்டது.

சர்க்கார் நடவடிக்கை எடுப்போம் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். எப்படி அந்த உறுதிமொழியை நிறைவேற்றப் போகிறார்கள்? அதிகாரிகள் என்ன செய்யப்போகிறார்கள்?

வழக்கறிஞர் அலவன்ஸ் கிடையாது என்று சொன்னார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொன்னார்கள். யார் யார் பொறுப்பு? அதற்கு சீஃப் செகரடரி பொறுப்பு இல்லையா? லேட்டேவிட்டைப் போய் அப்பன் உயிரோடு இருக்கிறார் என்று

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சொல்லி மகனுக்கு அலவன்ஸ் கொடுக்க மறுக்கப்படுகிறது. இது கேலிக் கூத்தாக இல்லையா ? இறந்து போன ஒருவரை உயிரோடு இருக்கிறார் என்று சொன்னார்கள். ஆகவே, இவருக்குப் பணம் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். இவ்வாறு நடைபெற்ற பல வருந்தத்தக்க சம்பவங்களை நினைத்தும் பார்க்க வேண்டும். எவ்வளவு மோசமான நடவடிக்கைகளை நடத்திக் காட்டியிருக்கிறார்கள் ? இப்படிப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் சீரான அடிப்படை இல்லையா ? இதே சீஃப் செகரடரிதான், எந்த சீஃப் செகரடரி ‘ நான் குற்றவாளி தான் ; என் மீது நடவடிக்கை எடுங்கள் ’ என்று எந்தப் பைத்தியக்காரன் சொல்லுவான் ? இன்றைக்கும் அதே டி.ஐ.ஜி.தான் சி.ஐ.டி.க்கள்தான். நெருக்கடி நேரடித்தில் அத்து மீறல்களை நடத்தியவர்கள் அவர்கள்தான்.

பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்கு நாராயணசாமியை மாற்றினீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது இருந்தவர்கள் இப்படி இருந்தார்கள் என்று யாராவது சொன்னால் அவர்கள் மாற்றப்படுகிறார்கள். ஸ்ரீபால் மீது வழக்குத் தொடர ஏன் நடவடிக்கை எடுத்தார்கள் ? கதிரேசனிடத்தில் என்ன ஸ்டேட்மென்டை வாங்கினார்கள் ? தங்களுடைய அதிகாரிகளிடத்திலேயே இப்படி ஸ்டேட்மென்ட் வாங்கினால் சர்க்காரியா கமிஷனுக்கு எப்படி ஸ்டேட்மென்ட் வாங்கியிருப்பார்கள் ? அது சர்க்காரியா கமிஷனா ? அது ‘ சர்க்கார் ஐயா’ கமிஷன்.

எப்படிப்பட்ட சூழ்நிலையில் அத்து மீறல்கள் நடந்தன என்பதை ஷா கமிஷன் கூறியிருக்கிறது. அத்து மீறல்கள் நடந்திருக்கின்றன. என்ன மாரல் ரெஸ்பான்சிபிலிடி ஏற்பட்டிருக்கிறது ? நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட அத்துமீறல்களுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கையின் மீது அரசாங்கத்தை ஒரு விஷயத்திற்காகப் பாராட்ட வேண்டும். அதை விரிவான முறையில் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சடித்து வைத்திருக்கிறார்கள். அதைப் படித்திருப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நான் முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்வேன்-எவ்வளவு மோசமான நிலைமையில் அதிகார வர்க்கம் நடந்து கொண்டிருக்கிறது.

இந்த அதிகார வர்க்கத்தை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்துகிறபோது அவர்கள் செய்கின்ற காரியங்கள் நம்முடைய அமைச்சர் பி.டி. சரஸ்வதியை பாதிக்கிறது. மற்றவர்களைப் பாதிக்கிறது. அதிகாரிகளா மக்களிடம் போய் ஓட்டு வாங்கப் போகிறார்கள் ? எலக்ஷனில் அவர்கள் நின்றால் சப்-இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள் கூட ஓட்டுப் போடமாட்டார்கள். எலக்ஷனில் நிற்காதவர்கள் எலக்ஷனில் நின்று வருகிறவர்களுக்குள் ஒருவருக்கொருவர் சண்டை மூட்டிக் கொண்டிருக்கிறார்கள். சிறைத் துறை விதிகள் என்னென்ன ? அந்த விதிகள் பின்பற்றப்படுகின்றனவா ?

சர்ச் செய்கிறார்கள். எவ்வளவு ஹ்யூமிலியேஷன் ? நீங்கள் ஜெயிலுக்குப் போகவில்லை. உங்களுக்குத தெரியாது. நான் கம்யூனிஸ்டு கட்சியில் இருக்கும்போது மூன்று முறை சிறைக்குச் சென்றிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்த அந்தப் பாவத்திற்காக ஓராண்டுக் காலம் உள்ளே இருந்தவன். ஓராண்டுக் காலத்திலே எப்படி எல்லாம் நடத்தப்பட்டோம் ? சட்டையைக் கழட்டு, அதைத் திற என்றெல்லாம் சொல்லி ‘ சர்ச் ‘ என்ற முறையில் உற்யூமிலியேட் செய்வார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து உள்ளே போட்டவர்கள் மீது கேஸ் போட்டார்களா என்றால் இல்லை. என்னைக் கூட விசாரித்தார்கள். ஒரு கேஸ் போடுவார்கள் என்று பார்த்தேன். போடவில்லை.

என்னிடம் சி.பி.ஐ. அதிகாரியை அனுப்பினார்கள். ’வெளியே வரவேண்டுமா ?’ என்று கேட்டார்கள். இதை விட வெளியே அசிங்கமாக இருக்கிறது. உள்ளேயே இருக்கிறேன், ஜெயிலே நன்றாக இருக்கிறது என்று சொன்னேன். கொடுமைகள் நடந்தனவா என்று கேட்டார்கள். ‘ஆமாம்’ என்று சொன்னால் பிறகு ‘ ஆமாம் என்று சொன்னாயா ?’ என்று கேட்டுவிட்டு உதைப்பான். நீதிபதி இஸ்மாயில், அமைச்சர் குழந்தைவேலு கோவை சிறைச்சாலைக்குச் சென்று பார்த்தார்கள். அமைச்சர் குழந்தைவேலுவிடம் ‘என்னை அடித்தார்கள்’ என்று சொன்னால் பிறகு ‘ அமைச்சரிடம் சொல்லும் அளவுக்கு பெரிய மனிதனாகி விட்டாயா ?’ என்று அடிப்பார்கள்.

(முற்பகல் 11-00.)

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கோயம்புத்தூர் சிறைச்சாலைக்கு நான் சென்று வந்தது உண்மை தான். அவர்களுடைய குறைபாடுகளை நீக்குவதற்காகத்தான் நான் கோவை சிறைச்சாலைக்குச் சென்று வந்தேன். அங்கே கைதிகளை அடித்ததாகவோ துன்புறுத்தியதாகவோ எந்தப் புகாரும் இந்த அரசுக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. க. சுப்பு</u> : அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்தால்தான் நடவடிக்கை எடுத்திருப்பார்கள், ஆனால் தெரியவில்லை. என்ன செய்வது ? ஏதாவது அனுப்பவேண்டுமென்றால் அந்த சூப்பிரண்டெண்ட் மூலமாகத்தான் அனுப்பவேண்டும் என்றால யார் அனுப்புவார் ? என்னை அடித்தார்கள் என்று புகார் கொடுத்தால்

எந்த சூப்பிரண்டெண்டெண்டு அதை பார்வர்ட் செய்து அனுப்புவார்? எந்த சூப்பிரண்டெண்டெண்டும் அனுப்ப மாட்டார். திருத்தி சூப்பிரண்டெண்டெண்ட் தான் அனுப்பவேண்டுமென்றால், வரவில்லையாம் எப்படி வரும்? நம்மை நாமே காட்டிக்கொடுக்கிறோமே என்று அவர்கள் நினைக்கமாட்டார்களா?

<u>The Hon· Thiru K· Narayanaswamy Mudaliyar</u>; While the hon. Member Thiru Suppu was making an almost emotional speech, I did not want to disturb and intervene at that stage· * * * * * I pray that the Hon· Deputy Speaker may please direct expunction of those remarks·

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u>: தலைவர் அவர்களே, ஜஸ்டிஸ் சதாசிவத்திற்கும் வித்தியாசாகர் உறவினர் என்று நான் தான் கடிதம் எழுதினேன் கவர்னருக்கு. அந்த அடிப்படையிலே ஜஸ்டிஸ் சதாசிவம் அவர்கள் பெருந்தன்மையாகம் ராஜிநாமா செய்தார்கள், அதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்;

I made a mention in the letter to His Excellency the Governor that Justice Sathasivam is related to Vidyasagar. I have not stated that he is related to Thiru· Karthikeyan nor did Thiru· Suppu refer like that.

<u>திரு. க. சுப்பு</u>: நாங்கள் எல்லாம் நீதிபதி சதாசிவம் அவர்கள் மீது ரொம்ப மதிப்பு வைத்திருக்கிறவர்கள். ஒரு வழக்கறிஞர் தன் சொந்தக்காரக்குக் கூட வாதிடக் கூடாது என்றெல்லாம் நாம் விதிகளை வைத்திருக்கிறோம்......

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: பாக்கி விஷயங்கள் இருக்கட்டும். * * * என்ற அந்தப் பகுதியை நீக்கவேண்டுமென்று ஆணையிடுகிறேன்

<u>திரு. துரை முருகன்</u>; பாதிக்கப்பட்டது நாங்கள், உங்களுக்கு அதில் என்ன கவலை?

<u>திரு· க· சுப்பு</u>: நாம் இப்போது இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப் பற்றித்தான் விவாதித்துக் கொண்டிருக்கிறோம் மற்றவிஷயங்களைப் பற்றி அவைகளை நீங்கள் மாற்றுவதிலே எங்களுக்குக் கவலையில்லை. இஸ்மாயில் அவர்கள் எந்த அளவிற்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால், யார்

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது·

யார் சம்மந்தப்பட்டவர்கள், யார் யார் அதிலே நேரடியாகத் தொடர்புடையவர்கள் என்றெல்லாம் அத்தனை அதிகாரிகளும் அன்றைக்கு அச்சமற்ற நிலைமையில் இயங்கமுடியாவிட்டாலும்கூட, அந்த அதிகாரிகள், எந்த அளவிற்கு நியாயத்திற்குப் புறம்பான முறையிலே நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இம்மாதிரி சென்னையிலே தான் நடந்தது, வேறு எங்கேயும் நடக்கவில்லை ஏன்? அரசியல்வாதிகள் கூடாரம் இங்கே தான் போட்டிருந்தோம். அந்த முறையிலே ஆடுமாடுகளைப் போல் நடத்தினார்கள், நாங்கள் எல்லாம் ஆடுமாடுகளைப் போல் தவித்துக்கொண்டிருந்தோம். அந்த அதிகாரிகள். தொடர்ந்து நீடிக்கிறார்கள், அவர்கள் தொடர்ந்து தவறுகளை —தவறுகளை அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை—செய்து கொண்டு நான் வருகிறார்கள், அதனால்தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னதைக்கூட நிராகரிக்கக்கூடிய முறையிலே இன்றைக்கு அவாகள் அறிக்கையை எழுதிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், யார் யார் நேரடியாகத் தொடர்புகொண்டவர்கள் என்று எல்லாம் அச்சடித்துக் கொடுத்திருக்கிறீர்கள். இவைகளையெல்லாம் நாம் படிக்கிறோம், சிட்டிபாபுவின் டயரியை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம், நீங்கள் இந்தப் புத்தகத்தை அச்சடித்துக் கொடுத்திருக்கிறீர்கள் அவ்வளவுதான். ஆனால் உங்களுடைய மாரல் ரெஸ்பான்ஸிபிலிடி என்ன? இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ன அருமையாக எழுதியிருக்கிறார்கள். நீங்கள் படிக்கிறீர்கள். அவை முன்னவர் அவர்கள் படித்துவிட்டு வெளியே போய்விட்டார். இருந்தார் என்றால் ஒப்புக்கொண்டுதானே ஆகவேண்டும்· ஆகவே, வெளியே போய் விட்டார்.

எவ்வளவு அருமையான கட்டுரைகளை எழுதினார்கள். இந்து பத்திரிக்கையிலே எழுதினார்கள். ஒவ்வொரு பத்திரிக்கையிலேயும் எழுதினார்கள். இந்தப் பத்திரிக்கைகளெல்லாம் என்ன சொல்லுகின்றன? கட்சி அரசியலுக்குப் போகாமல், அரசியல் கைதிகள் எவ்வளவு கொடுமையாக நடத்தப்பட்டார்கள், சிறைச்சாலையை எவ்வளவு சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்றே கருத்தையெல்லாம் சொல்கிறார்கள்· பழைய நேரத்தை மறந்துவிடுகிறோம், ஜெயிலுக்குள்ளே நாம் இருக்கும்பொழுதுதான், இதையெல்லாம் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று நினைக்கிறோம், ஆனால் வெளியிலே வந்தவுடன் மறந்துவிடுகிறோம்.

கைதி யாராவது கடிதம் எழுதினால்கூட அவன் கிடக்கிறான், கைதிதானே என்று நினைக்கக்கூடிய நிலைமையிருக்கிறது· நக்சலைட் கைதிகள் என்று உள்ளே போடுகிறார்கள், நாங்களெல்லாம் நக்சலைட்களா? நீங்களும் நக்சலைட் என்று உள்ளே பிடித்துப் போட்டாலொழிய நீங்கள் ஒத்துக்கொள்ள மாட்டீர்கள். யார் நக்சலைட்? அரசியல் கருத்து மாறுபாடுகள் இருந்தாலும், எந்தக்

கட்சியிலே இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாணவர் தலைவர் உள்ளே இருக்கவேண்டுமா? ஏன் அலவன்ஸ் கொடுக்க மறுக்கிறீர்கள்? இதேநேரத்தில் மத்திய அரசாங்கம் பென்ஷன் கொடுக்கிறீர்கள். அரசாங்கம் உங்களுக்கு கொடுக்கவில்லை, அதற்காக கொடுக்க மாட்டோம் என்று சொல்கிறீர்கள். இங்கே இதுவரையில் பென்ஷன் கொடுக்கவில்லை. ஏன் இந்த அணுகுமுறை? மொரார்ஜிதேசாய் அவர்கள் இந்த மிசாவை ஏதாவதொரு ரூபத்திலே வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தபொழுது, ராம்செத் மெத்தானி அதில் போராடி வெற்றி பெற்றிருக்கிறார். மெத்தானி, ஜார்ஜ்பெர்னாண்டஸ் போன்றவர்கள் இருப்பதால்தான் இன்னும் அது கட்சியாகக் கருதப்படுகிறது. இல்லாவிட்டால் மோசமாகியிருக்கும். அப்படிப் பட்ட நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் சுட்டிக்காட்டுவதை இங்கே உள்ள ஆளுங்கட்சிக்காரர்கள் ஏன் மறுக்க வேண்டும், இந்த விஷயத்தில் மறுக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த அரசாங்கம் இதில் காலதாமதம் செய்திருக்கிறது. இந்த அறிக்கையின் மீது நடவடிக்கை எடுத்துவிட்டு இதை இங்கே வைத்திருக்க வேண்டும், வித்தியாசாகர் டிஸ்மிஸ், அல்லது பிராசிக்யூட்டட் என்று போட்டிருக்கலாமே, சீராளன் மர்டர் சம்பந்தமாக அரேஸ்ட் செய்ய வேண்டுமென்ற பொழுது வியாக்கியானம் செய்தார்கள். ஆனால் முன்னாள் முதல்வர், இன்றைய எதிர்கட்சித் தலைவர், ப.உ.ச. போன்றவர்கள் அரெஸ்ட் செய்யப்பட வேண்டுமா? இவர்களைவிட அவர்கள் உயர்வா உங்களுக்கு இந்த மனோபாவம் ஏன் வருகிறது? முதலமைச்சர் தான் பெரிது, அமைச்சர்கள்தான் பெரியவர்கள், கீழே இருப்பவர்கள் அதிகாரிகள் அமைச்சராக இருந்தவர்கள் கைது செய்யப்படும்பொழுது, சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் மீது 302 என்று போடுகிறபொழுது ஏன் சீராளன் வழக்கில் கைது செய்யக் கூடாது? முதலமைச்சரவர்கள் விசாரித்துச் சொல்கிறேன் என்று சொன்னார்கள். விசாரித்ததில் அப்ப[illegible] வேண்டியதில்லை என்று எழுதி விட்டார்கள் என்று சொன்[illegible] அதற்காக உங்களைக்கூடத் தொந்தரவு செய்ய வேண்டியதில்[illegible] அவர்களையே கேட்டுத் தெரிந்து கொண்டிருப்போமே. அதைச் சட்டசபையில் வந்து ஒன்றுக்கு இரண்டாக வாசிக்கின்ற நிலைமை வருகிறது என்றால் என்ன அர்த்தம்?

இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டை ஐந்து மாதங்களுக்குப் பிறகு வைத்திருக்கிறீர்கள். Justice delayed is justice denied என்று சொல்லிக்கொடுத்ததே சட்ட அமைச்சரவர்கள்தான். சொல்லி கொடுக்க மட்டுந்தானா அது? உபாத்தியாயர் வேலை என்றால் அடுத்தவனுக்குத்தான் உபதேசம், தனக்கு இல்லையா? Justice delayed is justice denied டிலேயா இல்லையா?

இப்படி ஆறு மாதங்கள் தூங்குவதா? தூங்குவதற்கு ஆறு மாதங்களா? இப்பொழுது வந்து 8 மாதங்களில் 6 மாதங்கள் தூக்கம் என்றால் பிரச்சனைகள் எப்படித் தீர்க்கப்படும், இஸ்மாயில் கமிஷன் அறிக்கையின்மீது நடவடிக்கை எடுத்துவிட்டு அதை இங்கே வைத்திருக்க வேண்டும், அந்தச் சந்தர்ப்பத்தை நீங்கள் நழுவ விட்டுவிட்டீர்கள். மீண்டும் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், கடுமையான நடவடிக்கை எடுத்து உடனே டிஸ்மிஸ் கிரிமினல் ப்ராசிகியூஷன் போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்கு எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கே வடிவேலு:</u> பேரவைத் துணைத்தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் நடந்த 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையிலும் சென்னை மத்திய சிறைசாலையில் மிசாக் கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்டது பற்றியும் அடிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டிருப்பது பற்றியும் உள்ள குற்றச்சாட்டுகளைக் குறித்து மாண்புமிகு நீதிபதி இஸ்மாயில் அவர்களை வைத்து ஒரு விசாரணையை ஏற்படுத்தி, அதனுடைய தீர்ப்பையும் பெற்றுள்ளோம்.

அந்தத் தீர்ப்பைப் பெற்றுள்ள நேரத்தில் நாங்கள் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று நினைத்தால் அந்த அறிக்கை ஒரு முழுமையான அறிக்கை அல்ல என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையில், அதாவது, இந்த ஓராண்டுக் காலத்தில் மிசாக் கைதிகள் சிறைச்சாலையில், எந்தெந்த விதத்தில் துன்புறுத்தப்பட்டார்கள், எந்தெந்த விதத்தில் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்றுதான் விசாரித்திருக்கிறது ஆனால் 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கு முன்பும் இதே மிசா சட்டம் இருந்தது, நெருக்கடி நிலைமையும் இருந்தது. அந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு இருந்த அந்த நேரத்தில் சிறைச்சாலைகளில் நடந்த கொடுமைகளைப்பற்றி விசாரித்ததா? அந்த நேரத்தில் எங்கள் கழகத்தைச் சேர்ந்த ஜேப்பியார் அவர்கள் மாபெரும் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். அதுமட்டுமல்லாமல் ஜேப்பியாரை ஐஸ் கட்டியில் வைத்து உதைத்துக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். 1975 ஆம் ஆண்டு அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தது அந்த அரசு இதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

அதுமட்டுமல்லாமல், அடியார் அவர்களைப்பற்றியும் சொல்ல விரும்புகிறேன். அடியாரை அதே திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் 1975 ஆம் ஆண்டு கைது செய்தது, அவரையும் அடித்துத் துன்புறுத்தினார்கள், கொடுமைப்படுத்தினார்கள்.

(முற்பகல் 11.10)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடியாரை அடித்த அதிகாரிகள் கூட, வார்டர்கள், ஜெயிலர்
களை வைத்து அடித்தபோது கூட அடிஷனல் சூப்பரின்டெண்டன்ட்
சுவாமிநாதன் இருந்தார்.... ......

திரு. துரை முருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவரவர்களே,
இப்போது நடப்பது இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது விவாதம்,
கிஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீதல்ல. அதைவிட்டுவிட்டு வேறு
எதையோ பேசுகிறார் உறுப்பினர். (குறுக்கீடு) எங்களுக்கும் அப்
படிப் பேசத் தெரியும், பேசமுடியும். நாங்களெல்லாம் அடி வாங்கி
யவர்கள், (குறுக்கீடு) அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
இதற்குப் பொறுப்பு என்று நாங்கள் சொல்லவில்லை. இன்னும்
சொல்லப் போனால், சுப்பு அவர்கள் சொன்ன மாதிரி, நாமெல்
லாம் அரசியல்வாதிகள் நமக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும்
அங்கே தவறு நடந்திருக்கிறது. அந்த அதிகாரிகள் மீது எப்படி
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்ல வேண்டுமே தவிர,
லாவணி அரசியலைப்போல் எதிர் பாட்டு பாடக் கூடாது என்
பதை நான் மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்
பொழுது அதிகாரிகளைக் குறிப்பிட்டார்கள். இந்த மிசாவில்,
1976-ல் அடியார் அவர்கள் மிக அதிகமான அடி வாங்கினார்கள்.
அதைப்பற்றிப் பேசினால், இந்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப்
பற்றி பேசுவதற்குப் பொருத்தமாக இருக்குர் என்று சொல்ல
விரும்புகிறேன்.

திரு. கே. வடிவேலு: பொதுவாக சிறைச்சாலையிலே நடந்த
கொடுமைகளைப் பற்றி இஸ்மாயில் அவர்கள் அறிக்கை தந்தார்
கள். 1976-க்கு முன்பும் கொடுமை நடந்தது என்று நான் சொன்
னேன்.

திரு. துரை முருகன்: அதற்கு ஜெயில் மானியத்திலே பேசட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன்.
அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது இஸ்
மாயில் கமிஷன் அறிக்கை. அதன் உள்ளே அடக்கி, அந்த அறிக்கை
யின் மீது தான் தாங்கள் பேசவேண்டும். மற்ற விஷயங்களுக்குத்
தாங்கள் போக வேண்டாம். ஆகவே, இஸ்மாயில் கமிஷன்
அறிக்கைமீது தாங்கள் பேசுங்கள்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, இது ஏதோ நிபந்
தனையை விதித்து அதற்குள்ளே தான் பேசவேண்டுமென்று தாங்
கள் சொல்வது சரியல்ல. விவாதத்திலிருப்பது இஸ்மாயில் கமி
ஷன் அறிக்கை என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம், அது
சரியா, தவறா என்று சொல்ல உறுப்பினருக்கு வாய்ப்பளிக்க.
மேற்கோள் காட்டுகின்ற வகையில் சொல்லக் கூடாதா? இஸ்மா
யில் கமிஷன், ஆங்கிலேயன் காலத்தில் என்ன கொடுமைகள
நடந்திருக்கின்றன என்று மேற்கோள் காட்டியிருக்கிறார்கள்.
இன்றைக்கு நடந்ததைச் சொன்னால். அதை யார் கேட்பது என்று
கூடக் கேட்கலாம். ஆகவே, மாண்புமிகு துரைமுருகன் சொன்ன
தைத் தாங்கள் ஏற்றுக் கொண்டதைப் போல் சொன்னது சரி
யாகவில்லையென்பதுபோல், வேறு ஏதோ வகையில் தெரிகிறது
.... (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே நான் அமர்ந்திருப்பது,
அவையின் நிகழ்ச்சிகளை ஒழுங்காக நடத்திச் செல்வதற்குத்தான்;
எடுத்துக்கொள்ளப் பெற்ற பொருளுக்கு அப்பால் விவாதம்
போகாது கண்காணிக்க வேண்டியது எனது பொறுப்பு. எனினும்
மேற்கோள் காட்டுவதிலே அது நியாயமாக இருக்கு
மானால், அதில் நான் குறுக்கிடுவதற்கில்லை. ஆனால் பிறரைப்
பாதிப்பதாகவோ, புண்படுத்துவதாகவோ மேற்கோள்
காட்டக் கூடாது என்றுதான் சொல்கிறேன். அவையில்
விவாதத்தில் இருப்பது இஸ்மாயில் கமிஷன் அறிக்கை.
ஆகவே, இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப்பற்றித்தான்
பேசவேண்டும். ஆனால், பிறரைப் பாதிப்பதாகவோ,
புண்படுத்துவதாகவோ இருக்கும் வகையில், மேற்கோள்
காட்டிப் பேசுவது நல்லதல்ல. அவையில் விவாதத்தில்
இருக்கும் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப் பற்றித்தான் பேச
வேண்டுமே தவிர, மற்றவைகளைப் பற்றி பிறர் மனம் புண்படும்
வகையில் மேற்கோள் காட்டக்கூடாது என்றுதான் கேட்டுக்
கொள்கிறேன். புண்படுத்தும் வகையில் மற்றவைகளைப் பற்றி
ஆதாரம் காட்டக் கூடாது என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. வடிவேலு: பேரவைத் தலைவரவர்களே, எனக்கு
முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் இந்த
இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப் பற்றி பேசுகிற நேரத்தில்,
எங்கள் கழகத்தைச் சேர்ந்த அமைச்சரைப் பற்றி அவர் சிறைச்
சாலைக்குச் சென்றதைப் பற்றி சொன்னார். ஆனால், அது இஸ்மா
யில் கமிஷன் அறிக்கையில் இல்லை; ஆனால், அவர் அதையெல்
லாம் எடுத்து மேற்கோள்காட்டிப் பேசியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் மேற்கோள் காட்டு
வது தவறு என்று சொல்லவில்லை. மேற்கோள் காட்டுங்கள்.
இப்பொழுது அமைச்சர் சென்று விசாரித்ததில் யாரையும் புண்
படுத்துவது இல்லை. அப்படிப்பட்ட மேற்கோள் காட்டுவதிலே
தவறில்லை. ஆனால், மற்றவர்களையும் புண்படுத்தாமல், இஸ்மா
யில் கமிஷன் அறிக்கை பற்றி பேசுங்கள்.

<u>திரு. கே. வடிவேலு:</u> நானும் சிறைக்குச் சென்றவன். 1972 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எங்கள் தானைத் தலைவர் புரட்சித் தலைவரைத் தூக்கி எறிந்த நேரத்தில், தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படவில்லை; திராவிட முன்னேற்றக் கழகம் ஊழல் அரசாக இருந்தது என்று அன்றையதினம் பிரைம் மினிஸ்டர் அவர்களுக்கும், ஹோம் மினிஸ்டர் அவர்களுக்கும், ஜனாதிபதி அவர்களுக்கும் நானும் என்னைச் சேர்ந்த நான்கு வழக்கறிஞர்களும் சேர்ந்து ஒரு தந்தி அனுப்பிவிட்டு அன்றைய தினம் ஒரு உண்ணாவிரதம் மேற்கொண்டோம். அதன் காரணமாக, அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் என்னையும் மற்ற என்னைச் சேர்ந்த நான்கு வழக்கறிஞர்களையும் எந்தக் காரணத்தையும் காட்டாமல் சிறையில் அடைத்தது. சிறையில் கொடுமைப்படுத்தினார்கள்.

சிறையிலே கொடுமைப்படுத்தியது மட்டுமல்ல, அன்றைய தினம் எங்களுக்கு உணவு வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, நீங்கள் எல்லாம் எம். ஜி. ஆரிடம் ஏண்டா போனீர்கள், அதை விட்டு விலகி வாருங்கள் என்று சொன்னார்கள். இதற்குப் பின்னணி உண்டு, அதிகாரிகள் நிச்சயமாக தவறு செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை உண்டு. இதற்குப் பின்னணி நிச்சயமாக இருக்கிறது, தூண்டுகோல் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். இதை எதற்காக சொல்லுகிறேன் என்றால், அரசியல் கைதிகள் சரிவர நடத்தப்பட வேண்டும். கொலைக்குற்றம் சாட்டப்பட்ட கைதிகள் அப்படி அல்ல. இன்றையதினம் ஒரு கட்சி ஆட்சியில் இருக்கலாம், நாளையதினம் இன்னொரு கட்சி ஆட்சிக்கு வரலாம் ஆனால் அரசியல் கைதிகள் சரிவர நடத்தப்பட வேண்டும்.

இந்த அறிக்கையில் குறிப்பிட்டபடி அரசியல் கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்டார்களா இல்லையா என்பதைப் பற்றி பேசுகிற விவரத்தில் நான் சொல்ல விரும்புவது, எங்கள் கட்சியைச் சேர்ந்த அடியார் அவர்கள் தி.மு.க. வில் இருந்த நேரத்தில் மிசாவில் கைது செய்யப்பட்டு, கொடுமைப்படுத்தப் பட்டார் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. ஜேப்பியார் அவர்களை மிசாவில் கைது செய்து அன்றையதினம் கொடுமைபடுத்தப்பட்டார் என்று சொல்ல நான் விரும்புகிறேன்.

அதை அடுத்து இஸ்மாயில் அவர்களின் அறிக்கையைப் பற்றி சொல்லுகிற நேரத்தில் இன்னும் ஒன்றைச் சொல்லுகிறேன். அடியாரை அடிக்கிற நேரத்தில ஒரு அதிகாரி உடன் இருந்தார். அவர் பெயர் சாமிநாதன், அடிஷனல் சூப்பிரண்டெண்ட். அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லாமல் தப்புவிக்கப் பட்டார். அதற்குக் காரணம் என்னவென்றால், நாங்கள் விசாரித்ததிலே

அன்றையதினம் இருந்த தி.மு.க. அமைச்சர் ஒருவருக்கு சொந்தக்காரர் என்று தெரிந்துகொள்ள வாய்ப்பிருந்தது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கமிஷனில் கூறியுள்ள அறிக்கையில், அதாவது அதிகாரிகள் எல்லாம் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி கொடுமைப் படுத்தியதாகச் சொல்லுகிறார்கள். இந்த நேரத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே 9 மத்திய சிறைச்சாலைகள் இருக்கின்றன. ஆனால் சென்னை சிறைச்சாலையில் மட்டும்தான் கொடுமைகள் நடந்தது என்று சொல்லுகிறார்கள். மற்ற சிறைச்சாலைகளில் எல்லாம் மிசா கைதிகள் இல்லையா? அவர்களையும் அடித்தார்கள், துன்புறுத்தினார்கள் என்பதைப் பற்றி இந்த அறிக்கையிலே எந்தவிதமான விளக்கமோ, விவாதமோ இல்லை. ஆகவே இந்த அறிக்கை முழுமையான அறிக்கை அல்ல, குறைபட்ட அறிக்கை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1976-லே இருந்து 1977 வரையில் என்ன கொடுமைகள் நடந்தன என்பதை விளக்குகிறபோது, மற்ற மத்திய சிறைச்சாலைகளில் என்ன கொடுமைகள் நடக்கவில்லை என்று இதிலே விளக்கி இருந்தால் உண்மை நன்றாக விளங்கும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உணவு சரியாக வழங்கப்படவில்லை என்று அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். உணவுகள் வழங்கப்படாதது இந்த நேரத்திலே மட்டும் அல்ல. தி.மு.க. ஆட்சிக் காலத்திலே எங்களுடைய தானைத் தலைவரை தி.மு.க. விலே இருந்து தூக்கி எறிந்தபோது ஆயிரக்கணக்கான அண்ணா தி.மு.க. வினர் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்கள். கொடுமைப் படுத்தப்பட்டார்கள். அவர்களுக்கு எல்லாம் சரிவர உணவு கொடுக்கப்படவில்லை. குடிக்கக் கூட தண்ணீர் கொடுக்க மறுத்தார்கள் நாங்கள் 3 நாட்கள் சிறையிலே இருந்தோம். சரியான உணவு கிடையாது. வார்டரிடமும், ஜெயிலரிடமும் சந்தித்துக் கேட்டால் நாங்கள் என்ன செய்ய முடியும். இது மேலிடத்து உத்தரவு. அதனால் நாங்கள் தரக் கூடாது என்று சொன்னார்கள். என்னையும் இன்னும் 5 பேர்களையும் ஒரே அறையில் போட்டு அடைத்து வைத்தார்கள். கொடுமைப்படுத்தினார்கள்.

1976 பிப்ரவரியில் இருந்து 77 பிப்ரவரி வரை மட்டும் அல்ல, அதற்கு முன்னாலும் தி.மு.க. ஆட்சியிலே இதைவிடக் கொடுமைகள் நடந்தன என்று சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு அடுத்து கைதிகளுக்கு வேண்டிய அடிப்படை உரிமைகளைப் பற்றி கமிஷன் அறிக்கையிலே நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்க வேண்டியவனாக இருக்கிறேன். கைதிகளுக்கு. அரசியல் கைதிகளுக்கு அந்த உரிமைகள் வழங்கு

கின்ற நேரத்தில் அவர்களுக்கு தினப்படி சரிவர உணவு கொடுக்கச் வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அதைச் சரியாக செய்யவில்லை என்பது என்னுடைய தாழ்ந்த கருத்து. எந்த அரசாங்கம் வந்தாலும், அரசியல் கைதிகளுக்கு சரியான உணவும், பாதுகாப்பும், மற்றும் பார்வையாளர்களுக்கும், அந்தந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு சரியாகச் செய்யவேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.20)

அதிகாரிகள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினார்கள். அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தார்கள் என்று அருமை நண்பர் மாண்புமிகு சுப்பு அவர்கள் சொன்னார்கள். நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். எங்களுடைய தானைத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள் நிர்வாகத்தில் தலையீடு கூடாது, அதிகாரத்தின் வரம்பை மீறக்கூடாது என்று சொன்னதன் அடிப்படை காரணமே, அவர்களுடைய ஆட்சியில் அதிகார துஷ்பிரயோகம் கூடாது, அதிகாரத்தின் வரம்பை மீறக்கூடாது, தலையீடு இருக்கக்கூடாது என்பதுதான். அதன் காரணமாக இன்றைக்கு சுமுகமான நிலை இருக்கிறது. இன்றுசிறைச்சாலையில்நல்ல நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிசா கைதிகளுக்கு மட்டுமல்ல, ஆயுட் கைதிகளுக்கும் சிறந்த மருத்துவ உதவி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அந்த மருத்துவ உதவி செய்ய வேண்டிய நேரத்தில் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்யப்பட்டு இருந்தால் திரு. சிட்டிபாபு அவர்கள் பிழைத்து இருப்பார்கள் என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். அதை நான் சொல்லவேண்டியது என் கடமை. ஆகவே, அந்த மருத்துவ உதவி எந்தக் கைதியாக இருந்தாலும் அவருக்கு நிச்சயம் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

கடைசியாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்காகவே ஆங்கில கவிஞன் ஒருவன் அருமையான ஒரு கவிதையை சொல்லியிருக்கிறான். அதிலே இரண்டு வரிகளைச் சொல்கிறேன். அந்தக் கவிஞர் பெயர் 'ப்ரூக்ஸ்'. அந்தக் கவிஞர் ஒரு நதி, மனிதனைப் பார்த்து, உலகைப் பார்த்து பாடுவதுபோல் சொல்லியிருக்கிறான். அந்த இரண்டு வரி என்னவென்றால் Men may come and men may go but I go on for ever. (மணியடிக்கப்பட்டது) அதனுடைய அர்த்தம் என்னவென்றால், மனிதர்கள், வரலாம், போகலாம், ஆனால் நான் மட்டும் ஓடிக்கொண்டே இருக்கிறேன், உலகம் உள்ளவரையில் ஓடிக்கொண்டே இருப்பேன் என்று அந்த நதி சொல்கிறது. அதைப்போல் அதிகாரிகளும், எண்ணிக்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவர் மணியடிப்பதைக் கூட கவனிக்கமாட்டீர்கள் போல் இருக்கிறது. மணியடித்தவுடன் இன்னும் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வீர்கள் என்பதைத் தயவு செய்து சொல்லிவிட்டு, மேலே பேசுங்கள்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, ஒரு விளக்கம். திரு. வடிவேல் என்னுடைய நண்பர். ஆகவே, தவறாக பத்திரிக்கைகளில் அவர் பேசியதைப் போட்டு விடக்கூடாது என்பதற்காக குறுக்கிட விரும்புகிறேன். அவர் ஒரு கவிதைச் சொல்லி அதை ப்ரூக்ஸ் சொன்னார் என்றார். அந்தக் கவிதையை எழுதியவர் டென்னிசன், ப்ரூக்ஸ் அல்ல.

திரு. கே. வடிவேலு : அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதிகாரிகளைப் பற்றிச் சொல்கிறபோது அந்தப் பாட்டை நான் நினைவு கூற விரும்புகிறேன். Politicians may come and politicians may go but the civil servants go on for ever. இன்றைய தினம் இந்தக் கட்சி இருக்கலாம், நாளைக்கு வேறு கட்சி ஆட்சிக்கு வரலாம், ஆனால் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் ஓய்வு பெறும் வரையில் பதவியில் இருப்பார்கள். ஆகவே அதிகாரிகள் தவறாக அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது. சட்டத்திற்குப் புறம்பான, அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, இந்த அறிக்கை மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (திரு. சி. கோவிந்தராஜன் பேசுவதற்கு எழுந்தார்.) உங்களுக்குத் தரவேண்டிய நேரத்தைத் தந்து இருக்கிறேன். எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடித்து விடுங்கள்.

*திரு. சி. கோவிந்தராஜன் : தலைவரவர்களே, எனக்குக் கொடுக்கவேண்டிய நேரத்தைக் கொடுத்துவிட்டால் நான் அதற்குள்ளே முடித்து விடுகிறேன். இந்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது விவாதம் நடக்கிறபோது, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதன்முதலாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

13.7.1978-ம் தேதியன்று சிறைத்துறை மானியம்—அது சம்பந்தமாக விவாதத்திற்கு வந்தபோது மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இஸ்மாயில் கமிஷன் பற்றிப் பேசியபோது, அவர்கள் கூறினார்கள். அதற்காகத் தனியாக ஒரு நாள் ஒதுக்கியிருக்கிறோம். அன்று விவாதிக்கலாம். "கீப் தி பவுடர் டிரை" என்று ஆங்கிலத்தில் சொன்னார்கள். Keep the powder d y you may have to shoot out at that time. எனவே, வெடி மருந்தை உலர வைத்து இருந்தவர்கள் இன்றைக்கு வெடிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள்.

நானே எதிர்பார்த்தேன். நாளை நள்ளிரவு என்னுடைய வீட்டுக் கதவும் தட்டப்படும் என்று கவலைப்பட்டேன்; அச்சப்பட்டேன்.

I was one who apprehended a midnight knock semetime. Fortunately I have been spared and therefore I could not dilate on the greater miseries that would accrucee, to one who had been datined என்று மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் அன்றைக்கு பேசியதை இங்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11.30)

இந்தப் பின்னணியில்தான் சென்னைச் சிறையில் இப்படிப்பட்ட நிலைமைகள் நடைபெற்றன. இந்தக் கமிஷன் வராவிட்டால் நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும். அன்றைக்கு மத்திய உதுறை அமைச்சராக இருந்த பிரமானந்தரெட்டி அவர்கள் பாராளுமன்றத்திலே என்ன சொன்னார்கள்? 'சிறை அதிகாரிகள் மீது சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளை முற்றிலும் ஆராய்ந்துவிட்டோம், அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரம் கிடையாது' என்று பாராளுமன்றத்திலே அவர்கள் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். நல்ல வேளையாக இந்தக் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் யார், யார் கொடுமைப்படுத்தப்பட்டார்கள், சித்திரவதை செய்யப்பட்டார்கள் என்பது பற்றியெல்லாம் விசாரணை செய்தார்கள். அதிலே அதிகாரிகள் என்னென்ன செய்தார்கள், அவர்கள், எப்படி நடந்து கொண்டார்கள் என்கின்ற விஷயங்களை எல்லாம் இந்தக் கமிஷன் வெளிக்கொண்டு வந்திருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மிசாச் சட்டத்தின் செக்ஷன் 16 திருத்தப்பட்ட அந்த காலகட்டத்திலே கைது செய்யப்பட்டவர்களுக்கு அதற்கான காணங்களைக் கொடுக்க வேண்டியதில்லை. அவர்கள் ஹேபியஸ் கார்ப்ஸ்-க்கு மனுபோட முடியாது. அவர்கள் கோர்ட்டுக்கும் போக முடியாது. எனவேதான், அந்தச் சமயத்திலே இதைப் பற்றி குறிப்பிடும் போது கொடுங்கோல் ஆட்சி என்று சொல்லப்பட்டது. அரசியல் கட்சிகளை ஒடுக்குவதற்காகவே இப்படிப்பட்ட சா் கள் பயன்பட்டன. 1976 ஜனவரி 31-லிருந்து பிப்ரவரி ்லா தேதியிலிருந்து இங்கே கொடுமைகள் பல நடைபெறயே பொதுவாக ஒரு கேள்வி இங்கே கேட்கப்படுகிறது. ன்

'சென்னைச் சிறையைப் பற்றி மட்டும்தானே எல்லோரும் பேசுகிறார்கள்' என்று கேட்கப்படுகிறது. ஒரு சில அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட சில அரசியல் கட்சிகளுக்கும் ஏதோ தகராறு இருந்திருக்கின்றது. அதனால்தான் சென்னைச் சிறைச்சாலையிலே கொடுமைகள் நடத்தப்பட்டன. ஆகவே சென்னைச் சிறைச்சாலைக் கொடுமை மட்டுமே பேசப்படுகிறது மற்ற சிறைகள் பற்றி அதிகம் பேசப்படுவதில்லை என்று கேள்விகள் கேட்கப்படுகின்றன. மற்ற சிறைச்சாலைகளிலேயும் பல இடங்களிலே பல கொடுமைகள்

நடத்தப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் சென்னைச் சிறைச்சாலைக் கொடுமைப்பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்றால் சென்னைச் சிறையில்தான் முக்கியமான தலைவர்கள் எல்லோரும் அடைக்கப்பட்டார்கள், அதனால் கொடுமைகள் அதிகம் நடைபெற்றன, அதுபற்றியும் அதிகமாகப் பேசப்படுகிறது என்பதே. பல முக்கியத் தலைவர்கள் எல்லாம் சென்னைச் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனதாக் கட்சியைச் சேர்ந்த பெரியவர்கள், முக்கியமான தலைவர்கள், நம்முடைய மாண்புமிகு உறிப்பினர் நெல்லை ஜெபமணி போன்றவர்கள், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்—அப்போதைக்கு அகப்படாவிட்டாலும் பிறகு பலர் பிடிக்கப்பட்டார்கள்—மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படி முக்கியமானவர்கள் எல்லாம் சென்னைச் சிறையிலே அடைக்கப்பட்டார்கள்.

சிறை அதிகாரிகள் மிக முக்கியமான பொறுப்பிலே இருப்பவர்கள். அவர்கள் கைது செய்யப்பட்டவர்களைச் சரியான முறையில் கவனிக்காதது மட்டுமல்லாமல் மிகவும் வருந்தத்தக்க முறையில் தவறியிருக்கிறார்கள் என்று இஸ்மாயில் கமிஷன் கூறுகிறது. " miserally failed " என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. எனவேதான் இப்படிப்பட்ட நிலைமை உருவாவதற்கு முன்னதாக ஜனவரி மாதம் 8ம் தேதி அன்றைய பிரதமக் இந்திராகாந்தி அதைப்பற்றிப் பேசும்போது அவர்களே சொன்னார்கள்.

1976ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதி இந்த மாநிலஅரசு கவிழ்க்கப்படுகிறது. அதற்குமுன் அவர்கள் பாராளுமன்றத்திலே பேசுகிறார்கள். ஆனால் இந்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் இருப்பது என்னவென்றால் "Ther are two islands of indiscipline".

ஒழுங்கு நிலைமை இருந்த அந்த காலகட்டத்திலே ஒழுங்கற்ற இரண்டு தீவுகள் உண்டு என்று இந்திராகாந்தி கூறினார்கள். அல் ஒன்று தமிழகம், இன்னொன்று குஜராத். முதலாவதாக குஜராத் அரசு கவிழ்க்கப்பட்டது. இங்கே தமிழக அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டது. எனவே, இது திட்டமிட்டு செய்யப்பட்ட அரசியல் வஞ்சம் தீர்க்கின்ற செயல் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் இந்த அரசுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை அனைவரும் அறிவார்கள். ஆனால் ஒரே விஷயத்தில்தான் பொறுப்பு இருக்கின்றது. ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டு விட்ட பிறகு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு

இருக்கின்றதே தவிர அந்தச் சிறைக் கொடுமைகளைப்பற்றி பேசு சின்ற நேரத்தில் ஆளும் கட்சித் தரப்பிலே இருந்து யாரும் வருத் தப்படவோ ஆத்திரப்படவோ தேவையில்லை என்பதைத் தெரி. வித்துக்கொள்கிறேன்.

திரு. வடிவேலு அவர்களும் கூறினார்கள். இந்த நிலைமை எப் போதும் இருக்கிறதென்று. அதை மாற்ற வேண்டும் என்றுதான் நான் கோருகிறேன்.

எந்த அரசு, எந்தக் கட்சி ஆட்சிபீடத்திற்கு வந்தாலும் சரி, சிறைச்சாலைகளில் இப்படிப்பட்ட நிலைமைகள்தான் இருக்கின்றன. சிட்டிபாபு அவர்கள் கவிதை என்று சொன்னார்கள். கடைசியில் ஒரு இடத்தில் கூறுகிறார். ஒன்பதாண்டு காலம் இந்த மதில் சுவர் களை—அவர் சிறைச்சாலையைச்சொல்கிறார்கள்-மாதவனிடம் விட்டு வைத்திருந்தோம், அவர் அதை பழுது பார்க்க முடியவில்லை. ஆனால் இன்று பாம்புகள் கடிக்கின்றன என்று கூறுகிறார். எதற் காக இதை நான் குறிப்பிடுகிறேன் என்றால் எந்தக் கட்சி ஆட்சி பீடத்திற்கு வந்தாலும் இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து இருக்கின்றன. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற முறையில்தான் நடந்த கொடுமைகளை விவரித்து சிறைச்சாலைகள் சீர்திருத்தப்பட வேண்டும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும் என்று கூற விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, அதிகாரி கள் சம்பந்தப்பட்டவரையில் ஏதோ இது சம்பிரதாயமாக நடக்கக் கூடிய விஷயங்கள் என்ற முறையில் விட்டு வைத்தால் திரும்பத் திரும்ப இப்படிப்பட்ட நிலைமைகள் வர ஏதுவாகும். எனவே; நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று இந்தச் சமயத்தில் கூற விரும்புகிறேன். எந்த முறையில் அரசியல்வாதிகள், அரசியல் தலை வர்கள் நடத்தப்பட்டார்கள் அங்கே? பிப்ரவரி 1, 2ம் தேதிகளில் அடி. என்ன நடக்கிறது? சோதனை சர்ச். இப்படிப்பட்ட சோதனை கள் நடத்துவது உண்டு. சோதனை என்று நான் சொல்லும்போது எனக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது. 48, 49-ல் வேலூர் சிறையில், கடலூர்சிறையில். சேலம் சிறையில் சோதனைகள் நடத்தப்பட்டன. பாதுகாப்பு கைதிகளிடம் வேலூர் சிறையில் ஒரு சூப்பிரின்டென் டென்ட் இருந்தார். அவர் பெயர் மீனாட்சிசுந்தரம். அவர் பை தியம் பிடித்து அலைகிறார். நானே அந்த ஸர்ச்க்கு ஆளானேன். உண்மையில் பைத்தியம் பிடித்து அலைகிறார் கடவுள் பேரில் நம்பிக்கை உள்ளவர்கள் ஆண்டவன் கூலி கொடுத்தான் என்று சொல்வார்கள். (குறுக்கீடு) உங்களுக்கு உகந்ததாக இரு. தால் ஒ. த்துக்கொள்வீர்கள். கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் பற்றிச் சொல்கிறேன்.

ஸர்ச்பற்றி நண்பர் சுப்பு அவர்கள் குறிப்பிட்டார்கள். அன்று சிறைச்சாலைக்குள்ளே மோகன் குமாரமங்கலம் அவர்கள் இருந் தார்கள். அவர்களை அம்மணமாக அழைத்து வந்து அடிதடிகள் நடந்தது. அவர் என்ன சொன்னார் தெரியுமா, அந்த மீனாட்சி

சுந்தரம் என்ன சொன்னார் தெரியுமா, இன்று இவர்கள் சொல் கிறார்கள் அல்லவா, அன்று அந்த மீனாட்சி சுந்தரம் சொன்னார். "you may be the son of a zamindar or the son of a Central Minister, I do not care" என்று. அப்படிச் சொல்லி ஸர்ச் நடந்தது. நாங்கள் மட்டுமல்ல பாலா சண்முகம் இருக்கிறார்களே, திராவிடமுன்னேற்றக் கழக வழக்கறிஞர்-அன்று அவர்கள் எங்கள் கட்சியில் இருந்தார்கள்- அவரையும் சிறை சூப்பரின்டென்டென்ட் மீனாட்சிசுந்தரம் அறைக்கு அழைத்துச்சென்று அடித்தது கொஞ்சநஞ்சமல்ல:

வேலூர் சிறையில் நடந்த கொடுமைகள் பற்றி விசாரணை வைக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரின. ஆனால் யார் கேட்பது? இன்று நல்ல முறையில் ஒரு சூழ்நிலை உருவாகியிருக் கிறது. அதற்காகத்தான் ஆளுநர் அவர்களுக்குநன்றிகூறி பாராட்டு கிறேன். இப்படிப்பட்ட கொடுமையான நிலைமைகள் எல்லாம் இருந்தன. சேலம் சிறையில் இருந்த அரசியல் கைதிகள் சில உரி மைகள் வேண்டுமென்று கேட்டதற்காக குருவிகள் போல் கம்யூனி ஸ்டுகள் 23 பேர்கள் சுட்டுத்தள்ளப்பட்டனர். கால் போனவர்கள் கை போனவர்கள் ஏராளமான பேர்கள். அதேமாதிரி கடலூர் சிறையிலும் ஏராளமாக நடந்தன. இன்றும் பல சிறைச்சாலைகளில் நடந்துகொண்டிருக்கின்றன.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை வந்துவிட்டது, அது குறித்து இன்று நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இந்த விவாதம் நடைபெறுகிறது என்பது தெரியும். இஸ்மாயில் கமிஷன் அறிக்கை வந்த பிறகு கூட சிறைக்கைதிகள் 11-7-1977-ல் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் பல் வேறு காரணங்களுக்காக உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள்.

(மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காவல்துறையினரின் மொத்த நடவடிக்கைகள் பற்றி பேசுகிறீர்களா? அல்லது இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது பேசுகிறீர்களா? இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது பேசுங்கள். தமிழ்நாட்டில் ஒன்பது மத்திய சிறைச் சாலைகள் உள்ளன. விவாதம் அவற்றைப் பற்றியல்ல. இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது விவாதம் செய்யுங்கள்.

திரு. சி. கோவிந்தராஜன்: சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீ நடவடிக்கைகள்வரவில்லை. சென்னை சிறைச்சாலையில் 11-7-1977-ல் உண்ணாவிரதம் இருந்து நம் பொதுப்பணித்துறை அமைச்சர் ராமச்சந்திரன் அவர்கள் அங்கு சென்றபோது அவர்களிடம்

(முற்பகல் 11-40)

மகஜர் கொடுத்தார்கள். அந்த காரணத்திற்காக மறுநாள் அ அடி என்று அடித்து 'இது என்ன மெம்மோராண்டமா' என் கேட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உறுப்பினர் அவர்கள் இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீதுதான் பேசவேண்டும். அதற்கு பின்னால் ஏற்பட்ட விளைவுகளை எல்லாம் பேசி நேரத்தை வீணாக்கவேண்டிய தேவையில்லை. அறிக்கை மீது என்ன குறைகள் இருக்கின்றன. என்று சொல்லவேண்டுமே தவிர, 11-7-1977ல் என்ன நடைபெற்றது என்பதையெல்லாம் இதில்சொல்லவேண்டியதில்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : எனவேதான், இப்படிப்பட்ட சர்ச் என்று சொல்லிக்கொண்டு-அரசியல் வாதிகளைப் பார்த்து கேவலமான வார்த்தைகளால்- 'டேய் வேழவேந்தா', டேய் ஆசைத்தம்பி', 'அறிவு இருக்காடா'? 'உனக்கு என்றெல்லாம் இப்படி கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களையும் ஆடுமாடுகளை அழைப்பதுப் போல், சிறை சூப்பிரெண்ட் அழைத்திருக்கிறார் என்று தெரிகிறது. அறிக்கையில் இருப்பதைத்தான் நான் சொல்லுகிறேன். ஏன் சர்ச் செய்யவேண்டுமென்று சொன்னால், கள்ளக் கடத்தல் சாமான்களை கொண்டு வந்திருப்பார்கள், அதற்காகத் தான் சர்ச் செய்கிறோம். கள்ளக் கடத்தல் சாமான்களை பெட்டிக்குள்- 'பாக்ஸ்'-க்குள் வைத்திருப்பார்கள். அதை சோதனை செய்வதற்காகத்தான் சர்ச் செய்கிறோம் என்று விசாரணையில் கேட்டதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள்.

அங்கு இருந்த எங்கள் கட்சியைச் சேர்ந்த சிவாஜி அவர்க
பல்வேறு குறிப்புகளை சிறையில் வைத்து எழுதி வைத்திருந்த
கள். சிறைச்சாலையிலுள்ள விவரங்களை எழுதி வைத்திருந்த வ
கள். அந்த நோட் புக்கையும் எடுத்துச் சென்று விட்டார்.
தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த நெய்வேலி தொ
சங்கத் தோழர் திருவேங்கடம் என்பவர்—அவருக்கு காட்டி
ராக்ட் ஆப்ரேஷன் செய்யவேண்டும் என்பதற்காக ஆப்ரேஷன்
செய்தார்கள். கடைசியில் ஒரு கண்ணே போய்விட்டது. அது
மட்டுமல்ல இந்த ஆப்ரேஷனை நடத்த கோயம்புத்தூருக்குச்
ன்றால் நல்லது என்றும், அங்கே என்னுடைய சகோதரர்
ருக்கிறார் என்று சொன்னதற்கு, கோயம்புத்தூருக்கு அனுப்ப
டியாது. அங்குள்ள சிறைச்சாலையில் வெங்கிடு என்பவர்-இன்
றக்கு சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றவர்-இருக்கிறார்.
ஞ்சப்பன் என்பவர் இருக்கின்றார். இன்றைக்கு சட்டமன்ற
றுப்பினராக இருக்கின்ற ரமணி அவர்களும் அங்கேயிருந்தார்
ள். இவர்களெல்லாம் கைதுசெய்யப்பட்டு அங்கே இருந்தார்கள்.
கவே இந்தக் கண் இல்லாதவர், அவர்களோடு தொடர்பு
ண்டு புரட்சியை நடத்திவிடுவார் என்று கூறி, மாற்றம்
டதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது என்பதை இந்தச்
தர்ப்பத்தில் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இது மட்டுமல்ல. இதற்கு முன்பு திருவேங்கடம் என்கின்ற
ழர் வழக்கறிஞரை சந்தித்துப் பேசவேண்டும் என்று கேட்டு
ண்டதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. வழக்கறிஞரை

சந்தித்து சில விஷயங்களைப் பேசவேண்டும். அதற்காக அனுமதி தரவேண்டும் என்று கேட்டதற்கு, அந்த கோரிக்கை தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு மீண்டும் அந்தக் கோரிக்கையை கேட்டதற்கும் இன்னும் பதில் வரவில்லை என்று சொல்லி, வழக்கறிஞரைப் பார்ப்பதற்கும் இன்டர்வியூ மறுக்கப்பட்டது. இப்படி நடந்த சம்பவங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல,

அடுத்து நண்பர் அரிபட் அவர்கள். அவர்களைப்பற்றி நண்பர் சுப்பு அவர்கள் சொல்லிவிட்டார்கள். அவர் தனக்கு குடும்ப அலவன்ஸ் வேண்டும் என்று கேட்டதற்கு அப்போது அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது மட்டுமல்ல. இன்றைக்கும் அவரது கோரிக்கையைப் பற்றி அதிகாரிகள், அவரது குடும்பத்திற்கு அலவன்ஸ் கொடுக்க வேண்டியது அவசியமில்லை என்று இன்றைக்கும் இந்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கை வந்த பின்னாலும் அதிகாரிகள் இப்படி எழுதி உத்தரவு போயிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது.

எனவே இப்படிப்பட்ட நிலைமைகளுக்கெல்லாம் யார் பொறுப்பு என்கின்ற விஷயம் வருகிறது. இப்போது இதற்கு பொறுப்பாளர் யார். எவரோ என்று ஒருவரை ஒருவர் மீது பொறுப்பைப் போட்டுக்கொண்டு தான் தப்பித்துக் கொள்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாக அறிகிறேன். இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டில் இதற்குப் பொறுப்பாளி யார் என்பதில் வித்தியாசாகர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜெயிலர் கயூம்: அதற்குப் பிறகு சீப்-வார்டர் சுருளி ராஜன் இவர்களும் இன்னொரு இடத்தில் பொறுப்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பொறுப்பு என்ற வகையில், நேரிடையாகச் சொல்லாவிட்டாலும், மறைமுகமாக சிறைச்சாலை ஐ.ஜி.யும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அறிக்கையில் இருப்பதை நீங்கள் எல்லோரும் படித்து இருக்கலாம்.

எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதை எல்லாம் பார்த்தால், அரசியல் வஞ்சம் தீர்க்கின்ற முறையில் நடத்தப்பட்டது என்று சொல்லும்போது-இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்து கொண்டிருக்கும்போது, முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவசலம் அவர்கள் தலையிடுகிறார். இவர் ஆட்சியில் இருந்தாரா என்றால் இல்லை. இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு காரணமாக இருந்த வித்தியாசாகரை திருச்சிக்கு மாற்ற வேண்டும் என்று சொன்னபோது, இவர் நல்லவர் மிகவும் உயர்ந்தவர், இவரை வேறு எந்த இடத்திற்கும் மாற்றக்கூடாது என்று ஆளுநர் அவர்களுக்கு இரண்டு கடிதங்கள் எழுதுகிறார்.

அன்றைக்கு அவர் ஓம் மேத்தாவுக்கு கடிதம் எழுதுகிறார். மத்திய உள்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதுகிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது? நான் அழுத்தம்திருத்தமாகக் கூறுவதெல்லாம், சிறைக் கொடுமை இருக்கட்டும்; ஆட்சி பீடத்திலே வருபவர்கள் அவர்கள் எந்தெந்த வகையிலே நினைக்கிறார்களோ, அந்தந்த வகைகளிலே எல்லாம் இதிலே தலையிடுகிறார்கள் என்பதுதான்.

தவிர, பக்தவச்சலம் அல்லது அளகேசன் ஆகியோருக்கு இதில் என்ன சம்பந்தம்? அவர் அப்போது இருந்த ஆளுநர் அவர்களுக்கு ஏன் கடிதம் எழுதவேண்டும்? ஓம் மேத்தா அவர்களுக்கு ஏன் கடிதம் எழுத வேண்டும்? இப்படிப்பட்ட நிலைமையிலே குறைந்த பட்சம் அந்த அதிகாரி மாற்றப்பட்டிருந்தாவது, மேலும் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கா. எனவே, அவர்கள் இதிலே தலையிட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு அரசு என்ன செய்யவேண்டும்? இதுதான் அடிப்படையிலே இருக்கக்கூடிய பிரச்னை. ரிப்போர்ட் கொடுக்கப்பட்டு ஐந்து மாதங்கள் ஆகின்றன. என்ன செய்திருக்கிறீர்கள்? அறிக்கை வந்தது, நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். யாராவது ஒருவர் இரண்டு ரூபாய் வாங்கிவிட்டால், அப்படி வாங்கி விட்டார் என்று சொல்லி அவர் சீட்டு கிழிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட கொடுமைகள் நடத்தப்பட்டதற்கான டாகுமெண்டரி எவிடென்சு இஸ்மாயில் அவர்கள் அறிக்கையிலே சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. அந்த அறிக்கையை ஏற்றுக் கொள்ளலாமா, இல்லையா என்ற விவாதத்திற்குள் நான் போகவில்லை. இஸ்மாயில் அவர்கள் நேரடியான ஓரல் எவிடென்சும். டாகுமெண்டரி அதாவது தஸ்தாவேஜு பூர்வமான முறையிலும் அவருடைய கருத்துக்களைப் படிப்படியாக எழுதியிருக்கிறார். நேரமில்லாமையால் படிக்கவில்லை. என்றாலும். நீங்கள் படித்து இருப்பீர்கள் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட கொடுமைகள் செய்தவர்களுக்கு, இனிமேல் யாரும் இப்படி நடந்து கொள்ளாமல் இருப்பதற்கு, ஏன் அந்த அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி? அதற்குப் பதிலாக அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்கிறோம் என்று மேலவையிலே குறிப்பிட்டதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

இஸ்மாயில் என்று சொல்லக்கூடியவர் இன்றைக்கு இருக்கக் கூடிய சிட்டிங் ஜட்ஜ்; சீனியர் ஜட்ஜ்; நல்ல இன்டக்ரிடி உடையவர் அவருடைய இப்படிப்பட்ட தஸ்தாவேஜு பூர்வமான முடிவு வந்தபிறகு, மறுபடியும் அதை ஆழமாகப் பார்க்கிறோம், புரோப் செய்கிறோம் என்று சொல்வதற்கான அவசியம் என்ன என்பது

தான் நான் கேட்கக்கூடிய கேள்வி. இஸ்மாயில் அவர்கள் மேலதிகாரிகள் தங்களுடைய பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது என்று அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். ஐ. ஜி. ஆப் பிரிசின்சப்பற்றி ஒரு இடத்திலே இஸ்மாயில் அவர்கள், பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது என்று கூறியிருக்கிறார்கள்.

''ஓர் அதிகாரி அதிகப் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொண்டிருந்தால், சென்னை, மத்திய சிறையில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் முற்றிலும் தவிர்க்கப்பட முடியாவிட்டாலும், குறைவாக நடந்திருக்கலாம் என்பது நான் குறிக்க வேண்டிய கருத்தாகும். சென்னை, சிறைச்சாலை இன்ஸ்பெக்டர்-ஜெனரலாக அப்போது இருந்தவரை நான் குறிப்பிடுகிறேன்'' என்று சொல்லியிருக்கிறார்.

இன்னொரு இடத்திலே, 'அவசியமான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கண்காணிப்பாளருக்குத் தெரிவித்ததோடு என்னுடைய கடமை முடிந்தது. இதற்குப் பொறுப்பாளர் அவர்தான். அவசியமான ஏற்பாடுகளை அவர்தான் செய்ய வேண்டும்'' என்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் பிரிசின்ஸ் சொன்னதாகக் கூறி, ''ஒரு துறைத் தலைவரிடம் எதிர்பார்க்கப்பட்ட பொறுப்புணர்ச்சி அவரிடம் இல்லை என்பதை இந்தச் சாட்சியம் காட்டுகிறது'' என்பதை இஸ்மாயில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. இந்த வழக்கின் சூழ்நிலைகளுக்கேற்ப எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைச் சிறைச்சாலை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் எடுக்கவில்லை என்பதை இவை தெளிதாகக் காட்டுகின்றன'' என்றும் இஸ்மாயில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு இடங்களில் இதை நேரடியான பொறுப்பு என்றும் மறைமுகமான பொறுப்பு என்றும் இந்த அறிக்கையிலே சொல்லக்கூடிய நிலைமைகள் வருகின்றன. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், குறைந்தபட்சம் தவறு செய்யக்கூடிய ஒரு அரசு ஊழியரைப்பற்றி நான் ஏற்கனவே சொன்னேன். அந்தச் சின்ன விஷயத்திற்காக அவருடைய வாழ்க்கையே போகிறது. ஆனால், இப்படிப்பட்ட கொடுமைகள் செய்த அரசியல் வஞ்சம் தீர்க்கக்கூடியவர்களுக்கு இடமில்லை. அரசியல் கட்சி எப்படிப் பயன்படுத்துகின்றார்கள் என்ற இந்த விஷயத்திலே எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, யார் ஆட்சி பீடத்திற்கு வந்தாலும் சரி, இந்த நிலைமைகளை இப்படியே விட்டுக்கொண்டு போனால் என்ன ஆகும்? பின்னாலே நமக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடும்.

[முற்பகல் 11.50]

அன்று நடந்த சம்பவங்களுக்கு இந்த அரசுக்குப் பொறுப்பு கிடையாது. நடவடிக்கை எடுக்கிற கடமைதான் இருக்கிறதே தவிர வேறல்ல. அதைத்தான் இஸ்மாயில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்—

'அதே சமயத்தில் அரசியல் கட்சிகளும் கூட குறிப்பிட்ட அரசுப் பணியாளர் எவரையும் தங்களுக்குத் துதி பாடுபவராக, தங்கள் அடிவருடியாக, அண்டிப் பிழைப்பவராக, அடிமை ஊழியராக ஆவதை ஆதரிக்கக் கூடாது.

இப்படி அவர்கள் அரசியல் கட்சிகளைத் தாஜா பண்ணி தாங்கள் செய்த தவறை மறைத்து மீண்டும் பதவி உயரலாம் என்று நினைப்பார்கள் என்ற கருத்தை நீதிபதி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

'ஏனெனில் அதற்கு ஆதரவு காட்டுவது இரு புறமும் கூர்மையான கத்தியைக் கையாள்வதற்கு ஒப்பாகும். குறிப்பிட்ட அரசுப் பணியாளர் ஒருவர், அதிகாரத்தில் உள்ள கட்சியை மகிழ்விப்பதற்காகத் தம்முடைய குறுகிய நேரான பாதையிலிருந்து விலகிச் செல்வாரானால் அந்தக் கட்சி பதவியை விட்டு வெளியேறி வேறொரு கட்சி ஆட்சிக்கு வரும்போது கூட அவர், அதே போல விலகிச் செல்ல முடியும்....'
என்றும் கூறுகிறார்.

எந்த கட்சி ஆட்சி பீடத்தில் இருக்கிறதோ அதற்குத் தகுந்த மாதிரி அதிகாரிகளை ஆட்டி வைப்பது என்ற எண்ணம் வந்தால்—இந்த அரசுக்கு வந்து விட்டது என்று சொல்லவில்லை—இந்த நிலைமை என்பதை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

'இத்தகைய சூழ்நிலைகளில், இந்தப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு, அரசுப் பணியாளர்கள், அதிகாரத்தில் உள்ள கட்சி இது, எதிர்க்கட்சி இது என்ற நோக்கில் எந்தவொரு அரசியல் ஆதாயத்திற்கும் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் முற்றிலும் நடுநிலையுடன் செயல்பட வேண்டும் என்பதேயாகும்'

என்பது அவர் கொடுக்கக்கூடிய அறிவுரை.

இந்த சமயத்தில் எந்தவிதமான தயவு தாட்சண்யமும் இல்லாமல்—பிரைமாஃபாசி கேஸ் இருக்கிறது என்று சொல்லுவதை விட அதிகமாக இருக்கிறது—நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் யார்? இன்டைரக்டாக சம்பந்தப்பட்டவர்கள் யார்? பொறுப்புள்ள அதிகாரிகள் எப்படி தட்டிக் கழித்தார்கள் என்பதையெல்லாம் சொல்லுகிறார். சிறைச்சாலை இன்ஸ்பெக்டர் ஜெனரலையே சொல்லுகிறார். இப்படிப்பட்ட நிலைமைகள் நடந்திருக்கின்றன. ஐ. ஜி. ஆப்பிரிசன்ஸ் இல்லமோ, அலுவலகமோ இரண்டு மூன்று கிலோ மீட்டருக்குள்தான். இது அவருக்குத் தெரியாதா? தெரியாத

மாதிரி பாவனை பண்ணுகிறாரா? புரிந்துகொள்ள முடியவில்லை. எந்தக் காரணத்திற்காக அவர் அப்படிச் செயல்பட வேண்டி வந்தது? அரசியல் சூழ்நிலையில் எப்படி வேண்டுமானாலும் தங்கள் பதவியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அதிகாரிகள் கருதுகிறார்கள். அதற்கு ஆளும் கட்சி உடந்தையாக இருக்கக் கூடாது; அப்படி இருந்தால் அது இரு பக்கமும் கூர்மையாக இருக்கக்கூடிய கத்தியாக முடியும். இன்றைக்கு நாம், நாளைக்கு நாம் வெளியே வரும்போது அதே ஆயுதம் நம் பக்கம் திரும்பும் என்ற உண்மையை அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறுகிறார்கள்.

ஆகவே, ஈவு இரக்கம் இல்லாமல், பாரபட்சம் இல்லாமல், எந்தவிதமான நிர்ப்பந்தத்துக்கும் ஆளாகாமல் அவர்களை உடனடியாக சஸ்பென்ட் செய்து அவர்கள்மீது அடுத்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அவ்வளவு பேரும் அவர்கள் பதவிகளைத் தொடருகிறார்கள்.

சிறை இலாகாவிலும், காவல் துறையிலும் இங்கிருப்பவர்கள் அங்கும், அங்கிருப்பவர்கள் இங்கும் மாறி மாறி வருவார்கள். இன்றைக்கு போலீஸ் கமிஷனராக இருக்கக்கூடியவர் சிறைச்சாலை இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்திருக்கிறார். நாளைக்கு ஐ. ஜியாக வரலாம். இந்த நிலையில் இந்த மாநில மக்களின் பாதுகாப்பு என்னவது? மாற்றுக் கட்சிகளின் நிலைமை என்னவது?

எங்கள் கட்சியைப் பொறுத்தவரை எந்தக் கட்சி ஆட்சி பீடத்திற்கு வந்தாலும், பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்திலிருந்து அதற்குப் பிறகு வந்த ஆட்சிக் காலத்திலும் இன்றுவரை அதே நிலைமைதான் இருந்து வருவதால் அழுத்தந்திருத்தமாக அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூற விரும்புகிறேன்,

இன்னொரு விஷயத்தைக் கூறி முடிக்கலாம் என்று கருதுகிறேன். சிறை சீர்திருத்தத்திற்காக ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. சிறைகளில் சீர்திருத்தம் தேவை என்று சொல்லும்போது பொருளாதாரம் தேவைப்படுகிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கடந்த 13-ஆம் தேதி கூறினார்கள். பிளஷ் அவுட் லெட்ரின்கள் சிறைகளில் வைக்க வேண்டியது அவசியந்தான், ஆனால் பினான்ஷியல் கன்ஸ்ட்ரெயின்ட் இருக்கிறது என்று சொன்னார்கள். மத்திய அரசும் இதற்காக தொகை ஒதுக்க வேண்டும். மாச்சிங் கிராண்ட் கொடுக்க வேண்டுமென்று கூறினார்கள். சிறையில் பிளஷ் அவுட் லெட்ரின்கள் இல்லாத காரணத்தால் ஏராளமான கைதிகள் பலவிதமான வியாதிகளுக்கு உள்ளாகிற அடிப்படை இருக்கிறது.

சிறைச் சீர்திருத்தங்கள் என்று வரும்பொழுது ஏராளமாகச் சொல்லவேண்டி இருக்கிறது, அது மட்டுமல்ல, இந்தக் கால கட்டத்தில் பரோல் கொடுக்கப்பட்ட முறையும் மிக மோசமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன்—சிறைச்சாலைகள் சீர்திருத்தம் என்று வருவதால் அதைப்பற்றி நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்—அவர்கள் தன்னுடைய மகளுடைய திருமணத்திற்காக ஒரு நாள் பரோல் அவருக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் போலீஸ் எஸ்கார்ட் அந்த மணப் பந்தலிலேயே இருந்தது, திருமணம் முடிந்தவுடனே இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள், போன வருஷம், அவர்கள் உள்ளே இருந்தபோது நடந்தது, மிசாவிலே தான், நீங்கள் வந்த பிறகு இல்லை. நீங்கள்தான் லிபரலாக பரோல் கொடுப்பதாகச் சொல்லி யிருக்கிறீர்கள். நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அரசியல் கைதிகளுக்கு பரோல் லிபரலாகக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) உள்ளே போனால்தான் அந்த விஷயம் தெரியும், அப்படிப்பட்ட திட்டம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா? எனக்குத் தெரியவில்லை. சிறைச்சாலைகள் சீர்திருத்தம் பற்றி பரிந்துரைப்பதற்காக ஐ. ஏ. எஸ். அதிகாரியின் தலைமையில் ஒரு குழு போடப்பட்டிருக் கிறது. ஏற்கெனவே 1950-ஆம் ஆண்டு நினைக்கிறேன். அது நடை முறைக்கு வரமுடியாத நிலைமையிலே மீண்டும் இப்போது ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியைப் போட்டு, சிறைச்சாலைகள் சீர்திருத்தம் என்று சொன்னால், சிறைக்குள் என்ன இருக்கிறது என்று தெரியாத வர்கள் அப்படிப்பட்டவர்களை வைத்து குழுப் போட்டால் அது சரியான வகையில் நடைபெறாது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்......

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Mr. Speaker, the Jail Reforms Commission is headed by a retirod Chief Justice 2 High Courts, Patna and Orissa, who was himself for a very long time a puisne Judge of Orissa High Court I want to just disabuse the mind of Hon. Member of the wrong impression created by some circumstances that the concerned officer is an I.A.S. Officer. There is no I.A.S. Officer, who is a Member of the Jail Reforms Commission. One Member is a retired Chief Justice, another member is a Psychiatrir and anothec Member an old Police Officer who himself had the experlence of jail administration. Therefore we feel, the Government feel that when as man is outside the fence he can see things more clearly and suggest more reforms, because he is not bit upon by any constrints of Service.

திரு. சி. கோவிந்தராஜன்: இப்போது போடப்பட்டிருக்கிற அந்தக் குழுவிற்கு ஏற்கெனவே அந்தக் குழுவில் இருந்த ஒருவரைத் தான் தலைவராக நியமித்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. நான் என்ன கூற விரும்புகிறேன் என்று சொன்னால் அதிகமாக சிறைக்குச் சென்றவர்கள் இந்த அவையிலே இருக்கிறார்கள். வெளியிலேயும் இருக்கிறார்கள். தியாகிகள் என்ற வரிசையில் பலர் அப்படி இருக்கிறார்கள், அவர்கள் எல்லாக் கட்சி களிலும் இருக்கிறார்கள், சிறை தியாகி என்றால் இறந்துவிட்டவர் கள் அல்ல, உயிரோடு இன்றைக்கும் இருக்கிறவர்கள், மானியம்; மற்ற எல்லாம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது, அவர்களும் இருக் கிறார்கள். சிறைக்குள்ளே உள்ள நிலைமைகளை எப்படி மாற்றி யமைக்கவேண்டுமென்று அனுபவம் அவர்களுக்கு இருக்கிறதை வைத்துக்கொண்டு அவர்கள் சொல்லுவார்கள்.

இங்கே நெல்லை ஜெபமணி போன்றவர்கள் இருக்கிறார்கள். என்னைப் போடவேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை, நான் பத்தாண்டுக்காலம் சிறையிலே இருந்தவன், என்னைவிட அவர் களுக்கு அதிக நாள் அனுபவம் இருக்கும் என்று நினைக்கிறேன், இங்கே மட்டும் அல்ல, வெளியிலேயும் இருக்கிறார்கள், இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்பதல்ல, எல்லாக் கட்சிகளிலும் இருக்கி றார்கள், அவர்களையும் இந்தக் குழுவிலே இணைத்தால் அவர்கள் நல்ல பரிந்துரைகளைச் சொல்வதற்கு ஏதுவாக. இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

வெறும் அதிகாரிகளை மட்டும் போடுவது சரியல்ல. இப்படிச் சிறை அனுபவம் பெற்றவர்களையும் அதில் போட்டு எந்தந்த வசதிகளைச் செய்ய வேண்டுமென்று சொல்ல வாய்ப்பு கொடுக்க வேண்டும். அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கலாம், அது வேறு விஷயம். ஆனால் அதையெல்லாம் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

அவர்கள் சம்பந்தப்பட்டவரையில் நான் இறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன், ஒன்று, அவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த நடவடிக்கையின்படி உடனடி யாக சஸ்பெண்ட் செய்யப்படவேண்டும். கிரிமினல் ப்ராசிகியூஷன் போன்ற நடவடிக்கைகள் இப்படிப்பட்ட காரியங்களுக்காக அவர் கள்மீது நடத்தப்பட வேண்டும். இரண்டாவதாக, அவர்களது சொத்துக் கணக்குகளை ஆராய வேண்டுமென்று இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன். காரணம், அவர்கள் சரியான முறையிலே உணவு கொடுக்காதது மட்டுமல்ல, அவர்கள் 400 கிராம் கொடுக்க வேண்டுமென்றால் 300 கிராம் கொடுத்து அதன்மூலம் என்பது மட்டுமல்ல, அந்த நேரத்தில் பல்வேறு கடத்தல் மிசாக்காரர்கள்

வந்தார்கள். அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளைக் கொடுத்து அவர்களிடமிருந்து டிரான்சிஸ்டர்கள். இன்னும் விலையுயர்ந்த, 5,000 ரூபாய், 10,000 ரூபாய் பெருமானமுள்ள விலையுயர்ந்த பொருள்களையும், டெலிவிஷின் செட் போன்றவற்றையும் இன்னும் ஏராளமான பணத்தையும் பெற்றிருக்கிறார்கள்.

ஆகவே, இதையெல்லாம் கணக்கில் கொண்டு இப்படிப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பது ஒன்று. இன்னொன்று, அவர்களது சொத்துக்கணக்கைப் பரிசீலிக்க வேண்டும், அஸெஸ் செய்ய வேண்டும், அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) சூப்பரின்டென்டெண்ட் வித்யாசாகர், ஜெயிலர் கையூம், இன்னும் வார்டர் போன்றவர்கள். சீஃப் வார்டர் என்றால் சாதாரண ஆள் இல்லை. அவர்தான் மானிட்டர். (குறுக்கீடு) இப்பொழுது இருப்பவர்கள்கூட அப்படித்தான். அதை யெல்லாம் இங்கே சொன்னால் அது இஸ்மாயில் கமிஷன் அறிக்கைக்கு அப்பாற்பட்டு போகும் என்று நினைக்கிறேன்.

இன்றைக்குள்ள சிறை சூப்பரின்டென்டெண்ட், இன்றைக்குள்ள ஜெயிலர் ஆகிய இவர்கள் ஓரிடத்திலேயிருந்து வேறு இடத்திற்கு மாற்றப் படுகிறார்கள் என்றால்—சிறை சீர்திருத்தங்கள் என்ற முறையில் சிறைச்சாலை அமைச்சரவர்கள் இதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்—அங்கே இன்றைக்கு இருக்கக் கூடியவர்கள் ஓரிடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றப்பட்டால் அதே சூபரிண்டென்டெண்ட் வேலூருக்குப் போகிறார் என்றால் அதே ஜெயிலரும் அங்கேயேதான் போக வேண்டுமா? அவர் திருச்சிக்குப் போகிறார் என்றால் அதே ஜெயிலரும் அங்கேயேதான் போக வேண்டுமா? இதனுடைய உள்ளர்த்தம் என்ன? இவர்கள் இருவரும், இந்த சூப்பரின்டெண்டெண்டும், இந்த ஜெயிலரும் இணைபிரியாத நபர்கள். எந்தச் சிறைக்குப் போவது என்றாலும்—சிறை பிடிக்கப்பட்டு அல்ல, சிறை அதிகாரிகளாக—ஒன்றாகப் போவது என்றால் இதற்குப் பின்னால் விஷயம் அடங்கியிருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். எனவே, அவர்களுடைய சொத்துக் கணக்குப் பூராவையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை சிறைச்சாலையில் மட்டுமல்ல, குறிப்பாக சென்னை சிறைச்சாலையில் இப்படிப்பட்ட கஷ்டங்களை அனுபவித்தவர்களுக்கு, கண் போனவர்களுக்கு, உயிர் போனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டயீடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக சிட்டிபாபு குடும்பத்திற்கு குறைந்தபட்சம் ஐந்து இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும், இது நியாயமான கோரிக்கை. அதுமாத்திரமல்லாமல் சிறைச்சாலையில் அவதியுற்றவர்களுக்கு, கஷ்டப்பட்டவர்களுக்கெல்லாம், அவர்களுக்கு உள்ள

நிலைமைகளுக்காக நஷ்டஈடு கொடுக்க வேண்டும். மெண்டல் டென்ஷன், டிஸ்கொயட் என்று சொன்னார்கள். இந்த நிலையில் மிசாவிலிருந்து நான் தப்பித்துக்கொண்டேன், அவர்கள் போனார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள், மெண்டல் மட்டுமல்ல, பிசிகல் டார்ச்சர், மெண்டல் டார்ச்சர். அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும்.

இஸ்மாயில் அவர்கள் கூறியதுமாதிரி குடும்ப அலவன்ஸ் கொடுக்கப்படாதவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றும், ஹரிபட் போன்றவர்களுக்கு குடும்ப அலவன்ஸ் கொடுக்கவேண்டும் என்று கூறி, இதற்கான நடவடிக்கைகளை உடனே எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறை சீர்திருத்தத்திற்காகப் பல்வேறு ஆலோசனைகளைக் கூறும் நேரத்தில் அவைகளை நல்லமுறையில் திருத்தியமைக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

<u>திரு. கே. பண்ணை சேதுராம்:</u> மாண்புமிகு தலைவரவர்களே, நீதிபதி இஸ்மாயில் கமிஷனின் அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நானும் என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு பெற்றமைக்காக உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் சிறைக் காவலில் இருந்தபொழுது சித்ரவதை செய்யப்பட்டார்களா என்று உண்மையைக் கண்டறிவதற்காக இந்தக் கமிஷன் போடப்பட்டது. இந்தியத் துணைக் கண்டத்தில் 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தடுப்புக் காவல் சட்டம் வந்தது. 1975ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து பலபேர் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்கள். ஆனால், இஸ்மாயில் கமிஷன் விசாரணை 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்துதான் ஆரம்பிக்கப்படுகிறது. இதிலேதான் நாம் மிக உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

1975-ம் ஆண்டு ஜூன் முதல் 1976ஆம் ஆண்டு ஜனவரி 31 வரை கைது செய்யப்பட்ட பலர் சிறைச்சாலையில் எப்படி நடத்தப்பட்டார்கள் என்ற விவரங்கள் இந்த அறிக்கையிலே இல்லை. இந்த அறிக்கையில் அது இருக்குமானால், நிச்சயமாக முழுமை நிறைந்ததாக, நிறைவு பெற்ற அறிக்கையாக இருக்க முடியும். எனவே அவை இந்த அறிக்கையில் இல்லாததால், இது முழுமை நிறையாத அறிக்கை என்று நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மிசா பற்றி சொல்லும்போது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராயிருந்த நேரத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாவீரன் ஜேப்பியார் அவர்கள் மிசாவின்கீழ் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டார்கள். அதையெல்லாம் எண்ணி, எண்ணி மகிழ்ந்தவர்கள் ஆளுங்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதை நாம் இன்றைய

இனம் மறந்து விடக் கூடாது. 'தன் வினைத் தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும், வினை விதித்தவன் வினை அறுப்பான்' என்பதுபோல், இது 6 மாதத்திற்குள்ளே நடைபெற்றது. எது எப்படி இருந்தாலும் அந்த அறிக்கை முழுமையானதா, அந்த அறிக்கை நிறைவு அளிக்கின்றதா, அந்த அறிக்கை ஏற்றுக்கொள்ளத் தக்கதா என்பதை நாம் சற்று உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

1975-ம் ஆண்டு ஜூன் முதல் மிசா கைதிகள் பெற்ற இன்னல்களும் துன்பங்களும் இதில் முழுமையாக இடம் பெற்றிருக்கிறதா என்ற கேள்வியை நாம் எழுப்பினால் நிச்சயமாக இந்த விசாரணை முழுமையாக நடைபெறவில்லை யென்றுதான் சொல்ல வேண்டும்.

மிசாவில் இருந்தவர்கள் கிட்டத்தட்ட 360 நாட்கள் இருந்தார்கள். இன்னும் சொல்லப் போனால். ஜூன் 75-லிருந்து கணக்கு ஆரம்பித்தால் 360 நாட்களுக்கு அதிகமாகும். ஆனால், இஸ்மாயில் கமிஷன் கிட்டத்தட்ட 30 நாட்கள் சம்பவங்களை மட்டும் விசாரித்து அறிக்கை தந்திருக்கிறது. ஆகவே இன்னும் 330 நாட்கள் சம்பவங்கள் இதிலே இல்லை.

அதில் இன்னொன்று, இந்த கமிஷனிடம், கிட்டத்தட்ட 48 பேர்கள் பிரமாண வாக்குமூலங்கள் கொடுத்தார்கள். பிரமாண வாக்குமூலங்கள் கொடுத்த 48பேர்களிலே விசாரிக்கப்பட்டவர்கள்13 பேர்கள். மிசாவில் இருந்தவர்கள் 166 பேர்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த விசாரணை, அறிக்கை, முழுமையாக இருந்திருக்குமானால், 166 பேர்களையும் விசாரித்திருக்கவேண்டும். ஆனால், மிசா கைதிகள் 166 பேர்களையும் விசாரிக்கவில்லை. அல்லது, 48 பேர்கள் பிரமாண வாக்குமூலங்கள் சமர்ப்பித்திருக்கிற நேரத்தில் அந்த 48 பேர்களையாவது விசாரித்திருக்க வேண்டும். அந்த 48 பேர்களையும் விசாரணை செய்யவில்லை, ஆனால் 13 பேர்களை மட்டும் விசாரணை செய்திருக்கிறார்கள். அதிலும், மு.க. ஸ்டாலின் ராஜ்மோகன் போன்றவர்கள் எல்லாம் பிரமாண வாக்குமூலம் கொடுக்கவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பிரமாண வாக்குமூலம் கொடுக்காதவர்களை எல்லாம் விசாரித்து, பல உண்மைகளைக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் வாக்குமூலங்களைத் கொடுத்தவர்களைப் பற்றி, பிரமாண வாக்கு மூலங்கள் கொடுத்தவர்களைப் பற்றி சொல்ல வேண்டுமானால், அதிலும் குறிப்பாக அந்த 30 நாட்களுக்குப் பின்னாலே மிசா கைதிகளாக இருந்தவர்கள், தங்களுக்குக் கிடைக்கப் பெற்ற வசதிகளைப் பற்றியெல்லாம் எடுத்து சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, தங்களுக்கு மீன், முட்டை, ஆட்டுக்கறி, கோழிக்கறி

எல்லாம் கொடுக்கப்பட்டிருப்பதாகப் பிரமாண வாக்குமூலத்திலே கொடுக்கப்பட்டிருந்தாலும் இஸ்மாயில் கமிஷன் அறிக்கை அது பற்றி விசாரிக்கவில்லை, ஆராயவில்லை, பரிசீலனை செய்யவில்லை. எனவே, இந்த அறிக்கை உண்மையிலே நிறைவுபடாத அறிக்கை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடியார் போன்றவர்கள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டார்கள் என்பது உண்மை. அடியார் போன்றவர்களையெல்லாம் விசாரித்து இருக்க வேண்டும். எல்லோரையும் விசாரணை செய்யாமலே, ஒருதலைப்பட்சமாக, ஒருகட்சியைச் சேர்ந்தவர்களை மட்டும் விசாரித்து அறிக்கை வருமானால், முழுமையான முடிவு, முழுமையான கருத்து என்று சொல்வதற்கில்லை.

இந்த இஸ்மாயில் கமிஷன் சென்னை சென்ட்ரல் சிறைச்சாலையைப் பார்வையிடச் சென்றார், சிறைச்சாலையினுள்ளே சுற்றிவிட்டு திரும்புகின்ற வழியில்; சிறைச்சாலைக்குள்ளே நூற்றுக்கணக்கான ஆயுள் கைதிகள் இருக்கிறார்கள். அவர்கள் மிகமிக முக்கியமான சாட்சிகள். அவர்கள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எனவே இதுவும் மிக முக்கியமான அம்சம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே விசாரிக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவகர்ள் குறிப்பிடுகிறார்கள். ஆனால், மார்க்சிஸ்ட் கட்சி, ஜனதாகட்சி போன்ற எல்லோரையும் விசாரித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கருத்து தவறான கருத்து என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: ஒருதலைப்பட்சமான கட்சிகளை விசாரித்திருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

அவர் 285 ஆம் பக்கத்தில் சொல்லியிருக்கிறார். சிறைச்சாலையைப் பார்வையிட்டு திரும்புகிற வழியில், 8-வது, 7-வது, 6-வது பிளாக்கிலிருந்து ஆயுள் கைதிகள் காம்பவுண்டு சுவரை நோக்கி ஓடி வந்தார்கள். எங்களையும் விசாரித்தால் நாங்கள் உண்மையைச் சொல்கிறோம் என்று சொன்னார்கள். இது இந்த அறிக்கையில் இடம் பெற்றிருக்கிறது.

விசாரணை செய்கிற இஸ்மாயில் அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும். அந்தக் கைதிகளை சமன் செய்து விசாரித்திருக்க வேண்டும். ஆயுள் கைதிகள் சொல்லுகிற கருத்துக்களை கேட்டிருக்க வேண்டும். அந்தக் கைதிகளை விசாரிக்கவில்லை. ஐ விட்னஸ்

ஆக இருக்கிற அந்தக் கைதிகள் விசாரிக்கப்படவில்லை. எனவே இந்தக் கமிஷன் முழுமைப்படவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன். மிசா கைதிகளை அதிகாரிகள் சித்ரவதை செய்தார்கள் என்று புகார் இருக்கிறது. அந்த அதிகாரிகள் யார்? இதுதான் அடுத்த கேள்வி.

ஏழாண்டுக் காலம் எதிர்க்கட்சித்தலைவர், முதலமைச்சராக இருந்த நேரத்தில் அவர்கள் கொடுத்த பழக்கத்தின் காரணமாக டிரேயினிங் காரணமாக அந்த அதிகாரிகள் அப்படி ஆனார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தீட்டிய மரத்தையே அவன் கூர் பார்க்கிறான். நீங்கள் சொல்லி சொல்லிக் கொடுத்தீர்கள் கடைசியிலே உங்களையே அடித்தார்கள்.

கோவை மத்திய சிறைச்சாலையிலே 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலே 100 ரூபாய் கள்ள நோட்டு அடிக்கப்பட்டது சிறைச்சாலைக்குள்ளேயே. அதன் கண்காணிப்பாளர் வாசுதேவன் மீது, புகார் கூறியும், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, அந்த வாசுதேவன் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அடுத்து 76ஆம் ஆண்டு மே மாதம் ராணி ஆறுமுகம், மிஸ் மெட்ராஸ் உங்களுக்கு எல்லாம் அந்த கேஸ் நன்றாகத் தெரியும். அந்தப் பெண்ணை கோவையிலே கைது செய்து அந்தக் குடும்பத்தை சிறைக்குக் கொண்டு வந்து பலாத்காரம் செய்தார். பலாத்காரம் செய்ததாக அந்த ராணி ஆறுமுகம் இப்போது இருக்கிற ஐ.ஜி. ஸ்டிரேசியிடம் மனு கொடுத்தார்கள். ஸ்டிரேசி அவர்கள் விசாரித்து விட்டு, வாசுதேவனை சஸ்பெண்டு செய்யவேண்டும் என்று உத்தரவிட்டார். அதை அன்றையதினம் சட்ட அமைச்சராக இருந்த மாதவனும் ஏற்றுக் கொண்டார். ஆனால்*** அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டது,

திரு. துரைமுருகன்: பாயிண்ட் ஆப் ஆர்டர். ஏதோ ஒரு வழக்கில் ** தலையிட்டார் என்று சொல்லுகிறார்கள். இந்த அவையிலே ** என்று யாரும் இல்லை. ஆனாலும் அவர் தலையிட்டார் என்று சொல்லக்கூட இவருக்கு உரிமை இருக்கலாம். அதற்குத் தக்க ஆதாரம் இருக்குமானால் எடுத்துக் காட்டி, படித்துக் காட்டி பேச வேண்டும். பொத்தாம் பொதுவிலே சொல்லக் கூடாது. கமிஷனிலே கொடுத்திருக்கிற அறிக்கையிலே கைதிகளை அடித்தார்களா இல்லையா என்பதைப் பற்றி பேசவேண்டும். கமிஷனிலே இல்லாதவற்றைப்பற்றியும், சாட்சிகளைப் பற்றியும் பேசக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *** என்கிற அந்த வாக்கியத்தை மட்டும் சபை குறிப்பிலேயிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. க. அன்பழகன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். அவர் பேசிய பல கருத்துக்கள் இந்த அவையிலே ஆளுங்கட்சியினுடைய கருத்துக்களைப் பிரதிபலிக்கிற அப்படிப்பட்டவையாகத்தான் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆளுங்கட்சி உறுப்பினர் இது ஆளுங்கட்சியினுடைய கருத்து என்று சொன்னால் அவர் என்னவேண்டுமானாலும் சொல்லட்டும். இஸ்மாயில் கமிஷனைப் பற்றி ஆளுங்கட்சிக்கு—அரசுக்கு—ஒரு கருத்து இருக்கிறது. ஆளுங்கட்சி உறுப்பினர் பல்வேறு கோணத்தில் அந்த இஸ்மாயில் கமிஷனைப் பற்றி விளக்குகிறபோது, இஸ்மாயில் கமிஷனையே குறை சொல்லுகிற அளவுக்கு அவர் கருத்துக்கள் இருக்கின்றன. அதுவே ஆளுங்கட்சிக்கு விருப்பமாக இருந்தால் அதிலே எனக்கு மாறுபாடு இல்லை.

முன்னாள் முதலமைச்சர் மகனைப் பற்றி இங்கே பேசிய அவருடைய தொனி இந்த அவையிலே அனுமதிக்கப்பட முடியாத கருத்துக்கள், அதைத் தாங்கள் எப்படி அனுமதித்தீர்கள் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: முன்னாள் முதலமைச்சர் மகனைப் பற்றி பேசியபோது நான் அவையில் இல்லை. இப்போது பேசிய....

திரு. ப.உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பண்ணை சேதுராம் பேசும்போது முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி ஆட்சியில் கோவை சிறைச்சாலையில் கள்ளநோட்டு அச்சடிக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அது எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. அந்த கள்ளநோட்டை சிறையில் அடித்தார்கள். வழக்கு ஒன்றும் நடக்கவில்லை என்று சொன்னார்கள். ஆதாரம் இல்லாமல் இப்படி குற்றம் சாட்டுவது சரிதானா என்பது எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதற்கு ஆதாரம் எங்கே இருக்கிறது, எதை வைத்துப் பேசுகிறீர்கள்?

திரு. கே. பண்ணை சேதுராம்: அன்றையதினம் பத்திரிக்கையில் வந்த ஆதாரத்தை வைத்துப் பேசுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்கு வைக்கப்பட்டு இருக்கிற அறிக்கை சென்னை சிறைச்சாலையில் நடந்ததாகக் கூறப்படும் சித்ரவதைகளைப் பற்றி நீதிபதி இஸ்மாயில் அவர்கள் தந்திருக்கிற அறிக்கை ஆட்சித் தரப்பின் சார்பில் பேசும் உறுப்பினர்கள் அந்த அறிக்

கையின் மீது தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமே தவிர அனாவசியமான சர்ச்சைகள் வளர்ப்பதற்கும் மற்றவர்களின் உள்ளங்களை புண்படுத்தும் நிலைமையை உருவாக்குவதற்கும் தயவு செய்து தங்களை ஆக்கிக்கொள்ளவேண்டாம் என்று பேரவை முன்னவர் என்ற முறையில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு துணைத்தலைவரவர்களே, அந்தக் கமிஷன் 7 பிரச்சினைகளை விசாரிக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. ஒன்று, தடுப்புக் காவல் கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்டனரா, கமிஷனின், முடிவு— கொடுமைப் படுத்தப்பட்டனர். இரண்டு, அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களை கட்சியில் இருந்து விலகுமாறு வற்புறுத்தப்பட்டனரா, கமிஷனின் முடிவு அதுவும் ஆமாம். மூன்றாவது, சிறைக் கைதிகளை தகாத வார்த்தைகளில் பேசினார்களா? கமிஷனின் முடிவு ஏற்கனவே அப்படி அவர்கள் டிரெயினிங் கொடுக்கப்பட்டு இருக்கிறார்கள். அதனால் தவறு இல்லை. நான்காவதாக, உணவு வரையறுக்கப்பட்ட அளவிற்கு இருந்ததா? கமிஷனின் முடிவு முதலில் சில நாட்களுக்கு அவர்களுக்கு கூழ், கஞ்சி, களி கொடுக்கப்பட்டது. பின்னால் சரியாக கொடுக்கப்பட்டது. கமிஷனின் முடிவு இன்னும் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்தாவது, ஒவ்வொரு அறையிலும் 6 பேர், 7 பேர் தடுப்புக் காவல் கைதிகள் ஒவ்வொரு சிறைச்சாலை பிளாக்குகளிலும் அடைக்கப்பட்டனரா? கமிஷனின் முடிவு, அப்படி 9 பிளாக்குகளில் அடைக்கப்பட்டார்கள். ஆறாவது, சிட்டிபாபு துன்புறுத்தப்பட்டதால் இறந்தாரா? கமிஷனின் முடிவு, சிட்டிபாபு 5-1-77-ம் தேதி கடுமையான மாரடைப்பால் இறந்தார். அவர் சென்னை மத்திய சிறைச்சாலையில் இருந்தபோது அடிக்கப்பட்டதற்கும் துன்புறுத்தப்பட்டதற்கும் அந்த மரணத்திற்கும் தொடர்பு இல்லை.

பக்கம் 131-ல் பிரேத பரிசோதனை செய்த டாக்டர் ரங்கபாஷ்யம் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவரது மரணம் இயற்கையான காரணங்களால் ஏற்பட்டது. அதைச் சொல்கிற காரணத்தால், கமிஷன் இஸ்மாயில் அவர்கள் சொல்கிறார், டாக்டரைப் பார்த்து கோபமாகக் கேட்கிறார், கமிஷன் டாக்டர் ரங்காச்சாரி பற்றி சொல்கிறபோது, அவர் அனுபவம் அற்ற இளநிலை மருத்துவர் என்று கூறியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கமிஷன் ரிப்போர்ட் மீது பேச வேண்டுமே தவிர அந்த விசாரணை முறைதானா அவர் யாரை மிரட்டினார், யார்மீது கோபப்பட்டார் என்று எல்லாம் பேசக் கூடாது. அந்த அறிக்கைமீது தங்கள் கருத்துக்களைக் கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: கமிஷனின் அறிக்கை **என்று கூறும் வகையில் அறிக்கையில் நிறைய இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR, I regret to bring to the notice of his hon. Member that the last two or three sentences which form part of his speech do really cast reflection on the integrity of the Judge. I protest against ite

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *என்று அவர் கூறியதை சபைக் குறிப்பில் இருந்து நீக்கி விடுகிறேன். நீங்கள் தயவு செய்து உட்காருங்கள். பேசியது போதும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இது ஒரு கமிஷனின் அறிக்கை தான், கோர்ட் ஜட்ஜ்மெண்ட் அல்ல. இது பாக்ட் பைண்டிங் கமிட்டியின் அறிக்கை: அது சரியான முறையில் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி கருத்து சொல்ல உரிமை இருக்கிறது. அந்தக் கருத்தில் அவர் சொன்னால் அது தவறு கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் பயன்படுத்திய வார்த்தை தவறு என்று சொல்லித்தான் அதை நீக்கச் சொல்லி உத்தரவிட்டேன்.

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR: The hon. Member mentioned about some inference about partiality. It is only that aspect of the matter that is open to objection and that must be expunged.

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைத்தான் நானும் சொன்னேன். அவர் சொன்ன கருத்தில் மாறுபாடு இருக்கிறதாகத் தோன்றுகிறது. அவர் சொன்னது தவறாக இருந்ததால் நீக்கிவிடச் சொன்னேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: கமிஷன் அறிக்கையைப் பற்றிச் சொல்லும் போது திரு. சுப்பு அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். *** என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஏற்கெனவே அதை நீக்கச் சொல்லி விட்டேன். இப்போதும் அதை - நீங்கள் குறிப்பிட்டதை நீக்கிவிட உத்தரவிடுகிறேன். அதோடு, நீங்கள் பேசியது போதும், நேரமாகி விட்டது, உட்காருங்கள்.

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1978 ஏப்ரல் 6

*திரு. துரை முத்துசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் பேசும் வாய்ப்பு கிடைத்தமைக்காக முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது எங்களுடைய கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்:

இந்தக் கமிஷனுடைய கடமை என்ன, பொறுப்பு என்ன என்பதில் நீதிபதி இஸ்மாயில் அவர்கள் கமிஷன் சிறையிலே இருந்த மிசா கைதிகள் அடித்துத் துன்புறுத்தப் பட்டார்கள் கொடுமைப் படுத்தப் பட்டார்கள் என்று கூறுவதைப் பற்றி ஆராய்வதும் அதற்கு யார் யார் பொறுப்பாளி என்பதை அறியவும்தான் இந்த கமிஷன் நியமிக்கப் பட்டிருக்கிறது என்பதை கமிஷன் நியமிக்கப்பட்ட அன்றே நாம் அறிந்திருக்கிறோம்.

ஆனால், இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் அவர்கள் சொல்லியிருப்பதைப் பொறுத்த வரையில், இஸ்மாயில் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டிருப்பதைப் பொறுத்த வரையில், ஒரு நீதிமன்றம் போல் நடந்திருந்த போதிலும் **.. நடந்து கொண்டிருப்பதாக இந்த அறிக்கை காட்சியளிக்கிறது. அங்கே இருந்த சிறை மிசா கைதிகளை விசாரித்திருக்கிறார். ஒரே ஒரு அதிகாரியை மட்டும், உள்துறைச் செயலாளரை, அப்போது செயலாளராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களை மட்டும் விசாரித்திருக்கிறார். மற்ற எந்த அதிகாரிகளின் வாக்கு மூலத்தையும் பெறவில்லை; ஏற்கவும் இல்லை.

எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அவர்களும் சொன்னார்கள். சிறையிலே சித்திரவதைப் பட்டவர்களை விசாரித்திருக்கிறார். அவர்களுடன் இருந்த ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை விசாரிக்கவில்லை. * இது வெளியிடப்பட்டிருக்கிற கருத்து, ஒரு நீதி மன்றம் போல காட்சியளிக்கவில்லை, **இஸ்மாயில் கமிஷன் நடைபெற்றிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

சிறை சீர்திருத்தங்களைப் பற்றி கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது. சிறையில் என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும், இப்போது எப்படி எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் நம்முடைய சட்டத்துறை அமைச்சரவர்கள் இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் குறிப்பிட்ட இந்தக் கருத்துக்கள் எல்லாம் கமிஷன் அறிக்கையிலே இருக்கிறது

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்பதைப் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அனைத்து நண்பர்களும் சொன்னார்கள், சிறையில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் கொடுமைகளைப்பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஒரு கமிஷன் சிறை சீர்திருத்தங்களைப்பற்றி விசாரித்திருக்கிறது.

இப்போது மட்டுமல்ல; ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்தே சிறையில் கொடுமை இருக்கிறது என்று எல்லோரும் அறிவோம். அந்தக் காலத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் வ. உ. சி. அவர்கள் சிறையிலே செக்கு இழுத்தார்கள். முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அதன் நினைவாக நினைவுச் சின்னம் கூட வைத்திருக்கிறார்கள்.

அதற்கு மேல் நம்முடைய நாட்டின் விடுதலைக்காகப் போராடிய சுதந்திர வீரர் சுப்பிரமணிய சிவா போன்றவர்கள் எல்லாம் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சிறையிலே குஷ்டரோகிகளின் சிறுநீரைக் கொடுத்து, அவரைக் குடிக்க வைத்திருக்கிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் அப்படிப் பட்ட கொடுமை நடந்திருக்கிறது. அதைப் போன்று பல்வேறு வகைகளில் சிறைகளிலே கொடுமைகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. அது எல்லோருக்கும் தெரியும்.

சிறையிலே இழைக்கப்பட்ட கொடுமைகள் என்னென்ன, அதற்கு யார் யார் பொறுப்பாளி என்பதைக் கண்டறிய நியமிக்கப்பட்ட ஒரு கமிஷன் அந்த வேலையை விட்டு விட்டு, சம்பந்தம் இல்லாததை எல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டதைப் போல' சிறையில் கண்காணிப்பாளராக யார் இருந்தார், அவருடைய பொறுப்பு என்ன, கொடுமைகள் எந்தெந்த வகையிலே நடைபெற்றன, யார் யார் பாதிக்கப்பட்டவர்கள் என்பதிலே ஆராய்ச்சியைச் செலுத்தாமல் சிறை சீர்திருத்தத்திலே ஆராய்ச்சியைச் செலுத்தியிருக்கிறார்கள்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தரப்பட்டிருக்கின்ற அந்த அறிக்கையிலே மிகத் தெளிவாகவே தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்தினை வலியுறுத்துவதற்காக இந்த அறிக்கையில் தந்திருக்கிற கருத்துக்களைப் போலவே காட்டி அது இல்லை இது இல்லை என்று பேசுவது, தரப்பட்டிருக்கின்ற அந்த அறிக்கையினை இழிவுபடுத்துகின்ற நிலையிலேயிருக்கின்றது. ஆகவே, அவர் பேசிய அந்தப் பேச்சிலே எந்தப் பகுதியை ஏற்றுக் கொள்ள வேண்டுமோ அந்தப் பகுதியை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவற்றை ஏற்றுக்கொள்ளலாமா என்பது பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: இங்கே அப்படி கமிஷனில் சில சீர்திருத்தம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் இங்கே கமிஷனிலே அவர்கள் கூறி இருக்கின்ற சிலவற்றை நான் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன். சில தலைவர்களைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். அப்போது இட வசதி இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. கைதிகளுக்கு இடம் ஒதுக்குகின்ற பொறுப்பு அதிகாரிகளுக்கு இருக்கின்றது. அந்தக் கைதிகளை வரவேற்கவில்லை, அவர்களுக்கு இடவசதி செய்து தரப்படவில்லை என்பது பற்றிச் சொன்னார்கள். ஆனால் இந்த வசதிகள் எல்லாம் செய்து தருவது கண்காணிப்பாளரின் பொறுப்பாக இருக்க முடியுமே தவிர, சிறைத்துறைத் தலைவரின் கடமை இல்லை.

அதைப் போலவே 9-வது ப்ளாக்கிலிருந்து 6-வது பிளாக்கிற்கு மாற்றப்பட்டது. அங்கிருந்து வேறு ப்ளாக்கிற்கு மாற்றப்பட்டது என்று குற்றம் சாட்டி இருக்கிறார்கள். அதற்கு அதிகாரம் உத்தர விடவில்லை. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் 9-வது ப்ளாக்கிலே இருந்து இடவசதி இல்லாத காரணத்தால் தான் வேறு ப்ளாக்கிற்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். 1,500 பேர்கள் தான் முடியும். ஆனால், அந்த இடத்தில் ஜனவரி 31-ஆம் தேதிக்கு முன்பு கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருக்கிறார்கள் அங்கு இட வசதி போதவில்லை. 1,500 பேர் இருக்க வேண்டிய இடத்தில் 3000 பேர் இருந்தார்கள். இடவசதி இல்லாத காரணத்தால்தான் குவாரன்டைன் ப்ளாக்கிற்கு மாற்றி இருக்கிறார்கள். ஏனென்றால் அங்கே கிச்சன் வசதி போன்ற வசதிகள் இருந்ததால்தான் மாற்றி இருக்கிறார்கள்.

அடுத்து, இங்கே கொடுமைப்படுத்தப்பட்டது பற்றிக் குறிப்பிட்டார்கள். சிறைத் துறைத் தலைவர் இந்தப் பொறுப்பிலே இருந்து விலக முடியாது என்று இஸ்மாயில் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் இதைப்போல் அடித்து துன்புறுத்தப்பட்டு கொடுமைப்படுத்தப்பட வேண்டும் என்று சிறைத் துறைத் தலைவர் எண்ணி இருப்பாரேயானால் தமிழகத்தில் இருக்கின்ற 92 சிறைச் சாலைகளிலேயும் இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்திருக்க வேண்டும். ஆக, இது மத்திய சிறையிலே மட்டும் எற்பட்ட ஒரு விஷயம். அப்படிப் பார்க்கின்ற நேரத்தில் இதற்கு யார் பொறுப்பாளி என்பதை நன்கு உணர்ந்து அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விட்டு விட்டு மொட்டைத் தலைக்குப் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போல் இந்தப் பழியினை சிறைத் துறைத் தலைவரின் மீது வைப்பது எப்படிப் பொருத்தமுடையதாக இருக்கும் என்றுதான் கேட்கிறேன்.

இங்கே உதராணத்திற்கு என்று ஒன்று குறிப்பிடப் பட்டது. தந்தை செய்த குற்றத்திற்குப் பிள்ளைக்குத் தண்டனையா என்பது போன்ற அளவில் பேசப்பட்டது.

(பிற்பகல் 12-30)

அதேபோல் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது என்று சொன்னால் ஒரு வழக்கை ரெஜிஸ்டர் செய்ய அந்த போலீஸ் ஸ்டேஷன் உதவி ஆய்வாளருக்குத்தான் அதிகாரம் உண்டு. ஐ.ஜி. யாக இருந்தால்கூட, அவர்கள் தமிழ்நாட்டின் தலைமை போலீஸ் அதிகாரியாக இருந்தால்கூட, அவர்களுக்கு அந்த அதிகாரம் கிடையாது.

திரு. சி. ஆறுமுகம்: பாயிண்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர் அவர்கள் பிள்ளை தகப்பன் உதாரணத்தைத் தருகிறார்கள். ஆனால் சிறைச்சாலைகள் சிறைச்சாலைகளின் தலைவராக இருக்கும் ஐ. ஜி. அவர்களின் முழு கண்ட்ரோலில் வருகிறது என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: ஆக ஒன்பது மத்திய சிறைச் சாலைகளில் ஒரு சிறைச்சாலையில்தான் நடைபெற்றிருக்கிறது இப்படிப்பட்ட நிலைமைகள் ஆனால், மற்ற மத்தியச் சிறைச் சாலைகளில் இவ்விதம் நடக்கவில்லை. ஆகவே இங்கே அதற்கு யார் பொறுப்பாளி என்பதை அரசாங்கம் கண்காணித்து அவர்கள்மீது சரியான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உயர் அதிகாரிகள் அதன் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும், விலகிச் செல்லமுடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி பொறுப்பேற்க வேண்டுமென்று சொன்னால் உள்துறை செயலாளராக இருந்த சுப்பிரமண்யம் அவர்களும், டீ. ஐ. ஜி. யும், சிறைத் துணைத் தலைவரும், சிறைத் தலைவரும் பொறுப்பு என்ற வகையில்தான் இந்தச் சிறைச்சாலையைப் பொறுத்தவரையில் பொறுப்பேற்கக் கூடியவர்கள். அவர்கள் சொல்வதைப்போன்று அனைவரும் பொறுப்பு என்று இருந்தால் அப்போதிருந்த அட்வைசர்களும்தான் இதில் சம்பந்தப்பட்டவர்களாக இருப்பார்கள். அதேபோல் அப்போதிருந்த சீப் செகரட்டரியும் சம்பந்தப்பட்டவராக இருக்கமுடியும். அன்று உள்துறை செயலாளராக இருந்தவர் இன்று மத்திய அரசில் காபினெட் செகரட்டரியாக இருப்பதால்தானோ என்னவோ தெரியவில்லை, இந்தக் கமிஷன் அவரைப்பற்றிக் குறிப்பிடவில்லை. உள்துறை செயலாளராக இருந்தவர்......

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, I would like to bring to the notice of the Hon. Member that there is no finding against the Chief Secretary The Chief Secretary is civil servant. He has only protection and that is anonymity. If his adminfstrative action comes directly for any criticism, the Ministes concerned will take the responsibility for it and in this case no find

ing is given by the Ismail commission aganist the Chief Secretary. Therefore, any reference made by the hon. Member may be dlrected to be expunged.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், ஜெயில் அதிகாரி செய்ததற்கு ஐ. ஜி, ஆப் ப்ரிசன்ஸ் தான் காரணம் என்றால் அவருக்கு மேல் இருக்கிற அதிகாரிகள் வரை பொறுப்பு போய் சேரும் என்ற முறையில் தான் அவர்கள் சொன்னார்களே தவிர யாரையும் டயரக்டாக குற்றம் சொல்லவில்லை. அவர்கள் பேசும்போது சீப் செகரட்டரி காரணம் என்று சொல்லவில்லை. அவருக்கு மேல் இருக்கிற அதிகாரி, அதற்குமேல் இருக்கிற அதிகாரி என்று சீப்செகரட்டரி வரை எல்லோரும் வருவார்கள் என்றுதான் சொன்னார்கள். ஆகவே அதை நீக்கவேண்டியதில்லை.

திரு. துரை முத்துசாமி: ஒரு போலீஸ் ஸ்டேஷனில் அந்தப் போலீஸ் ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டருக்குத்தான், கொலைக் கேஸாக இருந்தாலும் சரி, கொள்ளைக் கேஸாக இருந்தாலும் சரி, கற்பழிப்புக் கேஸாக இருந்தாலும் சரி, ரெஜிஸ்டர் செய்கிற அதிகாரம் அவருக்குத்தான் உண்டு. அதே நேரத்தில் ஐ.ஜி. என்று சொல்கிறவர்— அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் போலீஸ் நிலையங்களுக்கும் தலைவர் என்றிருந்தபோதிலும்— ஒரு குறிப்பிட்ட ஸ்டேஷனில் இன்ன சம்பவம் நடந்திருக்கிறது என்று அந்த வழக்கை ரெஜிஸ்டர் செய்ய அவர்களுக்கு அதிகாரம் கிடையாது. ஓவர் ஆல் சூப்பர்விஷன் என்றிருந்தாலும் குறிப்பிட்ட சில அதிகாரங்கள் சிலருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதை அவர்தான் செய்ய முடியும். போலீஸ்காரர்தான் ஒரு கைதியை அரஸ்ட் செய்து கொண்டு செல்ல முடியும். நான் ஐ. ஜி. ஆகவே இதைச் செய்கிறேன் என்று சொல்ல முடியாது. ஒவ்வொருவருக்கும் சில அதிகார வரம்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த வரம்மையப் பொறுத்து மத்திய சிறைச்சாலையில் நடந்ததற்கு கண்காணிப்பாளர்தான் பொறுப்பு.

அது அல்லாது, ஐ. ஜி. ஆப் பிரிஸன்ஸ் பொறுப்பு என்று சொன்னால் அதேபோல் உள்துறை செயலாளரும் பொறுப்பு, ஐ. ஜி. பொறுப்பு, சீப் செகரட்டரி பொறுப்பு, அட்வைசராக இருந்தவர் பொறுப்பு என்றாகிவிடும்.

அதைப்போல இஸ்மாயில் கமிஷன் மிசா கைதிகளாக இருந்தவர்களிடமிருந்து வாக்குமூலம் வாங்கியிருக்கிறார்கள். ஒரு சில அதிகாரிகளிடமிருந்து வாக்குமூலம் வாங்கியிருக்கிறார்கள். உள்துறை செயலாளராக இருந்தவரிடமிருந்து மட்டும் வாக்குமூலம் வாங்கியிருக்கிறார்கள். வேறு யாருடைய வாக்குமூலத்தையும் ஏற்கவில்லை.

அதே சமயத்தில் உள்துறைச் செயலாளர் 22-6-76-ல் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டிருக்கிறார்கள். அங்கு இவரைச் சந்தித்து 6 பேர்கள் புகார் கொடுக்கிறார்கள். இவரும் அந்தப் புகாரை வாங்கி வைத்துக்கொள்கிறார். வாங்கிக் கொண்டு அதை ரெஜிஸ்டர் செய்யவில்லை. சீப்-செக்ரட்டரிக்கும் அனுப்பவில்லை. அட்வைசரி போர்டுக்கும் அனுப்பவில்லை. ஓராண்டுக்குப் பின்னால் இதை கமிஷன் முன்னால் ஆஜர்படுத்துகிறார், ஏதோ பிரைவேட் டாக்குமென்டைப்போல்.

சாதாரணமாக உள்துறை செயலாளருடைய கடமை என்ன? தனது கடமையை செய்யாதவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றோ இதற்கு பொறுப்பாளி யார் என்றோ இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் காணவில்லை. மற்றவர்களைப் பற்றி எல்லாம் சொல்லுகிறார்களே ஒழிய இப்படிப்பட்ட நேரான குற்றச்சாட்டுகள் இந்த அறிக்கையில் சொல்லப் படவில்லை:

சிறைச்சாலைத் தலைவர் சென்ற போது கூட, இந்த மிசா கைதிகள் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ எந்தப் புகாரையும் கொடுக்கவில்லை. இஸ்மாயில் கமிஷனிலும், சிறைச்சாலை தலைவருடைய வாக்குமூலத்திலும் இந்தப் புகார் சொல்லப்படவில்லை. யாரும் யாரைப்பற்றியும் தவறாக சொல்லவில்லை. புகாரும் கொடுக்கவில்லை. அப்பேர்ப்பட்ட சிறைச்சாலைத் தலைவரையும் இதில் ஈடுபடுத்தி, அவர் இந்தப் பிரச்னையில் தனிக் கவனம் செலுத்தியிருந்தால், இப்படிப்பட்ட சம்பவங்களை தவிர்த்திருக்கலாம்.

ஆனால் ஜெயில் மான்யுவல் விதி 14-ன் படி சிறைச்சாலைத் தலைவர் இரண்டு முறை தான் ஒவ்வொரு மத்திய சாலைக்கும் சென்று பார்வையிட வேண்டும் என்று இருக்கிறது. அதாவது ஒன்று, இன்ஸ்பெக்ஷனுக்காகவும், இன்னொன்று ஸர்ப்ரைஸ்-விசிட்டாகவும் செல்லவேண்டும் என்று இருக்கிறது. இப்படி தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒன்பது மத்திய சிறைச்சாலைகளுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் இப்போது என்ன சொல்லப்படுகிறது என்றால், சிறைத்துறை தலைவர் அடிக்கடி சென்று பார்த்திருக்கலாம் என்று. இவர் செல்லாமல் இருக்கும்போதே நிலைமை இப்படி இருக்கிறது. அடிக்கடி சென்று பார்வையிட்டிருந்தால், இவருடைய தூண்டுதலின் பேரில் தான் இவையெல்லாம் நடைபெற்றது என்று சொல்லியிருப்பார்கள்.

7-2-76-லிருந்து 14-2-76 வரையிலும் வெளியில் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார். இருந்தும் அவர்கள் மீது சொல்லுகிறார்கள், இவர் அடிக்கடி சிறைச்சாலைக்குச் சென்றிருந்தால், இதையெல்லாம் தவிர்த்திருக்கலாம் என்று. இவர் அப்படி சென்றிருந்தால், இன்றைக்கு எல்லா குற்றங்களையும் இவர்

தலையின் மீது போடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம். ஜெயில் மான்யுவலில் ஒரு ஜெயிலுக்கு இரண்டு முறை தான் செல்லலாம் என்றிருக்கிறது. அதன் படி தான் இவர்கள்....

__திரு. கே. சுப்பிரவேலு :__ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சிறைத் துறை தலைவர் அவர்கள் ஒரு சிறைச்சாலைக்கு ஒரு ஆண்டில் இரண்டு முறை தான் செல்லலாம் என்று விதியில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படியல்ல, குறைந்த பட்சம் இரண்டு முறையாவது போகவேண்டும் என்பது தான் அதன் பொருளேயல்லாமல், இரண்டு முறைதான் போகலாம், அடிக்கடி போகக் கூடாது என்பதல்ல என்பதையும் எப்போது வேண்டுமென்றாலும் போகலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

__திரு. துரை முத்துசாமி :__ அப்படியொன்றுமில்லை. ஜெயில் மான்யுவலில் இரண்டு முறைதான் போகலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஒன்று இன்ஸ்பெக்ஷனுக்காகப் போகலாம். இன்னொன்று ஸர்பிரைஸ் விசிட் என்ற முறையில் போகலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, இவர் ஜெயிலுக்கு ப்ரிக்வென்ட் விஸிட்செய்திருந்தால், ரொட்டீன் விஸிட் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சொல்லப்பட் டிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமையில் இவர் அடிக்கடி சென்றிருந்தால், இவர்தான் தூண்டுதலுக்கு காரணமாக இருந்தார் என்ற எண்ணம் உருவாகக்கூடிய சூழ்நிலை வந்திருக்கும். போகாத நேரத்திலேயே இப்படிப் புகார் சொல்லும்போது, போயிருந்தால் நிச்சயமாக வேறுவிதமாகச் சொல்லியிருப்பார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் இந்த அறிக்கையில் தலைமை அதிகாரியைப்பற்றி சொல்லியிருப்பது எல்லாம் ஒருதலைபட்சமானது, விருப்பு வெறுப் போடு எழுதியதாக இருக்கிறது. ஆகவே இதை ஏற்கக் கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் இந்தச் சிறைச்சாலை விஷயமாக, இஸ்மாயில் கமிஷன் போடுவதற்கு முன்பாக, ஆரம்ப காலத்தில் சதாசிவம் அவர்களை இந்தக் கமிஷனுக்குப் போட்டார்கள். அதை ஆட்சேபித்து, இவர் ஒரே இனத்தைச் சார்ந்தவர், ஆகவே இவரை மாற்றிவிட்டு வேறு ஒருவரை நியமிக்க வேண்டும் என்று சாதிக்பாட்சா அவர்கள் கவர்னரிடம் மனு கொடுத்தார். இதற்கிடையே சதாசிவம் அவர்கள் தானே ராஜினாமா செய் கிறேன் என்று இதிலிருந்து விலகிவிட்டார். பின்னால் நியமிக்கப்பட்டவர் இஸ்மாயில் அவர்கள், ஆனால் இவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நியமிக்கப்பட்டார் என்று 12-3-78-ல் கோர்டில் தி.மு.க. வழக்கறிஞர் டாளையங்கோட்டை சண்முகம் அவர்கள் கோர்டில் வாதாடும்போது சொல்லியிருக் கிறார். இந்த அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்னாலே * * *

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க **அகற்றப்பெற்றது.**

(பிற்பகல் 12-40)

__திரு. என். கிட்டப்பா :__ பாயிண்ட் ஆப் ஆர்டர்.....

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :__ நானே சொல்லி விடுகிறேன்: கடைசியாக சொன்ன 3,4 வரிகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவடுகிறேன். தயவுசெய்து உட்காருங்கள். பத்திரிகையிலே வந்த தகவலை வைத்துக் கொண்டு அதை ஆதாரமாகக் காட்டி இங்கே நிச்சயம் பேசக் கூடாது;

__திரு. துரை முத்துசாமி :__ (பத்திரிகை ஒன்றைக் காண்பித்து) 'முரசொலி' பத்திரிகையிலே வந்திருக்கிறது.

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :__ 'முரசொலி' பத்திரிகையிலே வந்தாலும் சரி அல்லது வேறு எந்தப் பத்திரிகைகளிலே வந்தாலும் சரி. அவைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு யாரும் பேசக் கூடாது; பேசவும் முடியாது. கடைசியில் அவர் சொன்ன 4 வரிகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

__திரு. கே. கந்தசாமி :__ தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் தீர்ப்புக்குத் தலை வணங்கத் தயாராக இருக்கிறேன். பத்திரிகையை ஆதாரம் காட்டிப் பேசுகின்ற உறுப்பினர், முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள முன்வருகிறபோது, அதை அனுமதிப்பதுதான் சபையின் மாபாக இருக்கிறது. அப்படி இருக்கும்போது, அந்தப் பகுதியை ஏன் நீக்க வேண்டுமென்று....

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ;__ பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக உறுப்பினர் அவர்கள் பேசும்போதும் கூறவில்லை; அதற்கு முன்னாலேயும் சொல்லவில்லை. அப்படியே குற்றஞ் சாட்டுவதாக இருந்தாலும்கூட, அனுமதியைப் பெற்ற பிறகு தான் இந்த அவையிலே அதைப்பற்றி சொல்லவேண்டுமென்பது தான் மரபு. யார் வேண்டுமானாலும், எந்தப் பத்திரிகையை வேண்டுமானாலும், அவைகளிலே வந்திருக்கின்ற செய்தியை திடீரென்று இங்கே காண்பித்து பேசிவிட முடியாது. அந்த மாதிரியெல்லாம் நிச்சயம் பேசக் கூடாது.

__திரு. துரை முத்துசாமி :__ அப்படியானால், பத்திரிகையிலே வந்திருப்பது பொய் என்று சொல்கிறீர்களா?

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :__ உட்காருங்கள். பத்திரிகையிலே வந்திருப்பதை முதலிலேயே காண்பித்து, அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்க வேண்டும். பிறகுதான் இங்கே அதைப் பற்றி பேசலாம்.

__திரு. க. அன்பழகன்:__ துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக ஒரு விளக்கத்தைத் தந்து, அதற்குப் பதில்தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எந்த ஆதாரமாக இருந்தாலும், அந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேசும்போது, கமிஷன்மீது ரிப்லெக்ஷன் செய்யக்கூடிய அளவிலே உறுப்பினர் சொல்வது ஏற்ற மரபல்ல. கமிஷன் அறிக்கையை மறுக்கலாம்: ஏற்றுக்கொள்ளலாம் அல்லது ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம், அல்லது விசாரணையை ஒப்புக்கொள்ளவில்லை என்றும் சொல்லலாம். ஆனால் கமிஷன் ஒரு முடிவிற்கு வந்த பிறகு, ஏதேனும் ஒரு கருத்தைக்காட்டி கமிஷன் கருத்துக்கு களங்கம் ஏற்படுத்துகின்ற அளவிலே பேசக்கூடாது. ஏற்கனவே, சட்ட அமைச்சர் அவர்கள் எதைச் சொன்னார்களோ அதைத்தான் நானும் சொல்கிறேன். 'ரிப்லெக்ஷன் ஆன் தி கமிஷன்' என்ற அளவிலே இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினர் பேசியதை அனுமதிப்பது, அது அவைக் குறிப்பிலே இடம்பெறச் செய்வது நியாயமில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:__ இரண்டு விஷயம் நான் ஏற்கனவே சொன்ன மாதிரி . . . . .

__திரு ஏ. ஆர். மாரிமுத்து:__ தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் துரை முத்துச்சாமி அவர்கள் சொன்னது, இந்தக் கமிஷன் பேரிலே ஒரு ரிப்லெக்ஷன் உண்டாகும் என்று கூறினார்கள். 'முரசொலி' பத்திரிகையிலே அந்தக் கட்சியினுடைய வக்கீல் சண்முகம் என்ன கூறியிருக்கிறாரோ, அதைத்தான் இங்கே பேசியிருக்கிறார்கள். * * * அவர் கூறியதைத்தான் அப்படி பத்திரிகையிலே வந்துள்ள செய்தியைத்தான் இங்கே கூறினார்களே தவிர, வேறு ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

__திரு. க.அன்பழகன்:__ (உட்கார்ந்து கொண்டு) அப்பொழுது கூட அது சரியில்லை.

---

* *மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:__ இது ஜட்ஜ்மெண்டாக இருக்கலாம் அல்லது ரிப்போர்டாக இருக்கலாம். (திரு.க.அன்பழகன் அவர்களைச் சுட்டிக்காட்டி) உங்களைத்தான் கேட்கிறேன்.

__திரு. க. அன்பழகன்;__ தலைவர் அவர்களே, ரிப்போர்டாகவும் இருக்கலாம், ஜட்ஜுமெண்டாகவும் இருக்கலாம். அது வேறு பிரச்னை. ஒரு கமிஷன் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி, சொன்னது தவறாக இருக்குமானால் அவர்கள் மீது கமிஷன் வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கலாம். அவர் வெளியே பேசுவது தவறாக இருக்கலாம். ஆனால் கமிஷன் மீது அப்படி குறை ஏற்படுத்தும் ஒரு கருத்தை யார் சொன்னதாக இருந்தாலும், இந்த அவையிலே அதைச் சொல்வதன் மூலம் இடம் பெறச் செய்யக் கூடாது என்பது தான் மரபு.

__மாண்பு கு பேரவைத் துணைத் தலைவர்;__ அவர் கடைசியாக பேசியதை நீக்கச் சொல்லி உத்தரவிட்டு விட்டேன். இது ஜட்ஜ்மெண்ட் அல்ல: ஒரு ரிப்போர்ட்டை - அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதன் மேல் அவர்களுடைய கருத்தை ஓரளவு சொல்ல சந்தர்ப்பம் இருக்க்வேண்டும்.

__மாண்புமிகு திரு.கி. மனோகரன்:__ இது ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பாக இருந்தாலும் சரி; கமிஷன் அறிக்கையாக இருந்தாலும் சரி; அதைப்பற்றி அவை விவாதிக்கும் போது அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற சில கருத்துக்கள் ஏற்புடைத்தன என்றோ அல்லது சொல்லப்பட்டக் கருத்துக்களை தீவிரமாக ஆராய்ந்து பார்த்ததில் சொல்லுகிறேன்—என்றால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதற்கு இன்னின்ன காரணங்கள் என்று சொல்வதில் அவை உறுப்பினர்களுக்கு நிச்சயமாக உரிமையுண்டு. ஆனால் அந்த உரிமை என்ற வரம்பைத் தாண்டி கமிஷனுக்கு உள்நோக்கம் கற்பிக்கிற முறையில் அல்லது நம்மால் நியமிக்கப்பட்ட அந்தக் கமிஷனுக்குப் பொறுப்பாளியாக இருந்து அந்த அறிக்கையைத் தாக்கல் செய்த அவரது தரத்தை அல்லது அவரது கண்ணியத்தைக் குறைக்கத்தக்க வகையில், களங்கம் கற்பிக்கும் முறையில் தெரிவிக்கப்படுகிற கருத்துக்கள் இந்த அவையின் மரபுக்கு ஏற்புடைத்தானதாக இருக்குமென்ற நம்பிக்கை எனக்கு இல்லை என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் கருத்தை தெரிவிக்கிற அருமை மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது எண்ணங்களை இந்தக் கமிஷனின் அடிப்படையில் வைக்க முயற்சிக்க வேண்டுமே தவிர, கமிஷன் இப்படி நடந்திருக்க கூடாது. அவர் இந்த உள்நோக்கத்தோடு செய்திருக்கிறார்; ஆகையால் நான் சந்தேகிக்கிறேன் என்ற இப்படிப்பட்ட வாசகங்களோ, இப்படிப்பட்ட உணர்வுகளோ உருவாகக்கூடிய சொற்களோ இடம் பெறுமானால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் நிச்சயம் நீக்குவீர்க்ள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: கமிஷன் ஜட்ஜுக்கு உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. இன்னின்ன சூழ்நிலையில், இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றி எடுத்துக் கூறக் கூடாது என்றால் இதன் பேரில் விவாதமே தேவையில்லையே.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இன்ன சூழ்நிலையில் இன்னின்ன கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சொல்லக்கூடாது என்று நான் சொல்லவில்லை. நான் பொதுப்படையாக ஒரு கருத்தை வைக்க விரும்புகிறேன். தயவுசெய்து நான் சொல்கிற கருத்தை திரு. துரை முத்துசாமி அவர்களுக்குச் சொல்லப்படுகிற கருத்தாக ஏற்றுக்கொள்ளாமல் பொதுப்படையாகச் சொன்ன கருத்தாக ஏற்று கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்: ஆளும் கட்சித்தரப்பில் திரு. பண்ணைசேதுராம் அவர்கள் பேசியபோது கூட பல விஷயங்கள் சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருகின்றன. அதுபோல் இந்தப் பக்கத்தில் பேசும்போதும் நீக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட வகையில் களங்கம், உள்நோக்கம் கற்பிக்கும் பேச்சைப் பேசக் கூடாது. பொதுப்படையாகக் கருத்துக்களைச் சொல்ல உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த வகையில் பேசவேண்டுமென்று அவை முன்னவர் கேட்டுக்கொண்டது போலவே நானும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட தீர்ப்பு வந்திருக்கிறது என்று தான் திரு. துரைமுத்துச்சாமி அவர்கள் அதற்குஆதாரமாக அந்தப் பத்திரிகையை காட்டினார்கள். 12ஆம் தேதி இப்படிப் பேசியிருக்கிறார்கள்.

* * *

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, முதல் தவறு என்று சுட்டிக்காட்டுபவர் அந்தப் பத்திரிக்கையைப் படிப்பதற்கு முன்பு அதைத் துணைச் சபாநாயகரிடம் காட்டிவிட்டுப் பேசியிருக்கவேண்டும். தவறுகள் நடந்த காரணத்தாலோ அதை தொடர்கதையாக. வேண்டுமென்று பெரியவர் விரும்புகிறார் என்றால் எனக்குப் பேச ஒன்றும் இல்லை. அப்படிக் காட்டிவிட்டுத் தான்—பேசவேண்டுமென்று மீண்டும் மீண்டும் திருப்பித் திருப்பி பேரவைத்தலைவரும் துணைத்தலைவரும் சொல்லுகிறார்கள், அதை நீங்கள் படிப்பதற்கு முன்னால் தங்களிடம் காட்டவேண்டும், அது காட்டப்படவில்லை. காட்டாமல் அவராகவே எடுத்துப் பேசுகிறார். வெளியே யாரோ எழுதிய கருத்தை, பேசிய கருத்தைப் படிக்கிறார் படிப்பதற்கு முன்பு அனுமதிப்பெற்றிருக்க வேண்டும். இதைத் தான் குறிப்பிட்டேனே தவிர, வேறல்ல.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

'பத்திரிகையில் இருப்பதைப் படித்தது கூட தவறா?' என்று அம்பிகாபதி போன்ற விவரம் தெரிந்தவர்கள் பேசும்போது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. ஒழுங்காக, ஆற்றொழுக்காகப் போய்க்கொண்டிருக்கும் இந்த விவாதம் சுமுகமாக முடிய உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திரு. துரை முத்துசாமி அவர்கள் கருத்தைச் சொல்லும்போது இதை கைட்லைன்ஸ் ஆக வைத்துப் பேசினால் சபைக்குக் கொஞ்சம் நன்றாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.50)

இதைத் தொடர்ந்து யாரும், நான் தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன, இத்தனை பேசியதற்குப் பிறகும் ஒவ்வொருவரும் விளக்கம் தரவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: பேப்பரிலே வந்த செய்தியைத்தான் அவர் படித்தார்.. .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேப்பரிலே இருந்து அனுமதி பெறாமல் படிக்கக் கூடாது. முன் அனுமதி பெற்றுத் தான் படிக்க வேண்டும். இல்லை என்றால் யார் யார் வேண்டுமானாலும் எதை எதை வேண்டுமானாலும் இங்கே படிக்கலாம் என்ற நிலைமை வந்துவிடும்.

திரு. துரை முத்துசாமி: நான் பேசிவிட்டு உங்கள் அனுமதியோடு அதைப் படிக்கிறேன் என்றுதான் சொன்னேன்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் அனுமதியோடு படிக்கிறேன் என்று படிக்க ஆரம்பித்தால் என்ன ஆகும்? நான் அதைப் பார்க்க வேண்டாமா? என்னுடைய நோட்டீஸுக்கு அது வரவேண்டாமா? நான் அதைப் பார்த்து அனுமதித்த பிறகுதான் படிக்க வேண்டும். என்ன படிக்கப்போகிறீர்கள் என்பதை நீங்கள் முன்கூட்டியே என்னிடம் காட்டியிருக்கவேண்டும். நான் அதை அனுமதித்திருக்கவேண்டும், இல்லாவிட்டால் படிக்கமுடியாது.

திரு. துரை முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, இது அறிக்கையாக இருக்கிற காரணத்தால்—இது ஒரு ஜட்ஜ்மெண்ட் அல்ல, ஜட்ஜ்மெண்டாக இருந்தால் அப்பீல் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது—ஆனால் இது ஒரு அறிக்கையாக இருப்பதால் அரசு இதன்மீது நடவடிக்கை எடுக்கிறது. இஸ்மாயீல் கமிஷன் அறிக்கையாக இருப்பதால் இதைப்பற்றி இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லக்கூடிய கட்டாயம் எங்களுக்கு இருக்கிறது. ஆரம்ப காலத்திலே இதற்கு சதாசிவம் அவர்களைப் பேட்டபொழுது திரு. சாதிக் பாட்சா அவர்கள்

மனுக் கொடுத்து அதற்குப் பிறகுதான் இஸ்மாயிலை போட்டார்கள். இஸ்மாயிலை போட்ட பிறகு எப்படியெல்லாம் வெளியிலே பேசுகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். 1976-ஆம் ஆண்டு பிப்ரவரியிலிருந்து நடந்ததுபற்றித்தான் இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. 1975-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது. அப்போதிருந்தே—அப்போதும் மிசாவின்கீழ் சிறை பிடிக்கப்பட்டார்கள், கடத்தல், சாராயம் வைத்திருத்தல் போன்றவைகளுக்காக கைது செய்யப்பட்டார்கள்—அவைகளைப்பற்றியும் கமிஷன் போட்டு அறிக்கை தந்திருக்கவேண்டும். குப்பண்ணன் கமிஷன் என்று போட்டார்கள். கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் பற்றி கமிஷன் போட்டார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> இப்போது அவையின் முன்னுள்ள அறிக்கையைப்பற்றிப் பேசுங்கள். நேரமாகிவிட்டது, சீக்கிரம் முடியுங்கள்.

<u>திரு. துரை முத்துசாமி :</u> ஆகவே, இந்த அறிக்கையை ஏற்கக் கூடாது என்று தெரிவித்து, முடிக்கிறேன்.

<u>திரு. ர. ஜெபமணி :</u> மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இஸ்மாயில் கமிஷன் அறிக்கையின்மீது ஜனதா கட்சியின் சார்பாக என்னைப் பேச அனுமதித்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கமிஷனை நியமித்து இப்படி ஒரு அறிக்கை வருவதற்குக் காரணமாக இருந்த கவர்னர் பெருமான் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையை ஒழுங்காக, சீராக நமக்கு உருவாக்கித் தந்த இந்த கமிஷனையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசியவர்கள் எல்லோருமே ஒன்றை ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். சிறைச்சாலைகளில் எல்லாம் கொடுமைப்படுத்தக் கூடாது என்பதை கட்சி மாறுபாடு இல்லாமல் எல்லோரும் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். சிறை என்பதே கைதிகளுக்குப் பாதுகாப்பான இடம் என்றுதான் கருதப்படுகிறது. போலீஸ்காரரிடம் மாட்டிக் கொண்டால் உதைப்பார்கள், மாஜிஸ்திரேட்டுக்கு பயந்து நடந்தால் சிறையிலே பாதுகாப்பு கிடைக்கும் என்பதையெல்லாம் கிரிமினல் கைதிகள் கூட தெரிந்து வைத்திருப்பார்கள். சிறை என்பது கைதிகள் பாதுகாப்பாக இருக்கும் இடம். இந்த நாட்டிலே நோயாளிகளின் நோயைத் தீர்ப்பதற்காக வைத்தியசாலைகள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானதுதான் சிறைச்சாலையும்; அதுவும் ஒரு வைத்தியசாலையாகக் கருதப்படவேண்டும்.

ஆனால், வைத்தியசாலையாக இல்லாமல் வதைக்கும் சாலையாக மாறுமானால் அது வருங்கால சந்ததிகளுக்கு தங்கள் வாழ்க்கையிலே நம்பிக்கையில்லாமல் போய்விடச் செய்துவிடும். நாங்கள் சிறைச்சாலையில் அடிக்கப்பட்டோம், உதைக்கப்பட்டோம் என்பதைப் பற்றிப் பிரச்னை இல்லை. எங்களுடைய கதை இன்னும் தொடர்கதையாகலாம் அல்லது அது முடிவாகவும் மாறலாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

ஆனால், இந்தச் சட்டமன்றத்திலே நாம் இந்தக் கமிஷன் ரிப்போர்ட்டைப்பற்றி வாதிக்கும்பொழுது இதில் இருக்கின்ற உண்மைகளை நம்முடைய மனசாட்சியின் பெயரால் நாம் ஏற்க வேண்டும். சிறைச்சாலையிலே எனக்கு வயது 70 என்று போட்டிருக்கிறது என்று சிலர் கிண்டலாகக் கேட்டார்கள். முதலமைச்சர்கூட என்னை பெரியவர் என்றேதான் அழைக்கிறார். காரணம், எனக்கு வயது 59 ஆகிறது. அவருக்கு வயது 61 ஆகிறது., அவர் என்னைப் பெரியவர் என்று அழைக்கிறார்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவைத் தலைவரே உங்களைப் பெரியவர் என்றுதான் அழைக்கிறார்.

<u>திரு. ர. ஜெபமணி :</u> நான் அறிவில் பெரியவன் என்று சொல்லமாட்டேன். அதில் எனக்கு நிச்சயமாக நம்பிக்கை இல்லை. ஒருவேளை உருவத்தை வைத்து பெரியவர் என்று அழைத்திருக்கலாம். அதையும் தலைவணங்கி வரவேற்கிறேன். அன்பான ஒரு வார்த்தை அது. எல்லாத் தம்பிமார்களும் என்னைத் தாத்தா என்று அழைக்கிறார்கள். அதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

<u>திரு. நா. சுந்தரராஜ் :</u> அவர் தவறாகச் சொல்கிறார். தம்பிமார்கள் எப்படி தாத்தா என்று அழைப்பார்கள் ?

<u>திரு. ர. ஜெபமணி :</u> இங்கே அமர்ந்திருக்கக்கூடிய நாம் மக்களின் பிரதிநிதிகளாக வந்திருக்கிறோம். நாட்டு மக்களின் பிரச்னைகளைப் பற்றி வாதிப்பதற்காக நாம் வந்திருக்கிறோம். இந்தக் கமிஷன் ரிப்போர்ட்டில் இவ்வாறு நடந்து விட்டதைப் பற்றிக் கூறியிருப்பது மட்டுமல்லாமல், இனிமேல இப்படிப்பட்ட ஒரு கொடுமை நடக்கக் கூடாது— இதை நான் சொல்லவில்லை. எமர்ஜென்சியைக் கொண்டு வந்த அவர்களே சொன்னார்கள், இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு எமர்ஜென்சி வரக் கூடாது என்று. அது எவ்வளவு பயங்கரமானது என்பது அவர்களுடைய உள்ளத்திலேயிருந்து வந்திருக்கிறது. இனி ஆயிரம் ஆண்டுகளுக்கு வரக் கூடாது.

நாம் நன்றாக யோசிக்க வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஏசுபெருமான் முப்பத்து மூன்றரை வயதில் கடற்கரையிலும், மலையிலுமாகச் சென்று மக்களைக் கூட்டிப் பேசினார், உண்மையைப்பற்றிப் பேசினார், நீதியைப்பற்றிப் பேசினார், சத்தியத்தைப்பற்றிப் பேசினார், வாழும் முறையைப் பற்றிப் பேசினார், அறத்தைக் கூறினார். இதனால் ஆண்டு கொண்டிருந்த மன்னனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. மன்னனுக்கு கூட்டம் வரவில்லையே, இந்தச் சாதாரண தச்சனுடைய பிள்ளைக்கு இவ்வளவு பெரிய கூட்டமா, எப்படியாவது இதை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கமிஷன் அறிக்கையிலே உள்ளதா ?

திரு. ர. ஜெபமணி : சபாநாயகரவர்களே, நாம் சொல்வது நாட்டு மக்களுக்காக, நாம் இந்தக் கமிஷனைப்பற்றிச் சொல்லும் பொழுது அங்கே அது வருகிறது. எனவே, தயவுசெய்து அனுமதிக்க வேண்டும், கூடுதலாக கொஞ்சம் நேரத்தையும் அனுமதிக்க வேண்டும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அன்றையதினம் மக்கள் எப்படி இருந்திருப்பார்கள் மன்னன் ஆட்சியிலே. ஏசுபெருமான் கைது செய்யப்படுகிறார். ஆனால், அவருடைய அங்கி கிழிக்கப்படவில்லை, அவர் அங்கே அடிக்கப்படவில்லை, உதைக்கப் படவில்லை. நேரடியாக நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறார். நீதிமன்றத்தில் விசாரணை நடக்கிறது. விசாரணை செய்கின்ற நீதிபதி நியாயத்தைக் கேட்கிறார், ஏசுபெருமானை விசாரிக்கிறார். அவரைப் பிடித்துக்கொண்டு வந்திருந்தவர்களையும் விசாரிக்கிறார், பிறகு நீதிபதி நியாயம் வழங்கி ஏசுபெருமான் சிலுவையில் அறையப்படுகிறார். இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சி.

ஆனால், இங்கே நான் கேட்கிறேன், நான் என்ன செய்தேன் ? நான் என்னுடைய சொந்த வீட்டிலே படுத்திருந்தது பாவமா ? அது பெரிய தவறா ? இதைத் தவறு என்று நீங்கள் கருதுகிறீர்களா ? நான் என்னுடைய வீட்டில் படுக்காமல் வேறு எங்கே போய்ப் படுப்பது ? இரவோடு இரவாக அழைத்து வருகிறார் போலீஸ் அதிகாரி. நான், வாரண்ட் இருக்கிறதா என்று கேட்டேன். வாரண்ட் இருந்தால் நான் ஏன் வருகிறேன் என்று அவர் கேட்கிறார். இன்றைக்கு திடீரென்று இரவிலே ஏன் அழைத்துப் போகிறீர்கள் என்று கேட்டால், உங்களை பகலிலே அழைத்துச் சென்றால் மக்கள் காரணம் கேட்பார்கள், இரவு நேரத்தில் அழைத்துச் சென்றால் காரணம் கேட்க முடியாது, வாருங்கள் என்று சொல்லி அழைத்துச் சென்றார். சிறைச்சாலையிலே அடித்தார்கள். அது இருக்கட்டும்.

சிறைச்சாலைக்குக் கொண்டுபோவதைப்பற்றிக் கவலைப்படவில்லை. நாங்கள் ஏற்கனவே சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறோம். ஆனால் நாங்கள் கேட்பதெல்லாம், காந்தியடிகளின் படத்தைக் கழற்றி வைத்து விட்டு, நேருவின் படத்தைக் கழற்றி வைத்து விட்டு, காமராஜரின் படத்தைக் கழற்றி வைத்து விட்டு, இந்த அசோகச் சக்கரக் கொடியை மறைத்துவிட்டு, சத்தியத்தையும் அகிம்சையையும் அழித்துவிட்டு அடியுங்கள், நாங்கள் சாகிறோம், அதை வைத்துக்கொண்டு அடிக்காதீர்கள் என்றுதான் கேட்டோம்.

நாங்கள் வெள்ளைக்காரன் காலத்திலே அடிபட்டோம். அப்பொழுது அவர்களைப்பற்றி நாங்கள் நினைத்தோம், அவர்கள் அடிப்பார்கள், காரணம் நாங்கள் விடுதலை கேட்டோம். எங்களுக்குக் கிடைத்தது அந்த விடுதலை. ஆனால், இப்பொழுது நாங்கள் என்ன கேட்டோம். இரவில் தூங்கிக்கொண்டிருந்தோம், வேறு எதையும் கேட்கவில்லை. எங்களை ஏன் பிடித்துச் சென்று அடிக்க வேண்டும். அதுவும் சென்னை சிறைச்சாலையிலேதான் அடித்தார்கள், அப்படி அடித்ததால்தான் இந்தக் கமிஷன். மற்றச் சிறைச்சாலைகளில் அடிக்கவில்லை. ஆகையினாலே அங்கே கமிஷன் இல்லை. அடிபட்டது சென்னையிலே, ஆகையினாலே கமிஷன். ஆனால், ஏன் 1975-ஆம் ஆண்டிலிருந்து விசாரணைக்கு வரக்கூடாது என்று கேட்கிறார்கள்.

(பிற்பகல் 1.00)

இப்பொழுது இருக்கும் ஆட்சியாளர் அதற்கும் ஒரு கமிஷன் போடலாம். போடக் கூடாது என்று அவர்களை யாரும் தடுக்க முடியாது. ஏனென்றால், 1975 ஜூன் 26-ஆம் தேதியிலிருந்து நடந்தவற்றைப்பற்றி ஒரு கமிஷனைப் போட்டு விசாரணை செய்யலாம். கொடுமை நடந்தால், அதை விசாரிக்கட்டும். கொடுமையை விசாரிக்கக் கூடாது என்று மனித உள்ளம் படைத்த எவனும் சொல்லமாட்டான். மனிதனை மனிதனாக பாவிக்க வேண்டும். மனிதனை மனிதன் அடிப்பதற்காக ஆண்டவன் இந்தக் கரங்களைப் படைக்கவில்லை. மனிதனை மனிதன் அடிப்பதற்காக என்றால், கரங்களைப் படைத்திருக்கமாட்டான், கடப்பாறையைப் படைத்திருப்பான். அருமையான கரங்களைப் படைத்தவன், ஆண்டவன். அந்தக் கரங்களைக் கொண்டு அடிப்பதற்கு உத்தரவு போடுகிறான் மனிதன் என்றால், அவன் என்ன மனித உள்ளம் படைத்தவனா ? அடித்து ஒரு பிரச்னையைத் தீர்க்க முடியாது. நீங்கள் அந்தக் காரண காரியத்தைச் சரியாக சிந்திக்க வேண்டும்.

நாங்கள் ஜெயிலிலே இருக்கிறோம். ஜெயிலுக்கு ஒரு பையனை அழைத்து வருகிறார்கள். ஆர். ஏ டேவிட் என்ற 26 வயது பையன்; மணக்கோலத்தோடு வருகிறான்; முகூர்த்த வேஷ்டி, முகூர்த்த சட்டை, முகூர்த்த மாலை போட்ட கறை அப்படியே இருக்கிறது. நான் கேட்டேன், தம்பி, நீ ஏன் வந்தாய் ? எங்கி

ருந்து வந்தாய்? முகூர்த்தக் கோலத்தோடு இருக்கிறாயே என்று. அதற்கு அவன் சொன்னான் சர்ச்சிலே திருமணம் முடிந்தது, காரிலே என்னுடைய மனைவியும் நானும் சென்று கொண்டிருந்தோம், சப்-இன்ஸ்பெக்டர் இடையிலே தடுத்தார், என்று. எவ்வளவு பெரிய கொடுமை, பார்த்திர்களா? நான் கேட்கிறேன், சகுனம் பார்ப்பார்கள், எதிரே யாரும் தடுத்து விடக்கூடாது, கை தட்டிக் கூப்பிட்டு விடக் கூடாது என்று. அப்படிப்பட்ட மண ஊர் வலம் வருகிறது; பாவம், அந்தப் பையன் பாதியிலே கைது செய்யப்படுகிறான்; சிறைக்குள்ளும் கொண்டு வரப்படுகிறான்; மறுநாள் நாங்கள் அழுதோம், அந்த பையனுக்காக. இப்படிப் பட்ட கொடுமை இந்த நாட்டில், காந்தி பிறந்த நாட்டில் நடக்கக் கூடாது. வேறு எந்த நாட்டிலும் நடக்கலாம்.

அதற்கடுத்து, திருவேங்கிடம் என்ற இரண்டு கண்ணும் தெரியாத ஒருவர் வந்தார். நான் அவரைக் கேட்டேன், உங்களுக்கு கண்ணே தெரியாதே, நீங்கள் என்ன செய்தீர்கள் அல்லது செய்துவிடுவீர்கள்; உங்களை எவன் ஐயா பிடித்தான்; எதற்குப் பிடித்தான் என்று. எவனோ ஒரு குருட்டுப் பயல் பிடித்தான் என்று சொன்னார்கள். நான் கேட்டேன், ஐயா உங்களுக்கு இரண்டு கண்ணும் தெரியாது, நீங்கள் போய் இன்னொருவனை குருட்டுப் பையன் என்று சொல்கிறீர்களே, என்று. அந்த போலீஸ் காரனுக்குத் தெரியவில்லையே என்று அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு பெரிய கொடுமை, ஐயா.

சிறைச்சாலையிலே அடிப்பதா? அடிப்பதற்காக, மக்கள் வாக்கு வாங்கக் கூடாது. இப்பொழுது அடிப்பதால், அதோடு முடிந்து விடாது. உங்களுடைய பரம்பரை வரும். அவர்களும் அடி வாங்குவார்கள் செம்மையாக. நான் எம். எல். ஏ., நான் ஐ. ஜி., என்றெல்லாம் சொல்லலாம். ஆனால், சாகும் வரைக்கும் நீ இப்ப்டியே இருக்க மாட்டாய். உனக்கும் பிள்ளை பிறக்கும், அவனும் குறும்புக்காரனாக வருவான், அரசியல் வாதியாக வருவான், செம்மையாக உதை வாங்குவான். அப்பொழுது என் அப்பன் என்ன செய்தானோ என்ற அந்த எண்ணங்கள் அவனுக்கு வரக் கூடாது.

மீன் போட்டார்கள் என்று இங்கே பேசுகிறார்கள். தவறான கருத்துக்களைச் சொல்லவே கூடாது. ஜெயிலிலே மீன் போட்டார்களா? ஒரு ரூமில் 7 பேரை அடைத்தார்கள். நன்றாகப் படுத்தால் 3 பேர் படுக்கலாம். உள்ளே அடைக்கட்டும், கவலைப் படவில்லை சிறுநீர் கழிக்க 3 பாண்டம், தண்ணீர் குடிக்க ஒரு பாண்டம், லைட் கிடையாது. எதிலே சிறுநீர் கழிப்பது, எதைக் குடிப்பது, தெரியாது. 7 பேரை அடைத்ததைப்பற்றிக் கூடக் கவலைப்படவில்லை.

அங்கே ஒரு வார்டர் உட்கார்ந்து கொண்டு சொல்வார், நேற்றுதான் இந்த அறையில் குஷ்டரோகி இருந்தான், காலி செய்யப்பட்டான் காலையில். இங்கேதான் உட்கார்ந்தான், இங்கே தான் அவன் படுப்பான், இங்கேதான் அவன் துடைப்பான், இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தால் எப்படி ஐயா அங்கே இருப்பவன் உயிரோடு இருப்பான். நீங்களும் இருதயம் படைத்தவர்கள்தானே, நான் கேட்கிறேன், யாருக்கோ வருகிற தென்றல், ஓரிடத்திலே............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இருதயம் படைத்தவரா என்று என்னைப் பார்த்து கேட்காநீர்கள். (சிரிப்பு) ஏனென்றால், பேரவைத் தலைவரவர்களைப் பார்த்து பேசுகின்ற பேச்சு இது.

திரு. ர. ஜெபமணி: நான் நீங்கள் என்று சொல்வது, இந்த நாட்டு மக்களையும், அந்த மக்களுடைய பிரதிநிதிகளையும் சேர்த்து. நான், எல்லோரும் இருதயம் அற்றவர்கள், நான் ஒருவன்தான் இருதயம் உள்ளவன் என்று பேசுவதே கிடையாது. மக்கள் எதற்கு இங்கு அனுப்பியிருக்கிறார்கள்? அவர்கள் பிரச்னைகளை அறிந்து, அவர்களுடைய துன்பங்களை தங்களுடைய துன்பங்கள்போல் நினைத்துக் களைவோம் என்ற நம்பிக்கையில்தான் நம்மை இங்கே அனுப்பியிருக்கிறார்கள், இந்த நாட்டு மக்கள். கட்சிக்காக வாதாடி உண்மையை மறைக்காதீர்கள். வருங்கால சந்ததியினர் நம்மைச் சபித்துவிடுவார்கள். அப்பேர்ப்பட்ட கொடுமை இந்தச் சிறைச்சாலையிலே நடந்திருக்கிறது. நடந்திருந்தாலும் அதற்குக் காரணமானவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப் படவேண்டும். அவர்களைத் தண்டிப்பதால், வருங்காலத்திலே மீண்டும் அந்தக் கொடுமை நடக்காது என்பதல்ல. அவர்களுக்கு அந்த உணர்வாவது வரவேண்டுமே. நான் அடித்தது தப்புதான் என்ற உணர்வாவது வரவேண்டும். அதற்காகத்தான் தண்டிக்கப் பட வேண்டுமென்கிறேன். நான் ஜெபமணி என்பதற்காகச் சொல்லவில்லை. என்னோடிருந்த அந்த நண்பர் சிட்டிபாபு இருந்தார். பிரச்னை இல்லை, அவர் நேற்று செத்தார்; நான் நாளைக்குச் சாகலாம். எல்லோரும் ஒரு நாளைக்குப் போகப் போகிறவர்கள் அல்லவா? அடித்தவர்களும் போகப்போகிறவர்கள்தான். நாங்கள் நல்ல மரணம் அடைவோம். அவர்களுக்கும் மரணம் வரும்; ஆனால் அப்படிப்பட்ட மரணம் அல்ல.

நான் கேட்பது, இஸ்மாயில் கமிஷன் அறிக்கை வந்திருக்கிறது. இந்த அறிக்கையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார். சிறைச்சாலையைச் சென்று பார்த்திருக்கிறார்கள். கைதிகளை ஏன் விசாரிக்கவில்லை, கேட்கிறார்கள். நல்லவேளையாக அவர் விசாரிக்கவில்லை. அப்படி விசாரித்து விட்டு வந்தால் அந்தக் கைதிகள் என்ன பாடு பட்டிருப்பார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன்

[திரு. ர. ஜெபமணி] [1978 ஏப்ரல் 6

ஒரே ஒரு வார்த்தை சொன்னதற்காக ஆஸ்பத்திரியிலிருந்து டவர் வரை அடிக்கப்பட்டான். ஐயா, இப்படி அடிக்காதீர்கள், உங்கள் பிள்ளைகள் திருடமாட்டார்களா, உங்கள் பிள்ளைகள் தவறே செய்யமாட்டார்களா, சிறைச்சாலை குற்றவாளிகளை திருத்துகின்ற இடம் தானே என்று கேட்டேன். அதற்கு அவர், ஜெபமணி, ஜெயிலுக்குள் வந்தால் காது கண் எல்லாம் வேலை செய்யக்கூடாது, உள்ளே போங்கள், நாங்கள் எதையும் செய்வோம் என்றார் அது என்ன கசாப்பு கடையா? சிறை சூப்பரின்டென்டெண்ட் தகப்பன் என்றால் ஜெயிலர் தாய்போல இருக்கவேண்டும். அங்கே இருக்கிற கைதிகளின் உணவிலே கை வைக்கக்கூடாது. உணவா கொடுத்தார்கள்? முட்டை கொடுத்தானும், கறி கொடுத்தானும், ஜூஸ் கொடுத்தானும். இப்படிச் சொல்லுகின்ற அவர்களை எப்படித்தான் அவர்களுடைய தாய் தந்தையர்கள் பெற்றார்களோ? சாப்பாடா கொடுத்தான், நாங்கள் சாப்பாடா சாப்பிட்டோம்?

இரவு 6 மணிக்கு மூடினால், காலை 6 மணிக்குத்தான் திறப்பார்கள். எல்லோரும் வெளியே போகவேண்டும் என்று துடிப்போம். அப்போதுதான் உட்காரவைத்து 7 தடவை எண்ணுவான். மரத்தின் மேலே இருந்து குருவிகள் எச்சம் போடும். எங்கள் மேல் எல்லாம் அபிசேகம் பண்ணும். அங்கு மூன்றே மூன்று லெட்ரின்தான் இருக்கிறது, எப்படி போவது. ரூமுக்கு உள்ளேயே வெளிக்கு இருப்பான். அங்கே போக முடியுமா? மனித இதயமே கிடையாதா? எவனோ உத்தரவு போட்டான். உத்தரவு யார் வேண்டுமானாலும் போடலாம். அடி என்று சொல்லிவிட்டால் எல்லோரும் அடிப்பார்களா? அடிப்பது போல கையை ஓங்குவான், ஆனால் அடிக்கமாட்டான், கேட்டால் அடிக்க வரவில்லையே என்று சொல்வான்.

தி.மு.க. ஆட்களை மட்டுமா அடித்தார்கள். எந்தக் கட்சி என்று பாகுபாடு இல்லாமல் செம்மையாக அடித்தார்கள். அது அந்த அதிகாரிகளுக்கு ஒரு நோய்போல் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

இந்தக் கொடுமைகளுக்குப் பின்னாலே ஒரு அதிகாரி வந்தார். வேலூரிலே இருந்து வந்த அதிகாரி எல்லோருக்கும் நாற்காலி போடு, எல்லோருக்கும் சேர் போடு, அவர்களுடைய தபாலை ஒழுங்காகக் கொடு என்றார், இத்தனை வருடமாக இருந்த மனிதர் இதை ஏன் செய்யவில்லை என்று கேட்டால் எனக்குத் தெரியாது என்று சொன்னார். எவ்வளவு பெரிய கொடுமை. இப்படிப்பட்ட கொடுமை, இனிமேல் இந்தத் தவறு ஆயிரம் ஆண்டுகளுக்கு வராது என்று எமர்ஜன்சியைக் கொண்டு வந்தவர்களே கூறி இருக்கும்போது, இனிமேல் இந்தத் தவறு

1978 ஏப்ரல் 6] [திரு. ர. ஜெபமணி]

நாட்டிலே எந்தக் காரணத்தைக் கொண்டும் வரக்கூடாது; அதற்கு நாம் உறுதுணையாக இருக்கவேண்டுமானால் நீங்கள் அவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுங்கள். அதற்குப் பிறகு வேண்டுமானாலும் மன்னித்து விடுங்கள், கவலை இல்லை.

நான் உங்களிடம் சொல்ல விரும்புவது, உயர்நீதி மன்ற நீதிபதி இஸ்மாயில் அவர்கள் உத்தமர், அவர் தெளிவாக, உண்மையாக, கொஞ்சம்கூட பாரபட்சமின்றி விசாரித்திருக்கிறார்கள், சிறைக்கூடத்திற்குப் போய் கண்டிருக்கிறார்கள். இந்த ஜெயிலில் குஷ்டரோகிகள் உண்டா என்று கேட்கிறார்கள். இல்லை என்று சொல்கிறார்கள். வேகமாக ஆஸ்பத்திரிக்குப் போகிறார்கள். அங்கே குஷ்டரோகிகள் இருக்கிறார்கள். எதற்காக ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கிறார்கள் என்று கேட்டார்கள். விசாரணைக்காக வந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எவ்வளவு பெரிய சங்கடமான காரியம். எவ்வளவு பெரிய நீதிபதி, ஒரு கமிஷன் தலைவர், அவருக்கே உண்மை மறைக்கப்படுகிறது. இந்த எண்ணம் படித்த அதிகாரிகளுக்கு வரக் கூடாது.

முதலாவது அட்சரத்தை எழுதும்போதே படித்தோம் அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம், என்று. இந்த இரண்டையும் மறந்து விடுவதாலேயே வயிற்றுப் பிழைப்புக்கு, காக்காய் பிடிப்பதற்கும் தாங்கள் வாழவேண்டும் என்பதற்காக எந்தக் கர்மத்தையும் செய்கிறார்கள்.

இது காந்தி சொத்து, சிவன் சொத்து, குல நாசம் இது காந்தி சொத்து, யார் எந்த சொத்தில் விளையாடினாலும் மாட்டிக் கொள்வார்கள். மாட்டிக் கொள்வார்கள் என்று எண்ணிய காரணத்தினாலே தான் பேசுகிறோம். இல்லாவிட்டால், சிறைச்சாலை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது, வெள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது, மீண்டும் உள்ளே வந்தால் வெளியே வரமாட்டார்கள் என்று எல்லாம் அச்சுறுத்தப்பட்டோம்.

(பிற்பகல் 1.10)

ஆனால் இறைவன் திருவருளால் இந்த நாட்டு மக்கள், இது அசோகன் ஆண்ட நாடு, அக்பர் ஆண்ட நாடு, இது தெய்வ பக்தி உள்ள நாடு, வள்ளுவன் பிறந்த நாடு, இங்கே நீதி நிலைக்கும், நேர்மை நிலைக்கும், சத்தியம் நிலைக்கும், அறமே நிலைக்கும், நேர்மை நிலைக்கும் என்று அறமே கூற்றாகி வெளியே வந்த பிறகு, நம்முடைய பரம்பரைக்கு மீண்டும் இந்த நிலை வரக்கூடாது என்பதற்காக நடந்தவைகளை நாம் சிந்தித்துப்பார்த்து திரும்பிப் பார்க்கிறோம். அதுதான் இந்தக் கமிஷன் வைத்தது.

இரண்டாயிரம் ஆண்டுகாலத்திற்கு முன்பே இயேசுபிரான் வாழ்ந்த காலத்தில் 20 ஆண்டுகாலம், 10 ஆண்டுகாலம் தண்டனை விசாரணை கிடையாது என்ற நிலை இல்லை. ஆனால் நெருக்கடி காலத்தில் என்ன நடந்தது? ஜெயிலுக்குள் சென்றவனுக்கு எந்த விதமான ஆதரவும் இல்லை. என் மனைவி மக்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்காதா? சிறைக்குள்ளே போனோம். அங்கேயிருப்பவர்கள் என்ன சொன்னார்கள். கிரிமினில் கைதிகள் எங்களைப் பார்த்துக் கேட்டார்கள். நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்? என்று கேட்டார்கள். தெரியவில்லை என்று சொன்னோம். ஒன்றும் இல்லை என்று நாங்கள் சொன்னதும், அவர்கள் ஒன்றும் இல்லையா அப்படியென்றால் என்று இப்படி கையைக் காட்டுகிறார்கள். (கையினால் சைகை காட்டினார்). நான் கொலை செய்தேன், இங்கே வந்து இருக்கிறேன், நான் திருடினேன், இங்கே வந்து இருக்கிறேன், நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்று கேட்டால் தெரியவில்லை என்று சொல்கிறீர்கள், உங்களை கடலூருக்கு கொண்டு போகப் போகிறார்கள் என்று சொன்னார்கள். நான் சூப்பிரன்டென்ட்டைப் பார்த்துக் கேட்டேன் கடலூருக்கு கொண்டு போகப்போகிறார்கள் என்றால் என்ன என்று கேட்டேன், அதற்கு அவர் சொன்னார், டைத்தியம் பிடித்தவர்களை, மனநோய் கைதிகளை அங்கு எடுத்துச் செல்வோம் என்று சொன்னார்கள். நாங்கள் ஒரு தவறும் செய்யவில்லை, நேற்று இரவு வீட்டில் தூங்கிக்கொண்டு இருந்தோம். இங்கே அழைத்து வந்து இருக்கிறார்கள், இன்று இரவு இங்கே ஜெயிலில் தூங்குகிறோம், அவ்வளவுதான் என்று சொன்னோம். ஜெயிலில் ஒரு அரசியல்வாதியை எப்படி நடத்துவது என்று விதிமுறை வேண்டாமா? வெள்ளைக்காரன் காலத்திலும் நான் ஜெயிலுக்கு போய் இருக்கிறேன். அரசியல் கைதிகள் என்றால் அவர்கள் அரசனோடு போராடக்கூடியவர்கள், நாளைக்கு அரசனாக ஆகக் கூடியவர்கள். நாளைக்கு அரசனாக வரவேண்டியவனுக்கு என்ன மரியாதை கொடுக்கப்பட வேண்டும்? அவர்கள் எப்படி நடத்தப்பட்டார்கள்? சாராய மிசா, இரும்பு மிசா, பெண்களை வைத்து வியாபாரம் செய்த மிசா, கள்ளக்கடத்தல் மிசா, அரிசி மிசா, இப்படி எல்லோரையும் சேர்த்து ஒரே இடத்தில் வைத்தால் யார் யாரைப் புரிந்து கொள்வது.

நாங்கள் கேட்டோம், அரசியல்வாதிகளை கொஞ்சம் தனியாக வையுங்களேன் என்று, அதற்கு அவர்கள் சொன்னார்கள். உங்களை அவமானப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்று சொன்னார்கள். அவர்கள் எங்களை அவமானப்படுத்தவில்லை, அவர்களுடைய பதவியை அவர்கள் அவமானப்படுத்திவிட்டார்கள். எங்களை அவமானப்படுத்த அவர்கள் யார்? அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். சிறைச்சாலையில் கொடுமை என்றால் அது வன்கொடுமை. அது வன்கொடுமை என்றால், நினைத்தே பார்க்க முடியாது அப்படிப்பட்ட கொடுமை எந்த நாட்டிலும் நடக்காது, நடக்கக்கூடாது. என்னை அடிக்கும்போது நான்

சொன்னேன், என்னை அடிப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உள்ளபடியே உள்ளே அடிப்பார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் ஒரு தோல் பை வைத்து இருந்தேன். தோல் பையைப் பார்க்க வேண்டும் என்றால் தானே திறந்து காட்டியிருப்பேன். ஆனால் அதை படாரென்று கிழித்தார்கள். அப்போதே யோசித்தேன். ஏதோ ஒன்று இங்கே நடக்கப்போகிறது என்று. பையைக் கிழிக்காதே தம்பி என்று சொன்னேன். அப்படியா சொல்கிறாய், வாடா என்னோடு என்று என்னை அழைத்துக் கொண்டு போனார்கள். ஓஹோ, இந்த ஜெயிலில் வெளியில் நடக்காதது எல்லாம் கூட நடக்கும்போல் இருக்கிறது என்று நினைத்தேன். டவர் வழியாகப் போகும்போது ஜேப்பியார் அண்ணனை அடிக்க அழைத்துப்போகிறார்கள் என்று சொன்னார். வெளியே வந்தபிறகு என்னிடம் அப்படி நினைத்ததாகக் கூறினார். ஏன் என்னை அடிக்கப்போகிறார்கள், நான் என்ன குற்றம் செய்தேன்? என் தோளில் நான் துண்டு போட்டுக் கொண்டு இருந்தேன். என் தோளில் நான் வாங்கிய துண்டைப் போட்டுக்கொண்டு இருப்பதில் என்ன குற்றம். அதுதான் எனக்குப் புரியவில்லை. அதைச் சொல்லிவிடவேண்டும் என்று ஜேப்பியார் முயற்சி எடுத்து இருக்கிறார். ஆனால் அது முடியவில்லை. அவரை சொல்ல விடவில்லை. யாரடா அந்த ஆள் துண்டு போட்டுக் கொண்டு இருப்பது எனறு கேட்டு இருக்கிறார்கள். ஜேப்பியார் நன்றாக அறிந்து கொண்டு இருக்கிறார். 9-ம் எண் பிளாக் என்றாலே உதைக்கும் பிளாக். அதனால்தான் அவர் அப்படி அறிந்து கொண்டு இருக்கிறார். அவனுக்கு எப்படி உதைக்கக் கற்றுக் கொடுத்து இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. உன்னை அடிப்பேன் என்று சொல்லியிருந்தால் நான் தயாராக இருந்து இருப்பேன். சும்மா நின்றுகொண்டு இருக்கும்போது படார் படார் என்று இடி இடிப்பது போல் இடிபோல் என்னைத் தாக்கினார்கள். ஆனால் இப்படியெல்லாம் தாக்கிவிட்டு, அப்படி தாக்கியவர்களுக்காக வக்காலத்து வாங்கும் நிலைமை இருக்கிறதே அந்த துர்பாக்கியமான நிலைமை வரக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். தாக்கியவர்கள் யாராக இருந்தாலும் சரி, அது ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, எங்கள் கட்சி, உங்கள் கட்சி என்று பார்க்காமல் அதைக் கண்டிக்கவேண்டும்.

(மணியடிக்கப்பட்டது)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> 20 நிமிடம் ஆகிவிட்டது.

<u>திரு. ர. ஜெபமணி:</u> இன்னும் 5 நிமிடம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இப்படிப் பேசிக்கொண்டே போனால் பின்னால் வருபவருக்கு பேச நேரம் இல்லாமல் போய்விடும்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவரவர்களே, எங்கள் கட்சிக்கு ஒதுக்கியிருக்கிற நேரத்திலிருந்து 5 நிமிடங்கள் திரு. நெல்லை ஜெயமணி அவர்களுக்குக் கொடுக்கிறோம். ஆகவே, தாங்கள் அவருக்கு இன்னும் 5 நிமிடங்கள் பேச அனுமதி அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ர. ஜெயமணி :</u> வக்கீலிடம் பேசுகிறேன். குறுக்கிடுகிறார்கள் அதிகாரிகள். இதை இதைத்தான் பேசவேண்டும்; இதைச் சொல்லக்கூடாது என்று சொன்னார்கள். அப்படியானால் வக்கீல் தேவையில்லை; நான் ஒன்றும் பேசவேண்டியதும் இல்லை என்று சொல்லிவிட்டேன். நான் என்னுடைய வக்கீலிடம் பேசுவதற்கு அவர்கள் கட்டுப்பாடு போடுகிறார்கள்; வக்கீலிடம் பேசுவதற்கு உத்தரவு போடுகிறார்கள் ஜெயில் அதிகாரிகள்.

என்னுடைய பாதுகாப்பு, உறங்கும் இடம், உண்ணும் வசதி, துணிமணிகள் மாற்றும் வசதி, குளிக்கும் வசதி, படிக்கும் வசதி, உறவினர்களுக்குக் கடிதம் எழுதும் வசதி, நண்பர்களுக்குக் கடிதம் எழுதும் வசதி, இப்படிப்பட்ட வசதிகளைப் பார்த்துக்கொள்ள வேண்டிய ஜெயில் அதிகாரிகள் வக்கீலிடம் இப்படித்தான் பேச வேண்டுமென்று உத்தரவு போடுகிறார்கள். ஏனென்றால் சித்திர வதை செய்ய வேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம்.

சித்திரவதைக்கு ஆளானது நான் மட்டுமல்ல; அல்லது எங்கள் கட்சிக்காரர்கள் மட்டுமல்ல. அவர்களுக்கு யார் யார் மேலெல்லாமோ கோபம். தி. மு. க. வினர் மேல் மட்டும்தான் கோபமா என்றால் இல்லை. தி.க. மேலும் கோபம். வீரமணி மேலும் கோபம்; ஜெயமணி மேலும் கோபம்; லெப்டிஸ்ட் கம்யூனிஸ்ட் மேலும் கோபம்; அண்ணா தி. மு.க. மாணவர்கள் மேலும் கூட கோபம்.

நான் ஜெயிலிலே இருக்கும்போது நான்கு பேர் வந்தார்கள். நீங்கள் யார் என்று கேட்டேன். மாணவர்கள் என்றார்கள். உங்களை ஏன் கொண்டு வந்தார்கள், நீங்கள் எந்தக் கட்சி என்று கேட்டேன். நான் ஸ்தாபன காங்கிரஸ் என்றான் ஒருவன்; நான் காங்கிரஸ் என்றான் ஒருவன்; நான் தி. மு. க. என்றான் ஒருவன்; நான் அண்ணா தி. மு. க. என்று சொன்னான் ஒருவன்; ஆக. அவர்களுக்கு அண்ணா தி. மு. க. மாணவர்கள் மேலும் கோபம்தான். நீங்கள் எல்லோரும் படிக்கிறவர்களாயிற்றே; உங்களையும் இங்கே கொண்டு வந்திருக்கிறார்களே, ஏன் என்று கேட்டேன், நாங்கள் கறுப்பு பாட்ஜ் குத்தினோம், அதற்காக பிடித்துக்கொண்டு விட்டார்கள் என்று நான்குபேருமே சொன்னார்கள். மாணவர்கள் கறுப்பு பாட்ஜ் குத்துவது ஒரு குற்றமா?

அப்புறம் ஒரு வழக்கறிஞர் வந்தார். டேவிட் என்பது அவருடைய பெயர். பிரஷ் வைத்து பல் விளக்கினார். வாயிலிருந்து மேலெல்லாம் அப்படியே ஒழுகுகிறது. ஆள் ஒருமாதிரி படபடப்போடு காணப்பட்டார். ஏன் இப்படி ஒழுகுகிறது என்று கேட்டேன், மைண்ட் சரியில்லை என்றார். ஏன் சரியில்லை என்று கேட்டேன். எனக்கு அரசியல் தெரியாது; நான் பல ஊர்களுக்குப் போயிருக்கிறேன்; உலகம் பூராவும் சுற்றியிருக்கிறேன்; திடீரென்று என்னை இங்கே கொண்டுவந்துவிட்டார்கள் என்றார். ஏன் இப்படி திடீரென்று கொண்டு வந்தார்கள் என்று கேட்டேன். 5 வருஷத்திற்கு ஒருமுறை தேர்தல் நடத்துவதுதான் ஜனநாயகம்; தேர்தல் நடத்தினால்தான் உங்கள் அப்பாவின் ஆத்மாவும் சாந்தியடையும் என்று இந்திராகாந்திக்கு தபால் எழுதினேன். அக்னாலெட்ஜ்மெண்ட் வந்து சேர்ந்தது; எனக்கு அரெஸ்டும் வந்தது; இப்போது உங்கள் மத்தியிலே இருக்கிறேன் என்று படபடத்து, நெக்குருக, கண்ணீர் விடாத குறையாகச் சொன்னார்.

ஒரு கடிதம் எழுதிவிட்டார். அதுவும் நேரு ஆத்மா சாந்தியடைய அவருடைய அருமை மகளுக்கு எழுதினார். அவர் ஒரு ஜனநாயகவாதி, அந்த ஜனநாயக உணர்வோடு அதை எழுதினார். அவரையும் சிறைக்கு கொண்டு வந்தார்கள்; அந்த ஒன்பதாவது பிளாக்கில் போட்டார்கள்; அடித்தார்கள், உதைத்தார்கள். அங்கே இருப்பவர்களே சொல்கிறார்கள். 9-வது பிளாக் என்றால் உடம்பை மெதுவடுத்திவிடுகிற இடம் என்று சொல்கிறார்கள். அந்த பிளாக்கிலேபோய்ச் சேருகிறவரை அடித்து, உதைத்து, அவர் உடம்பை மெதுப்படுத்தி அனுப்புவதுதான் அங்கிருக்கிறவர்கள் வேலை.

இப்படியெல்லாம் நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதுதான் நம்முடைய விருதாச்சலம் செல்வராஜ் வருகிறார். அவர் ஒரு செல்வம்; அதுவும் குழந்தைச் செல்வம். ஒரு குழந்தையைப்போல வருகிறார். ஆண்டவனே! இந்தக் குழந்தைக்கும் எங்களைப்போன்ற நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது என்று நினைத்துக்கொண்டேன். அப்படி நினைத்துக் கொண்டிருக்கும்போதே எங்கள் முன்னாலே வைத்து, எங்கள் எல்லோரையும் பார்க்க வைத்து அடித்தார்கள். இப்படிப் பட்ட ஒரு கொடுமை இந்த யுகத்திலே இனிமேல் எங்குமே நடக்கக் கூடாது இறைவா. நீதான் எல்லோரையும் படைத்தாய். எல்லா மனிதனும் ஏதோ ஒரு ரீதியில் சாகிறான். ஆனால், இறைவா, இப்படிப்பட்ட ஒரு கொடுமை இனிமேல் யாருக்குமே ஏற்படக் கூடாது என்று பிரார்த்திக்கிறேன். இப்படிப்பட்ட கொடுமைகளை அநீதிகளை ஏற்படுத்திய அதிகாரிகள் அத்தனைபேர்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்; நடைபெற்ற கொடுமைகளை இந்தக் கமிஷன் ரிப்போர்ட் தெளிவாக விளக்குகிறது; ஆகவே, இந்தக் கமிஷன் ரிப்போர்ட்டை அப்படியே ஏற்று, இதையே தீர்ப்பாக ஏற்று, செயல்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

<u>திரு. துரை கோவிந்தராசன்</u> : பேரவைத் தலைவரவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற நீதிபதி இஸ்மாயில் கமிஷன் அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே இந்த அறிக்கையில் பல்வேறு அம்சங்கள் தரப்பட்டிருந் தாலும் குறிப்பாக நீதிபதி அவர்களின் கருத்திற்குள் ஆழமாகப் போகவில்லை என்றாலும் அந்த மிசா காலத்தில் 166 பேர்களை விசாரிக்க வேண்டிய அந்த நிலையில் இந்த நீதிபதி அவர்கள் தந் திருக்கிற அறிக்கையில் 1976 ஜனவரி 31-ந் தேதி கைதுசெய்யப் பட்டிருந்த ஏறத்தாழ 49 பேர்களை நீதிபதி அவர்கள் அழைத்து விசாரிக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி அந்த 49 பேர்கள், பெரியவர் நெல்லை ஜெபமணி அவர்கள் குறிப்பிட்டபோது அந்த 9-ம் எண் பிளாக்கிலே பலர் அடிக்கப்பட்டார்கள் என்பதையும், அப்படி அடிக்கப்பட்டவர்கள் அவர்கள் அடிக்கப்பட்ட தன்மை, கொடுமை இழைக்கப்பட்ட முறை பற்றி அந்த 49 பேர்களையும் அவர்கள் விசாரணை செய்யாத நிலைமையையும் பார்க்கும்போது, இந்தக் கமிஷனை தடபுடலாக ஆரம்பித்து, ஒலிபெருக்கி எல்லாம் வைத்து விளம்பரப்படுத்தி, கமிஷன் விசாரிக்கிறது என்று சொல்லி, கடைசியில் கமிஷன் தந்திருக்கிற அறிக்கையைப் பார்த்தால் அது ஒருதலைப் பட்சமான தாக இருக்கிறது, நடுநிலையோடு ஆராயப்பட்டு தந்த அறிக்கை என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

(பிற்பகல் 1-20)

ஆனால் இந்த அறிக்கையைப்பற்றி அதிகமாகச் சொல்கிற நேரத் தில் இப்படி விட்டுப்போன அந்த 49, 50 பேர்களையும் ஒன்றாகச் சேர்த்து விசாரிப்பதற்கு இன்னொரு நீதிபதியை நியமித்து, ஒரு குழு வை உருவாக்கி அதனுடைய தீர்ப்பையும் இந்த அரசு அறிவிக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு அரசு அதிகாரிகள் இருக்கின்ற நேரத்தில் உள்துறை அதிகாரி திரு. சுப்ரமணியம் அவர்களுடைய அறிக்கையை மட்டும் மனதில் வைத்து, அவர் தந்திருக்கிற காரண காரியங்களை மட்டும் முழுமையாக பக்கத்துக்கு பக்கம் தந்திருக்கிறார்கள். பல அதிகாரி களை அழைத்து விசாரித்து இருக்கிற அந்தக் குறிப்புகளை எல்லாம் ஏன் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் அவர் களுடைய அறிக்கையில் பக்கத்துக்குப் பக்கம் மாறான கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள்.

சிறைத்துறைத் தலைவர் மீது நீதிபதி குறை கூறி இருக்கிறார். அவர் கொடுத்த அந்த அறிக்கையிலே 181-வது பக்கத்திலே இவ் வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. "சிறைக்குக் கொண்டுவரப்பட்ட காவல் கைதிகளுக்கு ஒழுங்காக இடமளிக்கப்பட்டு வசதிகள் செய்ய, சிறைச்சாலை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் எந்தவித நடவடிக் கையும் மேற்கொள்ளவில்லை உண்மையில், இதுகுறித்து நான் அவரை வெளிப்படையாக வினவியபோது அவரது பதில் விசித்திர மாக இருந்தது. அவர் பின்வருமாறு கூறினார். "அவசியமான ஏற் பாடுகளைச் செய்யுமாறு கண்காணிப்பாளருக்கு தெரிவித்ததோடு என்னுடைய கடமை முடிந்தது. இதற்குப் பொறுப்பாளர் அவர் தான். அவசியமான ஏற்பாடுகளை அவர்தான் செய்யவேண்டும்." இப்படிப்பட்ட சிறைத்துறைத் தலைவரைப்பற்றிய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதே நேரத்திலே அந்த நீதிபதி தந்திருக்கிற அறிக்கையிலே கண்காணிப்பாளருக்கு இடப்பட்டிருக்கின்ற உத்தரவை மறுத்து அவர் சொல்கிற கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு மாறாக அந்த அறிக்கையிலே 139-வது பக்கத்தில் இஸ் மாயில் அவர்கள் யாரோ கொடுத்த வாக்கு மூலத்தின் மூலம் அப்படி எந்தவிதமான ஆதாரமும் இன்றி தம்முடைய அறிக்கை யில் சில கொடுமைகள் நடந்ததாகக் கூறினார்கள்.

உதாரணமாக, காவல் கைதிகளுக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற துன்பங்கள் பற்றி அவர் குறிப்பிடும்போது பாரா 1-ல் "இந்த நிகழ்ச்சி கட்டுக்கதையாக அல்லது அவர்களால் இட்டுக் கட்டப் பட்ட சம்பவமாக இருக்க முடியாது. எனவே இத்தகைய ஒரு நிகழ்ச்சியை ஏற்காமல் தள்ளிவிட என்னால் முடியாது" என்று கூறி இருக்கிறார்கள். தன்னுடைய கடமை ஆற்றுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற அதிகாரி இப்படி தெரிவித்திருக்கிறார்கள். அதே நேரத் திலே 139-வது பக்கத்தில் சொல்கிறபோது யாரோ ஒருவர் கொடுத்ததின்படி தானே அதை விட்டுவிட முடியாது என்கிற நிலையில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கூட கோடிட்டுக் காட்டினார்கள். சிறைச்சாலைக்குள்ளே போகிற போது வழக்கமாக எல்லோருக்கும் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதுண்டு என்று சொன்னார்கள். நான் கூட 1962ஆம் ஆண்டு மூன்று மாதங்கள் சிறைச்சாலைக்குள்ளே இருந்திருக்கிறேன். அப்போது சிலருக்கு பல விதமான வசதிகள் உண்டு. சிலருக்கு வெளியே இருந்து உணவு வந்தது; சிலர் சுண்டக்கடலையோடு திருப்தி அடைய வேண்டிய நிலை இருந்தது. சிறைச்சாலையிலே நம்முடைய உறுப்பினர் போன்ற வர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கொடுமைகளை விசாரித்து அதை நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும் என்ப தில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

ஆனால் எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கின்றது. அந்தக் கடிதத்திலே சிறைச்சாலையிலே பலர் கொடுத்திருக்கின்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் ஒரே கருத்தோடுதான், ஒருதலைபட்சமாக ஒரே வழியில் மட்டும் தந்திருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இது ஒரு தலைபட்சமாகத்தான் தரப்பட்டிருக்கிறது என்று தெரிந்துகொள்ள முடிகிறது.

பிப்ரவரி 2-ம் தேதி காலை 8½ மணிக்கு நடந்த கொடுமைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. சிட்டிபாபு, நீலநாராயணன், ஸ்டாலின் ஆகியவர்கள்தான் அந்த நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று விசாரணையில் தந்திருக்கிறார்கள்.

பெரியவர் நெல்லை ஜெபமணி கூறியதுபோல் வாழையடி வாழையாக தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பது போன்று குறிப்பிட்டார்கள்.

தந்தையார் செய்த தவறுக்காக மகன் அந்த தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை வரும் என்று அவர் கோடிட்டுக் காட்டினார். எனக்குக் கூட அவர் இதை சூசகமாகச் சொல்கிறார்களா என்ற எண்ணம் ஏற்பட்டது.......

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்த கொறடாவாக இருப்பவர்கள் இவ்வளவு உள் அர்த்தத்தோடு பேசுவது என்பது அவ்வளவு முறையானது அல்ல, இன்னும் நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன் அவர் கைதிகளை அடித்தது ஒரு நியாயத்தின்பேரில்தான் என்றபொருள்படச் சொல்கிறார். அவர் அப்படி குறிப்பிடுவார்களேயானால் அந்த எண்ணம் அவருக்கு இருக்கிறது என்பதைத் தான் இதுகாட்டுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ர. ஜெபமணி : சபாநாயகர் அவர்களே, நான் எந்தவித உள் அர்த்தமும் வைத்து பேசக்கூடியவன் அல்ல. அப்படிப் பேசவும் இல்லை.

திரு. துரை கோவிந்தராசன் : நான் பொதுவாகக் குறிப்பிட்டேனே தவிர ஸ்டாலின் அவர்களை அங்கே வைத்து அடித்தது சரி என்று குறிப்பிடவில்லை,

திரு. க. அன்பழகன் : முதலில் அந்தக் கருத்தில் பேசவில்லை: நாங்கள் அறிவில்லாமல் உட்கார்ந்திருக்கவில்லை.

திரு. மி. வின்சென்ட் : நாங்களும் அறிவில்லாமல் இங்கே உட்கார்ந்திருக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் கொஞ்சம் சாந்தப்பட்டால் நல்லது!

திரு. க. அன்பழகன் : முதல் அமைச்சராக இருந்த காரணத்திற்காக அவரது மகன் ஸ்டாலின் சிறையில் அடைக்கப்பட்டான், அடியும் பட்டான் ஆகவே தகப்பன் செய்த பாவம் மகன் அடிக்கப் பட்டான் என்ற வாதம் எழுப்பப்படுகிறது. ஜெபமணி அவர்கள் பேசும்போது, அதிகாரியின் மகன் ஒருவன் எதிர்காலத்தில் சிறைக்குப் போனால் அவனை யாரேனும் அடித்தால் அவன் என்ன எண்ணுவான் என்று சொன்னார்கள். அப்போது என் தகப்பன் என்ன பாவம் செய்தாரோ நான் அடிபட என்று கருதுவான் என்றுதான் பொதுவாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். இவர், அதை ஸ்டாலினோடு தொடர்புபடுத்தி தந்தை செய்த தவறுக்கு மகன் அடிபட்டான் என்ற கருத்துப்பட பேசுகிறார்கள். நாங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிற கருத்துக்கேற்ப இப்படி நினைக்க தக்க அளவிற்கு எண்ணத் தக்க அளவிற்கு, ஒரு கருத்தைச் சொல்வது எப்படி முறையாகும் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் பேசிய கருத்துக்களை நான் பார்க்கவில்லை, பார்த்துவிட்டு பிறகு முடிவைச் சொல்கிறேன், அதுவரை இதுபற்றி பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டாம் என்று கூறிக்கொள்கிறேன். நான் தீர்ப்பு சொல்கிற வரை அப்பிரச்னையை வெளியிடக் கூடாது.

திரு. துரை கோவிந்தராசன் : நான் என் கருத்தைப் பற்றிப் பேசுகிறபோது எனக்குத் தந்திருக்கிற விளக்கம், இஸ்மாயில் அவர்கள் அறிக்கை தருகிறபோது அவர்கள் மூன்று பேர்களை விசாரித்தார்கள், அதில் ஸ்டாலினும் இருக்கிறார் என்றுதான் தெரிவித்தேன். பெரியவர் ஜெபமணி அவர்கள் இப்படி சொன்னார்களே தவிர முன்னாள் இருந்த முதல் அமைச்சர் அவர்களின் மகன் என்பதால் அப்படிச் செய்தார்கள் என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, சப்ஜட்டுக்கு வாருங்கள்

திரு. துரை. கோவிந்தராசன் : சிறைச்சாலையில் பல்வேறு கொடுமைகள் நடைபெற்றதாக, பலர் உள்ளே இருக்கிறபோது பல்வேறு அல்லல்களுக்கு ஆளாக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். சிறைச்சாலையில் மிஸா கைதியாக இருந்த ஒருவர் எனக்கு எழுதியுள்ள கடிதத்தை தங்கள் அனுமதியுடன் படிக்க விரும்புகிறேன். உள்ளே பல குறைபாடுகள் நடைபெற்றன என்றாலும் உள்ளே இருக்கிற மிஸா கைதி சிறைக்குள்ளே இறந்து போனார் என்ற செய்தியைக் கேட்டு அவரைப் பற்றிய தகவல் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் மனைவி சென்றபோது என்ன நடந்தது என்பதுபற்றி அவர் எழுதியுள்ள கடிதத்தை தங்கள் அனுமதியுடன் படிக்கிறேன்.

''ஐயா, நான் மிசாவில் 1-2-76-ல் கைது செய்து சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தேன். 2-2-76-ல் சிறையில் என்னை அடித்துக் கொடுமைப்படுத்திய நேரத்தில் எனது மனைவி

நான் இறந்துவிட்டதாக கேள்வியுற்று பதறிப்போய் எனது கணவர் உயிரோடு இருக்கிருரா இறந்துவிட்டரா என்பது எனக்குத் தெரியவில்லை; அவரைப்பற்றி நான் தெரிந்துகொள்ள வேண்டும் என கண்ணீரோடு காலில் விழுந்து மன்ருடிக் கேட்டார். அதற்கு கோர்ட் மூலம் வக்கீல் வைத்துத்தான் பார்க்க முடியும், ஆகவே, நான் வக்கீலை வைத்து ஏற்பாடு செய்கிறேன் என்று கூறிக்கொண்டு தகாத முறையில், "நான் இருக்கிறேன்' என்று. . . ." இதை சட்டசபை மூலம் நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும் என தபால் எழுதியிருக்கிருர் செங்கை பி. எம். ராஜவேலன். அவர்கள் கையெழுத்து போட்டு அனுப்பியிருக்கிருர்.

நாங்கள் உள்ளே இருக்கும்போது வெளியிலே இருப்பவர்கள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கிருர்கள் என்று எழுதியிருக்கிருர்கள். தன் கணவனைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்கிறபோது வெளியில் இருப்பவர்களால் இப்படிப்பட்ட பல் வேறு கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன. அதற்கு ஒரு விசாரணைவைத்து இப்படிப்பட்ட சம்பவங்கள் வெளியே அரசியல் வாதிகள் குடும்பங்களுக்கு நடைபெருத அளவிற்கு அமைக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

இல்லை.

இணைப்பு 1

[409ம் பக்கத்திலுள்ள குறுகிய காலவினு 19-க்கான விடையைக் காண்க]

(அ) நிதியாண்டு 1977–78-ல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கும் பாதை வசதி செய்வதற்கும் அரசு ரூபாய் 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(ஆ) மாவட்ட வாரியாக செலவழிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் தொகை பின்வருமாறு ;—

வரிசை எண்.	மாவட்டம்.	நிதி ஒதுக்கீடு 31-3-78 முடிய.	31-3-78 வரை செலவழிக்கப்படும்என்று கருதப்படும் தொகை. (ரூ. லட்சத்தில்)
(1)	(2)	(3)	(4)
1	செங்கற்பட்டு ..	4.00	2·89
2	தென் ஆற்காடு ..	16·00	19·57
3	வட ஆற்காடு ..	12·00	7.53
4	சேலம் ..	14·00	7.29
5	தர்மபுரி ..	3.00	2.22
6	தஞ்சாவூர் ..	10.00	4.18
7	திருச்சிராப்பள்ளி ..	12·00	4.36
8	புதுக்கோட்டை ..	0.80	0.74
9	கோயம்புத்தூர் ..	10.40	6·00
10	நீலகிரி ..	0·50	0·51
11	மதுரை ..	8·00	4·45
12	இராமநாதபுரம் ..	4·00	3.28
13	திருநெல்வேலி ..	4 00	2.56
14	கன்னியாகுமரி ..	1·30	முழுத்தொகையும் செலவழிக்கப்படுமெனக்கருதப்படுகிறது.
	மொத்தம் ..	100·00	66.88

இணைப்பு II

[436 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 396—க்கான விடையைக் காண்க].

(அ) 2,207.

(ஆ) விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.—

மாவட்டம் அல்லது வட்டாரம்.	1967 த.து.	1967 அ.நி.	1968 த.து.	1968 அ.நி.	1969 த.து.	1969 அ.நி.	1970 த.து.	1970 அ.நி.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
செங்கற்பட்டு	11	2	6	33	1	7	5	..
தென்ஆற்காடு	37	1	15	1	6	..	8	..
தஞ்சாவூர்	..	..	2	1	27	..	14	..
திருச்சிராப்பள்ளி	18	..	20	10	23	1	33	..
மதுரை	10	..	1	..	33	..	26	..
இராமநாதபுரம்	7	..	..	..	7	..	10	..
வட ஆற்காடு	15	..	10	..	4	..	12	..
சேலம்	18	..	6	..	3	3	10	..
கோயமுத்தூர்	14	..	25	..	50	..	28	..
நீலகிரி	3	..	..	..	1	..	..	..
கன்னியாகுமரி	..	..	..	..	..	..	..	..
திருநெல்வேலி	10	1	8	..	1	..	6	..
ஈரோடு வட்டாரம்	3	..	8	..	27	..	19	..
புதுக்கோட்டை	..	..	..	..	..	..	..	..
சென்னை ..	..	15	..	3	..	4	..	..
தர்மபுரி	52	..	6	..	7	..	9	..
மொத்தம் ..	198	19	107	48	190	15	180	..
ஆக மொத்தம் ..	217		155		205		180	

மாவட்டம் அல்லது வட்டாரம்.	1971 த.து.	1971 அ.நி.	1972 த.து.	1972 அ.நி.	1973 த.து.	1973 அ.நி.	1974 த.து.	1974 அ.நி.
	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)
செங்கற்பட்டு	20	..	10	..	4	..	21	..
தென்னாற்காடு	16	..	34	..	5	..	36	18
தஞ்சாவூர்	27	..	38	..	1	1	5	..
திருச்சிராப்பள்ளி	20	..	19	..	9	..	..	..
மதுரை ..	34	..	27	..	..	..	8	1
இராமநாதபுரம்	20	..	20	..	8	..	10	..
வட ஆற்காடு	2	..	31	..	1	..	5	..
சேலம் ..	28	..	42	..	6	..	9	5
கோயமுத்தூர்	29	..	48	..	4	6	14	5
நீலகிரி	2	..	6	..	..	..	..	..
கன்னியாகுமரி	..	..	..	..	..	..	..	..
திருநெல்வேலி	11	..	5	..	..	..	3	..
ஈரோடுவட்டாரம்	32	..	39	..	..	..	10	2
புதுக்கோட்டை	..	..	..	..	..	..	2	..
சென்னை	..	..	..	1	..	..	..	..
தர்மபுரி ..	14	..	9	1	..	4	4	1
மொத்தம் ..	255	..	328	2	38	11	127	32
ஆக மொத்தம்..	255		330		49		159	

	1975		1976		1977 (30-6-77 முடிய)		மொத்த வழித் தடங்கள்.
	த.து. (18)	அ.நி. (19)	த.து. (20)	அ.நி. (21)	த.து. (22)	அ.நி. (23)	(24)
செங்கற்பட்டு	4	..	3	13	1	..	120
தென்னார்க்காடு	6	1	3	..	2	..	156
தஞ்சாவூர்	11	14	20	55	1	18	284
திருச்சிராப்பள்ளி	19	12	13	..	..	..	202
மதுரை	19	29	21	4	5	1	219
இராமநாதபுரம்	8	4	13	25	..	..	132
வட ஆற்காடு	4	..	10	8	2	8	112
சேலம்	16	9	7	1	..	..	163
கோயமுத்தூர்	25	29	10	4	11	1	303
நீலகிரி	..	3	..	1	..	4	20
கன்னியாகுமரி	..	3	..	36	..	..	39
திருநெல்வேலி	12	..	2	20	..	8	87
ஈரோடு வட்டாரம்	13	9	5	3	20	..	190
புதுக்கோட்டை	1	1	4	4	..	..	12
சென்னை	..	3	..	8	..	..	34
தர்மபுரி	4	8	11	4	..	..	134
மொத்தம் ..	142	125	122	186	42	40	2,207
ஆக மொத்தம் ..	267		308		82		

குறிப்பு;— த.து.—தனியார் துறை;

அ.நி.—அரசு நிறுவனம்.

இணைப்பு III.

[437ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 397—க்கான விடையைக் காண்க]

வீட்டு வாடகைப்படி அரசு ஊழியர்கள் பணியாற்றும் இடங்களுக்கேற்றாற் போல் பல்வேறு விகிதங்களில் அரசு ஆணையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. எங்கெங்கு அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறதோ அவ்விடங்களில் பணிபுரியும் எல்லா ஆசிரியர்களுக்கும் அதே விகிதத்தில் வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறது.

8-2-1971-ம் நாளிட்ட அரசு நிதித் துறை ஆணை எண். 224-ல் கண்ட இரண்டாவது ஊதியக்குழு பரிந்துரையின்படி திருத்தப்பட்ட விகிதங்களில் அரசு ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறது. இதே விகிதத்தில், உள்ளாட்சித் துறை மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறது.

தற்போது வழங்கப்படும் வீட்டு வாடகைப்படியின் விவரம் பின் வருமாறு:—

(1) கிரேடு (ஏ) சென்னை நகரம் மற்றும் 32 கிலோ மீட்டர்களுக்குட்பட்ட நகர்ப் பகுதிகள்.	எல்லா அரசு ஊழியர்களுக்கும்.	ஊதியத்தில் 15 சதவீதம் அதிகபட்சம் ரூ. 300 (ஒரு மாதத்திற்கு).
(2) கிரேடு I (பி) மதுரை மற்றும் கோயம்புத்தூர் (மற்றும் 16 கி. மீட்டர் களுக்குட்பட்ட பகுதிகள்)	ஊதியம் ரூ. 1,000க்கு மேற் படாதவர்கள்.	ஊதியத்தில் 10 சதவீதம்.
(3) கிரேடு II நகராட்சிகள், மற்றும் மாவட்ட தலைமையகங்கள்.	ஊதியம் ரூ. 1,000க்கு மேற் படாதவர்கள்.	ஊதியத்தில் 8 சதவீதம்.
(4) கிரேடு III நகராட்சி மற்றும் வட்டத் தலைமையகங்கள் அல்லாத கோட்டாட்சித் தலைமையகங்கள், ஏனைய நகராட்சிகள் மற்றும் வட்டத் தலைமையகங்கள்.	ஊதியம் ரூ. 500க்கு மேற் படாதவர்கள்.	ஊதியத்தில் 5 சதவீதம் குறைந்த பட்சம் ரூ. 10.

இணைப்பு IV.

[438ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 400—க்கான விடையைக் காண்க]

(அ) தமிழகத்தில் மொத்தம் 3,348 தாய்-சேய் நல வசதி நிலையங்களும், 135 மகப்பேறு இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக பின் வருமாறு.—

வரிசை எண். (1)	மாவட்டம். (2)	தாய் சேய் நல வசதி நிலையங்கள். (3)	மகப்பேறு இல்லங்கள். (4)
1	சென்னை (மாநகராட்சியும் பூந்தமல்லி மக்கள் நல்வாழ்வு பயிற்சி நிலையமும் உட்பட)	21	38
2	செங்கல்பட்டு	243	4
3	வட ஆற்காடு	309	4
4	தென் ஆற்காடு	304	2
5	தஞ்சாவூர்	306	4
6	திருச்சிராப்பள்ளி	273	7
7	புதுக்கோட்டை	71	இல்லை.
8	மதுரை (மாநகராட்சி உட்பட)	288	28
9	இராமநாதபுரம்	301	5
10	திருநெல்வேலி	291	7
11	சேலம்	259	9
12	கோயம்புத்தூர்	337	25
13	நீலகிரி	83	2
14	கன்யாகுமாரி	113	இல்லை,
15	தர்மபுரி	149	இல்லை,
	மொத்தம்	3,348	135

(ஆ) பொதுவாக 10,000 மக்கட் தொகைக்கு ஒன்று வீதம் தாய்-சேய் நல வசதி நிலையங்கள் துவங்கலாம் என விதி முறைகள் உள்ளன. இந்த விதி முறைக்கு உட்பட்டு, உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைக்கேற்ப புதிய நிலையங்கள் துவங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

இணைப்பு V.

[438ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 401—க்கான விடையைக் காண்க.]

விடை

பட்டினப்பாக்கத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கீழ் பொதுமக்களுக்கான குடியிருப்புகள் (Public rental flats) மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டக் குடியிருப்புகள் (Tamil Nadu Government Servants Rental Housing Scheme) ஆகிய இரண்டு வகையான குடியிருப்புகள் உள்ளன. பொது மக்களுக்கான குடியிருப்புகள் மொத்தம் 73. அவை மூன்று பிரிவுகளாக உள்ளன :

பிரிவு (அ)— மாதம் ரூ. 350-ஐ வாடகையாகக் கொண்டவை.

பிரிவு (ஆ)—மாதம் ரூ. 338-ஐ வாடகையாகக் கொண்டவை.

பிரிவு (இ)—மாதம் ரூ. 192-ஐ வாடகையாகக் கொண்டவை,

இந்தக் குடியிருப்புகள் பொதுமக்களுக்கு அவர்களுடைய விண்ணப்பத்தின் முதுநிலையின் அடிப்படையில்தான் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதற்கான வாடகைகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சூத்திரத்தின் (formula) அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும் வாடகைகள் ஆகும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கு (Middle Income Group) என 23 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த குடியிருப்புகளுக்கான வாடகையை அரசு, வீட்டு வசதி வாரியத்திற்குச் செலுத்தி விட்டு, அரசு ஊழியர்களிடமிருந்து அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்துடன் வீட்டு வாடகைப் படியையும் சேர்த்து வாடகையாக வசூலிக்கிறது.

மேலும், தமிழ்நாடு அரசு பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் குறைந்த அல்லது மிகவும் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான 1,112 குடியிருப்புகள் அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒதுக்கீடு பெறும் அரசு ஊழியரிடமிருந்து வாடகையாக அவர்கள் வீட்டு வாடகைப்படியுடன் அடிப்படைச் சம்பளத்தில் 10 விழுக்காடும் பிடித்தம் செய்யப் படுகிறது.

ரூபாய் 200-லிருந்து ரூ. 299 வரை சம்பளம் வாங்குபவர்களுக்குரிய இல்லங்களில், 2-10-1970-க்கு முன்பாகக் குடிபுகுந்த சில ஒதுக்கீடு பெற்றவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தோடு, அவர்களுக்குரிய வீட்டு வாடகைப்படியையும் சேர்த்தால் வரும் தொகையானது, அவ்வில்லங்களின் சிக்கன வாடகையாகிய (Economic rent) ரூ. 58-ஐ விட அதிகமாகிறது. ஆனாலும், அவர்கள் மட்டும் சிக்கன வாடகையாகிய ரூ. 58-யே செலுத்தி வருகின்றனர்.

இணைப்பு VI.

[134-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 404-க்கான விடையைக் காண்க.]

(அ) விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களில் 30-6-1977-ல் முடிந்த பசலி வரை, வசூலாகாமல் இருக்கும் தொகை மாவட்ட வாரியாக—

வரிசை எண். (1)	மாவட்டத்தின் பெயர். (2)	டிராக்டர். (3)	பம்பு செட். (4)	ஆயில் இஞ்சின். (5)	தென்னை வளர்ப்பு. (6)	வாழை. (7)	மொத்தம். (8)
				(ரூபாய் இலட்சத்தில்)			
1	செங்கல்பட்டு ..	14.18	16.82	4.01	..	1.00	36.01
2	வட ஆற்காடு ..	6.91	24.29	11.88	..	12.87	55.95
3	தென் ஆற்காடு ..	15.19	21.82	15.78	..	0.57	53.36
4	திருச்சிராப்பள்ளி.	5.34	18.24	25.63	..	5.75	54.96
5	புதுக்கோட்டை ..	1.47	4.75	6.33	0.68	..	13.23
6	தஞ்சாவூர் ..	19.28	37.09	23.10	1.07	1.88	82.42
7	சேலம் ..	14.65	20.22	5.38	..	6.96	47.21
8	தர்மபுரி ..	2.70	11.62	8.87	..	5.13	28.32
9	மதுரை ..	5.81	7.79	3.55	0.18	31.74	49.07
10	திருநெல்வேலி ..	3.65	17.38	13.94	0.01	34.87	69.85
11	இராமநாதபுரம் ..	3.83	7.37	5.88	..	1.50	18.58
12	கன்னியாகுமரி ..	0.15	0.05	0.16	0.19	0.84	1.39
13	கோயம்புத்தூர் ..	10.07	7.40	1.48	..	4.03	22.98
14	நீலகிரி ..	..	0.09	0.03	..	..	0.12
		1,03.23	1,94.93	1,26.02	2.13	1,07.14	5,33.45

(ஆ) இல்லை.

இணைப்பு VII.

[443-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 414-க்கான விடையைக் காண்க.]

பழனி தாலுக்காவிலிருந்து விதவைகள் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 4 மனுக்கள் பெறப்பட்டன. அவைகளில் திருமதி சிவபாக்கியம், திருமதி ரங்கம்மாள், திருமதி ராஜேஸ்வரி முதலானோர் விதவைகள் மறுமணத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை கோரியுள்ளனர். திருமதி சிவபாக்கியம் தன்னுடைய முதல் கணவர் இறந்த சான்றிதழை இன்னும் அளிக்கவில்லையாதலால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இயலவில்லை. திருமதி ரங்கம்மாள், திருமதி ராஜேஸ்வரி 1977-ம் ஆண்டு இறுதியில் தான் தங்களுடைய விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். மதுரை மாவட்டத்தை பொறுத்தவரை ஏற்கனவே 5 விண்ணப்பங்கள் வந்து அவை அரசின் பரிசீலனையிலுள்ளதால் இந்த விண்ணப்பங்கள் 1978–79-ம் வருடத்திற்கான உதவித் தொகையின்கீழ் விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

2. இதைத் தவிர பழனியைச் சேர்ந்த திருமதி சந்திரா அவர்களிடமிருந்து தையல் இயந்திரம் கோரி விண்ணப்பம் வந்தது. அவருடைய கோரிக்கையை ஏற்று தையல் இயந்திரம் வழங்கப்பட்டு விட்டது.

3. விதவைகளுக்கு உதவிப்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் 1977–78-ல் பெறப்பட்ட 80 விண்ணப்பதாரர்களுக்கும் உதவித் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது; நிலுவையில் விண்ணப்பங்கள் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை:

வெள்ளிக்கிழமை 1978 ஏப்ரல் 7-ம் நாள்.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள் விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

***20 குறுகிய கால வினா.**

குடிநீர் வழங்கு திட்டங்கள்

திரு. ஆர். மணிமாறன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிநீர் கொடுப்பதற்கான திட்டத்தின் கீழ் கிராமங்கள் 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதில் எந்தெந்தப் பிரிவில் வரக்கூடிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க அரசு உத்தேசித்துள்ளது ?

(ஆ) இதுவரையில் எத்தனை கிராமங்களுக்குக் குடிதண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

(இ) மீதமுள்ள கிராமங்களுக்குச் குடிதண்ணீர் எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ், இராகவானந்தம்—

(அ) முதல் வகை (ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் குடி நீர் ஆதாரங்களே இல்லாத சிற்றூர்கள்) இரண்டாம் வகை (ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் நல்ல குடிநீர் ஆதாரம் இல் லாத சிற்றூர்) ஆகியவைகளுக்கு மட்டும் சுமார் 12 மாதங்களில் நல்ல குடிநீர் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(ஆ) & (இ) ;— 1978 சனவரி திங்கள் முடிய முதல் வகையைச் சார்ந்த 1,282 சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்கும் பணிகள் முடிவடைந்து, 1,364 சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்கும் பணிகள் விரைவில் நடைபெற்று வருகின்றன. மேலும் இரண்டாம் வகையைச் சார்ந்த 82 சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்கும் பணிகள் முடிவடைந்து, 194 சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்விரண்டு வகைகளைச் சார்ந்த ஏனைய சிற்றூர்களுக்கு அடுத்த 31-8-1978-க்குள் குடிநீர் வழங்கப்பட்டுவிடும்

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, தற்பொழுது, குடிநீர் வழங்கும் திட்டத்தின் மூலமாகப் பல ஊர்களில், மேல்நிலைத் தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தும், இதற்கு மின் இணைப்பு கொடுக்கப்படாததின் காரணமாகக் குடிதண்ணீர் வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியென்றால் விரைவில் மின் இணைப்பு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதைப்பற்றித் தகவல் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிலோ மீட்டருக்குள் நல்ல குடிதண்ணீர் கிடைக்கவில்லை என்றால் அங்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்றும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் பல ஊராட்சி ஒன்றியங்களில் ஹேண்ட் பம்பு போடப்பட்டு அவையெல்லாம் பழுதடைந்து இருக்கின்றன. ஆனால் கணக்கில் இத்தனை இடங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது என்று கணக்கைக் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் போடப்படுகின்ற பம்புகளைப் பராமரிப்பதற்கு ஆள் இல்லை. ஆகவே நல்லமுறையில் இவற்றைக் கவனிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ட்ரவுட் ரிலீப் ஸ்கீம் என்ற முறையில் சில இடங்களில் கை பம்புகள் போடப்பட்டு, அவைகளில் சில வேலை செய்யாமல் இருக்கலாம். அவற்றில் சேர்ந்ததைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். ட்ரவுட் ரிலீப் ஸ்கீம் தவிர, நான் சொன்னதின் அடிப்படையில் பல கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். இது அந்தத் திட்டத்தின் அடிப்படையில் செய்யப்பட்டதா என்பதை அறிந்து தகவல் தெரிவித்தால் அதன் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கலாம். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் கேர்-டேக்கர் என்று ஒருவர் இவற்றையெல்லாம் கவனிப்பதற்கு இருக்கிறார். அவரிடம் போஸ்ட் கார்டு இருக்கிறது. ரிப்பேர் ஆனவுடன் தகவல் தரும்படி அவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். இவையெல்லாம் முறைப்படி நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு? இது வரையில் எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது என்கின்ற விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் 6·65 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மத்திய அரசு 2.15 கோடி அளித்துள்ளது. 9 லட்சம் மக்கள் தொகையுள்ள 2500 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படும். 1978-79—ல் 7·90 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். மேலும் ஊராட்சி ஒன்றியங்களின் உபரி நிதியிலிருந்து 4 கோடி முதல் 5 கோடி வரை கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். இதன் மூலம் 15 லட்சம் மக்கள் தொகை கொண்ட 3,126 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி கொடுக்க முடியும் என்று நம்புகிறோம்.

திரு. பொ. காளியப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக என் தொகுதியில் ஒரு கிணறு தோண்டப்பட்டது. ஆனால் அது உப்புத்தண்ணீராக இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பார்வையிட்டபோது, இந்த உப்புத் தண்ணீரை மாற்றுவதற்கான திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்கள். அந்தத் திட்டம் அமல் நடத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : உப்புத் தண்ணீர் வருகின்ற இடம் டைப்-2-வை சேர்ந்தது. இதன் அருகில் எங்கே நல்ல தண்ணீர் இருந்தாலும் அங்கிருந்து இப்படிப்பட்ட இடங்களுக்கு நல்ல தண்ணீர் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, குடிதண்ணீர் இல்லாத கிராமங்களை எல்லாம் சேர்த்து 6 பிரிவுகளாகப் பிரித்து நடவடிக்கை எடுக்க முன்வந்திருப்பது பாராட்டுக்குரிய முயற்சியாகும். ஆனால் இப்படிப் பிரிக்கப்பட்டதில் அங்கங்கே சில கிராமங்கள் இரண்டாவது ஐட்டத்தில் சேரவேண்டியவை விடப்பட்டிருக்கின்றன. ஒரு சில கிராமங்களில் நல்ல தண்ணீர் கிடைக்காமல் ஐந்தாறு மைல்களுக்குச் சென்றுதான் தண்ணீர் எடுத்து வரவேண்டிய நிலைமை இருக்கிறது, எங்கள் பக்கத்தில் திருவேங்கடம் என்ற கிராமத்தில் இந்த நிலைமை தான். இது விடப்பட்டிருக்கிறது. இப்படி விடப்பட்டிருக்கின்ற கிராமங்களை 1, 2 ஐட்டங்களில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பீ.டீ. ஓ. மூலமாகக் கலெக்டருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, கலெக்டர் மூலமாக டைப் 1, 2, 3, 4, 5, 6 என்ற தகவல்கள் எங்களுக்கு வருகின்றன. ஏதாவது கிராமங்கள் இந்த டைப் 1, 2-ல் வரவேண்டியது விடப்பட்டிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அதைக் கருத்தில் கொண்டு, எனக்கு விவரம் கொடுக்கலாம். நான் 17 ஆம் தேதி வில்லிபுத்தூருக்கு வருகிறேன். அதுசமயம் அங்கே என்னைப் பார்க்கலாம்.

[1978 ஏப்ரல் 7

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே,
தற்பொழுது, குடிநீர் வழங்கும் திட்டத்தின் மூலமாகப் பல ஊர்
களில், மேல்நிலைத் தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தும், இதற்கு
மின் இணைப்பு கொடுக்கப்படாததின் காரணமாகக் குடிதண்ணீர்
வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படி
யென்ருல் விரைவில் மின் இணைப்பு கிடைக்க நடவடிக்கை
எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம் : அதைப்பற்றித்
தகவல் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே,
ஒரு கிலோ மீட்டருக்குள் நல்ல குடிதண்ணீர் கிடைக்கவில்லை
என்ருல் அங்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்
என்றும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்
சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனுல் பல ஊராட்சி ஒன்றி
யங்களில் ஹேன்ட் பம்பு போடப்பட்டு அவையெல்
லாம் பழுதடைந்து இருக்கின்றன. ஆனுல் கணக்கில் இத்தனை
இடங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது என்று கணக்கைக்
கொடுத்துவிடுகிருர்கள். ஆனுல் போடப்படுகின்ற பம்புகளைப்
பராமரிப்பதற்கு ஆள் இல்லை. ஆகவே நல்லமுறையில் இவற்றைக்
கவனிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர்
அவர்களே, ட்ரவுட் ரிலீப் ஸ்கீம் என்ற முறையில் சில
இடங்களில் கை பம்புகள் போடப்பட்டு, அவைகளில் சில வேலை
செய்யாமல் இருக்கலாம். அவற்றில் சேர்ந்ததைத்தான் மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிருர்கள் என்று நினைக்
கிறேன். ட்ரவுட் ரிலீப் ஸ்கீம் தவிர, நான் சொன்னதின் அடிப்
படையில் பல கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தைச்
செயல்படுத்தி வருகிருேம். இது அந்தத் திட்டத்தின் அடிப்படை
யில் செய்யப்பட்டதா என்பதை அறிந்து தகவல் தெரிவித்தால்
அதன் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கலாம். ஒவ்வொரு
ஒன்றியத்திற்கும் கேர்-டேக்கர் என்று ஒருவர் இவற்றையெல்லாம்
கவனிப்பதற்கு இருக்கிருர். அவரிடம் போஸ்ட் கார்டு இருக்
கிறது. ரிப்பேர் ஆனவுடன் தகவல் தரும்படி அவர் கேட்டுக்
கொள்ளப்பட்டிருக்கிருர். இவையெல்லாம் முறைப்படி நடக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, குடிநீர் வழங்
கும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு ? இது
வரையில் எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது என்கின்ற
விவரங்களை அறிவிக்க இயலுமா ?

[1978 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்
தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் 6·65 கோடி ரூபாய் ஒதுக்
கியிருக்கிருேம். மத்திய அரசு 2.15 கோடி அளித்துள்ளது.
9 லட்சம் மக்கள் தொகையுள்ள 2500 குடியிருப்புகளுக்குக் குடி
நீர் வசதி செய்து தரப்படும். 1978-79—ல் 7·90 கோடி
ரூபாய் ஒதுக்கியுள்ளோம். மேலும் ஊராட்சி ஒன்றியங்களின் உபரி
நிதியிலிருந்து 4 கோடி முதல் 5 கோடி வரை கிடைக்கும் என
எதிர்பார்க்கிருேம். இதன் மூலம் 15 லட்சம் மக்கள் தொகை
கொண்ட 3,126 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி கொடுக்க
முடியும் என்று நம்புகிருேம்.

திரு. பொ. காளியப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே,
குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக என் தொகுதியில் ஒரு
கிணறு தோண்டப்பட்டது. ஆனுல் அது உப்புத்தண்ணீராக
இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பார்வை
யிட்டபோது, இந்த உப்புத் தண்ணீரை மாற்றுவதற்கான திட்டம்
செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்கள். அந்தத் திட்டம்
அமல் நடத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : உப்புத் தண்ணீர்
வருகின்ற இடம் டைப்-2-வை சேர்ந்தது. இதன் அருகில்
எங்கே நல்ல தண்ணீர் இருந்தாலும் அங்கிருந்து இப்படிப்பட்ட
இடங்களுக்கு நல்ல தண்ணீர் கொண்டு வருவதற்கு நடவடிக்கை
எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, குடிதண்ணீர்
இல்லாத கிராமங்களை எல்லாம் சேர்த்து 6 பிரிவுகளாகப் பிரித்து
நடவடிக்கை எடுக்க முன்வந்திருப்பது பாராட்டுக்குரிய முயற்சி
யாகும். ஆனுல் இப்படிப் பிரிக்கப்பட்டதில் அங்கங்கே சில
கிராமங்கள் இரண்டாவது ஐட்டத்தில் சேரவேண்டியவை விடப்
பட்டிருக்கின்றன. ஒரு சில கிராமங்களில் நல்ல தண்ணீர்
கிடைக்காமல் ஐந்தாறு மைல்களுக்குச் சென்றுதான் தண்ணீர்
எடுத்து வரவேண்டிய நிலைமை இருக்கிறது, எங்கள் பக்கத்தில்
திருவேங்கடம் என்ற கிராமத்தில் இந்த நிலைமை தான். இது
விடப்பட்டிருக்கிறது. இப்படி விடப்பட்டிருக்கின்ற கிராமங்களை
1, 2 ஐட்டங்களில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை
எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்
தலைவர் அவர்களே, பி.டி. ஓ. மூலமாகக் கலெக்டருக்குத் தகவல்
கொடுக்கப்பட்டு, கலெக்டர் மூலமாக டைப் 1, 2, 3, 4, 5, 6
என்ற தகவல்கள் எங்களுக்கு வருகின்றன. ஏதாவது கிராமங்கள்
இந்த டைப் 1, 2-ல் வரவேண்டியது விடப்பட்டிருந்தால்,
மாண்புமிகு உறுப்பினர் அதைக் கருத்தில் கொண்டு, எனக்கு
விவரம் கொடுக்கலாம். நான் 17 ஆம் தேதி வில்லிபுத்தூருக்கு
வருகிறேன். அதுசமயம் அங்கே என்னைப் பார்க்கலாம்.

[1978 ஏப்ரல் 7

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்ற போது, 7.9 கோடி என்று கூறினார்கள். இது எந்தெந்த மாவட்டத்திற்கு எவ்வளவு, எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ? அதில் கோவை மாவட்டத்திற்கு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறன்.

திரு. மு. செல்வராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் கொடுக்கப்பட்டு, எதுவும் சரிவர பராமரிக்கப்படவில்லை என்ற குறைபாடு தமிழகம் பூராவும் இருக்கிறது. எனவே எங்கெங்கே இந்த பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதோ அங்கேயெல்லாம் அரசாங்கமே வாட்டர் போர்டு மூலமாக எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கான சிறு தொகையையும் இந்த ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியங்கள் கொடுக்கத் தயாராக இருக்கும். எனவே நேரடியாக அரசாங்கமே எடுத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவர் அவர்களே இதை அப்படி மெயின்டனென்ஸ் பண்ணுவது நல்லதென்று அரசு முடிவெடுத்து 3 மாவட்டங்களிலே பரீட்சார்த்தமாகச் செய்வது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதிலே உறுப்பினர் அவர்கள் சார்ந்த தென் ஆற்காடு மாவட்டமும் ஒன்று. தென்னாற்காடு மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் செங்கற்பட்டு மாவட்டம் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. வே. கந்தசாமி : மாமன்றத் தலைவர் அவர்களே, குடிதண்ணீர் வாரியத்திலிருந்து 15 சப்-மர்ஜிட் பம்புகள் என்னுடைய பகுதியிலே போட்டிருக்கிறார்கள். அதிலே 3 தான் ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சத்தமாகப் பேசுங்கள். அப்போது தான் கேட்கும்.

திரு. கா. வே கந்தசாமி : பேரைவத் தலைவர் அவர்களே குடிதண்ணீர் வாரியத்திலிருந்து 15 சப்–மர்ஜிட் பம்புகள் என்னுடைய தொகுதியிலே வைத்திருக்கிறார்கள் .அதிலே 3 பம்புகளிலேதான் தண்ணீர் எடுக்கிறது மற்ற 12 பம்புகளிலே தண்ணீர் எடுக்கவில்லை. எனவே, அதற்கான கம்பெனி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியைப் பற்றிக் கேள்வி கேட்டால் அதற்கு அமைச்சர் அவர்களிடத்திலே தகவல் இருக்குமா ? கேள்வி பொதுவாக உள்ளது. சிவசாமி.

1978 ஏப்ரல் 7]

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கடந்த டிசம்பர் மாதத்திற்குப் பின்னால், தொடர்ந்து 4 மாதங்களாக மழை பெய்யவில்லை. இப்பொழுதே வறட்சி ஆரம்பமாகி விட்டது. குளம், குட்டைகள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் காய்ந்து விட்டது. கிணறுகளிலே தண்ணீர் கீழே போய்க் கொண்டிருக்கிறது. எனவே. குடிநீர் நல்லமுறையிலே சப்ளை செய்வதற்காக, முன் ஜாக்கிரதையாக குடிநீர்த் திட்டத்தை வேகமாக அமுல் படுத்தும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதுபோல், 12 மாதங்களில் டைப் 1, 2 என்றுள்ள கிராமங்கள் அனைத்திற்கும் குடிநீர் கொடுக்கப்படும். அதிலே மாண்புமிகு உறுப்பினர் தொகுதியாகிய இளையாங்குடியும் ஒன்று.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், இப்போது குழாய்க் கிணறுகள் போட்டிருக்கின்ற இடங்களிலே எல்லாம், பல பஞ்சாயத்துக்களிலே நிதி நிலைமை இல்லாத காரணமாக, இந்தக் குழாய்கள் ரிப்பேர் ஆகாமல் தண்ணீர் எடுக்க இலாயக்கில்லாமல் இருக்கின்றது. இதை மனதிலே கொண்டு அமைச்சர் அவர்கள் கூறும்போது இதைப் பரீட்சார்த்தமாகப் பார்க்கப் போவதாகக் கூறினார்கள். இது குடிநீர் பிரச்னை. ஆகவே இந்த முக்கியமான பிரச்னையிலே நல்ல முறையிலே குடிநீர் கிடைக்க உடனடியாக சர்க்காரே ஏற்றுக்கொண்டு இந்த ரிப்பேர்களைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்கள் நகராட்சிகள் ஆகியவைகளிலே உள்ள நிதி ஆதாரத்தைவிட நம்முடைய தமிழக அரசினுடைய நிதி ஆதாரம் மோசமாக இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். எனவேதான் டைப் 1, 2 இப்போது எடுத்திருக்கிறோம். நிதி ஆதாரம் நல்லமுறையிலே சீரடையும் என்று கருதுகிறேன். அதன் பின்னர் இந்த 3, 4 இன்னுமுள்ள மற்றவைகள் எல்லாம் எடுத்து கொள்ளப்படும்.

* 831 வினா

விவசாய தொழிலாளர்களது ஊதியங்கள்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏராளமான இடங்களில் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் விவசாயத் தொழிலாளிகளுக்குக் குறைந்த பட்ச கூலி சட்டப்படி தானியமாக கொடுக்க வேண்டிய கூலி ரொக்கமாகத்தான் கொடுக்கிறார்கள் என்பது தெரியுமா?

(ஆ) இந்த நிலைமையை மாற்றி சட்டப்படி தானியமாகவும் ரொக்கமாகவும் கூலி கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: (அ) மற்றும் (ஆ) :—1969-ம ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டத்திலும் 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்சக் கூலி சட்டத்தின்கீழ் விடுத்துள்ள அறிவிக்கையிலும் மிராசுதாரர்கள் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலி ரொக்கமாகவும், தானியமாகவும் கொடுக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி பொதுவாக மிராசுதாரர்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கு, விவசாயக் கூலி, சாகுபடிக் காலங்களில் ரொக்கமாகவும், தானியமாகவும், அறுவடைக் காலங்களில் தானியமாகவே மட்டும் கொடுக்கிறார்கள். சாகுபடிக் காலங்களில் தானிய இருப்பு குறைவின் காரணமாக விவசாயக் கூலி ரொக்கமாகக் கொடுக்கப்பட்ட சம்பவங்கள் ஆங்காங்கு இருந்திருக்கின்றன. ஆனால் இவற்றில் விவசாயத் தொழிலாளர்களின் ஒப்புதலுடனேயே அவ்வாறு நடந்துள்ளது.

(முற்பகல் 9-10)

திரு. ஏ. செல்லப்பன்: விவசாயத் தொழிலாளர்களுக்குத் தானியமாகத் தந்தால் எவ்வளவு தர வேண்டும்? பணமாகக் கூலி தரும்போது எவ்வளவு தருகிறார்கள்? தானியங்கள் தரவேண்டுமென்று அரசு வற்புறுத்தி ஆணை பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டத்தின் இரண்டாவது அனுபந்தத்தின் கீழே கூறியுள்ளபடி கூலி ரொக்கமாகவும், தானியமாகவும் கொடுக்கப்படுகிறது. ஆடவர்களுக்கு ரூபாய் 6 அல்லது 6 லிட்டர் நெல்லும் ரொக்கம் 2-3/4 ரூபாயும், பெண்டிருக்கு ரூ. 4 அல்லது 5 லிட்டர் நெல்லும் 1½ ரூபாயும், அறுவடைக் காலத்தில் 54 லிட்டர் அறுவடை நெல்லுக்கு 6 லிட்டர் நெல் கொடுக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. சட்டப்பிரிவு 7-ன் படி, தானியமாகக் கொடுக்க வேண்டுமென்றால் சாகுபடி இல்லாத காலங்களில் சாத்தியம் இல்லை என்பதுதான் பதில்.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்த விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி கொடுக்கவேண்டுமென்ற சட்டத்தின்கீழ் கீழத் தஞ்சையில் மட்டும் கொடுக்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் கொடுக்கத் தயாராக இல்லை. ஒப்பந்தம் செய்யப்பட்ட தஞ்சை மாவட்டத்தில் கொடுக்கத் தயாராக இல்லை. ஒப்பந்தத்தை மீறுகிற, சட்டத்தை மீறுகிற நிலச்சுவான்தார்களைக் கைது செய்வது போன்ற நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சட்டத்தை மீறுகிறார்கள் என்ற தகவல் அளித்து அந்தத் தகவல் நிரூபிக்கப்பட்டால் அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப் பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா: இந்தக் கூலி வழங்குகின்ற நேரத்தில் ஒரே வேலை செய்கிற ஆண்களுக்கு ஒரு கூலியும், பெண்களுக்கு ஒரு கூலியும் இருப்பதை மாற்ற அரசு முன்வருமா? அறுவடைக் காலங்களில் தானியங்களைக் கொடுத்துவிட்டு நடவுக் காலங்களில் தானியங்களைக் கொடுக்காமல் தானியங்களை வைத்துக் கொண்டிருப்பவர்களே இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார்கள் அதைத் தடுத்து எல்லா நேரங்களிலும் தானியமாகக் கூலி கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசு என்பது பொதுவாகக் சட்டம் போடுகிற ஒரு அமைப்பு. சிலபேர் தானியங்களை எல்லாக் காலத்திலும் வைத்திருப்பார்கள். விவசாயிகளிடத்தில் எல்லா நேரங்களிலும் தானியம் இருக்காது. ஆகவே, தானியமாகத்தான் கொடுக்க வேண்டுமென்று கட்டுப்படுத்துவது சிலருக்குப் பாதகமாகக் கூட இருக்கும். ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற யோசனை ஏற்கத்தக்கது அல்ல.

திரு. என். பழனிவேல்: விவசாயத் தொழிலாளர்களுக்குத் தானியமாகவும் பணமாகவும் கொடுக்கப்படுகிற கூலிச் சட்டம் கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இருப்பதாகத் தெரிகிறது. இதைத் தமிழகம் பூராவும் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு அமல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்கந்திரன்: கீழத் தஞ்சையில் 1969 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டம் அமுலில் இருக்கிறது. மற்றப் பகுதிகளில் 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்சக் கூலிச் சட்டம் அமலில் இருக்கிறது.

* 832 வினா—

கல்லூரிகளில் வேலை வாய்ப்பளிக்கும் கல்வி முறை

திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எந்தெந்த பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் ''ஜாப் ஓரியன்டெட் கோர்ஸ்'' ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) சென்னை மற்றும் மதுரைப் பல்கலைக் கழகங்களின் கீழ் உள்ள கல்லூரிகளில் ''ஜாப் ஓரியன்டெட் கோர்ஸ்'' (வேலை வாய்ப்புத் தரக்கூடிய பிரிவுகள்) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) பொதுமக்கள் தொடர்பு, புத்தகத் தொழில், சுற்றுலாக் கல்வி, சத்துள்ள உணவு வகைகள், கார்ப்பரேட் செக்ரடரிஷிப், கூட்டுறவு, ராணுவப்பயிற்சி, குழந்தை மற்றும் குடும்பநலம், இசைப்பயிற்சி, மின்சாரப் பொறியியல், பண்ணைகள் இயல், ரப்பர் தொழில் நுட்பம், வியாபார நிர்வாகம் போன்ற பல்வேறு பிரிவுகள், ''ஜாப் ஓரியன்டெட் கோர்ஸ்''ன் கீழ் பல்வேறு கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் கல்லூரி ஆசிரியர்கள்

*833 வினா— திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977-78ஆம் ஆண்டில் தற்காலிகமாக கல்லூரிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

பயிற்றுநர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ..	285 பேர்
உதவிப் பேராசிரியர்கள்	217 பேர்

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, நூற்றுக் கணக்கானவர்கள் தற்காலிகமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களில் 6 மாத காலம் பணியாற்றியவர்களும் உண்டு, 6 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்களும் உண்டு. அவர்களுக்கு எதிர்காலத்தில் மாற்றுத் திட்டம் ஏதாவது அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அவர்களுடைய பிரச்சினையை அரசு அனுதாபத்தோடு கவனிக்கும் என்று அவர்களுக்கு உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 என்ற புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படையிலே தற்காலிகமாகப் பணியாற்றிவரக்கூடிய ஆசிரியர்களுக்கு வேலையிழப்பு ஏற்படாமல் இருக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? தற்காலிகமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் எந்தக் கல்லூரிகளில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்களோ அந்தக் கல்லூரிகளிலேயே தொடர்ந்து வேலை பார்க்கக்கூடிய நிலைமை இருக்கிறதா? அதே நேரத்திலே பல இடங்களிலே அவர்கள் வெளியேற்றப்படுவதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 திட்டத்தின் காரணமாக வேலை இழப்பு ஏற்படாது என்று அரசு ஆசிரியர்களுக்கு வாக்குறுதி தந்திருக்கிறது. ஆனால் தற்காலிக ஆசிரியர்களைப்பற்றி அரசு முடிவு எடுக்கமுடியாத நிலைமை இருக்கிறது, காரணம் அது தேர்வு ஆணைக் குழுவின்கீழ் வருகிறது, தேர்வு ஆணைக் குழுவின் அதிகாரத்தை அரசு எடுத்துக் கொள்ளமுடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

திரு. எம். வின்சென்ட்: தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலே கல்லூரிகளிலே உள்ள வேலைவாய்ப்புக்களை கல்லூரிகளில் தற்காலிகமாகப் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் வயது வரம்பைத் தாண்டும் ஆசிரியர்களுக்கும் கொடுக்க தேர்வாணையில் சில மாற்றங்களைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதுபற்றிய யோசனைகள் அனுதாபத்தோடு அரசு பரிசீலிக்கும் என்பதிலே அடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 என்ற முறையில் ஏற்கனவே ஹைஸ்கூல்களில் வேலை செய்கின்ற ஒரு குறிப்பிட்ட சர்வீஸ் இருக்கிறவர்களை எடுத்துக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்போது படித்துவிட்டு அந்தக் கல்லூரிகளிலே பேராசிரியர் பதவிக்குத் தகுதிபெற்றவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்; அவர்களை, சர்வீஸ் கமிஷன் மூலமாக இல்லாமல், எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக இல்லாமல், அவர்கள் மனுச் செய்துகொண்டால் அவர்களை எடுத்துக்கொள்கிற முறை கையாளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தலைவர் அவர்களே, வேலையில் இருக்கிறவர்களுக்கு வேலையில்லாமல் வேலையிழப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்குத்தான் அதிகமான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவர் அவர்களே, இந்த 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 என்ற கல்வித் திட்டத்தில் ஒரே ஒரு தலைமை ஆசிரியர் தான் இருப்பாரா? அல்லது ப்ளஸ் 2க்கு தனி தலைமை ஆசிரியர் இருப்பாரா? அப்படியானால் அவர்தான் 10வது வகுப்பு வரையில் உள்ள பள்ளிக்கும் தலைமையாசிரியராக இருப்பாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி ஸ்கூலுக்கு ஒரே ஒரு தலைமையாசிரியர்தான்.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி ஸ்கூல்களிலே இப்போது இருக்கின்ற தலைமை ஆசிரியர்கள் பி.ஏ., பி.டி.யாக இருக்கிறார்கள், அவர்களை மாற்றி எம்.ஏ. படித்தவர்களை, கல்லூரிகளில் இருக்கிறவர்களை நியமிக்கப்போகிறார்களா அல்லது ஏற்கனவே இருக்கிறவர்களையே நியமிக்கப்போகிறார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதற்கான தகுதிகள், வரையறுக்கப்பட்ட தகுதிகள் இருக்குமானால் அவர்களே இருக்கலாம்.

உதகமண்டலத்தில் வெளிப்புற விளையாட்டு அரங்கம்

*834 வினா—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் ஒரு வெளிப்புற விளையாட்டு அரங்கம் அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம். ஐயா.

திரு. போ. கோபாலன்: தலைவர் அவர்களே, உதகமண்டலத்திலே அரசினர் பூங்காவிற்குப் பக்கத்திலே பிரிக்ஸ் உயர்நிலைப் பள்ளியிலே உள்ள விளையாட்டு மைதானத்திலேதான் அது அமைக்கப்படுகிறதா? அல்லது வேறு எந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது? அங்கே ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் உள்ள உட்பகுதி இன்னும் காலியாக வீணா இருக்கிறது, அந்த இடத்திலே அது அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஊட்டி நகர்ப்புறத்தில், லாலி இன்ஸ்டிட்யூட் அருகாமையில் சர்வே எண் 4202, 4204, பிளாக் எண் 88, 89-ல் மேற்படி விளையாட்டு அரங்கைக் கட்டுவதற்கான கருத்துரு உள்ளது. மேற்படி கருத்துருவுக்கான திட்டங்களும், செலவு மதிப்பீடுகளும், பொதுப் பணித் துறையின் வட்டார அலுவலரிடம் கோரப்பட்டுள்ளது. திட்டங்களைப் பெற்ற பின்னர் அரசிடம் தேவையான நிதி உதவிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் விண்ணப்பிக்கும்போது, அரசு அக்கறையுடன் பரிசீலிக்கும்.

திரு. கா. அப்புனு கவுண்டர்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலேயும் ஒவ்வொரு ஸ்டேடியம் கட்டுவது அரசின் கொள்கையா? அப்படி என்றால் இப்போது இல்லாமல் இருக்கும் இடங்களில் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அப்படியொரு திட்டம் இருக்கிறது. அதற்கு அந்தந்த மாவட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேசிய முதியோர் கல்வித் திட்டம்

*835 வினா திரு. கு. ரமணி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய முதியோர் கல்வித் திட்டம் ஒன்றை மத்திய அரசு துரிதமாக அமுல் நடத்த உள்ளது என்பது தமிழக அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் என்ன?

(இ) தமிழகத்தில் அதை அமுலாக்க ஏற்பாடு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) ஆம்.

(ஆ) மைய அரசு தனது முதியோர்க் கல்வித் திட்டத்தின் கீழ் இந்தியாவிலுள்ள பதினைந்து வயதிலிருந்து முப்பத்தைந்து வயதுவரை எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் அனைவருக்கும் படிப்பறிவு புகட்டவேண்டும் என்றும், இத்திட்டத்தை 2-10-78 முதல் நடைமுறைக்குக் கொண்டு வந்து ஐந்து ஆண்டுகளில் அறியாமையைப் போக்க வேண்டுமெனவும் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான கல்வி மையங்களை மனமுவந்து செயல்படும் நிறுவனங்கள், (Voluntary agencies) அரிமா சங்கம், ரோட்டரி கிளப், நேரு யுவக் கேந்திரங்கள் போன்றவை நடத்தலாமெனவும் மீதியுள்ள இடங்களில் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அரசே இம்மையங்களை நடத்தலாமெனவும் மைய அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் மைய அரசு ஏற்க உள்ளது. அதில் நிருவாகச் செலவில் 75 விழுக்காட்டினையும் (Administration cost) செயல்படுமிடத்திலுள்ள செலவு (field cost) முழுவதையும் மைய அரசு ஏற்பதாகத் திட்டமிட்டுள்ளது.

(இ) ஆம்.

[1978 ஏப்ரல் 7

திரு.கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, இதற்காக மைய அரசு மாநில அரசுக்கு ஆண்டுதோறும் வழங்குகின்ற தொகை என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, திட்டத்தை அமுல் நடத்துகின்றபொழுதுதான் அந்த முழு விவரமும் தெரியும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இதுவொரு முக்கியமான திட்டமாகும். இப்பொழுதுகூட நம்முடைய கிராமப் பகுதிகளிலே பெரும்பாலான வயதானவர்கள் தாங்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் வாங்கும்பொழுது ரேகை வைத்துதான் வாங்குகிறார்கள். அப்படி ரேகை வைப்பதால் பலவிதமான சிக்கல்கள் இருப்பது கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்குக்கூடத் தெரியும். மத்திய அரசு அதிகமாக நிதியளிக்கத் தயாராக இருக்கும்பொழுது முதியோர் அனைவரும் படிக்கத் தக்க அளவிலே தினமும் ஒருமணி நேரமாவது சொல்லிக்கொடுக்கும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் நடத்துவதற்கு இப்பொழுது உள்ள ஆசிரியர்களுக்கு தனியாக ஊதியம் கொடுத்து இந்தத் திட்டத்தைத் துரிதமாக, ஐந்தாண்டுகளில் வயதானவர்கள் கையெழுத்துப் போடுகின்ற அளவிலாவது செய்வதற்கு முயற்சியெடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த அரசு அதிலே அக்கறை காட்டுகிறது என்கிற அடிப்படையில் இந்தத் திட்டத்தில் நாங்கள் அக்கறை எடுத்துச் செயல்படுத்தி வருகிறோம். அதற்காக ஒரு மாநில வாரியமும் அமைக்கப்பட இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு.ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, தேசிய முதியோர் கல்வித் திட்டம் ஆரம்பிப்பதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.அரங்கநாயகம்: தலைவரவர்களே, அரசாங்கத்திற்கா, படிப்பவர்களுக்கா, மைய அரசுக்கா, யாருக்கு என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

Lakshmi Machine Works, Coimbatore.

* 336 Q—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) Whether it is a fact whether while seven unions gave strike notice in Lakshmi Machine Works, Coimbatore, settlement was signed under 12(3) of Industrial Disputes Act, with only one union and lock-out lifted;

1978 ஏப்ரல் 7]

(b) the terms of the settlement;

(c) whether the stay-in-strike continued after lifting the lock-out;

(d) the number of worker is who were involved in stay-in-strike; and

(e) number of workers suspended after lifting lock-out

*மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்;-விவர அறிக்கை ஒன்று சட்டப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி:- மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள லட்சுமி மெசின் ஒர்க்ஸ் நிறுவனத்தில் வேலை பார்க்கும் 480 பேர் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. அதை வாபஸ் பெறுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இதைப்பற்றி இன்னும் ஒரு முடிவெடுக்கவில்லை.

திரு. ரா.கிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த லட்சுமி மெசின் ஒர்க்ஸ் நிறுவனத்தில் மொத்தம் பத்து சங்கங்கள் உண்டு. அதில் ஏழு சங்கங்கள் அந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. குறைந்த மைனாரிட்டி உறுப்பினர்களை, தொழிலாளர்களைக் கொண்ட சங்கங்களை வைத்து இந்த 12 (3) செட்டில்மென்ட் போடப்பட்டது என்பது உண்மையா? இந்த 12 (3) செட்டில்மென்ட் மெஜாரிட்டியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதா? அதிலும் ஞாயிற்றுக்கிழமையன்று இந்த செட்டில்மென்ட் போடப்பட்டதா என்பதையும், அதோடு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்விகள் கேட்கும்பொழுது ஒரு கேள்வி அல்லது இரண்டு கேள்விகளைக் கேளுங்கள். அப்படியில்லாமல் நீங்கள் கேட்டுக்கொண்டே போவதும், நானும் அனுமதித்துக் கொண்டும் இருந்தால் ஒரு கேள்விக்கே ஐந்து நிமிடங்கள் ஆகிவிடும். எனவே, தயவுசெய்து ஒரே கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன்: அதோடு, உண்ணாவிரதம் இருந்த தொழிலாளர்களைக் கைது செய்கின்ற ஒரு போக்கை மாற்ற இந்த அரசு தயாராக இருக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

---

*709ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

[1978 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை வெகுகாலமாக இருக்கின்ற காரணத்தினால், சில சட்டப் பிரச்சினைகளை எடுத்துச் சொல்வது தமிழ் நாட்டிலுள்ள எல்லாத் தொழிற்சங்கங்களுக்கும், தொழிலாளர் தலைவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் உதவும் என்ற காரணத்தினால் ஐந்து நிமிடங்கள் இதற்காகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஒப்பந்தம் தொழில் தகராறு சட்டம் 12(3)-ன் கீழ் கையெழுத்திடப்பட்டது. 12(3)-ன் கீழ் கையெழுத்து போடப்பட்டால் in the course of conciliation proceedings அப்படியென்றால் அதனுடைய லீகல் இம்ப்ளிகேஷன் என்பது 18(3)-இல் இருக்கிறது.

"Section 18(3) A settlement arrived at in the course of conciliation proceedings under this Act which has become enforceable shall be binding on—

(a) all parties to the industrial dispute;

() all other parties summoned to appear in the proceedings as parties to the dispute, unless the Board, arbitrator, Labour Court, Tribunal or National Tribunal, as the case may be, records the opinion that they were so summoned without proper cause;

(c) where a party referred to in clause (a) or clause (b) is an employer, his heirs, successors or assigns in respect of the establishment to which the dispute relates;

(d) where a party referred to in clause (a) or clause (b) is composed of workmen, all persons who were employed in the establishment, or part of the establishment as the case may be, to which the dispute relates on the date of the dispute and all persons who subsequently become employed in that establishment or part."

10 சங்கங்களில் 4 சங்கங்கள் கையெழுத்துப் போட்டன. 6 சங்கங்கள் போடவில்லை. இப்படி 4 சங்கங்கள் கையெழுத்திட்டு 6 சங்கங்கள் போடவில்லையென்றால் செல்லுமா? இது ஒரு சட்டப் பிரச்சினை. [குறுக்கீடு] Wait. Case Law படிக்கிறேன். The High Court of Judicature at Kerala —

கேரள உயர்நீதிமன்றத் தீர்ப்பைப்படித்தால் சந்தேகங்கள் தீர்ந்து விடும். உப கேள்விகள் எழாது.

"He (the Judge) also held that a conciliation settlement in respect of common matters pertaining-

[1978 ஏப்ரல் 7

கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். -

to the employees of the establishment, though settled between one union and the Mangement, will be binding under section 18(3) on all the employees of the establishment irrespective of the fact whether the other employees of the establishment are not members of the union which signed the settlement or that they are members of some other union which was not a party to the settlement."

ஒரு சங்கம் கையெழுத்து போட்டாலும் அது மற்ற சங்கத்தையும் அந்தச் சங்கத்திலே சேர்ந்தவர்களையும் கட்டுப்படுத்தும் என்பது கேரள ஹைகோர்ட் தீர்ப்பு. கேரள ஹைகோர்ட் தீர்ப்பு போதாது என்று சொன்னால் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பும் வைத்திருக்கிறேன். நீண்ட தீர்ப்பு, பேரவைத் தலைவர் சொன்னால் படிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து வழக்குமன்றமாக மாற்றாமல் இது நம்முடைய பேரவை என்று கருதுங்கள்.

திரு. க. மருதாசலம்: தலைவரவர்களே, 400-க்கு மேற்பட்டவர்கள் மீது வழக்கு இருப்பதாக அறிகிறோம். இதில் எந்தெந்த தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் என்பதை அறிவிக்க இயலுமா? ஏனென்றால், என்னுடைய தொகுதி என்பதால் மிக முக்கியமாகத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, 499 தொழிலாளர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. வழக்கின் விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது வழக்கு வாபஸ் பெறுவதற்கான ஆலோசனை இன்னும் முடிவு பெறவில்லையென்றார்கள். நான் கோவையிலே அமைச்சரவர்களைக் கண்டு பேசியபொழுது வழக்கு வாபஸ் பெறமாட்டாது, 3 மாதம் சிறையிலே இருங்கள் என்று சொன்னார்கள். எனவே அதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையில் 1,267 தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். ஆனால் அத்தனை பேரையும் முதல்வர் முயற்சியால் வேலைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. வேலையில்லாமல் அங்கு யாரும் இல்லை. வழக்குகளை வாபஸ் வாங்குவது என்பது இப்பொழுது பரிசீலனையில் இல்லை.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:</u> தலைவர் அவர்களே, 15.9.77 அன்று பாரம் சுமக்கும் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிப்பு வந்திருக்கிறது. நோட்டீஸ் காலம் எல்லாம் முடிந்துவிட்ட காரணத்தினால் விரைவிலே கூலி நிர்ணயம் ரயில்வே போர்ட்டர்களைப் போல் அல்லாமல் இவர்களுக்கு இன்னும் அதிகமாக இருக்கக்கூடிய வகையில் அறிவிப்பு வர இருக்கிறது. அந்த அறிவிப்பு வந்த பிறகு இந்த வழக்குகள் சுமுகமாகத்தீர்ந்துவிடும், தகராறு இருக்காது என்று உறுதியாக நம்புகிறேன்.

<u>திரு. கா. ந. சண்முகம் :</u> தலைவர் அவர்களே, பயணிகள் தங்குவதற்கு வசதியில்லாமல், பல பகுதிகளில் இருந்து வரும் பயணிகள் பிராட்வே பஸ் நிலையத்தில் அவதிப்படுகிறார்கள். இதற்கு வகைசெய்கிற வகையில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவர் அவர்களே, அதைப்பற்றி முறையீடு கொடுத்தால் மெட்ராஸ் மெட்ரோபாலிடன் டெவலப்மன்ட் அதாரிட்டியைக் கலந்து ஆவன செய்ய முயற்சி செய்யப்படும்.

அரியலூர் நகருக்குக் குடிநீர் வழங்கு திட்டம்

<u>வினா *838 திரு. த. ஆறுமுகம் :</u> மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் நகருக்கு கொள்ளிடத்தில் இருந்து குடிநீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ;</u> அரியலூர் நகருக்குக் கொள்ளிடத்தில் இருந்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அதிகம் செலவாகும் எனக் கருதப்படுவதால், ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆராயப்படுகின்றன.

<u>திரு. த. ஆறுமுகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975-ஆம் ஆண்டு அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கொள்ளிடத்தில் இருந்து தண்ணீர் கொண்டுவருவதற்காகத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அங்கு தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை வருகிற காரணத்தால், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து கொள்ளிடத்தில் இருந்து தண்ணீர் கொண்டுவர அரசு முயற்சி செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ;</u> பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம்நதி அரியலூர் பேரூராட்சியிலிருந்து சுமார் 27 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கொள்ளிடம் நதி நீர் உறுதியாகக் கிடைக்கக்கூடிய நிலையில் இருந்தாலும், இந்நதியில் இருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் அதிகம் செலவாகலாமெனக் கருதப்படுகிறது. ஆகவே இப்பேரூராட்சியின் சுற்றுப் புறங்களில் உள்ள நிலத்தடி நீரை ஆழ்துளைக் கிணறுகள் மூலம் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. நிலத்தடி நீர் ஆய்வுத் துறையினர் நொச்சிக்குளம் கிராமத்தில் அமைத்துள்ள ஆழ்துளைக் கிணறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவது, குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. ஆய்வுக்கு பின்னர் அது அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

திருவெறும்பூர் ஊராட்சியில் அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்

<u>வினா * 581 திரு. கூ. ச. முருகேசன்:</u> மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அ) திருவெறும்பூர் ஊராட்சி அரிசன மக்களுக்கும் நரிக்குறவர்களுக்கும் இலவச வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் உண்டா ?

ஆ) ஆம் என்றால், அத்திட்டம் எப்பொழுது அமுல் படுத்தப்படும் ?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:</u>

(அ) திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேவராய நேரியில் நரிக்குறவர்களுக்காக ஏற்கெனவே. 1974-75-ம் ஆண்டில் 140 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) அரிசன மக்களுக்குக் கட்டித்தருவது பற்றி அடுத்து வரும் கட்டங்களில் 1978-79 பரிசீலிக்கவேண்டும்.

<u>திரு. கூ. ச. முருகேசன்:</u> தலைவரவர்களே, திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேவராயநேரியில் நரிக்குறவர்களுக்காக ஏற்கெனவே 1974-75-ம் ஆண்டில் 140 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது மட்டுமல்ல, அங்கே ஒரு பள்ளிக்கூடமும், ஒரு பாலர் பள்ளியும், குடிநீர், வடிகால் வசதிகளும், வானொலி நிலையமும் டாக்டர் கலைஞர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அமைக்கப்பட்டன. அதேபோல், பழங்கனாங்குடியில் வாழும் நரிக்குறவர்கள் வெயிலிலும், மழையிலும் அல்லல்பட்டுக் கொண்டு இருப்பதால், அப்படிப்பட்ட திட்டங்களை அங்கே செயல்படுத்த அரசு முன்வருமா? அதே போல், அரிசனங்களுக்கு கலைஞர் ஆட்சியில் எங்கள் ஊரில் மற்ற சமுதாயத்தினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன, அதேபோல் அரிசனங்களுக்கும் அங்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தேவராயநேரியில் நரிக்குறவர்களுக்காகக் கட்டப்பட்ட இல்லத்திலேயே அவர்கள் தங்குவது இல்லை என்ற புகார் வந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, இன்னும் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்து, அவர்கள் தங்காமல் இருந்தால், அரசாங்கப் பணம் வீணாகச் செலவழிப்பதாக இருக்கும். அது பொருத்தமாக இருக்காது. அரிசனங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

(சில உறுப்பினர்கள் துணை வினாக்கள் எழுப்ப, கைகளை உயர்த்திக் கொண்டிருந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த வினா திருவெறும்பூர் ஊராட்சி பற்றியது. அனுமதிப்பதற்கில்லை.

Thachoor Harijan Colony

* Q-582 Thiru J. JAMES: will the Hon. the Minister for Harijan welfare be pleased to state:

a) whether land has been acquired for the pathway leading to Thachoor Harijan colony in Thiruvettar Panchayat Union In Kanyakumari district

b) if so, whether the pathway way constructed, and

c) if not, the reasons for the delay ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) தச்சூர் அரிசனக் காலனிக்கு பாதை அமைக்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பாதை இன்னும் முழுவதுமாக அமைக்கப்படவில்லை.

(இ) நில எடுப்புச் சட்டம் பிரிவு 4 (1) -ன் படி முன்மொழிவு அறிவிக்கை வெளியிடப்பட்டபின், நிலச் சொந்தக்காரர்களில் ஒருவர் அவருடைய ஆர்ஜித நிலத்தில் ஒரு கட்டடத்தைக் கட்டி விட்டார். இந்தப் பகுதியைத்தவிர மற்ற நிலத்தில் பாதை அமைக்கப்பட்டு விட்டது, அந்த நிலத்தில் கட்டிய வீட்டை இடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அந்த நிலச் சொந்தக்காரரோ தானாக முன்வந்து 26. 12. 1977-ல் வீட்டை இடித்து விட்டு நிலத்தை அரசிடம் ஒப்படைத்து விட்டார். இந்த நிலததில் பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

தீண்டாமை ஒழிப்பு

* வினா 839— திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தீண்டாமை ஒழிப்பைத் தீவிரப்படுத்தும் வகையில் எல்லா மாவட்டங்களிலும் அதற்கென ஒரு தனிக் காவல்படை (Spec al Police Squad) அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தீண்டாமை ஒழிப்பைத் தீவிரப்படுத்தும் பொருட்டு, ரோந்து காவல்படை (Mobile Pol'ce Squad) கோயம்புத்தூர், மதுரை, தென்ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய ஆறு மாவட்டங்களில் தற்போது உள்ளது. பிற மாவட்டங்களிலும் இது போன்ற ரோந்து காவல்படை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வ. மு, சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த ரோந்துபடை உடனடியாக அமைக்கப்படுமா ? அடுத்து, அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் தீண்டாமைப் புகார்களை அவர்களே தற்போது நேரடியாகக் கொடுக்க இயலாமல் இருப்பதாலும், மற்றும் சாட்சிகள் தயாரிக்க முடியாமல் இருப்பதாலும், மற்ற வழக்குகளைப் போல் இந்த தீண்டாமை ஒழிக்கும் ரோந்துப் படையே அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று, அதைத் தடுக்க ஆவன செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே அந்த ரோந்துப் படையிடம் புகார் தரப்பட்டு அதற்கு அப்புரம் விசாரிக்கப்பட்டு, இறுதியாகத்தான் நடவக்கை எடுக்கப்படுகிறது. அதிலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய பலன் கிடைக்க வழி இருக்கிறது.

[முற்பகல் 9-40]

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, இந்தச் சட்ட மன்றத்தில் தீண்டாமைப் பற்றிப் பல நேரங்களில் உறுப்பினர்கள் மனம் நொந்து பேசியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டமான ஒரு நிலைமை இருக்கும்போது 10 ஆண்டுகளுக்கு முன்னாலே அவர்கள்செய்யக்கூடிய தொழிலை எங்கள் ஊரில் நிறுத்திவைத்திருக்கிறோம். நாங்களே அந்தத் தொழில்களையும் செய்து வருகிறோம். நாங்கள் டீ அருந்தும் கடைகளில் எங்களோடு சமமாக உட்கார வைத்து அவர்களையும் டீ அருந்தச் செய்கிறோம். உயர்ந்த ஜாதிக் காரர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் இருக்கின்ற தெரு வழியாக அவர்கள் பிணத்தையும் தூக்கிச் செல்ல அனுமதி வழங்கியுள்ளோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் எல்லோருக்கும் தெரியும். நீங்கள் கேள்வியைச் சுருக்கமாக கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: இந்த முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிற கிராமங்களுக்குத் தனியாக ஏதாவது சிறப்புத் திட்டம் வகுக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இதுபோன்று முன்னோடியாக இருக்கிற கிராமங்களுக்கு அரசாங்கம் பரிசு வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்று இருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, படிப்பது இராமாயணம், இடிப்பது இராமர் கோயில் என்பதைப்போல சில தலைவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றி மேடையிலே பேசிவிட்டுத் தங்கள் வீட்டிலே தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிப்பது கிடையாது. மற்றும் இது சம்பந்தமாக வழக்குகள் காவல் துறையினருக்குச் சென்றால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பது இல்லை, ஏனென்றால் இந்த 'அன்டச்சபிளிட்டி ஆக்ட்'டில் சில சந்து பொந்துகள் இருக்கின்றன. அந்த சந்து பொந்துகளை அடைத்து, நல்ல முறையில் இந்தச் சட்டத்தைத் தீவிரப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்தச் சட்டத்தைக் கொஞ்சம் கடுமையாக்கித்தான் இப்போது அரசாங்கம் பின்பற்றி வருகிறது. ஊருக்கு உபதேசம் செய்கிறவர்கள் தங்களுக்கும் அது பொருந்தும் என்பதுதான் இந்த நாட்டின் வழக்கம். ஏதாவது குறைபாடு இருந்தால் காலப் போக்கில் நிவர்த்தி செய்யப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, இந்த தீண்டாமை ஒழிப்புச் சிறப்புக் காவல்படை 6 மாவட்டங்களில் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த 6 மாவட்டங்களிலும் இது வரையில் எத்தனை வழக்குகள் போடப்பட்டுள்ளன? மற்ற மாவட்டங்களிலும் இந்தச் சிறப்புக் காவல்படையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்; தலைவரவர்களே, 1976–77 ஆம் ஆண்டில் 2,630 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் 988 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. இந்தச் சிறப்புக் காவல் படையை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். வின்சென்ட்: தலைவரவர்களே, தீண்டாமையால் தான் கல்லாமை, அறியாமை, இல்லாமை எல்லாம் எழுகின்றன. ஆகையால் இந்த ஆமைகளை ஒழிக்க இந்தக் காவல் படை ஆமை வேகத்தில் இயங்காமல் முயல் வேகத்தில் இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த ஆமைகளை ஒழிப்பதற்காகத்தான் அரசாங்கம் புதிய சட்டங்களைக் கொண்டுவந்து, தீவிரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் தீண்டாமையை ஒழிக்க ஒரு சுவரொட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிட்டார்கள். தாழ்த்தப்பட்ட சகோதரர் ஒருவரை "கிட்டே வராதே, எட்டி நில்" என்று உயர் ஜாதிக்காரர் ஒருவர் சொல்வதைப் போல ஒரு பக்கத்தில் போட்டு, இன்னொரு பக்கத்தில் 'இப்படிச் சொன்னால் இப்படிக் கிடைக்கும்' என்று அவரைச் சிறைக்குள்ளே போட்டிருப்பதைப் போல சுவரொட்டியில் போட்டிருந்தார்கள். அந்த சுவரொட்டியை அன்றைய அரசு தடை செய்து விட்டது. தீண்டாமை ஒழிப்பில் அதிக அக்கறை காட்டுகின்ற இன்றைய அரசு, பேரறிஞர் அண்ணா வழியில் நடப்பதாகச் சொல்லப்படும் இந்த அரசு அத்தகைய சுவரொட்டிகளையும் வெளியிடுவதோடு, பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்ட அந்த சுவரொட்டியை மீண்டும் வெளியிட இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த ஆண்டு அந்த சுவரொட்டி வெளியிடப்பட்டிருக்கிறது.

சோழன் போக்குவரத்துக் கழகம்.

*வினா. 840 திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தை எம்ப்ளாயர்ஸ் அசோசியேஷனில் அண்மையில் இணைத்ததை அரசு அறியுமா?

(ஆ) தனியார் கைக்கொள்ளும் இந்த முறையை அரசு கைவிட முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) இந்த முறையைக் கைவிடத் தேவையில்லை என அரசு கருதுகிறது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, எம்ப்ளாயர்ஸ் என்பது முதலாளிகள் வைத்திருப்பது எம்பிளாயர்ஸ் அசோசியேஷன். அதிலே போய் நம்முடைய அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இருக்கிற சோழன் ரோட்வேய்ஸ் கார்ப்பரேஷனை இணைத்து, தொழிலாளர்களுக்கு எதிராக வழக்காட வழக்கறிஞர்களை அமர்த்துவதை அரசாங்கம் ஊக்குவிக்கலாமா? அது சரியல்ல என்று கருதி, அந்த எம்பிளாயர்ஸ் அசோசியேஷனில் இருந்து வாபஸ் பெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

[1978 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, தென்னிந்திய தொழில் அதிபர்கள் சம்மேளனத்தில் சோழன் போக்குவரத்துக் கழகம் உறுப்பினராகச் சேர்ந்துள்ளது. சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் இன்டியன் கம்பெனிஸ் ஆக்ட்டில் சொல்லப்படுகின்ற இன்டஸ்ட்ரீஸ்-இன் அடிப்படையில் உறுப்பினராகச் சேரக்கூடிய உரிமை உண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் தொழிலாளர்களுக்கு எதிராக சம்மேளத்தின் மூலமாக வழக்கறிஞர்கள் யாரும் அமர்த்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. செல்லப்பன் : பேரவைத் தலைவரவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகத்தில் அப்ரென்டீஸ் ஆக இரண்டாண்டு காலமாகப் பணியாற்றியவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டுவிடுகிறார்கள். அவர்களை வீட்டுக்கு அனுப்பாமல் தொடர்ந்து பணியில் நிரந்தரமாக அமர்த்திக்கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்..

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, சோழன் போக்குவரத்தில் மட்டுமல்ல. ஏனைய போக்குவரத்துக் கழகங்களிலும் அப்ரென்டீஸ்கள் வேலை செய்கிறார்கள். அவர்களை நிரந்தரமாகப் பணியில் அமர்த்தக்கூடிய திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, தென்னிந்திய தொழிலதிபர்கள் சங்கம் முதலாளிகளால் அமைத்துக்கொள்ளப்பட்ட சங்கம், அவர்கள் மெஜாரிட்டியாக இருக்கக்கூடிய அந்த சங்கத்தில் பொதுதுறை நிறுவனமான சோழன் போக்குவரத்துக் கழகம் போய்ச் சேர்ந்துகொள்கிறது என்றால் சில பிரச்சினைகள் வரும்போது அவர்கள் எடுக்கின்ற முடிவுக்கு இவர்களும் கட்டுப்பட்டாக வேண்டும். பெரும்பாலும் தொழிலாளர்களுக்கும் விரோதமான கொள்கையை எடுத்தால்கூட யாரும் போய் கேட்க முடியாது. மேனேஜிங் டைரக்டர் என்பவர் அதிகாரிதான். அவர் முதலாளி அல்ல. ஆகவே இந்தப் பொது நிறுவனம் போய் அந்தச் சங்கத்தில் உறுப்பினராகச் சேருவது என்பது மாறலி ராங், இட் இஸ் இன்கரக்ட். ஆகவே உடனடியாக இதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, தனியார் பலர் இருக்கின்ற இந்தத் தென்னிந்தியத் தொழிலதிபர்கள் சம்மேளனத்தில் பொதுத் துறையைச் சேர்ந்த சோழன் போக்குவரத்துக் கழகம் உறுப்பினராக இருக்குமானால் பல குறைபாடுகளைக் களைவதற்குக்கூட இது உதவியாக இருக்கும். ஆகவே இது தொடர்ந்து இருக்கலாம் என்று கருதுகிறேன்.

1978 ஏப்ரல் 7]

திரு. ரா. கிருஷ்ணன் ; தலைவரவர்களே, இந்தக் கழகத்தில் 98 பேர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அத்தகைய சூழ்நிலை இங்கே ஏற்பட்டிருக்கிறது. இப்போது அது இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் கேஸ் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. சோழன் போக்குவரத்தில் ஏற்கனவே லா ஆபீஸர்ஸ் இருக்கிறார்கள். அவர்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய் சம்பளம் அளிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்னும் மேற்கொண்டு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து இந்த கேசை நடத்துவதற்கு, பொதுவாக வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை அடியோடு ஒழித்துவிடவேண்டும் என்று சட்ட நிபுணர்களை இந்த வழக்குகளில் சேர்ப்பது சரியாக இருக்குமா? ஆகவே, உடனடியாக இதனை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த 98 நபர்கள் பிரச்சினை சோழன் போக்குவரத்தைச் சேர்ந்ததல்ல. அது பல்லவன் போக்குவரத்தைச் சேர்ந்ததாகும். இந்தக் குறிப்பிட்ட வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞர் யாரும் இந்தச் சம்மேளனத்தின் மூலம் அமர்த்தப்படவில்லை என்பதை மீண்டும் கூறிக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, தென்னிந்தியத் தொழிலதிபர்கள் சங்கம் என்று அதற்குப் பெயர். அதில் சோழன் போக்குவரத்துக் கழகம் உறுப்பினராக இருப்பது எப்படிச் சாத்தியமாகும். சோழன் போக்குவரத்துக் கழகத்துக்கு அதிபர் யார்? அதிபரே இல்லாத அரசுத் துறையைச் சேர்ந்த அந்தப் போக்குவரத்துக் கழகத்தைக் கொண்டுபோய் தென்னிந்திய அதிபர்கள் சங்கத்தில் இணைப்பது என்பது சரியானதல்ல, அது முறையானதும் அல்ல..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : ஆகவே இதனைக் கொண்டுபோய் அந்தச் சங்கத்தில் சேர்ப்பது சரியல்ல. ஆகவே இதனை மாற்றியமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி தென்னிந்தியத் தொழிலதிபர்கள் சம்மேளனத்தைப் பொறுத்தவரைக்கும் இன்டியன் கம்பெனிஸ் ஆக்ட்படி தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள் உறுப்பினராக இருக்கலாம். அதன் அடிப்படையில் சோழன் போக்குவரத்தும் இன்டியன் கம்பெனிஸ் ஆக்ட்-இன் கீழ் வருகின்ற ஒரு நிறுவனம் என்ற முறையிலே அந்தச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம்: இப்போது வரவழைக்கப்பட்டிருக்கிற காளைகள் நமக்கு இனாமாக அனுப்பப்பட்டிருக்கிறதா அல்லது அவை விலைக்கு வாங்கப் பட்டிருக்கிறதா? விலைக்கு வாங்கப்பட்டிருந் தால் அவற்றின் விலை என்ன?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : முழுக்கமுழுக்க இனாமாகவே விமான போக்குவரத்துச் செலவு உட்பட அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பொ. காளியப்பன் : தமிழ்நாட்டில் மொத்தம் எவ்வளவு கால்நடைப் பண்ணைகள் இருக்கின்றன? அவற்றில் என்னென்ன கால்நடைகள் பராமரிக்கப்படுகின்றன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தமிழ்நாட்டில் மொத்தம் எட்டு கால்நடைப் பண்ணைகள் உள்ளன. தர்மபுரி மாவட்டத்தில், ஒசூரில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் சிந்தி, ஜெர்சி உயரினம், கலப்பினம், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப்பண்ணையில் சிந்தி, பிரெளண், சுவிஸ் உயரினம், ஜெர்சி உயரினம், கலப்பினம், முர்ரா எருமை, புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் சிந்தி, காங்கேயம், கலப்பினம், முர்ரா எருமை; இராமநாதபுரம் மாவட்டத்தில், செட்டிநாட்டில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் தர்பார்க்கர், சிந்தி, கலப்பினம், முர்ரா எருமை, திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட கால்நடைப்பண்ணை, அபிசேகப்பட்டியில், கிர், கலப்பினம், முர்ரா எருமை, நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் பிரீசியன் உயரினம், கலப்பினம் கொருக்கை கால் நடைப்பண்ணையில் உம்பளச்சேரி, கலப்பினம்; ஈச்சங் கோட்டையில் உள்ள உயரின கால்நடை அபிவிருத்திப் பண்ணையில் ஜெர்சி உயரினம் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. செல்லப்பன் : தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரத்த நாடு, ஈச்சங்கோட்டை கால்நடைப் பண்ணைகளில் விவசாயி களுக்குப் பயன்படும் அளவிற்கு மானியமாக காளைகள், கிடாக்கள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம் : அதிக அளவில் பால் கொடுக்கிற முர்ரா எருமைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அரசு கேட்டிருக்கிறதா? அப்படிக் கேட்டிருந்தால் எந்தெந்த நாடுகளிலிருந்து கேட்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அப்படிப்பட்ட திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் ; அமைச்சர் அவர்கள் அறிவித்தவை பால் அதிகமாக வரக்கூடிய அளவிற்கு பயன்படும். உழவிற்குப் பயன்படுகிற அளவிற்கு காங்கேயம் காளைகளைப் பயன்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி ; பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயத்தில் இருக்கிற மாட்டுப்பண்ணையை எடுத்துக் கொள்ளலாமா என்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்திலே சிறப்பாக விளங்குகின்ற, ஒசூர் கால்நடைப் பண்ணைக்கு இன அபிவிருத்திக்காக, காளை மாடுகள், கிடாரிகள் எத்தனை கொடுக்கப்பட்டன. இன்னும் எவ்வளவு கொடுக்கப் படும் என்கின்ற விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே; இதற்கு தனிக்கேள்வி போடவேண்டும்.

திருச்சியில் பர்மா இலங்கை அகதிகளுக்கு வீடுகள்.

* 844 வினா— திரு. சி. மாணிக்கம் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்- கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியில் பர்மா, இலங்கை அகதிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வீடு கட்டும் வேலை எப்போது துவங்கப் படும்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: திருச்சியில்; பர்மா இலங்கை அகதிகளுக்காக வீடு கட்டுவதற்கென்று நிலம் ஒதுக்கப் படவில்லை.

திரு. கூ. ச. முருகேசன் ; பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் திருவரம்பூர் தொகுதியில் காமராஜ் நகர் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் பர்மா இலங்கை தமிழர்கள் இருக்கிறார்கள். குண்டூர் என்ற பகுதியிலும் பர்மா தமிழர்கள் இருக்கிறார்கள். வாழவந்தான்கோட்டையிலும் பர்மா அகதிகள் இருந்துவருகிறார்கள். இங்கெல்லாம் காலனி இருக் கின்ற இடங்களில் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு இடமிருக்கிறது. ஆகவே இவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள கடன் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி ; அரசாங்கத்திற்கு உரிய முறையில் விண்ணப்பங்களை செய்தால் நிச்சயமாக வீடுகள் கட்டுவதற்கு கடன் வழங்க அரசு முன் வரும். என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 ஏப்ரல் 7

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, பர்மா இலங்கை அகதிகளுக்கு வீடுகள் கட்ட கடன் எவ்வளவு வழங்கப்படுகிறது? வழங்குகின்ற அதிகாரி யார்? கொடுக்கப்படும் கடன் தொகை தவணைமுறையில் வழங்கப்படுகிறது என்றால் எத்தனை தவணைகளில் வழங்கப்படுகின்றன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பர்மா, இலங்கையிலிருந்து அகதிகளாக தாயத்திற்கு திரும்பியவர்களுக்கு வீடு கட்டுவதற்குரிய கடனை கோட்டாட்சித் தலைவரும், தனிக் கோட்டாட்சித் தலைவரும் வழங்குகிறார்கள். வீடுகட்டும் கடன் வழங்குகின்ற விஷயத்தில் கிராமப்புறத்தில் இருக்கின்றவர்களுக்கு 3,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது, இதில் 700 ரூபாய் மான்யமாக கொடுக்கப்படுகிறது, 2,300 ரூபாய் கடனாக வழங்கப்படுகிறது. நகர்ப்புறங்களில் உள்ளவர்களுக்கு 6,000 ரூபாய் கடனாக வழங்கப்படுகிறது, எத்தனை தவணைகளில் இது கொடுக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதில் முதல் தவணையாக 600-ம், இரண்டாவது தவணையாக 2,100-ம், மூன்றாவது தவணையாக 2100-ம், நான்காவது தவணையாக 1,200 மாக வழங்கப்படுகிறது. கிராமப்புறத்திலுள்ளவர்களுக்கு வழங்கப்படுகின்ற கடனைப்பொறுத்தவரையில் முதல் தவணையாக 200 ரூபாயும், இரண்டாவது தவணையாக 700 ரூபாயும், மூன்றாவது தவணையாக 1,050 ரூபாயும், நான்காவது தவணையாக 1,050 ரூபாயும் வழங்கப்படுகிறது.

திரு. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, ஸ்ரீமாவோபண்டாரநாயகா—சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கை தமிழர்கள் அகதிகளாக இன்னும் எத்தனை பேர்கள் வரவேண்டியுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: இன்னும் மூன்றரை லட்சம் அகதிகள் வரவேண்டியிருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்; திருச்சியில் கட்டப்பட்டிருக்கும் வீடுகளைப் போல மற்ற மாவட்டங்களிலும் கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், என்னுடைய பதிலை கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். வீடு கட்டுகின்ற திட்டம் எதுவும் இப்போது இல்லை. எனவே இந்த கேள்விக்கு இடம் இல்லை.

மஞ்சள் ஏற்றுமதி

* 845 வினா— திரு எஸ். கணேசன்: மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-77 ஆம் ஆண்டு, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மஞ்சள் எவ்வளவு?

(ஆ) அதன் மதிப்பு என்ன?

1978 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.

(அ) 1976-77 ஆம் ஆண்டு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மஞ்சளின் அளவு 310 டன்கள்.

(ஆ) அதன் மதிப்பு ரூ. 14 இலட்சம்.

மேற் குறிப்பிட்டவை தற்காலிக புள்ளிவிவரங்கள் ஆகும்.

திரு. ரா. க. சு. தண்டபாணி: வெண்தாடி வேந்தன் பிறந்த இடமாகிய ஈரோட்டு மண்ணிலிருந்து தான் இந்த ஏற்றுமதி தொழில் நடந்து வருகிறது. இதில் ஒரு தமிழன் கூட ஈடுபடுவதில்லை. ஒரே ஒரு தமிழர் மட்டும் தான் இருந்தார், கைலாச கவுண்டர் அவர்கள், அவரும் மறைந்துவிட்டார். ஆகவே அங்குள்ளவர்கள் கூட்டுறவு சங்கமாக அமைத்து இந்த ஏற்றுமதித் தொழிலை நடத்த முன் வந்தால் அதற்கு அரசு நிதி உதவி செய்து கொடுக்க முன்வருமா? அமைச்சர் அவர்கள் மஞ்சள் மகிமையை அறிவார்களா? இதற்கு உதவி அளிக்கப்படவேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு மஞ்சள் மகிமையைப்பற்றி நன்றாகத் தெரியும். மேலும் மஞ்சள் ஏற்றுமதி செய்கின்ற தொழிலில் தமிழர்கள் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்; தமிழர்கள் இதில் இருக்கிறார்களா இல்லையா என்கின்ற விவரம் அரசினிடம் இப்போது இல்லை. எத்தனையோ பேர்கள் இந்த ஏற்றுமதியை செய்து கொண்டிருக்கிறார்கள். சென்னை, தூத்துக்குடி, நாகப்பட்டினம் முதலிய இடங்களிலிருந்து சிங்கப்பூர், மலேசியா, மாலத்தீவு அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஹாலந்து போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த முறை 1970 லிருந்து 77 வரையும் இருந்து வந்தது. கடந்த 31-3-77 லிருந்து இந்த வியாபாரத்தில் விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டுவிட்டதால் இந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டார்கள். இப்போது விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமாக மஞ்சள் பயிராகும் ஏரியா ஈரோடு வட்டம் ஆகும். அப்படி இருக்கும் ஈரோட்டிலே, அதிகமான மஞ்சள் மண்டிகள் இருக்கின்றன. இந்த மஞ்சள் மண்டிக்காரர்கள் விவசாயிகளுக்கு நிறைய முன்பணம் கொடுக்கிறார்கள். சாக்குகள் கொடுக்கிறார்கள். 3% கமிஷன் எடுப்பதாக பில் போடுகிறார்கள். தலைவர் அவர்களே, அப்படி 3% கமிஷன் எடுப்பதாகச் சொல்லி, 7% கமிஷன் எடுக்கிறார்கள். அது போக வட்டி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். மூலக் கேள்விக்கு ஒட்டியதாக துணைக் கேள்வி கேட்க்க வேண்டும்; போட வேண்டும். பர்செண்டேஜைப் பற்றிக் கேட்டால் எப்படி? திரு. பழனிவேல்.

திரு. என். பழனிவேல் ; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மஞ்சள் மகிமையைப் பற்றித் தெரியும் என்று கூறினார்கள். மஞ்சள் இந்த நாட்டு மக்களுக்கு என்னென்ன வகையிலே பயன்படுத்தப்படுகின்றது? அதனுடைய மகிமையைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆகவே, இதைக் கொஞ்சம் விளக்கி பதில் அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சளின் உபயோகத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் வாழ்க்கையிலே தினமும் அதிகமாக மஞ்சளை உபயோகித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்று சொன்னால், அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியார், வீட்டிலிருக்கின்ற பெண்களுக்கு இதைப்பற்றி அதிகம் தெரியும். இருந்தும் கூட, வேண்டுமென்றே இந்தக் கேள்வியை கேட்டிருக்கிறார். இருந்தாலும், அவர்கள் வீட்டிலே போய் அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியாரை கேட்டாலே, நல்ல விடை கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மஞ்சளை விளைவிக்கின்ற இந்த விவசாயிகளுக்கு, மஞ்சள் மண்டிக்காரர்கள் நிறைய முன்பணம் கொடுக்கிறார்கள், சாக்குகளும் கொடுக்கிறார்கள். ஆனால், இந்த மஞ்சள் மண்டிக்காரர்கள் கமிஷன் 3% என்று பில்லிலே கணக்குப் போட்டு வசூல் செய்கிறார்கள், ஆனால், உண்மையில் 7% அவர்களிடத்திலே வசூலிக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதை மாற்றியமைப்பதற்கு ஆவன செய்ய முடியுமா? அல்லது போலீசாரைக் கொண்டு, சி. ஐ. டி.க்கள் மூலமாக இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய குற்றச்சாட்டை தனிப்பட்ட முறையில் எழுதிக் கொடுத்தால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீரநாயக்கன்பாளையத்தில் நெசவாளர் கூட்டுறவு சங்கம்.

*846-வினா— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் சீரநாயக்கன்பாளையம் காந்திஜி இன்டஸ்ட்ரீயல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட் (C.H. 65, பதிவு செய்யப்பட்டது முதல் செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அதற்கு நிர்வாக இயக்குனர் நியமிக்கப்பட்டுள்ளாரா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் செயல்படாமல் இருப்பதற்கான காரணங்களை விளக்க இயலுமா என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்த தொழிலியற் கூடம் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய ஒரு காலி இடத்தை நீண்ட குத்தகைக்கு எடுத்து, அதிலே அமைக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், பொதுப்பணித் துறையிலே இடத்தை ஒப்படைக்க காலதாமதம் ஏற்பட்டதன் விளைவாக, இந்தத் தொழிலியற் கூடம் நிறுவுவதற்கு கடன் உதவி அளிக்க முன்வந்திருக்கக் கூடிய ஸ்டேட் பாங்கு, இப்போது கடனுதவி அளிப்பதிலே மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற நிலைமைக்கு வந்துவிட்டது. எனவே, நமக்கென்று ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்டதற்குப் பிறகு, நிதி உதவி பெற்று, இந்தக் கூட்டுறவு சங்கத்தைத் தொடங்க வேண்டுமென்று, இப்போது அரசு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தக்கோலம் 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையம்

*847—வினா திரு. வீ. கே. கோதண்டராமன் :

மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தக்கோலம் 'கோ-ஆப்டெக்ஸ்' சேல்ஸ் எம்போரியத்தில் 46,000 ரூபாய் கையாடல் செய்யப்பட்டுள்ளது தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) ரூ. 41, 632.79 குறைந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் இருப்பில் காட்டப்பட்டுள்ள துணிகள் ரூ. 25,129.84 மதிப்புள்ள துணிகள் கைவசம் இல்லை என்றும், ரூ. 16,302·95 கணக்கில் வரவுக்கு கொண்டு வரப்படவில்லை என்றும் தெரிந்துள்ளது.

(ஆ) சம்பந்தப்பட்ட உதவி மேனேஜர், விற்பனையாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் கையாடல் சம்பந்தப்பட்ட கணக்குகளை தமிழ் நாடு கூட்டுறவு சட்டம் 1966 பிரிவு 66-ன்கீழ் சட்ட ரீதியான ஆய்வு ஒன்றை நடத்தி அதன் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : கூட்டுறவுச் சங்கங்களிலும், கோ-ஆப்டெக்சிலும் கையாடல்கள் செய்கின்றனர் என்று பத்திரிகையில் பெரிதாக செய்திகள் வருகின்றன. அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. மேலும் நீண்ட காலமாக வழக்குகள் நடத்துவதால் உண்மைகள் மறைக்கப்படுகின்றன. ஆகவே, வழக்குகளை இத்தனை நாட்களுக்குள் முடிக்க வேண்டுமென்று அரசு நாள் நிர்ணயிக்குமா?

மாண்புமிகு திரு. கா. இராஜா முகமது : கோ-ஆப்டெக்ஸ், கூட்டுறவுச் சங்கங்களில் முறைகேடுகள் நடந்திருப்பது பற்றி அரசின் கவனத்திற்கு வந்ததற்குப் பிறகு அரசுத் துறையில் நடவடிக்கைகள் மேற்கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிற இந்தக் குறுகிய காலத்தில் கிட்டத்தட்ட 10, 15 கூட்டுறவுச் சங்கங்களில் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன. கோ-ஆப்டெக்சில் கையாடல் நடைபெற்றிருப்பது ஒன்றிரண்டு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்க அரசு தீவிர முயற்சி மேற்கொண்டிருக்கிறது.

திரு. மீ. வின்சென்ட் : கையாடல் எந்த ஆட்சியின் போது நடந்தது? எந்த ஆட்சியின்போது கண்டுபிடிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கா. இராஜா முகமது : தக்கோலத்தில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திலே 1976-77-ல் தவறு நடந்திருப்பதாகத் தெரிய வந்து நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த 20 நாட்களுக்குள் 27—7—1977 அன்று ஆய்வாளர் மற்றும் கிராம முன்சீப் முன்னிலையில் சரக்கு இருப்பை எடுத்துப் பார்த்து ரூ. 25,000 பெறுமானமுள்ள சரக்கு குறைந்திருப்பதைப் பார்த்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : தக்கோலம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் நடந்திருக்கும் இந்த முறைகேடுகள் வேறு பல இடங்களிலும் வட ஆற்காடு போன்ற மற்ற இடங்களிலும் நடந்திருக்கலாம். நடந்து வருகிறது என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் அடிப்படையில் பரவலான தீவிர விசாரணைகள் செய்யப்பட்டு அந்தத் துறை துப்புரவு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. இராஜா முகமது : இப்போது ஆய்வாளர் ஒருவரை அனுப்பி ஒவ்வொரு கடையின் ஆறு மாத இருப்புகளை அவ்வப்போது கணக்கெடுத்து வருகிறார்கள். இருப்புகளைக் கணக்கெடுக்கும் போது தவறு நடந்திருக்கிறதா இல்லையா என்பது தெளிவாக வந்து விடும். அது தொடர்பாகப் பணம் கையாடல் செய்யப்பட்டிருக்குமானால் அதற்கான நடவடிக்கைகளையும் தீவிரமாக எடுத்து வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[*] குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

(2) தகவல் கோரல்

(அ) மாயவரம், கும்பகோணம், பாபநாசம், தஞ்சை தாலுக்காக்கள் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்படுவது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம் : நான் விதி 42ன் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். தமிழ்நாட்டின் மிக முக்கியமான பிரச்சினை குறித்து தீர்மானம் தந்திருக்கிறேன். அதன்மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பொருளைப் பற்றிக் கொடுத்தீர்கள். அது என்ன ஆயிற்று என்று கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் ; 1977-78 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் முழுவதும் புயலாலும் வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாயவரம், கும்பகோணம், பாபநாசம், தஞ்சை ஆகிய நான்கு தாலுகாக்கள் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படாமல் அரசால் வழங்கப்பட்ட சலுகைகள் அனைத்தும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதனால் இன்றைய தினம் கூட்டுறவுக் கடன், நிலவரி, அரசாங்கக் கடன் போன்றவைகளை கடுமையான முறையில் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நீங்கள் எழுதிக் கொடுத்திருப்பதைப் படித்து விட்டு உட்காருங்கள். அதன் மீது விவாதம் இல்லை. கடைசி நாளாக இருப்பதால் கொடுத்ததைப் படித்தால் அரசாங்கம் விளக்கம் கொடுத்தால் கொடுக்கட்டும். இல்லாவிட்டால் அது ரெக்கார்டு ஆகும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் முழுவதும் புயல் வெள்ளத்தால் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தும் தஞ்சை, பாபநாசம், கும்பகோணம், மாயவரம் ஆகிய வட்டங்களில் சில பகுதிகள் தவிர மற்ற எல்லாப் பகுதிகளும் பாதிக்கப்பட்ட பகுதிகளாய் அறிவிக்காத காரணத்தால் கூட்டுறவுக் கடன், நில அடமானக் கடன், நிலவரி போன்ற எல்லா வசூல்களும் கடுமையாக வசூல் செய்து வருவதை நிறுத்தி வைத்து விவசாயிகளுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்பதற்காகவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ள பதட்டநிலையைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து சபையை ஒத்தி வைத்து விவாதிக்க தீர்மானம் கொடுத்திருக்கிறேன். தீர்மானம் மீது விவாதிக்க சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் எவை என்று பார்த்து அவ்வப்போது அவற்றை அறிவிப்புச் செய்வதற்கு அரசுக்குச் சட்டத்தில் இடம் உண்டு. ஆகையினால் எந்த எந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அவர் தருவாரானால் துறையினர் அவை உண்மையாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவையா என்று பார்த்து விட்டு அந்தத் துறையினர் அரசுக்கு அவைகளை அனுப்பினால் அரசாங்கம் அவைகளை நோடிபை செய்வதற்கு இடம் உண்டு. ஏற்கனவே சில தாலுகாக்கள் கூட அப்படி அறிவிப்புச்செய்யப் பட்டிருக்கிறது என்று அறிகிறேன்; மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே அது குறித்து தந்ததாகவும் என்னிடம் பேசும் போது தனியாகச் சொன்னார்கள். நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) காமராஜபுரம் பர்மா அகதிகளின் வீடுகள் நெடுஞ்சாலைத் துறையினரால் இடித்தது குறித்து.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் செங்குன்றம் பகுதியில் நாரைவாரி குப்பத்தில் காமராஜபுரத்தில் பர்மாவிலிருந்து வந்த அகதிகள் வாழ்கிறார்கள். அங்கே அவர்களுக்காக வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

அவர்கள் கையிலிருந்து பணத்தைப் போட்டு வீடுகளைக் கட்டி இருக்கிறார்கள். ஆனால், நெடுஞ்சாலைத் துறையினர் நெல்லூர் சாலைக்கு துணைசாலை போட வேண்டுமென்ற முறையிலே அங்கே அவர்கள் கட்டிய 35 வீடுகளை இடித்து விட்டார்கள். இதன் காரணமாக அங்கே குடியிருந்தவர்கள் இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நெடுஞ்சாலைத் துறையினர் இன்றைக்கு பைப் லைன் கொண்டு போவதற்காக அங்கே இருக்கின்ற அவர்கள் கட்டி குடியிருக்கின்ற மற்ற வீடுகளைக்கூட இடிப்பதற்கு அவர்கள் முனைந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி அவசியமில்லாமல் அந்த அகதிகளுடைய வீடுகளை இடிப்பது சரியல்ல. இன்றைக்கு அவர்கள் அகதிகளாக வந்திருக்கிறவர்கள், அவர்களை ஆதரிக்க வேண்டும், அவர்களை ஆதரிக்காமல் அவர்களை நிராதரவாக விடுவது சரியல்ல. இதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தோம், அதை பொதுப்பணித் துறை எடுத்துக் கொள்வதா, நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொள்வதா, அவர்களுக்கே தெரியாமல் அது இன்றைக்கு வரைக்கும் வராமல் இருக்கிறது. இந்த அகதிகளை அவர்களும் நிராகரிக்கக் கூடிய முறையில் இதிலேயும் அவர்கள் அகதிகளாகக் கருதப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இன்றைக்காவது எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்த்தோம். இதைப்பற்றி விவாதிக்க அமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிகிறது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களிடம் அந்த டைப் செய்த காப்பி இல்லாததால் நீங்கள் பேசுவதை தடுக்க வேண்டாம் என்று விட்டேன். விவரமாகச் சொல்லிக் கொண்டு போகக் கூடாது. அதைப்பற்றிய விளக்கம் என்னிடம் வந்து சேரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) மயிலாப்பூர் கோவில் திருவிழாவின்போது, அனுமதி பெறாமல் தெருக்களில் கார்ட்ரிக் டான்ஸ் நடந்தது குறித்து

திரு. துரை முத்துச்சாமி : தலைவர் அவர்களே, நான் 30—3—78 ஆம் நாளன்று, கீழ்க்கண்ட பொருள்பற்றி அமைச்சர் அவர்களுக்கு கவன ஈர்ப்புக் கொடுத்திருந்தேன்.

சென்னையிலே உள்ள மயிலாப்பூர் கோவில் திருவிழா நடைபெற்றபோது அங்கே காவல் துறையினரின் அனுமதி பெறாமல், தெருக்களிலே ஆபாச நடனம் என்ற முறையிலே ரிக்கார்ட் டான்ஸ் நடத்தினார்கள். அதைப்பற்றி இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்ற முறையிலே நான் கொடுத்திருந்தேன்.

இதுவரையிலும் எந்தவிதமான பதிலும் அரசுத் தரப்பிலேயிருந்து வரவில்லை. இது முக்கியமான விஷயம், தெருக்களிலே இப்படி நடக்கிறது என்பதைப்பற்றி நான் கொடுத்திருந்தேன்.

[திரு. துரை முத்துச்சாமி] [1978 ஏப்ரல் 7

இதைப்பற்றி இதுநாள்வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அதன்மேல் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய பதில் அரசுத் தரப்பிலிருந்து வரவில்லை.

திரு. சி. ஆறுமுகம் : என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பேச அனுமதித் திருக்கிறேனே அதையே நீங்கள் பாராட்ட வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம் : பேசுவதற்குத்தானே நாங்கள் வந்திருக் கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார்ந்துகொண்டே பேசுகின்ற பழக்கத்தை விடுங்கள். தாங்கள் எந்தவிதமான கவனஈர்ப்போ அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமோ இதைப் பற்றிக் கொடுக்கவில்லை, தாங்கள் பேசாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(ஈ) திருவிடைமருதூர், பந்தி கிராமம், அரிசன குடியிருப்புக்குத் தீவைத்தது குறித்து.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே. நான் விதி 42-ன் கீழ் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் கோட்டம், திருவிடைமருதூர் தொகுதியைச் சேர்ந்த பந்தி கிராமத்தில் 29—3—1978 அன்று அரிசன மக்கள் குடியிருப்புகளுக்கு தீவைத்தும், அரிசனரல்லாதார் அருவர் கொலை செய்யப்பட்டும், இதுவரை தக்க நடவடிக்கை எடுக்காமலும் பொதுமக்களுக்குத் தக்க பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளாததாலும் ஏற்பட் டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க வேண்டுமென்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதைப்பற்றி பதிலே வரவில்லை.

மேலும், 78 ஆசிரியர்கள்பற்றியும் சஸ்பெண்ட் செய்யப் பட்டதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருந்தது. அதைப்பற்றியும் இன்னும் தகவல் வரவில்லை. அதற்கும் பதில் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பந்த நல்லூரில் 3 பேர்கள் இறந்து போனார்கள். அதைப்பற்றியும் நான் நோட்டீஸ் கொடுத்திருந்தேன். இந்த மூன்று காரியங்களுக்கும் எந்தவிதமான பதிலும் வரவில்லை. முக்கியமான விஷயங்கள் என்று கருதி நாங்கள் கொடுக்கிறோம். ஆனால், மேலவையிலே இதைப்பற்றி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் சொல்ல வேண்டாம் இங்கே. உங்களுக்குக் கொடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சொல்லுங்கள். அரசுத் தரப்பிலிருந்து பதில் வந்தால் வரலாம்.

(உ) தச்சூர் அரிசன காலனியில் மரங்கள் வெட்டுவது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நான் 42-வது விதியின் கீழ் தீர்மானங்கள் கொடுத்திருந்தும் அதைப்பற்றி இன்னும் பதில் வரவில்லை. மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் அவர்கள் எதைப்பற்றிச் சொல்கிறார்கள் என்று எனக்கு முதலில் சொன்னால் தான் அனுமதி கொடுக்கலாம் அல்லவா?

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தச்சூர் அரிசனக் காலனி அமைப்பது சம்பந்தமாக அதிலுள்ள மரங்களை வெட்டியது சம்பந்தமாக அமைச்சரிடத்தில் கேள்வி கேட்டிருந்தேன்; விதி 42-ன் கீழும் கொடுத்து இருந்தேன். அமைச்சரவர்கள் விடை அளிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிகிறது.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, அந்தக் கேள்விக்கு விடை அளிப்பதற்கு இன்று எடுக்கப்பட்டது. நான் விடையளிப்பதற்குத் தயாராக இருந்தேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினரவர்கள்தான் துணைக் கேள்வி கேட்கத் தயாராக இல்லை, வரவில்லை.

(ஊ) இரும்புக் கல் ஏற்றுமதியால் சென்னை துறைமுகம் அருகே தூசியினால் மக்கள் உடல்நலம் பாதிப்பு குறித்து.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, கடந்த மாதம் 7 ஆம் தேதி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந் தேன். சென்னை துறைமுகத்தில் இரும்புக் கல் ஏற்றுமதியினால் ஏற்படுகின்ற தூசுகள் பக்கத்தில் இருக்கின்ற பகுதிகளுக்குப் பரவி, அதனால் ஆஸ்த்மா, டி. பி. நோய்கள் பரவுவதற்கு ஏதுவாக இருக்கிறது. அதனால் பலர் பாதிக்கப்படுவார்கள் என்று அங்குள்ள மருத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை 7—3—1978 ஆம் தேதியில் கொடுத்திருந்தேன். மார்ச் 8 ஆம் தேதியே தாங்கள் ஒப்புதல் அளித்திருக்கிறீர்கள். ஆனால், இதுவரையில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன விவரம் என்று அதைப்பற்றி சொல்லிவிட்டீர்கள். அமைச்சரவையின் தரப்பில் பதில் ஏதாவது இருந்தால் சொல்லலாம்.

(பதில் இல்லை)

(எ) புதுக்கோட்டை அருகே மாவட்ட மருத்துவமனையில் குளுகோசுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் ஏற்றியதால் தொழிலாளி மரணம் குறித்து

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, நான் இரண்டு வாரங்களுக்கு முன்பாக புதுக்கோட்டை நகரத்தில் உள்ள மாவட்ட மருத்துவமனையில் குளுகோசுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் ஏற்றியதன் பயனாக ஒரு தொழிலாளி மரணம் அடைந்தது குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் குறித்தும் விவாதிக்க வேண்டுமென்று கொடுத்திருந்தேன். மரணமடைந்த அந்த நபரின் குடும்பம் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. யாரும் காப்பாற்ற முடியாத நிலை இருக்கிறது. எனவே, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவரது குடும்பத்திற்கு நிதி ஒதுக்க தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அனுமதிக்கப்பட்டதாகவோ அல்லது நிராகரிக்கப்பட்டதாகவோ கடிதம் வந்துள்ளதா? நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தால் அதை இங்கே எழுப்பக் கூடாது. இன்னும் பதில் வராமல் இருப்பதைப்பற்றித்தான் எழுப்ப வேண்டுமே தவிர நிராகரிக்கப்பட்ட விஷயத்தை இங்கே சொல்லக் கூடாது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்ததைப் போலவே தஞ்சை மாவட்டத்தில் மழையினாலும், வெள்ளத்தினாலும் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதோடு விடுங்கள்.

(ஏ) டி. வி. எஸ். நிறுவனத்தின் தொழிலாளர் உண்ணாவிரதம் குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, கடந்த ஐந்து நாட்களாக டி.வி.எஸ். நிறுவனத்தின் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்க முயற்சி செய்து கைது செய்யப்பட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டு இன்றைக்குச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளை இப்பொழுது வாபஸ் வாங்குவதற்குத் தயாராக இருக்குமா என்பதோடு, ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட அடிப்படையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒத்தி வைப்புத் தீர்மானமோ, கவன ஈர்ப்புத் தீர்மானமோ கையில் இல்லாமல் எழுப்பிக்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி. வி. எஸ். தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி கோட்டையின் முன்னால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நிராகரிக்கப்பட்டு அனுப்பியாகிவிட்டது. அதை எழுப்பக் கூடாது, உட்காருங்கள்.

(ஐ) வியாசர்பாடி, கக்கன்ஜி நகர், கருணாநிதி நகர் போன்ற பகுதிகளில் பல குடிசைகள் அகற்றம் குறித்து.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, 41-வது விதியின் கீழ் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒரு கவன ஈர்ப்பு கொண்டு வந்தேன். எனது தொகுதியிலுள்ள பெரம்பூர் பகுதி உள்ளடங்கிய வியாசர்பாடி குடிசைப் பகுதிகளான வீட்டு வசதி வாரியத்தின் மேம்பாட்டிலுள்ள கக்கன்ஜி நகர், ஏ மற்றும் பி பிளாக், கலைஞர் கருணாநிதி நகர், சத்தியவாணிமுத்து நகர், பெரியார் நகர், காமராஜர் நகர், பக்தவச்சலம் நகர், சாஸ்திரி நகர் ஆகிய சுமார் 10,000 குடிசைகள் உள்ளிட்ட பகுதிகளுக்கு எம்.எம்.டி. ஸ்தாபனம் மூலம் பல வசதிகளைச் செய்யப்போவதாகவும், அதனால் பல குடிசைகளை அகற்ற வேண்டி வரும் என்றும் தற்போது அவர்கள் அனுபவித்து வரும் நில அளவை குறைக்க வேண்டுமென அந்த மக்களை அணுகி இசைவு தர வற்புறுத்துகிறார்கள். இதனால் அந்தப் பகுதியிலுள்ள குடிசைவாழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க வேண்டுமென்று கொடுத்திருந்தேன். அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்கவில்லை.

(பதில் இல்லை.)

ராயபுரம் பகுதியில் இரும்புத்தூளை ஏற்றுமதி செய்யும்போது ஏற்படும் தொல்லை குறித்தும், முகவை மாவட்டத்தில் நூலக ஊழியர்களுக்கு வேலை உத்தரவாதம் குறித்தும், தொண்டி காவல் நிலையத்தில் இரு பெண்கள் லாக்கப்பில் வைக்கப்பட்டிருப்பது குறித்தும்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, நான் இராயபுரம் பகுதியில் இரும்புத்தூளை துறைமுகத்தில் ஏற்றுமதி செய்கின்ற சூழ்நிலையில் பல தொந்தரவுகளுக்கு அந்தப் பகுதி உள்ளாகியிருக்கிறது என்று கொடுத்திருந்தேன். அதற்கு இதுவரையில் எந்விதமான பதிலும் இல்லை.

இராயபுரம் பகுதியில் இரும்புத்தூளை ஏற்றுமதி செய்யும்போதுஏற்படும் தொல்லை குறித்தும், முகவை மாவட்டத்தில் நூலக ஊழியர்களுக்கு வேலை உத்தரவாதம் குறித்தும் தொண்டி காவல் நிலையத்தில் இரு பெண்கள் லாக்கப்பில் வைக்கப்பட்டிருப்பது குறித்தும்,

[திரு செ. சிவசாமி] [1978 ஏப்ரல் 7

மேலும் முகவை மாவட்டத்தில் நூலகத்தில் 270 பேர்களின் வேலை உத்தரவாதம் சம்பந்தமாக கவன ஈர்ப்பு பிரேரணை கொடுத்திருந்தேன். அதற்கு இன்றுவரை பதில் இல்லை.

அதைப்போல தொண்டி போலீஸ் ஸ்டேஷனில் இரண்டு பெண்கள் லாக்கப்பில் வைக்கப்பட்டிகிருர்கள் என்று விதி 42-இன் கீழ் கொடுத்திருந்தேன். அதற்கும் பதில் இல்லை.

[முற்பகல் 10-20]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>; தயவு செய்து இந்தத் தரப்பிலே சொன்னதையெல்லாம் அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று நானும் சிபாரிசு செய்கிறேன், நல்லவைகளாக இருந்தால், நல்ல பிரச்னைகளாக இருந்தால்.

<u>(ஓ) அவையில் எடுத்துக் கொள்ளப்படாத தீர்மானங்களுக்கான பதிலை உறுப்பினர்களுக்கு கிடைக்கும்படி செய்வது குறித்து.</u>

*<u>திரு. க. அன்பழகன்</u>; தலைவரவர்களே, ஏற்கனவே இங்கே தரப்பட்ட பல்வேறுவிதமான ஒத்தி வைப்பு தீர்மானங்களுக்கு உரிய நேரத்திலே பதில் சரியாக அரசுக்குக் கிடைக்காதிருப்பதன் காரணமாக என்று நான் கருதுகிறேன்—எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, இன்றையதினமும் இங்கே ஒத்திவைப்பு தீர்மானங்கள் என்ற கருத்துக்கள் பேசப்பட்டனவே தவிர அந்தத் தீர்மானங்களுக்கு முறைப்படி பதில் கிடைக்கவில்லை. இன்று சட்டமன்றம் ஒத்திவைக்கப்படுமானால், அதற்குப் பதில்கள் அங்கத்தினர்களுக்கு தெரியாது. எனவே, கேள்விகள் போடப்படுமானால், அதற்குரிய பதில்கள் அச்சிட்டு தரப்படுகிற நிலைமை இருப்பதைப்போல், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு அமைச்சர்கள் தருகிற பதிலை அச்சிட்டு எல்லா உறுப்பினர்களுக்கும் விவரம் கிடைக்க வழிசெய்யவேண்டும். முக்கியமான பிரச்னைகளில் விவரங்களை— விளக்கங்களை உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற அப்படிப்பட்ட முறையைத் தாங்கள் அறிவிப்பது நல்லது. ஏனென்றால், மீண்டும் அரசாங்கம் அடுத்து சட்டப் பேரவை கூடும்போது விளக்கம் தெரிவிக்க இரண்டு மூன்று மாதகாலமாகலாம்.

1978 ஏப்ரல் 7]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>; நான் இறுதியில் இந்தத் தொடர் கூட்டத்தில் எத்தனை ஒத்தி வைப்பு தீர்மானங்கள், கவன ஈர்ப்பு தீர்மானங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு மனுக்கள் வந்தன என்பதையும் விவரமாக சொல்லுகிறபொழுது அதிலே பெருவாரியானவை நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டன என்பது தெரியும். ஆனால் விடுபட்டுப்போனவைகளை உறுப்பினர்கள் இந்த அவையிலே சொன்னால் அனுமதிக்க வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை, நிர்பந்தமும் இல்லை. நானாகக் கருதி. அவையெல்லாம் அவைப் பதிவேட்டிலே ஏறுமானால், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் அதிகாரிகளும்; உண்மையாக இருந்தால், நல்லவைகளாக இருந்தால்; நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்றுதான் நான் பேச அனுமதித்தேன்.

கேள்விகள் விடப்படுமானால், அரசாங்கம் கொடுக்கிற பதில் அச்சிட்டுத் தரப்பட வேண்டுமென்று அவர் சொன்னார். அதே போன்று நான் அச்சிட்டுத்தரத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு)

அடுத்தது, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே வேண்டுமானால் கூட அப்படி அனுப்பலாம். ஆனால் ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே அப்படி அனுப்ப முடியாது.. ஏனென்றால், கவன ஈர்ப்புத் தீர்மானம்போல் எடுத்துக்கொண்டு, ஒத்தி வைப்பு தீர்மானங்களுக்குப் பதில் அளிக்க வழியில்லை.

<u>திரு. க. அன்பழகன்</u>; 'In reference to' என்ற முறையில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மூலமாக அரசுக்கு வந்த கருத்துக்கள்பற்றி இந்த விளக்கங்கள் தெரிவிக்கிறோம் என்று ஒத்திவைப்புத் தீர்மானமாக அல்ல: கருத்துக்களாக விளக்கங்கள் தர தாங்கள் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>; ஒன்று நான் செய்கிறேன்: அவற்றை 41-வது விதிக்குட்பட்டதாக மாற்றி பதில் பெறுகின்ற வகையில் அதற்கான வழி செய்கிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u>: தலைவரவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதியிலே நெடுமல்பாளை கிராமம் தீக்கிரையாகியது. அவர்களைப் பற்றியும், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதுபற்றியும் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஏறக்குறைய 4, 5 மாதங்களுக்கு முன்னால் கொடுத்தேன். இது வரையில் அது நிராகரிக்கப்பட்டதாகவோ, ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவோ எனக்குத் தகவல் இல்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுடைய கோரிக்கை அவையேட்டிலே இருக்க வேண்டுமென்ற வகையிலேதான் தங்களைப் பேசச் சொன்னேன். மற்றவைக்கு நான் ஏற்கனவே சொன்னதைப் போல் பதில்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் இதுவரையிலே பதில் கிடைக்காததைப் பற்றிமட்டும் சொல்கிறேன். அண்மையிலே சென்னையிலே, தியாகராய நகர் பகுதியிலே ஏற்பட்ட தீ விபத்தைப் பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எடுத்துக்கொள்ளப் பட இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: அடுத்து, 184-வது விதியின் அடிப்படையில் தீர்மானம் கொடுத்தேன். ஆனால் அது எது என்று சொல்ல விரும்பவில்லை. பேரவைத் தலைவருக்கும் எனக்கும் தெரிந்த உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி என்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவரவர்களே, 184-வது விதியின்கீழ் 22-ம் தேதி நடந்த சம்பவத்தைப் பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக் கூட அறையிலே வந்து கேட்கவேண்டும்.

அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை.

திரு. சோ. அழகர்சாமி: பாய்ன்ட் ஆப் ஆர்டர். இன்றைக்கு இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் வருவதாகச் சொன்னீர்கள். திருப்பூர் நகர் நிகழ்ச்சி பற்றியும், தியாகராய நகர் நிகழ்ச்சிபற்றியும் கொண்டு வருவதாகச் சொன்னீர்கள். அதற்காகத்தான் நாங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தோம், வரும், வருமென்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறை எப்படியென்றால், முதலிலே உரிமை மீறல் பிரச்னைகள். பிறகுதான் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரும்.

(3) உரிமைப் பிரச்னை

பண்ருட்டி ஒன்றியத்தில் நடைபெற்ற வெள்ள நிவாரண வேலைகளைப்பற்றி எதிர்கட்சித் தலைவர் தவறான குற்றச் சாட்டுக்களை சாட்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1—4—1978 அன்று பேரவையில் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் மீது ஒரு உரிமை பிரச்சனையை எழுப்பி னார். 30—3—1978 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நிதி ஒதுக்க சட்ட முன்வடிவின் மீது பேசிய பேச்சைப் பற்றிய தாகும் அது. மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் திட்டவட்ட மாக பண்ருட்டி ஊராட்சி ஒன்றிய வெள்ள நிவாரணப் பணி கள் குறித்த சில குற்றச்சாட்டுக்களை அவை முன் வைத்தார். அவற்றிற்கு ஆதாரம் இருப்பதாகவும் அவர் கூறினார். ஊராட்சி ஒன்றிய ஆணையர் வழங்கிய வேலைப்பட்டியலைக் காட்டி, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களே இதுபற்றி விசாரணை செய்ய வேண்டுமென்று சொன்னார்.

பின்பு உரிமை மீறல் பிரச்சனை எழுப்பப்பட்ட போதும் எந்தக் கருத்தும் ஆதாரம் இல்லாமல் எடுத்து வைக்கப்பட்ட கருத்து அல்ல என்றும் கூறினார். அரசு தரப்பில் இம்மாதிரியான தவறுகள் நேரவில்லை என்றும் வேலைகளைப் பிரித்தாலும் அவை யாவும் ஒருவருக்கே கொடுக்கப்படவில்லை என்றும் திட்டவட்ட மாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

இதை அடுத்து மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர், தாம் கூறிய குற்றச் சாட்டுக்கு ஆதாரம் இருப்பதாகவும்; அதை எல்லாம் விசாரணை வைத்தால் தாம் ஒத்துழைப்பதாகவும் மறு முறையும் வலியுறுத்தினார். அவர் அவைக்குத் தெரிவித்த ஆதாரம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மக்கள் குழுவின் முன் வைத்த வேலைப் பட்டியல் குறித்த ஆவணமாகும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் கொடுத்த அறிக்கையில் எதிர்கட்சித் தலைவர் கூறியதுபோல் பிரிக்கப்பட்ட வேலைகள் ஒருவருக்கே கொடுத்த தாக இல்லை. எனவே, அவர்கள் கூறிய குற்றச்சாட்டு அரசு இவ்வாறு முழு விவரங்களையும் அறிவித்த பின்பும் அவர்கள் வலியுறுத்தியதால், இது வேண்டுமென்றே உள் நோக்கத்தோடு சரியான தகவல்களை அவைக்குத் தரவில்லை என்ற கருத்து வருகின்றது. எனவே, இதில் மேலெழுந்தவாரியாக Pirma Facie அவை உரிமை மீறிய செயல் ஏற்பட்டுள்ளது என்று நான் முடிவு செய்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர் களே, மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அன்றைக்கு இந்தப் பிரச்சனையை எழுப்பியபோது, அமைச்சரை அவமானப்படுத்த

வேண்டுமென்றோ, களங்கம் கற்பிக்க வேண்டும் என்றோ, அவர் அந்த நோக்கத்தோடு பேசவில்லை என்றுதான் நான் இன்னமும் கருதுகிறேன். அவருக்குக் கிடைத்த அந்தப் புள்ளி விவரங்களை வைத்து அவர் அப்படி பேசியிருக்கக் கூடும். அந்தப் புள்ளி விவரங்கள் உண்மைக்கு மாறானவைகளாக அமைந்திருப்பதை அவர்கள் ஒரு வேளை புரிந்திருப்பாரானால், நிச்சயமாக கருதுகிறேன், இன்னமும்நம்புகிறேன், அந்த பிரச்சினையைப் பற்றி வலியுறுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

திரு. இராமசந்திரன் அவர்கள் தன்னைக் களங்கப்படுத்தி விட்டார் அவர், என்று கருதவில்லை என்பதற்கு ஆதாரம் அவர் மிகவும் தெளிவாகவும், எடுத்து வைத்த புள்ளி விவரங்களில், தான் நிரபராதி என்ற அளவுக்கு, அவர் தைரியமாக இருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள், இல்லை நான் பேசியது உண்மை, புள்ளிவிவரங்கள் அத்தனையும் உண்மை, நிரூபிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்; இந்தப் பிரச்சினையை இப்படியே விட்டு விடக் கூடாது என்று அவர்கள் தனது நிலையில் உறுதியாகவும், அழுத்தமாகவும் இருப்பார்களானால், இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு விடுவதைத் தவிர, வேறு வழியில்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய கருத்தைத் தெரிந்ததற்குப் பிறகு நான் என் தீர்மானத்தை முன்மொழிய இருக்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்த தீர்ப்பில் 'பிரைமா பேசி' கேஸ் இருக்கிறது என்று சொன்ன வாசகத்தை குறித்து சட்டமன்றத்தினுடைய, இந்த உரிமையிலே அக்கறை உள்ளவன் என்ற நியதியின் அடிப்படையில் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்றத்திலே பேசப்படுகிற எந்த ஒரு குற்றச்சாட்டும் உண்மையா அல்லவா என்று மறுப்பதற்குரியதே தவிர எவ்வளவு வேண்டுமானாலும் அந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று விளக்கிக் கூறலாமேயன்றி, அது உரிமைப் பிரச்சினைக்கு உரியதாகாது, என்பதை நான் மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் தலைவர் அவர்கள் 'பிரைமா பேசி' கேஸ் இருக்கிறது என்று சொல்வது, உரிமைப் பிரச்சினை என்ற தலைப்பின் கீழே பேசப்பட்ட செய்தி உண்மையா, அல்லவா என்ற அடிப்படையிலே உரிமை குழுவுக்கு அனுப்புவது அல்லது உரிமைப் பிரச்சினையாக கருதுவது என்பதை நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில், இருக்கிறேன். இந்தச் சட்டமன்றத்தில் பல தடவை பல குற்றச்சாட்டுக்கள் பேசப்பட்டிருக்கின்றன. பல உண்மையல்லாத குற்றச்சாட்டுக்கள் பேசப்பட்டிருக்கின்றன. பேசப்பட்ட பல குற்றச்சாட்டுகள் இட்டுக் கட்டப்பட்டு பேசப்பட்டிருக்கின்றன. தங்களுடைய கருத்தின் அடிப்படையில் அவை எல்லாம் உரிமைப் பிரச்னைக்கு உரியதாக ஆகிவிடும். எனவே தலைவர் அவர்கள் தங்களுடைய முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'பிரைமாபேசி' இருக்கிறது என்று தாங்கள் கருது வதனாலேயே சட்டமன்றத்தில் எதிர்கட்சிகளே தேவையில்லாத நிலை ஏற்படும். எனவே குற்றச்சாட்டு, தவறு அல்லவா என்பதைப் பற்றி ஆளுங்கட்சி கருத்து தெரிவிக்கலாம். அது வேறு. விசாரிக்கலாம் அது வேறு. இந்த அவையில் 1958, 1959 ஆம் ஆண்டிலே பேசப்பட்ட மிகப் பெரிய கடுமையான குற்றச்சாட்டுக்கள் கூட, உரிமைப் பிரச்சனைக்கு உரிய தாக ஆகவில்லை என்பதை நான் தங்களுக்கு நினைவூட்ட விரும்பு கிறேன். எனவே, தயவு செய்து உரிமைப் பிரச்சினைக்கு உரியதாக இது கருதக்கூடாது என்று நான் தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.30.)

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராலே வைக்கப்பெற்ற குற்றச்சாட்டு ஆதாரம் அற்ற குற்றச்சாட்டு என்பது திட்ட வட்டமான எனது தீர்மானமான வாதமாகும். அதை அவர், உண்மையான வாதம், உண்மையான புள்ளிவிவரம் என்று திரும்பவும் வலியுறுத்துவார்களானால், நிச்சயமாக இது உரிமை குழுவிற்கு போவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். நான் இது குறித்து எதிர்க்கட்சித் தலைவரின் கருத்தைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் இது பற்றி முதல் தடவையாக ஒரு உரிமைப் பிரச்சினை வந்தபோது என்னுடைய கருத்தை இந்த அவையில் தங்களுக்குத் தெரிவித்து இருக்கிறேன். நான் எடுத்துச் சொன்னவைகள் ஆதாரம் உள்ளவையா அல்லவா என்பது அடுத்த பிரச்னை. நான் அதை மீண்டும் விளக்கத் தயாராக இருக்கிறேன்.

ஆனால் இந்த அவையிலே உறுப்பினர்கள் சில தகவல்களைத் தருவதும், அந்தத் தகவல் சரி அல்ல என்ற விளக்கம் அளிக்க அமைச்சர்கள் கடமைப்பட்டவர்களாக இருப்பதும் நீண்டநெடுங் காலமாக கடைபிடிக்கப்பட்டு வரும் மரபு. இப்படி தவறான தகவல்கள் தந்து விட்டார்கள் என்பதற்காக அவர் மீது உரிமைப் பிரச்னை கொண்டுவரும் முறை ஏற்படுத்தப்படுமானால் யாரும் எந்தத் தகவலையும் அமைச்சர்களுக்கு அளித்து அது பற்றி விசாரணை நடத்துங்கள் என்று கோருவதற்கு எந்த சட்டமன்ற உறுப்பினர்களும் முன் வரமாட்டார்கள், அந்த வகையில் சட்ட மன்ற உறுப்பினர்களின் உரிமையைப் பறிக்கும் வகையிலும், அவர்களை அச்சுறுத்தும் வகையிலும், நீ இப்படி குற்றம்

(திரு. மு. கருணாநிதி) [1978 ஏப்ரல் 7

சாட்டினாயா, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தாயா, இதோ உன் மீது உரிமைப் பிரச்னை வரும், உரிமை மீறல் பிரச்னை வரும், உரிமைக்குழுவிற்கு அது அனுப்பப்படும் என்று. இது ஒரு பயமுறுத்தும் விவகாரமாக ஆகிவிடக்கூடாது. அதைத்தான் அன்றையதினம் சொன்னேன். இதைப் பற்றி தாங்கள் தீர யோசித்து முடிவு செய்யவேண்டும் என்று.

மீண்டும் அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கம் அளித்த பிறகு, நான் ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை, என்னிடத்திலே கொடுத்த, கிடைத்த ஆதாரங்கள் அவை, ஊராட்சி ஒன்றியம், பண்ருட்டி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தந்த புள்ளிவிவரங்கள் அவைகள் என்று. அமைச்சர் அவர்களும் அதிலே டிட்டோ இல்லை டாட்ஸ்தான் என்று, புள்ளிதான் வைக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். யாரிடத்தில் அளிக்கப்பட்டது என்று குறிப்பிடாவிட்டாலும், ஏர்த் ஒர்க் ஈஸ் இன் பிராக்ரஸ் என்று போடப்பட்டு இருக்கிறது. ஏர்த் ஒர்க் இஸ் இன் புராக்ரஸ் என்று போடப்பட்டு இருப்பதால், எந்த ஆளிடமும் விடாமல் அது எப்படி பிராக்ரஸ் ஆகும் என்பது கேள்விக்குரிய பிரச்னையாகும். அன்று பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பொது விசாரணைக்குத் தயாராக இருக்கிறோம் என்பதை அன்றே சொன்னார்கள். ஆகவே, இதை உரிமை குழுவிற்கு அனுப்புவதைவிட இதிலே ஒரு பொது விசாரணை தேவை. பலபேருக்கு வேண்டியவர்களுக்குத்தான், பல சொந்தக்காரர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டுஇருக்கிறது என்கிற வாதத்தில் இருந்து திரும்பப்பெற நான் தயாராக இல்லை. ஒரு பொது விசாரணை வைத்தால் உண்மைகள் விளங்கும்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது ஒரு உண்மையைச் சொன்னார்கள். உறுப்பினர்களுக்குத் தகவல் கிடைக்கும். அந்தத் தகவல்களின் அடிப்படையில் உறுப்பினர்கள் அவையில் பேசலாம். அந்த தகவல்கள் தவறாகவும் இருக்கலாம். சரியாகவும் இருக்கலாம். ஆனால் அந்தத் தகவல்களை அவையில் வைப்பதற்கு முன்பு தகவல்கள் சரியானவைதானா என்று தெரிந்து கொள்வது உறுப்பினர்களின் கடமை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறுக்க மாட்டார்கள், மறைக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். தகவல்கள் தவறானவை என்று தெளிவாக இரண்டு அமைச்சர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் தகவல்கள் தவறானவை என்று தெரிந்து இங்கே கொண்டு வந்தால் அது உரிமை மீறல் பிரச்னையாகும்.

[1978 ஏப்ரல் 7] [திரு. கி. மனோகரன்]

ஆக, யாரையும் அச்சுறுத்துவதற்கு இந்த அவையோ, பேரவைத் தலைவரோ இல்லை என்பதை நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, தகவல்கள் அவருக்குக் கொடுத்தது தவறானவை என்று அவர் கருதுவாரானால் எனக்குக் கிடைத்த தகவலைச் சொன்னேன், சொல்கிற கடமை என்னுடையது என்று சொல்லி அந்தத் தகவல்கள் அதற்குப் பிறகு தவறானது என்று தெரிந்த பிறகு நான் அதை வலியுறுத்த வில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்வார்களானால் பிரச்னை முடிந்து போகிறது என்று நான் கருதுகிறேன். இதை மேலும் நீடித்துச்செல்லவேண்டிய அவசியம் இல்லை.

இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான சூழ்நிலை அவைக்கு ஏற்பட்டு இருக்கக்கூடாது. ஏனெனில் இந்தப் பிரச்னையில் ஈடுபட்டு இருப்பவர்கள் ஒருவர் அமைச்சராகவும், இன்னொருவர் கடந்த காலத்தில் முதலமைச்சராக இருந்தவராகவும் இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலை உருவாகாமல் தடுப்பதற்கு தகவல்கள் தவறானவை என்று தெரிந்தால் எனக்குக் கிடைத்தது சொன்னேன், இப்போது நான் தவறு என்று தெரிந்து இருக்கிறேன். ஆகவே, விட்டு விடலாம் என்று பெருந்தன்மையோடு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பாரானால் இந்தப் பிரச்னை அதோடு முடிந்து போகும் என்பதை நான் இந்த அவையில் தெரிவிக்க விரும்புகிறேன். கடைசியாக அவர் என்ன கருதுகிறார் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

<u>*திரு. மு. கருணாநிதி</u>: அன்றைக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் திட்டவட்டமாகச் சொன்னார். முதல் அறிக்கை யூனியன் - ஒன்றியத்தினுடைய கூட்டத்திலே வெளியிடப்பட்ட அறிக்கை. அதிலே சில புள்ளிவிவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அடுத்த அறிக்கை வைக்கப்படாததால் முழு விவரங்களையும் எதிர்க்கட்சித் தலைவர் அறிந்துகொள்ள இயலவில்லை. அடுத்த அறிக்கை வைக்கப்படாததும் அடுத்தக் கூட்டம் கூட்டப்படாததும் தான் இந்த நிலைமைக்கு காரணம் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் குறிப்பிடுவது, அந்த முதல் அறிக்கை வைக்கப்பட்ட கூட்டத்திற்கும் அறிக்கை வைக்கப்படும் என்று எதிர்பார்த்த அடுத்த கூட்டத்திற்கும் - கூட்டமே நடைபெறவில்லை - இடையிலே ஏற்பட்ட இந்த இடைவெளியில் சில தவறுகள் நடந்திருக்கின்றன. எனவே இது விசாரணைக்கு உட்பட்டது என்று கூறினார்கள். இன்றைக்கும் நான் அதையே வலியுறுத்துகிறேன். அன்றைக்கு நிதி அமைச்சரவர்கள் அவையில் இல்லை, அதனால் நினைவுபடுத்துகிறேன்.

போலீஸ் லாக்கப்பிலே ஒருவர் இறந்துவிட்டால், எதிர்க்கட்சியின் சார்பில் ஒத்திவைப்பு தீர்மானம் கொடுப்போம். அது சம்பந்தப்பட்டக் கருத்துக்களைச் சொல்வோம், அடித்துக்கொல்லப்பட்டார் என்று சொல்வோம். உடனே அமைச்சரவர்கள் விளக்கம் அளிக்கும்போது அப்படி அல்ல ; தூக்கு மாட்டிக் கொண்டு இறந்தார் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது என்று சொல்லுவார்கள், இதை உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இங்கே பல நாள் நடைபெற்ற விவாத வரிசையில் அப்படித்தான் இருந்துகொண்டிருக்கிறது. உடனடியாக நீ சரியான தகவல் தரவில்லை: சரியான தகவல் இல்லாமல் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறாய்; இது உரிமை மீறிய பிரச்சனை என்று வந்ததாக இந்த அவையின் மரபில் கிடையாது. நான் மறுபடியும் சொல்கிறேன். பொதுப்பணித் துறை அமைச்சர் ஏற்றுக்கொண்டதைப் போல பொது விசாரணை வையுங்கள். பொது விசாரணைக்கு ஏற்பாடு செய்தால் பல உண்மைகள் வெளிவரும் என்ற அந்த கருத்தில் நான் அழுத்தம் திருத்தமாக இருக்கிறேன். அதேநேரத்தில் அமைச்சர்மேல் வந்த உரிமைப் பிரச்சனையில் அளித்த அந்த தீர்ப்பையும் இன்றைக்கு அறிவித்திருக்கிற தீர்ப்பையும் ஒருமுறை ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் நாள் எதிர்க் கட்சித் தலைவர் ஒரு குற்றச்சாட்டை ஆளும்கட்சி மீது சொன்னார். அமைச்சர் அதற்கு அப்போதே மறுப்பு தெரிவித்தார்; மறுநாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அறிக்கை சமர்ப்பித்தார். முதலில் ஒருமுறை எழுப்பப்படுகின்ற குற்றச்சாட்டை அதோடு விட்டிருந்தால் அது முற்றுப்புள்ளி பெற்றதாகும். மறுபடியும் 81-வது விதியின்கீழ் வலியுறுத்தி எடுத்துச் சொன்னார். இரு தரப்பிலும் விவாதம் நடைபெற்று, உறுப்பினர் எழுந்து ஒரு குற்றச்சாட்டைச் சொல்வது சகஜம். அதைப்பற்றி சில கருத்துக்கள் பரிமாறிக் கொண்ட பின்னால் விட்டுவிடுவது மரபாகும். ஆனால் மறுநாள் எதிர்க் கட்சித் தலைவர் மீண்டும் சொல்லி, அமைச்சர் பதில் தந்து, பிறகு எதிர்க் கட்சித் தலைவர் 81-வது விதியின்கீழ் வலியுறுத்தி சொல்லுகின்ற நிலைமை ஏற்பட்டதால் நான் அதிலே ஊடுருவ வேண்டி வந்தது. ஆராய்ந்து பார்த்ததில் எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டது ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு என்று தெரிய வந்ததால் அது உரிமை மீறியசெயல், ஆகவே, உரிமை மீறல் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறேன்.

இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உதாரணத்திற்காக ஒன்றைச் சொன்னார்கள். போலீஸ் லாக்கப்பிலே ஒருவர் இறந்துவிட்டால் அதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவருவதும்

குற்றச்சாட்டுச் சொல்வதும், அமைச்சர் பதில் சொல்வதும் அதோடு அதை விட்டுவிடுவதும் சகஜம். ஆனால் மறுபடியும் சில விவரம் இருக்கிறது என்று வற்புறுத்திச் சொல்லும்போது அதற்கு ஒரு தீர்ப்பு தர வேண்டியிருக்கிறது. தீர ஆராய்ந்து பார்த்து, இவர் சொல்வதற்கு ஆதாரம் இல்லை; ஆகவே இது அவையின் உரிமையை மீறிய செயலாக இருப்பதாகத் தீர்ப்புச் சொல்ல வேண்டி வரும், அந் தவகையில் தான் இப்போது என்னுடைய தீர்ப்பைச் சொல்லியிருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : அன்றைக்கு அமைச்சர்மீது குற்றச்சாட்டு வரும்போது அளித்த தீர்ப்பையும் இப்போது அளித்த தீர்ப்பையும் மீண்டும் ஒருமுறை ஒப்புநோக்கி தங்கள் தீர்ப்பை தெரிவிப்பது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்ன தீர்ப்பில் களங்கம் கற்பிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள்; நல்ல அனுபவம் பெற்றவர்கள். அவைத் தலைவர் தீர்ப்புக்கு களங்கம் கற்பிக்கக் கூடாது. நான் அன்றைக்கு அளித்த தீர்ப்பு தவறு, இது நியாயம் என்கிறீர்களா அல்லது இன்றைக்கு அளித்த தீர்ப்பு தவறு, அன்றைக்கு அளித்த தீர்ப்பு நியாயம் என்கிறீர்களா ? எது சரி என்பதை நீங்களே தெரிவித்து விடுங்கள்.

(முற்பகல் 10.40)

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மறுபடியும் ஒரு சிறு விளக்கம். அமைச்சர்மீது குற்றச்சாட்டு சொல்லியிருந்து அந்தக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டிருந்தால் அதற்கு அமைச்சர் தருகின்ற அந்த மறுப்பை ஏற்றுக் கொள்ளாமல் மீண்டும் அமைச்சர் மீது சொல்லப்பட்டு இருந்தால் அது உரிமை மீறிய பிரச்சினை. ஆனால் இலாக்காவிலே நடைபெற்ற எத்தனையோ குற்றச்சாட்டுகளைப்பற்றி இங்கே பேசப்படுவது உறுப்பினர்களின் முதல் உரிமை. அதைப் பேசியதே பிரைமாஃபேசி என்று கருதப்படக்கூடாது. அப்படிப் பதில் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்குமானால் அதன் மீது மேலும் விசாரணை நடத்தலாமே தவிர, அப்படி கேட்பது உரிமை மீறல் அடிப்படை உள்ளது, பிரைமாஃபேசி என்று கொள்ளக் கூடாது. உரிமை மீறல் பிரச்சினையாகக் கொள்ளக் கூடாது. இலாக்காவிலே நடந்ததைப் பற்றிய விவர அறிக்கைகளைப்பற்றி இங்கே பேசப்பட்டன. எனவே, இது விவாதத்திற்குரியதாகவோ அல்லது விசாரணைக்குரியதாகவோ இருக்குமே தவிர உரிமை மீறல் பிரச்சினையாக கருத இடமில்லை. ஆகவே இதில் பிரைமாஃபேசி உள்ளது என்ற தங்களது அந்தக் கருத்தைத்தான் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[1978 ஏப்ரல் 7

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, இந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டில் பொதுவாக கிடைக்கக்கூடிய பல தகவல்களையோ அல்லது ஏதோ ஒருசில ஆதாரங்கள் இருப்பதையோ வைத்துக் கொண்டு பேசுவது என்பது தொடர்ந்து இருந்துவருகின்ற வழக்கம்தான். அப்படித் தவறு களை எடுத்துக்காட்டுகின்ற நேரத்தில் மறுப்பு அளிப்பதற்கு அரசுக்கு வாய்ப்பிருக்கின்றது, ஆகவே இந்த மாதிரி பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இல்லை என்று ஆகி விட்டது, நீங்கள் பேசிக் கொண்டே போனுல்........

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அந்த மாதிரி வற்புறுத்துகின்ற நேரத்தில் ஆதாரத்தை அளிக்க வேண்டும் என்று தீர்ப்புகளை அளித்திருக்கிறீர்கள். இந்தப் பிரச்சனைகளைக் கொண்டு வரும்போது இதற்குரிய பொறுப்பினை அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்கிருர்களா என்று கேட்டிருக்கிறீர்கள், ஆகவே, இதனைப் பரிசீலனை செய்ய வேண்டுமே தவிர, இதனை உரிமை மீறல் குழு வுக்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. மு. கருணுநிதி: தலைவரவர்களே, நான் முதல் நாள் பேசியதையும் மறுநாள் தன்னிலை விளக்கம் என்ற முறையிலே பேசியதையும் மீண்டும் ஒரு முறை அவை முன்னவர் அவர்கள் படித்துப் பார்க்கவேண்டும் என்று கருதுகிறேன். அதிலே எந்த இடத்திலும் அந்தத் தவறை அமைச்சர் செய்தார் என்ரே அல்லது அமைச்சரவை செய்தது என்ரே நான் பேசவில்லை. இலாக்காவிலே தவறு நடந்திருக்கிறது என்றுதான் நான் குறிப்பிட் டிருக்கிறேன். அதைத்தொடர்ந்து கமிஷனர் தந்த அறிக்கையை நான் படித்துக் காட்டினேன். ஆக, இலாக்கா செய்த தவறை தொடர்புடைய அமைச்சரும், முதலமைச்சரும் ஆராய்ந்து விசாரித்து திருத்த வேண்டும், அவர்கள் திருந்திக்கொள்ளுமாறு செய்யவேண்டும் என்று இந்த வார்த்தையைத்தான் நான் திட்ட வட்டமாகப் பேசி இருக்கிறேன். முதலமைச்சரவர்கள் விசாரித்து திருத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்வது அவையின் உரிமை மீறல் செயல் என்று ஆகிவிட்டால் முதலமைச்சரவர்களிடமோ அல்லது மற்ற அமைச்சர்களிடமோ நாங்கள் எந்த வேண்டு கோளையும் வைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பேராசிரியருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினம் இந்த அதிகாரி மீது விசாரித்து எடுத்த விவர அறிக்கையினை இந்த அவையிலே வைக்க வேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறேன்.

1978 ஏப்ரல் 7]

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நேற்றையதினம் நீங்கள் விசாரித்து அவையிலே வைக்கவேண்டும் என்று சொன்னீர்கள். இன்றையதினம் இதனை உரிமை மீறல் பிரச்சினை குழுவுக்கு அனுப்பவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஏதோ சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதைக் கொடுத்து விட்ட காரணத்தால் உரிமை மீறல் குழுவுக்கு உரிய பிரச்சினை என்று கூறுகிறீர்கள். நேற்று அமைச்சரவர்கள் அறிக்கையைப் பற்றி தெரிவிக்கும்போது ஒரு முடிவைக் கொடுத்திருக்கிறீர்கள். அது அமைச்சரால் விசாரிக்கப்படும் என்று கூறி இருக்கிறீர்கள். ஆனுல் இன்று எதிர்க் கட்சித் தலைவர் மீதுக் கொண்டு வந்த காரணத் தால் இதனை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று கூறுகிறீர்கள். இது முரண்பட்ட முடிவாக இருக்கிறதே என்பதைத் தான் நான் தங்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச, இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர் களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குற்றச்சாட்டுகளைக் சொல்லி அதற்கு ஆதாரமாக ஊராட்சி ஒன்றிய ஆணையர் தந்த விவரங்களை சொன்னுர்கள். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தந்த விவரங் களில் அவர் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கவில்லை. அதுதான் ஏற்பட் டிருக்கின்ற பிரச்சினை. ஆகவே ஊராட்சி ஒன்றிய ஆணையர் தந்த அந்த விவரங்களைப் படித்திருந்தால் கூட குற்றச்சாட்டு எழுந்திருக்க முடியாது.

அதிலே உள்ள விவரங்கள்படி ரூ. 50,000-க்கு மேல் பல லட்சக்கணக்கில் யாருக்கும் வேலை தரப்படவில்லை. ஆனுல் அது ஒருவேளை படிக்கிறபோதோ அல்லது எடுத்துச் சொல்கிறபோதோ அது மாறியிருக்கலாம். இப்போது எழுப்புகிறபோது, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் குற்றச்சாட்டுக்களையே சொல்லக்கூடாதா என்று சொன்னுர்கள். குற்றச்சாட்டுகள் சொல்லலாம். அதற்கு ஆதாரம் இருக்கிறது என்று சொல்கிறபோது அந்த ஆதாரத்தை அப்படியே சபையில் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்தக் குற்றச் சாட்டை சபை எடுத்துக்கொண்டு அதுபற்றி சர்க்காரோ அல்லது மற்றத் துறையினரோ அதுபற்றி விசாரிக்க ஏதுவாகும்.

இங்கு ஏற்பட்டுவிட்ட பிரச்சினை, அவரே எடுத்துவைத்த ஆதாரம் அவர் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கிற அளவிற்கு இல்லை. சரி. வேண்டுமென்றே சொன்னுர் என்ருல் அது உரிமை மீறல் பிரச்சினையாகும். வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு, திட்ட மிட்டு சொன்னுர் என்ருல்தான் அத்தகைய பிரச்சினை எழும். ஆனுல் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, நான் எந்த குறிப்பிட்ட அமைச்சர்மீதோ அல்லது சொல்லப்போனுல்

அமைச்சரவை மீதோ அதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, அதைப் பற்றி விசாரிக்கவேண்டும் என்ற கருத்துப்படத்தான்—30-ம் தேதியிலிருந்து அந்த நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்தால்—நான் பேசியிருக்கிறேன் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நோக்கம், நிச்சயமாக வேண்டுமென்றே குற்றஞ்சாட்ட வேண்டும் என்ற நோக்கம் இல்லை என்றுதான் என்னைப் பொறுத்தவரையில் உணருகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடைபெற்றபோது நான் அவையில் இல்லை. ஆனால் என்ன நடந்தது என்பதைப்பற்றி இப்போது நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெளிவாக்கி யிருக்கிறார்கள். அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களைக் களங்கப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் பேசவில்லை (குறுக்கீடு)—பெயரைச் சொல்லவில்லை, கொஞ்சம் அமைதியாக இருங்கள், ஸார்— மாறாக இலாகாக்களில் தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. அவர்கள் செய்கிற தவறுகள் ஒருவேளை அமைச்சரவையைப் பாதித்துவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தில், முதல் அமைச்சர் அவர்களும் அதேநேரத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும்—ஏனென்றால் பொதுப்பணித் துறை அமைச்சரின் இலாகாவையொட்டியது—சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது விசாரணை நடத்தி அதில் உண்மையைக் கண்டுபிடித்து ஆவன செய்யவேண்டுமென்ற நல்லநோக்கத்தில் அவர்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

அந்த நல்லநோக்கத்தோடு நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருத்தைத் தெரிவித்ததற்குப் பிறகு அந்தப் பேச்சின் வெளிச்சத்தில் உண்மையைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு பொது விசாரணை நடத்தவேண்டுமென்று அவர் கேட்டு கொண்டதை ஏற்று தாங்கள் ஏற்கனவே அளித்த தீர்ப்பை மறுபரிசீலனை செய்யமுடியுமா என்பதுபற்றி கொஞ்சம் நேரத்தை எடுத்துக்கொண்டு இந்த அவைக்கு அறிவிப்பீர்களானால் அது ஒரு நல்ல சூழ்நிலைக்கு வழி வகைசெய்யும் என்று நான் நம்புகிறேன். தீர்ப்பு உங்கள் கையில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையிலே....

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மன்னிக்க வேண்டும். குற்றச்சாட்டு இல்லை என்றதற்குப் பிறகு பொது விசாரணை தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையே ஏகமனதாக இந்த அறிவுரையைத் தந்திருக்கிற காரணத்தினால் இதை இப்படியே இத்துடன் விட்டுவிடுகிறேன். தள்ளிவிடுகிறேன்.

(4) ஒழுங்குப் பிரச்சனை.

விசாரணைக் கமிஷன் முன்னுள்ள பொருள் பற்றி முதல்வர் தெரிவித்துள்ள கருத்துகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் 22—3—78 அன்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையை (பாயின்ட் ஆப் ஆர்டர்) எழுப்ப எழுத்து மூலம் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அதனுடைய மையக் கருத்து போலீஸ் மானியம் குறித்து அவையில் வைக்கப்பட்ட விளக்கக் குறிப்பில் சைதாப்பேட்டையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டின் மீதான விசாரணைக் கமிஷனின் ஆய்வில் இருக்கும் பொருள்பற்றி அந்த விளக்கக் குறிப்பில் முதல் அமைச்சர் அவர்கள் பக்கம் 9-ல் பத்தி (இ)-ல் குறிப்பிட்டுள்ளது சரியா என்பதாகும். அதில் 'துப்பாக்கிச் சூடு' என்ற தலைப்பின்கீழ் சில விவரங்களைக் குறிப்பிட்டுள்ளார்கள். ஒன்று சென்னை மாநகரைப் பற்றியதாகும். அதில் (இ) (1) என்ற பத்தியில் துப்பாக்கிச் சூட்டிற்கான காரணங்களைத் தெரிவித்து விட்டு "... காவல் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று, இதில் இருவர் இறந்தனர். இருவர் காயமுற்றனர், காவல் படையினரில் அறுபத்தைந்து பேர் காயமுற்றனர்' என்றும் 'விசாரணைக் கமிஷன் ஒன்றை அரசு நியமித்துள்ளது; அதன் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது அந்த விசாரணைக் கமிஷனின் நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவிக்கும் என்று உறுப்பினர் கூறியுள்ளார்.

(முற்பகல் 10–50)

நீதிமன்றத்தில் உள்ள ஒரு பொருள் பற்றி அதற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் எந்தவிதமான பேச்சோ, நடவடிக்கையோ அல்லது அவையின் முன் வைக்கப்படும் ஆவணங்களோ அமையக் கூடாது என்பது விதிமுறைகள் ஆகும்.

இப்பிரச்னையில் மேலும் சில விளக்கங்களைக் கேட்டு, அவைகளையும் உறுப்பினர் அவர்கள் அவையில் கூறியுள்ளார்கள்.

'Sub judice' என்பது நீதிமன்றங்களில் எழுப்பப்பட்ட பிரச்னைகளைப் பற்றி, அவைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் பேரவையில் பேச்சுக்களோ, கேள்விகளோ, வேறுவித அறிவிப்புக்களோ இருக்கக்கூடாது என்பது அவை விதிமுறைகளாகும். தற்போது எழுப்பப்பட்டுள்ளது. 'Enquiry Commission'-ன்கீழ் நீதி விசாரணைக்கு அனுப்பப்பட்ட பொருள் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் அவையின் முன் வைக்கப்பட்ட விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார் என்பதாகும்.

அவையில் பேச்சுரிமை அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அது உறுப்பினர்கள் ஆனாலும் சரி, ஆளும் கட்சியில் இருக்கும் அமைச்சர்கள் ஆனாலும் சரி, எல்லோருக்கும் ஒரே வகையான உரிமைதான்

உள்ளது. அவர்கள் அவையில் பேசும் பேச்சுக்களோ அல்லது கொடுக்கும் அறிவிப்புக்களோ எதுவாயினும். .அவை குறித்து வெளியில் எவ்விதத்திலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது. இது அவையின் அடிப்படை உரிமையாகும். நீதித்துறை அரசியல் அமைப்புச் சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு செவ்வனே இயங்குவதற்காக இப்பேரவை சில கட்டுப்பாடுகளை தனக்குத் தானே விதித்துக்கொண்டுள்ளது.

எனவே தான் இம்மாதிரியான விசாரணைக் கமிஷன்களில் முன் இருக்கும் பொருள்பற்றி ஒரு கருத்துப்பட, விசாரணைக் கமிஷனின் நடவடிக்கைகளுக்கு பாதகம் ஏற்படும்படியாக அவையின் செயல் முறை இருத்தல் கூடாது என்று விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. நான் முன்னர் கூறியவாறு இவ்வகையில் நீதிமன்றங்கள் இதுகுறித்து தனக்குத் தானே வகுத்துக்கொண்ட விதிமுறைகள் ஆகும் (Self-restrant). ஆனால் அதே முறையில், ''Enquiry Commission'' முன் விசாரணையில உள்ள ஒரு பொருள் பற்றி இங்கு எவ்விதத்திலும் எழுப்பக்கூடாது என்று கூறுவதற்கு இல்லை. நீதி விசாரணைக் கமிஷனில் எந்தப் பொருள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது என்றோ அல்லது அந்த விசாரணையின் நடைமுறை பற்றியோ எழுப்பலாம். ஆனால் நடைபெறும் விசாரணைக்கு மாசு கற்பிக்கும் வகையிலோ, அல்லது வேறுவகையிலோ விசாரணைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் எந்த நடவடிக்கையும் அமையக்கூடாது. இது அவை தனக்குத் தானே விதித்துக்கொண்டுள்ள விதிமுறையாகும்.

ஆனால் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அவையில் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பில் நீதி விசாரணைக்கு அனுப்பப் பட்டுள்ள பொருளின் மீதான விசாரணைக்கு எந்தவிதமான குந்தகமும் விளையும்படி குறிப்புகள் அமையவில்லை.

மேலும் முந்தைய ஆண்டுகளில் கூட போலீஸ் மானியத்தைப் பற்றி அவையில் வைக்கப்பட்ட விளக்கக்குறிப்புகளில், கிரிமினல் வழக்குகள் பற்றி இன்னின்ன வழக்குகள் என்று அவைகளின் பொருளைப் பற்றி கூறி (facts) அவை நீதி மன்றங்களில் உள்ளன என்றும் கூறப்பட்டுள்ளன.

மேலும் மாண்புமிகு எதிர்க்கட்சித்த தலைவர் கூட, இந்த அவையில் நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தின் மீது பேசுகையில் லசதாப்பேட்டையில் நடந்த ச்ம்பவம் பற்றி வெகு விவரமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் அவர்கள் இது பற்றி கூறியுள்ளது.

....நீதி விசாரணைக் கமிஷனிலும் இவைகள் எல்லாம் சொல்லப் படக்கூடிய வெளிப்படையான விஷயம்தான். நீதிமன்றத்தில் இருக்கிற விஷயமாக இருப்பதால், சப்-ஜூடிஸ் என்பதால் அதில் நுழைவது தவறாக இருக்கலாம். நான் பொதுப்படையான விஷயங்களைச் சொல்லுகிறேன். நிலைமையைச் சொல்லுகிறேன்.'' என்றும் கூறியுள்ளார்கள்.

எனவே, முதல் அமைச்சர் அவர்கள் போலீஸ் மானியத்தின் மீது அவையில் வைத்த விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் கூறியது போல் எந்தவிதமான ஒழுங்குமுறையும் மீறியது. ஆகாது என்ற எனது தீர்ப்பைக் கூறுகிறேன்.

<u>திரு. க. சுப்பு:</u> பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷன் என்பது, அரசாங்கத்திற்கு உதவி செய்வதற்காக, நடவடிக்கை எடுப்பதற்காக விரிவான அறிக்கை தரவேண்டும் என்ற நோக்கத்துடன் தான் விசாரணைக் கமிஷன் அமைக்கப் படுகிறது. அப்படியிருக்கும்போது, விசாரணைக் கமிஷன் அறிக்கை வரும் வரை அரசாங்கம் காத்திருக்க வேண்டும் என்பதுதான் பொருள். இதற்கு இடையில் அரசாங்கம் வேறு எந்த முடிவை தெரிவித்தாலும் அது கமிஷனின் நடவடிக்கையை பாதிக்கும். கமிஷன் என்பதே தேவையற்றதாகிவிடும். ஆகவே தான் இந்த விஷயம் ஒழுங்குப் பிரச்சினையாக வருகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> எதிர்கட்சித் தலைவர் பேசி யிருப்பதையும், முதலமைச்சர் பேசியிருப்பதையும் இதில் சொல்லி யிருக்கிறேன். இதைப் பொறுத்தவரையில் ஒழுங்கு முறை மீறியதாக இல்லை என்று தெரிவித்து இருக்கிறேன். அது தான் என்னுடைய கருத்து.

<u>(5) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.</u>

<u>(அ) சென்னை தியாகராய நகர் பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்தினால் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> சென்னை தியாகராயநகர் பகுதியில் 4—3—78 அன்று ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 4 பேர் கருகி மாண்டது சம்பந்தமாக எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானம் கொடுத்துள்ளனர் :—

1. திரு. மு. அம்பிகாபதி
2. திரு. கோ. இளங்கோவன்
3. திரு. ஜே. ஜேம்ஸ்
4. திரு. ஓ. சுப்பிரமணியம்
5. திரு. எஸ். அழகர்சாமி
6. திரு. எஸ். சிவசாமி
7. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
8. திரு. எம். எ. லத்தீப்
9. திரு. கே. கந்தசாமி
10. திரு. ஆர். மார்க்கபந்து.

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. மு. அம்பிகாபதி இருக்கையில் இல்லை. அடுத்து திரு. சிவசாமி.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வெடி விபத்து துரதிருஷ்டமானது. நான்கு உயிர்களை அது எடுத்திருக்கிறது. இந்த மாதிரியான ஆபத்துக்கள் வரக்கூடாது என்பதற்காகத்தான் அரசாங்கம் இதற்கான லைசன்ஸ் கொடுக்கின்ற காலத்தில் இன்னின்ன இடத்தில்தான் வெடி மருந்துகள் உற்பத்தி செய்யவேண்டும் என்று சட்டதிட்டங்கள் எல்லாம் வகுத்திருக்கிறது. இதற்கு மாறாக சென்னையின் மத்தியில் இருக்கக்கூடிய முக்கியமான இடத்தில், கார்ப்பரேஷன் டவுனில் திருட்டுத்தனமாக லைசன்ஸ் பெற்றுக்கொண்டு வேறு ஓரிடத்தில் போய் இப்படி வெடி மருந்துகளை உற்பத்தி செய்திருக்கிறார்கள். இது எப்படி நடந்தது? ஏன்நடந்தது என்பதையெல்லாம் பார்த்தால், இது பல வருடங்களாக அங்கு நடந்து கொண்டிருப்பதும், இதில் பல பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது. இதையெல்லாம் அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையில் விவாதிக்க வேண்டிய பொருள்கள் நிறைய இருப்பதால், நேரம் இல்லாத காரணத்தால், ஒருவர் சொன்னதையே அனைவரும் சொன்னதாக ஏற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தியாகராய நகரிலுள்ள கிரிபித் சாலையில் உள்ள முப்பாத்தம்மன் கோயிலில் தர்மகர்த்தாவாக திரு. கன்னியப்ப நாயக்கர் எனபவா உள்ளார். இவருடைய வீடும், கோவிலும் ஒரே காம்பவுண்டில் உள்ளது. கோவளத்திற்கு அருகில் உள்ள செமமஞ்சேரியில் வாணங்கள் மற்றும் வெடிகள் தயாரிப்பதற்கு இவருக்கு உரிமம் கொடுக்கப்பட்டுள்ளது. இவர் நகரிலும், நகரைச் சுற்றி நடக்கும் கோவில் உற்சவங்களுக்கும், மற்ற விசேஷங்களுக்கும் வாணங்கள், வெடிகள் கொண்டு தருவார். இவருக்கு வாணங்கள், வெடிகள் தயாரிக்க உரிமம் செம்மஞ்சேரியில் இருந்தபோதிலும், இவர் கோவில்களுக்கும் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கும் விநியோகம் செய்ய கிரிபித் சாலையில் உள்ள தன்னுடைய வீட்டிற்குக்கொண்டு வந்து வைத்திருப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. கிரிபித் சாலையிலுள்ள இவரது வீட்டில் வாணங்கள், வெடிகள் வைத்திருக்க உரிமம் இவருக்கு இல்லை. வாணங்கள், வெடிகள் செய்வதற்குத் தேவையான குழாய்கள் போன்றவற்றை இவருடைய வீட்டில் தயாரிப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இவருடைய வீட்டை ஒட்டி ஒரு கொட்டகையும் உள்ளது.

3-4-78 அன்று காலை சுமார் 9.15 மணி அளவில் மேற்படி இடத்தில் பெரிய வெடி விபத்து ஏற்பட்டு, புகை கிளம்பியது. ஓலை வேய்ந்த கொட்டகைக்குள் மற்றவர்கள் செல்வதற்கும் அங்கிருந்த பாலன் (18 வயது), ரங்கநாதன் (25 வயது), நசீர் அஹமது (30 வயது), அப்துல் ரஹ்மான் (29 வயது) ஆகிய நால்வரும் தீயில் கருகி இறந்து விட்டனர். தீ விபத்து பற்றிய தகவல் கிடைத்ததும் 7 தீயணைப்பு வண்டிகளும், 2 ஆம்புலன்ஸ் வண்டிகளும் விரைந்து சென்று பொதுமக்கள் உதவியுடன் தீயை அணைத்தனர். தீயை அணைப்பதற்கு 1 மணி நேரம் பிடித்தது.

திரு. கன்னியப்ப நாயக்கர் விபத்தில் இடது காலில் காயமடைந்ததின் காரணமாக ராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் சேர்ந்துள்ளார். இவர் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவர் மீது இ. பி. கோ. 304 (எ) பிரிவின் கீழும். 5 (3) (பி) வெடிமருந்து சட்டத்தின் கீழும் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி புலனறிய ஒரு துணை ஆய்வாளர் கொண்ட விசேஷ குழு அமைக்கப் பட்டுள்ளது. காவல்துறை ஆணையாளரும், துணை ஆணையாளரும் சம்பவம் நட ந்த இடத்தினைப் பார்வையிட்டுள்ளனர்.

இச்சம்பவம்பற்றி தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இச்சம்பவம் குறித்து விவாதிக்கப் பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லையென தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(ஆ) திருப்பூரில் நடந்த கலவரத்தால் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: 4-4-1978 அன்று திருப்பூரில் நடந்துள்ள கலவரம் காரணமாக எழுந்துள்ள கொந்தளிப்பான நிலைபற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்:

1. திரு. சோ. அழகர்சாமி,

2. திரு. மு. அம்பிகாபதி,

[பேரவைத் துணைத் தலைவர்] [1978 ஏப்ரல் 7

3. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா,
4. திரு. ஏ. ஆர். மாரிமுத்து,
5. திரு. துரை முருகன்,
6. திரு. துரை முத்துசாமி,
7. திரு. நா. சுந்தரராஜ்,
8. திரு. ஜே. ஜேம்ஸ்,
9. திரு. கே. கந்தசாமி.

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், நேரமில்லாத காரணத்தால், யாராவது ஒருவர் மட்டும் பேசினால், அதைப் பற்றிப் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இது எல்லாக் கட்சிகளுக்கும் சம்பந்தப்பட்ட பிரச்னை. எனவே, ஒவ்வொரு கட்சியிலும் ஒருவராவது பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோரும் பேசவேண்டுமென்றால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. இல்லாமையால், பின்னால், டிஸ்கஷனிலே நேரம் குறையும். ஒருவர் சொன்னதையேதான் திருப்பிச் சொல்லப் போகிறார்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: அந்த சப்ஜக்ட் வேறு; இந்த சப்ஜக்ட் வேறு. இது பொதுவான சப்ஜக்ட்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோரும் பேசவேண்டுமென்றால், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எல்லோரும் பேசினால், பின்னாலே டிஸ்கஷனிலே நேரம் குறையும்.

(முற்பகல் 11-00)

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 4-4-1978 ஆம் தேதி இரவு 10 மணி அளவில் அங்கு தொழிற்சங்கச் சிக்கல் ஏற்பட்டதன் காரணமாக ஏற் பட்ட தகராறு காரணமாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொகுதி அமைப்பாளர் சுப்பிரமணியம், விசைத்தறிபழனியப்பன், மாரிமுத்து, விஜயன், ஹரி, தாமோதரன், பால்துரை பாண்டியன், முருகசாமி, பன்னீர்செல்வம் தலைமையில் இரவு 10 மணிக்கு கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்தையும், வன்னியர் சங்கத் தொழிற்சங்க அலுவலகத்தையும் தாக்கி, இரவு 11½ மணிக்கு டிப் டாப் முத்துவுக்குச் சொந்தமான ஓட்டலையும் தாக்கி

1978 ஏப்ரல் 7] [திரு. சோ. அழகர்சாமி]

ஐயாயிரம் ரூபாய்க்கும் அதிகமான அளவு பெரிய சேதத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. இந்தச் சம்பவம் நடப்பதற்கு முன்னால், இரவு தாக்குதல் நடத்தத் திட்டமிட்டப் பட்டிருக்கிறது. இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று டி. எஸ். பி.க்கு ஃபோன் மூலம் தகவல் சொல்லியும் போலீஸ் கடைசிவரை அனுப்பப்படவில்லை.

போலீஸ் அனுப்பப்பட்டு போலீஸ் வந்த பின்னரும்கூட அவர்களுக்கு முன்னாலேயே இந்த ஓட்டலும், கட்சியின் அலுவலகமும் தாக்கப்பட்டிருக்கிறது. தாக்கப்பட்ட சம்பவத்தைப் பற்றி அங்குள்ள போலீஸ் அதிகாரிகளிடத்தில் புகார் செய்தும், தாக்கியவர்களைக் கைது செய்யாமல் தாக்கப்பட்டவர்களை, கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த 12 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள். ஆளும் கட்சிக்கு ஆதரவாக போலீசும், போலீஸ் அதிகாரிகளும் இருப்பார்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியிருப்பது எவ்வளவு பெரிய சிக்கலையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நினைவுபடுத்திப் பார்க்கவேண்டும்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து ஜனதா கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா காங்கிரஸ், மற்றக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து அதைக் கண்டித்து ஊர்வலம், ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஆனால் அத்தனை கட்சிகளையும் சேர்ந்த தலைவர்களைக் கைது செய்த காரணத்தால் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சிறு தொழிற்சங்கப் பிரச்சினை சம்பந்தமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சட்டத்தை அமல்படுத்தி பாதுகாக்க வேண்டிய நிர்வாகம் எந்த முறையில் செயல்பட வேண்டுமோ அந்த முறையில் செயல்படவில்லை. இன்றைக்குக்கூட ஆளும் கட்சி அல்லாத மற்றக் கட்சிகளைச் சேர்ந்தவர்களை போலீஸ் டிப்பார்ட்மென்ட் கூப்பிட்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தாக்குதலை நடத்தியவர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. இந்த மாதிரி நிலைமைகள் ஏற்படும்போது போலீஸ் டிப்பார்ட்மென்ட் எப்படி நடந்து கொள்ளவேண்டும், அரசாங்கம் எந்த மாதிரி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது பற்றி விவாதிக்க இந்தச் சபையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் என்னுடைய பெயரையும் இணைத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லி, திரு. அழகிரிசாமி அவர்கள் சொன்ன அத்தனை கருத்துக்களையும் வரவேற்று அதிலே என்னுடைய பெயரையும் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ரொம்ப நன்றி.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. அழகிரிசாமி அவர்கள் விவரமாகப் பேசியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மோகன், கந்தசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வேலுசாமி, எம். பி. கோவிந்தசாமி ஆகியோர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதைப் பற்றி விரிவான முறையில் விவாதிக்க அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இது சம்பந்தமாக எடுத்துக் கூறிய கருத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன். இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. கந்தசாமி: துணைத் தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகளுக்குள் இருக்கும் மாச்சரியங்களை நீக்கி சுமுகமான நிலைமை ஏற்படுத்தும் வகையில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் நடந்த சம்பவத்தைப் பற்றிப் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டுமென்று பேசியிருக்கிறார்கள்.

ஆனால் நிச்சயமாக இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஏனென்றால், இஸ்மாயில் கமி ஷன் அறிக்கையின் மீது பேசிவிட்டு இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்து ஊருக்குப் போக வேண்டியவர்களாக இருக் கிறார்கள். இருந்தாலும் இதற்காக அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் கூற விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினைகளை நாம் தொகுத்துப் பார்த்தால் இது சிறு சிறு சம்பவங்களாக தொடர்ந்து நடைபெற்று அது ஒரு பெரிய சம்பவமாக உருப்பெற்று அதிலே பல அரசியல் கட்சிகள் ஈடு படவேண்டிய நிலைமை ஏற்பட்டு அதனால் பல பேர்கள் பல்த்த சேதத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை நான் இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

30-3-1978 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. டேவிட் என்பவர் மீது அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வைச் சேர்ந்த மோகன் என்பவர் ஒரு குற்றச்சாட்டைச் சாட்டியுள்ளார். அதே நாளில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முருகேசனும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த கேசவன் என்பவரும் சண்டையிட்டுக் கொண்டனர். இந்த இரண்டு சம்பவங்கள் பற்றியும் திருப்பூர் காவல் நிலைய பொதுக் குறிப்பேட்டில் பதிவுசெய்யப்பட்டன. யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

31-3-1978 அன்று இரவு 10½ மணியளவில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த மோகன், கனி ஆகியோரை, எந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அளவிற்கு கட்சி சம்பந்தம் என்று தெரியவில்லை—தி.மு.க. வைச் சேர்ந்த பழனிசாமியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இருதயசாமி மற்றும் எட்டுப் பேர்களும்—அவர் தனியாக வருகின்றபோது, அடுத்த நாள்— சேர்ந்துகொண்டு தடிகளாலும் இரும்புக் கம்பிகளாலும் தாக்கியதாகத் தெரிகின்றது. சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன, இது சம்பந்தமாக திருப்பூர் வடக்கு காவல் நிலையத்தில் இ.பி.கோ. 147, 148, 341, 323 ஆகிய செக்ஷன் களின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒன்பது பேர்களும் தி.மு.க. வைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்குப்பிறகு, அதற்கு பதிலுக்கு பதில் என்ற முறை யிலே 3-4-1978 அன்று காலை 11.15 மணியளவில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த இருதயராஜ், ஜீவானந்தம் மற்றும் சிலரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வி. முருகேசன் என்பவரை இரும்புக் கம்பிகளால் தாக்கியதாகத் தெரிகிறது. சொற்ப காயங்கள் ஏற்பட்டுள்ளள. இதுசம்பந்தமாக இ.பி.கோ. 147, 148, 324 ஆகிய செக்ஷன்களின் கீழ் திருப்பூர் வடக்கு காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப் பட்டுள்ளது. அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த 6 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆகவே, ஆளுங்கட்சிக்குச் சாதகமாக போலீஸ் நடந்துகொண்டது என்று சொல்வதும் சரியாகாது.

4-4-1978 அன்று காலை 9 மணியளவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே. முருகேசன் என்பவரை அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த ஹரி, மனோகரன், அலெக்ஸாண்டர் மற்றும் சிலரும் தாக்கியதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக இ.பி.கோ. 448, 324 ஆகிய செக்ஷன்களின் கீழ் திருப்பூர் வடக்கு காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்

பட்டுள்ளது. அன்று பகல் 3.15 மணியளவில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் என்பவரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாணிக்கம் மற்றும் 11 பேர்கள் தடிகளாலும் சைக்கிள் செயின்களாலும் தாக்கிய தாகத் தெரிகிறது. சொற்ப காயங்கள் ஏற்பட்டுள்ளன. இது சம்பந்தமாக இ.பி.கோ. 147, 148, 323, 324 ஆகிய செக்ஷன் களின் கீழ் வழக்கு ஒன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 12 பேர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

4-4-1978 அன்று போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு ரோந்து சுற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டது. தொடர்ந்து ஒருவருக்கு ஒருவர் அடித்துக்கொண்டு வருகின்ற நிகழ்ச்சியைப் பார்த்து அங்கே போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு ரோந்து சுற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இரு கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக திருப்பூர் டவுனில் சிற்சில இடங்களில் மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக இ.பி.கோ. 147, 148, 323, 324 ஆகிய செக்ஷன்களின் கீழ் 13 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த 9 பேர்களும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இருவரும் காயம் அடைந் துள்ளனர். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த 8 பேர்கள் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். போலீஸ் சட்டம் 30(2) செக்ஷன் கீழ் தடை உத்திரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது. அதோடு முடியாமல், அடுத்துதான் ஊர்வலம் வருகிறது. இந்த நிலைமைகள் நடந்தபிறகு, தடைச் சட்டமும் போட்ட பிறகு 5-4-1978 அன்று 11 மணியளவில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைத் தவிர மற்றக் கட்சிகளைச் சேர்ந்த சுமார் 300 பேர்கள் திருப்பூர் தனலட்சுமி மில்லுக்கு அருகில் கூடினர். அவர்களைக் கலைந்து செல்லுமாறு வேண்டிக்கொண்டதன் பேரில் கூட்டத்தினர் கலைந்து சென்றனர். தடையுத்தரவை மீறி ஊர் வலம் நடத்தியதற்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா, தி.மு.க., காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த 20 பேர்கள் கைது செய்யப்பட்டு பிறகு ஜாமீனில் விடப்பட்டனர். இது சம்பந்த மாக இ.பி.கோ. 143, 188 ஆகிய செக்ஷன்களின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

(முற்பகல் 11-10)

அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் ஏதும் நடைபெறவில்லை.

திருப்பூர் நகரில் ஏற்பட்ட கலவரங்கள் சம்பந்தமாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நிலைமை அமைதியாக உள்ளது. எனவே, இச்சம்பவங்கள் குறித்து விவாதிக்க பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

என்னிடத்திலே அந்த போட்டோக்கள் இருக்கின்றன. குறிப்
பாக தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா படங்கள் நொறுக்கப்
பட்டு, அலுவலகம் தாக்கப்பட்ட புகைப்படங்கள் இருக்கின்றன,
இது, ஒருவருக்கொருவர் என்று ஆரம்பித்து. ஒரு
குழுவினருக்கும் இன்னொரு குழுவினருக்கும் என்று ஆரம்
பித்து இப்படிப்பட்ட கலவரத்திலே போயிருக்கிறது.
ஆகையினால் இதைப்பொறுத்தவரையில் பெரிய அரசியல் வண்ணம்
தர வேண்டியதில்லை என்று நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்
கொண்டு இந்தப் பிரச்னை ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் அடங்கி
யிருப்பதால் இதோடு இதை விட்டு விடலாம் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்
பணித்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு,
அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம்
குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்
தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(இ) வடஆற்காடு மாவட்டத்தில் சிலர் விவசாயிகளை
வரி கொடாப் போராட்டம் நடத்தத் தூண்டிவிடுவதும், கோவை
மாவட்டத்தில் பொள்ளாச்சியில் வரி கொடா இயக்கம் நடத்தி
வரும் விவசாயிகள் கைது செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள
கொந்தளிப்பான நிலை குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, வட ஆற்காடு
மாவட்டத்தில் விவசாயிகளை ஒரு சிலர் தூண்டிவிட்டு வரி
கட்டாதே, கடன்களைக் கட்டாதே என்று போராட்டம் பற்பல
இடங்களில் நடத்தி பொது அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுள்ள
நிலைமையைப்பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை
ஒத்தி வைக்க வேண்டுமென்று திரு. ஆர். மார்க்கபந்து, திரு. பி.
சந்திரன் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்.

இதையொட்டியே கோவை மாவட்டம் பொள்ளாச்சியில்
விவசாயிகள் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி வரிகொடா
இயக்கம் நடத்தி வருவதை ஒட்டி விவசாயிகள் கைது செய்யப்
பட்டுள்ளதால் அப்பகுதி பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள
கொந்தளிப்பு குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை
ஒத்தி வைக்க வேண்டுமென்று திரு. ஆ. நடராசன் அவர்கள்
ஒரு தீர்மானம் கொடுத்துள்ளார். இது எப்படி அவசர முக்கிய
மானது என்பது குறித்து விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவரவர்களே, சமீப காலமாக வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு விவசாய மேல் மட்டக் குழுவிலே இடம் பெற்றிருக்கின்ற ஒரு நபர், பெயரை வேண்டுமானால் சொல்கிறேன், நாராயணசாமி என்பது அவருடைய பெயர், அவர் வடார்க்காடு மாவட்டத்தில் விவசாயிகள் மத்தியிலே விவசாயிகள் சங்கம் என்ற பெயரால் சங்கத்தைக் கூட்டி, மின்சார வரியைக் கட்டாதீர்கள், அரசாங்கத்திலேயிருந்து வாங்கிய கடனைக் கட்டாதீர்கள், மற்றுமுள்ள வரியைக் கட்டாதீர்கள் என்று சொல்லிப் போராட்டத்தைத் தொடங்கி இராணிப் பேட்டையிலே ஊர்வலமாகச் சென்றார்கள். அதேபோன்று குடியாத்தத்திலேயும் ஊர்வலமாகச் சென்றார்கள். அப்படிச் சென்றபொழுது அத்துமீறிய நேரத்தில் சிலர் கைது செய்யப்பட்டபொழுது அவர்களைத் துராக்கிரதமாக வெளியே இழுத்து வந்திருக்கிறார்கள். இதுபோன்ற பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. இது எதனால் ஏற்படுகிறது என்றால் மேல் மட்டக் குழு என்று போட்டு இதுவரையிலேயும் ஒரு முடிவு அறிவிக்க முடியாத நிலையிலே அதைச் சாதகமாக எடுத்துக்கொண்டு அரசியல் பின்னணியோடு நடைபெறுவதாகத் தெரிகிறது. ஆகவே, இந்தச் சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை ஆராய வேண்டும். மற்றும் இவர்களைத் தூண்டிவிடும் பெரிய நிலச்சுவான்தார்கள் தாங்கள் கட்ட வேண்டிய வரிகளையும், வாங்கிய கடன்களையும் அரசாங்கத்திற்குக் கட்டாமல் இருப்பதற்காக மற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டிய சில பிரச்னைகளை முன்னால் வைத்து சிறு விவசாயிகளை அட்ராக்ட் செய்து அவர்களைத் தங்கள் பக்கம் சேர்த்துக்கொண்டால் தங்களுக்குப் பாதுகாப்பாக இருக்குமென்று கருதி, தங்கள் பண பலத்தைப் பயன்படுத்தி அங்கே ஒரு பதட்டமான சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகையினாலே, இந்த நிலைமையில் சிறு விவசாயிகளின் சிறு பிரச்னைகளைத் தீர்ப்பதன்மூலம் இந்த நிலைமைகள் சீர்திருத்தப்பட்டு, 'miscreants can be singled out' என்று சொல்லும் முறையிலே யார் இதற்குக் காரணகர்த்தா என்று கண்டு பிடிக்கும் வகையிலே அரசாங்கம் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்வதன் மூலம் விவசாயிகளிடத்தில் பொதுவாக ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட முடியும். ஆகவே, இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் விவசாயிகள் வரி கொடா இயக்கம் நடத்தி வருகின்ற காரணத்தால் அங்கே இருக்

கின்ற விவசாயிகள் கொடுக்கப்பட வேண்டிய கடன்களுக்காக ஜப்தி செய்யும் நிலைமைகள் இருக்கின்றன. அரசாங்கம் எவ்வளவோ உறுதி தெரிவித்திருந்தாலும்கூட அந்த உறுதிமொழிகளை மீறி விவசாயிகள் மீது கெடுபிடியான நிலைமைகள் இருக்கின்றன.

விவசாயிகள் தங்கள் போராட்டம் காரணமாகத் தாங்கள் பெற்ற கடன்களையும், வரியையும் கட்டுவதில்லை என்று அரசுக்கு அறிவித்துவிட்டு அந்த அடிப்படையில் போராட்டம் நடந்து வருவது அரசாங்க அதிகாரிகளுக்குத் தெரியும். ஆனால் பொள்ளாச்சியிலுள்ள அதிகாரிகள் வேண்டுமென்றே விவசாயிகளைக் கொடுமைப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் ஜப்தி செய்து அவர்களுடைய பொருள்களை அகற்றும் முயற்சியில் ஈடுபட்ட பொழுது, அங்கேயிருக்கின்ற விவசாயிகள் எல்லாம் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற அந்த நேரத்தில் அங்கேயுள்ள ஆயிரக் கணக்கானவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். அந்த நிலைமைகளைப் பற்றி விரிவாகப் பேச இந்த அவையினுடைய இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, வேளாண்மைத் துறையின் 1977-ம் வருடம் டிசம்பர் மாதம் 26-ம் நாளைய ஆணை எண் 2097-ன்படி அமைக்கப்பட்ட குழு, விவசாயிகளின் பல்வேறு பிரச்னைகளைப் பற்றி ஆராய்ந்து வருகிறது. இந்தக் குழு விவசாய பம்பு செட்டுக்குரிய மின் கட்டண விகிதங்கள், நெல்லுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை, விவசாயிகள் திருப்பித் தரவேண்டிய கடன்கள் விஷயத்தில் சலுகைகள், உற்பத்திச் செலவைப் பொறுத்து விவசாயப் பொருட்களுக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயித்தல் ஆகியவை பற்றியும், இவற்றைச் சார்ந்த விஷயங்கள் பற்றியும் ஆராயும். இந்தப் பொருட்கள் சம்பந்தப்பட்ட துறைகளின் அலுவலர்களாகிய 10 பேர்களும், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட அலுவல் சார்பற்ற 11 பேர்களும் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் குழு 10.1.78, 27.1.78, 28.1.78, 9.2.78 மற்றும் 23.3.78 ஆகிய நாட்களில் கூடியது. இந்தக் கூட்டங்களில் வேளாண்மைக் கடன்கள், வேளாண்மைக் காரியங்களுக்கு மின் சப்ளை கட்டணம் பற்றிப் பேசப்பட்டது. 23.3.78-ம் தேதிய கூட்டத்தில் 18.4.78, 19.4.78 ஆகிய தேதிகளில் மதுரைக்கும், 20.4.78, 21.4.78 தேதிகளில் கோவைக்கும், 26.4.78, 27.4.78 தேதிகளில் தஞ்சாவூருக்கும் முகாமிட குழு முடிவு செய்துள்ளது.

சமீபத்தில் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஆர். மார்க்கபந்து அவர்கள், வட ஆற்காடு மாவட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய வரிகள், மின் கட்டணம், கடன்கள் முதலியவற்றைக் கட்ட வேண்டாம் என்று போராட்டம் நடத்த முடிவு எடுத்ததை யொட்டி கேட்ட வினாவிற்கு, விவசாயிகளின் பிரச்னைகள் குறித்து அரசு ஆலோசித்து வருகிறது என்றும், குழுவின் முடிவுகள் அரசுக்குக் கிடைத்தவுடன், அதை அரசு கவனமாகப் பரிசீலித்து, தக்க ஆணைகள் வழங்கும் என்றும் முன்பு நான் சட்டப் பேரவை யில் பதில் அளித்திருக்கிறேன்.

மேலும் சட்டப் பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள மு. அம்பிகாபதி, கே. சுப்பு மற்றும் துரை முருகன் ஆகியோரார் கொடுத்த ஒத்தி வைப்புப் பிரேரணையை எதிர்த்து நான் ஒரு விவரமான அறிக்கையை இப்பேரவையில் 21.3.78-ல் படித்தேன். அதில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தேன்.

விவசாயிகளின் பிரச்னைகளைப் பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழு அமைப்பதற்கு முன்பே விவசாய சங்கங்களுடன் பொதுப் பணித் துறை அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆகியோர் பேச்சு வார்த்தை நடத்தியதின் பயனாக ஏற்பட்ட கீழக்கண்ட முடிவுகள் தமிழ்நாடு மின் வாரியத்தின் மூலம் நிறை வேற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் சட்டப் பேரவையில் குறிப்பிடப்பட்டது.

(அ) 1.3.77 முதல் 30.11.77 வரையான காலத்துக்கு செலுத் தப்பட வேண்டிய பம்பு செட்டுகளுக்கான மின் கட்டணம், விவசாயிகளின் பிரச்னைகள் பற்றி ஆராய அமைத்துள்ள குழுவின் முடிவுகள் அரசுக்குத் கிடைத்து, அரசின் முடிவு அறிவிக்கப்படும் வரை ஒத்தி வைக்கப்படும். இதன் காரணமாக மின் இணைப்பு துண்டிப்பு இராது.

(ஆ) வறட்சிக் காலத்தில் பணம் கட்டாமைக்காக துண்டிக்கப் பட்ட விவசாய பம்பு செட்டுகளுக்கான மின் இணைப்பு திருப்பித் தரப்படும். பாக்கியை தவணைகளில் செலுத்தலாம்.

(இ) 1.12.77 முதல் பம்பு செட்டுகளுக்குச் செலவாகும் மின் சாரத்துக்கான மின் கட்டணம் தற்போதைய விகிதப்படி செலுத் தப்பட வேண்டும். குழுவின் அறிக்கையின் பேரில் அரசு பிறப் பிக்கும் உத்தரவின்படி இந்தத் தொகை அதிகமாயிருப்பின் அவரவர் செலுத்த வேண்டிய கடன் பாக்கிக்கு ஈடு செய்யப்படும்.

விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன்கள் குறித்து அவர் களுக்கு உதவும் வகையில் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட பகுதிகளில் விளைச்சல் 25%-ம் அதற்குக் குறைவாகவும்

மதிப்பிட்டிருந்தால், நிலவரி, தண்ணீர் மேல்வரி, உள்ளூர் மேல் வரி, கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, சிறப்பு நன்செய் தீர்வை, சிறப்பு தண்ணீர் மேல்வரி, பணப் பயிர்களுக்கான வரி முதலியவற்றை வருவாய் வாரிய ஆணைகளுக் குட்பட்டு முழுவதும் தள்ளுபடி செய்து ஏற்கனவே அரசு ஆணையிட்டுள்ளது.

மகசூல் மதிப்பீட்டைப் பற்றிய மேற்கண்ட நிபந்தனையை மேலும் தளர்த்தி, குறுகிய கால கூட்டுறவு கடன்களை மத்திய கால்க் கடன்களாக மாற்றுவதற்கு வருவாய்த் துறை அதிகாரி கள் வழங்கும் அனுவாரி சான்றிதழின் அடிப்படையில் 6 அணுவும் (37 பைசா) அதற்குக் கீழும் விளைச்சல் இருந்தால், மேற்கூறிய வரி விதிப்புகளை முழுவதும் தள்ளுபடி செய்வதென அரசு இப் பொழுது முடிவு செய்துள்ளது. எங்கெங்கு நிலவரி தள்ளுபடி செய்யப்படுகிறதோ அங்கு உள்ளூர் மேல்வரி மீதான முழு வரியை அதே அடிப்படையில் தள்ளுபடி செய்ய வேண்டுமென பஞ்சாயத்து ஒன்றியங்கள் கேட்டுக் கொள்ளப்படும். விவசா யிகளுடைய பிரச்னைகளை ஆராய்ந்து வரும் குழுவின் முடிவுகள் கிடைத்தவுடன் அவற்றை அரசு கவனமாய் பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

(முற்பகல் 11-20)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

25.3.78, 29.3.78, 1.4.78 ஆகிய மூன்று தேதிகளில் பொள்ளாச்சி தாலுகாவைச் சார்ந்த சோமந்துரை சித்தூர், ஈரோடு தாலுகாவைச் சார்ந்த கொசக்கட்டூர், பொள்ளாச்சி தாலுகாவைச் சேர்ந்த துறையூர் ஆகிய கிராமங்களில் நில வரி பாக்கிக்காக சட்டப்படி எடுக்கப்பட்ட ஜப்தி நடவடிக்கைகளை தடுத்ததற்காக சம்பந்தப்பட்ட 16 பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

ஒருவர் அதிகாரிகளை துப்பாக்கியால் சுட்டுவிடுவதாகவும் கூறி யுள்ளார். அவரிடமிருந்த துப்பாக்கியும் கைத்துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டுள்ளன. அவரை போலீசார் தேடிவருகின்றனர். இம்மாதிரி முறைப்படியான நடவடிக்கைகளை தடுக்க முன்வருவது கண்டிக்கத்தக்கதாகும். அதுவும், இந்த சம்பவங்களில் சம்பந்தப் பட்டவர்கள் வசதி படைத்தவர்கள். அரசுக்குச் செலுத்தவேண்டிய வரிகளை செலுத்த இயலாதவர்கள் என்று சொல்ல முடியாது.

விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகளை விவரித்தும் இன்னும் இது சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி குழு பரி சீலனை செய்து வருகிறது என்றும் இந்தப் பேரவையில் உறுதி

[திரு. ப. குழந்தைவேலு]

யளித்தும், ஒரு சிலர் வரிகொடா இயக்கம் நடத்த முற்பட்டுள்
ளனர். இது சரியான நடவடிக்கை அல்ல. அப்படி செய்வது
ஒரு மாநில. மத்திய அரசுக்கு எதிராக செய்யும் பெரிய குற்ற
மாகும். அரசு இந்த நிலைமையைச் சமாளிக்க எடுக்க வேண்டிய
நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. முதலிலே அவர்களுக்கு
சிறு விவசாயிகளுக்கு 16 பைசாவிலிருந்து 14 பைசாவாக
குறைத்தது. இந்த அரசு இன்னும் பல சலுகைகளை அறிவிக்க
விருக்கிறது. சிறு விவசாயிகள் பற்றிய புள்ளி விபரம் சரியாகக்
கிடைக்காததால் அவர்களுக்கு பலன் முழுவதும் கிடைக்கவில்லை.
என்பது பற்றியும் அரசு உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து
வருகிறது.

திருவாளர்கள் சி. என். பரமசிவம், திருவாரூர் தென்கோவன்,
முகுந்த கோவிந்தராசன். கிருஷ்ணசாமி கவுண்டர், முத்து
மல்லாரெட்டியார், பி. வேலுசாமி, எம். ஆதிமூலம், மூ. வீரய்யா,
இந்திரா காங்கிரஸ் ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர்கள் கேட்டுக்
கொண்டதற்கிணங்க இன்னும் இரண்டு மாத காலத்திற்கு
அறுவடை காலம் முடியும் வரையில், கூட்டுறவு கடன்களை வசூல்
செய்வது ஒத்தி வைக்கப்படுகிறது. விவசாயிகளை சிலபேர்
பலாத்காரத்திற்கு தூண்டிவிடுகிறார்கள். அத்தகையோர் மீது
அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்று தெரி
வித்துக்கொள்கிறேன்.

மேற்கூறிய சூழ்நிலையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்
நடத்திவரும் வரிகொடா இயக்கம் தேவையற்றது. அதைப்
பற்றி விவாதிக்க அவையின் அலுவல்களை ஒத்திவைக்க தேவை
இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத்
துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின்
பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க
வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு
மறுக்கப்படுகிறது.

(6) அமைச்சரின் அறிக்கை.

திராவிடர் வரலாறு, திராவிட மொழி பாதுகாப்பு ஆகியவற்றை ஆராய்ந்து வரும் திருவனந்தபுரத்திலுள்ள திராவிட மொழியியல் நிறுவனத்திற்கு மானியம் வழங்குவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 82-ன் கீழ், மாண்புமிகு
கல்வி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கை
அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர வர்களே, திராவிடமொழி பேசுவோர் இந்தியாவில் 1971 ஆம் வருட மக்கட் தொகை கணக்கெடுப்புபடி ஏறத்தாழ பன்னிரண்டு கோடிப் பேர், அதாவது நான்கு இந்தியர்களில் ஒருவர் திராவிட மொழி பேசுபவர், திராவிட மொழிகள் தென்னகத்தில் மட்டும் பேசப்படுவதில்லை. வடநாட்டில் குறிப்பாக குஜராத், மகாராஷ்டிரம், மத்தியபிரதேசம், ஒரிசா, வடமேற்கு வங்காளம், பீகார் முதலிய மாநிலங்களில் வாழும் மலைவாழ் ஜாதியினரில் சுமார் 70 விழுக்காடு திராவிட மொழி பேசுபவர்கள். மத்திய பிரதேசத்தில் வாழும் 73 இலட்சம் பழங்குடி மக்களில் ஏறத்தாழ 62 இலட்சம் திராவிட மொழி பேசுபவர்கள், நேப்பாளத்தில் வாழும் மலை ஜாதியினர் ஐங்கர் என்ற திராவிட மொழி பேசுபவர் என சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. பிராகூயி என்ற திராவிட மொழியைப் . பாகிஸ்தானில் 4 இலட்சம் பேரும், ஆப்கானிஸ்தானத்தில் 40 ஆயிரம் பேரும், ஈரானில் பத்தாயிரம் பேரும், சோவியத் யூனியனின் தென் பகுதியில் மூவாயிரம் பேரும் பேசுகிறார்கள். இம்மொழிகளை ஆராய்ந்தால் திராவிடர்களின் பழைய வரலாறும், உலகச் செல்வாக்கும் தெளிவாகும். இம்மொழிகள் அழியாமல் பாதுகாக்க வேண்டியது நம் பொறுப்பாகும். இதைத் திருவனந்தபுரத்தில் உள்ள திராவிட மொழியியல் நிறுவனம் International school of Dravidian Linguistics விரிவாக ஆராயத் திட்டமிட்டுள்ளது. பழந்தமிழ் இலக்கியமாகிய சங்க இலக்கியப் புலவர்கள் பலர் கேரளத்திலிருந்தும், கர்நாடகத்தின் தென் மாவட்டத்திலிருந்தும் ஆந்திராவின் தென் மாவட்டத்திலிருந்தும் தமிழில் பாடியிருக்கின்றனர். இந்நாடுகளின் பழைய வரலாற்றிற்கும், இலக்கியத் தோற்றத்திற்கும் சங்க இலக்கியப் படிப்பு எவ்வளவு துணை நிற்கும் என்பதையும் திராவிட மொழியியல் நிறுவனம் விரிவாக ஆராயவும் திட்டமிட்டுள்ளது.

திராவிட மொழிகளுக்கும், ஆப்பிரிக்க நாட்டு மொழிகளுக்கும் உள்ள தொடர்பை செனகல் முதல்வர் பிரஸிடெண்ட் செங்கோர் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் உணர்ச்சியுடன் கூறியதை நாம் அறிவோம்.

ஜப்பானிய எழுத்து முறைக்கும் தமிழுக்கும் பொருத்தமிருப்பதை அறிஞர்கள் சமீபத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆஸ்திரேலிய மொழிகளுக்கும் திராவிடத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை இரஷ்ய ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றனர். தாய்லாந்தில் தேவார ஏடுகளும், திருப்பாவை, திருவெம்பாவைப் பாட்டுகளும் பாதுகாக்கப்படுவது நாம் அறிந்ததே. ஆண்டு தோறும் ஆய்வாளர்களை ஒவ்வொரு தூரக்கிழக்கு நாடுகளுக்கு அனுப்பி ஆய்வு செய்யவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இவ்வாண்டும் தாய்லாந்திற்கு ஒரு தமிழ் ஆய்வாளரை அனுப்ப

இருக்கிறது. இரானுக்கும், ஆப்கானிஸ்தானத்திற்கும் ஏற் கெனவே ஒரு ஆய்வாளரை அனுப்பி பிராகூயி மொழியை ஆய ஏற்பாடு செய்துள்ளது. இத்தகைய பணிகளுக்கு ஏனைய தென்னக அரசாங்கங்களைப் போல் தமிழகஅரசும். மான்யம் வழங்க அவர்கள் விண்ணப்பம் செய்திருக்கின்றனர். இதற்காக ஆண்டொன்றுக்கு 1.36 இலட்சம் ஐந்தாண்டுகளுக்குத் தொடர் செலவாகவும், 4.51 இலட்சம் தொடராச் செலவாகவும் தருமாறு வேண்டியுள்ளனர். தமிழகஅரசு இத்தகைய பரந்த ஆராய்ச்சிக்கு எப்போதும் துணை நிற்பதால் மேற்கூறிய தொகைகளை மானியமாக வழங்க முடிவு செய்துள்ளது.

7. அறிவிப்புகள்

(அ) மேலவையில் நிறைவேற்றப்பெற்ற சட்டமுன் வடிவுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 5-4-1978 அன்று தமிழ் நாடு 1978-ம் ஆண்டு மோட்டார் வாகன வரி திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/78), பரிந்துரை ஏதும் இன்றி ஏற்பளிக்கப்பெற்றது என்றும், தமிழ் நாடு 1978ஆம் ஆண்டு அரிசன நல திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/78), தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/78) ஆகியவை திருத்தங்கள் ஏதும் இன்றி ஏற்பளிக்கப்பெற்றது என்றும் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(8) அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 41(3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ''பேரவையின் 41 (3)-வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்''
என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு முன்பாக ஒரு அறிவிப்பு. இங்கே கொடுக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்புத் தீர் மானங்களுக்கான பதில்களை அச்சிட்டுக் கொடுத்துவிடலாம் என்று

கருதுகிறேன். காரணம், அவைகள் எடுத்துக்கொள்ளப்பட நேரம் இல்லை. ஆகவே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான பதில்களை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப் படும். அவைகளுக்கான நேரம் எடுத்துக்கொண்டால், இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது பேச சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். ஆகவே தான் சொல்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அச்சிட்டு அனுப்புவது என்ற முறை சரியல்ல. விதி 41, விதி 42-ன் கீழ் வருகின்ற பிரச்னைகளுக்கும், கேள்விகளுக்கு பதில் என்பதற்கும், அச்சிட்டு கொடுப்பது என்பது சரியாக இருக்காது. ஸ்டேட் மெண்ட் படித்த பிறகு அதன் மேல் வினாக்களை எழுப்பி மேற் கொண்டு விவரங்களை அறியவும், வினாக்களுக்கு துணை வினாக்கள் எழுப்பி கருத்துக்களை அறியவும் அது பயன் அளிக்காது. ஆகவே, அப்படிச் செய்யக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைத் தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொள்கிறேன், உங்களுடைய உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் பேசுவதை நிறுத்திக்கொண்டால் அனுமதிக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: அது வேறு, இது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாவற்றையும் அனு சரித்துத்தான் நாம் நடக்கவேண்டும். ஆகவே எனக்குக் கொஞ்சம் ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இஸ்மாயில் கமிஷன் அறிக்கைமேல் இன்னும் 12 பேர் பேச வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசி, பின்னர் அமைச்சர் பதில் சொல்லவேண்டும். இருப்பது 2 மணி நேரம் தான். அது போதாது.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, மிக முக்கிய மான பிரச்னைகள் இருக்கின்றன. இஸ்மாயில் கமிஷன் மீது பேச வேண்டியதும் தவிர்க்கமுடியாத நிலையில் இருக்கிறது. இன்று முடியாவிட்டாலும், நாளைக்கு அதை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னிடத்தில் இல்லை. அப்படித் தள்ளுவது கடினம். எல்லாவற்றிற்கும் பதில் கொடுக் கச்சொல்லி விடுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்தாலும், நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைபற்றியும் பேசவேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, நான் ஒரு மு கியமான பிரச்னை பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத் இருக்கிறேன், உடனயாக அதைப்பற்றி நான் பேச விரும் கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாலை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாலையோ, நாளையோ இல்லை. இனி அதற்கு நேரம் இல்லை. எல்லாவற்றையு இன்றைக்கே முடித்தாகவேண்டும். அதுவும் 1½ மணிக்குள் முடித்தாகவேண்டும். ஆகவே, அதற்கெல்லாம் பதில் அனுப் விடுகிறேன்.

[முற்பகல் 11-30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த அறிக்கைகளும் மிகவும் நீண்டதாக இருக்கின்றன. பொது வான பிரச்னை என்னவென்றால் 41 ஆவது விதியின்கீழ் வரும்போது படித்தால் பலருக்கு பயனுடையதாக இருக்கும். என்னைப் பொறுத்தவரையில் புதுக்கோட்டையில் ஒரு தனியார் வெடிக்கிடங் கில் ஏற்பட்ட விபத்து பற்றியது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்தில் எழுப்பினர் என்று தெரிந்தாலே தொகுதி மக்கள் ஆறுதலடைவார்கள். அதுமட்டுமல்ல; விவரங் களைத் தனியாக அனுப்பித் தருகிறோம். இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் நம்முடைய அலுவல்களை முடித்துக்கொள்ள வேண்டியிருப்பதால், இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் பலர் பேசவேண்டியிருப்பதால் பேரவைத் தலைவரவர்கள் என்னுடைய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் பெயரில் உள்ள கவன ஈர்ப்புத் தீர் மானத்தை மட்டும் படித்துவிட்டால் போதும்; பதில் அவர் களுக்கு வந்து சேரும்.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(9) கவன ஈர்ப்பு.

(அ) புதுக்கோட்டை, தெற்கு ராஜ வீதியில் உள்ள கடையில் ஏற்பட்ட வெடி விபத்தும், அதனால் ஏற்பட்ட பலர் உயிரிழப்பும் குறித்து.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, புதுக்கோட்டை நகரில் 5-2-78ஆம் தேதியன்று தெற்கு ராஜ வீதியில் உள்ள கடையில் ஏற்பட்ட வெடி விபத்தினால் 15-க்கும் மேற்பட்டோர்

உயிரிழக்கவும் மேலும் பலரின் நிலைமை கவலைக்கிடமாகவும் இருக்கின்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, புதுக்கோட்டை நகரில் கடந்த 5-2-1978 ஞாயிற்றுக்கிழமை தெற்கு ராஜ வீதியில் உள்ள கடையில் ஏற்பட்ட வெடி தீ, விபத்தினால் 15-க்கும் மேற்பட்டோர் உயிரிழக்கவும், மேலும் பலரின் நிலைமைக் கவலைக்கிடமாக இருக்கின்ற நிலையைப் பற்றி விவாதிக்க.

புதுக்கோட்டை மூன்றாவது தெற்கு தெருவில் உள்ள திரு. முகமது சுல்தான் ராவுத்தர் கடையில் 5-2-78 அன்று பகல் 12-25 மணி அளவில் தீப் பிடித்துக் கொண்டது. வெடி விபத்திற்கான காரணம் பற்றி புலன் விசாரிக்கப்பட்டு வருகிறது. காவல் படையினரும் தீயணைப்புப் படையினரும் விபத்து நடக்கும் இடத்தை அடைவதற்கு முன்பே, கடையில் வைத்திருந்த பொருட்கள் வெடிக்கத் தொடங்கிவிட்டது. அதன் காரணமாக சம்பவம் நடந்த அந்த வீதி வழியாகச் சென்ற 6 பெண்கள், 3 குழந்தைகள் உட்பட 41 பேர் காயமடைந்தனர். இவர்களுக்கு புதுக்கோட்டை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. 39 பேர் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 13-2-78 வரை 14 பேர்கள் இறந்து விட்டனர் (பெயர் விவரம் இணைப்பில் உள்ளது). ரூ. 25,000 மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்து விட்டது. தீயணைப்புப் படையினர் 3 மணி 40 நிமிஷங்கள் போராடி சுமார் மாலை 4—00 மணி அளவில தீயை அணைத்தனர்.

கடைக்காரர், சில்லரையாக ஸ்பிரிட் விற்க "பி.எல்.4" உரிமம் பெற்றிருந்தார். அவர் செய்த சில தவறுகள் காரணமாக அவருடைய உரிமம் 31-10-77-க்குப் பிறகு புதுப்பிக்கப்படாமல் ரத்து செய்யப்பட்டுவிட்டது; கடைக்காரருக்கு 31—3—78 வரை பட்டாசு வைத்து விற்க அனுமதியுள்ள "கே" பாரம் உரிமம் இருந்தது.

காவல் துறையினர் புலன் விசாரணையில் கிடைத்த தகவல் களின் பேரில் உடனடியாக இரண்டாவது தெற்குத் தெருவில் இருக்கும் கடைக்காரரின் வீட்டில் 8 மூட்டை பொட்டாசியம் நைட்ரேட், 2 மூட்டை அயோபஸ் மஞ்சள் கந்தகம் ஆகியவற்றை கைப்பற்றினர். இது பாறைகளை பிளப்பதற்கான வெடிகள் செய்ய உபயோகப் படுத்தப் பட்டிருக்கும் என சந்தேகம் உள்ளது. இது சம்பந்தப்பட்ட 35 பொருட்களும், தளவாடங்களும் கைப் பற்றப் பட்டுள்ளது. கடைக்காரர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரு டைய மூன்று மகன்களும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்

பட்டுள்ளனர். புதுக்கோட்டை காவல் நிலையத்தில் இந்திய
தண்டனை விதிகள் 436, 286 மற்றும் 304(A) கீழ் ஒரு வழக்குப்
பதிவு செய்யப்பட்டுள்ளது.

4, சென்னை தெற்கு வட்டத்தைச் சேர்ந்த துணை வெடிக் கட்டுப்
பாட்டு அலுவலர் 7-2-78 அன்று சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து
பார்த்தார். விபத்தில் சம்பந்தப்பட்ட பொருட்களின் மாதிரிகள்
எடுக்கப்பட்டு பரிசோதனைக்காக ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்
பட்டுள்ளது. வெடிகள் கட்டுப்பாட்டு அலுவலர் 16-2-78 அன்று
சம்பவம் நடந்த இடத்தைப் பார்த்தார். மாவட்ட வருவாய்த்
துறை அலுவலர் இந்திய வெடிகள் சட்டம், 1884 (Indian Explo-
sives Act, 1884) கீழ், வெடி விபத்துப் பற்றி விசாரணையை 11-4-78
அன்று நடத்துகிறார்.

5. இறந்து போனவர்களில், 6 பேருடைய குடும்பம் இறுதி
சடங்கு செய்யக் கூட வசதியில்லாதவர்கள். ஆகவே, மாவட்ட
ஆட்சியாளர், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 100 மானிய
மாக அளித்துள்ளார். விபத்தில் சம்பந்தப் பட்டவர்களுக்கு
முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி செய்வது பற்றி மாவட்ட
ஆட்சியாளர் தனது பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பியுள்ளார்.
இவை அரசின் பரிசீலணையில் உள்ளன.

5—2—78 அன்று நடந்த வெடி விபத்தில்
காயமடைந்தவர்கள்—இறந்தவர்கள் பெயர் விவரம்.

காயமடைந்தவர்கள்.

1. அ. அக்பர், புதுக்கோட்டை.
2. சேகர், புதுக்கோட்டை.
3. முகம்மது கனி, புதுக்கோட்டை.
4. கிருஷ்ணன், பெருன்சின்னே.
5. ஜயபிரகாஷ், புதுக்கோட்டை,
6. மாணிக்கம், பெருமனடு.
7 கணேசன், புதுக்கோட்டை.
8. முகம்மது இப்ரஹிம், புதுமனைக்கட்டு.
9. ஹபிபுல்லா, புதுக்கோட்டை.
10. பாபு, புதுக்கோட்டை.
11. சுந்தரேசன், புதுக்கோட்டை
12. தங்கவேலு, புதுக்கோட்டை
13. இப்ரஹிம், புதுக்கோட்டை

14. ந. ஹுசேன் புதுக்கோட்டை
15. செல்லம்மாள் (குழந்தை) தும்மனகுடி.
16. ஜாகிர் ஹுசேன், புதுக்கோட்டை.
17. மரிய லுக்காஸ் மேரி, புதுக்கோட்டை.
18. சின்னத்தாள், புதுக்கோட்டை.
19. மீனாட்சி, திருவரன்குளம் அஞ்சல்.
20. புஷ்பம், புதுக்கோட்டை.
21. காசி, புதுக்கோட்டை.
22. சிங்காரம், நக்சாந்துபட்டி.
23. சாருல் அமீத், புதுக்கோட்டை.
24. விஸ்வநாதன், புதுக்கோட்டை.
25. சுப்பையா, புதுக்கோட்டை.
26. செல்வராஜ், நச்சாந்துபட்டி.
27. முகம்மது இஸ்மாயில், புதுக்கோட்டை.

இறந்தவர்கள்.

1. முத்துகருப்பண்ணன், முள்ளூர்.
2. செந்தில், காரைக்குடி.
3. கணேசன், கரம்பகுடி வட்டம்.
4. வீரன், ஆண்டகுளம் அஞ்சல்.
5. சேவகன், அருங்கல்.
6. ரவிசந்திரன், புதுக்கோட்டை.
7. ரகமத்துல்லா, புதுக்கோட்டை.
8. ஹரிஹரன், புதுக்கோட்டை.
9. துரைராஜ், புதுக்கோட்டை.
10. கருணுகரன், புதுக்கோட்டை.
11. சந்திரசேகரன், புதுக்கோட்டை.
12. வாசு தேவன், புதுக்கோட்டை.
13. அழகன் திருமயம்.
14. குமார், புதுக்கோட்டை.

(ஆ) கோவை மாவட்டத்தில் தோன்றியுள்ள 'புரோடேனியா' என்ற புழுக்களால் விவசாயம் பாதிப்பும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட் வேண்டியதன் அவசியமும் ருறித்து.

[1978 ஏப்ரல் 73

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அடுத்து, திருவாளர்கள் துரை முத்துசாமி, சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, எஸ். சதாசிவம், கே. பண்ணை சேதுராம், என். பழனிவேல் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. துரை முத்துசாமி அவர்கள் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்கள்.

<u>திரு. துரை முத்துசாமி</u> : தலைவரவர்களே, தென்னாற்காடு, கோவை, மதுரை மாவட்டங்களில் அண்மையில் தோன்றியுள்ள 'புரோடேனியா' என்ற புழுக்களால் அப்பகுதி விவசாயப் பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைப்போக்க அரசு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கை பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : தலைவரவர்களே, ''தென்னாற்காடு, கோவை, மதுரை, மாவட்டங்களில் அண்மையில் தோன்றியுள்ள ''புரோடேனியா'' என்ற புழுக்களால் அப்பகுதி விவசாயப் பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய ஆபத்தைப் போக்க அரசு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைக் குறித்து''.

திரு. கே. பண்ணை சேதுராமன், எம்.எல்.ஏ.

''பெரிய குளம், பொள்ளாச்சி வட்டங்களில் பயிராகும் பருத்தி நிலக்கடலை போன்ற பயிர்களை கட்டுப்படுத்த முடியாத 'புரோடேனியா' என்ற புதிய கொடிய புழுக்கள் பெருத்த அளவில் சேதம் செய்து விவசாயிகளை கஷ்டத்திற்கு உள்ளாக்கி இருக்கின்றன. இந்த 'புரோடேனியா' என்ற இரவு புழுக்களை ஒழித்து விவசாயிகள் பயிர்களை காப்பாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் மத்தியில் பெருத்த பதட்ட நிலை உருவாகியுள்ளன. அதை உடனடியாக போக்க நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து''

திரு. என். பழனிவேல், எம்.எல்.ஏ.

''பழனி வட்டம் கணக்கன்பட்டி, ஆயக்குடி பகுதியில் பருத்திச் செடிகளின் மீது 'புரோடேனியா' என்ற நச்சுப்புழு திடீரென விழுந்து சுமார் ஆயிரம் ஏக்கர் செடிகளை அழித்துள்ளது. இதனால் அப்பகுதி மக்களிடையே குறிப்பாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.''

<u>நிலைமை கீழே விளக்கப்படுகிறது</u> :

'புரோடேனியா' என்ற புழு க்ம்பளிப் புழு வகையைச் சார்ந்தது. இது இலைகளை உண்ணுவதில் அசுர சக்தி உடையது. இரவில் இது நாச வேலையை செய்கிறது. பகல் பொழுதில் செடியின் அருகில் பூமிக்குள் பதுங்கி வாழ்கிறது. இந்த மாதிரி பழக்க வழக்கத்தை உடையதாதலால் இதைக் கட்டுப்படுத்துவது சற்றே கஷ்டமாகிறது.

[திரு. ப. குழந்தைவேலு]

2. இந்த வருடம் மதுரை, கோவை, ஜில்லாக்களில் பருத்திப் பயிர் இதன் தீவிரமான தாக்குதல்களுக்கு இலக்காயிற்று. பருத்திப் பறிக்கும் நேரத்தில் இது காணப்பட்டது. உடனடியாக பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்ததில் இது சமாளிக்கப்பட்டது. பருத்தி மகசூல் அநேகமாக எடுத்த பிறகு பூச்சி மருந்து தெளிப்பதை நிறுத்தியதால் எஞ்சியப் பூச்சிக்கள் அருகே உள்ள மற்ற பயிர்களை தாக்க ஆரம்பித்தன.

3. தேனீப்பகுதியில் பருத்தியில் காணப்பட்டபுழுவை எதிர்த்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதால் பயிர்கள் காக்கப்பட்டன.

4. மார்ச்சு மாதம் கடைசியில் உடுமலை தாலுக்காவில் பருத்தி பயிரான இடங்களுக்கு அருகில் நிலக்கடலை, ஹாஸான், காய்கறிகள் பயிரான நிலங்கள் இந்த பூச்சி தாக்குதலுக்கு உள்ளாயின. மார்ச்சு 27, 28 தேதிகளில் விவசாய இயக்குநர் நேரில் சென்று பூச்சிகளை கொல்லுவதற்கு தகுந்த மருந்துகளை கண்டறிந்து தெளிக்கும் முறைகள் பற்றி செயல்முறை விளக்கங்களையும் துறையினர் அளிக்கும்படி செய்தார். இதில் அங்கேயுள்ள விவசாயிகளும் பங்கு எடுத்தனர். இதுபற்றி துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு சுவரொட்டி விளம்பரங்களும் இந்த வட்டாரங்களில் செய்யப்பட்டுள்ளன. ஸ்லைடுகளில் விவரங்களை பதிவு செய்து சினிமா படக்காட்சிகள் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துரைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போதுமான பூச்சிக் கொல்லி மருந்து ரகங்களும், தேவையான விசைத் தெளிப்பான்களும், டிராக்டர் மேலிருந்து தெளிப்பான்களும் உடுமலை வட்டாரத்தில் பயன்படுத்தப்பட்டது.

5. தென்னாற்காடு மாவட்டத்தில் இங்குமங்குமாக சிறிய நிலப் பரப்பில் நெல் மற்றும் நிலக்கடலை பயிரில் இந்தப் புழு காணப்பட்டது. உடனடியாக எதிர் நடவடிக்கை எடுத்ததில் தாக்குதல் சமாளிக்கப்பட்டது.

6. இந்தப்பூச்சியினால் மற்றப்பயிர்களும் தாக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரு நஷ்டம் 'அடைவார்களோ என்று அஞ்சி இந்த அரசு அவர்களை பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இப்பூச்சியைக் கொல்ல வல்லவை என்று துணை வேளாண்மை இயக்குநரால் குறிப்பிடப்படும் பூச்சிக் கொல்லிகள் மதுரை, கோவை மாவட்டங்களில் 25% மானிய விலையில் அரசின் விவசாய கிடங்குகளில் விற்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்த சலுகை ஏப்ரல் மாதம் முழுவதும் கிடைக்கும். இதனால் அரசுக்கு சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிக்கப்பிட்டுள்ளது.

[திரு. ப. குழந்தைவேலு]

2. காலம் பாராமல் தொடர்ந்து பருத்திப் பயிர் செய்வதும், கட்டைப் பருத்தியைப் பயிர் செய்வதும், சரியான முறையில் பூச்சிக் கொல்லிகளை உபயோகிக்காததும் இப்பூச்சிகள் வளர்வதற்கு காரணமாகும். இதை விவசாயிகளுக்கு விளக்கி ஒவ்வொரு பகுதியிலும் வருடந்தோறும் "பருத்திப் பயிரிடாத காலம்" ஒதுக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(இ) திருவையாறு தென்னை வளர்ச்சிக் கழகம் விவசாயிகளிடம் பணம் வசூல் செய்வதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் குத்தாலத்திலுள்ள தென்னை வளர்ச்சிக் கழகம், திருவையாறு (பதிவு செய்யப்பெற்றது) என்ற நிறுவனம் தென்னை வளர்ச்சிக்குத் தேவையான இரசாயன உரங்கள், நல்ல ஆலோசனை ஆகியவை வழங்குவதாகவும் இது அரசாங்கச் சார்புடையது என்றும் சொல்லி விவசாயிகளிடம் பணம் வசூல் செய்து வருவதால் அப்பகுதி விவசாயிளிகடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, திரு. செல்லம் என்பவர் தென்னை வளர்ச்சிக் கழகம் கே. ஏ. சி. திருவையாறு என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை பதிவு எண் 117 இல் நிறுவனங்களின் பதிவாளர், இந்திய கூட்டாண்மைச் சட்டம் பிரிவு 58-1 ன்படி (Registrar of Firms, Indian Partnership Act, Section 58-1) 197 ஆம் ஆண்டு திங்கள் 5-ஆம் நாள் பதிவு செய்திருக்கிறார். திரு பெனிடிக்ட் என்பவர் குத்தாலத்தில் இதனுடைய ஏஜென்டாக இருக்கிறார். இதற்கும் அரசுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. விவசாய இலாகாவோ அல்லது விவசாய இலாகா ஊழியர்களோ இந்நிறுவனத்தின் செயல்முறைகளை சிபாரிசு செய்வதில்லை.

3-4-1978 அன்று வேளாண்மைத்துறையைச் சார்ந்த பயிர் பாதுகாப்பு நிபுணர் குத்தாலத்திலுள்ள இக்கழகத்தின் அலுவலகத்தை பார்வையிட்டார்கள். அச்சமயம் அங்கு எந்தவிதமான பூச்சி மருந்துகளும், உரங்களும் காணப்படவில்லை. தவிர அப்பகுதியில் மேற்கூறிய அதிகாரி விசாரணை செய்ததில் இந்த தென்னை வளர்ச்சிக் கழகம் நாட்டு உரங்களை மட்டுமே வினியோகித்தது என்றும் இரசாயன உரங்கள் ஒன்றும்வினியோகிப்

பதில்லை என்றும் தெரியவந்தது. இதுவரை வந்த தகவல் களின்படி இத்தென்னை வளர்ச்சிக் கழகம் இரசாயன உர கட்டுப்பாடு உத்தரவையோ அல்லது பூச்சி மருந்துகள் சட்டத்தையோ மீறியதாகத் தெரியவில்லை.

குத்தாலத்தில் உள்ள இந்த தென்னை வளர்ச்சிக் கழகத்தின் ஏஜென்டாக உள்ள திரு பெனிடிக்ட் என்பவர் பதினொரு விவசாயிகளிடம் தொடர்பு கொண்டு ரூ. 1635 வசூல் செய்துள்ளார் என்று தெரிய வந்தது. காவல் துறையினரை தொடர்புகொண்டதில், திரு பெனிடிக்ட் என்பவர் மீது பொது மக்களை ஏமாற்றியதாக வழக்கு ஒன்று பதிவு செய்திருப்பதாகவும் அது புலனாய்வில் இருக்கிறது என்றும் தெரிய வந்தது. இக்கழகத்தின் நடவடிக்கைகளை மிகவும் தீவிரமாக கூர்ந்து கவனிக்குமாறு மாவட்ட வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர் (உரக்கட்டுப்பாடு) மற்றும் துணை வேளாண்மை அலுவலர் (பயிர் பாதுகாப்பு) ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இப்பகுதியிலுள்ள தென்னை சாகுபடியாளர்கள் இம்மாதிரியான அங்கீகரிக்கப்படாத, போலி நிறுவனங்களின் பிடியில் சிக்காமல் தங்கள் தேவைக்கு வேளாண்மைத்துறை அலுவலர்களையே அணுகுமாறு விரிவான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) கல்லக்குடி கிராமத்திற்கு குடிநீர் வழங்கல் குறித்து அப்பகுதி மக்கள் உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, எஸ். சதாசிவம் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் இருக்கையில் இல்லாததனால் திரு. சதாசிவம் அவர்கள் அதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. எஸ். சதாசிவம்: தலைவரவர்களே, திருச்சி ஜில்லா கல்லக்குடி கிராமத்திற்கு 15 ஆண்டுகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் குடிநீர் பிரச்சினைக்காக அப்பகுதியில் உள்ள பொது மக்கள் அனைவரும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் மேற்கொண்டது பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, கல்லக்குடி கிராம வளர்ச்சி குழு 19-3-1978 நாளிட்டக் கடிதத்தில் போதிய அளவு குடிநீரை ஒழுங்காக வினியோகம் செய்யவும்,

படித்தும் வேலை வாய்ப்பில்லாதவர்களுக்கு டால்மியா சிமெண்ட் கம்பெனியில் வேலை தருமாறும், இதைப்போன்று இன்னும் ஐந்து கோரிக்கைகளை உடனே கவனித்து தீர்த்து வைக்குமாறும், இல்லாவிடில் 27-3-1978 அன்று காலை 7 மணி முதல் தொடர் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் அறிவித்தது. அவ்வாறே குறிப்பிட்ட நாளன்று உண்ணாவிரதமும் மேற்கொள்ளப்பட்டது. திருவாளர்கள் எம். பெரியசாமி உடையார், ஏ. கோவிந்த உடையார் அவர்கள் மற்றும் பலர் உண்ணாவிரதத்தில் பங்கு கொண்டனர்.

கிராம வளர்ச்சிக் குழுவின் கோரிக்கைகளில் குடிநீர் வினியோகம் பற்றிய கோரிக்கைதான் முக்கியமானது. டால்மியா கம்பெனிக்கு குத்தகைக்கு விடப்பட்ட சர்வே எண்.268/1-ல் உள்ள தரிசு நிலத்தில் தோண்டப்பட்ட கிணற்றின் காரணமாக கிராமத்தில், போதுமான அளவு குடிநீர் கிடைப்பதில்லை என்றும், நிலத்தடி நீரின் அளவும் குறைந்துவிட்டது என்றும் டால்மியா சிமெண்டு கம்பெனி போதிய அளவு குடிநீர் வினியோகம் செய்ய வேண்டுமெனவும் கிராம வளர்ச்சிக் குழு கோரியுள்ளது.

இது சம்பந்தமாக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் கருத்துரையைக் கேட்டதற்கு அவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

கல்லக்குடி கிராமத்தில் தற்போதைய மக்கட்தொகை சுமார் 11,000 கிராமத்தில் மொத்தம் மூன்று குடிநீர் கிணறுகள் உள்ளன. மொத்தம் 7625 காலன்கள் கொள்ளளவு உடைய மூன்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் குழாய்கள் மூலம் இணைக்கப்பட்டு டால்மியா சிமெண்டு கம்பெனி குடிநீர் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. கோடையில் கிராமத்தில் உள்ள கிணறுகளின் நீர் மட்டம் குறைந்துவிடுவதால், குடிநீருக்கு அவ்வூர் மக்கள் டால்மியா சிமெண்டு கம்பெனியின் குடிநீர் திட்டத்தையே நம்பி இருக்கிறார்கள். தற்சமயம் கிணறுகளில் உள்ள நீர் 15 நாட்களுக்கே போதுமானது.

டால்மியா சிமெண்டு கம்பெனி கொள்ளிடத்திலிருந்து கிடைக்கும் நீரை பயன்படுத்துகிறது. இதைத் தவிர, அக்கம்பெனிக்கு 1960-ஆம் ஆண்டு முதல் 20 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களில், சர்வே எண். 268/1-ல் உள்ள தரிசு நிலத்தில் தோண்டப்பட்ட கிணற்றிலிருந்தும் நீரை எடுத்துக் கொள்கிறது. மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை காலை, மாலை இரு வேளைகளிலும் மூன்று மணி நேரம் நிரப்புவதின் மூலம் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்க ஏற்கனவே இக்கம்பெனி இசைந்துள்ளது. ஆனால், இரு வேளைகளிலும் இரண்டு மணி நேரங்களுக்கு மட்டுமே அக்கம்பெனியால் குடிநீர் வினியோகம் செய்யப்படுவதாக கிராம மக்கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, போதுமான அளவு குடிநீரை சீரான முறையில் வினியோகிக்க கோருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி கூடுதல் மாவட்ட ஆட்சியர் கல்லக்குடி கிராம வளர்ச்சி குழுவின் உறுப்பினர்களுடனும், டால்மியா சிமெண்டு கம்பெனியின் பிரதிநிதிகளுடனும், இது சம்பந்தமாக விவாதித்தார். விவாதத்திற்குப் பின்னர் போதிய அளவு குடிநீர் வினியோகம் பற்றிய கோரிக்கையின் மீதும், மற்றுமுள்ள இதரக் கோரிக்கைகளின் மீதும் உரிய நடவடிக்கை உடனே மேற்கொள்ளப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. அதன் பின்னர் 28-3-78 அன்று மாலை 5 மணியளவில் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. குத்தகைக்கு விடப்பட்டுள்ள தரிசு நிலத்தில் உள்ள கிணற்றிலிருந்து எடுக்கப்படும் தண்ணீருக்கு டால்மியா கம்பெனி தண்ணீர் கட்டணம் ஏதும் செலுத்துவதில்லை எனத் தெரிய வருகிறது. மேற்கூறிய கிணறு அமைந்திருக்கும் நிலத்தின் பகுதியினை மட்டும் கம்பெனிக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிலத்தின் பகுதியிலிருந்து நீக்குவதற்கான சாத்தியக்கூறுகளை மாவட்ட ஆட்சியர் ஆய்ந்து வருகிறார். அவ்வாறுசெய்வதின் மூலம்அக்கிணறு கல்லக்குடி கிராம மக்களுக்கு நிரந்தர குடிநீர் ஆதாரமாக அமைய முடியும். தேவைப்பட்டால் கம்பெனிக்கும் தண்ணீர் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு தண்ணீர் வழங்க முடியும். மேற்கூறிய ஏற்பாடுகள் மூலம் கல்லக்குடி கிராமத்தின் குடிநீர் பிரச்சனைக்கு ஓர் நிரந்தரமான தீர்வு காண முடியும். இதைத் தவிர கல்லக்குடி பேரூராட்சிக்கு ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. தற்சமயம் அவ்விடத்தில் அமைதி நிலவுகிறது.

(2) கதர் விற்பனைமையங்கள் மூடலும், அதனால் பணியாளர்கள் பாதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, டாக்டர் கே. சமரசம், திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர். கே. சமரசம் அவர்கள் அதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, கதர்-கிராமத் தொழில் ஆயத்தின் மூலம் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் இயங்கிவரும் கதர் விற்பனை மையங்கள் மூடப்படுவது குறித்தும், அதனால் பணியாளர்கள் பாதிக்கப்படுவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, தமிழ்நாடு - கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் தற்பொழுது 171 கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்கள் இம்மாநிலத்

தில் பல்வேறு இடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுள் லாபகரமாகச் செயல்படாத 44 விற்பனை நிலையங்களை அவற்றிற்கு அண்மையிலுள்ள கதர் விற்பனை நிலையங்களுடன் இணைத்து அவற்றை பயனுள்ள வகையில் லாபகரமாகவும் திறம் படவும் இயங்கச் செய்ய வேண்டும் என்று வாரியம் தீர்மானித்திருந்தது. எனினும், இது குறித்து மீண்டும் பரிசீலித்தபின் நடப்பு ஆண்டு விற்பனையையும் கவனத்தில் கொண்டு இத்தீர்மானத்தை அமல் படுத்தலாம் என்று வாரியம் முடிவெடுத்துள்ளது. எனவே வாரியத்தின் கீழுள்ள விற்பனை நிலையங்களில் இன்றைய தேதியில் எந்த நிலையமும் மூடப்படவில்லை. அதன் மூலம் எவரும் பாதிக்கப்படவில்லை.

(8) அரசினர் தீர்மானங்கள் - தொடர்ச்சி

(ஆ) நீதிபதி இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, மாண்புமிகு இஸ்மாயில் கமிஷன் அறிக்கைமீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த அறிக்கை நீண்ட அறிக்கையாக உள்ளது. சென்னை சிறையில் நடந்த கொடுமைகள் பற்றி மிகவும் விவரமாக இருக்கிறது. குறிப்பாக சென்னைச் சிறைச்சாலையிலே நடந்த கொடுமைகள் பற்றி இந்த கமிஷனில் குறிப்பிட்டிருப்பது கடந்த கால ஆட்சிக்கு ஒரு கண்டனம் ஆகும். அன்றைய ஆட்சிக்கு ஒரு எச்சரிக்கையாக இது அமைந்திருக்கிறது. குறிப்பாக, சிறைச்சாலை என்பது—அது கொடுமைகள் நிறைந்து இருக்கிற ஒரு இடம், மனித இதயமற்ற அதிகாரிகள் நடமாடும் ஒரு இடம் என்பதை இந்த அறிக்கையில் பார்க்கிறோம்.

சென்னை சிறைச்சாலை சிப்பாய்க் கலகம் நடந்தபோது கட்டப்பட்டது. அது எந்தவித சீர்திருத்தமும் செய்யப்படாத நிலையில் இருக்கின்றது. மிகப் பெரிய காம்பவுண்டு சுவர் இருக்கக்கூடிய அந்த சிறைச்சாலையை விட்டு ஓடிவிட்டால் என்ன செய்வது என்கிற எண்ணத்தில் அதிகாரிகள் படுக்கப் போகும் முன் ஒரு முறை எண்ணுவது, படுத்த பிறகு ஒரு முறை எண்ணுவது, காலை எழுந்தவுடன் ஒரு முறை எண்ணுவது, ஆக இப்படிப் பட்ட வழக்கங்கள் அதே நடைமுறைகள் வழிவழியாகத் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் அநாகரீகமானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசியல் கைதிகளையே இப்படி நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் சாதாரண குற்றவாளிகளை அதாவது திருடிவிட்டு, கொலை செய்துவிட்டு அங்கே வந்திருப்பவர்களை எப்படி நடத்துவார்கள் என்பதைப் பற்றிச் சொல்லவே முடியாது. ஆகவே

மனிதாபிமானத்தோடு சிந்தித்து காரியங்களை ஆற்ற வேண்டும். நாம் எல்லாம் ஆடு வளர்க்கிறோம். கோழி வளர்க்கிறோம், பூனை வளர்க்கிறோம், இந்த மிருகங்களைக்கூட மனிதாபிமானத்தோடு பார்த்துக்கொள்கிறோம். ஆனால் சென்னைச் சிறைச்சாலையிலேயும், மற்றச் சிறைச்சாலைகளிலேயும் அரசியல் கைதிகள் அரசியல் கைதிகளாக நடத்தப்படுவதில்லை.

அவர்களுக்கு மச்சம் இருக்கிறதா என்று பார்க்கிறார்கள். அதுவும் கையிலே மச்சம் இருந்தால்கூட சட்டையைக் கழட்டினால்தான் அது அதிகாரிகள் கண்ணுக்குத் தெரியும். அந்தக் கண்களை கண்ணாடி போட்டுத்தான் பார்க்க வேண்டும். வேறுவிதமாகச் சொல்வேன். சொல்லக்கூடாது என்பதற்காக விடுகிறேன். மனிதன் சிறைக்குப் போகிறான். கையிலே மச்சம் இருக்கிறது. நானும் கூட 7, 8 தரம் சிறைக்குச் சென்றிருக்கின்றேன். அரசியல் கைதி என்றால் இப்படித்தான் நடத்தப்பட வேண்டும் என்பதற்கு புதிய ஜெயில் மானுவல் ஒன்று கொண்டுவரப் படவேண்டும் என்று நான் வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் கைதிக்குத் தனியான இடம் மிசா கைதிக்குத் தனியான இடம் என்று சிறைச்சாலையிலே கிடையாது ஒன்பதாவது பிளாக்கிலிருந்து 8-வது பிளாக், 8-வது ப்ளாக்கிலிருந்து 7-வது பிளாக் என்று இப்படி மாற்றி மாற்றி அடைக்கிறார்கள். இப்படிப் பட்ட நடைமுறைதான் தொடர்ந்து இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

சிறைச்சாலை என்பது அண்ணல் காந்தியடிகளிலே இருந்து, நேருவிலே இருந்து பலர் சிரமப்படக்கூடிய இடமாகத்தான் இருந்திருக்கின்றது. அன்றையதினம் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட காரணத்தினால் மதிப்பிற்குரிய ஜெபமணி அவர்கள் சிறையிலே தள்ளப்பட்டு அடி வாங்கினார். இப்போது அதே உறுப்பினர் மிசா சமயத்தில் சிறைச்சாலைக்குள்ளே தள்ளப்பட்டு அடிக்கப் பட்டிருக்கிறார்:

நான் சொல்கிறேன். அந்த அளவிற்குப் பாதிக்கப்பட்ட மதிப்பிற்குரிய நெல்லை ஜெபமணியையே அந்த ஜெயிலுக்கு சூப்பிரண்டாகப் போட்டு அந்த அதிகாரியையும் ஜெயிலிலே போட்டு ஒரு மூன்று மாத காலத்திற்கு அவருடைய கையிலே அந்த ஜெயிலைக் கொடுக்க வேண்டும். ஆனால் அவர் மனிதாபிமானம் உடையவர்கள். அவர் கூட ஒன்றும் செய்யமாட்டார். ஆக இந்த அளவுக்கு இங்கே சென்னைச் சிறைச்சாலையிலே கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன.

இந்த ஒரு சம்பவம் மட்டுமல்ல. பகவத்சிங், சுகதேவ், போன்றவர்களைத் தூக்குமேடைக்கு அனுப்பியது இப்படிப்பட்ட சிறைதான்.

சேலத்தில் 1951 இல் எங்கள் தொண்டர்கள் 21 பேர்களை சுட்டுக்கொன்ருர்கள். ஏன் என்று கேட்பதற்கு யாரும் இல்லை. அது மட்டுமல்ல. இன்றைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்தபொழுதும்2 பேர், 3 பேர் 5 பேர், என்று தூக்கிலே ஏற்றப்பட்டிருக்கிருர்கள். இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் இனிமேல் எதிர்காலத்திலாவது நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தக் கமிஷனுடைய அறிக்கை, நமக்கு ஒரு சிவப்பு விளக்காக அதிலே சில அம்சங்களுடன் இப்போது தரப் பட்டிருக்கின்றது என்று நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

குறிப்பாக இந்த சிறைக் கமிஷன் பொறுத்து பல்வேறு விளக்கங்கள் இருக்கின்றன. சிட்டிபாபு எழுதியிருக்கிற விஷயம்கூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தும், மாதவன் கையில் சிறை இருந்தும் சீர்திருத்தம் இல்லை என்று குறிப்பிட்டிருக் கிருர்கள். 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் நாங்கள் 4,500 பேர்கள் சிறைக்குப் போயிருந்தோம், விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு கேட்டதற்காக. திருவேங்கடம், நாகூரான் சிறையில் இறந்தார்கள். 10,000 பேர்கள் ஒரே சிறையில் அடைக்கப் பட்டோம்.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தங்களுக்குக் கொடுக்கப் பட்டிருப்பதோ பதினைந்து நிமிடங்கள் இஸ்மாயில் கமிஷன் அறிக்கைபற்றிப் பேசுங்கள். ஏற்கனவே நடந்ததைப் பற்றி பேசி நேரத்தைவீணுக்காதீர்கள். எனக்கு ஒன்றும் இல்லை, 45 ஆனவுடன் பெல் அடித்துவிடுவேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> இந்த அறிக்கையில் இருக்கிறபடி, யார் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள், அந்தச் சிறையில் அடித்து, கொடுமைப்படுத்தியவர்களை உடனடியாக அரசாங்கம் அவர்களை சஸ்பெண்ட் செய்து — என்கொயரியே தேவையில்லை, அவர்களை டிஸ்மிஸ்தான் செய்யவேண்டும். என்கொயரி ஒன்றும் அவர்களுக்கு தேவை இல்லை. இந்த அறிக்கையில் சிலயிடங்களில் குறிப்பிட்டி ருக்கிற முறையில், சிறைச்சாலைகளின் தலைமைப் பொறுப்பாளி, ஐ.ஜி. யைப் பற்றி சுற்றிவளைத்து அவரைப் பற்றி சிலயிடங் களில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது, சிறைச்சாலைக்கு நேரடியாக வந்திருக்க வேண்டும், வரவேற்றிருக்கவேண்டும் என்றிருக்கிறது.

ஒன்பது மத்திய சிறைச்சாலைகளிலும் மிசா கைதிகள் கொண்டுசெல்லப்பட்டிருக்கிருர்கள். ஐ.ஜி. அவர்கள் ஒன்பது இடங்களிலும் அவர்களை வரவேற்கமுடியுமா ? ஒன்பதாவது ப்ளாக் க்வாரண்டைனுக்கு அனுப்புவது என்ருல், அவையெல்லாம் சிறைச்சாலையிலுள்ள அன்ருட நிர்வாகம். நாங்கள் கூட முன்பு

காலையில் ஒரு லாக்கப்இரவில் ஒரு லாக்கப் என்றுமாற்றப்பட்டிருக் கிருேம். நாங்களும் சிறைச்சாலைகளில் இருந்திருக்கிருேம். அவை எல்லாம் அன்ருட நிர்வாகத்தைச் சேர்ந்தது. குறிப்பாக இதில் சொல்லப்பட்டிருக்கிற முக்கியமான விஷயம்—இன்றைக்கு சுற்றிவளைத்துப் பார்க்காமல் இந்த கமிஷனுக்குக் கொடுத்திருக்க கூடிய டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்-யை தாண்டி இந்தச் சம்பவத் திற்கு யார் நேரடியாகப் பொறுப்பு, அடித்தவர்கள் யார், தாக்கிய வர்கள் யார், யார் அதற்கு நேரடியாகப் பொறுப்பு என்பதைக் கடந்து இந்தக் கமிஷன் அறிக்கையில் சிறைச்சாலைத் தலைவரைப் பற்றி ஐ.ஜி. பற்றி இவருக்கு பொறுப்பு இருக்கிறது, இவர் அப்படிச் செய்திருக்கலாம், இப்படிச் செய்திருக்கலாம் என்ருல் உள்துறை செயலாளர் சிறைக்கு வந்தார்களே, அவர்களிடத்தில் மனு கொடுக்கப்பட்டதே, அந்த மனுமீது நடவடிக்கை எடுக்காமல் — கே. சுப்பிரமணியம் — கமிஷன் வந்த பிறகு அதிலே கொண்டு வந்து அதை பொருத்தச் செய்ததன் அர்த்தம் என்ன ?

மிசா கைதிகள் கோரியதென்ன ? உடனடியாக விசாரணை வேண்டும், நிவாரணம் வேண்டும் என்று அவர்கள் கொடுத்த விண்ணப்பம் நேரடியாக கமிஷனுக்குக் கொண்டு வந்து தாக்கல் செய்யப்படுகிறது. ஐ.ஜி. மட்டும் பொறுப்பல்ல. சிறைச்சாலையில் இருந்த அதிகாரிகள் மட்டும் பொறுப்பல்ல. ஏன், 31-ம் தேதி திராவிட முன்னேற்றக் கழக அரசு நீக்கப்படுகிறது. 1-ம் தேதி கைது, இது திட்டமிட்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கிற போதே சி.பி.ஐ குறிப்பிட்ட தி.மு.க.வினர் பட்டியலைத் தயாரித்திருக்கிருர்கள். 1-ம் தேதி கைது, 2-ம் தேதி தாக்குதல்.. முன்னேற்றக் கழகம் மீது வஞ்சம் தீர்க்கவேண்டுமென்று நினைத்த அதிகாரி யார் ? ஓம் மேத்தாவிற்கு இதில் பொறுப்பு என்ன ? உள்துறை செயலாளருக்கு பொறுப்பு என்ன ? என்பதைப் பற்றியெல்லாம் விரிவாகவிசாரிக்க இந்த அறிக்கை மட்டுமல்ல, இதை ஷா கமிஷனோடு சேர்த்து விசாரிக்க வேண்டும். பல பேர்கள், பொறுப்பானவர்கள் தப்பித்து அம்பாசிடராகவும். உள்துறை பொறுப்பாளராகவும் இன்று மாறியிருக்கிருர்கள், என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

திட்டமிட்டு சென்னை சிறைச்சாலையில் மட்டும் இது நடந்திருப் பது, தி.மு.க. வை வஞ்சம் தீர்க்கவேண்டும் என்று குறிப்பிடப் பட்டவர்கள் தூண்டுதல் இல்லாமல் இது நடக்கவில்லை. சிறைச் சாலைத் துறைத் தலைவரைப் பற்றி சுற்றிவளைத்து சுற்றிவளைத்து சொல்லியிருக்கிருர்கள். திரு. கே. சுப்பிரமணியத்தைப் பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ சொல்லாததின் ரகசியம் என்ன என்பதைப்பற்றி நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிருேம். அன்று உள்துறைச் செயலாளராக இருந்தது யார் ? அவர் என்ன சொன்ஞர். அவர் எடுத்த நடவடிக்கைகள் என்ன, அவரைப் பற்றி எதுவும் இதில் குறிப்பிடப்படவில்லை. எனவே அதிகாரி

களைப்பற்றி யெல்லாம் அன்றைக்குஇருந்த ஆர்.வீ. சுப்பிரமணியம். தவே, இவர்களெல்லாம் இதில் இசைந்திருக்கிறார்கள். இவர்கள் இன்றைக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் அன்றைக்கு இதற்கு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அன்றைக்கு இருந்த செயலாளர் யார் என்பதையெல்லாம் விரிவாக விசாரிக்க வேண்டும். இந்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கையோடு ஷா கமிஷனுடன் இணைந்து விசாரிக்க வேண்டும். சிறைச்சாலையை பொறுத்த வரையில், சிறைச் சாலைக்கு வருகின்றவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்காளாக இருந்தாலும் சரி, இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கக்கூடியவர்கள் நேற்று ஆளும் கட்சியாக இருந்தவர்கள், இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கின்றவர்கள் நேற்று எதிர்கட்சியாக இருந்தவர்கள்.

அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருந்தது, இன்றைக்கு எதிர்க்கட்சி, அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆளும் கட்சி. இப்படி அரசியலில் ஆளும் கட்சி எதிர்கட்சியாக மாறுவதும், எதிர்க்கட்சிஆளுங்கட்சியாக மாறுவதும் சர்வசாதாரணமாக நடக்கக்கூடிய காரியம். அன்றைக்கு பாராளு மன்றத்தில் பெரும்பான்மையோடு இருந்த ஆளும்கட்சி, தேர்தலுக்குப் பிறகு எதிர்கட்சியாக மாறியது, எனவே இதெல்லாம் அரசியலில் சாதாரணமாக நடைபெறக் கூடியது. எனவே அரசியல் வாதிகளைப் பொறுத்தவரையில், அரசியல் வாதிகள்—அவர்கள் எந்தக்கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—அரசியல்வாதிகள் அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டால் எவ்வாறு சிறைச்சாலைகளில் நடத்தப்பட வேண்டும்என்பதற்கு ஒருவரைமுறையை நிர்ணயிக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது) சென்னைச் சிறைச் சாலையில் நடந்த சம்பவங்களைப் பொறுத்த வரையில், இதற்கெல்லாம் நேரடியான பொறுப்பு யார்? கதிரேசன் என்பவரை குதிரை போல் ஓடச் சொன்னார்களாம் . (குறுக்கீடு) ஆம், துணிகளையும் அவிழ்த்துவிட்டு, ஓடச்சொன்னார்களாம். இப்படி ஓடச்சொன்னவர் யார்; அவர் யாராக இருந்தாலும் அந்த அதிகாரி, மவுண்ட் ரோட்டில் துணியில்லாமல் ஓடவேண்டும்: அரசியல்வாதிகள் கைதிகளாக இருந்தாலும் சரி—வேறு யாராக இருந்தாலும் சரி இவர்கள் மனிதாபிமான இதயத்தோடு நடத்தவேண்டும். சிறைச்சாலைக்கு யாரும் குற்றவாளியாக வரக்கூடும், குற்றவாளியாக வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது.

சிலரைப் பொறுத்த வரையில், சூழ்நிலை காரணமாக குற்றவாளிகளாக வரவேண்டியிருக்கிறது. இதை மாற்றுவதற்கு என்ன செய்வது என்பதைப்பற்றி இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது, சூழ்நிலை காரணமாக கைதிகள் உருவாகலாம். ஆனால் அவர்களை எல்லாம் மனிதாபிமான இதயத்தோடு நடத்தவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் கைதிகள் என்று வரும்போது, அவர்கள் இன்னின்ன முறையில்தான்

நடத்தப்பட வேண்டும் என்ற வரைமுறையை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு சென்னைச் சிறைச் சாலையைப் பொறுத்தவரை, இதில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, இன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கை தமிழகத்திலும் சரி சரி, மற்ற எந்த நாடுகளிலும் அரசியல் காரணங்களுக்காக சிறைப்படுத்தப்பட்ட கைதிகள் அவர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின் மூலமாகவோ அல்லது வேறு எந்த சட்டத்தின் மூலமாகவோ கைது செய் யப்பட்டிருந்தாலும் கொடுமையாக நடத்தப்படக்கூடாது என்கின்ற கருத்தில் நான் சேர்ந்திருக்கின்ற உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் ஆழ்ந்த கருத்தை தெரிவித்துக்கொள்கிறேன். கொடுமை என்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. அரசியல்வாதிகள் என்று சொல்லும்போது, இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கக் கூடியவர்கள் நாளைக்கு ஆளும் கட்சியாக வரலாம். இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கக்கூடியவர்கள் நாளைக்கு எதிர்க்கட்சியாக வரலாம்.

ஆகவே, எந்த அரசியல்வாதியாக இருந்தாலும் சரி, சிறை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. தமிழகத்தில் 9 சிறைச் சாலைகள் இருக்கின்றன. குறிப்பாக சென்னை மாநகரத்தில் இருக்கின்ற சிறைச்சாலையைத்தான் நாம் இன்றைக்கு கவனிக்க வேண்டி இருக்கிறது.

அங்கு நடந்த சம்பவங்களைப்பற்றி விசாரிப்பதற்காக கமிஷன் போட்டு 'டெர்ம்ஸ் ஆப்ரெஃபரன்ஸ்'-ஸில் 1976 பிப்ரவரி முதல் பிப்ரவரி 1977 வரையிலும் அங்கு நடந்தவற்றையெல்லாம் விசாரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இந்த நேரத்தில் நடைபெற்ற கொடுமைகளுக்கு ஆளானவர் யார் யார், இதற்கு காரணமாக இருந்தவர்கள் யார் யார் என்பதையெல்லாம் கண்டறிகின்ற முறையில்-ஃபேக்ட் ஃபைன்டிங் கமிட்டி என்ற முறையில் இந்த கமிஷன் அமைக்கப்பட்டது. இப்படி போட்டிருந்த தோடு, எமர்ஜென்ஸி காலத்தில்- அதாவது எமர்ஜென்ஸி அமலில் வந்த 1975 ஜூன் மாதத்திலிருந்து இந்த அறிக்கை தருவதற்கு உரிய முறையில் டெர்ம்ஸ் ஆப் ரெப்ரன்ஸ் கொடுக் கப்பட்டிருக்குமானால் அப்போதிருந்தே பாதிக்கப்பட்ட எல்லோரையும் சேர்த்து கவனிப்பதற்கும், இதனால் பாதிக்கப்பட்டவர் கள் யார் யார் என்பதையும், அதற்கு காரணமானவர்கள் யார் என்பதை அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. ரா. மார்க்கபந்து) [1978 ஏப்ரல் 7

(முற்பகல் 11-50)

இந்த அறிக்கையைப் பார்க்கின்ற நேரத்திலே, அதிலே அரசியல் வாடை வீசுகின்றது என்று நான் கருதுகிறேன். காரணம் இரண்டு. ஒரு தேதியிலே கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்காக ஆஜரான பாலை சண்முகம் என்ற வழக்கறிஞர் 12-3-1978 தேதியிலே பொதுக் கூட்டத்திலே பேசுகின்றபோது, அவர் பகிரங்கமாகவே அறிவிக்கிறார். கூட்டத்திலே அப்படி பேசி இருப்பது ரெக்கார்டு ஆகியிருக்கிறது. (குறுக்கீடு) it is not reflection anybody—பொதுக்கூட்டத்திலேயே அறிவிக்கிறார்கள்; பேசுகிறார்கள்.

* * *

என்று நினைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். நான் இதைச் சொல்வது யாருக்கும் களங்கம் கற்பிப்பதற்காக அல்ல.

(உறுப்பினர்கள் திரு. என். கிட்டப்பா, திரு. சி. ஆறுமுகம் ஆகியோர் எழுந்திருத்தல்.)

திரு. சி. ஆறுமுகம் : பாயிண்ட் அப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது நீதிபதி அவர்களுடைய தீர்ப்பிற்கு களங்கம் கற்பிப்பதாக இருக்கிறது. எனவே, அவைகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட உத்தரவிடும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உறுப்பினர் கிட்டப்பா அவர்களைக் கூப்பிட்டேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்றுகூட இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டதற்கு, பேரவைத் தலைவராகிய தாங்கள் தீர்ப்பளித்திருக்கிறீர்கள் இருந்தாலும்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். லெட் மி சே** என்னுடைய முடிவை நான் சொல்லிவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1978 ஏப்ரல் 7]

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR : The version of Thiru Palai Shanmugham may be there in the newspapers. But there is no nexus between what is claimed by Palai and the resultant report of Justice Ismail and therefore any allegation made againt Justice Ismail alleging partiality to him or that he is directly or indirectly influenced by what has been stated, would be a kind of relection on the impartiality and integrity cf a Judge and may therefore be expunged.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் யாரோ பாலை சண்முகம் என்றும், நீதிபதி இஸ்மாயில் அவர்கள் இப்படியெல்லாம் பேசினார் என்றும், பேசிய அத்தனையையும் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : The fact is he has spoken like that in a public meeting. I am not pressing the point how far it has influenced the findings of Justice Ismail....

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். வெளியே ஒருவர் பேசியது உண்மையாகவும், உண்மை இல்லாததாகவும் இருக்கலாம். அதை உண்மை என்று வைத்துக்கொண்டு, இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்கிறபோது, நீதிபதிக்கு களங்கம் கற்பிக்கின்ற நிலைமைக்கு ஆளாக்கப்படுகின்றது. அவர் பேசியது தவறோ, சரியோ, அது வேறு. அதற்காக நடவடிக்கைகள் எடுப்பது என்பது வேறு. இதை இங்கே கொண்டு வந்து சொல்கிறபோது, சட்டமன்ற நடைமுறைக்கு மரபு அல்ல என்று நேற்றையதினமும் நான் இதைப்பற்றிச் சொன்னேன்; இன்றைக்கும் சொல்கிறேன். இந்தக் காரணத்தினாலே, இதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்னையைவிட்டு, வேறு பிரச்னைக்குச் செல்லுங்கள். நீதிபதி அவர்களைக் களங்கம் கற்பிக்கின்ற வகையிலே அவர் பேசியதை, அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, பாலை சண்முகம் என்பவர் பொதுக் கூட்டத்திலே பேசியதை இங்கே சொல்லக் கூடாது என்று சொன்னால், அதிலே என்ன நியாயம் இருக்கிறது என்றுதான் நான் கேட்கிறேன். I am not going into that aspect, how far it had influenced the findings of the commission. அதை விட்டு விடுகிறேன். நானே கேட்டுக்கொள்கிறேன். அதை நீக்கி விடுங்கள். ஆனால், இப்படிப் பேசப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் தெரிவித்துள்ளேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உறுப்பினர் அவர்களுக்கு
நான் சொல்வது, வெளியே பேசியதை ஆதாரமாக வைத்து
இங்கே பேசுவது சரியல்ல. தவிர, அப்படிப் பேசியது தவறா, சரியா
என்பதிலே இந்த அவைக்கு அக்கறை இல்லை. வெளியே பேசியது
தவறா, சரியா என்பது வேறு. அதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.
ஆனால், இங்கே வெளியே, மேடையிலே பேசியதை ஆதாரமாக
வைத்துப் பேசக்கூடாது என்பது தான் இந்த அவையின் மரபாகும்.

<u>திரு. மி. வின்சென்ட் :</u> பாயிண்ட் ஆப் ஆர்டர், வெளியே
பேசியது இஸ்மாயில் கமிஷன் அடிப்படைக்கு ஆதரவாகப் பேசப்
பட்டிருக்கிறது..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவுசெய்து கொஞ்சம்
உட்காருங்கள். நான் ஏற்கெனவே தீர்ப்புச் சொன்னேன்.
வெளியே பேசுகின்றதை, பத்திரிகையிலே வருவதை ஆதாரமாக
வைத்துக்கொண்டு இந்த அவையிலே பேசக் கூடாது. மறுபடியும்
அதையே கிளப்பினால் என்ன அர்த்தம்? தயவுசெய்து அமருங்கள்.

<u>திரு. ரா. மார்க்கபந்து ;</u> லிஸ்ட் ஆப் விட்னசஸிலே 13 பேர்
விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த லிஸ்ட் ஆப் விட்னசைப்
பார்க்கிற நேரத்தில் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்
கிறார்கள். மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் விசாரிக்கப்பட்ட
தாகத் தெரியவில்லை. சாட்சிகளின் பட்டியலைப் பார்த்தாலும் சிறைச்
சாலையில் 4 பேர்களைத்தான் விசாரித்திருக்கிறார்கள். இதிலே
குறிப்பாக இருப்பவர்கள் வித்தியாசாகர் என்பவரும் சையது
என்பவரும். இதையெல்லாம் பார்க்கும்போது இது ஒரு சார்
புடையதாக இருக்குமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.
——— is there any excess to find out the excess அதைக்
கொடுக்க வேண்டுமே தவிர, சிறை சீர்திருத்தங்களைப் பற்றி
யெல்லாம் தனக்குக் கொடுக்கப்பட்ட டர்ம்ஸ் ஆப் ரெபரன்சுக்கு
அப்பாற்பட்டு தந்திருக்கிறார்கள். அது எந்த விதத்தில் ஆராயத்
தக்கது என்று ஆராய வேண்டும்.

ஐ. ஜி. அவர்களைப் பற்றிச் சொல்லுகிற நேரத்தில் மூன்று
முரண்பட்ட கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். ஒன்று, நேரடியாக
அவர்கள் செய்திருக்க வேண்டும். தன்னுடைய கடமையில்
இருந்து தவறி இருக்கிறார்கள் என்று முதல் குறிப்பில் தந்திருக்
கிறார்கள். கடைசியில் சொல்லும்போது இவருக்கும் அவருக்கும்
தொடர்பு இல்லையென்ற காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, பரமகுருவைப் பற்றிச் சொல்லும்போது சிறிது
அதிகமாகச் சொல்லுவதாகக் கருதுகிறேன். அவர் 9 சிறைகளுக்குப்
பொறுப்பாளர். எட்டு சிறைகளில் எக்சசஸ் நடைபெறவில்லை.
சென்னை மத்திய சிறையில் ஏற்பட்ட ஒரு எக்ஸஸ் பற்றித்தான்
சொல்லுகிறார்கள். என்றால் அங்கிருக்கிற கண்காணிப்பாளர் மிக
முக்கியமான பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள்,

இந்த அறிக்கையில் வித்தியாசாகர் அவர்களைப்பற்றிச்
சொல்லுகிறார். ஒரே நாளில் எவ்வளவு செல்வாக்குப் படைத்தவர்
என்பது தெரிகிறது. ஒரே ஒரு நாளில் ஒருவர் மீது வழக்குபோட
வேண்டுமென்று வித்தியாசாகர் விரும்புகிறார். நோட் அனுப்பு
கிறார்கள். பல்வேறு துறைகளுக்குச் சென்று அங்கிருக்கும் சீஃப்
செகரடரிக்குக் கூடச் செல்லாமல் நேரடியாக அங்கிருக்கிற
அட்வைசரிடத்தில் செல்லுகிறது. இரண்டு மணி நேரத்திற்குள்ளாக
உத்தரவு கையெழுத்து போடப்படுகிறது. கேஸ் தாக்கல் செய்யப்
படுகிறது. அதற்காக வக்காலத்து வாங்கிக் கொண்டிருப்பவர்கள்
மகா பெரியவர்கள், அவரைப் பற்றி விசாரிக்க வேண்டு
மென்று நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால்
அவரைக் காப்பாற்ற மகா பெரியவர்கள் ஓம் மேத்தா அவர்களுக்குத்
தபால் எழுதுகிறார்கள். அவரை மாற்றவேண்டிய அவசியமில்லை
என்று அறிக்கை அனுப்புகிறார். இங்கே வித்தியாசாகர் செய்த
நிலைமைகளைப் பற்றித் தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.
ஆனால் அவர் எந்த அளவுக்கு அரசியல்வாதிகளோடு தொடர்
புடையவராக இருக்கிறார்? அவருக்கு வக்காலத்து வாங்கிக்
கொண்டு ஓ. வி. அளகேசன் டில்லி லோக் சபையில் பேசு
கிறார்கள். இவரை மாற்றவேண்டாமென்று சொல்லுகிற அளவுக்கு
அதிகார பலம் இருக்கிறது என்பதற்காகத்தான் இதைச் சொல்
கிறேன்.

அதே நேரத்தில் குறிப்பிட்ட உயர் அதிகாரி மீது சொல்லப்
படுகிறது. இவரைப் பற்றிச் சொல்லும்போது கிருஷ்ணா ஹாத்தி
எழுதிய சிறைச்சாலை கொடுமையைப் பற்றிச் சொல்லுகிறார்கள்.
ஒரு விளக்கத்தைத் தருகிறார்—ஏற்கெனவே குண்டர்களால் அடிக்
கப்பட்டிருக்கிறார்கள். வேகமாகக் கூச்சல் போட்ட பின்னால்
ஆங்கில அதிகாரி கேட்டபோது, 'உங்களுக்குச் சாதகமாக,
திருப்தி ஏற்படுகிற வகையிலேதான் அரசியல் கைதிகளை உள்ளே
அடைத்து வைத்தேன் என்று சொல்லுகிறார். அதைக் கண்டிக்
கிறார் அந்த அதிகாரி. அந்தமாதிரி நிலைமையில் வித்தியா
சாகர் என்பவர் அரசாங்கத்தின் தயவு பெற, நல்ல பெயரை
வாங்க இந்த நிலைமைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட
கொடுமைகள் காலம் காலமாக நடந்து கொண்டிருப்பதாகத்
தெரிகிறது.

முன்பு முத்துராமலிங்கத் தேவர் சிறையில் அடைக்கப்பட்
டிருந்தார். அந்தச் சிறையிலிருந்து அவர்கள் வெளியே வருகிற
போது துரும்பாக வருகிறார்கள். அதைப்பற்றிக் கேட்டபோது
அது தெரிந்த விஷயம் என்றார்———he has been poisoned
அந்த நிலைமைகள் இருக்கின்றன. முத்துராமலிங்கத் தேவர்
சிறையில் அடைக்கப்பட்ட அந்தக் கொடுமைகளைப் பற்றி
விசாரிக்க ஒரு கமிஷன் போட்டால் நலமாக இருக்கும்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 ஏப்ரல் 7

(நண்பகல் 12-00)

ஏனென்றால் மத்திய அரசாங்கத்திலே ராம் மனோகர் லோகியா பற்றியும், மற்றவர்களைப் பற்றியும் அங்கே கமிஷன் வைத்திருக்கிறார்கள். அதுபோல கமிஷனை இங்கே வைப்பது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இது எப்படியிருப்பினும், சிறைக்கொடுமைகள் என்பது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. இங்கே அறிக்கை தந்திருக்கிறார்கள். நான் பொதுப்படையாகச் சொல்கிறேன். Fact Finding Commitee, ஃபேக்ட் ஃபைன்டிங் கமிஷன் என்று சொல்லப்படுகிறது. இப்பொழுதுகூட சர்க்காரியா கமிஷனிலே ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து டிஸ்மிஸ் செய்யப்படவில்லை. ஆனால் இதேபோன்று டிஸ்மிஸ் செய்யப்பட வேண்டுமென்று சொல்லும்பொழுது டிஸ்மிஸ் என்பது அதிகப்படியாக இருக்கும், ஆனால் கமிஷனின் அறிக்கையில் வந்திருக்கும் இவர்கள் இவர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டவர்களை சஸ்பென்ட் செய்து அவர்கள் மீது விசாரணையை உடனடியாக நடத்தி இந்தக் கொடுமைகளுக்குப் பரிகாரம் தேட வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நீதிபதி எம். எம். இஸ்மாயில் அவர்களால் விசாரிக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ள விசாரணைக் கமிஷன் அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு நன்றி நவின்று என் அறிவுக்கெட்டிய சில கருத்துக்களை இதன் மீது சொல்ல முன் வருகிறேன்.

இந்த விசாரணைக் கமிஷன் அறிக்கையை முழுவதுமாகப் படித்த பிறகு நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால் பாம்பு என்று அடிக்கவும் முடியவில்லை, பழுதை என்று தாண்டவும் முடியவில்லை, என்றுதான் தெரிகிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த விசாரணைக் கமிஷன் அறிக்கையை வைத்துச் சிலர் பேசுகின்ற பேச்சுகளையும், நடவடிக்கைகளையும் பார்க்கும் பொழுது சாவு தொண்டனுக்கு, சரித்திரம் தலைவனுக்கு என்ற இலக்கணத்தை நிலை நாட்டுகிறதே தவிர இது முழுமையானதாக இல்லை என்பது என்னுடைய அடிப்படையான கருத்து ஆகும்.

அதுமட்டுமல்ல, விசாரணைக் கமிஷன் என்பது அவசர காலசட்டத்தின்பொழுது ஏற்பட்ட கொடுமைகளைப் பற்றி விசாரிக்க ஏற்படுத்தப்பட்ட கமிஷனாகும். இந்தக் கமிஷன் இடைக்காலத்திலே ஏற்பட்டவைகளுக்காக அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, இது அவசர காலச் சட்டம் என்றைக்கு அமலாக்

1978 ஏப்ரல் 7] [டாக்டர் கே. சமரசம்]

கப்பட்டதோ அன்றையிலிருந்து விசாரித்திருக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்தாகும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். காரணம், அப்பொழுதிருந்து ஏற்பட்ட பிரச்னையின் அடிப்படையில் பார்க்க வேண்டும். அப்பொழுது விபரீதங்கள் உள்ளே நடந்ததாக நான் கருதுகிறேன். அதுமட்டுமல்லாமல் இங்கே பலப்பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியிருக்கும் பொழுது மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் சில கருத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், கற்பூரம் போல கடலுப்பு இருந்தாலும் கற்பூரம் ஆமோ கடலுப்பு என்பதைப்போல சுப்பு அவர்களின் கருத்து இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இந்த விசாரணைக் கமிஷன் முழுமையாக இல்லை என்பதோடு, அதே நேரத்தில் எப்பொழுது உள்ளே வருவார்கள் என்று ஏற்கனவே அவசரக் காலச் சட்டம் அமலில் இருந்த காலத்தில் ஆயுள் கைதிகள் பழி தீர்த்துக் கொண்டதாகப் பலப்பலக் கருத்துக்கள் இங்கே சொல்லக் கூடியதாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் இந்த விசாரணைக் கமிஷன் இதற்குமுன் அவசரகால நிலைக்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட முரசொலி அடியார், ஜேப்பியார் போன்றவர்களின் நிலைமைகளை விட்டுவிட்டிருப்பது நல்லதொரு முடிவான கருத்தாகச் சொல்ல முடியவில்லை என்பது என்னுடைய தாழ்ந்த அபிப்பிராயம்.

அதுமட்டுமல்ல, இங்கே பேசுகின்றபொழுது மாண்புமிகு உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்கள் சொன்னார்கள். சதாசிவம் கமிட்டி என்று அறிவிக்கப்பட்டது, சதாசிவம் அவர்களை நியமித்தார்கள். நான்தான் எதிர்த்தேன். என்னுடைய கருத்தைச் சொன்னேன், பிறகு இஸ்மாயில் அவர்களை இங்கே போட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தக் கமிஷனிலே கயூம் என்று ஒருவர் வருகிறார். அவர் வந்து விஷயங்களைச் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அப்பொழுது இந்த நியாயம் மட்டும் எப்படிச் சரியாக இருக்கும். எல்லோரும் ஏற்றுக்கொள்ள முடியும், அவருடைய வாதத்தின்படி பார்த்தால் சரியாக இல்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதுமட்டுமல்ல இந்தக் கமிஷனிலே பலப்பலக் கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணாக ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அவர்களுக்கு உதவுவதற்காகத்தான் சொல்கிறேன் கயூம் அவர்களைக் கன்டெம் செய்து ரிப்போர்ட்டில இருக்கிறது. ஜெயிலில் பணியாற்றிய கயூம் என்பவர் செய்தது தவறு, தவறு செய்திருக்கிறார் என்று இஸ்மாயில் அவர்கள் அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். ஜஸ்டிஸ் இஸ்மாயில் அவர்கள் அவர்களுக்குச் சாதகமாக அல்ல.

டாக்டர் கே. சமரசம் : நன்றி: என்னுடைய கருத்தே இது முழுமையாக இல்லை என்பதுதான். யார் யார் விசாரிக்கப்பட வேண்டுமென்று கருதுகிறோமோ அவர்களெல்லாம் அங்கே அனுமதிக்கப்படவில்லை. விசாரணைக்கு யார் யார் தேவை என்று முழுமையாகச் சொல்கிறோமோ அவர்கள் அத்தனை பேர்களும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதைத் தாழ்மையுடன் திட்டவட்டமாக என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இன்னும் பலரைச் சேர்த்திருக்க வேண்டும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் இங்கே பேசும்பொழுது சில பேர்கள் விசாரணைக்கு அனுமதிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். அனுமதிக்கப்படாமல் இல்லை. இவர்கள் அதற்கு முன்வரவில்லை, முன் வந்த அத்தனை பேர்களையும் அனுமதித்திருக்கிறார்கள். தலைவரவர்களே, என்னுடைய ஒலிபெருக்கி சரியாக வேலை செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிட்டப்பாவிற்காக ஒலிபெருக்கி வேலை செய்யவில்லை என்றால் துர்ப்பாக்கியம்தான்.

திரு. மி. வின்சென்ட் : பாய்ன்ட் ஆப் ஆர்ட்ர், பாய்ன்ட் ஆப் ஆர்டர்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பதைப் பார்த்தால் நான் கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்று சொல்கிறீர்கள் அப்படிதானே, உட்காருங்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, ஆகவே ஏற்கெனவே வாக்குமூலம் கொடுத்தவர்கள் பின்பு சொல்லக்கூடிய கருத்துக்கும் அதற்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருப்பது இந்த அறிக்கையை முழுமையாகப் படித்தபிறகு நாம் தெரிந்து கொள்ளக்கூடிய வகையிலே இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இந்த 9 ஆம் பிளாக்கிற்கே போகாதவர்கள், 2 ஆம் தேதி சிறைக்குச் செல்லாதவர்கள், வெளியிலே, மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்று சொல்கின்ற நிலைமையெல்லாம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கும்போது, சாவு தொண்டனுக்கு, சரித்திரம் தலைவனுக்கு என்று நிலைமையிருப்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை) இன்னும் பல உண்மைகள் முழுமையாகத் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் அவைகள் இருந்தால்தான் யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்மோ

அவர் மீது நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும். நீதி வழங்கும் முறையே எப்படியிருக்க வேண்டுமென்று பார்த்தால், 99 குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டாலும் 1 நிரபராதியைத் தண்டிக்க கூடாது என்று நாம் எல்லோரும் சொல்கிறோம், அனைத்துக் கட்சிகளும். ஆகவே, நிரபராதிகள் தண்டிக்கப்படாமல் இருப்பதற்கு இன்னும் இதுபற்றி விவரமாகப் பரிசீலித்து, ஆராய்ச்சி செய்து முடிவுக்கு வரவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான திட்டவட்டமான கருத்தாகும். அது மட்டுமல்லாமல் பிப்ரவரி 2 ஆம் தேதி மாலையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில், காலையிலிருந்து நடந்த நிகழ்ச்சிகள் எப்படி எப்படி நடந்தன, ஏன் மாலையிலிருந்து போட்டார்கள் என்பதற்கான விளக்கங்களை எல்லாம் நாம் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இதைவிடப் பெரிய விஷயம் என்னவென்றால், பாதிக்கப்பட்டு உள்ளே சென்றவர்கள், அங்கே அடிக்கப்பட்டவர்கள், உதைபட்டவர்கள், இதைப்பற்றி அதிகமாகப் பேசுகிறார்களா என்றால் இல்லை. அவசர காலத்தின்பொழுது, சட்டமன்றம் கலைக்கப்பட்டு வீட்டுக்குப் போனவர்கள் எல்லாம், அப்பொழுது அமைதியாக இருந்து அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவசர காலத்திலும் பதவியில் அமர்ந்திருந்து வாழ்ந்து கொண்டிருந்த புலவர் கோவிந்தன் அவர்கள் இதை எடுத்துச் சொல்லும்போது அது எப்படி சரியாகும்?

* * *

திரு. சி. ஆறுமுகம் : ஆதாரம் இருக்குமானால் அந்தக் கடிதத்தை இந்த மன்றத்திலே வைக்கவேண்டும். இல்லையென்றால் அவர் சொன்னதைத் திரும்பப் பெற வேண்டும். அம்மாதிரி செய்வதற்கு வேறு ஆளை பார்க்க வேண்டும். இதற்கு தாங்கள் தீர்ப்பு கொடுக்கவேண்டும்.

திரு. டி. கே. கபாலி : தலைவரவர்களே, என்னை பாதிக்கிறது. ஆகவே, அதற்கு ஆதாரத்தைக் காட்ட வேண்டும். இல்லை என்றால், குறிப்பேட்டிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : நீங்கள் கேட்டு முடித்துவிட்டீர்கள், தயவுசெய்து அமைதியாக இருங்கள். இந்தக் கமிஷன் ரிப்போர்டிலே பேசும்போது நேற்றிலேயிருந்து சொல்கிறேன் நீங்கள் பேசியது அதிலே ஏதாவது இருக்கிறதா ? அந்த ரிப்போர்ட்டிலே ஏதாவது, * *இருக்கிறதா ? இல்லையா ?

டாக்டர் கே. சமரசம் : அந்த ரிப்போர்ட்டில் இல்லை. என்னிடம் வேறு ஆதாரம் இருக்கிறது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : அந்த ரிப்போர்ட்டில் இருந்தால் வாசியுங்கள். இல்லையென்றால் உட்காருங்கள்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : பேரவைத் துணைத் தலைவரவர்களே இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டின் மீதுதான் விவாதம் நடைபெறுகிறதே தவிர, நடந்திருக்கலாம் என்று இப்படி கற்பனை செய்து கொண்டு வாதங்களை வளர்த்துவது தேவையற்ற வெப்பத்தை விவாதத்திலே உருவாக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதியை அதை மட்டும் நீக்கிவிட்டு தொடர்ந்து அவர்கள் பேசும்பொழுது இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டின் அடிப்படையிலேயே பேசுவதற்கு நீங்கள் உங்களது ஆலோசனையை வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு உறுப்பினர் இங்கே இருக்கிறவர்கள் இந்த அவைக்கு வெளியே இருப்பவர்கள் பெயரைக் குறிப்பிட்டு** சொன்ன சம்பந்தப்பட்ட பகுதியை நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

<u>டாக்டர் கே. சமரசம்</u> : இன்றையதினம் விசாரணைக் கமிஷன் அறிக்கையிலே கூட மாண்புமிகு சிட்டிபாபு உள்ளே இருக்கும்போது ஒரு டையரி எழுதியிருக்கிறார் ; அதைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே பல பகுதிகள் இல்லாமலிருக்கின்றன. ஆகவே அதிலே வழங்கியிருக்கிற நீதி பல பகுதிகள் இல்லாமலிருக்கிற காரணத்தினால்கூட அது முழுமை பெறவில்லையென்று சொல்கிறேன்.

(பிற்பகல் 12.10)

அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட தன்னுடைய மகனை கேட்கிறபோது நான் அடிபடவில்லை என்று சொல்லியதாக இந்த அறிக்கையிலே இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் பார்க்கிறபோது இந்த விசாரணை முழு திருப்தி அளிக்கக் கூடியதாக இல்லை. முன்பும் பின்பும் விட்டு இடையிலே இருக்கிற காரணத்தினால் இதிலே பல குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதற்கும்; பல நிரபராதிகள் தண்டிக்கப்படுவதற்குமான நிலை இருக்கிறது.

அடிபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இருக்கிற சங்கடத்தில் துன்பத்திலே, துயரத்திலே நாமும் பங்கு பெறுகிறோம். அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சிறையிலே இப்படிப்பட்ட கொடுமைகள் நடக்கக் கூடாது என்பதிலே இப்போதும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தெளிவான சிந்தனையிலே இருக்கிறது என்பதை நாம் மறுக்கவில்லை. அதே நேரத்தில் இஸ்மாயில் கொடுத்த அறிக்கை நல்ல முறையிலே கொடுக்காத காரணத்தினால் ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பளித்திருக்கிற காரணத்தால் சில சாட்சிகள் சொல்கிறபடி இந்த அறிக்கை இருப்பதால் இது குறையானது என்று சொல்லி அமர்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

<u>திரு. மு. செல்வராஜ்</u> : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இன்றையதினம நடைபெறுகின்ற மாண்புமிகு நீதிபதி இஸ்மாயில் அவர்கள் அளித்த அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நான் இந்தக் கொடுமையிலே உள்ளாக்கப்பட்டு ஓராண்டுக்காலம் சிறையிலே இருந்த காரணத்தாலே நான் கொஞ்சம் விரிவாகப் பேச விரும்புகிறேன். தயவு செய்து என்னுடைய காலத்தைக் குறைக்கவேண்டாமென்று நம்முடைய தலைவரைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கமிஷன் வரவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நம்முடைய சாதிக் பாட்சா அவர்கள் கவர்னரிடத்திலே முறையீடு செய்து அந்த முறையீட்டின்மீது இந்த அறிக்கை இன்றையதினம் வரப்பெற்றிருக்கிறது. எனவே தான் முதலிலே நம்முடைய கவர்னர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இந்த அறிக்கையை விவாதிக்கின்ற காலத்திலே ஏதோ இன்றையதினம் இருக்கிற ஆளுங்கட்சிக்காரர்கள் இதே அறிக்கை 4 தினங்களுக்கு முன்பாக, 5 தினங்களுக்கு முன்பாக மேலவையிலே விவாதிக்கின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் வீராசாமி அவர்கள் ஏறத்தாழ 90 நிமிடம் விளக்கமாக பேசியிருக்கிறார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரும் பேசவில்லை. அன்றையதினம் அங்கே இருந்த அமைச்சர்கள் கூட மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அங்கே இருந்து உருக்கமாகக் கேட்டார்கள். குறுக்கீடு கூட செய்யவில்லை. ஆனால் என்ன காரணத்தினாலோ, இந்த அவையில் மாத்திரம் இந்த இரண்டு தினங்களாக விமர்சனம் செய்கின்றவர்கள் இந்தக் கமிஷன் அறிக்கைக்கு எதிரான கருத்துக்களை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்வது உள்ளபடியே நான் மனவருத்தத்தோடு வேதனையோடு சொல்கிறேன். வரவேற்கத்தக்கதல்ல. காரணம் இந்த நிலை யாருக்கும் வரக்கூடாது என்பதுதான் நம்முடைய ஒட்டு மொத்தமான கருத்து ஆகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சரித்திரத்திலே படித்திருக்கிறோம். பிரெஞ்ச் நாட்டிலே பாஸ்டல் ஜெயிலிலே நடைபெற்றக் கொடுமைகளைப் பற்றிப் படித்திருக்கிறோம். கல்கத்தாவிலே இருட்டறையிலே நடைபெற்றக் கொடுமைகளைப் பற்றிப் படித்திருக்கிறோம். அதற்கு அடுத்தபடியாக இன்றையதினம் இந்தியாவில் தமிழகத்திலே நடை

பெற்ற அப்படிப்பட்ட கொடுமைகள் வேறு எந்த மாநிலத்திலும் நடைபெறவில்லை என்பதை திட்டவட்டமாக என்னாலே கூற முடியும்.

ஒன்றாம் தேதி, அதாவது 31-ந் தேதி இரவு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அதற்கு முன்னாலே அவர்கள் எல்லாம் சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் பொறுப்பான பொறுப்பிலே இருந்தவர்கள். இவற்றை எல்லாம் நீதிபதி அவர்கள் இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்குள்ளே எல்லாம் செல்ல வேண்டும் என்று சொன்னால் பிரிவு பிரிவாக செல்ல வேண்டும் என்று சொன்னால் நேரம் போதாது. உள்ளே செல்லும்போதே அந்தக் கைதிகள் அடிக்கப்பட்டார்கள், துன்புறுத்தப்பட்டார்கள். நான் அப்போது ஊரில் இல்லை. நான் ஏறத்தாழ 20நாள் கழித்துச்செல்கிறேன் அரசாங்கம் கலைக்கப்பட்டது. இது சம்பந்தமான விவரங்கள் எனக்குத் தெரியாது. அப்போது வடமாநிலங்களில் கூட்டுறவுத் துறை சம்பந்தமாக சுற்றுப்பயணம் சென்றிருந்தபோது, திடீரென்று அறிவிக்கப்பட்டது. நான் வருவதற்குக் காலதாமதம் ஆகிவிட்டது.

இருந்தாலும் என்னுடைய மனைவியை அழைத்துச்சென்று விட்டார்கள். மேலும், என்னுடைய தம்பிமார்களை அழைத்துச் சென்று விட்டார்கள். என்னிடத்தில் இருக்கும் பேருந்துகள், பேருந்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் ஆகியோரை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று விட்டார்கள். உடனடியாக நான் தந்தி கொடுத்தேன். நானே வந்து ஆஜராகிவிடுகிறேன் என்று, நானே நேரடியாகச் சென்று காவல் துறை அதிகாரிகளிடத்தில் சேர்ந்தேன்.

மிசா ஆர்டர் கொடுக்கவேண்டியது மாவட்ட ஆட்சித் தலைவர், என்னைப் பார்க்காமல் அந்த ஆர்டரை அவர்கள் கொடுத்து விட்டார்கள். பிறகு எனக்கு என்ன நிலை ஏற்பட்டது என்றால் ஜெயிலுக்குள்ளே போகிறபோதே அதிகாரிகள் 'சட்டையைக் கழட்டடா' என்று சொல்கிறார்கள், வேட்டியைக் கழட்டடா என்று சொல்கிறார்கள். நல்லவேளை, நான் உள்ளே ஜட்டிப் போட்டுக் கொண்டு இருந்தேன். ஆகவே, அரை நிர்வாண கோலத்தில் நான் காட்சி அளித்தேன் அப்போதே எண்ணினேன், உள்ளே ஏதோ நடந்து கொண்டிருக்கிறது, அதை நாம் கேட்டோம், இருந்தாலும் இங்கே வந்தபின் அது வெளியேயும் ஆகிவிட்டது என்று உணர்ந்தேன்.

என்னோடு அன்றைய தினம் பரங்கிமலை ஒன்றியச் செயலாளர் டெல்லிபாபு சிறைக்குள் வந்தார். அவருக்கு ஒரு கால் ஊனம். இவனுக்கு என்ன மரியாதை என்று சிறை அதிகாரி கேட்டார். மிகவும் கேவலமான வார்த்தைகளைப்பேசினார். அந்த வார்த்தைகளை எல்லாம் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் இருக்கிறது. இங்கே சொல்வது கூடாது என்பதால் சொல்லவில்லை. அப்படிப்பட்ட

வார்த்தைகளை இவர்கள் சொல்கிற போதே எனக்கு ஒரு ஞாபகம் ஏற்பட்டு விட்டது. ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்று கருதி விட்டோம்.

உள்ளே சென்றவுடன் ஆங்காங்கு என்னவோ கூண்டில் அடைக்கப்பட்டு இருப்பது போல், உள்ளே இருக்கின்றவர்கள் தங்கள் உணர்வுகளை இழந்து இருப்பதைப் பார்த்தோம். உள்ளே இருப்பவர்கள் எங்களுக்குச் சைகை கூட காட்டக்கூடாது. நான் வேட்டியை அவிழ்த்து விட்டுக்கொண்டு இருந்தேன். கையைக் கட்டிக்கொண்டு இருக்கவேண்டும் என்று உள்ளே இருந்து சைகை காட்டினார்கள். பிறகு சர்ச் என்று சீப் வார்டன் கூறினார். சர்ச் என்று சொன்னவுடன்—சிறை சென்றவர்களுக்கு நன்றாகத்தெரியும் பெரும் பகுதியினர் இங்கே இருப்பவர்கள் சிறைக்குள் செல்லாத காரணத்தால் தெரியாது. (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சென்று இருக்கிறார்கள். அவருக்குத் தெரியும். (குறுக்கீடு) மிசா கைதிகளாகச் சென்றவர்களைப் பற்றிச்சொல்கிறேன். உள்ளே செல்கிறோம்......

திரு. இரா. முத்தையா : இந்தப் பகுதியில் இருப்பவர்களில் பெரும்பாலோர் 72—ல் இருந்து 75—வரையில் சிறை சென்று இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் மிசாவின் கைதிகளைப் பற்றிச் சொல்கிறேன் என்று சொல்லி விட்டார். பிறகு எதற்கு விளக்கம்?

திரு. மு. செல்வராஜ் : ஆளும் கட்சிக்காரர்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளைப் பற்றி விசாரிக்க நீதிபதி போட்டு இருக்கிறார்கள். 1969-ல் இருந்து 1976—வரையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த வரையில் கூட விசாரணைக் கமிஷன் போடலாம். அதிலே ஆட்சேபனை கிடையாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

உள்ளே செல்கிறோம். சென்ற உடனே, சர்ச் என்று சொல்கிறார்கள். சர்ச் என்று சொன்னால் அடி என்று அர்த்தம். சிறையில் அப்படி ஒரு அர்த்தத்தை வைத்து இருக்கிறார்கள். அது எனக்குத் தெரியாது. நானும் அங்கே போய்தான் தெரிந்து கொண்டேன். நான் 3 முறை சிறை சென்று இருக்கிறேன். அப்போது எல்லாம் எங்களை அரசியல் கைதிகளாக நடத்தினார்கள், மிசாவில் கைது செய்யப்பட்டதால் ஏற்பட்ட நிலையைச் சொல்கிறேன். ஆறுமுகம் என்ற கான்விக்ட் வார்டர், அவருக்கு ஒரு கை தான் வரும், இடது கைதான் நன்றாக வரும், அவர் என்னை அடித்தார். 4—5 அடி அடித்தார். அதற்குள்ளேயே அங்கே இருந்து மறைந்த நண்பர் சிட்டிபாபு, நீலநாராயணன், நண்பர் வீராசாமி, மா. வே. நாராயணசாமி ஆகியோர் ஓடிவந்து, அந்த கான்விக்ட் வார்டர் காலில் விழுந்து, கெஞ்சினார்கள். அவர் அடி தாங்க மாட்டார், தயவு செய்து அடிக்காதீர்கள் என்று சொன்னார்கள். பிறகு அவர்களுடைய கெஞ்சலுக்குப் பிறகு என்னை உள்ளே

தள்ளினார்கள். நானும் இரண்டாம் தேதி சிறைக்குள் சென்று இருந்தால் அன்று நடைபெற்ற அடி எனக்கும் விழுந்து இருந்தால், சிட்டிபாபுக்கு முன்பே நான் போய் இருந்தாலும் ஆச்சர்யப் படுவதற்கு இல்லை. நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். நாங்கள் எல்லாம் உள்ளே சிறையில் இருக்கிறபோது, நாங்களும் வெளியே வருவோம், தேர்தல் நடக்கும். நாங்கள் எல்லாம் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆவோம், இங்கே வருவோம், உங்களை யெல்லாம் சந்திப்போம், எங்கள் உறவினர்களைச் சந்திப்போம், குடும்பத்தாரைச் சந்திப்போம் என்று சந்தேகப்பட்டது உண்டு. சில பேர் ராசினுமா கடிதம் எழுதிக்கொடுக்கக்கூட வற்புறுத்தப் பட்டார்கள். எங்களையெல்லாம் அடித்து விட்டீர்கள், இன்னும் என்ன செய்யப்போகிறீர்கள் உயிர் போய் விட்டால் எங்களுடைய உறவினர்களிடத்தில் உடலையாவது கொடுப்பீர்களா என்று மன்றாடிக் கேட்டேன். கொடுப்போம் நிச்சயமாகக் கொடுப்போம் என்றார்கள். ஆனால் சிட்டிபாபு இறந்ததற்குப் பிறகு, உடனடி யாகப் பிணத்தைக் •கொடுக்கவில்லை. எத்தகைய கொடுமை நடத்தப்பட்டு இருக்கிறது.

(பிற்பகல் 12-20)

இவர்கள் ஆட்சிப் பொறுப்பில் வந்த பிறகு நடந்தவை இல்லை. ஆகையால் ஏற்கனவே கொடுக்கப்பட்ட கமிஷன் அறிக்கையில் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஏன் காலதாமதம் செய் கிறது என்பது தெரியவில்லை. 5, 6 மாத காலம் ஆகிவிட்டது அறிக்கை கொடுத்து. ஒருவேளை மொழி பெயர்ப்பிலே கால தாமதம்........

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>; உங்களுக்கு கொடுத்த நேரத்திற்கு மேல் பேசிவிட்டீர்கள்; சீக்கிரம் முடித்து விடுங்கள்.

<u>திரு. மு. செல்வராஜ்</u>; தலைவரவர்களே, நான் ஒரு மிசா கைதி; சிறையிலே பல கொடுமைகளை அனுபவித்தவன் என்ற முறையிலே என்மீது கருணைகாட்டி, இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

எங்களையெல்லாம் எந்த அளவுக்கு சிறையிலே இம்சித்தார்கள் என்பதை ஓரளவு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு மாதம் வரையல் குடும்பத்தார் பார்க்க அனுமதிக்கவில்லை. ஒரு மாதம் ஒன்றரை மாதம் கழித்து இண்டர்வியூ கொடுத்தார்கள். காகிதம் போட்டு சுமார் ஒன்றரை மாதத்திற்குப் பின்னால்தான் அனுமதித்தார்கள்.

<u>திரு. மா. வே. நாராயணசாமி</u> : சட்டமன்ற உறுப்பினர், என்னைவிட கொஞ்சம் திடமாக இருப்பார்; கொஞ்சம் புட்டம் பெருத்தவர். அவரை அடித்தார்கள், புட்டத்தைப் பார்த்து அடித்தார்கள்; இவ்வளவு பெரிய புட்டமாடா உனக்கு என்று சொல்லி, சொல்லி அடித்தார்கள். அடித்து 20 நாட்கள் கழித்து பார்க்கும்போது கூட காயத்தின் சீழ் மாறவில்லை. அங்கே ஒரு மை

வைத்திருக்கிறார்கள். நீல நிறத்தில் இருக்கிறது. எவ்வளவு காயம் ஏற்பட்டாலும் அந்த மையை தடவி விட்டால் காயம் ஏற்பட்ட தாக வெளியில் அவ்வளவாகத் தெரிவதில்லை. $1\frac{1}{4}$ மாதம் கழித்த பிறகுதான் அந்த காயம் அவருக்கு மாறியது.

என்னோடு ஜெயிலில் கபாலி இருந்தார்; நெல்லை ஜெபமணி இருந்தார். எல்லோருக்கும் தெரியும். கபாலிக்கு முட்டியில் அடித்தது இன்னும் காயம் இருக்கிறது. எனக்கு புட்டத்தில் அடித்தார்கள்; பின்னால் அடித்தார்கள். அதன் காரணமாக வலி ஏற்பட்டு, கடந்த ஓராண்டு காலமாக மருத்துவமனையில் சிகிச்சை செய்துகொண்டிருக்கிறேன். கழிந்தமாதம் கூட, தொடர்ந்து வலி இருந்து வருவதால் எக்ஸ்ரே எடுத்து, மருத்துவர்கள் பரிசோதனை செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவோ கொடுமை கள் செய்தார்கள். எல்லாவற்றையும் நாங்கள் அனுபவித்திருக் கிறோம்.

விசாரணை செய்த நீதிபதி என்ன சொல்கிறார்? மிசா கைதி களுக்கு அரசியல் கைதிகளுக்கான வசதிகள் செய்து கொடுக்க வில்லை; மாறாக கொடுமைப் படுத்தியிருக்கிறார்கள்; அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட தவறுகளைச் செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதற்குப் பதிலாக அந்த அதிகாரிகளுக்காக பரிந்து பேசு வது பரிதாபகரமான ஒரு நிலைமை. நாளைக்கு அந்த அதிகாரிகள் உங்களுக்கு எதிராகத் திரும்ப மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? இங்கே சொன்னார்கள், அவரைப்பற்றி இங்கே அப்படி பேசக்கூடாது; இவரைப்பற்றி பேசக்கூடாது என்று சொன்னார் கள். அப்படிப்பட்டவர்கள் என்ன துணிச்சலோடு காரியங்கள் செய்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்கு தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு அறிக்கை போட்டிருக்கிறார்கள். பேரவைத் துணைத் தலைவரவர்களின் அனுமதியோடு அதை நான் இங்கே படிக் கிறேன். அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், * * *

இந்த அறிக்கை எந்த இடத்தில் அச்சடித்தது என்று போட வில்லை. என்னுடைய உரையை முடித்தவுடன் இதை தங்களிடம் தந்து விடுகிறேன். இப்படிப்பட்ட இந்த நிலையில் சம்பந்தப்பட்ட வர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது நியாயமா? எங்களுக்கும் பரமகுருவுக்கும் எந்தவிதமான மாச்சரி யமும் கிடையாது. இன்னும் சொல்லப் போனால் அவர் எங்கள் குடும்ப நண்பர்தான்.

சிறையிலே இத்தகைய கொடுமைகள் ஆரம்பிக்கப்பட்டு, 28 நாட்கள் கழித்து ஐ. ஜி. அங்கே சென்றிருக்கிறார். அதே நேரத் தில் கலைஞர் அவர்கள் மத்தியில் இருந்த அரசுக்கு தந்தி கொடுக் கிறார்; சென்னையில் இருக்கிற தவே அவர்களை சிறையில் வந்து பார்வையிட வேண்டுமென்று கடிதம் எழுதுகிறார். அதற்குப் பின்னால்தான் அங்கு நடைபெற்றவைகளை வந்து பார்வையிட்டார்

*மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கள். பார்வையிட்ட தவே அவர்கள் என்னிடம் இவைகளைப் பற்றி எதையுமே யாருமே சொல்லவில்லை என்கிறார். கமிஷன் அறிக்கையிலே கூட சொல்லியிருக்கிறார்கள். இந்த அதிகாரிகள் முதலிலேயே போய்ப் பார்த்திருந்தால் ஒருவேளை இந்த அளவுக்கு கொடுமைகள் நடைபெற்றிருக்காது என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு இஸ்மாயில் அதில் சொல்லியிருக்கிறார்கள். ஜெயிலருடைய டைரியிலே இரண்டாம் தேதி நடந்த சம்பவம், 6ஆம் தேதி நடந்த சம்பவம் 9-ஆம் தேதி நடந்த சம்பவம் என்று குறித்திருக்கிறார்கள். அதாவது 'நாங்கள் சாப்ட் போர்ஸ் யூஸ் பண்ணித்தான் அவர்களை எல்லாம் உள்ளே அனுப்பினோம்.' என்று கூறி இருக்கிறார்கள். இவர்கள் வந்திருந்தால் அதைத் தவிர்த்திருக்கலாம். அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டிய காரியம். இதிலே மற்றவர்களை இணைத்துப்போட்டு அறிக்கை விடுவதன் மூலமாக நாங்கள் ஒரு சமுதாயத்துக்கு விரோதமானவர்கள் என்பது போல் இருக்கிறது. அதிலே அச்சகத்தின் பெயர் இல்லை.

இதிலே நம்முடைய அவை முன்னவர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இதில் யார் யார் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் என்று பார்த்து உடனடியாக் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே உள்ள அறிக்கை பற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: சீக்கிரம் முடித்து விடுங்கள்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u>: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் பெயரிடப்படாமல் ஏதோ ஒரு நான்கு சங்கங்களின் சார்பாக வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றை இங்கே படித்தார்கள். அந்த அறிக்கையில் * * * என்றெல்லாம் எழுதப்பட்டிருப்பதாகப் படித்துக்காட்டினார்கள். தயவுசெய்து பிரெஸ்ஸினுடைய பெயரே இல்லாத அந்த அளவுக்கு தைரியம் இல்லாதவர்களாலே போடப்பட்ட இந்தஅறிக்கை குறிப்பிலே இடம் பெறுவது கூடாது. இது ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த பிரச்சினையாக ஆக்கி அதை தயவு செய்து பெரிதுபடுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதுபத்திரிகையிலே வரவேண்டாம் என்றும் தயவுசெய்து குறிப்பிலே இடம் பெற வேண்டாம் என்றும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: அந்த துண்டு பிரசுரம் யார் வெளியிட்டார் என்று பெயரிடப்படாத காரணத்தாலே.......

<u>திரு. க. அன்பழகன்</u>: துணைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்திலும் ** சேர்ந்தவர்கள் பலபேர்கள் இருக்கிறார்கள். ஆகவே அதுவல்ல பிரச்சினை. உறுப்பினர்களுக்கு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க் அகற்றப்பெற்றது.

அச்சுறுத்தல் வந்தது என்பதற்காகத்தான் சொன்னார்கள். இதை அவைக் குறிப்பிலே இருந்து எடுத்துவிடுவதில் எனக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. அதை அப்படி எடுத்துவிடுவது ஒன்றும் பிரச்சினை அல்ல. தாராளமாக எடுத்துவிடலாம். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அப்படி ஒரு அச்சுறுத்தல் வருமேயானால் அது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாதகத்தை விளைவிக்கும். ஆகவே இதுபற்றி கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u>: இப்படிப்பட்ட அச்சுறுத்தல்களுக்குப் பணிகிற அளவுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லை என்பது பேராசிரியர் அவர்களுக்குத் தெரிகிறபோது தயவு செய்து அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்றுகருதுகிறேன். அதைச் சபைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிடுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: எங்கே அச்சடிக்கப்பட்டது என்று போடுவதற்குக் கூட தைரியம் இல்லாதவர்கள் எங்கே அச்சுறுத்தப் போகிறார்கள். ஆகவே துண்டுப் பிரசுரம் பற்றிய அந்தக் குறிப்புக்கள் அவைக் குறிப்பிலேயும், பத்திரிகையிலேயும் இடம் பெற வேண்டாம் என்றும் அதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

<u>திரு. மு. செல்வராஜ்</u>: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீங்கள் அளித்த தீர்ப்புக்கு நான் பணிகிறேன். இறுதியாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல்லாண்டு வாழ்க என்ற படத்திலே நடித்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் கதாநாயகனாக நடித்திருக்கிறார்கள். அந்தப்படத்திலே இவர் ஜெயில் அதிகாரியாக இருந்து கொண்டு 6 குற்றவாளிகளைத் திருத்தி அவர்களை மனிதப் பண்புள்ளவர்களாக ஆக்குகிறார்கள். இது படம் தரும் பாடம். ஆகவே இப்படிப்பட்ட நிலைமையிலே இதையெல்லாம் திருத்நி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீதிக்குத் தலைவணங்கு என்ற படத்திலும் அவர்கள் நடித்திருக்கிறார்கள். மாண்புமிகு இஸ்மாயில் அவர்கள் நீதி தந்திருக்கிறார்கள். அது கமிஷனாக இருந்தாலும் கூட அதற்குத் தலை வணங்கி நல்லெண்ணத்தோடு இருக்கின்ற நம்முடைய முதலமைச்சரவர்கள் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, தர்மம் தலைகாக்கும், நீதிக்குத் தலை வணங்கு என்றுசொல்கிற முறையிலே, தூங்காதே, தம்பிதூங்காதே என்றும் சொல்கிற முறையிலே யாரையும் தூங்க விடாமல்—ஆனால் 5 மாத காலமாக இப்படிப்பட்ட காரியம் ஏற்பட்டு விட்டது—இதெல்லாம் ஏன் என்பதை சிந்தித்துப் பார்த்து

உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சஸ்பென்ட் செய்வது மாத்திரம் போதாது, அவர்களை வேலையிலிருந்து நீக்குவது மாத்திரம் போதாது, அவர்கள் மீது கடுமையான கிரிமினல் குற்றங்களைத் தாக்கல் செய்து அவர்களை குற்றவாளிகளாக ஆக்கி அவர்களையும் சிறைக்கு அனுப்பினால்தான் எங்களைப் போன்றவர்களுக்கு மனச் சாந்தி ஏற்படும், சமுதாயத்துக்கு ஒரு உற்ற துணையாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தயவுசெய்து இந்த எண்ணத்தில் எங்களுக்கு மாறாக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் ஈடுபடவேண்டாம். மனித சமுதாயத்துக்கு தீங்கு விளைவிக்கக் கூடாது என்று கேட்டு அமைகிறேன்.

(பிற்பகல் 12-30)

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பத்து நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : இன்று எதிர்பாராத காரணத்தால் எங்கள் கட்சித் தலைவர் வரவில்லை. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய நேரத்தில் சில நிமிடங்கள் வேண்டுமானால் குறைத்துக்கொண்டு எனக்குக் கொடுக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே காங்கிரஸ் கட்சி சார்பில் பேசியிருக்கிறார்கள். லீடர் ஆப் தி அப்போசிஷன் பேசவேண்டும், மினிஸ்டர் பேச வேண்டும், இரண்டு மணிக்குள் முடிக்கவேண்டும்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை எங்கள் கட்சியைப் பொறுத்தமட்டில் இதை சட்டத்தின் நான்கு சுவர்களுக்குள்ளே வைத்துப்பார்க்காமல் ஓரளவிற்கு மனிதாபிமானம், இயற்கை நியதி என்ற அடிப்படையில் இந்த அறிக்கையைப் பார்க்கவேண்டும் என்பதுதான் எங்கள் கட்சியின் அணுகுமுறை. இங்கே ஆரம்பத்திலேயே ஒரு முக்கியமான விஷயத்தை பல உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள், நானும் அதை வலியுறுத்த விரும்புகிறேன். அவசரப் பிரகடனக் காலம் என்பது 1975 ஜூன் 25-ம் தேதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே அவசரப் பிரகடனக் காலத்திலிருந்து இந்தக் கமிஷன் விசாரணை செய்திருக்கும் என்றால் இது ஒருவேளை அரசியலுக்கு அப்பாற்பட்ட நோக்கத்தோடு மனிதாபிமான அடிப்படையில் இந்தக் கமிஷன் நிறுவப்பட்டிருக்கிறது என்ற முடிவிற்கு வரலாம். ஆனால் அவசரப் பிரகடனக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சுமார்

எட்டு மாதம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. அந்தக் காலத்தை மட்டும் நீக்கிவிட்டு அவசரப் பிரகடனக் காலத்தினுடைய பின் பகுதியில், குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் இருந்து இது போடப்பட்டிருப்பது அடிப்படையிலே அரசியல் நோக்கம் கொண்டது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதற்கு அடுத்தபடியாக இந்தக் கமிஷனைப் பொறுத்தவரையில், நான் உள் நோக்கம் எதுவும் கற்பிக்க விரும்பவில்லை.

முதன்முதலாக நீதிபதி சதாசிவம் அவர்களை தமிழ்நாடு மட்டுமல்ல, பாரதமே நன்கு அறியும், அவர்கள் நியமனம் செய்யப்பட்டுவிட்டு ஒருசில காரணங்களால் அவர்கள் அந்தப் பதவிப் பொறுப்பில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டார்கள். ஆகவே அந்தச் சூழ்நிலையைப் பார்க்கிறபோது நீதிபதி சதாசிவம் அவர்களுக்கு எப்படி உள்நோக்கம் கற்பித்தார்கள் என்பதை நினைக்கிறபோது நான் ஆச்சரியப்படுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இந்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கை பற்றிப் பேசுகிறபோது பல்வேறு அரசியல் கட்சிகள் அதற்கு அரசியல் சாயம் கொடுத்து அப்போதிருந்த காங்கிரஸ் ஆட்சியைக் களங்கப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் பேசிவருகிறார்கள். அந்த அடிப்படையிலே இங்கும் சிலர் பேசுகிறார்கள். ஆனால் ஒரு முக்கியமான விஷயத்தை இந்த அடிப்படையிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அறிக்கையின் பக்கம் 196-ல் மதிப்பிற்குரிய மாறன் அவர்களை உள்துறை செயலாளர் திரு. சுப்பிரமண்யம் அவர்கள் விசாரணை செய்கிறபோது உள்துறை செயலாளர் சுப்பிரமண்யம் அவர்களிடத்தில் திரு. மாறன் அவர்கள் ஒரு தஸ்தாவேஜைக் கொடுக்கிறார்கள். அதை அவர்கள் விசாரணையில் இப்படிச் சொல்கிறார்கள். '' பின்னர், மாறன், இந்த உண்மைகள் அரசுக்குத் தெரியாது என்று கூறினார். அவர் தான் சிறிய முறையீடு ஒன்றை எழுதி வைத்திருப்பதாக கூறினார். பின்னர் அவர் தனது உள்சட்டைப் பையிலிருந்து அதனை எடுத்து என்னிடம் கொடுத்தார். அரசு கொள்கை காரணமாக, இச்சம்பவம் நடைபெறவில்லை என்பதைத் தங்களிடத்தில் தெரிவிக்க நாங்கள் விரும்புகின்றோம் என்றும் கூறினார்....'' என்றிருக்கிறது. ஆகவே சிறைச்சாலையில் நடந்த சம்பவங்களுக்கும் அரசினுடைய கொள்கைகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதை தஸ்தாவேஜூ மூலமாக மாறன் உள்துறை செயலாளர் அவர்களிடத்தில் கொடுத்து இருக்கிறார். அவர்கள் தாக்கல் செய்திருப்பதின்படி பார்த்தாலும் கவர்னர் ஆட்சியின் கொள்கைகளுக்கும் இந்தச் சிறைச்சாலை சம்பவங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பது மிகவும் தெளிவாகிறது. இதை திரு. மாறன் அவர்களே தெளிவாக சொல்லியிருக்கிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, அரசியல் நோணத்திலிருந்து பார்க்காமல் உண்மையிலேயே ராஜிநாமா க்டிதங்களை நாம் பார்ப்போமேயானால், ராஜிநாமாக் கடிதங்களை அது அரசியல் நோக்கத்தோடு

வாங்கப்பட்டது என்பதை துரதிருஷ்டவசமாக நீதிபதி அவர்கள் 106-வது பக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். "இந்தக் கடிதங்களில் அரசியல் கைதிகள் தாங்கள் இக்கடிதம் எழுதப்பட்ட நாளிலிருந்து தி.மு.க. ஆட்சியை வீட்டு வெளியேறி, திருமதி இந்திரா காந்தியின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் காங்கிரஸ் கட்சியில் சேருவதாகவும் தெரிவித்திருந்தனர்.. இது திரு. சண்முகம் கூறியதற்கு ஒத்ததாக உள்ளது...." என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாட்சிகளுடைய வாக்குமூலத்தை விட்டுவிட்டு, சாட்சிகளுடைய வாக்குமூலத்தின்அடிப்படையில் இல்லாத கருத்தை திரு. சண்முகம் அவர்கள், தன் முன் உள்ள மிசா கைதிகளின் சார்பில் இந்த கமிஷனில் ஆஜராகி வாதாடுகின்ற சண்முகம் அவர்கள் சொல்வதை வைத்துக்கொண்டு, முடிவுக்கு வருவது என்பது துரதிருஷ்டவசமானது.

அது மட்டுமல்ல. எல்லா அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சண்முகம் அவர்கள் வாதாடியிருக்கிறார்கள். ஆர்குமெண்ட் என்ற வாதத்தை செய்த சண்முகம் அவர்களைப்பற்றி மதிப்பிற்குரிய இஸ்மாயில் அவர்கள் சொல்லுகின்ற பொழுது, "தடுப்புக் காவல் கைதிகளின் சார்பில் குறிப்பிடத் தக்க திறமையோடும், கட்டுப்பாட்டோடும், நடுநிலையோடும் வாதிட்ட திரு. சண்முகம்.." என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. சண்முகம் அவர்கள் எல்லா அதிகாரிகளையும் தண்டிக்க வேண்டும் என்று ஒருதலை பட்சமாக அவர்களுடைய கட்சியின் சார்பாக வாதாடியிருக்கிறார்கள். அந்த வாதத்தை நீதிபதி அவர்கள் நடுநிலைமையோடு வாதிடுபவர் என்று நீதிபதி அவர்கள் சொன்னார்கள் என்றால் அது ஆச்சரியமான விஷயம் என்பதையும் இந்த கருத்தையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று தமிழக அரசை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, சிறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லப்படுகின்ற சூழ்நிலையை நாம் பார்த்தோம் என்றால், இந்த அறிக்கையில் உள்ள சில முரண்பாடுகளை நாம் கவனிக்கவேண்டும். நீதிபதி இஸ்மாயில் அவர்களைப் பொறுத்தவரையில் இதில் நான் உள்நோக்கம் கற்பிக்க விரும்பவில்லை. யானைக்கும் அடிசறுக்கும் என்பது போல் அவர்களும் இன்றைக்கு முரண்பட்ட வகையில் அறிக்கையை தயாரித்திருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

உதாரணமாக சொல்லவேண்டுமென்றால், இந்த அறிக்கையில் சான்றுவணம்—2, எக்ஸ்பிட்-2, ஆக இருக்கின்ற சிட்டிபாபுவுடைய டைரியின் அடிப்படையில் இந்த அறிக்கையை தயாரித்து இருக்கிறார்கள். எக்ஸ்பிட்-2 சான்றுவணம்-2 என்று சொல்லக்கூடிய சிட்டி பாபுவுடைய டயரியில் 60 பக்கங்கள் கிழித்து எறியப்பட்டிருக்கிறது. அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை திருமதி சிட்டிபாபு 5 வது சாட்சியாக விசாரிக்கப்பட்டவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், இதில் குடும்ப விஷயம் இருந்தது எனவே இதை கிழித்து வைத்து இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்,

[பிற்பகல் 12-40]

டைரியிலே உள்ள வாசகங்களைப் பொறுத்தவரையிலே, அதைப் பொதுவாக ஆக்கக்கூடாது என்பதிலே உடன்பாடு உண்டு, ஆனால், 5-வது சாட்சியாகிய திருமதி சிட்டிபாபுவைப் பொறுத்தவரையிலே நீதிபதி இஸ்மாயில் அவர்கள் என்ன கருத்தைச் சொல்கிறார்கள் என்றால், 134-வது பக்கத்திலே 13.6 என்ற அந்தப் பாராவிலே சொல்கிறார்கள், "முன்னுக்குப் பின் முரண்பட்டதாக சாட்சியம் சொல்கிறார்" என்று சொல்கிறார்கள். 5-வது சாட்சியாகிய திருமதி சிட்டிபாபு அவர்களைப் பொறுத்தவரையிலே, நீதிபதி அவர்களே இப்படி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள், முரண்பாடான முறையிலே உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள், ஆனால் அதே நேரத்திலே அவர்கள் அப்படி கிழிக்கப்பட்ட இந்த 60 பக்கங்களை ரகசியமாகவாவது தன்னைத் திருப்திப் படுத்திக் கொள்கின்ற அளவிலே, தன்னுடைய மனசாட்சிக்காகவாவது நீதிபதி இஸ்மாயில் அவர்கள் அதை ரகசியமாக என்ன எழுதப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிந்து வைத்திருந்தால், அது மிகவும் நன்றாய் இருந்திருக்கும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு முக்கியமான விஷயத்தையும் நாம் பார்க்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சிட்டிபாபு அவர்களை மருத்துவமனையிலே சேர்க்கவேண்டுமென்று உள்துறை செயலாளர் அவர்களிடம் மகஜர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மகஜரை வழக்கறிஞர் கொடுத்திருக்கிறார். திருமதி சிட்டிபாபு அவர்களுக்காக அதைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மகஜர் கொடுக்கின்றபோது, உள்துறை செயலாளர் அவர்கள் சொன்னதை நாம் பார்க்கவேண்டும். அவர்கள் சொல்கிறார்கள், சிட்டிபாபுவை பரோலில் விடுவதற்கு நீங்கள் விண்ணப்பம் கொடுங்கள், அதை நான் பரிசீலனை செய்கின்றேன் என்று உள்துறை செயலாளர் அவர்கள் சொன்னது சாட்சியத்திலே இருக்கிறது.

ஆனால், உள்துறை செயலாளர் அவர்கள் அப்படிச் சொல்லியுங்கூட, சிட்டிபாபு அவர்களை பரோலில் எடுக்க விண்ணப்பம் கொடுக்கவில்லை என்றால், அதுதான் மர்மமாக இருக்கிறது, மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. ஏனென்றால், பரோலிலே வெளியே வந்தால் திரு. சிட்டிபாபு அவர்களை நல்ல முறையிலே கவனித்து கொள்ளலாம். எங்கு வேண்டுமானாலும் போய் இருக்கலாம். பரோலில் விடுவதற்கு பரிசீலனை செய்கிறேன் என்று உள்துறை செயலாளர் அவர்கள் சொன்னபோதிலும் கூட, அதுவும் பொறுப்புள்ள ஒரு வழக்கறிஞரிடம் சொன்னபோதிலும்கூட, பரோலிலே போகாமல் கைதியாகவே அவர்கள் மருத்துவ மனையிலே இருந்து சிகிச்சை பெற்றார்கள் என்றால், அதன் அர்த்தம் என்ன?

பொருள் என்ன? அவர்கள் பரோலில் ஏன் வரவில்லை என்பதையெல்லாம் சிந்தனை செய்து பார்க்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, இப்படிப்பட்ட முக்கியமான விஷயங்களை எல்லாம் சிந்தனை செய்து எந்த அடிப்படையிலே இந்தச் சம்பவம் நடந்தது என்பதை இந்த அரசு ஆழமாக தீர்க்கமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்பது தான் எங்கள் கட்சியினுடைய கருத்தாகும். இந்த எக்சிபிட் பி-2 என்ற சான்றாவணம் பொறுத்தவரையிலே அவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். அந்த டைரியிலே உள்ள அத்தனையும் சிட்டிபாபு அவர்களுடைய கையெழுத்து என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். ஆனால் சாட்சி சட்டப்படி நீதிபதி அவர்கள் அப்படி எழுதலாம் என்றாலும்கூட அது உண்மையிலேயே அவருடைய கையெழுத்துதானா என்பதற்காக அதை ஒரு ஹாண்டு-ரைட்டிங் எக்ஸ்பர்டுக்கு அனுப்பி பரிசீலனை செய்து சந்தேகத்திற்கு இடமின்றி அத்தனையும் இந்த எக்சிபிட் பி-2 எழுதியதுதானா என்று பார்த்திருக்கலாம்.

அதற்கு அடுத்தபடியாக சிட்டிபாபுவைப் பற்றி நீதிபதி அவர்கள் சொல்கிறார்கள். அவர் எழுதியுள்ள டைரியின் வாசகத்தைப் பற்றிச் சொல்கிறபோது அவர் கவியாக மாறி விடுகிறார் என்று நீதிபதி அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இப்படி அவர்கள் சொல்லியிருப்பதைப் பார்க்கின்றபோது, சிட்டிபாபு அவர்களை ஒரு கவிஞராகவும் மதிப்பிற்குரிய மாண்புமிகு நீதிபதி அவர்கள் அவரின் ரசிகராகவும் மாறக்கூடிய சூழ்நிலையிலேதான் இந்தக் கமிஷன் நடந்திருக்கிறது. உண்மையிலேயே ஜுடிஷியல் பிரேம் ஆப் மைன்ட் என்ற முறையிலே பார்க்காமல் லிட்டரரி பிரேம் ஆப் மைன்ட் என்கின்ற முறையிலேதான் இதைப் பார்த்திருக்கிறார். அப்படிப் பார்ப்பது முற்றிலும் தவறானது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக ஞாபக மறதியைப் பற்றி அவர்கள் சொல்கிறார்கள். 39 ஆம் பக்கத்திலே என்று நினைக்கிறேன். இங்கே சிறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஞாபக மறதி என்று சொன்னால் அதற்கு நீதிபதி அவர்கள் சொல்கிறார்கள். ஜி. கோபால்சாமி அவர்கள் விஷயத்திலே சொல்லுகிறார்கள்.

இது எப்படி ஞாபக மறதி என்று ஏற்றுக்கொள்ள முடியும்? இதை ஞாபக மறதியாக ஏற்றுக் கொள்ளமுடியாது என்றால்— நீதிபதி இஸ்மாயில் அவர்கள் சொல்லும் பி. டபிள்யூஸ் 1, 2, 3 ஆற்காடு வீராசாமி வேழவேந்தன் இவர்கள் போன்றவர்கள் சொல்லக்கூடிய சாட்சியத்தைப் பரிசீலனை செய்யும்போது— அங்கே ஞாபக மறதி என்று சொன்னது— இவர்களைப் பொறுத்தவரை ஞாபக மறதி ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்லுகிறார்.

சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஞாபக மறதி வரக்கூடாது, சாட்சிகளுக்கு ஞாபக மறதி ஏற்படலாம் என்ற அணுகுமுறையில் இது நடுநிலைமையோடு செய்யக்கூடிய தீர்ப்புதானா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக அறிக்கையைப் படித்தால் ஐ. ஜி. ஆப் பிரிசன்ஸ் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஐ. ஜி. ஆப் பிரிசன்சைப் பொறுத்தவரை நான் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவன் அல்ல. அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதை வைத்து சொல்ல விரும்புகிறேன். 195-வது பக்கத்தில்—

''..........உயர் அதிகாரிகள் எவருமோ அரசோ
கட்டளையிட்டிருப்பதன் பேரிலேயே அவர் இச்
செயலைச் செய்திருப்பார் என்று கூறமுடியாது.''

என்று கூறியிருக்கிறார். ஆகவே அரசாங்கமோ அல்லது உயர் அதிகாரிகளோ டி. ஐ. ஜி. யோ.; ஐ. ஜி. யோ சம்பந்தப்பட்டு இந்தச் செயல்கள் நடந்திருக்காது என்ற அளவுக்கு 195-வது பக்கத்தில் பிரிவு 19-24ல் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒன்றை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக திருநெல்வேலியிலேயோ, மதுரையிலோ ஒரு சிறிய போலீஸ் ஸ்டேஷனில் ஒரு லாக்கப்பில் வைத்து ஒரு கைதி துன்புறுத்தப்பட்டு அடிக்கப்பட்டு இறந்தார் என்றால் அங்கிருக்ககூடிய எஸ். பி. எப்படி அதற்கு பொறுப்பாக முடியும்? அந்த ஸ்டேஷனில் இருக்கக்கூடியவர்கள் அதற்கு நேரடியான பொறுப்பாக இருக்க முடியுமே தவிர எஸ். பி. யோ.; டி. ஐ. ஜி. யோ இந்தச் சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் என்று சொல்லுவது எவ்வளவு பொறுப்பில்லாமல் இருக்குமோ அதைப் போல்தான் இதையும் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர வேறு வகையில் எடுத்துக் கொள்ளக்கூடாது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மனிதாபிமான அடிப்படையில் அணுகினாலும்—நேரடியாக இந்தச் செயல்களோடு தொடர்புடையவர்களாக இருந்தால் ஆட்சேபனை இல்லை. நேரடியாகத் தொடர்புள்ளவர்கள் என்று சொல்லும்போது கூட ஒரு முக்கியமான விஷயத்தை இந்த மன்றத்திற்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்,

உதாரணமாக, வார்டர் மனோகரன் என்பவர் பெயர் வருகிறது. ஜெயிலர் மனோகரன் அடித்துவிட்டார் என்று அறிக்கையில் கூறப்படுகிறது.

அடுத்தபடியாக, மனோகரன் அடித்தார் என்று நியாயம், சமர்ப்பிக்க— அஃபிடவிட் உறுதிமொழிப் பத்திரங்களில் எந்த இடத்திலும் வரவே இல்லை. இப்படிப்பட்ட நிலைமையில் மனோகரனை

வரவழைத்து மதிப்பிற்குரிய நீதிபதி அவர்கள் விசாரணை செய்யவில்லை. ஆகவே புகார் மனுவில் கொடுத்திருக்கிறார்கள் — ஆகவே அவரும் சேர்ந்து அடித்தார்; அவரும் குற்றவாளி என்ற முடிவுக்கு வருவது என்று சொல்வது எந்த விதத்தில் நியாயம்? மனோகரனைப் பொறுத்தவரை முதலில் சொல்லியிருக்கலாம்: உறுதிமொழிப் பத்திரத்தை; அபிடவிட்டைத் தயாரிக்கும் அடிப்படையில்; சாட்சியத்தை தயாரிக்கும் அடிப்படையில் அபிடவிட்டில் சொல்லாத நிலையில் சாட்சியம் இல்லாத வார்டர் மீது; ': மனோகரனும் சேர்ந்து அடித்திருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வருகிறேன்' என்றால் உண்மையிலேயே அது நியாயமான முடிவாகிவிடாது: கிரிமினல் வழக்குகளில் எப்:ஐ:ஆர்: இல் இருந்து சார்ஜ் ஷிட்டில் இல்லையென்று வந்துவிடும்: எப்:ஐ:ஆர்:ல் இருந்தது, சார்ஜ் ஷிட்டில் இல்லை என்ற அடிப்படையில் பார்த்தால்..........(மணி அடிக்கப்பட்டது)

முக்கியமான பிரச்சினையைச் சொல்லுகிறேன்: ஆகவே, அந்த அடிப்படையில் பார்க்கிறபோது ஐ.ஜி: ஆப் பிரிசன்ஸ் அவர்களைப் பற்றியும் வார்டர் மனோகரன் அவர்களைப் பற்றியும் நீதிபதி அவர்கள் சொல்லியிருப்பது : சமன் செய்து சீர்தூக்கும் : என்பதற்கு இலக்கணமாக அமையவில்லை; அதற்கு மாறாக இருக்கிறது என்பதே என் கருத்தாகும்.

(பிற்பகல் 12·50)

அதற்கடுத்தபடியாக, இங்கே ஏற்கனவே ஆறாவது வார்டிலே மிசாக் கைதிகள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலேயிருந்த நேரத்தில் ஆர்: எஸ். எஸ், ஆனந்தமார்க் போன்ற மற்ற ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் இருந்தார்கள். அவர்கள் 6-வது வார்டிலே இருந்திருக்கிறார்கள்: நீதிபதி அவர்கள் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டு வந்ததற்குப் பின்னால் அவரது அபிப்பிராயத்தை எழுதும்பொழுது —73 ஆம் பக்கத்தில் இருக்கிறது என்று கருதுகிறேன் — 6-வது வார்டிலே இருப்பவர்களை 9-வது வார்டுக்கு மாற்றி, இப்பொழுது வந்த கைதிகளை, 1976 ஆம் அண்டு பிப்ரவரி 1-ஆம் தேதி கைது செய்யப்பட்ட அவர்களை 6-வது வார்டுக்கு மாற்றியிருக்கலாமே என்ற அபிப்பிராயத்தைச் சொல்கிறார்கள், ஏன் இந்த டிஸ்கிரிமினேஷன் என்று தெரியவில்லை: அதைப்பொறுத்தவரையிலே, 6-வது வார்டிலே ஏற்கனவே மிசாக் கைதிகள் இருக்கிறார்கள் என்ற நிலையில் இவர்களை 9-வது வார்டிலே வைப்பது நியாயமா அல்லது 6-வது வார்டிலே உள்ள மிசாக் கைதிகளை 9-வது வார்டுக்கு வாருங்கள், இப்பொழுது வந்தவர்களுக்கு இந்த வார்டைக் கொடுக்க வேண்டுமென்று சொல்வது நியாயமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்

ஆகவே, இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது என்னைப் பொறுத்தவரையில் எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், ஐ. ஜி., டி. ஐ. ஜி. போன்ற மேலதிகாரிகளும் பொறுப்பு என்று சொல்வது முற்றிலும் நியாயமில்லாதது என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன்: மனோகரனைப் பொறுத்தவரையில், தெளிவாக எந்தக் குற்றமும் ருசுப்படுத்தப்படவில்லை என்பது எங்கள் கருத்து. ஏனென்றால் அபிடவிட்டில் அவர் பெயர் இல்லை: அதற்கு அரசியல் சாயம் பூசியிருந்தாலும் அரசியலுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்பதை மாறன் அவர்களுடைய கடிதமே சொல்கிறது.

இந்த அடிப்படையிலே இந்த அறிக்கையை ஆழ்ந்து பரிசீலனை செய்து, இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பாலும் தண்ணீரும் சேர்ந்து கலந்திருப்பதாகத் தெரிகிறது. எனவே தண்ணீரை நீக்கிவிட்டு பாலை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு: கே: சுந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, இன்று அவை முன்பு வைக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நீதிபதி இஸ்மாயில் அவர்களின் அறிக்கையின் மீது இந்திய தேசிய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்ல முயற்சிக்கிறேன்: இதில் உள்ளிருக்கும் கருத்துக்களைப்பற்றி விரிவாகச் சொல்ல வேண்டியிருந்தாலும், காலத்தைக் கருதி சுருக்கிச் சொல்லவேண்டிய நிர்ப்பந்தத்தின் காரணமாகச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

இதில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் எந்தச் சூழ்நிலையில் இந்தக் கமிஷன் அமைக்கப்பட்டது என்ற விவரங்களைத் தங்களது மேலான தலைமையின் கீழ் அமைந்துள்ள இந்த மாமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அன்று ஜனநாயக உரிமைகள் இல்லாத நேரம் எங்கு பார்த்தாலும் உரிமைகள் இல்லாமல் மிலிடரி ரூல்— இராணுவ ஆட்சி—நடப்பதுபோல் எங்கு பார்த்தாலும் பதட்டமான நிலைமையும், பயமும் நிலவிய காலம். டெல்லியில் இருப்பவர்கள் உத்தரவு போட்டு இங்கேயுள்ள கவர்னர் பெருமான் தமது ஆலோசகர்களின் மூலமாக அத்தனையையும் நிர்வகித்து வந்த காலம்: தவே அவர்களும், ஆர். வி. சுப்பிரமணியம் அவர்களும் அவர்களுடைய ஆலோசகர்களாக இருந்து வந்து, சென்னை மாநிலத்திலே உள்ள அத்தனை துறை அதிகாரிகளையும் ஆட்டிப்படைத்தார்கள் என்பதை மிகப்பணிவோடு மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பொது வாழ்வில் இருப்பவர்களானாலும் சரி, அல்லது அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களானாலும் சரி, அல்லது அரசில் அங்கம் வகித்து வருகின்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த உயர்மட்ட அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அல்லது கடைநிலை ஊழியர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் தன்னிச்சைப்படி, டிபார்ட்மெண்டல் ரூல்ஸ்படி நடக்க முடியாமல் கட்டுண்டு கிடந்த காலம் என்பதை நான் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் சூழ்நிலையில் மிகக் கொடுமைகள், மனிதாபிமானத்திற்கு

அப்பாற்பட்ட விதத்தில் அசம்பாவிதங்கள் சிறைக்கைதிகளுக்கு விளைவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் அத்தனைப் பேர்களும் நன்கு அறிகிறோம். அதற்காக வேதனைப் படுகிறோம், வருத்தப்படுகிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் :— மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான கருத்துக்களையெல்லாம் அவைக்குச் சொல்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்றது மிலிட்டரி ரூல் நடைபெற்ற காலத்திலே ஒன்று கூறுகிறார்கள். இது, தவே அவர்கள் இங்கே பொறுப்பேற்றிருந்த காலத்தில் நடைபெற்றது என்று கூறுகிறார்கள். அது தவறான கருத்து என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : நான் சொன்னதை மாண்புமிகு ஜனதாக் கட்சித் தலைவரவர்கள் அருள்கூர்ந்து வழக்கம்போல் பொறுமையோடு 'இருந்து கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் தவறுதலான கருத்தைக் கூற விரும்பவில்லை. தவறு என்றால் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி ; மிலிட்டரி ரூல் நடந்தது மாதிரி என்று சொன்னேனே ஒழிய......

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் சொன்னதிலே ஒரு சிறிய தவறு இருக்கிறதேயொழிய, அவர் குறிப்பிட்டது, இந்த விசாரணை எப்பொழுது நடைபெற்றது ? மிலிட்டரி ரூல் நடந்ததைப் போலிருக்கும் போது நடந்தது என்று கூறினார்கள். இங்கே முறைப்படி தேர்தல் நடைபெற்று, மத்திய அரசாங்கம் தேர்ந் தெடுக்கப்பட்ட பிறகுதான் இந்த கமிஷனை நியமிக்கப்பெற்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான கருத்தை அறிவிக்கிறார்கள் என்று கூற விரும்புகிறேன்.

திரு. கே. கந்தசாமி : நாடாளுமன்றத் தேர்தல் நடந்த பிறகும் கூட இங்கே சட்டமன்றம் செயல்படமுடியாத நிலையிருந்தது. இங்கே மக்கள் பீதியில் நடுங்கிக்கொண்டிருந்தார்கள் என்று கூற விரும்புகிறேன். அப்படிப்பட்ட கொடுமைகள் என்னைப் போன்றவர்களுக்குத் தெரியாதது அல்ல. நான் பின்பற்றுகிற தேவர் போன்றவர்களுக்கு, நேத்தாஜி போன்றவர்களுக்குத் தெரியாதது அல்ல. ஆங்கிலேயர் காலத்தில் மிகப் பெரிய கொடுமைகளை நாங்கள் கண்டிருக்கிறோம். அவ்வளவு கொடுமைகளை அனுபவித்துத்தான் சுதந்திரம் பெற்றோம். நாடு சுதந்திரம் அடைந்தபிறகு, நாட்டின் உண்மையைச் சொன்னதற்காக, தேவர் பெருமகனும் அவரைச் சேர்ந்தவர்களும் என்ன கொடுமைக்குட் பட்டார்கள் என்பதை நாடு நன்கு அறியும். அதைப்பற்றி அதிகமாக விவரிக்க வேண்டியதில்லை.

1965-ஆம் ஆண்டிலே இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சராகவும் இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவரும், மறைந்த பெருமதிப்பிற்குரிய இராஜாங்கம் கைதாகி இருந்தபோதும், அவர்மீது வழக்கு போட்டபொழுது, எனது அருமை நண்பர் வழக்கறிஞர் பாளை சண்முகம் அவர்களும் வழக்கறிஞராக ஆஜரானார்கள். கலைஞர் அவர்களும் அப்பொழுது வந்திருந்தார்கள் வழக்குமன்றத்திற்கு அப்பொழுது அந்த அரசு அடக்குமுறையை கடுமையாக அவிழ்த்துவிட்டது. அப்பொழுது தமிழனுடைய எழுச்சியை, உணர்வைக்கூட, மொழி ஆதிக்கத்திற்கு எதிராக எடுத்துத் தெரிவிக்கப்பட்ட உணர்வைக் கூட அடக்குகிற அளவிற்கு, தமிழனுடைய உணர்வை நசுக்க. தமிழனுடைய ரத்தத்தை ருசி பார்க்கிற அளவுக்கு வந்து விட்டது.

ஆகவே, இந்த ஆட்சி தமிழனின் பெரும்பான்மையை இழந்து விட்டது, தமிழர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்று தமிழக அரசின்மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை நாங்கள் வழக்கறிஞர்கள் சங்கத்திலே கொண்டுவந்தபோது, பெருமதிப் பிற்குரிய பாளை சண்முகம் அவர்கள் என்ன செய்தார் ? மேலவை உறுப்பினராக இருந்தவர், அதை வழிமொழிந்து பேசும்போது, எனது அன்பிற்குரிய பாளை சண்முகம் அவர்கள் இதை எதிர்த்து, மூன்றே ஓட்டை வாங்கி செல்வாக்கை இழந்தவர். மக்களைச் சுட்டது, மக்களுக்கு எதிராக ரத்தத்தை ருசி பார்த்தது தவறு, பச்சிளங்குழந்தைகளை, தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளிலே, தெருக்களிலே, சுட்டுக் கொல்கிற, ரத்தத்தை ருசி பார்க்கிற அரசு ராஜினாமா செய்யவேண்டும், என்று நாங்கள் தீர்மானம் கொண்டு வந்தபொழுது, அதை எதிர்த்தவர் இந்த பாளை சண்முகம். ஜனநாயகத்தின் பெயரால், அரசை எதிர்க்கக் கூடாது, நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுள்ளது என்று கூறி அன்றைக்கு மூன்றே ஓட்டு வாங்கி தோற்றவர். அவர் தான் சமீபத்திலே சென்னையிலே பேசியிருக்கிறார்கள். சபா நாயகர் அவர்களே, தங்களுடைய அனுமதியின் பேரிலே நான் இங்கு அதைப் படிக்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் ; மாண்புமிகு தலைவரவர்களே, உறுப்பினர் கந்தசாமி அவர்கள் இங்கே பாளையங்கோட்டை சண்முகம் அவர்களைப்பற்றிய நிகழ்ச்சியை குறிப்பிடுகிறார். அவர் சபையிலே இல்லை. இவர் சொல்கிற குற்றச்சாட்டுக்கு அவர் இருந்திருப்பாரானால் விளக்கம் கொடுக்கமுடியும். எனவே, அவர் இல்லாதபொழுது அவர்பற்றிய குற்றச்சாட்டு சொல்வது சரிதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியிலே பேசியதற்கு ஆதாரம் இருந்தால்தான் பேசவேண்டும். தனிப்பட்டவர்கள் பெயரைச் சொல்லக் கூடாது. ஆதாரம் இல்லாமல் இவ்வளவு பெரிய பொறுப்பு வாய்ந்த மன்றத்தில் பேசக்கூடாது. எனவே, அவைமுன் இருக்கிற பிரச்னையில் பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு டைரக்ஷன் கொடுக்க வேண்டாம், எனக்குத் தெரிந்ததை, ஆராய்ந்துதான் செய்வேன்.

திரு. கே. கந்தசாமி : சபாநாயகர் அவர்களே, தங்களிடம் வேண்டுகோள்விட எனக்கு உரிமையிருக்கிறதே தவிர, தங்களுக்கு கட்டளை இட உரிமையில்லையென்பதை நான் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்;.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூடுமான வரை, வெளியிலே இருக்கிற தனிப்பட்டவர்களை, அல்லது ஆதாரம் இல்லாமல் இருப்பதைப் பற்றியோ பேசி, இங்கே நேரத்தை வீணாக்க வேண்டாமென்று சொல்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : ஆதாரம் இல்லாமல் பேசவில்லை. இந்தச் சட்டமன்றத்தினுடைய பொன்னான நேரத்தில் இரண்டு நாள் ஒதுக்கி, இதுபற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இங்கே வைக்கப்பட்டிருக்கிற விசாரணைக் கமிஷன் அறிக்கை நீதிபதியினுடைய அபிப்பிராயம். அதிலே கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. அரசு நடவடிக்கை எடுப்பதற்கு உகந்த முறையில், மாமன்ற உறுப்பினர்களுடைய கருத்து என்ன ?......

[பிற்பகல் 1.00]

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வெளியே உள்ள ஒரு வழக்கறிஞர் எந்த நேரத்தில் எப்படி அவர் கருத்தைத் தெரிவித்தார் என்பது வழக்கறிஞர் என்ற முறையிலே அவருக்குள்ள உரிமை. இந்த சட்டமன்றத்திலே இல்லாத அவர், வழக்கிலே வழக்கறிஞராக வக்கீலாக வந்திருக்கிறாரே தவிர, அவருடைய பெயரை இந்த அவையிலே குறிப்பிடுவது முறையாகாது அவர்களைப்பற்றி இங்கே பேசுவது கூட இந்த அவையின் உரிமைக்கும் மரபுக்கும் ஏற்றதல்ல. எனவே அவைக் குறிப்பில் ஏறி இருக்கிற குறிப்புகளைப் அவை இருக்க வேண்டியது. முறைதானா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்ட ஒரு வழக்கறிஞரைப் பற்றிச் சொன்னது, ஒரு நிகழ்ச்சியைப்பற்றி நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றி சொன்னார்களே தவிர, அந்த வழக்கறிஞரைப் பற்றி குறைகாண்பதற்காகவோ அல்லது அவர்து பப்ளிக் கான்டக்டிலே களங்கம் கற்பிப்பதற்

காகவோ அல்ல என்பதையும். நடந்த நிகழ்ச்சியைத்தான் இங்கே தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அவைக்குறிப்பில் இடம் பெறாமல் இருக்க அவசியம் இல்லை.

திரு. க. அன்பழகன் ; தலைவர் அவர்களே. இடம் பெற வேண்டுமா, வேண்டாமா என்பதை பற்றி நீங்கள் முடிவு செய்யலாம். இதிலே சொல்லப்பட்ட ஒரு தொடர். அவர் முன்னர் ஜனநாயகத்திற்கு விரோதமான கருத்தைக் கொண்டிருந்தார். இப்போது ஜனநாயகத்திற்காக வாதாடுகிறார் என்று குறிப்பிட்டார்கள். வழக்கறிஞர்கள் எதற்காக வாதாடினார்கள் என்பது அவர்கள் பிரச்சினை. எது ஜனநாயகம் என்பதே சந்தேகத்திற்குறியதாக 1½ ஆண்டுகாலம் இருந்தது. எனவே ஒரு வழக்கறிஞரைப் பற்றி அவர் ஜனநாயகத்திற்கு எதிராக இருந்தார். இப்போது ஜனநாயகத்திற்கு ஆதரவாக இருக்கிறார் என்று சொல்கிற அந்தக் கருத்தைப் பற்றித்தான் பரிசீலிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேராசிரியர் அவர்கள் சொன்ன கருத்து, நான் சொன்ன கருத்துக்கு வலிவூட்டுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஜனநாயகத்திற்கு எதிராகப் போராடியவர், அல்லது வாதாடியவர் இன்று ஜனநாயகத்திற்காக வாதாடுகிறார் என்று ஒரு குறிப்பிட்ட வழக்கறிஞருக்குப் பெருமை தேடித்தந்திருக்கிறதே தவிர, இழிவு படுத்தவில்லை என்பதை நான் பேராசிரியருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. கந்தசாமி : பெருமதிப்பிற்குரிய வழக்கறிஞர் சண்முகம் அவர்கள் வழக்குக்காக கேசில் வாதாடவில்லை. வழக்கறிஞர் மன்றக் கூட்டத்தில் குறிப்பிட்ட அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அந்த இடத்தில் அவர் அறிவித்தார் என்று குறிப்பிட்டிருக்கிறேனே தவிர, வேறு அல்ல என்று குறிப்பிட்டு. தங்களுடைய கவனத்திற்கு நான் காலையிலே கொண்டு வந்தேன். முரசொலிப் பத்திரிகை. தி. மு. க. வின் அபிசியல் ஆர்கன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அந்தப் பத்திரிகையிலே உள்ளூர் 13-3-78. வெளியூர் 14-3-78 என்று தேதியிட்ட அந்தப் பத்திரிகையில் 2-வது பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். '' இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டு வந்து 6 மாதம் ஆகியும் அரசு இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது ஏன்? உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்களே நடவடிக்கை எடுப்பார்கள். இஸ்மாயில் கமிஷன் அறிக்கை விளக்கக்கூட்டத்தில் வழக்கறிஞர் பாளையங்கோட்டை சண்முகம் எச்சரிக்கை.''

இங்கே சட்டமன்றத்தில் விவாதத்திற்காக மதிப்பிற்குறிய உறுப்பினர்களுக்கு அவர்களின் கருத்தை அறிந்து, மேல் நட

வடிக்கை எடுப்பதற்காக இருக்கிறது என்பதைத் தெரிந்திருந்தும் தி. மு. க. வினருக்கு மிக நெருங்கிய தொடர்புள்ள, விவரம் அறிந்தவர் சென்னையிலேயே கூட்டம் போடுகிறார். அந்தக் கூட்டத்திலேயே விளக்கம் அளிக்கிறார். அந்த விளக்கத்தை முரசொலி பத்திரிகை வெளியிடுகிறது. பல விவரங்களைக் கொடுக்கிறார். ''சுருக்கமாக இந்தக் கூட்டம் போடுவது நடவடிக்கை எடுப்பார்களா சர்க்கார் என்று என்னிடம் பல பேர் கேட்டார்கள்? இஸ்மாயிலே கேட்டார். ரிப்போர்ட் எழுதுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னாலே அவர் என்னிடம் நான் எழுதப்போகிற ரிப்போர்ட்டின்படி நடக்குமா என்று ரொம்ப வருத்தப்பட்டு கேட்டார். மனம் வெறுப்படைந்து போய் கேட்டார். நான் சொன்னேன். நீங்கள் மனம் ரொம்ப வெறுத்துப் போய் இருக்கிறீர்கள், தப்பு. யார் நினைத்தார்கள் இந்திராகாந்தி வீட்டுக்குப் போவார் என்று? உங்களை ஜட்ஜ் ஆக்கி, அடித்தார்களா, அடிக்கவில்லையா என்று விசாரணைக்கு வைத்திருக்கிறார்களே, இப்படி போடுவீர்கள் என்று நினைத்தீர்களா? இந்தக் கமிஷன் நடக்குமென்று நீங்கள் நினைத்தீர்களா? உண்மையாகவே மக்கள் இருக்கிறார்கள் என்று அன்று அவருக்கு வாக்குறுதி கொடுத்தேன். எனக்கு மக்கள் மீது நம்பிக்கை உண்டு. 30 ஆண்டுகளாக எதிர் கட்சியில் இருந்திருக்கிறேன். மக்களுக்குத் தெரியும். மக்கள் நடவடிக்கை எடுக்க வைப்பார்கள். வித்தியாசாகர் மீதும் அவரது கூட்டாளிகள் மீதும் இந்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா, எடுக்காதா? கேள்வி ஒன்று. நடவடிக்கை எடுப்பது யார்; கையில் இருக்கிறது? முதலமைச்சர் கையிலா? நிச்சயமாக இல்லை. நிச்சயமாக அது உங்கள் கையில்தான் இருக்கிறது. சைதாப்பேட்டையில் உள்ள மக்கள் நினைத்தால் நிச்சயமாக வித்தியாசாகர் டிஸ்மிஸ் செய்யப்படுவார்.'' மக்களையும் அபேட் பண்ணுகிற அளவு சட்டம் ஒழுங்கையும் மீறுகிற அளவு, அரசு நடவடிக்கை, ஜனநாயக முறைப்படி 4½ கோடி மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகளாக இருக்கிற 234 உறுப்பினர்களின் அபிப்பிராயம் தெரிந்து நடவடிக்கை எடுப்பதற்கு முன்னாலே மறைமுகமாக தூண்டி விடுகிறார்.

சட்டம் அமைதியை மீறுங்கள். அரசை எதிர்த்துப் போராடுங்கள் என்ற அளவிற்கு அவர்கள் தூண்டிவிடுகிற பேச்சைப் பேசியிருக்கிறார்கள். அந்தப் பேச்சின் சாராம்சம் இது. செக்ஷன் 10 [ஏ] என்று கருதுகிறேன், கமிஷன் ஆப் என்கொயரி ஆக்ட் புத்தகம் என்னிடத்தில் கிடைக்கவில்லை. அதிலிருந்து எடுத்த குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது. அதைப் படிக்கிறேன்.

'10 (a) (1) If any person by words either spoken or intended to be read, makes or publishes any statement or does any other act, which is calculated to bring the Commission or

any member thereof into disrepute, he shall be punishable with simple imprisonment for a term which may extend to six months or with fine or with both.'

இங்கே மாண்புமிகு தலைவரவர்களே. தங்கள் மூலமாக இந்த மாமன்றத்திற்கும் நாட்டிற்கும் தெரிவிக்க விரும்புகிறேன். நீதியைப் பற்றி நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்த நாட்டில் பிறந்த பிரஜைகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு அரசு பாதுகாப்புத் தர கடமைப்பட்டு இருக்கிறது. உரிய பாதுகாப்பை வழங்குவதற்கு அது இருக்கிறது. இன்று ஆளும் கட்சியாக இருப்பவர்கள் நாளைக்கு எதிர்க்கட்சியாக வரலாம். இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் நாளைக்கு ஆளும் கட்சியாக வரலாம். இது ஜனநாயகத்தில் சாதாரணமாக இருக்கிற ஒன்று — அப்படியிருக்கிறபோது கட்சியைப் பற்றி கவலைப்படாமல் இந்த நாட்டு மக்கள் இம்சிக்கப்பட்டார்கள் என்று கருத்து வருகிறபோது அப்படிப்பட்ட எக்சசஸ் இருக்குமானால் அதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசின் கடமையாகும். அதற்காகத்தான் இந்த கமிஷனின் அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. [மணியடிக்கப்பட்டது] 5 நிமிடம் கொடுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>; 17 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும். 12-50-க்கு ஆரம்பித்தீர்கள்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு முக்கியமான பிரச்னையைப் பற்றி இங்கே தெளிவு படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். விசாரணைக் கமிஷன் அமைத்து அந்த நீதிபதியின் தீர்ப்பைப் பற்றி இங்கே விவாதித்துக்கொண்டு இருக்கிற நேரத்தில், வெளியே, மக்களே முடிவு செய்யவேண்டும் என்று சொல்கிறபோது, யாரைத் தாக்குவதற்காக மக்களை தயார் செய்கிறார்கள் என்பதைப் பற்றி சிந்திக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதையும் அந்த விளக்கத்தை அவர் சொல்லி அது சம்பந்தமாக என்ன கருத்து கூறுகிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள இந்த மாமன்றம் விரும்புகிறது என்பதையும் தகுந்த அளவிற்கு அவர்களுக்கு அந்த வாய்ப்புத் தரவேண்டும் என்றும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்,

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u> ; பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நோ பாயின்ட் ஆப் ஆர்டர்; தயவு செய்து உட்காருங்கள். எப்போது வேண்டுமானாலும் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்பதா?

<u>திரு. க. கந்தசாமி</u> : நான் மாண்புமிகு <u>முதலமைச்சர்</u> அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டின் நன்மையைக் கருதி நான் கூறும் கருத்துக்களுக்கு அவர்

மரியாதை கொடுத்தது, ஜனநாயகத்திற்குக் கொடுத்த மரியாதையாகக் கருதி என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அளவிற்கு சட்டமன்றம் முடிவு செய்ய இருக்கிறபோது, மாமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை நாட்டு மக்கள் அறிய இருக்கிற நேரத்தில், விவரம் தெரிந்த, பெரிய பிரஜையாக இருக்கும் சண்முகம் அவர்கள் இதே சென்னைப் பட்டணத்திலே ஆயிரக் கணக்கான மக்களைக் கூட்டி வைத்து, இந்தக் கமிஷனைப் பற்றி இப்படி சொல்லி இருக்கக் கூடியது நியாயம்தானா, ஒரு உயர்நீதி மன்ற நீதிபதி அவர்களே நாட்டிலுள்ள பிரஜைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று குறிப்பிட்டு இருக்கிற நேரத்தில், அந்த நீதிபதியின் கருத்தை இதயம் போன்றது என்று நாம் கருதிக் கொண்டு இருக்கிற நேரத்தில், அந்த கருத்துக்கு இழிவு ஏற்படுத்தும் அளவிற்கு, நீதிபதியின் அறிவு ஆற்றலை நிர்தாட்சண்யமான தன்மையை பழிக்கிற அளவிற்கு, வெளிப்படையாத களங்கம் கற்பிக்கும் அளவிற்கு மாண்புமிகு சண்முகம் பேச்சு அமைந்து இருக்கிறது. நான் சொல்வதை தவருக கருதுவார்களானால், தவறு என்று சொன்னால் நான் வாபஸ் வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

(பிற்பகல் 1·10)

அருள்கூர்ந்து இந்த செக்ஷன் 10-ஏ, கிளாஸ் 1-ஐ பார்க்கும்போது

It is a definite, deliberate pre-planned speech made by Mr. Shanmugam in an open public meeting, especially when the House was in session and was about to discuss a matter of public importance of a State. Only with a view to insult or injure the feelings of the people, he has said like that.

என்று நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு சண்முகம் அவர்கள் அவர்களுடைய சொந்தக் கருத்தை அல்லது அவர்கள் சேர்ந்திருக்கிற கட்சியின் கருத்தை பிரதிபலிப்பதில் ஆச்சரியம் இல்லை. மாண்புமிகு இஸ்மாயில் அவர்கள் தீர்ப்பு எழுதுவதற்கு முன்னால், இரண்டு நாளைக்கு முன்னால் நான் இவ்வாறு எழுதப்போகிறேன். அதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களோ, ஏற்றுக் கொள்ளமாட்டார்களோ நாம் என்ன செய்ய என்று ஆலோசனைக் கேட்பதைப்போல,

Also he, by his speech, has brought disrepute and he has uestioned the impartial conduct of the Judge. It is not as if the Judge goes and seeks the advice of the Learned Counsel, Thiru Shanmugham.

அவர்கள் மேடையிலே இவ்வாறு பேசினால் பின் நடப்பவைகளைப் பற்றி யோசிக்க வேண்டாமா? 'மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம், கங்கையே சூதகமானால் எங்கே போவது' என்று தேவர் பெருமகனார் சொன்னார்கள். புனிதமாக ஓடுகின்ற

கங்கை நீரே களங்கப்பட்டது என்று சொல்லக்கூடிய அளவுக்கு களங்கப்படுத்தியிருக்கிறார்கள். அந்த கருத்தை நம்பி, நம் நாட்டு மக்கள் பார்க்கிற போது எந்த அளவுக்கு மதிப்பார்கள். இந்த ஜட்ஜ்மென்டைப் பற்றி என்ன நினைப்பார்கள்? ஆக அருள்கூர்ந்து அது குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசு அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. நேற்று கூட பேசும்போது பத்திரிகைகள் நிர்தாட்சணியமாக நடந்து கொள்கின்றன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள். ஆனால், இன்றைய எக்ஸ்பிரஸ் பத்திரிகையைப் பார்த்தால் அப்படி தெரியவில்லை. அவர்கள் எண்ணம் என்ன என்பது நமக்குத் தெரியவில்லை. நேற்று திரு. சுப்பு அவர்கள் இந்த அறிக்கைமீது பேசினார்கள். ரொம்பத் தெளிவாகவும் உருக்கத்தோடும், உணர்ச்சி வசப்பட்டும் கருத்துக்களைச் சொன்னார்கள்; நாம் எல்லோரும் அதைக் கேட்டுக் கொண்டிருந்தோம். அவர் பேசாத ஒன்றை பெரிய எழுத்திலே போட்டிருக்கிறார்கள். நாம் எத்தனையோ கருத்துக்களைச் சொல்கிறோம். அதையெல்லாம் போடவில்லை. அது அவர்கள் விருப்பம். நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால், ஒரு உறுப்பினர் சொல்லாத ஒன்றை, அவர் சொன்னதாக போட்டிருக்கிறார்கள். திரு. பரமகுருவை பற்றி சொல்லும்போது, அவர் சொல்லாததை சொன்னதாகப் போட்டிருக்கிறார்கள்.

'The former I.G. of Prisons was now the City Police Commissioner and had a fair chance of being promot;d as I.G. If such persons were to be put in charge of law and order would people feel secure, Mr. Suppu asked?'

I ask the Editor or the Reporter of 'The Indian Express' whether my Learned Friend spoke like this. If he did not. is he prepared to apologise? I am sorry to quote this.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் நான் பேசியதாக வந்த செய்தியை நானும் பார்த்தேன். நான் சொல்லாத ஒன்றை சொன்னதாக ஏன் போட்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. சிலர் சில அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள்; ஆனால் சிலர் அந்த அதிகாரிகளை காப்பாற்ற வேண்டுமென்று பாடுபடுகிறார்கள். நான் அடிஷனல் ஐ. ஜி கிருஷ்ணசாமியைப்பற்றி பேசினேன். அதை பத்திரிகையில் போடவில்லை. நான் பேசாததைப் போட்டிருக்கிறார்கள். உரிமைப் பிரச்சனை கூட அதில் எழுப்பலாம். இருந்தாலும் நேரத்தை வீணக்க வேண்டாமென்று விட்டுவிட்டேன்.

[1978 ஏப்ரல் 7

திரு. கே. கந்தசாமி : திரு. சுப்பு அவர்கள் எவ்வளவு நிர்தாட்சணியமாகச் சொன்னார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் நாம் அறிவோம். அந்த அளவுக்கு பேசாத ஒன்றை பேசியதாகப் போடுகிறார்கள். அப்படி அந்த பத்திரிகைக்கு ஒரு குறிப்பிட்ட அதிகாரிமீது எவ்வளவு அக்கறை வந்து போட்டிருக்கிறார்கள் என்பது நமக்குப் புரிகிறது. அப்துல்காதருக்கும் அமாவாசைக்கும் என்னய்யா சம்பந்தம்? (சிரிப்பு) மாண்புமிகு பாட்சா அவர்கள் மன்னித்துக் கொள்ள வேண்டும். இது எங்கள் கிராமத்து பாஷை. அதைத்தான் சொல்கிறேன், தவறான முறையில் அப்படிச் சொல்லவில்லை. பரமகுரு மேல் அவர்களுக்கு அவ்வளவு அக்கறை ஏன்?

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்துல்காதருக்கும் அமாவாசைக்கும் என்ன சம்பந்தம் என்று சொன்னார்கள். பேச்சு வாக்கில் அப்படிச் சொல்வதாக இருந்தாலும் அப்துல்காதரை ஏன் வம்புக்கு இழுக்க வேண்டும்? அதைவிட மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டதைப் போல என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, அவர்கள் சொன்ன கருத்தை நான் வரவேற்கிறேன். ஆக இஸ்மாயிலாக இருந்தாலும் யாராக இருந்தாலும் தொடர்புள்ள எல்லா விஷயங்களையும் ஆராய்ந்திருக்க வேண்டும். ஆக இந்த அளவிற்கு இங்கே ஒருதலைப் பட்சமாக கமிஷன் நடந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் நிர்த்தாட்சண்யமாக காரியங்களை இங்கே எடுத்துச் சொல்லவில்லை. It is incomplete.

மாண்புமிகு உறுப்பினர் பண்ணை சேதுராம் அவர்கள் கூடச் சொன்னார்கள். இது முழுமையான அளவில் விசாரணை செய்து அளிக்கப்படவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். 44 பேர்கள் அஃபிடவிட் போட்டதில் 13 பேர்களைத்தான் விசாரித்திருக்கிறார்கள்.

சிட்டிபாபு அவர்கள் மரணம் அடைந்தார்கள். அவர்கள் சிறையிலே கொடுமைப் படுத்தப்பட்டார்கள் என்று சொல்லப் படுகிறது. அதே போன்று முரசொலி மாறன், அடியார் போன்றோர் எல்லாம் கொடுமைப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. அந்த மாதிரி கொடுமைப் படுத்துவதற்கு யார் காரணம் என்பதை நன்றாகத் தீர விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வித்தியாசாகரனுக்கு இவர்கள் மீது என்ன அக்கறை? முரசொலி மாறன் பற்றியும். வீராசாமி பற்றியும் அவருக்கு என்ன அக்கறை?

Therefore I want to submit to this Honourable Court (Laughter) I am sorry. I mean Honourable House.

நான் இப்போது வக்கீல் வேலையும் பார்ப்பதனால் அந்தப் புத்தி வந்து விடுகிறது.

ஆகவே இந்தச் சூழ்நிலையை நான் கூறுவதற்குக் காரணம். இங்கே அவர்கள் எழுதுகிறார்கள். 26-ஆம் தேதி என்று கருதுகிறேன். அதை 26-ஆம் தேதி டெல்லியிலே அவர்களுடைய சகலப்பாடி ஓ. வி. அளகேசன் பேசுகிறார் இதே பொருள் பற்றி.

தி. மு. க. பற்றி என்ன அக்கறை. அந்த அளவிற்கு இங்கே அரசியல் புகுந்திருக்கின்றது.

The hands of the officials were tied practically and they were not allowed to function freely and therefore any attempt to malign Thiru Paramaguru and others is quite baseless and it has got no reason or legal evidence.

ஆகவே அன்று அரசியல் காரணங்களுக்காக பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவரங்களைத் தெரிந்தாகவேண்டும். மாண்புமிகு சிட்டிபாபு அவர்கள் எழுதிய அந்த டைரியின் 60 பக்கங்களில் குடும்ப காரணங்கள் எழுதப்பட்டிருந்தன என்று அவருடைய மனைவியிடம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள்.

It must contain the whole matter.

ஒரு பகுதியை ஏற்றுக் கொண்டு. இல்லாத ஒரு பகுதியை அவர்கள் சொல்கிற காரணத்துக்காக ஏற்றுக்கொண்டேன் என்று மாண்புமிகு நீதிபதி இஸ்மாயில் அவர்கள் கூறி இருக்கிறார்கள். நான் அவர்களை மிக்க மரியாதையோடு கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் முழுவதையும் விசாரித்திருக்கவேண்டும். ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னால், தீர்ப்பளிப்பதற்கு முன்னால் முழு விஷயமும் ஆராயப்பட வேண்டும்.

In the absence of certain particulars in regard to a particular matter, an adverse inference has to be drawn. This is criminal Law, simple.

ஆகவே இருக்கக்கூடிய அந்த 60 பக்கங்கள் கொண்ட டைரியை மறுபடியும் வரவழைத்து விசாரித்திருக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அதிலே அனைத்து சாட்சியங்களையும் விசாரித்து சரியான முடிவு தந்தால் அது முழுமை பெற்ற விசாரணையாக அமையும். எதிர் காலத்தில் இவை நல்ல உதவியாக இருக்கும். ஆகவே இந்தக் கமிஷனை நான் ஏற்றுக்கொள்ள முடியாதவனாக இருக்கிறேன். ஆகவே புது கமிஷன் ஒன்றைப் போட்டு எல்லாத் தரப்புச் சாட்சியங்களையும் விசாரித்து நீதி வழங்குகிற அளவுக்கு அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

[1978 ஏப்ரல் 7

(பிற்பகல் 1.20)

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நீதிபதி இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது ஜனதாக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த அறிக்கைமீது நான் என் கருத்துக்களைக் கூறுகிறபோது இந்த அறிக்கை சம்பந்தமாக, இந்த அறிக்கைக்கு ஏதுவாக இருந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றபோதிருந்த பல்வேறு சூழ்நிலைகளைக் கூட இந்த மாமன்றம் நன்றாக அறிந்துகொள்வது நலமாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். 1975ம் ஆண்டு ஜூன் திங்கள் 12ம் தேதி அன்று அன்றிருந்த பிரதமர் அவர்களுடைய தேர்தல் செல்லாது என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதையொட்டி 1975 ஜூன் 26ம் தேதி அன்று அதே பிரதமர் இந்த நாட்டில் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்ததையும் நாம் மறந்திருக்கமுடியாது. அந்த நெருக்கடி நிலை இந்த நாட்டுக்குத் தேவை இல்லை என்று நெருக்கடி நிலையை எதிர்த்து இந்த மாமன்றத்தில் நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டவிரும்புகிறேன்.

அதைப்பற்றி, பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் கூட நெருக்கடி நிலை என்பது இந்த நாட்டுக்குத்தேவை இல்லை என்று கூறியது மட்டுமல்ல, அன்றையதினம் நெருக்கடி நிலையையொட்டி ஏறத்தாழ 80,000 தேசத் தலைவர்கள், இன்று பிரதமராக இருக்கும் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் உட்பட, அசோக்மேத்தா அவர்கள் உட்பட பல ஆயிரக்கணக்கான தேசியத் தலைவர்கள் எல்லாம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சிகளையும் நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். ஆகவேதான் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் நெருக்கடி நிலையை வாபஸ் வாங்கவேண்டும், சிறையில் அடைக்கப்பட்டிருந்த தலைவர்களை உடனே விடுதலை செய்யவேண்டுமென்று கூறினார்கள், அது ஒன்றும் நடக்கவில்லை. கடைசியாக அக்டோபர் 2ம் தேதி தலைவர்களை விடுதலை செய்வார்கள் என்று எண்ணியிருந்தோம். ஆனால் அதுவும் நடைபெறவில்லை. பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் அன்றைய தினம் நம்மைவிட்டு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நான் கூறுகிறபோது இந்த நாட்டில் நெருக்கடி நிலைமையைக் கொண்டுவந்திருந்த காலத்தில் அதையொட்டி நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். உடனடியாக அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. ரூல் ஆப் லா அமல் நடத்தப்படவில்லை. கமிட்டட் ஜுடிஷியரியாக நீதிமன்றம் மாற்றப்பட்டது.

அதுமட்டுமல்ல. ஒரே கட்சிதான் இந்த நாட்டை ஆள வேண்டும், சர்வாதிகாரம் நிலைநாட்டப் பட வேண்டும், ஜனநாயகம் தூக்கியெறியப்படவேண்டும் என்று திட்டமிட்டு செயல்

1978 ஏப்ரல் 7] [திரு. ஜே. ஜேம்ஸ்]

கள் எல்லாம் இங்கே நடைபெற்றன என்பதை இந்த மன்றத்திலுள்ள அரசியல் கட்சிகளைச் சார்ந்த அனைத்து நண்பர்களும் நன்றாக அறிந்திருக்கிறார்கள். ஆகவேதான் அந்தச் சூழ்நிலையில் சென்னை மத்திய சிறையில் நடைபெற்ற அநீதிகளைப் பற்றி விசாரிக்கவேண்டுமென்று நீதிபதி இஸ்மாயில் அவர்களை ஒரு தனி நபர் குழுவாக நியமித்து அவர் எந்தளவிற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அறிக்கையைப் பார்க்கிறபோது நாம் நன்றாக அறிகிறோம். அதைவிட மேலான நம்பிக்கை என்னவென்று சொன்னால், நமது சட்டத்துறையை தாங்கியிருக்கிற நமது சட்டத்துறை அமைச்சர் அவர்கள் நீதிபதி இஸ்மாயில் அவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள். ஆக இந்த அறிக்கையை அவர்கள் நன்றாக ஆராய்ந்து இதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இஸ்மாயில் அவர்கள் எந்த அளவிற்கு அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள், தனக்குக் கிடைத்த தெளிவுகளை எந்தளவிற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நமது சட்ட அமைச்சர் அவர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ள தகுதியுடையவராக இருப்பது உண்மையிலேயே நாம் பாராட்டக்கூடிய ஒன்று என்று இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் சிட்டிபாபுவுடைய டைரியை மட்டும் வைத்து ஏதோ இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டிருக்கிறது என்று குறை கண்டார்கள். டைரியை மட்டும் நீதிபதி இஸ்மாயில் ஆதாரமாக கொள்ளவில்லை. அதற்கு 'கொராபரேட்' செய்கின்ற வகையில் எந்தெந்த சந்தர்ப்பங்களில் எந்தெந்த சாட்சியங்களை எல்லாம் எந்தெந்த கேள்விகள் கேட்கவேண்டுமோ அப்படியெல்லாம் கேட்டிருக்கிறார்கள்.

ஆகவே டைரியை ஒட்டி அதில் இருக்கின்ற குறிப்புகளையொட்டி அவற்றையெல்லாம் கொராபரேட் பண்ணுகின்ற வகையில் பல சாட்சியங்களை சேகரித்து இருக்கிறார்கள் என்பதை இந்த அறிக்கையை படிக்கின்ற அனைவரும் உணர்ந்து கொள்ள முடியும். அதிலும் நீதிபதி இஸ்மாயில் அவர்கள் இதில் சிறப்பாக பணியாற்றியிருக்கிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி பிப்ரவரி மாதம் முதல் தேதி, இரண்டாம் தேதி இந்த நாட்களில் சென்னை சிறையில் யார் யார் தாக்கப்பட்டார்கள், என்னென்ன முறையில் தாக்கப்பட்டார்கள் என்பதைப் பற்றியெல்லாம் இங்கு உரை நிகழ்த்திய அனைத்து நண்பர்களும் எடுத்து கூறியிருக்கிறார்கள். நண்பர் ஜெபமணி அவர்கள், நேதாஜி, கலிவரதன், டி.பி. ஏழுமலை, அம்மையார் ரமணிபாய் வரையிலும் எல்லோரையும் சிறையில் சித்திரவதை செய்தார்கள். தி.மு.க.வைச் சேர்ந்தவர்களையும். கம்யூனிஸ்டு பார்டியை சேர்ந்தவர்களையும், இவ்விதம் அனைத்து அரசியல் கட்சியைச் சேர்ந்

தவர்களையும், ஒருவேளை காங்கிரஸ் கட்சியைத் தவிர, மற்ற கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் சித்திரவதை செய்யப் பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் பல்வேறு சந்தேகங்கள் தோன்றுகின்றன. அவற்றையெல்லாம் கூறுவதற்கு இருக்கின்றேன். கமிஷன் முன்னால் ஏற்பட்டது என்னவென்றால், சிறையில் நடைபெற்றது என்ன? சிறையில் மினிமம் ஃபோர்ஸ் தான் உபயோகப்படுத்தப்பட்டதா? அல்லது எக்ஸஸ் ஃபோர்ஸ் அதாவது அத்துமீறி நடந்தார்களா, அடிதடிகள் செய்தார்களா என்பதை மாண்புமிகு இஸ்மாயில் அவர்கள் விசாரித்து அறிக்கை கொடுக்கும்படி தான் அவர்களுக்கு ரெபரன்ஸ் கொடுக்கப்பட்டது. மினிமம் ஃபோர்ஸ் தான் உபயோகப்படுத்தப்பட்டது என்று பல சாட்சியங்களையும் காட்டியிருந்தார்கள்.

ஆனால் அடிபட்டவர்களைப்பற்றி இந்த அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், அடிபட்டு விழுந்தவர்களைப் பற்றி சொல்லும்போது, மரம் சாய்ந்தது போல், கல்லால் எறியப்பட்ட கண்ணாடி தூள்தூளாக தரையில் விழுந்து கிடப்பது போல் இருந்தார்கள் என்றும், அடிப்பதற்கு வருகின்ற ஜெயில் அதிகாரிகள் காக்கி உடை அணிந்த யமன்கள் வருவது போலவும், பலர் அடிபட்டு விழுந்து பின்பும், இந்த அதிகாரிகளால் தாக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் இதில் கூறியிருக்கின்றார்கள். இவற்றுக்கெல்லாம் காரணம் அதிகாரிகள் என்ன சொல்லுகின்றார்கள் என்றால் இந்த கைதிகளை எல்லாம் அறைக்குள்–செல்–க்குள் போவதற்கு மறுத்தார்கள், ஆகவே செல்லுக்குள் தள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது, அதற்கு தேவையான ஃபோர்ஸ் தான் உபயோகப்படுத்தப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள் அதிகாரிகள், சட்ட அமைச்சர் அவர்கள் இதை நன்றாகச் சிந்தித்து பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 49 கைதிகளை நான்கு அதிகாரிகள் நினைத்து, மினிமம் ஃபோர்ஸ் உபயோகித்து அறைக்குள் தள்ள முடியுமா, என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அதிகாரிகளுடைய இந்தக் கூற்று உண்மைக்கு மாறானது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தாக்கப்பட்ட நண்பர்கள் எந்த முறையில் தாக்கப்பட்டார்கள் என்பதை விரிவாக கூறியிருக்கிறார்கள். அடுத்து அங்கு சிறையில் இருந்த கைதிகளை எல்லாம் எவ்வளவு அவதூறாக பேசி, கீழ்த்தரமான வார்த்தைகளால் பேசி இம்சைப்படுத்தினார்கள் என்பதை எல்லாம் இஸ்மாயில் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படி பல்வேறு நண்பர்களை இழிவான வார்த்தைகளால் இம்சைப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆசைத்தம்பி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர், அவரைப் பார்த்து ஜெயிலர், 'ஏய் உனக்கு அறிவு இல்லையா, அடிக்கடி சிறைக்கு வந்திருக்கிறாயே' இப்படியெல்லாம் இழிவான வார்த்

தைகளைக் கூறி இம்சைப்படுத்தியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் இஸ்மாயில் அவர்கள் தனது அறிக்கையில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். சிட்டிபாபு பற்றியும் அவர்களையும், வேழவேந்தன் அவர்களையும் இழிவுபடுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த ஜெயில் கைதிகளை எல்லாம் அறையிலிருந்து வெளியே மல ஜலம் கழிப்பதற்காகக் கொண்டு வரும்போதும், முட்டில் நிற்கச் சொல்லி இம்சைப்படுத்தியிருக்கிறார்கள், இவையெல்லாம்...

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை அமைச்சர் அவர்களுடைய பதில் வரை நீட்டி வைக்கிறேன்.

(பிற்பகல் 1-30.)

கடுமையான தண்டனை விதித்திருக்கிறார்கள். சிட்டிபாபு அவர்களை விடியற்காலை 4 மணி அளவில் எழும்பவைத்து, ரத்தக்கறை படிந்த துணிகளையெல்லாம் துவைக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. ஹோம் செகரட்டரி அங்கே ஜூன் மாதம் 23ஆம் தேதி வந்து, நிலைமைகளைத் தெரிந்துகொண்டு போனதற்குப் பிறகு, சாதாரணமாக இந்தச் சிறைக் கைதிகளுக்கு கொடுக்கப்பட்டிருந்த அந்தச் சலுகைகளும் கூட மறுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. வெளியே இருந்து ஏதாவது மருந்து கொண்டுவந்து கொடுத்தால், அதை வாங்குவதற்குக்கூட மறுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இன்னும், கதிரேசன் என்று ஒருவர் குதிரை வைத்திருக்கிறார்கள் என்ற ஒரு காரணத்திற்காக, குதிரையைப் போல் அவர்களை ஓடவைத்து, இத்தகைய அநீதிகளையெல்லாம் செய்திருக்கிறார்கள் என்று கூறுகின்றபோது, இவற்றையெல்லாம் பார்க்கும்போது தமிழ்நாட்டிலே, இந்தியாவிலே தனி நபர் சுதந்திரம் பறிக்கப்பட்டு, சிறைக் கைதிகள் எல்லாம் மனிதத் தன்மை இல்லாத அளவுக்கு, மிகவும் கொடூரமாக சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்று சொன்னால், நிச்சயமாக இஸ்மாயில் கமிஷனால் இதைவிடக் குறைவாக உள்ள அறிக்கையைத் தர முடியாது என்பதை இந்த மாமன்றம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது, அதோடு, அவசர காலத்திலே அங்கே சிறைக் கைதிகளுக்குத் தேவையான, வசதிகள் அளிக்கப் படவில்லை. அவைகள் எந்த அளவிலே மறுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் கூறியிருக்கிறார். அவற்றையெல்லாம் கூறுவதற்கு நேரம் இடம் கொடுக்காததால், விட்டுவிடுகிறேன்.

அடுத்து, வித்யாசாகர், அதைப்போல் சியாம், சுருளிராஜன், இன்னும் சில அதிகாரிகள் எந்த அளவிற்கு அத்துமீறி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணுகிறபோது, மனிதத் தன்மையே இல்லாத அளவுக்கு அவர்கள் நடந்து கொண்டிருக்

கிறார்கள். ஆனால், அவர்கள் இன்னும், இன்றும் உத்தியோகத்திலே நீடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், உண்மையிலே அதை எந்த அளவிற்கும் வரவேற்க முடியாது என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை அரசுக்கு வந்தவுடன், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படியென்றால் என்ன செய்திருக்கவேண்டும்? அந்த அதிகாரிகளை உடனடியாக சஸ்பெண்டு செய்திருக்க வேண்டும். அதற்கு மாறாக, மனிதத் தன்மையில்லாமல், சிறையினுடைய விதிமுறைகளையெல்லாம் மீறி, இந்த அளவுக்கு அத்துமீறல் செய்திருக்கின்ற இந்த அதிகாரிகள் இன்னும் அரசிலே பணியாற்றுகின்றார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இனிமேலாவது தேவைப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து, யார் குற்றவாளி என்பதை இந்த அரசு கண்டுபிடித்து, அவர்கள்மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று நான் இங்கே வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இதிலே பாதிக்கப்பட்ட என் அருமை நண்பர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் இனிமேல் வேலை செய்து வாழ்க்கையை நடத்துவதற்கு வழியற்ற நிலைமையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த அரசு காம்பன்சேஷன் கொடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, இனி இந்தச் சிறைச்சாலைகளிலே எல்லாம் என்ன நடைபெற்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இன்னும் இஸ்மாயில் அவர்கள் அறிக்கையிலே ஆங்காங்கு சிலவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களுடைய அனுமதியோடு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தக் கைதிகளையெல்லாம், அவர்கள் சிறையிலே இருந்த காலத்தில் அவர்கள் சேர்ந்திருந்த கட்சியிலே இருந்து ராஜினமா செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. இலவசமாக பேப்பர் சர்குலேட் செய்திருக்கிறார்கள், அதிகாரிகள். அதுமட்டுமல்ல. ராஜினமா செய்யச் சொல்லி அந்த ராஜினமா கடிதத்தை கட்சியின் தலைவருக்கு அனுப்பியதோடு மட்டுமல்லாமல், அரசாங்கத்திற்கும் அந்த ராஜினமா கடிதத்தை அனுப்பியிருக்கிறார்கள். அந்த ராஜினமா கடிதத்தில் சாதாரணமாக எல்லாக் கடிதங்களிலும் காணுகின்ற ஒரு வாசகம் என்னவென்று சொன்னால் நாங்கள் எங்கள் கட்சியிலிருந்து ராஜினமா செய்துவிட்டு, இந்திரா கட்சியில் சேருகிறோம் என்று. ஆகவே. இந்திரா காங்கிரஸ் வலுவடையச் செய்வதற்காக ஜெயிலில இத்தனை நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன.

என்று சொன்னால், அது மிகையாகாது. அதற்கான காரண, காரியங்கள் இருக்கின்றன என்பதை இந்த அறிக்கை நமக்கு நன்றாக எடுத்துக்காட்டுகின்றது.

பக்கம் 82ல் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. ராஜினமாச் செய்யவில்லை என்று சொன்னால் பல்வேறு சலுகைகளும் மறுக்கப் பட்டதாக மாண்புமிகு ஜஸ்டிஸ் இஸ்மாயில் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

சட்ட அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் படித்துத் தெரிந்திருந்தாலும்கூட நான் ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை உணர்ந்து கொள்வது நலமாக இருக்கும்.

பக்கம் 84ல்—

The contents of these letters are substantially the same and in these letters the political detenus had stated that from the date of the letter they were getting themselves out of the D. M. K. party and were joining the Congress functioning under Thirumathi Indira Gandhi. This will be in consonance with what Thiru Shanmugham represented. It is not merely the detenus belonging to the D. M. K. party who were forced to resign but also a person like Thiru Kailaimannan belonging to Congress (0) was forced to resign.

ஆகவே, ஜெயிலில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது, இந்திரா காங்கிரசைப் பலப்படுத்துவதற்காக கட்சி அடிப்படையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்பதற்கு ஐயப்பாடு இல்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'மிசா' வைப் பற்றி அன்றையதினம் பல்வேறு பத்திரிகைகளில் ஒரு டெபனிஷனைக் கொடுத்தார்கள். 'மெயின்டனன்ஸ் ஆப் இன்டர்னல் செக்யூரிடி ஆக்ட், என்பது 'மெயின்டனன்ஸ் ஆப் இந்திராகாந்தி ஆக்ட்' என்ற அளவுக்குத் தெளிவாக நிருபணம் ஆகிறது. மிசா சட்டத்தை வைத்து பல்வேறு காரியங்களைச் செய்து கட்சியை வளர்க்க முயற்சித்திருக்கிறார்கள். சென்னை மத்திய சிறையில் நடைபெற்ற சம்பவங்களுக்கு டில்லியில் ஒரு சதித் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன் பலனாகத்தான் சென்னை மத்திய சிறையில் இவ்வளவு நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்கின்றன. எப்படியாவது அனைத்துக் கட்சிகளையும் ஒழித்துக்கட்டிவிட்டு மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் மட்டுந்தான் செயல்பட வேண்டுமென்ற திட்டத்தோடு அத்தனை காரியங்களையும் செய்திருக்கிறார்கள்.

பக்கம் 155ல் இது சம்பந்தமாக சில காரியங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. தமிழ்நாடு சட்டமன்றம் கலைக்கப்பட்டது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 ஏப்ரல் 7

அதைத் தொடர்ந்து பிரசிடென்ட் ரூல் அமலாக்கப்பட்டது. ஜூன் மாதம் 8ஆம் தேதியன்று பிரதமர் பாராளுமன்றத்தில் உரையாற்றுகிறார்,

....the Assembly was dissolved and President's rule was imposed and that it was not only an extraordinary situation, but also a surprise action on the part of the then Government of India. In this context, my attention was also invited to the speech of the then Prime Minister of India in the Rajya Sabha on the 8th January 1976, that is, three weeks prior to the imposition of the President's rule in Tamil Nadu, stating:

> "And thus, Emergency had to come. A sense of discipline has grown. But there are two islands where every effort is being made to destroy that discipline, where every encouragement is being given, who want to seek aid from outside against India, etc. etc."

நான் இவற்றை எதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால்--டில்லியில் திட்டமிட்டு இந்தச் சதி நடைபெற்றிருக்கிறது. ஏற்கனவே சொன்னேன். பல்வேறு அரசியல் கட்சிகள் செயல்படக்கூடாது, ஒரே கட்சி நிர்வாகம் வேண்டும், இந்த நாட்டில் ஜனநாயகம் இருக்கக்கூடாது, சர்வாதிகாரத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டத்தோடு மற்ற அரசியல் கட்சிகளை அழித்துவிட்டு காங்கிரஸ் மட்டுந்தான் இந்த நாட்டில் இருக்க வேண்டுமென்பதற்காகச் செய்த சதி என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு இன்னொரு ஆதாரத்தையும் கூற விரும்புகிறேன். பல்வேறு அங்கத்தினர்களும் எடுத்துக் கூறினார்கள். மத்திய சிறையில் பணியாற்றிக் கொண்டிருந்த வித்தியாசாகர் என்ற சூப்பரின்டென்டென்ட் பல்வேறு தவறுகளைச் செய்துவிட்டார்கள் என்பதை பல்வேறு பத்திரிகைகளும் மக்களுக்குத் தெரிவித்தன.

[பிற்பகல் 1-40]

ஆகவே இலாகா அதிகாரிகள் அவரை அங்கிருந்து மாற்ற வேண்டுமென்று உத்தரவைப் பிறப்பித்தால், பக்தவத்சலம் அவர்களுக்கும் அன்றையதினம் இருந்த அரசுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பது நமக்குத் தெரியும், இருந்தாலும் அவர் ஆளுநருக்கும், அப்போது ஹோம் மினிஸ்டர் (ஸ்டேட் மினிஸ்டர்) ஆக இருந்த ஓம் மேத்தா அவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். அந்த வித்தியாசாகரை மாற்றக்கூடாது, ஏன்? மாற்றினால் கட்சி வளர்ப்பு பாதிக்கப்படும், அவர் செய்து கொண்டிருக்கிற பணிகள் பாதிக்கப்படும் என்றால், என்ன செய்து கொண்டிருக்கிறார் அவர்? ஜெயிலில் பல அரசியல் கட்சித் தலைவர்களை சித்திரவதை செய்து கொண்டிருந்தார், பல கட்சிகளைச் சார்ந்தவர்களிடம் இருந்து ராஜினாமா கடிதம் வாங்கிக் கொண்டிருந்தார், அதனால் கட்சி வளர்ந்து கொண்டிருக்கிறது, ஆகவே மாற்றக்கூடாது என்று கடிதம் எழுதியிருக்கிறார். நான் ஏற்கனவே சொன்ன மாதிரி அரசியல் தலையீட்டின் காரணமாகத்தான் இவ்வளவு அத்துமீறல்கள் சென்னை சிறைச்சாலையிலே நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 ஏப்ரல் 7] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இந்த அறிக்கையிலே 159 பக்கத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

History bears evidence to the fact that even the most strongly entrenched Government cannot last for ever and the dictators all over the world have paid their, penalty....

என்று சொல்லிக் கொண்டு போகிறார்கள். நான் இவற்றைக் கூறுகின்ற போது இன்றைய தினம் நாட்டிலே அதன் விளைவாக ஏற்பட்ட பலன் என்ன என்பதை நாம் அறிவோம், சர்வாதிகாரம் நிச்சயமாக நாட்டிலே தலை தூக்க முடியாது, மக்களாட்சி தான் இருக்க முடியும் என்பதை மக்கள் தெளிவாகத் தீர்ப்பு அளித்து விட்டார்கள். ஆகவே, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், மேலும் இம்மாதிரியான நிலை இந்த நாட்டில் ஏற்படக்கூடாது, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் கூறியதுபோல், சிறை என்பது பாதுகாப்பான இடம், இந்த மாதிரியான நிலை ஏற்பட்டால் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை நாம் அறிவோம். இத்தகைய அநீதிகளை இழைத்த அரசுப் பணியாளர்களை நிச்சயமாக அரசு தண்டிக்கவேண்டும், நான் ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம் தாயகத்தோடு இணைவதற்காக நடத்தப்பட்ட போராட்டத்தின் போது அங்கே இருந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கணபதி என்பவர் இதைப் போன்று பலரை கொலை செய்யக்கூடிய அளவிற்கு சாவடி அடித்து விட்டார். ஆனால் பின்னாலே நடைபெற்றது என்ன, இடிவிழுந்து அவர் இறந்து விட்ட நிகழ்ச்சியைப் பார்த்தோம், அதை நான் இதையொட்டிச் சொல்லவில்லையென்றாலும், சாதாரணமாக அநீதிகள், அக்கிரமங்கள் செய்கிறவர்களுக்கு இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். ஒரு வேளை இயற்கை இதிலே அந்த அளவிற்குப் போகவில்லையென்றாலும், நாம் நம் கையில் உள்ள சட்டத்தைப் பயன்படுத்தி இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

திரு எம்.ஏ.லத்தீப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விசாரணைக் கமிஷனுடைய முடிவுகளைக் குறித்து இந்த அவை தன்னுடைய கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டிருக்கிறது. பிரச்சினைகளிலே மாறுபாடுகள் இருக்கலாம். அதுவும் குறிப்பாக அரசியல் கட்சிகளிடையே அரசியல்வாதிகளிடையே பல்வேறு பிரச்சினைகளிலே மாறுபாடுகள் இருக்கலாம். ஆனால் மனிதாபிமான பிரச்சினையிலே மாறுபாடு வந்துவிடுமானால், மனிதாபிமானம் என்பது உலகத்திலே அப்படி ஒன்று இருக்கிறதா என்பது கேள்விகுறியாகிவிடும்.

இன்றைக்கு நம் முன்னாலே இருப்பது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை. மனிதர்களை, மனிதர்களுடைய உரிமைகளைக் கொடுமை செய்கிற பிரச்சினை. இந்தப் பிரச்சினை நீக்குப்போக்கற்ற, நிர்தாட்சண்யமற்ற, பட்சபாதகமற்ற முறையிலே அணுகப்பட வேண்டும், கட்சி உணர்வுகளுக்கு இடம் கொடுக்கக்கூடிய பிரச்சினையாக அணுகப்படக் கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சிறைச்சாலை என்பது சமுதாயத்திற்கு விரோதமாக யார் குற்றம் இழைக்கிறார்களோ, சமுதாயத்திற்கு விரோதமாக யார் அநீதி இழைக்கிறார்களோ அவர்களை தேக்கி வைத்து அவர்களை சீர்படுத்துகின்ற ஒரு இடமாகத்தான் சிறைச்சாலை நம்மால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அதே சிறைச்சாலையில் சமுதாய விரோதிகளை சீர்திருத்தக்கூடிய பொறுப்பிலே, உள்ளவர்களே சமுதாய விரோதமான காரியங்களை

offences against the Society

அவர்களே செய்வார்களானால், அந்தத் துறை நாட்டிலே மதிக்கப்படக்கூடிய துறையாக இருக்குமா என்பதை எல்லோரும் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறிக்கையிலே மாண்புமிகு நீதிபதி இஸ்மாயில் அவர்கள் பல பிரச்சினைகளை அணுகுகிறார்கள். பல பிரச்சினைகளுக்குத் தங்கள் கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதில் முதல் அத்தியாயத்திலேயே சொல்லப்படுகின்ற ஒரு கருத்துதான் என்னைப் பொறுத்தவரையிலே அது மிகப் பயங்கரமான ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்ற கருத்தாக இருக்கிறது. அதைப்பற்றி அரசு சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அவர்கள் சொல்வதிலே, பக்கம் 1, அத்தியாயம் 1-லே சொல்லப்பட்டிருக்கிறது, ''சென்னை, மத்திய சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் சிலர் கொடுமைப்படுத்தப்பட்டதாகவும், அடிக்கப்பட்டதாகவும் 1976ல் பிப்ரவரியில் குற்றச்சாட்டுகள் செய்யப்பட்டன. அந்த நிலையில். அந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி துறை அளவில் விசாரணை நடத்தும்படி அரசு ஆணையிட்டது. இந்த விசாரணையின்படி, இக்குற்றச்சாட்டு

கள் மெய்ப்பிக்கப்படவில்லை'' என்று இருக்கிறது. இங்கே ஒரு நீதிபதி நியமிக்கப்பெற்று, நீதிபதி விசாரணை செய்து, அந்த விசாரணையின் அடிப்படையிலே இந்தெந்தக் குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன, ஆனால் சமுதாயத்திற்கு விரோதமாகவும், சட்டத்திற்கு விரோதமாகவும், சட்டத்தைப் பரிபாலிக்கக்கூடிய பொறுப்பிலே இருக்கக்கூடிய அதிகார மமதை படைத்த அதிகாரிகளால் இந்தக் குற்றங்களெல்லாம் வேண்டுமென்றே, திட்டமிடப்பட்டு, மனித சமுதாயத்திற்கு விரோதமாக இழைக்கப்பட்டிருக்கின்றன என ஒரு நீதிபதி விசாரணை செய்து தீர்ப்புச் சொல்கிறார்கள். ஆனால் அதற்கு முன்பு நடத்தப்பட்ட, துறையினரால் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் எதுமே நடக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இதிலேயிருந்து என்ன தெரிகிறது.

What is the utility, usefulness of deparmental enquiry?

டிபார்ட்மெண்டல் என்கொயரி நடக்கிறது என்றால் கண் துடைப்பிற்காகத்தான் செய்யப்படுகிறது, அதிகாரிகள் செய்யும் குற்றங்களை விசாரிக்கும்பொழுது உயர் மட்ட கீழ் மட்ட அதிகாரிகள் அதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டும். சட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை, மனிதாபிமானத்தைக் காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை, நீதியைக் காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை, நடந்த உண்மைகளை நாட்டிற்கு தெரிவித்து யார் யாருக்குத் தீமைகள் ஏற்பட்டிருக்கின்றனவோ அநீதி இழைக்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்ற அவசியமில்லை, ஆனால் தங்கள் துறையையும், தங்கள் பதவியையும் தங்கள் அந்தஸ்தையும், தங்களுக்குக் கீழே இருக்கின்ற அதிகாரிகளின் அந்தஸ்தையும் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் செயல்பட்டு, அங்கே ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்லப்பட்ட பிறகு, இவ்வளவும்வந்திருக்கிறது என்று சொன்னால்

Such a voluminous report by His Lordship Justice Mr. Mohamed Ismail-that so many atrocities have been committed, prpetrated against humanity

என்ற அளவிற்கு வந்திருக்குமேயானால்,

I charge the Department, the entire police Department, the entire police Officers, who were responsible for admistration, that they have been partial, that they have been inhuman and that their actions cannot be justified and the considerations that they adopted while they conducted departmental enduiry were extraneous to the realm of justice, to the realm of humanism....

என்ற சார்ஜை அவர்கள் மீது நான் கூறுகிறேன். ஆகவே இந்த விசாரணையில் என்ன முடிவுகள் என்பதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

I want that all the reports, all the papers connected with departmental enquiry, should be placed on the table of the House.

என்ன என்கொயரியை நடத்தினார்கள், அந்த என்கொயரியின் விளைவுகள் என்ன என்பதைத் தயவு செய்து இந்த அவையிலே வைக்க வேண்டும்.

It is the duty and moral responsibility of the Hon. Minister Mr. Narayanaswami Mudaliar to place all the records connected with the departmental enquiry and place them on the table of the House, to be placed before the public of Tamil Nadu to show that the departments have no sense of justice, that they are partial, that they are not conscious of their responsibility to society but they are conscious only to safeguard their interests, their departmental interest, etc.

என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் வலியுறுத்திச் சொல்கிறேன், தயவு செய்து அதை முதலிலே செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

Another thing I would like to know is, where responsibility of this government is involved........

இந்த அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்ன ? இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் இங்கேதான் இருக்கிறது, அதனால் உங்களைச் சுட்டிக்காட்டுகிறேன், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில்,

There is no responsibility direct or indirect so far as the unfortunate incident that took place during the dark days of Indian democracy, within the premises of the Indian jails. it encased.

[பிற்பகல் 1.50]

அதிலே இந்த கவர்ன்மெண்டுக்கு ஒரு ரெஸ்பான்சிபிலிட்டியும் இல்லை, அதை நாம் முதலிலே தெரிந்துகொள்ளவேண்டும்,

Coming to the responsibility of this Government, as soon as the Commission of Enquiry submits its report to the Government for its serious consideration and follow up action, then there comes the responsibility of this Government.

As soon as this is placed on the table of the House, it is our responsibility to consider and fix the responsibility upon the officers who were and are guilty of committing such inhuman attrocities. That is the responsibility of this House. After it is being accepted by the Hon. Members of this House, it is for the Government to decide what follow up action should be taken.

Now the responsibility of the Government comes into picture to find out what is the legal position of this document. This document is a finding, a document of findings by a commission which was constituted under the commission of Enquiry Act. Now what is the legal position of these findings? This Commission has given a finding. It is only under the terms of reference and under the relevant portions of the Commission of Enquiry Act under which this Commission was constituted. It is only recommendatory and it is left entirely to the discretion of the Government whether such recommendations are to be accepted fully, or to be rejected fully or to be accepted partially and rejected partially. Therefore. it is left to the Government to decide upon the recommendations. It is only recommendatory. But at the same time it is a matter of propriety. Even though it is not mandatory, it is a matter of propriety. It is a matter of moral responsibility and a social responsibility. The responsibility for which this Government has been returned to power should be fulfilled.

இங்கே என்ன சொல்லியிருக்கிறார்கள்? என்னென்னவோ சொன்னார்கள். கமிஷன் முழுமையாக நடக்கவில்லை, கமிஷன் பார்ஷியலாக நடந்தது என்று சொன்னார்கள்.

Whatever it may be, I do not want to retravel in the realm of judicial interference. That is not proper for me as an officer of the Court. As an officer of the Court I must be very very responsible, and as an Advocate and at the same time as a servant of the society and as a servant of the people of Tamil Nadu it is my primary duty to save the liberty and freedom of this State. Life is nothing before.

விடுதலைக்கு, சுத்ந்திரத்திற்கு, மானத்திற்காக, மரபுக்காக வாழ்வு பெரிதல்ல, தாழ்வு வெல்லமல்ல. அந்த வாழ்வைவிட, மானத்தை காப்பதுதான் என்னுடைய மரபு என்ற முறையிலே சுதந்தரத்தை அழித்து, சுதந்திரத்தை கட்டுப்படுத்திய, மனிதாபிமானத்தைக்

கொன்று குவித்த மா பாதகர்கள் யார் என்பதைக் கண்டு பிடிப்பது சமுதாயத்தின் இன்றைய வேண்டுகோளாக இருக்கிறது என்பதைத் தயவுசெய்து இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

Mr. Ismail puts it as follows:

Notwithstanding the factthat thestrict procedure applicableto civil asces or criminal cases in Courts is not applicable to the commission appointed under the Act, still the basic characteristics of the judicial enquiry cannot be submerged or sacrificed. The importance that will be attached to a finding rendered by the Commission will, to a considerable, if not to the whole extent, depend upon the judicial approach and attitude which the Commission brings to bear on its enquiry and its finding. Both by temperament and training, a judge of the High Court who has been appointed as Commission, can function only as a Judge even while functioning as the commission and therefore the flexibility of the procedure has not in any way detracted from the strict judicial approach of the Commission to the matter which it had to enquire into.

இதை நாம் கவனத்திலே வைத்துக்கொள்ளவேண்டும். இதை நாம் நினைவிலே வைத்துக் கொள்ளவேண்டும். அவர் சொல்வதை நாம் நினைவிலே வைத்து கொள்ளவேண்டும். எது சரி, எது சரியில்லை என்பது வேறு. என்னுடைய அருமை நண்பர் சொன்னார், பாலும் தண்ணீரும் கலந்திருக்கிறது. தண்ணீரைத் தனியாக எடுத்து விட்டு பாலை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். பாலிலும் தண்ணீர் உண்டு, பால்கோவாவிலே ஒரு வேளை தண்ணீர் இல்லாமல் இருக்கலாம். ஆனால், பாலிலே இருக்கிற தண்ணீரை மட்டும் எடுத்துவிடாதீர்கள். அந்தத் தண்ணீரை எடுத்துவிட்டால் பால்கோவா ஆகிவிடும். அப்படி பால்கோவாவை மாற்றினால் கூட அங்கே சப்ஸ்டன்ஸ் இருக்கும். பால்கோவா இருக்குமே தவிர 'There will be a substance. There will be vaccuum There is something.

அந்த சம்திங் என்ன என்பதைப் பாருங்கள்.

சிட்டிபாபு, அவர் யாராக இருந்தாலும் என்ன? வாழ்க்கையிலே விநோதம் இருக்கலாம். வாழ்க்கையிலே மாறுபாடு இருக்கலாம் அந்த நல்ல மனிதர், மாநகராட்சி உறுப்பினர் என்ற முறையில் அவர் ஆற்றிய சேவைகள் என் நினைவில் இருக்கிறது. மேயர் என்ற முறையில் அவர் ஆற்றிய சேவைகள் என் நினைவில் இருக்கிறது நல்ல துடிதுடிப்பானவர். எப்போது பேசினாலும் fact and figures பேசுவார். ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அவரை

'டேய் சிட்டி' என்று ஒரு போலீஸ் அதிகாரி, அந்த சிறைச்சாலை அதிகாரி சொல்லுகிறார் என்றால் அதைக் கேட்கிறபோது நாமும் உயிருடன் இருப்பதா என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது. தயவு செய்து நீங்கள் அதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

அந்த மாவீரன் அங்கே சிறைச்சாலையிலே வதை பட்டு தன்னுடைய உடலிலே உள்ள வியாதியையும் பொருட்படுத்தாமல் உயிரோடு சிறைக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் பிணமாக வெளியே வந்தான் என்று கேட்கும் போது, இது என்ன நியதி? இது என்ன நியாயம்? யாருக்காக சட்டம் இருக்கிறதோ அவர்களே சட்டத்தை மீறுகிறார்கள் என்றால் அதை எப்படி பொறுத்து கொள்வது என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு ஆட்சி வரலாம் போகலாம். யார் மீது பொறுப்பை சுமத்துவது என்று கேட்கிறார்கள். ஒருவர் மீது சுமத்த முடியுமா என்று கேட்கிறார்கள். இல்லை என்றால் அந்த அட்வைசர் மீதா? போலீஸ் இலாகா செயலாளர் மீதா?

Because in those days there was President's Rule ultimately it is the Members of the Central Government who will be held responsible. The Home Minister, the so-called Mr. Om Metha who created so much of havoc in this country, who came as a demon against democracy, that Om Metha was to be held responsible.

ஆகவே, நான் கேட்டுக் கொள்வது, இதிலே கட்சிப் பிரச்சினைப் பார்க்கத் தேவையில்லை, யார் யார் காலத்திலே நடக்கவில்லை என்று என்னுடைய நண்பர்கள் பேசினார்கள், தி. மு. க. ஆட்சிக் காலத்திலே செய்தார்கள் என்று சொன்னார்கள். அதை யார் சரி என்று சொல்ல முடியும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நடந்ததை யார் சரி என்று சொல்ல முடியும்.

இதிலே முக்கியமான வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால் இந்த மாநிலத்திலே முதலமைச்சராக இருந்த ஒருவர் பெரியவர் அவர் ஓம்மேத்தாவுக்கு எழுதுகிறார். இன்னவரை வைத்திருங்கள், இன்னவர் இருந்தால்தான் கொடுமைப்படுத்த முடியும் என்று எழுதுகிறார் என்று சொன்னால், இது அரசியல் காழ்ப்புணர்ச்சியால் நடத்தப்பட்ட ஒரு ஆதாயமே தவிர வேறல்ல என்பதை யார் மறுக்க முடியும். ஏன் நான் பெயரையே சொல்லுகிறேனே, நம்முடைய மதிப்பிற்குரிய பக்தவச்சலம் அவர்கள் தான் எழுதினார். இப்படிப்பட்ட எண்ணம் இருக்கக் கூடாது. யாராக இருந்தாலும் சரி. மனிதன் மிருகத்திலிருந்து வந்தவன் என்று டார்வின் தியரி இருக்கிறது. இன்னும் மனிதர்களிலே மாக்கள் உணர்வு பெற்ற மிருகங்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

எனவேதான் இத்தகைய சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய மிருக உணர்ச்சி பெற்றவர்கள் யாராக இருந்தாலும், இனங் கண்டு கொள்ள வேண்டும். நாம் இன்றைக்கு இருக்கலாம்; போகலாம், இந்த உலகத்திலே இருக்கலாம், அல்லது இந்த உலகத்தை விட்டுப் போகலாம்; இந்த நாட்டிலே சுதந்திரத்திற்காக உயிரை இழந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்திருக்கின்றன, சுதந்திரப் போராட்டங்களை எல்லாம் நாம் மறந்து விடக்கூடாது. சுதந்திரப் போராட்டத்திற்காக நம்முடைய உயிரையும் கொடுக்கின்றோம் என்ற நிலையிலே அந்த சுதந்திரத்தைப் பேணிக் காப்போம், மனிதாபிமானத்தைப் பேணிக் காப்போம், பண்பாட்டைப் பேணிக் காப்போம், எல்லாவற்றிற்கும் மேலாக சட்டம் என்பது அவர்களுக்கு ஒன்று நமக்கு ஒன்று என்று இருக்கக்கூடாது. இங்கே ஒரு உருதுக் கவிதையைச் சொல்ல விரும்புகிறேன். என்று நாம் பெருமூச்சு விட்டாலும் தண்டிக்கப்படுகிறோம்,

ஆனால் அவர்கள்கொலையே செய்தாலும் அதைப்பற்றி யாரும் பேசக்கூடாது என்ற நிலைமை இன்றைக்கு ஆட்சியிலே இருக்கக்கூடியவர்களிடத்திலே, ஆட்சி நடத்துகிறவர்களிடத்திலேஇருக்கிறது: என்று அன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு டெல்லியிலே தோன்றிய ஒருஉருதுக் கவிஞன் பாடினான்.

(பிற்பகல் 2.00)

சாதாரணமாக ஒரு குற்றம் செய்தாலும், ஒரு ரொட்டியைத் திருடி விட்டாலும், போலீஸ்காரன் திருடிக்கொண்டு வந்து விட்டாயா என்று அடிக்க, திருடியவனைப் பிடித்து, அந்தச் சிறைச்சாலையில் போடுவதால் மக்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டுமே தவிர, அந்த சிறைச்சாலையில் மக்கள் பிரதிநிதிகளைப்பார்த்து அடா என்று பேசுகிறார்கள் என்று சொன்னால் அந்த அடாவடித்தனத்தை எப்படி சமாளிப்பது ? ஒரு பாராளுமன்ற உறுப்பினரை பார்த்து அடா என்று பேசும் அளவிற்கு ஒரு அதிகாரி வருகிறார் என்று சொன்னால், அவரை எப்படி கண்டிப்பது, அவர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை எல்லாம் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 2 மணி ஆகி விட்டது, முடித்து விடுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : இந்த அறிக்கை மீது விரிவாக, பேஜ்ஜை பேஜாக, கிளாஸ் ஐ கிளாஸாக பேசுவதற்கு நேரம் இல்லை. ஆகவே, பொதுவான சில கருத்துக்களைச் சொன்னேன். தயவு செய்து இந்த அறிக்கையை வைத்து யார் யார் பொறுப்புள்ளவர்கள் என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து

நடவடிக்கை எடுங்கள். அதற்காகத்தான் இந்த அறிக்கை கொடுக்கப்பட்டு இருக்கிறது. நாம் நடவடிக்கை எடுக்காமல் போய் விட்டால் இதற்கு எந்தவிதமான மதிப்பும் இல்லாமல் போய் விடும். மேற்கொண்டும் அதிகாரிகள் இப்படி செய்து கொண்டு தான் இருப்பார்கள் என்பதை தயவு செய்து நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிறையில் அண்ணா இருந்தார்கள், நாஞ்சிலார் இருந்தார்கள், கலைஞர் இருந்தார்கள், இங்கே இருக்கிற எத்தனையோ பேர் இருந்து இருக்கிறார்கள், இன்னும் யார் யார் போகப்போகிறார்களோ தெரியவில்லை. ஜெயிலுக்குப் போவது என்பது நாம் செய்யும் தியாகமாக இருக்கிறது. அந்த ஜெயிலில் மிருகங்கள் காவலர்களாக இருக்கக்கூடாது. மனிதர்களை வையுங்கள், அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள், நடவடிக்கை எடுங்கள் என்று மட்டும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நடந்து விட்ட, ஆனால் இனி என்றென்றும் நடக்கக்கூடாது என்று நாம் எண்ணுகின்ற கோர நிகழ்ச்சிகளைப் பற்றி நடைபெற்ற விசாரணையில் அறிக்கை மீது இரண்டு நாட்களாக இந்த மாமன்றம் விவாதத்தை நடத்தி, இந்த அறிக்கை மீது உடனடி நடவடிக்கையை எடுக்க இந்த அரசு முனைந்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிற நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகின்றேன்.

20 மாத காலமாக இந்தியாவை இருள் கவ்விக் கொண்டு இருக்கிறது என்று விமர்சிக்கப்பட்ட அந்த நேரத்தில் சென்னை மாநகரத்தின் சிறைச்சாலை பயங்கர குகையாக உருவெடுத்து, மனிதர்கள் வேங்கைகளாகவும், புலிகளாகவும், சிறுத்தைகளாகவும், நரிகளாகவும் மாறி மிசாக் கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்ட பல்வேறு கட்சித் தோழர்கள் கொடுமை படுத்தியது குறித்து இஸ்மாயில் கமிஷன் தன்னுடைய அறிக்கையினைத் தந்து இருக்கின்றது.

அறிக்கை தரப்பட்டு 5 திங்கள்களுக்கு மேலாகியும் இன்னும் நடவடிக்கை அந்த அறிக்கை மீது எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது மக்களின் ஒரு பெரும் மனக்குறை என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

ஏற்பட்டு விட்ட அந்த கொடுமைகளுக்கு யார் காரணம், எவர் காரணம் என்கின்ற ஆராய்ச்சியில் இரண்டு நாட்களாக இந்த மாமன்றம் இந்த அறிக்கையின் அடிப்படையில் ஆராய்ந்து தங்கள்

தங்களுடைய கருத்துக்களை உறுப்பினர்கள் வழங்கியிருக்கின்றார்கள். இவ்வளவு கொடுமைகளுக்கும் அதிகாரிகளைத் தூண்டிவிடக் காரணமாக இருந்தது நெருக்கடிக்கால பிரகடனம் என்பதை யாரும் மறுத்திட இயலாது.

ஒரு குழந்தையைக் கிணற்றில் தூக்கிப் போட்ட குற்றம் முன்பு இருந்த மத்திய அரசைச் சாரும் என்றால் இந்தக் குழந்தையின் தலையில் ஒரு பெரும் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்ட குற்றம் அதைத் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்த அதிகாரிகளைச் சாரும் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஒன்றை நான் நினைவு படுத்த வேண்டுமானால், உச்ச நீதி மன்றத்தில் அன்றைய அட்டர்னி ஜெனரலாக இருந்தவர் மிகக் கம்பீரமாக எழுந்து நின்று ஒரு பயங்கரமான கருத்தைத் தெரிவித்தார். சிறைச்சாலையில் வைக்கப்படும் மிசாக் கைதிகள் எக்கதிக்கு ஆளாக்கப்பட்டாலும், சுட்டுக் கொல்லப்பட்டாலும், கவர்னரையே சிறையில் அடைத்தாலும், என்ன நடந்தாலும், நீதிமன்றம் ஏன் என்று கேட்கக்கூடாது என்று அரசின் சார்பில் அட்டர்னி ஜெனரல் வாதாடிய நேரம் அந்த நேரம்.

அப்படிப்பட்ட நேரத்தில் இனி ஒருமுறை சுதந்திர ஒளியை இந்திய நாட்டு மக்கள் காண்பார்கள் என்ற எண்ணமே இல்லாத சூழலில், சுதந்திர மூச்சினை இந்திய நாட்டு மக்கள் சுவாசிக்க இயலும் என்று நம்ப முடியாத ஒரு நிலை. அந்த நேரத்தில் தான் 1976 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-நாள் நெருக்கடி நிலையை எதிர்த்தோம் என்ற காரணத்திற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது வெறுப்பு கொண்டு, மத்திய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசை கலைத்தது. அப்படி கலைக்கப்பட்டப் பிறகு 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட கழகத்தினர், மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள், பழைய காங்கிரஸைச் சேர்ந்த தோழர்கள், திராவிடக் கழக நண்பர்கள், நெருக்கடி நிலையை எதிர்த்த கட்சிகள் எவை எவையோ அந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மிசா கைதிகளாக தமிழகத்திலே பல்லாயிரக்கணக்கானோர் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்கள். அவர்கள் அங்கே கொடுமைப் படுத்தப் பட்டார்கள் என்பதையும் அதுபற்றி விசாரிக்க வேண்டும் என்பதையும் கவர்னர் பெருமதிப்பிற்குரிய மேதகு பட்வாரி அவர்கள் பதவிப் பொறுப்பை ஏற்பதற்குமுன்பு என்னுடைய நண்பர் லத்தீப் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல ஏற்கெனவே இருந்த கவர்னர் ஆட்சியில் இலாகாப் பூர்வமான விசாரணை நடைபெற்று எந்த விதமான தவறும் எத்தகைய கொடுமையும் சிறைச்சாலையிலே நடைபெறவில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்க, நீதிபதியைக் கொண்டு விசாரிப்பதே மேல் என்று சொல்லி, 1977 மே திங்கள்

12-ம் நாள் தமிழக அரசு சிறப்பு வெளியீட்டில் கவர்னர் பட்வாரி அவர்கள் ஆட்சியில் போடப்பட்ட ஆணை பின் வருமாறு :—

"சென்னை மத்திய சிறையிலே காவல் பாதுகாப்பு அரசியல் கைதிகள் கொடுமைப் படுத்தப்பட்டதாகவும், அடிக்கப்பட்டதாகவும் 1976 பிப்ரவரியில் குற்றச் சாட்டுக்கள் செய்யப்பட்டது. அந்த நிலையில் அந்தக் குற்றச் சாட்டுக்கள் பற்றி இலாகா அளவில் விசாரணை நடத்திட அரசு ஆணையிட்டது. அந்த விசாரணையின் போது குற்றச் சாட்டுக்கள் மெய்ப்பிக்கப்படவில்லை. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு மீண்டும் இந்தக் குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்ய வேண்டும் என்ற முறையீடு எழுந்தது. அதற்கிணங்க இந்தக் குற்றச் சாட்டுகளை விசாரணை செய்ய நீதிபதி இஸ்மாயில் அவர்களைக் கொண்டு தனி நபர் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படுகிறது" என்ற அறிவிப்பு வெளியாயிற்று.

எனவே, இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் சென்னை சிறைச்சாலையிலே அரசியல் கைதிகள் தாக்கப்பட்டது, கொடுமைப்படுத்தப்பட்டது உண்மை என்று திட்டவட்டமாக தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அதிகாரிகள் பொறுப்பாளிகள் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இத்தனையும் அறிவித்து—நண்பர் லத்தீப் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல இலாகா விசாரணையில் எதுவுமே நடக்கவில்லை என்று அறிவித்து இருக்கிறார்களே, அதுவே மாபெரும் குற்றமாகும். எனவே, அரசியல் கைதிகளை அடித்தவர்கள், நொறுக்கியவர்கள், கொடுமைப் படுத்தியவர்கள்—அவர்கள் யார்? அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? என்பதற்கு முன்பு அப்படி நடக்கவே இல்லை என்று விசாரணை நடத்தி அறிவித்தார்களே, அவர்கள் யார், எவர் என்று தெரிந்து அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசை மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை சிறைச்சாலையில் சம்பவங்கள் எப்படி நடைபெற்றன என்ற சுருக்கத்தை அறிக்கையிலே நாம் காணுகிறோம் என்றாலும் நான் அது குறித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

1976 ஜனவரி 31-ந் தேதி மாலை 6-30 மணியளவில் கழக ஆட்சி கலைக்கப்பட்டது என்ற செய்தியை நாங்கள் அன்றைக்கு செய்தி நிறுவனங்கள் மூலமாக அறிகிறோம்; வானொலி மூல

மாக அறிகிறோம். அந்த செய்தி எங்கள் காதிலே விழுகிற அதே நேரத்தில் எல்லா அமைச்சர்கள் வீட்டு டெலிபோன்களும் துண்டிக்கப்படுகின்றன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல மாநிலம் முழுவதும் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல் வேறு கட்சிகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கானோர் கைது செய்யப் படுகிறார்கள். அப்படி கைது செய்யப்பட்ட யாரையும் இன்டர்வியூ காண — நேர் காணல் என்ற ஒரு முறை இருக்கிறதே அதை பயன்படுத்திக் கொள்ள எந்த உறுப்பினருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை.

(பிற்பகல் 2.10)

என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டார்கள். உடனடியாக உறவினர்களுக்கு இண்டர்வியூ காண சந்தர்ப்பம் அளிப்பதுதானே சிறைச்சாலையிலே உள்ள முறை. ஏன் அளிக்கப்படவில்லை என்று ஒரு நாள் பொறுத்துப் பார்த்தோம். ஒரு வாரம் பொறுத்துப் பார்த்தோம். இதற்கிடையில் எங்களுக்கு செய்தி எட்டுவதற்கு முன்பாக பல மைல் தொலைவிலுள்ள உற்றார் உறவினர்களுக்கெல்லாம் சென்னை சிறையிலே அரசியல் கைதிகள் மிசா கைதிகள் மிக பலமாக அடித்து நொறுக்கப்படுகிறார்கள் என்ற செய்தி தமிழ்நாடு முழுவதும் பரப்பப்படுகிறது.

ஏன் தமிழகத்தின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் இந்தக் கொடுமை நடைபெறவில்லையா? சென்னைச் சிறைச்சாலையிலே நடந்தது மட்டும் அப்படி பரப்பப்படுகிறது. அரசியல் கட்சிக் காரர்களை அச்சுறுத்துகின்ற நோக்கத்திலே தமிழ் நாட்டிலே ஒரு பெரும் பீதியை எற்படுத்தி உள்ளே யார் யார் அடிபடுகிறார்கள் என்ற செய்தி பரப்பப்படுகிறது. அவர்களுடைய உற்றார், உறவினர் எல்லாம் வெளியே இருக்கிறோம், எங்களுக்குத் தகவல் கிட்டுவதற்கு முன்பாக பல கல் தொலைவில் இருக்கின்ற மக்களுக்கு இந்தச் செய்தி பரப்பப்படுகிறது.

சென்னை சிறைச்சாலையிலே திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்ஸிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, பழைய காங்கிரஸ், திராவிடர் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர் பலர் கைதிகளாக அடைக்கப்பட்டார்கள். அவர்கள் கடுமையாக அடிக்கப்படுகிறார்கள். அவர்களிலே பலபேர் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள், என்கிற அளவுக்குச் செய்திகள் வருகின்றன. இங்கே சிறைச்சாலை வாசலிலே உற்றார் உறவினர் காத்திருக்கிறார்கள். அவர்களிலே யாருக்கும் நேர் காணலுக்கு (இண்டர்வியூ) அனுமதி தரப்படவில்லை. இதற்குப் பிறகு நாங்கள் பிப்ரவரி 26ஆம் நாள் வரையில் பொறுத்துப் பார்த்தோம். அதற்குப் பிறகு குடியரசுத் தலைவரவர்களுக்கும், இந்தியப் பிரதமருக்கும்....குறுக்கீடு........

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் நேரில் காண்பதற்கு இண்டர்வியூ கொடுக்கப்படவில்லை என்று சொன்னார். உண்மையிலேயே அந்தக் கருத்தை நான் ஆதரித்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் 1973ஆம் ஆண்டில்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். அமைச்சர் பதிலளிக்கும்போது அதற்கு பதில் சொல்லிக் கொள்வார். நீங்கள் உட்காருங்கள்.

திரு. மு கருணாநிதி: தலைவரவர்களே, பிப்ரவரி திங்கள் 26ஆம் நாளன்று இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கும், இந்தியக் குடியரசுத் தலைவரவர்களுக்கும், ஆளுநருக்கும் ஒரு தந்தி கொடுத்தேன். அந்தத் தந்தியில்,

"Interview for relatives of MISA detenus of DMK party in Tamil Nadu not yet granted for the past 26 days in Madras prison. Reason we reliably understand the detenus are mercilessly beaten inside the prison. M. Ps., former MLAs and office-bearers of DMK party are amongst such detenus so beaten". Request your immediate intervention preventing illtreatment and necessary action tc get interview",

என்று ஒரு தந்தியை திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவன் என்கிற முறையில் அளித்து அந்தத் தந்தியின் நகல்களை இரா. செழியன் எம். பி-க்கும் கவர்னரின் ஆலோசகர், தவேவுக்கும் தமிழ்நாடு அரசு சீஃப் செக்கரட்டரிக்கும், எம். ஜி. கோரே எம். பி-க்கும் (சோசலிஸ்ட் பார்ட்டி, பாம்பே)-க்கும் டி. கே. சீனுவாசனுக்கும், ஹோம் மினிஸ்டர் பிரமானந்த ரெட்டிக்கும், ஸ்டேட் மினிஸ்டர் ஃபார் ஹோம் டிப்பார்ட்மெண்ட் ஓம் மேத்தாவுக்கும் அனுப்பிவைத்தேன். இத்தனைப் பேர்களுக்கும் அந்தப் பிரதிகளை அனுப்பி வைத்தேன். 26ஆம் தேதி தந்தி கொடுத்தது மாத்திரமல்ல. 27-ம் தேதியன்று குடியரசுத் தலைவருக்கு மிசாக் கைதிகள் இந்த நிலையிலே சிறைச்சாலையிலே நடத்தப்படுகிறார்கள் என்பது குறித்து ஒரு கடிதம் எழுதினேன்.

அந்தக் கடிதத்தில்,

Your Excellency,

After the DMK Ministry has been dissolved followed by the imposition of President Rule in Tamil Nadu, the convict warders and warders of other category in the Madras Central Jail have been used for brutal attacks over the arrested persons for 2 or 3 days from January 31st onwards. They have terribly beaten and tortured the MISA detenus, including DMK prisoners. Notwithstanding the pain and torture, it is said that some people have signed on compulsion. They were not even provided with proper food and water till one week after they were locked up inside the gallows. Among those who have been treated so very badly, some are Deputy Secretaries of the DMK Head Office, some are Members of Parliament, some are Members of the Legislative Assembly. They have been scolded in abusive and filthy language. They have been treated bitterly. They have been locked inside the cells even at day time till 10 days. I do hope that the Government would not have ordered to treat them like this.

Those people who have been brutally beaten have been terrorised that if they reveal the fact outside, they will be beaten once again inside the jail. If your Excellency want to know the facts about those tortures, you can gather information from the Confident CIDs. Things have happened.

I request you to take necessary steps to protect the prisoners of Madras Central Jail from such tortures at least in the near future.

MISA detenus who are kept in Madurai and Vellore jails have been allowed for interview for the past two weeks. But in Madras Central Jail the relatives of the MISA detenus have not been allowed for interview even now.

I do hope that your conscience will not accept the way in which the political prisoners have been treated worser than those who have been convicted for murder. I request you to save the jail birds from torture by the Madras Central Jail authorities."

என்று குடியரசுத் தலைவருக்கு நான் எழுதி இருக்கிறேன்.

இதற்கிடையில் சென்னை தவிர மற்றச் சிறைச்சாலைகளில் உறவினர்கள் அல்லது பெற்றோர்கள் நெருங்கிய உறவினர்கள் மிஸா கைதிகளை இண்டர்வியூ பார்க்கலாம் என்பதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டு விட்டன, நான் டெல்லிக்கும் இங்குள்ள கவர்னருக்கும் கடிதமும் தந்தியும் அனுப்பிய பிறகும் எந்தவிதமான பதிலும் விளக்கமும் எங்களுக்குக் கிடைக்காத நிலையில் அடுத்து இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் பிற்பகல் 1 மணி அளவில் அப்போது போலீஸ் ஐ.ஜி. யாக இருந்த அருள் அவர்களை தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டேன். ஏறத்தாழ 27 நாட்களுக்கு மேலாகிறது, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மற்றக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு அவர்களை இதுவரையில் நேர்காண அனுமதிக்கப்படவில்லை. நான் ஒரு நாள் உங்களுக்கு நேரம் தருகிறேன். அதற்குள்ளாக எங்களுக்கு நீங்கள் தக்கபதில் அளிக்காவிட்டால் அந்தக் கைதிகளைப் பார்ப்பதற்கு அவர்களது உற்றார் உறவினர்களுக்கு அனுமதி வழங்காவிட்டால் மறுநாள் காலையில் என்னுடைய தலைமையில் உள்ளே இருக்கிற அரசியல்வாதிகளுடைய வீட்டார் அனைவரும் புறப்பட்டு சென்னை சிறைச்சாலை வாசலிலே உட்கார்ந்து உண்ணாவிரதம் தொடங்குவதாக இருக்கிறோம் என்று நான் ஐ. ஜி. அவர்களுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தேன்.

அப்போது ராஜாஜி மண்டபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு ஆளுநர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உடனடியாக ஐ. ஜி. அவர்கள் ராஜாஜி மண்டபத்திற்கு விரைந்து சென்று அங்கே செய்தியை அறிவித்து அதற்குப் பிறகு மறுநாள் எங்களுக்கு உள்ளே இருக்கிற கைதிகளைக் காண அந்தக் கைதிகளின் உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதாக டெலிபோன்கள் வருகின்றன. அதைத் தொடர்ந்து கடிதங்களும் வருகின்றன. நாங்கள் இண்டர்வியூ பார்க்கப்போன நேரத்தில் இங்கே கூட ஒரு நண்பர் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

கருணாநிதி இண்டர்வியூ பார்க்கப்போனபோது அவருடைய மகன் ஸ்டாலினை கூட தான் அடிப்பட்டதாகச் சொல்லவில்லை என்று இஸ்மாயில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்று எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு தொடர்ந்து என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள். நீதிபதி இஸ்மாயில் அவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. தான் அடிப்பட்டோம் என்பதைச் சொல்லக்கூட முடியாத நிலைமையிலே அங்கே மிஸா கைதிகள் இருந்தார்கள் என்பதற்கு அது ஒரு உதாரணம். நானும் எங்கள் வீட்டாரும் சென்று அமர்ந்திருக்கிற நேரத்தில் ஸ்டாலினையோ மாறனையோதான் பார்க்க முடியும்,—உற்றார் உறவினர்களைத்தான் பார்க்க முடியும் என்ற விதி இருப்பதால் மற்ற நண்பர்களைப் பார்க்க இயலாது. அப்படி உட்கார்ந்திருக்கிற நேரத்தில் எங்களைச் சுற்றி வளையம்போல் அதிகாரிகள் வந்து நின்றுகொள்வார்கள். இன்னும் சொல்லப்போனால் வெளியே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் கூட வந்து நின்று கொள்வார்கள். சௌக்கியமாய்

இருக்கிறாயா என்று கேட்கலாம். ஆமாம், இருக்கிறேன் என்று சொல்லலாம் அடிப்பட்டாயாமே என்று நான் கேட்டதற்கு அதையெல்லாம் கேட்கக் கூடாது என்று என்னிடத்தில் சொல்லிவிட்டு என் மகனிடத்தில் அந்தப் போலீஸ் அதிகாரி ஒரு பார்வையைத் திருப்ப அவன் கண்கள் கலங்கி என்னிடத்தில் சொன்ன அந்தக் காட்சியினை நான் மறந்துவிடவில்லை. அடிபடவில்லை என்றுதான் சொன்னான். ஆனால், ஆம் அடிபட்டோம் என்று அவன் சொல்லியிருப்பானேயானால் அன்று மாலையோ அல்லது அடுத்த நாள் காலையோ அவன் மட்டுமல்ல சிறைச்சாலையில் இருந்த அரசியல் கைதிகள் அனைவரும் அதே கோர நிலையைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது என்பதை நான் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 2.20

சிட்டிபாபுவினுடைய நாள் குறிப்பு புத்தகம் பற்றி இங்கே பேசப்பட்டது. சிட்டிபாபு என்ன மறைவதற்கு முன்பு இப்படியொரு நிலைவரும் என்று எதிர்பார்த்தா அந்த டைரியை எழுதினான்? சிட்டிபாபுவை நமக்கெல்லாம் தெரியாதா? எங்களைவிட நெருங்கிய நண்பன் அல்லவா சிட்டிபாபு. நிதியமைச்சர் மனோகரன் அவர்களுக்கு நாமெல்லாம் ஒன்றாக இருந்தபோது சிட்டிபாபு இந்த சென்னையில் மேயராக வீற்றிருந்து—அவன் ஆற்றிய பணிகள் மாற்றாரும் புகழ்கிற அளவிற்கு இருந்திடவில்லையா? நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து நாடு மெச்சுகின்ற அளவுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும், ஆளாகின்ற அளவிற்கு சிட்டிபாபு பணிகளை ஆற்றவில்லையா? அவனுடைய டைரியையா நாம் சந்தேகிக்கிறோம்? அவன் எழுதிய நாட்குறிப்பையா நாம் சந்தேகிக்கிறோம்? அவன் எழுதிய எழுத்துக்களையா நாம் சந்தேகிக்கிறோம்? என்பதை தயவு செய்துஎண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்படி இஸ்மாயில் கமிஷன் வரும் என்று சிட்டிபாபு டைரி எழுதிய நேரத்தில் எண்ணியிருக்க முடியாது. அந்த விசாரணைக்கு இந்த டைரி சாட்சியாகச் செல்லும் என்று கூட சிட்டிபாபு எண்ணியிருக்க முடியாது. நடந்தவைகளை நடந்தவைகளாக எழுதிக் கொண்டு வந்த டைரிதான் சிட்டிபாபு எழுதிய அந்த நாள்குறிப்புப் புத்தகம். நீதிபதி இஸ்மெயில் அவர்களுக்கு கிடைத்த வலுவான சாட்சியங்களில் ஒன்றாக அது கிடைத்ததால் அந்த அடிப்படையிலும் வேறு பல சாட்சியங்களின் அடிப்படையிலும் தன்னுடைய அறிக்கையை நமக்கு தந்திருக்கிறார். சிட்டிபாபுவின் நாட்குறிப்பின் பல்வேறு பகுதிகளை இந்த அறிக்கையிலே இஸ்மெயில் அவர்கள் சுட்டிக்காட்டி இருப்பதை ஒருமுறை இங்கே படிப்பதின்வாயிலாக இந்த அவையின் நடவடிக்கை குறிப்பில் அது பதிவாகுமேயானால் சிட்டிபாபுவுக்கு நான் செய்த கடமை அதைவிட வேறு ஒன்றும் இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

அந்த வீரமறவனுக்கு என்னுடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கோவிந்தராசன் அவர்கள் பேசும் போது சிட்டிபாபுவினுடைய குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் நிதி தரவேண்டுமென்று சொன்னார்கள். அதுகூடத் தேவையில்லை. ஆனால், அவன் எழுதிய டைரி இந்த அவைக் குறிப்பில் ஏறுவது இருக்கிறதே அது அந்த மாவீரனுக்கு நாம் காட்டுகிற மரியாதை என்று சொன்னால் அது மிகையாகாது. அவன் எழுதுகிறான்..

''மாலை 5 மணி மீண்டும் உணவு களியுடன்கூடிய தட்டு, யாரோ பயன்படுத்திய தட்டுக்கள், யாரோ பயன்படுத்திய சிறுநீர் பானைகள், யாரிடம் கேட்பது, கேட்டால் பதில் யார் சொல்வது, இரவு 7-30 மணி, அறைக்குள்ளே இருட்டுத்தான். ஆயினும் வெளிவாசலில் ஓரிரு விளக்குகள் மங்கலான ஒளியில் எட்டு மணியளவில் சில உருவங்கள் வருவதை காண முடிந்தது. காரணம் நான் இருந்த இடம் வருவோரை போவோரை பார்க்கும் வகையில் அமைந்திருந்தது, காக்கி உடைகள், வெள்ளை உடைகள் சற்றேறக்குறைய இருபதுக்கும் மேற்பட்டோர், சிறை அதிகாரிகள் இருவர் 'கயூம்' அழகான பெயர். அன்பு என்ற சொல்லுக்கு அளித்திட்ட உருது சொல்தான் கயூம். ஆமாம், அந்த அன்புதான் அந்த அரசியல் கைதிகளை, அடித்திட்ட ஆட்களுடன் அங்கே நின்றிருந்தார்.

''அவர் மட்டுமல்ல. அவர் கீழ் உள்ள அதிகாரிகள் உட்பட அவரது கையசைவில் அத்தனை பேரும் நாங்கள் இருக்கும் மண்டபத்திற்குள் நுழைந்தனர். எப்படி இருகோடுகள் தனித் தனியே படுக்கவைத்தால், இருக்குமோ அப்படிப்பட்ட அமைப்பில் அவர்கள் நின்றிருந்தனர். அவர்களது கையிலிருந்த தடிகளை அவர்கள் நீட்டினால் ஏற்படும் அளவே இரு கோடுகளுக்கும் இடையேயுள்ள இடைவெளி, பட்டாளத்தின் வீரர்களைப்போல் அவர்கள் நின்றிருந்தனர். இதற்குள் காக்கியுடை அணிந்த பள்ளி ஆசிரியர்கள் கம்பீரமாக குரல் எழுப்பினர். அறை பத்து அருகில் கண்களுக்குத் தெரியாமல் காலன் கவர வருவான், உயிரை என்பார்கள், கட்டையாகி விழப்போகிறவர்கள். அதே போலக் கதவு அருகே காக்கி உடையில் காவலாளிகள் காலனைப்போல்''.

''கதவு திறக்கப்படும் ஒலி. கம்பீரமான குரல் பேசியது, பெயர் சொல்லி அறை விட்டு வருதல் வேண்டும். சர்ச் என்ற பெயரால் திறக்கப்பட்ட கதவு பளீர் என்ற சத்தத்துடன் திறந்து கொண்டது. ஏதோ சினிமாவில் காணும் காட்சி போல் இருந்தது. கொலைகார கைதிகளின் கைத்தடிகள் அரசியல் வாதிகளின் உடலை சுவைத்துக் கொண்டிருந்தன. அலறல், அழுகுரல்கள், ஐயோ, அப்பா, அம்மா என்னும் அபயக் குரல்கள்.

''ஓடு உள்ளே என்ற உத்தரவு. சர்க்கஸ் புலி, ஆட்டுக் குட்டியின் தலையை தன் அகண்ட வாயில் வைத்துச் சுவைக்காமல் காண்போருக்கு வித்தை காட்டுவதுபோல், கண நேர அதிர்ச்சி. ஓடு என்றவுடன் தீ வளையத்தை தாண்டிச் செல்லும் சிங்கம் போல் கூண்டுக்குள் அடங்கியது. அறை பத்து, அடுத்த அறை ஒன்பது, அப்படியே ஐந்து வரை வந்து கொண்டிருந்தது. அடுத்த ஓர் அறைதான், அதற்கு அடுத்தது என் அறைதான். அறையிலுள்ளவர்கள் அடுத்தடுத்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் காட்சியிலே அவர்கள் அடிபட்டதைப் போன்ற உணர்வு, தங்களை அறியாமல் என்ன என்ற கேள்வி. அழுவதா சிரிப்பதா என்றிருக்கும் நிலை எனக்கு. காரணம் இது போன்ற காட்சிகளை நான் இரண்டு முறை கண்டவன் மட்டுமல்ல, நானே ஒரு அங்கமாக அகப்பட்டுள்ளவன். அதனால்தான் எனக்கு அதிர்ச்சி இல்லை. ஆனாலும், எனது நண்பர்களைப் பார்த்து ஆடை அணிந்து கொண்டே வெளியே போக வேண்டும். அவன் சொல்வது போல் ஆடையை கழற்றிவிட்டு போகக் கூடாது என்று சொன்னேன். ஆனால் அனைவரும் மழையில் நனைத்த குழந்தைகள் போல் உடல் ஆடிக்கொண்டே இருப்பதையும் காணாமல் இருக்க முடியவில்லை.

''அறை நான்கு முடிந்து பூட்டும் போடப்படுகிறது. அடுத்து, நாம்தான். பூட்டு திறக்கப்படும் சப்தம் கேட்டது. கதவைத் தள்ளினார்கள். ''வாங்கடா'' என்ற குரல். கடைசி அறை, அது உக்கிரம் அதிகமாக உள்ள நிலை. அலுத்துப் போய் விட்டவர்கள் அல்ல அவர்கள். அதிகாரி வேறு வெளியில் நின்றபடி என்னடா மெதுவாக அடிக்கிறீர்கள் என்று அதட்டு கிறார். உத்தரவு உக்கிரமாக வருகிறபோது உதைவேகத்தைக் கேட்கவா வேண்டும்.

''கதவு திறந்ததும் யார் முன்னே வெளியில் செல்வது என்ற நிலை. காலம் கதவுகளை மூடப்போவதில்லை. அர்ச்சனைக்கு கொண்டு வந்த அரசியல் மலர்கள் அல்லவா நாங்கள். எனவே, திரும்பிப் பார்த்தேன். தீர்மானமாகவே முதலில் வெளியில் வந்தேன். பெயர் சொல்லி அழைத்தனர். எதிர்பார்த்த ஆள் அல்லவா நான். எனவே ஓர் அடி எடுத்து வைப்பதற்குள் கன்னத்தில் வீழ்ந்த அறைகள் அடடா.... நிலைக்கண்ணாடி கல் பட்டு உடைந்து விழுந்ததுபோல எனக்குத் தோன்றியது. கண்கள் கணநேரம் காண்பது எல்லாம் கார் இருள்போல் இருந்தது. இரு கோடுகளுக்கு இடையில் தள்ளப்பட்ட எலி. ஆம் அவர்கள் அடித்ததும் அப்படித்தான். அவர்கள் அசந்தனர். இது எலி அல்ல, புலி என்று. காரணம் அத்தனை அடிக்கும் என் உடல் விழவில்லை தரை நோக்கி; தள்ளினார்கள் மதில் சுவர்மீது. சட்டென்று திரும்பிக் கொண்டேன். வயிற்றில் எட்டி உதைத்து விட்டான். சுவரின் மீதே சாய்ந்து கீழே

உட்கார நினைத்தேன். ஆனால், நீண்ட நெடுமரத்தை மதயானை இடக் காலாலும், வலக் காலாலும், துதிக்கையாலும் வெறிபிடித்து உதைப்பதுபோல் உதைத்தனர்.

''வீராசாமி நெடுமரமாக கீழே சாய்ந்து கிடந்தார். வெறிக் கூட்டம் முரசு பறை அறைவதுபோல் இரு கைகளால் அடி கொடுத்துக் கொண்டிருந்தன. ஒருபுறத்தில் இக்காட்சி, பள்ளிக் கூட மாணவன் பெஞ்சு மீது ஏறி நிற்பதுபோல் இரும்பு ஏணி அருகில் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு கதறும் வி. எஸ். கோவிந்தராசன். ஒரே குத்துத்தான் நீலநாராயணனுக்கு. குள்ள உருவம் அவருக்கு. மேலே நிமிர்ந்து பார்த்திட, மார்பகத்தில் மற்றொரு குத்து. முதுகில் இரண்டு தடி அடி. அவ்வளவுதான். குலை நோயில் கேவிக்கொண்டு கீழே விழும் நோயாளி போல் சுருண்டு விழுவதைக் கண்டேன். கால் எடுத்துவைத்து கைகொடுக்க முடியுமா என்று அசைந்தேன். தொண்டையில் ஒரு குத்து எனக்கு.' மீண்டும் சுவர்மீது தள்ளப்பட்டேன். அய்யோ, என்று சாய்ந்தேன் நான்.

''அருகே என் அன்புத் தம்பி. ஆமாம் ஸ்டாலின் தான் தமிழகத்து முதல் அமைச்சரின் மகன் என்று நேற்றுவரை அறிந்த அந்த சுருளிராஜன், தன் கால் பூட்சால் அவன் அழகிய முகத்தைச் சுவைபார்க்க உதைத்தான். அடுத்து கொலைகாரன் ஒருவன் ஓங்கிய கோல் அவனது தோள் பட்டையில், காக்கி உடை அணிந்த வார்டர் ஒருவன் கன்னத்தில் கை நீட்டினான். கண்டேன் காட்சியை. இவர்கள் அவனை அடித்தே கொன்று விடுவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. மற்றவர்கள்தான் மண்ணுடன் சாய்ந்து கிடப்பவர்களாக இருக்கின்றனர். உதவிக்கு எழ அவர்கள் முடியாதபடி அருகில் எமதூதர்கள். என்ன செய்வது, எனக்கென்று ஓர் துணிவு. திடீரென்று குறுக்கே பாய்ந்தேன். தம்பியைத் தள்ளிக்கொண்டே தடிகள் கழுத்தில், அவைகள் அடிகள் அல்ல. உலைக்களத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பை தட்டிப் பதப்படுத்தும் உளியாக மாறி விழும் சம்மட்டி அடிகளாக எனக்கு அமைந்தது. கழுத்தில் அத்தனையையும் தாங்கிக் கொண்டேன். அன்புத் தம்பி அறைக்குள்ளே ஓடிவிட வழி கிடைத்தது.

''வீராசாமியை தூக்கி நிறுத்தி ஒரு குத்துவிட்டு உள்ளே தள்ளினர். நீலநாராயணன் மூச்சுத் திணற, வி. எஸ். கோவிந்த ராசனைத் தாங்கிப் பிடித்து அழைத்துச் சென்றார். தம்பியோ, தான் பட்ட அடியை மறந்து, தன் உடன்பிறப்புக்களை அழைத்துச் செல்லும் காட்சி கண்டேன். அவர்களைப் படுக்க வைக்க, தன் தோள்துண்டை தரையில் போட்டு, தாக்கப்பட்டவர்களை தாங்கி படுக்கவைத்த காட்சி கண்டேன். என்னை ஒருவன், வாடா தம்பி வா என்று வாயில் ஒரு குத்துவிட்டு உள்ளே தள்ளினான்.

மறுத்திட முடியாது. அரசு நெருக்கடி நிலை என்ற நிலையை வகுத்தது. அதைத் தொடர்ந்து தி.மு.க. மற்றுமுள்ள கட்சிகள் நெருக்கடி நிலை கூடாது என்ற நிலையை எடுத்தது. இது கொள்கை வேறுபாடு. கொள்கை மாறுபாடு அல்லது கொள்கை முரண்பாடு என்ற அளவில் முடிந்திருக்க வேண்டிய ஒன்றே அல்லாமல், சென்னை சிறைச்சாலையை மற்ற சிறைச்சாலைகளுக்கெல்லாம் பூச்சாண்டி காட்டுகிற இடமாக, தமிழ்நாட்டில் இருக்கும் மக்களை எல்லாம் பீதி கொள்ளச் செய்கிற ஒரு நிலையமாக ஆக்கிக் கொள்ளவும், எங்கள் மீது போடப்பட்டிருக்கும் சர்க்காரியா கமிஷனுக்குக்கூட சாட்சிகளைக் கட்டாயப்படுத்தி தயாரிக்கின்ற இடமாகவும் ஆக்கிக் கொண்டார்கள் என்றால், அந்த அதிகாரிகள் யாராக இருந்தால் என்ன, எந்த மதத்தைச் சேர்ந்தவர், எந்த வகுப்பைச் சேர்ந்தவர், எந்த சாதியைச் சேர்ந்தவர், யாருக்கு வேண்டியவர்கள் என்பதல்ல முக்கியம். அதிகாரிகள் எந்த வகுப்பு, எந்த மதம், எந்த சாதி, யாருக்கு வேண்டியவர் என்று பார்த்தால் மாத்திரம் போதுமா? அடிப்பட்டவர்கள் யார்? அதிகாரியிலே ஒருவர் இன்ன இனத்தைச் சேர்ந்தவர் என்றால், அடிப்பட்ட சத்தியேந்திரன் எந்த இனத்தைச் சேர்ந்தவர்? அடிப்பட்ட முத்துராமலிங்கம் எந்த இனத்தைச் சேர்ந்தவர்? மறந்துவிட முடியுமா? கையூம் என்ற அதிகாரி தவறு செய்தார் என்று இஸ்மாயில் என்ற நீதிபதி தீர்ப்பளிக்கவில்லையா? அறிக்கை தரவில்லையா? அப்படிப்பட்ட முடிவு எழுதவில்லையா? இதிலே சாதிகள், மதங்கள், வகுப்புகள் அனைத்தையும் கடந்த ஒரு நிலைமையைத்தான் நாம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டை சண்முகத்தைப் பற்றி இங்கே நண்பர் கந்தசாமி பேசினார். இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது எடுத்துக் கொண்ட நேரத்தைவிட பாளையங்கோட்டை சண்முகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட நேரம் அதிகம்.

பத்துஆண்டுகாலத்திற்கு முன்பு, பாளையங்கோட்டை சண்முகம் கொண்டிருந்த கொள்கைக்கும், இன்றைக்கு உள்ள கொள்கைக்கும் உள்ள மாறுபாட்டைச் சொன்னார்கள். அரசியலில் நேற்றைக்கு ஒரு கொள்கை, இன்றைக்கு ஒரு கொள்கை என்று வெகு துரித காலத்தில் கொள்கைகள் மாறிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், 10 ஆண்டு காலத்தில் ஒரு கொள்கை மாற்றம் பாளையங்கோட்டை சண்முகம் அவர்களுக்கு ஏற்பட்டது என்பதை—அதுவும் கந்தசாமி அவர்கள் சொல்லுகிற நேரத்தில் எனக்கு மிக மிக ஆச்சரியமாக இருந்தது. எனவே, கொள்கை மாற்றங்கள் அல்ல—நடவடிக்கை எடுக்க வேண்டியது இஸ்மாயில் கமிஷனின் அறிக்கைப்படி யார் மீது என்று நாம் எண்ணிக்

கொண்டிருக்கும் நேரத்தில். அவர் மக்களைத் தூண்டி விடுகிறார் என்றால், 'மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள்' என்று சொல்லுகிறார் என்றால், அரசு எவ்வழியோ, குடிகள் அவ்வழி.

'மக்கள் பார்த்துக்கொள்வார்கள்' என்பதற்கு என்ன நியாயம் கற்பிக்கப்படுகிறதோ, அதே நியாயந்தான் பாளையங்கோட்டை சண்முகம் சொல்கிற 'மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள்' என்பதற்கும் நியாயம் கற்பிக்கப்படவேண்டும். ஆகவே, 'மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள்' என்றால், ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் அல்ல; வன்முறையில் அல்ல, அற முறையில், அன்பு முறையில், அரசுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய முறையில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை 'மக்கள் எடுப்பார்கள்' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பாளையங்கோட்டை சண்முகத்திற்கு ஏதோ ஒரு வகுப்பார் மீது துவேஷம் என்றெல்லாம் வெளியே பேசப்படுகிறது, பத்திரிகையில் செய்தி போடப்படுகிறது. துண்டு அறிக்கை வெளியிடப்படுகிறது. அவரே கூட்டங்களில் பேசியிருக்கிறார்; பேசுகிறார், செந்தாமரை என்ற அந்த அதிகாரியும் நீக்கப்பட வேண்டுமென்று பேசுகிறார். செந்தாமரைக்கும், பாளையங்கோட்டை சண்முகத்திற்கும் என்ன உறவு என்பதும், அவர்கள் இருவரும் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதும் நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இதிலே வகுப்பு பேதம் இல்லை, சாதி பேதம், மத பேதம் இல்லை. மனிதனை மனிதனாக எண்ணாமல், மிருகங்களைப் போல் நடத்தி, மாக்களைப்போல் நடத்தி. மிருக ஆட்சியைச் சிறைச்சாலையில் புரிந்த, அதற்குத் துணை நின்றவர்கள்மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நடைபெறுகிற விவாதம். அதிலே திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கருத்தை எடுத்து வைத்திருக்கிறது.

ஆகவே, இனியும் காலதாமதம் செய்யாமல், யார் யார், எந்த எந்த அதிகாரிகள் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்கள்மீது இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த அரசு சிறைச்சாலைச் சம்பவங்களுக்குப் பொறுப்பு அல்ல என்றாலும், நடைபெற்றுவிட்ட சம்பவங்களுக்கு விசாரணை நடத்தி, அறிக்கை வைத்த பிறகு, அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், அந்தப் பொறுப்பும், பழியும் இந்த அரசின்மீது ஏற்பட்டு விடக்கூடும் என்பதை நான் எச்சரித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

Mr. Speaker In The Chair

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIAR: Mr. Speaker, Sir, in this debate regarding the consideration of the Report including the Leader of the Opposition sixteen Members have participated. The Hon. Leader of the Opposition has lent an emotional touch to the entire debate by his speech spanning over 35 minutes.

Speaker after speaker have accepted the findings of the Ismail Commission, barring one or two speakers, who have expressed the view that the Report is not fuller than what it is by reason of the fact that all the witnesses have not been examined and that some of the evidences are vitiated by certain flaws in the sense that the evidence that has been adduced is apparently contradictory.

The hon. Member Thiru Suppu and the Hon. Leader of the Opposition made some grievances for the alleged delay on the part of the Government in placing the report. I want to make it clear and want to offer this explanation to the hon. Members for their appreciation of the difficulties of the Government. In so far as the difficulty felt is concerned, I would like to say- what I may call it—that when the wheels of the administration move, they have to move with certain amount of caution.

We have received the Report by the end of September 1977, it was somewhere about 27-9-1977. I had to examine the Report first in regard to so many other things. I sat up night after night and went through the Report. I have gone through every page of the Report and then offerred my views and sent it. I had discussed the matter with the officials and sent it to the Hon. Chief Minister to peruse them along with the departmental notes and sent it to the Governor thereof. We have to examine the entire thing and then on 15th February 1978, as the hon. Members would peruse at the end of the Report, G. O. No. 379, of the Home Department was issued.

We have placed this entire English version of the Report of Justice Ismail for getting good Tamil version, which is bound to take sometime because the Report with its Annexure and other

things have to be translated by expert translators. After it was translated, the entire report was placed on the Table of the House.

[பிற்பகல் 2.40]

And then we knew that the Assembly was in session and the Council also was in session and there was no question of taking any unilateral action without hearing the views of the hon. Members of the Assembly, some of whom were MISA detenus. Therefore the entire matter was placed before the Cabinet and later on placed on the Table of the House for discussion.

A few outstanding points that have been made by most of the hon. Members in general are the findings relating to the beatings and the Government have accepted almost all the findings of Mr. Justice Ismail. We have expressed our broad acceptance of the seven issues contained in the findings. So far as the findings that relate to the beating of the MISA detenus and the ill-treatment meted out to them are concerned there is absolutely no difficulty in the Government acting on those findings.

The next stage is, what action the Government are going to take. I want to make it very abundantly clear that this Government are not interested in shielding any officer who is found to be erring or delinquent or who has committed any breach of even the Rules on the subject. This House will appreciate that any punishment or any departmental proceedings or disciplinary proceedings can be taken only in consonance with the Service Rules. We are not an authoritarian Government. We are functioning within the campus of a democratic policy where we have got to observe the rule of law. Just as we accuse Jail officials and others that they have contravened certain provisions of law which impose human treatment of the prisoners, in the same fashion we have got to observe the rules on the subject before we take disciplinary action against them. There are Civil Service Rules, Disciplinary and Conduct Rules and it may be recalled that even the Fourth Grade servant of the Railways is governed by, what may be called, Rules under the Railway Establishment Code. I am only drawing an analogy. Like that, in the case of a public servant or a jail official, there are Civil Service Rules.

[Thiru K. Narayanaswami Mudaliar] [1978 ஏப்ரல் 7

According to Article 309 of the Constitution, everybody has got to observe these Rules before disciplinary proceedings are initiated into and proceeded further against any erring official or delinquent official.

I want to assure the House and make it clear that there will be no effort on the part of this Government either to white wash a lapse or crime of any officer, nor are we going to indulge in witch-hunting against any official. We will avoid both the extremes. We will go about our business of enquiry in accordance with the Disciplinary and Conduct Rules and impose punishment when the charges are proved in accordance with the Rules on the subject.

There is the third aspect of the matter and that is the barbaric conditions and what I call, the unrestrained licence enjoyed by the jail officials in beating MISA prisoners and other prisoners and this must be ended by su table reforms in the Jail Administration. I want to assure this House and I request every one of the hon.Members, particularly MISA prisoners to give their evidence before the Jail Reforms Commission, particularly those who have gone and suffered and who have received ill-treatment, and also hon. Members of the Assembly who have undergone jail imprisonment in respect of other Movements and on other occasions like the hon. Member, Thiru Govindarasan who has mentioned about it. Therefore, my appeal to all of you is that in order to prevent the recurrence of such tragic events, such brutal incidents such as ill-treatment and beating of prisoners, within the ail premises, they should give their views and their experience and also their suggestions before the Jail Reforms Commission.

I would like to say one thing. Mr. Justice Ismail set before him two ideals with regard to the xamination of the entire evidence. He has stated--

'When the facts are clear beyond controversy, I will state them as objectively as I can.'

In another place, the Learned Judge has stated--

'Speaking as a Judge, I put justice first..'

I think Mr.Justice Ismail kept these things in giving his findings.

1978 ஏப்ரல் 7] [Thiru. K. Narayanaswami Mudaliar]

So far as the ill-treatment is concerned and in respect of other findings which have been criticised as falling below standard expected by reason of want of ev:dence or want of full evidence, this Government will have the further opportunity of examining further at least some of these findings, I repeat that this Government have accepted and expressed their broad agreement with regard to the fiindings of the Learned Judge in respect of the seven issues framed by him and the findings thereon.

One aspect of the matter about the alleged interview that Thiru Shanmugham had with Mr. Justice Ismail-about which the hon. Member, Thiru Kandaswamy made some mention (Interruption from Thiru. P. U. Shanmugam) I am beholden to Thiru P. U. Shanmugam for reminding me that he is not that Shaumugam and that he is the advocate, Shanmugam. But this much I can tell the House that there has been a refutation of the interview by Mr. Justice Ismail and the matter is under the consideration of the Government. Some of the vital aspects of the refutation and the consequences that flow from the refutation by the Learned Judge are under the consideration of the Government.

I will conclude my speech by quoting the statement of the Hon, Chief Minister made on the floor of the Legislative Council and that would give an answer to some of the queries raised here.

(பிற்பகல் 2.50)

பேரவையில் சொல்லப்படுகிற கருத்துக்களையும், இங்கே சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்களையும் (that is on the floor of the Legislative Councll) சேர்த்து, எங்களுடைய அமைச்சரவையும் பரிசீலித்து சட்ட நுணுக்கத்தை அறிந்த திறமையாளர்களையும் வைத்து பரிசீலனை செய்து எந்த வகையில் எப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பது என்பதை அவர்களுடைய ஆற்றல் மிக்க ஆலோசனையைப் பொறுத்துத்தான் எடுக்கப்படமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

This is the summation of the attitude and position of the Government and I cannot better improve the language of my Chief, particularly, his beautiful literary Tamil, with which I am not very much acquainted.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : விவாதம் முடிவுற்றது

7. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஆ) சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றி புள்ளிவிவரங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் இப்பொழுது சில அறிவிப்புக்களைத் தர விரும்பு கிறேன். 3-வது, 4-வது, 5-வது சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பெற்ற ஒத்தி வைப்புத் தீர்மானம், உரிமை மீறல் பிரச்சனை, கவன ஈர்ப்புகள் ஆகியவைகளின் எண்ணிக்கை யோடு 6-வது சட்டமன்றப் பேரவையில், இந்த பத்து மாதங் களில் கொண்டு வரப்பெற்றுள்ள எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் இதற்குள் எவ்வளவு அதிகமாக வந்துள்ளன என்பது விளங்கும். 1962-ல் இருந்து 1967-வரை 5 ஆண்டுகளில்-ஒத்தி வைப்புத் தீர்மானம் வரப்பெற்றவை-166, எடுத்துக்கொள்ளப் பெற்றவை-149, 1967-ல் இருந்து 1970-வரை வரப்பெற்றவை 536, எடுத்துக்கொள்ளப் பெற்றவை-289, 1971-ல் இருந்து 1976-வரை-வரப்பெற்றவை 1,270, எடுத்துக்கொள்ளப்பெற்றவை 530, 1977-78-ல் வரப்பெற்றவை 617, எடுத்துக் கொள்ளப் பெற்றவை 209, அதே போன்று, உரிமைப் பிரச்னை-1962-ல் இருந்து 1967வரை, 5 ஆண்டுகளில் வரப்பெற்றவை—51, எடுத்துக் கொள்ளப் பெற்றவை-46, 1967-ல் இருந்து 1970-வரை—வரப் பெற்றவை 74, எடுத்துக்கொள்ளப்பெற்றவை 61, இதையெல்லாம் நான் சொல்வதற்குக் நான் காரணம் எந்த அளவிற்கு உங்களோடு இருந்து இருக்கிறேன் என்பதற்காகத்தான்-1971—ல் இருந்து 1976-வரை வரப்பெற்றவை 87, எடுத்துக்கொள்ளப்பெற்றவை 42, 1977-78-ல் இந்த 10- மாதங்களில் வரப்பெற்றவை 73, எடுத்துக் கொள்ளப்பெற்றவை 58, கவனஈர்ப்புகள்–1962-முதல் 1967-வரை 5 ஆண்டுகளில்-வரப்பெற்றவை 342, எடுத்துக்கொள்ளப் பெற்றவை 196. 1967-ல்இருந்து 1970-வரை வரப்பெற்றவை 723, எடுத்துக் கொள்ளப்பெற்றவை 290, அதே போன்று 1971 முதல், 1976–வரை வரப்பெற்றவை 1,326, எடுத்துக் கொள்ளப் பெற்றவை 271, 1977-78-ல் இந்த 10 மாதங்களில் வரப்பெற்றவை 695, எடுத்துக்கொள்ளப்பெற்றவை-216. எவ்வளவு லிபரலாக இருந்து இருக்கிறேன் பாருங்கள்.

இந்த வரவு-செலவுக் கூட்டத்தொடர் மொத்தம் 39 நாட்கள் நடைபெற்றுள்ளன. பொது விவாதத்திற்காக எடுத்துக்கொள்ளப் பெற்ற நாட்கள் 7. மானியக்கோரிக்கை மீதான விவாதமும் வாக் கெடுப்பும் 22 நாட்கள் நடைபெற்றுள்ளன. விவாதித்து நிறை வேற்றப்பெற்ற மானியக் கோரிக்கைகள் 53, விவாதமின்றி நிறை வேற்றப்பெற்றவை 5. இக்கூட்டத்தொடரில் விடையளிக்கப் பெற்ற வினக்கள்: குறுகிய கால வின 19, உடுக்குறியிடப் பெற்றவை-650, உடுக்குறியிடப்பெருதவை-191, துணை வினக்கள் 2,196. பேரவையில் நிறைவேற்றப்பெற்ற மசோதாக்கள் 11,

ஆய்வுக்குழுவுக்கு அனுப்பப்பெற்றது–1. விதி 82-ன் கீழ் பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கைகள்-9. சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளைக் காண வந்துள்ள பார்வையாளர்கள்: மொத்தம் 54,285. மேலும், ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக் பாராளு மன்ற அவைத் தலைவர் தலைமையில் அந்நாட்டின் பாராளுமன்ற குழு, 6-3-78-ம் நாளன்று நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிகளைக் காண வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து, ஆளும் கட்சியில் இருக்கும் அமைச்சர்களும், ஆளும் கட்சி மன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும், மன்ற உறுப்பினர்களும் என்னோடு இத்தனை நாட்கள் சிறப்பாக ஒத்து ழைத்து, இந்த மன்றத்தில் நம்முடைய மரபு காத்து அன்பு காட்டி யதற்கும் சில நாட்களில் நான் வேகத்தோடு பேசியிருக்கலாம், உறுப்பினர்களும் வேகத்தோடு இருந்திருக்கலாம், அந்த அன்பு பரிமாற்றம், அண்ணன்-தம்பி இடையே ஏற்பட்ட பரிமாற்றம் என்றும், எந்த உறுப்பினரும் அவைத் தலைவர் மீது எந்த விதமான மாச்சர்யத்தையோ, மனத்தாங்கலையோ வைத்துக் கொள்ளக் கூடாது என்றுசொல்லி, உங்களுடைய ஒத்துழைப்பு என்றென்றும். நான் இருக்கிற வரையில், நீங்கள் தந்தாக வேண்டும் என்று நான் பரிவோடு கேட்டுகொள்கிறேன்.

தற்போது, பேரவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைப்பது குறித்து, மாண்புமிகு அவை முன்னவர் ஒரு தீர்மானத்தை முன்மொழிவார்.

(8) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) பேரவை நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்து:

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர் களே, பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால், கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

''அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடி பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால், பேரவையை இன்றையிலிருந்து கால வரம்பின்றி ஒத்திவைக்கலாம்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமன தாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.